॥ श्रीः ॥

7965

। श्रीरघुनन्दन परब्रह्मणे नमः ।

श्रीमद्वाल्मीकि रामायणम्

बालकाण्डम्.

கோவிந்த ராஜீயம் முதலான வ்யாக்யானங்களை அநுஸரித்து

சுண்டப்பாளையம் வித்வான்

உ.வே.வே. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமிகளால்

பதவுரை, பொழிப்புரை தாத்பர்யங்களுடன்

தமிழில் மொழிபெயர்த்து

கோயமுத்தூர்

इतिहास प्रकटन शाला

மூலமாய்

கோயமுத்தூர் ரிலையன்ஸ் அச்சுக்கூடத்தில், அச்சிடப்பட்டது.

முதற்பதிப்பு 1000.

1930.

(Copy Right)

॥ श्री ॥

முகவுரை.

ஸ்ரீய: பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன், "वैकुण्ठेतु परे लोके श्रिया सार्धं जगत्पति:। आस्ते विष्णुरचिन्त्यात्मा भक्तैर्भागवतैस्सह ॥" என்கிறபடியே, ஸ்ரீவைகுண்டம் என்கிற திவ்ய லோகத்தில், திருமாமணிமண்டபத்தில், ஸ்ரீபூமி நீளாதிகளுடன் வீற்றிருந்து, அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகளான நித்யர்களாலும், முக்தர்களாலும், நிரந்தர பரிசர்யமாண சரண நளினனாய் எழுந்தருளியிருக்கும் பகவான், ப்ரம்மா, தேவேந்திரன் முதலான தேவர்களுக்கு ஸேவை ஸாதிப்பதற்கு, க்ஷீராப்தியில் எழுந்தருளியிருக்கச்செய்தே, ப்ரம்மாவினுடைய வரபலத்தினால் செருக்குக்கொண்ட இராவண, கும்பகர்ணாதி இராக்கதர்களுடைய ஹிம்ஸை பொருக்கமுடியாமல், ஸாதுக்களான மஹரிஷிகளென்ன, தேவர்களென்ன, இவர்கள் ப்ரம்மாவை முன்னிட்டுக்கொண்டு க்ஷீராப்தி நாதனைப் ப்ரார்த்திக்க, "पितरं रोचयामास" என்று பூலோகத்தில் தான் மனுஷ்யகோடியில் அவதரித்து இராவணன், கும்பகர்ணன் முதலான இராக்கதர்களை ஸம்ஹாரம் செய்கிறேனென்று ஸமாதானம் சொல்லி அனுப்பிக்கொடுத்து, பிறகு, பூலோகத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதமஹாராஜனுக்கு, நான்கு புத்திரர்களாக நான்கு ப்ரகாரமாக வந்து அவதரித்தார்.

அப்படி பகவான், ஸ்ரீராமனாகவும், இலக்குமணனாகவும், பரத சத்ருக்னர்களாகவும் அவதரித்து, துஷ்டர்களான இராக்கதர்களை அழித்து, சிஷ்டர்களான ஸாதுக்களை ரக்ஷித்து, ஸாமான்ய, விசேஷ தர்மங்களை அநுஷ்டித்துக்காட்டிக் கொடுத்து, தேவர்களுடைய ப்ரார்த்தனையையும் தலைக்கட்டி தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின ஸ்ரீய: பதியான அந்த பகவானது திருவிளையாட்டுக்களை உத்தரகாலத்தில் உண்டானவர்களுக்கும் உஜ்ஜீவனங்களாகவேண்டுமென்று நினைத்து, ஸர்வலோக ஹிதபரனாயும், பகவத் தத்வ விபுல விசித்ர ஜ்ஞான சக்தியாதிகளாலே அபிஜாதனையும், அவனுடைய நாபீ கமலத்தில் ஜாதனாயுமிருந்துள்ள சதுர்முகன் ஸ்ரீராம சரித்ர பவித்ரிதமான "சதகோடி ப்ரவிஸ்தரம்" என்பதொரு ப்ரபந்தத்தை நிர்மித்து, அதை ஸ்ரீநாரதாதிகளைக்கொண்டு அதிகரிப்பித்து, இந்த மத்ய லோகத்திலும், "सन्तत श्रीराममन्त्रानुसन्धान संधुक्षितहृदय" னான வால்மீகி பகவானையிட்டு பூர்லோக்தமான ஸ்ரீராம சரித்ரத்தை ப்ரவர்த்திப்பிக்க நினைப்பிட்டவனாய், ஸ்ரீநாரத பகவானை அனுப்பினார். இப்படி சதுர்முகன் அநுக்ரஹத்தால் ஸ்ரீநாரத பகவானிடம் உபதேசம் பெற்று, ஸ்ரீவால்மீகி மஹரிஷி ஸ்ரீமத் ராமாயணத்தை ஏழு காண்டங்களாகவும், (இருப்பத்திநான்கு ஆயிரம் க்ரந்தங்களாகவும்) செய்தருளினார்.

அதில் பாலகாண்டத்தில் பகவான் இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத மஹாராஜனுக்கு ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னன், என்று நான்கு புத்ரர்களாக

அவதரித்ததையும் ஸீதா விவாஹம் செய்துகொண்டு கொஞ்சகாலம் அயோத்யா நகரத்தில் எழுந்தருளியிருந்ததையும், பிறகு, பித்ருவாக்ய பரிபாலனம் என்கிற தர்மத்தைக்காட்டிக்கொடுக்க அயோத்யா நகரத்தைவிட்டு வனத்திற்கு எழுந்தருளினது முதலானதுகளை அயோத்யா காண்டத்திலும்,

சரணாகத ரக்ஷணார்த்தமாக தண்டகாவன ப்ரவேசமும், கொடிய அரக்கர்களான கரதூஷணர்களின் ஸம்ஹாரம் முதலியவைகளை ஆரண்ய காண்டத்திலும்,

ஸௌசீல்ய குணத்தினால், ஸுக்ரீவ ஸக்யம் முதலியவைகளை கிஷ்கிந்தா காண்டத்திலும்,

இராவணனால் அபஹரிக்கப்பட்ட ஸீதையைத் தேடுவதற்காக நான்குதிக்குகளிலும் அநுப்பப்பட்ட வானரர்களில் தெற்குத்திக்கில் அநுப்பப்பட்ட ஹனுமான் தெற்கு ஸமுத்திரத்தை தாண்டி இலங்கையில் ஸீதா தேவியைக் கண்டு திரும்பி வந்ததை ஸுந்தர காண்டத்திலும்,

ஸமஸ்த விரோதிகளையும் ஸம்ஹரித்து இராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்டு இராஜ்ய பரிபாலனம் செய்ததை யுத்தகாண்டத்திலும்,

இராவணன், கும்பகர்ணன் முதலான இராக்கதர்களுடைய பிறப்பு முதலான ப்ராசீன சரித்திரங்களும், ஸ்ரீராமன் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின விஷயத்தை உத்தரகாண்டத்திலும் செய்தருளினார்.

இப்படி ஸ்ரீவால்மீகி மஹரிஷியால் செய்த இந்த ஸ்ரீராமாயணத்தை ப்ரதி தினமும், ச்ரத்தையுடனும், பக்தியுடனும், எல்லா பக்த ஜனங்களும் பாராயணம் செய்து, ஐஹிகத்தில் ஸகல புருஷார்த்தத்தையுமடைந்து, ஆமுஷ்மிகத்தில், நிரந்தர பகவதநுபவரூபமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் அடைவார்கள்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

எம்பார். சுந்தராசாரியார்,

॥ श्रीवैष्णवानां श्रीरामायणपठनोपक्रमानुसन्धेयक्रमः ॥

முதலில் தம் ஸம்ப்ரதாயத்து ஆசார்ய பரம்பரையை அநுஸந்தித்து பிறகு,

लक्ष्मीनाथ समारम्भां नाथयामुनमध्यमाम् ।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥ 1 ॥

योनित्यमच्युतपदांबुज युग्मरुक्म
व्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
अस्मद्गुरोर्भगवतोस्य दयैकसिन्धो
रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥ 2 ॥

माता पिता युवतयस्तनयाविभूति
स्सर्वं यदेव नियमेन मदन्वयानाम् ।
आद्यस्य नः कुलपतेर्वकुलाभिरामं
श्रीमत्तदङ्घ्रियुगलं प्रणमामि मूर्ध्ना ॥ 3 ॥

भूतं सरश्च महदाह्वय भट्टनाथ
श्रीभक्तिसार कुलशेखर योगिवाहान् ।
भक्ताङ्घ्रिरेणुपरकाल यतीन्द्रमिश्रान्
श्रीमत्पराङ्कुशमुनि प्रणतोस्मि नित्यम् ॥ 4 ॥

---

1. (பொ-ரை) ஸ்ரீய:பதியை ஆரம்பித்து நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் இவர்களை நடுவிலுடையதும், நம்மாசார்யர் வரையிலுள்ளதுமான, குரு பரம்பரையை வணங்குகிறேன்.

2. (பொ-ரை) யாதொருவர் பகவானுடைய திருவடித் தாமரைகளாகிற ஸ்வர்ணத்தில் பேராசை வைத்து, அதைத்தவிர மற்றவைகளை த்ருணமாக நினைத்தாரோ, ஜ்ஞானாதி குண பரிபூர்ணரான நம் குருவாயும் கருணைக்கடலாயும் உள்ள அந்த ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடிகளை சரணமாக அடைகிறேன்.

3. (பொ-ரை) யாதொருவர் ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு, மாதா, பிதா, ஸ்த்ரீகள், பிள்ளைகள், விபூதிகள் இன்னும் மற்ற முழுவதும், எவருடைய திருவடியேயோ, அப்படிப்பட்ட நம் ஆசார்யர்களுக்குள் தலைவரான ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தருமான, நமக்கு ஸ்வாமியான நம்மாழ்வாருடைய மகிழ் மாலையால் அலங்கரிக்கப்பட்டு அழகான திருவடிகளை சிரஸினால் வணங்குகிறேன்.

4. (பொ-ரை) பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசை ஆழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார், ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், என்னும் இவர்களை எப்பொழுதும் ஸேவிக்கிறேன்.

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥ 1 ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः ।
शृण्वन्रामकथानादं को न याति परां गतिम् ॥ 2 ॥
यः पिबन्सततं रामचरितामृतसागरम्
अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥ 3 ॥
गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम् ।
रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥ 4 ॥
अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् ।
कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयंकरम् ॥ 5 ॥
मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ 6 ॥

---

1. (பொ-ரை) கவிதை என்கிற மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு மதுரமான அக்ஷரங்களையுடைய ராம, ராம என்னும் பதத்தை இனிதாகக் கூவிக் கொண்டிருக்கிற வால்மீகியாகிற குயிலை ஸேவிக்கிறேன்.

2. (பொ-ரை) (கவன) கவனமென்கிற ஆரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறவால்மீகிமுனியாகிற ஸிம்மத்தினுடைய ராம கதையாகிற கர்ஜனத்தைக் கேட்டு எவன்தான் பரகதியை அடைகிறதில்லை.

3. (பொ-ரை) யாவனொருவர் ராமசரித்ரமாகிய அமிர்த ஸமுத்ரத்தை எப்பொழுதும் குடித்துக்கொண்டு த்ருப்தி அடையாமலிருக்கிறாரோ, பாபமில்லாதவராய் ப்ரசேதஸ்ஸின் குமாரருமான அந்த வால்மீகி ரிஷியை ஸேவிக்கிறேன்.

4. (பொ-ரை) ஸமுத்ரத்தை மாட்டின் குளம்படியாகச் செய்தவரும் இராக்ஷஸ ராஜனான இராவணனை கொசுவாக நினைத்தவரும், ராமாயணமாகிற மாலைக்கு ரத்னம்போன்றவருமான வாயுபுத்ரனை ஹனுமானை நமஸ்கரிக்கின்றேன்.

5. (பொ-ரை) அஞ்ஜனாதேவிக்கு ஆனந்தத்தைச் செய்கின்றவரும், ஜானகியின் சோகத்தைப் போக்கினவரும், அக்ஷகுமாரனைக் கொன்றவரும், லங்காநகரத்திற்கு பயத்தை உண்டாக்கினவரும் சூரனுமான ஹனுமானை ஸேவிக்கிறேன்.

6. (பொ-ரை) மனதிற்கும், வாயுவுக்கும், ஸமானமாக வேகமுடையவரும் இந்திரியங்களை ஜயித்தவரும், புத்திமான்களுக்குள் சிறந்தவரும், வானரப்படைகளுக்குத் தலைவரும், ஸ்ரீராமனுடைய தூதனும், வாயுபுத்ரருமான ஹனுமானை தலையால் வணங்குகின்றேன்.

उल्लङ्घ्यसिन्धोः सलिलंसलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामितं प्राञ्जलिराञ्जनेयम् ॥ 7 ॥

आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ 8 ॥

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ 9 ॥

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना ॥ 10 ॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम्
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ 11 ॥

---

7. (பொ-ரை) யாவனொருவர் ஸமுத்ரத்தின் ஜலத்தை விளையாட்டாகத் தாண்டி, அசோக வனிகையில் இருந்த ஸீதையின் சோகமாகிற நெருப்பைக் கொண்டு, அதினாலேயே லங்காபட்டணத்தைக்கொளுத்தினரோ, அந்த ஆஞ்ஜனேயரைக் கைகூப்பி வணங்குகிறேன்.

8. (பொ-ரை) மிகவும் சிவந்த முகமுடையவரும் ஸ்வர்ணமலைபோல் அழகான சரீரமுடையவரும், பாரிஜாத வ்ருக்ஷத்தின் அடியில் வஸிப்பவரும், வாயு புத்ரனுமான ஆஞ்ஜனேயரை நான் த்யானம் செய்கின்றேன்.

9. (பொ-ரை) எங்கெங்கு ஸ்ரீமத்ராமாயண பாராயணம் நடக்கிறதோ, அங்கங்கு கைகூப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பவரும், ஸ்ரீராம சரித்திரத்தைக் கேட்டு ஆனந்த பாஷ்பம் நிறைந்த கண்களையுடையவரும், இராக்ஷஸர்களுக்கு ம்ருத்யுவுமான மாருதியை ஸேவியுங்கள்.

10. (பொ-ரை) வேதத்தினாலேயே அறியக்கூடிய பரம புருஷன் தசரத புத்ரனாக அவதரிக்கும் காலத்தில் அவருடைய கல்யாண குணங்களைத் தெரிவிக்கின்ற வேதமும் ஸ்ரீராமாயண ரூபமாய் வால்மீகி மஹரிஷியிடமிருந்து அவதரித்தது.

11. (பொ-ரை) சாஸ்த்ரத்தை அநுஸரித்து ஸமாஸம், ஸந்தி யோஜனைகளையுடையதாயும், ஸமங்களாயும், மதுரங்களாயும், ப்ரகாசமான அர்த்தங்களையுடையதுமான வாக்யங்களால் சேர்க்கப்பட்டதும், ரகு குலத்தில் பிறந்த ஸ்ரீராமனுடைய, சரித்ரமாயும், இராவணனுடைய வதத்தைக் குறிக்கதுமான வால்மீகியினால் செய்யப்பட்ட இந்த க்ரந்தத்தை எல்லோரும் கேளுங்கள்.

श्रीराघवं दशरथात्मजमप्रमेयं सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहुमरविन्ददलायताक्षं रामं निशाचरविनाशकरं नमामि ॥ 12

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥ 13

ततो यथाशक्ति श्रीकोशोपरि भगवदाराधनं कर्तव्यम् ॥

धर्मात्मा सत्यसंधश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ॥

---

12. (பொ-ரை) தசரத குமாரராயும், அபரிமித மஹிமையுடையவராயும் ஸீதையின் பதியாயும், ரகுவம்சத்திற்கு ரத்ன தீபமாயும், முழங்கால்வரையில் நீர்க்கமான கைகளையுடையவரும், தாமரை இதழ்போல் அகன்ற கண்களையுடையவரும், ராக்ஷஸர்களை விநாசம் செய்தவருமான, ரகு குலத்தில் அவதரித்த ஸ்ரீ ராமனை ஸேவிக்கிறேன்.

13, (பொ-ரை) கல்பக வ்ருக்ஷத்தினடியில் ஸ்வர்ணமயமான மஹாமண்டபத்தில் புஷ்பக விமானத்தின் மத்யத்தில் நவரத்னங்களாலிழைக்கப்பட்ட ஆஸனத்தில் வீராஸனமாக ஸீதையுடன் நன்றாய் எழுந்தருளியிருக்கின்றவரும், எதிரிலும் உட்கார்ந்து கொண்டிருக்கிற மஹரிஷிகளுக்கு ஸ்ரீவாயு புத்ரனான ஹனுமான் சாஸ்த்ரத்தின் மேலான தத்வத்தை எடுத்துச்சொல்லும் காலத்தில் அதற்கு வ்யாக்யானம் செய்கின்றவரும், பரதன் முதலான தம்பிமார்களால் சூழப்பட்டும், ச்யாமள வர்ணருமான ஸ்ரீ ராமனை ஸேவிக்கிறேன்.

பிறகு யதா சக்தி ஸ்ரீ கோசத்திற்கு ஆவாஹன அர்ச்சன தூபதீபாதிகள் ஸமர்ப்பித்து ஆராதனம் செய்யவேண்டும்.

(பொ-ரை) தர்மாத்மாவாயும், ஸத்ய ப்ரதிஜ்ஞனாயும் இருக்கிற தசரத குமாரனான ஸ்ரீராமன், பராக்ரம விஷயத்திலும் நிகரில்லாமலிருப்பது உண்மையேயானால், ஓ பாணமே, இராவணன் புத்ரனான இந்திரஜித்தை நீ கொல்லவேணும்.

पारायणसमापनक्रमः—

एवमेतत्पुरावृत्तमाख्यानं भद्रमस्तु वः ।
प्रव्याहरत विस्रब्धं बलं विष्णोः प्रवर्धताम् ॥ 1 ॥
लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराभवः ।
येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः ॥ 2 ॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी ।
देशोऽयं क्षोभरहितो ब्राह्मणाः सन्तु निर्भयाः ॥ 3 ॥
कावेरी वर्धतां काले काले वर्षतु वासवः ।
श्रीरङ्गनाथो जयतु श्रीरङ्गश्रीश्च वर्धताम् ॥ 4 ॥
स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ 5 ॥

1. (பொ-ரை) இவ்விதம் முன்காலம் நடந்த இந்த ஸ்ரீராம சரித்ரத்தை நன்றாகப்படியுங்கள். உங்களுக்கும் க்ஷேமமுண்டாகும். பகவானுக்கும் பலம் உண்டாகவேண்டும்.

2. (பொ-ரை) கருநெய்தல் புஷ்பம்போல் ச்யாமள வர்ணமுடைய ஸ்ரீராமனை, எவர்கள் நிரந்தரமாக த்யானம் செய்கிறார்களோ அவர்களுக்கு, ஸர்வலாபமும், ஸர்வவித ஜயமும் உண்டாகிறது. எவ்விடத்திலும் அவர்களுக்கு அவமானமே கிடையாது.

3. (பொ-ரை) காலத்தில் மழைபெய்து, பூமியெங்கும் பயிருடன் விளங்கிக்கொண்டு இந்த தேசம் ஒருவிதமான கெடுதல் இல்லாமல், ப்ராம்மணர்கள் பயமில்லாமலும் இருக்கவேண்டும்.

4. (பொ-ரை) காலத்தில் காவேரி ப்ரவாஹத்தினால் வ்ருத்தியடையவேண்டும். இந்திரனும் உசிதகாலங்களில் மழைபெய்ய வேண்டும். ஸ்ரீரங்கநாதனும் ஸர்வோத்தமமாக விளங்கவேண்டும். ஸ்ரீரங்கநாதனுடைய ஐச்வர்யமும் வ்ருத்தியடையவேண்டும்.

5. (பொ-ரை) ஸர்வ ஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். அரசர்கள் ந்யாய மார்க்கத்தினால் பூமியை ஆளவேண்டும். பசுக்களுக்கும், ப்ராம்மணர்களுக்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகவேண்டும். எல்லா லோகங்களும் ஸுகமாக இருக்கவேண்டும்.

मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये ।
चक्रवर्तितनूजाय सार्वभौमाय मंगलम् ॥ 6 ॥

वेदवेदान्तवेद्याय मेघश्यामलमूर्तये ।
पुंसां मोहनरूपाय पुण्यश्लोकाय मङ्गलम् ॥ 7 ॥

विश्वामित्रान्तरङ्गाय मिथिलानगरीपतेः ।
भाग्यानां परिपाकाय भव्यरूपाय मङ्गलम् ॥ 8 ॥

पितृभक्ताय सततं भ्रातृभिः सह सीतया ।
नन्दिताखिललोकाय रामभद्राय मङ्गलम् ॥ 9 ॥

त्यक्तसाकेतवासाय चित्रकूटविहारिणे ।
सेव्याय सर्वयमिनां धीरोदाराय मंगलम् ॥ 10 ॥

सौमित्रिणा च जानक्या चापबाणासिधारिणे ।
संसेव्याय सदा भक्त्या स्वामिने मम मङ्गलम् ॥ 11 ॥

---

6. (பொ-ரை) கோஸல தேசத்திற்கு அதிபதியாயும், நல்லோர்களால் கொண்டாடப்பட்ட குணங்களுக்கு இருப்பிடமாயும், சக்ரவர்த்தியின் புத்ரனாயும், ஸார்வபௌமனுமான ஸ்ரீராமனுக்கு மங்களம் உண்டாகவேண்டும்.

7. (பொ-ரை) வேதங்களாலும், வேதாந்தங்களாலும் அறியப்பட்டவனாய், திரண்ட மேகம்போல் கறுத்த ஸௌந்தர்ய விக்ரஹத்தையுடையவனாய், புருஷர்களை மோஹிக்கும்படியான திருமேனியை உடையவனாய், புண்யமான கீர்த்தியை உடையவனுமான ஸ்ரீராமனுக்கு மங்களம் உண்டாகவேண்டும்.

8. (பொ-ரை) விச்வாமித்ர மஹரிஷியின் அந்தரங்க சிஷ்யனாய், மிதிலா நகரத்தின் அரசனுடைய பாக்யத்தின் பரிபாகமாய் மங்களமான ரூபமுடைய ராமனுக்கு மங்களம்.

9. (பொ-ரை) எப்பொழுதும் பிதாவினிடத்தில் பக்தியுடையவனாயும், தம்பிமார்களோடும், ஸீதையுடனும் கூடி ஸகல லோகத்திற்கும் ஆனந்தத்தைச் செய்கின்றவனுமான ஸ்ரீராமபத்ரனுக்கு மங்களம்.

10. (பொ-ரை) அயோத்யா நகரத்தில் வாஸத்தைவிட்டு சித்ரகூடத்தில் விளையாடிக்கொண்டு எல்லா யதிகளாலும் பக்தியுடன் ஸேவிக்கப்பட்ட, தீரோதாரனான ஸ்ரீராமனுக்கு மங்களம்.

11. (பொ-ரை) லக்ஷ்மணனுடனும், ஸீதையுடனும் சேர்ந்து, வில்லு, பாணம், கத்தி முதலியவைகளை தரிக்கின்றவனாய், நல்லோர்களால் பக்தியினால் எப்பொழுதும் ஸேவிக்கத்தக்கவனாய் எனக்கு ஸ்வாமியுமான ஸ்ரீராமனுக்கு மங்களம்.

दण्डकारण्यवासाय खण्डितामरशत्रवे ।
गृध्रराजाय भक्ताय मुक्तिदायास्तु मङ्गलम् ॥ 12 ॥
सादरं शबरीदत्तफलमूलाभिलाषिणे ।
सौलभ्यपरिपूर्णाय सत्त्वोद्रिक्ताय मङ्गलम् ॥ 13 ॥
हनुमत्समवेताय हरीशाभीष्टदायिने ।
वालिप्रमथनायास्तु महाधीराय मङ्गलम् ॥ 14 ॥
श्रीमते रघुवीराय सेतूलङ्घितसिन्धवे ।
जितराक्षसराजाय रणधीराय मंगलम् ॥ 15 ॥
आसाद्य नगरीं दिव्यामभिषिक्ताय सीतया ।
राजाधिराजराजाय रामभद्राय मंगलम् ॥ 16 ॥
मंगलाशासनपरैर्मदाचार्यपुरोगमैः ।
सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मंगलम् ॥ 17 ॥

12. (பொ-ரை) தண்டகாரண்யத்தில் வஸித்து, கரன் முதலான தேவ சத்ருக்களை ஸம்ஹாரம் செய்து, பக்தனான ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்தவருக்கு மங்களம்.

13. (பொ-ரை) அன்புடன் சபரி ஸமர்ப்பித்த, காய், கிழங்கு, முதலானவைகளை விரும்பியும், ஸௌலப்ய குணம் நிறைந்தவரும், மேம்பட்ட ஸத்வ குணத்தையுடையவருமான ஸ்ரீராமனுக்கு மங்களம்.

14. (பொ-ரை) ஹனுமானுடன் சேர்ந்து ஸுக்ரீவ மஹாராஜனுக்கு இஷ்டத்தைச்செய்து வாலியை ஸம்ஹாரம் செய்த மஹாதீரனுக்கு மங்களம்.

15. (பொ-ரை) மஹா உத்ஸாஹத்துடன் அணைகட்டி அதனால் ஸமுத்திரத்தைக்கடந்து, ராக்ஷஸ ராஜனை ஜயித்த வீரனுக்கு மங்களம்.

16. (பொ-ரை) ஸர்வ ச்லாக்யமான அயோத்யா நகரத்தை அடைந்து ஸீதையுடன் பட்டாபிஷேகத்தையும் கொண்டருளி, ராஜாக்களுக்கெல்லாம் மேலான ராஜாவான ஸ்ரீராமனுக்கு மங்களம்.

17. (பொ-ரை) எப்பொழுதும் பகவானுக்கு மங்களத்தையே சொல்லுகின்ற நம்முடைய ஆசார்யர் முதலான எல்லா பூர்வாசார்யர்களாலும் பூஜிக்கப்பட்ட ஸ்ரீராமனுக்கு மங்களம்.

पितामहस्यापि पितामहाय प्राचेतसादेशफलप्रदाय ।
श्रीभाष्यकारोत्तमदेशिकाय श्रीशैलपूर्णाय नमो नमस्तात् ॥ 18 ॥

सीता विवाहपट्टाभिषेकसर्गयोस्तु—इयं सीता—अभ्यषिञ्चन्नरव्याघ्रं—इति श्लोकपठनात्पूर्वं मध्ये विशेषतो भगवदाराधनं च कर्तव्यम् ॥

18. (பொ-ரை) பிதாமஹரான ப்ரம்மாவுக்கும் பிதாமஹராயும், வால்மீகி மஹரிஷியின் அநுக்ரஹரூபமான ஸ்ரீமத்ராமாயணமென்னும் பலத்தை உலகத்திற் கெல்லாம் கொடுத்தவராயும், ஸ்ரீபாஷ்யகாரருக்கு சிறந்த ஆசார்யருமான ஸ்ரீதிருமலைநம்பிகளை ஸேவிக்கிறேன்.

ஸீதா விவாஹ, பட்டாபிஷேக ஸர்க்கங்களில், இரண்டு ச்லோகங்களையும் படிப்பதற்கு முன் விசேஷமாக த்யானம் ஆராதனம் தூபதீபம், பலங்கள் ஸமர்ப்பித்து முடிக்கவேண்டியது.

॥ अथ स्मार्तानां श्रीरामायणपठनोपक्रमे अनुसन्धेयाः श्लोकाः ॥

। हयग्रीव ध्यानम् ।

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥ 1 ॥

। विष्वक्सेन नमस्कारम् ।

यस्य द्विरदवक्त्राद्याः पारिषद्याः परश्शतम् ।
विघ्नं निघ्नन्ति सततं विष्वक्सेनं तमाश्रये ॥ 2 ॥

1. (பொ-ரை) வெளுப்பு வஸ்த்ரம் தரித்தவரும், சந்திரன் போல் வர்ணமுடையவரும் நான்கு திருக்கைகள் உடையவரும், தெளிந்த முகமுடையவருமான ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸர்வ விக்னங்களும் போவதற்காக த்யானம் செய்ய

11.

2. (பொ-ரை) கஜானன் முதலாகிய ஆயிரக்கணக்கான எவருடைய பரிவாரங்கள் எப்பொழுதும் விக்னத்தைப் போக்குகின்றார்களோ அந்த விஷ்வக்ஸேனரை நான் ஸேவிக்கிறேன்.

। गजानन नमस्क्रिया ।

वागीशाद्याः सुमनसः सर्वार्थानामुपक्रमे ।
यं नत्वा कृतकृत्यास्स्युस्तं नमामि गजाननम् ॥ 3 ॥

॥ अनन्तरं श्रीमच्छंकरभगवत्पादादिगुरुपरम्परानुसन्धेया ॥

। सरस्वती प्रार्थना ।

दोर्भिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयीमक्षमालां दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं पुस्तकं चापरेण ।
भासा कुन्देन्दुशंखस्फटिकमणिनिभा भासमानाऽसमाना
सा मे वाग्देवतेयं निवसतु वदने सर्वदा सुप्रसन्ना ॥ 4 ॥

। वाल्मीकि नमस्क्रिया ।

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥ 5 ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः ।
शृण्वन्रामकथानादं को न याति परां गतिम् ॥ 6 ॥

3. (பொ-ரை) வாகீசன் முதலான தேவர்கள், தாங்கள் ஆரம்பிக்கின்ற காரியங்களின் முதலில் எவரை நமஸ்கரித்து க்ருத க்ருத்யராவார்களோ அந்த கஜானனரை வணங்குகிறேன்.

பிறகு சங்கராசாரியார் முதலாய் நாளதுவரையிலுள்ள குருபரம்பரை அநுஸந்தானம் செய்யவும்.

4. (பொ-ரை) நான்கு கைகளோடு கூடியவளாய், ஒரு கையினால் ஸ்படிக மணிமயமான அக்ஷமாலையை தரித்துக்கொண்டும், மற்ற கைகளால் பத்மத்தையும், வெளுப்பான கிளியையும், புஸ்தகத்தையும், தரித்துக்கொண்டு, குருக்கத்திப்பூ, சந்திரன், சங்கம், ஸ்படிகமணி, இவைகளுக்கு ஸமானமான காந்தியை உடையவளாய் எப்பொழுதும் ப்ரகாசித்துக்கொண்டும், ஒப்பில்லாதவளுமான, ப்ரஸித்தமான மஹிமை பொருந்திய இந்த ஸரஸ்வதி தேவி மிகவும் அநுக்ரஹமுடையவளாய் என்னுடைய முகத்தில் எப்பொழுதும் வாஸம் செய்யவேண்டும்.

5. (பொ-ரை) கவிதை என்கிற மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டு மதுரமான அக்ஷரங்களையுடைய ராமா, என்னும் பதத்தை இனிதாகக் கூவிக்கொண்டிருக்கிற வால்மீகியாகிற குயிலை ஸேவிக்கிறேன்.

6. (பொ-ரை) கவனமென்கிற அரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற வால்மீகி முனியாகிற ஸிம்மத்தினுடைய ராம கதையாகிற நாதத்தைக் கேட்டு எவன்தான் பரகதியை அடைகிறதில்லை.

यः पिबन्सततं रामचरितामृतसागरम् ।
अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥ 7 ॥

। हनुमन्नमस्क्रिया ।

गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम्
रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥ 8 ॥

अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् ।
कपीशमक्षहन्तारं वन्दे लङ्काभयंकरम् ॥ 9 ॥

मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ 10 ॥

उल्लङ्घ्यसिन्धोः सलिलं सलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥ 11 ॥

7. (பொ-ரை) யாவரொருவர் ராம சரித்ரமாகிய அம்ருத ஸமுத்ரத்தை எப்பொழுதும் குடித்துக்கொண்டு த்ருப்தி அடையாமலிருக்கிறாரோ, பாபமில்லாதவராய் ப்ரசேதஸ்ஸின் குமாரருமான அந்த வால்மீகி ரிஷியை ஸேவிக்கிறேன்.

8. (பொ-ரை) ஸமுத்ரத்தை மாட்டின் குளம்படியாகச் செய்தவரும், ராக்ஷஸ ராஜனை ராவணனை கொசுவாக நினைத்தவரும், ராமாயணமாகிற மாலைக்கு ரத்னம் போன்றவருமான வாயு புத்ரனை ஹனுமானை நமஸ்கரிக்கிறேன்.

9. (பொ-ரை) அஞ்ஜனாதேவிக்கு ஆனந்தத்தைச் செய்கின்றவரும், ஜானகியின் சோகத்தைப் போக்கினவரும், அக்ஷகுமாரனைக்கொன்றவரும் லங்காநகரத்திற்கு பயத்தை உண்டாக்கினவரும் சூரனுமான ஹனுமானை ஸேவிக்கிறேன்.

10. (பொ-ரை) மனதிற்கும், வாயுவுக்கும், ஸமானமான வேகமுடையவரும், இந்திரியங்களை ஜயித்தவரும், புத்திமான்களுக்குள் சிறந்தவரும், வானரப்படைகளுக்குத் [illegible]வரும், ஸ்ரீராமனுடைய தூதனும், வாயு புத்ரருமான ஹனுமானை தலையால் [illegible]கிறேன்.

11. (பொ-ரை) யாவரொருவர் ஸமுத்ரத்தின் ஜலத்தை விளையாட்டாகத் தாண்டி, அசோகவனிகையில் இருந்த ஸீதையின் சோகமாகிற நெருப்பைக்கொண்டு அதினாலேயே லங்கா பட்டணத்தைக் கொளுத்தினாரோ, அந்த ஆஞ்ஜநேயரைக் கைகூப்பி வணங்குகிறேன்.

आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ 12 ॥

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ 13 ॥

। श्रीरामायण प्रार्थना ।

यः कर्णाञ्जलिसम्पुटैरहरहः सम्यक्पिबत्यादरा
द्वाल्मीकेर्वदनारविन्दगलितं रामायणाख्यं मधु ।
जन्मव्याधिजराविपत्तिमरणैरत्यन्तसोपद्रवं
संसारं स विहाय गच्छति पुमान्विष्णोः पदं शाश्वतम् ॥ 14 ॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ 15 ॥

12. (பொ-ரை) மிகவும் சிவந்த முகமுடையவரும், ஸ்வர்ணமலைபோல் அழகான சரீரமுடையவரும், பாரிஜாத வ்ருக்ஷத்தின் அடியில் வஸிப்பவரும், வாயு புத்ரனுமான ஆஞ்ஜநேயரை நான் த்யானம் செய்கின்றேன்.

13. (பொ-ரை) எங்கெங்கு ஸ்ரீமத்ராமாயண பாராயணம் நடக்கின்றதோ அங்கங்கு கைகூப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பவரும், ஸ்ரீராம சரித்திரத்தைக் கேட்டு, ஆனந்த பாஷ்பம் நிறைந்த கண்களை உடையவரும், ராக்ஷஸர்களுக்கு ம்ருத்யுவுமான மாருதியை ஸேவியுங்கள்.

14. (பொ-ரை) யாவனொருவன் ஸ்ரீவால்மீகி மஹரிஷியினுடைய முகமான தாமரை புஷ்பத்திலிருந்து பெருகின ஸ்ரீராமாயணமென்கிற மகரந்தத்தை (தேனை) தினந்தோறும் தன்னுடைய இரண்டு காதுகளாகிற இரண்டு கைகளால் எடுத்து மிக அன்புடன் நன்றாக அருந்துகிறானோ (குடிக்கிறானோ) அந்த மனிதன், பிறப்பு, வ்யாதி, மூப்பு ஆபத்து, மரணம் இவைகளால் மிகவும் உபத்ரவமுடையதான ஸம்ஸாரத்தைத்தள்ளிவிட்டு அழிவில்லாத விஷ்ணுபதம் என்கிற மோக்ஷத்தை அடைகின்றான்.

15. (பொ-ரை) சாஸ்த்ரத்தை அநுஸரித்து ஸமாஸம், ஸந்தி ப்ரயோகங்களையுடையதாயும், ஸமங்களாயும், மதுரங்களாயும், ப்ரகாசமான அர்த்தங்களையுடையதுமான வாக்கியங்களால் சேர்க்கப்பட்டதும், ரகு குலத்தில் பிறந்த ஸ்ரீராமனுடைய சரித்ரமாயும், இராவணனுடைய வதத்தைக் குறித்ததுமான வால்மீகியால் செய்யப்பட்ட இந்த க்ரந்தத்தை எல்லோரும் கேளுங்கள்.

वाल्मीकिगिरिसम्भूता रामसागरगामिनी ।
पुनातु भुवनं पुण्या रामायणमहानदि ॥ 16 ॥

श्लोकसारसमाकीर्णं सर्गकल्लोलसंकुलम् ।
काण्डग्राहमहामीनं वन्दे रामायणार्णवम् ॥ 17 ॥

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना ॥ 18 ॥

। श्रीरामध्यानक्रमः ।

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥ 19 ॥

---

16. (பொ-ரை) வால்மீகி மஹரிஷியாகிற மலையில் உண்டாகி, ஸ்ரீராமனாகிற ஸமுத்ரத்தைச் சேருகின்ற மிகவும் புண்யகரமான ராமாயணமாகிற மஹாநதியானது, உலகத்தை பரிசுத்தம் செய்யவேண்டும்.

17. (பொ-ரை) ச்லோகங்களாகிற ஜலங்களால் நிறைந்தும், ஸர்க்கங்களாகிற அலைகளால் நிறைந்தும், காண்டங்களாகிற முதலை, மீன் இவைகளை உடையதுமான ஸ்ரீராமாயணமாகிற ஸமுத்ரத்தை ஸேவிக்கிறேன்.

18. (பொ-ரை) வேதத்தினால் அறியக்கூடிய பரம புருஷன் தசரத புத்ரனாக அவதரிக்கும் காலத்தில் அவருடைய கல்யாண குணங்களைத் தெரிவிக்கின்ற வேதமும் ஸ்ரீராமாயண ரூபமாகி வால்மீகி மஹரிஷியிடமிருந்து அவதரித்தது.

19. (பொ-ரை) கல்பக வ்ருக்ஷத்தினடியில் ஸ்வர்ணமயமான மஹா மண்டபத்தில் புஷ்பக விமானத்தின் மத்யத்தில் ரத்னங்களால் இழைக்கப்பட்ட ஆஸனத்தில் வீராஸனமாக ஸீதையுடன் நன்றாய் எழுந்தருளியிருக்கின்றவரும், சுற்றிலும் உட்கார்ந்துகொண்டிருக்கிற முனிவர்களுக்கு ஸ்ரீவாயு புத்ரனை ஹநுமான் சாஸ்த்ரத்தின் மேலான தத்வத்தை படித்துச்சொல்லும் காலத்தில் அதற்கு வ்யாக்யானம் செய்கின்றவரும், பரதன் முதலான தம்பிமார்களால் சூழப்பட்டவர், ச்யாமள வர்ணமான ஸ்ரீராமனை ஸேவிக்கிறேன்.

वामे भूमिसुता पुरश्च हनुमान्पश्चात्सुमित्रासुतः
शत्रुघ्नोभरतश्च पार्श्वदलयोर्वाय्वादिकोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम् ॥ 20 ॥

नमोस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोस्तु रुद्रेन्द्रयमानिलेभ्यो नमोस्तु चन्द्रार्कमरुद्गणेभ्यः ॥ 21 ॥

धर्मात्मा सत्यसंधश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ॥ 22 ॥

पारायणसमापनसमयानुसन्धेयश्लोकक्रमः—

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनोभवन्तु ॥ 1 ॥

20. (பொ-ரை) இடது பக்கத்தில் ஸீதையும், முன்னே ஹனுமானும், பின்னால் லக்ஷ்மணனும், இரண்டு பக்கங்களில் பரதனும், சத்ருக்னனும், நாலு மூலைகளில், ஸுக்ரீவன், விபீஷணன், அங்கதன், ஜாம்பவான் என்றிவர்களும், இதன் மத்தியில் எழுந்தருளியிருக்கின்ற கருநெய்தல் புஷ்பம் போல் அழகான கறுத்த காந்தியுடையவருமான ஸ்ரீராமனை ஸேவிக்கிறேன்.

21. (பொ-ரை) லக்ஷ்மணனோடுகூடிய ஸ்ரீராமனையும், ஜனகபுத்ரியாகிய அந்த ஸீதாதேவியையும், நமஸ்கரிக்கிறேன். ருத்ரன், இந்திரன், யமன், அக்நி, சந்திரன், ஸூர்யன் இன்னும் மற்ற தேவகணங்கள் என்ற இவர்களையும் ஸேவிக்கிறேன்.

22. (பொ-ரை) தர்மாத்மாவாயும் ஸத்ய ப்ரதிஜ்ஞராயும், இருக்கிற தசரத குமாரனை ஸ்ரீராமன் பராக்ரம விஷயத்திலும், நிகரில்லாமலிருப்பது உண்மையேயானால், ஓ பாணமே இராவண புத்திரனை இந்திரஜித்தை நீ கொல்லவேணும்.

பிறகு, ஸ்ரீராமாயண ஸ்ரீகோசத்தின்மேல் அக்ஷதை முதலானவைகளை அர்ச்சித்து, தூப, தீபங்களுடன் நைவேத்யங்களும் செய்து பாராயணமாரம்பிக்க வேண்டும்.

1. (பொ-ரை) ஸர்வஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும், அரசர்கள் ந்யாயமார்க்கத்தினால் பூமியை ஆளவேண்டும், பசுக்களுக்கும், ப்ராம்மணர்களுக்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகவேண்டும், எல்லா லோகங்களும் ஸுகமாக இருக்கவேண்டும்.

काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी ।
देशोऽयं क्षोभरहितो ब्राह्मणाः सन्तु निर्भयाः ॥ 2 ॥

अपुत्राः पुत्रिणः सन्तु पुत्रिणः सन्तु पौत्रिणः ।
अधनाः सधनाः सन्तु जीवन्तु शरदां शतम् ॥ 3 ॥

चरितं रघुनाथस्य शतकोटिप्रविस्तरम् ।
एकैकमक्षरं प्रोक्तं महापातकनाशनम् ॥ 4 ॥

शृण्वन्रामायणं भक्त्या यः पादं पदमेव वा ।
स याति ब्रह्मणः स्थानं ब्रह्मणा पूज्यते सदा ॥ 5 ॥

रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे ।
रघुनाथाय नाथाय सीतायाः पतये नमः ॥ 6 ॥

यन्मंगलं सहस्राक्षे सर्वदेव नमस्कृते ।
वृत्रनाशे समभवत्तत्ते भवतु मंगलम् ॥ 7 ॥

2. (பொ-ரை) காலத்தில் மழைபெய்து, பூமியெங்கும் பயிருடன் விளங்கிக்கொண்டு இந்த தேசம் ஒருவிதமான கெடுதல் இல்லாமலும் ப்ராம்மணர்கள் பயமில்லாமலும் இருக்க வேண்டும்.

3. (பொ-ரை) பிள்ளை இல்லாதவர்கள் பிள்ளை உள்ளவர்களாயும், பிள்ளை உடையவர்கள் பேரன்களை உடையவர்களாயும், தனமில்லாதவர்கள் பணக்காரர்களாகவும் இருந்து அதிக காலம் ஜீவித்திருக்கவேண்டும்.

4. (பொ-ரை) நூறுகோடி க்ரந்தமுள்ளதான ஸ்ரீராமனுடைய சரித்ரத்தில் ஒவ்வொரு அக்ஷரமும் உச்சரித்தாலும் பஞ்சமஹாபாதகங்களும் நசிக்கும்.

5. (பொ-ரை) யாவனொருவன் பக்தியுடன் ஸ்ரீமத்ராமாயணத்தை ஒரு பாதமோ, ஒரு பதமோ கேட்பனாயானால் அவன் ப்ராம்மஸ்தானத்தையடைந்து ப்ராம்மத்தினால் எப்பொழுதும் கொண்டாடப்படுகிறான்.

6. (பொ-ரை) ஸாமான்ய ஜனங்களால் ராமனென்றும், கௌஸல்யை முதலானவர்களால் ராமபத்ரனென்றும், ஸ்ரீராமனுடைய ஸ்நேஹிதர்களால் ராமசந்திரனென்றும், வஸிஷ்டர் முதலான ஜ்ஞானிகளால் வேதஸ் என்றும் அதாவது (ஜகத்காரணமானவன்) என்றும், ரகுகுலத்து ஜனங்களால் ரகுநாதனென்றும், ஏழை[illegible] நாதனென்றும், மிதிலா நகரத்து ஜனங்களால் ஸீதாபதியென்றும், சொல்லப்பட்ட ஸ்ரீராமனை ஸேவிக்கிறேன்.

7. (பொ-ரை) ஸர்வதேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட இந்திரனுக்கு வ்ருத்ராஸுர ஸம்ஹாரகாலத்தில் எந்த மங்களம் உண்டாயிற்றோ அது உமக்கும் உண்டாகவேண்டும்.

1702

यन्मंगलं सुपर्णस्य विनताऽकल्पयत्पुरा ।
अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु मंगलम् ॥ 8 ॥
अमृतोत्पादने दैत्यान्घ्नतो वज्रधरस्य यत् ।
अदितिर्मंगलं प्रादात्तत्ते भवतु मंगलम् ॥ 9 ॥
त्रीन्विक्रमान्प्रक्रमतो विष्णोरमिततेजसः ।
यदासीन्मंगलं राम तत्ते भवतु मंगलम् ॥ 10 ॥
ऋतवः सागरा द्वीपा वेदा लोका दिशश्च ते ।
मंगलानि महाबाहो दिशन्तु तव सर्वदा ॥ 11 ॥
कायेन वाचा मनसेन्द्रियैर्वा बुद्ध्यात्मना वा प्रकृतिस्वभावात् ।
करोमि यद्यत्सकलं परस्मै नारायणायेति समर्पयामि ॥ 12 ॥

श्रीसीता विवाह पट्टाभिषेकसर्गयोस्तु—इयं सीता—अभ्यषिञ्चन्—इति श्लोकपठनात्पूर्वं विशेषतो ध्यानावाहननैवेद्यादिनीराजनान्तसपर्या संविधेया ॥

8. (பொ-ரை) அம்ருதம் கொண்டுவரப்புறப்பட்ட கருடனுக்கு அவர் தாயாரான விநதாதேவியானவள் அக்காலத்தில் எந்த மங்களத்தை செய்தாளோ அந்த மங்களம் உமக்கும் உண்டாகவேண்டும்.

9. (பொ-ரை) அம்ருதத்திற்காக ஸமுத்ரத்தைக் கடையும் காலத்தில் அஸுரர்களை ஸம்ஹரித்த இந்திரனுக்கு அதிதிதேவி செய்த மங்களம் உமக்கும் உண்டாகவேண்டும்.

10. (பொ-ரை) பலிசக்ரவர்த்தியினிடத்தில் மூன்றடி தானம் வாங்கி த்ருவிக்ரமாவதாரம் செய்து உலகத்தை அளப்பதற்காக மூன்றடி வைத்த அளவற்ற தேஜஸ்ஸையுடைய மஹாவிஷ்ணுவுக்கு உண்டான மங்களம் ராமா உமக்கும் உண்டாகவேண்டும்.

11. (பொ-ரை) ஆறு ருதுக்கள், ஸப்த ஸமுத்ரங்கள், ஒன்பது த்வீபங்கள், நான்கு வேதங்கள், பதினான்கு லோகங்கள், பத்து திக்குகள் ஆகிய இவைகள் உமக்கு எப்பொழுதும் மங்களங்களைக் கொடுக்கவேண்டும்.

12. (பொ-ரை) சரீரத்தினாலும், வாக்கினாலும், மனதினாலும், இந்திரியங்களாலும், புத்தியினாலும், தன்னாலும், ப்ரக்ருதிஸ்வபாவத்தினால் நான் எதைச்செய்கிறேனோ அவை முழுமையும் பரம புருஷனை ஸ்ரீமன்நாராயணனுக்கே என்று ஸமர்ப்பிக்கிறேன்.

ஸீதா விவாஹ பட்டாபிஷேக ஸர்க்கங்களில் इयं सीता- என்கிற ச்லோகத்தையும், अभ्यषिञ्चन्नरव्याघ्रं- என்கிற ச்லோகத்தையும் படிப்பதற்கு முன் விசேஷமாக த்யானம் ஆவாஹனம் நைவேத்யம் நீராஜனமும் செய்ய வேண்டும்

॥ अथ माध्वानां रामायणपठनोपक्रमेऽनुसन्धेयाः श्लोकाः ॥

॥ श्रीमद्धनुमद्भीममध्वान्तर्गतरामकृष्णवेदव्यासात्मकलक्ष्मीहयग्रीवाय नमः ॥

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥ 1 ॥

लक्ष्मीनारायणं वन्दे तद्भक्तप्रवरो हि यः ।
श्रीमदानन्दतीर्थाख्यो गुरुस्तं च नमाम्यहम् ॥ 2 ॥

वेदे रामायणे चैव पुराणे भारते तथा ।
आदावन्ते च मध्ये च विष्णुः सर्वत्र गीयते ॥ 3 ॥

सर्वविघ्नप्रशमनं सर्वसिद्धिकरं परम् ।
सर्वजीवप्रणेतारं वन्दे विजयदं हरिम् ॥ 4 ॥

सर्वाभीष्टप्रदं रामं सर्वारिष्टनिवारकम् ।
जानकीजानिमनिशं वन्दे मद्गुरुवन्दितम् ॥ 5 ॥

1. (பொ-ரை) வெளுப்பு வஸ்த்ரம் தரித்தும், சந்திரன் போல் வர்ணமுடையவரும் நான்கு திருக்கைகள் உடையவரும், தெளிந்த முகமுடையவருமான ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸர்வ விக்னங்களும் போவதற்காக த்யானம் செய்யவேண்டியது.

2. (பொ-ரை) லக்ஷ்மீநாராயணனையும், அவருடைய பக்தர்களுக்குள் சிறந்தவருமான ஸ்ரீமத் ஆனந்த தீர்த்தரென்கிற குருவையும் நான் ஸேவிக்கிறேன்.

3. (பொ-ரை) வேதத்திலும், ஸ்ரீராமாயணத்திலும், புராணங்களிலும், ஸ்ரீபாரதத்திலும், ஆதியிலும், நடுவிலும், கடைசியிலும், ஆக எல்லா இடங்களிலும் விஷ்ணுவானவர் சொல்லப்படுகிறார்.

4. (பொ-ரை) எல்லா விக்னங்களையும் போக்குகிறவரும், ஸர்வவிதமான ஸித்தியை உண்டுபண்ணுகிறவரும் ஸர்வஜீவர்களையும் கர்மானுகுணமாக நடத்துகின்றவரும், ஜயத்தைக்கொடுக்கின்றவரும் மேலானவருமான ஹரியை ஸேவிக்கிறேன்.

5. (பொ-ரை) ஸர்வ அநிஷ்டங்களையும், போக்கி ஸர்வ இஷ்டங்களையும் கொடுக்கின்றவரும் நம் குருக்களால் எப்பொழுதும் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவரும் ஸீதாபதியுமான ஸ்ரீராமனை எப்பொழுதும் ஸேவிக்கிறேன்.

अभ्रमं भंगरहितमजडं विमलं सदा ।
आनन्दतीर्थमतुलं भजे तापत्रयापहम् ॥ 6 ॥
भवति यदनुभावादेडमूकोऽपि वाग्मी
जडमतिरपि जन्तुर्जायते प्राज्ञमौलिः ।
सकलवचनचेतोदेवता भारती सा
मम वचसि निधत्तां संनिधिं मानसे च ॥ 7 ॥
मिथ्यासिद्धान्तदुर्ध्वान्तविध्वंसनविचक्षणः ।
जयतीर्थाख्यतरणिर्भासतां नो हृदम्बरे ॥ 8 ॥
चित्रैः पदैश्च गम्भीरैर्वाक्यैर्मानैरखण्डितैः ।
गुरुभावं व्यञ्जयन्ती भाति श्रीजयतीर्थवाक् ॥ 9 ॥
कूजन्तं रामरामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥ 10 ॥

6. (பொ-ரை) ப்ரமமில்லாதவரும் (சுழல்கள் இல்லாததும்), குறைவில்லாதவரும். (அலைகளில்லாததும்), ஜடர் அல்லாதவரும், (குளிர்ச்சியில்லாததும்), எப்பொழுதும், நிர்மலமான மனதுடையவரும் (தெளிந்ததும்) ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விக என்கிற ஸாம்ஸாரிகதாபத்ரயத்தைப் போக்குகின்றவரும். வெய்யிலினாலுண்டான தாபத்தை போக்குகின்றதும், ஒப்பில்லாதவருமான ஆனந்த தீர்த்தரென்கிற தீர்த்தத்தை நான் ஸேவிக்கிறேன்.

7. (பொ-ரை) யாதொருவளுடைய மஹிமையினால், ஊமையன் வாசாலகனாகவும், ஜ்ஞானமில்லாதவன் பண்டிதர்களுக்குள் உயர்ந்தவனாகவும் ஆகிறானோ, ஸகல ஜனங்களுடைய வாக்குக்கும், மனதிற்கும் தேவதையான அந்த ஸரஸ்வதி தேவி என்னுடைய வாக்கிலும் மனதிலும் எப்பொழுதும் ஸான்னித்யம் செய்ய வேண்டும்.

8. (பொ-ரை) பொய்யான ஸித்தாந்தமாகிற (அதாவது सर्वं मिथ्या-என்கிற அத்வைதஸித்தாந்தம்.) இருட்டைப்போக்குவதில் ஸமர்த்தரான ஸ்ரீஜயதீர்த்தரென்கிற ஸூர்யன் என்னுடைய மனதாகிற ஆகாசத்தில் ப்ரகாசிக்கவேண்டும்.

9 (பொ-ரை) விசித்ரமான பதங்களாலும், கம்பீரமான வாக்யங்களாலும் ஒருவராலும் கண்டிக்கமுடியாத ப்ரமாணங்களாலும் ஆசார்யருடைய அபிப்ராயத்தை ப்ரகாசப்படுத்துகின்ற ஸ்ரீஜயதீர்த்தருடைய வாக்கானது விளங்குகின்றது.

10. (பொ-ரை) கவிதை என்கிற மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு மதுரமான அக்ஷரங்களையுடைய ராம, ராமஎன்னும் பதத்தை இனிதாகக் கூவிக்கொண்டிருக்கிற வால்மீகியாகிற குயிலை ஸேவிக்கிறேன்.

वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः ।
शृण्वन्रामकथानादं को न याति परां गतिम् ॥ 11 ॥

यः पिबन्सततं रामचरितामृतसागरम् ।
अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥ 12 ॥

। हनुमन्नमस्क्रिया ।

गोष्पदीकृतवाराशिं मशकीकृतराक्षसम् ।
रामायणमहामालारत्नं वंदेऽनिलात्मजम् ॥ 13 ॥

अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् ।
कपीशमक्षहन्तारं वंदे लङ्का भयंकरम् ॥ 14 ॥

मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥ 15 ॥

11. (பொ-ரை) கவனமென்கிற ஆரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற வால்மீகி முனியாகிற ஸிம்மத்தினுடைய ராம கதையாகிற கர்ஜனத்தைக் கேட்டு எவன் தான் பரகதியை அடைகிறதில்லை.

12. (பொ-ரை) யாவரொருவர் ராம சரித்ரமாகிய அம்ருத ஸமுத்ரத்தை எப்பொழுதும் குடித்துக்கொண்டு த்ருப்தி அடையாமலிருக்கிறாரோ, பாபமில்லாதவராய் ப்ராசேதஸ்ஸின் குமாரருமான அந்த வால்மீகிரிஷியை ஸேவிக்கிறேன்.

13. (பொ-ரை) ஸமுத்ரத்தை மாட்டின் குளம்படியாகச் செய்தவரும் ராக்ஷஸராஜனை இராவணனை கொசுவாக நினைத்தவரும், ராமாயணமாகிற மாலைக்கு ரத்னம் போன்றவருமான வாயுபுத்ரனை ஹநுமானை நமஸ்கரிக்கிறேன்.

14. (பொ-ரை) அஞ்ஜனைக்கு ஆனந்தத்தைச் செய்கின்றவரும், ஜானகியின் சோகத்தை போக்கினவரும், அக்ஷ குமாரனைக்கொன்றவரும், லங்கா நகரத்திற்கு பயத்தை உண்டாக்கினவருமான ஹனுமானை ஸேவிக்கிறேன்.

15. (பொ-ரை) மனதிற்கும், வாயுவிற்கும், ஸமானமானவேகமுடையவரும், இந்திரியங்களை ஜயித்தவரும், புத்திமான்களுக்குள் சிறந்தவரும், வானரப்படைகளுக்குத்தலைவரும், ஸ்ரீராமனுடைய தூதனும், வாயுபுத்ரனுமான ஹனுமானை தலையால் வணங்குகிறேன்.

उल्लङ्घ्यसिन्धोः सलिलं सलीलं यः शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लङ्कां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥ 16 ॥

आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥ 17 ॥

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥ 18 ॥

। श्रीरामायण प्रार्थना ।

यः कर्णाञ्जलिसम्पुटैरहरहः सम्यक्पिबत्यादरा
द्वाल्मीकेर्वदनारविन्दगलितं रामायणाख्यं मधु ।
जन्मव्याधिजराविपत्तिमरणैरत्यन्तसोपद्रवं
संसारं स विहाय गच्छति पुमान्विष्णोः पदं शाश्वतम् ॥ 19 ॥

16. (பொ-ரை) யாவரொருவர் ஸமுத்ரத்தின் ஜலத்தை விளையாட்டாகத் தாண்டி, அசோகவனிகையில் இருந்த ஸீதையின் சோகமாகிற நெருப்பைக் கொண்டு, அதினாலேயே லங்காபட்டணத்தைக் கொளுத்தினாரோ, அந்த ஆஞ்ஜநேயரைக் கைகூப்பி வணங்குகிறேன்.

17. (பொ-ரை) மிகவும் சிவந்த முகமுடையவரும், ஸ்வர்ணமலைபோல் அழகான சரீரமுடையவரும், பாரிஜாத வ்ருக்ஷத்தின் அடியில் வஸிப்பவரும், வாயு புத்ரனுமான ஆஞ்ஜநேயரை நான் த்யானம் செய்கின்றேன்.

18. (பொ-ரை) எங்கெங்கு ஸ்ரீமத்ராமாயண பாராயணம் நடக்கின்றதோ அங்கங்கு கைகூப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பவரும், ஸ்ரீராம சரித்திரத்தைக் கேட்டு, ஆனந்த பாஷ்பம் நிறைந்த கண்களை உடையவரும், ராக்ஷஸர்களுக்கு ம்ருத்யுவுமான மாருதியை ஸேவியுங்கள்.

19. (பொ-ரை) யாவனொருவன் ஸ்ரீவால்மீகி மஹரிஷியினுடைய முகமான தாமரை புஷ்பத்திலிருந்து பெருகின ஸ்ரீராமாயணமென்கிற மகரந்தத்தை (தேனை) தினந்தோறும் தன்னுடைய இரண்டு காதுகளாகிற இரண்டு கைகளால் எடுத்து மிக அன்புடன் நன்றாக அருந்துகிறானோ (குடிக்கிறானோ) அந்த மனிதன், பிறப்பு, வ்யாதி, மூப்பு ஆபத்து, மரணம் இவைகளால் மிகவும் உபத்ரவமுடையதான ஸம்ஸாரத்தைத்தள்ளிவிட்டு அழிவில்லாத விஷ்ணுபதம் என்கிற மோக்ஷத்தை அடைகின்றான்.

आपदामपहर्तारं दातारं सर्वसंपदाम् ।
लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥ 20 ॥

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ 21 ॥

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः
परं व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥ 22 ॥

वन्दे वन्द्यं विधिभवमहेन्द्रादिवृन्दारकेन्द्रै
र्व्यक्तं व्याप्तं स्वगुणगणतो देशतः कालतश्च ।
धूतावद्यं सुखचितिमयैर्मंगलैर्युक्तमंगैः
सानाथ्यं नो विदधदधिकं ब्रह्म नारायणाख्यम् ॥ 23 ॥

20 (பொ-ரை) ஆபத்துக்களை போக்கி ஸர்வ ஸம்பத்துக்களையும் கொடுக்கின்றவரும் உலகங்களுக்குள் மிக்க அழகுள்ளவருமான ஸ்ரீராமனை அடிக்கடி நான் வணங்குகின்றேன்.

21. (பொ-ரை) சாஸ்த்ரத்தை அநுஸரித்து ஸமாஸம், ஸந்தி முதலியவைகளையுடையதாயும், ஸமங்களாயும், மதுரங்களாயும், ப்ரகாசமான அர்த்தங்களையுடையதுமான வாக்கியங்களால் சேர்க்கப்பட்டதும், ரகு குலத்தில் பிறந்த ஸ்ரீராமனுடைய சரித்ரமாயும், இராவணனுடைய வதத்தைக்குறித்ததுமான வால்மீகியினால் செய்யப்பட்ட இந்த க்ரந்தத்தை எல்லோரும் கேளுங்கள்.

22. (பொ-ரை) கல்பக வ்ருக்ஷத்தினடியில் ஸ்வர்ணமயமான மஹா மண்டபத்தில் புஷ்பக விமானத்தின் மத்யத்தில் நவரத்னங்களாலிழைக்கப்பட்ட ஆஸனத்தில் வீராஸனமாக ஸீதையுடன் நன்றாய் எழுந்தருளியிருக்கின்றவரும், சுற்றிலும், உட்கார்ந்துகொண்டிருக்கிற மஹரிஷிகளுக்கு ஸ்ரீவாயு புத்ரனை ஹனுமான் சாஸ்த்ரத்தின் மேலான தத்வத்தை எடுத்துச்சொல்லும் காலத்தில் அதற்கு வ்யாக்யானம் செய்கின்றவரும், பரதன் முதலான தம்பிமார்களால் சூழப்பட்டும், ச்யாமள வர்ணருமான ஸ்ரீராமனை ஸேவிக்கிறேன்.

23. (பொ-ரை) ப்ரம்மா, ருத்ரன், இந்திரன் முதலான தேவச்ரேஷ்டர்களால் எப்பொழுதும் ஸ்தோத்ரம் செய்யப்பட்டும், தன்னுடைய குணங்களால் தேசத்தாலும், காலத்தாலும் வ்யக்தமான வஸ்துக்களை முழுவதும் வ்யாபித்தவராயும் கெட்ட குணங்களில்லாதவராயும் ஜ்ஞானானந்தமயங்களான திவ்யமங்கள விக்ரஹங்களோடு கூடியும், எப்பொழுதும் நமக்கு நாதனும், நாராயணன் என்று திருநாமத்தையுடைய ப்ரம்மத்தை நான் ஸேவிக்கிறேன்.

भूषारत्नं भुवनवलयस्याखिलाश्चर्यरत्नं
लीलारत्नं जलधिदुहितुर्देवतामौलिरत्नम् ।
चिन्तारत्नं जगति भजतां सत्सरोजद्युरत्नं
कौसल्याया लसतु मम हृन्मण्डले पुत्ररत्नम ॥ 24 ॥

महाव्याकरणाम्भोधिमन्थमानसमन्दरम् ।
कवयन्तं रामकीर्त्या हनुमन्तमुपास्महे ॥ 25 ॥

मुख्यप्राणाय भीमाय नमो यस्य भुजान्तरम् ।
नानावीरसुवर्णानां निकषाश्मायितं बभौ ॥ 26 ॥

स्वान्तस्थानन्तशय्याय पूर्णज्ञानमहार्णसे ।
उत्तुङ्गवाक्तरङ्गाय मध्वदुग्धाब्धये नमः ॥ 27 ॥

24. (பொ-ரை) பூமண்டலத்திற்கெல்லாம் உயர்ந்த ஆபரணமாயும், எல்லோரும் ஆச்சர்யப்படக்கூடிய ரத்னமாயும், ஸமுத்ரராஜன் புத்ரியான மஹாலக்ஷ்மிக்கு விளையாட்டுக்கு உபயோகமான ரத்னமாயும், ஸகல தேவதைகளுடைய கிரீடத்திற்கு ரத்னமாயும், உலகத்தில் தன்னை அடைந்தவர்களுக்கு சிந்தாமணி போல் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கின்றதும், ஸாதுக்களாகிற தாமரஸ புஷ்பத்திற்கு ஸூர்யன் போல் விகாஸத்தைச் செய்கிறதுமான கௌஸல்யாதேவியின் புத்ரனென்கிற ஒரு ரத்னமானது என்னுடைய ஹ்ருதயப்ரதேசத்தில் (மனதில்-மார்பில்) ப்ரகாசிக்கவேண்டும்.

25. (பொ-ரை) பெரிதான வ்யாகரணசாஸ்த்ரமாகிற ஸமுத்ரத்தைக் கடைவதில் மத்து போன்ற தன்னுடைய மனதாகிய மந்தரகிரியை உடையவரும், ஸ்ரீராமனுடைய கீர்த்தியினால் கவனம் செய்கிறவருமான ஹனுமானை நான் உபாஸிக்கிறேன்.

26. (பொ-ரை) யாதொருவருடைய மார்பானது உலகத்திலிருக்கிற பலவிதமான வீரர்களாகிற ஸ்வர்ணத்தை உறைக்கின்ற உரைகல் போல் விளங்குகின்றதோ அந்த முக்யப்ராணதேவரான பீமஸேனரை ஸேவிக்கிறேன்.

27. (பொ-ரை) தன்னுடைய நடுவில் (மனதில்) இருக்கிற பகவானை உடையவராயும், நிறைந்த ஜ்ஞானமாகிற அதிக ஜலத்தை உடையவராயும், உயர்ந்த வாக்குகளாகிற அலைகளை உடையவருமான, மத்வாசார்யராகிற க்ஷீர ஸமுத்ரத்தை வணங்குகிறேன்.

वाल्मीकेर्गौः पुनीयान्नो महीधरपदाश्रया ।
यद्दुग्धमुपजीवन्ति कवयस्तर्णका इव ॥ 28 ॥

सूक्तिरत्नाकरे रम्ये मूलरामायणार्णवे ।
विहरन्तो महीयांसः प्रीयन्तां गुरवो मम ॥ 29 ॥

हयग्रीव हयग्रीव हयग्रीवेति यो वदेत् ।
तस्य निःसरते वाणी जह्नुकन्याप्रवाहवत् ॥ 30 ॥

पारायणसमापनक्रमः—

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥ 1 ॥

काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी ।
देशोऽयं क्षोभरहितो ब्राह्मणास्सन्तु निर्भयाः ॥ 2 ॥

28. (பொ-ரை) ஸ்ரீராமனுடைய சாரித்ரத்தை தழுவினதாயும், (பர்வத ப்ரதேசத்தில் ஸஞ்சரிக்கின்றதுமான) ஸ்ரீவால்மீகியினுடைய வாக்கானது, (பசுவானது) நம்மை பரிசுத்தம் செய்யட்டும். உலகத்திலுள்ள கவிகளெல்லோரும் கன்றுகள் போல யாதொரு வால்மீகியின் வாக்கினுடையவும், (பசுவினுடையவும்) வர்ணனையும், பாலையும் குடித்துப்பிழைக்கின்றார்களோ.

29. (பொ-ரை) நல்ல பதங்களாகிற ரத்னங்களுக்கிருப்பிடமாயும், அழகாயுமிருக்கிற மூலராமாயணமாகிற ஸமுத்ரத்தில் நீந்தி விளையாடுகின்ற, மிகவும் பெரியோர்களான குருக்கள் என்னிடத்தில் ப்ரீதி செய்யவேண்டும்.

30. (பொ-ரை) ஹயக்ரீவ, ஹயக்ரீவ, ஹயக்ரீவா என்று யாவனொருவன் சொல்லுகிறானோ, அவனுடைய முகத்திலிருந்து கங்காப்ரவாஹம் போல் ஸரஸ்வதி ப்ரவாஹம் புறப்படுகிறது.

1. (பொ-ரை) ஸர்வ ஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும், அரசர்கள் ந்யாயமார்க்கத்தினால் பூமியை ஆளவேண்டும், பசுக்களுக்கும், ப்ராம்மணர்களுக்கும் எப்பொழுதும் மங்களம் உண்டாகவேண்டும். எல்லாலோகங்களும் ஸுகமாக இருக்கவேண்டும்.

2. (பொ-ரை) காலத்தில் மழை பெய்து, பூமிஎங்கும் பயிருடன் விளங்கிக்கொண்டு இந்த தேசம் ஒரு விதமான கெடுதல் இல்லாமலும் ப்ராம்மணர்கள் பயமில்லாமலும் இருக்கவேண்டும்.

लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराभवः ।
येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः ॥ 3 ॥

मंगलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये ।
चक्रवर्तितनूजाय सार्वभौमाय मंगलम् ॥ 4 ॥

॥ इत्यादि श्लोकाः श्रीवैष्णवपद्धतिवदनुसन्धेयाः ॥

---

3. (பொ-ரை) கருநெய்தல் புஷ்பம் போல் ச்யாமள வர்ணமுடைய ஸ்ரீராமனை யெவர்கள் நிரந்தரமாக த்யானம் செய்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வலாபமும், ஸர்வவித ஜயமும் உண்டாகிறது. எவ்விடத்திலும் அவர்களுக்கு அவமானமே கிடையாது.

4. (பொ-ரை) கோஸலதேசத்திற்கு அதிபதியாயும், எல்லோராலும் கொண்டாடப்பட்ட குணங்களுக்கு இருப்பிடமாயும், சக்ரவர்த்தியின் புத்ரனாயும், ஸார்வ பௌமனுமான ஸ்ரீராமனுக்கு மங்களம் உண்டாகவேண்டும்.

|| श्रीः ||

श्रीरघुनन्दनपरब्रह्मणे नमः

श्रीमद्वाल्मीकिरामायणे—बालकाण्डे

प्रथमः सर्गः ॥ 1 ॥

* तपः स्वाध्यायनिरतं तपस्वी वाग्विदां वरम् ।
नारदं परिपप्रच्छ वाल्मीकिर्मुनिपुंगवम् ॥ 1 ॥

---

1. (ப-ரை) तपस्वी- தபஸ்ஸை உடையவரான, वाल्मीकिः- வால்மீகிமஹரிஷி, तपः स्वाध्यायनिरतं- தபஸ்ஸிலும், வேதம் ஓதுவதிலும், ஊக்கமுள்ளவரும், वाग्विदां- வேதார்த்தம் தெரிந்தவர்களுக்குள், वरम्- ச்ரேஷ்டருமான, मुनिपुंगवम्- முனிகளுக்குள் சிறந்தவரான, नारदं- நாரத மஹரிஷியைப் (பார்த்து), परिपप्रच्छ- நன்றாகக்கேட்டார்.

1. (பொ-ரை) சாந்த்ராயணம் முதலான வ்ரதாநுஷ்டானத்திலும், வேதம் ஓதுவதிலும் ஊக்கமுள்ளவராய், ஸாங்கமான வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் அறிந்தவராய், எப்பொழுதும் ப்ரம்மத்தை த்யானம் பண்ணுகிறவர்களுக்குள் சிறந்தவருமான நாரத மஹரிஷியைப்பார்த்து, சிறந்த தபஸ்ஸுடையவரும், வல்மீகத்தில் (பாம்புப்புற்றில்) அவதரித்தவருமான வால்மீகி மஹரிஷி நன்றாய் வணங்கி விசேஷமாக சில ப்ரச்னைகளைச் செய்தார்.

---

*ஆரம்பிக்கப்போகின்ற க்ரந்தம் நிர்விக்னமாக முடிவு பெறுவதின் பொருட்டும், வ்ருத்தியடைவதின் பொருட்டும், ஆதியில் ஆசார்ய நமஸ்காரமும், தேவதா நமஸ்காரமும் செய்யப்படுகிறது.

இவ்விடத்தில் आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापत्- आचार्यवान् पुरुषो वेद- அதாவது (குருமுகமாகவே க்ரஹிக்கப்பட்ட வித்யைதான் கார்யகரமாகுமென்றும் — ஆசார்யனை அடைந்தவன்தான் ப்ரம்மத்தை அடைவனென்றும்) இத்யாதி ச்ருதிகளால் ஸதாசார்ய உபதேசம் அவச்யம் வேண்டியபடியால் நாரதருக்கு ஆசார்ய லக்ஷணம் பூர்ணமாக இருக்கிறதென்பது "த்விதீயாந்த" பதங்களினால் காட்டப்பட்டது.

அதில் आचार्यो वेद संपन्नः- என்கிறபடியே (வேதம் ஓதுகையாகிற ஆசார்ய லக்ஷணம்) சொல்லப்பட்டது.

இவ்விடத்தில் तपस्- என்றால், சாந்த்ராயணம் முதலானதுகள்.

स्वाध्याय- என்றால், வேதம். இவை இரண்டுகளும் ஆசார்யர்களுக்கு அவச்யம் வேண்டுகையால் அவைகள் இவ்விடத்தில் சேர்த்து சொல்லப்பட்டன. இவ் விஷயத்தில், तपो विद्या च विप्रस्य निःश्रेयसकरं परम् । तपसा कल्मषं हन्ति विद्यया ज्ञानमश्नुते ॥ அதாவது, (ப்ராம்மணனுக்கு தபஸ்ஸும், வேதமும், மிகவும் க்ஷேமகரம். தபஸ்ஸினால் பாபத்தைப்போக்கி, வேதத்தினால் ஜ்ஞானத்தை அடைகிறான்) என்று மநு சொல்லியிருக்கிறார். அல்லது,

तपः என்றால் ப்ரம்மம். स्वाध्यायः- என்றால் வேதம். அதாவது, (ப்ரம்மத்தை ப்ரதானமாக ப்ரதிபாதிக்கின்ற வேதம்.) அதாகிறது வேதாந்தம். அதிலும் ஊக்கமுள்ளவர். அல்லது.

तपः- என்றால், வ்யாகரணம். இது மற்ற शीक्षा, छन्दः, निरुक्तं, ज्योतिषं, कल्पं- என்கிற வேதாங்கங்களுக்கும் உபலக்ஷணமாகையால் ஸாங்கமாக வேதாத்யயனம் செய்தவரென்றும் சொல்லலாம்.

वाग्विदां वरम्- என்கிற விசேஷணத்தால் वाक्- என்றால், अनादिनिधनाह्येषा वागुत्सृष्टा स्वयम्भुवा- (ஆதியும், முடிவுமில்லாத இந்த வாக்கானது பகவானால் ப்ரகாசப்படுத்தப் பட்டது) என்று வேதத்தை சொல்லுகிறது. அதை அறிந்தவர்களுக்குள் சிறந்தவர். அல்லது,

वाक्- என்றால் ஸரஸ்வதி. विद्:- என்றால் அவளால் அடையப்பட்டவர்கள். அதாவது, (मरीचि முதலாகிய ஸாஸ்வதி புத்ரர்கள்) அவர்களுக்குள் சிறந்தவர் என்றும் சொல்லலாம்.

तपः स्वाध्यायनिरतं- என்கிற விசேஷணத்தால், வித்யையும், वाग्विदां वरम्- என்கிற விசேஷணத்தால், ஸத்குல பிறப்பும் சொல்லியபடியால்,

अभिजनविद्यासमुदेतं समाहितं संस्कर्तारं ईप्सेत्- (அதாவது நற்குடிப்பிறப்பு, ஜ்ஞானம், சாஸ்த்ராநுஷ்டானம் இவைகளோடு கூடிய ஆசார்யனை அடையவேணும்) என்று ஆபஸ்தம்பர் சொல்லிய ஆசார்ய லக்ஷணம் தெரிவிக்கப்பட்டது.

नारद- (नारं ददाति इति नारदः) नर- என்கிற பதத்திற்கு, नरतीति नरः प्रोक्तः परमात्मा सनातनः- ஒருநாளும் அழிவில்லாதவர் என்று அர்த்தமாகையால், பகவானைச்சொல்லி அவனுடைய சம்பந்தி नारं என்று பகவத் விஷயமான ஜ்ஞானத்தைச்சொல்லி அதைக்கொடுக்கிறவர் என்கிறபடியால் எல்லோருக்கும் பகவானைப்பற்றிய ஜ்ஞானோபதேசம் செய்கிறவர் என்று அர்த்தம். அல்லது,

नर ஸம்பந்தி नारं என்று மனிதனுடைய அஜ்ஞானத்தைச்சொல்லி அதை द्यति- கண்டிக்கிறார். (போக்குகிறார்) என்றும் சொல்லலாம்.

नारदो नाशयन्नेति नृणामज्ञानजं तमः- (நாரதர் மனிதர்களுடைய அஜ்ஞானத்தினுண்டான, இருளைப்போக்கிக்கொண்டு வருகிறார்) என்கிற ப்ரமாணத்தினால்

இவ்விதம் நாரதருக்கு ஆசார்ய லக்ஷண பூர்த்தி சொல்லி, தனக்கு சிஷ்ய லக்ஷண பூர்த்தியைச சொல்லுகிறார். तपस्वी- என்று.

இங்கு तपः என்கிற பதத்திற்கு சாந்த்ராயணம் முதலானதும், வேதமும், ப்ரம்மஜ்ஞானத்திற்கு, ஸாதனமான தபஸ்ஸாம் சொல்லப்பட்டது.

वाल्मीकिः- வல்மீகத்தில் (பாம்புப்புற்றில்) உண்டானவர்.

இவரை, விஷ்ணு புராணம், ஸ்ரீமத் ராமாயணம் உத்தரகாண்டம், முதலியவைகளில் பார்கவரென்றும், வருணனுடைய புத்ரராகையால் ப்ராசேதஸர் என்றும் மற்றவிடத்திலும் சொல்லியிருக்க,

பாம்புப்புற்றில் பிறந்தவரென்று எவ்விதம் சொல்லலாம் என்று ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்.

அசையாமல் நிரந்தரமாக தபஸ் செய்துகொண்டிருக்கும் காலத்தில், இவர் தேஹத்தில் பாம்பு புற்று உண்டாகி இவரை மூட, வருணன் இடைவிடாமல் மழை பெய்[illegible]ததினால் புற்று கரைந்து இவர் வெளித்தோன்றினபடியால், ப்ருகுவின் புத்ரரான இவரையே, ப்ரசேதஸ்ஸின் புத்ரர் ப்ராசேதஸர் என்றும், வல்மீகத்தின் புத்ரர் வால்மீகர், என்றும் சொல்லத்தட்டில்லை. प्रचेताः- வருணன்,

இங்கு வால்மீகியினுடையவும், நாரதருடையவும், ஸ்வரூபத்தை சொல்லியபடியால் சிஷ்யரும் ஆசார்யனும் இவ்விதமிருக்கவேண்டுமென்று தெரிவித்ததாகிறது.

* कोन्वस्मिन्सांप्रतं लोके गुणवान्कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ॥ 2 ॥

---

2. (ப-ரை) अस्मिन् लोके- இந்த உலகத்தில், सांप्रत- இப்பொழுது, कः नु- எவர், गुणवान्- எல்லா குணங்களும் பொருந்தியவர், कः- எவர், वीर्यवान् च- வீர்யமுடையவர், (कः- எவர்), धर्मज्ञः च- தர்மத்தை நன்றாய்அறிந்தவர், (कः- எவர்), कृतज्ञः च- செய்த உபகாரத்தை அறிந்தவர், (कः- எவர்), सत्यवाक्यः- பொய்யில்லா வார்த்தையை உடையவர், (कः- எவர்), दृढव्रतः- உறுதியான ஸங்கல்பம் உடையவர்.

2. (பொ-ரை) இந்த உலகத்தில், இந்த ஸமயத்தில், யார் ஸகல கல்யாண குணமும் பொருந்தினவர். யார் வீர்யமுடையவர். தர்மத்தை அறிந்தவர். செய்த உபகாரத்தை அறிந்தவர். பொய்யில்லாத வார்த்தை சொல்லுபவர். உறுதியான ஸங்கல்பம் உடையவர்.

*अस्मिन् लोके- இந்த உலகத்தில் என்பதினாலும்,

सांप्रत- இந்த காலத்தில் என்பதினாலும், லோகாந்தரத்தில் பகவான் எழுந்தருளியிருப்பதும், வேறு காலத்தில் நரஸிம்மாவதாரம் முதலானதுகளும் ப்ரஸித்தமாகையால், அதைவிலக்குவதற்காக இந்த உலகத்தில், இந்த காலத்தில் என்றபடி.

गुणवान्- (गुणा: अस्य सन्ति इति गुणवान्) இங்கு मतुप्- ப்ரத்யயமானது குணங்களின் சிறப்பைச்சொல்லி ஸகல கல்யாண குணங்களும் நிறைந்தவன் என்று சொல்லுகிறது. இவ்விதம் பொதுவாக குணங்களைச்சொல்லி தனித்தனியாக இந்த குணங்களையே விவரிக்கிறார்மேல், वीर्यवान्- முதலாகிய விசேஷணங்களால். அல்லது,

गुणः- என்று ஏகவசனமாய் गुण्यते आवर्त्यते पुनः पुनः आश्रितैः- (ஆச்ருதர்களால் எப்பொழுதும் அநுஸந்தானம் செய்யப்படுகிறது) என்று குண சப்தத்தால் ஸௌசீல்யத்தையும் சொல்லலாம்.

அதாவது, (மிகவும் உயர்ந்தவன், மிகவும் தாழ்ந்தவனோடு நெருங்கிக்கலப்பது சீலம். அது மிகவும் அதிகமானதென்று ஸௌசீல்யம்.) அதை உடையவன்.

वशी वदान्यो गुणवान्- என்கிற ச்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தாரும் गुणवान्- என்கிற சப்தத்தினால், ஸௌசீல்யமுடையவன் என்று திருவுள்ளம் பற்றியிருக்கிறார்.

वीर्यवान्- வீர்யமுடையவன். வீர்யமாவது, மனதைக்கலக்கக்கூடிய ஸாமக்ரியிருந்தும் கலங்காத மனதுடைமை.

धर्मज्ञः- धर्मं जानातीति धर्मज्ञः- தர்மத்தை அறிந்தவன். தர்மம் இரண்டுவிதம்,
ஸாமான்யமென்றும், விசேஷமென்றும்.
ஸாமான்யமாவது, பித்ருவசன பரிபாலனம் முதலியவை.
விசேஷமாவது, சரணாகத ரக்ஷணம்.

*चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः ।
विद्वान् कः कः समर्थश्च कश्चैकप्रियदर्शनः ॥ 3 ॥

3. (ப-ரை) कः- யார், चारित्रेण च- ஸதாசாரத்தோடு, युक्तः- கூடினவர், कः- யார், सर्वभूतेषु- எல்லாப்ராணிகளிடத்திலும், हितः- ஹிதத்தைச்செய்கின்றவர், कः- யார், विद्वान्- பண்டிதர், कः- யார், समर्थः च- ஸமர்த்தர், कः- யார், एकप्रियदर्शनः- ஒருவர் தான் ப்ரியமான காக்ஷியுடையவர்.

3. (பொ-ரை) எவர் ஸதாசாரத்தோடு கூடினவர், எவர் ஸர்வப்ராணிகளுக்கும் ஹிதத்தைச்செய்கின்றவர், யார் பண்டிதர், யார் ஸமர்த்தர், யார் ஒருவர் தான் ப்ரியமான காக்ஷியுடையவர்.

कृतज्ञः- (कृतं जानाति इति कृतज्ञः-) செய்த உபகாரத்தை அறிந்தவர். ஆச்ருதர் செய்த அல்பமான உபகாரத்தையும் மஹாமேருவாக நினைத்து ஸந்தோஷப்படுகிறவர் என்று. कथंचिदुपकारेण कृते नैकेन तुष्यति- என்று சொல்லப்படப்போகிறது.

सत्यवाक्यः (सत्यं वाक्यं यस्य सः-) அதாவது எவருடைய வாக்கு பொய்யில்லாமலிருக்கிறதோ அவர்,

अनृतं नोक्तपूर्वं मे न च वक्ष्ये कदाचन- (நான் இதுவரையில் பொய் சொன்னதில்லை, இனிமேலும் ஒருக்காலும் பொய் சொல்லப்போகிறதில்லை.) என்று மேலே சொல்லப்படப்போகிறது.

दृढव्रतः-(दृढं व्रतं यस्य सः) த்ருடமான வ்ரதத்தை உடையவர். அதாவது, உறுதியான ஸங்கல்பம் உடையவர்.

अप्यहं जीवितं जह्यां त्वां वा सीते सलक्ष्मणाम् ।
नहि प्रतिज्ञां संश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः ॥

நான் உயிரை விட்டாலும் விடுவேன். ஸீதே, உன்னை விட்டாலும் விடுவேன், என் தம்பியான லக்ஷ்மணனை விட்டாலும் விடுவேன், ஒருவருக்குச்செய்த ப்ரதிஜ்ஞையை ஒருக்காலும் விடமாட்டேன். அப்படியிருக்க, விசேஷித்து மஹரிஷிகளுக்குச்செய்த ப்ரதிஜ்ஞையை விடவேமாட்டேன், என்று மேலே சொல்லப்படுகிறது.

3. (ஸ்வா)[illegible] एव चारित्रं- அசாரத்தோடு கூடினவர். அதாவது,

எக்காலத்திலும் தம்முடைய குலாசாரத்தைக் கைவிடாதவர் என்றபடி.

सर्वभूतेषु- என்று भूत சப்தத்தால் இவர் ஹிதம் செய்யக்கூடிய ப்ராணிகள் விஷயத்தில், இவன் தன்னைச்சேர்ந்தவன், இவன் அயலான் என்கிற தாரதம்யம் இல்லாமையும்,

*आत्मवान् को जितक्रोधो द्युतिमान् कोऽनसूयकः ।
कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे ॥ 4 ॥

---

4. (ப-ரை) कः- யார், आत्मवान्- தைர்யமுடையவர், कः- யார், जितक्रोधः- ஜயிக்கப்பட்ட கோபத்தையுடையவர், कः- யார், द्युतिमान्- காந்தியுடையவர், कः- யார், अनसूयकः- பொறாமையில்லாதவர், जातरोषस्य- கோபத்தையுடைய, कस्य- எவருடைய, संयुगे- யுத்தத்தில், देवाः च- தேவர்களும், बिभ्यति- பயப்படுகிறார்கள்.

4. (பொ-ரை) யார் ஒருவராலும் அசைக்கமுடியாத தைர்யமுடையவர், யார் கோபத்திற்குத் தான் வசமாகாமல் அதைத் தன்வசமாக்கிக்கொண்டிருக்கிறவர் எவர் சிறந்த சோபையுடையவர். எவர் அஸூயையில்லாதவர். எவர் கோபத்துடன் யுத்தம் பண்ணும் காலத்தில் தேவர்களும் நடுங்குவார்கள்.

सर्व- சப்தத்தினால் அபராதிகளுக்கும் ஹிதம் செய்கிறார் என்பதும் காட்டப்பட்டது.

विद्वान्- वेत्ति इति विद्वान्- அறிகிறான். அதாவது,

ஸர்வ சாஸ்த்ரங்களையும் அறிந்தவர்.

समर्थः- என்கிறதினால், எவ்விதமான கார்யத்தை ஆரம்பித்தாலும் குறைவற முடிக்கும் ஸாமர்த்யமுள்ளவர் என்கிறது தெரிவிக்கப்பட்டது.

एकप्रियदर्शनः-प्रियं दर्शनं यस्य- प्रियदर्शनः-(ப்ரியமான காக்ஷியுடையவர்).

एकश्च असौ प्रियदर्शनश्च- एकप्रियदर्शनः- இவனைப்போல் வேறொருவனும் உலகத்தில் ப்ரியமான காக்ஷியுடையவன் இல்லை என்றபடி. அல்லது,

एकप्रियदर्शनः- ஏகரூபமான, ப்ரியமுமான காக்ஷியுடையவன், உலகத்தில் ஒருவனுக்கு, ஒரு ஸமயத்தில் ஒருவனைப்பார்த்தால் ப்ரியமாயும், மற்றொரு ஸமயத்தில் பார்த்தால் ப்ரியமல்லாமலும் இருப்பது வழக்கம். இவர் அப்படியன்று. எப்பொழுதும் ஒரே மாதிரியாக ப்ரியமாய் இருக்கிறவர் தவிரவும்,

क्षणे क्षणे यन्नवतामुपैति तदेव रूपं रमणीयतायाः- (அழகு என்றால் எந்த வஸ்துவானது ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிது புதிதாகத் தோன்றுகிறதோ அதுதான் அழகு) என்று சொல்லியபடி ஸர்வகாலம் அநுபவித்தபோதிலும் அபூர்வமான வஸ்துவைப் போல் ஆச்சர்யத்தை உண்டுபண்ணுகிறவர்.

4 *असूयै- குணங்களிலும், தோஷத்தை ஏரிட்டுச்சொல்வது.

देवाश्च- என்ற च- காரத்தினால் அஸுரர்களும் குறிக்கப்படுகிறார்கள். அல்லது,

च- என்று, अपि- என்று அர்த்தமாய், அநுகூலர்களான தேவர்களே பயப்படுகிறார்கள். ப்ரதிகூலர்களான அஸுரர்கள் பயப்படுகிறார்கள் என்று சொல்லவேண்டுவானேன் என்றும் சொல்லலாம்

*एतदिच्छाम्यहं श्रोतुं परं कौतूहलं हि मे ।
महर्षे त्वं समर्थोऽसि ज्ञातुमेवंविधं नरम् ॥ 5 ॥

---

5. (பதவுரை) अहं- நான், एतत्- இதை, श्रोतुं- கேட்பதற்கு, इच्छामि- விரும்புகிறேன், हि- ஏனென்றால், मे- எனக்கு, परं- மேலான, कौतूहलं- ஆசை (உண்டாயிருக்கிறது), हे महर्षे- ஹே ரிஷிச்ரேஷ்டரே! एवं विधं- இப்படிப்பட்ட, नरम्- மனிதனை, ज्ञातुं- அறிவதற்கு, त्वं- நீர், समर्थः असि- ஸமர்த்தராக ஆகுறீர்.

5. (பொழிப்புரை) இதைக் கேட்கவேணுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால், எனக்கு அதிகமான குதூஹலம் உண்டாயிருக்கிறது. நான் கேட்ட குணங்களையுடைய மனிதனை அறிந்து சொல்வதற்கு, மஹரிஷியே நீர் மிகவும் ஸாமர்த்தியமுடையவர்.

* இங்கு ஒரு ஆக்ஷேபம். ஸ்ரீராமனுடைய ஸகல வ்ருத்தாந்தங்களையும் நன்றாயறிந்திருக்கிற ஸ்ரீவால்மீகி மஹரிஷிக்கு, ஸம்சயமுண்டாகக் காரணமில்லாமையால், இவ்விதப் ப்ரச்னம் செய்வது பொருந்தாது.

இவர் ஸ்ரீராமனுடைய குணங்களை நன்றாய் அறிந்திருக்கிறாரென்பது, इति सीता च रामश्च लक्ष्मणश्च कृताञ्जलिः । अभिगम्याश्रमं सर्वे वाल्मीकिमभिवादयन् ॥ அதாவது,

(ராமன், ஸீதை, லக்ஷ்மணன், இம்மூவரும் கைகூப்பிக்கொண்டு வால்மீகி ரிஷியினுடைய ஆச்ரமம் சென்று அவரை ஸேவித்தார்களென்பதும்), विषये ते महाराज रामव्यसनकर्शिताः । अपि वृक्षाः परिम्लानाः सपुष्पाङ्कुरकोरकाः ॥ அதாவது,

(அரசனே ராமனைவிட்டுப்பிரிந்த வ்யஸனத்தினால் உம்முடைய தேசத்திலிருக்கின்ற மரங்களும், கொடிகளும், புஷ்பம், அரும்பு, முளை, இவைகளோடு உலர்ந்தும், வாடியும் விட்டனவாகின. என்றதாக மஹாராஜனைப்பார்த்து ஸுமந்த்ரர் வாக்யமாகவும், இவரே சொல்லியபடியால். தவிரவும், रामो रामो राम इति प्रजानामभवन्कथाः । रामभूतं जगदभूद्रामे राज्यं प्रशासति ॥ ஸ்ரீராமன் ராஜ்ய பரிபாலனம் பண்ணுங்காலத்தில் ஜனங்களுடைய பேச்சுக்களெல்லாம் ராமன், ராமன், ராமனென்றே. உலகை முழுவதும் ராமனாகவே ஆகிவிட்டது என்று ஸாமான்ய ஜனங்களாலும் அறியப்பட்ட ஸ்ரீராமனுடைய வைபவத்தை ஸ்ரீ வால்மீகி மஹரிஷி அறிந்திருக்கமாட்டாரா. அதுவுமல்லாமல், ஸத்ய லோகத்திலிருந்து வந்த நாரதரைப்பார்த்து இவர் இவ்வளவுதான் கேட்பதுமாவானேன் என்று.

*श्रुत्वा चैतत्त्रिलोकज्ञो वाल्मीकेर्नारदो वचः ।
श्रूयतामिति चामन्त्र्य प्रहृष्टो वाक्यमब्रवीत् ॥ 6 ॥

6. (ப-ரை) त्रिलोकज्ञः- மூன்று உலகங்களையுமறிந்தவரான, नारदः- நாரதர், वाल्मीकेः- வால்மீகியினுடைய, एतत् वचः- இந்த வார்த்தையை, श्रुत्वा च- கேட்டு, प्रहृष्टः- ஸந்தோஷமுடையவராய், श्रूयतां- கேட்கப்படலாம், इति- என்று, आमन्त्र्य च- அழைத்து, वाक्यं- வார்த்தையை, अब्रवीत्- சொன்னார்.

6. (பொ-ரை) மூன்று லோக வ்ருத்தாந்தத்தையும் நன்றாய் அறிந்திருக்கிற நாரதமஹரிஷி வால்மீகியினுடைய வார்த்தையைக்கேட்டு, கேளும் வால்மீகியே! சொல்லுகிறேன் என்று அவரைத் தனக்கு எதிர்முகமாகச் செய்து பரம ஸந்தோஷத்துடன் ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

ஸமாதானம்:- இந்த ப்ரச்னமும், இதற்கு உத்தரமும் அபரமாக (மேலே [illegible]) த்தோன்றுகிறதல்ல. கையில் நெல்லிக்கனிபோல, ஸ்ரீராம வ்ருத்தாந்தத்தை முழுவதும் நன்றாயறிந்திருக்கிற ஸ்ரீ வால்மீகி [illegible] "இதைக் கேட்க ஆசைப்படுகிறேன்" என்று கூறுவதும் [illegible] இல்லையாயினும், மேல் இதை நன்றாயறிந்து சொல்லுகிறேன் என்று [illegible] சொல்ல [illegible]யாலும். ஆகையால் ப்ரச்னம் [illegible], பதில் சொல்லுகிறதையும் ஆராய்ந்து பார்க்குங்காலத்தில் [illegible] என்றால், [illegible] இது என்றும் [illegible]. அதாவது:-

லோகங்களில் सद्विद्या- முதலான ஞானிகளான வித்யைகளில், [illegible] [illegible] குணங்களோடு கூடிய உபாஸிக்கத்தகுந்த [illegible] [illegible], அல்லது ருத்ரன், அல்லது வேறொன்று என்பது [illegible].

இவ்விதம் வால்மீகி ரிஷியின் அபிப்ராயத்தை [illegible], நாரதர் சொல்லும் பதிலாவது. ஸ்ரீராமனாக இப்பொழுது அவதாரம் [illegible] விஷ்ணுவே, ஸகல வேதாந்தங்களிலும் சொல்லப்படுகிற புருஷன். [illegible] எல்லோரும் அவனுக்கு [illegible]கள்.

सत्- ब्रह्म- आत्मा- शम्भु- शिव- इन्द्र- अग्नि- இவை முதலான [illegible] எல்லாம் அபர்யவஸான வ்ருத்தியினாலும், அதாவது (ச[illegible] [illegible] சப்தங்கள் அதோடு நிற்காமல் ஆத்மா வரையில் செல்லுவதை), [illegible] வ்ருத்தியினாலும், அதாவது, (சப்தங்களுடைய அர்த்தத்தைப் பார்க்கில், [illegible] [illegible] [illegible]) விஷ்ணுவையே சொல்லுகிறதாகன். [illegible] ஸகல வேதங்களிலும் சொல்லப்பட்ட குணங்களை ஸ்ரீராமன் [illegible], பதில் சொல்லுகிறார். இவைகளெல்லாம் கோவிந்த ராஜீயத்தில் [illegible].

6. *त्रिलोकज्ञः- மூன்று உலகத்தையும் அறிந்தவர்.
மூன்று உலகங்களாவன- பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் [illegible]. [illegible] விஷ்ணுபுராணத்தில் சொல்லியபடி க்ருதகம், அக்ருதகம், [illegible] என்ற மூன்று உலகங்கள்.

பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், [illegible]

बहवो दुर्लभाश्चैव ये त्वया कीर्तिता गुणाः ।
मुने वक्ष्याम्यहं बुद्ध्वा तैर्युक्तः श्रूयतां नरः ॥ 7 ॥
इक्ष्वाकुवंशप्रभवो रामो नाम जनैः श्रुतः ।
नियतात्मा महावीर्यो द्युतिमान् धृतिमान् वशी ॥ 8 ॥

7. (ப-ரை) हे मुने- வால்மீகி முனிவரே! बहवः- அநேகங்களாயும், दुर्लभाः च एव- மற்றவர்களிடத்தில் ஸம்பவிக்கக்கூடாதவைகளுமான, ये गुणाः- யாதொரு குணங்கள், कीर्तिताः- சொல்லப்பட்டவைகளோ, अहं- நான், बुद्ध्वा- அறிந்து, वक्ष्यामि- சொல்லப்போகிறேன், तैः युक्तः- அவைகளோடு கூடின, नरः- மனிதன், श्रूयतां- உம்மால் கேட்கப்படலாம்.

8. (ப-ரை) इक्ष्वाकुवंशप्रभवः- இக்ஷ்வாகு வம்சத்தை பிறப்பிடமாக உடையவர், रामोनाम- ராமனென்று ப்ரஸித்தமாக, जनैः- எல்லா ஜனங்களாலும், श्रुतः- நிச்சயிக்கப்பட்டவர், नियतात्मा- விகாரமில்லாத ஸ்வபாவமுடையவர், महावीर्यः- அதிகசக்தியுடையவர், द्युतिमान्- ப்ரகாசமுடையவர், धृतिमान्- அளவற்ற ஆனந்தத்தை உடையவர், वशी- ஸகல ஜகத்தையும் தன் வசமாக்கிக்கொண்டவர்.

---

7. (பொ-ரை) வால்மீகி மஹரிஷியே, உம்மால் சொல்லப்பட்ட குணங்கள் அநேகங்களாயும் வேறொருவரிடத்திலும் இல்லாதவைகளாயுமிருக்கின்றன. ஆகையால் அந்த குணங்களோடு கூடின மனிதனை நான் நன்றாய் அறிந்து சொல்லுகிறேன், நீர் கேளும்.

8. (பொ-ரை) இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்தவர், ஸ்ரீராமனென்று ப்ரஸித்தி பெற்றவர், பாமர ஜனங்களாலும், தாடகை, மாரீசன் இவர்களுடைய வதம், விச்வாமித்ரருடைய யாகரக்ஷணம், அஹல்யையின் சாப மோக்ஷணம், சிவதனுர் பங்கம், பரசுராமஜயம், ஏழுமரங்களைத்துளைத்தது, வாலிவதம், ஸமுத்ரத்தில் அணைகட்டினது, மலைகளைக்கொன்றது, முதலாகிய அதிமானுஷமான காரியங்

கும் த்ருதகம்.

ஜனலோகம், தபோலோகம் என்று இவை இரண்டும் க்ருதகாக்ருதகம்.

ஸத்யலோகம்—அக்ருதகம். அல்லது,

लोक- என்றால் ஜனங்கள், त्रिलोक- என்றால் பத்தர், முத்தர், நித்யர் என்ற மூன்று ஜனங்களையும் சொல்லுகிறது.

நாரதர் ப்ரம்மாவின் புத்ரராகையால், இவைகளெல்லாவற்றையும் நன்றாயறிய யோக்யதையுடையவர்.

प्रहृष्टः- மிக்க ஸந்தோஷமுள்ளவர். தான் உபதேசிக்கப்போகின்ற அர்த்தத்தையே இவர் ப்ரச்னம் செய்த படியால் மிக்க ஸந்தோஷம். அல்லது,

प्रहृष्टः- சதகோடி விஸ்தாரமான ஸ்ரீராமாயணத்தில், தான் அறிந்த விஷயங்களை இவர் கேட்ட படியினாலும், ராமனுடைய குணங்களை நினைப்பூட்டினபடியாலும், ஸகல குணங்களாலும் நிறைந்த அபூர்வமான சிஷ்யன் தனக்குக் கிடைத்ததாலும் மிக்க ஸந்தோஷம்.

बुद्धिमान्नीतिमान्वाग्मी श्रीमाञ्छत्रुनिबर्हणः ।
विपुलांसो महाबाहुः कम्बुग्रीवो महाहनुः ॥ 9 ॥
महोरस्को महेष्वासो गूढजत्रुररिन्दमः ।
आजानुबाहुः सुशिराः सुललाटः सुविक्रमः ॥ 10 ॥

9. (ப-ரை) बुद्धिमान्- சிறந்த புத்தியையுடையவர், नीतिमान्- மரியாதையுடையவர், वाग्मी- அழகான வாக்குடையவர், श्रीमान्- ஐச்வர்யமுடையவர், शत्रुनिबर्हणः- சத்ருக்களை ஹிம்ஸிப்பவர், विपुलांसः- உயர்ந்த தோள்களையுடையவர், महाबाहुः- உருண்டு திரண்ட கைகளை உடையவர், कम्बुग्रीवः- சங்கம் போன்ற கழுத்துடையவர், महाहनुः- பெருத்த தாடையை உடையவர்.

10. (ப-ரை) महोरस्कः- அகன்ற மார்பை உடையவர், महेष्वासः- பெரியவில்லை உடையவர், गूढजत्रुः- மறைந்த தோள் எலும்புகளை உடையவர், अरिन्दमः- சத்ருக்களை அடக்குகிறவர், आजानुबाहुः- முழங்கால் வரையில் தொங்குகின்ற கைகளை உடையவர், सुशिराः- அழகான சிரஸ்ஸை உடையவர், सुललाटः- அழகான நெற்றியை உடையவர், सुविक्रमः- அழகான நடையை உடையவர்.

களால் இவர் நாராயணனே என்று பாமர ஜனங்களினாலும் நன்றாய் நிச்சயிக்கப் பட்டவர்.

नास्य जरया एतज्जीर्यति न वधेनास्य हन्यते- (இந்த திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு, மூப்புமில்லை, மரணமும் இல்லை) என்கிற ச்ருதியினால் விகாரமில்லாதவர். ஒருவராலும் இன்னபடியென்று நினைக்கமுடியாத நானாவிதமான விசித்ர சக்தியுடையவர். ப்ரகாசமுள்ளவர். அதாவது, ஜ்ஞான ஸ்வரூபன் என்றபடி. அளவற்ற ஆனந்தத்தையுடையவர். ஸர்வ ஜெகத்தையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டவர்.

9. (பொ-ரை) ஸர்வஜ்ஞன், அததுகளுக்கு ஏற்பட்டிருக்கும்மரியாதையை தவராது நடத்துகின்றவர். அழகான வாக்கை உடையவர். லீலா விபூதியென்றும், நித்ய விபூதியென்றும் இரண்டு விபூதியையும் உடையவர். சத்ருக்களை நாசம் செய்கின்றவர். உயர்ந்த தோள்களையுடையவர். உருண்டும் பெருத்துமிருக்கிற கைகளை உடையவர். சங்குபோல் அழகான மூன்று வரிகளோடு கூடிய கழுத்தை உடையவர். பெருத்த கன்னத்தின்மேல் பாகத்தை உடையவர்.

10. (பொ-ரை) அகன்ற மாரை உடையவர். பெரியவில்லை ஏ[illegible]ற் தரிக்கக்கூடிய திருமேனியை உடையவர். பெருத்திருப்பதினால் வெளியில[illegible]றாமல் உள்ளடங்கிய தோள் ஸந்தியில் எலும்புகளை உடையவர். சத்ருக்களை அடக்குகிறவர். இங்கு, अरि என்கிற பதத்தினால் பாபத்தைச்சொல்லி, अपहतपाप्मा என்கிற ச்ருதியில் சொன்னபடி பாபம் முதலான அசுத்குணங்கள் இல்லையென்றபடி. முழங்கால் வரையில் தொங்குகின்ற கைகளையுடையவர். அழகாயும்,

समः समविभक्ताङ्गः स्निग्धवर्णः प्रतापवान् ।
पीनवक्षा विशालाक्षो लक्ष्मीवाञ्छुभलक्षणः ॥ 11 ॥
धर्मज्ञः सत्यसन्धश्च प्रजानां च हिते रतः ।
यशस्वी ज्ञानसंपन्नः शुचिर्वश्यः समाधिमान् ॥ 12 ॥

11. (ப-ரை) समः- ஸமமான திருமேனியை உடையவர், समविभक्ताङ्ग ஸமமாயும், பிரிக்கப்பட்டுமிருக்கிற அங்கங்களையுடையவர், स्निग्धवर्णः- மினுமினு பான வர்ணமுடையவர், प्रतापवान्- தேஜஸ்ஸை உடையவர், पीनवक्षाः- பெரு மார்பை உடையவர், विशालाक्षः- விசாலமான கண்களை உடையவர், लक्ष्मीवान्- சோ உடையவர், शुभलक्षणः- சுபமான மற்ற அடையாளங்களை உடையவர்.

12. (ப-ரை) धर्मज्ञः- தர்மத்தை அறிந்தவர், सत्यसन्धः च- ஸத்யமான ப்ர ஜ்ஞையை உடையவர், प्रजानां- ப்ரஜைகளுக்கு, हिते- ஹிதம் செய்வதில், रतः- ரு குடையவர், यशस्वी- கீர்த்தியுடையவர், ज्ञानसंपन्नः-ஜ்ஞானத்தினால் நிறைந்தவர், शुचि பரிசுத்தர், वश्यः- வசப்பட்டவர், समाधिमान्- ஆலோசனையை உடையவர்.

ஸமமாயும், வட்டமாயும், கொடை போன்றதுமான சிரஸ்ஸை உடையவர். கையும், அர்த்த சந்திரன் போன்றும், மேடு உள்ளதுமான, நெற்றியை உடைய யானை, புலி, ஸிம்ஹம், ரிஷபம் இதுகள் போல் அழகான நடை உடையவர்.

11. (பொ-ரை) அதிக உயரமும், அதிக குறுகியதுமல்லாத ஸமமான திருமேனி உடையவர். ஏற்றம் குறைவு இல்லாமலும் ஒன்றோடொன்று சேர மான கைகால் முதலான அவயவங்களையுடையவர். பளபளப்பான வர்ணமுடையவர். தேஜஸ்ஸை உடையவர். அதாவது, (பொதுவாக திருமேனியின் சோ உடையவர்) பெருத்த மார்பை உடையவர். தாமரைப்புஷ்பம் போல் அகன்ற கண்களை உடையவர். ஒவ்வொரு அவயவங்களிலும் தனித்தனியாக சோபையை உடையவர். இதுகளைத் தவிர இன்னும் விசேஷமாக சுபத்தை உண்டுபண்ணக்கூடிய லக்ஷணங்கள் பொருந்தியவர்.

12. (பொ-ரை) ராஜாக்க ரக்ஷணமே முக்யமான தர்மத்தை நன்றாயறிந்த தான் ப்ரதிஜ்ஞை செய்ததை ஒருபோதும் தவறாது நடத்துகின்றவர். ப்ரஜைகளுக்கு ப்ரியத்தைச் செய்வதிலேயே ஊக்கமுள்ளவர். ஆச்ரித ரக்ஷணத்தில் உண்டான கீர்த்தியை உடையவர். ஸர்வ வஸ்துக்களையும் ஸ்வரூபத்தாலும், பாவத்தாலும் அறியும் தன்மை உடையவர். தன்னை அடைந்தவர்களுக்கு பரிசுத்தியை உண்டாக்குகிறவர். தான் ஸ்வதந்த்ரனாயிருந்தும் ஆச்ரிதர்களுக்கு பரதந்த்ரராயிருக்கிறவர். ஆச்ரிதர்களுடைய ரக்ஷணத்திலேயே எப்பொழுதும் சிந்தையுடையவர்.

प्रजापतिसमः श्रीमान्धाता रिपुनिषूदनः ।
रक्षिता जीवलोकस्य धर्मस्य परिरक्षिता ॥ 13 ॥
रक्षिता स्वस्य धर्मस्य स्वजनस्य च रक्षिता ।
वेदवेदांगतत्त्वज्ञो धनुर्वेदे च निष्ठितः ॥ 14 ॥
सर्वशास्त्रार्थतत्त्वज्ञः स्मृतिमान्प्रतिभानवान् ।
सर्वलोकप्रियः साधुरदीनात्मा विचक्षणः ॥ 15 ॥

13. (ப-ரை) प्रजापतिसमः- ப்ரம்மாவுக்கு ஸமானமானவர், श्रीमान्- மஹாலக்ஷ்மியோடு கூடியவர், धाता- எல்லோரையும் போஷிக்கிறவர், रिपुनिषूदनः- சத்ருக்களைக் கொல்லுகிறவர், जीवलोकस्य- ப்ராணி ஸமூகத்தை, रक्षिता- ரக்ஷிக்கிறவர், धर्मस्य- தர்மத்தை, परिरक्षिता- காப்பாற்றுகிறவர்.

14. (ப-ரை) स्वस्य धर्मस्य रक्षिता- தன்னுடைய தர்மத்தை ரக்ஷிக்கிறவர், स्वजनस्य च रक्षिता- தன்னுடைய ஜனத்தை ரக்ஷிக்கிறவர், वेदवेदांगतत्त्वज्ञः- வேதங்களுடையவும், வேத அங்கங்களுடையவும், உண்மையான அர்த்தத்தை அறிந்தவர், धनुर्वेदे च- தனுர் வேதத்திலும், निष्ठितः- நிலையான ஞானமுடையவர்.

15. (ப-ரை) सर्वशास्त्रार्थतत्त्वज्ञः- எல்லா சாஸ்த்ரங்களின் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர், स्मृतिमान्- நினைவுடையவர், प्रतिभानवान्- தோற்றமுடையவர், सर्वलोकप्रियः- ஸர்வ லோகங்களுக்கும் ப்ரியமானவர், साधुः- அவரவர்களின் கார்யத்தைச் செய்து கொடுக்கிறவர், अदीनात्मा- தீனமல்லாத ஸ்வபாவமுடையவர், विचक्षणः- பலபடியாக சொல்லக்கூடியவர்.

13. (பொ-ரை) ப்ரம்ம புத்ரர்களுக்கு நடுவில் ஜகத் ரக்ஷணத்திற்காக [illegible] அதிகாரம் செய்தபடியால் ப்ரம்மாவுக்கு ஸமானமாயிருக்கிறார். புருஷகாரபூதையான பிராட்டியோடு எப்பொழுதும் பிரியாதவர். எல்லா ப்ராணிகளையும் போஷிப்பவர். ஆச்ருத விரோதிகளை ஸம்ஹரிக்கும் ஸ்வபாவமுடையவர். ஸர்வ ப்ராணி ஸமூஹத்தையும் ரக்ஷிக்கின்றவர். தானும் அநுஷ்டித்து மற்றவர்களையும் அநுஷ்டிக்கும்படி செய்வித்து அவ்வழியாக எல்லா தர்மங்களையும் காப்பாற்றுகின்றவர்.

14. (பொ-ரை) தனக்கேற்பட்ட விசேஷ தர்மமான சரணாகதரக்ஷணமென்கிற தர்மத்தை காப்பாற்றுகிறார். தன்னுடைய ஜனத்தை ந[illegible] ரக்ஷிக்கின்றவர். வேதங்களுடையவும், வேதாங்கங்களுடையவும் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர். தனுர் வேதத்தை நன்றாய் அறிந்தவர்.

15. (பொ-ரை) வேத வேதாங்கங்களுக்கு மற்ற[illegible] தர்ம சாஸ்த்ரம், புராணம், மீமாம்ஸை, தர்க்க சாஸ்த்ரமென்று சொல்[illegible]களான சாஸ்த்ரங்களின் தாத்பர்யங்களை நன்றாய் அறிந்தவர். [illegible] களிருப்பதை

सर्वदाऽभिगतः सद्भिः समुद्र इव सिन्धुभिः ।
आर्यः सर्वसमश्चैव सदैकप्रियदर्शनः ॥ 16 ॥
स च *सर्वगुणोपेतः कौसल्यानन्दवर्धनः ।
समुद्र इव गाम्भीर्ये धैर्येण हिमवानिव ॥ 17 ॥

16. (ப-ரை) समुद्रः- ஸமுத்ரமானது, सिन्धुभिः इव- நதிகளால் (சூழப்பட்டது) போல், सर्वदा- எப்பொழுதும், सद्भिः- பெரியோர்களால், अभिगतः- சூழப்பட்டவர், आर्यः- அடையத்தகுந்தவர், सर्वसमः च- एव- எல்லோருக்கும் ஸமமானவர், सदा- எப்பொழுதும், एकप्रियदर्शनः- ஒரே விதமாக ப்ரியமான காக்ஷியை உடையவர்.

17. (ப-ரை) स च- அவர், सर्वगुणोपेतः- ஸர்வ குணங்களோடும் கூடியவர், कौसल्यानन्दवर्धनः- கௌஸல்யைக்கு ஆனந்தத்தை வ்ருத்தி செய்கின்றவர், गाम्भीर्ये- பெருந்தன்மையில், समुद्र इव- ஸமுத்ரம் போன்றவர், धैर्येण- தைர்யத்தினால், हिमवान् इव- இமயமலை போன்றவர்.

ஒருக்காலும் மறக்காமல் எப்பொழுதும் நினைத்துக்கொண்டே இருக்கிறவர், ஒரு உபன்யாஸம் செய்யுங்காலத்தில் தான் முன்கேட்டதோ, கேட்காததோ ஒரு அர்த்தம் உடனே தோன்றக்கூடிய ஜ்ஞானமுடையவர், ஸர்வ லோகத்திலுள்ள ப்ராணிகளுக்கு ப்ரியமானவர், (ஸர்வப்ராணிகளையும் தனக்குப்ரியமாக வுடையவர்.) அவரவர்களின் கார்யத்தை ஸாதித்துக் கொடுக்கிறவர். கம்பீரமான ஸ்வபாவமுடையவர், பலபடியாக விஷயங்களை எடுத்து உபன்யாஸம் செய்யும் விஷயத்தில் தேர்ச்சியுடையவர்.

16. (பொ-ரை) ஸமுத்ரமானது நதிகளால் சூழப்பட்டதுபோல் அஸ்த்ர வித்தை பயிர்ச்சி செய்யுங்காலத்தில் ச்ரமபரிஹாரார்த்தமாக ஒருமரத்தின் நிழலில் க்ஷணகாலம் இவர் உட்கார்ந்துகொண்டிருந்தால், அந்த ஸமயத்திலும் பெரியோர்கள் எல்லோரும் அந்தந்த அர்த்தங்களைக் கேட்பதற்காக சுற்றிலும் உட்கார்ந்திருக்கப்பெற்றவர். எல்லோரும் தன்னை அணுகத்தகுந்த ஸ்வபாவமுள்ளவர், ஜாதி, குணம், ஆசாரம் முதலிய வித்யாஸங்களை எதிர்பாராமல் எல்லோரும் ஆச்ரயிக்கும் விஷயத்தில் துல்யமானவர். எப்பொழுதும் ஒரே ரீதியாக ப்ரியமான காக்ஷியை உடையவர்.

17. (பொ-ரை) அந்த ராமன், ஸகல குணங்களோடும் கூடினவர், கௌஸல்யைக்கு, புத்ரனாக அவதரித்து, ஆனந்தத்தை வ்ருத்தி செய்கின்றவர், காம்பீர்யவிஷயத்தில் ஸமுத்ரம் போன்றவர், தைர்யத்தில் இமயமலை போன்றவர்.

*தனித்தனியாக குணங்களைச்சொல்லி இங்கு सर्वगुणोपेतः- என்று சொல்லிய படியால், கீழ்க்கூறிய எல்லா குணங்களோடும் கூடினவர் என்று அர்த்தமல்ல

विष्णुना सदृशो वीर्ये सोमवत्प्रियदर्शनः ।
कालाग्निसदृशः क्रोधे क्षमया पृथिवीसमः ॥ 18 ॥

18. (ப-ரை) वीर्ये- பராக்ரமத்தில், विष्णुना सदृशः- விஷ்ணுவோடு ஸமானமானவர், सोमवत्- சந்திரனைப்போல், प्रियदर्शनः- ப்ரியமான பார்வையை உடையவர், क्रोधे- கோபத்தில், कालाग्निसदृशः- காலாக்னிக்கு ஸமானமானவர், क्षमया- பொறுமையினால், पृथिवीसमः- பூமிக்கொப்பானவர்.

18. (பொ-ரை) பராக்ரமத்தில் விஷ்ணுவுக்கு ஒப்பானவர், சந்திரன் போல் எல்லோருக்கும் பார்க்கப்பார்க்க மிகவும் ப்ரியமானவர், தன்னிடத்தில் அபராதம் செய்தவர்களிடத்தில் கோபமில்லாமலிருந்தாலும் தன் ஆச்ரிதர்களிடத்தில் அபராதம் செய்தால் ப்ரளயகாலத்து அக்னிபோல் ஜ்வலிக்கும் கோபமுள்ளவர். தன்னிடத்தில் அபகாரம் செய்தால் அசேதனமான பூமியைப்போல் இருப்பார்.

इषुक्षयान्निवर्तन्ते नान्तरिक्षक्षितिक्षयात् । मतिक्षयान्निवर्तन्ते न गोविन्दगुणक्षयात् ॥ இரண்டு வீரர்கள் யுத்தம் பண்ணிக்கொண்டிருந்து, யுத்தத்தை நிறுத்தி விட்டார்களேயானால் ஆகாயத்தில் பாணங்கள் போட இடமில்லாமையால் நிறுத்தினதல்ல. ஆனால் என்ன! அம்பராத்தூணியில் பாணங்கள் முழுவதும் செலவாகிவிட்டபடியால்; அதுபோல் ஸ்ரீ பகவானுடைய கல்யாணகுணங்களை ஸ்தோத்திரம் பண்ணி நின்றுவிட்டானேயானால் குணங்கள் முழுவதையும் ஸ்தோத்திரம் பண்ணிமுடித்ததாகாது. ஆனாலென்ன! அந்த விஷயத்தில் தனக்கு எட்டின புத்தி அவ்வளவுதான். என்று இவை முதலாகியவைகளால் பகவத் குணங்களை ஒருவராலும் பூர்ணமாகச் சொல்லமுடியாதாகையால் சுருக்கமாக எல்லா குணங்களோடும் கூடினவர் என்று முடிக்கிறார்.

कौसल्यानन्द वर्धनः- கௌஸல்யாதேவிக்கு புத்ரனாக அவதரித்த விஷ்ணுதான் வேதாந்தங்களிலே சொல்லப்பட்ட ஸகல கல்யாண குணங்கள் பொருந்திய பரமாத்மா.

இங்கு தசரதருக்கு ஆநந்தத்தை உண்டுபண்ணுகிறவர் என்று சொல்லாமைக்குக்காரணம் புத்திரனைப்பெற்றபலன் கௌஸல்யை மாத்திரம் அனுபவித்தாள் என்று. ஆகையாலன்றோ ஸுந்தரகாண்டத்தில் कौसल्या लोकभर्तारं सुषुवे यं मनस्विनी । (விசாலமான மனதுடைய என் மாமியார் உலகத்தையெல்லாம் ரக்ஷிக்கக்கூடிய பிள்ளையைப்பெற்றவள்.) என்று சொல்லப்போகிறார்.

समुद्र इव गाम्भीर्ये- காம்பீர்யமாவது:— தன்னிடத்தில் அடங்கிய பதார்த்தத்தை வெளிப்படுத்தாமை. ஸமுத்ரமானது தனக்குள் இருக்கிற ரத்னம் முதலியவைகளை எப்படி ப்ரகாசப்படுத்தாமலிருக்கிறதோ அப்படியே இவரும் தன்னுடைய பாவத்தை வெளிப்படுத்தாமலிருக்கிறார்.

धैर्येण हिमवानिव- தைர்யமாவது:—சோகத்திற்குக்காரணமிருந்தபோதிலும் சோகமில்லாமை. அதனால் இமையமலைபோன்றவர்.

धनदेन समस्त्यागे सत्ये धर्म इवापरः ॥ 18½ ॥
तमेवंगुणसंपन्नं रामं †सत्यपराक्रमम् ॥ 19 ॥
ज्येष्ठं *श्रेष्ठगुणैर्युक्तं प्रियं दशरथः सुतम् ।
प्रकृतीनां हितैर्युक्तं प्रकृतिप्रियकाम्यया ॥ 20 ॥
यौवराज्येन संयोक्तुमैच्छत्प्रीत्या महीपतिः ॥ 20½ ॥

18½. (ப-ரை) त्यागे- தானத்தில், धनदेन- குபேரனோடு, समः- ஒப்பானவர், सत्ये- ஸத்யம் சொல்லுவதில், अपरः- தனக்குமேல் உயர்ந்த வஸ்துவில்லாத, धर्म इव- தர்ம தேவதைபோன்றவர்.

19—20½. (ப-ரை) दशरथः महीपतिः- தசரத மஹாராஜா, प्रकृतीनां- ஜனங்களுடைய, हितैः- நன்மைகளோடு, युक्तं- கூடினவரும், ज्येष्ठं- மூத்தவராயும், श्रेष्ठगुणैः युक्तं- சிறந்த குணங்களோடு கூடினவரும், एवं गुणसम्पन्नं- கீழ்ச்சொல்லிய குணங்களால் நிறைந்தவரும், सत्यपराक्रमम्- வீணல்லாத பராக்ரமமுடைய, प्रियं- தனக்கு மிகவும் ப்ரியமுமான, तं रामं सुतं- அந்த ராமனென்கிற பிள்ளையை, प्रकृतिप्रियकाम्यया- மந்திரி முதலானவர்களுக்கு ப்ரியத்தைச் செய்ய ஆசையினால், प्रीत्या- (தனக்கும்) ப்ரீதியினால், यौवराज्येन- இளவரசு பட்டத்தோடு, योक्तुं- சேர்ப்பதற்கு, ऐच्छत्- விரும்பினார்.

18½. (பொ-ரை) தானம் செய்யும் விஷயத்தில் குபேரனுக்கொப்பானவர், ஸத்யம் சொல்லும் விஷயத்தில் தனக்குமேல் உயர்ந்தவர் ஒருவருமில்லாத தர்ம தேவதை போன்றவர்.

19–20½. (பொ-ரை) இவ்விதம் ஜனங்களுக்கு ஹிதத்தைச் செய்வதிலே ஊக்கமுடையவராய், உயர்ந்த குணங்களோடுகூடியும், தனக்கு மிகவும் அன்புக்கு இடமானவரும், பழுதில்லாத பராக்ரமத்தை உடையவரும், இவ்விதம் முன் சொல்லிய குணங்கள் நிறைந்தவருமான ஸ்ரீராமனென்கிற அந்த ஜேஷ்டபுத்திரனை தசரத மஹாராஜா மந்திரி முதலானவர்களுக்கு ப்ரியத்தைச்செய்ய ஆசையினாலும் தனக்கும் ப்ரீதியினாலும் இளவரசு பட்டாபிஷேகம் செய்யவேணுமென்று ஆசைகொண்டார்.

† सत्यपराक्रमम्- ஸர்வ ப்ராணிகளையும் ரக்ஷிப்பதில் சக்தியை உடையவர் என்றபடி.

* दशरथः- பத்து திக்குகளிலும் தேரை நடத்தும் ஸாமர்த்யமுள்ளவர்.

श्रेष्ठगुणैः युक्तं- ச்ரேஷ்ட குணங்களாவன. सन्धि, विग्रह, यान, आसन, द्वैध, आश्रय என்று ராஜநீதி சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட குணங்கள்.

तस्याभिषेकसंभारान्दृष्ट्वा भार्याथ कैकयी ॥ 21 ॥

पूर्वं दत्तवरा देवी वरमेनमयाचत ।
विवासनं च रामस्य भरतस्याभिषेचनम् ॥ 22 ॥

स सत्यवचनाद्राजा धर्मपाशेन संयतः ।
विवासयामास सुतं रामं दशरथः प्रियम् ॥ 23 ॥

21—22. (ப-ரை) अथ- பிறகு, भार्या- பார்யையும், पूर्वं- முன்னொருகாலத்தில் दत्तवरा- அரசனால் கொடுக்கப்பட்ட வரங்களையுமுடைய, कैकयी देवी- கைகேயியானவள், तस्य- அந்த ராமனுடைய, अभिषेकसम्भारान्- பட்டாபிஷேக ஸாமக்ரிகளை, दृष्ट्वा- பார்த்து, एनं- இந்த தசரதனை, रामस्य विवासनं च- ஸ்ரீராமனை காட்டுக்குத் துரத்துவதையும், भरतस्य अभिषेचनम्-பரதனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகத்தையும், वरं-வரமாக, अयाचत- யாசித்தாள்.

23. (ப-ரை) सः दशरथः राजा- அந்த தசரத மஹாராஜன், धर्मपाशेन- தர்மமாகிற கயிற்றினால், संयतः- கட்டப்பட்டவராய்க்கொண்டு, सत्यवचनात्- ஸத்ய வார்த்தைக்காக, प्रियं- सुतं- இஷ்ட புத்ரனை, रामं- ராமனை, विवासयामास- காட்டிற்கு அனுப்பினார்.

21-22. (பொ-ரை) இவ்விதம் தசரதமஹாராஜா, ஸ்ரீராமனுக்கு இளவரசுபட்டம் கட்டுவதாக ஆசைகொண்டு அதற்கு வேண்டிய ஸாமக்ரிகளைச்சேர்த்தவே பிறகு போஷிப்பதற்கும், போகத்திற்கும் உரியவளும், ஸ்வாதந்த்ரியம் கொஞ்சமேனும் இல்லாதவளுமான ராஜபத்னியான கைகேயி, அந்த பட்டாபிஷேக ஸாமக்ரிகளைப்பார்த்து முன்னொருகால் சம்பராஸுரனோடு யுத்தம் நடந்த ஸமயத்தில் தான் செய்த உபகாரத்தினால் அரசன் தனக்குக்கொடுத்த இரண்டு வரன்களை நினைத்துக்கொண்டு அந்த இரண்டு வரன்களுக்குமாக ராமனை காட்டுக்கு அனுப்புவதும் பரதனுக்குப்பட்டாபிஷேகம் செய்வதும் நடக்கவேணுமென்று அரசனை வேண்டினாள்.

23. (பொ-ரை) முன்னமே, மந்திரி முதலானவர்களோடு, ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்திருந்த தசரதமஹாராஜனும், இந்த கைகேயி வார்த்தையைக் கேட்டவுடனே. தர்மமென்கிற கயிற்றினால் கட்டப்பட்டு, தனக்கு மிகவும் ப்ரியமான புத்ரனை ஸ்ரீராமனை காட்டுக்குத் துரத்திவிட்டார்.

स जगाम वनं वीरः प्रतिज्ञामनुपालयन् ।
पितुर्वचननिर्देशात्कैकेय्याः प्रियकारणात् ॥ 24 ॥
*तं व्रजन्तं प्रियो भ्राता लक्ष्मणोऽनुजगाम ह ।
स्नेहाद्विनयसंपन्नः सुमित्रानन्दवर्धनः ॥
भ्रातरं दयितो भ्रातुः सौभ्रात्रमनुदर्शयन् ॥ 25 ॥

24. (ப-ரை) वीरः- வீரனான, सः- அந்த ராமன், कैकेय्याः- கைகேயினுடைய, प्रियकारणात्- ப்ரியம் செய்யவேணுமென்கிற காரணத்தினால், पितुः- பிதாவினுடைய, वचननिर्देशात्- வார்த்தையாகிற கட்டளையினால், प्रतिज्ञां- பிதாவின் ப்ரதிஜ்ஞையை, अनुपालयन्- பரிபாலனம் செய்வதற்காக, वनं- தண்டகாரண்யத்தைக்குறித்து, जगाम- போனார்.

25. (ப-ரை) प्रियः- ராமனிடத்தில் ப்ரீதி உள்ளவரும், भ्राता- கூடப்பிறந்தவரும், विनयसंपन्नः- வினயத்தோடு கூடினவரும், सुमित्रानन्दवर्धनः- ஸுமித்ரைக்கு ஆனந்தத்தை வ்ருத்தி செய்கின்றவரும், दयितः- ஸ்ரீராமனுக்கு இஷ்டமான, लक्ष्मणः- லக்ஷ்மணன், सौभ्रात्रं- ப்ராதாவினிடத்தில் ஸ்நேஹத்தை, अनुदर्शयन्- सन्- காட்டிக்கொண்டு, व्रजन्तं- காட்டிற்குச்செல்லுகின்ற, तं-भ्रातरं- அந்த ப்ராதாவான ஸ்ரீராமனை, स्नेहात्- ஸ்நேஹத்தினால், अनुजगाम- பின் சென்றார், ह- ஆச்சர்யம்.

24. (பொ-ரை) அந்த ஸ்ரீராமன் ராஜ்ய பரிபாலனத்தில் மிகவும் ஸமர்த்தராயிருந்தும், கைகேயியின் ப்ரீதிக்காக சொல்லப்பட்ட பிதாவின் ஆஜ்ஞையினால் கைகேயியினிடத்தில் தான் நேரில் சொன்ன ப்ரதிஜ்ஞையை பரிபாலனம் செய்வதற்காக தண்டகாரண்யம் சென்றார்.

25. (பொ-ரை) ஸௌமித்ராதேவிக்கு ஆனந்தத்தை வ்ருத்தி செய்கின்றவரும் ஸ்ரீராமனுக்கு மிகவும் இஷ்டரும். ஸ்ரீராமகைங்கர்யமாகிற லக்ஷ்மியை அடையப்போகிறார் என்று பவிஷ்யத்ஜ்ஞானியான வஸிஷ்டமஹாரிஷியால் நாமகரணம் செய்யப்பட்ட இளைய பெருமாள், ஸ்ரீராமன் க்ஷணங்கூட தன்னை விட்டுப் ப்ரியாமல் இருக்கக்கூடிய ஸ்நேஹத்தையும், தானும் ஸ்ரீராமனை க்ஷணங்கூட விட்டுப் பிரிந்து இருக்கமுடியாத ஸ்நேஹத்தையும் காட்டிக்கொண்டு ஸ்ரீராமனை ஸ்நேஹத்தினால் பின் சென்றார்.

* இங்கு विनयः- என்றால், ஸ்ரீராம கைங்கர்யத்திற்குக் காரணமான வணக்கமென்றும், ஸ்ரீராமனுக்கு நான் சேஷன் என்கிற ஜ்ஞானமென்றும், ஸ்ரீராம கைங்கர்யமாகிற ஸதாசாரமென்றும் பொருள்.

ह- என்றால், ஸந்தோஷம். அல்லது, ஸர்வவித கைங்கர்யமும் லக்ஷ்மணனுக்குக் கிடைத்ததைப்பற்றி மஹரிஷி ஆச்சர்யப்படுகிறாராகவுமாம்.

रामस्य दयिता भार्या नित्यं प्राणसमा हिता ।
जनकस्य कुले जाता देवमायेव निर्मिता ॥ 26 ॥
सर्वलक्षणसम्पन्ना नारीणामुत्तमा वधूः ।
सीताप्यनुगता रामं शशिनं रोहिणी यथा ॥ 27 ॥
पौरैरनुगतो दूरं पित्रा दशरथेन च ॥ 27½ ॥

26-27. (ப-ரை) रामस्य- ஸ்ரீராமனுக்கு, दयिता- ப்ரியமுள்ளவளாயும், नित्यं- எப்பொழுதும், भार्या- (மனதில்) வைத்துக்கொள்ளத்தகுந்தவளாயும், प्राणसमा- ப்ராணனுக்கு ஒப்பானவளும், हिता- ஹிதகரையாயும், जनकस्य- ஜனகருடைய कुले- வம்சத்தில், जाता- அவதரித்தவளும், निर्मिता-ஸ்ருஷ்டிக்கப்பட்ட, देवमाया इव- விஷ்ணுவினுடைய மாயை போன்றவளும், सर्वलक्षणसम्पन्ना- எல்லா லக்ஷணங்களோடும் கூடியவளும், नारीणां उत्तमा- ஸ்த்ரீகளுக்குள் மிகச்சிறந்தவளும், वधूः- தசரதரின் நாட்டுப்பெண்ணுமான, सीता अपि- ஸீதையும், शशिनं- சந்திரனை, रोहिणी यथा- ரோஹிணீ (பின் செல்வது) போல், रामं- ஸ்ரீராமனை, अनुगता- பின் சென்றாள்.

27½. (ப-ரை) पौरैः- பட்டணத்து ஜனங்களாலும், पित्रा- பிதாவான, दशरथेन च- தசரதராலும், दूरं- வெகுதூரம், (வரையில்) अनुगतः- பின் செல்லப்பட்டார்.

26-27. (பொ-ரை) லோகாபிராமனான ஸ்ரீராமனுக்கு மிகவும் இஷ்டமானவளும், அனவரதம் ஸ்ரீராமனுடைய மனதிலேயே நிலையுள்ளவளும், ப்ராணனுக்கு ஸமானமானவளும், சேதனர்களுக்கு ஹிதம் செய்வதிலேயே நோக்கமுள்ளவளும், அம்ருதமதன ஸமயத்தில் அஸுரமோஹனார்த்தமாக ஸ்ருஷ்டிக்கப்பட்ட பகவான் மாயைபோல் மிகவும் உயர்ந்த ஸௌந்தர்யமுடையவளும், உத்தமஸ்த்ரீகளுக்குரிய ஸாமுத்ரிகாலக்ஷணம் முழுவதும் நிறைந்தவளும், இக்காரணங்களால் உலகத்திலுள்ள ஸர்வ ஸ்த்ரீகளுக்குள் உத்தமமானவளும், தசரதரின் நாட்டுப்பெண்ணையும், யாகம் செய்வதற்காக ஜனகமஹாராஜன் பூமியை கலப்பையினால் உழுத காலத்தில் அந்தக்கலப்பையின் வழியில் அவதரித்தபடியால் ஸீதையென்று கலப்பை ரேகையின் பெயரையே தனக்குத்திருநாமமாகக்கொண்டவளுமான ஜானகீதேவியும், ரோஹிணீதேவி சந்திரனைப்பின் சென்றதுபோல், ஸ்ரீராமனைப் பின் சென்றாள்.

27½. (பொ-ரை) இவ்விதம் தம்பியுடனும், பத்னியுடனும் வனம் செல்லுகின்ற ஸ்ரீராமனை விட்டுப்பிரிய மனமில்லாமல், பிதாவான தசரதரும், கோபுரவாசல்வரையில் பின் சென்றார். அப்படியே பட்டணத்து ஜனங்களும் ராமபக்தியினால் வெகுதூரம் பின்தொடர்ந்து போனார்கள்.

* शृङ्गिबेरपुरे सूतं गङ्गाकूले व्यसर्जयत् ॥ 28 ॥
गुहमासाद्य धर्मात्मा निषादाधिपतिं प्रियम् ॥ 29 ॥
गुहेन सहितो रामो लक्ष्मणेन च सीतया ॥ 29½ ॥

28-29. (ப-ரை) धर्मात्मा- தர்மத்தையே ஸ்வபாவமாக உடைய शृङ्गिबेरपुरे- ச்ருங்கிபேரமென்கிற நகரத்தில், निषादाधिपतिं- வேடர்களுக்கு அரசனையும், प्रियम्- தனக்கு மிகவும் ப்ரியனுமான, गुहं- குஹனை, आसाद्य- அடைந்து, गङ्गाकूले- கங்கையின் கரையில், सूतं- ஸாரதியான, ஸுமந்தரரை, व्यसर्जयत्- விட்டார்;

29½. (ப-ரை) रामः- ஸ்ரீராமன், गुहेन- குஹனோடு, सहितः सन्- சேர்ந்து கொண்டு, लक्ष्मणेन- லக்ஷ்மணனுடனும், सीतया च- ஸீதையுடனும், (सहितः- சேர்ந்தவராக) ஆனார்.

28-29. (பொ-ரை) ஆச்ரிதர்களிடத்தில் வாத்ஸல்யமும், ஸௌசீல்யமும், ஸ்வபாவகுணமாகவுடைய ஸ்ரீராமன், ச்ருங்கிபேரம் என்கிற நகரத்தின் ஸமீபத்தி லுள்ள கங்கையின் கரையில் வேடர்களுக்கெல்லாம் அதிபதியாயும் தம்மிடத்தில் பரமபக்தியுள்ளவருமான குஹனை அடைந்து, நகரத்திலிருந்து ரதத்துடன் வந்த ஸாரதியான ஸுமந்த்ரரை விட்டுவிட்டார், (நகரத்திற்கு அனுப்பிவிட்டார்.)

29½. (பொ-ரை) ஸ்ரீராமன் குஹனோடுசேர்ந்து லக்ஷ்மணனுடனும் ஸீதையுடனும் சேர்ந்தார், அதாவது:—முன்னமே ஸீதாலக்ஷ்மணர்களுடன் சேர்ந்திருந்தும் குஹனுடன் சேர்ந்தபிறகுதான் அவர்களுடன் சேர்ந்தது தெரிந்தது. அல்லது:- ஸீதாலக்ஷ்மணர்களுடன் சேர்ந்ததுபோல் குஹனுடனும் சேர்ந்தார். இதனால் அவர்களிருவரிடத்திலும் ஸ்ரீராமனுக்கு உண்டான ப்ரீதி குஹனொருவனிடத்தில் உண்டாயிற்றென்று தாத்பர்யம், அல்லது सहितः- என்கிற பதத்தை सः- हितः- என்று பிரித்து, हितः—என்கிற பதத்திற்கு प्रहितः— என்று பொருள்கொண்டு, ஸ்ரீராமன் ஸீதாலக்ஷ்மணர்களுடன் குஹனால் கங்காநதியை கடத்தப்பட்டார்.

---

*शृङ्गिबेर- शृङ्गि- என்றால் மான்கள், बेर- என்றால் பொம்மைகள், மான்களை பிடிப்பதற்காக, அவைகளைப்போல் மரம் முதலியவைகளால் க்ருத்ரிமமாகச்செய்யப் பட்ட பொம்மைகள், இவைகள் இந்த ஊரில் விசேஷமாக இருக்கிறபடியால் இந்நக ரத்திற்கு ச்ருங்கிபேரபுரம் என்று பெயர்.

निषादाधिपतिं- நிஷாதர்கள்—வேட்டையாடி மான் முதலியவைகளைக்கொல்லுகிற வர்கள்.

गुहः- गुहति वञ्चयति परस्वं इति गुहः- பிறர்பொருளை மோசம் செய்கிறவன், இவை இரண்டினாலும், ஜாதியினாலும், தொழிலினாலும், குணத்தினாலும் மிகவும் தாழ்ந்த வன் என்று ஏற்படுகிறது. அப்படிப்பட்ட குஹனை, आसाद्य- அடைந்து, என்று சொல்லியபடியால் ஸ்ரீராமனுடைய ஸௌசீல்ய குணம் சொல்லப்பட்டது.

* ते वनेन वनं गत्वा नदीस्तीर्त्वा बहूदकाः ॥ 30 ॥
चित्रकूटमनुप्राप्य भरद्वाजस्य शासनात् ।
रम्यमावसथं कृत्वा रममाणा वने त्रयः ॥ 31 ॥
देवगन्धर्वसंकाशास्तत्र ते न्यवसन्सुखम् ॥ 31½ ॥

30-31-31½. (ப-ரை) ते त्रयः- ஸீதை, லக்ஷ்மணன், ராமன் என்ற மூவரும், वनेन- வனத்தோடு, वनं- வனத்தை, गत्वा- அடைந்து, बहूदकाः- அதிக ஜலமுள்ளதான, नदीः- கங்கா நதியை, तीर्त्वा- தாண்டி, भरद्वाजस्य- பரத்வாஜருடைய, शासनात्- ஆஜ்ஞையினால், चित्रकूटं- சித்ரகூட கிரியை, अनुप्राप्य- அடைந்து, रम्यं- அழகான, आवसथं- ஆச்ரமத்தை, कृत्वा- செய்துகொண்டு, तत्र- அவ்விடத்தில், रममाणाः- விளையாடிக்கொண்டு, देवगन्धर्वसंकाशाः- தேவகந்தர்வர்களுக்கொப்பான, ते- அவர்கள், सुखं- ஸுகமாக, न्यवसन्- வஸித்தார்கள்.

30-31-31½. (பொ-ரை) இந்த ராமன், ஸீதை, லக்ஷ்மணன் இம்மூவர்களும் வனத்தோடுவனமாகச்சென்று (காட்டுவழியாகவே சென்று) அதிக ஜலமுள்ள கங்கை முதலான நதிகளைத்தாண்டி பரத்வாஜருடைய ஆச்ரமம் சென்று அவரது ஆஜ்ஞையினால் சித்ரகூட கிரியை அடைந்து, அங்கு அழகான ஆச்ரமத்தை நிர்மாணம் செய்துகொண்டு அந்த மலையின் சுற்றிலுமுள்ள வனங்களில் விளையாடிக்கொண்டு பரமானந்தமுள்ளவர்களாய், தேவகந்தர்வர்களுக்கு துல்யமானவர்களாய், அயோத்யா நகரத்தில் வாஸம் பண்ணுகிறவர்கள் போலவே ஸுகமாக வஸித்துக் கொண்டிருந்தார்கள்.

---

*वनेन वनं गत्वा- வனத்தோடுவனம் சென்று, அதாவது வனம் வனமாகவே ப்ரவேசித்து, இதனால் போகும் வழியில் பட்டணங்களிருந்தபோதிலும் தம்முடைய அதிகாரத்திற்கு விருத்தமானபடியால் நகரத்தின் வழியாகப்போகவில்லையென்று ஏற்படுகிறது. அல்லது,

अवनेन वनं गत्वा- ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக வனத்தை அடைந்து அல்லது,

अवनेन- பித்ருவசன பரிபாலனத்தினால், வனம் அடைந்து, अवनेन- லோகத்தை, ரக்ஷிக்கிற காரணத்தினால், வனம் அடைந்து. ராவணன் முதலான துஷ்டர்களை ஸம்ஹரித்து அதன் வழியாக லோகத்தை ரக்ஷிப்பதற்காகவன்றோ அவர்கள் வனம் சென்றது. அல்லது,

तेवनेन- (என்று ஒரேபதம்) லீலையினால், அதாவது ச்ரமமில்லாமல், तेवृ देवने- என்று தாதுவினால், देवनं- என்றால் விளையாட்டு, அல்லது,

तेवनेन- பாதஸஞ்சாரத்தினால், கங்கைக்கரையில் ரதத்துடன் ஸுமந்த்ரனை ஊருக்கு அனுப்பிவிட்டபடியால் அதன் பிறகு கால்நடையாகவே வனம் சென்றார்கள், அல்லது,

चित्रकूटं गते रामे पुत्रशोकातुरस्तथा ॥ 32 ॥
राजा दशरथः स्वर्गं जगाम विलपन्सुतम् ॥ 32½ ॥
मृते तु तस्मिन् भरतो वसिष्ठप्रमुखैर्द्विजैः ॥ 33 ॥
नियुज्यमानो राज्याय नैच्छद्राज्यं महाबलः ॥ 33½ ॥

32-32½. (ப-ரை) रामे- ஸ்ரீராமன், तथा- அப்படி, चित्रकूटं- சித்திரகூடமலையை, गते सति- அடைந்தவளவில், दशरथः राजा- தசரத மஹாராஜர், पुत्रशोकेन- புத்திரனை விட்டுப்பிரிந்த துக்கத்தினால், आतुरः- பீடிக்கப்பட்டவராய், सुतम्- புத்திரனைக்குறித்து, विलपन् सन्- ப்ரலாபம் செய்துகொண்டு, स्वर्गं- ஸ்வர்க்கத்தை, जगाम- அடைந்தார்.

33-33½. (ப-ரை) तस्मिन्- அந்த தசரதர், मृते सति- மரித்தவளவில், महाबलः- அதிக பலமுள்ளவரான, भरतः- பரதன், वसिष्ठप्रमुखैः- வஸிஷ்டர் முதலாகிய, द्विजैः- ப்ராம்மணர்களால், राज्याय- ராஜ்யத்தின் பொருட்டு, नियुज्यमानः- (अपि)- ஏவப்பட்டிருந்தபோதிலும், राज्यं- ராஜ்யத்தை, न ऐच्छत्- இச்சிக்கவில்லை.

32-32½. (பொ-ரை) ஸ்ரீராமன் இவ்விதம் சித்திரகூடமலைக்குச் சென்ற பிறகு, தசரத மஹாராஜா புத்திரனை விட்டுப்பிரிந்த துக்கத்தினால் மிகவருத்தத்துடன் அப்பா ராமா! என்று கதறிக்கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றுவிட்டார்.

33-33½. (பொ-ரை) தசரத மஹாராஜர், மரணம் அடைந்த பிறகு, வஸிஷ்டர் முதலான, ப்ராம்மணர்கள் ராஜ்ய பரிபாலனம் செய்யும்படி பரதனுக்குச் சொல்லியும், அந்த பரதன் ராஜ்யத்தை பரிக்கத் தனக்கு ஸாமர்த்யமிருந்தும், தம்முடைய பாரதந்த்ரிய வ்ருத்திக்கு விரோதமாகையால், அங்கீகரிக்கவில்லை.

अवनेन- வனமல்லாத (மரம் செடிகள் இல்லாத) ப்ரதேசத்தினால், வனத்தை அடைந்து,

नदीः- என்கிற பதம், பஹுவசனமாயிருந்தபோதிலும் கங்காநதியை மாத்திரம் குறிக்கிறது, அல்லது,

गङ्गा- यमुना- मन्दाकिनी- என்று மூன்று நதிகளாகவுமாம், रममाणाः- விளையாடிக்கொண்டு, பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டு. ராமனுக்கும், ஸீதைக்கும், புஷ்பம் பரித்தல் ஜலக்ரீடை முதலானவைகளால் ஆனந்தம். லக்ஷ்மணனுக்கு ஏகாந்தமான ஸ்தலம் கிடைத்தபடியால் திவ்ய தம்பதிகளுடைய நிரபாயகைங்கர்யத்தினாலுண்டான ஆனந்தம்.

देवगन्धर्वसंकाशाः- देवी च देवश्च देवौ- लक्ष्मी नारायणौ- (गानं धारयति इति गन्धर्वः) -"एतत्साम गायन् आस्ते"- என்று சொல்லப்பட்ட ஸதா ஸாமகானம் செய்துகொண்டிருக்கிற முக்தன், இம்மூவர்களுக்கும் ஸமானமானவர்கள்.

*स जगाम वनं वीरो रामपादप्रसादकः ॥ 34 ॥
गत्वा तु सुमहात्मानं रामं सत्यपराक्रमम् ।
अयाचद्भ्रातरं राममार्यभावपुरस्कृतः ॥ 35 ॥

34. (ப-ரை) वीरः- சூரனான, सः- அந்த பரதன், रामपादप्रसादकः- ஜ்யேஷ்ட ப்ராதாவான ஸ்ரீராமனுக்கு மனக்கலக்கத்தை தீர்க்கின்றவராக, वनं- வனத்தைக் குறித்து, जगाम- சென்றார்.

35. (ப-ரை) (सः- அந்த பரதன்,) आर्यभावपुरस्कृतः सन्- தன்னுடைய நல்ல தன்மையினால் எல்லோராலும் ச்லாகிக்கப்பட்டவராய்க்கொண்டு, सुमहात्मानं- மிகவும் பெருந்தன்மை பொருந்திய மனதை உடையவராயும், सत्यपराक्रमम्- ஸத்யத்திலேயே பராக்ரமமுடையவருமான, रामं- ஸ்ரீராமனை, गत्वा तु- அடைந்து, भ्रातरं रामं- ப்ராதாவான ஸ்ரீராமனை, अयाचत्- யாசித்தார்.

34. (பொ-ரை) வீரனான அந்த பரதன் சதுரங்க ஸைன்யங்களோடுகூட அண்ணாவான ஸ்ரீராமன் திருவுள்ளத்தில் இருக்கிற கோபத்தைப் போக்கடிப்பதற்காக வனம் சென்றார்.

35. (பொ-ரை) இந்த பரதன், தன்னுடைய நல்ல குணத்தினால் எல்லோராலும், ச்லாகிக்கப்பட்டவராய்க்கொண்டு, இயற்கையாகவே தெளிந்த திருவுள்ளமுடையவராயும், ஸத்தியத்தில் ஒருக்காலும் தவறுதல் இல்லாதவருமான ஸ்ரீராமனிடம் சென்று ப்ராதாவான அவரைப்பார்த்து இவ்விதம் வேண்டிக்கொண்டார்.

இங்கு देवगन्धर्वसंकाशाः- என்கிற பதத்தில் உபமாலங்காரத்தினால் ஒரு அர்த்தம் தோன்றுகிறது. அதாவது:—எவனொருவன் தனக்கு ஸ்வரூபஜ்ஞானமுண்டாய் பகவானிடத்தில் பரமபக்தியுடன் உபாயானுஷ்டானம் செய்கிறானோ அவனை பகவான் பிராட்டியுடன் வந்து திவ்யமான விமானத்தில் ஏற்றி ஆதிவாஹிகர்களால் ஸத்காரம் செய்வித்து விரஜாநதியைக்கடத்தி, திவ்ய காந்தாரத்தை அடைவித்து, அமானவ புருஷனால், அநுமதி செய்வித்து, பிறகு தான் திவ்யலோகத்தில் (பரமபதத்தில்) மஹாமணிமண்டபத்தை அடைந்து திவ்யஸிம்மாஸனத்தின்மேல் இருந்து பிராட்டியுடன் ஆனந்தங்கொண்டு இவன் செய்கின்ற ஸர்வதேச, ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதஸகலவித கைங்கர்யத்தையும் பெற்றுக்கொண்டு, சேஷபூதனான இவனுக்கு தன் ஆனந்தத்திற்கு ஸமானமான ஆனந்தத்தைக்கொடுத்து காலதத்வமுள்ளவரையில் இவனுடன் ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறான் என்று.

* वीरः- இங்கு வீர்யமாவது, தனக்கு ஆந்தர சத்ருக்களாகிய காமக்ரோதாதிகளை அடக்குகை, அதாவது ராஜ்யம் தானாகவே கிடைத்தும் அதில் கொஞ்சமேனும் ஆசையில்லாதவர் என்றபடி.

रामपादप्रसादकः- என்றவிடத்தில் பாத சப்தமானது பூஜ்யன் என்கிற அர்த்தத்தைச் சொல்லி தனக்கு ஜ்யேஷ்டப்ராதாவாகையால் பூஜ்யரான ஸ்ரீராமனைச்

त्वमेव राजा धर्मज्ञ इति रामं वचोऽब्रवीत् ॥ 35½ ॥
रामोऽपि परमोदारः सुमुखः सुमहायशाः ।
न चैच्छत्पितुरादेशाद्राज्यं रामो महाबलः ॥ 36 ॥

35½. (ப-ரை) धर्मज्ञः- ராஜதர்மத்தை அறிந்தவரான, त्वं एव-தேவரீரே, राजा- அரசனாகவேண்டும், इति- என்று, रामं- ஸ்ரீராமனைக்குறித்து, वचः- வார்த்தையை, अब्रवीत्- சொன்னார்.

36. (ப-ரை) रामः- ஸ்ரீராமன், रामोऽपि- எல்லோரையும் ஸந்தோஷப்படுத்து கிறவராயிருந்தும், परमोदार: (अपि)- மிகவும் உதாரராயிருந்தும், सुमुख: (अपि)- நல்ல முகமுடையவராயிருந்தும், सुमहायशा: (अपि)- மிகப்பெரும் கீர்த்தியுடையவராயிருந் தும், महाबल: (अपि-) அதிக பலமுடையவராயிருந்தும், पितुः-பிதாவினுடைய, आदेशात्- ஆக்ஞையினால், राज्यं- ராஜ்யத்தை, न च ऐच्छत्- இச்சிக்கவேயில்லை.

35½. (பொ-ரை) ஜ்யேஷ்ட புத்திரன் ராஜ்யபரிபாலனத்திற்கு ஸமர்த்தனா யிருக்க கனிஷ்ட புத்திரன் ராஜ்யம் ஆளுவது தர்மமல்ல. இதை தேவரீர் நன்றாய் அறிந்தவராகையால் தேவரீரே ராஜ்யபரிபாலனம் செய்யவேணும், மற்றவனுக்கு அதிகாரம்கிடையாது என்று ஸ்ரீராமனைப்பார்த்து விஜ்ஞாபனம்செய்துகொண்டார்.

36. (பொ-ரை) ஸ்ரீராமன் ஸ்வரூப ரூப குணங்களால் ஆச்ரிதர் எல்லோ ருடைய மனதையும் ஸந்தோஷப்படுத்தும் தன்மையுள்ளவராயிருந்தும், ஆச்ரி தர்கள் விஷயத்தில் தன்னைக்கூட தானம்செய்கிறவரான மிகவுதாரராயிருந்தும், யாசகர்களைக்கண்டால் மிகவும் ப்ரஸன்னமான முகமுடையவராயிருந்தும், ஒரு கார்யத்திற்காக, नह्यर्थिनः कार्यवशादुपेताः ककुत्स्थवंशे विमुखाः प्रयांति (ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்த அரசர்களிடம் ஒரு கார்யத்திற்காகப் போனவன் அது கிடைக்காமல் திரும் புகிறதில்லை என்று) ப்ரஸித்தமான ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவராயிருந்தும், ஆச்ரி தருடைய மனோரதத்தை உடனே நிறைவேற்றக்கூடிய சக்தி உள்ளவராயிருந்தும், பிதாவினுடைய ஆக்ஞை தனக்கு ப்ரபலமான தடையாயிருந்தபடியால் பரதனு டைய சரணாகதியின்படி ஸ்ரீராமன் ராஜ்யத்தை அங்கீகரிக்கவில்லை. அந்த பிதா வின் ஆக்ஞையான பதினான்கு வருஷம் வனவாஸம் கழிந்தபிறகு ஒப்புகொள்ளு வதாகசொன்னார். இந்த அர்த்தம் च என்கிற பதத்தினால் தோன்றுகிறது.

சொல்லுகிறது, அல்லது பாதசப்தம் திருவடிகளையே சொல்லி அந்தத்திருவடிகளை ஸந்தோஷப்படுத்துகிறது, சேஷபூதனானவன் சேஷியை சொல்லும்பொழுது திரு வடியைச் சொல்லுவது உசிதமாகையாலே அப்படிச் சொன்னார். வாஸ்தவத்தில் ஸ்ரீராமனுக்கு கோபம் இல்லாமலிருந்தபோதிலும் பிதா பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டார் என்கிற எண்ணமுண்டு, அதை மாற்றுவதற்காக என்றபடி.

பரதன் செய்த சரணாகதியானது ஏன்பலிக்கவில்லை. பரதனுக்கு அதிகாரம் இல்லாமையாலா? அல்லது சரணாகதியை பெற்றுக்கொள்ளுகிறவனுக்கு குணமில் லாமையாலா?

पादुके चास्य राज्याय न्यासं दत्वा पुनः पुनः ।
निवर्तयामास ततो भरतं भरताग्रजः ॥ 37 ॥
स काममनवाप्यैव रामपादावुपस्पृशन् ।
नन्दिग्रामेऽकरोद्राज्यं रामागमनकाङ्क्षया ॥ 38 ॥

37. (ப-ரை) ततः- பிறகு, भरताग्रजः- பரதனுக்குத்தமையனான ஸ்ரீராமன், अस्य- இந்த பரதனுக்கு, राज्याय- ராஜ்யத்தின்பொருட்டு, पादुके- பாதுகைகளை, न्यासं- தனக்கு பதிலாக, दत्वा- கொடுத்துவிட்டு, पुनः पुनः- அடிக்கடி, भरतं- பரதனை, निवर्तयामास- திருப்பி அனுப்பிவிட்டார்.

38. (ப-ரை) सः- அந்த பரதன், कामं- தன்னுடைய மனோரதத்தை, अनवाप्य एव- அடையாமலே, रामपादौ- ஸ்ரீராமனுடைய பாதுகைகளை, उपस्पृशन् सन्- ஸேவித்துக் கொண்டு, रामागमनकाङ्क्षया- ஸ்ரீராமன் வரப்போகிறானென்று ஆசையினால், नन्दिग्रामे- நந்திக்ராமமென்கிற கிராமத்தில், राज्यं- ராஜ்யத்தை, अकरोत्- செய்துவந்தார்.

37. (பொ-ரை) பரதனுடைய அண்ணாவான ஸ்ரீராகவனும், ராஜ்யமாளுவ தற்காக பரதனுக்கு தம்முடைய பாதுகைகளை தமக்கு பதிலாக கொடுத்து (என்னுடைய பாதுகைகள் ராஜ்யமாளும். நான் அவைகளுக்கு வேலைக்காரன் என்று பாவித்துவா என்று) பரதனை அவ்விடமிருந்து பட்டணத்திற்கனுப்பிவிட்டார்.

38. (பொ-ரை) இந்த பரதனும் தான் ஆசைப்பட்ட ஸ்ரீராமகைங்கர்யம் கிடைக்காமலே ஸ்ரீராமனுடைய பாதுகைகளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து ப்ரதிதினமும் பதினான்குவருஷம் முடிந்தவுடன் ஸ்ரீராமன் எழுந்தருளப்போகிறார் நம்மிஷ்டப்படி அவர் கைங்கர்யம் நமக்குக்கிடைக்கப்போகிறதென்று மேன்மேலும் ஆசையை வளர்த்திக்கொண்டு ஸ்ரீராமனில்லாத அயோத்தியில் வஸிக்க இஷ்டமில்லாமல் அதன் ஸமீபத்திலுள்ள நந்திக்ராமமென்கிற சிறிய ஊரில் ராஜ்ய கார்யங்களைச் செய்துகொண்டுவந்தார்.

சரணாகதிக்கு ப்ரார்த்தனையைத்தவிர வேறு வேண்டாமாகையால் பரதனுக்கு அதிகாரமில்லை என்று சொல்லமுடியாது. ஸகல கல்யாண குணபரிபூர்ணனாகையால் சரண்யனிடத்தில் குணமில்லையென்றும் சொல்லமுடியாது. ஆனால் என் பலிக்கவில்லை என்றால், பித்ருவாக்யபரிபாலன ரூபமான தர்மத்தை முதலில் கைக்கொண்டபடியால் பின்னால் ஏற்பட்ட பரதனுடைய சரணாகதிக்கு இது ப்ரதிபந்தகமாக ஆய்விட்டது. ஆகையால் அது முடிந்தபிறகு பலித்தது.

गते तु भरते श्रीमान्सत्यसन्धो जितेन्द्रियः ।
रामस्तु पुनरालक्ष्य नागरस्य जनस्य च ॥
तत्रागमनमेकाग्रो दण्डकान्प्रविवेश ह ॥ 39 ॥

प्रविश्य तु महारण्यं रामो राजीवलोचनः ।
विराधं राक्षसं हत्वा शरभङ्गं ददर्श ह ॥ 40 ॥
सुतीक्ष्णं चाप्यगस्त्यं च अगस्त्यभ्रातरं तथा ॥ 41 ॥

---

39. (ப-ரை) भरते- பரதன், गते तु- திரும்பிப்போனவளவில், श्रीमान्- விசேஷமான காந்தியுடையவரும், सत्यसन्धः- ஸத்யமான ப்ரதிஜ்ஞையுடையவரும், जितेन्द्रियः- இந்திரியங்களை ஜயித்தவருமான, रामः तु- ஸ்ரீராமனும், तत्र- அந்த சித்ரகூடத்தில், नागरस्य- நகரித்திலே இருக்கிற, जनस्य- ஜனத்தினுடைய पुनः- மறுபடியும், आगमनं- வரவை, आलक्ष्य च- ஆலோசித்தும், एकाग्रः- ஒரே மனதுடையவராய், दण्डकान्- தண்டகாவனத்தை, प्रविवेश- ப்ரவேசித்தார், ह- கஷ்டம்!

40-41. (ப-ரை) राजीवलोचनः- செந்தாமரைக் கண்ணனுன, रामः- ஸ்ரீராமன் महारण्यं- பெரிய அரண்யத்தை, प्रविश्य तु- ப்ரவேசித்து, विराधं राक्षसं- விராதன் என்கிற ராக்ஷஸனை, हत्वा- கொன்றுவிட்டு, शरभङ्गं- சரபங்க மஹரிஷியை, ददर्श ह- பார்த்தார், सुतीक्ष्णं च अपि- ஸுதீக்ஷ்ணமஹரிஷியையும், अगस्त्यं च- அகஸ்த்ய மஹரிஷியையும், तथा- அப்படியே, अगस्त्य भ्रातरं அகஸ்த்யருடைய ப்ராதாவையும், (ददर्श- பார்த்தார்.)

---

39. (பொ-ரை) பரதன் சித்திரகூடத்திலிருந்து திரும்பிப்போனவுடன் தாம் செய்த ப்ரதிஜ்ஞைக்கு பங்கம் வராதபடியினுல் விசேஷமான காந்தியுடையவராயும், பலவிதமாக பரதன் நிர்பந்தித்தும் தன் ப்ரதிஜ்ஞை கைவிடாதவராயும், மாதாமுதலானவர்களுடைய ப்ரார்த்தனையை வ்யாஜமாகக்கொண்டு ராஜ்யானுபவத்தில் கொஞ்சமேனும், ஆசையில்லாதவரான ஸ்ரீராமன், பட்டணத்து ஜனங்கள் அடிக்கடி இவ்விடம் வந்துவிடுவார்களென்றும் இவ்விடம் வஸிக்கின்ற ரிஷிகளிடத்தில் ஏதாவது அபசாரங்கள் நேர்ந்துவிடும் என்கிற எண்ணத்தினுல் அந்த இடத்தைவிட்டு பித்ருவசனபரிபாலனத்திலேயே நோக்கமுள்ளவராய் தண்டகாவனம் ப்ரவேசித்தார்.

40-41. (பொ-ரை) ஸ்ரீராமன் தண்டகாவனம் என்கிற பெரிய அரண்யத்தில் ப்ரவேசித்து அங்கு அபூர்வமான கொடி, செடி, மரம், ம்ருகம், பக்ஷிமுதலானவைகளைப்பார்த்து ஆனந்தத்தினுல் மலர்ந்த கண்களை உடையவராய், விராதனென்கிற ராக்ஷஸனை ஸம்ஹரித்து, சரபங்க மஹரிஷியை ஆச்ரமத்தில் ஸேவித்து, அவருடைய அனுமதியினுல் ஸுதீக்ஷ்ணரையும், அகஸ்த்ய மஹரிஷியையும், அகஸ்த்யப்ராதாவான (ஸுதர்சனர் என்கிற) மஹரிஷியையும் அவரவர்கள் ஆச்ரமங்களில் சென்று ஸேவித்தார்.

*एकाग्रः- விரோதிகள் நிறைந்த தேசமானதையால் நிரம்பவும் கவனமுள்ளவராக என்றும் சொல்லலாம்.

ह- என்று ஆச்சர்யம் அல்லது கஷ்டம்.

अगस्त्यवचनाच्चैव जग्राहैन्द्रं शरासनम् ।
खड्गं च परमप्रीतस्तूणी चाक्षयसायकौ ॥ 42 ॥
वसतस्तस्य रामस्य वने वनचरैः सह ।
ऋषयोऽभ्यागमन्सर्वे वधायासुररक्षसाम् ॥ 43 ॥
स तेषां प्रतिशुश्राव राक्षसानां तथा वने ॥ 44 ॥

42. (ப-ரை) (रामः- ஸ்ரீராமன்) परमप्रीतः सन्- பரமஸந்தோஷத்தை உடையவராய்க்கொண்டு, अगस्त्यवचनात् च एव- அகஸ்த்ய மஹரிஷியின் வார்த்தையினலேயே. ऐन्द्रं- இந்திரனல் கொடுக்கப்பட்ட, शरासनम्- வில்லேயும், खड्ग च- கத்தியையும், अक्षयसायकौ- குறைவில்லாத பாணங்களே உடைய, तूणी च- அம்புராப்பொதிகளேயும், जग्राह- பெற்றுக்கொண்டார்.

43. (ப-ரை) वने- சரபங்க வனத்தில், तस्य- அந்த ஸ்ரீராமன், वसतः सतः- வஸித்துக்கொண்டிருக்கும் காலத்தில், असुररक्षसाम्- அஸுரர்களுடையவும், இராக்கதர்களுடையவும், वधाय- ஸம்ஹாரத்தின் பொருட்டு, सर्वे ऋषयः- எல்லா ரிஷிகளும், वनचरैः सह- வனவாஸிகளோடுகூட, अभ्यागमन्- (ஸ்ரீராமனிடம்) வந்தார்கள்.

44 (ப-ரை) सः- அந்த ஸ்ரீராமன்; राक्षसानां- இராக்கதர்களுடைய, वने- வனத்தில், तेषां- அந்த ரிஷிகளுக்கு, तथा- அவர்கள் வேண்டிக்கொண்டபடியே, प्रतिशुश्राव- ப்ரதிஜ்ஞை செய்தார்.

42. (பொ-ரை) ஸ்ரீராமன் இராவண ஸம்ஹாரார்த்தமாக புறப்பட்ட தமக்கு தகுந்த ஆயுதங்கள் கிடைத்ததென்று பரமஸந்தோஷமுடையவராய் அகஸ்த்யருடைய நியமனத்தினல், இந்திரனல் கொடுக்கப்பட்டிருந்த வில், கத்தி, எடுக்க எடுக்க குறையாத பாணங்களோடுகூடின அம்புராத்தூணி இவைகளேயும் பெற்றுக்கொண்டார்.

43. (பொ-ரை) ஸ்ரீராமன், சரபங்கமஹரிஷியின் வனத்தில் வஸித்துக்கொண்டிருக்கும்பொழுது, கபந்தன் முதலான அஸுரர்களேயும், கரன் முதலான இராக்கதர்களேயும் ஸம்ஹரிப்பதற்காக மற்றவனவாஸிகளுடன் வனத்தில் வஸிக்கும் ரிஷிகள் ஸ்ரீராமனிடம் வந்தார்கள்.

44. (பொ-ரை) அந்த ஸ்ரீராகவன், இராக்கதர்களுடைய வனமான தண்டகாவனத்தில் இந்த ரிஷிகள் கேட்டுக்கொண்டபடியே ப்ரதிக்ஞை செய்தார்.

சக்ரவர்த்திகுமாரராயிருந்தும், ராஜ்யத்தில் ஆசையில்லாமல் பித்ருவசனபரிபாலனத்தில் நோக்கமுள்ளவரென்று ஆச்சர்யம்.

சக்ரவர்த்திகுமாரனுக்கு ராஜ்யம் கைதவறி நிர்ஜனமான தண்டகாரண்யத்தில் வஸிக்க நேர்ந்துவிட்டதே என்று கஷ்டம். இவை இரண்டும் வால்மீகி மஹரிஷியினுடையன.

प्रतिज्ञातश्च रामेण वधः संयति रक्षसाम् ।
ऋषीणामग्निकल्पानां दण्डकारण्यवासिनाम् ॥ 45 ॥
तेन तत्रैव वसता जनस्थाननिवासिनी ।
विरूपिता शूर्पणखा राक्षसी कामरूपिणी ॥ 46 ॥
ततः शूर्पणखावाक्यादुद्युक्तान्सर्वराक्षसान् ।
खरं त्रिशिरसं चैव दूषणं चैव राक्षसम् ॥
निजघान रणे रामस्तेषां चैव पदानुगान् ॥ 47 ॥

45. (ப-ரை) रामेण- ஸ்ரீராமனால், अग्निकल्पानां- அக்நிக்கு ஸமானமான, दण्डकारण्यवासिनाम्- தண்டகாவனத்தில் வஸிக்கின்றவருமான, ऋषीणां- ரிஷிகளுக்கு, संयति- யுத்தத்தில், रक्षसाम्- இராக்கதர்களுடைய, वधः- ஸம்ஹாரமானது, प्रतिज्ञातः च- ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது.

46. (ப-ரை) तत्र एव- அந்த ஜனஸ்தானத்திலேயே, वसता- வஸித்துக்கொண்டிருக்கிற, तेन- அந்த ஸ்ரீராமனால், जनस्थाननिवासिनी- ஜனஸ்தானத்தில் வஸிக்கின்றவளும், कामरूपिणी- இஷ்டப்படி ரூபத்தை அடையக்கூடியவளுமான, शूर्पणखा- சூர்ப்பனகை என்கிற, राक्षसी- இராக்கதியானவள், विरूपिता- விகாரத்தை அடைவிக்கப்பட்டாள்.

47. (ப-ரை) ततः- பிறகு, रामः- ஸ்ரீராமன், शूर्पणखावाक्यात्- சூர்ப்பனகையின் வார்த்தையினால், उद्युक्तान्- யுத்தத்திற்கு ஸன்னத்தர்களாக வந்த, सर्वराक्षसान्- எல்லா இராக்கதர்களையும், खरं- கரனையும், त्रिशिरसं च एव- த்ரிசிரஸ்ஸையும், दूषणं राक्षसम् च एव- தூஷணனென்கிற இராக்கதனையும், तेषां- அவர்களுடைய, पदानुगान् च एव- பின் வந்த இராக்கதர்களையும், रणे- யுத்தத்தில், निजघान- கொன்றார்.

---

45. (பொ-ரை) ஸ்ரீராமனும், தண்டகாவனத்தில் வஸிக்கின்றவரும், அக்நிபோல் தேஜஸ்ஸுடையவருமான ரிஷிகளைப்பார்த்து, உங்கள் இஷ்டப்படி யுத்தத்தில் இராக்கதர்களை ஸம்ஹாரம் செய்கிறேன் என்று ப்ரதிஜ்ஞையையும் செய்தார்.

46. (பொ-ரை) அந்த ஜனஸ்தானத்திலேயே வஸித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீராமன், ஜனஸ்தானத்தில் வஸிக்கின்ற இஷ்டப்படி ரூபம் அடைந்துவந்த சூர்ப்பனகை என்கிற இராக்கதஸ்த்ரீக்கு, காது, மூக்கு இவைகளை அறுத்து விகாரப்படுத்தினார்.

47. (பொ-ரை) ஸ்ரீராமன், இவ்விதம் சூர்ப்பனகையை விகாரப்படுத்தின பிறகு, அவள் வார்த்தையினால் யுத்தத்திற்கு, ஸன்னத்தர்களாகவந்த மற்ற இராக்கதர்கள் எல்லோரையும், அவர்களில் தலைவரான, கரன், த்ரிசிரஸ், தூஷணன் என்பவர்களையும் யுத்தத்தில் ஸம்ஹாரம் செய்துவிட்டார்.

वने तस्मिन्निवसता जनस्थाननिवासिनाम् ।
रक्षसां निहतान्यासन्सहस्राणि चतुर्दश ॥ 48 ॥
ततो ज्ञातिवधं श्रुत्वा रावणः क्रोधमूर्छितः ।
सहायं वरयामास मारीचं नाम राक्षसम् ॥ 49 ॥
वार्यमाणः सुबहुशो मारीचेन स रावणः ।
न विरोधो बलवता क्षमो रावण तेन ते ॥ 50 ॥

---

48. (ப-ரை) तस्मिन् वने- அந்த வனத்தில், निवसता- வஸித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீராமனால், जनस्थाननिवासिनाम्– ஜனஸ்தானத்தில் வாஸம் செய்து கொண்டிருந்த, रक्षसां- இராக்கதர்களுடைய, चतुर्दश सहस्राणि- பதினான்கு ஆயிரங்கள், निहतानि- கொல்லப்பட்டவைகளாக, आसन्- ஆயின.

49. (ப-ரை) ततः- பிறகு, रावणः- இராவணன், ज्ञातिवधं- பந்துக்களின் ஸம்ஹாரத்தை, श्रुत्वा- கேட்டு, क्रोधमूर्छितः- கோபத்தினால் மூர்ச்சை அடைந்தவனாய், मारीचं नाम राक्षसम्– மாரீசனென்று ப்ரஸித்தனான இராக்கதனை, सहायं- துணையாக, वरयामास- வேண்டிக்கொண்டான்.

50. (ப-ரை) हे रावण- இராவணனே! ते- உனக்கு, बलवता- மிகவும் பலிஷ்டனான, तेन- அந்த இராமனோடு, विरोधः- விரோதமானது, न क्षमः- தகுந்ததல்ல, (इति- என்று), मारीचेन- மாரீசனால், सः रावणः- அந்த இராவணன், सुबहुशः- அநேகம் தடவை, वार्यमाणः- தடுக்கப்பட்டவனாக, (ஆனான்)

---

48. (பொ-ரை) அங்கு வாஸம்பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீராமன், ஜனஸ்தானத்தில் வஸிக்கின்ற இராக்கதர்கள் பதினான்கு ஆயிரம் பேர்களையும் ஸம்ஹரித்துவிட்டார்.

49. (பொ-ரை) பிறகு இராவணன் தன் பந்துக்களான கரதூஷணன் முதலியவர்களை ஸ்ரீராமன் ஸம்ஹரித்துவிட்டாரென்று கேட்டு, கோபத்தினால் மூர்ச்சை அடைந்தவனாய் மாரீசனென்கிற இராக்கதனை தான் செய்யப்போகிற காரியத்திற்கு துணையாகவரவேணுமென்று வேண்டினான்.

50. (பொ-ரை) ஹே இராவணா! பலிஷ்டனான அந்த ஸ்ரீராமனோடு விரோதம் செய்துகொள்ளுவது உனக்குத்தகுதியல்ல என்று மாரீசனும் பலபடியாக இராவணனைத்தடுத்தான்.

अनादृत्य तु तद्वाक्यं रावणः कालचोदितः ।
जगाम सहमारीचस्तस्याश्रमपदं तदा ॥ 51 ॥
तेन मायाविना दूरमपवाह्य नृपात्मजौ ।
जहार भार्यां रामस्य गृध्रं हत्वा जटायुषम् ॥ 52 ॥
गृध्रं च निहतं दृष्ट्वा हृतां श्रुत्वा च मैथिलीम् ।
राघवः शोकसंतप्तो विललापाकुलेन्द्रियः ॥ 53 ॥

51. (ப-ரை) रावणः- இராவணன், कालचोदितः- ம்ருத்யுவினால் ஏவப்பட்டவனாய்க்கொண்டு, तत् वाक्यं- அவனுடைய (மாரீசனுடைய) வார்த்தையை, अनादृत्य- அலக்ஷ்யம் செய்துவிட்டு, सह मारीचः- மாரீசனுடன் கூடினவனாய், तदा- அப்பொழுது, तस्य- அந்த ஸ்ரீராமனுடைய, आश्रमपदं- ஆச்ரமஸ்தானத்தை, जगाम- அடைந்தான்.

52. (ப-ரை) मायाविना- மாயையினால் மான்வேஷமடைந்த, तेन- அந்த மாரீசனால்; नृपात्मजौ- இராஜபுத்திரர்களை, दूरं- வெகு தூரத்தில், अपवाह्य- போகும்படி செய்து, जटायुषम्- ஜடாயுஸ் என்கிற, गृध्रं- கழுகை, हत्वा- கொன்று, रामस्य- இராமனுடைய, भार्यां- பார்யையான ஸீதையை, जहार- அபஹரித்தான்.

53. (ப-ரை) राघवः- ஸ்ரீராமன், निहतं- கொல்லப்பட்ட, गृध्रं- ஜடாயுஸ்ஸை, दृष्ट्वा च- பார்த்தும், मैथिलीम्- ஸீதையை, हृतां- அபஹரிக்கப்பட்டவளாக, श्रुत्वा च- கேட்டும், शोकसन्तप्तः- துக்கத்தினால் தபிக்கப்பட்டவராய், आकुलेन्द्रियः- கலங்கின இந்திரியங்களை உடையவராய்க்கொண்டு, विललाप- கதறினார்.

---

51. (பொ-ரை) இராவணன் ம்ருத்யுவினால் ஏவப்பட்டவனாய்க்கொண்டு அந்த மாரீசனுடைய வார்த்தையைக் கேளாமல் அனாதரித்துவிட்டு, மாரீசனுடன் கூடவே அப்பொழுது அந்த ஸ்ரீராமனுடைய ஆச்ரமத்திற்கு வந்தான்.

52. (பொ-ரை) கண்டவர்களெல்லோரும் ஆசைப்படக்கூடிய விசித்திரமான ஸ்வர்ணமய மான் வேடத்தை மாயையினால் தரித்த மாரீசன் வழியாக அந்த இராஜபுத்திரர்களான இராமலட்சுமணரை, ஆச்ரமத்தைவிட்டு வெகுதூரம் போகும்படிசெய்து, ஸீதைக்கு ஸஹாயமாக வந்த ஜடாயு என்ற க்ருத்ரராஜனையும் ஸம்ஹரித்துவிட்டு ஸ்ரீராமனுடைய பார்யையான ஸீதாதேவியை அபஹரித்துக்கொண்டு போனான்.

53. (பொ-ரை) ஸ்ரீராமனும், மான்ரூபமான மாரீசனைக்கொன்றுவிட்டு, திரும்பிவரும்பொழுது, இலக்குமணனை ஸந்தித்து, பர்ணசாலையில் ஸீதையைக் காணாமல் அங்குமிங்கும் அவளைத்தேடிக்கொண்டு வரும்பொழுது, இராவணனால் அடிபட்டு குற்றுயிராய் விழுந்திருக்கிற ஜடாயுஸ்ஸைக்கண்டு ஸீதையை இராவணன் அபஹரித்துக்கொண்ட வ்ருத்தாந்தத்தை அவரால்கேட்டு துக்கத்தினால் மனம் கலங்கி கதறினார்,

ततस्तेनैव शोकेन गृध्रं दग्ध्वा जटायुषम् ।
मार्गमाणो वने सीतां राक्षसं संददर्श ह ॥
कबन्धं नाम रूपेण विकृतं घोरदर्शनम् ॥ 54 ॥
तं निहत्य महाबाहुर्ददाह स्वर्गतश्च सः ।
स चास्य कथयामास *शबरीं धर्मचारिणीम् ॥
श्रमणीं धर्मनिपुणामभिगच्छेति राघवम् ॥ 55 ॥

54. (ப—ரை) ततः- பிறகு, तेन- அந்த, शोकेन एव- துக்கத்துடனே, जटायुषं गृध्रं- ஜடாயுஸ் என்கிற க்ருத்ரனை, (கழுகை), दग्ध्वा- ஸம்ஸ்காரம் செய்துவிட்டு (தஹனம் செய்துவிட்டு), सीतां- ஸீதையை, मार्गमाणः- सन्- தேடிக்கொண்டு, वने- வனத்தில், रूपेण- உருவத்தினால், विकृतं- விகாரமுள்ளவனும், घोरदर्शनम्- பயங்கரமான பார்வையையுடையவனுமான, कबन्धं नाम- கபந்தன் என்று ப்ரஸித்தனான, राक्षसं- இராக்ஷதனை, संददर्श- பார்த்தார், ह- கஷ்டம்!

55. (ப—ரை) महाबाहुः- பெரிய தோள்களுடைய, அந்த ஸ்ரீராமன், तं- அந்த கபந்தனை, निहत्य- கொன்றுவிட்டு, ददाह- கொளுத்தினார், सः च- அந்த கபந்தனும், स्वः गतः- ஸ்வர்க்கத்தை அடைந்தான், स च- அவனும், राघवम्- ஸ்ரீராமனைப்பார்த்து, धर्मनिपुणां- தர்மத்தில் ஸாமர்த்யமுடையவளாயும், धर्मचारिणीम्- தர்மத்தை அநுஷ்டிக்கின்றவளும், श्रमणीं- ஸன்யாஸினியுமான, शबरीं- வேடஸ்த்ரீயை, अभिगच्छ- நீர் அடையவேண்டும், इति- என்று, आस्य- ஆகாசத்தில் இருந்துகொண்டு, कथयामास- சொன்னான்.

---

54. (பொ—ரை) பிறகு அந்த துக்கத்துடனே க்ருத்ரராஜனான ஜடாயுஸ்ஸை ஸம்ஸ்காரம்செய்துவிட்டு, ஸீதையைத் தேடிக்கொண்டு வனத்தில் போகும்பொழுது, விகாரமான உருவமுடையவனாய் பார்ப்பதற்கு பயங்கரமுமான கபந்தனென்கிற ஒரு இராக்ஷதனைக் கண்டார்.

55. (பொ-ரை) பெரிய தோள்வலியுள்ள ஸ்ரீராமனும் அந்த கவந்தனை கொன்றுகொளுத்தினார் அவனும் ஸ்வர்க்கமடைந்தான். ஸ்வர்க்கத்தைக்குறித்துப்போகின்ற அந்த கபந்தனும், ஸ்ரீராமன் தனக்குச்செய்த உபகாரத்தை நினைத்து கூடின காலம் ஆகாசத்தில் நின்றுகொண்டு, குரு சிச்ரூஷை முதலான தர்மங்களை அநுஷ்டிக்கும் ஸ்வபாவமுடையவளாய், அதிதி ஸத்காரம் செய்வதில் நன்றாய்த்தெரிந்தவளாய், நாலாவது ஆச்ரமமாகிய ஸன்யாஸ ஆச்ரமத்தை அடைந்திருக்கிற சபரஜாதியிற் பிறந்த சபரி என்கிற ஒரு ஸ்த்ரீ, தேவரீர் இங்கு எழுந்தருளப்போகிற ஸங்கதியைத்தெரிந்துகொண்டு ருசியுள்ளபழங்களை சேகரித்துவைத்து தேவரீர் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஆகையால் அவள் ஆச்ரமத்தைக்குறித்து தேவரீர் எழுந்தருளவேணுமென்று ஸ்ரீராமனுக்குச்சொன்னார்.

கபந்தன், அஸுரஜாதியாயிருந்தாலும், இராக்ஷஸர்களின் ஸ்வபாவம்

सोऽभ्यगच्छन्महातेजाः शबरीं शत्रुसूदनः ।
शबर्या पूजितः *सम्यग्रामो *दशरथात्मजः । ॥ 56 ॥
पम्पातीरे हनुमता संगतो वानरेण *ह ।
हनुमद्वचनाच्चैव सुग्रीवेण समागतः ॥ 57 ॥

56. (ப-ரை) महातेजाः- அதிகமான தேஜஸ்ஸை உடையவராயும், शत्रुसूदनः- சத்ருக்களை வெல்லுகிறவருமான, सः- அந்த ஸ்ரீராமன், शबरीं- சபரியை, अभ्यगच्छत- அடைந்தார், दशरथात्मजः- தசரதகுமாரரான, रामः- ஸ்ரீராமன், शबर्या- சபரியினால், सम्यक्- நன்றாக, पूजितः- பூஜிக்கப்பட்டார்.

57. (ப-ரை) पम्पातीरे- பம்பாநதியின் கரையில், हनुमता- ஹநுமானென்கிற, वानरेण- வானரனோடு, संगतः சேர்ந்தார், ह- ஸந்தோஷம், हनुमद्वचनात्- ஹனுமானுடைய வார்த்தையினால், सुग्रीवेण च एव- ஸுக்ரீவனோடும், समागतः- சேர்ந்தார்.

---

56. (பொ-ரை) மஹாதேஜஸ்வியான அந்த ஸ்ரீராமன் சபரியின் பரலோக ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான பாபங்களை நிவர்த்திப்பதற்காக சபரியின் ஆச்ரமம் சென்றார். அங்கு சபரியினால் பக்தியுடன் செய்யப்பட்ட பூஜையையும் பெற்றுக் கொண்டார்.

57. (பொ-ரை) பம்பாநதிக்கரையில் ஸ்ரீராமன், ஹனுமான் என்கிற வானரனை ஸந்தித்தார். அந்த ஹனுமானுடைய வார்த்தையினால் ஸுக்ரீவனோடும் சேர்ந்தார்.

கொண்டபடியால் இங்கு இராக்கதனென்று சொன்னது.

இங்கு "ह" என்பது துக்கத்தைச் சொல்லுகிறது. அதாவது:—அமிருதத்தைத் தேடிக்கொண்டு போகும்பொழுது காலகூட விஷம் கிடைத்தது போல்.

*க்ஷத்ரிய ஸ்த்ரீக்கும், வைச்ய புருஷனுக்கும் பிறந்தவன் சபரன். இவன் தொழில்-மலையிலிருந்து காய்கிழங்குகளையும் தேன் முதலானவைகளையும் கொண்டுவந்து விற்பது.

*दशरथात्मजः- என்கிற பதத்தினால் அறுபதினாயிரம் வருஷம் பிள்ளையில்லாமல் மலடாயிருந்த தசரதமஹாராஜன் அபூர்வமாகப்பெற்றெடுத்த பிள்ளைக்கு மிகவும் ஆதரத்துடன் போஜனாதிகளை கொடுப்பார். இதைக்காட்டிலும் இந்த சபரி ஸமர்ப்பித்த பலங்களை விசேஷப்ரீதியுடன் திருவுள்ளம் பற்றினார். என்பதும், सम्यक् पूजितः- என்பதினால் சரபங்கர், அகஸ்த்யர் முதலான மஹரிஷிகள் செய்த பூஜை ஸாதாரணமென்றும், சபரி செய்தது விசேஷமென்றும் கருத்து.

*இங்கு ह என்னும் பதத்தினால் விரஹிஜனங்களுடைய ப்ராணனை அபஹரிக்கக்கூடிய பம்பாநதியின் கரையில் தன் இஷ்டநாயகியான ஸீதையை தேடித்தன்னுடன் சேர்ப்பிக்கக்கூடிய ஒருவன் நேர்ந்தது காட்டில்திருடர்களால் ஸொத்து பறிகொள்ளப்பட்டு தவித்துக்கொண்டிருக்கிற ஒருவனுக்கு திடீரென்று தன்பந்துக்கள் நேர்ந்தால் எவ்வளவு ஸந்தோஷம் உண்டாகும். அதுபோல் இருந்தது. என்று மஹரிஷி ஸந்தோஷிக்கிறார்.

सुग्रीवाय च तत्सर्वं शंसद्रामो महाबलः ।
आदितस्तद्यथावृत्तं सीतायाश्च विशेषतः ॥ 58 ॥

सुग्रीवश्चापि तत्सर्वं श्रुत्वा रामस्य वानरः ।
चकार सख्यं रामेण *प्रीतश्चैवाग्निसाक्षिकम् ॥ 59 ॥

---

58. (ப-ரை) महाबलः- அதிக தைர்யமுடைய, रामः- ஸ்ரீராமன், आदितः- தன்னுடைய பிறப்புமுதற்கொண்டு, तत्- அப்படி ப்ரஸித்தமான, सर्वं- ஸமஸ்தமான, சரித்திரத்தையும், सुग्रीवाय- ஸுக்ரீவன் பொருட்டு, शंसत्- சொன்னார். सीतायाः- ஸீதையினுடைய, (तत्- அப்படி ப்ரஸித்தமான சரித்திரத்தையும்), यथावृत्तं- நடந்தபடி, विशेषतः- விசேஷமாக, (शंसत्- சொன்னார்.)

59. (ப-ரை) वानरः- வானரனான, सुग्रीवः च अपि- ஸுக்ரீவனும், रामस्य- ஸ்ரீராமனுடைய, तत् सर्वं- அந்த வ்ருத்தாந்தம் முழுவதையும், श्रुत्वा- கேட்டு, प्रीतः- ஸந்தோஷமுடையவனாய், अग्निसाक्षिकम्- அக்னியை ஸாக்ஷியாகக்கொண்டு, रामेण- ராமனோடு, सख्यं- ஸ்நேஹத்தை, चकार- செய்தார்.

---

58. (பொ-ரை) தனக்கு நேர்ந்த துக்கத்தை நினைத்து அக்காலத்தில் உண்டான மனக்கலக்கத்தை வெளிக்காட்டாமல் உள்ளடக்கக்கூடிய தைர்யமுள்ளவரான ஸ்ரீராமன், ஆதிமுதற்கொண்டு தன்னுடைய வ்ருத்தாந்தத்தையும், ஸுக்ரீவனுக்கு சொல்லி தக்காலம் இராவணன் ஸீதையை அபஹரித்துக்கொண்டுபோன வ்ருத்தாந்தத்தையும் நடந்தபடி விசேஷமாகச் சொன்னார்.

59. (பொ-ரை) வானரஜாதியான ஸுக்ரீவனும், ஸ்ரீராமனுடைய வ்ருத்தாந்தம் முழுவதையும் கேட்டு பரமஸந்தோஷத்துடன், அக்னி ஸாக்ஷிகமாக ஸ்ரீராமனோடு ஸ்நேஹஞ்செய்துகொண்டார்.

(ஸ்த்ரீயை விட்டுப்பிரிந்த புருஷனும், புருஷனை விட்டுப்பிரிந்த ஸ்த்ரீயும் விரணிஜனம் என்று சொல்லப்படுகிறது.)

* प्रीति‌யாவது, ஸ்ரீராமன் தன்னிடத்தில் ஒரு ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்கிறபடியால் தன்னுடைய கார்யத்தையும் முடித்துக் கொடுப்பார் என்று.

* இங்கு वानर—राम- என்று இரண்டு சப்தங்களினால், இவர்கள் ஒருவருக்கொருவர் ஸ்நேஹஞ்செய்துகொள்ளுவது இணங்கினதாக இல்லையென்பது காட்டப்படுகிறது. அதனால் ஸ்ரீராமனுடைய ஸௌசீல்யமென்கிற குணத்தின் மேன்மை வெளியாக்கப்படுகிறது. "குஹன்" ஒரு தாழ்ந்த மனுஷ்யஜாதியாகையால் அவனுடன் ஸ்ரீராமன் ஸ்நேஹஞ்செய்தது கேவலம் ஸௌசீல்யத்தினாலே. அதிலும் தாழ்ந்த "சபரி" ஸ்த்ரீஜாதியாகையால் அவளிடம் ஸ்நேஹஞ்செய்தது அந்த ஸௌசீல்யத்தின் முதிர்ந்த நிலைமையைக் காட்டுகிறது. ஸுக்ரீவன் மனுஷ்யஜாதியல்லாமல் திர்யக் ஜாதியாகையால் அவருடன் ஸ்நேஹஞ்செய்தது மிகவும் சிறந்த ஸௌசீல்யத்தைக் காட்டுகிறது. என்று தாத்பர்யம்.

ततो वानरराजेन वैरानुकथनं प्रति ।
रामायावेदितं सर्वं प्रणयाद्दुःखितेन च ॥ 60 ॥
प्रतिज्ञातं च रामेण तदा वालिवधं प्रति ।
वालिनश्च बलं तत्र कथयामास वानरः ॥ 61 ॥
सुग्रीवः शङ्कितश्चासीन्नित्यं वीर्येण राघवे ॥ 62 ॥

60. (ப-ரை) ततः- பிறகு, दुःखितेन- துக்கித்துக்கொண்டிருக்கிற, वानरराजेन- வானரராஜனான ஸுக்ரீவனால், वैरानुकथनं प्रति- வைரத்திற்குத்தகுந்த பதிலைக்குறித்து, सर्वं च- முழுவதும், रामाय- ஸ்ரீராமன் பொருட்டு, प्रणयात्- ஸ்நேஹத்தினால், आवेदितं- நன்றாகத் தெரிவிக்கப்பட்டது.

61. (ப-ரை) तदा- அப்பொழுது, रामेण- ஸ்ரீராமனால், वालिवधं प्रति- வாலியின் வதத்தைக்குறித்து, प्रतिज्ञानं च- ப்ரதிஜ்ஞையும் செய்யப்பட்டது, वानरः च- வானரனான ஸுக்ரீவனும், तत्र- அந்த ரிச்யமூகமலையில், वालिनः- வாலியினுடைய, बलं- பலத்தை, कथयामास- சொன்னான்.

62. (ப-ரை) सुग्रीवः- ஸுக்ரீவனும், राघवे- ஸ்ரீராமன் விஷயத்தில், वीर्येण- பராக்ரமத்தினால், नित्यं- எப்பொழுதும், शङ्कितः- ஸம்சயமுள்ளவனாக, आसीत् च- இருந்தான்.

60. (பொ-ரை) ஸுக்ரீவனுக்கும் ஸ்ரீராமனுக்கும் ஸ்நேஹமான பிறகு, பரம ஸுஹ்ருத்தான ஸ்ரீராமன் ஸன்னிதானத்தில், தான் இழந்த தாரத்தையும், இராஜ்யத்தையும் நினைத்து கண்களில் ஜலத்தைப் பெருக்கிக்கொண்டு ஸுக்ரீவ மஹாராஜன் தனக்கும் வாலிக்கும் நேர்ந்த விரோதத்தின் விஷயமாக ஸ்ரீராமன் கேட்டதற்கு பதில் உத்திரம் சொல்லவேண்டியது முழுமையும் ஸ்நேஹத்தினால் ஸ்ரீராமனிடம் சொன்னார்.

61. (பொ-ரை) ஸ்ரீராமனும் ஸுக்ரீவனிடத்தில் வாலியின் வ்ருத்தாந்தத்தை கேட்டவுடனேயே வாலியை ஸம்ஹாரம் பண்ணுவதாக ப்ரதிஜ்ஞையையும் செய்தார். வானர இராஜனான ஸுக்ரீவனும் அந்த ரிச்யமூகமலையில் வாலியினுடைய பலத்தையும் சொன்னார்.

62. (பொ-ரை) ஸ்ரீராமன் விஷயத்தில், வாலியைக்கொல்லக்கூடிய ஸாமர்த்யம் இவருக்கு இருக்குமா இராதா என்கிற ஸம்சயம் ஸ்ரீராமனைப்பார்த்தது முதல், ஸுக்ரீவனுக்கு எப்பொழுதும் இருந்துகொண்டே இருந்தது.

1702

राघवप्रत्ययार्थं तु दुन्दुभेः कायमुत्तमम् ।
दर्शयामास सुग्रीवो महापर्वतसन्निभम् ॥ 63 ॥
*उत्स्मयित्वा महाबाहुः प्रेक्ष्य चास्थि महाबलः ।
पादाङ्गुष्ठेन चिक्षेप संपूर्णं दशयोजनम् ॥ 64 ॥

63. (ப-ரை) तु- ஆகிலும், सुग्रीव:- ஸுக்ரீவன், राघवप्रत्ययार्थं- ஸ்ரீராமனுடைய பலத்தை அறிவதற்காக, महापर्वतसन्निभम्- பெரிய பர்வதத்திற்கு ஸமானமாயும், उत्तमम्- அழியாததுமான, दुन्दुभे:- துந்துபி என்கிற அஸுரனுடைய, कायं- சரீரத்தை, दर्शयामास- காண்பித்தான்.

64. (ப-ரை) महाबल:- அதிக பலமுடையவரும், महाबाहु: च- பெரிய தோள்களையுடையவருமான ஸ்ரீராமனும், अस्थि- அந்த எலும்பை, प्रेक्ष्य- பார்த்து, स्मयित्वा- அலக்ஷ்யம்செய்து, पादांगुष्ठेन- கால் கட்டை விரலினால், सम्पूर्णं- பூர்ணமான, दशयोजनम्- பத்துயோஜனை தூரம், उत् चिक्षेप- தூக்கி எறிந்தார்.

63. (பொ-ரை) ஸுக்ரீவ மஹாராஜன் ஸ்ரீராமனுடைய பலவிஷயத்தில் ஸந்தேஹப்பட்டதுமாத்திரமல்லாமல், அவருடைய பலத்தை நன்றாய் அறிந்துகொள்ளவேணுமென்பதற்காக வாலியினால் முன்னொருக்கால் அடிபட்டு உயிரிழந்து பெரிய பர்வதம்போல் உயர்ந்து விழுந்திருக்கிற துந்துபி என்கிற அஸுரனுடைய சரீரத்தை காட்டினான். அதாவது:— வாலி இந்த சரீரத்தை கால்நுனியால் உயரத்தூக்கி பந்துபோல் எறிவான் என்று காட்டினான்.

64. (பொ-ரை) அளவிறந்த பலமுடையவரும், பெரிய தோள்களையுடையவருமான அந்த ஸ்ரீராமனும், ஸுக்ரீவ மஹாராஜன் காட்டின துந்துபியின் அந்த சரீரத்தின் எலும்புக்கூட்டை பார்த்து "இது என்னமாத்திர" மென்று அலக்ஷ்யமாக தம்முடைய திருக்கால் கட்டைவிரலினால் கொஞ்சமேனும் குறைவில்லாமல் பத்துயோஜனை தூரம் தூக்கி எறிந்தார்.

வாலியினால் காலால் தூக்கி எறியப்பட்டதை ஸ்ரீராமன் கால்கட்டைவிரலினால் தூக்கி எறிந்தார். ஆனால் வாலி எறிந்தது இருநூறு வில்கடை தூரத்தில் விழுந்தது. ஸ்ரீராமன் எறிந்ததோவென்றால் பத்துயோஜனை தூரத்தில் விழுந்தது.

*उत् स्मयित्वा- கம்பீரமாகக்கொஞ்சம் சிறித்து, அதாவது:- ஸநகாதி யோகிகளுங்கூட நம்முடைய ப்ரபாவத்தை அறிய முடியாமலிருக்க காட்டிலே ஸஞ்சரிக்கின்ற இந்தகுரங்கு எப்படி அறியும், அதனாலென்றோ நம்மைப்பரீக்ஷை பண்ணுகிறான், என்று மந்தஹாஸம் செய்து, என்று தீர்த்திய வ்யாக்யானம்.

विभेद च पुनस्सालांन्सप्तैकेन महेषुणा ।
गिरिं रसातलं चैव जनयन् प्रत्ययं तदा ॥ 65 ॥

ततः प्रीतमनास्तेन विश्वस्तः स महाकपिः ।
किष्किन्धां रामसहितो जगाम च गुहां तदा ॥ 66 ॥

65. (ப-ரை) पुनः च- மறுபடியும், सप्त सालान्- ஏழுமராமரங்களையும், गिरिं- (அதன் அருகிலுள்ள) மலையையும், रसातलं च एव- ரஸாதலத்தையும், प्रत्ययं- நம்பிக்கையை, जनयन्- உண்டுபண்ணுவதற்காக, एकेन महेषुणा- ஒரு பெரிய பாணத்தினால், तदा- அப்பொழுது, विभेद- பிளந்தார்.

66. (ப-ரை) ततः- பிறகு, तेन- அந்த கார்யத்தினால், विश्वस्तः- நம்பிக்கை அடைந்தவனாயும், प्रीतमनाः- களித்தமனதுடையவனாயும், महाकपिः- பெரிய வானரனுமான, सः- அந்த ஸுக்ரீவன், रामसहितः सन्- ஸ்ரீராமனுடன் சேர்ந்துகொண்டு, तदा- அப்பொழுதே, किष्किन्धां गुहां- கிஷ்கிந்தை என்னும் குஹையை, जगाम च- அடைந்தான்.

---

65. (பொ-ரை) இவ்விதம் ஸ்ரீராமன் ஸுக்ரீவனுடைய நம்பிக்கைக்காக பத்துயோஜனை தூரம் துந்துபியின் சரீரத்தை எறிந்தார், அதை ஸுக்ரீவன் பார்த்திருந்தும், அவன் மனதில் ஒரு ஸம்சயம் உண்டாயிற்று. அதாவது:— வாலி துந்துபியுடன் நெடுநேரம் போர் புரிந்து அவனைக்கொன்று சோர்ந்திருந்த ஸமயத்தில் ஈரமாயிருந்த அவன் சரீரத்தை தூக்கி எறிந்தான். தேவரீர் மனதில் ஒரு கவலையில்லாமலும் சரீரத்தில் சோர்வில்லாமலும் இருக்கும் ஸமயத்தில் நெடுநாளாக கீழே விழுந்து வெய்யிலாலும் காற்றாலும் உலர்ந்திருக்கும் இந்த எலும்புக்கூட்டை காலால் எறிந்தது ஒரு பெரிய கார்யமன்று, என்று ஸந்தேகம் கொண்ட ஸுக்ரீவனைப்பார்த்து ஸ்ரீராமன் அப்பா! உனக்கு எந்த கார்யம் செய்தால் நம்பிக்கை உண்டாகுமென்று ஸுக்ரீவனை கேட்க அருகிலிருக்கின்ற ஏழு மராமரங்களைக்காட்டி "இவைகளை நீர் பாணத்தினால் துளைத்துவிடுவீரேயானால் உம்முடைய பராக்ரம விஷயத்தில் எனக்கு நம்பிக்கை உண்டாகும்" என்று ஸுக்ரீவன் சொல்ல அந்த ஸமயத்தில் அவனுக்கு நம்பிக்கை உண்டாவதற்காக பெரிய ஒரு பாணத்தினால் ஏழு மராமரங்களையும், அவைகளின் ஸமீபத்திலிருக்கின்ற பர்வதத்தையும், அதலம் முதலான கீழ் உலகங்களில் ஆறாவதான ரஸாதல லோகத்தையும் துளைத்தார்.

66. (பொ-ரை) பிறகு ஸ்ரீராமன் செய்பவருள்ளின மனுஷ்யர்கள் செய்ய முடியாத இந்தக் கார்யத்தினால் இவர் அவச்யம் வாலியை ஸம்ஹாரம்பண்ண சக்தியுடையவர் என்று நம்பிக்கையுடனும், கூடிய சீக்கிரத்தில் நமக்கு இராஜ்யம் கிடைத்துவிடப்போகிறதென்று களிப்புடனும், அப்பொழுது நாம் வானர ராஜனாக ஆகப்போகிறோம் என்கிற எண்ணத்துடனும், அந்த ஸுக்ரீவன் ஸ்ரீராமனையும் அழைத்துக்கொண்டு அப்பொழுதே பர்வத மத்யத்திலிருக்கின்ற கிஷ்கிந்தை என்னும் (குஹையை) நகரத்தை நோக்கிச்சென்றான்.

(இங்கு जगाम च- என்கிற च- காரத்தால், முதலில் ஒருதடவைபோய் திரும்பி வந்து மறுபடியும் போனான் என்று ஏற்படுகிறது.)

ततोऽगर्जद्धरिवरः सुग्रीवो हेमपिङ्गलः ।
तेन नादेन महता निर्जगाम हरीश्वरः ॥ 67 ॥
अनुमान्य तदा तारां सुग्रीवेण समागतः ।
निजघान च तत्रैनं शरेणैकेन राघवः ॥ 68 ॥

67. (ப-ரை) ततः- பிறகு, हरिवीरः- வானரச்ரேஷ்டனையும், हेमपिङ्गलः- ஸ்வர்ணம்போல் பிங்களமான வர்ணமுமுடைய, सुग्रीवः- ஸுக்ரீவன், अगर्जत्- கர்ஜித்தான், महता- பெரிதான, तेन नादेन- அந்த சப்தத்தினால், हरीश्वरः- வானர ராஜனான வாலி, निर्जगाम- வெளிப்புறப்பட்டான்.

68. (ப-ரை) तदा- அப்பொழுது, तारां- தாரையை, अनुमान्य- ஸமாதானப்படுத்திவிட்டு, सुग्रीवेण- ஸுக்ரீவனோடு, समागतः- கைகலந்தார், तत्र- அந்த யுத்த பூமியில், राघवः- ஸ்ரீராமன், एनं- இந்த வாலியை, एकेन शरेण- ஒருபாணத்தினால், निजघान च- அடித்தார்.

67. (பொ-ரை) கிஷ்கிந்தைக்குச் சென்ற பிறகு, ஸுக்ரீவன் தான் வானரர்களுக்கு அரசனைப்போகிறோம் என்று எண்ணி அந்த ஸந்தோஷத்தினால் சரீரமெங்கும் இயற்கையான ஸ்வர்ணம்போல் வர்ணத்தை அடைந்து கர்ஜித்தான், முன்னொருநாளும் கேட்டிராத இந்த ஸுக்ரீவன் கர்ஜித்த சப்தத்தைக்கேட்டு, வானர ராஜனான வாலி அரண்மனையிலிருந்து வெளிப்பட்டான்.

68. (பொ-ரை) அப்பொழுது, தாரை வாலியிடம் வந்து "இன்று வனம் போய் திரும்பிவந்த நம் அங்கதன், ஸுக்ரீவன் ஸ்ரீராமனை ஸஹாயங்கொண்டிருக்கிறான் என்று தெரிவித்தான், அதுவுமல்லாமல் இப்பொழுதுதான் உம்மால் அடிபட்டு ஓடினவன் மறுபடியும் வந்திருக்கிறான், ஆகையால் நீர்போவது உசிதமல்லவென்று தடுக்க, அவளைப்பார்த்து மஹாதார்மிஷ்டனான ஸ்ரீராமன் நிரபராதியான என்னை ஒருக்காலும் அடிக்கமாட்டார், அவ்விஷயத்தில் உனக்குக் கொஞ்சமாகிலும் ஸம்சயம் வேண்டாம் என்று ஸமாதானம் செய்து அனுப்பிவிட்டு, ஸுக்ரீவனோடு கைகலந்தான். ரகுகுலத்தில் அவதரித்த தர்மாத்மாவான ஸ்ரீராமன் அந்த யுத்தகளத்திலேயே ஸுக்ரீவனோடு யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கிற வாலியை ஒரே பாணத்தினால் அடித்துத்தள்ளிவிட்டார்.

அதாவது:— இரண்டாவது பாணம்போடும் பக்ஷத்தில் முதல் பாணத்தினால் அடிபட்ட வாலி ஸ்ரீராமனைத்திரும்பிப்பார்ப்பான், அப்பொழுது [illegible] வாலியிடம் போய்விடும், பின்பு அவனை ஸம்ஹாரம்செய்வதரிது, என்று நினைத்து ஒரே பாணத்தினால் அடித்துத்தள்ளினார் என்பது கருத்து.

ततः सुग्रीववचनात् हत्वा वालिनमाहवे ।
सुग्रीवमेव तद्राज्ये राघवः प्रत्यपादयत् ॥ 69 ॥
स च सर्वान्समानीय वानरान् वानरर्षभः ।
दिशः प्रस्थापयामास दिदृक्षुर्जनकात्मजाम् ॥ 70 ॥
ततो गृध्रस्य वचनात्संपातेर्हनुमान् बली ।
शतयोजनविस्तीर्णं पुप्लुवे लवणार्णवम् ॥ 71 ॥

---

69. (ப-ரை) राघवः- ஸ்ரீராமன், सुग्रीववचनात्- ஸுக்ரீவனுடைய வார்த்தையினால், आहवे- யுத்தத்தில், वालिनं- வாலியை, हत्वा-ஸம்ஹரித்து, ततः- பிறகு, तत् राज्ये- அந்த வாலியின் இராஜ்யத்தில், सुग्रीवं एव- ஸுக்ரீவனையே, प्रत्यपादयत्- ஸ்தாபனம் செய்தார்.

70. (ப-ரை) सः वानरर्षभः च- அந்த வானரச்ரேஷ்டனை ஸுக்ரீவனும், सर्वान्- ஸமஸ்தமான, वानरान्- வானரர்களை, समानीय- வரவழைத்து, जनकात्मजाम्- ஸீதையை, दिदृक्षुः सन्- பார்க்க இச்சை உடையவராய்க்கொண்டு, दिशः- திக்குகளைக் (குறித்து), प्रस्थापयामास-அநுப்பினார்.

71. (ப-ரை) ततः- பிறகு, बली- அதிக பலமுடைய, हनुमान्- ஹநுமான் என்பவர், सम्पातेः- ஸம்பாதி என்கிற, गृध्रस्य- கழுகினுடைய, वचनात्- வார்த்தையினால் शतयोजनविस्तीर्णं- நூறு யோஜனை விஸ்தாரமுள்ள, लवणार्णवम्- உப்பு ஸமுத்ரத்தை, पुप्लुवे- தாண்டினார்.

69. (பொ-ரை) ரகுகுலத்தில் அவதரித்த ஸ்ரீராமனும் ஸுக்ரீவனுடைய ப்ரார்த்தனையினால், யுத்தத்தில் வாலியை ஸம்ஹரித்து, அதன்பிறகு அந்த இராஜ்யத்தில் ஸுக்ரீவனையே பட்டாபிஷேகம் செய்வித்தார்.

70. (பொ-ரை) அந்த ஸுக்ரீவ மஹாராஜனும், எல்லாவானரர்களையும் அழைத்து ஸீதையைத் தேடுவதற்காக, நான்கு திக்குகளிலும் அநுப்பினார்.

71. (பொ-ரை) ஸுக்ரீவ மஹாராஜனால் நான்கு திக்குகளிலும் அநுப்பப் பட்ட வானரர்களுள் தெற்கே சென்ற சிறந்த பலமுடைய ஹனுமான், ஸம்பாதி என்னும் ஜடாயுவின் ஜ்யேஷ்டனை க்ருத்ர ராஜனை ஸந்தித்து, அவரிடம் "ஸுக்ரீவனால் ஸீதையைத் தேட அநுப்பட்ட நாங்கள் தெற்கு திக்கு முழுவதும் ஸீதையைத் தேடிப் பார்த்தும்கிடைக்கவில்லை" என்கிற வ்ருத்தாந்தத்தைச் சொல்ல, அந்த ஸம்பாதியும் ஹனுமானைப்பார்த்து "இங்கிருந்து நூறு யோஜனை விஸ்தாரமுள்ள இந்த தெற்கு ஸமுத்திரத்தின் அக்கரையில் இலங்கை என்கிற இராக்ஷஸ இராஜதானியில் ஸீதை இருக்கிறாள், ஸமுத்திரத்தைத்தாண்டும், ஸீதையைப் பார்க்கலாம்" என்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டு நூறு யோஜனை விஸ்தாரமான ஸமுத்திரத்தை ஒரே கிளைபாகத்தினால் தாண்டினார்

तत्र लङ्कां समासाद्य पुरीं रावणपालिताम्
ददर्श सीतां ध्यायन्तीमशोकवनिकां गताम् ॥ 72 ॥
निवेदयित्वाऽभिज्ञानं प्रवृत्तिं च निवेद्य च ।
समाश्वास्य च वैदेहीं मर्दयामास तोरणम् ॥ 73 ॥
पञ्च सेनाग्रगान् हत्वा सप्त मन्त्रिसुतानपि ।
शूरमक्षं च निष्पिष्य ग्रहणं समुपागमत् ॥ 74 ॥

72. (ப-ரை) (हनुमान्- ஹனுமான்), रावणपालिताम्- இராவணனால் ஆளப்பட்ட, लंकां पुरीं- இலங்கை நகரத்தை, समासाद्य- அடைந்து, तत्र- அவ்விடத்தில், अशोकवनिकां- அசோகவனம் என்கிற பூந்தோட்டத்தை, गताम्- அடைந்தும், ध्यायन्तीं- (ஸ்ரீராமனையே) த்யானம் செய்துகொண்டிருக்கிற, सीतां- ஸீதாதேவியை, ददर्श- பார்த்தார்.

73. (ப-ரை) अभिज्ञानं- அடையாளமான முத்திரை மோதிரத்தை, निवेदयित्वा- (ஸீதையிடம்) ஸமர்ப்பிவித்து, प्रवृत्तिं च- வ்ருத்தாந்தத்தையும், निवेद्य च- சொல்லியும் वैदेहीं- ஸீதையை, समाश्वास्य च- ஸமாதானம் செய்தும், तोरणम्- வெளிக்கோபுரவாசலை, मर्दयामास- இடித்தார்,

74 (ப-ரை) पञ्च सेनाग्रगान्- ஐந்து ஸேனாதிபதிகளையும், सप्त मन्त्रिसुतान् अपि- ஏழு மந்திரிகுமாரர்களையும், हत्वा- கொன்று, शूरं- சூரனான, अक्षं च- அக்ஷ குமாரனையும், निष्पिष्य- மர்த்தித்துவிட்டு, ग्रहणं- (ப்ரம்மாஸ்த்ரத்தினால்) கட்டை, समुपागमत्- அடைந்தார்.

72. (பொ-ரை) பிறகு ஹனுமான், இராவணன் ஆண்டுவருகின்ற அந்த இலங்கை நகரம் சென்று, அங்கு அசோகவனம் என்கிற அந்தப்புரத்தைச்சார்ந்த பூந்தோட்டத்தில் ஸ்ரீராமனையே நிரந்தரமாக த்யானம் செய்து கொண்டிருக்கிற ஸீதாதேவியைப்பார்த்தார்.

73. (பொ-ரை) பிறகு ஹனுமான் ஸீதைக்குக் கொடுக்கும்படி ஸ்ரீராமன் தன்னிடம் கொடுத்த ஸ்ரீராம நாமம் எழுதிய முத்திரை மோதிரத்தை, ஸீதையினிடம் ஸமர்ப்பித்து, ஸுக்ரீவனுக்கும், ஸ்ரீராமனுக்கும் நடந்த ஸ்நேஹம், ஸுக்ரீவன் வானர ஸைன்யங்களைத்திரட்டி நான்கு திக்குகளிலும் அநுப்பினது, முதலான வ்ருத்தாந்தங்களையும் தெரிவித்து, "அம்மா! ஸ்வல்ப காலத்தில் உம்முடைய பர்த்தா இங்கு வரப்போகிறார், நீர் விசாரப்படவேண்டாம்" என்று ஸீதைக்கு ஸமாதானமும் சொல்லிவிட்டு, வெளிகோபுர வாசலை இடித்தார்.

74. (பொ-ரை) பிறகு, கோபுர வாயிலை இடித்துவிட்டு, தன்னை பிடிக்கும்படி இராவணன் அநுப்பிய, ஸேனாதிபதிகள் ஐந்து பேரையும், ஜம்புமாலி முதலான மந்திரி குமாரர்கள் ஏழுபேரையும், வீரனான இராவணனுடைய இரண்டாவது குமாரனான அக்ஷனையும் கொன்று, தரையில் மர்த்தித்து பிறகு, இந்த்ரஜித்தினால் போடப்பட்ட ப்ரம்மாஸ்த்ரத்தினால் கட்டுப்பட்டார்.

अस्त्रेणोन्मुक्तमात्मानं ज्ञात्वा पैतामहाद्वरात् ।
मर्षयन् राक्षसान्वीरो यन्त्रिणस्तान्यदृच्छया ॥ 75 ॥
ततो दग्ध्वा पुरीं लङ्कामृते सीतां च मैथिलीम् ।
रामाय प्रियमाख्यातुं पुनरायान्महाकपिः ॥ 76 ॥
सोऽभिगम्य महात्मानं कृत्वा रामं प्रदक्षिणम् ।
न्यवेदयदमेयात्मा*दृष्टा सीतेति तत्त्वतः ॥ 77 ॥

75-76. (ப-ரை) वीरः- சூரனும், महाकपिः- பெரிய வானரனான ஹனுமான், पैतामहात् वरात्- ப்ரம்மாவினால் கொடுக்கப்பட்ட வரத்தினால், आत्मानं- தன்னை, यदृच्छया- (தன்னுடைய) ப்ரயத்தினமில்லாமலே, अस्त्रेण- ப்ரம்மாஸ்த்திரத்தினால், उन्मुक्तं- விடுபட்டவனாக, ज्ञात्वा- தெரிந்துகொண்டு, यन्त्रिणः- கயிற்றினால், தன்னைக்கட்டி இழுத்து வருகின்ற, राक्षसान्- இராக்கதர்களை, मर्षयन् सन्- பொறுத்துக்கொண்டு, मैथिलीम्- மிதிலை ராஜபுத்திரியான, सीतां च- ஸீதையை, ऋते- இல்லாமல் (விட்டு விட்டு) लंकां पुरीं- இலங்கா நகரத்தை, दग्ध्वा- கொளுத்திவிட்டு, रामाय- ஸ்ரீராமன் பொருட்டு, प्रियं- ப்ரியமான இந்தச்செய்தியை, आख्यातुं- சொல்லுவதற்கு, पुनः- மறுபடியும், आयात्- வந்தார்.

77. (ப-ரை) अमेयात्मा- அளவிடமுடியாத புத்தியையுடைய, सः- அந்த ஹனுமான், महात्मानं- மிக்கதீரனான, राम- ஸ்ரீராமனை, अभिगम्य- அடைந்து, प्रदक्षिणम्- ப்ரதக்ஷிணத்தை, कृत्वा- செய்து, तत्त्वतः- உள்ளபடி, सीता- ஸீதாதேவியானவள், दृष्टा- பார்க்கப்பட்டாள், इति- என்று, न्यवेदयत्- தெரிவித்தார்.

75-76. (பொ-ரை) தேவர்களாலும், அஸுரர்களாலும் ஜெயிக்கமுடியாத இராவணன் ஆண்டுவருகின்ற இலங்கா நகரத்தில் நிர்பயமாக ப்ரவேசித்து, ஸீதையுடன் வார்த்தை சொல்லி அசோகவனத்தை அழித்தது முதலான கார்யத்தினால் ப்ரஸித்தமான வீர்யத்தை உடையவரும், தன் சரீரத்திற்கு யாதொரு கேடுமில்லாமல் அநேக இராக்கதர்களை கொல்லும் பலமுடையவருமான ஹனுமான், ப்ரம்மா தனக்குக்கொடுத்த வரத்தினால், தன்னுடைய ப்ரயத்தினமில்லாமலே ப்ரம்மாஸ்த்திரம் நழுவின விஷயத்தையும் தெரிந்துகொண்டு. தன்னை கயிறுகளால் கட்டி வீதிகள்தோறும் இழுத்து, அடித்து வருகிற இராக்கதர்கள் செய்யும் சேஷ்டைகளையும் பொறுத்துக்கொண்டு, மிதிலை இராஜன் புத்திரியான ஸீதாதேவி இருக்குமிடம் தவிர இலங்கை முழுவதையும் கொளுத்தி, இந்த ப்ரியமான வ்ருத்தாந்தத்தை ஸ்ரீராமனிடம் தெரிவிக்க மறுபடியும் திரும்பிவந்துவிட்டார்.

77. (பொ-ரை) அளவிறந்த புத்தியுடைய அந்த ஹனுமான், ஸீதையை விட்டுப்பிரிந்தும் கலங்காத தைர்யத்தையுடைய ஸ்ரீராமனிடம் நேரில்சென்று, ப்ரதக்ஷிணமும் செய்து உள்ளபடி கண்டேன் ஸீதையை என்று விச்ஞாபனம் செய்துகொண்டார்

---

* இந்த ச்லோகத்தில் "दृष्टा सीता" என்னும் பதங்களை 'सीता दृष्टा" என்றும்

ततः सुग्रीवसहितो गत्वा तीरं महोदधेः ।
समुद्रं क्षोभयामास शरैरादित्यसन्निभैः ॥ 78 ॥
दर्शयामास चात्मनं समुद्रः *सरितां पतिः ।
समुद्रवचनाच्चैव नलं सेतुमकारयत् ॥ 79 ॥

78. (ப-ரை) ततः- பிறகு, (रामः- ஸ்ரீராமன்,) सुग्रीव सहितः सन्- ஸுக்ரீவனுடன் கூடிக்கொண்டு, महोदधेः- ஸமுத்திரத்தினுடைய, तीरं- கரையை, गत्वा- சென்று, आदित्यसन्निभैः- ஸூர்யனுக்கு ஸமானங்களான, शरैः- பாணங்களால், समुद्रं- ஸமுத்திரத்தை, क्षोभयामास- கலக்கினார்.

79. (ப-ரை) सरितां- நதிகளுக்கு, पतिः- பர்த்தாவான, समुद्रः- ஸமுத்திர ராஜனும், आत्मानं- தன்னை, दर्शयामास- (ஸ்ரீராமனுக்கு) காட்டினான், समुद्रवचनात् एव- ஸமுத்திர ராஜனுடைய வார்த்தையினாலேயே, नलं- நளன் என்கிற வானரனைக் (கொண்டு), सेतुं- அணையை, अकारयत् च- செய்வித்தார்.

---

78. (பொ-ரை) ஸ்ரீராமனும் ஹனுமானுடைய வார்த்தையைக்கேட்ட பிறகு, ஸமஸ்த வானர ஸைன்யங்களோடு ஸுக்ரீவ மஹாராஜனையும் அழைத்துக் கொண்டு, நூறுயோஜனை விஸ்தாரமுள்ள, ஸமுத்திரத்தின் இக்கரையில் இறங்கி ஸூர்யனுக்கு ஸமானமான பாணங்களால் சமுத்திரத்தை பாதாளம் வரையில் கலக்கிவிட்டார்.

79. (பொ-ரை) நதிகளுக்கு பர்த்தாவான, ஸமுத்திர ராஜனும், ஸ்ரீராமனிடம் நேரில்வந்து விக்ஞாபனம் செய்து கொண்டான். ஸ்ரீராமன் அந்த ஸமுத்திர ராஜனுடைய வார்த்தையினாலேயே, நளனைக்கொண்டு ஸமுத்திரத்தில் அணையையும் கட்டிவைத்தார்.

ப்ரயோகம் செய்யலாமாயிருந்தும் அப்படி செய்யாத வால்மீகியின் அபிப்ராயம் என்னவென்றால், "सीता अदृष्टा" என்று பதம் பிரித்து ஸீதையைக்காணவில்லை என்று ஸ்ரீராகவனுக்கு ஸம்சயம் உண்டாகுமென்றும், அன்றிக்கே, "सीता" என்கிற சப்தம் ஸ்ரீராமனுடைய காதில் பட்டால் உடனே, காணவில்லையென்று சொல்லுவனோ? உயிரோடு இல்லையென்று சொல்லுவனோ? என்று ஸம்சயமுண்டாகுமென்றும், அன்றிக்கே, முக்யமாக ஸீதையைத்தேடுவதற்காக தன்னை அனுப்பியபடியால் அந்தக்கார்யத்தை நிறைவேற்றிக் கொண்டுவந்துவிட்டேன், என்று ஸந்தோஷத்தினால் முதலில் "दृष्टा" கண்டேன் என்று ஹனுமான் அபிப்பிராயமென்றும் இதன் கருத்தை பலபடியாகச் சொல்லுவார்கள்.

* இங்கு "सरितां पतिः"— என்கிற விசேஷணத்தினால் க்ருஷ்ணனுடைய கோபத்தைத்தணிக்க காளியன் தன் பத்னிகளுடன்வந்ததுபோல் ஸமுத்ரராஜனும் கங்கா, கோதாவரி முதலான தன் பத்னிகளோடு வந்ததாகத் தோன்றுகிறது.

तेन गत्वा पुरीं लङ्कां हत्वा रावणमाहवे ।
रामः सीतामनुप्राप्य परां व्रीडामुपागमत् ॥ 80 ॥
तामुवाच ततो रामः परुषं जनसंसदि ।
अमृष्यमाणा सा सीता विवेश ज्वलनं सती ॥ 81 ॥
ततोऽग्निवचनात्सीतां ज्ञात्वा विगतकल्मषाम् ।
बभौ रामः संप्रहृष्टः पूजितः सर्वदैवतैः ॥ 82 ॥

---

80. (ப-ரை) रामः- ஸ்ரீராமன், तेन- அந்த அணையினால், लङ्कां पुरीं- இலங்கை நகரத்தை, गत्वा- அடைந்து, आहवे- யுத்தத்தில், रावणं- இராவணனை, हत्वा- கொன்று, सीतां- ஸீதையை, प्राप्य- அடைந்து, अनु- பிறகு, परां- அதிகமான, व्रीडां- வெட்கத்தை, उपागमत्- அடைந்தார்.

81. (ப-ரை) ततः- அந்த காரணத்தினால், रामः- ஸ்ரீராமன், तां- அந்த ஸீதையை, जनसंसदि- ஜனக்கூட்டத்தில், परुषं- கடுமையான வார்த்தையை, उवाच- சொன்னார், सती- பதிவ்ரதையான, सा सीता- அந்த ஸீதையும், अमृष्यमाणा सती- பொறுக்காதவளாய்க்கொண்டு, ज्वलनं- அக்நியை, विवेश- ப்ரவேசித்தாள்,

82. (ப-ரை) ततः- பிறகு, अग्निवचनात्- அக்நிதேவனுடைய வார்த்தையினால், सीतां- ஸீதாதேவியை, विगतकल्मषाम्- பாபமில்லாதவளாக, ज्ञात्वा- தெரிந்துகொண்டு, रामः- ஸ்ரீராமன், संप्रहृष्टः सन्- மிகவும் ஸந்தோஷமுடையவராய்க்கொண்டு, बभौ- விளங்கினார், सर्वदैवतैः- எல்லா தேவதைகளாலும், पूजितः- பூஜிக்கப்பட்டவராகவும், (बभूव- ஆனார்.)

---

80. (பொ-ரை) ஸ்ரீராமன் அந்த அணையின் வழியாக இலங்கை பட்டணம் சென்று, இராவணனை யுத்தத்தில் கொன்று, ஸீதையையும் அடைந்து, பிறகு அதிகமான வெட்கத்தையும் அடைந்தார், (நாம் ஆண்மைத்தனத்தைக்காட்டவேண்டி சத்ருவை ஸம்ஹரித்து ஸீதையை மீட்டினோம், ஆகிலும் ஒரு வருஷகாலம்வரையில் பிறர் வீட்டில் வஸித்த இவளை நாம் எப்படி அங்கீகரிப்பது என்று வெட்கம்.)

81. (பொ-ரை) ஸ்ரீராமனும், அவ்விதம் வெட்கம் கொண்டபடியால் அப்படி மஹா பதிவ்ரதையான அந்த ஸீதாதேவியைப்பார்த்து தேவர்கள் முதலானோர் நிறைந்த அந்த பெருங் கூட்டத்தில் கடுமையான சில வார்த்தைகளைப் பேசினார். பதிவ்ரதையான அந்த ஸீதையும் ஸ்ரீராமன் சொன்ன கடும் சொற்களை கேட்க ஸஹியாமல் அக்நி ப்ரவேசம் செய்துவிட்டாள்.

82. (பொ-ரை) அக்நிப்ரவேசம் செய்த பிறகு, "ஸீதையினிடத்தில், மனோ வாக்கு காயம் என்ற மூன்று கரணங்களிலும் தோஷலேசமே கிடையாதென்று" அக்நியின் வார்த்தையால் ஸ்ரீராமன் தெரிந்து கொண்டு, ஸீதையை அங்கீகரித்து பரம ஸந்தோஷத்துடன் ஸர்வதேவதைகளாலும் கொண்டாடப்பட்டு விளங்கிக் கொண்டிருந்தார்.

कर्मणा तेन महता त्रैलोक्यं सचराचरम् ।
सदेवर्षिगणं तुष्टं राघवस्य महात्मनः ॥ 83 ॥
अभिषिच्य च लङ्कायां राक्षसेन्द्रं विभीषणम् ।
*कृतकृत्यस्तदा रामो विज्वरः प्रमुमोद ह ॥ 84 ॥

---

83. (ப-ரை) महात्मनः- பெருந்தன்மையுடைய, राघवस्य- ஸ்ரீராகவனுடைய, महता- பெரிதான, तेन कर्मणा- இராவண வதமென்கிற அந்த கார்யத்தினால், सचराचरम्- ஜங்கம ஸ்தாவரங்களோடு கூடியும், सदेवर्षिगणं- தேவர்கள், ரிஷிகள் இவர்களுடைய கூட்டங்களுடன் கூடியுமிருக்கிற, त्रैलोक्यं- மூன்று உலகமும், तुष्टं- ஸந்தோஷமுடையதாக, (आसीत्- இருந்தது.)

84. (ப-ரை) (रामः- ஸ்ரீராமன்). विभीषणम्- விபீஷணனை, लङ्कायां- இலங்கா பட்டணத்தில், राक्षसेन्द्रं- இராக்கதர்களுக்கு அரசனாக, अभिषिच्य च- பட்டாபிஷேகம் செய்தே, कृतकृत्यः- க்ருதக்ருத்யராக ஆனார், तदा- அப்பொழுதுதான், रामः- அழகான வர்ணமுடையவராக ஆனார், विज्वरः- மனதிலிருந்த தாபத்தை விட்டவராகவும் ஆனார், प्रमुमोद- விசேஷமாக ஸந்தோஷத்தையும் அடைந்தார், ह- ஆச்சர்யம்!

---

83. (பொ-ரை) பெருந் தன்மையுடைய ஸ்ரீராமன் செய்த அந்த இராவண வதமென்கிற பெரிய கார்யத்தினால் செடி, மரம் முதலான ஸ்தாவரங்களோடும், ஜங்கமங்களோடும், தேவ ரிஷி கூட்டங்களோடும் கூடிய மூன்று உலகமும் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தது.

84. (பொ-ரை) ஸ்ரீராமன் கள்ளிக்காட்டை அழித்து கடுமாமரத்தை வைப்பதுபோல் பெரும்படையோடு இராவணனை ஸம்ஹரித்து அந்த இராஜ்யத்தில் இராக்கத இராஜாவாக விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்தபிறகுதான் க்ருத க்ருத்யராக ஆனார்.

(இங்கு ஸ்தாவரங்களுக்கு ஸந்தோஷமாவது:-விசேஷமாக தளிர் முதலானது உண்டாவது தான்.)

* "कृतकृत्यः" என்றால் செய்யவேண்டிய கார்யத்தை செய்து முடித்தவன்.

இங்கு "च" என்கிற பதத்திற்கு एव காரார்த்தம், அதாவது:—விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்த பிறகே க்ருதக்ருத்யரானார் என்று சேர்த்துக்கொள்ளுதல், அதன் பிறகுதான் ஸ்ரீராமன் ஆனார்- அதாவது:- "ஸமுத்ரத்தின் கரையில் விபீஷணன் சரணாகதி பண்ணும் காலத்தில் அவருக்கு இலங்கா இராஜ்யத்தைக் கொடுப்பதாக பட்டாபிஷேகம் செய்து விட்டோமே அது எப்படி ஆகுமோ, நூறு யோஜனை தூரமான கடலைத்தாண்டி, மஹாமாயாவிகளான இந்திரஜித்து முதலானவர்களை ஸம்ஹரித்து மூன்று லோகங்களையும் கதறச்செய்கின்ற இராவணனையும் ஸம்ஹரித்தாலன்றோ விபீஷணனுக்கு இலங்கா இராஜ்யத்தைக் கொடுக்க முடியும்" என்கிற மனதில் விசாரத்தினால் தேஹத்தின் ஒளி மாறியிருந்தது, [illegible]

देवताभ्यो वरं प्राप्य समुत्थाप्य च वानरान् ।
अयोध्यां प्रस्थितो रामः पुष्पकेण सुहृद्वृतः ॥ 85 ॥

85. (ப-ரை) रामः- ஸ்ரீராமன், देवताभ्यः- தேவர்களிடமிருந்து, वरं- வரத்தை, प्राप्य- அடைந்து, वानरान्- வானரங்களை, समुत्थाप्य- எழுப்பிக்கொண்டு, सुहृद्वृतः- ஸ்நேஹிதர்களால் சூழப்பட்டு, पुष्पकेण- புஷ்பகவிமானத்தினால், अयोध्यां- அயோத்யா நகரத்தைக்குறித்து, प्रस्थितः- புறப்பட்டார்.

85. (பொ-ரை) ஸ்ரீராமனும், இராவணஸம்ஹாரத்தை ச்லாகிக்கவந்த தேவர்களிடமிருந்து வரங்களைப்பெற்று இவ்வரங்களினால் யுத்தத்தில் மறித்திருந்த வானரவீரர்களையெல்லாம் தூங்கினவனைத் தட்டி எழுப்புவதுபோல் பிழைப்பித்து எழுப்பிக்கொண்டு ஸுக்ரீவன் விபீஷணன் முதலான ஸ்நேஹிதர்களுடன்கூட புஷ்பக விமானத்தின் மேலேறிக்கொண்டு அயோத்யா நகரம் செல்ல புறப்பட்டார்.

எண்ணிய கார்யங்களெல்லாம் முடித்து விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்தபடியால் திருமேனியில் ஸ்வாபாவிகமான காந்தி உண்டாயிற்று என்று தாத்பர்யம்.

विज्वरः- மனதில் ஒருவருத்தமிருந்தது. அதாவது:—பரதனுக்கு இராஜ்யத்தைக் கொடுக்கும் காலத்தில் தேவரீர் கைங்கர்யத்திற்கு விரோதமானதால் எனக்கு அந்த இராஜ்யம் வேண்டாமென்று அவன் சொல்லிவிட்டது போல், விபீஷணனும் ஒரு ஸமயம் வேண்டாமென்று சொல்லிவிட்டால் நாம் என்ன செய்கிறது, என்று பெரிய விசாரம் ஸ்ரீராமன் திருவுள்ளத்திலிருந்தது, அது இப்பொழுதுதான் நீங்கியது.

அல்லது:—वि என்றால் பக்ஷி, ज्वर- என்றால் மனதில் வருத்தம், அதாவது, ஜடாயு விஷயமான மனவருத்தம். உலகத்தில் ஒரு பிதாவுக்கு இரண்டு மூன்று பிள்ளைகள் இருந்து ஒருவன் லோகாந்தரம் போய்விட்டால் மற்ற பிள்ளைகளுக்கு சுபாதி கார்யங்கள் நடக்கும் காலத்தில் போன பிள்ளையின் நினைவு உண்டாகி கொஞ்சம் மனதில் கலக்கம் உண்டாவது வழக்கம். அதுபோல் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணும் காலத்தில், முன் ஸீதையை இராவணன் அபஹரித்துப் போகும் காலத்தில் நமக்காக அவனுடன் போர்புரிந்து உபகாரம் செய்த அந்த ஜடாயு உயிருடன் இருந்தால் அவருக்கும் பட்டாபிஷேகம் செய்திருக்கலாம் அது இல்லாமல் போய்விட்டது, என்று ஜடாயுஸ் விஷயமான கொஞ்சம் மனவருத்தத்துடன் இருந்தார் என்றும். विज्वर- என்ற பதத்தினால் அநிஷ்ட நிவ்ருத்தி சொல்லப்பட்டது என்றும், "प्रमुमोद" என்கிற பதத்தினால் இஷ்டப்ராப்தி சொல்லப்பட்டது என்றும் சொல்லலாம், இங்கு 'ह' என்கிற பதம் ப்ரஸித்தியைக்காட்டுகிறதென்றும், ஆச்சர்யத்தைக்காட்டுகிறதென்றும், சொல்லலாம். அதாவது ஸ்ரீராமன் தான் செய்த ப்ரதிஜ்ஞையை தவறாமல் செய்துவிட்டார் என்று ஆச்சர்யம்.

भरद्वाजाश्रमं गत्वा रामः सत्यपराक्रमः ।
भरतस्यान्तिकं रामो हनूमन्तं व्यसर्जयत् ॥ 86 ॥
पुनराख्यायिकां जल्पन् सुग्रीवसहितस्तदा ।
पुष्पकं तत्समारुह्य नन्दिग्रामं ययौ तदा ॥ 87 ॥

86. (ப-ரை) सत्यपराक्रमः- ஸத்தியத்தில் பராக்ரமமுடையவரான, रामः- ஸ்ரீராமன், भरद्वाजाश्रमं- பரத்வாஜருடைய ஆச்ரமத்தை, गत्वा- அடைந்து, भरतस्य- பரதனுடைய, अन्तिकं- ஸமீபத்தைக்குறித்து, हनूमन्तं- ஹனுமானை, व्यसर्जयत्- அனுப்பினார்.

87. (ப-ரை) (सः- அந்த ஸ்ரீராமன்,) सुग्रीवसहितः सन्- ஸுக்ரீவனோடு சேர்ந்துகொண்டு, तत् पुष्पकं- அந்த புஷ்பக விமானத்தை, समारुह्य- ஏறி, तदा- அந்த ஸமயத்தில், आख्यायिकां- முன் நடந்த கதையை, पुनः- அடிக்கடி, जल्पन् सन्- சொல்லிக்கொண்டு, नन्दिग्रामं- நந்திக்கிராமத்தை, तदा- அப்பொழுதே, ययौ- அடைந்தார்.

86. (பொ-ரை) ஸத்தியத்தில் பராக்கிரமமுடைய ஸ்ரீராமன் பரத்வாஜ ரிஷியின் ஆச்ரமம் வந்து, பரதனிடம் போய் தாம் வந்த செய்தியை தெரிவிக்க ஹனுமானை அனுப்பினார்.

87. (பொ-ரை) ஸ்ரீராமன் இந்த புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு ஸுக்ரீவனுடன் வரும்பொழுதே முன் நடந்த தன் கதையையும், பரதன் விஷயமான கதையையும், சொல்லிக்கொண்டே அதிசீக்ரமாக நந்திக்ராமம் வந்து சேர்ந்தார்.

सत्यपराक्रमः- என்கிற பதத்திற்கு, பரத்வாஜ மஹரிஷியின் ஆச்ரமத்திற்கு ஸ்ரீராமன் எழுந்தருள அவரும் இன்றையதினம் அவச்யம் நீர் இவ்விடத்திலேயே இருந்துவிட்டு நாளைப்போகலாமென்று ப்ரார்த்திக்க, அன்றைதினத்தோடு பதினான்கு வருஷம் முடிந்தபடியால் பதினைந்தாவது வருஷம் ஆரம்பதினத்தில் வந்துவிடுகிறேனென்று பரதனுக்குத் தாம் செய்திருந்த ப்ரதிஜ்ஞை ஸத்யமாகவே இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால் தாம் எழுந்தருளுவதற்கு பதிலாக தாம் எழுந்தருளின வ்ருத்தாந்தத்தை பரதனுக்கு ஹனுமான் மூலமாய் தெரிவிக்கிறார். என்பது தாத்பர்யம்.

नन्दिग्रामे जटां हित्वा भ्रातृभिः सहितोऽ*नघः ।
रामः सीतामनुप्राप्य राज्यं पुनरवाप्तवान् ॥ ८८ ॥

88. (ப-ரை) अनघः- குற்றமில்லாதவராயும், भ्रातृभिः सहितः- ப்ராதாக்களோடு கூடியுமிருக்கிற, रामः- ஸ்ரீராமன், नन्दिग्रामे- நந்திக்ராமத்தில், जटां- ஜடையை, हित्वा- சோதனம் செய்துகொண்டு, सीतां- ஸீதையை, अनुप्राप्य- ஸமீபத்தில் வைத்துக் கொண்டு, पुनः- மறுபடியும், राज्यं- இராஜ்யத்தை, अवाप्तवान्- அடைந்தார்.

88. (பொ-ரை) பித்ருவசனத்தை உள்ளபடி பரிபாலனம் செய்து அதனால் குற்றமற்றவரான ஸ்ரீராமன், பரதன், சத்ருக்னன் இலக்ஷ்மணன் என்ற மூன்று ஸஹோதரர்களுடன் சேர்ந்துகொண்டு, நந்திக்ராமத்தில் ஜடா சோதனம் செய்து கொண்டு, மங்கள ஸ்நானமும் செய்து இராஜார்ஹமான வஸ்த்ர ஆபரணங்களையும் அணிந்து அத்யுத்தமமான சந்தன புஷ்பங்களையும் சாத்திக்கொண்டு, ஸர்வாலங்கார பூஷிதையான ஸீதையுடன் திவ்ய ஸிம்மாஸனத்தில் எழுந்தருளியிருந்து பட்டாபிஷேகம் கொண்டருளி மறுபடி இராஜ்யத்தை அடைந்தார்.

* अनघः, अघ- என்றால் பாபத்திற்கும், துக்கத்திற்கும் பெயர். பித்ரு வசனத்தை க்ரமமாக பரிபாலித்தபடியால் பாபமில்லாதவரென்றும், சித்ரகூடத்தில் வஸிக்கும் பொழுது அயோத்யா நகரத்து ஸமஸ்த ஜனங்களுடன் பரதன் வந்து "நகரம் எழுந்தருள வேணும்" என்று ப்ரார்த்தித்தும் அந்த ஸமயம் அப்படி செய்ய முடியாமல் போய் தமக்கு பதிலாக தம் பாதுகைகளை பரதனுக்கு எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து பரதனை திருப்பிவிட்டார், அன்று முதல் ஸ்ரீராமனுடைய திருவுள்ளத்தில் இவ்வளவு ஜனங்களுடன் பரதன் ப்ரார்த்தித்தும் அவன் இஷ்டப்படி செய்யாமலிருந்துவிட்டேனே என்று பெரிய வ்யஸனம் இருந்தது, இப்பொழுது பரதனோடு சேர்ந்தபடியால் அந்த வ்யஸனமில்லாதவர் என்றும் சொல்லலாம்.

सीतां अनु प्राप्य- என்கிற விடத்தில் ஸீதைக்கு தகுந்தபடி இருந்து, என்னும் அர்த்தம், அதாவது:—லோகோத்தர ரூபவதியான ஸீதைக்கு இதுவரையிலிருந்த ஸ்ரீராமனுடைய ஜடிலவேஷமானது பொருந்தவில்லையென்றும், இப்பொழுது ஜடா சோதனம் முதலியவைகளை செய்துகொண்டிருக்கிறபடியால் ஸீதையின் ரூபத்திற்கு தகுந்தது என்றும் சொல்லலாம்.

राज्यं पुनः अवाप्तवान्- ஏற்கனவே பிதாவின் வார்த்தையினால் கிடைத்திருந்த இராஜ்யத்தை இப்பொழுது மறுபடியும் அடைந்தார் என்று தாத்பர்யம்.

प्रहृष्टमुदितो लोकस्तुष्टः पुष्टः *सुधार्मिकः ।
निरामयो ह्यरोगश्च दुर्भिक्षभयवर्जितः ॥ 89 ॥
न पुत्रमरणं किंचिद्द्रक्ष्यन्ति पुरुषाः क्वचित् ।
नार्यश्चाविधवा नित्यं भविष्यन्ति पतिव्रताः ॥ 90 ॥

89 (ப-ரை) तदा- அப்பொழுது, लोकः- ஜனமானது, प्रहृष्टः- மயிர்க்கூச்சலெறிந்ததாகவும், मुदितः- மனதில் ஸந்தோஷமுடையதாகவும், तुष्टः- சரீர புஷ்டியுடையதாகவும், सुधार्मिकः- சுத்தமான தர்மத்தை அநுஷ்டிக்கின்றதாகவும், निरामयः- சரீரத்தின் ரோகமில்லாததாயும், अरोगः च- மனதில் சிந்தையில்லாததாயும், दुर्भिक्षभयवर्जितः- துர்பிக்ஷத்தினலுண்டான பயமில்லாததாயும், (आसीत- இருந்தது.)

*90. (ப-ரை) पुरुषाः- புருஷர்கள், क्वचित्- ஒரு தேசத்திலும், किंचित्- கொஞ்சமும், पुत्रमरणं- புத்திரனுடைய மரணத்தை, न द्रक्ष्यन्ति- பார்க்கப்போகிறதில்லை. नार्यः च- ஸ்த்ரீகளும், नित्यं- எப்பொழுதும், अविधवाः- விதவைகளல்லாதவர்களாயும், पतिव्रताः- பதிவ்ரதைகளாகவும், भविष्यन्ति- இருக்கப்போகிறார்கள்.

89. (பொ-ரை) அவ்விதம் ஸ்ரீராகவன் பட்டாபிஷேகம் கொண்டருளி, இராஜ்ய பரிபாலனம் செய்யுங்காலத்தில், உலகத்திலுள்ள ஸமஸ்த ஜனங்களும், மனதில் ஸந்தோஷத்துடன் தேஹம் முழுவதும் மயிர்கூச்சல் எறிந்துகொண்டு, ஸமஸ்தமான மனோரதங்களும் கைகூடினபடியால் பரமானந்தமுடையவர்களாய், ஸ்ரீராமனை விட்டுப்பிரிந்த பதினான்கு வருஷகாலமாக இளைத்திருந்த சரீரம் முழுவதிலும் புஷ்டியை அடைந்து, ஸ்ரீராம பக்தியுடன் தங்கள் தங்கள் வர்ணாச்ரம தர்மங்களைச் செய்துகொண்டும், மனதில் ஒரு விதமான கவலையுமில்லாமல் ஜ்வரம் முதலாகிய சரீர வ்யாதிகளுமில்லாமல் அந்தந்த காலங்களில் மழைகள் பெய்து யதேஷ்டமாக தான்ய ஸம்ருத்திகள் உண்டாயிருக்கிறபடியால் துர்பிக்ஷ பயமோ இல்லாதவர்களாய் இருந்தார்கள்.

90. *(பொ-ரை) ஸ்ரீராமன் இராஜ்ய பரிபாலனம் பண்ணும் காலத்தில் புருஷர்கள் ஒரு தேசத்திலும் ஒரு ஸமயத்திலாவது புத்திர மரணத்தை பார்க்கப் போகிறதில்லை, ஸ்த்ரீகள் எப்பொழுதும் விதவைகள் அல்லாதவர்களாயும், பதிவ்ரதைகளாகவும் இருக்கப்போகிறார்கள்.

---

* सुधार्मिकः- (सुष्टु धर्मं चरति इति सुधार्मिकः) தர்மமாவது:—வர்ணாச்ரம தர்மம், அதற்கு நன்மையாவது:—ஸ்ரீராம பக்திபூர்வகமாய் பலாந்தரத்தை அபேக்ஷிக்காமல் அநுஷ்டிக்கை, இதனால் ஸமஸ்த கைங்கர்ய லாபமும்,

निरामयः अरोगः- என்பதினால், கைங்கர்யத்தின் விரோதி நிவ்ருத்தியும், दुर्भिक्षभयवर्जितः- என்பதினால் கைங்கர்ய உபகரணத்தின் ஸம்ருத்தியும் சொல்லப்பட்டது.

न चाग्निजं भयं किंचिन्नाप्सु मज्जन्ति जन्तवः ।
न वातजं भयं किंचिन्नापि ज्वरकृतं तथा ॥ 91 ॥
न चापि क्षुद्भयं तत्र न तस्करभयं तथा ।
नगराणि च राष्ट्राणि धनधान्ययुतानि च ॥ 92 ॥
नित्यं प्रमुदिताः सर्वे यथा कृतयुगे तथा ।
अश्वमेधशतैरिष्ट्वा तथा बहुसुवर्णकैः ॥ 93 ॥
गवां कोट्ययुतं दत्त्वा ब्रह्मलोकं प्रयास्यति ॥ 94 ॥

91. (ப-ரை) तत्र- அந்த இராஜ்யத்தில், अग्निजं- அக்நியினால் உண்டான, भयं- பயமானது, किंचित्- கொஞ்சமும், न- இல்லை, जन्तवः- ப்ராணிகள், अप्सु- தண்ணீரில், न मज्जन्ति- விழுந்து மறிக்கிறதில்லை, वातजं- காற்றினாலுண்டான, भयं- பயமானது, किंचित् अपि- கொஞ்சமும், न- இல்லை, तथा- அப்படியே, ज्वरकृतं- ஜ்வரத்தினாலுண்டான (भयं- பயம், न- இல்லை), क्षुद्भयं चापि- பசியினாலுண்டான பயமும், (न- இல்லை), तथा- அப்படியே, तस्करभयं- திருடர்களினால் பயமும், न- இல்லை.

92. (ப-ரை) नगराणि-பட்டணங்களும், राष्ट्राणि च- தேசங்களும், धनधान्ययुतानि च- தனங்களோடும் தான்யங்களோடும் கூடினவைகளாக, (भविष्यन्ति- இருக்கப் போகின்றன), सर्वे- எல்லா ஜனங்களும், कृतयुगे- க்ருத யுகத்திலே, यथा- எப்படியோ, तथा- அப்படியே, नित्यं- எப்பொழுதும், प्रमुदिताः- ஸந்தோஷமுடையவர்களாக, (भविष्यन्ति- இருக்கப்போகிறார்கள்.)

93-94. महायशाः- பெரும் கீர்த்தியையுடையவரான, ஸ்ரீராமன் अश्वमेधशतैः- அநேக அச்வமேதயாகங்களாலும், तथा- அப்படியே, बहुसुवर्णकैः- பஹுஸுவர்ணகம் என்கிறயாகங்களினாலும். इष्ट्वा- தேவதைகளை ஆராதித்து, ब्राह्मणेभ्यः- ப்ராம்மணர்களின் பொருட்டு, गवां- பசுக்களுடைய, कोटि अयुतं- பதினாயிரம் கோடிகளையும், दत्त्वा- கொடுத்து, असङ्ख्येयं- கணக்கில்லாத. धनं தனத்தையும், दत्त्वा- கொடுத்து, ब्रह्मलोकं- ப்ரம்மலோகத்தை. प्रयास्यति- அடையப்போகிறார்.

---

91. (பொ-ரை) அந்த இராஜ்யத்தில் நெருப்பு பயம் கொஞ்சமும் கிடையாது, ஒரு ப்ராணிகளும் தண்ணீரில் விழுந்து மறிக்கிறதில்லை, காற்றினாலுண்டான பயம் கொஞ்சமும் கிடையாது, அவ்விதமே, ஜ்வரத்தினாலுண்டான பயமும் பசியினாலுண்டான பயமும், திருடர்களினாலுண்டான பயமும் கிடையாது.

92. (பொ-ரை) எல்லா நகரங்களும், தேசங்களும், தனதான்யங்களால் நிறைந்தும், நகரத்து ஜனங்களும், தேசத்து ஜனங்களும் எல்லோரும் க்ருத யுகத்தில் ஸந்தோஷித்திருப்பதுபோல் இந்த த்ரேதா யுகத்திலும் எப்பொழுதும் ஸந்தோஷமுள்ளவர்களாக இருப்பார்கள்.

93-94 (பொ-ரை) இவ்விதம் ஸ்ரீராகவன் ப்ரஜைகளை பரிபாலனம் பண்ணி

असङ्ख्येयं धनं दत्वा ब्राह्मणेभ्यो महायशाः ।
राजवंशाञ्छतगुणान्स्थापयिष्यति राघवः ॥ 95 ॥
चातुर्वर्ण्यं च लोकेऽस्मिन्स्वे स्वे धर्मे नियोक्ष्यति ।
दशवर्षसहस्राणि दशवर्षशतानि च ॥ 96 ॥

95. (ப-ரை) राघवः- ஸ்ரீராமன், अस्मिन् लोके- இந்த உலகத்தில், शतगुणान्- நூறுமடங்கு வ்ருத்தியாயிருக்கின்ற, राजवंशान्- அரசர்களின் வம்சங்களை, स्थापयिष्यति- ஸ்தாபிக்கப்போகிறார், चातुर्वर्ण्यं च- நான்கு வர்ணத்தையும், स्वे स्वे धर्मे- தங்கள் தங்கள் தர்மத்தில், नियोक्ष्यति- நியமிக்கப்போகிறார்.

96. (ப-ரை) रामः- ஸ்ரீராமன், दशवर्षसहस्राणि- பதினாயிரம் வருஷங்களும், दशवर्षशतानि च- ஆயிரம் வருஷங்களும், राज्यं- இராஜ்யத்தை, उपासित्वा- உபாஸித்து, ब्रह्मलोकं- ப்ரம்ம லோகத்தை, गमिष्यति- அடையப்போகிறார்.

அதனால் பெரும் கீர்த்தியை அடைந்து, அநேக அச்வமேத யாகங்களையும், பஹுஸுவர்ணகம் என்கிற யாகங்களையும் செய்து, ப்ராம்மணர்களுக்கு பதினாயிரம்கோடிக் கணக்கான பசுக்களையும், அளவிறந்த தனங்களையும் தானம் செய்து, ப்ரம்ம மென்று வேதங்களில் சொல்லப்பட்ட தான் நித்யமாக எழுந்தருளியிருக்கின்ற அப்ராக்ருத ஸ்தானமான பரம பதத்தை அடையப்போகிறார்.

95. (பொ-ரை) ஸ்ரீராகவன், இவ்வுலகத்தில் அநேகர் களாக வ்ருத்தி அடைந்திருக்கின்ற இராஜவம்சத்து ஜனங்களை அவரவர்களுக்கு தனித்தனியாக இராஜ்யங்களைப்பிரித்துக்கொடுத்து ஆண்டுவரும்படி செய்யப்போகிறார், ப்ராம்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர என்கிற நான்கு வர்ணத்தாரையும் அவரவர்கள் வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் உரிய தர்மங்களை தவறாமல் செய்துவரும்படியும் செய்யப்போகிறார்.

96. (பொ-ரை) ஸ்ரீராமன் பதினோராயிரம் வருஷம் இராஜ்ய பரிபாலனம் செய்து வந்து பிறகு ஸ்ரீவைகுண்டம் செல்லப்போகிறார்.

இங்கு उपासित्वा- என்கிற பதம் ப்ரயோகித்தபடியால், ப்ரஜாபாலனம் எவ்வளவு நியமத்துடன் செய்யவேணுமோ, அவ்விதம் இராஜ்ய பரிபாலனம் செய்தாரென்று தாத்பர்யம்.

रामो राज्यमुपासित्वा ब्रह्मलोकं गमिष्यति ।
इदं पवित्रं पापघ्नं पुण्यं वेदैश्च संमितम् ॥ 97 ॥
यः पठेद्रामचरितं सर्वपापैः प्रमुच्यते ।
एतदाख्यानमायुष्यं पठन्रामायणं नरः ॥ 98 ॥
सपुत्रपौत्रः सगणः प्रेत्य स्वर्गे महीयते ॥ 99 ॥

97. (ப-ரை) यः- யாதொருவன், पवित्रं- பரிசுத்திகரமாயும், पापघ्नं- பாபத்தைப்போக்குகின்றதாயும், पुण्यं- புண்யத்திற்கு ஸாதனமாயும், वेदैः- நான்கு வேதங்களோடு, संमितम् च- ஒப்பாயுமிருக்கிற, इदं- இந்த, रामचरितं- ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை, पठेत्- படிப்பனோ, (सः- அவன்), सर्वपापैः- எல்லா பாபங்களினுலும் प्रमुच्यते- விடப்படுகிறான்.

98-99. (ப-ரை) आयुष्यं- ஆயுஸ்ஸை வளர்க்கக்கூடிய, आख्यानं- பழைய கதையான, एतत् रामायणं- இந்த பால ராமாயணத்தை, पठन्- படிக்கின்ற, नरः- மனிதன் सपुत्रपौत्रः- புத்திரர்களோடும், பௌத்திரர்களோடும் கூடியும், सगणः- பந்து, தாஸர்கள் முதலான கூட்டங்களோடும் (வாழ்ந்திருந்து), प्रेत्य- சரீர முடிவான காலத்தில் स्वर्गे- ஸ்வர்க்கத்தில், महीयते- பூஜிக்கப்படுகிறான்.

97. (பொ-ரை) பரிசுத்திகரமாயும், பாபத்தைப்போக்குகின்றதும், புண்ய ஸாதனமாயும், நான்கு வேதங்களுக்கும் ஸமானமுமான இந்த ஸம்க்ஷேபரூபமான ஸ்ரீராமசரித்திரத்தை, எவன் வேதம்போல் நியமத்துடன் ப்ரதிதினமும் படிக்கின்றானோ, அவன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

98-99. (பொ-ரை) முன்னடந்த கதையான இந்த ஸம்க்ஷேப ஸ்ரீராமாயணத்தை படிக்கின்ற மனிதன், புத்திர பௌத்திரர்களோடும், பந்து வர்க்கங்களோடும் நெடுநாள் உலகத்தில் வாழ்ந்திருந்து சரீரம் விட்ட பிறகு ஸ்வர்க்கம் என்று சொல்லப்படுகிற பரம பதத்தில் நித்யஸூரிகளால் கொண்டாடப்படுகிறான்.

पठन् द्विजो वागृषभत्वमीयात्स्यात्क्षत्रियो भूमिपतित्वमीयात् ।
वणिग्जनः पण्यफलत्वमीयाज्जनश्च शूद्रोपि महत्त्वमीयात् ॥ 100 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे श्रीरामायणकथासंक्षेपो नाम
प्रथमः सर्गः ॥ 1 ॥

100. (ப-ரை) (इदं- இந்த பாலராமாயணத்தை), पठन्- படிக்கிறவன், द्विजः (यदि)- ப்ராம்மணனாகவிருந்தானேயானால், वागृषभत्वं- வாக்கில் சிறந்தவனாயிருப்பதை, ईयात्- அடைவான், क्षत्रियः- स्यात्- க்ஷத்ரியனாக இருந்தானேயானால், भूमिपतित्वं- சக்ரவர்த்தியாய் இருப்பதை, ईयात्- அடைவான், वणिग्जनः- (यदि)- வைச்யனாக இருந்தானேயானால், पण्यफलत्वं- விலையுயர்ந்த வஸ்துக்களின் லாபம் உடையவனாயிருப்பதை, ईयात्- அடைவான், शूद्रः अपि जनः- சூத்ரஜனமாக விருந்தானேயானால், महत्त्वं- (தன் இனத்தாரில்) பெருந்தன்மையை, ईयात्- அடைவான்.

100. (பொ-ரை) இந்த ஸம்க்ஷேப ராமாயணத்தைப் படிக்கிற ப்ராம்மணன், வேதவேதாந்த பாரங்கதனாகவும், க்ஷத்ரியன் அகண்ட மண்டலாதிபதியாயும், வைச்யன் அளவிறந்த விலையுயர்ந்த வஸ்துக்களின் லாபத்தை அடைந்தவனாயும், சூத்ரன் தன் இனத்தாரில் பெருந்தன்மை உடையவனாகவும் ஆவான்.

இங்கு स्यात्- என்று அல்ப என்கிற அர்த்தத்தை சொல்லுகிற அவ்யயமான பதம், அப்பொழுது स्यात् क्षत्रियः-स्यात्. द्विजः-स्यात् वणिग्जनः-स्यात् शूद्रजनः- என்று சேர்த்துக்கொள்ளும்பொழுது அல்பனான ப்ராம்மணன், வேதவேதாந்த பாரங்கதனாகவும் அல்பனான க்ஷத்ரியன் அகண்டமண்டலாதிபதியாகவும், அல்பனான வைச்யன் பெரிய வ்யாபாரியாகவும், அல்பனான சூத்ரன் மிகவும் மேன்மையுடையவனாகவும், ஆகிறான் என்றும் சொல்லலாம். அல்லது.

स्यात् என்கிறசப்தம், कथंचित्- என்கிற பர்யாயமாய் அதாவது சாஸ்த்ரத்தில் சொல்லிய நியமமில்லாமல் படித்தாலும், அல்லது ஏகதேசத்தைப் படித்தாலும் அவரவர்களுக்கு கீழ் சொல்லிய பலன்கள் உண்டாகும் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

द्वितीयः सर्गः ॥ 2 ॥

नारदस्य तु तद्वाक्यं श्रुत्वा वाक्यविशारदः ।
पूजयामास धर्मात्मा सहशिष्यो महामुनिः ॥ 1 ॥
यथावत्पूजितस्तेन देवर्षिर्नारदस्तदा ।
आपृष्ट्वैवाभ्यनुज्ञातः स जगाम विहायसम् ॥ 2 ॥

1. (ப-ரை) नारदस्य- நாரதருடைய, तत्- அந்த, वाक्यं तु- வாக்யத்தை, श्रुत्वा- கேட்டு, वाक्यविशारदः- வார்த்தையில் கெட்டிக்காரரும், धर्मात्मा- தர்மத்தில் புத்தி உடையவருமான, महामुनिः- மஹிமை பொருந்திய முனியான ஸ்ரீ வால்மீகி, सहशिष्यः- சிஷ்யர்களுடன் கூடினவராய்க்கொண்டு, पूजयामास- பூஜித்தார்.

2. (ப-ரை) देवर्षिः- தேவரிஷியான, नारदः- நாரதரும், तेन- அந்த வால்மீகி மஹர்ஷியினால், यथावत्- க்ரமப்படி, पूजितः सन्- பூஜிக்கப்பட்டவராய்க்கொண்டு, तदा- அப்பொழுது, आपृष्ट्वा एव- கேட்டுக்கொண்டு, अभ्यनुज्ञातः- (அவரால்) அநுமதி செய்யப்பட்டவராய், विहायसम्- ஆகாசத்தை, जगाम- அடைந்தார்.

1. (பொ-ரை) நாரதர் உபதேசித்த அந்த ஸம்க்ஷேபரூபமான வார்த்தையைக்கேட்டு, வார்த்தையின் ஸ்வாரஸ்யத்தை அறிவதில் கெட்டிக்காரரும், குருசிச்ரூஷை என்கிற தர்மத்தில் மனமுடையவருமான வால்மீகி மஹாமுனி, சிஷ்யர்களுடன் அந்த வார்த்தையை ச்லாகித்தார்.

2. (பொ-ரை) தேவரிஷியான நாரதரும், அந்த வால்மீகி மஹரிஷியினால் க்ரமப்படி ப்ரதக்ஷிணநமஸ்காரம் முதலியவைகளால் பூஜிக்கப்பட்டு, பூஜையின் முடிவில் அவரிடம் சொல்லிக்கொண்டு அநுமதியும் பெற்று ஆகாசத்தில் சென்றார்.

இங்கு து என்கிற பதம் வைலக்ஷண்யத்தைச்சொல்லுகிறது. இது காகாக்ஷிந்யாயத்தினால் "नारदस्य" என்கிற பதத்தினோடும், "तद्वाक्यं" என்கிற பதத்தினோடும் சேர்ந்து, த்ரிலோகஜ்ஞானியாகையால் நாரதர் மற்ற முனிகளைக்காட்டிலும் சிறந்தவரென்றும், அவருடைய வாக்யம் சப்தத்தினாலும், அர்த்தத்தினாலும், மற்றவர் வாக்யங்களைக்காட்டிலும் சிறந்ததென்றும் தெரிவிக்கிறது.

स मुहूर्तं गते तस्मिन्देवलोकं मुनिस्तदा ।
जगाम तमसातीरं जाह्नव्यास्त्वविदूरत: ॥ 3 ॥
स तु तीरं समासाद्य तमसाया मुनिस्तदा ।
शिष्यमाह स्थितं पार्श्वे दृष्ट्वा तीर्थमकर्दमम् ॥ 4 ॥
अकर्दममिदं तीर्थं भरद्वाज निशामय ।
रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा ॥ 5 ॥

3. (ப-ரை) तस्मिन्- அந்த நாரத மஹரிஷி, मुहूर्तं- கொஞ்ச காலத்தில், देवलोकं- ப்ரம்மலோகத்தைக்குறித்து, गते सति- போனவளவில், स: मुनि:- அந்த வால்மீகி மஹரிஷியும், तदा- அப்பொழுதே, जाह्नव्या:- கங்காநதியினுடைய, अविदूरत:- ஸமீபத்தில், (स्थितं- இருக்கிற), तु- மிகவும் சிறந்ததான, तमसातीरं- தமஸா நதியின் கரையை, जगाम- சென்றார்.

4. (ப-ரை) स: महामुनि:- அந்த வால்மீகி மஹரிஷி, तमसाया:- தமஸா நதியினுடைய, तु- விலக்ஷணமான, तीरं- கரையை, आसाद्य- அடைந்து, तदा- அப்பொழுது, अकर्दमम्- சேறு இல்லாமலிருக்கிற, तीर्थं- இறங்கு துறையை, दृष्ट्वा- பார்த்து, पार्श्वे- பக்கத்தில், स्थितं- இருக்கின்ற, शिष्यं- சிஷ்யனை, (பார்த்து), आह- சொன்னார்.

5. (ப-ரை) हे भरद्वाज- பரத்வாஜரே! अकर्दमं- சேறு இல்லாததாயும், (பாபமில்லாததாயும்,) प्रसन्नाम्बु- தெளிந்த ஜலமுடையதாயும், रमणीयं- மிகவும் அழகானதும், सन्मनुष्य मन: यथा- ஸத்புருஷனுடைய மனதுபோலிருக்கின்ற, इदं तीर्थं- இந்த இறங்கு துறையை, निशामय- பாரும்.

3. (பொ-ரை) அந்த நாரத மஹரிஷியும், வால்மீகி மஹரிஷியினுடைய இராம பக்தியை ப்ரம்மாவுக்கு சொல்லுவதற்காக க்ஷணகாலத்தில் ப்ரம்மலோகம் சென்றவளவில், அப்பொழுதே வால்மீகி மஹரிஷியும், மாத்யான்னிக ஸ்நானத்திற்காக கங்கையின் ஸமீபத்திலிருக்கிற மிகவும் அழகான தமஸா நதியின் கரைக்குச்சென்றார்.

4. (பொ-ரை) அந்த வால்மீகி மஹரிஷி மிகவும் அழகான தமஸாநதியின் கரையை அடைந்து சேறு இல்லாமல் இருக்கிற இறங்குதுறையைப்பார்த்து அப்பொழுதே ஸமீபத்திலிருக்கிற சிஷ்யனை நோக்கி ஒரு வார்த்தை சொன்னார்.

5. (பொ-ரை) ஓ பரத்வாஜரே! சேறு இல்லாமல் தெளிந்த நீர்த்தடை கூடிய அழகான இந்த இறங்குதுறையைப்பாரும். ஸத்புருஷனுடைய மனதுபோல் இருக்கின்றது.

न्यस्यतां कलशं तात दीयतां वल्कलं मम ।
इदमेवावगाहिष्ये तमसातीर्थमुत्तमम् ॥ 6 ॥
एवमुक्तो भरद्वाजो वाल्मीकेन महात्मना ।
प्रायच्छत मुनेस्तस्य वल्कलं नियतो गुरोः ॥ 7 ॥
स शिष्यहस्तादादाय वल्कलं नियतेन्द्रियः ।
विचचार ह पश्यंस्तत्सर्वतो विपुलं वनम् ॥ 8 ॥

6. (ப-ரை) हे तात- அப்பா பரத்வாஜரே! कलशं- தீர்த்த பாத்திரமானது, न्यस्यतां- வைக்கப்படலாம், मम- எனக்கு, वल्कलं- மரவுரியானது, दीयतां- கொடுக்கப்படலாம், उत्तमं- மிகவும் உயர்ந்ததான, इदं- இந்த, तमसा तीर्थं एव- தமஸா நதியின் தீர்த்தத்தையே, अवगाहिष्ये- இறங்கி ஸ்நானம் பண்ணப்போகிறேன்.

7. (ப-ரை) महात्मना- பெரிய மனதையுடைய, वाल्मीकेन- வால்மீகி மஹரிஷியினால், एवं- இவ்விதம், उक्तः- சொல்லப்பட்டும், गुरोः- குருவுக்கு, नियतः- பரதந்திரருமான, भरद्वाजः- பரத்வாஜ மஹரிஷி, तस्य मुनेः- அந்த வால்மீகி மஹரிஷிக்கு, वल्कलं- மரவுரியை, प्रायच्छत- கொடுத்தார்.

8. (ப-ரை) नियतेन्द्रियः- அடக்கப்பட்ட இந்திரியங்களை உடையவரான, सः- அந்த வால்மீகி மஹரிஷி, शिष्यहस्तात्- சிஷ்யருடைய கையிலிருந்து, वल्कलं- மரவுரியை, आदाय- வாங்கிக்கொண்டு, विपुलं- விசாலமான, तत् वनम्- அந்த வனத்தை, सर्वतः- நாற்புறத்திலும், पश्यन् सन् பார்த்துக்கொண்டு, विचचार- ஸஞ்சரித்தார், ह- ஆச்சர்யம்!

6. (பொ-ரை) அப்பா பரத்வாஜரே! தீர்த்த பாத்திரத்தை கீழே வைத்துவிட்டு எனக்கு ஸ்நான வஸ்த்ரமான மரவுரியைக்கொடும். சேறு இல்லாமல் மிகவும் தெளிந்து கங்காதீர்த்தத்தைக்காட்டிலும் உத்தமமான இந்த தமஸாநதிதீர்த்தத்திலேயே இறங்கி ஸ்நானம் செய்யப்போகிறேன்.

7 (பொ-ரை) விசாலமான மனதையுடைய வால்மீகி மஹரிஷியினால் இவ்விதம் சொல்லப்பட்டு, குருவான வால்மீகிக்கு பரதந்திரருமான பரத்வாஜரும் அந்த வால்மீகி மஹரிஷிக்கு மரவுரியைக்கொடுத்தார்.

8. (பொ-ரை) இந்திரியங்களையடக்கின அந்த வால்மீகி மஹரிஷியும், சிஷ்யருடைய கையிலிருந்து மரவுரியை வாங்கிக்கொண்டு, தமஸாநதிக்கரையிலிருக்கிற விசாலமான அந்த வனத்தை சுற்றிலும் பார்த்துக்கொண்டு ஸஞ்சரித்தார். ஆச்சர்யம்!

तस्याभ्याशे तु मिथुनं चरन्तमनपायिनम् ।
ददर्श भगवांस्तत्र क्रौञ्चयोश्चारुनिःस्वनम् ॥ 9 ॥
तस्मात्तु मिथुनादेकं पुमांसं पापनिश्चयः ।
जघान वैरनिलयो निषादस्तस्य पश्यतः ॥ 10 ॥
तं शोणितपरीतांगं वेष्टमानं महीतले ।
भार्या तु निहतं दृष्ट्वा रुराव करुणां गिरम् ॥ 11 ॥

---

9. (ப-ரை) भगवान्- மஹிமை பொருந்திய வால்மீகியும், तत्र- அந்த வனத்தில், तस्य- அந்த, தீர்த்த கட்டத்தினுடைய, अभ्याशे- ஸமீபத்தில், चरन्तं- ஸஞ்சரித்துக்கொண்டும், अनपायिनम्- ஒன்றையொன்று விட்டுப்பிரியாததும், चारुनिस्वनं- இனிய குரலையுமுடைய. क्रौञ्चयोः मिथुनं- க்ரௌஞ்ச பக்ஷிகளின் இரட்டையை, ददर्श- பார்த்தார்.

10. (ப-ரை) पापनिश्चयः- கெட்ட எண்ணமுடையவனும், वैरनिलयः- வைரத்திற்கு இருப்பிடமுமான, निषादः- (ஒரு) வேடன், तस्मात्- मिथुनात्- ஆண்பெண்ணுமான அந்த இரண்டு பக்ஷிகளிருந்து, पुमांसं- புருஷனை, एकं- ஒரு பக்ஷியை, तस्य- அந்த வால்மீகி மஹரிஷி, पश्यतः सतः- பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, जघान- அடித்தான்.

11. (ப-ரை) भार्या तु- பார்யையான அந்த பெண் அன்றில் பக்ஷியும், निहतं- வேடனால் அடிக்கப்பட்டும், (अत एव- ஆகையினால்), महीतले- தரையில், वेष्टमानं- விழுந்து புரண்டுகொண்டும், शोणितपरीतांगं- இரத்தத்தினால் சூழப்பட்ட சரீரத்தையும் உடைய, तं- அந்த ஆண் அன்றிலை, दृष्ट्वा- பார்த்து, करुणां- தீனமான, गिरम्- சப்தத்தை, रुराव- சப்தித்தது.

9. (பொ-ரை) மஹிமை பொருந்திய வால்மீகி மஹரிஷி, அவ்வனத்தில் அந்த தமஸாநதி தீர்த்தத்தின் ஸமீபத்தில் ஸஞ்சரித்துக்கொண்டும், க்ஷணகாலமும் ஒன்றையொன்று விட்டுப்பிரிந்தால் ஸஹிக்கமுடியாத ஸ்வபாவமுள்ள இனிய குரலோடுகூடிய ஆண்பெண்ணுமாக சேர்ந்திருக்கிற, இரண்டு க்ரௌஞ்ச பக்ஷிகளை (அன்றில் பக்ஷிகளை) ப்பார்த்தார்,

10. (பொ-ரை) இவ்விதம் அந்த வால்மீகி மஹரிஷி பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, க்ரூரமான புத்தியையுடையவனும், பொதுவாகவே ஸர்வ ஜந்துக்கள் விஷயத்திலும் இயற்கையான விரோதத்தோட்ட கூடினவனுமான ஒரு வேடன் ஆண் பெண்ணுமாக சேர்ந்திருந்த அந்த இரண்டு அன்றில் பக்ஷிகளில், ஒன்றாகிய ஆண்பக்ஷியை அடித்தான்.

11. (பொ-ரை) அதன் பார்யையான பெண் அன்றில்பக்ஷியும், வேடனால் அடிபட்டு தரையில் விழுந்து சரீரம் முழுவதும் இரத்தம் சூழ்ந்து புரண்டுகொண்டிருக்கிற அந்த ஆண் அன்றில்பக்ஷியைப்பார்த்து தீனமாகக்கதறியது.

वियुक्ता पतिना तेन द्विजेन सहचारिणा ।
ताम्रशीर्षेण मत्तेन पत्रिणा सहितेन वै ॥ 12 ॥
तथा तु तं द्विजं दृष्ट्वा निषादेन निपातितम् ।
ऋषेर्धर्मात्मनस्तस्य कारुण्यं समपद्यत ॥ 13 ॥
ततः करुणवेदित्वादधर्मोयमिति द्विजः ।
निशाम्य रुदतीं क्रौञ्चीमिदं वचनमब्रवीत् ॥ 14 ॥

12. (ப-ரை) पतिना- கணவனும், सहचारिणा- கூடவே ஸஞ்சரித்துக்கொண்டும், सहितेन- பொருந்தின மனதுடையதும், ताम्रशीर्षेण- சிவந்த தலையையுடையதும், मत्तेन- மதத்தை அடைந்தும், पत्रिणा- அழகான இறக்கையையும் உடைய, तेन द्विजेन- அந்த பக்ஷியினால், वियुक्ता- பிரிந்திருக்கிற, भार्या- பெண் அன்றிலானது, கதறியது என்று முன்ச்லோகத்தோடு அன்வயம்.

13. (ப-ரை) तथा- அவ்விதம், निषादेन- வேடனால், निपातितम्- அடித்துத் தள்ளப்பட்டிருக்கிற, तं द्विजं- அந்த பக்ஷியை, दृष्ट्वा- பார்த்து, धर्मात्मनः- தர்ம ஸ்வபாவமுடையவரான, तस्य ऋषेः- அந்த வால்மீகி மஹரிஷிக்கு, कारुण्यं- கருணையானது, समपद्यत- உண்டானது.

14. (ப-ரை) ततः- பிறகு, द्विजः- ப்ராம்மணோத்தமரான வால்மீகியும், रुदतीं- கதறுகின்ற, क्रौञ्चीं- பெண் அன்றில் பக்ஷியை, निशाम्य- பார்த்து, करुणवेदित्वात्- கருணையோடு கூடியபடியால், अयं- இது, अधर्मः- தர்மம் அன்று, इति- என்று, (எண்ணி), इदं- वचनं- இந்த வார்த்தையை, अब्रवीत्- சொன்னார்.

12. (பொ-ரை) ஒரு நாளும் இணை பிரியாமல் மனதும் ஒருப்பட்டு ஸஞ்சரித்துவந்த சிவந்த தலையையும் அழகான இறக்கைகளையும்உடைய தன்னோடு புணர்ந்திருந்த அந்த ஆண் அன்றிலைப்பிரிந்தபடியால் அதின் பார்யையான பெண் அன்றிலும் தீனமாகக்கதறியது.

13. (பொ-ரை) அவ்விதம் வேடனால் அடிக்கப்பட்டு கீழே வீழ்த்தப்பட்டிருக்கிற அந்த பக்ஷியைப்பார்த்து, தர்மாத்மாவான அந்த வால்மீகி மஹரிஷிக்கு கருணைஉண்டானது.

14. (பொ-ரை) பிறகு வால்மீகி மஹரிஷி, கதறுகின்ற பெண் அன்றில் பக்ஷியைப்பார்த்து, கருணையோடுகூடியிருந்தபடியால், ஒன்றோடொன்று புணர்ந்திருக்கும் காலத்தில் அடித்தது அதர்மம் என்று எண்ணி பின்வருமாறு ஒரு வார்த்தை சொன்னார்.

*मा निषाद प्रतिष्ठां त्वमगमः शाश्वतीः समाः ।
यत्क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥ 15 ॥

15. (ப-ரை) हे निषाद- வேடனே, त्वं- நீ, यत्- யாதொரு காரணத்தினால், क्रौञ्चमिथुनात्- ஆண் பெண்ணுமான, அன்றில் பக்ஷிகளிலிருந்து, काममोहितम्- காமத்தினால் மோஹத்தை அடைந்திருக்கிற, एकं- ஒன்றான ஆண் பக்ஷியை, अवधीः- கொன்றாயோ, (तत्- ஆகையால்,) शाश्वतीः समाः- நீடித்த வருஷங்கள், प्रतिष्ठां- ஜீவித்தில் ஸ்தானத்தை, मा अगमः- அடையாமலிருக்கவேண்டும்.

हे मानिषाद- ஸ்ரீனிவாஸனே! त्वं- நீ, यत्- யாதொரு காரணத்தினால், क्रौञ्चमिथुनात्- இராவண மண்டோதரி ரூபமான மிதுனத்திலிருந்து, काममोहितं- ஸீதையிடம் காமம் கொண்டு மோஹித்த, एकं- இராவணனென்கிற ஒருவனை, अवधीः- ஸம்ஹரித்தாயோ, तत्- ஆகையால், शाश्वतीः समाः- ஸர்வ காலமும், प्रतिष्ठां- பெருமையை, अगमः- அடைய

15. (பொ-ரை) வேடனே! ஆண் பெண்ணுமாகச் சேர்ந்திருக்கிற இரண்டு பக்ஷிகளுக்குள் காமத்தினால் மோஹம் கொண்ட ஆண் பக்ஷியை நீ அடித்தாயல்லவா, அந்த பாபத்தினால் நீ உலகத்தில் நெடுநாள் வாழாமலிருக்கக்கடவாய்.

சதுர்முகனுடைய அநுக்ரஹத்தினால் ஸ்ரீமத் ராமாயணத்தை செய்ய ஆரம்பித்த வால்மீகிமஹரிஷியின் முகத்திலிருந்து முதலில் புறப்பட்ட இந்த ச்லோகமானது கேவலம் சாபரூபமாக இருப்பது உசிதமல்ல, ஆகையால் செய்யப்போகிற ஸ்ரீமத் ராமாயணத்திற்கு மங்களமாகவும் இருக்கவேண்டுமென்று பூர்வாசார்யர்கள் அருளிச்செய்வார்கள்' அதாவது:— ஸ்ரீய: பதியே, லோக கண்டகனை, இராவணன், அவன் பத்னியான மண்டோதரி என்கிற ஆண் பெண்களுக்குள், ஸீதையினிடம் காமபோகத்தை அநுபவிக்கவேணுமென்று மோஹம் கொண்டு அபஹரித்துப் போன இராவணனை ஸம்ஹரித்து மூன்று உலகங்களுக்கும் க்ஷேமத்தை செய்து பரிபாலித்தபடியால் நீர் ஸர்வ காலமும் விஜயத்தோடு வாழுந்தருளியிருக்க வேணும் என்று.

* இந்த ச்லோகம் மங்களமான படியால் இதில் மேல் சொ
ஸ்ரீராமாயணத்தின் கதைகளும் சுருக்கமாகக் காட்டப்படுகிறது.

मानिषाद- निषीदति- अस्मिन्- इति निषादः निवासः, मायाः- लक्ष्म्याः- निषादः- श्रीनिवासः, என்பதினால் அவதாரம் முதல் ஸீதையின் விவாஹம் வரையிலுள்ள பாலகாண்ட கதையும்'

प्रतिष्ठां- त्वं- अगमः- என்கிறதினால், பித்ருவசன பரிபாலனமென்கிற பெருமையை சொல்லுகிற அயோத்யாகாண்ட கதையும், शाश्वतीः समाः- என்கிறதினால், ரிஷிகள் விஷயத்தில் ஸ்ரீராமன், இராக்கதர்களை ஸம்ஹரித்து உங்களைக்காப்பாற்றுகிறேனென்று தாம் பண்ணியிருந்த ப்ரதிஜ்ஞையை க்ரமமாக முடிக்க, அந்த ரிஷி

तस्यैवं ब्रुवतश्चिन्ता बभूव हृदि वीक्षतः ।
शोकार्तेनास्य शकुनेः किमिदं व्याहृतं मया ॥ 16 ॥

16. (ப-ரை) वीक्षत:- (அந்த அன்றில்களை)ப்பார்த்துக் கொண்டும், एवं- இவ்விதமாக, ब्रुवत:- சொல்லிக்கொண்டுமிருக்கிற, तस्य- அந்த வால்மீகியினுடைய, हृदि- மனதில், अस्य शकुनेः- இந்த பக்ஷியினுடைய (நிலையைக்குறித்து), शोक- आर्तेन- துக்கத்தினால் வருத்தப்பட்டிருக்கிற, मया- என்னாலே, व्याहृतं- சொல்லப்பட்ட, इदं- இந்த வாக்யமானது, किं-என்ன! எந்த ரூபமானது, (इति- என்று) चिन्ता- எண்ணமானது, बभूव- உண்டாயிற்று.

16. (பொ-ரை) இரண்டு அன்றில் பக்ஷிகளைப்பார்த்து "मानिषाद" என்று சொல்லிக்கொண்டிருக்கிற அந்த வால்மீகி மஹரிஷியினுடைய மனதில் "இந்த பக்ஷிக்கு நேர்ந்த துக்கத்தைக்கண்டு, பொருக்கமுடியாத என்னுடைய வாக்கிலிருந்து ஒரு வார்த்தை புறப்பட்டதே, என்ன இது!" என்று ஒரு ஆலோசனை உண்டாயிற்று.

வசன பரிபாலனமென்கிற பெருமையின் தொடர்ச்சியைச் சொல்லுகின்ற ஆரண்ய காண்டகதையும்.

क्रौञ्चमिथुनात्- என்கிற உத்தரார்த்தத்தினால், क्रौञ्च- குடிலமான கிர்யக்குக்கள், அதாவது:- தாரை, வாலி என்கிற ஆண்பெண்களில், ஸுக்ரீவ பார்யையான ருமையினிடத்தில் காமத்தினால் மோஹித்த வாலியை ஸம்ஹரித்தாய் என்பதினால் கிஷ்கிந்தாகாண்டகதையும், क्रौञ्च– என்கிறபதத்திற்கு மிகவும் இளைத்திருந்த ஸீதை, ராமன் என்கிற இவர்களுக்குள் ஒருவரான ஸீதையை இலங்கா பட்டணத்தில் வைத்து அதிக துக்கத்தை உண்டுபண்ணினான் இராவணன், என்பதினால் ஸீதை இலங்கா பட்டணத்தில் அசோகவனத்தில் அநுபவித்துவருகிற துக்கத்தை சொல்லுகிற ஸுந்தர காண்டகதையும், क्रौञ्च- என்று (வக்ர) குடிலனான இராவணன் மண்டோதரி என்கிற இருவர்களில் ஸீதா விஷயமான காமத்தினால் கலங்கின இராவணனை ஸம்ஹரித்தாய் என்று யுத்தகாண்டகதையும், தண்டகாரண்யத்தில் வஸிக்கின்ற ரிஷி பத்னிகளை நான் மறுபடியும் பார்க்கவேணுமென்று ஆசையினால் கலங்கின ஸீதா தேவிக்கு வனத்தில் அநேக கஷ்டங்கள் நேர்ந்ததை சொல்லுகிற உத்திரகாண்டகதையும் சுருக்கமாக ஸூசிக்கப்பட்டது.

चिन्तयन्स महाप्राज्ञश्चकार मतिमान्मतिम् ।
शिष्यं चैवाब्रवीद्वाक्यमिदं स मुनिपुङ्गवः ॥ 17 ॥
पादबद्धोऽक्षरसमस्तन्त्रीलयसमन्वितः ।
शोकार्तस्य प्रवृत्तो मे श्लोको भवतु नान्यथा ॥ 18 ॥
शिष्यस्तु तस्य ब्रुवतो मुनेर्वाक्यमनुत्तमम् ।
प्रतिजग्राह संहृष्टस्तस्य तुष्टोऽभवद्गुरुः ॥ 19 ॥

---

17. (ப-ரை) चिन्तयन्- (இவ்விதம்) ஆலோசித்துக்கொண்டே, महाप्राज्ञः- அதிக புத்தியுடையவரும், मतिमान्- சாஸ்த்ர ஜ்ஞானமுடையவருமான, सः- அந்த வால்மீகி மஹரிஷி, मतिं- ஒரு நிச்சயத்தை, चकार- செய்தார், सः मुनिपुङ्गवः- அந்த வால்மீகி மஹரிஷியும், शिष्यं- சிஷ்யனைப்பார்த்து, इदं वाक्यं- இந்த வார்த்தையை, अब्रवीत्-च- एव- சொன்னார்.

18. (ப-ரை) शोकार्तस्य- அன்றிலின் விஷயமான சோகத்தினால் வருத்தமடைந்த, मे- என்னுடைய (முகத்திலிருந்து), प्रवृत्तः- புறப்பட்ட இந்த சப்தமானது, पादबद्धः- நான்கு பாதங்களால் செய்யப்பட்டது, अक्षरसमः- அக்ஷரங்களொப்பானதாயிருக்கிறது, तन्त्रीलयसमन्वितः- வீணையின் தந்திக்கும் லயத்திற்கும் பொருத்தமுடையதாயிருக்கிறது (ஆகையால்), श्लोकः भवतु- ச்லோகமாகவே ஆகட்டும், अन्यथा न- வேறுவிதமாக இல்லை.

19. (ப-ரை) शिष्यः तु- சிஷ்யரான பரத்வாஜரும், तस्य मुनेः- அந்த வால்மீகி மஹரிஷி, ब्रुवतः (सतः)- சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, अनुत्तमम्- ச்ரேஷ்டமான मुनेः- முனியினுடைய, वाक्यं- வாக்யரூபமான ச்லோகத்தை, संहृष्टः- ஸந்தோஷமுடையவராய், प्रतिजग्राह- பெற்றுக்கொண்டார், गुरुः- குருவான வால்மீகி, तस्य- அவர் விஷயத்தில், तुष्टः- ப்ரீதியுள்ளவராக, अभवत्- ஆனார்.

---

17. (பொ-ரை) பேரறிவாளரும், சாஸ்திரஜ்ஞானமுடைய அந்த மஹரிஷி இவ்விதம் ஆலோசித்து ஒரு தீர்மானம் செய்துகொண்டு, சிஷ்யரான பரத்வாஜரைப் பார்த்தும் ஒரு வார்த்தைசொன்னார்.

18. (பொ-ரை) வேடனால் அடிபட்ட அன்றிலைப்பார்த்து மனதுகலங்கின என்வாக்கிலிருந்து புறப்பட்ட இந்த சப்தமானது நான்கு பாதங்கள் உள்ளதாய், ஒவ்வொரு பாதத்திலும், ஸமமாக எட்டு அக்ஷரங்களுள்ளதுமாய், தாளம், மத்தளம் முதலாகிய பக்கவாத்யங்களுடன் வீணையில் வாசிப்பதற்குப் பொருந்தியிருக்கிறபடியால், ச்லோகத்தின் லக்ஷணமுள்ளது, அல்லாது வேறு பாதங்களின் சேர்க்கையல்ல. என்று मतिं चकार- என்று பூர்வச்லோகத்துடன் அன்வயம்.

19. (பொ-ரை) வால்மீகி மஹரிஷி, "मानिषाद" என்கிற ச்லோகத்தை சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, மிகவும் ச்ரேஷ்டமான இந்த வாக்யத்தை, சிஷ்யரான பரத்வாஜரிஷி வாய்ப்பாடம்பண்ணிவிட்டார், அதைப்பார்த்து குருவான வால்மீகிரிஷியும் அவரிடம்மிக, அன்புகொண்டார்.

सोऽभिषेकं ततः कृत्वा तीर्थे तस्मिन् यथाविधि ।
तमेव चिन्तयन्नर्थमुपावर्तत वै मुनिः ॥ 20 ॥
भरद्वाजस्ततः शिष्यो विनीतः श्रुतवान्मुनिः ।
कलशं पूर्णमादाय पृष्ठतोऽनुजगाम ह ॥ 21 ॥
स प्रविश्याश्रमपदं शिष्येण सह धर्मवित् ।
उपविष्टः कथाश्चान्याश्चकार ध्यानमास्थितः ॥ 22 ॥

---

20. (ப-ரை) ततः- பிறகு, सः मुनिः- அந்த வால்மீகி மஹரிஷி, तस्मिन् तीर्थे அந்த தமஸா நதி தீர்த்தத்தில், यथाविधि- சாஸ்த்ர விதிப்படி, अभिषेकं- மாத்யாஹ்நிக ஸ்நாநத்தை, कृत्वा- செய்து, तं अर्थं एव- அந்த விஷயத்தையே, चिन्तयन्- ஆலோசித்துக்கொண்டு, उपावर्तत वै- (ஆச்ரமத்தை) அடைந்தார்.

21. (ப-ரை) ततः- பிறகு, विनीतः- வணக்கமுள்ளவராயும், श्रुतवान्- சாஸ்த்ரம் அறிந்தவராயும், मुनिः- மனனம் செய்கிறவருமான, भरद्वाजः- பரத்வாஜரிஷி, पूर्णं- தீர்த்தம் நிறைந்த, कलशं- கமண்டலத்தை, आदाय- எடுத்துக்கொண்டு, पृष्ठतः- பின்னே अनुजगाम ह- நெருங்கிச்சென்றார்.

22. (ப-ரை) सः- அந்த வால்மீகி மஹரிஷியும், शिष्येण सह- சிஷ்யருடன் கூட, आश्रमपदं- ஆச்ரம ஸ்தானத்தை, प्रविश्य- ப்ரவேசித்து, धर्मवित्- தர்மத்தைச் செய்தும், उपविष्टः- உட்கார்ந்து கொண்டும், ध्यानं- அந்த ச்லோக விஷயமான சிந்தனையை, आस्थितः- அடைந்தவராய்க்கொண்டு, अन्याः कथाः- மற்ற புராணம் முதலான கதைகளை, चकार- செய்துகொண்டிருந்தார்.

20. (பொ-ரை) பிறகு, அந்த வால்மீகி மஹரிஷியும், முன்குறித்த தமஸா நதி தீர்த்தத்தில் சாஸ்திரமுறைபடி, மாத்யாஹ்நிகாநுஷ்டானம் செய்துவிட்டு, அவஸரமாகத்தன் வாயிலிருந்து புறப்பட்ட அந்த ச்லோகத்தையே நினைத்துக் கொண்டு ஆச்ரமத்தை நோக்கித்திரும்பினார்.

21. (பொ-ரை) வால்மீகிமஹரிஷி ஆச்ரமத்தைநோக்கி திரும்பின பிறகு விநயமுள்ளவரான, பாரத்வாஜ மஹரிஷி அந்த ச்லோகத்தை மனப்பாடம் செய்து மனனம்பண்ணிக்கொண்டு, தீர்த்தபூர்ணமான கலசத்தையும் கையில் ஏந்திக்கொண்டு நெருங்கிப் பின்தொடர்ந்தார்.

22. (பொ-ரை) அந்த வால்மீகி மஹரிஷி சிஷ்யருடன்கூட, ஆச்ரமத்தில் நுழைந்து தேவ பூஜை முதலான தன்னுடைய கர்மங்களைச்செய்து முடித்து ஸுகமாக ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, அவசரமாக தன் வாக்கிலிருந்து புறப்பட்ட அந்த ச்லோகத்தின் நினைவுடன்கூடவே மற்ற புராண பாராயணங்களும் செய்து கொண்டிருந்தார்.

आजगाम ततो ब्रह्मा लोककर्ता स्वयं प्रभुः ।
चतुर्मुखो महातेजा द्रष्टुं तं मुनिपुङ्गवम् ॥ 23 ॥
वाल्मीकिरथ तं दृष्ट्वा सहसोत्थाय वाग्यतः ।
प्राञ्जलिः प्रयतो भूत्वा तस्थौ परमविस्मितः ॥ 24 ॥
पूजयामास तं देवं पाद्यार्घ्यासनवन्दनैः ।
प्रणम्य विधिवच्चैनं पृष्ट्वाऽनामयमव्ययम् ॥ 25 ॥

23. (ப-ரை) ततः- பிறகு, लोककर्ता- உலகங்களை ஸ்ருஷ்டிக்கின்றவரும், प्रभुः- (உலகங்களுக்கு) ப்ரபுவுமான, चतुर्मुखः- நான்கு முகங்களை உடையவரும், महातेजाः- பெரிய ப்ரபாவத்தை உடையவருமான, ब्रह्मा- ப்ரம்ம தேவன், तं मुनिपुङ्गवम्- அந்த முனி ச்ரேஷ்டனை, द्रष्टुं- பார்ப்பதற்கு, स्वयं- தானாகவே, आजगाम- வந்தார்.

24. (ப-ரை) अथ- பிறகு, वाल्मीकिः- வால்மீகி மஹரிஷி, तं- அந்த ப்ரம்மாவை, दृष्ट्वा- பார்த்து, सहसा- உடனே, उत्थाय- எழுந்து, परमविस्मितः- மிகவும் ஆச்சர்ய முடையவராய், वाग्यतः- மௌனமுடையவராய், प्रयतः- நியமமுடையவராய், प्राञ्जलिः सन्- கைகூப்பினவராயும், भूत्वा- ஆகி, तस्थौ- நின்றார்.

25. (ப-ரை) (वाल्मीकिः- வால்மீகி மஹரிஷி), तं देवं- அந்த ப்ரம்ம தேவனை, पाद्यार्घ्यासन वन्दनैः- பாத்யத்தினாலும், அர்க்யத்தினாலும், ஆஸனத்தினாலும், ஸ்தோத்திரத்தினாலும், विधिवत्- சாஸ்த்ர விதிப்படி, प्रणम्य- நமஸ்கரித்து, अव्ययम्- தொடர்ச்சியாக, अनामयम्- குசலத்தை, पृष्ट्वा च- கேட்டும், एनं- இவரை, पूजयामास- பூஜித்தார்.

---

23. (பொ-ரை) பிறகு, உலகங்களையெல்லாம் ஸ்ருஷ்டிக்கின்றவரும், உலகங்களுக்குப்ரபுவும், ஒரே காலத்தில் நான்கு வேதங்களையும், பாராயணம் செய்ய உபயோகப்படுகின்ற நான்கு முகங்களையுடையவரும், மிக்க ப்ரபாவமுடையவருமான ப்ரம்மதேவனும் வால்மீகி மஹரிஷியின் மஹிமையைத் தானாகவே தெரிந்துகொண்டு, அவரை நேரில் பார்ப்பதற்கு தானாகவே வந்தார்.

24. (பொ-ரை) ப்ரம்மா தன் ஆச்ரமத்திற்கு வந்த பிறகு வால்மீகி மஹரிஷி, அவரைப்பார்த்து, திடீரென்றெழுந்து மிகவும் ஆச்சர்யத்துடன் ஒன்றும் பேசாமல் மனதையும், வாக்கையும் அடக்கி கை கூப்பிக்கொண்டு, ஸமீபத்தில் நின்றார்.

25. (பொ-ரை) வால்மீகி மஹரிஷியும், அந்தப்ப்ரம்மாவை சாஸ்திர விதிப்படி நமஸ்கரித்து, தொடர்ச்சியாக குசலப்ரச்னமும் செய்து பாத்யத்தையும், அர்க்யமும் கொடுத்து ஆஸனத்தில் உட்கார்த்தியவிதமாக ஸ்தோத்திரம் செய்து பூஜித்தார்.

अथोपविश्य भगवानासने परमार्चिते ।
वाल्मीकये महर्षये सन्दिदेशासनं ततः ॥
ब्रह्मणा समनुज्ञातः सोऽप्युपाविशदासने ॥ 26 ॥
उपविष्टे तदा तस्मिन्साक्षाल्लोकपितामहे ।
तद्गतेनैव मनसा वाल्मीकिर्ध्यानमास्थितः ॥ 27 ॥
पापात्मना कृतं कष्टं वैरग्रहणबुद्धिना ।
यस्तादृशं चारुरवं क्रौञ्चं हन्यादकारणात् ॥ 28 ॥

26. (ப-ரை) अथ- பிறகு, भगवान्- ஜ்ஞானாதி பரிபூர்ணரான ப்ரம்மாவும், परमार्चिते- நன்றாகப் பூஜிக்கப்பட்ட, आसने- ஆஸனத்தில், उपविश्य- உட்கார்ந்துகொண்டு, वाल्मीकये महर्षये- வால்மீகி மஹரிஷியின் பொருட்டு, आसनं- உட்காருவதை, सन्दिदेश- கட்டளையிட்டார், ततः- பிறகு, सः अपि- அந்த வால்மீகியும், ब्रह्मणा- ப்ரம்மாவினால், समनुज्ञातः सन्- அநுமதி செய்யப்பட்டவராய்க்கொண்டு, आसने- ஆஸனத்தில், उपाविशत्- உட்கார்ந்தார்.

27. (ப-ரை) लोकपितामहे- உலகங்களுக்கெல்லாம் பிதாமஹரான, तस्मिन्- அந்த ப்ரம்மா, साक्षात्- ப்ரத்யக்ஷமாக, उपविष्टे-(सति)- உட்கார்ந்திருந்தவளவில், तदा- அப்பொழுது, वाल्मीकिः- வால்மீகி மஹரிஷி, तद्गतेन एव- அந்த அன்றில் பக்ஷியை கொன்றதையே அடைந்திருக்கிற, मनसा- மனதினால், ध्यानं- சிந்தனையை, अकरोत्- செய்தார்.

28. (ப-ரை) वैरग्रहणबुद्धिना- வைரத்தால் அன்றில் பக்ஷியை பிடிக்க எண்ணமுடையவனாய், पापात्मना- பாபமே வடிவுகொண்டது போன்ற வேடனாலே, कष्टं- கெட்ட கார்யமானது, कृतं- செய்யப்பட்டது, यः- யாதொரு வேடன், चारुरवं- அழகான சப்தமுடையதும், तादृशं- அப்படிப்பட்டதுமான, क्रौञ्चं- அன்றில்பக்ஷியை, अकारणात्- காரணமில்லாமல், हन्यात्- கொல்லத்துணிவன்.

---

26. (பொ-ரை) பிறகு, மஹிமைபொருந்திய ப்ரம்மாவும், நன்றாகப்பூஜித்து வால்மீகியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு வால்மீகியைப் பார்த்து நீரும் உட்காருமென்று கட்டளையிட்டார், அவரும் ப்ரம்மாவினுடைய அநுமதியினால் உசிதமான தாழ்ந்த ஆஸனத்தில் உட்கார்ந்தார்.

27. (பொ-ரை) உலகங்களுக்கெல்லாம் பிதாமஹரான அந்த ப்ரம்மா நேரில் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுதே வால்மீகி மஹரிஷி வேடனால் முன் அடிக்கப்பட்ட அந்த அன்றில் பக்ஷியை மனதினால் நினைத்துக் கொண்டிருந்தார்.

28. (பொ-ரை) இயற்கையான வைரத்தினால் அன்றில் பக்ஷியைபிடிக்க எண்ணம்கொண்ட, பாபமூர்த்தியான வேடன் செய்தகார்யம் மிகவும் இழிவானது, ஏனென்றால்! இனியபேச்சுடைய பெண்ணுடன் புணர்ந்து கொண்டிருக்கிற அன்றில் பக்ஷியை நிஷ்காரணமாக கொலைசெய்யத் துணிந்தானல்லவா.

शोचन्नेव मुहु: क्रौञ्चीमुपश्लोकमिमं पुन: । पुन:
जगावन्तर्गतमना भूत्वा शोकपरायण: ॥ 29 ॥
तमुवाच ततो ब्रह्मा प्रहसन्मुनिपुङ्गवम् ।
श्लोक एव त्वया बद्धो नात्र कार्या विचारणा ॥ 30 ॥
मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती ।
रामस्य चरितं कृत्स्नं कुरु त्वमृषिसत्तम ॥ 31 ॥

29. (ப-ரை) शोकपरायण:- துக்கத்திற்குப் பரவசராயும், पुन:- மறுபடியும், क्रौञ्चीं- பெண் அன்றிலை, गतमना:- அடைந்த மனதை உடையவராய், भूत्वा- ஆகி, मुहु:- அடிக்கடி, शोचन् एव- வருத்தப்பட்டுக்கொண்டே, इमं श्लोकं- இந்த ச்லோகத்தை, अन्त:- மனதில், उपजगौ- சொல்லிக்கொண்டிருந்தார்.

30. (ப-ரை) तत:- பிறகு, ब्रह्मा- ப்ரம்மா, प्रहसन् (सन्)- சிரித்துக்கொண்டு, तं मुनिपुङ्गवम्- அந்த முனிச்ரேஷ்டரைப்பார்த்து, त्वया- உம்மால், बद्ध:- கட்டப்பட்டது, श्लोक एव- ச்லோகமேதான், अत्र- இந்த விஷயத்தில், विचारणा- ஆலோசனை, न कार्या- செய்யத்தகுந்தது அன்று, (इति- என்று), उवाच- சொன்னார்.

31. (ப-ரை) हे ब्रह्मन्- வாரீர் ப்ராம்மணரே! ते- உம்முடைய, इयं सरस्वती- இந்த, "मानिषाद"- (மாநிஷாத) என்கிற வாக்கானது, मच्छन्दात् एव- என்னுடைய அபிப்ராயத்தினாலேயே, प्रवृत्ता- புறப்பட்டது, हे ऋषिसत्तम- ரிஷி ச்ரேஷ்டரே! त्वं- நீர், रामस्य- ஸ்ரீராமனுடைய, चरितं कृत्स्नं- சரித்ரம் முழுவதையும், कुरु- செய்யக்கடவீர்.

29. (பொ-ரை) வேடனால் அடிக்கப்பட்ட ஆண் அன்றிலைப் பார்த்து துக்கத்துடன், பெண் அன்றில்கதறுவதையும் நினைத்துக்கொண்டு அடிக்கடி வருத்தமடைந்து கொண்டே வால்மீகி மஹரிஷியும், "मानिपाद" (மாநிஷாத) என்கிற இந்தச் ச்லோகத்தை மனதிலே சொல்லிக் கொண்டிருந்தார்.

30. (பொ-ரை) பிறகு, ப்ரம்மா சிரித்துக்கொண்டு, வால்மீகி மஹரிஷியைப்பார்த்து, ரிஷியே! உம்முடைய வாக்கிலிருந்து புறப்பட்ட "मानिपाद" (மாநிஷாத) என்கிற வாக்கியமானது ச்லோகமேதான், இதில் பரிசோதனை செய்ய வேண்டாம், என்று சொன்னார்.

31. (பொ-ரை) வாரீர் ப்ராம்மணோத்தமரே! என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே, "मानिषाद" (மாநிஷாத) என்கிற இந்தவாக்கானது, உம்முடைய முகத்திலிருந்துபுறப்பட்டது, முனி புங்கவரே! இப்படிப்பட்ட ச்லோகங்களினால், ஸ்ரீராம சரித்திரம் முழுவதையும் ஒரு க்ரந்தமாகச் செய்யக்கடவீர்.

धर्मात्मनो गुणवतो लोके रामस्य धीमतः ।
वृत्तं कथय धीरस्य यथा ते नारदाच्छ्रुतम् ॥ 32 ॥
रहस्यं च प्रकाशं च यद्वृत्तं तस्य धीमतः ।
रामस्य सहसौमित्रे राक्षसानां च सर्वशः ॥ 33 ॥
वैदेह्याश्चापि यद्वृत्तं प्रकाशं यदि वा रहः ।
तच्चाप्यविदितं सर्वं विदितं ते भविष्यति ॥ 34 ॥

32. (பதவுரை) धर्मात्मनः- தர்ம மூர்த்தியாயும், लोके- உலகத்தில், गुणवतः- அநேக குணங்களை உடையவரும், धीमतः- பண்டிதராயும், धीरस्य- தைர்யமுடையவருமான, रामस्य- ஸ்ரீராமனுடைய, वृत्तं- சரித்ரம், यथा- எப்படி, नारदात्- நாரதரிடமிருந்து, ते- உம்மால், श्रुतं- கேட்கப்பட்டதோ, (तथा- அப்படி), कथय- சொல்லக்கடவீர்.

33—34. (பதவுரை) धीमतः- புத்திமானும், सहसौमित्रेः- இலக்குமணனுடன் கூடிய, रामस्य- ஸ்ரீராமனுடைய, रहस्यं च- ரஹஸ்யமாயும், प्रकाशं च- ப்ரகாசமாயுமிருக்கிற, यत् वृत्तं- யாதொரு சரித்ரமோ, राक्षसानां च- இராக்ஷதர்களுடையவும், सर्वशः பலபடியான, (यत् वृत्तं- யாதொரு சரித்ரமோ), वैदेह्याः च- ஸீதையினுடையவும், अपि- பரதன் முதலானவர்களுடையவும், प्रकाशं- ப்ரகாசமாயும், यदि वा- அல்லது, रहः- ரஹஸ்யமுமான, (यत् वृत्तं- யாதொரு சரித்ரமோ), तत् च सर्वं- அது முழுவதும், अविदितं-अपि- அறியப்படாமலிருந்த போதிலும், ते- உமக்கு, विदितं- தெரியப்பட்டதாக, भविष्यति- ஆகப்போகின்றது.

---

32. (பொழிப்புரை) மஹாதார்மிகராயும், உலகங்களில் சிறந்த அநேககுணங்களை உடையவரும், மஹாபுத்திமானும், தீரனுமான ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை, நீர் நாரதரிடம் கேட்டபடியே, (செய்ய) சொல்லக் கடவீர்.

33-34. (பொழிப்புரை) புத்திமானான ஸ்ரீராமனுடையவும் இலக்குமணனுடையவும், ஏகாந்தமாயும், ப்ரகாசமுமான சரித்ரமும், இராவண, கும்பகர்ணன் முதலான இராக்ஷதர்களுடைய ஏகாந்தமும் ப்ரகாசமுமான சரித்திரம் முழுவதும், ஸீதையினுடையவும், பரதன் முதலானவர்களுடையவும் ரஹஸ்யமாயும் ப்ரகாசமுமான சரித்திரம் முழுவதும், நாரதர் மூலமாக உமக்குத் தெரியாமலிருந்தும், என்னுடைய அநுக்ரஹத்தினால் ஸர்வமும் ப்ரகாசமாகத் தோன்றக்கடவது.

न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति ।
कुरु रामकथां पुण्यां श्लोकबद्धां मनोरमाम् ॥ 35 ॥
यावत्स्थास्यन्ति गिरयः सरितश्च महीतले ।
तावद्रामायणकथा लोकेषु प्रचरिष्यति ॥ 36 ॥
यावद्रामायणकथा त्वत्कृता प्रचरिष्यति ।
तावदूर्ध्वमधश्च त्वं मल्लोकेषु निवत्स्यसि ॥ 37 ॥

35. (ப-ரை) अत्र काव्ये- (நீர் செய்யப்போகிற) இந்த காவ்யத்தில், ते- உம்முடைய, वाक् काचित् अपि- ஒரு வாக்யமும், अनृता- பொய்யாக, न भविष्यति- ஆகப்போகிறதில்லை, (अतः- ஆகையினால்), पुण्यां- புண்யகரமாயும், मनोरमाम्- மனதிற்கு இன்பமாயும், श्लोकबद्धां- ச்லோகங்களால் செய்யப்பட்டதுமான, रामकथां- ஸ்ரீராமன் விஷயமான ப்ரபந்தத்தை, कुरु- செய்யக்கடவீர்.

36. (ப-ரை) गिरयः- பர்வதங்களும், सरितः च- நதிகளும், महीतले- பூமியில், यावत्- எவ்வளவு காலம் வரையில், स्थास्यन्ति- இருக்கப்போகின்றனவோ, तावत्- அவ்வளவு காலம் வரையில், रामायणकथा- இராமாயணமென்கிற கதையானது, लोकेषु- (எழு) உலகங்களிலும், प्रचरिष्यति- பரவியிருக்கப்போகிறது.

37. (ப-ரை) त्वत्कृता- உம்மால் செய்யப்பட்ட, रामायणकथा- இராமாயணமென்கிற கதையானது, यावत्- எவ்வளவு காலம் வரையில், प्रचरिष्यति- பரவியிருக்கப் போகின்றதோ, तावत्- அவ்வளவு காலம் வரை, मल्लोकेषु- என்னுடைய உலகங்களில், अधः च- கீழ் உலகமாகிய பூமியிலும், ऊर्ध्वं- மேல் உலகங்களிலும், त्वं- நீர், निवत्स्यसि- வாஸம் செய்யப்போகின்றீர்.

---

35. (பொ-ரை) நீர் செய்யப்போகிற காவ்யத்தில் ஒரு வாக்யமும், பொய்யாக ஆகமாட்டாது, (ஒரு பதமும் தோஷமுள்ளதாக ஆகமாட்டாது,) ஆகையால் படிக்கிறவர்களுக்கும், கேட்கிறவர்களுக்கும் மனதிற்கு இன்பமாய்ப் பாபங்களைப் போக்கி, புண்யத்தை உண்டுபண்ணுகிறதுமான ஸ்ரீராமசரித்திரப்ரபந்தத்தை இவ்விதமான ச்லோகங்களாலேயே நீர் செய்யவேணும்.

36. (பொ-ரை) மலைகளும், நதிகளும், இவ்வுலகத்தில் உள்ளளவும் இந்த இராமாயணமென்கிற கதையானது எழு உலகங்களிலும் பரவியிருக்கப்போகிறது.

37. (பொ-ரை) உம்மால் செய்யப்பட்ட இந்த இராமாயண கதை எவ்வளவு காலம் வரை உலகங்களில் பரவியிருக்கப்போகின்றதோ, அக்காலம் வரையில் என்னுடைய உலகங்களுக்குள் கீழ் உலகமான பூலோகத்தில் நெடுநாள் வாழ்ந்திருந்து சரீரம் விட்டபிறகு மேல் உலகங்களில் நீர் வாஸம் செய்யப்போகிறீர்.

इत्युक्त्वा भगवान् ब्रह्मा तत्रैवान्तरधीत ।
ततः सशिष्यो वाल्मीकिर्मुनिर्विस्मयमाययौ ॥ 38 ॥
तस्य शिष्यास्ततः सर्वे जगुः श्लोकमिमं पुनः ।
मुहुर्मुहुः प्रीयमाणाः प्राहुश्च भृशविस्मिताः ॥ 39 ॥
समाक्षरैश्चतुर्भिर्यः पादैर्गीतो महर्षिणा ।
सोऽनुव्याहरणाद्भूयः श्लोकः श्लोकत्वमागतः ॥ 40 ॥

38. (ப-ரை) भगवान्- மஹிமை பொருந்திய, ब्रह्मा- ப்ரம்மதேவன், इति- இவ்விதம், उक्त्वा- சொல்லிவிட்டு, तत्र एव- அந்த ஆஸனத்திலேயே, अन्तः अधीयत- மறைந்துவிட்டார், ततः- பிறகு, सशिष्यः- சிஷ்யர்களுடன்கூடின, वाल्मीकिः मुनिः- வால்மீகி மஹரிஷி, विस्मयं- ஆச்சர்யத்தை, आययौ- அடைந்தார்.

39. (ப-ரை) ततः- பிறகு, तस्य- அந்த வால்மீகியினுடைய, शिष्याः सर्वे- சிஷ்யர்கள் எல்லோரும், मुहुः मुहुः- அடிக்கடி, प्रीयमाणाः सन्तः- ப்ரீதி உடையவர்களாய், इमं श्लोकं- இந்த ச்லோகத்தை, पुनः- மறுபடியும், जगुः- சொன்னார்கள், भृशविस्मिताः सन्तः- மிகவும் ஆச்சர்யமுடையவர்களாய்க்கொண்டு, प्राहुः च- (ஒருவருக்கொருவரும்) சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

40. (ப-ரை) यः- யாதொரு, श्लोकः- ச்லோகமானது, समाक्षरैः- ஸமமான அக்ஷரங்களை உடையவைகளான, चतुर्भिः पादैः- நான்கு அடிகளால், महर्षिणा- வால்மீகி மஹரிஷியினால், गीतः- சொல்லப்பட்டதோ, सः- அந்த ச்லோகமானது, अनुव्याहरणात्- (சிஷ்யர்களால்) அடிக்கடி சொல்லப்படுகிறபடியால், भूयः- மறுபடியும், श्लोकत्वं- ச்லோகமாயிருப்பதை, आगतः- அடைந்தது.

---

38. (பொ-ரை) மஹாப்ரபாவமுடையவரான ப்ரம்மாவும் வால்மீகியைப் பார்த்து இவ்விதம் சொல்லிவிட்டு, தான் ஆஸனத்திலிருந்தபடியே மறைந்துவிட்டார். பிறகு வால்மீகி மஹரிஷி சிஷ்யர்களுடன்மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தார்.

39. (பொ-ரை) பிறகு, அந்த வால்மீகி மஹரிஷியின் சிஷ்யர்கள் எல்லோரும் அடிக்கடி ஆனந்தத்துடன் இந்த ச்லோகத்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள் அதுவுமல்லாமல் மிகுந்த ஆச்சர்யத்துடன் "என்ன ஆச்சர்யம்!" என்ன ஆச்சர்யம்! என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டுமிருந்தார்கள்,

இங்கு சிஷ்யர்கள் என்று பன்மையானது, ஏற்கனவே ஆச்ரமத்திலிருக்கின்ற குசலவர்களையும் பரத்வாஜமஹரிஷியையும் குறிக்கிறது.

40. (பொ-ரை) வால்மீகி மஹரிஷியின் வாக்கிலிருந்து புறப்பட்ட मानिषाद (மானிஷாத) என்கிற வாக்யம், ஸமமான அக்ஷரங்களோடுகூடிய நான்கு அடிகளோடு பொருந்தி ச்லோக லக்ஷணத்தோடு கூடியிருந்தபடியால், ச்லோகமென்று பேர்பெற்றது, அதையே, சிஷ்யர்களும் அடிக்கடி ஸந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டுவருகிறபடியால் மறுபடியும் ச்லோகமென்று பேர் பெற்றது.

அதாவது:—ச்லோகத்தின் லக்ஷணம் பொருந்தியபடியால், ச்லோகம், ச்லோக

तस्य बुद्धिरियं जाता वाल्मीकेर्भावितात्मनः ।
कृत्स्नं रामायणं काव्यमीदृशैः करवाण्यहम् ॥ 41 ॥

उदारवृत्तार्थपदैर्मनोरमैस्ततः स रामस्य चकार कीर्तिमान् ।
समाक्षरैः श्लोकशतैर्यशस्विनो यशस्करं काव्यमुदारधीर्मुनिः ॥ 42 ॥

41. (ப-ரை) भावितात्मनः- த்யானம் செய்யப்பட்ட பரமாத்மாவை உடையவரான, तस्य वाल्मीकेः- அந்த வால்மீகி மஹரிஷிக்கு, रामायण काव्यं - இராமாயணம் என்கிற காவ்யத்தை, कृत्स्नं- முழுவதையும், ईदृशैः- இப்படிப்பட்டவைகளான (ச்லோகங்களால்), अहं- நான், करवाणि- செய்யக்கடவேன், इति- என்று, इयं बुद्धिः- இந்த எண்ணமானது, जाता- உண்டாயிற்று.

42. (ப-ரை) ततः- பிறகு, कीर्तिमान्- புகழ் உடையவரும், उदारधीः- கம்பீரமான புத்தியுடையவருமான, सः- அந்த, मुनिः- மனனம் பண்ணுகின்ற வால்மீகி மஹரிஷி, यशस्विनः- கீர்த்தியுடையவரான, रामस्य- இராமனுக்கும், यशस्करं- கீர்த்தியை செய்வதுமான, काव्यं- காவ்யத்தை, उदारवृत्तार्थपदैः- उदार- மிகவும் சிறந்தவைகளான, वृत्त- விருத்தங்களையும், अर्थ- அர்த்தங்களையும், पद- பதங்களையும் உடையவைகளாயும், मनोरमैः- மிகவும் அழகுள்ளவைகளாயும், समाक्षरैः- ஸமமான அக்ஷரங்களை உடையவைகளுமான, श्लोकशतैः- அநேகம் ச்லோகங்களால், चकार- செய்தார்.

மாக ஆயிற்றென்றும், அதனால், சிஷ்யர்கள் புகழ்ந்து கொண்டிருக்கின்றபடியால் மறுபடியும் ச்லோகமாக ஆயிற்று

श्लोक्यत इति (புகழ்ந்து சொல்லப்படுகிறது என்று) श्लोकः

41. (பொ-ரை) பிறகு, வால்மீகி மஹரிஷியும், ஸ்ரீராமாயணம் என்கிற க்ரந்தத்தைச்செய்ய ஆரம்பித்து விக்னமில்லாமல் நிறைவேறுமென்று மங்களார்த்தமாக பரமாத்மாவை த்யானம் செய்து, இப்பொழுது தாமுடைய வாக்கிலிருந்து புறப்பட்ட, मानिषाद (மாநிஷாத) என்கிற ச்லோகத்தைப் போன்ற லக்ஷணமுடையதுகளான அநேகம் ச்லோகங்களால் இந்த பெரிய காவ்யத்தை செய்து முடிக்கவேணும் என்ற எண்ணம் கொண்டார்.

42. (பொ-ரை) பிறகு, புகழ் உடையவரும், கம்பீரமான புத்தியுடையவருமான, அந்த வால்மீகி மஹரிஷி, மிகவும் சிறந்த விருத்தங்கள், அர்த்தங்கள், பதங்கள், இவைகளை உடையவைகளாயும், மிகவும் அழகானவைகளாயும், எல்லா பாதங்களிலும் ஸமமான அக்ஷரங்களை உடையவைகளுமான அநேகம் ச்லோகங்களால், உலகமெல்லாம் பரவிய கீர்த்தியுடைய ஸ்ரீராமனுக்கு விசேஷமான கீர்த்தியைப் பண்ணக்கூடிய ஸ்ரீராமாயணம் என்னும் காவ்யத்தை செய்தார்.

तदुपगतसमाससंधियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥ 43 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
द्वितीयः सर्गः ॥ 2 ॥

43. (ப-ரை) उपगतसमाससन्धियोगं- उपगत- வ்யாகரண சாஸ்திரத்திற்குத் தகுந்ததாக இருக்கிற, समास- தத்புருஷன் முதலான ஸமாஸங்களையும், सन्धि- பதங்களின் சேர்க்கையையும், योग- பதங்களின் வ்யுத்பத்திகளையும், உடையவைகளாய், सममधुरोपनतार्थवाक्यबद्धम्- सम- ஸமங்களாயும், मधुर- ரஸமுள்ளதுகளாயும், उपनत- தானுக வந்திருக்கிற, अर्थ- அர்த்தங்களை உடையவைகளாயுமிருக்கிற, वाक्य- வாக்யங்களால், बद्धम्- சேர்க்கப்பட்டதாயும், तत्- ப்ரஸித்தமான, रघुवरचरितं- ரகுவம்சத்து அரசர்களுக்குள் சிறந்தவரான ஸ்ரீராம சரித்திரவிஷயமாயும், मुनिप्रणीतं- வால்மீகியினுல் செய்யப்பட்ட, दशशिरसः- இராவணனுடைய, वधं- ஸம்ஹாரத்தைக் குறித்துச் செய்யப்பட்ட க்ரந்தத்தை, निशामयध्वम्- பாருங்கள்.

43. (பொ-ரை) சாஸ்திரத்திற்குப்பொருந்திய ஸமாஸம், ஸந்தி, பதங்களின் வ்யுத்பத்தி, இவைகளை உடையவைகளாயும், பதங்களின் சேர்க்கையில் அழகாயும், ச்ரமமில்லாமல் அர்த்தம் தோன்றக்கூடியதுமான வாக்யங்களை உடையதாயும், ரகு குலத்து மன்னவர்களில் சிறந்தவரான ஸ்ரீராமனுடைய சரித்திரத்தைக்குறித்தும இராவணனுடைய வதத்தைக்குறித்தும், வால்மீகியாகியநான் செய்திருக்கின்ற இந்தக்ரந்தத்தை நீங்கள் எல்லோரும் கேளுங்கள் கேளுங்களென்று சிஷ்யர்களுக்குச் சொன்னர்.

तृतीयः सर्गः ॥ 3 ॥

श्रुत्वा वस्तु समग्रं तद्धर्मात्मा धर्मसंहितम् ।
व्यक्तमन्वेषते भूयो यद्वृत्तं तस्य धीमतः ॥ 1 ॥
उपस्पृश्योदकं सम्यक् मुनिः स्थित्वा कृताञ्जलिः ।
प्राचीनाग्रेषु दर्भेषु धर्मेणान्वेषते गतिम् ॥ 2 ॥
रामलक्ष्मणसीताभी राज्ञा दशरथेन च ।
सभार्येण सराष्ट्रेण यद्वृत्तं तत्र तत्त्वतः ॥ 3 ॥

---

1. (ப-ரை) धर्मात्मा- தர்மஸ்வபாவமுடையவரான வால்மீகி மஹரிஷி, धर्मसंहितम्- தர்மத்தோடு சேர்ந்திருக்கின்ற, तत्- அந்த, वस्तु- கதையை, समग्रं- முழுமையையும், श्रुत्वा- (நாரதரிடம்) கேட்டு, भूयः- அதைவிட, அதிகமான, धीमतः- மேதாவியான, तस्य- அந்த ஸ்ரீராமனுடைய, यत् वृत्तं- யாதொரு சரித்திரம் (இருக்கின்றதோ), (तत्- அதை) व्यक्तं- தெளிவாக இருக்கும்படி, अन्वेषते- ஆலோசிக்கின்றார்.

2. (ப-ரை) मुनिः- வால்மீகி மஹரிஷி, सम्यक्- நன்றாக, उदकं उपस्पृश्य- ஆசமனம் செய்து, प्राचीनाग्रेषु- கிழக்கு நுனியாக, (பரப்பப்பட்ட), दर्भेषु- தர்ப்பங்களில், स्थित्वा- இருந்து, कृताञ्जलिः सन्- கைகூப்பிக்கொண்டு, धर्मेण- ப்ரம்மதேவனுடைய அநுக்ரஹமாகிற தர்மத்தினால், गतिम्- ஸ்ரீ ராமன் முதலானோர்களுடைய வ்ருத்தாந்தத்தை, अन्वेषते- ஆலோசிக்கின்றார்.

3. (ப-ரை) रामलक्ष्मणसीताभिः- இராம, இலக்ஷ்மண, ஸீதை இவர்களாலும், सभार्येण- பார்யைகளோடுகூடியும், सराष्ट्र- தேசத்தோடுகூடியுமிருக்கிற, दशरथेन राज्ञा च- தசரதமஹாராஜராலும், यत्- யாதொன்று, वृत्तं- நடக்கப்பட்டதோ, तत्र- அவ்விஷயத்தில், तत्त्वतः- உண்மையாக, सम्प्रपश्यति- முழுமையும் நன்றாய் பார்க்கிறார்.

---

1. (பொ-ரை) தர்மஸ்வபாவமுடையவரான வால்மீகி மஹரிஷி, தர்மத்தோடு பொருந்திய நாரதரால் சொல்லப்பட்ட இராம சரித்திர முழுமையையும் கேட்டு அதைவிட அதிகமாக புத்திமானான ஸ்ரீராமனுடைய என்ன சரித்திரம் உண்டோ அது முழுவதும் தன் மனதில் தெளிவாகக்கொள்ளுவதற்காக த்யானம் பண்ணுகிறார்.

2. (பொ-ரை) வால்மீகி மஹரிஷி சாஸ்திரப்ரகாரம் ஆசமனம் செய்து கிழக்கு நுனியாக தர்ப்பங்களைப் பரப்பி, அந்த தர்ப்பாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் குருவான நாரதரை மனதில் த்யானித்து கைகூப்பிக்கொண்டு, ப்ரம்மா செய்த அநுக்ரஹத்தினால் ஸ்ரீராமன் முதலானோர்களுடைய சரித்திரத்தை மனதினால் த்யானம் செய்கின்றார்.

3. (பொ-ரை) இராமன், இலக்ஷ்மணன், ஸீதை இவர்களாலும், தசரத மஹாராஜர் அவருடைய பார்யைகள், அவருடைய தேசத்து ஜனங்கள், இவர்களாலும் எது எது நடத்தப்பட்டதோ, அந்தந்த விஷயத்தை உண்மையாக ஸாக்ஷாத்கரிக்கிறார்.

हसितं भाषितं चैव गतिर्या यच्च चेष्टितम् ।
तत्सर्वं धर्मवीर्येण यथावत्सम्प्रपश्यति ॥ 4 ॥
स्त्रीतृतीयेन च तथा यत्प्राप्तं चरता वने ।
सत्यसन्धेन रामेण तत्सर्वं समवेक्षितम् ॥ 5 ॥
ततः पश्यति धर्मात्मा तत्सर्वं योगमास्थितः ।
पुरा यत्तत्र निर्वृत्तं पाणावामलकं यथा ॥ 6 ॥

4. (ப-ரை) यत् हसितं- யாதொரு சிரிப்போ, यत् भाषितं च एव- யாதொருவார்த்தையோ, या गतिः- யாதொரு நடையோ, यत् चेष्टितं च- யாதொரு கார்யமோ, तत् सर्वं- அது முழுவதையும், धर्मवीर्येण- (ப்ரம்மாவின் வரமாகிற) தர்மத்தினுடைய சக்தியினால், यथावत्- உண்மையாக, सम्प्रपश्यति- நன்றாகப் பார்க்கிறார்.

5. (ப-ரை) स्त्रीतृतीयेन- ஸ்த்ரீயை மூன்றாமவளாக உடைய மூவரும், वने- வனத்தில், चरतः- ஸஞ்சரிக்கின்றவரும், सत्यसन्धेन- ஸத்யமான ப்ரதிஜ்ஞையை உடையவருமான, रामेण- ஸ்ரீராமனால், यत् प्राप्तं- யாதொன்று அடையப்பட்டதோ, तत् सर्वं च- அது முழுவதும், समवेक्षितम्- நன்றாகப் பார்க்கப்பட்டது.

6. (ப-ரை) ततः- பிறகு, धर्मात्मा- தர்மஸ்வரூபியான வால்மீகி மஹரிஷி, योगं- உபாயத்தை, आस्थितः सन्- அடைந்தவராய்க்கொண்டு, तत्र- அந்த ஸ்ரீராமன் முதலானவர்களிடத்தில், पुरा- முன், निर्वृत्तं- எந்த கார்யம் நடந்ததோ, तत् सर्वं- அது முழுவதையும், पाणौ- உள்ளங்கையில், आमलकं यथा- நெல்லிக்கனியைப்போல், पश्यति- பார்க்கிறார்.

4. (பொ-ரை) முன் ச்லோகத்தில் பொதுவாகச்சொன்னதை விவரிக்கிறார்:- இராமஇலக்ஷ்மணன் ஸீதை, தசரதமஹாராஜர், அவருடையபார்யைகள், அவருடையதேசத்தில் வஸிக்கின்ற ஜனங்கள் இவர்களுடைய சிரிப்பு, பேச்சு, நடை, கார்யம் இவை முழுவதையும் ப்ரம்மாவின் அநுக்ரஹத்தின் சக்தியினால் உள்ளபடியே ஸாக்ஷாத்கரிக்கிறார்.

5. (பொ-ரை) இலக்ஷ்மணன், ஸீதை இவர்களோடுகூடி தண்டகாவனத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த, ஸத்யப்ரதிஜ்ஞரான ஸ்ரீராமனால் அங்கு என்ன செய்யப்பட்டதோ அது முழுவதையும், ப்ரத்யக்ஷமாக அறிந்தார்.

6. (பொ-ரை) பிறகு, தர்மஸ்வரூபியான வால்மீகி மஹரிஷி ப்ரம்மாவின் அநுக்ரஹமாகிற உபாயத்தைப்பெற்று, அதனால், ஸ்ரீராமன் முதலானவர்கள் முன் நடத்திய கார்யங்களை முழுவதையும் உள்ளங்கையில் நெல்லிக்கனியைப்போல் நன்றாக அறிந்தார்.

तत्सर्वं तत्त्वतो दृष्ट्वा धर्मेण स महाद्युतिः ।
अभिरामस्य रामस्य चरितं कर्तुमुद्यतः ॥ 7 ॥
कामार्थगुणसंपन्नं धर्मार्थगुणविस्तरम् ।
समुद्रमिव रत्नाढ्यं सर्वश्रुतिमनोहरम् ॥ 8 ॥
स यथा कथितं पूर्वं नारदेन महर्षिणा ।
रघुवंशस्य चरितं चकार भगवानृषिः ॥ 9 ॥

7-8. (ப-ரை) महाद्युतिः- அதிகமான காந்தியையுடைய, सः- அந்த வால்மீகி மஹரிஷி, तत् सर्वं- அதுமுழுவதையும், तत्त्वतः- உண்மையாக, धर्मेण- தர்மத்தினால், दृष्ट्वा- பார்த்து, कामार्थगुणसम्पन्नं- ப்ரதானமல்லாத காமத்தோடும், அர்த்தத்தோடும் கூடியதாயும், धर्मार्थगुणविस्तरम्- தர்மத்தினுடையவும், மோக்ஷத்தினுடையவும் மேன்மையை விரித்துக்காட்டுகின்றதாயும், (अत एव- ஆகையினால்), रत्नाढ्यं- ரத்தினங்களால் நிறைந்த, समुद्रं-इव- ஸமுத்திரம் போன்றதாயும், सर्वश्रुतिमनोहरम्- ஸர்வஜனங்களுடைய, காதையும், மனதையும், கவருகின்றதுமான, अभिरामस्य- மனோஹரனும் ஆனந்தகரனை, रामस्य- ஸ்ரீராமனுடைய, चरितं- சரித்திரத்தை, कर्तुं- செய்வதற்கு, उद्यतः- ப்ரயத்தனம் கொண்டவராக, (अभूत्- ஆனார்)

9. (ப-ரை) भगवान्- ஞானசக்திபூர்ணரான, सः ऋषिः- அந்த வால்மீகி மஹரிஷி, रघुवंशस्य-ரகுவம்சத்தில் பிறந்த ராகவனுடைய, चरितं-சரித்திரத்தை, पूर्वं- முன்னம், नारदेन महर्षिणा-நாரத மஹரிஷியினால், यथा- எந்தக்கிரமமாக, कथितं- சொல்லப்பட்டதோ, (तथा- அப்படியே), चकार-செய்தார்.

7-8. (பொ-ரை) ப்ரம்மாவின் அநுக்ரஹத்தினால் ஸ்ரீராமசரித்திரமுழுவதையும் ப்ரத்யக்ஷமாகக்கண்டு ஸ்ரீராமனுடைய குணங்களைக்கண்டு ஆனந்தமடைந்து அதனால் சரித்திரம் மிகவும் விசேஷமான புண்ணியமுடைய ஸ்ரீவால்மீகி மஹரிஷி, காமம், அர்த்தம், என்கிற இரண்டையும் ப்ரதானமல்லாமலும், தர்மத்தையும் மோக்ஷத்தையும் ப்ரதானமாக விஸ்தரிக்கும் சொல்லக்கூடியதும், ஸர்வ ரத்தினங்களால் நிறைந்த சமுத்திரம் போன்றதும், கேட்கிற ஜனங்களுடைய, காதுகளுக்கு ஸ்வரத்தின் அழகினாலும், மனதுக்கு அர்த்தத்தின் பெருமையினாலும் ஆனந்தத்தைக் கொடுக்கின்றதும், ஸர்வலோக அபிராமனான ஸ்ரீராமனுடைய சரித்திரமுமான ப்ரபந்தத்தை செய்ய ப்ரயத்தனம்செய்தார்.

9. (பொ-ரை) ஞான சக்திகள் நிறைந்த அந்த வால்மீகி மஹரிஷி, முன் நாரத மஹரிஷியினால், ரகு வம்சத்தில் அவதரித்த ஸ்ரீராமனுடைய சரித்திரம் தமக்கு எந்தக்கிரமமாக உபதேசிக்கப்பட்டதோ அந்தக்கிரமமாக செய்தார்.

जन्म रामस्य सुमहद्वीर्यं सर्वानुकूलताम् ।
लोकस्य प्रियतां क्षान्तिं सौम्यतां सत्यशीलताम् ॥ 10 ॥
नानाचित्रकथाश्चान्या विश्वामित्रसमागमे ।
जानक्याश्च विवाहं च धनुषश्च विभेदनम् ॥ 11 ॥
रामरामविवादं च गुणान्दाशरथेस्तथा ।
तदाभिषेकं रामस्य कैकेय्या दुष्टभावताम् ॥ 12 ॥

---

10. (ப-ரை) रामस्य-ஸ்ரீராமனுடைய, सुमहत्- மிகவும் பெருமை பொருந்திய, जन्म-அவதாரத்தையும், वीर्य-பலத்தையும், सर्वानुकूलतां-எல்லா பிராணிகளிடத்திலும் அநுகூலமாயிருப்பதையும், लोकस्य- உலகத்திற்கு, प्रियतां- அன்புக்கிருப்பிடமாயிருப்பதையும், क्षान्तिं-பொறுமையையும், सौम्यतां-பிரஸன்னனாயிருக்கையையும், सत्यशीलतां-ஸத்தியமான ஸ்வபாவத்தையும், (वाल्मीकि: चकार-வால்மீகி மஹரிஷி செய்தார். என்று இந்த ஸர்க்கத்தின் கடைசியிலிருக்கிற "कर्ता" வையும் "क्रिये" யையும் ஒவ்வொரு ச்லோகங்களிலும் சேர்த்துக்கொள்ளவேண்டியது).

11. (ப-ரை) विश्वामित्रसमागमे- விச்வாமித்ரருடன் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் சேர்ந்த காலத்தில், अन्या:-வேறான, नाना-பலவிதங்களான, चित्रकथा: च-விசித்திரங்களான கதைகளையும், जानक्या:-ஸீதையினுடைய, विवाहं च-கல்யாணத்தையும், धनुष:-சிவதனுஸ்ஸை, विभेदनं- முறித்ததையும்,

12. (ப-ரை) रामरामविवादं च-பரசுராமனோடு ஸ்ரீராமனுக்கு நடந்த விவாதத்தையும், तथा- அப்படியே, दाशरथे:- ஸ்ரீராமனுடைய, गुणान्- குணங்களையும், तदा-அப்பொழுது, रामस्य-ஸ்ரீராமனுடைய, अभिषेकं- பட்டாபிஷேக ஆரம்பத்தையும், कैकेय्या:-கைகேயியின், दुष्टभावतां- கொடிய எண்ணத்தையும்,

---

10. (பொ-ரை) பிறகு, விஸ்தாரமாக ப்ரம்மா உபதேசித்தபடி ஸ்ரீராம சரித்திரத்தை, வால்மீகி மஹரிஷி செய்தாரென்று சொல்லப்படுகிறது.

மிகுந்த தபஸ்ஸுகளைச் செய்த தசரத மஹாராஜனுக்கு பகவான் புத்திரனாக அவதரித்து ஸ்ரீராமனென்ற திருநாமம் அடைந்ததான அவதாரச்சிறப்பையும் தாடகை, மாரீசன் முதலானவர்களை ஸம்ஹரித்ததற்குந்த ஸ்ரீராமனுடைய பலம், ஸர்வ பிராணிகளிடத்திலும் ஸ்ரீராமன் அனுகூலமாயிருப்பது, ஸர்வலோகமும் ஸ்ரீராமனிடத்தில் பிரியமாயிருப்பது, ஸ்ரீராமனுடையபொறுமை, அழகாயிருக்குந்தன்மை, எக்காலத்திலும் மாறுபடாத ஸ்வபாவம் இவைகளையும்தெரிவிக்கின்றகதையை (ச்செய்தார்).

11. (பொ-ரை) விச்வாமித்ரருடன் ஸ்ரீராமஇலக்குமணர்கள் சேர்ந்துபோகும்பொழுது நடந்த பலவிதங்களாயும், விசித்திரங்களாயுமுள்ள வெவ்வேறு கதைகளையும், ஸீதை, ஊர்மிளா, மாண்டவி, சுருதிகீர்த்தி இவர்களுடைய விவாஹங்களையும், சிவதனுஸ்ஸை முறித்ததையும்,

12. (பொ-ரை) பரசுராமனோடு ஸ்ரீராமனுக்கு நடந்த விவாதத்தையும்,

विघातं चाभिषेकस्य रामस्य च विवासनम् ।
राज्ञः शोकविलापं च परलोकस्य चाश्रयम् ॥ 13 ॥
प्रकृतीनां विषादं च प्रकृतीनां विसर्जनम् ।
निषादाधिपसंवादं सूतोपावर्तनं तथा ॥ 14 ॥
गङ्गायाश्चापि सन्तारं भरद्वाजस्य दर्शनम् ।
भरद्वाजाभ्यनुज्ञानाच्चित्रकूटस्य दर्शनम् ॥ 15 ॥

13. (ப-ரை) अभिषेकस्य- (ஸ்ரீராமனுடைய) பட்டாபிஷேகத்திற்கு, विघातं च- உண்டான தடங்கலையும், रामस्य- ஸ்ரீராமனுடைய, विवासनम् च- தேசாந்திரகமனத்தையும், राज्ञः- அரசனுடைய, शोकविलापं च- துக்கத்தினால் அழுகையையும், परलोकस्य आश्रयं च- ஸ்வர்க்கம் அடைந்ததையும்,

14. (ப-ரை) प्रकृतीनां- ஜனங்களுடைய, विषादं च- வ்யஸனத்தையும், प्रकृतीनां- विसर्जनम्- ஜனங்களை வஞ்சித்து விட்டுப்போனதையும், निषादाधिपसंवाद- வேடர்களுக்கரசனான குஹனோடு ஸம்பாஷணத்தையும், तथा- அப்படியே, सूतोपावर्तनं- ஸுமந்த்ரர் திரும்பிவந்ததையும்,

15. (ப-ரை) गङ्गायाः सन्तारं च अपि- கங்கா நதியைத்தாண்டினதையும்- भरद्वाजस्य दर्शनम्- பரத்வாஜமஹரிஷியினுடைய தர்சனத்தையும், भरद्वाजाभ्यनुज्ञानात्- பரத்வாஜமஹரிஷியின் அனுமதியினால், चित्रकूटस्य दर्शनम्- சித்திரகூடபர்வதத்தைப்பார்த்

நகரத்துஜனங்களால் புகழ்ந்து சொல்லப்பட்ட ஸ்ரீராமனுடைய குணங்களையும், அதைக்கேட்டு தசரத சக்கிரவர்த்தி ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய முயற்சி செய்ததையும், அவ்விஷயத்தில் கைகேயியின் கொடிய எண்ணத்தையும்,

13. (பொ-ரை) ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஆரம்பித்ததில் தடங்கல் உண்டானதையும், ஸ்ரீராமனை காட்டிற்குத் துரத்தினதையும், ராமனைவிட்டுப்பிரிந்த துக்கத்தினால் தசரதமகாராஜன் கதறிக்கொண்டு பரலோகமடைந்ததையும்,

14. (பொ-ரை) பட்டணத்துஜனங்கள் துக்கத்தோடு ராமனுடன் சென்றதையும், அந்த ஜனங்களை வஞ்சித்து திரும்பிவிட்டதையும், நிஷாதர் (வேடர்) அரசனான குஹனோடு ஸ்ரீராமனுக்கு நடந்த ஸம்பாஷணத்தையும், ராமர், லக்ஷ்மணன், ஸீதை, இவர்களை கங்கைக்கரையில் விட்டுவிட்டு ஸுமந்த்ரர் [illegible] திரும்பிவந்ததையும்,

15. (பொ-ரை) கங்காநதியைத்தாண்டி பரத்வாஜரிஷியைப் பார்த்து, அவருடைய அனுமதியினால் சித்திரகூடபர்வதத்தைப்பார்த்ததையும்.

वास्तुकर्म निवेशं च भरतागमनं तथा ।
प्रसादनं च रामस्य पितुश्च सलिलक्रियाम् ॥ 16 ॥
पादुकाग्र्याभिषेकं च नन्दिग्रामनिवासनम् ।
दण्डकारण्यगमनं विराधस्य वधं तथा ॥ 17 ॥
दर्शनं शरभङ्गस्य सुतीक्ष्णेनाभिसंगमम् ।
अनसूयासहास्यामप्यंगरागस्य चार्पणम् ॥ 18 ॥

16. (ப-ரை) वास्तुकर्म- சாஸ்த்ரப்ரகாரமாக பர்ணசாலை கட்டினதையும், निवेशं च- ஆச்ரமத்தில் ப்ரவேசம் செய்ததையும், रामस्य प्रसादनं च- பரதன் ஸ்ரீராமனிடத்தில் செய்த ஸமாதானத்தையும், पितुः- இறந்த தசரதருக்கு, सलिलक्रियाम् च- தர்ப்பணம் செய்ததையும்.

17. (ப-ரை) पादुकाग्र्याभिषेकं च- சிரேஷ்டமான பாதுகைகளுக்குப்பட்டாபிஷேகம் செய்ததையும், नन्दिग्रामनिवासनम्- நந்திக்கிராமத்தில் வாஸம் செய்ததையும், दण्डकारण्यगमनं- தண்டகாவனத்தைக்குறித்து எழுந்தருளினதையும், तथा- அப்படியே, विराधस्य वधं- விராதனை ஸம்ஹரித்ததையும்,

18. (ப-ரை) शरभङ्गस्य- சரபங்கரிஷியினுடைய, दर्शनं- தரிசனத்தையும், सुतीक्ष्णेन- ஸுதீக்ஷ்ணமஹரிஷியோடு, अभिसंगमं- சேர்ந்ததையும். अनसूयासहास्यां अपि- அநஸூயையுடன் ஸீதை சேர்ந்திருந்ததையும், अङ्गरागस्य- சந்தனத்தினுடைய, अर्पणं च- தானத்தையும்,

16. (பொ-ரை) சாஸ்திர முறைப்படி பர்ணசாலை நிர்மாணம்செய்து அதில் குடியிருந்ததையும், அங்குவந்து பரதன் ஸ்ரீராமனை ஸமாதானம் செய்து வேண்டிக்கொண்டதையும், இறந்த தசரதனைக்குறித்து ஸ்ரீராம இலக்குமணர்கள் தர்ப்பணம் செய்ததையும்,

17. (பொ-ரை) ஸ்ரீராமன் திருவடிகளில் சாத்திக் கொண்டிருந்தபடியால் மிகவும் பெருமைபொருந்திய திவ்ய பாதுகைகளுக்கு அரசனாக பட்டாபிஷேகம் செய்ததையும், நந்திக்கிராமத்தில் வாஸம்செய்ததையும், ராம, இலக்குமணர், ஸீதை இம்மூவர்களும் சித்திரகூடகிரியைவிட்டு தண்டகாவனம் ப்ரவேசித்ததையும், அங்கு விராதனென்கிற இராக்ஷஸனை ஸம்ஹாரம் செய்ததையும்,

18. (பொ-ரை) சரபங்க மஹரிஷியைக் கண்டதையும், ஸுதீக்ஷ்ணமஹரிஷியோடு சேர்ந்திருந்ததையும், ஸீதாதேவி அநஸூயையென்கிற அத்ரிமஹரிஷியின் பத்தினியுடன் சேர்ந்திருந்ததையும், அந்த அநஸூயை ஸீதைக்குச் சந்தனம் முதலானது கொடுத்ததையும்.

अगस्त्यदर्शनं चैव जटायोरभिसङ्गमम् ।
पञ्चवट्याश्च गमनं शूर्पणख्याश्च दर्शनम् ॥ 19 ॥

शूर्पणख्याश्च संवादं विरूपकरणं तथा ।
वधं खरत्रिशिरसोरुत्थानं रावणस्य च ॥ 20 ॥

मारीचस्य वधं चैव वैदेह्या हरणं तथा ।
राघवस्य विलापं च गृध्रराजनिबर्हणम् ॥ 21 ॥

19. (ப-ரை) अगस्त्यदर्शनं च एव- அகஸ்த்திய மஹரிஷியைப்பார்த்ததையும், जटायोः- ஜடாயுவினுடைய, अभिसङ्गमं- சேர்க்கையையும், पञ्चवट्याः- பஞ்சவடிக்கு, गमनं च- சென்றதையும், शूर्पणख्याः- சூர்ப்பணகியினுடைய, दर्शनम् च- தரிசனத்தையும்,

20. (ப-ரை) शूर्पणख्याः- சூர்ப்பணகையினுடைய, संवादं च- ஸம்பாஷணைத்தையும், तथा- அப்படியே, विरूपकरणं- (அவளுக்கு) விகாரத்தைச்செய்ததையும், खरत्रिशिरसोः- கரனுடையவும், த்ரிசிரஸினுடையவும், वधं- ஸம்ஹாரத்தையும், रावणस्य- இராவணனுடைய, उत्थानं च- புறப்பாட்டையும்,

21. (ப-ரை) मारीचस्य- மாரீசனுடைய, वधं च एव- ஸம்ஹாரத்தையும், तथा—அவ்விதம், वैदेह्याः हरणं- (இராவணன்) ஸீதையை அபஹரித்ததையும், राघवस्य- ஸ்ரீராமனுடைய, विलापं च- கதறுதலையும், गृध्रराजनिबर्हणम्-ஜடாயுவைக்கொன்றதையும்,

19. (பொ-ரை) அகஸ்த்திய மஹரிஷியைப்பார்த்ததையும், ஜடாயுவினுடன் சேர்ந்ததையும், பஞ்சவடியைக்குறித்துச் சென்றதையும், அங்கு சூர்ப்பணகையைப் பார்த்ததையும்,

20. (பொ-ரை) சூர்ப்பணகையுடன் ராமனுக்கு நடந்த ஸம்பாஷணத்தையும், அவளை காது மூக்குகளை அறுத்து விகாரப்படுத்தினதையும், கரன் தூஷணன், த்ரிசிரஸ் முதலானவர்களைக் கொன்றதையும், அதைக்கேட்டு இராவணன் புறப்பட்டு வந்ததையும்,

21. (பொ-ரை) மாரீசனை ஸ்ரீராமன் ஸம்ஹரித்ததையும், இராவணன் ஸீதையை அபஹரித்துக் கொண்டு போனதையும், அதனால் ஸ்ரீராமன் கதறிக் கொண்டிருந்ததையும், இராவணனோடு போர்புரிந்த ஜடாயுவை இராவணன் கொன்றதையும்,

कबन्धदर्शनं चैव पम्पायाश्चैव दर्शनम् ।
शबर्या दर्शनं चैव हनूमद्दर्शनं तथा ॥
विलापं चैव पम्पायां राघवस्य महात्मनः ॥ 22 ॥
ऋश्यमूकस्य गमनं सुग्रीवेण समागमम् ।
प्रत्ययोत्पादनं सख्यं वालिसुग्रीवविग्रहम् ॥ 23 ॥
वालिप्रमथनं चैव सुग्रीवप्रतिपादनम् ।
ताराविलापं समयं वर्षरात्रनिवासनम् ॥ 24 ॥

---

22. (ப-ரை) कबन्धदर्शनं च एव- *கபந்தனைப்பார்த்ததையும்*, पम्पायाः- *பம்பா ஸரஸினுடைய*, दर्शनं च अपि- *தரிசனத்தையும்*, शबर्याः- *சபரியினுடைய*, दर्शनं च एव- *தரிசனத்தையும்*, तथा- *அவ்விதம்*, हनूमद्दर्शनं- *ஹனுமானைப்பார்த்ததையும்*, पम्पायां- *பம்பாஸரஸின் கரையில்*, महात्मनः- *மிக்கதீரனான*, राघवस्य- *ஸ்ரீராமனுடைய*, विलापं च एव- *கதறுதலையும்*,

23. (ப-ரை) ऋश्यमूकस्य- *ரிச்யமூகமலைக்கு*, गमनं- *சென்றதையும்*, सुग्रीवेण- *ஸுக்ரீவனுடன்*, समागमम्- *சேர்ந்ததையும்*, सख्यं- *(ஸுக்ரீவனோடு) ஸிநேஹத்தையும்*, प्रत्ययोत्पादनं- *நம்பிக்கையையுண்டுபண்ணினதையும்*, वालिसुग्रीवविग्रहम्- *வாலிக்கும், ஸுக்ரீவனுக்கும் நடந்த சண்டையையும்*,

24. (ப-ரை) वालिप्रमथनं च एव- *வாலியை ஸம்ஹரித்ததையும்*, सुग्रीवप्रतिपादनम्- *ஸுக்ரீவனுக்கு (கிஷ்கிந்தா ராஜ்யத்தைக்) கொடுத்ததையும்*, ताराविलापं- *தாரையின் புலம்பலையும்*, समयं- *காலம் குறித்ததையும்*, वर्षरात्रनिवासनम्- *மழைகாலத்து தினங்களில் (ரிச்யமூகமலையில்) வஸித்ததையும்*,

---

22. (பொ-ரை) *கபந்தனைக்கண்டதையும், பம்பாஸரஸைக் கண்டதையும், சபரி என்கிற பரமபக்தையான வேடஸ்திரீயைக்கண்டதையும், ஹனுமானைப்பார்த்ததையும், பம்பா ஸரஸின் கரையில் மஹாதீரனாயிருந்த ஸ்ரீராமன் ஸீதையை நினைத்துக்கொண்டு அற்பமனுஷ்யனைபோல்கதறினதையும்,*

23. (பொ-ரை) *ரிச்யமூகமென்னும் மலையை நாடிச்சென்றதையும், அங்கு ஸுக்ரீவனுடன் சந்தித்ததையும், அவருடன் ஸிநேகம் செய்ததையும், வாலியை ஸம்ஹரிக்கக்கூடிய பலம் ராமனுக்கு இருக்குமா இல்லையா என்று ஸம்சயங்கொண்ட ஸுக்ரீவனுக்கு, நம்பிக்கையுண்டு பண்ணினதையும், வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் நடந்த சண்டையையும்,*

24. (பொ-ரை) *வாலியை ஸம்ஹாரம் செய்ததையும், ஸுக்ரீவனுக்கு கிஷ்கிந்தா ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்வித்ததையும், வாலி இறந்தபிறகு தாரை கதறினதையும், மழைகாலம் கழிந்தபிறகு சரத்காலத்தில் ஸீதையைத் தேடித்தருகிறேனென்று ஸ்ரீராமனிடம் ஸுக்ரீவன் காலம் குறித்ததையும், மழைகாலங்களில் ராமலக்ஷ்மணர் ரிச்யமூகமலையில் வஸித்துக் கொண்டு இருந்ததையும்,*

कोपं राघवसिंहस्य बलानामुपसंग्रहम् ।
दिशः प्रस्थापनं चैव पृथिव्याश्च निवेदनम् ॥ 25 ॥
अङ्गुलीयकदानं च ऋक्षस्य बिलदर्शनम् ।
प्रायोपवेशनं चैव सम्पातेश्चैव दर्शनम् ॥ 26 ॥
पर्वतारोहणं चैव सागरस्य च लंघनम् ।
समुद्रवचनाच्चैव मैनाकस्य च दर्शनम् ॥ 27 ॥

25. (ப-ரை) राघवसिंहस्य- ரகு குலத்து அரசர்களுக்குள் சிறந்தவராகிய ராமனுக்கு (ஸுக்ரீவனிடம்) கோபத்தையும், बलानां उपसंग्रहम्- ஸைன்யங்களை ஒன்று சேர்த்ததையும், दिशः- திக்குகளுக்கு, प्रस्थापनं च एव- ஸைன்யங்களை அனுப்பினதையும், पृथिव्याः निवेदनम् च- பூமியின் (நிலையை) தெரிவித்ததையும்,

26. (ப-ரை) अङ्गुलीयकदानं च- முத்திரை மோதிரத்தைக் கொடுத்ததையும், ऋक्षस्य बिलदर्शनम्- ருக்ஷபிலத்தைப் பார்த்ததையும், प्रायोपवेशनं च एव- ப்ராயோபவேசம் செய்ததையும், सम्पातेः दर्शनं च एव- ஸம்பாதியைக் கண்டதை

27. (ப-ரை) पर्वतारोहणं च एव- ஹனுமான் மஹேந்திர மலையில் ஏறினதையும், सागरस्य लंघनं च- ஸமுத்திரத்தைத் தாண்டினதையும், समुद्रवचनात् च एव- ஸமுத்திரராஜனுடைய வார்த்தையினால், मैनाकस्य- மைனாகமலையினுடைய, दर्शनं च- தரிசனத்தையும்.

25. (பொ-ரை) மழைகாலம் நான்குமாதம் கழிந்தும் ஸுக்ரீவன் தான் சொல்லியிருந்தபடி ஸ்ரீராமனிடம் வராதபடியால் அவனிடம் ஸ்ரீராமனுக்குக் கோபம் வந்ததையும், பிறகு ஸுக்ரீவன் தன் வானரப்படைகளை திரட்டி ஒன்றுசேர்த்ததையும், ஒவ்வொரு திக்குகளிலும் ஸீதையைத் தேடுவதற்காக அவர்களை அனுப்பியதையும், அப்படி அனுப்பப்பட்ட வானரர்களுக்கு பூமியின் அமைப்புகளைக் குறிப்பாகக் காட்டி தெரிவித்ததையும்,

26. (பொ-ரை) ஹனுமானிடத்தில் ஸ்ரீராமன் கணையாழி மோதிரத்தைக் கொடுத்ததையும், தெற்குதிக்கை நோக்கிச்சென்ற ஹனுமான் முதலான வானரவீரர்கள் ருக்ஷபிலம் என்கிற ஸ்வயம்பிரபையின் குகையைப்பார்த்ததையும், மரணத்தை அடைவதற்காக வானரர்களெல்லோரும் தரையில் படுத்துக்கொண்டதையும், ஜடாயுவின் அண்ணனான ஸம்பாதியைப் பார்த்ததையும்,

27. (பொ-ரை) ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்காக ஹனுமான் மஹேந்திர மலையில் ஏறினதையும், ஸமுத்திரத்தைக் தாண்டினதையும், ஸமுத்திரராஜனுடைய வார்த்தையினால் மைனாகமலையைப் பார்த்ததையும்.

सिंहिकायाश्च निधनं लंकामलयदर्शनम् ।
रात्रौ लंकाप्रवेशं च एकस्य च विचिन्तनम् ॥ 28 ॥

आपानभूमिगमनमवरोधस्य दर्शनम् ।
दर्शनं रावणस्यापि पुष्पकस्य च दर्शनम् ॥ 29 ॥

अशोकवनिकायानं सीतायाश्चैव दर्शनम् ।
अभिज्ञानप्रदानं च *सीतायाश्चाभिभाषणम् ॥ 30 ॥

28. (ப-ரை) सिंहिकाया:- ஸிம்ஹிகையினுடைய, निधनं च- மரணத்தையும், लंकामलयदर्शनं- இலங்கைக்கு ஆதாரமான மலயமென்கிற மலையைப்பார்த்ததையும், रात्रौ- இரவில், लंकाप्रवेशं च- இலங்கையில் நுழைந்ததையும், एकस्य- (ஹனுமான்) ஒருவராயிருந்து, विचिन्तनं च- ஆலோசித்ததையும்,

29. (ப-ரை) आपानभूमिगमनं- மத்யசாலையில் சென்றதையும், अवरोधस्य दर्शनं- அந்தப்புரத்தைப்பார்த்ததையும், रावणस्य दर्शनं अपि- இராவணனைப்பார்த்ததையும், पुष्पकस्य दर्शनं च- புஷ்பகவிமானத்தைக்கண்டதையும்,

30. (ப-ரை) अशोकवनिकायानं- அசோக வனத்தில் சென்றதையும், सीताया: दर्शनं च एव- ஸீதையைக்கண்டதையும், अभिज्ञानप्रदानं च- அடையாளம் கொடுத்ததையும், सीताया: अभिभाषणं च- (ஹனுமானுடன்) ஸீதை செய்த ஸம்பாஷணத்தையும்,

28. (பொ-ரை) ஸிம்ஹிகையென்கிற அஸுரஸ்திரியை ஸம்ஹரித்ததையும், இலங்கை நகரத்திற்கு ஆதாரமான மலயமென்கிற பர்வதத்தைப் பார்த்ததையும், ஸூர்யாஸ்தமன மானபிறகு இலங்கையிற் பிரவேசித்ததையும், அங்கு ஸீதையைப் பலவிடங்களிற் தேடியும் காணாமையால் ஹனுமான் ஒருவராகவிருந்து மனதில் விசாரப்பட்டதையும்,

29. (பொ-ரை) மதுபானம் செய்யும் சாலையில் சென்றதையும், அந்தப்புரத்தைப்பார்த்ததையும், அங்கு இராவணனைக் கண்டதையும், புஷ்பகம் என்னும் விமானத்தைக் கண்டதையும்,

30. (பொ-ரை) அசோகவனத்தைக் குறித்துச் சென்றதையும், அங்கு ஸீதையைப் பார்த்ததையும், ஸீதையிடம், ராமன் கொடுத்த கணையாழியைக் கொடுத்ததையும், ஸீதைக்கும் ஹனுமானுக்கும் நடந்த ஸம்பாஷணத்தையும்,

राक्षसीतर्जनं चैव त्रिजटास्वप्नदर्शनम् ।
मणिप्रदानं सीताया वृक्षभङ्गं तथैव च ॥ 31 ॥
राक्षसीविद्रवं चैव किंकराणां निबर्हणम् ।
ग्रहणं वायुसूनोश्च *लंकादाहाभिगर्जनम् ॥ 32 ॥
प्रतिप्लवनमेवाथ मधूनां हरणं तथा ।
राघवाश्वासनं चैव मणिनिर्यातनं तथा ॥ 33 ॥

31. (ப-ரை) राक्षसीतर्जनं च एव- இராக்ஷஸிகள் ஸீதாதேவியைப் பயமுறுத்தினதையும், त्रिजटास्वप्नदर्शनम्- த்ரிஜடை ஸ்வப்னம் கண்டதையும், सीतायाः मणिप्रदानं- ஸீதை ஹநுமானிடம் சூடாமணி கொடுத்ததையும், तथैव- அப்படியே, वृक्षभङ्गं- மரங்களை முறித்ததையும்,

32. (ப-ரை) राक्षसीविद्रवं च एव- இராக்ஷஸ ஸ்த்ரீகள் ஓடினதையும், किंकराणां- கிங்கரர்களுடைய, निबर्हणं- அபஹாரத்தையும், वायुसूनोः ग्रहणं च- ஹநுமான் பிடிபட்டதையும், लंकादाहाभिगर्जनं- இலங்கையைக்கொளுத்தியபோது இராக்ஷஸர்கள் கதறினதையும்,

33. (ப-ரை) अथ- பிறகு, प्रतिप्लवनं एव- திரும்பவும் ஸமுத்திரத்தைத் தாண்டினதையும், तथा- அப்படியே, मधूनां हरणं- (மதுவனத்தில்) மதுக்களை அழித்ததையும், राघवाश्वासनं च एव- ராமனை ஸமாதானம் செய்ததையும், तथा- அப்படியே, मणिनिर्यातनं- சூடாமணியைக்கொடுத்ததையும்.

रावणस्य च दर्शनं- ஸீதையைப்பார்க்க அசோகவனத்திற்கு வந்த இராவணனை ஹநுமான் பார்த்ததையும். என்று பாடாந்திரம்.

31. (பொ-ரை) இராக்ஷஸிகள் ஸீதாதேவியைப் பயமுறுத்தினதையும், த்ரிஜடை ஸ்வப்னம் கண்டதையும், ஸீதாதேவி ஹநுமானிடம் சூடாமணி கொடுத்ததையும், அசோகவனத்திலுள்ள மரங்களை ஹநுமான் முறித்ததையும்,

32. (பொ-ரை) இராக்ஷஸிகள் ஹநுமானைக்கண்டு பயந்து ஓடினதையும், பிறகு இராவணனால் அனுப்பப்பட்ட கிங்கரர்கள் எண்பதினாயிரம் பேர்களையும் ஹநுமான் கொன்றதையும், இந்திரஜித்தினால் ஹநுமான் ப்ரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டதையும், இலங்கையைக் கொளுத்தினதினால் அங்கிருக்கிறவர்களெல்லோரும் கதறினதையும்,

लङ्कादाहाभिगर्जनम्- ஹநுமான் இலங்காபட்டணத்தைக்கொளுத்தி கர்ஜனம் செய்ததையும், என்று பாடாந்திரம்.

33. (பொ-ரை) பிறகு ஸமுத்திரத்தை மறுபடி தாண்டினதையும், மதுவனத்தை வானரர்கள் அழித்ததையும், ராமனிடம் வந்து ஸமாசாரம் சொன்னதையும், ஸீதை கொடுத்த சூடாமணியை ஸ்ரீராமனிடம் ஸமர்ப்பித்ததையும்.

संगमं च समुद्रेण नलसेतोश्च बन्धनम् ।
प्रतारं च समुद्रस्य रात्रौ लंकावरोधनम् ॥ 34 ॥

विभीषणेन संसर्गं वधोपायनिवेदनम् ।
कुम्भकर्णस्य निधनं मेघनादनिबर्हणम् ॥ 35 ॥

रावणस्य विनाशं च सीतावाप्तिमरेः पुरे ।
विभीषणाभिषेकं च पुष्पकस्य च दर्शनम् ॥ 36 ॥

---

34. (ப-ரை) समुद्रेण- ஸமுத்திர ராஜனோடு, संगमं च- சேர்ந்ததையும், नलसेतोः- நளனால் அணையினுடைய, बन्धनं च- நிர்மாணத்தையும், समुद्रस्य प्रतारं च–ஸமுத்திரத்தைத்தாண்டினதையும், रात्रौ-இராத்திரியில், लंकावरोधनं-இலங்கையை வளைத்ததையும்,

35. (ப-ரை) विभीषणेन- விபீஷணனோடு, संसर्गं- சேர்ந்ததையும், वधोपायनिवेदनं- இந்திரஜித்து முதலானவர்களின் ஸம்ஹாரத்திற்கு உபாயத்தைத்தெரிவித்ததையும், कुम्भकर्णस्य- கும்பகர்ணனுடைய, निधनं- ஸம்ஹாரத்தையும், मेघनादनिबर्हणम्- இந்திரஜித்தின் ஸம்ஹாரத்தையும்,

36. (ப-ரை) रावणस्य- இராவணனுடைய, विनाशं च- நாசத்தையும், अरेः- சத்ருவினுடைய, पुरे- நகரத்தில், सीता अवाप्तिं- ஸீதையை அடைந்ததையும், विभीषणाभिषेकं च-விபீஷணனுக்குப்பட்டாபிஷேகம் செய்ததையும், पुष्पकस्य- புஷ்பகவிமானத்தினுடைய, दर्शनम् च- தரிசனத்தையும்,

34. (பொ-ரை) ஸமுத்திர ராஜனோடு சேர்ந்ததையும், நளனென்கிற வானரனால் ஸமுத்திரத்தில் அணை கட்டினதையும், அதின் வழியாக ஸமுத்திரத்தைத் தாண்டிச்சென்றதையும், இரவில் இலங்கா நகரத்தை ஸைன்யங்களால் வளைத்துக் கொண்டதையும்,

35. (பொ-ரை) கடற்கரையில் சரணாகதி செய்து ஸ்ரீராமனிடம் விபீஷணன் வந்து சேர்ந்ததையும், இந்திரஜித்து முதலான இராக்கதர்களுடைய வதத்திற்கு வேண்டிய உபாயத்தை விபீஷணன் தெரிவித்ததையும், கும்பகர்ணனை ஸம்ஹாரம் செய்ததையும், இந்திரஜித்தை வதம் செய்ததையும்,

36. (பொ-ரை) இராவணனை ஸம்ஹரித்ததையும், சத்ருவின் நகரமாகிய இலங்கையில் ஸீதையை அடைந்ததையும், அங்கயத்தில் அரசனாக விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்ததையும், புஷ்பகவிமானத்தைப் பார்த்ததையும்,

अयोध्यायाश्च गमनं भरतेन समागमम् ।
रामाभिषेकाभ्युदयं सर्वसैन्यविसर्जनम् ॥
स्वराष्ट्ररञ्जनं चैव वैदेह्याश्च विसर्जनम् ॥ 37 ॥

अनागतं च यत्किंचिद्रामस्य वसुधातले ।
तच्चकारोत्तरे काव्ये वाल्मीकिर्भगवानृषिः ॥ 38 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
तृतीयः सर्गः ॥ 3 ॥

37. (ப-ரை) अयोध्यायाः गमनं च- அயோத்திக்குச் சென்றதையும், भरतेन- பரதனோடு, समागमं- சேர்ந்ததையும், रामाभिषेकाभ्युदयं- ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேக மஹோத்ஸவத்தையும், सर्वसैन्यविसर्जनं- எல்லா ஸைன்யங்களையும் அனுப்பிவிட்டதையும், स्वराष्ट्ररञ्जनं च एव- தன்னுடைய தேசத்திலுள்ள ஜனங்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருந்ததையும், वैदेह्याः विसर्जनं च- ஸீதையை பரித்யாகம் செய்ததையும்,

38. (ப-ரை) वसुधातले- பூலோகத்தில், अनागतं- இனிமேல் வரப்போகின்ற, रामस्य- ராமனுடைய, यत् किंचित् च- யாதொரு சரித்திரமுண்டோ, तत्- அதையும், भगवान्- ஞானஸம்பூர்ணரான, वाल्मीकिः ऋषिः- வால்மீகி மஹரிஷியானவர், उत्तरे काव्ये- உத்தரஸ்ரீராமாயணத்தில், चकार- அமைத்திருக்கிறார்.

37. (பொ-ரை) புஷ்பக விமானத்தில் ஏறி வானர ஸைன்யங்களுடன் அயோத்திமா நகரத்திற்குச் சென்றதையும், பரதனுடன் சேர்ந்ததையும், ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேக மஹோத்ஸவத்தையும், வானர விபீஷணாதிகளான ஸமஸ்த ஸைன்யங்களையும் தங்கள் இருப்பிடத்திற்கு அனுப்பினதையும், ஸ்ரீராமன் இராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் ஜனங்களிடம் ஸ்ரீராமன் அன்புடனிருந்ததையும், ஸ்ரீராமனிடத்தில் ஜனங்கள் அன்புடனிருந்ததையும், ஸீதையை காட்டிற்கு அனுப்பினதையும்,

38. (பொ-ரை) ஸ்ரீராமன் இராஜ்யபரிபாலனம் செய்கிறபொழுது நடக்கப்போகின்ற சில கதைகளையும் வால்மீகி மஹரிஷியானவர் உத்தரஸ்ரீராமாயணத்தில் செய்தார்.

चतुर्थः सर्गः ॥ 4 ॥

प्राप्तराज्यस्य रामस्य वाल्मीकिर्भगवानृषिः ।
चकार चरितं कृत्स्नं विचित्रपदमात्मवान् ॥ 1 ॥

चतुर्विंशत्सहस्राणि श्लोकानामुक्तवानृषिः ।
तथा सर्गशतान् पञ्च षट्काण्डानि तथोत्तरम् ॥ 2 ॥

1. (ப-ரை) भगवान्- ஞானசக்தியுடையவராயும், आत्मवान्- மிகவும் ப்ரயத்தனமுள்ளவருமான, वाल्मीकिः ऋषिः- வால்மீகி மஹரிஷியானவர், प्राप्तराज्यस्य- ராஜ்யத்தை ஆண்டுகொண்டிருக்கிற, रामस्य- ஸ்ரீராமனுடைய, विचित्रपद- ஆச்சர்யமான பதங்களையுடைய, कृत्स्न चरितं- சரித்திரம் முழுவதையும், चकार- செய்தார்.

2. (ப-ரை) ऋषिः- வால்மீகி மஹரிஷியானவர், (काव्य- ஸ்ரீராமாயணமென்னும் காவ்யத்தில்), श्लोकानां चतुर्विंशत् सहस्राणि- இருபத்திநாலாயிரம் ச்லோகங்களையும், तथा- அவ்விதமே, पञ्च सर्गशतान्- ஐந்நூறு ஸர்க்கங்களையும், षट् काण्डानि- ஆறு காண்டங்களையும், तथा- அப்படியே, उत्तरम्- உத்தரகாண்டத்தையும், उक्तवान्- சொன்னார்.

முதல் ஸர்க்கத்தில் க்ரந்தத்தின் விஷயம் சிறந்ததென்று சொல்லப்பட்டது. இந்த ஸர்க்கத்தில் க்ரந்தம் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. க்ரந்திற்கு சிறப்பாவது:— மிகவும் ஆப்தர்கள் செய்ததும், புண்யச்லோக விஷயமானதும், மஹாஜனங்கள் பரிக்ரஹித்ததும், கதாநாயகனால் ச்லாகிக்கப்பட்டதும். இவை முதலானது.

1. (பொ-ரை) ப்ரம்மாவினுடைய அனுக்ரஹத்தினால் திவ்யஜ்ஞானத்தை அடைந்தவரும், ஸ்ரீராமாயணமென்கிற ப்ரபந்தத்தைச் செய்யத்தக்க ப்ரயத்தனமுள்ளவருமான ஸ்ரீவால்மீகி மஹரிஷி விசித்திரமான பதங்களின் சேர்க்கையையுடைய ஸ்ரீராமனுடைய சரித்திரமான ஸ்ரீமத்ராமாயணமென்னும் க்ரந்தத்தை ஸ்ரீராமன் இராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்கும் காலத்தில் செய்தார்.

2. (பொ-ரை) வால்மீகி மஹரிஷி तपस्स्वाध्याय- என்று ஆரம்பித்து तत् सर्वमाख्यानमनुत्तम *(?)* என்றதுவரையில் தாம் செய்யவேணுமென்று நினைத்த ஸ்ரீமத்ராமாயணமென்னும் ப்ரபந்தத்தில் இருபத்திநாலாயிரம் ச்லோகங்களையும் ஐந்நூறு ஸர்க்கங்களையும், ஆறுகாண்டங்களையும், வரப்போகிற கதையைத் தெரிவிக்கின்ற ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தையும் செய்தார்.

1765

कृत्वापि तन्महाप्राज्ञः सभविष्यं सहोत्तरम् ।
चिन्तयामास कोन्वेतत्प्रयुञ्जीयादिति प्रभुः ॥ 3 ॥
तस्य चिन्तयमानस्य महर्षेर्भावितात्मनः ।
अगृह्णीतां ततः पादौ मुनिवेषौ कुशीलवौ ॥ 4 ॥
कुशीलवौ तु धर्मज्ञौ राजपुत्रौ यशस्विनौ ।
भ्रातरौ स्वरसम्पन्नौ ददर्शाश्रमवासिनौ ॥ 5 ॥

3. (ப-ரை) महाप्राज्ञः- சிறந்த புத்தியுடைய பகவானாகிய வால்மீகி முனிவரானவர், सहोत्तरम्- (ஸ்ரீராமபட்டாபிஷேகத்திற்கு) பிறகு நடக்க விருத்தாந்தத்தோடு கூடினதும், सभविष्य- அப்படியே பாக்கியிருப்பதும் பிறகு நடக்க விருத்தாந்தத்தோடு கூடியதுமான, तत्- அந்த காவ்யத்தை, कृत्वा अपि- செய்தும், एतत्- இந்த காவ்யத்தை, प्रभुः- ஸமர்த்தரான, कः- எந்த புருஷன், प्रयुञ्जीयात् [illegible], इति- என்று, चिन्तयामास- ஆலோசிக்கலானார்.

4. (ப-ரை) ततः- பிறகு, मुनिवेषौ- முனிவேஷமுடைய, कुशीलवौ- குசலவர்கள், चिन्तयमानस्य- அவ்விதம் ஆலோசிக்கின்றவரும், भावितात्मनः பரமாத்ம தியானம் செய்துகொண்டிருக்கிற, तस्य महर्षेः- அந்த வால்மீகி மஹரிஷியினுடைய, पादौ- பாதங்களை, अगृह्णीताम्- பிடித்தார்கள்.

5. (ப-ரை) धर्मज्ञौ- தர்மங்களை அறிந்தவர்களும், राजपुत्रौ- ராஜகுமாரர்களும், यशस्विनौ- கீர்த்தியுடையவர்களும், स्वरसम्पन्नौ- நல்ல [illegible]முடையவர்களும், आश्रमवासिनौ- தபோவன ஆச்ரமத்தில் வஸிக்கின்றவர்களும், भ्रातरौ- ஸஹோதரர்களுமான, कुशीलवौ- குசலவர்களை, ददर्श- கண்டார்.

3. (பொ-ரை) மஹா புத்திமானான வால்மீகி முனிவர் ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்குப் பிறகு நடக்க விருத்தாந்தத்துடனும், அப்படியே பாக்கியும் பிறகு நடக்க விருத்தாந்தத்துடனும் கூடினதான ஸ்ரீராமாயணமென்னும் காவ்யத்தைச் செய்து "இக்காவ்யத்தை [illegible] [illegible] ஜன ஸமூகத்தில் பாடும்படி செய்வான்" என்று ஆலோசிக்கலானார்.

4. (பொ-ரை) பிறகு, ரிஷிகளின் வேஷத்தைக் கொண்டவர்களான குசலவர்கள் [illegible] இப்படி ஆலோசிக்கின்றவரும், [illegible] [illegible] பரமாத்மாவை தியானம் செய்துகொண்டிருக்கிற அந்த வால்மீகி மஹரிஷியின் பாதங்களில், ஸ்ரீராம [illegible] [illegible] [illegible] [illegible].

5. (பொ-ரை) அந்த சிஷ்யர்களை [illegible] [illegible] [illegible]
களும், ராஜபுத்திரர்களாகையால் ஆச்ரமத்தில் [illegible] [illegible]

स तु मेधाविनौ दृष्ट्वा वेदेषु परिनिष्ठितौ ।
वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः ॥ 6 ॥

काव्यं रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत् ।
पौलस्त्यवधमित्येव चकार चरितव्रतः ॥ 7 ॥

6. (ப-ரை) प्रभुः- ஸமர்த்தரான, सः तु- அந்த வால்மீகி மஹரிஷியும், वेदेषु- வேதங்களில், मेधाविनौ- புத்தியை உடையவர்களும், परिनिष्ठितौ- (வேத அங்கங்களில்) நிலை நின்ற புத்தியுடையவர்களுமான, तौ- அந்த குசலவர்களை, वेदोपबृंहणार्थाय- வேதங்களுக்கு உபப்ரும்மணம் செய்வதற்காக, अग्राहयत- கைக்கொண்டார்.

7. (ப-ரை) चरितव्रतः- வ்ரதங்களை அனுஷ்டித்தவரான வால்மீகி மஹரிஷி, रामायणं- ஸ்ரீராமனை ப்ரதிபாதிக்கின்றதும், कृत्स्नं- முழுவதும், सीतायाः चरितं- ஸீதையினுடைய சரித்திரத்தை ப்ரதிபாதிக்கின்றதுமான, महत् काव्यं- யாதொரு பெரிய காவ்யத்தை, पौलस्त्यवधं इति एव- இராவணனுடைய வதத்தை பலமாகக்கொண்டதாகவே, चकार- செய்தாரோ!

வர்களும், அநேக வித்தைகளை கற்று அதினால் உலகமெல்லாம் பரவிய கீர்த்தியுடையவர்களும், நல்ல சாரீர சம்பத்து உடையவர்களும், வால்மீகி மஹரிஷியின் ஆச்ரமத்தில் வஸித்துக்கொண்டிருக்கிறபடியால் அவரது அன்பிற்கு இடமுமாயும், ஸஹோதரர்களாகையால் ஒரே விதமான குறலோடு கூடியவர்களுமான குசலவர்களை வால்மீகிமஹரிஷி கண்டார்.

அதாவது, இவர்களுக்கு ராமாயணத்தை உபதேசம்செய்தால் இவர்கள் இதை உலகம் முழுவதும் பரவும்படி செய்வார்கள். என்று எண்ணினார்.

6. (பொ-ரை) ஸ்வதந்திரரான அந்த வால்மீகி மஹரிஷியும். ருக், யஜுஸ், ஸாம, அதர்வண என்கிற நான்கு வேதங்களில் நிலை நின்ற புத்தியுடையவர்களும், வேதாங்கங்களையும் நன்றாய் ஓதினவர்களுமான அந்த குசலவர்கள் இருவரையும் வேதாந்தார்த்தத்தை விசதமாகச்செய்ய தாம் எழுதியிருக்கிற ஸ்ரீமத் ராமாயணமென்னும் க்ரந்தத்தை உபதேசிப்பதற்காகக் கைக்கொண்டார்.
(அதாவது சிஷ்யர்களாகக் கொண்டார்.)

7. (பொ-ரை) வ்ரதானுஷ்டானங்கள் செய்து அதனால் உயர்ந்த ஜ்ஞானத்தையுடைய வால்மீகி மஹரிஷி, ஸ்ரீராமனை ப்ரதானமல்லாத விஷயமாகக்கொண்டதும், முழுமையும் ஸீதையின் சரித்திரத்தை ப்ரதான விஷயமாகக் கொண்டதுமான யாதொரு பெரும்காவ்யத்தை, இராவண வதத்தை பலமாகக் கொண்டதாக செய்தாரோ! அதை உபதேசித்து பாடுவித்தார்.

पाठ्ये गेये च मधुरं प्रमाणैस्त्रिभिरन्वितम् ।
जातिभिः सप्तभिर्बद्धं तन्त्रीलयसमन्वितम् ॥ 8 ॥
रसैः शृङ्गारकारुण्यहास्यवीरभयानकैः ।
रौद्रादिभिश्च संयुक्तं काव्यमेतदगायताम् ॥ 9 ॥
तौ तु गान्धर्वतत्त्वज्ञौ मूर्छनास्थानकोविदौ ।
भ्रातरौ स्वरसम्पन्नौ गन्धर्वाविव रूपिणौ ॥ 10 ॥
रूपलक्षणसम्पन्नौ मधुरस्वरभाषिणौ ।
बिम्बादिवोत्थितौ बिम्बौ रामदेहात्तथापरौ ॥ 11 ॥

8-9. (ப-ரை) पाठ्ये- படிப்பதிலும், गेये च- பாடுவதிலும், मधुरं- இனிதாயும், शृङ्गारकारुण्यहास्यवीरभयानकैः- ச்ருங்கார, கருணை, ஹாஸ்ய, வீர, பயானக ரஸங்களோடும், रौद्रादिभिः च- ரௌத்ரம் முதலான, रसैः- ரஸங்களோடும், संयुक्तं- கூடியிருக்கிற, एतत् काव्यं- இந்தக்காவ்யத்தை, त्रिभिः प्रमाणैः- த்ருத, மத்ய, விளம்பித என்கிற மூன்று ப்ரமாணங்களோடு, अन्वितं- கூடினதாகவும், सप्तभिः जातिभिः- ஏழு ஜாதிகளோடு, बद्धं- சேர்க்கப்பட்டதாகவும், तन्त्रीलयसमन्वितं- வீணையுடனும், தாளத்துடனும், சேர்ந்ததாகவும், अगायताम्-பாடினார்கள்.

10-11. (ப-ரை) गान्धर्वतत्त्वज्ञौ- ஸங்கீத சாஸ்த்ரத்தின் ரஹஸ்யத்தையறிந்தவர்களும், मूर्छनास्थानकोविदौ-வீணை முதலான வாத்யங்களை மந்த்ர மத்ய தார மென்ற மூன்று ஸ்வரங்களின் உற்பத்தி ஸ்தானத்தை அறிந்தவர்களும், स्वरसम्पन्नौ- சாரீர ஸம்பத்துடையவர்களும், रूपिणौ- மனுஷ்ய வேடங்கொண்ட, गन्धर्वौ इव- கந்தர்வர்கள் போன்றவர்களும், रूपलक्षणसम्पन्नौ- நாடகத்தின் லக்ஷணத்தை நன்றாயறிந்தவர்களும், मधुरस्वरभाषिणौ- குரல் இனிதாக இருக்கும்படி பேசும் ஸ்வபாவம் உடையவர்களும், रामदेहात्- ஸ்ரீராமன் திருமேனியாகிய, बिम्बात्- பிம்பத்திலிருந்து, तथा- அப்படியே, उत्थितौ- உண்டாயிருக்கிற, बिम्बौ इव- ப்ரதி பிம்பங்கள் போன்றவரும், भ्रातरौ-ஸஹோதரர்களுமான, तौ- அந்தக்குசலவர்கள். (अगायतां- பாடினார்கள்).

8-9. (பொ-ரை) படிப்பதற்கும், பாடுவதற்கும் இனிதாயும், ச்ருங்கார கருணைய ஹாஸ்ய வீர பயானக ரௌத்ரம் முதலிய ரஸங்கள் நிறைந்து இருக்கிற இந்த ராமாயணமென்னும் காவ்யத்தை, த்ருச்ர, சதுரச்ர, மிச்ர (த்ருத மத்ய விலம்பித) என்னும் தாளங்களோடு கூடியதும் சுத்த விக்ருத ஸங்கீர்ணங்களுமான 18 ஸ்வரஜாதிகளில் ப்ரதானமான ஷட்ஜம்முதலான ஏழு ஜாதிகளுடனுமானதாயும், வீணை தாளம் இவைகளுடன் கூடியதாகவும் குசலவர்கள் பாடினார்கள்.

10-11. (பொ-ரை) ஸங்கீத சாஸ்திரத்தின் உண்மை அறிந்தவர்களாயும் வீணை முதலான வாத்யங்கள் வாசிப்பதையும், மந்த்ர, மத்ய, தார என்கிற ஸ்வர

तौ राजपुत्रौ कार्त्स्न्येन धर्म्यमाख्यानमुत्तमम् ।
वाचोविधेयं तत्सर्वं कृत्वा काव्यमनिन्दितौ ॥ 12 ॥

ऋषीणां च द्विजातीनां साधूनां च समागमे ।
यथोपदेशं तत्त्वज्ञौ जगतुस्तौ समाहितौ ॥
महात्मानौ महाभागौ सर्वलक्षणलक्षितौ ॥ 13 ॥

12-13. (ப-ரை) अनिन्दितौ- புகழத்தக்கவர்களும், तत्त्वज्ञौ- உண்மையை அறிந்தவர்களும், समाहितौ- கவனமுள்ளவர்களும், महात्मानौ- பெருமை புத்தியையுடையவர்களும், सर्वलक्षणलक्षितौ- சப்த லக்ஷணங்கள் முழுவதையும் அறிந்தவர்களும், राजपुत्रौ- ராஜகுமாரர்களுமான, तौ- அவர்கள், कार्त्स्न्येन- முழுவதும், धर्म्यं- தர்மத்துடன் கூடியதும், उत्तमं- மிகவும் ச்ரேஷ்டமான, आख्यानं- கதாரூபமான, तत् सर्वं काव्यं- அந்தக்காவ்யம் முழுவதையும், वाचोविधेयं- வாக்கிற்கு வச்யமாக, कृत्वा- செய்து, ऋषीणां च- ரிஷிகளுடையவும், साधूनां- ஸாதுக்களான, द्विजातीनां- ப்ராம்மணர்களுடையவும், समागमे- ஸதஸ்ஸில், जगतुः- பாடினார்கள்.

தின் உற்பத்தி ஸ்தானங்களையும் அறிந்தவர்களாயும், நல்ல சாரீரமுடையவர்களாயும், மனுஷ்ய வேஷம் தரித்த கந்தர்வர்கள் போன்றவர்களாயும், நாடக லக்ஷணங்களை அறிந்தவர்களாயும், இனிமையான ஸ்வரத்துடன் பேசும் ஸ்வபாவமுடையவர்களாயும், ஸ்ரீராமனுடைய திருமேனியாகிய பிம்பத்தினின்று உண்டான ப்ரதிபிம்பம் போன்றவர்களும் ஸ்ரீராமபுத்ரர்களுமான குசலவர்கள் இந்தக்காவ்யத்தைப்பாடினார்கள்.

12-13. (பொருளை) எல்லோராலும் கொண்டாடப்படும், உபதேசித்தபடி பாடத்தின் தத்வத்தை அறிந்தவர்களும், ஓரிடத்திலும், தவறின்றி மிக்க கவனமுள்ளவர்களும், சிறந்த புத்தியுடையவர்களும் மகா பாக்யமுடையவர்களும், சப்தங்களின் லக்ஷணங்களை நன்றாய் அறிந்தவர்களும் ராஜபுத்திரர்களுமான அந்தக் குசலவர்கள், முழுவதும் தர்மத்துடன் கூடியதும் கதாரூபமான மிகவும் சிறந்த இந்த ராமாயணமென்ற காவ்யத்தை வால்மீகி மஹரிஷி உபதேசித்தபடியே வாய்ப்பாடம் செய்துகொண்டு ரிஷிகளுடையவும், ஸாதுக்களான ப்ராம்மணர்களுடையவும் ஸபையில் பாடிக்கொண்டிருந்தார்கள்.

तौ कदाचित्समेतानामृषीणां भावितात्मनाम् ।
आसीनानां समीपस्थाविदं काव्यमगायताम् ॥ 14 ॥
तच्छ्रुत्वा मुनयः सर्वे बाष्पपर्याकुलेक्षणाः ।
साधु साध्विति तावूचुः परं विस्मयमागताः ॥ 15 ॥
ते प्रीतमनसः सर्वे मुनयो धर्मवत्सलाः ।
प्रशशंसुः प्रशस्तव्यौ गायमानौ कुशीलवौ ॥ 16 ॥
अहो गीतस्य माधुर्यं श्लोकानां च विशेषतः ।
चिरनिर्वृत्तमप्येतत्प्रत्यक्षमिव दर्शितम् ॥ 17 ॥

14. (ப-ரை) तौ- அக்குசலவர்கள், कदाचित्- ஒருக்கால், भावितात्मनाम्- பரமாத்மத்யானம் செய்கின்றவர்களும், समेतानां- ஒன்று சேர்ந்தவர்களும், आसीनानां- உட்கார்ந்துகொண்டுமிருக்கிற, ऋषीणां- ரிஷிகளுடைய, समीपस्थौ सन्तौ- ஸமீபத்திலிருந்துகொண்டு, इदं काव्यं- இந்தக்காவ்யத்தை, अगायतां- பாடினார்கள்.

15. (ப-ரை) तत्- அந்தக்காவ்யத்தை, श्रुत्वा- கேட்டு, सर्वे मुनयः- ரிஷிகள் எல்லோரும், बाष्पपर्याकुलेक्षणाः- கண்ணீர் நிறைந்த கண்களையுடையவர்களாய், परं- அதிகமான, विस्मयं- ஆச்சர்யத்தை, आगताः सन्तः- அடைந்தவர்களாய்க்கொண்டு, साधु साधु इति- நன்றாயிருக்கிறது, நன்றாயிருக்கிறதென்று, तौ- அக்குசலவர்களை, ऊचुः- (புகழ்ந்து) பேசினார்கள்.

16-17. (ப-ரை) धर्मवत्सलाः- தர்மத்தில் வாத்ஸல்யமுடையவர்களான, ते सर्वे मुनयः- அந்த முனிகளெல்லோரும், प्रीतमनसः सन्तः- அன்புள்ள மனதுடையவர்களாய்

14. (பொ-ரை) அந்தக்குசலவர்கள் ஒருக்கால் ஸ்ரீராமன் அச்வமேதம் செய்து கொண்டிருக்கும் காலத்தில், பரமாத்மத்யானம் செய்து கொண்டு எல்லோரும் ஒன்று சேர்ந்து யாகத்தின் கார்யம் முடிந்த பிறகு, ஸுகமாக ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிற ரிஷிகளின் ஸமீபத்திலிருந்துகொண்டு இந்தக் காவ்யத்தைப் பாடினார்கள்.

15. (பொ-ரை) அவ்விதம் குசலவர்கள் பாடுகின்ற அந்த ராமாயணமென்னும் காவ்யத்தைக்கேட்டு அதிகமான ஆச்சர்யம் கொண்டு, ஆனந்தத்தினால் கண்களில் நீர் ததும்பியவர்களாய், நன்றாயிருககிறது நன்றாயிருக்கிறதென்று அவர்களைப்புகழ்ந்து பேசினார்கள்.

16-17. (பொ-ரை) தர்மத்தில் ப்ரீதியுடையவர்களான அம்முனிவர்களெல்லோரும் குசலவர்களின் கானத்தைக்கேட்டு மிகவும் அன்புள்ள மனதுடையவர்களாய்,

प्रविश्य तावुभौ सुष्ठु तदा भावमगायताम् ।
सहितौ मधुरं रक्तं सम्पन्नं स्वरसम्पदा ॥ 18 ॥
एवं प्रशस्यमानौ तौ तपःश्लाघ्यैर्महात्मभिः ।
संरक्ततरमत्यर्थं मधुरं तावगायताम् ॥ 19 ॥

க்கொண்டு, गीतस्य- பாட்டின், माधुर्यं- இனிமை, अहो- ஆச்சர்யமாகவுள்ளது, श्लोकानां- ச்லோகங்களின், माधुर्यं च- இனிமையும், विशेषतः- விசேஷமாக, (अहो- ஆச்சர்யமாகவிருக்கிறது.) एतत्- இந்தக்கதை, चिरनिर्वृत्तं अपि- நெடு நாட்களுக்குமுன் நடந்ததாகவிருந்தும், प्रत्यक्षं इव- ப்ரத்யக்ஷமானதுபோல், दर्शितं- காண்பிக்கப்பட்டது, (इति-என்று) प्रशस्तव्यौ- புகழத்தக்கவர்களும், गायमानौ- பாடிக்கொண்டுமிருக்கிற, कुशीलवौ- குசலவர்களை, प्रशशंसुः- புகழ்ந்தார்கள்

18. (ப-ரை) तौ उभौ- அந்தக்குசலவர்கள் இருவரும், तदा- அப்பொழுது, सहितौ सन्तौ- ஒன்று சேர்ந்துகொண்டு, भावं- அபிநயத்தை, सुष्ठु- நன்றாக, प्रविश्य- உள் புகுந்து, स्वरसम्पदा- ஸ்வரங்களுடைய பெருமையோடு, सम्पन्नं- கூடினதாயும், (अत एव- ஆகையினாலே), मधुरं- இனியதாகவும், रक्तं- ராகமுள்ளதாகவும் இருக்கும்படி, अगायताम्- பாடினார்கள்.

19. (ப-ரை) तपःश्लाघ्यैः- தபஸ்ஸினால் புகழப்பட்டவர்களும், महात्मभिः- மிக்க புத்தியுடையவர்களுமான ரிஷிகளால், एवं- இவ்விதம், प्रशस्यमानौ- புகழப்பட்டிருக்கின்ற, तौ- அந்தக்குசலவர்கள், संरक्ततरं- சிறந்த ராகத்துடனும், अत्यर्थं- மிகவும், मधुरं- இனிதாகவும், तौ- அவர்கள், अगायतां- பாடினார்கள்.

கானத்தின் இனிமையோ மிகவும் ஆச்சர்யமானது. ச்லோகங்களின் இனிமையோ அதைவிட விசேஷமாக ஆச்சர்யமாக விருக்கிறது. இந்தக்காவ்யத்தில் சொல்லப்பட்ட கதையானது வெகுநாட்களுக்குமுன் நடந்திருந்த போதிலும் ச்லோகங்களின் அமைப்பினாலும் பாடுகிறவர்களின் சாதுர்யத்தாலும், தற்காலம் ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கப்படுகிறதுபோல் காட்டப்பட்டதென்று, புகழத்தக்கஅக்குசலவர்களைக் கொண்டாடிப் பேசினார்கள்,

18. (பொ-யை) அப்பொழுது அக்குசலவர்களிருவர்களும், தாளம் முதலானவைகளில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனிருந்துகொண்டு, ச்லோகங்களின் பாவமானது நன்றாகப்ரகாசிக்கும்படி அபினயம் செய்து ஷட்ஜம் முதலான ஸ்வரங்களுடனும் இனிதான ராகத்துடனும் பாடினார்கள்.

19. (பொ-ரை) சிறந்த தபஸ்ஸைச்செய்தவர்களும், மிகுந்த புத்தி யுடையவர்களுமான அம்முனிகளால் இவ்விதம் கொண்டாடப்பட்ட, அந்தக்குசலவர்களிருவரும் விசேஷமான ராகத்துடனும், மிகவும் மதுரமாகவும் பாடினார்கள்.

[प्रीतः कश्चिन्मुनिस्ताभ्यां संस्थितः कलशं ददौ ।
प्रसन्नो वल्कले कश्चिद्ददौ ताभ्यां महायशाः ॥ 1 ॥
अन्यः कृष्णाजिनं प्रादाद्यज्ञसूत्रमथापरः ।
कश्चित्कमण्डलुं प्रादान्मौञ्जीमन्यो महामुनिः ॥ 2 ॥
बृसीमन्यस्तदा प्रादात्कौपीनमपरो मुनिः ।
ताभ्यां ददौ तदा हृष्टः कुठारमपरो मुनिः ॥ 3 ॥

1. (ப-ரை) कश्चित् मुनिः- ஒரு முனியானவர், प्रीतः- ப்ரீதியுடையவராய், संस्थितः सन्- எழுந்திருந்து, ताभ्यां- அவர்கள் பொருட்டு, कलशं- தீர்த்த பாத்திரத்தை, ददौ- கொடுத்தார், महायशाः- பெரும் கீர்த்தியுடைய, कश्चित्- ஒரு ரிஷி, प्रसन्नः सन्- ஸந்தோஷமுடையவராய்க்கொண்டு, ताभ्यां- அவர்கள் பொருட்டு, वल्कले- மரவுரிகளை, ददौ- கொடுத்தார்.

2. (ப-ரை) अन्यः- மற்றொருவர், कृष्णाजिनं- க்ருஷ்ணாஜினத்தை, प्रादात्- கொடுத்தார், अपरः- மற்றொருவர், तथा- அவ்விதம், यज्ञसूत्रं- யஜ்ஞோபவீதத்தை, प्रादात्- கொடுத்தார், कश्चित्- ஒருவர், कमण्डलुं- கமண்டலுவை, प्रादात्- கொடுத்தார், अन्यः महामुनिः- மற்றொரு மஹரிஷி, मौञ्जीं- முஞ்ஜியை, प्रादात्- கொடுத்தார்.

3. (ப-ரை) अन्यः- மற்றொருவர், तदा- அப்பொழுது, बृसीं- ஆஸனத்தை, प्रादात्- கொடுத்தார், अपरः मुनिः- மற்றொரு முனி, कौपीनं- கௌபீனத்தை, प्रादात्- கொடுத்தார், अपरः मुनिः- மற்றொரு முனி, तदा- அப்பொழுது, हृष्टः सन्- ஸந்தோஷமுடையவராய்க்கொண்டு, ताभ्यां- அவர்கள் பொருட்டு, कुठारं- கோடாலியை, ददौ- கொடுத்தார்.

1. (பொ-ரை) ஒரு முனிவர், இவர்கள் பாடுவதைக்கேட்டு ப்ரீதியுடன் எழுந்திருந்து இவர்களுக்கு கலசம் ஒன்றைக்கொடுத்தார். மிகவும் கீர்த்தியையுடையவரான மற்றொருமுனிவர், மிகவும் ஸந்தோஷத்துடன் இவர்களுக்கு இரண்டுமரவுரிகளைக்கொடுத்தார்.

2. (பொ-ரை) மற்றொருவர் க்ருஷ்ணாஜினத்தையும், வேறொருவர் யஜ்ஞஸூத்திரத்தையும், ஒருவர் கமண்டலுவையும, மற்றொரு மஹாமுனி மௌஞ்ஜியையும் கொடுத்தார்.

3, (பொ-ரை) மற்றொருவர் அவர்களுக்கு ஆஸனத்தைக்கொடுத்தார். மற்றொருமுனி கௌபீனத்தைக் கொடுத்தார், மற்றொருமுனி மிக்க ஸந்தோஷத்துடன் அவர்களுக்குக் கோடாலியைக் கொடுத்தார்.

काषायमपरो वस्त्रं चीरमन्यो ददौ मुनिः
जटाबन्धनमन्यस्तु काष्ठरज्जुं मुदान्वितः ॥ 4 ॥
यज्ञभाण्डमृषिः कश्चित्काष्ठभारं तथाऽपरः ।
औदुम्बरीं बृसीमन्ये स्वस्ति केचित्तदावदन् ॥ 5 ॥
आयुष्यमपरे प्राहुर्मुदा तत्र महर्षयः ।
ददुश्चैव वरान्सर्वे मुनयः सत्यवादिनः] ॥ 6 ॥

---

4. (பொ-ரை) अपरः- மற்றொருவர், काषायं वस्त्रं- காவி வஸ்த்ரத்தை, ददौ- கொடுத்தார், अन्यः मुनिः- மற்றொரு முனிவர், चीरं- மரவுரியை, ददौ- கொடுத்தார், अन्यः तु- வேறு முனிவரோவென்றால், मुदा- ஸந்தோஷத்துடன், अन्वितः- கூடினவராய்க்கொண்டு, जटाबन्धनं- ஜடைகட்டும் ஸூத்திரத்தையும், काष्ठरज्जुं- விறகு கட்டத் தகுந்த கயிற்றையும், ददौ- கொடுத்தார்.

5. (ப-ரை) कश्चित् ऋषिः- ஒரு ரிஷி, यज्ञभाण्डं- அக்நிஸ்தாலியை, ददौ- கொடுத்தார், अपरः- வேறொருவர், तथा- அவ்விதம், काष्ठभारं- விறகு சுமையையும், औदुम्बरीं- அத்திப்பலகையாற் செய்த, बृसीं- ஆஸனத்தையும், ददौ- கொடுத்தார், अन्ये केचित्- வேறு சிலர், तदा- அப்பொழுது, स्वस्ति- ஆசீர்வாதத்தை, अवदन्- சொன்னார்கள்.

6. (ப-ரை) तत्र- அங்கு, अपरे महर्षयः- வேறு மஹாரிஷிகள், मुदा- ஸந்தோஷத்தினால், आयुष्यं- ஆசீர்வாதத்தை, प्राहुः- சொன்னார்கள், सत्यवादिनः- உண்மை உரைக்கின்றவர்களான, सर्वे मुनयः च एव- எல்லா ரிஷிகளுமே, वरान्- வரங்களை, ददुः- கொடுத்தார்கள்.

4. (பொ-ரை) மற்றொருவர் காவி வஸ்திரம் கொடுத்தார், வேறொருவர் மரவுரி கொடுத்தார், மற்றொருமுனிவர் ஸந்தோஷத்துடன் சடைக்கட்டும் ஸூத்திரத்தையும், விறகு கட்டும் கயிற்றையும் கொடுத்தார்.

5. (பொ-ரை) ஒரு ரிஷி அக்நிஸ்தாலியைக் கொடுத்தார். மற்றொருவர் விறகு சுமையையும், அத்திப்பலகையாற் செய்த ஆஸனத்தையும் கொடுத்தார். வேறு சிலர் அப்பொழுது அவர்களுக்கு மங்கள ஆசீர்வாதம் செய்தார்கள்.

6. (பொ-ரை) அங்கு வேறு சில ரிஷிகள் ஸந்தோஷத்தினால், ஆசீர்வாதம் செய்தார்கள். ஸத்திய வாக்கு உடையவர்களான எல்லா ரிஷிகளும் இஷ்டமான வரங்களைக் கொடுத்தார்கள்.

आश्चर्यमिदमाख्यानं मुनिना सम्प्रकीर्तितम् ।
परं कवीनामाधारं समाप्तं च यथाक्रमम् ॥ 20 ॥

अभिगीतमिदं गीतं सर्वगीतेषु कोविदौ ।
आयुष्यं पुष्टिजनकं सर्वश्रुतिमनोहरम् ॥ 21 ॥

प्रशस्यमानौ सर्वत्र कदाचित्तत्र गायकौ ।
रथ्यासु राजमार्गेषु ददर्श भरताग्रजः ॥ 22 ॥

20-21-22. इदं आख्यानं- இந்த இதிஹாஸமானது, मुनिना- வால்மீகி முனிவரால் सम्प्रकीर्तितम्- நன்றாகவும், விஸ்தாரமாகவும் சொல்லப்பட்டது, कवीनां- கவிகளுக்கு परं आधारं- சிறந்த ஆதாரமுமானது, यथाक्रमम्- க்ரமமாகவே, समाप्तं च- முடிக்கப்பட்டுமிருக்கிறது, आश्चर्यं- ஆச்சர்யத்தை உண்டுபண்ணக்கூடியது, सर्वगीतेषु- எல்லா கானங்களிலும், कोविदौ- ஸமர்த்தர்களான குசலவர்களே!, युवाभ्यां- உங்களால், आयुष्यं- ஆயுஸ்ஸை வ்ருத்தி செய்யக்கூடியதும், पुष्टिजनकं- தேஹ புஷ்டியை செய்யக்கூடியதும், सर्वश्रुतिमनोहरम्- எல்லா ச்ருதிகளினாலும், அழகாயும் இருக்கிற, इदं गीतं- இந்தக் கானமானது, अभिगीतं- நன்றாகப்பாடப்பட்டது, इति- என்று, तत्र- அந்த யஜ்ஞசாலையில், रथ्यासु- தெருக்களிலும், राजमार्गेषु च- ராஜமார்க்கங்களிலும், सर्वत्र- மற்ற எல்லா இடங்களிலும், प्रशस्यमानौ- புகழப்பட்டவர்களாக, गायकौ- கானம் செய்துகொண்டிருக்கிற, அந்தக்குசலவர்களை, कदाचित्- ஒருக்கால், भरताग्रजः- பரதனுக்கு முத்தவனான ஸ்ரீராகவன், ददर्श- பார்த்தார்.

20-21-22. (பொ-ரை) இந்த இதிஹாஸமானது வால்மீகி மஹரிஷியினால் நல்ல லக்ஷணங்களுடனும், விஸ்தாரமாகவும், செய்யப்பட்டது. காவ்யலக்ஷணங்களெல்லாம் பொருந்தியிருக்கிறபடியால், காவ்யம் செய்கிற கவிகளுக்கு இது முக்கிய ஆதாரமாயுமிருக்கிறது. க்ரமமாக ஆரம்பித்து நடுவில் நின்றுபோகாமல் முடிக்கப்பட்டுமிருக்கிறது. ஆகையால் இது மிகவும் ஆச்சர்யமானது, எல்லா கானங்களிலும் பண்டிதர்களான ஹே! குசலவர்களே! ஆயுஸ்ஸை வளர்க்கக்கூடியதும், சரீர புஷ்டியை உண்டுபண்ணக்கூடியதும், ஸர்வ ச்ருதிகளாலும் அழகாகவும், நீங்கள் பாடுகிறது மிகவும் நன்றாகஇருக்கிறது, என்று இவ்விதம் அந்த யஜ்ஞசாலையில் தெருக்களிலும் ராஜமார்க்கங்களிலும், மற்ற எல்லா இடங்களிலும் எல்லோராலும் புகழப்பட்டு பாடிக்கொண்டிருக்கிற அந்தக் குசலவர்களை ஒருக்கால், ஸ்ரீராகவன், பரதன் முகமாகக்கண்டார்.

ततस्तु तौ रामवचःप्रचोदितावगायतां मार्गविधानसम्पदा ।
स चापि रामः परिषद्गतः शनैर्बुभूषया सक्तमना बभूव ह ॥ 30 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
चतुर्थः सर्गः ॥ 4 ॥

ராஜலக்ஷணங்கள் பொருந்தினவர்கள், कुशीलवौ च एव- பாடகர்களாகவிருந்தும், महातपस्विनौ- பெருந்தவமுடையவர்களாயிருக்கிறார்கள், तत्- ஆகையால், मम अपि- எனக்கும், भूतिकरं- நன்மையை யுண்டுபண்ணக்கூடியதும், महानुभावं- விசேஷமான மஹிமையுடையதுமான, चरितं- (ஸீதையின்) சரித்திரமானது, प्रवक्ष्यते- இவர்களால் நன்றாகப்படிக்கப்படப்போகிறது, निबोधत- (அதை நீங்களும்) கேளுங்கள்.

30. (ப-ரை) ततः- பிறகு, तौ- அந்தக்குசலவர்கள், रामवचः प्रचोदितौ सन्तौ- ஸ்ரீராமனுடைய வார்த்தையினால் ஏவப்பட்டவர்களாய்க்கொண்டு, मार्गविधानसम्पदा- மார்க்கமென்னும் அமைப்பின் பெருமையோடு, अगायतां- பாடினார்கள், सः रामः च अपि- அந்த ஸ்ரீராமனும், शनैः- மெள்ள, மெள்ள, परिषद्गतः- கோஷ்டியில் வந்தவராய்க் கொண்டு, बुभूषया- அனுபவிக்க இச்சையினால், सक्तमनाः- கானத்தில் பற்றின மனதுடையவராக बभूव- ஆனார், ह- ஆச்சர்யம்.

பெருந் தவமுடையவர்களாயிருக்கிறார்கள், இவர்கள் பாடும் சரித்திரமானது ஸீதையைவிட்டுப்பிரிந்து வருந்திக் கொண்டிருக்கின்ற எனக்கும் நன்மையை யுண்டு பண்ணக்கூடியது. அதுவுமல்லாமல் விசேஷமான மஹிமையையுமுடையது. இப்படிப் பட்ட இந்த ஸீதையின் சரித்திரத்தை இவர்கள் மிகவும் தெளிவாய் பாடப்போகின்றார்கள், இதை நீங்களெல்லோரும் கேட்கவேணுமென்று ஸபையோர்களைப்பார்த்து ஸ்ரீராமன் சொன்னார்.

30. (பொ-ரை) பிறகு குசலவர்களைப்பார்த்து ப்ரபுவான ஸ்ரீராமன் "அப்பா இனி பாடுங்கள்" என்று ஆஜ்ஞாபிக்கவே அவ்விருவர்களும், மார்கமென்றும் தேசியென்றும் ஸங்கீதசாஸ்த்திரத்தின் முறையில் மார்கமென்கிற முறையின் வழியாகப்பாடினார்கள், ப்ரபுவாகிய ஸ்ரீராமனும் தான் ஒருவராக ஸிம்மாஸனத்திலிருக்கிறது தனியாகயிருக்கிறதுபோல் நினைத்து இனிய வஸ்துவை எல்லாருடன் சேர்ந்து அனுபவிக்கவேணுமென்கிற நியாயத்தினால் ஜனங்களுடன் கூடவே உட்கார்ந்துகொண்டு கேட்கவேணுமென்று ஆசைஉண்டானபடியால் தான் எழுந்திருந்தால் எல்லோரும் எழுந்திருந்து விடுவார்கள் ஸபை கலைந்துவிடும் என்கிற எண்ணத்தினால் ஒருவருக்கும் தெரியாமல் மெள்ள மெள்ள நகர்ந்து ஸிம்மாஸனத்திலிருந்து தரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற ஜன கோஷ்டியில் உட்கார்ந்து கொண்டு *கான ஸுகத்தை அனுபவிக்க வேணுமென்கிற இச்சையினால அவர்கள் பாடும் பாட்டிலேயே கவனமுள்ளவராக விருந்தார்.

* ஸீதையை விட்டுப்பிரிந்து ஸத்தையையிழந்திருக்கிறதான், ஸீதையின் கதையையாவது கேட்டு ஸத்தையையடையலாம் என்கிற ஆசையினால் என்னும் ஒரு அர்த்தம்,

पञ्चमः सर्गः ॥ 5 ॥

सर्वापूर्वमियं येषामासीत्कृत्स्ना वसुन्धरा ।
प्रजापतिमुपादाय नृपाणां जयशालिनाम् ॥ 1 ॥
येषां स सगरो नाम सागरो येन खानितः ।
षष्टिः पुत्रसहस्राणि यं यान्तं पर्यवारयन् ॥ 2 ॥
इक्ष्वाकूणामिदं तेषां राज्ञां वंशे महात्मनाम् ।
महदुत्पन्नमाख्यानं रामायणमिति श्रुतम् ॥ 3 ॥

1. (ப-ரை) कृत्स्ना- முழுவதுமான, इयं वसुन्धरा- இந்த பூமியானது, जयशालिनाम्- ஜயத்தினால் விளங்குகின்றவர்களான, येषां- யாதொரு அரசர்களுக்கு, प्रजापतिं उपादाय- மனுப்ரஜாபதி முதற்கொண்டு, सर्वापूर्व-यथा तथा- மற்ற எல்லா அரசர்களுக்கும் ஸொந்தமல்லாததாக, आसीत्- இருந்ததோ.

2. (ப-ரை) सागरः- ஸமுத்திரமானது; येन- யாதொருவனால், खानितः- தோண்டப்பட்டதோ, सगरः नाम- ஸகரனென்று ப்ரஸித்தரான, सः- அவ்வரசன், येषां- யாதொரு அரசர்களுக்குள் (சேர்ந்தவரோ), यान्तं- திக்விஜயத்திற்குப்போகின்ற, यं- யாதொரு ஸகர மஹாராஜனை, षष्टिः पुत्रसहस्राणि- அறுபதினாயிரம் பிள்ளைகள், पर्यवारयन्- சூழ்ந்துகொண்டு போனார்களோ,

3. (ப-ரை) महात्मनाम्-மஹாப்ரபாவமுடையவராயும், इक्ष्वाकूणां-இக்ஷ்வாகு வம்சத்திற்பிறந்தவர்களுமான, तेषां राज्ञां- அந்த ராஜாக்களுடைய, वंशे-வம்சத்திற் பிறந்தவரான ஸ்ரீராமன் விஷயத்தில், रामायण इति- ராமாயணம் என்று, श्रुतम्- ப்ரஸித்தமான, महत्- எல்லோரும் பூஜிக்கத்தகுந்த, इदं आख्यानं- இந்த இதிஹாஸமானது, उत्पन्नं- உண்டாயிருக்கிறது.

1. (பொ-ரை) ஸப்த த்வீபங்களோடு கூடின இந்த பூமண்டலம் முழுமையும் மற்ற ஒருவர்களுக்கும் ஸொந்தமல்லாமல், ஜயங்கொண்ட யாதொரு அரசர்களுக்கே மனுப்ரஜாபதி முதற்கொண்டு ஸொத்தாயிருந்ததோ.

2. (பொ-ரை) எந்த மஹாராஜனால் ஸமுத்திரமானது தோண்டப்பட்டதோ யாதொரு அரசன் திக்விஜயத்திற்குப்போகும் காலத்தில் அறுபதினாயிரம் பிள்ளைகளும் எவனைச்சூழ்ந்து போனார்களோ, அப்படி ப்ரஸித்தரான ஸகரனென்கிற அரசன் யாதொரு அரசர்களுக்குள் பிறந்தவரோ.

3. (பொ-ரை) மஹாப்ரபாவமுள்ளவர்களான இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த அவ்வரசர்களுடைய வம்சத்தில் அவதரித்த ஸ்ரீராமன்விஷயமாக ராமாயணமென்று ப்ரஸித்தமான எல்லோரும் பூஜிக்கத்தகுந்த இந்தப்ரபந்தமானது சதுர்முகப்ரம்மாவின் அனுக்ரஹத்தினால் உண்டானது.

तदिदं वर्तयिष्यामि सर्वं निखिलमादितः ।
धर्मकामार्थसहितं श्रोतव्यमनसूयया ॥ 4 ॥
कोसलो नाम मुदितः स्फीतो जनपदो महान् ।
निविष्टः सरयूतीरे प्रभूतधनधान्यवान् ॥ 5 ॥
अयोध्या नाम नगरी तत्रासील्लोकविश्रुता ।
मनुना मानवेन्द्रेण या पुरी निर्मिता स्वयम् ॥ 6 ॥
आयता दश च द्वे च योजनानि महापुरी ।
श्रीमती त्रीणि विस्तीर्णा सुविभक्तमहापथा ॥ 7 ॥
राजमार्गेण महता सुविभक्तेन शोभिता ।
मुक्तपुष्पावकीर्णेन जलसिक्तेन नित्यशः ॥ 8 ॥

4. (ப-ரை) तत्- அப்படிப்பட்ட, इदं- இந்த ராமாயணத்தை, वर्तयिष्यामि- நடத்தப்போகிறேன், धर्मकामार्थसहितं- தர்ம, காம, அர்த்த என்கிற புருஷார்த்தங்களோடு கூடினதான, सर्वं- ராமாயணம் முழுமையும், आदितः- ஆரம்பம் முதற்கொண்டு, निखिलं यथा तथा- ஒன்றுகூட விடாமலிருக்கும்படி, अनसूयया- அஸூயையில்லாமல் (ச்ரத்தையுடன்), श्रोतव्यं- கேட்கத்தகுந்தது.

5. (ப-ரை) मुदितः- ஸந்தோஷமுள்ளதாயும், स्फीतः- செழிப்புடையதாயும், प्रभूतधनधान्यवान्- அதிகமான தநங்களையும், தான்யங்களையுமுடையதும், कोसलो नाम- கோஸலமென்று ப்ரஸித்தமான, महान्- விசாலமான, जनपदः- தேசமானது, सरयूतीरे- ஸரயூ நதியின் கரையில், निविष्टः- இருக்கின்றது.

6—7—8. (ப-ரை) तत्र- அந்தக்கோஸலதேசத்தில், अयोध्या नाम- அயோத்தியென்று ப்ரஸித்தமான, नगरी- நகரமானது (பட்டணமானது), आसीत्- இருக்கிறது,

---

4. (பொ-ரை) இவ்விதம் ப்ரம்மாவின் அனுக்ரஹத்தினாலுண்டான இந்த ஸ்ரீமத் ராமாயணத்தை இப்பொழுது நான் ப்ரகாசப்படுத்தப் போகிறேன், தர்ம, காம, அர்த்த என்கிற புருஷார்த்தங்களைத் தெரிவிக்கக்கூடியதும், (அவைகளைப் பயனாக உடையதுமான) ராமாயணம் முழுவதையும், ஸ்ரீராமனுடைய அவதார தேசவர்ணனை முதற்கொண்டு ஒன்று கூட விடாமல் நீங்கள் எல்லோரும் ச்ரத்தையுடன் கேட்கவேண்டும்.

5. (பொ-ரை) ஸரயூ நதியின் இரு கரைகளிலும் எப்பொழுதும் களிப்புடன் கூடிய ஜனங்களையுடையதும், மிகவும் செழித்ததாயும், யதேஷ்டமான தந தான்யங்களையுடையதாயும், கோஸலமென்று ப்ரஸித்தமான மிகவும் விசாலமான ஒரு தேசமிருக்கிறது.

6-7-8. (பொ-ரை) மனிதர்களுக்கு இந்திரனான மனுப்ராஜாபதியினால் தம்முடைய ஸங்கல்பத்தினால் நிர்மாணம் செய்யப்பட்டும் பன்னிரண்டு யோஜனை சுற்றா

तां तु राजा दशरथो महाराष्ट्रविवर्धनः ।
पुरीमावासयामास दिवं देवपतिर्यथा ॥ 9 ॥

लोकविश्रुता- உலகங்களில் ப்ரஸித்தமான, या पुरी- யாதொரு பட்டணமானது, मानवेन्द्रेण- மனுஷ்யர்களுக்கு யஜமானனான. मनुना- மனுப்ரஜாபதியினால், स्वयम्- தம் ஸங்கற்பத்தினாலேயே, निर्मिता- உண்டுபண்ணப்பட்டதோ, दश च द्वे च योजनानि- பன்னிரண்டு யோஜனை அளவு, आयता- நீண்டிருக்கிற, महापुरी- ப்ரதான பட்டணம், श्रीमती- மிகவும் சோபையுள்ளது, त्रीणि विस्तीर्णा- மூன்று யோஜனை அளவு விசாலமுள்ளது, सुविभक्तमहापथा- நன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிற பெரிய மார்க்கங்களையுடையதாயும், नित्यशः- எக்காலத்திலும், जलसिक्तेन- ஜலங்களால் நனைக்கப்பட்டும், मुक्तपुष्पावकीर्णेन- விடுபுஷ்பங்களால் இறைக்கப்பட்டும், महता- பெரிதாயும், सुविभक्तेन- நன்றாகப் பிரிக்கப் பட்டிருக்கிற, राजमार्गेण- ராஜமார்க்கத்தினால், शोभिता- விளங்கினதாயுமிருக்கின்றதோ.

9. (ப-ரை) महाराष्ट्रविवर्धनः- பெரியதான அந்த தேசத்தை நன்கு விருத்தி செய்கின்றவரான, दशरथः राजा- தசரதர் என்கிற அரசன், दिवं- ஸ்வர்க்க லோகத்தை, देवपतिः यथा- தேவேந்திரன் வஸிப்பதுபோல், तां पुरीं- அந்த அயோத்தியா நகரத்தை, तु- முன்னரசர்களைவிட சிறப்பாக, आवासयामास- வஸித்து வந்தார். (ஆண்டு வந்தார்).

வுள்ள பெரிய (ப்ரதான) நகரமாய் விசேஷமான அழகுள்ளதாய், மூன்று யோஜனை விஸ்தாரமுள்ளதாய், இரண்டு அருகுகளிலும், மரங்கள் வைத்து அழகாக அமைக்கப்பட்டு பலவித தேசங்களுக்குப்போகின்ற மார்க்கங்களையுடையதாய், பட்டணம் முழுவதும், கோணலில்லாமல் நேராகச்செய்யப்பட்டும், எக்காலத்திலும் ஜலம் தெளித்து, விடு புஷ்பங்களாற் நிறைத்து மஹாராஜர் அரண்மனையிலிருந்து புறப்படுகிற பெரிய ராஜமார்க்கத்தினால் விளங்கிக்கொண்டும், உலகமெல்லாம் ப்ரஸித்தமாய் அயோத்தியென்று புகழ் படைத்த நகரமானது அந்தக்காலத்திலிருக்கின்றது.

9. (பொ-ரை) அப்பெரிய தேசத்தை தர்மமாக ஆண்டுகொண்டிருந்த தசரதர் என்கிற மஹாராஜா, ஸ்வர்க்கலோகத்தில் தேவேந்திரன் வஸித்து வந்தது போல், அந்த அயோத்திமா நகரத்தை முன்னரசர்களைக்காட்டிலும், சிறப்பாக ஆண்டு வஸித்துக்கொண்டு இருந்தார்.

कवाटतोरणवतीं सुविभक्तान्तरापणाम् ।
सर्वयन्त्रायुधवतीमुपेतां सर्वशिल्पिभिः ॥ 10 ॥
सूतमागधसंबाधां श्रीमतीमतुलप्रभाम् ।
उच्चाट्टालध्वजवतीं शतघ्नीशतसंकुलाम् ॥ 11 ॥
वधूनाटकसंघैश्च संयुक्तां सर्वतःपुरीम् ।
उद्यानाम्रवणोपेतां महतीं सालमेखलाम् ॥ 12 ॥

10. (ப-ரை) कवाटतोरणवतीं- ச்ரேஷ்டமான கதவு நிலையையுடையதாயும், सुविभक्तान्तरापणाम्- ஒன்றோடொன்று சேராத மத்ய ப்ரதேசத்தையுடைய கடைகளையுடையதும், सर्व यन्त्र आयुधवतीं- எல்லா யெந்திரங்களையும், ஆயுதங்களையும் உடையதாயும், सर्वशिल्पिभिः- எல்லா சிற்பிகளோடும், (கைத்தொழிலாளிகளோடும்), उपेतां- கூடிக்கொண்டும்.

11. (ப-ரை) सूतमागधसंबाधां- ஸூதர்களாலும், மாகதர்களாலும் நிறைந்ததாயும், श्रीमतीं- ஸம்பத்துடையதாயும். अतुलप्रभाम्- நிகரற்ற காந்தியுடையதாயும், उच्चाट्टालध्वजवतीं- உயர்ந்த மேல்மாளிகைகளிற் கட்டிய கொடிகளை உடையதாயும், शतघ्नीशतसंकुलाम्- அநேகம் பீரங்கிகளாற் நிறைந்ததாயும்,

12. (ப-ரை) सर्वतः पुरीम्- பட்டணம் முழுவதிலும், वधूनाटकसंघैः- பெண்களுக்கு நாட்டியம் பழக்கி வைக்கும் நட்டுவர்களுடைய கூட்டங்களோடு, संयुक्तां- சேர்ந்ததாயும், उद्यानाम्रवणोपेतां- மாமரங்கள் நிறைந்த உத்யான வனங்களோடு கூடினதாயும். सालमेखलाम्- ஒட்டியாணம் போன்ற சுற்று மதில்களை உடையதாயும், महतीं- பெரிதாயும்,

---

10. (பொ-ரை) மிகவும் ச்ரேஷ்டமான கதவுகளையும், வெளிகோபுரவாயல்களையுடையதாயும், ஒன்றோடொன்று கலக்காமலிருக்கிற கடைகளையுடையதாயும். எல்லாவிதமான யெந்திரங்களையும் ஆயுதங்களையுமுடையதாயும், பலவிதமான சிற்பிகளாற் நிறைந்ததாயும்.

11. (பொ-ரை) அரசர்களுக்கு கட்டியம் கூறுகின்ற வந்திகளாலும், விடியற்காலங்களிற் ஸங்கீதத்துடன் அரசர்களை எழுப்பும் தொழிலாளிகளான மாகதர்களாலும் நிறைந்தும், தநதான்யங்களின் செழிப்பை உடையதாயும், ஒப்பற்ற காந்தியுடையதாயும், மேல் மாளிகைகளிற் கட்டிய உயர்ந்த கொடிகளுடன் கூடினதாயும் அநேகமாயிரம் பீரங்கிகளாற் நிறைந்ததாயும்,

12. (பொ-ரை) நகரம் முழுவதும் பெண்பிள்ளைகளுக்கு நாடகம் கற்பிக்கும் நட்டுவர்கள் கூட்டங்கள் உள்ளதாயும், கட்டுமா மரங்களை அடர்ந்த தோட்டங்களோடு கூடினதாயும், ஒட்டியாணம் போன்ற சுற்று மதில்களையுடையதாயும், மிகப் பெரிதாயும்,

दुर्गगम्भीरपरिघां दुर्गामन्यैर्दुरासदाम् ।
वाजिवारणसम्पूर्णां गोभिरुष्ट्रैः खरैस्तथा ॥ 13 ॥
सामन्तराजसङ्घैश्च बलिकर्मभिरावृताम् ।
नानादेशनिवासैश्च वणिग्भिरुपशोभिताम् ॥ 14 ॥
प्रासादै रत्नविकृतैः पर्वतैरुपशोभिताम् ।
कूटागारैश्च सम्पूर्णामिन्द्रस्येवामरावतीम् ॥ 15 ॥

13. (ப-ரை) दुर्गगम्भीरपरिघां- விசாலமாயும், ஆழமுமான அகழுகளை உடையதாயும், अन्यैः- மற்றவர்களால், दुर्गां- பிரவேசிக்க முடியாததாயும், दुरासदाम्- சத்ருக்களால் அணுக முடியாததாயும், वाजिवारणसम्पूर्णां- குதிரைகளாலும், யானைகளாலும் நிறைந்தும், गोभिः- பசுக்களாலும், விருஷபங்களாலும், उष्ट्रैः- ஒட்டகங்களாலும் खरैः- கோவேறு கழுதைகளாலும், तथा- அப்படியே நிறைந்ததாயும்.

14. (ப-ரை) बलिकर्मभिः- கப்பம் கட்டுகிற காரியமுடையவர்களான, सामन्तराजसङ्घैः- சுற்று தேசத்திலுள்ள அரசக் கூட்டங்களால், आवृताम्- சூழப்பட்டதாயும், नानादेश निवासैः- பல தேசத்தில் வாஸம் செய்கின்ற, वणिग्भिः- வியாபாரிகளால், उपशोभितां च- மிகவும் விளங்குகின்றதாயும்.

15. (ப-ரை) रत्नविकृतैः- ரத்தினங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்ட, प्रासादैः- அரசர்களின் மாளிகைகளாலும், पर्वतैः च- விளையாடும் குன்றுகளாலும், उपशोभिताम्- நன்றாக விளங்கிக்கொண்டும், कूटागारैः च- கொடுங்கைகளால், सम्पूर्णां- நிறைந்ததாயும், इन्द्रस्य- இந்திரனுடையதான, अमरावतीं इव स्थितां- அமராவதி போன்றதாயும்.

13. (பொ-ரை) விசாலமாயும், ஆழமுமான அகழுகளை உடையதாயும், சுற்றிலும் துர்க்கங்கள் நிறைந்திருக்கிறபடியால் மற்றவர்களான சத்ருக்களால் வருந்தியும் கிட்ட வரிதாயும், குதிரைகளாலும், யானைகளாலும், பசுக்களாலும், எருதுகளாலும், ஒட்டகைகளாலும், கோவேறு கழுதைகளாலும் நிறைந்ததாயும்.

14. (பொ-ரை) கப்பம் கட்டுவதற்காக வந்திருக்கிற, சுற்றுதேசத்து அரசக் கூட்டங்களால் சூழப்பட்டதாயும், சரக்குகளை விலைக்கு வாங்குவதற்காகவும், கொடுப்பதற்காகவும், பலதேசத்திலிருந்து வந்திருக்கிற வியாபாரிகளால் விளங்குகின்றதாயும்.

15. (பொ-ரை) நவரத்தினங்கள் இழைத்து நன்றாக அலங்கரிக்கப்பட்ட அரசர்களின் அரண்மனைகளாலும், விளையாடுவதற்காக உண்டாக்கப்பட்ட செய்குன்றுகளாலும் விளங்கிக்கொண்டும், கொடுங்கைகளால் நிறைந்ததும், இந்திரன் ஆளுகின்ற அமராவதி நகரம் போன்றதும்.

चित्रामष्टापदाकारां वरनारीगणैर्युताम् ।
सर्वरत्नसमाकीर्णां विमानगृहशोभिताम् ॥ 16 ॥
गृहगाढामविच्छिद्रां समभूमौ निवेशिताम् ।
शालितण्डुलसम्पूर्णामिक्षुकाण्डरसोदकाम् ॥ 17 ॥
दुन्दुभीभिर्मृदङ्गैश्च वीणाभिः पणवैस्तथा ।
नादितां भृशमत्यर्थं पृथिव्यां तामनुत्तमाम् ॥ 18 ॥

16. (ப-ரை) चित्रां- ஆச்சர்யகரமாயும், अष्टापदाकारां- சதுரங்கப்பலகைபோன்ற அமைப்புள்ளதாயும், वर नारी गणै: युताम्-அழகுள்ள ஸ்த்ரீகளின் கூட்டங்களுள்ளதும், सर्वरत्नसमाकीर्णां- எல்லா ரத்தினங்களாலும் சூழப்பட்டதாயும், विमानगृहशोभिताम्- விமானமென்கிற வீடுகளால் விளங்குகின்றதாயும்,

17. (ப-ரை) गृहगाढां- வீடுகளால் நெருங்கினதாயும், अविच्छिद्रां- தோஷமில்லாததாயும், समभूमौ- ஸமமான தரையில், निवेशिताम्- கட்டப்பட்டதாயும், शालितण्डुल सम्पूर्णां- செம்பா நெல் அரிசிகளால் நிறைந்ததும், इक्षुकाण्डरसोदकाम्- கரும்பின் ரஸம் போன்ற தீர்த்தம் உடையதாயும்.

18. (ப-ரை) दुन्दुभीभि:- பேரீ வாத்யங்களாலும், मृदङ्गै: च- ம்ருதங்கங்களாலும், वीणाभि:- வீணைகளாலும், पणवै: तथा- மத்தளங்களாலும், भृशं- மிகவும், नादितां- முழக்கப்பட்டதாயும், पृथिव्यां- பூலோகத்தில், अत्यर्थं- மிகவும், अनुत्तमाम्- ச்ரேஷ்டமானதும், तां- அவ்விதம் ப்ரஸித்தமானதும்.

16. (பொ-ரை) விசித்திரங்களான பலவித ராஜ க்ருஹங்களையுடையதாயும், * சதுரங்கப்பலகைபோன்ற உருவமுள்ளதாயும், உத்தம ஸ்த்ரீகளின் கூட்டங்களால் நிறைந்ததாயும், பத்மராகம் முதலிய நவரத்தினங்களால் சூழப்பட்டதாயும், ஒருவிதமான அமைப்பினால் விமானமென்று பெயருடைய அரசர்களின் மாளிகைகளால் விளங்குகின்றதாயும்.

* அதாவது:- மத்தியில் அரசன் மாளிகை, நான்கு திக்கிலும் ராஜவீதிகள், அதன் பிறகு காலியிடங்கள் என்று இவ்விதமான அமைப்புள்ளதாயும் என்று அர்த்தம்.

17. (பொ-ரை) நெருக்கமான வீடுகளுடையதும், ஒருவிதமான பழிப்பு சொல்லமுடியாததும், மேடுபள்ளமில்லாமல் ஸமமான தரையில் நிர்மாணம் செய்யப்பட்டதும், மிகவும் வெளுமையான செம்பா அரிசிகள் நிறைந்ததும், கரும்புச்சாறு போல் மிகவும் ருசியுள்ள தீர்த்தமுடையதும்.

18. (பொ-ரை) பேரீ, ம்ருதங்கம், வீணை, மத்தளம் முதலான வாத்யங்களால் நன்றாக முழக்கப்பெற்றும், பூலோகத்தில் இது ஒன்றே ச்ரேஷ்டமான நகரமென்று ப்ரஸித்தமானதும்.

विमानमिव सिद्धानां तपसाऽधिगतं दिवि ।
सुनिवेशितवेश्मान्तां नरोत्तमसमावृताम् ॥ 19 ॥
ये च बाणैर्न विध्यन्ति विविक्तमपरापरम् ।
शब्दवेध्यं च विततं लघुहस्ता विशारदाः ॥ 20 ॥
सिंहव्याघ्रवराहाणां मत्तानां नर्दतां वने ।
हन्तारो निशितैः शस्त्रैर्बलाद्बाहुबलैरपि ॥ 21 ॥
तादृशानां सहस्रैस्तामभिपूर्णां महारथैः ।
पुरीमावासयामास राजा दशरथस्तदा ॥ 22 ॥

19. (ப-ரை) दिवि- ஸ்வர்க்கலோகத்தில், तपसा- தபஸ்ஸினால், अधिगतं- அடையப்பட்ட, सिद्धानां- ஸித்தர்களுடைய, विमानं इव (स्थितां)- விமானம் போன்றதாயும், सुनिवेशितवेश्मान्तां- நன்றாக நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளின் பக்கங்களையுடையதாயும், नरोत्तमसमावृताम्- புருஷோத்தமர்களினால் சூழப்பட்டதாயும்.

20—21—22. (ப-ரை) लघुहस्ताः- அஸ்த்ர வித்தைகளைக் கற்றவர்களாயும், विशारदाः- மிகவும் ஸமர்த்தர்களாயும் இருக்கிற, ये- யாதொரு ராஜாக்கள், विविक्तं- ஸஹாயமில்லாதவனையும், अपरापरम्- தனக்கு முற்பட்ட பிதா முதலானவர்களும், பிற்பட்ட புத்திரன் முதலானவர்களும் இல்லாதவனையும், शब्दवेध्यं- சப்தவேதியென்கிற பாணத்தினால் அடிக்கத்தகுந்தவனையும், विततं- ஓடுகிறவனையும், बाणैः च- பாணங்களாலும், न विध्यन्ति- அடிக்கிறவர்களன்றோ, मत्तानां- மதித்ததும், वने- அரண்யத்தில், नर्दतां-கர்ஜ்ஜிக்கின்றவைகளுமான, सिंहव्याघ्रवराहाणां-சிங்கம், புலி, பன்றி, (காட்டுப்பன்றி) இவைகளை, बलात्- மனோபலத்தினாலும், बाहुबलैः अपि- தோள்களின் பலங்களினாலும், निशितैः- கூர்மையான, शस्त्रैः- ஆயுதங்களால், हन्तारः- அடிக்கின்றவர்களும், महारथैः- மஹாரதர்களாயுமுள்ள, तादृशानां- அப்படிப்பட்ட, அரசர்களுடைய, सहस्रैः- ஆயிரம் கணக்குகளால், अभिपूर्णां- நிறைந்ததும், तां- அப்படி ப்ரஸித்தமானதுமான, पुरीं- அயோத்தி மாநகரத்தை, दशरथः राजा- தசரத மஹாராஜர், तदा- அப்பொழுது, आवासयामास- ஆண்டுவந்தார்.

19. (பொ-ரை) தவம் செய்து ஸித்தர்களால் ஸ்வர்க்கலோகத்தில் அடையப்பட்ட விமானம் போன்றதாயும், நன்றாக நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளின் ப்ரதேசங்களையுடையதாயும், உத்தமர்களான ஜனங்களால் சூழப்பட்டதாயும்.

20-21-22. (பொ-ரை) வில் வித்தை நன்றாய்க்கற்றவர்களும், கற்பா

तामग्निमद्भिर्गुणवद्भिरावृतां द्विजोत्तमैर्वेदषडङ्गपारगैः ।
सहस्रदैः सत्यरतैर्महात्मभिर्महर्षिकल्पैर्ऋषिभिश्च केवलैः ॥ 23 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
पञ्चमः सर्गः ॥ 5 ॥

23. (ப-ரை) अग्निमद्भिः:- அக்னிஹோத்திரம் செய்கின்றவர்களும், गुणवद्भिः:- நல்ல குணமுடையவர்களாயும், वेदषडङ्गपारगैः:- வேதங்களுடையவும், அவைகளின் அங்கங்களினுடையவும் கரைகண்டவர்களாயும், सहस्रदैः:- தானம் செய்கின்றவர்களாயும், सत्यरतैः:- உண்மை சொல்லுவதிலேயே நோக்கமுடையவர்களாயும், महात्मभिः:- சிறந்த புத்தியுடையவர்களாயும், केवलैः ऋषिभिः च- ஸாமான்ய ரிஷிகளாயிருந்தும், महर्षिकल्पैः:- மஹரிஷிகளுக்கு ஒப்பானவர்களுமான, द्विजोत्तमैः:- ப்ராம்மணோத்தமர்களால், आवृतां- சூழப்பட்டிருக்கிற, तां- அந்த அயோத்திமா நகரத்தை, आवासयामास- ஆண்டு நடத்தி வந்தார். இந்தக்ரியாபதம் முன் ச்லோகத்திலிருந்து சேர்த்துக்கொண்டது.

நன்றாய் ப்ரயோகம் செய்யவல்லவர்களுமான, எந்த அரசர்கள், ஸகாயமில்லாதவனையும், முந்தினவர்களான தகப்பன் முதலானவர்களும் பிந்தினவர்களான புத்திரன் முதலானவர்களும் இல்லாமல் வம்சத்திற்கு ஒருவனேயாகவிருக்கின்றவனையும், மறைந்திருக்கின்றவனையும், பயந்து ஓடுகிறவனையும், பாணங்களால் அடிக்காதவர்களோ, மகிழ்ந்து தன்னிலமான வநத்தில் செருக்கினால் கர்ஜ்ஜித்துக்கொண்டிருக்கிற சிங்கம், புலி, காட்டுப்பன்றி முதலானவைகளை, மனோபலத்தினாலும், தோள் வலியாலும் தீக்ஷ்ணங்களான ஆயுதங்களினால் அடிக்கும் தன்மையுள்ளவர்களோ, யுத்த காலத்தில் தன்னையும், ஸாரதியையும், குதிரைகளையும் காப்பாற்றிக்கொண்டு யுத்தம் பண்ணுகின்ற மஹாரதர்களான அப்படிப்பட்ட அநேகமாயிரம் அரசர்களால் நிறைந்ததும், உலகமெல்லாம் புகழ்பெற்றதுமான அந்த அயோத்திமா நகரத்தை தசரத மஹாராஜா பரிபாலித்து நடத்திக்கொண்டுவந்தார்.

23. (பொ-ரை) அக்னிஹோத்திரம் செய்கின்றவர்களும், சமம், தமம், முதலான உயர்ந்த குணமுள்ளவர்களும், வேதங்களையும், அதின் அங்கங்களையும் ஓதி கரைகண்டவர்களும், யாசிப்பவர்களுக்கு ஆயிரக்கணக்காக தானம் செய்பவர்களும், உண்மையுரைப்பதிலேயே நோக்கமுள்ளவர்களும், சிறந்த புத்தியுடையவர்களும், கேவல ரிஷிகளாயிருந்தும், வஸிஷ்டர் முதலான மஹரிஷிகளுக்குத் துல்யர்களுமாயிருக்கிற ப்ராம்மணோத்தமர்கள் நிறைந்த அவ்வயோத்திமா நகரத்தை தசரத மஹாராஜர் ஆண்டு நடத்திவந்தார்.

षष्ठः सर्गः ॥ ६ ॥

तस्यां पुर्यामयोध्यायां वेदवित्सर्वसंग्रहः ।
दीर्घदर्शी महातेजाः पौरजानपदप्रियः ॥ 1 ॥

इक्ष्वाकूणामति*रथो यज्वा धर्मरतो वशी ।
महर्षिकल्पो राजर्षिस्त्रिषु लोकेषु विश्रुतः ॥ 2 ॥

बलवान्निहतामित्रो मित्रवान्विजितेन्द्रियः ।
धनैश्च संग्रहैश्चान्यैः शक्रवैश्रवणोपमः ॥ 3 ॥

यथा मनुर्महातेजा लोकस्य परिरक्षिता ।
तथा दशरथो राजा वसञ्जगदपालयत् ॥ 4 ॥

1–2–3–4. (பதவுரை) वेदवित्- வேதங்களை அறிந்தவரும், सर्वसंग्रहः- எல்லாவற்றையும் கைக்கொண்டவரும், दीर्घदर्शी- தீர்க்கமான ஆலோசனையுடையவரும், महातेजाः- மிகுந்த ப்ரதாபமுடையவரும், पौरजानपदप्रियः- பட்டணத்து ஜனங்களையும், நாட்டு ஜனங்களையும் ப்ரியமாகவுடையவரும், इक्ष्वाकूणां- இக்ஷ்வாகு வம்சத்து ராஜாக்களில், अतिरथः- அதிரதராயும், यज्वा- யாகம் செய்தவரும், धर्मरतः- தர்ம கார்யங்களில் ஆசையுடையவரும், वशी- எல்லா ஜனங்களையும் தனக்கு ஸ்வாதீனமாகவுடையவரும், महर्षिकल्पः- மஹரிஷிகளுக்குத் துல்யமாயும், राजर्षिः- ராஜரிஷியாயும், त्रिषु लोकेषु- மூன்று உலகங்களிலும், विश्रुतः- ப்ரஸித்தரானவரும், बलवान्- ஸைன்யங்களையுடையவரும், निहतामित्रः- சத்ருக்களைக்கொன்றவரும், मित्रवान्- ஸ்நேஹிதர்களையுடையவரும், विजितेन्द्रियः- இந்திரியங்களை அடக்கினவரும், धनैः च- தனங்களாலும், अन्यैः- மற்றவைகளான, संग्रहैः च- சேர்க்கைகளாலும், शक्रवैश्रवणोपमः- இந்திரனுக்கும், குபேரனுக்கும் ஸமானமானவருமான, दशरथः राजा- தசரத மஹாராஜர், महातेजाः- மிக்க தேஜஸ்ஸையுடைய, मनुः- மனுப்ரஜாபதி, यथा- எப்படி, लोकस्य- லோகத்தை, परिरक्षिता- ரக்ஷிக்கின்றாரோ, तथा- அப்படி, तस्यां अयोध्यायां पुर्यां- அந்த அயோத்தியா நகரத்தில், वसन्- வஸித்துக்கொண்டு, जगत्- உலகத்தை, अपालयत्- ரக்ஷித்தார்.

1—2—3—4. (பொழிப்புரை) வேதங்களையெல்லாம் அறிந்தவரும், பண்டங்களையும், சூரர்களையும், தனம் முதலானதுகளைக் கொடுத்து சேர்த்துக்கொண்டவரும்,

---

*अतिरथः- आत्मानं सारथिं चाश्वान् रक्षन्युध्यति यो नरः स महारथ संज्ञस्स्यात्- என்று சொல்லியிருப்பதால் அநேக மஹாரதர்களோடு ஒருவனாக நின்று யுத்தம் பண்ணுகிறவன் அதிரதன்.

तेन सत्याभिसन्धेन त्रिवर्गमनुतिष्ठता ।
पालिता सा पुरी श्रेष्ठा इन्द्रेणेवामरावती ॥ 5 ॥
तस्मिन्पुरवरे हृष्टा धर्मात्मानो बहुश्रुताः ।
नरास्तुष्टा धनैः स्वैः स्वैरलुब्धाः सत्यवादिनः ॥ 6 ॥

5. (ப-ரை) सत्याभिसन्धेन- ஸத்தியத்தில் எண்ணம் உடையவரும், त्रिवर्गं- தர்மார்த்த காமங்களை, अनुतिष्ठता- அநுஸரிக்கின்றவருமான, तेन- அந்த தசரத அரசனால், सा श्रेष्ठा पुरी-ச்ரேஷ்டமான அந்த அயோத்திமா நகரமானது, इन्द्रेण- தேவேந்திரனால், अमरावती इव- அமராவதிபோல், पालिता- பரிபாலிக்கப்பட்டது.

6. (ப-ரை) तस्मिन् पुरवरे- அந்த ச்ரேஷ்டமான நகரத்தில், नराः- (வஸிக்கும்) மனிதர்கள், हृष्टाः--ஸந்தோஷமுடையவர்களும், धर्मात्मानः- தர்ம புத்தியுள்ளவர்களும், बहुश्रुताः- அநேகம் தடவை சாஸ்த்ரங்களைக்கேட்டவரும், स्वैः स्वैः धनैः- தங்கள் தங்கள் தனங்களினால், तुष्टाः- த்ருப்தி அடைந்தவர்களும், अलुब्धाः- லோபமில்லாதவர்களும், सत्यवादिनः- உண்மை பேசுவதையே ஸ்வபாவமுடையவர்களாகவும், (आसन्-இருந்தார்கள்.)

வரும், தீர்க்காலோசனை செய்கின்றவரும், மிகப்ரதாபமுடையவரும், பட்டணத்து ஜனங்களிடத்திலும், நாட்டு ஜனங்களிடத்திலும் மிக்க அன்புள்ளவரும், இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களுக்குள் அதிரதராயும், சாஸ்த்ரப்படி யாகங்களைச் செய்தவரும், ஸத்திரம் கட்டுவது, தடாகம் வெட்டுவது, தோட்டம் வைப்பது முதலான தர்ம கார்யங்களில் மிக்க அன்புள்ளவரும், ஸர்வ ஜனங்களையும் தன் வசமாக்கிக்கொண்டவரும், மஹரிஷிகளுக்கு ஸமானமானவரும், அரசனாயிருந்தும் ரிஷி போன்றவரும், பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகமென்கிற, மூன்று உலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவரும், அளவிறந்த சதுரங்க ஸைன்யங்களையுடையவரும், சத்ருக்களை வென்றவரும், சிறந்த ஸ்நேகிதர்களையுடையவரும், சாஸ்த்ர விருத்தமான சப்தாதி விஷயங்களில் இந்திரியங்களைச் செலுத்தாதவரும், ஸ்வர்ணம், ரத்னம், வஸ்திரம், ஆபரணம் முதலியவைகளால், இந்திரனுக்கொப்பானவரும், மற்றவைகளான நிதிகளால் குபேரனுக் கொப்பானவருமான, தசரத மஹாராஜா, மிகுந்த தேஜஸ்ஸையுடைய மனுப்ரஜாபதி உலகத்தை ரக்ஷித்து வந்ததுபோல், அந்த அயோத்திமா நகரத்தில் வஸித்துக்கொண்டு உலகத்தை பரிபாலித்து வந்தார்.

5. (பொ-ரை) ஸத்தியத்திலேயே நோக்குள்ளவரும், தர்ம, அர்த்த, காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களை அநுஸரித்தவருமான அந்த தசரத மஹாராஜர், இந்திரன் அமராவதியை ரக்ஷிக்கின்றதுபோல் அந்த அயோத்திமா நகரத்தை ரக்ஷித்துவந்தார்.

6. (பொ-ரை) உத்தமமான அந்நகரத்தில் வஸிக்கின்ற மனிதர்களெல்லோரும் ஸுகமாக வாஸஞ்செய்து ஸந்தோஷத்தை அடைந்தவரும், தர்ம சிந்தை

नाल्पसंनिचयः कश्चिदासीत्तस्मिन्पुरोत्तमे ।
*कुटुम्बी यो ह्यसिद्धार्थोऽगवाश्वधनधान्यवान् ॥ 7 ॥
कामी वा न *कदर्यो वा नृशंसः पुरुषः क्वचित् ।
द्रष्टुं शक्यमयोध्यायां नाविद्वान्न च नास्तिकः ॥ 8 ॥

---

7. (ப-ரை) तस्मिन्पुरोत्तमे- அந்த சிறந்த நகரத்தில், कश्चित्- ஒருவனும், अल्पसंनिचयः- ஸ்வல்ப தனதான்யங்களையுடையவனும், अगवाश्वधनधान्यवान्- பசு, குதிரை, தனம், தான்யங்கள் இவைகளில்லாதவனும், असिद्धार्थः- காரியம் கைகூடாதவனும், यः कुटुम्बी- யாதொரு குடும்பியோ, (सः- அவனும்), न आसीत्- கிடையாது.

8. (ப-ரை) कामी वा- காமியாயிருப்பவனோ, कदर्यः वा- லோபியாயிருப்பவனோ, नृशंसः- க்ரூரனாயிருப்பவனோ, पुरुषः- ஒரு புருஷனும், अयोध्यायां- அயோத்யா நகரத்தில், द्रष्टुं- பார்ப்பதற்கு, न शक्यं- முடியாது, अविद्वान्- வித்வான் அல்லாதவனும், न शक्यं- பார்க்க முடியாது, नास्तिकः च- நாஸ்திகனும், न- பார்க்க முடியாது.

பிள்ளைகளும், பசுக்களை சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி கொடுப்பவர்களும், தங்கள் தங்களுக்கு இருக்க தனங்களைக்கொண்டு த்ருப்தி அடைந்தவர்களும், தானம் செய்யும் காலங்களில் லோபமில்லாமல் க்ரமமாய் தனங்களை தானம் செய்கிறவர்களும், எப்பொழுதும் ஸத்தியத்தைப் பேசுவதையே வ்ரதமாகவுடையவர்களுமாயிருந்தார்கள்.

7. (பொ-ரை) உத்தமமான அந்த அயோத்தியா நகரத்தில் அல்பமான பொக்கிஷமுடையவனும், பசு, குதிரை, தனம் தான்யம் இவைகளல்லாதவனும், குடும்பியாயிருந்து தன தான்யமில்லாமல் தன் அர்த்தகாரியங்களை நடத்த முடியாமலிருக்கின்றவனும் ஒருவனுமே கிடையாது.

8. (பொ-ரை) கேவலம் காமபுருஷார்த்தத்தையே ப்ரதானமாகக் கொண்டவனோ, லோபியாயிருப்பவனோ, க்ரூரனாயிருப்பவனோ, ஒருவனையும் அயோத்திமா நகரத்தில் தேடிக்கூட பார்க்கக்கூடாது, அப்படியே, படித்தனல்லாதவனும், நாஸ்திகனானவனும் தேடித்தேடிப் பார்ப்பதற்குக் காண மாட்டான்

---

* कुटुम्बी- माता पिता स्नुषा पुत्रौ पुत्री पत्न्यतिथिः स्वयम् । दश संख्याः कुटुम्बीनि विष्णुनोक्तं द्विजोत्तम! என்று விஷ்ணு ஸ்ம்ருதியில் சொல்லியபடி மாதா, பிதா, இரண்டு பிள்ளைகள், இரண்டு நாட்டுப்பெண்கள், விவாகமாகாத பெண், பத்னி, தான், அதிதி, என்ற பத்து பேர்களைக்குடையவன்.

*कदर्यः- आत्मानं धर्मकृत्यं च पुत्रदारांश्च पीडयेत् । लोभाद्यः पितरौ भ्रातॄन् स कदर्य इति स्मृतः ॥ தனத்தின் பேராசையினால் செலவு செய்ய மனமில்லாமல் தன்னையும், தர்ம காரியங்களையும், பிள்ளைகளையும், பார்யையையும், மாதாபிதாக்களையும், ஸஹோதரர்களையும் பீடிக்கிறவன்.

सर्वे नराश्च नार्यश्च धर्मशीलाः सुसंयताः ।
उदिताः शीलवृत्ताभ्यां महर्षय इवाऽमलाः ॥ 9 ॥
नाऽकुण्डली नाऽमुकुटी नाऽस्रग्वी नाऽल्पभोगवान् ।
नाऽमृष्टो नाऽनुलिप्ताङ्गो नाऽसुगन्धश्च विद्यते ॥ 10 ॥
नाऽमृष्टभोजी नाऽदाता नाऽप्यनङ्गदनिष्कधृक् ।
नाऽहस्ताभरणो वापि दृश्यते नाऽप्यनात्मवान् ॥ 11 ॥

---

9. (ப-ரை) सर्वे नरा: च- எல்லா புருஷர்களும், (सर्वा:) नार्य: च- எல்லா ஸ்த்ரீகளும், धर्मशीला:- தர்ம ஸ்வபாவமுடையவர்களும், सुसंयता:- நல்ல அடக்கமுடையவர்களும், शीलवृत्ताभ्यां- நல்ல ஸ்வபாவத்துடனும், ஆசாரத்துடனும்கூட, उदिता:- பிறந்தவர்களும், महर्षय: इव- மஹரிஷிகள்போல், अमला:- களங்கமற்றவர்களுமாகியிருந்தார்கள்.

10. (ப-ரை) अकुण्डली- (அந்த அயோத்திமா நகரத்தில்) குண்டலமணிந்து கொள்ளாதவன், न विद्यते- இல்லை, अमुकुटी- கிரீடமணிந்து கொள்ளாதவனும், न विद्यते- இல்லை, अस्रग्वी- மாலை அணியாதவனும், न विद्यते- இல்லை, अल्पभोगवान्- அல்ப ஸுகமுடையவனும், न- இல்லை, अमृष्ट:- சுத்தமல்லாதவனும், न- இல்லை, नानुलिप्ताङ्ग:- சந்தனம் பூசிக்கொள்ளாதவனும், न- இல்லை, असुगन्ध: च- கஸ்தூரி முதலான வாஸனையில்லாதவனும், न- இல்லை.

11. (ப-ரை) अमृष्टभोजी- மிருஷ்டான்னம் புஜிக்காதவன், न दृश्यते- காணப்படுகிறதில்லை, अदाता- அன்னதானம் செய்யாதவன், न-காணப்படவில்லை, अनङ्गदनिष्कधृक् अपि- தோள் வளைகளையும், பதக்கங்களையும் அணிந்துகொள்ளாதவன், न- காணப்படவில்லை, अहस्ताभरण:- கையில் வளை தரித்துக்கொள்ளாதவனும், न- காணப்படுகிறதில்லை, अनात्मवान्- மனதை அடக்காதவனும் न- காணப்படுகிறதில்லை.

---

9. (பொ-ரை) அயோத்திமா நகரத்தில் வஸிக்கின்ற புருஷர்கள் ஸ்த்ரீகள் எல்லோருமே, நன்றாய் இந்திரியங்களை அடக்கினவர்களும், பிறக்கும்பொழுதே நல்ல ஸ்வபாவத்துடனும், ஸதாசாரத்துடனும் கூடியவர்களாய்ப்பிறந்தவர்களும், தர்மானுஷ்டானம் செய்வதையே ஸ்வபாவமாகவுடையவர்களும், மஹரிஷிகள்போல் கலக்கமற்ற மனதுடையவர்களுமாயிருந்தார்கள்.

10. (பொ-ரை) அந்த அயோத்திமா நகரத்தில், குண்டலம் தரியாதவனும், கிரீடம் வைத்துக்கொள்ளாதவனும், மாலை அணிந்து கொள்ளாதவனும், அற்ப ஸுகமுடையவனும். அப்யங்கம்முதலான ஸ்நானங்களைச்செய்யாமல் அசுத்தமானவனும் சந்தனப்பூச்சு பூசிக்கொள்ளாதவனும், குங்குமம் கஸ்தூரிமுதலான வாஸனைத்ரவ்யங்களை உபயோகம் செய்து கொள்ளாதவனும் கிடையாது.

11. (பொ-ரை) அறுசுவைகளோடு பூர்ணமான போஜனம்செய்யாதவனும், அவ்விதமாக அன்னதானம் செய்யாதவனும், தோள்வளை, பதக்கம், இவைகளை அணிந்துகொள்ளாதவனும், கைவளை, மோதிரம் முதலியவைகளை அணிந்து கொள்ளாதவனும், மனதை அடக்காதவனும் அயோத்திமா நகரத்தில் காணக்கிடைக்கமாட்டான்.

नानाहिताग्निर्नायज्वा न क्षुद्रो वा न तस्करः ।
कश्चिदासीदयोध्यायां न च निर्वृत्तसङ्करः ॥ 12 ॥
स्वकर्मनिरता नित्यं ब्राह्मणा विजितेन्द्रियाः ।
दानाध्ययनशीलाश्च संयताश्च प्रतिग्रहे ॥ 13 ॥
न नास्तिको नानृतको न कश्चिदबहुश्रुतः ।
नासूयको न चाशक्तो नाविद्वान्विद्यते तदा ॥ 14 ॥

12. (ப-ரை) अयोध्यायां-அயோத்திமா நகரத்தில், कश्चित्-ஒருவனும், अनाहिताग्निः-ஆஹிதாக்னி இல்லாதவனை, न- இல்லை, अयज्वा- ஸோமயாகம் செய்யாதவனையும், न-இல்லை, क्षुद्रः वा- அற்ப புத்தியுடையவனும், न-இல்லை, तस्करः-திருடனையும், न-இல்லை, निर्वृत्तसङ्करः च- பிறர் தாரங்களில் புத்திரோத்பத்தி செய்கிறவனும், न- இல்லை.

13. (ப-ரை) ब्राह्मणाः- ப்ராம்மணர்கள், नित्यं- எப்பொழுதும், स्वकर्मनिरताः- தங்களுக்கு அடுத்த கர்மங்களில் நோக்கமுடையவர்களாகவும், विजितेन्द्रियाः- இந்திரியங்களை அடக்கினவர்களாகவும், दानाध्ययनशीलाः च- தானம் செய்வதையும், அத்யயனம் செய்வதையும் ஸ்வபாவமுடையவர்களாகவும், प्रतिग्रहे- தானம் வாங்குவதில், संयताः च- ஸங்கோசமுடையவர்களாகவும், (आसन्- இருந்தார்கள்).

14. (ப-ரை) तदा- அப்பொழுது, कश्चित्-ஒருவனைவது, नास्तिकः- நாஸ்திகனை, न- இல்லை, अनृतकः- பொய் சொல்லுகிறவனை, न- இல்லை, अबहुश्रुतः- அநேக சாஸ்திரங்களை படிக்காதவனை, न-இல்லை, असूयकः-பொறாமையுள்ளவனை, न-இல்லை, अशक्तः च- சக்தியற்றவனையும், न-இல்லை, अविद्वान्-வித்வானல்லாதவனையும், न विद्यते-இல்லை.

12. (பொ-ரை) அந்த அயோத்திமா நகரத்தில் ஒருவனும் நித்ய அக்நி ஹோத்திரம் செய்யாதவன் கிடையாது. ஸோமயாகம் செய்யாதவனுமில்லை. அற்ப வித்தையையும், அற்ப ஐச்வர்யத்தையுமுடையவன் ஒருவனுமில்லை. பிறர் தாரங்களில் கர்ப்பத்தின் உத்பத்திசெய்து அதனால் ஜாதியைக்கெடுக்கின்றவனும் இல்லை.

13. (பொ-ரை) அந்நகரத்தில் வஸிக்கும் ப்ராம்மணர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் ஆச்ரமங்களுக்கு உரிய கர்மானுஷ்டானம் செய்வதிலேயே ஊக்கமுடையவர்களாகவும், இந்திரியங்களை ஜெயித்தவர்களாகவும், தானம் செய்வதும், ஜபம் செய்வதும் ஸ்வபாவமுடையவர்களாகவும், தானம் வாங்குவதில் மிகவும் கூச்சமுடையவர்களாகவும் இருந்தார்கள்.

14. (பொ-ரை) தசரத மஹாராஜன் ராஜ்ய பரிபாலனம் பண்ணுங்காலத்தில் கோஸல தேசத்திலேயே. நாஸ்திகனொருவனும் கிடையாது. பொய் சொல்லுகிறவனும் கிடையாது, அநேக சாஸ்திரங்கள் படிக்காதவனும் கிடையாது, பொறாமையுள்ளவனும் கிடையாது, ஐஹிகமாயும், ஆமுஷ்மிகமாயுமுள்ள கார்யத்தை ஸாதிப்பதில் சக்தியில்லாதவனும் கிடையாது, வித்வானல்லாதவனும் கிடையாது.

नाषडङ्गविदत्रासीन्नाव्रतो नासहस्रदः ।
न दीनः क्षिप्तचित्तो वा व्यथितो वापि कश्चन ॥ 15 ॥
कश्चिन्नरो वा नारी वा ना श्रीमान्नाप्यरूपवान् ।
द्रष्टुं शक्यमयोध्यायां नापि राजन्यभक्तिमान् ॥ 16 ॥
वर्णेष्वग्र्यचतुर्थेषु देवतातिथिपूजकाः ।
कृतज्ञाश्च वदान्याश्च *शूरा विक्रमसंयुताः ॥ 17 ॥

15. (ப-ரை) अत्र- அந்த தேசத்தில், कश्चन- ஒருவனும், अषडङ्गवित्- ஆறு அங்கங்களை அறியாதவன், न आसीत्- இல்லை, अव्रत:- வ்ரதானுஷ்டானம் செய்யாதவன், न- இல்லை, असहस्रद:- ஆயிரக்கணக்காக தானம் செய்யாதவன், न- இல்லை, दीन:- யாசிப்பவனும், न- இல்லை, क्षिप्तचित्त:- நிலையற்றமனதுடையவனும், न- இல்லை, व्यथित: वा अपि- வ்யாதி முதலானதுகளால் வருத்தப்பட்டவனும், न- இல்லை.

16. (ப-ரை) अयोध्यायां- அயோத்திமா நகரத்தில், कश्चित् नर: वा- ஒரு புருஷனாவது, काचित् नारी वा- ஒரு ஸ்த்ரீயாவது, अश्रीमान्- (अश्रीमती)- சோபையில்லாதவன், சோபையில்லாதவள், द्रष्टुं- பார்ப்பதற்கு, न शक्यं- முடியாது, अरूपवान्- (अरूपवती अपि-) அழகில்லாதவன் (அழகில்லாதவள்) न- பார்க்கமுடியாது, राजनि- அரசனிடத்தில், अभक्तिमान्- (अभक्तिमती)- பக்தியில்லாதவன், (பக்தியில்லாதவள்) न- பார்க்கமுடியாது.

17. (ப-ரை) अग्र्यचतुर्थेषु- ப்ராம்மணவர்ணத்தை நான்காவதாக உடைய, वर्णेषु-வர்ணங்களில், (இருக்கிற மனிதர்கள்,) देवतातिथिपूजका:- தேவதைகளையும், அதிதிகளையும், பூஜிக்கிறவர்களாகவும், कृतज्ञा: च- செய்த உபகாரத்தை நினைக்கிறவர்களாகவும்,वदान्या: च-தானங்கள் செய்கிறவர்களாகவும், शूरा:- சூரர்களாகவும், विक्रमसंयुता:- பராக்கிரமத்தோடுகூடியவர்களாகவும். (आसन्- இருந்தார்கள்.)

15. (பொ-ரை) அந்த தேசத்தில் சிக்ஷா வ்யாகர்ணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம் என்கிற ஆறு வேதாங்கங்களையறியாதவன் ஒருவனுமில்லை. சாந்திராயணம் முதலான வ்ரதங்களை அனுஷ்டிக்காதவனுமில்லை. யாசித்தவர்களுக்கு வேண்டியபடி தானம் செய்யாதவன் ஒருவனுமில்லை, ஏழைத்தனமுள்ளவன் ஒருவனுமில்லை. மனோவ்யாகுலமுள்ளவனொருவனுமில்லை, வ்யாதிமுதலானதுகளால் கஷ்டப்படுகிறவன் ஒருவனுமில்லை.

16. (பொ-ரை) அயோத்திமா நகரத்தில் புருஷனோ, அல்லது ஸ்த்ரீயோ சோபையில்லாதவர்களும், அழகில்லாதவர்களும், அரசனிடத்தில் பக்தியில்லாதவர்களும், காணக்கிடைக்க மாட்டார்கள்.

17. (பொ-ரை) அயோத்திமா நகரத்திலிருக்கின்ற ப்ராம்மண க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர என்கிற நான்கு வர்ணத்தார்களும், தேவதைகளையும், அதிதிகளையும் பூஜித்துக்கொண்டும், ஒருவன்செய்த உபகாரத்தை மறக்காமல் எப்பொழுதும் நினைத்துக்கொண்டும், தானம் செய்வதில் மிக்க ஆசையுள்ளவர்களாகவும், சூரர்களாகவும், பராக்கிரமமுடையவர்களாகவும் இருந்தார்கள்.

दीर्घायुषो नराः सर्वे धर्मं सत्यं च संश्रिताः ।
सहिताः पुत्रपौत्रैश्च नित्यं स्त्रीभिः पुरोत्तमे ॥ 18 ॥
क्षत्रं ब्रह्ममुखं चासीद्वैश्याः क्षत्रमनुव्रताः ।
शूद्राः स्वधर्मनिरतास्त्रीन्वर्णानुपचारिणः ॥ 19 ॥
सा तेनेक्ष्वाकुनाथेन पुरी सुपरिरक्षिता ।
यथा पुरस्तान्मनुना मानवेन्द्रेण धीमता ॥ 20 ॥

18. (ப-ரை) पुरोत्तमे- உத்தமமான அந்நகரத்தில், सर्वे नराः- (இருந்த) எல்லா மனிதர்களும், धर्मं- தர்மத்தையும், सत्यं च- ஸத்தியத்தையும், संश्रिताः- அடைந்தவர்களாயும், (अत एव- ஆகையினாலேயே) दीर्घायुषः- தீர்க்கமான ஆயுஸ்ஸையுடையவர்களாயும், नित्यं- எப்பொழுதும், स्त्रीभिः- ஸ்த்ரீகளோடும், पुत्रपौत्रैः च- பிள்ளைகளோடும், பௌத்திரர்களோடும், सहिताः- கூடியவர்களாய், (आसन्- இருந்தார்கள்).

19. (ப-ரை) क्षत्रं- க்ஷத்திரிய ஜாதியானது, ब्रह्ममुखं- ப்ராம்மண ஜாதியைப் ப்ரதானமாக உடையதாக, आसीत्- இருந்தது, वैश्याः- வைச்யர்கள், क्षत्रं- க்ஷத்திரிய ஜாதியை, अनुव्रताः- அநுஸரித்து நடந்தார்கள், शूद्राः- சூத்திரர்கள், त्रीन् वर्णान्- மூன்று வர்ணத்தார்களையும், उपचारिणः सन्तः- உபசரிக்கிறவர்களாயிருந்து, स्वधर्मनिरताः- தங்கள் தங்கள் தர்மங்களில் ஊக்கமுள்ளவர்களாய், (இருந்தார்கள்)

20 (ப-ரை) सा पुरी- அந்த அயோத்தியா நகரமானது, तेन- அந்த, इक्ष्वाकुनाथेन- இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ப்ரபுவினால், पुरस्तात्- முன்காலத்தில், मानवेन्द्रेण- மனிதர்களுக்கு ப்ரபுவாய், धीमता- புத்திமானான, मनुना यथा- மநு ப்ரஜாபதியினால், (ஆளப்பட்டது) போல, सुपरिरक्षिता- நன்றாக ரக்ஷிக்கப்பட்டது.

18. (பொ-ரை) அந்த அயோத்தியா நகரத்திலிருக்கும், எல்லாமனிதர்களும், தர்மத்தையும், ஸத்யத்தையும் கைப்பற்றினவர்களாய் அதனால் தீர்க்காயுஸ்ஸை அடைந்து, ஸ்த்ரீகளோடும், புத்திர பௌத்திரர்களோடும் எப்பொழுதும் கூடினவர்களாகவே இருந்தார்கள்.

19. (பொ-ரை) அயோத்தியா நகரத்தில் இருக்கும் க்ஷத்திரியர்கள் எல்லோரும் ப்ராம்மணர்களையே ப்ரதானமாகக்கொண்டு, அவர்கள் சொற்படி நடந்து வந்தார்கள். வைச்யர்கள் க்ஷத்திரியர்களை அநுஸரித்துவந்தார்கள். சூத்திரர்கள் ப்ராம்மண, க்ஷத்ரிய, வைச்ய என்ற மூன்று வர்ணத்தார்களுக்கும் பணிவிடை செய்துகொண்டு தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களைத்தவறாது செய்துவந்தார்கள்.

20. (பொ-ரை) இக்ஷ்வாகு வம்சத்திற்பிறந்த அந்த தசரத சக்ரவர்த்தி, இவ்விதம் மேன்மைபொருந்திய அயோத்தியா நகரத்தை, மனிதர்களுக்குப் ப்ரபுவான சிறந்த புத்தியையுடைய மனுப்ரஜாபதி முன் பரிபாலித்து வந்தது போல் ஆண்டு வந்தார்.

योधानामग्निकल्पानां पेशलानाममर्षिणाम् ।
संपूर्णा कृतविद्यानां गुहा केसरिणामिव ॥ 21 ॥
काम्भोजविषये जातैर्बाह्लीकैश्च हयोत्तमैः ।
वनायुजैर्नदीजैश्च पूर्णा हरिहयोत्तमैः ॥ 22 ॥
विन्ध्यपर्वतजैर्मत्तैः पूर्णा हैमवतैरपि ।
मदान्वितैरतिबलैर्मातङ्गैः पर्वतोपमैः ॥ 23 ॥
ऐरावतकुलीनैश्च महापद्मकुलैस्तथा ।
अञ्जनादपि निष्पन्नैर्वामनादपि च द्विपैः ॥ 24 ॥

21. (ப-ரை) अग्निकल्पानां- அக்னிக்குத் துல்யமானவர்களும், पेशलानां- கபடமில்லாதவர்களும், अमर्षिणाम्- ரோஷமுள்ளவர்களும், कृतविद्यानां- ஆயுத வித்தைகளை நன்றாய் அறிந்தவர்களுமான, योधानां- போர்வீரர்களால், संपूर्णा- நிறைந்து, केसरिणां- ஸிம்மங்களினால், (நிறைந்த) गुहा इव- மலையின் குகைபோல், (இருந்தது).

22. (ப-ரை) काम्भोजविषये- காம்போஜ தேசத்தில், जातैः- உண்டானவைகளாயும், बाह्लीकैः- பாஹ்லீக தேசத்திற் உண்டானவைகளாயும், वनायुजैः- வநாயு தேசத்திலுண்டானவைகளாயும், नदीजैः च- ஸிந்து நதியில் உண்டானவைகளாயும், हरिहयोत्तमैः- இந்திரனுடைய குதிரைபோல் ச்ரேஷ்டங்களாயுமிருக்கிற, हयोत्तमैः- உயர்ந்த குதிரைகளால், पूर्णा- (அந்நகரம்) நிறைந்திருந்தது.

23-24. (ப-ரை) (सा- அந்த அயோத்திமா நகரமானது,) विन्ध्यपर्वतजैः- விந்திய மலையிலுண்டானவைகளாயும், मत्तैः- மதங்கொண்டுமிருக்கிற, मातङ्गैः- யானைகளாலும், हैमवतैः- இமயமலையிலுண்டானவைகளாயும், मदान्वितैः- மதங்களுடையவைகளும், अतिबलैः- அதிக பலமுள்ளவைகளுமான, (मातङ्गैः अपि- யானைகளாலும்), ऐरावतकुलीनैः- ஐராவதத்தின் குலத்திற் பிறந்தவைகளும், पर्वतोपमैः च- மலைகளுக்குச்

---

21. (பொ-ரை) சௌர்யத்தினால் நெருப்பை ஒத்தவர்களும், கபடமில்லாதவர்களும், பிறர்கள் செய்யும் அவமானத்தை பொருக்காமையாகிற ரோஷமுள்ளவர்களாயும், ஆயுத வித்தைகளை நன்றாய் கற்றவர்களுமான போர் வீரர்களால் நிறைந்த அயோத்திமா நகரமானது, ஸிம்மங்களால் நிறைந்த மலையின் குகைபோல் சத்ருக்களால் அவமதிக்கமுடியாமலிருந்தது.

22. (பொ-ரை) காம்போஜ தேசத்திலும், பாஹ்லீக தேசத்திலும் வநாயு தேசத்திலும், ஸிந்து தேசத்திலும், பிறந்து தேவேந்திரனுடைய உச்சைச்ரவமென்கிற குதிரைபோல் ச்ரேஷ்டங்களாயுமிருக்கிற குதிரைகளாலும் அந் நகரம் நிறைந்

23-24. (பொ-ரை) விந்தியமலையில் உண்டான மதயானைகளும், இமயமலை

भद्रैर्मन्द्रैर्मृगैश्चैव भद्रमन्द्रमृगैस्तथा ।
भद्रमन्द्रैर्भद्रमृगैर्मृगमन्द्रैश्च सा पुरी ॥
नित्यमत्तैः सदा पूर्णा नागैरचलसन्निभैः ॥ 25 ॥
सा योजने च द्वे भूयः सत्यनामा प्रकाशते ।
यस्यां दशरथो राजा वसञ्जगदपालयत ॥ 26 ॥

ஸமானங்களுமான யானைகளாலும், तथा- அப்படியே, महापद्मैः- மஹாபத்ம மென்கிற யானையின் குலத்திற் பிறந்த யானைகளாலும், अञ्जनात् अपि- அஞ்சன மென்னும் யானையிடத்திலும், वामनात् अपि- வாமனமென்கிற யானையிடத்திலும், निष्पन्नैः- உண்டானவைகளான, द्विपैः च- யானைகளாலும், पूर्णा- நிறைந்திருந்தது.

25. (ப-ரை) सा पुरी- அந்நகரமானது, भद्रैः- பத்ரஜாதியிற் பிறந்தவைகளும், मन्द्रैः- மந்த்ரஜாதியிற் பிறந்தவைகளும், मृगैः च एव- ம்ருக ஜாதியிற் பிறந்தவைகளும், तथा- அப்படியே, भद्रमन्द्रमृगैः- பத்ரமந்த்ர, ம்ருகஜாதியிற் பிறந்தவைகளும், भद्रमन्द्रैः- பத்ரமந்த்ர ஜாதியிற் பிறந்தவைகளும், भद्रमृगैः- பத்ர ம்ருக ஜாதியிற் பிறந்தவைகளும், मृगमन्द्रैः च- ம்ருக மந்த்ரஜாதியிற் பிறந்தவைகளும், नित्यमत्तैः- எப்பொழுதும் மதங்கொண்டவைகளும், अचलसन्निभैः- பர்வதத்திற்கு ஒப்பானவைகளுமான, नागैः- யானைகளால், सदा- எப்பொழுதும், पूर्णा- நிறைந்திருந்தது.

26. (ப-ரை) यस्यां- யாதொரு நகரத்தில், दशरथः राजा- தசரதமஹாராஜர், वसन्- வஸித்துக்கொண்டு, जगत्- உலகத்தை, अपालयत्- பரிபாலனம் செய்துவந்தாரோ, सा- அந்த அயோத்திநகரமானது, भूयः- பட்டணத்திற்கு வெளியிலும், द्वे योजने च- இரண்டு யோஜனை வரையிலும், सत्यनामा- உண்மையான பெயரை உடையதா யிருந்தது.

யிருண்டாய் அதிகபலமுள்ள மதயானைகளும், ஐராவதமென்னும் திக்கஜத் துயானையின் குலத்திற் பிறந்த மஹாபத்மமென்ற யானைகளும், அஞ்சனமென் கிற திக்குயானையின் குலத்திற் பிறந்தவைகளும், அஞ்சனமென்கிற திக்கு யானையினிடத்திற் பிறந்தவைகளும், வாமனமென்கிற திக்குயானையினிடத் திற் பிறந்தவைகளுமான யானைகளும், இந்நகரத்தில் நிறைந்திருந்தது.

25. (பொ-ரை) அந்நகரமானது, பத்ரமென்னும், மந்த்ரமென்னும், ம்ருக மென்னும், பத்ரமந்த்ர ம்ருகமென்னும், பத்ர மந்த்ரமென்னும், பத்ர ம்ருகமென் னும், ம்ருகமந்த்ரமென்னும் ஜாதியிற் பிறந்தவைகளாய் எப்பொழுதும் மதங் கொண்டு மலைகளுக்கு ஸமானமான யானைகளால் எப்பொழுதும் நிறைந்திருந்தது.

26. (பொ-ரை) தசரத மஹாராஜர் அந்நகரத்தில் வஸித்துக்கொண்டு, ஜகத்தை பரிபாலித்து வந்தபடியால், அந்த அயோத்திநகரமானது [illegible] சுற்றிலும் இரண்டு யோசனைவரையில் உண்மையான பெயரை உடையதா [illegible]. அதாவது, "अयोध्या" என்றால் न योद्धुं शक्या- யுத்தம்செய்ய முடியாதது என்று பொருள்.

तां पुरीं स महातेजा राजा दशरथो महान् ।
शशास शमितामित्रो नक्षत्राणीव चन्द्रमाः ॥ 27 ॥
तां सत्यनामां दृढतोरणार्गलां गृहैर्विचित्रैरुपशोभितां शिवाम् ।
पुरीमयोध्यां नृसहस्रसंकुलां शशास वै शक्रसमो महीपतिः ॥ 28 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
षष्ठः सर्गः ॥ 6 ॥

27. (ப-ரை) महातेजाः- மிகுந்த ப்ரதாபத்தை உடையவரும், महान्- பெருந்தன்மை உடையவரும், शमितामित्रः- சத்ருக்களை ஒழித்தவருமான, सः दशरथः राजा- அந்த தசரத மஹாராஜர், चन्द्रमाः- சந்திரன், नक्षत्राणि इव- நக்ஷத்திரங்களை (ஆண்டுவந்தது) போல், तां पुरीं- அந்த அயோத்திமா நகரத்தை, शशास- ஆண்டு வந்தார்.

28. (ப-ரை) दृढतोरणार्गलां- த்ருடமான கோபுர வாசலின் தாப்பாள்களை உடையதாயும், विचित्रैः- ஆச்சர்ய கரங்களான, गृहैः- வீடுகளினால், उपशोभितां- விளங்கிக் கொண்டும், शिवाम्- மங்களகரமாயும், नृसहस्रसंकुलां- ஆயிரக்கணக்கான ஜனங்களால் நிறைந்ததாம், सत्यनामां- உண்மையான பெயரையுடையதுமான, तां अयोध्यां पुरीं- அந்த அயோத்திமா நகரத்தை, शक्रसमः- இந்திரனுக்கொப்பானவரான, महीपतिः- தசரத மஹாராஜர், शशास वै- ஆண்டுகொண்டிருந்தார்,

27. (பொ-ரை) மிக்கப்ரதாபமுடையவரும், பெருந்தன்மையுடையவரும், சத்ருக்களை ஒழித்தவருமான அந்த தசரத மஹாராஜர், சந்திரன், தன் பத்தினிகளான நக்ஷத்திரங்களுக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணிக்கொண்டிருப்பது போல், அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லோருக்கும், மிகுந்த ஆனந்தத்தைச்செய்துகொண்டு அந் நகரத்தை ஆண்டுகொண்டுவந்தார்.

28. (பொ-ரை) உறுதியான வெளிகோபுரவாசல் சதவுகளின் தாள்களையுடையதும், விசித்திரமான க்ருஹங்களால் விளங்கிக்கொண்டும், அநேகமாயிரம் மனிதர்களால் நிறைந்ததும், வசிப்பவர்களுக்கு எப்பொழுதும் மங்களங்களையுண்டு பண்ணுவதும், அயோத்தியென்னும் பெயரை உண்மையாக உடையதுமான அந்த அயோத்திமா நகரத்தை, தேவேந்திரனுக்கு துல்யரான தசரத மஹாராஜர் ஆண்டு வந்தார்.

सप्तमः सर्गः ॥ 7 ॥

तस्यामात्या गुणैरासन्निक्ष्वाकोस्तु महात्मनः ।
मन्त्रज्ञाश्चेङ्गितज्ञाश्च नित्यं प्रियहिते रताः ॥ 1 ॥
अष्टौ बभूवुर्वीरस्य तस्यामात्या यशस्विनः ।
शुचयश्चानुरक्ताश्च राजकृत्येषु नित्यशः ॥ 2 ॥
धृष्टिर्जयन्तो विजयः सिद्धार्थो ह्यर्थसाधकः ।
अशोको मन्त्रपालश्च सुमन्त्रश्चाष्टमोऽभवत् ॥ 3 ॥

1. (ப-ரை) महात्मनः- மஹாத்மாவான, तस्य इक्ष्वाकोः तु- அந்த இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த தசரதருக்கு, मन्त्रज्ञाः च- மந்த்ராலோசனையை [illegible], इङ्गितज्ञाः च- பிறர் மனதை அறிகின்றவர்களாயும், नित्यं- எப்பொழுதும், प्रियहिते (அரசனுக்கு) ப்ரியம் செய்வதிலும், ஹிதம் செய்வதிலும், रताः- [illegible] யும், गुणैः- (சொல்லப்போகிற) குணங்களோடு, (उपेताः- கூடியவர்களான), अमात्याः- மந்த்ரிகள், (आसन्- இருந்தார்கள்).

2. (ப-ரை) वीरस्य तस्य- வீரனான அந்த தசரத மஹாராஜருக்கு, यशस्विनः- கீர்த்தியுடையவர்களாய், शुचयः च- சுத்தி உடையவர்களாய், नित्यशः- எப்பொழுதும், राजकृत्येषु- ராஜகார்யங்களில், अनुरक्ताः च- மிகவும் அன்புள்ளவர்களாய், अष्टौ अमात्याः- எட்டு மந்த்ரிகள், बभूवुः- இருந்தார்கள்.

3. (ப-ரை) धृष्टिः- த்ருஷ்டி என்பவர், (प्रथमः- முதல்வராக, अभवत्- இருந்தார்), जयन्तः- ஜயந்தர் என்பவர், (द्वितीयः अभवत्- இரண்டாவதாக இருந்தார்), विजयः- விஜயர் என்பவர், (तृतीयः अभवत्- மூன்றாவதாக இருந்தார்), सिद्धार्थः- ஸித்தார்த்தர் என்பவர், (चतुर्थः- अभवत्- நாலாவதாக இருந்தார்), अर्थसाधकः- அர்த்த ஸாதகர் என்பவர், (पञ्चमः अभवत्- ஐந்தாவதாக இருந்தார்), अशोकः- அசோகர் என்பவர், (षष्ठः

---

1. (பொ-ரை) [illegible] இக்ஷ்வாகு வம்சத்தில் [illegible] வருமான அந்த தசரத மஹாராஜருக்கு, மந்த்ராலோசனையை [illegible] அறிந்தவர்களாயும், [illegible] அறிகின்றவர்களாய், எப்பொழுதும் அரசனுக்கு ப்ரியம் [illegible], ஹிதம் [illegible] லதிலும் நோக்கமுடையவர்களாய் சொல்லப்போகிற [illegible] வர்களான மந்த்ரிகளிருந்தார்கள்.

2. (பொ-ரை) வீரரான அந்த தசரத மஹாராஜருக்கு [illegible] படைத்தவர்களாய், ஸ்வாமித்ரோஹத்தில் [illegible] களில் எப்பொழுதும் கவனமுள்ளவர்களாய் எட்டு மந்த்ரிகளிருந்தார்கள்.

3. (பொ-ரை) அந்த மந்த்ரிகள் எட்டுபேர்களும், த்ருஷ்டி, [illegible], ஸித்தார்த்தர், அர்த்த ஸாதகர், அசோகர், மந்த்ரபாலர், ஸுமந்த்ரர் [illegible] நடையவர்கள்.

ऋत्विजौ द्वावभिमतौ तस्यास्तामृषिसत्तमौ ।
वसिष्ठो वामदेवश्च मन्त्रिणश्च तथाऽपरे ॥ 4 ॥
विद्याविनीता ह्रीमन्तः कुशला नियतेन्द्रियाः ।
श्रीमन्तश्च महात्मानः शास्त्रज्ञा दृढविक्रमाः ॥ 5 ॥
कीर्तिमन्तः प्रणिहिता यथावचनकारिणः ।
तेजःक्षमायशः प्राप्ताः स्मितपूर्वाभिभाषिणः ॥ 6 ॥

अभवत्- ஆறாவதாக விருந்தார்), मन्त्रपालः च- மந்த்ரபாலர் என்பவர், (सप्तमः अभवत्- ஏழாவதாக விருந்தார்), सुमन्त्रः च- ஸுமந்த்ரர் என்பவர், अष्टमः अभवत्- எட்டாவதாக விருந்தார்.

4. (ப-ரை) तस्य- அந்த மஹாராஜருக்கு, वसिष्ठः- வஸிஷ்டரென்றும், वामदेवः च- வாமதேவரென்றும், द्वौ ऋषि सत्तमौ- இரண்டு ரிஷி ச்ரேஷ்டர்கள், अभिमतौ- இஷ்டர்களான, ऋत्विजौ- புரோஹிதர்களாக, आस्तां- இருந்தார்கள், तथा- அவ்விதமே, अपरे- மற்ற, मन्त्रिणः च- (புரோஹிதர்களும்) மந்த்ரிகளும், (आसन- இருந்தார்கள்).

5–6. (ப-ரை) विद्याविनीताः- (மந்த்ரிகளெல்லோரும்) தண்டநீதி முதலான வித்யைகளில் சிக்ஷிக்கப்பட்டவர்கள், ह्रीमन्तः- வெட்கமுடையவர்கள், कुशलाः- ஸமர்த்தர்கள், नियतेन्द्रियाः- அடக்கப்பட்ட இந்திரியங்களை யுடையவர்கள், श्रीमन्तः- செல்வமுடையவர்கள், महात्मानः- விசாலமான புத்தியையுடையவர்கள், शास्त्रज्ञाः- நீதி சாஸ்த்ரங்களை அறிந்தவர்கள், दृढविक्रमाः- உறுதியான பராக்ரமமுடையவர்கள், कीर्तिमन्तः- புகழ் உடையவர்கள், प्रणिहिताः- (ராஜ்ய கார்யங்களில்) நோக்கமுடையவர்கள், यथावचनकारिणः- சொன்னபடி செய்பவர்கள், तेजः क्षमायशः प्राप्ताः- ப்ரதாபம், பொறுமை, இவைகளால் கீர்த்தியடைந்தவர்கள், स्मितपूर्वाभिभाषिणः- புன்சிரிப்புடனே பேசும் ஸ்வபாவமுடையவர்கள்.

---

4. (பொ-ரை) ரிஷிகளிற் சிறந்தவர்களான வஸிஷ்டர், வாமதேவர் என்றும் இரண்டு முக்யமான புரோஹிதர்களுமிருந்தார்கள். அவ்விதமே, மற்ற மந்த்ரிகளும், புரோஹிதர்களுமிருந்தார்கள்.

5-6. (பொ-ரை) அந்த மந்த்ரிகளெல்லோரும் தண்டநீதிமுதலாகிய வித்தைகளை நன்றாய் கற்றவர்கள், கெட்டகார்யம் செய்வதில் வெட்கமுடையவர்கள், நீதி சாஸ்த்ரப்படி கார்யங்களைச்செய்வதில் ஸமர்த்தர்கள், சாஸ்த்ர விருத்தமான விஷயங்களில் இந்த்ரியங்களை அடக்கினவர்கள், நிறைந்த செல்வமுடையவர்கள், விசாலமான புத்தியுடையவர்கள், நீதி சாஸ்த்ரங்களை நன்றாய் அறிந்தவர்கள், எங்கும் தடைப்படாத பராக்ரமமுடையவர்கள், ராஜ்யகார்யங்களில் ஏமாறாதவர்கள், வாயில் சொல்லியபடியே நடக்கின்றவர்கள், ப்ரதாபத்தினாலும், பெருமையினாலும் சிறந்தவர்களென்று எல்லோராலும் புகழ்ப்பெற்றவர்கள், எல்லோரிடத்திலும் சிரித்தமுகமாகவே பேசுகிறவர்கள்.

क्रोधात्कामार्थहेतोर्वा न ब्रूयुरनृतं वचः ॥ 6½ ॥
तेषामविदितं किंचित्स्वेषु नास्ति परेषु वा ।
क्रियमाणं कृतं वापि चारेणापि चिकीर्षितम् ॥ 7 ॥
कुशला व्यवहारेषु सौहृदेषु परीक्षिताः ।
प्राप्तकालं तु ते दण्डं धारयेयुः सुतेष्वपि ॥ 8 ॥

6½. (ப-ரை) क्रोधात्- கோபத்தினாலாவது, कामार्थहेतोः वा- காமத்தின் காரணத்தினாலாவது, அர்த்தத்தின் காரணத்தினாலாவது, अनृतं वचः- பொய் வார்த்தையை, न ब्रूयुः- பேசமாட்டார்கள்.

7. (ப-ரை) तेषां- அந்த மந்திரிகளுக்கு, स्वेषु- தங்கள் தேச விருத்தாந்தங்களிலும், परेषु- இதர தேச விருத்தாந்தங்களிலும், कृतं- முன் செய்யப்பட்டதும், क्रियमाणं- தற்காலம் செய்யப்படுகின்றதும், चिकीर्षितं वा अपि- செய்யப்படப்போகின்றதுமான, किंचित्- எந்த விருத்தாந்தமும், चारेण- சாரன் மூலமாய், अविदितं- அறியப்படாதது, न अस्ति- இல்லை.

8. (ப-ரை) ते- அவர்கள், व्यवहारेषु- வ்யவஹாரங்களில், कुशलाः- ஸமர்த்தர்கள், सौहृदेषु- ஸ்நேஹ விஷயத்தில், परीक्षिताः- பரீக்ஷிக்கப்பட்டவர்கள், सुतेषु अपि- பிள்ளைகளிடத்திலும், प्राप्तकालं- குற்றம் செய்த காலத்தை அநுஸரித்து, दण्डं- தண்டனையை, धारयेयुः- செய்வார்கள்.

6½. (பொ-ரை) கோபத்தினாலோ, காமத்தினாலோ, அல்லது பொருளாசையினாலோ ஒருக்காலும் பொய்வார்த்தை பேசமாட்டார்கள்.

7. (பொ-ரை) தங்கள் தேசங்களிலும், அயல் தேசங்களிலும், முன் செய்யப்பட்டதும், செய்யப்படுகின்றதும், இனி செய்யவேண்டுமென்று நினைக்கப்படுவதுமான எந்தக்காரியமும் சாரர்கள் முகமாக அவர்களுக்குத் தெரியாதது இல்லை.

8. (பொ-ரை) வ்யவஹாரத்திலும் தேர்ந்தவர்கள், ஸ்நேஹவிஷயத்தில் நன்றாய் பரீக்ஷைசெய்யப்பட்டவர்கள், தன் பிள்ளைகளாயிருந்தாலும், குற்றம் செய்த காலத்திற்குத்தகுந்த சிக்ஷைசெய்வார்கள்.

कोशसंग्रहणे युक्ता बलस्य च परिग्रहे ।
अहितं चापि पुरुषं न विहिंस्युरदूषकम् ॥ 9 ॥
वीराश्च नियतोत्साहा राजशास्त्रमनुष्ठिताः ।
शुचीनां रक्षितारश्च नित्यं विषयवासिनाम् ॥ 10 ॥
ब्रह्मक्षत्रमहिंसन्तस्ते कोशं समपूरयन् ।
सुतीक्ष्णदण्डाः सम्प्रेक्ष्य पुरुषस्य बलाबलम् ॥ 11 ॥

9. (ப-ரை) कोशसंग्रहणे- பொக்கிஷத்தை சேர்ப்பதிலும், बलस्य- ஸைன்யத்தினுடைய, परिग्रहे च- தனங்களைக்கொடுத்து ரக்ஷணத்திலும், युक्ताः- கவனமுள்ளவர்கள், अहितं चापि- சத்ருவாயிருந்தாலும், अदूषकं- குற்றமில்லாத, पुरुषं- மனிதனை, न विहिंस्युः- ஹிம்ஸிக்கமாட்டார்கள்.

10. (ப-ரை) वीराः च- வீரர்கள், नियतोत्साहाः- நித்யமான உத்ஸாஹமுடையவர்கள், राजशास्त्र- நீதி சாஸ்த்ரத்தை, अनुष्ठिताः- நடக்கின்றவர்கள், (ஆதலால்) विषयवासिनां- தம் தேசத்தில் வஸிக்கின்ற, शुचीनां- பரிசுத்தர்களான ஸாதுக்களை, नित्यं- எப்பொழுதும், रक्षितारः च- ரக்ஷிக்கின்றவர்கள்.

11. (ப-ரை) ते அவர்கள், पुरुषस्य- மனிதனுடைய, बल अबलं- குற்றங்களின் பலாபலங்களை, सम्प्रेक्ष्य- பார்த்து, सुतीक्ष्णदण्डाः- மிகவும் கொடிய தண்டனையை செய்தவர்களாய், ब्रह्म क्षत्रं- ப்ராம்மண ஜாதியையும், க்ஷத்ரிய ஜாதியையும், अहिंसन्तः- ஹிம்ஸை செய்யாதவர்களாய், कोशं- பொக்கிஷத்தை, समपूरयन्- நிறப்பினார்கள்.

9. (பொ-ரை) பணங்களை ஸம்பாதித்து பொக்கிஷத்தை வ்ருத்திசெய்வதிலும், ரத, கஜ, துரக, பதாதியென்னும் நான்கு வித ஸைன்யங்களுக்கு வேண்டிய தனங்களைக்கொடுத்து அவைகளை பரிபாலனம் செய்வதிலும் கவனமுள்ளவர்கள். தனக்குச்சத்ருவாயிருந்தாலும் குற்றமில்லாதவனை ஹிம்ஸை செய்யத்துணிந்தவர்களல்ல.

10. (பொ-ரை) சத்ருக்களை அடக்குவதில் வல்லவர்கள், சத்ருக்களை ஜெயிப்பதில் எப்பொழுதும் உத்ஸாஹமுள்ளவர்கள், நீதி சாஸ்த்ரப்படி நடக்கிறவர்கள், ஆதலால் தம் தேசத்தில் வஸிக்கின்ற ஸாதுக்களை எப்பொழுதும் ரக்ஷிக்கின்றவர்கள். துஷ்டர்களை சிக்ஷிக்கின்றவர்கள்.

11. (பொ-ரை) இப்படிப்பட்ட மந்த்ரிகள், ப்ராம்மணஜாதியையும், க்ஷத்ரிய ஜாதியையும் ஹிம்ஸிக்காமலும், ஒரு மனிதன் அபராதம் செய்தாலும், அபராதத்தின் தாரதம்யத்தையும் மனிதனுடைய சக்தி அசக்தி இவைகளையும் பார்த்து மனிதன் சக்தியுள்ளவனையும் குற்றம் அதிகமாயுமிருந்தால் அதற்குத்தகுந்தபடி மிகவும் கொடிய தண்டனைகளை விதித்தும் பொக்கிஷத்தை வ்ருத்திசெய்தும் வந்தார்கள்.

शुचीनामेकबुद्धीनां सर्वेषां संप्रजानताम्
नासीत्पुरे वा राष्ट्रे वा मृषावादी नरः क्वचित् ॥ 12 ॥
कश्चिन्न दुष्टस्तत्रासीत्परदाररतो नरः ।
प्रशान्तं सर्वमेवासीद्राष्ट्रं पुरवरं च तत् ॥ 13 ॥
सुवाससः सुवेषाश्च ते च सर्वे सुशीलिनः ।
हितार्थं च नरेन्द्रस्य जाग्रतो नयचक्षुषा ॥ 14 ॥

12. (ப-ரை) शुचीनां- சுத்தர்களாயும், एकबुद्धीनां- ஒரே அபிப்பிராயமுடையவர்களுமான, सर्वेषां- அந்த மந்திரிகளெல்லோரும், सम्प्रजानतां सतां- (ராஜ்யகாரியத்தை) நன்றாய் கவனித்துவரும் காலத்தில், पुरे वा- அந்த நகரத்திலாவது, राष्ट्रे वा- தேசத்திலாவது, क्वचित्- ஓரிடத்திலும், मृषावादी- பொய் சொல்லுகின்ற, नरः- மனிதன், न आसीत्- இருக்கவில்லை.

13. (ப-ரை) तत्र- அந்த நகரத்திலும், தேசத்திலும், दुष्टः- துஷ்டனையும், परदार रतः- பரதாரங்களில் ஆசையுடையவனையும் உள்ள, नरः- மனிதன், कश्चित्- ஒருவனும், न आसीत्- இல்லை, तत् पुरवरं- அந்த உயர்ந்த பட்டணமும், राष्ट्रं च- தேசமும், सर्वं- முழுவதும், प्रशान्तं एव- சாந்தியுடையதாகவே, आसीत्- இருந்தது.

14. (ப-ரை) ते सर्वे च- அந்த மந்திரிகளெல்லோரும், सुवाससः- நல்ல வஸ்திரமுடையவர்கள், सुवेषाः च- நல்ல அலங்காரமுடையவர்கள், सुशीलिनः- நல்ல நடத்தையுடையவர்கள், नरेन्द्रस्य- அரசனுடைய, हितार्थं- ஹிதத்திற்காக, नयचक्षुषा- நீதியென்கிற கண்ணால், जाग्रतः च- விழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

12. (பொ-ரை) மேற்சொன்ன காரியம் என்ற மூன்று குணங்களும் பொருந்திய ஒரே அபிப்ராயமுடையவர்களாய் அந்த மந்திரிகளெல்லோரும் ராஜ்யதந்திரத்தை அவ்வவ்வகாலங்களில் நன்றாய் விசாரித்துவருங்காலத்தில் அந்த நகரத்திலோ, அந்த தேசத்திலோ, ஓரிடத்திலும் பொய் பேசுகிறவன் ஒருவனுமில்லை.

13. (பொ-ரை) அந்த நகரத்திலும், தேசத்திலும் ஒருமனிதனாவது, துஷ்டனையும், பிறர் மனைவிகளிடத்தில் ஆசையுள்ளவனாகவும் இருக்கவில்லை. அந்த தேசம், நகரம் முழுவதும் அநியாயமும், அதர்மமும் இல்லாமல் மிகவும் சாந்தியுடையதாகவே இருந்தது.

14. (பொ-ரை) அந்த மந்திரிகளெல்லோரும், நல்லவஸ்திரமும், அழகான அலங்காரங்களும், நன்னடக்கையும் உடையவர்களாய் அரசனுக்கு ஹிதம் செய்வதற்காகவே நியாயம் தவறாமல் ஜாக்ருதர்களாயிருந்தார்கள்.

गुरौ गुणगृहीताश्च प्रख्याताश्च पराक्रमे ।
विदेशेष्वपि विज्ञाताः सर्वतो बुद्धिनिश्चयात् ॥ 15 ॥
सन्धिविग्रहतत्त्वज्ञाः प्रकृत्या संपदाऽन्विताः ।
मन्त्रसंवरणे शक्ताः श्लक्ष्णाः सूक्ष्मासु बुद्धिषु ॥ 16 ॥
नीतिशास्त्रविशेषज्ञाः सततं प्रियवादिनः ॥ 17 ॥

---

15. (ப—ரை) गुरौ- (गुरुषु)- குருக்களிடத்தில், गुणगृहीताः च- (गृहीतगुणाः)- குணத்தைமாத்திரம் க்ரஹித்தவர்கள், पराक्रमे- பராக்ரம விஷயத்தில், प्रख्याताः च- ப்ரஸித்தி அடைந்தவர்கள், विदेशेषु अपि- வெளிதேசங்களிலும், सर्वतः- எல்லா விஷயங்களிலும், बुद्धिनिश्चयात्- (निश्चय बुद्धेः) தீர்ந்த புத்தியினால், विज्ञाताः- (எல்லோராலும்) அறியப்பட்டவர்கள்.

16. (ப—ரை) सन्धिविग्रहतत्त्वज्ञाः- ஸந்தி, விக்ரஹ இவைகளுடைய உண்மையை அறிந்தவர்கள், प्रकृत्या- ஸ்வபாவத்தினாலேயே, संपदा- ஸம்பத்தோடு, अन्विताः- கூடியவர்கள், मन्त्रसंवरणे- தாங்கள் செய்த மந்த்ராலோசனையை மறைக்கிறதில், शक्ताः- திறமையுடையவர்கள், सूक्ष्मासु- மிகவும் நுட்பங்களான, बुद्धिषु- புத்திகளில், श्लक्ष्णाः- ம்ருதுவானவர்கள்.

17. (ப—ரை) नीतिशास्त्रविशेषज्ञाः- ராஜநீதியுடன் ஆளும் தன்மையை அறிந்தவர்கள், सततं- எப்பொழுதும், प्रियवादिनः- (அரசனிடம்) இனிதாகப்பேசும் ஸ்வபாவமுடையவர்கள்.

---

15. (பொ-ரை) குருக்களிடத்தில் தோஷங்களைப்பாராமல் குணங்களைமாத்திரம் பார்க்கும் ஸ்வபாவமுடையவர்கள். பராக்ரம விஷயத்திலும் ப்ரஸித்திபெற்றவர்கள், இதரதேசங்களுடைய எல்லா விஷயங்களிலும் தீர்ந்த புத்தியுடையவர்களென்று எல்லோராலும் நன்றாயறியப்பட்டவர்கள்.

16. (பொ-ரை) சத்ருஅரசர்களோடு இந்தக்காலத்தில், இந்ததேசத்தில் ஸந்திசெய்துகொள்ளவேண்டுமென்றும், படையெடுக்கவேண்டுமென்றும் நன்றாய் அறிந்தவர்கள், ஸ்வபாவமாகவே ஐச்வர்யமுள்ளவர்கள். ராஜ்யகார்யவிஷயமாக தாங்கள் செய்த மந்த்ராலோசனையை ஒருவருக்கும் தெரியாமல் மறைக்கும் திறமையுடையவர்கள், நுட்பமான விஷயங்களை கொஞ்சமேனும் ச்ரமமில்லாமல் ஸுலபமாக அறியத்தகுந்த புத்தியின் திறமையுடையவர்கள்.

17. (பொ-ரை) ராஜநீதிதவறாமல் ராஜ்யம் ஆளுவதை அறிந்தவர்கள், எப்பொழுதும் அரசனிடம் இனிதாகப்பேசும் தன்மையுடையவர்கள்.

गुणागुण गृहीताः- गृहीत दोषगुणाः- இவன் குணமுள்ளவன், இவன் தோஷமுள்ளவன் என்று நன்றாய் அறிந்தவர்கள் என்றும் பாடம் உண்டு.

सन्धिः- ஸமாதானம் செய்து கொள்ளல்.

विग्रहः- சண்டையிடுதல்.

ईदृशैस्तैरमात्यैश्च राजा दशरथोऽनघः ।
उपपन्नो गुणोपेतैरन्वशासद्वसुन्धराम् ॥ 18 ॥
अवेक्षमाणश्चारेण प्रजा धर्मेण रञ्जयन् ।
प्रजानां पालनं कुर्वन्नधर्मं परिवर्जयन् ॥ 19 ॥
विश्रुतस्त्रिषु लोकेषु वदान्यः सत्यसङ्गरः ।
स तत्र पुरुषव्याघ्रः शशास पृथिवीमिमाम् ॥ 20 ॥

18. (ப-ரை) अनघः- குற்றமில்லாத, दशरथः राजा- தசரத மஹாராஜர், ईदृशैः- இப்படிப்பட்டவர்களாயும், गुणोपेतैः- (மற்ற) குணங்களோடு கூடினவர்களுமான, तैः- அந்த, अमात्यैः च- மந்த்ரிகளோடும், उपपन्नः- கூடிக்கொண்டு, वसुन्धरां- பூமியை, अन्वशासत्- ஆண்டுவந்தார்.

19–20. (ப-ரை) चारेण- (चारैः) சாரர்களால், अवेक्षमाणः- (தன்னுடையவும், பிறருடையவும், தேச வ்ருத்தாந்தங்களை) பார்த்துக்கொண்டும், प्रजाः- ஜனங்களை, धर्मेण- தர்மத்தினால், रञ्जयन्- ஸந்தோஷப்படுத்திக்கொண்டும், प्रजानां- ப்ரஜைகளுடைய, पालनं- ரக்ஷணத்தை, कुर्वन्- செய்துகொண்டும், अधर्मं- அதர்மத்தை, परिवर्जयन्- பரிஹரித்துக்கொண்டும், त्रिषु लोकेषु- மூன்று உலகங்களிலும், विश्रुतः- ப்ரஸித்தராய், वदान्यः- தாதாவாய், सत्यसङ्गरः- ஸத்யமான ப்ரதிஜ்ஞையை யுடையவராயுமிருந்துகொண்டு, सः पुरुषव्याघ्रः- அந்த புருஷ ச்ரேஷ்டர், तत्र- அந்த அயோத்தியில், (वसन्- வஸித்து), इमां पृथिवीं- இந்த பூமியை, शशास- ஆண்டுவந்தார்.

18. (பொ-ரை) குற்றமற்ற தசரத மஹாராஜர், முன் சொன்ன குணங்களுடனும், மற்ற குணங்களுடனும் கூடிய அந்த மந்த்ரிகளுடன் ராஜ்யம் ஆண்டுவந்தார்.

19-20. (பொ-ரை) புருஷச்ரேஷ்டரான அந்த தசரத மஹாராஜர், சாரர்களின் மூலமாக, தன்னுடையவும், பிறருடையவும் ராஜ்ய வ்ருத்தாந்தத்தை நன்றாய் அறிந்துகொண்டும், தண்டிக்கவேண்டியவர்களை தண்டித்தல் முதலான தர்மத்தினால், ப்ரஜைகளுக்கு ஸந்தோஷத்தைச்செய்துகொண்டும், ப்ரஜைகளுக்கு உண்டான அநிஷ்டங்களை நிவ்ருத்திசெய்து, இஷ்டங்களை கொடுத்துக்கொண்டும், தண்டிக்கத்தகாதவர்களை தண்டித்தல் முதலான அதர்மங்களைச் செய்யாதவராயும், மூன்று உலகங்களிலும் ப்ரஸித்தியுடையவராய், வேண்டுகிறவர்களுக்கு யதேஷ்டமான தானங்களைச்செய்துகொண்டும், செய்த ப்ரதிஜ்ஞையை ஸத்யமாகச் செய்து கொண்டும், அந்த அயோத்திமா நகரத்தில் வஸித்துக்கொண்டு இந்த உலகத்தை ஆண்டுவந்தார்.

नाध्यगच्छद्विशिष्टं वा तुल्यं वा शत्रुमात्मनः ।
मित्रवान्नतसामन्तः प्रतापहतकण्टकः ॥ 21 ॥
स शशास जगद्राजा दिवं देवपतिर्यथा ॥ 21½ ॥
तैर्मन्त्रिभिर्मन्त्रहिते नियुक्तैर्वृतोऽनुरक्तैः कुशलैः समर्थैः ।
स पार्थिवो दीप्तिमवाप युक्तस्तेजोमयैर्गोभिरिवोदितोऽर्कः ॥ 22 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
सप्तमः सर्गः ॥ 7 ॥

21. (ப-ரை) (सः- அந்த அரசன்,) मित्रवान्- நண்பர்களையுடையவராய், नतसामन्तः- (தன் காலில்) வணங்கிக்கொண்டிருக்கிற சுற்று அரசர்களை யுடையவராய், प्रतापहतकण्टकः- தன் ப்ரதாபத்தினால் அடிக்கப்பட்ட சத்ருக்களையுடையவராய், आत्मनः- தனக்கு, विशिष्टं वा- மேலானவனாவது, तुल्यं वा- ஸமானமானவனாவது, शत्रुं- ஒரு சத்ருவையும், न अध्यगच्छत्- அறியவில்லை.

21½. (ப-ரை) देवपतिः- தேவராஜன், दिवं यथा- ஸ்வர்க்கலோகத்தை (ஆளுவதுபோல்) सः- राजा- அந்த அரசன், जगत्- உலகத்தை, शशास- ஆண்டுவந்தார்.

22. (ப-ரை) मन्त्रहिते- மந்த்ராலோசனை செய்வதிலும், ஹிதம் செய்வதிலும், नियुक्तैः- உத்ஸாஹமுடையவர்களாய், कुशलैः- புத்திசாலிகளாய், समर्थैः- கெட்டிக்காரர்களாய், अनुरक्तैः- (தன்னிடத்தில்,) அன்புள்ளவர்களுமான, तै मन्त्रिभिः- அந்த மந்த்ரிகளால், वृतः- சூழப்பட்ட, सः पार्थिवः- அந்த அரசன், तेजोमयैः- தேஜோரூபங்களான, गोभिः- கிரணங்களோடு, युक्तः- கூடிக்கொண்டிருக்கிற, उदितः अर्कः इव- உதயமாகின்ற ஸூர்யன்போல், दीप्तिं- ப்ரகாசத்தை, अवाप- அடைந்தார்.

---

21. (பொ-ரை) அந்த மஹாராஜர், தோழர்களை உடையவரானதாலும், சுற்றிலுமிருக்கும் அரசர்கள் தன் காலின்கீழ் எப்பொழுதும் வணங்கிக்கொண்டிருப்பதாலும், தன்னுடைய ப்ரதாபத்தினாலேயே சத்ருக்களை ஜெயித்திருப்பதினாலும், தனக்கு மேலானவனோ, ஸமானமானவனோ, ஒரு சத்ருவும் இருப்பதாக அறிந்தவரேயல்ல.

21½. (பொ-ரை) தேவராஜன் ஸ்வர்க்கத்தை ஆண்டு வந்ததுபோல் அந்த தசரத மஹாராஜர் இவ்வுலகத்தை ஆண்டுவந்தார்.

22. (பொ-ரை) மந்த்ராலோசனை செய்வதிலும், அரசனுக்கும் ராஜ்யத்திற்கும் ஹிதம் செய்வதிலும் நோக்கமுடையவர்களாய், மிகவும் புத்திசாலிகளாய், எந்தக்கார்யத்தையும் ஆரம்பித்துமுடிக்கும் திறமையுள்ளவர்களாய், தன்னிடம் மிக அன்புள்ளவர்களுமான அந்த மந்த்ரிகளால் சூழப்பட்டு அவ்வரசன் உதய காலத்து ஸூர்யன் தேஜோமயமான தன் கிரணங்களோடு கூட விளங்குவது போல் விளங்கினார்.

अष्टम: सर्ग: ॥ 8 ॥

तस्य त्वेवंप्रभावस्य धर्मज्ञस्य महात्मनः ।
सुतार्थं तप्यमानस्य नासीद्वंशकरः सुतः ॥ 1 ॥
चिन्तयानस्य तस्यैवं बुद्धिरासीन्महात्मनः ।
सुतार्थी वाजिमेधेन किमर्थं न यजाम्यहम् ॥ 2 ॥
स निश्चितां मतिं कृत्वा यक्ष्यामेति बुद्धिमान् ।
मन्त्रिभिः सह धर्मात्मा सर्वैरेव कृतात्मभिः ॥ 3 ॥
ततोऽब्रवीदिदं राजा सुमन्त्रं मन्त्रिसत्तमम् ।
शीघ्रमानय मे सर्वान् गुरूंस्तान्सपुरोहितान ॥ 4 ॥

---

1. (பதவுரை) एवं प्रभावस्य- இவ்வாறான மஹிமையுடையவராய், धर्मज्ञस्य- தர்மங்களை அறிந்தவராய், महात्मनः- மஹாத்மாவாய், सुतार्थं- புத்திரனுக்காக, तप्यमानस्य- தபஸு செய்துகொண்டிருக்கிற, तस्य तु- அந்த அரசனுக்கு, वंशकरः- ஸந்ததியை வ்ருத்தி செய்கின்ற, सुतः- பிள்ளை, न आसीत्- உண்டாகவில்லை.

2. (பதவுரை) एवं- இவ்வாறு, चिन्तयानस्य- சிந்தித்துக்கொண்டிருக்கிற, महात्मनः- மஹாத்மாவான, तस्य- அந்த அரசனுக்கு, सुतार्थी- புத்திரனை விரும்புகின்ற, अहं- நான், किमर्थं- ஏன், वाजिमेधेन- அச்வமேதத்தினால், न यजामि- யாகம் செய்யவில்லை, என்று, बुद्धिः- எண்ணமானது, आसीत्- உண்டாயிற்று.

3-4. (பதவுரை) बुद्धिमान्- சிறந்த புத்தியையுடைய, धर्मात्मा- தர்மிஷ்டரான, सः- அந்த அரசர், कृतात्मभिः- சிறந்த புத்தியையுடைய, सर्वैः- எல்லாருமான, मन्त्रिभिः सह- மந்திரிகளோடுகூட, यक्ष्ये इति- யாகம் செய்யவேண்டுமென்று, निश्चितां मतिं- நிச்சித புத்தியை, कृत्वा- செய்து, ततः- பிறகு, मन्त्रिसत्तमम्- மந்திரிச்ரேஷ்டரான, सुमन्त्रं- ஸுமந்திரனை (பார்த்து) मे- என்னுடைய, तान्- அந்த, सर्वान् गुरून्- குருக்களெல்லோரையும், स पुरोहितान्- புரோஹிதர்களுடன், शीघ्रं- சீக்கிரமாக, आनय- அழைத்துவாரும், इति- என்று, राजा- அவ்வரசன், इदं अब्रवीत्- இதைச்சொன்னார்.

---

1. (பொழிப்புரை) இவ்வாறான ப்ரபாவமுடையவராய், ஸகல தர்மங்களையும் அறிந்தவராய், மஹாத்மாவான அவ்வரசன், புத்திரனில்லாமல் ஸந்ததிக்காக தபஸு செய்துகொண்டிருந்தும், (பரிதபித்துக்கொண்டிருந்தும்) வம்சத்திற்காக புத்திரன் இல்லாமலிருந்தார்.

2. (பொழிப்புரை) இவ்வாறு, புத்திரோத்பத்தியின் உபாயத்தை அவர் ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, நாம் புத்திரபாக்யத்திற்காக அச்வமேதயாகம் ஏன் இவ்வளவுநாள்வரையில் செய்யாமலிருந்து விட்டோம், இனியாவது செய்ய வேண்டும், என்று எண்ணம் உண்டாயிற்று.

3-4. (பொழிப்புரை) மிகவும் தர்மிஷ்டராய் சிறந்த புத்தியையுடையவரான அவ்வரசன், அச்வமேதயாகம் செய்யவேணுமென்று, புத்திமான்களான தன்னுடைய

ततः सुमन्त्रस्त्वरितं गत्वा त्वरितविक्रमः ।
समानयत्स तान्सर्वान्समस्तान्वेदपारगान् ॥ 5 ॥
सुयज्ञं वामदेवं च जाबालिमथ काश्यपम् ।
पुरोहितं वसिष्ठं च ये चान्ये द्विजसत्तमाः ॥ 6 ॥
तान्पूजयित्वा धर्मात्मा राजा दशरथस्तदा ।
इदं धर्मार्थसहितं वाक्यं श्लक्ष्णमथाऽब्रवीत् ॥ 7 ॥

5. (ப-ரை) ततः- பிறகு, सः सुमन्त्रः- அந்த ஸுமந்த்ரர், त्वरितविक्रमः- பரபரப்புள்ள நடையுடையவராய், त्वरितं- அந்த கூடிமே, गत्वा- சென்று, वेदपारगान्–வேதங்களைக்கரைகண்டவர்களான, तान् सर्वान्- அவர்களெல்லோரையும், समस्तान्- ஒன்று சேர்த்து, समानयत्- (அரண்மனைக்கு) அழைத்துவந்தார்.

6. (ப-ரை) सुयज्ञं- ஸுயஜ்ஞரையும், वामदेवं च- வாமதேவரையும், जाबालिं- ஜாபாலியையும், अथ– பிறகு, काश्यपं- காச்யபரையும், पुरोहितं- புரோஹிதரான, वसिष्ठं च- வஸிஷ்டமஹரிஷியையும், ये च– யாவை, अन्ये- மற்றவர்களான, द्विजसत्तमाः- ப்ராம்மணோத்தமர்களுண்டோ, (तान्- அவர்களையும், समानयत्- அழைத்துவந்தார்).

7. (ப-ரை) तदा- அப்பொழுது, धर्मात्मा– தர்மிஷ்டரான, दशरथः राजा- தசரத மஹாராஜர், तान्- அவர்களை, पूजयित्वा- பூஜித்து, धर्मार्थसहितं- தர்ம அர்த்தங்களோடு கூடியதாய், श्लक्ष्णं- மதுரமான, इदं वचनं- இந்த வார்த்தையை, अब्रवीत्- சொன்னார்.

மந்த்ரிகள் எல்லோருடனும் கலந்து ஆலோசித்து நிச்சயம் செய்துவிட்டு, பிறகு, தம்முடைய வஸிஷ்டர் முதலான குருக்களெல்லோரையும், புரோஹிதர்களுடன் சீக்கிரமாக அழைத்துவாரும் என்று மந்த்ரிகளிற் சிறந்தவரான ஸுமந்த்ரருக்குச் சொன்னார்.

5. (பொ-ரை) பிறகு, அந்த ஸுமந்த்ரரும், உடனே அதிவேகமாகச் சென்று, வேதங்களை ஓதி கரைகண்டவர்களான, வஸிஷ்டர் முதலான குருக்களையும் புரோஹிதர்களையும் ஒன்றுசேர்த்து அரசன் அரண்மனைக்கு அழைத்துவந்தார்.

6. (பொ-ரை) பிறகு, ஸுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், புரோஹிதரான வஸிஷ்டர் என்னும் இவர்களையும், மற்ற ப்ராம்மணோத்தமர்களையும், அழைத்துவந்தார்.

7. (பொ-ரை) அப்பொழுது, தர்மாத்மாவான அந்த தசரத மஹாராஜர் ஸுயஜ்ஞர் முதலான குருக்களை பூஜித்துவிட்டு, தர்மார்த்தங்களோடு கூடியதாய் மதுரமான இந்த வார்த்தையைச்சொன்னார்.

मम लालप्यमानस्य पुत्रार्थं नास्ति वै सुखम् ।
तदर्थं हयमेधेन यक्ष्यामीति मतिर्मम ॥ 8 ॥
तदहं यष्टुमिच्छामि शास्त्रदृष्टेन कर्मणा ।
कथं प्राप्स्याम्यहं कामं बुद्धिरत्र विचार्यताम् ॥ 9 ॥
ततः साध्विति तद्वाक्यं ब्राह्मणाः प्रत्यपूजयन् ।
वसिष्ठप्रमुखास्सर्वे पार्थिवस्य मुखाच्च्युतम् ॥
ऊचुश्च परमप्रीतास्सर्वे दशरथं वचः ॥ 10 ॥

---

8. (ப-ரை) पुत्रार्थं- பிள்ளையின் நிமித்தமாக, लालप्यमानस्य- மிகவும் கதறிக்கொண்டிருக்கிற, मम- எனக்கு, सुखं- ஸுகமானது, नास्ति वै- உண்டாகவேயில்லை, तदर्थं- அதற்காக, हयमेधेन- அச்வமேதத்தினால், यक्ष्यामि- (பகவானை) ஆராதனம் செய்யவேண்டும், इति- என்று, मम- எனக்கு, मतिः- ஒரு எண்ணம், (உண்டாயிற்று).

9. (ப-ரை) तत्- ஆகையால், अहं- நான், शास्त्रदृष्टेन- சாஸ்த்ரத்தில் கண்ட, कर्मणा- விதியாக, (ப்ரகாரமாக,) यष्टुं- யாகஞ் செய்துகொள்ள, इच्छामि- விரும்புகிறேன், अहं- நான், कामं- இச்சித்த யாகத்தை, कथं- எவ்வாறு, प्राप्स्यामि- செய்து முடிப்பேன், अत्र- இவ்விஷயத்தில், बुद्धिः- உபாயமானது, विचार्यताम्- ஆலோசிக்கப்படவேண்டும்.

10. (ப-ரை) ततः- பிறகு, वसिष्ठप्रमुखाः- வஸிஷ்டர் முதலான, सर्वे ब्राह्मणाः- ப்ராம்மணர்களெல்லோரும், पार्थिवस्य- அரசனுடைய, मुखात्- முகத்திலிருந்து, च्युतं- நழுவின (வந்த) तत् वाक्यं- அந்த வார்த்தையை, साधु- நன்றாயிருக்கிறது, इति- என்று प्रत्यपूजयन्- ஆமோதித்தார்கள். सर्वे- எல்லோரும், परमप्रीताः सन्तः- மிகவும் ப்ரீதியுடையவர்களாய், दशरथं- தசரதனைக்குறித்து, वचः- வார்த்தையை, ऊचुः च- சொன்னார்கள்.

---

8. (பொ-ரை) வெகு காலமாக பிள்ளையில்லாமல் பரிதபித்துக்கொண்டிருக்கிற எனக்கு கிஞ்சித்தேனும் ஸுகமேகிடையாது. அதற்காக அச்வமேதயாகத்தையாவது செய்யலாமென்று எனக்கு ஒரு எண்ணம் உண்டாயிருக்கிறது.

9. (பொ-ரை) ஆகலால் நான் சாஸ்த்ரத்திற்கண்ட விதமாக யாகஞ்செய்து கொள்ளவிரும்புகிறேன். ஆகலால் நான் செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கிற யாகமானது அநேக இடையூறுகள் உள்ளதால் இது எவ்வாறு விக்னமில்லாமல் செய்து நிறைவேறும், என்று இவ்விஷயத்தில் நீங்களெல்லோரும் உபாயத்தை ஆலோசிக்கவேண்டும்.

10. (பொ-ரை) பிறகு வஸிஷ்டர் முதலான அந்தப்ராம்மணர்களெல்லோரும், அரசன் வாயில்நின்றும் வெளியில் புறப்பட்ட அந்தவார்த்தையை மெச்சிப் புகழ்ந்து ஆமோதித்து பரமஸந்தோஷத்துடன் எல்லோரும் தசரதனைக்குறித்து ஒரு வார்த்தை சொன்னார்கள்.

संभारास्संभ्रियन्तां ते तुरंगश्च विमुच्यताम् । ॥ 11 ॥

सर्वथा प्राप्स्यसे पुत्रानभिप्रेतांश्च पार्थिव ? ।
यस्य ते धार्मिकी बुद्धिरियं पुत्रार्थमागता ॥ 12 ॥

ततः प्रीतोऽभवद्राजा श्रुत्वैतद्द्विजभाषितम् ।
अमात्यांश्चाब्रवीद्राजा हर्षपर्याकुलेक्षणः ॥ 13 ॥

11. (ப-ரை) ते संभाराः- (யாகத்திற்கு வேண்டிய) ஸாமக்ரிகள், संभ्रियन्तां- சேகரிக்கப்படவேண்டும், तुरंगः च- குதிரையும், विमुच्यतां- விடப்படவேண்டும்.

12. (ப-ரை) हे पार्थिव- அரசனே, पुत्रार्थं- புத்திரன் நிமித்தமாக, धार्मिकी- தர்ஷ்டமான, इयं बुद्धिः- இந்த எண்ணமானது, यस्य ते- யாதொரு உமக்கு, आगता- வந்திருக்கிறதோ, (सः त्वं- அப்படிப்பட்ட நீர்) अभिप्रेतान्- ஆசைப்பட்ட, पुत्रान्- புத்திரர்களை, सर्वथा- ஸர்வ விதத்தாலும், प्राप्स्यसे- அடையப்போகிறீர்.

13. (ப-ரை) ततः- பிறகு, राजा- அரசன், तत्- அந்த, द्विजभाषितं- ப்ராம்மணர்களுடைய மொழியை, श्रुत्वा- கேட்டு, प्रीतः- ப்ரீதியுடையவராக, अभवत्- ஆனார், राजा- அரசன், हर्ष पर्याकुल ईक्षणः- ஆனந்த பாஷ்பத்தினால் நிறைந்த கண்களையுடையவராய், अमात्यान्- மந்த்ரிகளைப்பார்த்து, अब्रवीत् च- ஒரு வார்த்தையும் சொன்னார்.

11. (பொ-ரை) யாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளும் சேகரித்து, குதிரையும் அனுப்பப்படவேண்டும். (என்று சொன்னார்கள்.)

12. (பொ-ரை) ப்ரபோ! புத்திரன் பிறக்கவேண்டியதற்காக அச்வமேத யாகம் செய்யவேண்டுமென்கிற இந்த தர்ம சிந்தை உமக்கு உண்டானபடியால் நீர் கோறியபடி உமக்குப்பிள்ளைகள் பலவிதத்திலும் உண்டாகவே போகிறார்கள்.

13. (பொ-ரை) பிறகு, மஹாராஜர் அந்த ப்ராம்மணர்களின் வார்த்தையைக் கேட்டு மிகவும் ப்ரீதியுடன் கண்களால் ஆனந்த ஜலங்களைப்பெருகிக்கொண்டு மந்த்ரிகளை நோக்கிச்சொன்னார்.

संभाराः संभ्रियन्तां मे गुरूणां वचनादिह ।
समर्थाधिष्ठितश्चाश्वः सोपाध्यायो विमुच्यताम् ॥ 14 ॥
सरय्वाश्चोत्तरे तीरे यज्ञभूमिर्विधीयताम् ।
शान्तयश्चाभिवर्धन्तां यथाकल्पं यथाविधि ॥ 15 ॥
शक्यः कर्तुमयं यज्ञः सर्वेणापि महीक्षिता ।
नापराधो भवेत्कष्टो यद्यस्मिन्क्रतुसत्तमे ॥ 16 ॥

14. (ப-ரை) मे- என்னுடைய, गुरूणां- குருக்களின், वचनात्- வார்த்தையினால், इह- இப்பொழுதே, संभाराः- (யாகத்திற்கு வேண்டிய) ஸாமக்ரிகள், संभ्रियन्तां- சேகரிக்கப்படவேண்டும், अश्वः- குதிரையும், समर्थ अधिष्ठितः च- ஸாமர்த்தியத்தில் திறமையுடையவர்களால் ரக்ஷிக்கப்பட்டு, सोपाध्यायः- உபாத்தியாயருடன் கூடியதாகவும், विमुच्यताम्- விடப்படலாம்.

15. (ப-ரை) सरय्वाः- ஸரயூ நதியினுடைய, उत्तरे तीरे- வடகரையில், यज्ञभूमिः च- யாகபூமியும், विधीयताम्- ஏற்படுத்தப்படவேண்டும், शान्तयः च- சாந்தி ஹோமங்களும், यथाकल्पं- க்ரமம் தவறாமல், यथाविधि- விதிப்படி, अभिवर्धन्तां- வளர்க்கும்படி செய்யவேண்டும்.

16. (ப-ரை) अस्मिन् क्रतुसत्तमे- உயர்ந்ததான இந்த யாகத்தில், कष्टः- கஷ்டமான, अपराधः- தவறுதல், न भवेत् यदि- உண்டாகாமலிருக்குமேயானல், अयं यज्ञः- இந்த யாகம், सर्वेण महीक्षिता अपि- க்ஷத்ரியஜாதியார் எல்லோராலும், कर्तुं- செய்வதற்கு, शक्यः- முடியும்.

14. (பொ-ரை) என் குருக்களைக்கேட்டு அவர்கள் சொல்லியபடி அச்வமேதயாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளை இப்பொழுதே சேகரிக்கவேண்டும், அச்வமேதக்குதிரையும், சாஸ்த்ரத்தில் சொல்லியபடி ஸமர்த்தர்களான ராஜகுமாரர்களுடனும், அத்வர்யு முதலான ருத்விக்குக்களுடனும், தேச ஸஞ்சாரத்திற்காக அனுப்பப்படவேண்டும்.

15. (பொ-ரை) ஸரயூ நதியின், வடகரையில் யாகம் செய்யவேண்டிய இடம் கல்பிக்கவேண்டும். அங்கங்கு விக்னங்களை போக்கக்கூடிய சாந்தி ஹோமம் முதலியவைகளும், சாஸ்த்ர விதிப்படி க்ரமமாக நடந்து வரும்படி செய்யவேண்டும்.

16. (பொ-ரை) இந்த அச்வமேதயாகம் மிகவும் சிறந்ததாகையால் இதில் ஏதாவது தவறுதல் நேர்ந்தால் பலவித அனர்த்தங்கள் உண்டாகின்றன. அவ்வித தவறுதல் இல்லாமல் போகுமேயானல் க்ஷத்ரியஜாதியார் எல்லோரும் இதைச்செய்ய முடியும்.

छिद्रं हि मृगयन्तेऽत्र विद्वांसो ब्रह्मराक्षसाः ।
निहतस्य च यज्ञस्य सद्यः कर्ता विनश्यति ॥ 17 ॥
तद्यथा विधिपूर्वं मे क्रतुरेष समाप्यते ।
तथा विधानं क्रियतां समर्थाः करणेष्विह ॥ 18 ॥
तथेति चाऽब्रुवन्सर्वे मन्त्रिणः प्रत्यपूजयन् ।
पार्थिवेन्द्रस्य तद्वाक्यं यथाऽऽज्ञप्तं निशम्य ते ॥ 19 ॥

---

17. (ப-ரை) विद्वांसः- பண்டிதர்களான, ब्रह्मराक्षसाः- ப்ரம்ம ராக்ஷஸர்கள், अत्र- இந்த யாகத்தில், छिद्रं- தவறுதலை, मृगयन्ते- தேடுகிறார்கள், निहतस्य- கெடுதலை அடைந்த, यज्ञस्य- யஜ்ஞத்தை, कर्ता च- செய்த யஜமானனும், सद्यः- உடனே, विनश्यति- அழிந்து விடுவான்.

18. (ப-ரை) तत्- ஆதலால், एषः- இந்த, मे- என்னுடைய, क्रतुः- யாகமானது, यथा- எப்படி, विधिपूर्वं- சாஸ்த்ரத்தை முன்னிட்டு, समाप्यते- முடிவு பெறுமோ, तथा- அப்படி, विधानं- ப்ரயத்தனம், क्रियतां- செய்யப்படவேண்டும், (यूयं- நீங்கள்), इह करणेषु- இந்த யஜ்ஞானுஷ்டானங்களில், समर्थाः- கெட்டிக்காரர்கள்.

19. (ப-ரை) ते सर्वे मन्त्रिणः- அந்த மந்த்ரிகளெல்லோரும், पार्थिवेन्द्रस्य- ராஜாதி ராஜனுடைய, तत् वाक्यं- அந்த வார்த்தையை, निशम्य- கேட்டு, यथाज्ञप्तं- அவர் உத்திரவை அனுசரித்து, तथा- அப்படியே, (செய்கிறோம்) इति- என்று, अब्रुवन् च- சொன்னார்கள், प्रत्युपूजयन् च- ஆமோதனமும் செய்தார்கள்.

---

17. (பொ-ரை) அச்வமேத யாகத்தின் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்த அநேகப்ரம்ம ராக்ஷஸர்கள், இந்தயாகத்தில் எவ்விதமான தவறுதல் எந்த ஸமயத்தில் நேறுமோ என்று தவறுதலையே கவனித்து யாகத்தைக்கெடுத்து விடுவார்கள். யாகம் கெட்டுவிட்டால் அதைச்செய்கின்ற எஜமானனும் உடனே அழிந்து விடுவான்.

ப்ரம்ம ராக்ஷஸர்கள்— சாஸ்த்ரத்தில் விலக்கப்பட்ட தானங்களை வாங்கியும், சூத்திரர்களுக்கு புரோஹிதராய் இருந்தும், ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாமல் மறித்தால் ராக்ஷஸ ஜன்மத்தை அடைவார்கள். இவர்கள்தான் ப்ரம்ம ராக்ஷஸர்கள் எனப்படுவார்கள்.

18. (பொ-ரை) ஆதலால், நான் செய்யவேணுமென்று எண்ணியிருக்கிற அச்வமேதயாகமானது, ஒரு வித தவறுதலில்லாமலும், சாஸ்த்ர விதிப்படியாயும் எவ்வாறு முடிவுபெறுமோ, அவ்வாறான ப்ரயத்தனம் நீங்கள் எடுத்துக்கொள்ளவேணும். இப்படிப்பட்ட காரியங்களில் நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்களல்லவா.

19. (பொ-ரை) அந்த மந்த்ரிகளெல்லோரும் ராஜாதி ராஜனுடைய அம்மொழியைக்கேட்டு அவர் உத்திரவை அப்படியே செய்கிறோமென்று சொல்லி அவரது எண்ணத்தை மிகவும் புகழ்ந்தார்கள்.

तथा द्विजास्ते धर्मज्ञा वर्धयन्तो नृपोत्तमम् ।
अनुज्ञातास्ततः सर्वे पुनर्जग्मुर्यथागतम् ॥ 20 ॥
विसर्जयित्वा तान्विप्रान्सचिवानिदमब्रवीत् ।
ऋत्विग्भिरुपदिष्टोऽयं यथावत्क्रतुराप्यताम् ॥ 21 ॥
इत्युक्त्वा नृपशार्दूलः सचिवान्समुपस्थितान् ।
विसर्जयित्वा स्वं वेश्म प्रविवेश महाद्युतिः ॥ 22 ॥

20. (ப-ரை) धर्मज्ञाः- கர்மங்களை அறிந்த, ते द्विजाः- அந்த ப்ராம்மணர்கள், तथा- இவ்வாறு, नृपोत्तमम्- ராஜச்ரேஷ்டனை, वर्धयन्तः- விருத்தி செய்தவர்களாய், ततः- பிறகு, अनुज्ञाताः- அநுமதி செய்யப்பட்டவர்களாய், सर्वे- எல்லோரும், पुनः- திரும்பி, यथागतम्- வந்தபடி, जग्मुः- சென்றார்கள்.

21. (ப-ரை) तान् विप्रान्- அந்த ப்ராம்மணர்களை, विसर्जयित्वा- அனுப்பிவிட்டு, सचिवान्- மந்திரிகளைப்பார்த்து, ऋत्विग्भिः- ருத்விக்குகளால், उपदिष्टः- சொல்லப்பட்ட, अयं क्रतुः- இந்த யாகத்திற்கு வேண்டிய ஸாமக்கிரியானது, यथावत्- க்ரமமாக, आप्यताम्- ஸம்பாதிக்கப்படவேண்டும், (इति- என்று) इदं- இதை, अब्रवीत्- சொன்னார்.

22. (ப-ரை) नृपशार्दूलः- ராஜச்ரேஷ்டன், इति- இவ்வாறு, उक्त्वा- சொல்லி விட்டு, समुपस्थितान्- ஸமீபத்திலிருக்கின்ற, सचिवान्- மந்திரிகளை, विसर्जयित्वा- அனுப்பி விட்டு, महाद्युतिः सन्- அதிகப்ரகாசமுடையவராய், स्वं वेश्म- தன் அரண்மனையை, प्रविवेश- ப்ரவேசித்தார்.

20. (பொ-ரை) ஸகல கர்மங்களையும் அறிந்தவர்களான அந்த ப்ராம்மணர்கள் அரசனை அவ்வாறு புகழ்ந்து ஆசீர்வதித்துவிட்டு, அரசனால் அநுமதிபெற்றுக் கொண்டு எல்லோரும் வந்தபடியே திரும்பவும் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

21. (பொ-ரை) அந்த ப்ராம்மணர்களை அனுப்பிவிட்டு, ருத்விக்குகள் சொல்லியபடி, அச்வமேதயாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளை க்ரமமாக சேகரிக்க வேண்டும் என்று மந்திரிகளுக்குச்சொன்னார்.

22. (பொ-ரை) ஸமீபத்திலிருக்கும் மந்திரிகளைப்பார்த்து அரசன் இவ்வாறு சொல்லி அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு [illegible] முகமலர்ச்சியுடன் தன், அரண்மனைச்சென்றார்.

ततः स गत्वा ताः पत्नीर्नरेन्द्रो हृदयप्रियाः ।
उवाच दीक्षां विशत यक्ष्येऽहं सुतकारणात् ॥ 23 ॥
तासां तेनातिकान्तेन वचनेन सुवर्चसाम् ।
मुखपद्मान्यशोभन्त पद्मानीव हिमात्यये ॥ 24 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
अष्टमः सर्गः ॥ 8 ॥

23. (ப—ரை) ततः- பிறகு, सः नरेन्द्रः- அந்த அரசன், गत्वा-சென்று, हृदयप्रियाः- தன் மனதிற்குப்ப்ரியமான, ताः पत्नीः—அந்த பத்நிகளைப்பார்த்து, अहं-நான், सुतकारणात्- பிள்ளையின் நிமித்தமாக, यक्ष्ये- யாகம் செய்யப்போகிறேன், (यूयं- நீங்கள்,) दीक्षां- தீக்ஷையை, विशत- அடையுங்கள், इति- என்று, उवाच- சொன்னார்.

24. (ப-ரை) अतिकान्तेन- மிகவும் இஷ்டமான, तेन- அந்த, वचनेन- வார்த்தையினால், सुवर्चसाम्- நல்ல தேஜஸ்ஸையுடைய, तासां- அந்த ஸ்த்ரீகளுடைய, मुखपद्मानि- பத்மம் போல் அழகான முகங்கள், हिमात्यये- பனிகாலம் கழிந்த ஸமயத்தில், पद्मानि इव- தாமரை மலர்கள் (விளங்கினால்) போல், अशोभन्त- விளங்கின.

23. (பொ—ரை) பிறகு, அவ்வரசன் அந்தப்புறம்சென்று தன் மனதிற்கு மிகவும் ப்ரியமான கௌஸல்யை முதலான பத்நிகளைப்பார்த்து நான் பிள்ளையின் நிமித்தமாக அச்வமேதயாகம் செய்யப்போகின்றேன், நீங்களும் தீக்ஷா ஸங்கல்பத்தைச்செய்து கொள்ளவேணும், என்று சொன்னார்.

24. (பொ—ரை) மிகவும் ப்ரியமான அந்த அரசன் வார்த்தையைக்கேட்டவுடனே அழகான தேஜஸ்ஸையுடைய அந்த ஸ்த்ரீகளின் ஸௌந்தரமான முகங்கள், பனியில்லாத ஸமயத்தில் தாமரை மலர்கள் ப்ரகாசித்ததுபோல் ப்ரகாசித்தன.

नवमः सर्गः ॥ 9 ॥

एतच्छ्रुत्वा रहः सूतो राजानमिदमब्रवीत् ।
ऋत्विग्भिरुपदिष्टोऽयं पुरावृत्तो मया श्रुतः ॥ 1 ॥
सनत्कुमारो भगवान्पूर्वं कथितवान्कथाम् ।
ऋषीणां संनिधौ राजंस्तव पुत्रागमं प्रति ॥ 2 ॥
कश्यपस्य तु पुत्रोऽस्ति विभण्डक इति श्रुतः ।
ऋश्यशृङ्ग इति ख्यातस्तस्य पुत्रो भविष्यति ॥ 3 ॥

1. (ப-ரை) एतत्- இதை, श्रुत्वा- கேட்டு, सूतः- ஸாரதியான ஸுமந்த்ரர், रहः- ஏகாந்தத்தில், राजानं- அரசனைப்பார்த்து, इदं- இந்த வார்த்தையை, अब्रवीत्- சொன்னார், ऋत्विग्भिः- ருத்விக்குகளால், उपदिष्टः- உபதேசிக்கப்பட்ட, अयं- இந்த விஷயமானது, मया- என்னால், पुरावृत्तः- முற்காலத்தில் நடந்த கதையாக, श्रुतः- கேட்கப்பட்டிருக்கிறது.

2. (ப-ரை) हे राजन्- மஹாராஜரே! पूर्वं- முன் காலத்தில், भगवान्- த்ரிகாலஜ்ஞானியான, सनत्कुमारः- ஸநத்குமாரர், ऋषीणां- ரிஷிகளுடைய, सन्निधौ- ஸந்நிதியில், तव- உம்முடைய, पुत्रागमं प्रति- புத்ரோத்பத்தியைக்குறித்து, कथां- கதையை, कथितवान्- சொன்னார்.

3. (ப-ரை) कश्यपस्य तु- கச்யபருக்கு, विभण्डकः इति- விபண்டகர் என்று, श्रुतः- ப்ரஸித்தரான, पुत्रः- புத்திரர், अस्ति- இருக்கிறார், तस्य- அவருக்கு, ऋश्यशृङ्गः इति- ரிச்யச்ருங்கர் என்று, ख्यातः- ப்ரஸித்தரான, पुत्रः- புத்திரர், भविष्यति- உண்டாகப் போகிறார்.

1. (பொ-ரை) இந்த வ்ருத்தாந்தத்தைக்கேட்டு ஸாரதியாயும், மந்திரியாயுமிருக்கிற ஸுமந்த்ரர் அந்தப்புரம் சென்று, ஏகாந்தத்தில் அரசனைப்பார்த்து இந்த வார்த்தைசொன்னார். ப்ரபோ! தாங்கள் இப்பொழுது புத்ரோத்பத்தி நிமித்தமாக அச்வமேதயாகம்செய்ய ப்ரயத்தனம் செய்வது வஸிஷ்டர் முதலான ருத்விக்குகளால் தங்களுக்குச்சொல்லப்பட்டது. இந்த விஷயத்தை முற்காலத்தில் சரித்திர ரூபமாக நான் கேழ்விப்பட்டிருக்கிறேன்.

2. (பொ-ரை) ப்ரபோ! த்ரிகாலஜ்ஞானியான ஸநத்குமாரர், முன்னொரு காலத்தில் ரிஷிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கும்பொழுது அவர்கள் முன்னிலையில், உமக்கு புத்திரர்கள் உண்டாவதைக்குறித்து கதை ஒன்று சொன்னார்.

3. (பொ-ரை) கச்யபருக்கு, விபண்டகர் என்று ஒரு புத்திரர் இருக்கிறார் எல்லோரும் அவரைக்கேட்டிருக்கலாம். அவருக்கு ரிச்யச்ருங்கரென்று உலகத்தில் ப்ரஸித்திபெற்ற ஒரு புத்திரர் உண்டாகப்போகிறார்.

स वने नित्यसंवृद्धो मुनिर्वनचरैः सह ।
नान्यं जानाति विप्रेन्द्रो नित्यं पित्रनुवर्तनात् ॥ 4 ॥
द्वैविध्यं ब्रह्मचर्यस्य भविष्यति महात्मनः ।
लोकेषु प्रथितं राजन् विप्रैश्च कथितं सदा ॥ 5 ॥
तस्यैवं वर्तमानस्य कालः समभिवर्तत ।
अग्निं शुश्रूषमाणस्य पितरं च यशस्विनम् ॥ 6 ॥

4. (ப-ரை) सः- அவர், वने- வநத்தில், नित्यसंवृद्धः- எப்பொழுதும் வளர்ந்தவர், मुनिः- யோகி, वनचरैः सह- வநத்தில் ஸஞ்சரிப்பவர்களோடுகூட, नित्यं- எப்பொழுதும், पित्रनुवर्तनात्- பிதாவை அநுஸரித்து நடப்பதினால், विप्रेन्द्रः- அந்த ப்ராம்மணோத்தமர், अन्यं- மற்றொன்றை, न जानाति- அறியப்போகிறதில்லை.

5. (ப-ரை) महात्मनः- மஹாத்மாவான அவருடைய, ब्रह्मचर्यस्य- ப்ரம்மசர்ய வ்ரதத்திற்கு, द्वैविध्यं- மாறுபாடானது, भविष्यति- உண்டாகப்போகிறது, (ब्रह्मचर्यं- அவருடைய ப்ரம்மசர்யவ்ரதமானது), लोकेषु- உலகங்களில், प्रथितं- ப்ரஸித்தமானது, विप्रैः च- ப்ராம்மணர்களாலும், सदा- எப்பொழுதும், कथितं—சொல்லப்பட்டிருக்கிறது.

6. (ப-ரை) अग्निं- அக்நியையும், यशस्विनं- புகழ்பெற்றவரான, पितरं च- பிதாவையும், शुश्रूषमाणस्य- சிச்ருஷை செய்துகொண்டு, एवं- இவ்வாறு, वर्तमानस्य- நடந்துகொண்டிருக்கிற, तस्य- அந்த ரிச்யச்ருங்கருக்கு, कालः- சில காலம், समभिवर्तत- நடக்கப்போகிறது.

4. (பொ-ரை) ப்ராம்மணோத்தமரான, அந்த ரிச்யச்ருங்கர், வநத்திலேயே எப்பொழுதும் வளர்ந்தவர், யோகி, (மௌனி) வநத்தில் ஸஞ்சரிக்கும் ரிஷி ஜனங்களோடு கூடவே எப்பொழுதும் தன் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து ஸஞ்சரிப்பதினால் வேறு க்ராமத்தையாவது, க்ராமத்திலிருக்கும் ஜனங்களையாவது அவர் அறியப்போகிறதில்லை.

5. (பொ-ரை) மஹா ராஜரே! அந்த மஹாத்மாவான ரிச்யச்ருங்க மஹரிஷியுடைய, ப்ரம்மசர்யவ்ரதமானது ஸ்த்ரீகளின் ஸஹவாஸத்தினால் கெட்டுவிடப்போகிறது, அந்த வ்ரதம் உலகங்களில் ப்ரஸித்தமானது, ப்ராம்மணர்களாலும் எப்பொழுதும் சொல்லப்பட்டுமிருக்கிறது.

6 (பொ-ரை) இவ்வாறு அக்நியையும், புகழ்பெற்றவரான தன் பிதாவையும், சிச்ருஷைசெய்து வருமளவில் கொஞ்சகாலம் இவ்வாறாக நடந்து வரப்போகிறது.

एतस्मिन्नेव काले तु रोमपादः प्रतापवान् ।
अङ्गेषु प्रथितो राजा भविष्यति महाबलः ॥ 7 ॥
तस्य व्यतिक्रमाद्राज्ञो भविष्यति सुदारुणा ।
अनावृष्टिः सुघोरा वै सर्वभूतभयावहा ॥ 8 ॥
अनावृष्ट्यां तु वृत्तायां राजा दुःखसमन्वितः ।
ब्राह्मणाञ्छ्रुतवृद्धांश्च समानीय प्रवक्ष्यति ॥ 9 ॥

7. (ப-ரை) एतस्मिन् एव काले तु- இந்த காலத்திலேயே, अङ्गेषु- அங்கதேசங்களில், रोमपादः- ரோமபாதர் என்று, प्रथितः- ப்ரஸித்தராய், महाबलः- மிகுந்த பலமுடையவராய், प्रतापवान्- ப்ரதாபமுடையவருமான, राजा- ஒரு அரசன், भविष्यति- உண்டாகப்போகிறார்.

8. (ப-ரை) तस्य राज्ञः- அந்த அரசனுடைய, व्यतिक्रमात्- அக்ரமத்தினால், सुदारुणा- மிகவும் கொடியதாய், सुघोरा- மிகவும் கோரமான, सर्वभूतभयावहा- ஸர்வ ப்ராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணுகிற, अनावृष्टिः- மழையில்லாமை, भविष्यति- உண்டாகப்போகிறது.

9. (ப-ரை) अनावृष्ट्यां- மழையில்லாமை, वृत्तायां तु- நடந்துகொண்டிருக்கும் காலத்தில், राजा- அரசன், दुःखसमन्वितः (सन्)- துக்கத்துடன் கூடியவனாய், श्रुतवृद्धान्- சாஸ்த்ரங்களால் முதிர்ந்தவர்களான, ब्राह्मणान्- ப்ராம்மணர்களை, समानीय- வரவழைத்து, प्रवक्ष्यति च- ஒருவார்த்தையும் சொல்லப்போகிறார்.

7. (பொ-ரை) இந்த காலத்திலேயே, அங்கதேசத்தில் மஹா ப்ரதாபசாலியாய் மிகுந்த பலமுடையவராய், ரோமபாதரென்று உலகத்தில் ப்ரஸித்தி பெற்ற ஒரு அரசன் உண்டாகப்போகிறார்.

8. (பொ-ரை) அந்த ரோமபாதர் என்னும் அரசன் சில தர்மங்களை தவறியபடியால் அவர் தேசம் முழுவதிலும் அநேகம் காலம்வரையில் ஸர்வ ப்ராணிகளும் பயப்படும்படி மழை பெய்யாமலிருக்கப்போகின்றது.

9. (பொ-ரை) இவ்வாறு தன் தேசங்களில் மழை பெய்யாமலிருக்க அரசன் மிகவருத்தத்துடன் அநேக சாஸ்த்ரங்கள் படித்தவர்களான ப்ராம்மணர்களை அழைத்துக் கேட்கப்போகிறார்.

भवन्तः श्रुतधर्माणो लोकचारित्रवेदिनः ।
समादिशन्तु नियमं प्रायश्चित्तं यथा भवेत् ॥ 10 ॥
वक्ष्यन्ति ते महीपालं ब्राह्मणा वेदपारगाः ।
विभण्डकसुतं राजन्सर्वोपायैरिहानय ॥ 11 ॥
आनाय्य च महीपाल ऋश्यशृङ्गं सुसत्कृतम् ।
प्रयच्छ कन्यां शान्तां वै विधिना सुसमाहितः ॥ 12 ॥

10. (ப-ரை) भवन्तः- நீங்கள், श्रुतधर्माणः- தர்மங்களைக் கேட்டவர்கள், लोकचारित्रवेदिनः- உலக நடத்தையையும் அறிந்தவர்கள், (अतः- ஆதலால்), प्रायश्चित्तं- (என் பாபத்திற்கு) ப்ராயச்சித்தமானது, यथा भवेत्- எவ்வாறு ஆகுமோ, नियमं- அவ்வாறு தர்மத்தை, समादिशन्तु- கட்டளையிடுங்கள்.

11-12. (ப-ரை) वेदपारगाः- வேதங்களை கரை கண்டவர்களான, ते ब्राह्मणाः- அந்த ப்ராம்மணர்கள், महीपालं- அரசனைப்பார்த்து, हे राजन्- மஹாராஜரே, विभण्डकसुतं- விபண்டக ரிஷியின் புத்ரனை, सर्व उपायैः- பலவித உபாயங்களினால், इह- இங்கு, आनय- அழைத்து வாரும், हे महीपाल- அரசனே! ऋश्यशृङ्गं- ரிச்யச்ருங்க மஹரிஷியை, सुसत्कृतं (यथा तथा)- மிகவும் உபசாரத்துடன், आनाय्य च- அழைத்து வந்து, कन्यां- உம்முடைய பெண்ணை, शान्तां- சாந்தையை, विधिना- சாஸ்த்ர முறையினால், सुसमाहितः- விசாரமில்லாதவராய், प्रयच्छ- கொடுத்து விடும், इति- என்று, वक्ष्यन्ति- சொல்லப் போகிறார்கள்.

10. (பொ-ரை) ப்ராம்மணோத்தமர்களே! நீங்கள் சாஸ்த்ரங்களை ஓதி பெரியோர்களிடமும் கேட்டு நன்றாய் தர்மத்தை அறிந்திருக்கிறீர்கள். உலகத்தின் நடவடிக்கைகளையும் தெரிந்திருக்கிறீர்கள், இப்பொழுது நம் தேசத்தில் நெடுங்காலமாக மழை பொழியாமலிருப்பதற்குக்காரணம் என்னுடைய பாபமென்றே எண்ணுகிறேன். ஆதலால் இது நிவர்த்திசெய்ய எந்த கர்மம் செய்யவேணுமோ அதை நீங்கள் எனக்கு ஆஜ்ஞாபிக்கவேண்டும்.

11-12. (பொ-ரை) வேதங்களை கரைகண்டவர்களான அந்த ப்ராம்மணர்கள் அரசனைப்பார்த்து ப்ரபோ! விபண்டக மஹரிஷியின் குமாரரான ரிச்யச்ருங்கரை பலவிதங்களான உபாயங்களால் இங்கு அழைத்துவாரும், அவ்வாறு மிக உபசாரத்துடன் அழைத்துவந்த அம்மஹரிஷிக்கு உம்முடையபெண்ணை சாந்தையை சாஸ்த்ரமுறைப்படி ஒருவிதமான கவலையில்லாதவராய் விவாஹம் செய்து கொடுத்துவிடும். இதுதான் உம்முடைய பாபத்தினால் ஏற்பட்ட மழைகேடுக்கு ப்ராயச்சித்தமாகச் செய்யவேண்டிய விதி என்று சொல்லப்போகிறார்கள்.

तेषां तु वचनं श्रुत्वा राजा चिन्तां प्रपत्स्यते ।
केनोपायेन वै शक्य इहानेतुं स वीर्यवान् ॥ 13 ॥
ततो राजा विनिश्चित्य सह मन्त्रिभिरात्मवान ।
पुरोहितममात्यांश्च ततः प्रेष्यति सत्कृतान् ॥ 14 ॥
ते तु राज्ञो वचः श्रुत्वा व्यथिता विनताननाः ।
न गच्छेम ऋषेर्भीता अनुनेष्यन्ति तं नृपम् ॥ 15 ॥

---

13. (ப-ரை) तेषां- அவர்களுடைய, वचनं- வார்த்தைகளை, श्रुत्वा तु- கேட்டு, सः वीर्यवान्- கொடுமையான ப்ரம்மசர்ய வ்ரதமுடைய அந்த ரிஷ்யச்ருங்கர், केन उपायेन- எந்த உபாயத்தினால், इह- இங்கு, आनेतुं- அழைத்துவர, शक्यः वै- முடியும், इति- என்று, राजा- அரசன், चिन्तां- மிகுந்த விசாரத்தை, प्रपत्स्यते- அடையப்போகிறார்.

14. (ப-ரை) ततः- பிறகு, आत्मवान्- சிறந்த புத்தியுடைய அவ்வரசன், राजा- அரசன், मन्त्रिभिः सह- மந்திரிகளுடன் கூட, विनिश्चित्य- (ஆலோசித்து) தீர்மானித்து, पुरोहितं- (தம்முடைய) புரோஹிதரையும், अमात्यान् च- மந்திரிகளையும், सत्कृतान् (सतः)- வெகுமானம் செய்து, ततः- அங்கிருந்து, प्रेष्यति- அனுப்பப்போகிறார்.

15. (ப-ரை) ते तु- அவர்களும், राज्ञः- அரசனுடைய, वचः- வார்த்தைகளை, श्रुत्वा- கேட்டு, व्यथिताः- மனவருத்தமுடையவர்களாய், विनताननाः- தலை குனிந்தவர்களாய், ऋषेः- ரிஷியினிடமிருந்து, भीताः- பயப்படுகிறோம், न गच्छेम- (அதனால்) போகமாட்டோம், इति- என்று, तं नृपं- அந்த அரசனை, अनुनेष्यन्ति- சமாதானமாய் சொல்லி கேட்கப்போகிறார்கள்.

---

13. (பொ-ரை) இவ்வாறு, ப்ராம்மணர்கள் சொல்லுவதைக்கேட்டு அந்த ரிஷ்யச்ருங்கமஹரிஷி மிகவும் கடுமையான ப்ரம்மசர்ய வ்ரதத்தில் நிலைநின்றவர், அவரை எந்த உபாயத்தினால் இங்கு அழைத்து வரமுடியும்” என்று அரசன் மனதில் விசாரப்படப்போகின்றார்.

14. (பொ-ரை) பிறகு, சிறந்த புத்தியுடைய அவ்வரசன் மந்திரிகளுடன் சேர்ந்து ஆலோசித்து, ப்ராம்மணர்களைக் கொண்டே, ரிஷியை அழைத்து வரவேண்டியது என்று நிச்சயித்து தமதுடைய புரோஹிதர்களையும், மந்திரிகளையும் அழைத்து அவர்களுக்கு வெகுமதிகொடுத்து அங்கிருந்து அவர்களை அனுப்பப் போகிறார்.

15. (பொ-ரை) அவர்களோ, அரசன் வார்த்தையைக் கேட்டு மனவருத்தத்துடன் தலை குனிந்துகொண்டு அரசனைப்பார்த்து, ப்ரபோ! நாங்கள், அங்கு போனால் விபண்டக மஹரிஷியினால் என்ன அனர்த்தம் நேருமோ என்று அவரிடமிருந்து பயப்படுகிறோம். நாங்கள் போகமாட்டோம், அவரை இங்கு வரவழைக்கும் உபாயத்தை ஆலோசித்துச் சொல்லுகிறோம் என்று அரசனிடம் வேண்டிக்கொள்ளப்போகிறார்கள்.

वक्ष्यन्ति चिन्तयित्वा ते तस्योपायांश्च तत्क्षमान् ।
आनेष्यामो वयं विप्रं न च दोषो भविष्यति ॥ 16 ॥

एवमङ्गाधिपेनैव गणिकाभिर्ऋषेः सुतः ।
आनीतोऽवर्षयद्देवः शान्ता चास्मै प्रदीयते ॥ 17 ॥

ऋश्यशृङ्गस्तु जामाता पुत्रांस्तव विधास्यति ।
सनत्कुमारकथितमेतावद्व्याहृतं मया ॥ 18 ॥

16. (ப-ரை) ते- அவர்கள், तत्क्षमान्- அந்த ரிச்யச்ருங்கருக்குத் தகுந்ததான, उपायान् च- உபாயங்களை, चिन्तयित्वा- ஆலோசித்து, वयं- நாங்கள், विप्रं- அந்தப் ப்ராம்மணரை, आनेष्याम:- அழைத்து வருகிறோம், दोष: च- அவருக்கு தோஷமும், न भविष्यति- உண்டாகப்போகிறதில்லை, इति- என்று, तस्य- அரசனுக்கு, वक्ष्यन्ति- சொல்லப்போகிறார்கள்.

17. (ப-ரை) एवं- இவ்வாறு, ऋषे: सुत:- ரிஷிபுத்ரர், अङ्गाधिपेन- அங்கதேசத்து அரசனால், गणिकाभि: एव- வேசிகளினாலேயே, आनीत:- அழைத்துவரப்பட்டார், देव:- பர்ஜன் தேவனும், अवर्षयत्- மழை பெய்தார், शान्ता च- சாந்தையும், अस्मै- இந்த ரிச்ய ச்ருங்கரின்பொருட்டு, प्रदीयते (प्रदीयत)- கொடுக்கப்பட்டாள்.

18. (ப-ரை) जामाता- மாப்பிள்ளையான, ऋश्यशृङ्ग: तु- ரிச்ய ச்ருங்க மஹரிஷியும், तव- உமக்கு, पुत्रान्- புத்திரர்களை, विधास्यति- உண்டுபண்ணப்போகிறார், एतावत्- இவ்வளவும், सनत्कुमारकथितं- ஸநத் குமாரரால் சொல்லப்பட்டது, मया- என்னால், व्याहृतं- (உமக்கு) சொல்லப்பட்டது.

16. (பொ-ரை) அந்தப்ப்ராம்மணர்களும், ரிச்யச்ருங்கரை இங்கு அழைத்து வருவதற்குத்தகுந்ததான உபாயங்களை ஆலோசித்து அரசனைப்பார்த்து ராஜன்! நாங்கள் அந்த ப்ராம்மணோத்தமரை அவருடைய ப்ரம்மசர்ய வ்ரதத்திற்கு யாதொரு குறைவுமில்லாமல் இங்கு அழைத்துவந்து விடுகிறோம், என்று அரசனுக்குச்சொல்லப் போகிறார்கள்.

17. (பொ-ரை) விபண்டகரிஷியின் குமாரரான ரிச்யச்ருங்கரை, அங்க தேசத்து அரசனை ரோமபாதன், வேசிகள்மூலமாக இவ்வாறு அழைத்துவந்தார், உடனே மழையும் பெய்தது. சாந்தையென்னும் கன்னிகையையும் அந்த ரிச்யச்ருங்கருக்கு விவாஹமும் செய்துகொடுத்தார்.

18. (பொ-ரை) மாப்பிள்ளையான, ரிச்யச்ருங்க மஹரிஷியும் உமக்கு புத்திரர்களை உண்டுபண்ணப்போகிறார். ஸநத் குமாரர் சொன்ன இந்த வ்ருத்தாந்தத்தை இதுவரையில் நான் உமக்குச்சொன்னேன்.

अथ हृष्टो दशरथः सुमन्त्रं प्रत्यभाषत ।
यथर्श्यशृङ्गस्त्वानीतो विस्तरेण त्वयोच्यताम् ॥ 19 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
नवमः सर्गः ॥ 9 ॥

19. (ப-ரை) अथ- பிறகு, दशरथः- தசரத மஹாராஜர், हृष्टः सन्- ஸந்தோஷமுடையவராய், सुमन्त्रं- ஸுமந்த்ரரைக் குறித்து, ऋश्यशृङ्गः- ரிச்ய ச்ருங்கரிஷியானவர், यथा- எவ்விதம், आनीतः- அழைத்துவரப்பட்டாரோ, त्वया- உம்மால், विस्तरेण- விஸ்தாரமாக, उच्यताम्- சொல்லப்படலாம், इति- என்று, प्रत्यभाषत- சொன்னார்.

19. (பொ--ரை) பிறகு, தசரதர் ஸந்தோஷத்துடன் ஸுமந்த்ரரைப் பார்த்து ரோமபாத மஹாராஜா அந்த ரிச்யச்ருங்க மஹரிஷியை எவ்விதம் அழைத்து வந்தாரென்பதை விஸ்தாரமாக சொல்லக்கேட்க விரும்புகிறேன். ஆகலால் நீர் சொல்லும் என்று ஸுமந்த்ரரைக் கேட்டார்.

दशमः सर्गः ॥ 10 ॥

सुमन्त्रश्चोदितो राज्ञा प्रोवाचेदं वचस्तथा ।
यथर्श्यशृङ्गस्त्वानीतः शृणु मे मन्त्रिभिः स ह ॥ 1 ॥
रोमपादमुवाचेदं सहामात्यः पुरोहितः ।
उपायो निरपायोऽयमस्माभिरभिचिन्तितः ॥ 2 ॥
ऋश्यशृङ्गो वनचरस्तपः स्वाध्यायने रतः ।
अनभिज्ञः स नारीणां विषयाणां सुखस्य च ॥ 3 ॥

1. (ப-ரை) राज्ञा- அரசனால், चोदितः- ஏவப்பட்ட, सुमन्त्रः- ஸுமந்த்ரர், सः ऋश्यशृङ्गः- அந்த ரிச்ய ச்ருங்கமஹரிஷி, मन्त्रिभिः- மந்த்ரிகளால், यथा- எவ்வாறு, आनीतः- அழைத்து வரப்பட்டாரோ. तथा- அவ்விதத்தை, मे- என்னிடமிருந்து, शृणु- கேளும், (इति- என்று), इदं वचः- இந்த வார்த்தையை प्रोवाच- சொன்னார், ह- ப்ரஸித்தி.

2. (ப-ரை) सह अमात्यः- மந்த்ரிகளுடன் கூடிய, पुरोहितः- புரோஹிதர், रोमपादं- ரோமபாதரைப்பார்த்து, अस्माभिः- எங்களால், अभिचिन्तितः- நன்றாய் ஆலோசிக்கப் பட்ட, अयं उपायः- இந்த உபாயமானது, निरपायः- தவறுதலில்லாதது, इति- என்று इदं- இதை, उवाच- சொன்னார்.

3. (ப-ரை) ऋश्यशृङ्गः- ரிச்யச்ருங்க மஹரிஷி, वनचरः- வநத்தில் ஸஞ்சரிப்பவர், तपः स्वाध्यायने- தவத்திலும், வேதம் ஓதுவதிலும், रतः- ஊக்கமுடையவர், सः- அவர், नारीणां- ஸ்த்ரீகளையும், विषयाणां- சப்தாதி விஷயங்களுடைய सुखस्य च- ஸுகத்தையும், अनभिज्ञः- அறியாதவர்.

1. (பொ-ரை) இவ்வாறு அரசனால் ஏவப்பட்ட ஸுமந்த்ரர், அரசனைப் பார்த்து, ப்ரபோ! ரிச்யச்ருங்க மஹரிஷியை மந்த்ரிகள் அழைத்துவந்த விதத்தை நான் சொல்லுகிறேன் கேளும், என்று சொன்னார்.

2. (பொ-ரை) மந்த்ரிகளும், புரோஹிதரும், ரோம பாத மஹாராஜாவைப் பார்த்து, ப்ரபுவே! ரிச்யச்ருங்கரை அழைத்துவர ஒரு உபாயம் ஆலோசித்துத் தீர்மானித்திருக்கிறோம் இவ்விதம் செய்தால் இது பழுதாகாது என்று சொன்னார்கள்.

3. (பொ-ரை) அந்த ரிச்யச்ருங்க மஹரிஷி எப்பொழுதும் வநத்திலேயே ஸஞ்சரிப்பவர், தவம் செய்வதிலும், வேதம் ஓதுவதிலுமே ஊக்கமுடையவர், அவர் ஸ்த்ரீகளையும், சப்தாதி விஷயானுபவத்தால் உண்டான ஸுகத்தையும் ஒருநாளும் அறியாதவர்.

इन्द्रियार्थैरभिमतैर्नरचित्तप्रमाथिभिः ।
पुरमानाययिष्यामः क्षिप्रं चाध्यवसीयताम् ॥ 4 ॥
गणिकास्तत्र गच्छन्तु रूपवत्यः स्वलङ्कृताः ।
प्रलोभ्य विविधोपायैरानेष्यन्तीह सत्कृताः ॥ 5 ॥
श्रुत्वा तथेति राजा च प्रत्युवाच पुरोहितम् ।
पुरोहितो मन्त्रिणश्च तथा चक्रुश्च ते तथा ॥
वारमुख्यास्तु तच्छ्रुत्वा वनं प्रविविशुर्महत् ॥ 6 ॥

---

4. (ப-ரை) (तं- அவரை) नरचित्तप्रमाथिभिः- மனிதர்கள் மனதை கலக்குகின்ற, अभिमतैः- இஷ்டமான, इन्द्रियार्थैः- இந்திரியங்களின் விஷயங்களால், पुरं- நகரத்தை, क्षिप्रं- சீக்கிரமாக, आनाययिष्यामः அழைத்துவந்து விடுவோம், अध्यवसीयताम्- உம்மால் நிச்சயிக்கப்படவேண்டும்.

5. (ப-ரை) रूपवत्यः- அழகு உள்ளவர்களாய், स्वलङ्कृताः- நன்றாய் அலங்காரம் செய்துகொண்டு, गणिकाः- தாஸிகள், तत्र- அங்கு, गच्छन्तु- போகவேண்டும், सत्कृताः- நம்மால் வெகுமதிக்கப்பட்டு (அந்த தாஸிகள்) विविध उपायैः- பலவித உபாயங்களினால் प्रलोभ्य- அவரை ஏமாற்றி, इह- இங்கு, आनेष्यन्ति- அழைத்துவந்து விடுவார்கள்.

6. (ப-ரை) राजा च- அரசனும், श्रुत्वा- கேட்டு, तथा- அப்படியே, (ஆகட்டும்), इति- என்று, पुरोहितम्- புரோஹிதரைக்குறித்து, प्रत्युवाच- பதில் சொன்னார், पुरोहितः- புரோஹிதரும், मन्त्रिणः- மந்திரிகளைக்குறித்து, तथा- அப்படியே, (என்று சொன்னார்), ते च- அவர்களும், तथा- அவ்வாறு, चक्रुः- செய்தார்கள், वारमुख्याः तु- பிரதானர்களான தாஸிகளும், तत्- இதை, श्रुत्वा- கேட்டு, महत् वनं- பெரிய வனத்தை, प्रविविशुः- பிரவேசித்தார்கள்.

---

4. (பொ-ரை) மனிதர்களின் மனதை கவரக்கூடிய இஷ்டமான சப்தம் முதலான விஷயங்களைக்கொண்டு அந்த ரிஷ்யசிருங்க மஹரிஷியை சீக்கிரமாக நாங்கள் பட்டணத்திற்கு அழைத்து வந்துவிடுவோம். தாங்களும் இவ்விஷயத்தை தீர்மானிக்கவேண்டும்.

5. (பொ-ரை) நம் நகரத்திலுள்ள தாஸிகளுக்குள் மிகவும் அழகுள்ளவர்களான தாஸிகளை வரவழைத்து, அவர்களுக்கு வேண்டிய வெகுமதியும் கொடுத்து அனுப்பினால் அலங்காரமும் செய்துகொண்டு, அந்த ரிஷ்யசிருங்கர் இருக்குமிடம் சென்று, அவரை பலவிதமான உபாயங்களினால் மயக்கி இங்கு அழைத்துவந்து விடுவார்கள்.

6. (பொ-ரை) அரசனும் அதைக்கேட்டு அப்படியே என்று புரோஹிதருக்குபதில் அளித்தார், புரோஹிதரும் மந்திரிகளைப்பார்த்து அவ்விதமே செய்து விடுங்களென்று சொன்னார், மந்திரிகளும், அப்படியேசெய்து விட்டார்கள். உடனே மந்திரிகளுடைய உத்திரவுப்படி அந்நகரத்திலிருந்த முக்யமான தாஸிகள் ரிஷ்யசிருங்கர் இருக்கும் பெரிய வனத்தில் பிரவேசித்தார்கள்.

आश्रमस्याविदूरेऽस्मिन्यत्नं कुर्वन्ति दर्शने ।
ऋषिपुत्रस्य धीरस्य नित्यमाश्रमवासिनः ॥ 7 ॥
पितुः स नित्यसंतुष्टो नातिचक्राम चाश्रमात् ॥ 8 ॥
न तेन जन्मप्रभृतिदृष्टपूर्वं तपस्विना ।
स्त्री वा पुमान्वा यच्चान्यत्सर्वं नगरराष्ट्रजम् ॥ 9 ॥

7. (ப-ரை) अस्मिन्- இந்த வநத்தில், आश्रमस्य- ஆச்ரமத்தினுடைய, अविदूरे- ஸமீபத்தில், धीरस्य- தீரராயும், नित्यं- எப்பொழுதும், आश्रमवासिनः- ஆச்ரமத்திலேயே வஸித்துக்கொண்டிருக்கிற, ऋषिपुत्रस्य- ரிஷிகுமாரருடைய, दर्शने- தர்சன விஷயத்தில், यत्नं- முயற்சியை, कुर्वन्ति- (अकुर्वन्)- செய்துகொண்டிருந்தார்கள்.

8. (ப-ரை) सः- அவர், नित्यसंतुष्टः- எப்பொழுதும் த்ருப்தி அடைந்தவராய், पितुः- பிதாவினுடைய, आश्रमात्- ஆச்ரமத்தை விட்டு, न अतिचक्राम- தாண்டுகிறதில்லை.

9. (ப-ரை) तेन तपस्विना- அந்த ரிஷியினால், जन्मप्रभृति- பிறந்ததுமுதல், स्त्री वा- ஸ்த்ரீயாவது, पुमान्वा- புருஷனாவது, नगर राष्ट्रजम्- நகரத்திலும், தேசத்திலும் உண்டான, अन्यत् यत् च- வேறு யாதொன்று உண்டோ, (तत्)- सर्वं- (அது) முழுவதும், न दृष्टपूर्वं- காணப்பட்டிருக்கவில்லை.

7. (பொ-ரை) தாஸிகளுக்கு அந்த வநம் சென்று விபண்டகரின் ஆச்ரம ஸமீபம்போய் எப்பொழுதும் ஆச்ரமத்திலேயே வாஸம் செய்துகொண்டு சப்தாதி விஷயங்களால் மனக்கலக்கமில்லாதவரான அந்த ரிஷி குமாரரை பார்ப்பதற்காக மிகவும் ப்ரயத்தனம் செய்துகொண்டிருந்தார்கள்.

8. (பொ-ரை) அந்த ரிச்யச்ருங்கரும் எப்பொழுதும் ஸந்தோஷமுடையவராய், பித்ரு சிச்ருஷை ஒன்றையே செய்துகொண்டு ஆச்ரமத்தை விட்டு வேறிடம் செல்லுகிறதில்லை.

9. (பொ-ரை) அந்த தபஸ்வி தான் பிறந்ததுமுதல் ஸ்த்ரீகளையாவது, புருஷர்களையாவது, நகரத்தில் ஸஞ்சரிக்கக்கூடிய யானை குதிரைகளையாவது, தேசத்தில் ஸஞ்சரிக்கக்கூடிய கோழிமுதலான ஜந்துக்களையாவது ஒன்றையுமே பார்த்ததில்லை.

ततः कदाचित्तं देशमाजगाम यदृच्छया ।
विभण्डकसुतस्तत्र ताश्चापश्यद्वराङ्गनाः ॥ 10 ॥

ताश्चित्रवेषाः प्रमदा गायन्त्यो मधुरस्वरैः ।
ऋषिपुत्रमुपागम्य सर्वा वचनमब्रुवन् ॥ 11 ॥

कस्त्वं किं वर्तसे ब्रह्मन् ज्ञातुमिच्छामहे वयम् ।
एकस्त्वं विजने घोरे वने चरसि शंस नः ॥ 12 ॥

10. (ப-ரை) **ततः** - பிறகு, **विभण्डकसुतः** - விபண்டகரின் புத்ரர், **तत्र** - அங்கு, **कदाचित्** - ஒருக்கால், **यदृच्छया** - தற்செயலாய், **तं देशं** - அந்த இடத்தை, **आजगाम** - வந்து சேர்ந்தார். **तत्र** - அங்கு, **ताः** - அந்த, **वराङ्गनाः च** - உத்தமமான ஸ்த்ரீகளையும், **अपश्यत्** - பார்த்தார்.

11. (ப-ரை) **चित्रवेषाः** - விசித்திரமான அலங்காரங்களையுடைய, **ताः प्रमदाः** - அந்த ஸ்த்ரீகள், **सर्वाः** - எல்லோரும், **मधुरस्वरैः** - இனிய குரல்களோடு, **गायन्त्यः (सत्यः)** - கானம் செய்துகொண்டு, **ऋषिपुत्रं** - ரிஷிகுமாரனை, **उपागम्य** - அணுகி, **वचनं** - வார்த்தையை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

12. (ப-ரை) **हे ब्रह्मन्** - ப்ராம்மணரே, **त्वं** - நீர், **कः** - யார், **किं** - எதற்காக **वर्तसे** - இங்கு இருக்கிறீர், **विजने** - ஜன ஸஞ்சாரமில்லாத, **घोरे** - பயங்கரமான, **वने** - இந்த வனத்தில், **त्वं** - நீர், **एकः** - ஒருவராக, **चरसि** - திரிகிறீர், **वयं** - நாங்கள், **ज्ञातुं** - இதை அறிவதற்கு, **इच्छामहे** - விரும்புகிறோம். **नः** - எங்களுக்கு, **शंस** - சொல்லும்.

10. (பொ-ரை) பிறகு, அந்த விபண்டகரிஷியின் புத்ரரான ரிச்யச்ருங்கர் ஒரு நாள் தற்செயலாய் அந்த தாஸிகள் கூடியிருக்கும் இடம் வந்தார். அவர்களை யும் பார்த்தார்.

11. (பொ-ரை) பலவிதமாக அலங்காரம் செய்துகொண்டிருக்கிற அந்த தாஸிகள் எல்லோரும், இனிதான குரலுடன் பாடிக்கொண்டு அந்த ரிஷிகுமாரரின் ஸமீபம் வந்து ஒரு வார்த்தை சொன்னார்கள்.

12. (பொ-ரை) ப்ராம்மணரே! நீர் யார், என்ன ஜாதி, என்ன பெயர், யாருடைய குமாரர், ஜன ஸஞ்சாரமில்லாத பயங்கரமான இவ்வனத்தில் எதற்காக வஸிக்கிறீர், தனியாக எதற்காக ஸஞ்சரிக்கிறீர், இதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறோம். ஆதலால் எங்களுக்குச் சொல்லவேணும்.

अदृष्टरूपास्तास्तेन काम्यरूपा वने स्त्रियः ।
हार्दात्तस्य मतिर्जाता ह्याख्यातुं पितरं स्वकम् ॥ 13 ॥

पिता विभण्डकोऽस्माकं तस्याहं सुत औरसः ।
ऋश्यशृङ्ग इति ख्यातं नाम कर्म च मे भुवि ॥ 14 ॥

इहाऽऽश्रमपदोऽस्माकं समीपे शुभदर्शनाः ।
करिष्ये वोऽत्र पूजां वै सर्वेषां विधिपूर्वकम् ॥ 15 ॥

13. (ப-ரை) **काम्यरूपाः** - (எல்லோராலும்) ஆசைப்படக்கூடிய ரூபமுடைய, **ताः स्त्रियः** - அந்த ஸ்த்ரீகள், **वने** - வனத்தில், **तेन** - அவரால், **अदृष्टरूपाः** - காணப்பட்டிராதவர்கள், **ततः** - ஆதலால், **हार्दात्** - ஸ்நேஹத்தினால், **स्वकं** - தன்னுடைய, **पितरं** - பிதாவை, **आख्यातुं** - சொல்லுவதற்கு, **मतिः** - எண்ணமானது, **तस्य** - அவருக்கு, **जाता हि** - உண்டாயிற்று.

14. (ப-ரை) **अस्माकं** - எங்களுடைய, **पिता** - பிதாவானவர், **विभण्डकः** - விபண்டகரென்னும் மஹர்ஷி, **अहं** - நான், **तस्य** - அவருடைய, **औरसः सुतः** - ஔரஸ புத்திரன், **मे नाम** - என்னுடைய பெயர், **ऋश्य शृङ्गः इति** - ரிச்யச்ருங்கன் என்று, **ख्यातं** - ப்ரஸித்தமானது, **कर्म च** - என்னுடைய கார்யமும், **भुवि** - இந்த வனப்ரதேசத்தில், **ख्यातं** - ப்ரஸித்தமானது.

15. (ப-ரை) **हे शुभदर्शनाः** - அழகான காக்ஷியுடையவர்களே, **इह समीपे** - இந்த வனத்தின் ஸமீபத்தில், **अस्माकं** - எங்களுடைய, **आश्रमपदः** - ஆச்ரம ஸ்தானமிருக்கிறது. **अत्र** - அங்கு, **सर्वेषां वः** - உங்கள் எல்லோருக்கும், **विधिपूर्वकम्** - சாஸ்த்ரத்தை முன்னிட்டு, **पूजां** - பூஜையை, **करिष्ये वै** - செய்வேன்.

---

13. (பொ-ரை) எல்லோரும், ஆசைப்படக்கூடிய அழகு பொருந்திய அந்த ஸ்த்ரீகளை வனத்தில் அந்த ரிச்யச்ருங்கர் ஒரு நாளும் பாராமல் இப்பொழுது தான் புதிதாகப் பார்த்தபடியால் அவர்களிடம் ஒரு ஸ்நேகம் உண்டாகி தன்னுடைய பிதா முதலிய வ்ருத்தாந்தத்தை அவர்களுக்குச் சொல்லவேணு மென்னும் எண்ணம் உண்டாயிற்று.

14. (பொ-ரை) என் பிதாவின் பெயர் விபண்டகரிஷி, நான் அவருடைய ஔரஸ குமாரன், ரிச்யச்ருங்கனென்று என்னுடைய பெயர் ப்ரஸித்தமானது. தபஸ் என்னும் கார்யமும் இந்த வனப்ரதேசத்தில் ப்ரஸித்தமானது.

15. (பொ-ரை) அழகுள்ளவர்களே! இதோ ஸமீபத்தில்தான் எங்களுடைய ஆச்ரமம் இருக்கிறது. அங்கு உங்கள் எல்லோருக்கும் சாஸ்த்ர பூர்வகமாக பூஜை செய்யவேண்டும். ஆதலால் நீங்கள் அங்கு வாருங்கள்.

ऋषिपुत्रवचः श्रुत्वा सर्वासां मतिरास वै ।
तदाश्रमपदं द्रष्टुं जग्मुः सर्वाश्च तेन ताः ॥ 16 ॥

आगतानां ततः पूजामृषिपुत्रश्चकार ह ।
इदमर्घ्यमिदं पाद्यमिदं मूलमिदं फलम् ॥ 17 ॥

प्रतिगृह्य तु तां पूजां सर्वा एव समुत्सुकाः ।
ऋषेर्भीतास्तु शीघ्रं ता गमनाय मतिं दधुः ॥ 18 ॥

16. (ப-ரை) **ऋषिपुत्रवचः** - ரிஷிபுத்திரனுடைய வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **सर्वासां** - அவர்களெல்லோருக்கும், **तदाश्रमपदं** - அவனுடைய ஆச்ரமத்தை, **द्रष्टुं** - பார்ப்பதற்கு, **मतिः** - எண்ணமானது, **आस वै** - உண்டாயிற்று. **ताः सर्वाः** - அவர்களெல்லோரும், **तेन** - அந்த ரிஷ்யச்ருங்கருடன், **जग्मुः च** - சென்றார்கள்.

17. (ப-ரை) **ततः** - பிறகு, **ऋषिपुत्रः** - ரிஷிகுமாரரும், **आगतानां** வந்திருக்கின்றவர்களுக்கு, **इदं अर्घ्यं** - இதோ அர்க்யம், **इदं पाद्यं** - இதோ பாத தீர்த்தம், **इदं मूलं** - இதோ கிழங்கு, **इदं** - இது, **फलं च** - பழம், **इति** - என்று, **पूजां** பூஜையை, **चकार ह** - செய்தார்.

18. (ப-ரை) **ताः सर्वाः एव** - அவர்களெல்லோருமே, **समुत्सुकाः सत्यः** - மிகவும் ஆவலுடையவர்களாய்க்கொண்டு, **तां पूजां** - அந்த பூஜையை, **प्रतिगृह्य च** - பெற்றுக்கொண்டும், **ऋषेः** - விபண்டக ரிஷியினிடமிருந்து, **भीताः च** - பயந்தவர்களாய்க் கொண்டு, **शीघ्रं** - சீக்கிரத்தில், **गमनाय** - போவதற்காக, **मतिं** - எண்ணத்தை, **दधुः** - செய்தார்கள்.

16. (பொ-ரை) அந்த ரிஷிகுமாரரின் வார்த்தையைக் கேட்டு, அவருடைய ஆச்ரமத்தைப் பார்க்கவேண்டுமென்று அவர்களெல்லோருக்கும் எண்ணமுண்டாயிற்று. அவ்விதமே அவருடன், அவர்களெல்லோரும் அங்கு சென்றார்கள்.

17. (பொ-ரை) பிறகு ரிஷிகுமாரரும், தனது ஆச்ரமம் வந்திருக்கிற அந்த வேசிகளுக்கு இதோ அர்க்யம் இதோ பாத்யம், இதோ காய்கிழங்குகள், இதோ பழங்கள் என்று இவைகளெல்லாம் ஸமர்ப்பித்து பூஜை செய்தார்.

18. (பொ-ரை) அந்த ஸ்த்ரீகள் எல்லோரும் அவரிடம் ஸல்லாபம் செய்ய மிகவும் ஆவல் கொண்டவராய் அவர் செய்த பூஜையைப் பெற்றுக்கொண்டு, இவர் பிதாவான விபண்டகமஹர்ஷி நம்மைக் கண்டுவிட்டால் என்ன செய்வாரோ வென்று பயந்து அவ்விடம் விட்டு சீக்கிரம் போய்விடவேண்டுமென்று எண்ணங் கொண்டார்கள்.

अस्माकमपि मुख्यानि फलानीमानि वै द्विज ।
गृहाण प्रति भद्रं ते भक्षयस्व च मा चिरम् ॥ 19 ॥

ततस्तास्तं समालिङ्ग्य सर्वा हर्षसमन्विताः ।
मोदकान्प्रददुस्तस्मै भक्षांश्च विविधाञ्शुभान् ॥ 20 ॥

तानि चास्वाद्य तेजस्वी फलानीति स्म मन्यते ।
अनास्वादितपूर्वाणि वने नित्यनिवासिनाम् ॥ 21 ॥

19. (ப-ரை) **हे द्विज** - ப்ராம்மணோத்தமரே! **अस्माकं अपि** - எங்களுடையதும், - **इमानि** - இந்த, **मुख्यानि** - உயர்ந்தவைகளான, **फलानि** - பழங்களை, **प्रति गृहाण** - வாங்கிக்கொள்ளும், **ते** - உமக்கு, **भद्रं** - க்ஷேமம், (**भवतु** - உண்டாகட்டும்) **भक्षयस्व च** - சாப்பிடும், **मा चिरम्** - தாமதிக்கவேண்டாம்.

20. (ப-ரை) **ततः** - பிறகு, **ताः सर्वाः** - அவர்களெல்லோரும், **तं** - அவரை, **समालिङ्ग्य** - அணைந்து கொண்டு, **हर्षसमन्विताः सत्यः** - ஸந்தோஷத்துடன் கூடினவர்களாய், **तस्मै** - அவர்பொருட்டு, **मोदकान्** - கொழுக்கட்டைகளையும், **शुभान्** - ருசியுள்ளவைகளான, **विविधान्** - பலவிதங்களான, **भक्षान् च** - பக்ஷணங்களையும், **प्रददुः**- கொடுத்தார்கள்.

21. (ப-ரை) **तेजस्वी** - ப்ரம்மதேஜஸ்ஸை உடைய ரிச்யச்ருங்கர், **वने** - வனத்தில், **नित्यनिवासिनाम्** - எப்பொழுதும் வஸிக்கின்றவர்களால், **अनास्वादितपूर्वाणि** - முன் ஒரு காலத்திலும் சாப்பிடப்பட்டிராத, **तानि च** - அந்த பக்ஷணங்களை, **आस्वाद्य** - சாப்பிட்டு, **फलानि** - (இவை) பழங்கள், **इति** - என்று, **मन्यते स्म** - எண்ணினார்.

19. (பொ-ரை) ப்ராம்மணோத்தமரே, இதோ நாங்கள் கொண்டுவந்திருக்கும் உயர்ந்த இந்த பழங்களையும் நீர் வாங்கிக்கொள்ளும். உமக்கு க்ஷேமம் உண்டாகட்டும். இவைகளை நீர் சாப்பிடும், தாமதம் செய்யவேண்டாம்.

20. (பொ-ரை) இவ்வாறு சொல்லிவிட்டு, அந்த ஸ்த்ரீகளெல்லோரும், மிக்க ஸந்தோஷத்துடன், அந்த ரிச்யச்ருங்கரை நன்றாய் அணைத்து, தாங்கள் கொண்டுவந்திருக்கும், கொழுக்கட்டைகளையும், பலவிதங்களான மற்ற உயர்ந்த பக்ஷணங்களையும் அவருக்குக் கொடுத்தார்கள்.

21. (பொ-ரை) சிறந்த ப்ரம்மதேஜஸ்ஸையுடைய அந்த ரிச்யச்ருங்கர், தாஸிகள் தனக்குக் கொடுத்திருக்கும் பக்ஷணங்களை சாப்பிட்டுவிட்டு, வனத்தில் வஸிப்பவர்கள் ஒரு நாளும் இம்மாதிரியான பக்ஷணங்களை சாப்பிட்டிராத படியால் இவைகளும் ஒரு விதமான பழங்களென்றே எண்ணினார்.

आपृच्छ्य च तदा विप्रं व्रतचर्यां निवेद्य च ।
गच्छन्ति स्मापदेशात्ताः भीतास्तस्य पितुः स्त्रियः ॥ 22 ॥

गतासु तासु सर्वासु काश्यपस्यात्मजो द्विजः ।
अस्वस्थहृदयश्चासीद्दुःखं स्म परिवर्तते ॥ 23 ॥

ततोऽपरेद्युस्तं देशमाजगाम स वीर्यवान् ।
मनोज्ञा यत्र ता दृष्टा वारमुख्याः स्वलङ्कृताः ॥ 24 ॥

22. (ப - ரை) **तदा** - அப்பொழுது, **ताः स्त्रियः** - அந்த ஸ்த்ரீகள், **तस्य पितुः** - அவருடைய பிதாவினிடமிருந்து, **विप्रं** - அந்த ப்ராம்மணனை, **आपृच्छ्य च** - கேட்டுக் கொண்டும், **व्रतचर्यां** - வ்ரத அநுஷ்டானத்தை, **निवेद्य च** - தெரிவித்தும், **अपदेशात्** - அந்த வ்யாஜத்தினால், **गच्छन्ति स्म** - போய்விட்டார்கள்.

23. (ப - ரை) **तासु सर्वासु** - அவர்களெல்லோரும், **गतासु सतीषु** - புறப்பட்டுப்போன வளவில், **काश्यपस्य** - காச்யபருடைய, **आत्मजः** - பிள்ளையான, **द्विजः** - அந்த ப்ராம்மணர், **अस्वस्थहृदयः** - கலங்கின மனதுடையவராய், **आसीत्** - ஆகிவிட்டார், **दुःखं** - துக்கமாக இருக்கும்படி, **परिवर्तते स्म च** - திரிந்துகொண்டிருந்தார்.

24. (ப - ரை) **ततः** - அதனால், **वीर्यवान्** - வீர்யமுடையவரான, **सः** - அந்த ரிச்யச்ருங்கர், **यत्र** - எந்த இடத்தில், **मनोज्ञाः** - அழகுள்ளவர்களாயும், **स्वलङ्कृताः** - நன்றாய் அலங்காரமும் செய்யப்பட்ட, **ताः वारमुख्याः** - ச்ரேஷ்டமான அந்த கணிகைகள், **दृष्टाः** - காணப்பட்டார்களோ, **तं देशं** - அந்த இடத்தைக்குறித்து, **अपरेद्युः** - மறுநாள், **आजगाम** - வந்தார்.

22. (பொ - ரை) அப்பொழுது, அந்த வேசிகள் இவர் தகப்பனார் வந்துவிட்டால் நமக்கு அனர்த்தம் உண்டாகிவிடுமென்று பயந்துகொண்டு ரிச்யச்ருங்கரிடம் நாங்கள் ஏதோ ஒரு வ்ரதம் செய்கின்றோம், அதற்காக சீக்கிரம் புறப்பட்டுப் போக வேணுமென்று சொல்லி அவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அந்த வ்யாஜத்தினால் அதை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

23. (பொ - ரை) அந்த ஸ்த்ரீகளெல்லோரும் புறப்பட்டுப்போனபிறகு, காச்யப கோத்திரத்தில் பிறந்த விபாண்டகரின் குமாரரான ரிச்யச்ருங்கரென்னும் ப்ராம்மணர், மனம் கலங்கி மிக வருத்தத்துடன் அந்த வனத்தில் அலைந்துகொண்டிருந்தார்.

24. (பொ - ரை) இவ்வாறு, மனம் கலங்கியபடியால் ப்ரம்மதேஜஸ்ஸையுடைய அந்த ரிச்யச்ருங்கர், எந்த இடத்தில், அழகுள்ளவர்களாயும், அலங்காரம் செய்துகொண்டுமிருந்த அந்த ஸ்த்ரீகளைக் கண்டாரோ, அதே இடத்திற்கு மறுநாள் வந்துவிட்டார்.

दृष्ट्वैव च तदा विप्रमायान्तं हृष्टमानसाः ।
उपसृत्य ततः सर्वास्तास्तमूचुरिदं वचः ॥ 25 ॥

एह्याश्रमपदं सौम्यह्यस्माकमिति चाब्रुवन्
तत्राप्येष विधिः श्रीमान्विशेषेण भविष्यति ॥ 26 ॥

श्रुत्वा तु वचनं तासां सर्वासां हृदयंगमम् ।
गमनाय मतिं चक्रे तं च निन्युस्तदा स्त्रियः ॥ 27 ॥

25. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **ताः सर्वाः** - அந்த ஸ்த்ரீகளெல்லோரும், **आयान्तं** - வருகின்ற, **विप्रं** - ப்ராம்மணரை, **दृष्ट्वा एव** - பார்த்துவிட்டு, **हृष्टमानसाः सत्यः** - களித்த மனமுடையவர்களாய், **उपसृत्य** - ஸமீபத்திற்கு வந்து, **ततः** - பிறகு, **ताः** - அவர்கள், **तं** - அவரைப் பார்த்து, **इदं वचः** - இந்த வார்த்தையை, **ऊचुः** - சொன்னார்கள்.

26. (ப-ரை) **हे सौम्य** - அப்பா! **अस्माकं** - எங்களுடைய, **आश्रमपदं** - ஆச்ரமஸ்தானத்தைக் குறித்து, **एहि** - வாரும், **तत्र अपि** - அங்கும், **श्रीमान्** - நிறைந்ததான, **एषः विधिः** - இந்த உபசாரமானது, **विशेषेण** - விசேஷமாக, **भविष्यति** - உண்டாகும், **इतिच** - என்றும், **अब्रुवन्** - சொன்னார்கள்.

27. (ப-ரை) **हृदयंगमम्** - மனதிற்குப் பிடித்ததான, **तासां सर्वासां** - அவர்களெல்லோருடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा तु** - கேட்டு, **गमनाय** - அவ்விடம் போவதற்காக, **मतिं चक्रे** - எண்ணங் கொண்டார். **तदा** - அப்பொழுது, **स्त्रियः** - அந்த ஸ்த்ரீகளும், **तं** - அந்த ரிச்யச்ருங்கரை, **निन्युः च** - அழைத்துக்கொண்டும் போனார்கள்.

---

25. (பொ-ரை) இவ்வாறு அந்த ரிச்யச்ருங்கர் வந்து கொண்டிருக்கும் பொழுது, மறுநாளும் வழக்கப்படி இவரை நாடி வருகின்ற அந்த ஸ்த்ரீகள் இவரைக் கண்டவுடனே மிக்க ஸந்தோஷத்துடன் ஸமீபத்தில் நின்றுகொண்டு அவர்களெல்லோரும் அவரைப்பார்த்துச் சொன்னார்கள்.

26. (பொ-ரை) அப்பா! எங்களுடைய ஆச்ரமத்திற்கும் நீர் வரவேண்டும், அங்கும் விசேஷமாக நிறைந்த உபசாரங்கள் உமக்கு நடக்கும் என்று சொன்னார்கள்.

27. (பொ-ரை) அந்த ரிச்யச்ருங்கரும், அவர்களெல்லோரும் சொன்ன இனிதான வார்த்தையைக் கேட்டு, அவ்விடம் போவதற்கு இணங்கினார். உடனே அந்த ஸ்த்ரீகளும் அவரை ஓடத்தில் ஏற்றி கங்கா ப்ரவாஹத்தின் வழியாக நகரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். (பாரதத்தில் இவ்வாறு சொல்லப் பட்டிருக்கிறது.)

तत्र चानीयमाने तु विप्रे तस्मिन्महात्मनि ।
ववर्ष सहसा देवो जगत्प्रह्लादयंस्तदा ॥ २८ ॥

वर्षेणैवागतं विप्रं विषयं स्वं नराधिपः ।
प्रत्युद्गम्य मुनिं प्रह्वः शिरसा च महीं गतः ॥ २९ ॥

अर्घ्यं च प्रददौ तस्मै न्यायतः सुसमाहितः ।
वव्रे प्रसादं विप्रेन्द्रान्मा विप्रं मन्युराविशत् ॥ ३० ॥

---

28. (ப - ரை) **तत्र** - அந்த தேசத்தில், **महात्मनि** - மஹாப்ரபாவமுடையவரான, **तस्मिन् विप्रे** - அந்த ப்ராம்மணர், **आनीयमाने तु** - அழைத்துக்கொண்டு போகப்பட்ட வளவில், **तदा** - அப்பொழுது, **देवः** - வருணதேவன், **जगत्** - உலகத்தை, **प्रह्लादयन् सन्** - ஸந்தோஷப்படுத்திக்கொண்டு, **सहसा** - உடனே, **ववर्ष** - மழை பெய்தார்.

29. (ப - ரை) **नराधिपः** - அரசன், **वर्षेण एव** - மழையுடன் கூடவே, **स्वं विषयं** - தன் தேசத்தைக்குறித்து, **आगतं** - வந்திருக்கிற, **विप्रं मुनिं** - அந்த ப்ராம்மண ரிஷியை, **प्रत्युद्गम्य** - எதிர்கொண்டு சென்று, **शिरसा** - தலையினால், **प्रह्वः** - வணங்கினவராய், **महीं** - பூமியை, **गतः** - அடைந்தார்.

30. (ப - ரை) **सुसमाहितः सन्** - மிகவும் பக்தியுடையவராய், **तस्मै** - அவர் பொருட்டு, **न्यायतः** - சாஸ்த்ர முறைப்படி, **अर्घ्यंच** - அர்க்யத்தையும், **प्रददौ** - கொடுத்தார். **विप्रं** - ப்ராம்மணோத்தமரான உம்மை, **मन्युः** - கோபமானது, **मा आविशत्** - அடையாமலிருக்க வேண்டும், (**इति** - என்று) **विप्रेन्द्रात्** - ப்ராம்மணோத்தமரிடமிருந்து, **प्रसादं** - அனுக்ரஹத்தை, **वव्रे** - வேண்டிக்கொண்டார்.

---

28. (பொ - ரை) மஹாத்மாவான அந்த ப்ராம்மணோத்தமரை இவ்வாறு அங்க தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகும்பொழுதே, வெகுகாலமாக மழையில்லாமல் தவித்துக்கொண்டிருந்த ஜனங்கள் முழுதும் ஸந்தோஷப்படும்படி திடீரென்று மழைபெய்ய ஆரம்பித்துவிட்டது.

29. (பொ - ரை) ரோமபாத மஹாராஜர், மழையுடன் கூட தன் தேசத்திற்கு வருகின்ற அந்த ப்ரம்மரிஷியை எதிர்கொண்டு சென்று தலையால் வணங்கி ஸாஷ்டாங்கமாக பூமியில் விழுந்து தண்டனிட்டார்.

30. (பொ - ரை) மிகவும், பக்தியுடன் சாஸ்த்ர முறைப்படி அர்க்யபாத்யங்களை ஸமர்ப்பித்து கை கூப்பிக்கொண்டு, ஸ்வாமி! தங்களின் புத்தியைக் கலக்கி உம்மை இங்கு வரவழைத்து விட்டேன்; அதனால் நீர் கோபம் கொள்ளாமலிருக்கவேண்டும் என்று அவரிடம் அனுக்ரஹத்தை நாடி வேண்டிக்கொண்டார்.

अन्तःपुरं प्रविश्यास्मै कन्यां दत्वा यथाविधि ।
शान्तां शान्तेन मनसा राजा हर्षमवाप सः ॥ 31 ॥

एवं स न्यवसत्तत्र सर्वकामैः सुपूजितः ।
ऋश्यशृङ्गो महातेजाः शान्तया सह भार्यया ॥ 32 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये वालकाण्डे
दशमः सर्गः ॥ १० ॥

31. (ப - ரை) **सः राजा** - அந்த அரசனும், **अन्तःपुरं** - அந்தப்புரத்தை, **प्रविश्य** - ப்ரவேசித்து, **अस्मै** - இந்த ரிச்யச்ருங்கர் பொருட்டு, **शान्तां कन्यां** - சாந்தை என்னும் கன்னிகையை, **शान्तेन मनसा** - விசாரமில்லாத மனதுடன் கூடினவராய், **यथाविधि** - சாஸ்த்ரப்படி, **दत्वा** - கொடுத்து விட்டு, **हर्षं** - ஸந்தோஷத்தை, **अवाप** - அடைந்தார்.

32. (ப - ரை) **महातेजाः** - மஹாதேஜஸ்வியான, **सः ऋश्यशृङ्गः** - அந்த ரிச்யச்ருங்கர், **सर्वकामैः** - இஷ்டமான எல்லா வஸ்துக்களினாலும், **सुपूजितः** - நன்றாய் பூஜிக்கப்பட்டவராய், **भार्यया** - பத்நியான, **शान्तया सह** - சாந்தையுடன் கூட, **तत्र** - அந்த அந்தப்புரத்தில், **न्यवसत्** - வஸித்துக்கொண்டிருந்தார்.

---

31. (பொ - ரை) பிறகு அரசன், அவருடன் கூட அந்தப்புரம் சென்று, மிக ஸந்தோஷத்துடன் சாந்தை யென்னும் தன் பெண்ணை, சாஸ்த்ரப்படி அவருக்கு விவாஹம் செய்துகொடுத்து பரம ஸந்தோஷ மடைந்தார்.

32. (பொ - ரை) மஹா ப்ரபாவமுடைய அந்த ரிச்யச்ருங்க முனிவரும், தன் பத்நியான சாந்தையுடன் கூட, போக்ய வஸ்துக்கள் எல்லாவற்றாலும் பூஜிக்கப்பட்டு அந்த ரோமபாத மஹாராஜரின் அந்தப்புரத்தில் இவ்வாறு வஸித்துக்கொண்டிருந்தார்.

एकादशः सर्गः ॥11॥

भूय एव हि राजेन्द्र शृणु मे वचनं हितम् ।
यथा स देवप्रवरः कथायामेवमब्रवीत् । ॥ 1 ॥
इक्ष्वाकूणां कुले जातो भविष्यति सुधार्मिकः ।
राजा दशरथो नाम श्रीमान्सत्यप्रतिश्रवः ॥ 2 ॥
अङ्गराजेन सख्यं च तस्य राज्ञो भविष्यति ।
कन्या चास्य महाभागा शान्ता नाम भविष्यति ॥ 3 ॥

---

1. (ப - ரை) **हे राजेन्द्र** - ராஜச்ரேஷ்டரே ! **सः देवप्रवरः** - தேவர்களில் சிறந்தவரான அந்த ஸநத்குமார், **कथायां** - இந்த கதையின் ப்ரஸ்தாபத்தில், **एवं** - இவ்வாறு, **यथा** - எப்படி, **अब्रवीत्** - சொன்னாரோ, (**तथा** - அப்படி) **मे** - என்னுடைய, **हितं वचनं** - ஹிதமான வார்த்தையை, **भूयः एव हि** - மறுபடியுமே, **शृणु** - கேளும்.

2. (ப - ரை) **इक्ष्वाकूणां** - இக்ஷ்வாகுவம்சத்து அரசர்களுடைய, **कुले** - குலத்தில், **दशरथः नाम** - தசரதரென்று ப்ரஸித்தராய், **श्रीमान्** - செல்வமுடையவராய், **सत्यप्रतिश्रवः** - ஸத்யமான ப்ரதிஜ்ஞையுடையவராய், **राजा** - ஒரு அரசன், **सुधार्मिकः** - மிகவும் தார்மிஷ்டராக, **जातः भविष्यति** - உண்டாகப்போகிறார்.

3. (ப - ரை) **तस्य राज्ञः** - அந்த அரசனுக்கு, **अङ्गराजेन** - அங்க தேசத்து அரசனுடன், **सख्यं च** - ஸ்நேஹமும், **भविष्यति** - உண்டாகப்போகிறது. **अस्य** - இந்த அங்க ராஜனுக்கு, **महाभागा** - மிகவும் பாக்யமுடையவளாய், **शान्तानाम** - சாந்தை என்று ப்ரஸித்தமான, **कन्याच** - ஒரு பெண்ணும், **भविष्यति** - உண்டாகப்போகிறாள்.

1. (பொ - ரை) ராஜேந்திரா ! தேவர்களில் சிறந்தவரான அந்த ஸநத் குமாரர், இவ்வாறு கதை சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, இன்னமும் ஒரு கதை சொன்னார். அது உமக்கு மிகவும் ஹிதமானது. அதை நான் மறுபடியும் சொல்லுகிறேன் கேளும்.

2. (பொ - ரை) இக்ஷ்வாகு வம்சத்தில், செல்வமுடையவராய், ஸத்ய ப்ரதிஜ்ஞையைத் தவறாதவராய், மிகவும் தார்மிஷ்டராய், தசரதரென்று ப்ரஸித்தியுடையவரான ஒரு அரசன் உண்டாகப்போகிறார்.

3. (பொ - ரை) அந்த தசரத மஹாராஜருக்குப், அங்க தேசத்து அரசனோடு ஸ்நேஹம் உண்டாகப்போகிறது. அந்த அங்க தேசத்து அரசனுக்கு சாந்தை என்று ப்ரஸித்தியுடையவளாய், சிறந்த அத்ருஷ்டமுடையவளான ஒரு பெண் பிறக்கப் போகிறாள்.

पुत्रस्तु सोऽङ्गराजस्य रोमपाद इति श्रुतः ।
तं स राजा दशरथो गमिष्यति महायशाः ॥ 4 ॥

अनपत्योऽस्मि धर्मात्मन् शान्ताभर्ता मम क्रतुम् ।
आहरेत त्वयाऽऽज्ञप्तः सन्तानार्थं कुलस्य च ॥ 5 ॥

श्रुत्वा राज्ञोऽथ तद्वाक्यं मनसा स विचिन्त्य च ।
प्रदास्यते पुत्रवन्तं शान्ताभर्तारमात्मवान् ॥ 6 ॥

4. (ப - ரை) **सः** - அவர், **अङ्गराजस्य** - அங்கதேசத்து அரசனுடைய, **पुत्रः** - புத்திரன், **रोमपादः इति** - ரோமபாதர் என்று, **श्रुतः** - உலகத்தில் ப்ரஸித்தர், **तं** - அவரை, **महायशाः** - பெரும் கீர்த்தியுடைய, **सः दशरथः राजा** - அந்த தசரத மஹாராஜர், **गमिष्यति** - அடையப்போகிறார்.

5. (ப - ரை) हे **धर्मात्मन्** - ஓ தார்மிஷ்டரே, (**अहं** - நான்) **अनपत्यः अस्मि** - குழந்தை இல்லாதவனாக விருக்கிறேன், (**तस्मात्** - ஆகையால்.) **शान्ता भर्ता** - சாந்தையின் பர்த்தாவான ரிச்யச்ருங்கர், **त्वया** - உம்மால், **आज्ञप्तः** - அனுமதி செய்யப்பட்டவராய், **मम कुलस्य** - என் குலத்தினுடைய, **सन्तानार्थं** - தொடர்ச்சிக்காக, **क्रतुम्** - யாகத்தை, **आहरेत** - செய்யவேண்டும், **इति**- என்று, (**वक्ष्यति च** - சொல்லவும் போகிறார்.)

6. (ப - ரை) **अथ** - பிறகு, **सः** - அந்த ரோமபாதர், **राज्ञः** - தசரதருடைய, **तत् वाक्यं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **मनसा** - மனதினால், **विचिन्त्य च** - ஆலோசனையும் செய்து, **आत्मवान्** - சிறந்த மனதுடையவராய், **पुत्रवन्तं** - புத்திரனோடு கூடிய, **शान्ता भर्तारं** - சாந்தையின் பர்த்தாவை, **प्रदास्यते** - கொடுக்கப் போகிறார்.

---

4. (பொ - ரை) தசரதர் ஸ்நேஹம் செய்துகொண்ட அவ்வரசன், அங்க ராஜனுடைய குமாரர், ரோமபாதரென்று பெயருடையவர். பெருங்கீர்த்தியுடைய அந்த தசரத மஹாராஜர், தம் தோழரான ரோமபாதரிடம் ஒரு காலத்தில் செல்லப்போகிறார்.

5. (பொ - ரை) வாரீர் தார்மிஷ்டரே! நான் குழந்தை இல்லாதவனாயிருக்கிறேன். ஆதலால் சாந்தையின் பர்த்தாவான ரிச்யச்ருங்க மஹரிஷியை நீர் அனுப்பிக் கொடுத்து என்னுடைய வம்சம் தொடர்ச்சியாக வருவதற்கு ஒரு யாகத்தைச் செய்யும்படி செய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்கப்போகிறார்.

6. (பொ - ரை) பிறகு ரோமபாத மஹாராஜரும், அந்த தசரதருடைய வார்த்தையைக் கேட்டு, மனதினால் நன்றாக ஆலோசனையும் செய்து நல்ல மனதுடையவராகையால், புத்திரோத்பத்திக்குத் தகுந்த ஸத்கார்யம் செய்வதில் ஸமர்த்தரான சாந்தையின் பர்த்தாவான ரிச்யச்ருங்க மஹரிஷியைத் தசரத மஹாராஜரிடம் அனுப்பப் போகிறார்.

प्रतिगृह्य च तं विप्रं स राजा विगतज्वरः ।
आहरिष्यति तं यज्ञं प्रहृष्टेनान्तरात्मना ॥ 7 ॥

तं च राजा दशरथो यज्ञकामः कृताञ्जलिः ।
ऋश्यशृङ्गं द्विजश्रेष्ठं वरयिष्यति धर्मवित् ॥ ८ ॥

यज्ञार्थं प्रसवार्थं च स्वर्गार्थं च जनेश्वरः ।
लभते च स तं कामं द्विजमुख्याद्विशां पतिः ॥ 9 ॥

---

7. (ப - ரை) **सः राजा** - அந்த அரசன், **तं विप्रं** - அந்த பிராம்மணரை, **प्रतिगृह्य च** - பெற்றுக்கொண்டு, **विगतज्वरः (सन्)** - மனவருத்தம் நீங்கினவராய், **प्रहृष्टेन** - மிகவும் ஸந்தோஷமடைந்த, **अन्तरात्मना** - மனதுடன், **तं यज्ञं** - அந்த யாகத்தை, **आहरिष्यति** - செய்யப்போகின்றார்.

8. (ப - ரை) **धर्मवित्** - தர்மங்களை அறிந்தவரான, **दशरथः राजा** - தசரத மஹாராஜர், **यज्ञकामः** - யாகம் செய்ய ஆசை கொண்டவராய், **कृताञ्जलिः [सन्]** கைகூப்பிக்கொண்டு, **द्विजश्रेष्ठं** - பிராம்மணோத்தமரான, **तं ऋश्यशृङ्गं** - அந்த ரிச்ய சிருங்கரை, **वरयिष्यति च** - வரிக்கப்போகின்றார்.

9. (ப - ரை) **विशां पतिः** - மனிதர்களுக்கு ராஜாவான, **सः जनेश्वरः** - அந்த அரசன், **यज्ञार्थं** - புத்ரகாமேஷ்டி என்னும் யாகத்திற்காகவும், **प्रसवार्थं च** - புத்திரனுக்காகவும், **स्वर्गार्थं च** - ஸ்வர்க்கம் அடைவதற்காகவும், **तं कामं** - தான் ஆசைப்பட்ட அந்த யாகத்தை, **द्विजमुख्यात्** - பிராம்மணோத்தமரால், **लभते च** - அடையவும் போகிறார்.

7. (பொ - ரை) அவ்வரசன், அந்த ரிச்யசிருங்க மஹரிஷியை அழைத்துக் கொண்டு வந்து மனோவிசாரம் நீங்கினவராய் ஸந்தோஷமுள்ள மனதுடன் அந்த யாகத்தைச் செய்யப்போகிறார்.

8. (பொ - ரை) ஸகல தர்மங்களையும் தெரிந்தவரான தசரத மஹாராஜர் யாகம் செய்ய எண்ணம் கொண்டவராய் கைகூப்பிக்கொண்டு ப்ராம்மணோத்தமரான அந்த ரிச்யச்ருங்க மஹரிஷியை அந்த யாகத்திற்கு ரித்விக்காக வரிக்கப்போகிறார்.

9. (பொ - ரை) அந்த தசரத மஹாராஜர் புத்திரகாமேஷ்டி யென்னும் யாகத்திற்காகவும், அதன் மூலமாய் புத்திரோத்பத்தி உண்டாவதற்காகவும், பிள்ளையில்லாதவனுக்கு பரலோகமில்லை யென்று வேதத்தில் சொல்லியபடியால் புத்திரன் பிறந்து அவ்வழியாக ஸ்வர்க்கம் அடைவதற்காகவும், தான் எண்ணிய யாகத்தை அந்த ப்ராம்மணோத்தமரைக் கொண்டு நடத்தப் போகிறார்.

पुत्राश्चास्य भविष्यन्ति चत्वारोऽमितविक्रमाः ।
वंशप्रतिष्ठानकराः सर्वलोकेषु विश्रुताः ॥ 10 ॥

एवं स देवप्रवरः पूर्वं कथितवान्कथाम् ।
सनत्कुमारो भगवान्पुरा देवयुगे प्रभुः ॥ 11 ॥

स त्वं पुरुषशार्दूल तमानय सुसत्कृतम् ।
स्वयमेव च राजेन्द्र गत्वा सबलवाहनः ॥ 12 ॥

10. (ப - ரை) **अस्य** - இந்த அரசனுக்கு, **अमितविक्रमाः** - அபராக்கிரமமுள்ளவர்களாய், **सर्वलोकेषु** - எல்லா உலகங்களிலும், **विश्रुताः** - ப்ரஸித்தி அடைந்தவர்களாய், **वंशप्रतिष्ठानकराः** - குலத்திற்கு பெரிய பெருமையை கொடுக்கின்றவர்களாய், **चत्वारः पुत्राः** - நான்கு பிள்ளைகள், **भविष्यन्ति च** - உண்டாகப் போகிறார்கள்.

11. (ப - ரை) **हे देव** - ப்ரபுவே! **पूर्वं** - முன்காலத்தில், **पुरा युगे** - முன் யுகத்தில், **भगवान्** - மஹிமையுடையவராய், **प्रभुः** - ஸ்வதந்த்ரரான, **देवप्रवरः** - தேவர்களுக்குள் சிறந்தவரான, **सः** - அந்த, **सनत्कुमारः** - ஸநத்குமாரர், **एवं** - இவ்வாறு, **कथाम्** - கதையை, **कथितवान्** - சொன்னார்.

12. (ப - ரை) **हे पुरुषशार्दूल** - புருஷோத்தமரே ! **हे राजेन्द्र** - ராஜச்ரேஷ்டரே ! **सः त्वं** - அப்படிப்பட்ட நீர், **सबलवाहनः (सन्)** - ஸைன்யங்களுடனும், வாஹனங்களுடனும், **गत्वा** - சென்று, **सुसत्कृतम्** - நன்றாய் கௌரவிக்கத் தகுந்தவரான, **तं** - அந்த ரிச்யச்ருங்கரை, **स्वयं एव** - நீராகவே, **आनय** - அழைத்துக் கொண்டுவாரும்.

10. (பொ - ரை) இந்த தசரத மஹாராஜருக்கு அளவிறந்த பராக்கிரமமுடையவர்களாய், எல்லா உலகங்களிலும் ப்ரஸித்தி அடைந்தவர்களாய், வம்சத்திற்கே மிகுந்த பெருமையைச் செய்கிறவர்களாய் நான்கு குமாரர்கள் அவதரிக்கப் போகின்றார்கள்.

11. (பொ - ரை) ஸ்வாமீ ! ஞானாதிகுணங்கள் நிறைந்தவராய் ஸ்வதந்த்ரருமான தேவச்ரேஷ்டரான ஸநத்குமாரரும் முன்னொருகால் க்ருதயுகத்தில் இவ்வாறாக இந்தக் கதையைச் சொன்னார்.

12. (பொ-ரை) புருஷோத்தமா ! ராஜேந்திரா ! தாங்கள் இப்பொழுது புத்திரோத்பத்தியை வேண்டுகிறபடியால் ஸைன்யங்களுடனும் பல்லக்கு முதலான வாஹனங்களுடனும் நீங்களே நேரில் சென்று ஸகல மரியாதைகளும் பெறத் தகுந்தவரான அந்த ரிச்யச்ருங்க மஹரிஷியை அழைத்து வாருங்கள்.

अनुमान्य वसिष्ठं च सूतवाक्यं निशम्य च ।
सान्तःपुरः सहामात्यः प्रययौ यत्र स द्विजः ॥ 13 ॥

वनानि सरितश्चैव व्यतिक्रम्य शनैः शनैः ।
अभिचक्राम तं देशं यत्र वै मुनिपुङ्गवः ॥ 14 ॥

आसाद्य तं द्विजश्रेष्ठं रोमपादसमीपगम् ।
ऋषिपुत्रं ददर्शादौ दीप्यमानमिवानलम् ॥ 15 ॥

---

13. (ப - ரை) **सूतवाक्यं** - ஸாரதியினுடைய வார்த்தையை, **निशम्य च** - கேட்டும், **वसिष्ठं** - வஸிஷ்ட மஹரிஷியை, **अनुमान्य च** - அனுமதி பெற்றுக்கொண்டும், **सान्तःपुरः** - அந்தப்புரஸ்த்ரீகளுடனும், **सह अमात्यः** - மந்த்ரிகளுடனும் கூடியவராய், **यत्र** - எந்த இடத்தில், **सः द्विजः** - அந்த ப்ராம்மணர் (இருக்கிறாரோ) (**तत्र** - அங்கு), **प्रययौ** - சென்றார்.

14. (ப - ரை) **वनानि** - ஆரண்யங்களையும், **सरितः चैव** - நதிகளையும், **शनैः शनैः** மெள்ள மெள்ள, **व्यतिक्रम्य** - கடந்து, **यत्र** - எந்த இடத்தில், **मुनिपुङ्गवः** - முனிஶ்ரேஷ்டர், **(अस्ति) वै** - இருக்கின்றாரோ, **तं देशं** - அந்த தேசத்தை, **अभिचक्राम** - நோக்கிச் சென்றார்.

15. (ப - ரை) **तं** - அந்த தேசத்தை, **आसाद्य** - அடைந்து, **दीप्यमानं** - ஜ்வலித்துக்கொண்டிருக்கிற, **अनलं इव** - அக்னியைப்போன்றவரும், **रोमपादसमीपगम्** - ரோமபாதரின் ஸமீபத்திலிருக்கிறவரும், **द्विजश्रेष्ठं** - ப்ராம்மணஶ்ரேஷ்டருமான, **ऋषिपुत्रं** - ரிஷிகுமாரரை, **आदौ** - முதலில், **ददर्श** - பார்த்தார்.

13. (பொ - ரை) பிறகு, தசரத மஹாராஜர், ஸாரதியினுடைய வார்த்தையைக் கேட்டு, வஸிஷ்டரிடமும் அனுமதி பெற்றுக்கொண்டு அந்த ப்ராம்மணர் இருக்குமிடமான ரோமபாத மஹாராஜருடைய நகரத்திற்கு அந்தப்புர ஸ்த்ரீகளுடனும் மந்த்ரிகளுடனும் சென்றார்.

14. (பொ - ரை) பல ஆரண்யங்களையும், அநேகம் நதிகளையும், பார்த்துக் கொண்டே, மெள்ள மெள்ள நடந்து சென்று, அந்த ரிஷ்யச்ருங்கர் இருக்குமிடம் நோக்கிப் போகிறார்.

15. (பொ - ரை) அங்கு சென்று, ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்னிபோல் ரோமபாத மஹாராஜரின் ஸமீபத்தில் உட்கார்ந்திருக்கிற ப்ராம்மணஶ்ரேஷ்டரான அந்த ரிஷிகுமாரரை முதலில் கண்டார்.

ततो राजा यथान्यायं पूजां चक्रे विशेषतः ।
सखित्वात्तस्य वै राज्ञः प्रहृष्टेनान्तरात्मना ॥ 16 ॥

रोमपादेन चाख्यातमृषिपुत्राय धीमते ।
सख्यं संबन्धकं चैव तदा तं प्रत्यपूजयत् ॥ 17 ॥

एवं सुसत्कृतस्तेन सहोषित्वा नरर्षभः ।
सप्ताष्टदिवसान् राजा राजानमिदमब्रवीत् ॥ 18 ॥

16. (ப - ரை) **ततः** - பிறகு, **राजा** - ரோமபாதர், **सखित्वात्** - தோழராயிருக்கிறபடியால், **प्रहृष्टेन** - மிகவும் களிப்பு உள்ளதான, **अन्तरात्मना** - மனதுடன். **यथान्यायं** - நியாயத்தை அனுஸரித்து, **तस्य राज्ञः** - அந்த தசரத மஹாராஜருக்கு, **विशेषतः** - விசேஷமாக, **पूजां** - பூஜையை, **चक्रे** - செய்தார்.

17. (ப - ரை) **धीमते** - மஹா ப்ராஜ்ஞரான, **ऋषिपुत्राय** - ரிஷிகுமாரரின் பொருட்டு, **रोमपादेन** - ரோமபாத மஹாராஜரால், **सख्यं** - ஸ்நேஹமும், **संबन्धकं चैव** - உறவும், **आख्यातं** - சொல்லப்பட்டது, **तदा** - அப்பொழுது, **ऋश्यशृङ्गः** - ரிச்யச்ருங்கரும், **तं** - அந்த தசரதரை, **प्रत्यपूजयत्** - பூஜித்தார்.

18. (ப - ரை) **नरर्षभः** - மஹாராஜர், **एवं** - இவ்வாறு, **सुसत्कृतः** - நன்றாக மரியாதை செய்யப்பட்டவராய், **तेन सह** - அந்த ரோமபாதருடன் கூட, **सप्त अष्ट दिवसान्** - ஏழு எட்டு நாள்களை, **उषित्वा** - அங்கு வஸித்து, **राजा** - தசரதமஹாராஜர், **राजानं** - ரோமபாத மஹாராஜரைப் பார்த்து, **इदं** - இதை, **अब्रवीत्** - சொன்னார்.

16. (பொ - ரை) பிறகு, ரோமபாத மஹாராஜரும், தசரத மஹாராஜர் தமக்குத் தோழராதலால், அவரைக் கண்டவுடன் பரம ஸந்தோஷத்துடன் முறைப்படி அவருக்கு விசேஷமாகப் பூஜை செய்தார்.

17. (பொ - ரை) பிறகு, ரோமபாத மஹாராஜரும், இவர் தனக்கு மிகவும் அன்பரென்றும், சாந்தையின் ஜநக பிதாவென்றும், ரிச்யச்ருங்கருக்குச் சொல்லவே, அவரும், தசரத மஹாராஜரை விசேஷமாகப் பூஜித்தார்.

18. (பொ - ரை) புருடச்ரேஷ்டரான அந்த தசரத மஹாராஜர் ரோமபாத மஹாராஜரால் இவ்வாறு மரியாதை செய்யப்பட்டு அவருடன் கூடவே ஏழு, எட்டு நாள்கள் அங்கு தங்கியிருந்து, ஒரு நாள் ரோமபாதரைப் பார்த்துச் சொன்னார்.

शान्ता तव सुता राजन् सह भर्त्रा विशांपते ।
मदीयं नगरं यातु कार्यं हि महदुद्यतम् ॥ 19 ॥

तथेति राजा संश्रुत्य गमनं तस्य धीमतः ।
उवाच वचनं विप्रं गच्छ त्वं सह भार्यया ॥ 20 ॥

ऋषिपुत्रः प्रतिश्रुत्य तथेत्याह नृपं तथा ।
स नृपेणाभ्यनुज्ञातः प्रययौ सह भार्यया ॥ 21 ॥

19. (ப - ரை) **हे विशांपते** - *மஹாராஜரே!* **तव सुता** - *உம்முடைய பெண்ணை,* **शान्ता** - *சாந்தை,* **भर्त्रा सह** - *பர்த்தாவுடன் கூட,* **मदीयं नगरं** - *என்னுடைய நகரத்தைக் குறித்து,* **यातु** - *வரவேண்டும்,* **हि** - *ஏனென்றால்,* **महत् कार्यं** - *பெரிதான ஒரு கார்யம்,* **उद्यतं** - *செய்ய ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.*

20. (ப - ரை) **राजा** - *ரோமபாதரும்,* **धीमतः** - *ப்ராஜ்ஞரான,* **तस्य** - *அந்த ரிச்யச்ருங்கருடைய,* **गमनं** - *ப்ரயாணத்தை,* **तथा इति** - *அப்படியே என்று,* **संश्रुत्य** - *உறுதியாகச் சொல்லிவிட்டு,* **विप्रं** - *ப்ராம்மணரைப் பார்த்து,* **त्वं** - *நீர்,* **भार्यया सह** - *பார்யையுடன் கூட,* **गच्छ** - *அங்கு போகவேண்டும்,* (**इति** - *என்று*) **वचनं** - *வார்த்தையை,* **उवाच** - *சொன்னார்.*

21. (ப - ரை) **ऋषिपुत्रः** - *ரிஷிகுமாரரும்,* **प्रतिश्रुत्य** - *அதைக் கேட்டு,* **तदा** - *அப்பொழுது,* **नृपं** - *அரசனைக்குறித்து,* **तथा इति** - *அப்படியே ஆகட்டுமென்று,* **आह** - *சொன்னார்.* **सः** - *அவர்,* **नृपेण** - *அரசனால்,* **अभ्यनुज्ञातः [सन्]** - *அனுமதி செய்யப் பட்டவராய்க் கொண்டு,* **भार्यया सह** - *பார்யையுடன் கூட,* **प्रययौ** - *புறப்பட்டார்.*

19. (பொ - ரை) *மஹாராஜரே! பெரிய ஒரு கார்யத்தைச் செய்ய ஆரம்பித்திருக்கிறேன், அதற்காக உம்முடைய பெண்ணை சாந்தை, தன் பர்த்தாவுடன் என்னுடைய நகரத்திற்கு வரவேண்டும்.*

20. (பொ - ரை) *ரோமபாத மஹாராஜரும், மஹாப்ராஜ்ஞரான அந்த ரிச்யச்ருங்கரை, சாந்தையுடன் கூட அனுப்பித்தரக் கொடுப்பதாக தசரத மஹாராஜருக்கு உறுதிமொழி கூறிவிட்டு, ரிச்யச்ருங்கரைப் பார்த்து, ஸ்வாமி! தசரத மஹாராஜர், ப்ரார்த்திக்கிறபடியால் பார்யையுடன் கூட நீர் அயோத்தி நகரம் போய் விட்டு வாருமென்று சொன்னார்.*

21. (பொ - ரை) *ரிச்யச்ருங்க மஹரிஷியும், ரோமபாதர் சொல்லைக்கேட்டு, அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, அரசனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, தன் பார்யையுடன் புறப்பட்டார்.*

तावन्योन्याञ्जलिं कृत्वा स्नेहात्संश्लिष्य चोरसा ।
ननन्दतुर्दशरथो रोमपादश्च वीर्यवान् ॥ 22 ॥

ततः सुहृदमापृच्छ्य प्रस्थितो रघुनन्दनः ।
पौरेभ्यः प्रेषयामास दूतान्वै शीघ्रगामिनः ॥ 23 ॥

क्रियतां नगरं सर्वं क्षिप्रमेव स्वलङ्कृतम् ।
धूपितं सिक्तसंमृष्टं पताकाभिरलङ्कृतम् ॥ 24 ॥

22. (ப - ரை) **दशरथः** - தசரதரென்ன, **वीर्यवान्** - பராக்ரமசாலியான, **रोमपादः च** - ரோமபாதரென்ன, **तौ** - அவ்விருவர்களும், **अन्योन्याञ्जलिं** - ஒருவருக்கொருவர் கைகூப்புதலை, **कृत्वा** - செய்து, **स्नेहात्** - ஸ்நேஹத்தினால், **उरसा** - மார்போடு, **संश्लिष्य** - கட்டிக்கொண்டு, **ननन्दतुः** - ஸந்தோஷமடைந்தார்கள்.

23. (ப - ரை) **ततः** - பிறகு, **रघुनन्दनः** - தசரதர், **सुहृदं** - தோழரான ரோமபாதரை, **आपृच्छ्य** - கேட்டுக் கொண்டு, **प्रस्थितः** - புறப்பட்டவராய், **पौरेभ्यः** - பட்டணத்து ஜனங்களின் பொருட்டு, **शीघ्रगामिनः** - சீக்கிரமாகப்போகத் தகுந்த, **दूतान्** - தூதர்களை, **प्रेषयामास वै** - அனுப்பினார்.

24. (ப - ரை) **नगरं सर्वं** - நகரம் முழுவதும், **सिक्तसंमृष्टं** - நீர் தெளித்து கூட்டப்பட்டும், **पताकाभिः** - த்வஜங்களால், **अलङ्कृतं** - அலங்கரிக்கப்பட்டும், **स्वलङ्कृतम्** - நன்றாய் அலங்கரிக்கப்பட்டதாகவும், **धूपितं** - தூப வாஸனை உள்ளதாகவும், **क्षिप्रं एव** - சீக்கிரமாகவே, **क्रियतां** - செய்யப்படவேண்டும்.

---

22. (பொ - ரை) தசரத மஹாராஜரும், ரோமபாத மஹாராஜரும் ஒருவருக்கொருவர் கைகூப்பிக்கொண்டு ஸ்நேஹத்தினால், மார்போடு அணைந்துகொண்டு மிகவும் ஸந்தோஷ மடைந்தார்கள்.

23. (பொ - ரை) பிறகு, ரகுகுலத்தில் அவதரித்த தசரத மஹாராஜரும், தன் தோழரான ரோமபாதரிடம், நான் போய் வருகிறேனென்று சொல்லிக்கொண்டு, புறப்பட்டு, தான்வருகிற செய்தியை அயோத்தியா நகரத்து ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்காக வேகமாக நடக்கக்கூடிய தூதர்களை அனுப்பினார்.

24. (பொ - ரை) நான் வருவதற்குள்ளாக நம்முடைய நகரம் முழுவதும் நன்றாக ஜலம் தெளித்துக் கூட்டி தூபங்கள் கமழ்த்தி, நிசான்கள் கட்டி, புஷ்பம் வாழை மரம் தோரணம் முதலியவைகளால் நன்றாக அலங்கரித் திருக்கவேண்டும் (என்று சொல்லி தூதர்களை அனுப்பினார்).

ततः प्रहृष्टाः पौरास्ते श्रुत्वा राजानमागतम् ।
तथा प्रचक्रुस्तत्सर्वं राज्ञा यत्प्रेषितं तदा ॥ 25 ॥

ततः स्वलङ्कृतं राजा नगरं प्रविवेश ह ।
शङ्खदुन्दुभिनिर्घोषैः पुरस्कृत्य द्विजर्षभम् ॥ 26 ॥

ततः प्रमुदिताः सर्वे दृष्ट्वा तं नागरा द्विजम् ।
प्रवेश्यमानं सत्कृत्य नरेन्द्रेणेन्द्रकर्मणा ॥ 27 ॥

---

25. (ப - ரை) **ततः** - பிறகு, **ते पौराः** - அந்த பட்டணத்து ஜனங்கள், **राजानं** - அரசனை, **आगतम्** - வருகின்றவராக, **श्रुत्वा** - கேட்டு, **प्रहृष्टाः (सन्तः)** - ஸந்தோஷமுடையவர்களாய்க்கொண்டு, **राज्ञा** - அரசனால், **यत्** - யாதொன்றும், **प्रेषितं** - (செய்யுமாறு சொல்லி) அனுப்பப்பட்டதோ, **तत् सर्वं** - அது முழுவதையும், **तथा** - அப்படியே, **तदा** - அப்பொழுதே, **प्रचक्रुः** - செய்தார்கள்.

26. (ப - ரை) **ततः** - பிறகு, **राजा** - அரசன், **द्विजर्षभम्** - ப்ராம்மண ச்ரேஷ்டரை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **शङ्खदुन्दुभि निर्घोषैः** - சங்கங்களுடையவும், துந்துபிகளுடையவும் சப்தங்களோடுகூட, **स्वलङ्कृतं** - நன்றாய் அலங்கரிக்கப்பட்ட, **नगरं** - நகரத்தை, **ह** - ஸந்தோஷமுடன், **प्रविवेश** - ப்ரவேசித்தார்.

27. (ப - ரை) **ततः** - பிறகு, **नागराः सर्वे** - நகரத்து ஜனங்களெல்லோரும், **इन्द्रकर्मणा** - இந்திரனுடைய செயல்போன்ற செயலுடைய, **नरेन्द्रेण** - அரசனால், **सत्कृत्य** - கௌரவப்படுத்தி, **प्रवेश्यमानं** - அழைத்து வரப்படுகின்ற, **तं द्विजम्** - அந்த ப்ராம்மணரை, **दृष्ट्वा** - பார்த்து, **प्रमुदिताः** - ஸந்தோஷமுடையவர்களாய், (**आसन्** - ஆனார்கள்).

---

25. (பொ - ரை) பிறகு, அந்த பட்டணத்து ஜனங்கள், ராஜா வருகின்றதைக் கேட்டு, மிக்க ஸந்தோஷத்துடன் அரசன் சொல்லியனுப்பியபடியே, யாவையும் முழுவதும் செய்துவிட்டார்கள்.

26. (பொ - ரை) பிறகு, தசரத மஹாராஜர் ப்ராம்மணோத்தமரான, ரிஷ்ய ச்ருங்கரை முன்னிட்டுக்கொண்டு, சங்கவாத்தியம், துந்துபிவாத்தியம் முதலான வாத்திய கோஷங்களுடனே, அலங்கரித்திருக்கின்ற தம்முடைய நகரத்தில் ப்ரவே சித்தார்.

27. (பொ - ரை) பிறகு, தேவேந்திரன்போல் பராக்ரமம் முதலிய பெருமை யையுடைய தசரத மஹாராஜர் கௌரவத்துடன் அழைத்து வருகின்ற அந்த ப்ராம் மணோத்தமரைப் பார்த்து, அந்த நகரத்து ஜனங்களெல்லோரும் ஸந்தோஷமடைந் தார்கள்.

अन्तःपुरं प्रवेश्यैनं पूजां कृत्वा विधानतः ।
कृतकृत्यं तदात्मानं मेने तस्योपवाहनात् ॥ 28 ॥
अन्तःपुरस्त्रियः सर्वाः शान्तां दृष्ट्वा तथागताम् ।
सह भर्त्रा विशालाक्षीं प्रीत्याऽऽनन्दमुपागमन् ॥ 29 ॥
पूज्यमाना च ताभिः सा राज्ञा चैव विशेषतः ।
उवास तत्र सुखिता कंचित्कालं सहर्त्विजा ॥ 30 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे एकादशः सर्गः ॥ 11 ॥

28. (ப - ரை) **राजा** - தசரதர் **एनं** - இவரை, **अन्तःपुरं** - அந்தப்புரத்தை, **प्रवेश्य** - அழைத்துக்கொண்டுபோய், **विधानतः** - சாஸ்த்ரவிதிப்படி, **पूजां** - பூஜையை, **कृत्वा** - செய்து, **तस्य** - அவரை, **उपवाहनात्** - அழைத்து வந்ததனால், **आत्मानं** - தன்னை, **कृतकृत्यं** - செய்யவேண்டிய கார்யத்தை செய்து முடித்தவராக, **तदा** - அப்பொழுது, **मेने** - எண்ணினார்.

29. (ப - ரை) **अन्तःपुर स्त्रियः** - அந்தப் புரத்து ஸ்த்ரீகள், - **सर्वाः** - எல்லோரும், **भर्त्रा सह** - பர்த்தாவுடன்கூட, **तथा** - அவ்வாறு, **आगतां** - வந்திருக்கின்ற, **विशालाक्षीं** - விசாலமான கண்களையுடைய, **शान्तां** - சாந்தையை, **दृष्ट्वा** - பார்த்து, **प्रीत्या** - அன்பினால், **आनन्दं** - ஆனந்தத்தை, **उपागमन्** - அடைந்தார்கள்.

30. (ப - ரை) **सा** - அந்த சாந்தை, **ताभिः च** - அந்த ஸ்த்ரீகளாலும், **राज्ञा चैव** - அரசனாலும், **विशेषतः** - விசேஷமாக, **पूज्यमाना** - பூஜிக்கப்பட்டவளாய், **सुखिता** - ஸுகமுடையவளாய், **ऋत्विजा सह** - ரித்விக்கு உடன்கூட, **तत्र** - அங்கு, **कंचित् कालं** - கொஞ்சகாலம், **उवास** - வஸித்துக்கொண்டிருந்தாள்.

---

28. (பொ - ரை) தசரத மஹாராஜர், இந்த ரிச்யச்ருங்கரை, சாந்தையுடன் கூட அந்தப்புரம் அழைத்துக்கொண்டு போய், சாஸ்த்ரப்படி அவருக்குப் பூஜையும் செய்து விட்டு, அவரை இங்கு அழைத்து வந்ததனால் தாம் எண்ணியிருந்த கார்யம் முழுவதையும் செய்து முடித்ததாகவே எண்ணி ஸந்தோஷப்பட்டார்.

29. (பொ - ரை) அந்தப்புர ஸ்த்ரீகளெல்லோரும், பர்த்தாவுடன் கூட வந்திருக்கின்ற விசாலமான கண்களையுடைய அந்த சாந்தையைப் பார்த்து அன்பினால் மிகவும் ஆனந்தமடைந்தார்கள்.

30. (பொ - ரை) அந்த சாந்தையும், அந்தப்புர ஸ்த்ரீகளாலும், அரசனாலும் விசேஷமாக கௌரவப்படுத்தப்பட்டு, தன்னுடைய பர்த்தாவுடன் கூட அங்கு சிலகாலம் ஸுகமாக வஸித்துக்கொண்டிருந்தாள்.

द्वादशः सर्गः ॥ 12 ॥

ततः काले बहुतिथे कस्मिंश्चित्सुमनोहरे ।
वसन्ते समनुप्राप्ते राज्ञो यष्टुं मनोऽभवत् ॥ 1 ॥
ततः प्रसाद्य शिरसा तं विप्रं देववर्णिनम् ।
यज्ञाय वरयामास सन्तानार्थं कुलस्य वै ॥ 2 ॥
तथेति च स राजानमुवाच च सुसत्कृतः ।
संभाराः संभ्रियन्तां ते तुरगश्च विमुच्यताम् ॥ 3 ॥

1. (ப - ரை) **ततः** - பிறகு, **बहुतिथे** - அதிகமான கணக்கு உள்ள, **काले** - காலமானது, (**गते सति** - சென்றவளவில்), **सुमनोहरे** - மிகவும் அழகான, **कस्मिंश्चित् वसन्ते** - ஒரு வஸந்த ருதுவானது, **समनुप्राप्ते (सति)** - ஆரம்பித்தவளவில், **राज्ञः** - அரசனுக்கு, **यष्टुं** - யாகம் செய்ய, **मनः** - எண்ணம், **अभवत्** - உண்டாயிற்று.

2. (ப - ரை) **ततः** - பிறகு, **देववर्णिनम्** - தேவதைகளின் தேஜஸ்போன்ற தேஜஸ்ஸையுடைய, **तं विप्रं** - அந்த ப்ராம்மணனை, **शिरसा** - தலையினால், **प्रसाद्य** - வணங்கிக்கேட்டுக்கொண்டு, **कुलस्य** - குலத்தினுடைய, **सन्तानार्थं** - அபிவிருத்திக்காக, **यज्ञाय** - யாகத்தின் பொருட்டு, **वरयामास वै** - வரித்தார்.

3. (ப - ரை) **सुसत्कृतः** - நன்றாக ஸத்காரம் செய்யப்பட்ட, **सञ्च** - அவரும், **राजानं** - அரசனைப்பார்த்து, **तथा इति च** - அப்படியே ஆகட்டுமென்றும், **संभाराः** - ஸாமக்ரிகள், **संभ्रियन्तां** - சேர்க்கப்படவேண்டும், **ते** - உன்னுடைய, **तुरगः च** - குதிரையும், **विमुच्यताम्** - விடப்படவேண்டும் (என்றும்) **उवाच** - சொன்னார்.

---

1. (பொ - ரை) பிறகு, நெடுநாள் சென்று, மலிம்லுசம் முதலாகிய தோஷமில்லாததும், மிகவும் அழகானதுமான வஸந்த ருது வந்தவுடனே, அரசன் யாகம் செய்ய வேணுமென்று எண்ணங் கொண்டார்.

2. (பொ - ரை) பிறகு, தேவர்கள்போல் விளங்கிக்கொண்டிருக்கும் அந்த ப்ராம்மணோத்தமரான ரிச்யச்ருங்கரை, தலையால் வணங்கி அநுக்ரஹம் செய்விப்பித்து, தன் ஸந்ததிக்காக செய்யவேண்டிய யாகத்தில் ப்ரம்மாவாக இருக்கவேண்டுமென்று வரித்தார்.

3. (பொ - ரை) மஹாராஜர், ஸத்காரம் செய்து அந்த ரிச்யச்ருங்கரை இவ்வாறு ப்ரார்த்திக்கும்பொழுது, அவரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டு, யாகத்திற்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேகரிக்கவேண்டும், யாகக் குதிரையும் மந்த்ர ஜபங்கள் செய்து வெளியில் அனுப்பப்படவேண்டுமென்றும் அரசனுக்குச் சொன்னார்.

ततो राजाऽब्रवीद्वाक्यं सुमन्त्रं मन्त्रिसत्तमम् ।
सुमन्त्राऽऽवाहय क्षिप्रमृत्विजो ब्रह्मवादिनः ॥ 4 ॥
सुयज्ञं वामदेवं च जाबालिमथ काश्यपम् ।
पुरोहितं वसिष्ठं च ये चाप्यन्ये द्विजातयः ॥ 5 ॥
ततः सुमन्त्रस्त्वरितं गत्वा त्वरितविक्रमः ।
समानयत्स तान्विप्रान्समस्तान्वेदपारगान् ॥ 6 ॥
तान्पूजयित्वा धर्मात्मा राजा दशरथस्तदा ।
धर्मार्थसहितं युक्तं श्लक्ष्णं वचनमब्रवीत् ॥ 7 ॥

4—5. (ப-ரை) **ततः** - பிறகு, **राजा** - தசரதர், **मन्त्रिसत्तमम्** - மந்த்ரி ச்ரேஷ்டரான, **सुमन्त्रं** - ஸுமந்த்ரரைப் பார்த்து, **हे सुमन्त्र** - ஸுமந்த்ரரே! **ऋत्विजः** - ரித்விக்குக்களையும், **ब्रह्मवादिनः** - வேதபாராயணம் செய்பவர்களையும், **सुयज्ञं** - ஸுயஜ்ஞரையும், **वामदेवं च** - வாமதேவரையும், **जाबालिं** - ஜாபாலியையும், **अथ** - பிறகு, **काश्यपम्** - காச்யபரையும், **पुरोहितं** - புரோஹிதரான, **वसिष्ठं च** - வஸிஷ்டரையும், **ये च** - யாவர் சில, **अन्ये** - மற்றவர்களான, **द्विजातयः अपि** - ப்ராம்மணார்களிருக்கிறார்களோ, (**तान् अपि** - அவர்களையும்) **क्षिप्रं** - சீக்கிரமாக, **आवाहय** - அழைத்து வாரும், **इति** - என்று, **वाक्यं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

6. (ப-ரை) **ततः** - பிறகு, **सः सुमन्त्रः** - அந்த ஸுமந்த்ரரும், **त्वरितविक्रमः** - வேகமான நடையுள்ளவராய், **त्वरितं** - பரபரப்புடன், **गत्वा** - சென்று, **वेदपारगान्** - வேதங்களின் கரைகண்டவர்களான, **तान् विप्रान्** - அந்த ப்ராம்மணர்களை, **समस्तान्** - ஒன்று சேர்த்து, **समानयत्** - அழைத்து வந்தார்.

7. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **धर्मात्मा** - தர்மிஷ்டரான, **दशरथः राजा** - தசரத மஹாராஜர், **तान्** - அவர்களை, **पूजयित्वा** - பூஜித்து, **धर्मार्थसहितं** -

---

4—5. (பொ-ரை) பிறகு, தசரத மஹாராஜர் ஸுமந்த்ரரை அழைத்து, ஸுமந்த்ரரே! ரித்விக்குக்களையும், வேதபாராயணம் செய்பவர்களையும், ஸுயஜ்ஞரையும், வாமதேவரையும், ஜாபாலியையும், காச்யபரையும், புரோஹிதரான வஸிஷ்ட மஹரிஷியையும், இன்னும் மற்ற ப்ராம்மணோத்தமர்களையும் சீக்கிரம் அழைத்து வாரும் என்று சொன்னார்.

6. (பொ-ரை) பிறகு அந்த ஸுமந்த்ரர் பரபரப்புடன் வேகமாக நடந்து சென்று வேதங்களின் கரை கண்டவர்களான ப்ராம்மணர்கள் எல்லோரையும் ஒன்றுசேர்த்து அழைத்து வந்தார்.

7. (பொ-ரை) அப்பொழுது, தர்மிஷ்டரான தசரத சக்ரவர்த்தியும், வந்தி

मम लालप्यमानस्य पुत्रार्थं नास्ति वै सुखम् ।
तदर्थं हयमेधेन यक्ष्यामीति मतिर्मम ॥ 8 ॥

तदहं यष्टुमिच्छामि शास्त्रदृष्टेन कर्मणा ।
ऋषिपुत्रप्रभावेन कामान्प्राप्स्यामि चाप्यहम् ॥ 9 ॥

ततः साध्विति तद्वाक्यं ब्राह्मणाः प्रत्यपूजयन् ।
वसिष्ठप्रमुखाः सर्वे पार्थिवस्य मुखाच्च्युतम् ॥ 10 ॥

தர்மத்தோடும், அர்த்தத்தோடும் கூடினதாய், **युक्तं** - பொருத்தமுடையதாய், **श्लक्ष्णं** - ம்ருதுவான, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

8. (ப - ரை) **पुत्रार्थं** - புத்திரனுக்காக, **लालप्यमानस्य** - கதறிக்கொண்டிருக்கிற, **मम** - எனக்கு, **सुखम्** - ஸுகமானது, **न अस्ति वै** - இல்லவேயில்லை, **तदर्थं** - அதற்காக, **हयमेधेन** - அச்வமேத யாகத்தினால், **यक्ष्यामि** - (தேவர்களை) ஆராதனம் செய்யவேண்டும், **इति** - என்று, **मम** - என்னுடைய, **मतिः** - எண்ணம்.

9. (ப ரை) **तत्** - ஆகையால், **अहं** - நான், **शास्त्रदृष्टेन** - சாஸ்த்ரத்தில் காணப்பட்ட, **कर्मणा** - விதியினால், **यष्टुं** - யாகம் செய்ய, **इच्छामि** - விரும்புகிறேன். **ऋषिपुत्रप्रभावेन** - ரிஷிகுமாரரின் ப்ரபாவத்தினால், **अहं** - நான், **कामान् अपि** - ஆசைப்பட்ட புத்ரர்களையும், **प्राप्स्यामि च** - அடையப் போகிறேன்.

10. (ப - ரை) **ततः** - பிறகு, **वसिष्ठप्रमुखाः** - வஸிஷ்டர் முதலான, **सर्वे ब्राह्मणाः** - ப்ராம்மணர்களெல்லோரும், **पार्थिवस्य** - அரசனுடைய, **मुखात्** - முகத்திலிருந்து, **च्युतम्** - புறப்பட்ட, **तत् वाक्यं** - அந்த வார்த்தையை, **साधु इति** - நன்றாயிருக்கிறது என்று, **प्रत्य पूजयन्** - புகழ்ந்து பேசினார்கள்.

ருக்குமவர்களுக்கு பூஜைசெய்து தர்மார்த்தங்களோடு கூடியதாய் ம்ருதுவாய்ப் பொருந்தியதுமான ஒரு வார்த்தை சொன்னார்.

8. (பொ - ரை) நான் நெடு நாளாக ஸந்ததி இல்லை என்று கதறிக் கொண்டிருக்கிறேன், வேறு எவ்வளவு செல்வமிருந்தும் எனக்குக் கொஞ்சமேனும் ஸுகமில்லை, அதற்காக அச்வமேதயாகம் செய்யவேணும் என்று இப்பொழுது எனக்கு எண்ணம் உண்டாயிருக்கிறது.

9. (பொ - ரை) ஆதலால் நான் சாஸ்த்ரத்தில் சொல்லிய விதிப்படி யாகம் செய்ய விரும்புகிறேன். ரிஷிகுமாரரான ரிச்யச்ருங்கர் நடத்திவைத்த யாகப்ரபாவத்தினால் நான் ஆசைப்பட்டபடி புத்திரர்களையும் அடையவேண்டும் என்று சொன்னார்.

10. (பொ - ரை) பிறகு, வஸிஷ்டர் முதலான ப்ராம்மணர்களெல்லோரும், மஹாராஜரின், வாயிலிருந்து புறப்பட்ட அந்த வார்த்தையை, ஸரி என்று புகழ்ந்தார்கள்.

ऋश्यश्रृङ्गपुरोगाश्च प्रत्यूचुर्नृपतिं तदा ।
संभाराः संभ्रियन्तां ते तुरगश्च विमुच्यताम् ॥ 11 ॥

सर्वथा प्राप्स्यसे पुत्रांश्चतुरोऽमितविक्रमान् ।
यस्य ते धार्मिकी बुद्धिरियं पुत्रार्थमागता ॥ 12 ॥

ततः प्रीतोऽभवद्राजा श्रुत्वा तु द्विजभाषितम् ।
अमात्यांश्चाब्रवीद्राजा हर्षेणेदं शुभाक्षरम् ॥ ॥ 13 ॥

11. (ப - ரை) **तदा** - அப்பொழுது, **ऋश्यश्रृङ्गपुरोगाः च** - ரிச்யச்ருங்கர் முதலானவர்களும், **नृपतिं** - அரசனைப்பார்த்து, **संभाराः** - ஸாமக்ரிகள், **संभ्रियन्तां** - சேகரிக்கப்படவேண்டும், **ते** - உம்முடைய, **तुरगः च** - குதிரையும், **विमुच्यताम्** - விடப்படவேண்டும், **इति** - என்று, **प्रत्यूचुः** - பதில் சொன்னார்கள்.

12. (ப - ரை) **यस्य** - யாதொரு, **ते** - உமக்கு, **पुत्रार्थं** - புத்திரன் நிமித்தமாக, **धार्मिकी** - தர்மிஷ்டமான, **इयं बुद्धिः** - இந்த புத்தியானது, **आगता** - வந்திருக்கிறதோ, **(सः त्वं** - அப்படிப்பட்ட நீர்) **सर्वथा** - ஸர்வப்ரகாரத்தாலும், **अमितविक्रमान्** - அளவில்லாத பராக்ரமமுடைய, **चतुरः पुत्रान्** - நான்கு புத்திரர்களை, **प्राप्स्यसे** - அடையப் போகிறீர்.

13. (ப - ரை) **ततः** - பிறகு, **राजा** - அரசன், **तत्** - அந்த, **द्विजभाषितम्** - ப்ராம்மணர்களின் வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **प्रीतः अभवत्** - ப்ரீதி அடைந்தவராக விருந்தார். **राजा** - அரசன், **हर्षेण** - ஸந்தோஷத்தோடு, **अमात्यान्** - மந்த்ரிகளைப்பார்த்து, **शुभाक्षरम्** - அழகான அக்ஷரங்களையுடைய, **इदंच** - இந்த வார்த்தையையும், - **अब्रवीत्** - சொன்னார்.

11. (பொ - ரை) ரிச்யச்ருங்கர் முதலானவர்களும், அரசனைப் பார்த்து, மஹாராஜரே ! யாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரிகளை சேகரிப்பதற்காகவும், அச்வமேத யாகக் குதிரையை வெளியில் விடுவதற்காகவும் ஆஜ்ஞாபனம் செய்யும், என்று பதில் சொன்னார்கள்.

12. (பொ - ரை) மஹாராஜரே! புத்திரோத்பத்திக்காக அச்வமேதயாகம் செய்யவேண்டுமென்று இந்த தர்ம புத்தியானது உமக்கு உண்டாயிருக்கிறபடியால் மிகுந்த பராக்ரமமுடைய நான்கு புத்திரர்கள் உமக்கு அவச்யம் பிறக்கப் போகிறார்கள்.

13. (பொ - ரை) பிறகு, அரசன், அந்த ப்ராம்மணர்களின் வார்த்தையைக்கேட்டு, ஸந்தோஷத்துடன் மந்த்ரிகளைப் பார்த்து அழகான சப்தங்களுடன் இவ்வாறு சொன்னார்.

गुरूणां वचनाच्छीघ्रं संभाराः संभ्रियन्तु मे ।
समर्थाधिष्ठितश्चाश्वः सोपाध्यायो विमुच्यताम् ॥ १४ ॥

सरय्वाश्चोत्तरे तीरे यज्ञभूमिर्विधीयताम् ।
शान्तयश्चाभिवर्धन्तां यथाकल्पं यथाविधि ॥ १५ ॥

शक्यः कर्तुमयं यज्ञः सर्वेणापि महीक्षिता ।
नापराधो भवेत्कष्टो यद्यस्मिन् क्रतुसत्तमे ॥ १६ ॥

14. (ப - ரை) **मे** - என்னுடைய, **गुरूणां** - குருக்களின், **वचनात्** - வார்த்தையினால், **शीघ्रं** - சீக்கிரமாக, **संभाराः** - ஸாமக்ரிகளும், **संभ्रियन्तु** - சேகரிக்கப்பட வேண்டும், **अश्वः** - குதிரையும், **समर्थाधिष्ठितः** - ஸமர்த்தர்களால் ரக்ஷிக்கப்பட்டு, **सोपाध्यायः** - உபாத்யாயர்களோடு கூடியதாயும், **विमुच्यताम्** - விடப்படவேண்டும்.

15. (ப - ரை) **सरय्वाः** - ஸரயூ நதியினுடைய, **उत्तरे तीरे** - வடகரையில், **यज्ञभूमिः च** - யாகபூமியும், **विधीयताम्** - ஏற்படுத்தப்படவேண்டும். **शान्तयः च** - சாந்தி கர்மங்களும், **यथाविधि** - சாஸ்த்ரப்ரகாரம், **यथाकल्पं** - க்ரமப்படி, **अभिवर्धन्तां** - நடத்தப்படவேண்டும்.

16. (ப - ரை) **अस्मिन्** - இந்த, **क्रतुसत्तमे** - உத்தமமான யாகத்தில், **कष्टः** - வருத்தப் படுத்தக்கூடிய, **अपराधः** - தவறுதலானது, **न भवेत् यदि** - உண்டாகாமலிருக்குமேயானல், **अयं यज्ञः** - இந்த யாகமானது, **सर्वेण अपि महीक्षिता** - எல்லா அரசராலும், **कर्तुं** - செய்வதற்கு, **शक्यः** - முடியும்.

14. (பொ - ரை) நம் குருக்களுடைய உத்திரவுப்படி, நடக்கப்போகும் யாகக் குதிரையை விடுவதற்கு வேண்டிய ஸாமக்ரிகளை சீக்கிரமாக சேகரிக்க வேண்டும். அச்வமேத குதிரையையும் ஸமர்த்தர்களான நாலு ராஜ குமாரர்களால் ரக்ஷிக்கப் படட்டும், நான்கு புரோஹிதர்களோடு கூடியதாகவும் அனுப்பப்பட வேண்டும்.

15. (பொ - ரை) ஸரயூ நதியின் வடகரையில் யாகம் செய்வதற்காக இடம் ஏற்படுத்தவேண்டும். அங்கு சாந்தி கர்மங்களும் சாஸ்த்ர விதிப்படி ப்ரயோகங்களை அனுஸரித்து நடத்தப்பட வேண்டும்.

16. (பொ - ரை) சிறந்ததான இந்த யாகத்தில் மனதிற்கு வருத்தத்தை உண்டு பண்ணக்கூடிய தவறுதல் ஒன்று மாத்திரம் நேராத பக்ஷத்தில் இந்த யாகத்தை க்ஷத்ரியர்கள் எல்லோருமே செய்துமுடித்து விடுவார்கள்.

छिद्रं हि मृगयन्तेऽत्र विद्वांसो ब्रह्मराक्षसाः ।
विघ्नितस्य हि यज्ञस्य सद्यः कर्ता विनश्यति ॥ 17 ॥

तद्यथा विधिपूर्वं मे क्रतुरेष समाप्यते ।
तथा विधानं क्रियतां समर्थाः करणेष्विह ॥ 18 ॥

तथेति च ततः सर्वे मन्त्रिणः प्रत्यपूजयन् ।
पार्थिवेन्द्रस्य तद्वाक्यं यथाऽऽज्ञप्तमकुर्वत ॥ 19 ॥

17. (ப - ரை) **अत्र** - இந்த யாகத்தில், **विद्वांसः** - பண்டிதர்களான, **ब्रह्मराक्षसाः** - ப்ரம்ம ராக்ஷஸர்கள், **छिद्रं** - குற்றத்தை, **मृगयन्ते हि** - தேடுகின்றார்கள் அல்லவா, **यज्ञस्य** - யாகமானது, **विघ्नितस्य (सतः)** - தடைப்பட்டவளவில், **कर्ता** - யாகம் செய்யும் எஜமானன், **सद्यः** - உடனே, **विनश्यति** - நாசமடைகிறான்.

18. (ப - ரை) **तत्** - ஆகையால், **मे** - என்னுடைய, **एषः क्रतुः** - இந்த யாகமானது, **विधिपूर्वं** - சாஸ்த்ரத்தை முன்னிட்டு, **यथा** - எவ்விதம், **समाप्यते** - முடிவு பெறுமோ, **तथा** - அப்படி, **विधानं** - ப்ரயத்னமானது, **क्रियतां** - (உங்களால்) செய்யப்படவேண்டும். **(यूयं** - நீங்கள்) **इह करणेषु** - யாகம் செய்யும் விஷயத்தில், **समर्थाः** - ஸமர்த்தர்களல்லவா !

19. (ப - ரை) **ततः** பிறகு, **सर्वे मन्त्रिणः** - மந்த்ரிகளெல்லோரும், **पार्थिवेन्द्रस्य** - ராஜ ராஜனுடைய, **तत् वाक्यं** - அந்த வார்த்தையை, **तथा इति** - அப்படியே என்று, **प्रत्यपूजयन्** - அனுமோதித்தார்கள், **यथाऽऽज्ञप्तम्** - அரசனுடைய உத்திரவுப்படி, **अकुर्वत च** - செய்தார்கள்.

17. (பொ - ரை) இந்த யாகத்தில் பண்டிதர்களான அநேகம் ப்ரம்ம ராக்ஷஸர்கள், ஏதுவாகிலும் குற்றத்தைத் தேடிக்கொண்டேயிருந்து, யாகத்தைக் கெடுத்து விடுவார்கள். அவ்வாறு யாகம் கெட்டுவிட்டால் யஜமானனும் உடனே கெட்டு விடுவான்.

18. (பொ - ரை) ஆதலால் நான் இப்பொழுது ஆரம்பிக்கப்போகின்ற யாகமானது, சாஸ்த்ரமுறை தவறாமல் எவ்வாறு முடிவு பெறுமோ அதற்கு வேண்டிய ப்ரயத்னத்தைச் செய்யவேண்டும். ஏனென்றால், இப்படிப்பட்ட காரியங்களை செவ்வையாக நடத்தி வைப்பதில் நீங்கள் ஸமர்த்தர்களல்லவா !

19. (பொ - ரை) மந்த்ரிகளெல்லோரும், தசரத மஹாராஜருடைய அந்த வார்த்தையைக் கேட்டு, ரொம்பவும் நன்றாயிருக்கிறதென்று புகழ்ந்து அவர் உத்திரவுப்படி காரியங்களையும் செய்தார்கள்.

ततो द्विजास्ते धर्मज्ञमस्तुवन्पार्थिवर्षभम् ।
अनुज्ञातास्ततः सर्वे पुनर्जग्मुर्यथागतम् ॥ 20 ॥

गतेष्वथ द्विजाग्र्येषु मन्त्रिणस्तान्नराधिपः ।
विसर्जयित्वा स्वं वेश्म प्रविवेश महाद्युतिः ॥ 21 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
द्वादशः सर्गः ॥ 12 ॥

20. (ப - ரை) **ततः** - *பிறகு,* **ते द्विजाः** - *அந்த ப்ராம்மணர்கள்,* **धर्मज्ञं** - *தர்மம் தெரிந்தவரான,* **पार्थिवर्षभम्** - *ராஜச்ரேஷ்டனை,* **अस्तुवन्** - *ஸ்தோத்திரம் செய்தார்கள்.* **ततः** - *பிறகு,* **सर्वे** - *அனைவரெல்லோரும்,* **अनुज्ञाताः सन्तः** - *(அரசரால்) அனுமதி செய்யப்பட்டவர்களாய்,* **यथागतम्** - *வந்த ப்ரகாரமாகவே,* **पुनः जग्मुः** - *திரும்பிச் சென்றார்கள்.*

21. (ப - ரை) **अथ** - *பிறகு,* **द्विजाग्र्येषु** - *ப்ராம்மணோத்தமர்கள்,* **गतेषु (सत्सु)** - *புறப்பட்டுப்போனவளவில்,* **नराधिपः** - *அரசன்,* **तान् मन्त्रिणः** - *அந்த மந்த்ரிகளை,* **विसर्जयित्वा** - *அனுப்பிவிட்டு,* **महाद्युतिः (सन्)** - *மிகவும் ப்ரகாசமுடையவராய்,* **स्वं वेश्म** - *தம்முடைய அந்தப்புரத்தை,* **प्रविवेश** - *ப்ரவேசித்தார்.*

20. *(பொ - ரை) பிறகு, அந்த ப்ராம்மணர்கள் எல்லா தர்மங்களையும் அறிந்தவரான தசரத மஹாராஜனை ஸ்தோத்திரம் செய்துவிட்டு அவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எல்லோரும் தங்கள் இடம் சென்றார்கள்.*

21. *(பொ - ரை) பிறகு, ப்ராம்மணோத்தமர்கள் புறப்பட்டுப் போனபின் அரசன், மந்த்ரிகளையும் அனுப்பிவிட்டு, மிகவும் ஸந்தோஷத்துடன் தன்னுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார்.*

त्रयोदशः सर्गः ॥ 13 ॥

पुनः प्राप्ते वसन्ते तु पूर्णः संवत्सरोऽभवत् ।
प्रसवार्थं गतो यष्टुं हयमेधेन वीर्यवान् ॥ ॥ 1 ॥
अभिवाद्य वसिष्ठं च न्यायतः प्रतिपूज्य च ।
अब्रवीत्प्रश्रितं वाक्यं प्रसवार्थं द्विजोत्तमम् ॥
यज्ञो मे क्रियतां विप्र यथोक्तं मुनिपुंगव । ॥ 2 ॥
यथा न विघ्नः क्रियते यज्ञाङ्गेषु विधीयताम् ॥ 3 ॥
भवान्स्निग्धः सुहृन्मह्यं गुरुश्च परमो महान् ।
वोढव्यो भवता चैव भारो यज्ञस्य चोद्यतः ॥ 4 ॥

1. (ப - ரை) **पुनः** - பிறகு, **वसन्ते** - வஸந்த ருதுவானது, **प्राप्ते तु** - வந்தவளவில், **संवत्सरः** - வருஷமானது, **पूर्णः अभवत्** - பூர்ணமாக ஆயிற்று, **वीर्यवान्** - வீர்யமுடையவரான மஹாராஜர், **प्रसवार्थं** - ஸந்ததி நிமித்தமாக, **हयमेधेन** - அச்வமேத யாகத்தினால், **यष्टुं** - (தேவர்களை) ஆராதிப்பதற்காக, **गतः** - சென்றார்.

2. (ப - ரை) **वसिष्ठं** - வஸிஷ்டரிஷியை, **अभिवाद्य च** - அபிவாதனமும் செய்து, **न्यायतः** - சாஸ்த்ரப்படி, **प्रतिपूज्य च** - பூஜித்து, **प्रश्रितं** - வணக்கத்துடன், **द्विजोत्तमम्** - ப்ராம்மணோத்தமரான வஸிஷ்டரைப்பார்த்து, **हे विप्र** - ப்ராம்மணோத்தமரே, **मुनिपुंगव** - முனிச்ரேஷ்டரே, **प्रसवार्थं** - ஸந்ததிக்காக (ஆரம்பிக்கப்பட்ட) **मे यज्ञः** - என்னுடைய யாகமானது, **यथोक्तं** - சாஸ்த்ரத்தில் சொல்லியபடி, **क्रियतां** - செய்யப்படவேண்டும், **इति** - என்று, **वाक्यं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

3. (ப - ரை) **यज्ञाङ्गेषु** - யாகத்தின் அங்கங்களில், **यथा** - எவ்வாறு, **विघ्नः** - இடையூறு, **न क्रियते** - (இராக்ஷஸர்களால்) செய்யப்படாமலிருக்குமோ, (**तथा** - அவ்வாறு), **विधीयताम्** - (உம்மால்) செய்யப்படவேண்டும்.

4. (ப - ரை) **भवान्** - நீர், **मह्यं** - எனக்கு, **स्निग्धः सुहृत्** - இடைவிடாத

1. (பொ - ரை) மறுபடி வஸந்த ருது வந்தது. முன் ஸம்வத்ஸரமும் பூரணமாகிவிட்டது. அரசனும், அதிக உத்ஸாகத்துடன் புத்திரோத்பத்திக்கு வேண்டி அச்வமேதயாகம் செய்வதற்காக தேவயஜனம் சென்றார்.

2. (பொ - ரை) வஸிஷ்டரை தண்டனிட்டு சாஸ்த்ர ப்ரகாரம் பூஜித்து அவரைப் பார்த்து ஸ்வாமி ப்ராம்மணோத்தமரே! முனிச்ரேஷ்டரே! ஸந்ததிக்காக இப்பொழுது நான் ஆரம்பித்த இந்த யெஜ்ஞத்தை சாஸ்த்ரப்படி தவறாமல் நடத்திக் கொடுக்கவேண்டுமென்று வணக்கத்துடன் வஸிஷ்டரிடம் அரசன் ப்ரார்த்தித்தார்.

3. (பொ - ரை) யாகத்தின் அங்கங்களான த்ரவ்யம், தேவதை, கர்ம இவைகள் முதலானவைகளில், ப்ரம்மராக்ஷஸர்களால் விக்னம் ஏற்படாமலிருக்கும்படி செய்யவேண்டும்.

4. (பொ - ரை) ஏனென்றால், நீர் வெகு காலமாக ஒரு நாளும் குறைவில்லா

तथेति च स राजानमब्रवीद्द्विजसत्तमः ।
करिष्ये सर्वमेवैतद्भवता यत्समर्थितम् ॥ 5 ॥
ततोऽब्रवीद्द्विजान्वृद्धान्यज्ञकर्मसु निष्ठितान् ।
स्थापत्ये निष्ठितांश्चैव वृद्धान्परमधार्मिकान् ॥ 6 ॥
कर्मान्तिकाञ्शिल्पकारान्वर्धकीन्खनकानपि ।
गणकाञ्शिल्पिनश्चैव तथैव नटनर्तकान् ॥
तथा शुचीन् शास्त्रविदः पुरुषान्सुबहुश्रुतान् ॥ 7 ॥
यज्ञकर्म समीहन्तां भवन्तो राजशासनात् ।
इष्टका बहुसाहस्राः शीघ्रमानीयतामिति ॥ 8 ॥

ஸ்நேஹமுள்ள தோழர், **परमः** - (மற்றவர்களைக் காட்டிலும்) மேற்பட்டவர், **महान् गुरुः** - மஹா குருவாகவுமிருக்கிறீர், **अतः** - ஆகையால், **उद्यतः** - ஆரம்பிக்கப்பட்ட, **यज्ञस्य** - யாகத்தினுடைய, **भारः** - சுமை, **भवता एव** - உம்மாலேயே, **वोढव्यः च** - சுமக்கத்தகுந்தது.

5. (ப - ரை) **सः द्विजसत्तमः** - அந்த ப்ராம்மணோத்தமர், **राजानं** - அரசனைப் பார்த்து, **तथा** - அப்படியே, **भवता** - உம்மால், **यत्** - யாதொன்று, **समर्थितम्** - நன்றாகப் ப்ரார்த்திக்கப்பட்டதோ, **एतत् सर्वं एव** - இது முழுவதையுமே, **करिष्ये** - செய்கின்றேன், **इति** - என்று, **अब्रवीत्** - சொன்னார்.

6—7—8. (ப - ரை) **ततः** - பிறகு, **यज्ञकर्मसु** - யாகக் காரியங்களில், **निष्ठितान्** - முன்னமே அரசனால் ஏவப்பட்ட, **वृद्धान्** - கிழவர்களான, **द्विजान्** - ப்ராம்மணர்களையும், **स्थापत्ये** - அந்தந்த வஸ்துக்களை ஸேகரிக்கும் அதிகாரத்தில், **निष्ठितान्** - ராஜாவினால் முன்னமே ஏவப்பட்ட, **परमधार्मिकान्** - மிகவும் தர்மிஷ்டர்களான,

மல் என்னிடம் ஸ்நேஹமுள்ளவர், வாஸிஷ்டர் முதலான மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர், இப்பொழுது யாகத்தை நடத்துபவராயுமிருக்கிறீர். ஆகையால் இப்பொழுது நான் ஆரம்பித்திருக்கிற இந்த யாகத்தின் ஸம்பந்தமான நடத்தவேண்டும் பாரம் உம்மையே சேர்ந்தது, இந்த யாகத்தில் நீர் ருத்விக்காக இருக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்.

5. (பொ - ரை) அந்த ப்ராம்மணோத்தமரான வஸிஷ்டரும், அரசனைப் பார்த்து, ப்ரபோ! நீர் என்னிடம் எதைப் ப்ரார்த்தித்துக் கொண்டீரோ, அதை முழுவதையுமே, அப்படியே செய்கிறேன் என்று சொன்னார்.

6—7—8. (பொ - ரை) பிறகு, வஸிஷ்டர், யாககாரியங்களில் முன்னமே அரசனால் ப்ரார்த்திக்கப்பட்ட, கிழவர்களான ப்ராம்மணர்களையும் யாகத்திற்குவேண்டிய அந்தந்த வஸ்துக்களைக் கேட்டபொழுது கொடுக்கும் அதிகாரத்தில் அரசனால் முன்னமே குறிக்கப்பட்ட, பரம தார்மிஷ்டர்களான, கிழவர்களை

औपकार्याः क्रियन्तां च राज्ञां बहुगुणान्विताः ।
ब्राह्मणावसथाश्चैव कर्तव्याः शतशः शुभाः ॥ 9 ॥
भक्ष्यान्नपानैर्बहुभिः समुपेताः सुनिष्ठिताः ॥ 9½ ॥

वृद्धान् - பெரியோர்களையும், **कर्मान्तिकान्** - வேலைசெய்து முடிக்கின்றவர்களையும், **शिल्पकरान्** - செங்கல் வேலைக்காரர்களையும், **वर्धकीन्** - தச்சவேலைக்காரர்களையும், **खनकान् अपि** - கிணர் முதலானது வெட்டுகிறவர்களையும், **गणकान्** - கணக்கு எழுதுகிறவர்களையும், **शिल्पिनः च एव** - சித்திரவேலைக்காரர்களையும், **तथा एव** - அவ்விதமாகவே, **नटनर्तकान्** - ரஸங்களை அபிநயம் செய்கிறவர்களையும், பாவங்களை அபிநயம் செய்கிறவர்களையும், **तथा** - அவ்வாறு, **शुचीन्** - சுத்தர்களான, **शास्त्रविदः** - ப்ரயோகங்களை அறிந்தவர்களாயும், **सुबहुश्रुतान्** - நன்றாக பல சாஸ்த்ரங்களை தெரிந்தவர்களான, **पुरुषान्** - புருஷர்களையும் (பார்த்து), **भवन्तः** - நீங்கள், **राजशासनात्** - அரசனுடைய உத்திரவினால், **यज्ञकर्म** - யாக கார்யத்தை, **समीहन्तां** - ஆரம்பிக்கவேண்டும், **बहुसाहस्रा** - அநேக ஆயிரக்கணக்கான, **इष्टका** - செங்கல், **शीघ्रं** - சீக்கிரமாக, **आनीयताम्** - கொண்டுவரப்படவேண்டும், **इति** - என்று, **अब्रवीत्** - சொன்னார்.

9—9½. (ப - ரை) **राज्ञां** - அரசர்களுக்கு, **बहुगुणान्विताः** - அநேக குணங்களோடு கூடியதான, **औपकार्याः** - கூடாரங்கள், **क्रियन्तां** - செய்யப்படவேண்டும், **बहुभिः** - அதிகங்களான, **भक्ष्यान्नपानैः** - பக்ஷ்யங்களோடும், அன்னங்களோடும், பானங்களோடும் கூடியதாய், **सुनिष्ठिताः** - திடமாகவும், **शुभाः** - அழகாகவுமிருக்கின்ற, **ब्राह्मणावसथाः** - ப்ராம்மணர்களுக்கு வீடுகள், **शतशः** - அநேகங்கள், **कर्तव्याः** - செய்யத் தகுந்தவைகள்.

யும், வேலைகளைச் செய்துமுடித்து கூலிவாங்குகின்ற கூலிக்காரர்களையும், செங்கல் சுண்ணாம்பு முதலியவைகளைச் செய்கிறவர்களையும், தச்ச வேலைக்காரர்களையும், மண்வெட்டி வேலைக்காரர்களையும், கணக்கு எழுதும் குமஸ்தாக்களையும், சித்திரம் எழுதுவது முதலான கைத்தொழிலாளிகளையும், சிருங்காரம் முதலான ரஸங்களை அபிநயம் செய்கிறவர்களையும், பிறர்களுடைய மனோபிப்ராயத்தை அபிநயம் செய்கிறவர்களையும், சாஸ்த்ரங்களின் ப்ரயோகங்களை அறிந்தவர்களாய் நன்றாக பல சாஸ்த்ரங்களைப் படித்தவர்களாய், சுத்தர்களான மனிதர்களையும் பார்த்து நீங்கள் அரசருடைய உத்திரவுப்படியாக கார்யம் ஆரம்பிக்கவேண்டும். அநேகம் ஆயிரக் கணக்கான செங்கல்களை நீங்கள் கொண்டுவரவேண்டுமென்றும் ஆஜ்ஞாபித்தார்.

9—9½. (பொ - ரை) யாகத்திற்காக வருகின்ற அரசர்களுக்கு உயர்ந்ததாயும் விசாலமாயும் காற்றுள்ளதுமான அழகான விடுதிகளும் செய்யவேண்டும். அநேகம் ப்ராம்மணர்களும் வருவார்கள். அவர்கள் தங்குவதற்காக பலவித பக்ஷணங்களோடும், அன்ன வ்யஞ்ஜனங்களோடும், நீர்மோர், பானகம் முதலியவைகளால் நிறைந்தும், காற்று, மழை இவைகளுக்கு அசையாததுமான அநேகம் வீடுகளும் உண்டாக்கவேண்டும்.

तथा पौरजनस्यापि कर्तव्या बहुविस्तराः ।
आवासा बहुभक्ष्या वै सर्वकामैरुपस्थिताः ॥ 10½ ॥

तथा जानपदस्यापि जनस्य बहुशोभनम् ।
दातव्यमन्नं विधिवत्सत्कृत्य न तु लीलया ॥ 11½ ॥

सर्ववर्णा यथा पूजां प्राप्नुवन्ति सुसत्कृताः ।
न चावज्ञा प्रयोक्तव्या कामक्रोधवशादपि ॥ 12½ ॥

10½. (ப - ரை) **तथा** - அங்ஙனமே, **पौरजनस्य अपि** - பட்டணத்து ஜனங்களுக்கும், **बहुभक्ष्याः** - அதிக பக்ஷணங்களை யுடையனவாய், **सर्वकामैः** - ஆசைகளுக்கு வேண்டிய எல்லா வஸ்துக்களோடும், **उपस्थिताः** - கூடியவைகளாய், **बहुविस्तराः** - அதிக விஸ்தாரங்களான, **आवासाः** - இருப்பிடங்களும், **कर्तव्याः** - செய்யத் தக்கதுகள்.

11½. (ப - ரை) **तथा** - அங்ஙனமே, **जानपदस्य** - தேசத்திலிருந்து வந்திருக்கிற, **जनस्य अपि** - ஜனங்களுக்கும், **न लीलया तु** - அலக்ஷ்யமாயல்லாமல், **सत्कृत्य** - ஸம்மானம் செய்து, **शोभनम्** - அழகான, **अन्नं** - அன்னமானது, **बहु** - அதிகமாக, **विधिवत्** - சாஸ்த்ரப்படி, **दातव्यं** - கொடுக்கத் தக்கது.

12½. (ப - ரை) **सर्ववर्णाः** - எல்லா வர்ணத்தார்களும், **सुसत्कृताः सन्तः** - நன்றாக மரியாதை செய்யப்பட்டவர்களாய், **यथा** - எப்படி, **पूजां** - கௌரவத்தை, **प्राप्नुवन्ति** - அடைவார்களோ, (**तथा कर्तव्यं** - அப்படிச் செய்யத் தக்கது.) **कामक्रोधवशात् अपि** - ஸ்னேஹத்தினாலும், கோபத்தினாலும், விளையாட்டினாலும், **अवज्ञा** - அநாதரமானது, **न प्रयोक्तव्या** - செய்யத் தக்கதல்ல.

10½. (பொ - ரை) அங்ஙனமே, பட்டணவாஸிகளான ஜனங்களுக்கும் விசேஷமான பக்ஷணங்களோடும், சந்தனம், புஷ்பம் முதலிய வேண்டிய பதார்த்தங்களோடும் கூடியதாகவும் விசாலமான இருப்பிடங்களும் செய்ய வேண்டும்.

11½. (பொ - ரை வெளி தேசத்திலிருந்து வந்திருக்கும் ஜனங்களை அநாதரவாயாவது அலக்ஷ்யம் செய்யாமல், சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவைகளால் மரியாதை செய்து அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகவே சாஸ்த்ர முறை தவறாமல் அன்னம் அளிக்கவேண்டும்.

12½. (பொ - ரை) ப்ராம்மணர் முதல் சூத்ரர் வரையிலுள்ள எல்லா வர்ணத்தாரும் அவரவர்களுக்குத் தகுந்தபடி பூஜை பெறவேண்டும். ஸ்னேஹத்தினாலாவது, கோபத்தினாலாவது, விளையாட்டினாலாவது ஒருவரையும் அவமதிக்கக்கூடாது.

यज्ञकर्मसु ये व्यग्राः पुरुषाः शिल्पिनस्तथा ।
तेषामपि विशेषेण पूजा कार्या यथाक्रमम् ॥ 13½ ॥

ते च स्युः संभृताः सर्वे वसुभिर्भोजनेन च ।
यथा सर्वं सुविहितं न किंचित्परिहीयते ॥ 14½ ॥

तथा भवन्तः कुर्वन्तु प्रीतिस्निग्धेन चेतसा ॥ 15 ॥

13½. (ப - ரை) **ये पुरुषाः** - யாதொரு மனிதர்களோ, **तथा** - அவ்வாறு, **शिल्पिनः** - கைத்தொழிலாளிகளோ, **यज्ञकर्मसु** - யாக காரியங்களில், **व्यग्राः**- பரபரப்புடன் இருக்கிறார்களோ, **तेषां अपि** - அவர்களுக்கும், **विशेषेण** - விசேஷமாக, **यथाक्रमम्** - வயதின் கிரமத்தை அனுஸரித்து, **पूजा** - மரியாதை, **कार्या** - செய்யத் தகுந்தது.

14½—15. (ப - ரை) **ते च** - அவர்கள், **सर्वे** - எல்லோரும், **वसुभिः** - தனங்களாலும், **भोजनेन च** - போஜநத்தினாலும், **संभृताः** - நன்றாக த்ருப்தி அடைந்தவர்களாய், **स्युः** - ஆகவேண்டும், **सर्वं** - எல்லா காரியமும், **यथा** - எப்படி, **सुविहितं** - நன்றாகச் செய்யப்பட்டதாயும், **किंचित्** - கொஞ்சமும், **न परिहीयते** - விடப்படாமலுமிருக்குமோ, **तथा** - அவ்வாறு, **भवन्तः** - நீங்கள், **प्रीतिस्निग्धेन** - ப்ரீதியினால் இளகிய, **चेतसा** -.மனதோடு, **कुर्वन्तु** - செய்யவேண்டும்.

13½. (பொ - ரை) யாக காரியத்தில் கவனமுள்ளவர்களாய் பரபரப்புடன் ஆழ்ந்துகொண்டிருக்குமவர்களுக்கு அவரவர்களின் வயதை அனுஸரித்து விசேஷமான மரியாதை செய்துவரவேண்டும்.

14½—15. (பொ - ரை) அவர்களெல்லோருக்கும், அன்னங்களையும், தனங்களையும் கொடுத்து த்ருப்தி செய்விக்கவேண்டும். யாகத்தில் நடக்க வேண்டிய காரியம் முழுவதும் நன்றாகவே செய்யப்படவேண்டும். ஒன்றுகூட குறைவு வரக்கூடாது. அவ்வாறு நீங்களெல்லோரும் ப்ரீதியுடன் செய்ய வேண்டும்.

ततः सर्वे समागम्य वसिष्ठमिदमब्रुवन् ।
यथोक्तं तत्सुविहितं न किंचित्परिहीयते ॥ 16 ॥
यथोक्तं तत्करिष्यामो न किंचित्परिहीयते ॥ 16½ ॥
ततः सुमन्त्रमानीय वसिष्ठो वाक्यमब्रवीत् ॥ 17 ॥
निमन्त्रयस्व नृपतीन्पृथिव्यां ये च धार्मिकाः ॥ 18 ॥
ब्राह्मणान्क्षत्रियान्वैश्यान्शूद्रांश्चैव सहस्रशः ।
समानयस्व सत्कृत्य सर्वदेशेषु मानवान् ॥ 19 ॥

16—16½. (ப - ரை) **ततः** - பிறகு, **सर्वे** - எல்லோரும், **समागम्य** - வந்து, **वसिष्ठं** - வஸிஷ்டமஹரிஷியைப்பார்த்து, **तत्** - பகவன் சொன்ன காரியம், **यथोक्तं** - நீங்கள் சொல்லியபடி, **सुविहितं** - நன்றாகச் செய்யப்பட்டது, **किंचित्** - கொஞ்சமும், **न परिहीयते** - விடப்படவில்லை, **तत्** - அந்தக் காரியத்தை, **यथोक्तं** - சொல்லியபடி, **करिष्यामः** - இனிமேலும் செய்வோம், **किंचित्** - கொஞ்சமும், **न परिहास्यते** - விடப்படப் போகிறதில்லை, **इति** – என்று, **इदं अब्रुवन्** - இதைச் சொன்னார்கள்.

17—18. (ப - ரை) **ततः** - பிறகு, **वसिष्ठः** - வஸிஷ்டமஹரிஷி, **सुमन्त्रं** - ஸுமந்த்ரரை, **आनीय** - அழைத்து, **पृथिव्यां** - பூமியில், **धार्मिकाः** - தார்மிஷ்டர்களாய், **ये च** - யாதொரு அரசர்கள் (இருக்கிறார்களோ), (**तान्**) **नृपतीन्** - அந்த அரசர்களை, **निमन्त्रयस्व** - நீர் அழைக்கவேண்டும், **इति** - என்று, **वाक्यं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

19. (ப - ரை) **सर्वदेशेषु** - எல்லா தேசங்களிலுமிருக்கிற, **ब्राह्मणान्** - ப்ராம்மணர்களையும், **क्षत्रियान्** - க்ஷத்ரியர்களையும், **वैश्यान्** - வைச்யர்களையும், **शूद्रान् चैव** - சூத்ரர்களையுமிருக்கிற, **सहस्रशः मानवान्** - ஆயிரக்கணக்கான மனிதர்களை, **सत्कृत्य** - வெகுமானம் செய்து, **समानयस्व** - நீர் அழைக்கவேண்டும்.

16—16½. (பொ - ரை) பிறகு எல்லோரும், வஸிஷ்டரிடம் வந்து, ஸ்வாமி! உங்கள் உத்திரவுப்படி எல்லா காரியமும் நன்றாகச் செய்யப்பட்டது, ஒன்றையும் விடவில்லை. இனிமேலும் தங்கள் உத்திரவுப்படி செய்ய காத்திருக்கிறோம், ஒன்றையும் விடப்போகிறதில்லை என்று சொன்னார்கள்.

17—18. (பொ - ரை) பிறகு, வஸிஷ்டமஹரிஷி ஸுமந்த்ரரை அழைத்து, ஸுமந்த்ரரே! இந்தபூமியில் தார்மிஷ்டர்களாகவிருக்கின்ற அரசர்களை வரவழைத்து அழைக்கவேண்டும் என்று சொன்னார்.

19. (பொ - ரை) எல்லா தேசங்களிலுமிருக்கிற ஆயிரக்கணக்கான ப்ராம்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள், சூத்ரர்கள் என்னுமிவர்களை, அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்து அழைக்கவேண்டும்.

मिथिलाधिपतिं शूरं जनकं सत्यविक्रमम् ।
निष्ठितं सर्वशास्त्रेषु तथा वेदेषु निष्ठितम् ॥ 20 ॥

तमानय महाभागं स्वयमेव सुसत्कृतम् ।
पूर्वसंबन्धिनं ज्ञात्वा ततः पूर्वं ब्रवीमि ते ॥ 21 ॥

तथा काशीपतिं स्निग्धं सततं प्रियवादिनम् ।
सद्वृत्तं देवसंकाशं स्वयमेवानयस्व ह ॥ 22 ॥

20—21. (ப-ரை) **शूरं** - சூரராயும், **सत्यविक्रमम्** - ஸத்யமான பராக்ரமமுடையவராயும், **सर्वशास्त्रेषु** - எல்லா சாஸ்த்ரங்களிலும், **निष्ठितम्** - தேர்ச்சியுடையவராயும், **तथा** - அவ்வாறே, **वेदेषु** - வேதங்களில், **निष्ठितं** - நிலைநின்றவராயும், **महाभागं** - பெரும் பாக்யமுடையவராயும், **तं** - உலகமெல்லாம் ப்ரஸித்தருமான, **मिथिलाधिपतिं** - மிதிலா நகரத்திற்கு அதிபதியான, **जनकं** - ஜனக மஹாராஜரை, **स्वयं एव** - நீரே சென்று, **सुसत्कृतं** - நன்றாக வெகுமதிக்கப்பட்டவராய், **आनय** - அழைத்து வாரும், **पूर्वसंबन्धिनं** - நெடுநாளாக ஸ்நேஹ ஸம்பந்தமுடையவராக, **ज्ञात्वा** - அறிந்து, **ततः** - முன் சொன்ன அரசர்களைக் காட்டிலும், **पूर्वं** - முன்னமே, **ते** - உமக்கு, **ब्रवीमि** - சொல்லுகிறேன்.

22. (ப-ரை) **तथा** - அவ்வாறாகவே, **स्निग्धं** - நம்மிடம் ஸ்நேஹமுடையவராய், **सततं** - எப்பொழுதும், **प्रियवादिनम्** - ப்ரியமாகப் பேசும் ஸ்வபாவமுடையவராய், **सद्वृत्तं** - ஸதாசாரமுடையவராய், **देवसंकाशं** - தேவர்களுக்கு ஒப்பானவருமான, **काशीपतिं** - காசிநகரத்து அரசனை, **स्वयं एव** - நீரே நேரில் சென்று, **आनयस्व ह** - அழைக்க வேண்டும்.

20—21. (பொ-ரை) சூரராய், ஸத்யமான பராக்கிரமமுடையவராய், ஸகல சாஸ்த்ரமும் தெரிந்தவராய், வேதங்களிற் சொல்லியபடி கர்மானுஷ்டானங்களில் நிலைநின்றவராய், மஹாபாக்யசாலியான மிதிலா நகரத்தின் அரசனான ஜனகமஹாராஜரிடம் நீரே நேரில் சென்று, நல்ல மரியாதையுடன் அவரை அழைத்து வரவேண்டும். அவர் பழைய காலத்து ஸ்நேஹிதராதலால் எல்லா அரசர்களுக்கும் முன்னமே அழைத்து வரவேண்டுமென்று உமக்கு நான் சொல்லுகிறேன்.

22. (பொ-ரை) அவ்விதமே, நமக்கு மிகவும் தோழராய் எப்பொழுதும் இனிதாகப் பேசும் ஸ்வபாவமுடையவராய், ஸதாசாரமுடையவராய் தேவர்களுக்கு ஒப்பானவருமான காசி ராஜாவிடம் நீரே நேரில் சென்று அவரை அழைத்துவர வேண்டும்.

तथा केकयराजानं वृद्धं परमधार्मिकम् ।
श्वशुरं राजसिंहस्य सपुत्रं त्वमिहाऽऽनय ॥ २३ ॥

अङ्गेश्वरं महाभागं रोमपादं सुसत्कृतम् ।
वयस्यं राजसिंहस्य समानय यशस्विनम् ॥ २४ ॥

प्राचीनान्सिन्धुसौवीरान्सौराष्ट्रेयांश्च पार्थिवान् ।
दाक्षिणात्यान्नरेन्द्रांश्च समस्तानानयस्व ह ॥ २५ ॥

---

23. (ப - ரை) **तथा** - அவ்வாறே, **वृद्धं** - விருத்தராயும், **परमधार्मिकम्** - மிகவும் தர்மிஷ்டராயும், **राजसिंहस्य** - (சிம்ஹமான) மஹாராஜருக்கு, **श्वशुरं** - மாமனாருமான, **केकयराजानं** - கேகய மஹாராஜனை, **सपुत्रं** - புத்திரர்களோடு [illegible], **इह** - இங்கு, **त्वं** - நீரே, **आनय** - அழைத்துவாரும்.

24. (ப - ரை) **महाभागं** - மஹாபாக்யமுடையவராய், **यशस्विनम्** - கீர்த்தியுடையவராய், **राजसिंहस्य** - மஹாராஜருக்கு, **वयस्यं** - [illegible], **अङ्गेश्वरं** - அங்க தேசத்திற்கு அரசனை, **तं रोमपादं** - அந்த ரோமபாதனை, **सुसत्कृतम्** - நன்றாய் ஸத்காரம் செய்யப்பட்டவராக, **आनय** - அழைத்துவாரும்.

25. (ப - ரை) **प्राचीनान्** - கிழக்கு தேசத்தி[illegible], **सिन्धु सौवीरान्** - ஸிந்து தேசத்தையும், ஸௌவீர தேசத்தி[illegible], **सौराष्ट्रेयान्** - ஸௌராஷ்ட்ர தேசத்திலிருக்கின்ற [illegible], **पार्थिवान् च** - [illegible]களையும், **दाक्षिणात्यान्** - தெற்கு தேசத்திலிருக்கின்ற, **समस्तान् नरेन्द्रान् च** - எல்லா அரசர்களையும், **आनयस्व ह** - அழைத்து வாரும்.

23. (பொ - ரை) அவ்வாறே, [illegible] மஹா ராஜருக்கு மாமனாரான கேகய மஹாராஜனையும் [illegible] புத்திரர்களோடு கூட, நீரே நேரில் சென்று அழைத்துவாரும்.

24. (பொ - ரை) மஹாபாக்யசாலியா[illegible], [illegible], அங்க தேசத்திற்கு அரசனான ரோமபாதர், நம் மஹாராஜருக்கு [illegible], அவரையும் நீரே நேரில் சென்று [illegible] அழைத்து[illegible].

25. (பொ - ரை) கிழக்கு தேசத்திலும், ஸிந்து, ஸௌவீர, ஸௌராஷ்ட்ர தேசங்களிலுமிருக்கும் அரசர்களையும், தெற்கு தேசத்திலிருக்கின்ற [illegible] எல்லோரையும் அழைத்து வாரும்.

सन्ति स्निग्धाश्च ये चान्ये राजानः पृथिवीतले ।
तानानय यथा क्षिप्रं सानुगान्सहबान्धवान् ॥ 26 ॥
वसिष्ठवाक्यं तच्छ्रुत्वा सुमन्त्रस्त्वरितस्तदा ।
व्यादिशत्पुरुषांस्तत्र राज्ञामानयने शुभान् ॥ 27 ॥
स्वयमेव हि धर्मात्मा प्रययौ मुनिशासनात् ।
सुमन्त्रस्त्वरितो भूत्वा समानेतुं महीक्षितः ॥ 28 ॥

26. (ப - ரை) **पृथिवीतले** - பூமண்டலத்தில், **अन्ये राजानः** - மற்ற அரசர்கள், **ये** - எவர்கள், **स्निग्धाः** - ஸ்நேஹிதர்களாக, **सन्ति** - இருக்கிறார்களோ, **तान्** - அவர்களையும், **सानुगान्** - அவரவர்கள் பரிவாரங்களுடனும், **सबान्धवान्** - பந்துக்களுடனும், **यथा क्षिप्रं** - சீக்கிரமாகவே, **आनय** - அழைத்துவாரும்.

27. (ப - ரை) **तदा** - அப்பொழுது, **सुमन्त्रः** - ஸுமந்த்ரர், **तत् वसिष्ठवाक्यं** - அந்த வஸிஷ்டருடைய வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **तत्र** - அங்கு, **राज्ञां** - அரசர்களுடைய, **आनयने** - அழைப்பதில், **शुभान्** - அந்தரங்கர்களான, **पुरुषान्** - மனிதர்களை, **त्वरितः** - பரபரப்பு உடையவராய், **व्यादिशत्** - ஆஜ்ஞாபித்தார்.

28. (ப - ரை) **धर्मात्मा** - தர்மிஷ்டரான, **सुमन्त्रः** - ஸுமந்த்ரர், **महीक्षितः** - (சில) அரசர்களை, **समानेतुं** - அழைத்துவருவதற்காக, **मुनिशासनात्** - வஸிஷ்ட மஹரிஷியின் ஆஜ்ஞையால், **त्वरितः भूत्वा** - பரபரப்புடையவர் ஆகி, **स्वयं एव हि** - தானாகவே, **प्रययौ** - சென்றார்.

---

26. (பொ - ரை) இவர்கள் தவிர இந்த பூமண்டலத்தில் இருக்கும் நமக்கு ஸ்நேஹிதர்களான மற்ற அரசர்களையும், அவரவர்கள் பரிவாரங்களோடும், பந்துக்களோடும் சீக்கிரமாக அழைத்துவாரும்.

27. (பொ - ரை) அப்பொழுது, வஸிஷ்டருடைய வார்த்தையைக் கேட்டு, ஸுமந்த்ரரும், பரபரப்புடன் யாகத்திற்காக அரசர்களை அழைப்பதற்கு மிகவும் அந்தரங்கர்களான மனிதர்களை ஆஜ்ஞாபித்தார்.

28. (பொ - ரை) மிகவும் தர்மஸ்வபாவமுடைய ஸுமந்த்ரர், வஸிஷ்டமஹரிஷி முன்னமே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற, காசிராஜா, கேகயராஜா, ரோமபாத மஹாராஜா என்றவர் அரசர்களை அழைத்து வருவதற்காக வஸிஷ்டமஹரிஷியின் ஆஜ்ஞையினால் தானே நேரில் சென்றார்.

ते च कर्मान्तिकाः सर्वे वसिष्ठाय च धीमते ।
सर्वं निवेदयन्ति स्म यज्ञे यदुपकल्पितम् ॥
ततः प्रीतो द्विजश्रेष्ठस्तान्सर्वान्पुनरब्रवीत् ॥ २९ ॥
अवज्ञया न दातव्यं कस्यचिल्लीलयापि वा ।
अवज्ञया कृतं हन्याद्दातारं नात्र संशयः ॥ ३० ॥
ततः कैश्चिदहोरात्रैरुपयाता महीक्षितः ।
बहूनि रत्नान्यादाय राज्ञो दशरथस्य हि ॥ ३१ ॥

29. (ப - ரை) **ते कर्मान्तिकाः** - அந்த வேலைக்காரர்கள், **सर्वं च** - எல்லாவற்றையும், **यज्ञे** - யாகவிஷயத்தில், **यत्** - யாதொன்று, **उपकल्पितम्** - செய்யப்பட்டிருந்ததோ, (**तत्**) **सर्वं** - அது முழுவதையும், **धीमते** - புத்திமானான, **वसिष्ठाय च** - வஸிஷ்டரின் பொருட்டு, **निवेदयन्ति स्म** - தெரிவித்தார்கள், **ततः** - பிறகு, **द्विजश्रेष्ठः** - அந்தணர் மேன்மைக்காரர், **प्रीतः सन्** - ப்ரீதியுடையவராய், **तान् सर्वान्** - அவர்களெல்லாரையும் பார்த்து, **पुनः** - மறுபடியும், **अब्रवीत्** - சொன்னார்.

30. (ப - ரை) **कस्यचित्** - எவனுக்கும் (ஒருவனுக்காவது), **अवज्ञया** - அவமதிப்பாகவோ, **लीलया अपि वा** - விளையாட்டாகவோ, **न दातव्यं** - கொடுக்கத்தக்கதல்ல, **अवज्ञया** - அவமதிப்புடன், **कृतं** - செய்யப்பட்ட தானமானது, **दातारं** - தானம் கொடுப்பவனை, **हन्यात्** - அழித்துவிடும், **अत्र** - இவ்விஷயத்தில், **संशयः न** - ஸந்தேகமில்லை.

31. (ப - ரை) **ततः** - பிறகு, **महीक्षितः** - அரசர்கள், **कैश्चित् अहोरात्रैः** - சில தினங்களால், **दशरथस्य राज्ञः** - தசரத மஹாராஜருக்கு, **बहूनि रत्नानि** - அநேகங்களான உயர்ந்த வஸ்துக்களை, **आदाय** - எடுத்துக்கொண்டு, **उपयाताः** - வந்தார்கள்.

---

29. (பொ - ரை) அந்த வேலைக்காரர்கள் எல்லோரும் யாகத்திற்காக செய்ய வேண்டிய காரியம் முழுவதும் செய்யப்பட்டது என்று, புத்திமானான வஸிஷ்டரிடம் தெரிவித்தார்கள். பிறகு, ப்ராஹ்மணோத்தமரான வஸிஷ்ட மஹர்ஷி அவர்கள் வார்த்தையால் ஸந்தோஷமடைந்து திரும்பவும் அவர்களைப் பார்த்து இந்த வார்த்தை சொல்லுகிறார்.

30. (பொ - ரை) யாருக்காவது எந்த வஸ்துவையாவது தானம் கொடுக்கும் போது கௌரவத்துடனே கொடுக்கவேண்டும், அப்படிக்கு இல்லாமல் அலக்ஷ்யமாகவோ, வேடிக்கையாகவோ கொடுக்கக்கூடாது. அவ்வாறு செய்யப்பட்ட தானம் கொடுப்பவனைக் கெடுத்துவிடும், இதில் ஸந்தேகமில்லை.

31. (பொ - ரை) பிறகு, சில தினங்களில், வெளிதேசத்து அரசர்கள், யாகம் செய்யப்போகின்ற தசரத மஹாராஜருக்கு பலவிதங்களான உயர்ந்த வஸ்துக்களை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

ततो वसिष्ठः सुप्रीतो राजानमिदमब्रवीत् ।
उपयाता नरव्याघ्र राजानस्तव शासनात् ॥ ॥ 32 ॥
मया च सत्कृताः सर्वे यथार्हं राजसत्तमाः ।
यज्ञीयं च कृतं राजन्पुरुषैः सुसमाहितैः ॥ 33 ॥
निर्यातु च भवान्यष्टुं यज्ञायतनमन्तिकात् ।
सर्वकामैरुपहृतैरुपेतं वै समन्ततः ॥ 34 ॥
द्रष्टुमर्हसि राजेन्द्र मनसेव विनिर्मितम् ॥ 35 ॥

---

32. (ப - ரை) **ततः** - பிறகு, **वसिष्ठः** - வஸிஷ்டர், **सुप्रीतः सन्** - மிகவும் அன்புடையவராய், **हे नरव्याघ्र** - புருஷோத்தமா! **तव शासनात्** - உம்முடைய கட்டளையினால், **राजानः** - தேசத்து அரசர்கள், **उपयाताः** - வந்து விட்டார்கள், **इति** - என்று, **राजानं** - அரசனைப் பார்த்து, **इदं अब्रवीत्** - இதைச் சொன்னார்.

33. (ப - ரை) **राजसत्तमाः सर्वे** - (வந்திருக்கும்) ராஜச்ரேஷ்டர்களெல்லோரும், **यथार्हं** - தகுந்தபடி, **मया च** - என்னாலும், **सत्कृताः** - மரியாதை செய்யப்பட்டார்கள், **हे राजन्** - ராஜனே! **सुसमाहितैः** - மிகவும் கவனமுள்ளவர்களான, **पुरुषैः** - மனிதர்களால், **यज्ञीयं च** - யாகத்திற்கு வேண்டிய பதார்த்தமும், **कृतं** -

34—35. (ப - ரை) **भवान् च** - நீரும், **यष्टुं** - யாகம் செய்வதற்காக, **अन्तिकात्** - ஸமீபத்தில், **समन्ततः** - சுற்றிலும், **उपहृतैः** - கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிற, **सर्व कामैः** - ஸர்வ பதார்த்தங்களோடு, **उपेतं** - கூடியிருக்கிற, **यज्ञायतनं** - யாகசாலையைக் குறித்து, **निर्यातु** - புறப்படும், **मनसा** - மனதினால், **निर्मितं इव** - ஸ்ருஷ்டிக்கப்பட்டது போலிருப்பதை, **द्रष्टुं** - பார்ப்பதற்கு, **अर्हसि** - நீர் தகுந்தவர்.

---

32. (பொ - ரை) பிறகு, வஸிஷ்டமஹரிஷி, மிகுந்த அன்புடன் ப்ரபோ! உம்முடைய உத்திரவு ப்ரகாரம் வெளிதேசத்து அரசர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள் என்று தசரத மஹாராஜரைப் பார்த்துச் சொன்னார்.

33. (பொ - ரை) வந்திருக்கும் அரசர்களை அவரவர்களுக்குத் தகுந்தபடி நானும் மரியாதை செய்தேன். மிகவும் ஊக்கமுடையவர்களாய் நம்முடைய மனிதர்களும் யாகத்திற்கு வேண்டிய பதார்த்தங்களை ஒன்றுகூட தவறாமல் ஸித்தப்படுத்தி விட்டார்கள்.

34—35. (பொ - ரை) மஹாராஜரே! யக்ஞசாலையில் சுற்றிலும் யாகத்திற்கு வேண்டிய ஸர்வ பதார்த்தங்களும் நிறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால், மனதினால் ஸர்வ பதார்த்தங்களுடன் ஸ்ருஷ்டிக்கப்பட்டது போலிருக்கின்றது. அதை நீர் பார்க்கவேண்டும். ஆதலால் யாகம் செய்வதற்காக நீர் புறப்படும்.

तथा वसिष्ठवचनादृश्यशृङ्गस्य चोभयोः ।
शुभे दिवसनक्षत्रे निर्यातो जगतीपतिः ॥ 36 ॥

ततो वसिष्ठप्रमुखाः सर्वे एव द्विजोत्तमाः ।
ऋश्यशृङ्गं पुरस्कृत्य यज्ञकर्मारभंस्तदा ॥
यज्ञवाटगताः सर्वे यथाशास्त्रं यथाविधि ॥ 37 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
त्रयोदशः सर्गः ॥ 13 ॥

36. (ப - ரை) **तथा** - அவ்வாறு, **वसिष्ठ** - வசிஷ்டருடையவும், **ऋश्यशृङ्गस्य** - ரிஷ்யச்ருங்கருடையவும், **उभयोः च** - இவ்விருவர்களுடைய, **वचनात्** - வார்த்தையினால், **शुभे** - சுபமான, **दिवसनक्षत्रे** - தினத்திலும் நக்ஷத்திரத்திலும், **जगतीपतिः** - அரசன், **निर्यातः** - புறப்பட்டார்.

37. (ப - ரை) **ततः** - பிறகு, **वसिष्ठप्रमुखाः** - வசிஷ்டரை [illegible] தலைமையாக உடைய, **द्विजोत्तमाः** - [illegible], **सर्वे एव** - எல்லோரும் [illegible], **ऋश्यशृङ्गं** - ரிஷ்யச்ருங்கரை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **यज्ञवाटगताः (सन्तः)** - யாகசாலையை அடைந்தவர்களாய், **सर्वे** - எல்லோரும், **यथाशास्त्रं** - [illegible], **यथाविधि** - [illegible], **तदा** - அப்பொழுது, **यज्ञकर्म** - யாக காரியத்தை, **आरभन्त** - ஆரம்பித்தார்கள்.

36. (பொ - ரை) அவ்வாறு, வசிஷ்டருடைய [illegible] இவ்விருவர்களுடைய சொல்லினால் [illegible] தோடு கூடிய நல்ல தினத்தில் யாகசாலையை நோக்கி, அரசன் [illegible] புறப்பட்டார்.

37. (பொ - ரை) பிறகு வசிஷ்டரை [illegible] மிகுந்தவர்கள் எல்லோரும், ரிஷ்யச்ருங்கரை முன்னிட்டுக்கொண்டு [illegible] சாஸ்திரத்தையும் க்ரமத்தையும் [illegible] எல்லோரும் [illegible] யாக காரியங்களை அப்பொழுது ஆரம்பித்தார்கள்.

चतुर्दशः सर्गः ॥ 14 ॥

अथ संवत्सरे पूर्णे तस्मिन्प्राप्ते तुरङ्गमे ।
सरय्वाश्चोत्तरे तीरे राज्ञो यज्ञोऽभ्यवर्तत ॥ 1 ॥
ऋश्यशृङ्गं पुरस्कृत्य कर्म चक्रुर्द्विजर्षभाः ।
अश्वमेधे महायज्ञे राज्ञोऽस्य सुमहात्मनः ॥ 2 ॥
कर्म कुर्वन्ति विधिवद्याजका वेदपारगाः ।
यथाविधि यथान्यायं परिक्रामन्ति शास्त्रतः ॥ 3 ॥

1. (ப - ரை) **अथ** - பிறகு, **तस्मिन्** - அந்த, **तुरङ्गमे** - குதிரையும், **प्राप्ते** - வந்த வளவில், **तस्मिन्** - அந்த, **संवत्सरे** - வருஷமும், **पूर्णे** - நிரம்பினவளவில், **सरय्वाः** - ஸரயூ நதியினுடைய, **उत्तरे तीरे** - வடகரையில், **राज्ञः** - அரசனுடைய, **यज्ञः** - யாகமானது, **अभ्यवर्तत** - நடந்து கொண்டிருந்தது.

2. (ப - ரை) **सुमहात्मनः** - மிகவும் பெரிதான மனமுடைய, **अस्य राज्ञः** - இந்த அரசனுடைய, **अश्वमेधे** - அச்வமேத மென்கிற, **महायज्ञे** - பெரிய யெஜ்ஞத்தில், **द्विजर्षभाः** - ப்ராம்மணச்ரேஷ்டர்கள், **ऋश्यशृङ्गं** - ரிச்யச்ருங்க மஹரிஷியை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **कर्म** - காரியத்தை, **चक्रुः** - செய்தார்கள்.

3. (ப - ரை) **वेदपारगाः** - வேதத்தின் கரை கண்டவர்களான, **याजकाः** - ரித்விக்குகள், **कर्म** - முன் சொன்ன காரியத்தை, **विधिवत्** - சாஸ்த்ர ப்ரகாரம், **कुर्वन्ति** - செய்கிறார்கள், **यथाविधि** - விதிப்படியும், **यथान्यायं** - நியாயப்படியும், **शास्त्रतः** - கல்பஸூத்ரப்படியும் **परिक्रामन्ति** - நடக்கின்றார்கள்.

1. (பொ - ரை) பிறகு அச்வமேதத்திற்காக அனுப்பப்பட்ட குதிரையும் வந்துவிட்டது. அந்த ஸம்வத்ஸரமும் பூர்த்தியாகி விட்டது. ஸரயூ நதியின் வட கரையில் தசரத மஹாராஜருடைய அச்வமேத யாகமும் நடந்து கொண்டிருந்தது.

2. (பொ - ரை) மஹா ப்ரபாவமுடைய இந்த தசரத மஹாராஜாவின் அச்வ மேதமென்கிற பெரிய யாகத்தில் ப்ராம்மணோத்தமர்கள் ப்ரதான ரித்விக்காயும், ப்ரம்மாவுமான ரிச்யச்ருங்க மஹரிஷியை முன்னிட்டுக்கொண்டு அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஹோமம் முதலான காரியங்களைச் செய்து வந்தார்கள்.

3. (பொ - ரை) வேதங்களை முழுவதும் ஓதி அதின் அர்த்தங்களையும் உள்ளபடி அறிந்தவர்களான ரித்விக்குகள், சாஸ்த்ரவழி தவறாமல் யாகத்தில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துகொண் டிருக்கிறார்கள். வேதத்திலும் மீமாம்ஸா சாஸ்த்ரங்களிலும் கல்ப ஸூத்ரங்களிலும் சொல்லிய முறை தவறாமல் நடக்கின்றார்கள்.

प्रवर्ग्यं शास्त्रतः कृत्वा तथैवोपसदं द्विजाः ।
चक्रुश्च विधिवत्सर्वमधिकं कर्म शास्त्रतः ॥ 4 ॥
अभिपूज्य ततो हृष्टाः सर्वे चक्रुर्यथाविधि ।
प्रातः सवनपूर्वाणि कर्माणि मुनिपुंगवाः ॥ 5 ॥
ऐन्द्रश्च विधिवद्दत्तो राजा चाभिष्टुतोऽनघः ।
माध्यंदिनं च सवनं प्रावर्तत यथाक्रमम् ॥ 6 ॥

4. (ப - ரை) **द्विजाः** - த்விஜர்களான ப்ராம்மணர்கள், **शास्त्रतः** - சாஸ்த்ரப்படி, **प्रवर्ग्यं** - ப்ரவர்க்யம் என்கிற கர்மத்தையும், **तथैव** - அவ்வாறே, **उपसदं** - உபஸத் என்கிற யாகத்தையும், **कृत्वा** - செய்து, **शास्त्रतः** - [illegible], **अधिकं** - அதிகமாக செய்யக்கூடிய, **सर्वं कर्म च** - எல்லா கார்யத்தையும், **विधिवत्** - சாஸ்த்ரத்தில் சொல்லியபடி, **चक्रुः** - செய்தார்கள்.

5. (ப - ரை) **मुनिपुंगवाः** - சிறந்த முனிவர்கள், **सर्वे** - எல்லோரும், **अभिपूज्य** - (அந்தந்த கர்மங்களின் தேவதைகளை) பூஜித்து விட்டு. **ततः** - பிறகு. **प्रातः सवनपूर्वाणि** - ப்ராதஸ்ஸவனம் முதலான, **कर्माणि** - கர்மங்களை, **हृष्टाः (सन्तः)** - சந்தோஷமுடையவர்களாய், **यथाविधि** - சாஸ்த்ரப்படி, **चक्रुः** - செய்தார்கள்.

6. (ப - ரை) **ऐन्द्रः च** - இந்திரனை தேவதையாகவுடைய [illegible], **विधिवत्** - சாஸ்த்ரப்படியாக, **दत्तः** - கொடுக்கப்பட்டது. **अनघः** - [illegible] போக்கத்தக்க, **राजा च** - ஸோமராஜனும், **अभिष्टुतः** - [illegible] பட்டார், **माध्यंदिनं** - மத்யான்னத்தில் செய்யக்கூடிய, **सवनं च** - ஸவனமும், **यथा क्रमम्** - க்ரமமாக, **प्रावर्तत** - நடந்து கொண்டிருந்தது.

---

4. (பொ - ரை) த்விஜர்களான ப்ராம்மணர்கள் **देवार्चं सवमास्मत** என்னும் அநுவாகத்தில் சொல்லியபடி [illegible] என்னும் [illegible] யும், அவ்வாறே, உபஸத் என்னும் [illegible] என்னும் இவைகளில் சொல்லப்பட்ட முறைப்படி [illegible] சாஸ்த்ரத்திலே செய்யத்தகுந்த கார்யத்தையும், [illegible] பட்ட அதிகமான கார்யத்தையும் [illegible].

5. (பொ - ரை) [illegible] **बहिष्पव मान**" [illegible] முதலியவைகளால், அந்தந்த கர்மங்களின் தேவதைகளை [illegible] பூஜித்து, "**प्रवर्ग्यं**" "**उपसदनं**" என்னும் [illegible] ப்ராதஸ்ஸவனம், மாத்யந்தின ஸவனம், த்ருதீய ஸவனம் [illegible] சாஸ்த்ரவிதிப்படி மிக்க ஸந்தோஷத்துடன் செய்தார்கள்.

6. (பொ - ரை) இந்திரனை தேவதையாகவுடைய [illegible] ணுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸோமராஜனையும் [illegible] மென்னும் சில மந்த்ரங்களால் ஸ்தோத்ரம் செய்தார்கள். மத்யான்ன [illegible] நடக்கவேண்டிய சில ஸவனங்களும் க்ரமமாக நடந்து கொண்டிருந்தது.

तृतीयसवनं चैव राज्ञोऽस्य सुमहात्मनः ।
चक्रुस्ते शास्त्रतो दृष्ट्वा तथा ब्राह्मणपुंगवाः ॥ ॥ 7 ॥

न चाहुतमभूत्तत्र स्खलितं वापि किंचन ।
दृश्यते ब्रह्मवत्सर्वं क्षेमयुक्तं हि चक्रिरे ॥ 8 ॥

न तेष्वहस्सु श्रान्तो वा क्षुधितो वापि दृश्यते ।
नाविद्वान्ब्राह्मणस्तत्र नाशतानुचरस्तथा ॥ 9 ॥

7. (ப - ரை) **सुमहात्मनः** - மிகவும் மஹாத்மாவான, **अस्य राज्ञः** - இந்த அரசனுக்கு, **तृतीय सवनं चैव** - மூன்றாவதான ஸவனத்தையும், **ते ब्राह्मणपुंगवाः** - அந்த ப்ராம்மணோத்தமர்கள், **शास्त्रतः** - சாஸ்த்ரத்தின் வழியாக, **दृष्ट्वा** - பார்த்து, **तथा** - அவ்விதமாகவே, **चक्रुः** - செய்தார்கள்.

8. (ப - ரை) **तत्र** - அந்த யாகத்தில், **किंचन** - ஒன்று கூட, **अहुतं** - மாறுபாடுதலாக, ஹோமம் செய்யப்பட்டதாக, **न अभूत्** - இருக்கவில்லை, **स्खलितं वा अपि** - தவறிப்போனதாகவும், **न** - இல்லை, **सर्वं** - எல்லாம், **ब्रह्मवत्** - மந்த்ரத்தோடு கூடியதாகவே, **दृश्यते** - காணப்படுகிறது, **हि** - ஏனென்றால், **क्षेमयुक्तं** - க்ஷேமத்தோடு கூடியதாகவே, **चक्रिरे** - செய்தார்கள்.

9. (ப - ரை) **तेषु अहस्सु** - அந்த யாகம் நடக்கும் நாள்களில், **श्रान्तो वा** - தீர்க்கத்தில் அபேக்ஷையுள்ளவனாவது, **क्षुधितः वा अपि** - பசியுள்ளவனாவது, **न दृश्यते** - காணப்படவில்லை, **तत्र** - அங்கு, **ब्राह्मणः** - வந்திருக்கும் ப்ராம்மணன், **अविद्वान्** - வித்வானல்லாதவனாகவும், **न** - காணப்படவில்லை, **तथा** - அவ்வாறே, **अशतानुचरः** - நூறு சிஷ்யர்கள் இல்லாதவனும், **न** - காணப்படவில்லை.

---

7. (பொ - ரை) அந்த ப்ராம்மண ச்ரேஷ்டர்கள் மஹாப்ரபாவமுடைய தசரத மஹாராஜரின் அச்வமேத யாகத்தில் ப்ராதஸ்ஸவனம், மாத்யந்தின ஸவனம் என்னும் இரண்டு கர்மங்களையும், சாஸ்த்ரத்தின் வழியாக அறிந்து நடத்தியது போல், மூன்றாவதான ஸாயம் ஸவனம் என்னும் கர்மத்தையும் சாஸ்த்ரப்ரகாரமாகவே செய்தார்கள்.

8. (பொ - ரை) அந்த அச்வமேத யாகத்தில் நடக்கும் ஹோமம் முதலான கார்யங்களில் ஒன்றாவது தவறவுமில்லை. வித்தியாஸமாகவும் செய்யப்படவில்லை. எந்த கார்யமும் மந்த்ரத்துடனே செய்யப்பட்டு வருகிறது. ஏனென்றால், அந்த ரித்விக்குக்கள் எல்லோரும் நிர்விக்னமாய் முடியவேண்டுமென்று கவனத்தோடு செய்து வருகிறபடியால் ஒருவிதமான தவறுதலுக்கும் இடமில்லை.

9. (பொ - ரை) அவ்வாறு அந்த யாகம் நடந்து வரும் காலத்தில் ஒருவனாவது தாகமுள்ளவனும் கிடையாது. பசியுள்ளவனும் கிடையாது. வந்திருக்கும் ப்ராம்மணர்களில், வித்வான் அல்லாதவனும், நூறு சிஷ்யர்கள் தன்னுடன் கூட வராதவனும் ஒருவருமில்லை.

ब्राह्मणा भुञ्जते नित्यं नाथवन्तश्च भुञ्जते ।
तापसा भुञ्जते चापि श्रमणा भुञ्जते तथा ॥ 10 ॥

वृद्धाश्च व्याधिताश्चैव स्त्रियो बालास्तथैव च ।
अनिशं भुञ्जमानानां न तृप्तिरुपलभ्यते ॥ 11 ॥

10. (ப - ரை.) **ब्राह्मणाः** - அந்தணர்கள், **नित्यं** - தினந்தோறும், **भुञ्जते** - உண்கின்றார்கள், **नाथवन्तश्च** - எஜமானரின் கீழ் உள்ளவர்களான காவலர்களும், **भुञ्जते** - உண்கின்றார்கள், **तापसाः चापि** - தவம் புரிகின்றவர்களும் கூட, **भुञ्जते** - ஆஹாரத்தை ஏற்கின்றனர், **श्रमणाः** - ஸ்திரீ தாபஸிகளும், **तथा** - அப்படியே, **भुञ्जते** - உணவை உட்கொள்ளுகின்றனர்.

11. (ப - ரை) **वृद्धाश्च** - வயது முதிர்ந்தவர்களும், **व्याधिताश्चैव** - பிணியாளர்கள் தாமும், **तथैव** - அப்படியே, **स्त्रियः** - பெண்பாலர்களும், **बालाश्च** - இளம் பிள்ளைகளும், (உண்கின்றனர்.) **अनिशं** - இடைவிடலின்றி, **भुञ्जमानानां** - சாப்பிட்டுக்

10. (கருத்துரை) அங்கு பக்குவம் செய்யப்படுகிற அன்னம் பாயஸம் முதலிய பலவகைப்பட்ட உணவு பொருட்களின் இனிமையினாலும், அவற்றைப் பரிமாறுகின்றவர்களின் ஆதரமொழிகளினாலும் வேள்வியைச் சார்ந்திருக்கின்ற ஒரு விசேஷத்தாலும் கொற்றவன் நலத்திற்கானதென்கிறதோர் ஏற்றத்தாலும், நாமே வென்று விட்டவரெனப் பெயர் பெற்றிருக்கின்ற அந்தணர்கள் தாமும், போதுமா பிரியமாக என்று பிறர் சொல்லிக்காட்டும் வகையில் வேளை தவறாமல் வெண்பொலிந்து மேலும் வாரிவாரி உண்கின்றனராம். அத்தகைய புனிதமான வேள்வியில் 'ஆண்டை' 'அடிமை' என்பதுபோன்ற எவ்வித வேற்றுமையையும் பாராட்டாமல் எளியவர், தனவந்தர் எல்லோரும் ஒரே பந்தியிலமர்ந்து புசிப்பாராயினர். உண்மையை தன்னையே முக்கிய விருதமாய்க் கொண்ட முனிச்வரரும் சாமானமாயிருக்கின்ற தாபஸப் பெண்மணிகளும் கூட அவ்வன்னத்தை மெத்தப் பாவனமென்றே அங்கீகரித்தனராம்.

11. (க - ரை) மேலும் நாளடைவில் ஆஹாரம் குன்றிப்போன கிழவர்களும், நோய் வாய்ப்பட்டுக் கிடந்து அன்னத்துவேஷம் கொண்டு உழலுகின்ற பிணியாளர்களும், உணவு பொருளைச் சிக்கனமாய் சேகரித்து வைத்துக்கொள்ளும் ஸ்வபாவமுள்ள ஸ்திரீ ஜாதிகளும், உணவை அறவே மறந்து ஓடி விளையாடித் திரிகின்ற சிறுவர்களும் இவர்களெல்லோரும் வாசியற வரைகடந்து உண்பாராயினர். இடைவீடின்றி புசித்துக்கொண்டே யிருக்கின்றன ரென்றாலும் இவர்களுக்கிடையே ஒருவருக்கேனும் அவ்வுணவு தெகட்டியதாகத் தென்படவேயில்லை. இப்படியே அன்னமிடுகின்ற எஜமானரைத் தொடங்கி பரிமாறுகின்ற பரிசாரகர் வரைக்கும் எவ

दीयतां दीयतामन्नं वासांसि विविधानि च ।
इति संचोदिता स्तत्र तथा चक्रुरनेकशः ॥ 12 ॥

अन्नकूटाश्च बहवो दृश्यन्ते पर्वतोपमाः ।
दिवसे दिवसे तत्र सिद्धस्य विधिवत्तदा ॥ 13 ॥

नानादेशादनुप्राप्ताः पुरुषाः स्त्रीगणा स्तथा ।
अन्नपानैः सुविहिता स्तस्मिन्यज्ञे महात्मनः ॥ 14 ॥

கொண்டே யிருக்கின்றவர்களுக்கும், **तृप्तिः** - போதுமென்கிற எண்ணமானது, **नोपलभ्यते** - பெறலாகிறதில்லை.

12. (ப - ரை) **अन्नं** - சாப்பாடானது, **दीयतां** - கொடுக்கப்படட்டும், **दीयतां** - (மேன்மேலும்) கொடுக்கப்படட்டும், **विविधानि** - அநேக விதங்களான, **वासांसिच** - ஆடைகளும், (அளிக்கப்படட்டும்.) **इति** - என்று, **तत्र** - அங்கு, **अनेकशः** - வெகுவாக, **संचोदिताः** - ஏவப்பட்டவர்கள், **तथा** - அப்படியே, **चक्रुः** - செய்தார்கள்.

13. (ப - ரை) **तत्र** - அங்கே, **दिवसे दिवसे** - தினந்தோறும், **विधिवत्** - (சமயல்) முறைப்படி, **तदा** - அப்போதே, **सिद्धस्य** - தயாரிக்கப்பட்ட, **अन्न(स्य) कूटाश्च** - உணவு பொருட் (களின்) குவியல்களும், **पर्वतोपमाः** - மலை போன்றனவாக, **दृश्यन्ते** - காணக்கிடக்கின்றன.

14. (ப - ரை) **महात्मनः** - மிக்க உதாரரான (அவ்வரசனுடைய), **तस्मिन्** - அந்த, **यज्ञे** - யாகத்தில், **नानादेशात्** - பல தேசத்திலிருந்து, **अनुप्राप्ताः** - வந்து சேர்ந்த

ரும் சற்றேனுஞ் சலிப்படைந்தாரென்பதற்கு இடமில்லாமல் எல்லோரும் சுறுசுறுப்பாகவே சுற்றித் திரிகின்றனர்.

12. (க - ரை) இப்படிச் சற்று, அப்படிச் சற்று, இங்கு கொஞ்சம், அங்கு கொஞ்சம், என்றென்று பிரேரிக்கப்பெற்ற பரிசாரகர் பலர் அவ்வன்னபானாதிகளைப் பன்மடங்காகப் பரிமாறலாயினர். தாராளமா யள்ளியளித்திடுமின், என்று உத்ஸாஹமூட்டப்பெற்ற பொக்கிஷக்காரர் பலரும் பட்டாடை, உருமாலை, குண்டஞ்சி, துப்பட்டா என்று பலதரப்பட்ட அளவற்ற ஆடைவகைகளை வாரியெடுத்து வரையறை யின்றித் தாராளமாய் வழங்குவாராயினர்.

13. (க - ரை) ஒவ்வொரு நாளிலும், முற்பகலிற் பக்குவமானதைப் பிற்பகலிற் கேனும் உபயோகித்தன ரென்பதற்கு மிடமின்றி அவ்வப்பொழுதே பாக சாஸ்திர முறை தவறாமல் தயாரிக்கப்பெற்ற அன்னராசிகள் அங்கு மலைமலையாகக் குவிந்து கிடக்கக் காணப்படலாயின.

14. (க - ரை) உதாரகுணசீலரான தயரத மஹாராஜன் வேட்கின்ற அவ்வத்

अन्नं हि विधिवत्स्वादु प्रशंसन्ति द्विजर्षभाः ।
अहो तृप्ताः स्म भद्रं त इति शुश्राव राघवः ॥ 15 ॥

स्वलंकृताश्च पुरुषा ब्राह्मणान्पर्यवेषयन् ।
उपासते च तानन्ये सुमृष्टमणिकुण्डलाः ॥ 16 ॥

வர்களான, **पुरुषाः** - ஆண்மக்களும், **तथा** - அப்படியே, **स्त्रीगणाः** - பெண்பிள்ளைகளும், **अन्नपानैः** - அன்னம், பானம் இவைகளினால், **सुविहिताः** - நன்றாகத் திருப்தி செய்விக்கப்பட்டனர்.

15. (ப-ரை) **अन्नं हि** - ஆஹாரமோ மேன்மேல், **विधिवत्** - முறைப்படி கொடுத்ததும், **स्वादु** - ருசியுள்ளதுமாயிருக்கிறது (இருக்கின்றது.) **अहो** - ஆச்சர்யம், **तृप्ताः** - திருப்தியடைந்தவர்களாக, **स्म** - ஆயினோம். **ते** - உனக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **इति** - என்று, **द्विजर्षभाः** - பிராம்மணோத்தமர்கள். **प्रशंसन्ति** - கொண்டாடுகின்றனர், **राघवः** - இரகுவம்சத்தரான (தசரதராஜன், **शुश्राव** - அதைக்) கேட்கலாயினன்.

16. (ப-ரை) **स्वलंकृताः** - நன்றாக அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற, **पुरुषाः**- மனிதர்கள், **ब्राह्मणान्** - பிராம்மணர்களை (வைத்து), **पर्यवेषयन्** - பரிமாறினார்கள், **सुमृष्टमणिकुण्डलाः** - நன்றாகத் திட்டமாக இழைக்கப்பட்ட மணிகளினாலும் பொன்னாலுமான குண்டலங்களைப் பூண்டவர்களான, **अन्ये** - வேறு சிலர், **तान्** - அவர்களை. **उपासते च** - சூழ்ந்து நின்று உதவியும் செய்கின்றனர்.

தமது வேள்விக்கென்று, விதேசங்களிலிருந்து வந்து சேர்ந்த ஆண் பெண் ஜனங்களும் அன்னபானாதிகளினால் ஒருபடியாக உபசரிக்கப்பெற்று அதனால் யாவரும் மன முவந்தனராம்.

15. (க-ரை) விதிவாசிக்கும் திறமையுள்ள பிராம்மணர் இப்படிக் கொடுக்கிறீர்கள், இப்படி யஜிக்கிறீர்கள், என்று செய்கையைப் புகழ்ந்து முன்னிட்டு யஜமானனை வேண்டியபடி (அன்னதானத்தைப்) பிரசம்ஸிக்கலாயினர், என்கிற சாஸ்திர விதியின்படி உண்மையிலேயே மகிழ்ச்சிபெற்ற பிராம்மணோத்தமர்கள், பலே! என்ன ருசி! எத்தனை பதார்த்தம்! என்ன தானம்! எத்தனை தக்ஷிணை! ஆஹா! திருப்தராயினோம், அரசே! நன்று வாழ்வீர் என்று புகழ்ந்து கொண்டாட அதனைத் தனது வம்சத்தின் பெருமை பொலிகின்ற ஸ்ரீராமன் தந்தையாகிய தசரதன் கேட்டு ஸந்தோஷிக்கலாயினன்.

16. (க-ரை) பரிசுத்தமாகத் தம்மை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற புருஷர்கள் பலர் பிராம்மணர்களுக்குப் பரிமாறுகின்றார்கள். மற்றும் சிலரோ வெனில் மணிகுண்டலம் முதலிய அணிகலங்களை அழகுறப் பூண்டு வைத்துக்கொண்டு பரிமாறுகின்றவர்களுக்குக் கைப்பட்டவர்களாகவும், புசிக்கின்றவர்களைப் பலபடியாக உபசரிப்பவராகவும் நிற்கின்றனர்.

कर्मान्तरे तदा विप्रा हेतुवादान्बहूनपि ।
प्राहुः स वाग्मिनो धीराः परस्परजिगीषया ॥ 17 ॥

दिवसे दिवसे तत्र संस्तरे कुशला द्विजाः ।
सर्वकर्माणि चक्रुस्ते यथाशास्त्रं प्रचोदिताः ॥ 18 ॥

नाषडङ्गविदत्रासी न्नाव्रतो ना बहुश्रुतः ।
सदस्यास्तस्य वै राज्ञो नावादकुशला द्विजाः ॥ 19 ॥

17. (ப - ரை) **कर्मान्तरे** - ஸவனங்களெனப்படும் கருமங்கள் இரண்டினிடையிலே, **धीराः** - புத்திமான்களாயும், **वाग्मिनः** - சொற்றிறனுள்ளவர்களுமான, **विप्राः** - பிராம்மணர்கள், **परस्परजिगीषया** - ஒருவரையொருவர் வென்று விட வேண்டுமென்கிற ஆவலோடு, **बहून्** - அநேகங்களான, **हेतुवादानपि** - உயுக்திவாதங்களையும், **प्राहुः स्म** - வாதிப்பாராயினர்.

18. (ப - ரை) **तत्र** - அந்த அசுவமேத தினங்களில், **दिवसे दिवसे** - நாள்தோறும், **संस्तरे** - ஸம்ஸ்தரமென்கிற காரியத்தில், **कुशलाः** - ஸமர்த்தர்களான, **द्विजाः** - பிராம்மணர்கள், **सर्वकर्माणि** - எல்லாக் காரியங்களையும், **यथाशास्त्रं** - சாஸ்திர முறைப்படி, **प्रचोदिताः** - (பெரியோரால்) ஏவப்பட்டவர்களாய், **चक्रुः** - செய்தனர்.

19. (ப - ரை) **अत्र** - இந்த யக்ஞத்தில், **अषडङ्गवित्** - ஆறுவித வேதாங்கங்களையுமறியாதாரெவரும், **नासीत्** - இருக்கவில்லை, **अव्रतः** - விருதங்களை அனுஷ்டிக்

17. (க - ரை) பிராதஸ்ஸவனம், மாத்யந்தினஸவனம், ஸாயம்ஸவனம் என்கிற மூன்று ஸவன கர்மங்களின் இடைக்காலத்தில் ஹோதா, பிரும்ஹா இவர் போன்ற பெரியோர்கள் வாதிப் பிரதிவாதிகளாக ஜோடிசேர்ந்து வேடிக்கையாக பிரும்மவாதஞ் செய்கிறதென்கிற சாஸ்திர ஸம்பிரதாயங்களை யனுஸரித்து அந்த யக்ஞத்திலும் சொன்வன்மையும், மனத்திடமும் ஒருங்கே பொருந்தியுள்ள பண்டிதர் பலர் இடங்கிடைத்த போதெல்லாம் வெற்றியையே வேண்டி வாதப்போர் புரிவாராயினர்.

18. (க - ரை) அவ்வச்வமேத நாட்களில் மூன்று ஸவனங்களிலும் செய்யப்படவேண்டிய மூவேளைக் கருமங்களையும், அவற்றைப் பிழையறச்செய்ய ஆற்றலுள்ளவர்களான அந்தணர்கள், அக்கருமங்களின் மர்மங்களை முற்று முணர்ந்தவரான முதியோரின் மொழிகேட்டுத் திட்டமாய் நடத்தி முடித்தனராம்.

19. (க - ரை) இந்த யக்ஞத்திற் கூடியிருந்தவர்களுள், ஒருவரேனும் சிக்ஷை, வியாகரணம், கல்பம், நிருக்த்தம், ஜ்யோதிஷம், சந்தம் எனப்படுகின்ற ஆறுவிதமான வேதாங்கங்களையும் அறியாதவரில்லை. தீர்க்கமான ஆயுளையும், களங்கமற்ற

प्राप्ते यूपोच्छ्रये तस्मिन् षड्बैल्वाः खादिरास्तथा ।
तावन्तो बिल्वसहिताः पर्णिनश्च तथाऽपरे ॥ 20 ॥
श्लेष्मातकमयस्त्वेको देवदारुमयस्तथा ।
द्वावेव विहितौ तत्र बाहुव्यस्तपरिग्रहौ ॥ 21 ॥

காதவரும், **न** - இல்லை, **अबहु श्रुतः** - எல்லா வேதங்களையும் கல்லாதவரும், **न** - (ஒருவரு) மில்லை, **तस्य** - அந்த, **राज्ञः** - அரசனுடைய, **सदस्याः** - ஸபையிலுள்ளவர்களான, **द्विजाः** - பிராம்மணர்கள், **अवादकुशलाः** - வாதத்திறமையற்றவர்களாக, **न वै** - இருக்கவேயில்லை.

20. (ப - ரை) **तस्मिन्** - அந்த யக்ஞகாலத்தில், **यूपोच्छ्रये** - யூபங்களென்னப்படுகிற ஸ்தம்பங்களை உயர்த்தி நடுவதற்கு ஏற்ற ஸமயமானது, **प्राप्ते** - வந்தவுடனே, **बैल्वाः** - வில்வமரத்தில் செதுக்கப்பட்டவைகளான (தூண்கள்), **षट्** - ஆறும், **तथा** - அப்படியே, **बिल्वसहिताः** - வில்வத்தூண்களோடு நெருங்கி நிற்கின்றவைகளான, **तावन्तः** - அவ்வளவேயான, **खादिराः** - கருங்காலித்தூண்களும், **अपरे** - இவற்றைவிடவேறான, **तथा** - அவ்வளவேயான, **पर्णिनश्च** - பலாமரத் தூண்களும்,

21. (ப - ரை) **श्लेष्मातकमयस्तु** - நறுவிலி மரத்தூணோவென்னில், **एकः** - ஒன்றும், **तथा** - அப்படியே, **देवदारुमयः** - செம்மரத்தில் செதுக்கிய தூண்களும் (உயர்த்தி நாட்டப்பட்டன), **तत्र** - அந்தத் தூண்களில், **द्वावेव** - அந்த தூண்டுகளும், **बाहुव्यस्तपरिग्रहौ** - (நடுவில் நின்றுகொண்டு) இரண்டு கைகளாலும் அகற்றி நீட்டித் தொடக்கூடிய (இடைவெளி யுள்ளவைகளாக) **विहितौ** - நாட்டிவைக்கப்பட்டிருந்தனகள்.

கீர்த்தியையும், உத்தமப் பதவிகளையும் அளிப்பனவான பற்பல விருத விசேஷங்களையும் அனுஷ்டிக்காதவரொருவருமில்லை. பெரியோர் பக்கத்தில் பலதரமாகக் கேட்கவேண்டும், என்கிற கட்டளையின்படி தத்துவ சாஸ்திரங்களைத் தாராளமாயாராய்ந்தறிவு பெறாதவர் ஒருவருமில்லை. அவ்வரசனுடைய அவையின்கண் அங்கத்தினராக வமர்ந்துள்ள அந்தணர்களுள் ஒருவரேனும் வாதப்போர் முனையில் வெற்றி பெறுந் திறமையிற் சிறிதளவுங் குறைந்தவரேயில்லை.

20-21. (க - ரை) யூபஸ்தம்பம் நடுவதற்கு ஏற்றதென்று குறிக்கப்பட்ட நல்வேளையில் வில்வத்திற் செதுக்கிய தூண்களாறும், ஆறு கருங்காலித்தூண்களும் ஒரு புறமாய் நெருக்கி நடப்படலாயின. அவை தவிர பலாமரத்திற் செய்த தூண்கள் ஆறும் மற்றொரு புறத்தில் நாட்டப்பட்டன. பிறகு நறுவிலி மரத்திலொன்றும், தேவதாருவென்கிற செம்மரத்திலிரண்டும், தனித்தனியே ஊன்றப்பெற்றன. ஆக இருபத்தோரு ஸ்தம்பங்கள் ஒன்றுக்கொன்று மார்பளவு இடைவெளியுள்ளதாக ஆங்கு ஸ்தாபிக்கப்படலாயின.

कारिताः सर्व एवैते शास्त्रज्ञैर्यज्ञकोविदैः ।
शोभार्थं तस्य यज्ञस्य काञ्चनालंकृता भवन् ॥ 22 ॥

एकविंशतियूपास्ते एकविंशत्यरत्नयः ।
वासोभिरेकविंशद्भि रेकैकं समलंकृताः ॥ 23 ॥

विन्यस्ता विधिवत्सर्वे शिल्पिभिः सुकृता दृढाः ।
अष्टाश्रयः सर्व एव श्लक्ष्णरूपसमन्विताः ॥ 24 ॥

22. (ப - ரை) **एते** - இவைகள், **सर्वे** - எல்லாம், **शास्त्रज्ञैः** - சாஸ்திரமறிந்தவர்களாயும், **यज्ञकोविदैः** - யக்ஞானுஷ்டானத்தில் ஸமர்த்தர்களுமான (புருஷர்களால்) **कारिताः** - செய்யப்பட்டவைகளாய், **तस्य** - அந்த, **यज्ञस्य** - யாகத்தினுடைய, **शोभार्थं** - அழகிற்காக, **काञ्चनालंकृताः** - ஸுவர்னத்தினால் அலங்கரிக்கப்பட்டவைகளாக, (अ)**भवन्** - ஆயின.

23. (ப - ரை) **ते** - அந்த, **यूपाः** - தூண்கள், **एकविंशति** - (மொத்தம்) இருபத்தி ஒன்று, **एकविंशत्यरत्नयः** - இருபத்தோரு அரத்தினி (இரண்டு அடி) வரையில் உயரமுள்ளனவா யிருந்தன, **एकविंशद्भिः** - இருபத்தொன்றுகளான, **वासोभिः** வஸ்திரங்களைக்கொண்டு, **एकैकं** - ஒவ்வொன்றும், **समलंकृताः** - நன்றாக அலங்கரிக்கப்பட்டதாயின.

24. (ப - ரை) **शिल्पिभिः** - சிற்பிகளினால், **सुकृताः** - நன்றாக நிருமிக்கப்பட்டவைகளாய், **दृढाः** - கெட்டியாயிருக்கின்றவைகளுமான, **सर्वे** - அத்தூண்களெல்லாம், **विधिवत्** - முறைப்படி, **विन्यस्ताः** - வைக்கப்பட்டன, **सर्व एव** - அவை ஒவ்வொன்றும், **अष्टाश्रयः** - எட்டுப் பட்டை தீர்ந்ததாய், **श्लक्ष्णरूपसमन्विताः** - (எல்லாம்) பளபளப்பான உருவத்தோடு கூடினவைகளாயும் (விளங்கலாயின).

---

22. (க - ரை) யக்ஞசாஸ்திரத்தின் மர்மங்களை நன்குணர்ந்து அவற்றின் விதி பிறழாமற் காரியத்தைச் செய்து முடிக்கவும் திறமையுள்ளவர்களான நிபுணர்கள் இத்தூண்களை யெல்லாம் செவ்வனே செப்பனிட்டு அழகிய சித்திரவேலையுள்ள ஸுவர்னப் பூண்களையும் கட்டி நட்டுவைக்கவே இவைகள் பால ஸூர்யர்களைப்போல மாசற்றுப் பிரகாசிக்கலாயின.

23. (க - ரை) அவ்விருபத்தோரு தூண்களும் இருபத்தோரு அரத்தினி அதாவது நாற்பத்திரண்டு அடிவரையில் உயரமுள்ளனவாயிருந்தன. இருபத்தோரு வஸ்திரங்களைக் கொண்டு ஒவ்வொன்றையும் நன்றா யலங்கரிக்கவும் செய்தார்கள்.

24. (க - ரை) கைதேர்ந்த சிற்பிகள் ஏற்றக்குறைவின்றி எட்டுப் பட்டை தீர்த்து செப்பனிட்டுக் கொடுத்த போரை பொத்தலில்லாத அத் தூண்களெல்லாம் முறைப்படி நடப்பெற்று பட்டை முனையிற் பூசிய நெய்யுடன் பளபளவென்று பிரகாசிக்கலாயின.

आच्छादितास्ते वासोभिः पुष्पैर्गन्धैश्च पूजिताः ।
सप्तर्षयो दीप्तिमन्तो विराजन्ते यथा दिवि ॥ 25 ॥

इष्टकाश्च यथान्यायं कारिताश्च प्रमाणतः ।
चितोऽग्निर्ब्राह्मणैस्तत्र कुशलैः शुल्बकर्मणि ॥ 26 ॥

स चित्यो राजसिंहस्य संचितः कुशलैर्द्विजैः ।
गारुडो रुक्मपक्षो वै त्रिगुणोऽष्टादशात्मकः ॥ 27 ॥

25. (ப - ரை) **वासोभिः** - வஸ்திரங்களினால், **आच्छादिताः** - மூடிக்கப்பட்டவைகளாயும், **पुष्पैः** - புஷ்பங்களினாலும், **गन्धैः च** - வாஸனைத் திரவியங்களினாலும், **पूजिताः** - உபசரிக்கப்பெற்றவைகளாயுமிருக்கின்ற, **ते** - அந்தத் தூண்கள் (யாவும்) **दिवि** - தேவலோகத்தில், **सप्तर्षयो यथा** - ஸப்த ரிஷிகள் எவ்வாறோ அவ்வாறு) **दीप्तिमन्तः** - ஒளியுள்ளவைகளாக, **विराजन्ते** - விளங்குகின்றன.

26. (ப - ரை) **शुल्बकर्मणि** - யஜ்ஞகாரியத்தைச் செய்வதில், **कुशलैः** - ஸமர்த்தர்களான, **ब्राह्मणैः** - பிராம்மணர்களினால், **यथान्यायं** - சாஸ்திர முறைப்படியும், **प्रमाणतः** - அளவோடும், **इष्टकाश्च** - கற்களும், **कारिताः च** - செய்விக்கப்பட்டன, **अग्निः** - அக்கினி மேடையானது, **चितः** - (அக்கற்களினால்) கட்டப்பட்டது.

27. (ப - ரை) **राजसिंहस्य** - அரசர்களுள் சிங்கம் போன்ற தசரதனுடைய (யக்ஞ ஸம்பந்தமான), **चित्यः** - சயனம் பண்ணப்பட வேண்டியதான, **सः** - அந்த மேடையானது, **कुशलैः** - ஸமர்த்தர்களான, **द्विजैः** - பிராம்மணர்களினால், **गारुडः** - கருடனைப் போன்ற வடிவமுள்ளதாய், **रुक्मपक्षः** - தங்கச் சிறகினை

---

25. (க - ரை) உத்தமப் பட்டாடை புடுத்தி, மலர்மாலை சூட்டி, சந்தனம் பூசிப் புகைகாட்டி உபசரிக்கப்பெற்ற அத் தூண்களெல்லாம் சோதி மண்டலத்தில் விளங்குகின்ற ஸப்த ரிஷிகளைப் போல ஒளி வீசி பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

26. (க - ரை) யாகத்திற் செய்யவேண்டிய சயனம் எனப்படும் காரியத்திற் கைதேர்ந்தவர்களான அந்தணர்கள் சாஸ்திர முறையின்படி அக்காரியத்திற்கான கற்களை அளவாகத் தயாரித்து வைத்துக்கொண்டு அவற்றால் அக்னியை ஸ்தாபிப்பதற்கான மேடையைப் பாங்காகக் கட்டி முடித்தார்கள்.

27. (க - ரை) அநேக முறை வேள்வி செய்து பழகியிருக்கின்ற அவ்வரசர் பெருமானுடைய இவ்வேள்விக்கான அந்த மேடையானது பக்ஷியினுடையதற்கு மும்மடங்கு கற்கள் அதிகமாயிருக்க வேண்டுமென்கிற விதியின்படி பதினெட்டுக் கற்களின் அளவுள்ளதாய், வாலையும் சிறகையும் விரித்துக் கொண்டு

नियुक्तास्तत्र पशव स्तत्तदुद्दिश्य दैवतम् ।
उरगाः पक्षिणश्चैव यथाशास्त्रं प्रचोदिताः ॥ 28 ॥

शामित्रे तु हयस्तत्र तथा जलचराश्च ये ।
ऋत्विग्भिः सर्वमेवैतन्नियुक्तं शास्त्रतस्तदा ॥ 29 ॥

யிடையிற்கொண்ட இரக்கைகளை யுடையதாய், **त्रिगुणः** - (பிரக்ருதியை விட) மும்மடங்கு கல்லளவுள்ளதாய் (அதனால்), **अष्टादशात्मकः** - பதினெட்டுக் கற்கள் கொண்டதாய் (கட்டப்பட்டது.)

28. (ப - ரை) **यथा शास्त्रं** - சாஸ்திரப்படி, **प्रचोदिताः** - ஏற்படுத்தப் பட்டவைகளான, **पशवः** - பசுக்களும் (ஆடு முதலானவை) **उरगाः** - ஸர்ப்பங்களும், **पक्षिणश्चैव** - பரவைகளுங்கூட, **तत्तत्** - அந்தந்த, **दैवतम्** - தேவதையை, **उद्दिश्य** - உத்தேசித்து, **तत्र** - அந்த யூபஸ்தம்பம் முதலியவைகளில், **नियुक्ताः** - தகையப்பட்டன.

29. (ப - ரை) **तत्र** - அங்கு, அல்லது அவற்றுள், **शामित्रे तु** - கொல்லுவதற்காகவோ வெனில், **हयः** - அச்வமேதக் குதிரையும், **तथा** - அப்படியே, **ये च** - யாதாமவைகளான, **जलचराः** - (ஆமை முதலான) நீர் பிராணிகளுண்டோ அவைகளும், **एतत् सर्वमेव** - ஆக இவை மட்டுமே, **ऋत्विग्भिः** - ரித்துவிக்குகளினால், **शास्त्रतः** - சாஸ்திரத்தை பேற்கொண்டு, **तदा** - அப்போது, **नियुक्तं** - ஏற்படுத்தப்படலாயிற்று.

கிழக்கு முகமாகப் பரக்கின்ற ஸுவர்ணச் சிறையுள்ள ஸுபர்ணனெனப் படும் கெருடப் பரவையைப் போன்றதாய் கட்டடவேலையிற் கைதேர்ந்த ரித்துவிக்குகளினால் சட்டமாய்க் கட்டி முடிக்கப்பெற்றது.

28. (க - ரை) அதன்பின் சாஸ்திர விதியின்படி சேகரித்து வைக்கப்பட்ட அஜம் முதலிய பசுக்களும், இவை போன்றே பாம்புகளும், பரவைகளுங்கூட அவ்வந்த தேவதைகளுக்காக யூபஸ்தம்பங்களிலும், பாம்புப் பெட்டிகளிலும், பரவைக் கூண்டுகளிலும் உசிதம் போல் தகைந்து வைக்கப்படலாயின.

29 (க - ரை) - அந்த யக்ஞத்தில் ரித்துவிக்குகளெனப்படுவோர் கொல்லாமலேவிட்டுவிட வேண்டியவைகளான ஆரண்யப் பசுக்களெனப்படுகிற அநேகம் பிராணிகளையும் விட்டு விட்டு, கிராமியப் பசு வெனப்படுகின்ற முக்கியமான அச்வமேதக் குதிரை, அது போன்ற கூர்மம் முதலிய சிலவற்றை மட்டும் சாஸ்திர பிராமாண்யத்தையே நம்பிக் கொல்லுவதற்கென்று கொணர்ந்து வைத்தார்கள்.

पशूनां त्रिशतं तत्र यूपेषु नियतं तदा ।
अश्वरत्नोत्तमं तस्य राज्ञो दशरथस्य च ॥ 30 ॥

कौसल्या तं हयं तत्र परिचर्य समन्ततः ।
कृपाणैर्विशशासैनं त्रिभिः परमया मुदा ॥ 31 ॥

पतत्रिणा तदा सार्धं सुस्थितेन च चेतसा ।
अवसद्रजनीमेकां कौसल्या धर्मकाम्यया ॥ 32 ॥

30. (ப - ரை) **तत्र** - அங்கு, **पशूनां** - பசுக்களுடைய, **त्रिशतं** - முந்நூறும், **तस्य** - அந்த, **दशरथस्य राज्ञः** - தசரதனென்னும் மஹாராஜனுடைய, **अश्वरत्नोत्तमं च** - உயர்ந்த இரத்தினம் போன்ற குதிரையும், **तदा** - அப்பொழுது, **नियतं** - கட்டப்பட்டலாயிற்று.

31. (ப - ரை) **कौसल्या** - பட்டமஹிஷியான கௌஸல்யா தேவியானவர், **तत्र** - அவ்விடத்தில், **तं** - அந்த, **हयं** - குதிரையை, **समन्ततः** - எல்லாப் புறமாயும், **परिचर्य** - சுற்றிவந்து, **त्रिभिः** - மூன்றுகளான, **कृपाणैः** - கத்திகளினால், **एनं** - இதை, **परमया** - மகத்தான, **मुदा** - சந்தோஷத்தோடு, **विशशास** - பிளந்து வைத்தார்.

32. (ப - ரை) **तदा** - அப்பொழுது, **कौसल्या** - கௌஸல்யா தேவியானவர், **धर्मकाम्यया** - தர்மம் விருத்திக்க வேண்டுமென்கிற ஆசையினால், **सुस्थितेन** - ஸ்திரமான, **चेतसा च** - சித்தத்தோடும், **पतत्रिणा सार्धं** - அந்த குதிரையோடுகூட, **एकां** - ஒரு, **रजनीं** - இரவை (முழுதும்), **अवसत्** - வசித்தார்.

30. (க - ரை) - அந்த யூபங்களில் நூற்றுக்கணக்கான ஜந்துக்களாகிய பசுக்களும், அந்த தசரத மஹாராஜனுடைய முக்கியமான அச்வமேதக் குதிரையும் அப்பொழுது கட்டப்படலாயின.

31. (க - ரை) சாஸ்திர விதியை முற்றிலும் அனுசரித்து நடப்பவர்களான, கௌஸல்யை, ஸுமித்திரை, கைகேயி என்னப்படுகிற மஹிஷிகள் மூவரும், தங்கத்தினாற் செய்த ஊசிகள் மூன்றைக் கையிலெடுத்து பரிந்துபோன அச்வத்தின் மீது அறுக்கவேண்டிய விடங்களைக் குறி குறிப்பிட்டு வைத்தார்களாம்.

32. (க - ரை) தர்ம விருத்தியில் விருப்புற்றவரான கௌஸல்யா தேவியார் அலசற் படாமல் நிலைத்து நிற்கின்ற மனத்தினராகி மரித்துக் கிடக்கின்ற அக் குதிரையோடு ஓர் இரவு முற்றும் படுத்துக் கிடந்தாராம்.

होताऽध्वर्युस्तथोद्गाता हस्तेन समयोजयन् ।
महिष्या परिवृत्त्या च वावातां च परां तथा ॥ 33 ॥

पतत्रिणस्तस्य वपामुद्धृत्य नियतेन्द्रियः ।
ऋत्विक् परमसंपन्नः श्रपयामास शास्त्रतः ॥ 34 ॥

धूमगन्धं वपायास्तु जिघ्रति स्म नराधिपः ।
यथाकालं यथान्यायं निर्णुदन्पापमात्मनः ॥ 35 ॥

33. (ப - ரை) **होता** - ஹோதாவென்பவரும், **अध्वर्युः** - அத்வரியுவும், **उद्गाता** - உத்காதாவும், **तथा** - அப்படியே (பிரும்ஹாவும் ஆக இன்னல்வரும்) **महिष्या** - மஹிஷியோடும், **परिवृत्त्या च** - பரிவிருத்தியோடும், **वावातां** - வாவாதை யையும், **तथा** - அப்படியே, **परां च** - மற்றொரு பாலாகலியையும், ஆக இன்னல் வரையும், (இங்கு முறை கிடையாது.) **हस्तेन** - கையினால், **समयोजयन्** - (தக்ஷிணை யென்று பெற்றுத்) தொட்டு வைத்தார்கள்.

34. (ப - ரை) **तस्य** - அந்த, **पतत्रिणः** - குதிரையினுடைய, **वपां** - வபையை, **उद्धृत्य** - எடுத்து, **नियतेन्द्रियः** - ஜாக்கிரதை யுள்ளவராயும், **परमसंपन्नः** - மிக்க ஸமர்த்தருமான, **ऋत्विक्** - ரித்விக்கானவர் (அத்வர்யு), **शास्त्रतः** - சாஸ்திரப்படி, **श्रपयामास** - சமைத்தார்.

35. (ப - ரை) **नराधिपः तु** - மஹாராஜனோ வெனில், **यथाकालं** - காலம் கடக்காமலும், **यथान्यायं** - சாஸ்திரப்படிக்கும், **आत्मनः** - தன்னுடைய, **पापं** - பாபங்களை, **निर्णुदन्** - போக்கிக் கொள்பவராக, **वपायाः** - வபையினுடைய, **धूमगन्धं** - புகையினுடைய வாஸனையை, **जिघ्रति स्म** - முகர்ந்தார்.

33. (க - ரை) பிரம்ஹா, ஹோதா, உத்காதா, அத்வர்யு எனப்படுகின்ற முக்கிய ரித்விக்குகள் நால்வரும் முறையே, மஹிஷி, வாவாதை, பரிவிருத்தி, பாலாகலீ எனப்படும் நால்வரையும் தக்ஷிணையாகப் பெற்றுக்கொண்ட பாவனையாகக் கையினால் தொட்டுத் திருப்பிக் கொடுத்து விட்டனராம்.

34. (க - ரை) மிக்க ஸமர்த்தரான அத்துவர்யு வெனப்படும் ரித்விக்கான வர், மெத்த ஸாவதானமாக அக் குதிரையின் வபையின் ஸ்தானத்திலுள்ள தேஜினீ எனும் உறுப்பை யெடுத்து சாஸ்திர முறைப்படி சமைக்கலானார்.

35. (க - ரை) அரசனோவெனில் தனது பாபங்களை யெல்லாம் போக்கிக் கொள்ள எண்ண முள்ளவராய், சமைக்கப் படுகிற வபையினின்றுண்டாகும் புகை யின் மணத்தைக் காலங் கடக்காமல் சாஸ்திரப்படி முகரலானார்.

हयस्य यानि चाङ्गानि तानि सर्वाणि ब्राह्मणाः ।
अग्नौ प्रास्यन्ति विधिवत्समन्त्राः षोडशर्त्विजः ॥ 36 ॥

प्लक्षशाखासु यज्ञानामन्येषां क्रियते हविः ।
अश्वमेधस्य यज्ञस्य वैतसो भाग इष्यते ॥ 37 ॥

त्र्यहोऽश्वमेधः संख्यातः कल्पसूत्रेण ब्राह्मणैः ।
चतुष्टोममहस्तस्य प्रथमं परिकल्पितम् ॥ ॥ 38 ॥

---

36. (ப-ரை) **समन्त्राः** - மந்திரமறிந்தவர்களாய், **ऋत्विजः** - ஆர்த்விஜ்யம் (ரித்விக்குகளின் கடமை) செய்ய வந்திருப்பவர்களான, **षोडश ब्राह्मणाः** - பதினாறு பிராம்மணர்கள், **हयस्य** - குதிரையினுடைய, **यानि च** - யாதொரு அவயவங்களான, **अङ्गानि** - அங்கங்களுண்டோ, **तानि सर्वाणि** - அவைகளை யெல்லாம், **विधिवत्** - விதிப்படி, **अग्नौ** - அக்கினியிலே, **प्रास्यन्ति** - ஹோமிக்கின்றார்கள்.

37. (ப-ரை) **अन्येषां** - மற்றவைகளான, **यज्ञानां** - யாகங்களுடைய, **हविः** - வபையானது, **प्लक्षशाखासु** - பிலக்ஷ (இச்சி) சாகைகளில், **क्रियते** - அவதானம் செய்யப்படுகிறது, **अश्वमेधस्य** - அச்வமேத மென்கிற, **यज्ञस्य** - யாகத்தினுடைய, **भागः** - ஹவிர்ப்பாகமானது, **वैतसः** - வேதஸ (வஞ்சி) சாகைகளிலாக, **इष्यते** - ஸம்மதிக்கப்படுகிறது.

38. (ப-ரை) **अश्वमेधः** - அச்வமேத யாகமானது, **त्र्यहः** - மூன்று (ஸவனீய) அஹஸ்ஸுகளுள்ளதாக, **कल्पसूत्रेण** - கல்பஸூத்திரத்தினாலும், **ब्राह्मणैः** - (அவற்றிற்கு மூலமான) பிராம்மணமென்கிற வேத வாக்யங்களினாலும், **संख्यातः** - கணிக்கப்பட்டிருக்கின்றது, **तस्य** - அதனுடைய, **प्रथमं** - முதலாவதான, **अहः** - தினமானது, **चतुष्टोमं** - நான்கு ஸ்தோமங்களையுடையதாக, **परिकल्पितम्** - ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

---

36. (க-ரை) மந்திர வித்துக்களான ரித்விக்குகள் பதினாறு பேர்களும் ஹோமம் பண்ணக்கூடியவைகளான வபை முதலியவைகளான குதிரையினுடைய மற்ற அங்கங்களையும் சாஸ்திர விதிப்படி ஹோமம் செய்தார்கள்.

37. (க-ரை) மற்ற யாகங்களைப் பற்றிய பொதுவான வபையை பிலக்ஷ சாகைகளில் அவதானம் செய்து வைக்கவேண்டுமென்று விதியுண்டு. ஆனால் அச்வமேதத்திற்கோ வெனில் அந்த ஹவிர்ப்பாகமானது வேதஸ சாகைகளில் வைக்கப்பட வேண்டுமென்று விசேஷவிதி ஏற்பட்டிருக்கின்றது.

38—38½. (க-ரை) கல்பஸூத்திரங்களும் அதற்கு மூலமான பிராம்மண வாக்யங்களும் அச்வமேத யாகத்திற்கு ஸவனீயாஹஸ்ஸுக்களென்கிற மூன்று தினங்களை முக்கியமாகச் சொல்லுகின்றன. அவற்றுள் த்ரிவ்ருத், பஞ்சதச, ஸப்ததச,

उक्थ्यं द्वितीयं संख्यातमतिरात्रं तथोत्तरम् ॥ 38½ ॥
कारितास्तत्र बहवो विहिताः शास्त्रदर्शनात् ॥ 39 ॥
ज्योतिष्टोमायुषी चैवमतिरात्रौ च निर्मितौ ।
अभिजिद्विश्वजिच्चैवमप्तोर्यामो महाक्रतुः ॥ 40 ॥
प्राचीं होत्रे ददौ राजा दिशं स्वकुलवर्धनः ।
अध्वर्यवे प्रतीचीं तु ब्रह्मणे दक्षिणां दिशम् ॥ 41 ॥

38½. (ப - ரை) **उक्थ्यं** - இருபத்தோரு உக்த்யங்களையுடையது, **द्वितीयं** - இரண்டாவதாக, **संख्यातं** - எண்ணப்பட்டிருக்கிறது, **अतिरात्र** - ஸர்வஸ்தோமமான அதிராத்ரமானது, **उत्तरम्** - அதற்குப் பிந்திய மூன்றாவதாக, **तथा** - கெணிக்கப்பட் டிருக்கிறது.

39. (ப - ரை) **तत्र** - அந்த அச்வமேதத்தில், **शास्त्रदर्शनात्** - சாஸ்திராந்திரத்தினுடைய பராமர்சத்தினால், **विहिताः** - ஏற்படுத்தப்பட்ட, **बहवः** - மற்றும் அனேகங் கிரதுக்களும், **कारिताः** - செய்து வைக்கப்பட்டன.

40. (ப - ரை) (அவையாவென?) **ज्योतिष्टोमायुषी च** - ஜோதிஷ்டோமம், ஆயுஷ் இவ்விரண்டும், **एवं** - இப்படியே, **अतिरात्रौ च** - இரண்டு அதிராத்திரங்களும், **निर्मितौ** - நிருமிக்கப்படலாயின, **अभिजित्** - அபிஜித்தும், **विश्वजित् च** - விச்வஜித்தும், **एवं** - இப்படியே, **अप्तोर्यामः** - அப்தோர்யாம மென்கிற, **महाक्रतुः** - பெரிய கிரதுவும், (**निर्मिताः** - அனுஷ்டிக்கப் பட்டன.)

41. (ப - ரை) **स्वकुलवर्धनः** - தனது குலத்திற்கு அபிவ்ருத்திகராகிய, **राजा** - தசரத மஹாராஜன், **होत्रे** - ஹோதாவின் பொருட்டு, **प्राचीं दिशं** - கிழக்கு

ஏக விம்சதி, களான நான்கு ஸ்தோமங்களையுடையது முந்தியதாகவும், இருபத்தோரு உக்தியங்களுள்ளது இரண்டாவதாகவும், ஸர்வஸ்தோமமான அதிராத்திரமானது மூன்றாவதாகவும் கெணிக்கப்பட் டிருக்கின்றது.

39—40. (க - ரை) இவைகள் நிற்க அச்வமேதத்தைப் பற்றிய சாஸ்திராந்திரங்களைப் பராமரிசிக்கையில் ஏற்படுகின்றவைகளான ஜோதிஷ்டோம, ஆயுஷ், அதிராத்திர, அபிஜித், விச்வஜித், அப்தோர்யாமம் எனப்படுகின்ற உத்தம கிரதுக்கள் பலவும் அவ்வரசனால் அனுஷ்டிக்கப் படலாயினவாம்.

41-42. (க - ரை) மஹா உதாரர்களான இக்ஷ்வாகு முதலிய பெரியோர்களின் நற்குலத்திற் தோன்றிய இந்த தசரத மஹாராஜன், பண்டைய காலத்தில்

उद्गात्रे च तथोदीचीं दक्षिणैषा विनिर्मिता ।
अश्वमेधे महायज्ञे स्वयंभुविहिते पुरा ॥ 42 ॥

क्रतुं समाप्य तु तदा न्यायतः पुरुषर्षभः ।
ऋत्विग्भ्यो हि ददौ राजा धरां तां क्रतुवर्धनः ॥ 43 ॥

ऋत्विजस्त्वब्रुवन्सर्वे राजानं गतकल्मषम् ।
भवानेव महीं कृत्स्नमेको रक्षितुमर्हति ॥ 44 ॥

திக்கை, **ददौ** - கொடுத்தார், **प्रतीचीं तु** - மேற்கு திக்கையோவெனில், **अध्वर्यवे** - அத்வரியுவுக்கு (கொடுத்தார்.) **ब्रह्मणे** - பிரம்மாவுக்கு, **दक्षिणां दिशम्** - தெற்குதிக்கை (கொடுத்தார்.)

42. (ப-ரை) **तथा** - அப்படியே. **उद्गात्रे** - உத்காதாவென்ற பெயருள்ள ரித்விக்கின் பொருட்டு, **उदीचीं** - வடக்கு திக்கை (கொடுத்தார்.) **एषा** - இவ்விதமான, **दक्षिणा** - தக்ஷிணையானது, **पुरा** - முன்னால், **स्वयंभुविहिते** - பிரம்மதேவனால் நிரூபிக்கப்பட்ட, **अश्वमेधे** - அச்வமேதமென்பதான, **महायज्ञे** - மஹத்தான யாகத்தில், **विनिर्मिता** - ஏற்படுத்தப்பட்டது.

43. (ப-ரை) **पुरुषर्षभः** - புருஷச்ரேஷ்டரான தசரத ராஜன், **तदा** - அப்பொழுது, **न्यायतः** - சாஸ்திரப்படி. **क्रतुं** - யக்ஞத்தை. **समाप्य तु** முடித்தபின், **क्रतुवर्धनः** - யக்ஞபூர்த்தியை விரும்புகிறவரான, **राजा** ராஜாவானவர், **तां** - அந்த, **धरां** - பூமியை, **ऋत्विग्भ्यः** - ரித்விக்குகளின் பொருட்டு, **ददौ हि** - கொடுத்தாரன்றோ!

44. (ப-ரை) **ऋत्विजस्तु** - ரித்விக்குகளோவெனில், **गतकल्मषम्** - நிஷ்கல்மஷரான, அதாவது மாசற்ற மனத்தினரான, **राजानं** - தசரத ராஜனை. **सर्वे** - எல்

பிரம்மதேவன் நிரூபித்த அச்வமேத மஹா யக்ஞத்திற்கு விதிக்கப்பட்ட தக்ஷிணையை ஒட்டி, ஹோதா, அத்வர்யு, பிரம்மா, உத்காதா என்கிற ரித்விக்குகளுக்கு, முறையே, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்னும் திசைகளை மன்னவர் தக்ஷிணையாகக் கொடுத்தார்.

43-45½. (க-ரை) புருஷச்ரேஷ்டரான தசரத சக்கரவர்த்தி சாஸ்திர முறைப்படி யாகத்தை முடித்து, அதில் எல்லாம் பயன்படுமாறு அகண்டமான பூமண்டலத்தையும் ரித்விக்குகளுக்காகக் கொடுத்தாரன்றோ, அப்படி மன்னவர் பூமியைக் கொடுத்திருக்கையிலும் அதனை அவர்கள் பெற்றுக்கொண்டே விட்டார்களோ? இல்லை; பிறகு என்னதான் செய்தார்கள்? "ஹே பூபாலனே! வேதாத்யயன விசாரணையிலேயே நித்திய திருப்தர்களான எமக்கு இப் பண்ணினையால் என்ன விருக்கின்

न भूम्या कार्यमस्माकं न हि शक्ताः स्म पालने ।
रताः स्वाध्यायकरणे वयं नित्यं हि भूमिप ॥ 45 ॥

निष्क्रियं किंचिदेवेह प्रयच्छतु भवानिति । ॥ 45½ ॥

मणिरत्नं सुवर्णं वा गावो यद्वा समुद्यतम् ।
तत्प्रयच्छ नरश्रेष्ठ धरण्या न प्रयोजनम् ॥ 46½ ॥

லோரு மொன்று சேர்ந்து, **अब्रुवन्** - சொன்னார்கள், **भवानेव** - தாங்களே, **कृत्स्नां** - ஸமஸ்தமான, **महीं** - பூமியை, **एकः** - ஒருவராக, **रक्षितुं** - காப்பதற்கு, **अर्हति** - தக்கவராயிருக்கின்றீர்கள்.

45. (ப - ரை) **भूमिप** - பூபதியே! **अस्माकं** - எங்களுக்கு, **भूम्या** - பூமியினாலாகக் கூடிய, **कार्यं** - காரிய மெதுவும், **न** - இல்லை, **पालने** - (அதைக்) காப்பதில், **शक्ताः** - சக்தியுள்ளவர்களாக, **नहिस्म** - இருக்கவில்லையே! **वयं** - நாங்கள், **नित्यं** - எப்போதும், **स्वाध्यायकरणे** - வேதம் ஓதுவதிலேயே, **रताः हि** - அவாவுள்ளவர்களன்றோ!

45½. (ப - ரை) **इह** - இதற்காக, **किंचिदेव** - சிறிதளவேயான, **निष्क्रियं** - மூல்யத்தை, (விலையை) **भवान्** - தாங்கள், **प्रयच्छतु** - கொடுக்கட்டும், **इति** - என்று.

46½. (ப - ரை) **मणिरत्नं** - உயர்ந்த இரத்தினமோ, **सुवर्णं** - ஸுவர்ணமோ, **वा** - அல்லது, **गावः** - கோக்களோ, **यद्वा समुद्यतम्** - அல்லது கைக்குக் கிட்டியது எதுவோ, **तत्** - அதை, **प्रयच्छ** - தந்திடும், **नरश्रेष्ठ** - நராதிபரே, **धरण्या** - பூமியினால், **प्रयोजनम्** - ஆவதொன்றும், **न** - (எங்களுக்கு) இல்லை.

றது? இதைக் காப்பதற்கு எங்களுக்கு ஆற்றல் தானுண்டோ! ஆதலால் வேண்டாம், இது உம்மதாகவே யிருக்கட்டும், கொடுத்ததைத் திருப்பிப்பெற உமக்கு மனமில்லாதிருந்தால் ஏதேனும் ஒரு சிறு பொருளை மட்டும் இதற்கு மூல்யமாக எங்களிடம் கொடுத்து இதனைப் பெற்றுக் கொள்ளும். ஸமஸ்த பூமண்டலத்தையும் நீர் ஒருவரே, வேறுதவி வேண்டாமற் காப்பாற்றும் ஆற்றலுள்ள வரன்றோ," என்கிற இவ் விண்ணப்பத்தையேதான் செய்து கொண்டார்கள்.

46½. (க - ரை) உயர்ந்த இரத்தினத்தை, ஸுவர்ணத்தை, பசுக்களை அல்லது கையிற் கிடைத்த யாதேனு மொன்றை நீர் கொடுக்கலாம். அவைகள் எங்களுக்கு எவ்வகையிலேனும் உதவும். இப்பாரினாலோ வெனில் பிரயோஜன மொன்றுமேயில்லை என்று அதனை யவர்கள் அரசர்பெருமானிடமே திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

एवमुक्तो नरपतिर्ब्राह्मणैर्वेदपारगैः ।
गवां शतसहस्राणि दश तेभ्यो ददौ नृपः ॥ 47½ ॥
दशकोटीः सुवर्णस्य रजतस्य चतुर्गुणम् । ॥ 48 ॥
ऋत्विजस्तु ततः सर्वे प्रददुः सहिता वसु ।
ऋश्यशृङ्गाय मुनये वसिष्ठाय च धीमते ॥ 49 ॥

47½. (ப - தை) **वेदपारगैः** - மறையின் கரைகண்டவர்களான, **ब्राह्मणैः** - அந்தணர்களால், **नरपतिः** - அரசனானவர், **एवं** - இப்படி, **उक्तः** - சொல்லப்பட்டார், **तेभ्यः** - அவர்களின் பொருட்டு, **गवां** - பசுக்களுடைய, **दश** - பத்து, **शतसहस्राणि** - நூறாயிரங்களை, **नृपः** - அந்தவரசனானவர், **ददौ** - கொடுத்தார்.

48. (ப - தை) **सुवर्णस्य** - தங்கத்தினுடைய. **दशकोटीः** - பத்துக் கோடிகளையும், **रजतस्य** - வெள்ளியினுடைய, **चतुर्गुणम्** - நான்கு மடங்கான நாற்பது கோடியையும் (கொடுத்தார்.)

49. (ப - தை) **ततः** - பிறகு, **सर्वे** - எல்லா, **ऋत्विजस्तु** - ரித்விக்குகளும், **सहिताः** - ஒன்று சேர்ந்தவர்களாக, **वसु** - (தக்ஷிணையாகக் கிடைத்த) பொருளை, **ऋश्यशृङ्गाय** - ரிச்யசிருங்கரென்கிற, **मुनये** - முனிவரிடத்திலும், **धीमते** - [illegible]ரான, **वसिष्ठाय च** - வஸிஷ்டரிடத்திலும், **प्रददुः** - (பிரித்து விநியோகிப்பதற்காகக்) கொடுத்தார்கள்.

47½. (க - தை) ஆத்மாராமர்களான ரிஷிகள் இவ்வண்ணம் கூறித் தாம் பெற்ற தரணியைத் திருப்பிக் கொடுத்துவிடவே, அரசர் பெருமான் அன்னாரின் வாழ்க்கைக்கு இன்றியமையாத அவசியங்கள் பசுக்களையும் ஆதரவுடன் அவர்களுக்கு அளித்து உதவினராம்.

48. (க - தை) அதிலும் திருப்தி பெறாத அவ்வரசன் வெள்ளியையும், தங்கத்தையும் கோடிக்கணக்காக வேண்டாமென்றாலும் அவ்வந்தணர்கள் மீது வாரி வருஷித்தாராம்.

49. (க - தை) பிறகு ரித்விக்குகள் யாவரும் தங்களுக்கு அச்வமேதயாகாவஸரங்களில் தக்ஷிணையாகக் கிடைத்த திரவியங்களை எல்லாம், கிரமமாய்ப் பிரித்துத் தருவதற்காக, ரிச்யசிருங்கர், வஸிஷ்டர் இவர்களிடத்தில் ஒன்று சேர்ந்து ஸமர்ப்பித்தார்கள்.

ततस्ते न्यायतः कृत्वा प्रविभागं द्विजोत्तमाः ।
सुप्रीतमनसः सर्वे प्रत्यूचुर्मुदिता भृशम् ॥ 50 ॥

ततः प्रसर्पकेभ्यस्तु हिरण्यं सुसमाहितः ।
जाम्बूनदं कोटिसंख्यं ब्राह्मणेभ्यो ददौ तदा ॥ 51 ॥

दरिद्राय द्विजायाथ हस्ताभरणमुत्तमम् ।
कस्मैचिद्याचमानाय ददौ राघवनन्दनः ॥ 52 ॥

50. (ப - ரை) **ततः** - பிறகு, **ते** - அந்த, **द्विजोत्तमाः** - பிராம்மணோத்தமர்கள், **न्यायतः** - சாஸ்திரநியாயமாக, **प्रविभागं** - பிரிவினையை, **कृत्वा** - செய்துகொண்டு, **सुप्रीतमनसः** - நன்றாகத் திருப்தியடைந்த மனதையுடையவர்களாய், **सर्वे** - எல்லோரும், **भृशम्** - மிகவும், **मुदिताः** - ஸந்தோஷமடைந்தோம் (என்று), **प्रत्यूचुः** - பதிற் கூறினார்கள்.

51. (ப - ரை) **ततः** - பிறகு, **सुसमाहितः** - மிக்க ஜாக்கிரதையுள்ளவரான அவ்வரசன், **प्रसर्पकेभ्यस्तु** - வேடிக்கைப் பார்க்க மட்டும் வந்தவர்களான, **ब्राह्मणेभ्यः** - பிராம்மணர்களின் பொருட்டும், **जाम्बूनदं** - ஜம்பூ நதியிலுண்டான, **हिरण्यं** - ஸுவர்ணத்தை, **कोटिसंख्यं** - கோடிக்கணக்காக, **तदा** - அப்போது, **ददौ** - கொடுத்தார்.

52. (ப - ரை) **अथ** - பிறகு, **याचमानाय** - யாசிக்கின்றவரான, **कस्मैचित्** - ஒராளொரு, **दरिद्राय** - தரித்திரனான, **द्विजाय** - பிராம்மணனின் பொருட்டு, **उत्तमम्** - உயர்ந்ததான, **हस्ताभरणं** - கைவளையை, **राघवनन्दनः** - ரகுவம்சத்திற்கு ஸந்தோஷகரரான தசரத ராஜன், **ददौ** - கொடுத்தார்.

50. (க - ரை) பிறகு அப் பெரியோர்களும் ரித்விக்குகளுள் இன்னாருக்கு இவ்வளவு பங்கென்று வகுத்திருக்கின்ற சாஸ்திர விதியின்படி அப்பொருட்களையெல்லாம் பகர்ந்து கொடுத்து, ஸந்தோஷந்தானோ வென்று வினவவே, ஆஹா மெத்த ஸந்தோஷம் என்று இவர்கள் பதிற் கூறினார்கள்.

51. (க - ரை) மேலும் யக்ஞ ஸதஸிற் கூடியவரெல்லோருமே தக்ஷிணை பெற அருகராவார், என்கிற சுருதியின்படி அங்கு யாகத்தைப் பார்க்க வந்த பார்ப்பனருக்கெல்லாம் ஒருவர் தவறாமல் தகதக வென்கிற தங்கப் பாளங்களை அவ்வரசன் தாராளமாய் வழங்கலானார்.

52. (க - ரை) இப்படி தக்ஷிணை கொடுத்து வரும் இடையில், தரித்திரனான, பிராம்மணனொருவன், அவ்வரசனணிந்திருக்கின்றன விலையற்ற கைத்தோடா ஒன்றை வேண்டிக் கொள்ளவே, அது அவனுக்குத் தக்கதா வென்று கூட சிந்திக்காமல், அவ்வரசன் அதனை உடனே கழற்றி அவர் கரத்திற் கோர்த்து விட்டார்.

ततः प्रीतेषु नृपतिर्द्विजेषु द्विजवत्सलः ।
प्रणाममकरोत्तेषां हर्षपर्याकुलेक्षणः ॥ 53 ॥

तस्याशिषोऽथ विधिवद्ब्राह्मणैः समुदीरिताः ।
उदारस्य नृवीरस्य धरण्यां प्रणतस्य च ॥ 54 ॥

ततः प्रीतमना राजा प्राप्य यज्ञमनुत्तमम् ।
पापापहं स्वर्नयनं दुष्करं पार्थिवर्षभैः ॥ 55 ॥

53. (ப - ரை) **ततः** - பிறகு, **द्विजवत्सलः** - பிராம்மணர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரான, **नृपतिः** - நரபதியானவர், **द्विजेषु** - பிராம்மணர்கள், **प्रीतेषु** - திருப்தியடையவே, **हर्षपर्याकुलेक्षणः** - ஸந்தோஷத்தினால் கலங்கிய கண்களையுடையவராக, **तेषां** - அவர்களுக்கு, **प्रणामं** - நமஸ்காரத்தை, **अकरोत्** - செய்தார்.

54. (ப - ரை) **अथ** - பிறகு, **उदारस्य** - உதாரத்தன்மையுள்ளவரும், **धरण्यां** - தரையில், **प्रणतस्य च** - விழுந்து நமஸ்கரிக்கின்றவருமான, **तस्य** - அந்த, **नृवीरस्य** - நரவீரனுக்கு, **ब्राह्मणैः** - அந்தணர்களால், **विधिवत्** - முறைப்படி, **आशिषः** - ஆசீர்வாதங்கள், **समुदीरिताः** - நன்கு மொழியப்பட்டன.

55. (ப - ரை) **ततः** - பிறகு, **राजा** - அரசனானவர், **पापापहं** - பாபங்களைப் போக்குவதும், **स्वर्नयनं** - ஸ்வர்க்கத்திற் சேர்ப்பதும், **पार्थिवर्षभैः** - அரசசிரேஷ்டர்களாலும், **दुष्करं** - செய்யமுடியாததுமான, **अनुत्तमम्** - சிறந்த, **यज्ञं** - யக்ஞத்தை, **प्राप्य** - பூர்த்தியடையப் பெற்று, **प्रीतमनाः** - ஸந்தோஷமடைந்த மனதையுடையவராக (ஆனார்).

53. (க - ரை) இப்படிக் கற்பகம்போல் வேண்டியவற்றையெல்லாம் வழங்குகின்ற அவ்வள்ளலின்பால் வேதியர்கள் உள்ளங்கனிந்து நின்றனர். தாய்மார்கள் தமது இளம் பிள்ளைகளைப் பேணுமாறு பிராம்மணர்களைப் போஷிப்பவரான அவ்வரசன், அவ் வந்தணர் குழாத்திற்கு அப்பொழுதுண்டான அளவற்ற திருப்தியை ஆனந்தநீர் பெருக்குகின்ற தமது திருக்கண்களாற்கண்டு அவர் தம் அடியின் கீழ் முடிவைத்துத் தெண்டனிட்டார்.

54. (க - ரை) கும்பிட்டுக் கும்பிட்டுக் கொண்டிருக்கின்றவரான அவ்வுதார புருஷனை உத்தேசித்து, பிராம்மணரெல்லோரும், பற்பல ஆசிர்வசனங்களையும் மொழிந்து மனமாற வாழ்த்துகின்றார்கள்.

55. (க - ரை) - மக்கட்பேற்றிற்கு பிரதிபந்தங்களான துரிதங்களைத் துரத்தி, ஸத்ஸந்தானத்தையீன்று, அவ்வாயிலாக ஸ்வர்க்கத்திற் சேர்ப்பதும், வல்லார்களுக்கும் வேட்கத்தரமல்லாததுமான அந்த யக்ஞத்தை இடையூறின்றி முடியப்பெற்ற அம்மன்னன் முற்றிலும் மனமுவந்தானாகினன்.

ततोऽब्रवीदृश्यशृङ्गं राजा दशरथस्तथा ।
कुलस्य वर्धनं त्वं तु कर्तुमर्हसि सुव्रत ॥ 56 ॥

तथेति च स राजानमुवाच द्विजसत्तमः ।
भविष्यन्ति सुता राजंश्चत्वारस्ते कुलोद्वहाः ॥ 57 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
चतुर्दशः सर्गः ॥ 14 ॥

56. (ப - ரை) **ततः** - பிறகு, **राजा** - அரசனான, **दशरथः** - தயரதன், **ऋश्यशृङ्गं** - ரிச்யசிருங்க மஹரிஷியை, **तथा** - அப்படி, **अब्रवीत्** - சொன்னார், **सुव्रत** - சிரேஷ்டமான விரதத்தை யுடையவரே, **त्वं तु** - நீரோவெனில், **कुलस्य** - எனது குலத்திற்கு, **वर्धनं** - அபிவிருத்தியைச் செய்கின்றதான (இஷ்டி ஒன்றை), **कर्तुं** - செய்வதற்கு, **अर्हसि** - ஸமர்த்தரா யிருக்கின்றீர்.

57. (ப - ரை) **द्विजसत्तमः** - பிராம்மண சிரேஷ்டரான, **सः** - அவர், **तथेति च** - அப்படியே யென்றும், **राजन्** - அரசனே, **ते** - உமக்கு, **कुलोद्वहाः** - குலத்தைக் காக்கக்கூடியவர்களான, **चत्वारः** - நால்வர்களான, **सुताः** - புத்திரர்கள், **भविष्यन्ति** - உண்டாகப் போகின்றனர் (என்றும்), **राजानं** - அரசனைப் பார்த்து, **उवाच** - சொன்னார்.

---

56. (க - ரை) இப்படி மக்கட்பேருக்கு இடுக்கண் விளைத்துக்கொண்டிருந்த பாவங்களையெல்லாம் ஹயமேதத்தால் துறத்திப்போர்ந்த அவ்வரசன் முன் ஸுமந்திரர் தனக்குச் சொல்லி வைத்திருக்கின்ற விருத்தாந்தத்தை நினைத்து ஸந்தான ஸம்ருத்திக்குக் காரணமான இஷ்டியொன்றை அனுஷ்டித்துப் பூர்த்திசெய்து வைக்க வேண்டுமென்று ரிச்யசிருங்க ரிஷியை வெகுவாக வேண்டிக்கொண்டார்.

57. (க - ரை) அதன்மேல் அவ்வந்தணரும் ஆஹா அப்படியே ஆகட்டும், அரசே! உமது குலத்தைத் தாங்குவதற்குத் திறமையுள்ள பெருமைவாய்ந்த ஸத்புத்திரர்கள் நால்வர் நிச்சயமாய் அவதரிக்கப்போகின்றனர் என்று பார்த்திவனுக்கு விடை பகர்ந்தார்.

पञ्चदशः सर्गः ॥ 15 ॥

* मेधावी तु ततो ध्यात्वा स किंचिदिदमुत्तरम् ।
लब्धसंज्ञ स्ततस्तं तु वेदज्ञो नृपमब्रवीत् ॥ 1 ॥

1. (ப - ரை) **ततः** - இப்படித் தேறுதலைச் சொல்லியபின், **मेधावी** - ஆராய்ந்தறியும் திறமையுள்ளவராயும், **वेदज्ञः** - (அதர்வ) வேதம் தெரிந்தவருமான, **सः** - அந்த ரிச்யசிருங்கர், **किंचित् तु** - சிறிதளவு, **ध्यात्वा** - சிந்தித்துப் பார்த்து, **ततः** - அதனால் அல்லது உடனே, **लब्धसंज्ञः** - அடைபட்ட நினைவையுடையவராக, **तं** - அந்த, **नृपं** - அரசனைக்குறித்து, **इदं तु** - இதுவேயான, **उत्तरम्** பதிலை **अब्रवीत्** - சொன்னார்.

1. (க - ரை) - இப்படிக் குலத்திற்கு அபிவ்ருத்திகரர்களான குமாரர்கள் நால்வர் அவதரிக்கப் போகின்றனரென்று அவ்வரசனுக்கு உறுதி கூறிய, முனிவர் மேற்செய்ய வேண்டியதைச் சற்று ஆலோசித்துப் பார்த்து அதர்வ வேதத்தில் சொல்லப்படுகிற புத்திரகாமேஷ்டியை செய்துவைப்பதென்கிற நினைவுகொண்டி வ்வாறு மொழிந்திடலானார்.

* இப்பதினைந்தாம் ஸர்க்கத்தில் பகவான் புவியில் அவதரிக்க தேவர்களால் பிரார்த்திக்கப்படுகின்றார். அவதாரத்தின் முக்கிய நோக்கம் தர்மஸம்ரக்ஷணமேதான். அது நிலைப்பதற்காகவே தர்மவழிக்குத் தீங்கிழைக்கின்ற துஷ்டர்களை நிக்ரஹிக்கவேண்டியது அவசியமாகிறது. அவ்வழியை அழியாமற் காக்கின்ற ஸாது ஜனங்களை ரக்ஷிப்பதும் முக்கியமாகின்றது. இவ்வளவைக் கொண்டுதான் அப்பெருமான் இருகாரியங்களையும் செய்கின்றானும். இதுவன்றி வேண்டியவர், வேண்டாதாரென்கிற வேற்றுமை யொன்றும் அவன் திருவுள்ளத்தில் உருக்கொள்ளாதாம். கழனியிலேயே மூலோத்தரத்தைப் பயிர்க்கு அளிவருடும். கண்ணியின் வாயிலாக தண்ணீரைப் பாச்சுவதும் உழவருக்கு உற்றதொரு கடமையன்றோ! அங்கு அவருக்கு கோரையிலோ தண்ணீரிலோ வேறு விருப்பம் ஒன்றுமில்லையே. உண்மை இதுவானாலும் அமரர்கள் அரக்கரைக் கொல்வதையே அவதார பிரயோஜனமாகக் கோருவாராயினர். ஆனாலும் அப்புருஷோத்தமனோவெனில் அமரர்களை அரக்கர் தொல்லையினின்று மீட்டுவைப்பதாக மட்டும் திருவுளம் பற்றினான். அதனை அவன் அங்கிருந்தே செய்யவல்லவன் தான். என்றாலும் இங்கு தன்னை ஆராதித்துக்கொண்டிருக்கின்ற ஸாது ஜனங்களின் மனோரதம் பூரிக்கும் வகையில் தனது ஆராதனரூபமாக அவர் செய்யும் கருமங்களை யெல்லாம் தானே நேரில்நின்று ஏற்றுக்கொண்டு தனது அநுபவ ஆனந்தரூபமான பெரும் பயனை அவர் திரத்தில் இங்குற்றபோதே வழங்குவதற்கே இப் பாரிலும் அப்பரமபதநாதன் அவதரித்தருளுகின்றான் என்க. இது கொண்டேதான் **"यदिवा रावणःस्वयं"** இராவணனேயானாலும் பணிந்து வந்தானாகில் காத்துப் பேணுவேன், என்றாப்போல எம்பெருமான் குறுக்காமல் தனது அபயவாக்கை விஸ்தாரமாகவே, வழங்குகின்றான் போலும்.

इष्टिं तेऽहं करिष्यामि पुत्रीयां पुत्रकारणात् ।
अथर्वशिरसि प्रोक्तैर्मन्त्रैः सिद्धां विधानतः ॥ 2 ॥

ततः प्रक्रम्य तामिष्टिं पुत्रीयां पुत्रकारणात् ।
जुहाव चाग्नौ तेजस्वी मन्त्रदृष्टेन कर्मणा ॥ 3 ॥

ततो देवाः सगन्धर्वाः सिद्धाश्च परमर्षयः ।
भागप्रतिग्रहार्थं वै समवेता यथाविधि ॥ 4 ॥

2. (ப - ரை) **अथर्वशिरसि** - ஆதர்வண மறை முடியில், **प्रोक्तैः** - சொல்லப்பட்டிருக்கின்ற, **मन्त्रैः** - மந்திரங்களினால், **विधानतः** - விதிவாயிலாக, **सिद्धां** - ஏற்பட்டிருக்கின்ற, **पुत्रीयां** - புத்திரருண்டாவதற்குக் காரணமான, **इष्टिं** - யாகத்தை, **ते** - உமக்கு, **पुत्रकारणात्** - மக்கட்பேருண்டாவதற்காக, **अहं** - நான், **करिष्यामि** - செய்துவைக்கிறேன்.

3. (ப - ரை) **ततः** - பிறகு, **पुत्रीयां** - புத்திரப்பிரதமான, **तां** - அந்த, **इष्टिं** - யாகத்தை, **पुत्रकारणात्** - புத்திரார்த்தமாக, **प्रक्रम्य** - தொடங்கி, **तेजस्वी** - தேஜிஷ்டரான (அந்த ரிஷியானவர்), **मन्त्रदृष्टेन** - வேதமந்திரத்திற் காணக்கிடக்கின்றதான, **कर्मणा** - கருமவழியாக, **अग्नौ** - யாகாக்கினியில், **जुहाव च** - ஹோமத்தையும் செய்தார்.

4. (ப - ரை) **ततः** - பிறகு, **देवाः** - தேவர்களும், **सगन्धर्वाः** - கந்தர்வர்களோடு கூடிய, **सिद्धाः** - ஸித்தர்களும், **परमर्षयश्च** - உத்தம ரிஷிகளும், **यथाविधि** -

---

2. (க - ரை) பிரபுவே! ஆதர்வணோபனிஷன் மந்திரங்களினால் விதிக்கப்பட்டிருக்கிற புத்திரகாமேஷ்டியெனும் யாக விசேஷத்தை உமக்கு புத்திரப்பேருண்டாவதற்காக யானே செய்து வைக்கிறேன் என்று அம்முனீசுவரர் கூறலானார்.

3. (க - ரை) இப்படிச் சொல்லிவிட்டு ரிச்யசிருங்கரானவர் அரசனுடைய ஸந்ததி அவிச்சின்னமாய் விளங்க வேண்டுமென்கிற அவாமிகுந்தவராய், ஸந்தானகரமான அந்த யக்ஞத்தை உபக்கிரமித்து சாஸ்திரோக்தமான வழியில் முதன்முதலாக * அவ்வைதானகினியில் ஒரு ஹோமத்தையும் செய்தார்.

4. (க - ரை) அப்போது கிரமப்படி தமக்குக் கிடைக்கவேண்டிய ஹவிர்ப்

---

* விதானம்-என்றால் எக்ஞம். அது ஸம்பந்தமான அக்னி வைதானாக்னி எனப்படுகிறது.

யாகத்தைப் பற்றிய மற்றைய விவரங்களை **ततोवै यजमानस्य** (ஸர்க்கம் 16, சுலோகம் 11) என்று ஆரம்பித்து மேலே சொல்லப் போகிறார். அதனிடையில் அவதாரத்திற்காக தேவதைகள் செய்த பிரார்த்தனை முதலானதை **ततो देवाः** என்று ஆரம்பித்து இங்குசொல்லுகிறார்.

ताः समेत्य यथान्यायं तस्मिन्सदसि देवताः ।
अब्रुवँल्लोककर्तारं ब्रह्माणं वचनं महत् ॥ 5 ॥

भगवंस्त्वत्प्रसादेन रावणो नाम राक्षसः ।
सर्वान्नो बाधते वीर्याच्छासितुं तं न शक्नुमः ॥ 6 ॥

त्वया तस्मै वरो दत्तः प्रीतेन भगवन्पुरा ।
मानयन्तश्च तं नित्यं सर्वं तस्य क्षमामहे ॥ 7 ॥

யதாக்ரமமாக, **भागप्रतिग्रहार्थं वै** - தங்கள் ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவே, **समवेताः** - (யக்ஞ ஸதஸ்ஸில்) ஒன்று கூடினார்கள்.

5. (ப - ரை) **ताः** - அந்த, **देवताः** - தேவதைகள், **तस्मिन्** - அந்த, **सदसि** - ஸபையில், **यथान्यायं** - கிரமமாக, **समेत्य** - கூடி, **लोककर्तारं** - உலகத்தைப் படைத்தவரான, **ब्रह्माणं** - பிரம்மதேவனைக் குறித்து, **महत्** - பெரிதான, **वचनं** - வார்த்தையை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

6. (ப - ரை) **भगवन्** - ஹே பகவானே! **त्वत्प्रसादेन** - உங்களுடைய அனுக்ரஹத்தினால், **रावणो नाम** - இராவணனென்கிற, **राक्षसः** - அரக்கனொருவன், **नः** - எங்கள், **सर्वान्** - எல்லோரையும், **वीर्यात्** - பலத்தினாலே, **बाधते** - வருத்துகின்றான், **तं** - அவனை, **शासितुं** - அடக்குவதற்கு, **न शक्नुमः** - சக்தர்களாக இருக்கின்றோமில்லை.

7. (ப - ரை) **भगवन्** - பெரியவரே! **प्रीतेन** - ப்ரீதியடைந்தவரான, **त्वया** - உம்மால், **पुरा** - முன்னே, **तस्मै** - அவனுக்கு, **वरः** - (எங்களால

பாகத்தைப் பெருவதற்காக பிரும்ஹா முதலான தேவர்களும், மஹர்ஷி ஸித்த கந்தர்வாதிகளும் அந்த யக்ஞ ஸதஸ்ஸில் ஒன்று கூடினார்கள்.

5. (க - ரை) இப்படிக் கூடிய தேவர்கள் தமக்குத் தலைவராக அந்த விஷயம் செய்திருக்கின்ற பிரம்மதேவனைப் பணிந்து பெரும் பயனளிப்பதான இப்பிரார்த்தனையைச் செய்வாராயினர்.

6. (க - ரை) பிரபுவே! உமதருளால் ஸாதாரணனாய் ஓர் இராக்ஷஸன் உலகத்தையெல்லாம் கதறவடிக்கும் வீர்யத்தைப் பெற்று அதனால் இராவணனென்ற பெயரையும் பூண்டு, கற்ற வித்தையை பெற்ற தாயினிடம் காட்டுவதுபோல அவ்வீர்யத்தைக்கொண்டு உம்மவர்களான எம்மையே மிகவும் வருத்துகின்றான். அவனையடக்குவதற்கோவெனில் யாங்கள் ஸர்வதா அசக்தர்களாயிருக்கின்றோம்.

7. (க - ரை) பிரபுவே! வெகுகாலத்திற்கு முன்னால் அவனை நல்லவனென்று எண்ணியேதான் தாங்கள் அவ்வரத்தைக் கொடுத்தீர்கள். அவ்வாறெனில் உமது

उद्वेजयति लोकांस्त्रीनुच्छ्रितान्द्वेष्टि दुर्मतिः ।
शक्रं त्रिदशराजानं प्रधर्षयितुमिच्छति ॥ 8 ॥

ऋषीन्यक्षान्सगन्धर्वानसुरान्ब्राह्मणांस्तथा ।
अतिक्रामति दुर्धर्षो वरदानेन मोहितः ॥ 9 ॥

(ரும்படியான) வரமானது, **दत्तः** - கொடுக்கப்பட்டது, **तं** - அந்த வரனை, **नित्यं** - அன்றைக்கும் இன்றைக்கும், **मानयन्तः** - மதிக்கின்றவர்களாய், **तस्य** - அவனுடைய, **सर्वं च** - எல்லா அதிக்கிரமங்களையும், **क्षमामहे** - பொருத்துக் கொண்டிருக்கின்றோம்.

8. (ப - ரை) **दुर्मतिः** - அந்த துர்ப்புத்திக்காரன், **त्रीन्** - மூன்று, **लोकान्** - லோகங்களையும், **उद्वेजयति** - நடுங்கச் செய்கின்றான், **उच्छ्रितान्** - உயர்ந்தவர்களை, **द्वेष्टि** - பகைக்கின்றான், **त्रिदशराजानम्** - தேவராஜனை, **शक्रं** - இந்திரனை, **प्रधर्षयितुं** - பலாத்கரிப்பதற்கு, **इच्छति** - ஆசிக்கின்றான்.

9. (ப - ரை) **वरदानेन** - தாம் கொடுத்த வரத்தினாலே, **दुर्धर्षः** - நெருங்க முடியாதவனாயிருக்கிற, **मोहितः** - அது பெற்றதினாலேயே கெட்டுப்போன அந்த மதிகேடன், **ऋषीन्** - ரிஷிகளையும், **यक्षान्** - யக்ஷர்களையும், **सगन्धर्वान्** - கந்தர்வர்களோடு கூடின, **असुरान्** - அஸுரர்களையும், **तथा** - அப்படியே, **ब्राह्मणान्** - பிராம்மணர்களையுங் கூட, **अतिक्रामति** - அதிக்கிரமிக்கின்றான்.

எண்ணத்திற்கு மாறாக, நும்மவர்களான எங்களையே துன்புறுத்துகின்றான். என்றாலும் இவ்வாதனை யெல்லாம் உங்கள் வாக்கை மதித்து யாம் பொருத்துப் போகின்றோம்.

8. (க - ரை) ஐயனே! அப்பேதை இவ்வையத்தை யெல்லாம் வருத்துகின்றான். லோகபாலர்களையும் பாதிக்கின்றான். அமரரின் தலைவரான தேவேந்திரனையும் அவர்தம் பதவியினின்று வீழ்த்தப் பார்க்கின்றான்.

9. (க - ரை) உமது வரதானத்தால் தலைகொழுத்த அம்மதிகேடன் வெறுத்தவர், விருப்புற்றவர் என்றோ, தொழிலாளர், ஸ்வஜாதி யென்றோ, அல்லது பிரம்மவித்துக்களான பிராம்மணர்களென்றோ யாதொரு வாசியையும் வைக்காமல் எல்லோரையும் ஒரு மிக்க உபத்திரவிக்கின்றான்.

नैनं सूर्यः प्रतपति पार्श्वे वाति नमारुतः ।
चलोर्मिमाली तं दृष्ट्वा समुद्रोऽपि न कम्पते ॥ 10 ॥

तन्महन्नो भयं तस्माद्राक्षसाद्घोरदर्शनात् ।
वधार्थं तस्य भगवन्नुपायं कर्तुमर्हसि ॥ 11 ॥

एवमुक्तः सुरैः सर्वैश्चिन्तयित्वा ततोऽब्रवीत् ।
हन्तायं विदितस्तस्य वधोपायो दुरात्मनः ॥ 12 ॥

10. (ப - ரை) **एनं** - இந்த இராவணனைக் குறித்து, **सूर्यः** - ஸூரியனானவன், **न प्रतपति** - நன்றாக உறைக்கக் காய்கிறதில்லை, **मारुतः** - வாயுவானவன், **पार्श्वे** - கிட்டத்தில், **न वाति** - வீசுகிறதில்லை, **चलोर्मिमाली** - சஞ்சலமான அலைவரிசைகளையுடையதான, **समुद्रोपि** - கடலும், **तं** - அவனை, **दृष्ट्वा** - பார்த்து, **न कम्पते** - அசைகின்றதில்லை.

11. (ப - ரை) **तत्** - ஆகையினால், **घोरदर्शनात्** - கொடுமையான பார்வையுள்ள, **तस्मात्** - அந்த, **राक्षसात्** - இராக்கதனிடத்திலிருந்து, **नः** - எங்களுக்கு, **महत्** - பெரிதான, **भयं** - பயமிருக்கின்றது, **भगवन्** - பெரியவரே! **तस्य** - அவனுடைய, **वधार्थं** - வதத்திற்காக, **उपायं** - தக்கவழியை, **कर्तुं** - செய்வதற்கு, **अर्हसि** - யோக்கியராயிருக்கின்றீர்.

12. (ப - ரை) **सर्वैः** - ஸமஸ்தர்களான, **सुरैः** - தேவர்களினால், **एवं** - இப்படி, **उक्तः** - சொல்லப்பட்டவரான (பிரம்ஹாவானவர்), **चिन्तयित्वा** - ஆலோசித்து, **ततः**- அதன்பின், **अब्रवीत्** - சொன்னார், **हन्त** - பேஷ், **दुरात्मनः** - துஷ்டபுத்தியான, **तस्य** - அந்த இராவணனுடைய, **वधोपायः** - அழிவிற்கான வழியானது, **अयं** - இதோ, **विदितः** - அறிந்து கொள்ளப்பட்டது.

---

10. (க - ரை) ஸூரியனும் இவ்விராவணனுக்கு இளவெயிற் தருவதன்றி எரிப்பதில்லை. வாயுவும் விசிறி உபசரிக்கும் வேளையிலும் இவனுக்கு பார்சவத்தில் நெருங்கி நிற்கத்துணிகின்றதில்லை. உல்லோல கல்லோலமாயிருக்கின்ற அலைகடலும் அவனைக் கண்டுவிட்டால் அசைகிறதேயில்லை.

11. (க - ரை) அக்கொள்ளிக் கண்ணால் நாங்கள் படும் அச்சத்திற்கு ஓர் அளவேயில்லை. பிரபுவே! அவனைக் கொல்வதற்கான தக்கவழி ஒன்றைத்தாமே திறந்து வைக்கவேண்டும் என்று தேவர்கள் விரிஞ்சி பகவானை வேண்டிக்கொண்டார்கள்.

12. (க - ரை) இப்படி தேவர்களெல்லோரும் தம்மிதே பொறுப்பைச் சுமத்தி பிரார்த்தித்தவளவில் நல்லது! அவ்வயோக்கியன் அழியும் வழியை இதோ கண்டு பிடித்தாயிற்று. என்று சதுர்முகன் ஸந்தோஷமாய் பதிற் கூறினர்.

तेन गन्धर्वयक्षाणां देवदानवरक्षसाम् ।
अवध्योऽस्मीति वागुक्ता तथेत्युक्तं च तन्मया ॥ 13 ॥

नाकीर्तयदवज्ञानात्तद्रक्षो मानुषांस्तदा ।
तस्मात्स मानुषाद्वध्यो मृत्युर्नान्योऽस्य विद्यते ॥ 14 ॥

एतच्छ्रुत्वा प्रियं वाक्यं ब्रह्मणा समुदाहृतम् ।
देवा महर्षयः सर्वे प्रहृष्टास्तेऽभवंस्तदा ॥ 15 ॥

13. (ப-ரை) **तेन** - அவனால், **गन्धर्वयक्षाणां** - கந்தர்வர், யக்ஷர் இவர்களுக்கும், **देवदानवरक्षसाम्** - தேவர்கள், அஸுரர்கள், இராக்கதர்களிவர்களுக்கும், **अवध्यः** - கொல்ல முடியாதவனாக, **अस्मि** - ஆகக்கடவேன், **इति** - என்று, **वाक्** - பிரார்த்தனை வாக்கியமானது, **उक्ता** - கேட்டுக்கொள்ளப்பட்டது, **मया च** - என்னாலும், **तत्** - அதானது, **तथा** - அப்படியே ஆகட்டும், **इति** - என்று, **उक्तं** - வரவாக்கு மளிக்கப்பட்டது.

14. (ப-ரை) **तदा** - அப்போது, **तत्** - அந்த, **रक्षः** - பிசாசானது, **अवज्ञानात्** - அலக்ஷிய புத்தியினால், **मानुषान्** - மனுஷ்யர்களைப்பற்றி, **नाकीर्तयत्** - பெயரை யெடுக்கவேயில்லை, **तस्मात्** - ஆகையினால், **सः** - அந்த இராக்கதன், **मानुषात्** - மனுஷ்யனாலேயே, **वध्यः** - கொல்லப்படக் கூடியவன், **अस्य** - இவனுக்கு, **अन्यः** - வேறு, **मृत्युः** - எமன், **न विद्यते** - இருக்கவில்லை.

15. (ப-ரை) **ब्रह्मणा** - பிரம்ஹதேவரால், **समुदाहृतम्** - விவரித்துக் கூறப்பட்ட, **प्रियं** - பிரியமான, **एतत्** - இந்த, **वाक्यं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **ते** - அந்த, **देवाः** - தேவர்களும், **महर्षयः** - மஹரிஷிகளும், **सर्वे** - மற்றுமுள்ள எல்லோரும், **तदा** - அப்பொழுது, **प्रहृष्टाः** - ஸந்துஷ்டர்களாக, **अभवन्** - ஆனார்கள்.

13-14. (க-ரை) அவ்வரக்கன், கந்தர்வர், யக்ஷர், தேவர், தானவர், இராக்கதர், சாரணர் என்றென்று ஆயிரம் சாதியனரைக் காட்டி அவர்களுள் எவராலும் தனக்குச் சாவு கூடாதென்று வேண்டிக்கொண்டான். யானும் அவன் கேட்ட வரத்தை அப்படியே அளித்தும் விட்டேன். ஆனால் அம்மூடன் மனிதரை ஒரு பொருட்டா யெண்ணாத்தினால் அவர் பெயரைக்கூட அறவே மறந்துவிட்டான். ஆதலால் கூடுமானால் அவனை மனுஷ்யன் தான் கொல்லவேண்டும். மனிதரை யன்றி அவனுக்கு மிருத்தியு வேறொன்றில்லை என்று சதுர்முகர் சொல்லிமுடித்தார்.

15. (க-ரை) பிரம்ஹதேவன் கூறிய மனதிற்கினியதான இம்மதுர மொழிகளைக்கேட்டு தேவர், மஹரிஷிகளாகிய எல்லோரும் அப்பொழுதே மகிழ்ச்சி பெற்றனராம்.

एतस्मिन्नन्तरे विष्णुरुपयातो महाद्युतिः ।
शङ्खचक्रगदापाणिः पीतवासा जगत्पतिः ॥ 16 ॥

ब्रह्मणा च समागम्य तत्र तस्थौ समाहितः ।
तमब्रुवन्सुराः सर्वे समभिष्टूय संनताः ॥ 17 ॥

त्वां नियोक्ष्यामहे विष्णो लोकानां हितकाम्यया ॥ 17½ ॥

16. (ப - உரை) **एतस्मिन्** - இந்த, **अन्तरे** - அவகாசத்தில், **महाद्युतिः** - மிகுந்த காந்தியுள்ளவராய், **शङ्खचक्रगदापाणिः** - சங்கம், சக்கிரம், கதை முதலான ஆயுதங்களை யுடைத்தான கைகளையுடையவராய், **पीतवासाः** - பீதாம்பர தாரியாய், **जगत्पतिः** - ஜகதீசுவரனை, **विष्णुः** - மஹா விஷ்ணுவானவர், **उपयातः** - வந்து சேர்ந்தார்.

17. (ப - உரை) **तत्र** - அந்த ஸதஸில், **ब्रह्मणा** - பிரும்மாவோடு, **समागम्य** - சேர்ந்து நின்றுகொண்டு, **समाहितः च** - (மேற்காரியத்தில்) ஜாக்கிரதை யுள்ளவராகவும், **तस्थौ** - இருந்தார், **तं** - அவரை, **सर्वे सुराः** - எல்லா தேவர்களும், **समभिष्टूय** - நன்றாகத்துதித்து, **संनताः** - நன்றாக வணங்கியவர்களாக, **अब्रुवन्** - சொன்னார்கள்.

17½. (ப - உரை) **हे विष्णो** - மஹாவிஷ்ணுவே, **लोकानां** - உலகங்களுடைய,

---

16. (க - உரை) இப்படித் தேவர்கள் முதல் முதலில் ஆராய்ந்து பாராமல் பெரும்படியாய்ப் பெருமை கொண்டவரென்றாலும் அது நீடு நிற்கவில்லை. இராவணன் மனிதனை மறந்தானென்பது உண்மைதானென்றாலும், அவனை யும் கொல்லுவதற்கான வல்லமை வாய்ந்த மனிதனொருவனை யாங்கனம் காண் பது? என்ற சிந்தை அவர்களைச் சூழ்ந்துகொண்டது. இப்படி அத்தேவர்கள் ஏங்கித் தவிக்கின்ற இவ் அவஸரத்தில், ரக்ஷணைக்கு ஸமயத்தை பிரதீக்ஷித்துக் கொண்டிருக்கின்ற, ஸர்வாந்தர்யாமியான மஹாவிஷ்ணுவானவர் இத்தகைய அபூர்வ அவஸரம் நேர்ந்ததினாலுண்டான ஸந்தோஷத்தால் களிப்படைந்து, முக மலர்ந்தவராய் ஆச்ரிதரின் விரோதிகளை நிரஸித்துக் காப்பதெனக் கங்கணம் பூண்ட கடமைக்கு அறிகுறியான சங்க சக்கராதிகளான திவ்யாயுதங்களைத் திருக்கையிற் றாங்கி, பீதாம்பரக் கச்சையை இறுக்கிக் கட்டிக்கொண்டு தயாரானவர் காப்பா ராய் அத்தேவர்முன் தோன்றலானார்.

17. (க - உரை) இப்படி அத்தேவர் முன் தோன்றிய ஸ்ரீமந் நாராயணன் பிரும்மாவின் மரியாதைக்காக அவரைக்கிட்டி அவருடன் சேர்ந்து நின்றுகொண்டு மேற்காரியத் திற் கண்ணுள்ளவராயிருந்தார். பிரும்மாவோ வெனில் மற்ற தேவர்களையும் கூட்டிக் கொண்டு தானே முன்னின்று அவர்களோடு தானும் ஒருவராக அவன் திருவடி களில் முடிசாய்த்துப் பலபடியாகத் துதித்து பிரார்த்திக்கலானார்.

17½-20½. (க - உரை) பிரபுவே! ஒரு குலத்தின் நலத்திற்காக ஒருவனை

राज्ञो दशरथस्य त्वमयोध्याधिपतेर्विभोः ।
धर्मज्ञस्य वदान्यस्य महर्षिसमतेजसः ॥ 18½ ॥

तस्य भार्यासु तिसृषु ह्रीश्रीकीर्त्युपमासु च ।
विष्णो पुत्रत्वमागच्छ कृत्वाऽऽत्मानं चतुर्विधम् ॥ 19½ ॥

तत्र त्वं मानुषो भूत्वा प्रवृद्धं लोककण्टकम् ।
अवध्यं दैवतैर्विष्णो समरे जहि रावणम् ॥ 20½ ॥

हितकाम्यया - *அனுகூலத்தின் கோரிக்கையினால்,* **त्वां** - *உம்மை,* **नियोक्ष्यामहे** - *வர்ப்புறுத்துகின்றோம்.*

18½—19½ (ப - ரை) **धर्मज्ञस्य** - *தர்மத்தைத் தெரிந்து நடத்துகின்றவராயும்,* **वदान्यस्य** - *உதாரராயும்,* **महर्षिसमतेजसः** - *மஹரிஷிகளோடொத்த பிரபாவமுள்ளவராயும்,* **विभोः** - *பிரபுவாயுமிருக்கிற,* **अयोध्याधिपतेः** - *அயோத்திமா நகரத்திற் கதிபதியான,* **दशरथस्य** - *தசரதரென்கிற,* **राज्ञः** - *அரசனுக்கு,* **ह्रीश्रीकीर्त्युपमासु** - *ஹ்ரீதேவி, ஸ்ரீதேவி, யசோதேவி இவர்களுக்குத் துல்யர்களான,* **तस्य** - *அவ்வரசனுடைய,* **तिसृषु** - *மூவர்களான,* **भार्यासु च** - *பத்தினிகளிடத்தும்,* **विष्णो** - *ஸர்வத்ர வியாப்தியுள்ளவரே,* **आत्मानं** - *தம்மை,* **चतुर्विधम्** - *நான்கு கூறாக,* **कृत्वा** - *செய்து கொண்டு,* **पुत्रत्वं** - *புத்திரனாயிருத்தலை,* **आगच्छ** - *அடையும்.*

20½. (ப - ரை) **तत्र** - *அங்கு,* **त्वं** - *நீர்,* **मानुषो भूत्वा** - *மனிதராயிருந்து கொண்டு,* **प्रवृद्धं** - *வரைகடந்து வளர்ந்து விட்டவனையும்,* **लोककण्टकम्** - *உலகத்திற்கெல்லாம் முற்போன்றவனையும்,* **दैवतैः** - *எந்த தெய்வங்களினாலும்,* **अवध्यं** - *கொல்லக் கூடாதவனுமாயிருக்கிற,* **रावणम्** - *இராவணனை,* **विष्णो** - *ஹே மஹாவிஷ்ணுவே !* **समरे** - *யுத்தத்திலே,* **जहि** - *நீர் அடித்துக் கொல்லுவீராக.*

இழந்தே விடலாமென்றுகூட ஒருநியாயமுண்டே, ஸர்வலோகங்களுடையவும் அனுகூலத்தைக் கோரி யாங்கள் தம்மை யொன்று கேட்டுக்கொள்ளுகின்றோம். ஸர்வ தர்ம மர்ம்மங்களையு மறிந்தவராய் அதன்படி அவற்றை யனுஷ்டிப்பவராய், மகா உத்தமராய் மஹரிஷிகளோடொக்க அமானுஷப்பிரபாவம் வாய்ந்தவராய், மஹா பாக்கியசாலியான அயோத்திமாநகரத்திலமர்ந்து செங்கோல் செலுத்துகின்ற சக்கிரவர்த்தி தசரதருக்கு ஹ்ரீ, ஸ்ரீ, கீர்த்தியெனப்படும் தக்ஷகுமாரிகளோடு உவமிக்கத்தக்கவர்களான, அவ்வரசனின் பட்ட மஹிஷிகள் மூவரிடத்திலும், நான்கு விதமாக உமது உருவைப் பிரித்துக்கொண்டு அவதரித்தருளும். அம்மானுஷ வடிவங் கொண்ட தாமே காட்டுத் தீ போல வளர்ந்து உலகத்தை எரித்துக்கொண்டு எந்த தெய்வங்களினாலும் அடக்கக் கூடாதவனாயிருக்கின்ற இராவணனை சமிப்பித்தருளவேண்டும்.

स हि देवान्सगन्धर्वान्सिद्धांश्च ऋषिसत्तमान् ।
राक्षसो रावणो मूर्खो वीर्योत्सेकेन बाधते ॥ 21½ ॥
ऋषयश्च ततस्तेन गन्धर्वाप्सरसस्तथा ।
क्रीडन्तो नन्दनवने क्रूरेण किल हिंसिताः ॥ 22½ ॥
वधार्थं वयमायातास्तस्य वै मुनिभिः सह ।
सिद्धगन्धर्वयक्षाश्च ततस्त्वां शरणं गताः ॥ 23½ ॥
त्वं गतिः परमा देव सर्वेषां नः परंतप ।
वधाय देवशत्रूणां नृणां लोके मनः कुरु ॥ 24½ ॥

21½. (ப - ரை) **राक्षसः** - அரக்கனாயும், **रावणः** - குரூரனாயுமிருக்கிற, **मूर्खः** - முட்டாளான, **स हि** - அவனேயெனில், **देवान्** - தேவர்களையும், **सगन्धर्वान्** - கந்தர்வர்களோடு கூடின, **सिद्धांश्च** - ஸித்தர்களையும், **ऋषिसत्तमान्** - முனிசிரேஷ்டர்களையும், **वीर्योत्सेकेन** - வீரியத்தின் செருக்கினாலே, **बाधते** - ஹிம்ஸிக்கின்றான்.

22½. (ப - ரை) **तेन** - அந்த இராவணனால், **ततः** - அந்த வீரியச் செருக்கினாலே, **ऋषयश्च** - ரிஷிகளும், **तथा** - அப்படியே, **नन्दनवने** - உத்தியானத்தில், **क्रीडन्तः** - விளையாடுகின்றவர்களான, **गन्धर्वाप्सरसः** - கந்தர்வர்கள், அப்ஸர ஸ்திரீகள் இவர்களும், **क्रूरेण** - அந்தக் கொடூரனால், **हिंसिताः किल** - அழிக்கப்பட்டே போய்விட்டார்களே.

23½. (ப - ரை) **तस्य** - அவனுடைய, **वधार्थं** - வதத்திற்காக, **मुनिभिः सह** - ரிஷிகளோடு, **आयाताः** - வந்தவர்களான, **वयं** - நாங்களும், **सिद्धगन्धर्वयक्षाश्च** - ஸித்தர், கந்தர்வர் யக்ஷர்களும், **ततः** - அக்காரியத்திற்காகவே, **त्वां** - உம்மை, **शरणं** - ரக்ஷகராக, அதாவது புகலிடமாக, **गताः** - வந்தடைந்தோம்.

24½. (ப - ரை) **परंतप** - சத்ருக்களை எரிக்கும் ஸாமர்த்திய முள்ளவரான,

21½-24½. (க - ரை) அவ்வயோக்கியனான இராவணன் வீரியச் செருக்கினால் தாரதம்யமின்றி, தேவர், கந்தர்வர், ஸித்தர், முனிவரர் எல்லோரையுமே ஒருமிக்க உபத்திரவிக்கின்றான். தியானபரர்களான மஹரிஷிகளையும் தாக்குகின்றான். கிரீடாஸக்தர்களான காமுக மிதுனங்களையும் கொல்லுகின்றான். இனி அவனழிந்தாலின்றி விடிவில்லை யென்று பரம சாந்தர்களான முனீச்வரர்களும் தீர்மானித்தனர். இதோ அவர்களுள்ளிட்ட நாங்கள் அவனைக் கொல்லுவதற்காகவே அவனடிக்கு நடுங்கிக்கிடக்கின்ற ஸித்த கந்தர்வாதிகளையும் சேர்த்துக்கொண்டு உம்மைச் சரணமடைந்தோம். எங்கள் தெய்வதமே! எமது பகைவரைத் தொலைப்

एवमुक्तस्तु देवेशो विष्णुस्त्रिदशपुंगवैः ।
पितामहपुरोगांस्तान्सर्वलोकनमस्कृतः ॥ 25½ ॥
अब्रवीत्त्रिदशान्सर्वान्समेतान्धर्मसंहितान् ॥ 26 ॥
भयं त्यजत भद्रं वो हितार्थं युधि रावणम् ।
सपुत्रपौत्रं सामात्यं समित्रज्ञातिबान्धवम् ॥ 27 ॥
हत्वा क्रूरं दुरात्मानं देवर्षीणां भयावहम् ।
दशवर्षसहस्राणि दशवर्षशतानि च ॥ 28 ॥
वत्स्यामि मानुषे लोके पालयन्पृथिवीमिमाम् ॥ 28½ ॥

देव - தெய்வமே! **त्वं** - நீரே, **नः** - எங்கள், **सर्वेषां** - எல்லோருக்கும், **परमा** - உத்தமமான, **गतिः** - புகலிடமாயிருக்கின்றீர், **देवशत्रूणां** - தேவர்களான எங்களுக்குப் பகைவர்களான இராக்கதர்களுடைய, **वधाय** - வதத்திற்காக, **नृणां** - மனிதர்களுடைய, **लोके** - உலகத்தில், **मनः** - மனதை, **कुरु** - செய்யும்.

25½-26. (ப - ரை) **त्रिदशपुंगवैः** - தேவசிரேஷ்டர்களினாலே, **एवं** - இப்படி, **उक्तः** - பிரார்த்திக்கப்பட்ட, **देवेशः** - ஸர்வ தேவேச்வரரான, **सर्वलोकनमस्कृतः** - எல்லா உலகங்களினாலும் நமஸ்கரிக்கப்படுகின்றவருமான, **विष्णुस्तु** - விஷ்ணுவோவெனில், **धर्मसंहितान्** - தர்மத்தைக் கைகொண்டவர்களாய், **समेतान्** - ஒன்று சேர்ந்து வந்திருக்கின்றவர்களான, **तान्** - அந்த, **पितामहपुरोगान्** - பிரம்ஹாவைத் தலைவராகக்கொண்ட, **सर्वान्** - எல்லா, **त्रिदशान्** - தேவர்களையும், **अब्रवीत्** - சொன்னார்.

27—28½. (ப - ரை) **भयं** - பீதியை, **त्यजत** - விட்டு விடுங்கள், **वः** - உங்களுக்கு, **भद्रं** - மங்களமானது, (உண்டாகட்டும்), **हितार्थं** - ஸர்வலோக அனுகூலத்திற்காக, **युधि** - யுத்தத்தில், **क्रूरं** - கொடூரனையும், **दुरात्मानं** - துஷ்ட சித்

பதற்குக் காமேயன்றோ எங்களுக்குப் பரம உபாயம். ஆகையால் ஆலோசியாமல் தேவத்துரோஹிகளை நிக்ரஹிப்பதற்கு மனுஷ்ய லோகத்தில் மனதைச் செலுத்தியருளும். என்று தேவர்கள் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

25-26. (க - ரை) இப்படி சாவில்லாதாரெனப் பெயர்பெற்ற தேவர்களின் தலைவர்களான பிதாமஹன் முன்னிட்ட பெரியோர்களும் பயனளிப்பதிற்பழுது பெறாத சரணாகதி தர்மத்தைச் சிரமேற்றுக்கொண்டு தடியின்கீழ் விழுந்து வேண்டிக் கொள்ளவே ஸர்வலோக அபயப் பிரதான ஸமர்த்தனான ஸர்வேச்வரன் திருவாய் மலர்ந்தருளுகின்றான்.

27-28½. (க - ரை) தேவர்களே பயப்படவேண்டாம், உங்களுக்கு மங்களமுண்டாகட்டும், நாம் ஸர்வலோக ஹிதார்த்தமாக ஜகத் கண்டகனான இராவணனை,

एवं दत्त्वा वरं देवो देवानां विष्णुरात्मवान् ।
मानुषे चिन्तयामास जन्मभूमिमथात्मनः ॥ 29½ ॥

ततः पद्मपलाशाक्षः कृत्वात्मानं चतुर्विधम् ।
पितरं रोचयामास तदा दशरथं नृपम् ॥ 30½ ॥

தனையும், **देवर्षीणां** - தேவர்கள், ரிஷிகளெல்லோருக்கும், **भयावहम्** - பயத்தைக் கொடுக்கின்றவனுமான, **रावणम्** - இராவணனை, **सपुत्रपौत्रम्** - பிள்ளை பேரர்களுள்பட, **सामात्यम्** - மந்திரிகளுள்பட, **समित्रज्ञाति बान्धवम्** - சிநேகிதர்கள், பங்காளிகள், பந்துக்களுள்பட, **हत्वा** - கொன்று, **दशवर्षसहस्राणि** - பத்து ஆயிர வருஷங்களையும், **दशवर्षशतानि च** - பத்து நூறுவருஷங்களையும், **इमां** - இந்த, **पृथिवीम्** - பூமியை, **पालयन्** - பரிபாலனம்செய்து கொண்டு, **मानुषे लोके** - மனுஷ்யலோகத்தில், **वत्स्यामि** - வஸிக்கப்போகின்றேன்.

29½. (ப - ரை) **देवानां** - தேவர்களுக்கெல்லாம், **देवः** - தேவனான, **आत्मवान्** - மஹாபலம் பொருந்தியவரான, அல்லது ஸர்வஜீவராசிகளுக்கும் ஸ்வாமியான, **विष्णुः** - மஹா விஷ்ணுவானவர், **एवं** - இப்படிப்பட்ட, **वरं** - வரத்தை, **दत्त्वा** - கொடுத்துவிட்டு, **अथ** - பிறகு, **मानुषे** - மனுஷ்யர்களுக்குள், அல்லது மனுஷ்யலோகத்தில், **आत्मनः** - தனக்கு (உற்றதான), **जन्मभूमिं** - அவதார ஸ்தானத்தை, **चिन्तयामास** - ஆலோசித்தார்.

30½. (ப - ரை) **ततः** - பிறகு, **पद्मपलाशाक्षः** - புண்டரீக தளங்கள்போன்ற நயனங்களையுடையவரானவன், **आत्मानम्** - தன்னை, **चतुर्विधम्** - நான்கு பிரகாரமாக,

புத்திர, பௌத்திர, அமாத்திய, மித்திர, ஞாதிபந்து வர்க்கங்களோடு போர் முனையில் வென்று அல்லது கொன்று வாடி நிற்கின்ற இப்பூதேவியின் காப்புக்காக மனுஷ்யலோகத்தில் பதினோராயிரம் வருஷங்கள் முடிய இப் பூதேவியைப் பாலித்துக் கொண்டு வஸிக்கப்போகின்றேன்.

29½. (க - ரை) ஸர்வ தேவாதி தேவனும், ஸர்வாத்மசேஷியும், ஸர்வ ஜகதந்தராத்மாவான பரமாத்மா, அவர்களபேக்ஷித்தபடி தேவர்களுக்கு வரத்தையளித்துவிட்டு மனிதருள் நம்மை புத்திரனாய்ப் பெறத்தகுந்த பாக்கியவான் யாரென்று சற்றுச் சிந்திக்கலானார்.

30½. (க - ரை) அப்போது மலர்ந்த தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையவன், தன்னை ஒருதரம் நினைந்தவரின் பிறப்பிறப்புத்துயரங்களை அறவேதுடைப்பவன், என்று உபநிடதங்களால் உத்கோஷிக்கப்படுகிற திருநாமமுடைய அத்திவ்விய புருஷன் தன்னை நான்கு கூராக்கி வைத்துக்கொண்டு ஸர்வ ஜகத்பிதாவான இவன் தசரத சக்கிரவர்த்தியைத் தனக்குப் பிதாவென்று மனமார வரித்துக் கொண்டான். கர்மங்கள் செய்து பிறக்கக்கிடக்கின்ற ஸம்ஸாரி சேதனர்பிறப்பை வெறுப்பதுபோல அபஹதபாப்மாவாய் பிறப்பற்றிருக்கும் இவ்வீசுவரன் அதன்

ततो देवाः सगन्धर्वाः सरुद्राः साप्सरोगणाः ।
स्तुतिभिर्दिव्यरूपाभिस्तुष्टुवुर्मधुसूदनम् ॥ 31½ ॥

तमुद्धतं रावणमुग्रतेजसं प्रवृद्धदर्पं त्रिदशेश्वरद्विषम् ।
विरावणं साधुतपस्विकण्टकं तपस्विनामुद्धर तं भयावहम् ॥ 32½ ॥

कृत्वा - செய்து, **तदा** - அப்போது, **दशरथम्** - தசரதனென்கிற, **नृपम्** - அரசனை, **पितरम्** - தனக்குப் பிதாவாக, **रोचयामास** - அபிலாஷித்தார்.

31½. (ப - ரை) **ततः** - பிறகு, **सगन्धर्वाः** - கந்தர்வரோடு கூடின, **सरुद्राः** - ருத்ரரோடு கூடின, **साप्सरोगणाः** - அப்ஸரஸ் வர்க்கத்தோடு கூடின, **देवाः** - தேவர்கள், **दिव्यरूपाभि** - தெய்வீக வாங்மயங்களான அல்லது திவ்யாத்ம ஸ்வரூபாதிகளைப் பற்றியவைகளான, **स्तुतिभिः** - தோத்திரங்களினால், **मधुसूदनम्** - மதுஹந்தாவான பகவானை, **तुष्टुवुः** - துதி செய்தார்கள்.

32½. (ப - ரை) **उद्धतं** - பிறவியிலேயே கர்விஷ்டனாய், **तं** - அப்படியே பிரஸித்தனாய், **उग्रतेजसं** - கொடுமையான வீரியத்தையுடையவனாய், **प्रवृद्धदर्पं** - நன்கு விருத்தியடைந்த செருவத்தையுடையவனாய், **त्रिदशेश्वरद्विषम्** - தேவேந்திர சத்ருவாய், **विरावणम्** - எல்லோரையும் கதற அடிப்பவனாய், **तपस्विकण्टकं** - தபஸ்விகளுக்கு முற்போன்றவனாய், **तपस्विनां** - தவஞ் செய்வோருக்கு, **भयावहम्** - பயத்தைக் கொடுக்கிறவனாயிருக்கிற. **तं** - அந்த, **रावणं** - இராவணனை, **साधु** - நன்றாக (அடியோடு), **उद्धर** - களைந்துவிடும்.

கண் விருப்புற்றான்போலும். மக்கட்பேரில்லாதவன் புத்திரரை வேண்டுவதுபோல், தந்தை தாயில்லாதவிவன் அதில்லாமைக்கு மனம் நொந்தனன்போலும். என்னே விந்தை ?

31½. (க - ரை) இப்படி பூலோகத்தில் அவதரித்துக் காரியம் செய்வதென்று பகவான் தீர்மானிக்கவே அந்த தேவ கந்தர்வாதிகளெல்லோரும் வேத வாக்குகளைக் கொண்டு அம்மதுரிபுவினுடைய திவ்ய ஸ்வரூபஸ்வபாவங்களைத் துதிப்பாராயினர்.

32½-33½. (க - ரை) பிறவியிலேயே கர்விஷ்டனாய், பிறகு உக்கிரமான வீர்யத்தைப்பெற்றுக் கணந்தோறும் வளர்ந்துள்ள தர்ப்பத்தையுடையவனாய், தேவேந்திரத்வேஷியாய், தபஸ்விஜன பயங்கரனாய், ஸர்வலோக உபத்திரவகாரியாய் அதனால்

तमेव हत्वा सबलं सबान्धवं विरावणं रावणमुग्रपौरुषम् ।
*स्वर्लोकमागच्छ गतज्वरश्चिरं सुरेन्द्रगुप्तं गतदोषकल्मषम् ॥ 33½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
पञ्चदशः सर्गः ॥ १५ ॥

33½. (ப - ரை) **विरावणं** - கதற அடிக்கின்றவனைப், **रावणं** - அதனாலேயே இராவணனென்ற பெயர் பெற்றவனைப், **उग्रपौरुषम्** - கடோரமான ஆண்மையுள்ளவனை, **तमेव** - அவனையே, **सबलं** - சைனியங்களோடும், **सबान्धवम्** - பந்துக்களோடும், **हत्वा** - கொன்று, **गतज्वरः** - சிந்தைபற்றவராய், **चिरं** - வெகு காலமாக; **सुरेन्द्रगुप्तम्** - ஸுரேந்திரராலே இரக்ஷிக்கப்பட்ட, அல்லது, **सुरेन्द्र** - தேவசிரேஷ்டனே! **गुप्तं** - எம்போலிகள் கண்ணுற் காணமாட்டாது மறைந்திருக்கின்ற, **गतदोषकल्मषम्** - போயிருக்கின்ற ராகத்வேஷாதிகளான தோஷங்களாகிற அழுக்கையுடையதான, **स्वर्लोकम्** - ஸுவர்க்கலோகத்தை, அல்லது, **स्वलोकम्** - உமக்குச் சொந்தமான உலகத்தை, **आगच्छ** - வந்தடைவீராக.

தமக்கும் துவேஷியாய்விட்ட அவ்விராவணனை சேனைஉறவினராதிகளோடு வதைத்து பிரபுவே! உமது மனத்தாங்கலைத் தீர்த்துக்கொண்டு குறையற்ற, உமது நல்லுலகிற்கு வந்தருள்வீராக.

* இந்த சுலோகத்தின் உத்திரார்த்தத்தில் "**स्वर्लोकमागच्छ**" என்று பாடத்தை வைத்துக் கொண்டால், ஸுவர்க்கலோகத்திற்கு வந்துசேருமென்றும், நித்தியலோகத்திற்கு வந்து சேருமென்றும் இருவகையாகவும் பொருள் கிடைக்கும். ஸுவர்க்கலோக பரமாகச் சொல்லும்போது "**सुरेन्द्र गुप्तं**" என்பதற்கு தேவேந்திரனுல் ரக்ஷிக்கப்பட்டது என்று பொருள் படுத்தவேண்டும். நித்யலோகபரமாகச் சொல்லுகையில் அப்பதத்தை **सुरेन्द्र**, **गुप्तं**, என்று இரண்டாய்ப் பிரித்து, தேவசிரேஷ்டனே ! என் போலிகளுக்குக் காணவரிதான என்று பொருள் படுத்தவேண்டும்.

"**स्वर्लोकं**" என்பது இந்திரலோகத்திற்கும், நித்திய லோகத்திற்கும் பொதுவான சொல்லாகும். **स्वलोकं**, என்றும் பாடமுண்டு. அப்போது உமது உலகத்திற்கென்றே பொருளாகும்.

षोडशः सर्गः ॥ 16 ॥

ततो नारायणो विष्णुर्नियुक्तः सुरसत्तमैः ।
जानन्नपि सुरानेवं श्लक्ष्णं वचनमब्रवीत् ॥ 1 ॥

उपायः को वधे तस्य रावणस्य दुरात्मनः ।
यमहं तं समास्थाय निहन्यामृषिकण्टकम् ॥ 2 ॥

एवमुक्ताः सुराः सर्वे प्रत्यूचुर्विष्णुमव्ययम् ।
मानुषीं तनुमास्थाय रावणं जहि संयुगे ॥ 3 ॥

1. (ப - ரை) **ततः** - பிறகு, **नारायणः** - ஸர்வஜகதந்தராத்மாவான, **विष्णुः** - பரமாத்மாவானவர், **सुरसत्तमैः** - தேவ சிரேஷ்டர்களால், **नियुक्तः** - கேட்டுக் கொள்ளப்பட்டவராய், **जानन्नपि** - மேற் செய்யவேண்டியதைத் தெரிந்து கொண்டவராயிருந்தாலும், **सुरान्** - தேவர்களைக் குறித்து, **एवं** - இப்படிப்பட்ட, **श्लक्ष्णं** - மதுரமான, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

2. (ப - ரை) **दुरात्मनः** - துஷ்டனான, **तस्य** - அந்த, **रावणस्य** - இராவணனுடைய, **वधे** - வதத்திற்கு, **उपायः** - வழியானது, **कः** - எது? **यं** - எந்த வழியை, **आस्थाय** - பற்றி, **अहं** - நான், **तं** - அந்த, **ऋषिकण्टकम्** - ரிஷிகளுக்குக் கண்டகனாயிருப்பவனை, **निहन्यां** - கொல்வேனோ!

3. (ப - ரை) **एवं** - இப்படி, **उक्ताः** - கேட்கப்பட்டவர்களான, **सुराः** - தேவர்கள், **सर्वे** - எல்லோரும், **अव्ययम्** - குறைவற்றவரான, **विष्णुं** - மஹாவிஷ்ணுவைக் குறித்து, **प्रत्यूचुः** - பதிற் கூறினார்கள், **मानुषीं** - மனுஷ்ய ஸம்பந்தமான, **तनुं** - சரீரத்தை, **आस्थाय** - ஏற்றுக்கொண்டு, **रावणं** - இராவணனை, **संयुगे** - யுத்தத்தில், **जहि** - கொல்லும்.

1. (க - ரை) ஸர்வ பிரபஞ்சத்திற்கும் உள்ளுயிராயிருந்துகொண்டு அவற்றை தந்தம் கடமையில் தூண்டுகின்ற இப்பரமாத்மா தேவர்களால் தூண்டப்பெற்றான், ஸர்வஜன ஹிருதய ஆசயங்களிலும் இருந்துகொண்டு உணர்வை யூட்டுகின்ற இந்த ஞானநிதிமேற்செய்வது தோன்றாமல் திகைக்கின்றவர்போல் அத்தேவர்களையே வினவலானான். ஆஹோ! என்ன ஆசிரித வாத்ஸல்யம்?

2. (க - ரை) தேவர்களே! எந்த உபாயத்தைக் கைப்பற்றி யான் அவ்விரிஷி கண்டகனான இராவணனை கொல்லலாகுமோ அத்தகைய தக்க வழியொன்றைக் கூறுவீர்களாக.

3—6. (க - ரை) என்று பகவான் அறியாதவர்போல் தேவர்களைக் கேட்டுக் கொள்ளவே "குறையற்று எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளே! தாமே மானிட

स हि तेपे तपस्तीव्रं दीर्घकालमरिन्दम ।
येन तुष्टोऽभवद्ब्रह्मा लोककृल्लोकपूर्वजः ॥ 4 ॥
संतुष्टः प्रददौ तस्मै राक्षसाय वरं प्रभुः ।
नानाविधेभ्यो भूतेभ्यो भयं नान्यत्र मानुषात् ॥ 5 ॥
अवज्ञाताः पुरा तेन वरदाने हि मानवाः ॥ 5½ ॥
एवं पितामहात्तस्माद्वरं प्राप्य स दर्पितः ।
उत्सादयति लोकाँस्त्रीन्स्त्रियश्चाप्यपकर्षति ॥ 6½ ॥

---

4. (ப - ரை) **अरिन्दम** - சத்ருதமனரே! **हि** - ஏனென்றால், **सः** - அவன், **दीर्घकालं** - நெடுநாள், **तीव्रं** - கடோரமான, **तपः** - தபஸ்ஸை, **तेपे** - புரிந்தான், **येन** - எந்தத் தவத்தினால், **लोकपूर्वजः** - உலகங்களுக்கெல்லாம் முன் னுண்டான வரும், **लोककृत्** - உலகத்தைப் படைத்தவருமான, **ब्रह्मा** - பிரும்மதேவர், **तुष्टः** - ஸந்தோஷத்தை யடைந்தவராக, **अभवत्** - ஆயினரோ.

5. (ப - ரை) **संतुष्टः** - அப்படி ஸந்தோஷத்தையடைந்த, **प्रभुः** - பிரபுவான வர், **तस्मै** - அந்த, **राक्षसाय** - அரக்கனின் பொருட்டு, **मानुषात्** - மானுஷனைவிட, **अन्यत्र** - வேறு இனத்திற்சேர்ந்த, **नानाविधेभ्यः** - பற்பலவிதமான, **भूतेभ्यः** - பிராணி களிடத்திலிருந்தும், **भयं** - பயமானது, **न** - இல்லை (என்று). **वरं** - வரத்தை, **प्रददौ** - கொடுத்தார்.

5½. (ப - ரை) **हि** - ஏனென்றால், **तेन** - அவனால், **पुरा** - முன் நடந்த, **वर-दाने** - வரங்கொடுக்கும் ஸந்தர்ப்பத்தில், **मानवाः** - மனிதர்கள், **अवज्ञाताः** - அலக்ஷி யம் செய்யப்பட்டார்கள்.

6½. (ப - ரை) **एवं** - இப்படி, **तस्मात्** - அந்த, **पितामहात्** - பிதும்ஹாவினி டத்திலிருந்து, **वरं** - வரத்தை, **प्राप्य** - அடைந்து, **दर्पितः** - செருக்படைந்த வனான, **सः** - அந்த இராவணன், **त्रीन् लोकान्** - மூன்று லோகங்களையும், **उत्साद-यति** - அழிக்கின்றான், **स्त्रियश्चापि** - ஸ்திரீகளையும், **अपकर्षति** - அக்கிரமமா யிழுக் கின்றான்.

உருவங்கொண்டு இவ்விராவணனைப் போர்முனையில் கொன்றாகவேண்டும். அக் கொடியவன் நெடுநாள் தவம்புரிந்து எப்பிராணியினாலும் தன்னுயிருக் கின்னலில்லை யென்று தன் பாட்டனை அயனிடம் வரம் பெற்றுவிட்டான். இருந்தாலும் மானிடரைமட்டும் பொருட்படுத்தாமல் விலக்கிவிட்டான். ஆதலால் அவனழிவ தற்கு வழி மனிதர்தானென்று தீர்மானமாயிற்று. ஐயோ! அக்கொடியன் உல கத்தை யெல்லாம் வருத்துகின்றான். அப்பாதகி பரதைப் பெண்களை யெல்லாம் பலாத்கரிக்கின்றான். பரந்தாமனே! அவ்வரக்கனைக் கொன்றே யாகவேண்டும்.

तस्मात्तस्य वधो दृष्टो मानुषेभ्यः परंतप ॥ 7 ॥
इत्येतद्वचनं श्रुत्वा सुराणां विष्णुरात्मवान् ।
पितरं रोचयामास तदा दशरथं नृपम् ॥ 8 ॥
स चाप्यपुत्रो नृपतिस्तस्मिन्काले महाद्युतिः ।
अयजत्पुत्रियामिष्टिं पुत्रेप्सुररिसूदनः ॥ 9 ॥
स कृत्वा निश्चयं विष्णुरामन्त्र्य च पितामहम् ।
अन्तर्धानं गतो देवैः पूज्यमानो महर्षिभिः ॥ 10 ॥

7. (ப - ரை) **परंतप** - சத்ரு ஸந்தாபகரே! **तस्मात्** - ஆகையினால், **तस्य** - அவனுடைய, **वधः** - வதமானது, **मानुषेभ्यः** - மனுஷ்யர்களிடத்திலிருந்து, **दृष्टः** - காணப்பட்டிருக்கின்றது, அதாவது நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

8. (ப - ரை) **सुराणां** - தேவர்களுடைய, **इत्येतत्** - ஏவம்ரூபமான இந்த, **वचनम्** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **आत्मवान्** - ஆத்மவானாகிய, **विष्णुः** - விஷ்ணுவானவர், **तदा** - அப்பொழுது, **दशरथम्** - தசரதரென்கிற, **नृपम्** - ராஜாவை, **पितरम्** - தகப்பனாராக, **रोचयामास** - ஆசையோடு நினைத்தார்.

9. (ப - ரை) **तस्मिन्** - அந்த, **काले** - ஸமயத்தில், **अपुत्रः** - புத்திரரில்லாதவராயும், **महाद्युतिः** - மஹத்தான காந்தியுள்ளவராயும், **अरिसूदनः** - சத்ருக்களை நிக்ரஹிக்கின்றவருமான, **सः** - அந்த, **नृपतिश्च** - அரசனும், **पुत्रेप्सुः** - பிள்ளை பிறக்கவேணுமென்கிற ஆசையுள்ளவராக, **पुत्रियां** - புத்திரோத்பத்திக்குக் காரணமான, **इष्टिं** - யாகத்தை, **अयजत्** - யஜித்தார், அதாவது செய்தார்.

10. (ப - ரை) **सः** - அந்த, **विष्णुः** - ஸர்வ வியாப்தியுள்ள அதாவது எங்கும்

என்று தேவர்களெல்லோரு மொருமிக்கப் பிரார்த்தித்தார்கள். இப்படி அவர்கள் ததறிப் பிரார்த்தித்ததைச் செவியுற்ற ஸ்ரீ பகவான் தசரதனுக்குப் பிள்ளையாய்ப் பிறப்பதாகத் தீர்மானித்து அவ்வரசனை தகப்பனாகக் கொள்ளுவதில் மிக்க மகிழ்ச்சி பெற்றார்.

9. (க - ரை) இப்படி பகவான் தசரத சக்கிரவர்த்திக்குப் புத்திரராக அவதரிப்பதற்குத் திருவுளம் பற்றியதும், இவ்வுத்தமப் புத்திரரைப் பெருவதற்காகவே இத்துணைகாலம் புத்திரரில்லாமலிருந்தமையால் முகத்தில் அக்குறை தோன்றாமல் ஒளி வீசிக்கொண்டிருக்கின்ற அவ்வுத்தம புருஷனும் அச்வமேதத்தினால் தனது பாவங்களையெல்லாம் துடைத்துக்கொண்டு புத்திரகாமேஷ்டியையும் தொடங்கலானார்.

10. (க - ரை) இப்படி அவதரித்துக் காரியம் செய்கின்றோமென்று பகவான்

---

* இங்கு இதொரு விசேஷம் கிரஹிக்கத்தக்கது. தேவர்கள் பகவானை சரணமடைந்து தமது குறையைக் கூறி அதனை நிவர்த்தித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்ததும், அக்காரு

ततो वै यजमानस्य पावकादतुलप्रभम् ।
प्रादुर्भूतं महद्भूतं महावीर्यं महाबलम् ॥ 11 ॥

நிறைந்துள்ள பகவான், **निश्चयम्** - மனுஷ்யனாக அவதரிக்கின்றேனென்கிற பிரதிக்ஞையை, **कृत्वा** - செய்து வைத்து, **पितामहम्** - பிரும்ஹாவை, **आमन्त्र्य** - போய் வருகிறேனென்று கேட்டுக்கொண்டு, **देवैः** - தேவர்களினாலும், **महर्षिभिः** - மஹரிஷிகளாலும், **पूज्यमानः** - கொண்டாடப் பெற்றவராக, **अन्तर्धानम्** - திரோதானத்தை அதாவது மறைதலை, **गतः** - அடைந்தார்.

11. (ப - ரை) **ततः वै** - அதற்குப் பிறகோவெனில், **यजमानस्य** - ஹோமஞ் செய்து கொண்டிருக்கின்ற அவருடைய, **पावकात्** - அக்கினியினிடத்திலிருந்து, **अतुलप्रभम्** - நிகரற்ற காந்தியுள்ளதாயும், **महावीर्यं** - மஹத்தான வீர்யத்தையுடையதாயும், **महाबलम्** - அதிகமான பலத்தை யுடையதாயுமிருக்கிற, **महत्** - பெரிதான, **भूतम्** - ஒரு புருஷாகாரமானது, **पादुर्भूतम्** - தோன்றிற்று.

அபயம் தந்திடவே, பிரும்ஹாதி தேவர்களும் அவரைப் பூஜித்து நிற்கும்பொழுதே அவர்கள் கண்முன்னே எம்பெருமான் அங்கேயே அந்தர்த்தானமாயினார்.

11-13½. (த - ரை) அங்ஙனமாக, இந்த தசரதர் யாகத்தை ஆரம்பித்து நடத்துகிறபோதே அதில் ஆஹவனீயாக்கினியில் ஹோமத்தைச் செய்து கொண்டிருக்கை

ணிகளும். இப்பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து அவர்களுக்கு அபயம் தந்தருளினதும் ஆக இது நிகழ்ந்தது எவ்விடத்தில் என்று எழுகின்ற பிரச்னையில் இருவிதமாக உத்தரம் உதிக்கின்றது. ஒன்று தசரத மஹாராஜரின் யக்ஞஸபை யென்பது. தேவலோகமென்பது மற்றொன்று. கீழே "**ततो देवाः सगन्धर्वाः**" (15. ஸர்க்கம் 4 வது சுலோகம்.) என்று ஆரம்பித்து அரசன் வேட்கின்ற யாகத்தில் ஹவிர்பாகம் பெறுவதற்காக தேவர்களனைவரும் அங்கு வந்தாரென்றும், அப்போதே தம் தலைவரான பிரும்ஹாவைப் பார்த்து, அவருடைய வரதான பலத்தைக்கொண்டு உலகங்களை யழித்துத் திரிகின்ற இராவணனைக் கொல்லுவதற்கு வழிசொல்ல வேண்டுமென்று தேவர்கள் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கவர் இராவணன் தனது கோரிக்கையில் மனிதரைச் சேர்க்காமல் ஏமார்ந்தானென்பதைச் சொல்லினாலும், அவனைக் கொல்லுவதற்கான மனிதனைத் தன்படைப்பில் எவ்விடத்தும் காணேனென்று அவர் ஏங்கி நிற்கும்பொழுது, அவ்வேக்கத்தை விலக்கி ஊக்கத்தைக் கொடுப்பதேப் எம்பெருமான் ஆங்கு அவரிடையே தோன்றி அவர்களுக்கு அபயம் தந்தருளினேன், என்று பொருள் படுவதுபோல சொல்லி யிருப்பதெல்லாம் முதற் கல்பத்திற்கு ஒத்துவருகிறது. ஆனால் தேவதைகள் பிரார்த்தித்துக் கொள்ளும்பொழுது **राज्ञो दशरथस्यत्वं** (15 வது ஸர்க்கம். 18. வது சுலோகம்) என்று ஆரம்பித்து தசரதனை பரோக்ஷத்தில் அதாவது கண்ணுக்கு நேரிலில்லாத மறைவிடத்தி லிருப்பவரைச் சொல்லுவதுபோலக் குறிப்பதும் அப்படியே அவருடைய பத்தினிகளென்றும், அவரிடத்தில் மனுஷ்யனாய் அவதரிக்க வேண்டுமென்றும் தசரதனை அவர் அவரென்று பரோக்ஷமாகவே வைத்துப் பேசியிருப்பதும், இராவணனைக் கொல்லுவதற்காகவே நாங்கள் இங்குவந்து உம்மைச் சரணமடைந்தோமென்பதும், அவர்களுக்கபயம் தருகையில் பகவான் அநேகமாயிரம் ஆண்டு மனுஷ்யலோகத்தில் நான் வஸிக்கப்போகின்றேனென்றதும், "**सचाप्यपुत्रो नृपतिः**" (16 வது ஸர்க்கம் 9 வது சுலோகம்) என்கிற விடம்

कृष्णं रक्ताम्बरधरं रक्तास्यं दुन्दुभिस्वनम् ।
स्निग्धहर्यक्षतनुजश्मश्रुप्रवरमूर्धजम् ॥ 12 ॥
शुभलक्षणसंपन्नं दिव्याभरणभूषितम् ।
शैलशृङ्गसमुत्सेधं दृप्तशार्दूलविक्रमम् ॥ 13 ॥
दिवाकरसमाकारं दीप्तानलशिखोपमम् ॥ 13½ ॥

12. (ப - ரை) **कृष्णं** - கருப்பு வர்ண முடையதாய், **रक्ताम्बरधरम्** - சிவப்பான வஸ்திரத்தை உடுத்திக் கொண்டிருப்பதாய், ("கிருஷ்ண ரக்தாம்பரதரம்" என்று ஒரே பதமான பாடத்தில் கருப்பும், சிவப்பும் கலந்த வஸ்திரத்தைத் தரித்திருப்பது என்று பொருள் கொள்ளவும்.) **रक्तास्यम्** - சிவந்த வாயுள்ளதாயும், **दुन्दुभिस्वनम्** - பேரிபோலொத்த குரலுள்ளதாயும், **स्निग्धहर्यक्ष तनुजश्मश्रु प्रवर-मूर्धजम्** - பள பள வென்கிற சிங்கத்தினுடையது போன்ற தேஹ ரோமங்கள் மீசை தாடிகள் சடைகளையுடையதுமாய்,

13. (ப - ரை) **शुभलक्षणसंपन्नम्** - மங்களங்களான இலக்ஷணங்கள் நிறைந்திருப்பதும், **दिव्याभरणभूषितम्** - திவ்வியமான அணிகளினால் அலங்கரிக்கப் பட்டிருப்பதும், **शैलशृङ्गसमुत्सेधम्** - மலையினுடைய சிகரம் போல உயர்ந்ததாயும், **दृप्त-शार्दूलविक्रमम्** - கொழுத்த புலியினது போன்ற பராக் கிரமத்தை யுடையதுமாய்,

13½. (ப - ரை) **दिवाकरसमाकारं** - ஸூர்யனோடு ஸமானமான ஆகாரத்தை யுடையதாய், **दीप्तानलशिखोपमम्** - எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பின் ஜ்வாலை போன்றதும், ஆன ஒரு புருஷாகாரம் தோன்றலாயிற்று.

யில் அவ்வக்கினியின் மத்தியிலிருந்து நிகரற்ற தேஜஸ் வீர்யம் பலம் பொருந்தியதும், மரகதம் போன்ற வர்ணமுடையதும், சிவந்த பட்டாடை தரித்ததும், பேரியின் முழக்கம்போன்ற கண்டத்துவனியுள்ளதும், ஸிம்ஹத்தினுடையதுபோல பளபள வென்றிருக்கின்ற ரோமம், மீசை, சிகைகளை யுடையதுமாய், ஸர்வ லக்ஷண ஸம்பன்னமாய், திவ்யாலங்கார அலங்கிருதமாய், கிரி சிகரம்போல் உயர்ந்ததாய், கொழுத்த வேங்கையினது போன்ற விக்கிரமத்தை யுடையதாய், ஸூரியனைப்போன்றபிரபை சூழ்ந்த சரீரமுள்ளதாய், கொழுந்து விட்டெரிகின்ற செந்தீபோல ஸஹிக்க முடியாததா யிருக்கின்ற ஒரு மஹத்தான புருஷ விசேஷமானது தோன்றலாயிற்று.

தில் தேவர்களோடு பகவான் ஸல்லாபித்துக்கொண்டிருந்த காலமும், தசரதனுடைய யக்ஞ காலமும் தற்செயலாய் ஒத்துக்கொண்டது என்பதுபோலச் சொல்லி யிருப்பதும் ஆக இவைகளெல்லாம் உத்தர கல்பத்திற்கு உற்றதாயிருக்கின்றது. இன்னும் இவ்விரு கல்பங்களுக்கும் உள்ளவைகளான இவ்விடத்திய வாக்கிய ஸந்தர்ப்பங்களின் ஸாதக பாதகங்களை புத்திமான்கள் ஸ்வயமாகவே ஊஹித்துத் தெரிந்துகொள்க.

तप्तजाम्बूनदमयीं राजतान्तपरिच्छदाम् ॥ 14 ॥
दिव्यपायससंपूर्णां पात्रीं पत्नीमिव प्रियाम् ।
प्रगृह्य विपुलां दोर्भ्यां स्वयं मायामयीमिव ॥ 15 ॥
समवेक्ष्याब्रवीद्वाक्यमिदं दशरथं नृपम् ।
प्राजापत्यं नरं विद्धि मामिहाभ्यागतं नृप ॥ 16 ॥
ततः परं तदा राजा प्रत्युवाच कृताञ्जलिः ।
भगवन्स्वागतं तेऽस्तु किमहं करवाणि ते ॥ 17 ॥

14-16. (ப - ரை) **तप्तजाम्बूनदमयीं** - புடம்வைத்த தங்கத்தினுற் செய்யப் பட்டதும், **राजतान्तपरिच्छदाम्** - வெள்ளியினுற் செய்யப்பட்ட மேல்மூடியையுடைய தும், **दिव्यपायससंपूर्णां** - திவியமான பாயஸத்தினுல் நிறைந்திருக்கின்றதும், **मायामयीमिव** - மாயைபோல், ஆச்சரியகரமுமான, **पात्रीं** - பாத்திரத்தை, **प्रियाम्** - ஆசைக் கிடமான, **पत्नीमिव** - பாரியாளைப்போல, **विपुलां** - பெரிதாயிருக்கின்ற அதை, **दोर्भ्यां** - இருகைகளினுலும், **स्वयम्** - தானுகவே, **प्रगृह्य** - அணைந்து பிடித்துக் கொண்டு, **नृपम्** - அரசனுன, **दशरथम्** - தயரதனை, **समवेक्ष्य** - நன்ருய்ப்பார்த்து, **इदं वाक्यम्** - இந்த வார்த்தையை, **अब्रवीत्** - சொல்லிற்று அல்லது சொன்னுர், **नृप** - அரசனே! **मां** - என்னை, **प्राजापत्यम्** - பிரஜாபதி தேவரைச்சார்ந்த, **नरम्** - மனிதனுயும், **इह** - இங்கு, **अभ्यागतम्** (அவரால் அனுப்பப்பட்டு) வந்தவனுயும், **विद्धि** - அறியும்.

17. (ப - ரை) **ततः परं** - அதற்குப்பிறகு, **तदा** - அப்பொழுதே (உடனே), **कृताञ्जलिः** - செய்யப்பட்டிருக்கிற அஞ்சலிபந்தத்தையுடையவராய், **राजा** - ராஜா வானவர், **भगवन्** - பெரியோரே! **ते** - உமக்கு, **स्वागतम्** - நல்வரவானது, **अस्तु** - இருக்கட்டும், **ते** - உமக்கு, **अहम्** - நான், **किं** - என்ன, **करवाणि** - செய்யக் கடவேன் (என்று) **प्रत्युवाच** - பதிற்சொன்னுர்.

14-16. (க - ரை) அப்படித் தோன்றிய அப்புருஷன், திவ்விய பாயஸம் நிறைந்த வெள்ளிமேல் மூடியுள்ள ஆச்சரியகரமான தங்கப்பாத்திர மொன்றை தன திருகைகளினுல் தழுவி யெடுத்துக்கொண்டு, அவ்வரசனை யன்புடன் பார்த்து பிரஜா பதி தேவரினுல் அனுப்பப்பட்டு வந்திருப்பதாகத் தனது வரலாற்றைக் கூறலானுர்.

17. (க - ரை) இப்படி அந்த திவ்விய புருஷன் தன்னை பிரஜாபதி தேவரால் அனுப்பப்பட்டு வந்திருப்பதாக தெரிவித்துக்கொண்ட வுடனே, மஹா ராஜன் அஞ் சலி செய்துகொண்டு பகவானே! உமது வரவு நல்வரவாகுக, இனி யான் தமதானை யின்படி செய்யலாவதென்ன! என்று வினவலுற்ருர்.

अथो पुनरिदं वाक्यं प्राजापत्यो नरोऽब्रवीत् ।
राजन्नर्चयता देवानद्य प्राप्तमिदं त्वया ॥ 18 ॥
इदं तु नृपशार्दूल पायसं देवनिर्मितम् ।
प्रजाकरं गृहाण त्वं धन्यमारोग्यवर्धनम् ॥ 19 ॥
भार्याणामनुरूपाणामश्नीतेति प्रयच्छ वै ।
तासु त्वं प्राप्स्यसे पुत्रान्यदर्थं यजसे नृप ॥ 20 ॥

18. (ப - ரை) **अथो पुनः** - அதற்குப் பிறகு, **प्राजापत्यः** - பிரஜாபதியினுடையவரான, **नरः** - புருஷன், **इदं** - இந்த, **वाक्यम्** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார். **राजन्** - அரசே! **देवान्** - தேவர்களை, **अर्चयता** - பூஜிக்கின்றவரான, **त्वया** - உம்மால், **अद्य** - இப்பொழுது, **इदम्** - இது, **प्राप्तं** - அடையப்பட்டது.

19. (ப - ரை) **नृपशार्दूल** - ஹே ராஜசிரேஷ்டரே! **इदम् तु** - இதுவோவெனில், **देवनिर्मितम्** - தேவர்களினலே நிருமிக்கப்பட்ட, **पायसम्** - பாயஸமாகும், **प्रजाकरम्** - ஸந்தானகரமாயும், **धन्यम्** - தனப்பிரதமாயும், **आरोग्यवर्धनम्** - நோயற்ற வாழ்வை வளர்ப்பதாயுமிருக்கிற (இதை), **त्वम्** - நீர், **गृहाण** - வாங்கிக் கொள்ளும்.

20. (ப - ரை) **अनुरूपाणां** - உமக்கு உற்றவர்களான, **भार्याणां** - பத்தினிகளுக்கு, **अश्नीत** - சாப்பிடுங்கள், **इति** - என்று, **प्रयच्छ** - கொடும், **तासु** - அவர்களிடத்தில், **त्वम्** - நீர், **पुत्रान्** - குமாரர்களை, **प्राप्स्यसे वै** - நிச்சயமாய் அடைவீர், **नृप** - அரசனே! **यदर्थं** - எந்த புத்திரருக்காக, **यजसे** - நீர் யாகம் பண்ணுகின்றீரோ.

18. (க - ரை) இப்படி வினவிய வேந்தனைப் பார்த்து பிரபுவே! தேவர்களை அநேக யாகாதிகளினல் அர்ச்சித்த தாம் அவற்றின் பயனாக இப்பொழுதைக்கு இதனைப் பெறலானீர்.

19. (க - ரை) ஈதென்ன வென்றால், ஸத் ஸந்தான ஸமிருத்தியைச் செய்து வைத்து, தனத்தைக் கொடுத்து, ஆரோக்கியத்தைப் பளிக்கும் வகையில் ஸர்வ தேவர்களினலும் நிருமிக்கப்பட்ட திவ்விய பாயஸம் காணும்!

20. (க - ரை) அரசர் பெருமானே! உமக்கு அனுரூபைகளான உமது பத்தினிகளிடத்தில், அவர்கள் உட்கொள்ளுமாறு இதனை அன்புடன் அளித்திடும். புத்திரரை வேண்டியன்றோ நீர் பல விதமாய் வேட்கின்றீர். அப் புத்திரர் ஒருவரல்ல இருவரல்ல அநேகர் அவர்களிடத்தில் கட்டாயமாய் அவதரிப்பார்கள் என்று அத் திவ்விய புருஷன் அரசனிடம் கூறி முடித்தார்.

तथेति नृपतिः प्रीतः शिरसा प्रतिगृह्य ताम् ।
पात्रीं देवान्नसंपूर्णां देवदत्तां हिरण्मयीम् ॥ 21 ॥
अभिवाद्य च तद्भूतमद्भुतं प्रियदर्शनम् ।
मुदा परमया युक्तश्चकाराभिप्रदक्षिणम् ॥ 22 ॥
ततो दशरथः प्राप्य पायसं देवनिर्मितम् ।
बभूव परमप्रीतः प्राप्य वित्तमिवाधनः ॥ 23
ततस्तदद्भुतप्रख्यं भूतं परमभास्वरम् ।
संवर्तयित्वा तत्कर्म तत्रैवान्तरधीयत ॥ 24

21. (ப - ரை) **नृपतिः** - அரசனானவர், **प्रीतः** - பரம ஸந்தோஷமடைந்தவராய், **तथेति** - அப்படியே என்று, **ताम्** - அந்த, **देवान्नसम्पूर्णां** - தேவர்களினால் நிருமிக்கப்பட்ட பரமான்னத்தினால் நிறைந்துள்ளதும், **देवदत्तां** - தேவர்களால் கொடுக்கப்பட்டதும், **हिरण्मयीम्** - ஸுவர்ண மயமுமான, **पात्रीं** - பாத்திரத்தை, **शिरसा** - முடியினால் (முடிவணங்கி), **प्रतिगृह्य** - பெற்றுக் கொண்டு (ஏற்றுக் கொண்டு),

22. (ப - ரை) **अद्भुतम्** - அத்புதமான ஆகார முள்ளதாய், **प्रियदर्शनम्** - பிரியமான பார்வையுள்ளதுமான, **तत्** - அந்த, **भूतम्** - புருஷனை, **अभिवाद्य** - நமஸ்கரித்து, **परमया** - அதிகமான, **मुदा** - ஸந்தோஷத்தோடு, **युक्तः** - கூடினவராய், **अभि** - சுற்றி வந்து, **प्रदक्षिणम्** - பிரதக்ஷிணத்தை, **चकार** - செய்தார்.

23. (ப - ரை) **ततः** - பிறகு, **दशरथः** - தசரதரானவர், **अधनः** - பிறவித் தரித்திரனானவன், **वित्तम्** - தனத்தை, **प्राप्येव** - அடைந்ததுபோல, **देवनिर्मितम्** - தேவர்களால் நிருமிக்கப்பட்ட, **पायसम्** - பரமான்னத்தை, **प्राप्य** - அடைந்து, **परमप्रीतः** - மிகவும் ஸந்துஷ்டராக, **बभूव** - ஆனார்.

24. (ப - ரை) **ततः** பிறகு, **अद्भुतप्रख्यं** - ஆச்சரியமான ஆகிருதியோடு

21-22. (க - ரை) மன்னனும் மனம் குளிர தேவலோகத்திய பரமான்னம் நிறைந்த தேவர்கள் கொடுத்த அத் தங்கப் பாத்திரத்தை தலையினால் ஏற்று ஆச்சரியமான ஆகாரத்தோடு, கண்களுக்கு இனியதான காக்ஷியைத் தருகின்ற அத் திவ்விய புருஷனை அளப்பதற்கரிய மகிழ்வுற்றவனாய் சுற்றி வலம் வந்து நமஸ்கரித்து உபசரித்துப் போற்றினான்.

23. (க - ரை) பிறகு தசரதர் தெய்வங்கள் ஆக்கி யனுப்பிய அப்பரமான்னத்தைப் பெற்று பிறவித் தரித்திரன், பெரு நிதியைப் பெற்றது போல அடக்க முடியாத ஆனந்தத் திலாழ்ந்தார்.

24. (க - ரை) அத்புதமான ஆகிருதியோடு நிகரற்றுப் பிரகாசிக்கின்ற அந்த

हर्षरश्मिभिरुद्योतं तस्यान्तःपुरमाबभौ ।
शारदस्याभिरामस्य चन्द्रस्येव नभोंशुभिः ॥ 25 ॥
सोऽन्तःपुरं प्रविश्यैव कौसल्यामिदमब्रवीत् ।
पायसं प्रतिगृह्णीष्व पुत्रीयं त्विदमात्मनः ॥ 26 ॥
कौसल्यायै नरपतिः पायसार्धं ददौ तदा ।
अर्धादर्धं ददौ चापि सुमित्रायै नराधिपः ॥ 27 ॥

யுள்ளதும், **परम भास्वरम्** - அந்தியந்த பிரகாச சீலமாயுமிருக்கிற, **तत् भूतम्** - அந்த புருஷனானவர், **तत् कर्म** - (தானேற்று வந்தபாயஸப் பிரதான ரூபமான) அந்தக் காரியத்தை, **संवर्तयित्वा** - நன்றாக நடத்தி முடித்து, **तत्रैव** - அங்கேயே, **अन्तरधीयत** - மறைந்தார்.

25. (ப - ரை) **तस्य** - அந்த ராசாதருடைய, **अन्तःपुरम्** - அந்தப் புறத்திலுள்ள ஸ்திரீ ஜனமானது, **शारदस्य** - சரத் காலத்தினுடையவனான, **अभिरामस्य** - அழகான, **चन्द्रस्य** - சந்திரனுடைய, **अंशुभिः** - கிரணங்களினாலே, **नभ इव** - ஆகாயம் போல, **हर्षरश्मिभिः** - ஸந்தோஷத்தினாலுண்டான மலர்ச்சியினால், **उद्योतम्** - ஒளி மிகுந்ததாக, **आबभौ** - விளங்கிற்று.

26. (ப - ரை) **सः** - அவ்வரசன், **अन्तःपुरम्** - அந்தப் புறத்தை, **प्रविश्यैव** - பிரவேசித்தவுடனே, **कौसल्यां** - கௌஸல்யையை, **इदम्** - இதை, **अब्रवीत्** - சொன்னார், - **आत्मनः** தமக்கு, **पुत्रीयम्** - புத்திரோத்பத்திக்குக் காரணமான, **इदम्** - இந்த, **पायसं तु** - பாயஸத்தை, **प्रतिगृह्णीष्व** - பெற்றுக் கொள்ளும் (என்று),

27-27½. (ப - ரை) **नरपतिः** - மஹாராஜாவானவர், **पायसार्धं** - முழுப் பாயஸத்தினுடைய ஒரு பகுதியை, **कौसल्यायै** - கௌஸல்யா தேவியின் பொருட்டு,

திவ்விய புருஷனொருவனில் தான் ஏற்று வந்த பாயஸப் பிரதான ரூபமான காரியத்தை செவ்வனே செய்து முடித்து, தோன்றிய விடத்திலேயே மறைந்து விட்டார்.

25. (க - ரை) சக்கிரவர்த்தி தமது கையிற் பாயஸ பாத்திரத்தைப் பெற்றவுடனேயே சரத்கால சந்திரிகையினால் ஆகாய மண்டலம் விளங்குவது போல அவருடைய அந்தப்புற மஹிளாஜனம் ஆனந்த ஒளிகொண்டு பிரகாசிக்கலாயிற்று.

26- (ப - ரை) சக்கிரவர்த்தியோ வெளில் தமது அந்தப்புறத்தில் நுழைந்த உடனேயே கௌஸல்யா தேவியைப் பார்த்து தமக்குப் புத்திரனைத் தருகின்றதான, பரமான்னத்தைப் பிரதிக்கிரஹித்துக் கொள்ளும் என்று பிரேமையுடன் கூறினார்.

27½-29. (க - ரை) தனது பத்தினிகள் மூவருக்கும் பாயஸத்தைப் பிரித்துக் கொடுக்க விரும்பிய அந்த எஜமானன் மூத்தவளுக்கு கொடுக்கும் பாயஸத்தில் இளை

कैकेय्यै चावशिष्टार्धं ददौ पुत्रार्थकारणात् ॥ 27½ ॥
प्रददौ चावशिष्टार्धं पायसस्यामृतोपमम् ।
अनुचिन्त्य सुमित्रायै पुनरेव महीपतिः ॥ 28½ ॥
एवं तासां ददौ राजा भार्याणां पायसं पृथक् ॥ 29 ॥

तदा - அப்பொழுது, **ददौ** - கொடுத்தார், **अर्धात्** - மிகுதியான அப்பாதியிலிருந்து, **अर्धं** - அதன் ஒரு பகுதியை, **नराधिपः** - நரேச்வரன், **सुमित्रायै चापि** - ஸுமித்திரையின் பொருட்டும், **ददौ** - கொடுத்தார், **अवशिष्टार्धं** - விஞ்சியிருந்த ஒரு பாதியை, **पुत्रार्थकारणात्** - புத்திரலாப நிமித்தமாக, **कैकेय्यै च** - கைகேயியின் பொருட்டும், **ददौ** - கொடுத்தார்.

28½-29. (ப-ரை) **अमृतोपमम्** - அமுதம்போன்ற, **पायसस्य** - பாயஸத்தினுடைய, **अवशिष्टार्धं** - மிகுந்த பாகத்தையெல்லாம், **महीपतिः** - மஹாராஜன், **अनुचिन्त्य** - ஆலோசித்துப் பார்த்து, **पुनरेव** - மறுபடியும், **सुमित्रायै** - ஸுமித்திரையின் பொருட்டே, **प्रददौ** - கொடுத்துவிட்டார். **एवं** - இப்படி, **राजा** - ராஜாவானவர், **तासां** - அந்த, **भार्याणां** - பத்தினிகளுக்கு, **पायसम्** - பாயஸத்தை, **पृथक्** - தனித்தனியாகப் பிரித்து, **ददौ** - கொடுத்தார்.

யவளுக்குக் கொடுப்பது ஒரு பாதிதானிருக்க வேண்டுமென்கிற நியாயத்தை மனதிற் கொண்டவராய் முதன் முதலில் கையிலுள்ள பாயஸத்தில் ஒரு பாதியை ஸர்வ ஜேஷ்டையான கௌஸல்யா தேவிக்குக் கொடுத்தார். பிறகு மற்றப் பாதியை இரு கூறாக்கி அவருக்கிளையவரான ஸுமித்திரா தேவிக்கு அதிலொன்றைக் கொடுத்தார். பிறகு கையிலுள்ள கால்பங்கை இரண்டாக்கி அதிலொன்றை அவருக்கு மிளையவரான கைகேயி தேவிக்குக் கொடுத்தார். மிகுந்திருந்த அரைக்கால்பங்கை கைகேயிக்குக் கொடுத்தால் மூத்தவரான ஸுமித்திரைக்கும் அவருக்கும் வாசியில்லாமற் போகுமே என்று ஆலோசித்து அதனையும் ஸுமித்திரைக்கே கொடுத்து விட்டார்.

அதனால், இராமன் விஷ்ணுவினுடைய அர்த்தாம்சமாகவும், இலக்ஷ்மணன் பாதாம்சமாகவும், பரத சத்ருக்னர்கள் அரைக்கால் அம்சமாகவும் ஆகின்றனர். ஆனால் இப்படிச் சொல்லுவதில் மேலே பரதனைப் பற்றி "**साक्षाद्विष्णोश्चतुर्भागः**" [ஸர்க்கம் 18. சுலோகம் 12½)- விஷ்ணுவின் நாலத்திலொரு பாகமென்றும், லக்ஷ்மண சத்ருக்கினர்களைப் பற்றி. **विष्णो. रर्धसमन्वितौ** (ஸர்க்கம் 18, சுலோகம் 13½.) விஷ்ணுவின் ஸரி பாதி அம்சங்கள் என்றும் சொல்லியிருப்பதோடு முரண் உண்டாகும். ஆனாலும் பரதனைப் பற்றிய விடத்தில் **साक्षाद्विष्णोः** என்றதினால் எல்லா ஜனங்களாலும் கண் கூடாகக் காணலாம்படி விஷ்ணுவினுடைய அர்த்தாம்சத்தைக் கொண்டு அவதரித்திருக்கின்ற இராம ரூபனான விஷ்ணுவி

तास्त्वेतत्पायसं प्राप्य नरेन्द्रस्योत्तमाः स्त्रियः ।
संमानं मेनिरे सर्वाः प्रहर्षोदितचेतसः ॥ 30 ॥

ततस्तु ताः प्राश्य तदुत्तमस्त्रियो महीपतेरुत्तमपायसं पृथक् ।
हुताशनादित्यसमानतेजसश्चिरेण गर्भान्प्रतिपेदिरे तदा ॥ 31 ॥

30. (ப - ரை) **ताः** - அந்த, **नरेन्द्रस्य** - அரசனுடைய, **उत्तमाः** - உத்தம குணமுள்ளவர்களான, **स्त्रियः तु** - ஸ்திரீகளோவெனில், **एतत्** - இந்த, **पायसम्** - பரமான்னத்தை, **प्राप्य** - பெற்று, **सर्वाः** - எல்லோரும், **प्रहर्षोदितचेतसः** - ஸந்தோஷத்தாலே விகஸிதமான சித்தத்தை யுடையவர்களாய், **संमानं** - (அதனைத் தங்களுக்குத் தருந்த) வெகுமானமாக, **मेनिरे** - எண்ணினார்கள்.

31. (ப - ரை) **ततस्तु** - அதற்கப்புறமோவெனில், **महीपतेः** - சக்கிரவர்த்தியினுடைய, **उत्तमस्त्रियः** - உத்தம பத்தினிகளான, **ताः** - அவர்கள், **तत्** - அந்த, **उत्तम पायसं** - உயர்ந்த பாயஸத்தை, **पृथक्** - தனித் தனியாக, **प्राश्य** - சாப்பிட்டு, **हुताशनादित्यसमानतेजसः** - அக்கினி, ஸூரியன் இவர்களோடு ஸமானமான

30. (க - ரை) அஸூயை முதலான குறைகளில்லாமல் நற்குணம் நிறைந்த உத்தமிகளான மஹாராஜனுடைய பத்தினிகள் அவர் பகர்ந்து கொடுத்த பாயஸத்தை தங்களுக்குச் செய்த வெகுமானமாக நினைத்துப் பெற்றுக்கொண்டு அளவற்ற ஸந்தோஷத்தினால் மனம் பூரிக்கலாயினர்.

31. (க - ரை) இப்படி தமது நாயகன் அன்புடனளித்த அமுதம் போன்ற பாயஸத்தைப் பருகியவர்களான அவ்விராஜ பத்தினிகள் அக்னி ஸூரியர்களைப் போல

னுடைய நாலத்தோரு அம்ச மென்று பொருள் படுகின்றமையால் பரதன் விஷ்ணுவினுடைய எட்டிலொரு பங்கென்றே ஏற்பட்டு விடுகிறது ஆகையாலும் அல்லது "**चतुर्भाग:**" என்றதற்கு "**चतुर्थस्य भाग:**" நான்கிலொரு அம்சத்தினுடைய ஒரு பாதி என்று அர்த்தம் கூறி விட்டாலும் எட்டிலொன்றென்றே ஏற்படுகின்றமையாலும் முன் சொன்ன விரோதம் வாராது. லக்ஷ்மண சத்ருக்கனர்களைப் பற்றி "**विष्णोरर्धसमन्वितौ**" என்று சொல்லுமிடத்திலும் அர்த்த சப்தத்தை பாதி யென்று அர்த்தம் பண்ணாமல் ஏதோ ஒரு அம்ச மென்று மட்டும் பொருள் படுத்தக் கூடுமாதலால் அங்கும் விரோத மில்லாமல் ஒழிந்து விடும். பாயஸத்தை முன்னாடியே பெற்றிருந்தாலும் கைகேயி உட்கொண்டதற்குப் பிறகே, ஸுமித்ரை சாப்பிட்டாராகையால் லக்ஷ்மணனை விட பரதன் மூத்தவரானார். இந்த நிர்ணயத்திற்கு முரணாகை புராணாந்தரங்களிற் கூறி யிருப்பதை கல்பாந்திர விஷய மென்று தியஜித்து விட வேண்டும் என்று இவ்விடத்தில் ஸ்ரீமத் ராமாயண வியாக்கியான கர்த்தாக்கள் திருவுள்ளம் பற்றி யிருக்கின்றார்கள்.

ततस्तु राजा प्रसमीक्ष्य ताः स्त्रियः प्ररूढगर्भाः प्रतिलब्धमानसः ।
बभूव हृष्टस्त्रिदिवे यथा हरिः सुरेन्द्रसिद्धर्षिगणाभिपूजितः ॥ 32 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
षोडशः सर्गः ॥ 16 ॥

தேஜஸ்ஸை யுடையவைகளான, **गर्भान्** - கெர்ப்பங்களை, **चिरेण** - வெகுகாலத்திய பிரார்த்தனைக்குப்பின், **तदा** - அப்பொழுது, **प्रतिपेदिरे** - அடைந்தார்கள்.

32. (ப - ரை) **ततस्तु** - அதன் பிறகோவெனில், **राजा** - அரசனானவர், **प्ररूढगर्भाः** - விருத்தியடைந்துவருகிற கர்ப்பத்தை யுடையவர்களான, **ताः** - அந்த, **स्त्रियः** - பத்தினிகளை, **प्रसमीक्ष्य** - நன்றாகப்பார்த்து, **प्रतिलब्धमानसः** - அடையப்பட்டிருக்கிற மனோரதத்தை யுடையவராக, **त्रिदिवे** - தேவலோகத்தில், **सुरेन्द्रसिद्धर्षिगणाभिपूजितः** - ஸுரசிரேஷ்டர்கள், ஸித்தாள், ரிஷிகள் இவர்களுடைய கூட்டங்களினால் பூஜிக்கப்பட்டிருக்கிற, **हरिः** - ஹரியானவர் (விஷ்ணு அல்லது இந்திரன்), **यथा** - எப்படியோ (அப்படி), **हृष्टः** - ஸந்துஷ்டராக, **बभूव** - ஆனார்.

ஒளி மிகுந்தவைகளான கெர்ப்பங்களை வெகு நாளாகத் தாம் கோரியிருந்தபடி அப்போது அடைந்து விட்டார்கள்.

32. (க - ரை) சிரகாலமாக புத்திரனில்லாமையால் வருந்திக் கிடந்த அவ்வரசன், அபிவிருத்தி யடைந்து வருகிற கெர்ப்பத்தைச் சுமந்து விளங்குகின்ற தனது பத்தினிகளைப் பார்த்துப் பார்த்து மனம் பூரித்து விண்ணுலகில் தேவ கந்தர்வ மஹரிஷி ஸித்தாதிகள் சூழ்ந்து நின்று வழிபடுகின்ற வாஸவனை அல்லது வாஸுதேவனைப் போல தானும் சிறிது நாளில் அருமைக் குமாரர்கள் பலின் தந்தை குதூகலமாய் வீற்றிருக்கப் போகிற வாழ்வை நினைந்து நினைந்து உள்ளம் பூரிக்கலானார்.

இங்கு இவ் விஷயம் பிரஸக்தமாக ஞாபகத்திற்கு வந்தமையால் உசிதமென்று எண்ணி மத்தியில் மஹரிஷி இதைச் சொல்லி வைத்தார். இதற்கு மேல் முன் துவக்கியிருக்கின்ற யக்ஞ விருத்தாந்தம் முதலியவற்றைத் தொடர்ந்து சொல்லுகின்றார்.

सप्तदशः सर्गः ॥ 17 ॥

पुत्रत्वं तु गते विष्णौ राज्ञस्तस्य महात्मनः ।
उवाच देवताः सर्वाः स्वयंभूर्भगवानिदम् ॥ 1 ॥

सत्यसन्धस्य वीरस्य सर्वेषां नो हितैषिणः ।
विष्णोः सहायान्बलिनः सृजध्वं कामरूपिणः ॥ 2 ॥

मायाविदश्च शूरांश्च वायुवेगसमाञ्जवे ।
नयज्ञान्बुद्धिसंपन्नान्विष्णुतुल्यपराक्रमान् ॥ ॥ 3 ॥

1. (ப - ரை) **विष्णौ** - மஹாவிஷ்ணுவானவர், **महात्मनः** - மஹா பாக்கிய சாலியான, **तस्य** - அந்த, **राज्ञः** - தசரத மஹாராஜனுக்கு, **पुत्रत्वं** - புத்திரபாவத்தை, அதாவது புத்திரனாயிருக்கையை, **गतेतु** - அடையவே அல்லது நிச்சயிக்கவே, **भगवान्** - (மேற்காரியங்களை) நன்குணர்ந்தவரான, **स्वयंभूः** - பிரும்மதேவன், **सर्वाः** - ஸமஸ்தர்களான, **देवताः** - தேவர்களையும் (பார்த்து), **इदम्** - இந்த வார்த்தையை, **उवाच** - சொன்னார்.

2. (ப - ரை) **सत्यसन्धस्य** - உண்மையான உறுதியுள்ளவராய், **वीरस्य** - சூரனாய், **सर्वेषां** - ஸமஸ்தர்களான, **नः** - நமக்கு, **हितैषिणः** - அநுகூலத்தை விரும்புகின்றவரான, **विष्णोः** - மஹாவிஷ்ணுவுக்கு, **सहायान्** - உடன்நின்று உதவுகின்றவர்களான, **कामरूपिणः** - இஷ்டப்படி உருவத்தை பெறுகின்றவர்களான, **बलिनः** - பலசாலிகளை, **सृजध्वं** - ஸிருஷ்டியுங்கள்.

3. (ப - ரை) **मायाविदः च** - மாயையை அறிந்தவர்களாயும், **शूरान् च** - வீரர்களாயும், **जवे** - வேக(விஷய)த்தில், **वायुवेगसमान्** - காற்றினுடைய வேகத்தோடு ஒத்தவர்களாயும், **नयज्ञान्** - நீதி தெரிந்தவர்களாயும், **बुधिसंपन्नान्** - நல்லறிவு

1. (க - ரை) இப்படி, ஸர்வஜகத் பிதாவான பரமாத்மா தானும், பரம பாக்கிய சாலியான சக்கிரவர்த்திக்குத் திருக் குமாரனாக அவதரிப்பதென்று தீர்மானித்து விடவே அவன் உந்தித் தாமரையில் தானாகவே தோன்றியதால் ஸ்வயம்பு எனப் பெயர்பெற்ற பிரும்மதேவனும் நடக்க வேண்டிய காரியங்களை நன்றாக ஆலோசித்து தேவர்களைப் பார்த்து இவ்வாறு கூறலானார்.

2. (க - ரை) தான் செய்துவைத்த பிரதிக்ஞையைத் தவறாமல் நிறைவேற்றும் ஸத்திய வசனராய், அதற்குற்ற ஆற்றலையும் பெற்று நம் மெல்லோருக்கும் அநுகூலத்தைச் செய்ய விரும்புகின்றவரான மனிதனாக அவதரிக்கப் போகின்ற மஹாவிஷ்ணுவின் ஸஹாயார்த்தமாக காம ரூபிகளான பலவான்கள் பலரை நீங்கள் உண்டாக்குங்கள்.

3-5. (க - ரை) இவ்வளவு மட்டுமின்றி நீங்களுண்டாக்கும் புத்திரர்கள் அரக்கரின் மாயை தெரிந்தவராய் அவர்களை வெல்லும் வல்லமை படைத்துமிருக்க வேண்

असंहार्याननुपायज्ञान्सिंहसंहननान्वितान् ।
सर्वास्त्रगुणसंपन्नानमृतप्राशनानिव ॥ 4 ॥

अप्सरस्सु च मुख्यासु गन्धर्वीणां तनूषु च ।
सृजध्वं हरिरूपेण पुत्रांस्तुल्यपराक्रमान् ॥ 5 ॥

நிறைந்தவர்களாயும், **विष्णुतुल्यपराक्रमान्** - விஷ்ணுவோடு உவமிக்கத் தகுந்த விக்கிரமத்தை யுடையவர்களாயும்,

4. (ப - ரை) **असंहार्यान्** - அழிக்கக் கூடாதவர்களாயும். **उपायज्ञान्** - வெல்லப் போவதற் கேற்றபடி முன்கூட்டிச் செய்வதை அறிந்தவர்களாயும். அல்லது ஸாம தான பேததண்டங்களென்கிற நான்குவித உபாயங்களையு மறிந்தவர்களாயும், **सिंहसंहननान्वितान्** - ஸிம்ஹத்தினுடையது போன்ற அவயவ ஸந்நிவேசங்களை அதாவது உடற் கூற்றின் சேர்க்கைகளையுடையவர்களாய், **सर्वास्त्रगुणसंपन्नान्** - ஸமஸ்தவிதமான அஸ்திரங்களுடைய சக்திகளிலுமே ஸம்பூர்ணர்களாய், **अमृतप्राशनानिव** - அமிருதபானம் பண்ணியவர்கள்போல் (அழிவற்று) இருக்கின்றவர்களுமான,

5. (ப - ரை) **तुल्यपराक्रमान्** - (உங்களோடு) ஸமானமான பராக்கிரமத்தை யுடையவர்களான, **पुत्रान्** - குமாரர்களை **मुख्यासु** - முக்கியர்களான. **अप्सरस्सु च** - அப்ஸர ஸ்திரீகளிடத்திலும், **गन्धर्वीणां** - கந்தர்வ ஸ்திரீகளுடைய, **तनूषु च** - மூர்த்திகளிடத்திலும், **हरिरूपेण** - வானரரூபத்தோடு, (கூடியவர்களாக), **सृजध्वं** - ஸிருஷ்டி செய்யுங்கள்.

டும். வாயுவைப் போல் பரக்கும் திறமையுள்ளவர்களாய் நீதி வாய்ந்த புத்தி நுட்பமுள்ளவராயும் விஷ்ணுவைப்போல் சத்ருவை ஆக்கிரமித்துச் செல்லுகையில் பிறரால் அசைக்க முடியாத பிரபாவமுள்ளவர்களாயு மிருக்க வேண்டிய ஸாமாதிகளான உபாயங்களை யறிந்தவர்களாய், ஸிம்ஹஸமான ஆகிருதிகளாய், ஸர்வாஸ்திர சக்தியுக்தர்களாய், அமரர்களைப் போல் அழிவற்றவர்களாயு மிருக்கவேண்டும். இத்தகைய உத்தமப் புத்திரர்களை, கந்தர்வாப் ஸரஸ் ஆதிகளுடைய மூர்த்திகளில் பராக்கிரமத்திற்குத் தக்க வீரியம் வாய்ந்தவர்களான வானர ரூபர்களாக ஸ்ருஷ்டிக்கக் கடவீர்கள் என்றும் ஆக்ஞாபித்தார்.

यक्षपन्नगकन्यासु ऋक्षिविद्याधरिषु च ।
किन्नरीणां च गात्रेषु वानरीणां तनूषु च ॥

இந்த சுலோகம் சில கோசங்களில் காணப்படுகிறது.

पूर्वमेव मया सृष्टो जाम्बवानृक्षपुंगवः ।
जृम्भमाणस्य सहसा मम वक्त्रादजायत ॥ 6 ॥

ते तथोक्ता भगवता तत्प्रतिश्रुत्य शासनम् ।
जनयामासुरेवं ते पुत्रान्वानररूपिणः ॥ 7 ॥

ऋषयश्च महात्मानः सिद्धविद्याधरोरगाः ।
चारणाश्च सुतान्वीरान्ससृजुर्वनचारिणः ॥ 8 ॥

6. (ப - ரை) **मया** - என்னால், **पूर्वमेव** - முன்னையே, **जाम्बवान्** - ஜாம்பவானென்கிற பெயருள்ள, **ऋक्षपुंगवः** - ரிக்ஷ (கரடி) சிரேஷ்டரானவர், **सृष्टः** - ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார். **जृम्भमाणस्य** - கொட்டாவி விடுகின்ற, **मम** - என்னுடைய, **वक्त्रात्** - முகத்திலிருந்து (வாயிலிருந்து), **सहसा** - உடனே, **अजायत** - (அவர்) உண்டானார்.

7. (ப - ரை) **भगवता** - பகவானான பிரும்மாவினால், **तथा** - அப்படி, **उक्ताः** - சொல்லப்பட்டவர்களான, **ते** - அந்த தேவர்கள், **तत्** - அந்த, **शासनम्** - ஆக்ஞையை, **प्रतिश्रुत्य** - ஏற்றுக்கொண்டு, **एवं** - இவ்விதமாக, **ते** - அவர்கள், **वानररूपिणः** - வானரத்தின் உருவமுள்ளவர்களான, **पुत्रान्** - குமாரர்களை, **जनयामासुः** - உண்டாக்கினார்கள்.

8. (ப - ரை) **महात्मानः** - மஹான்களான, **ऋषयश्च** - ரிஷிகளும், **सिद्धविद्याधरोरगाः** - இப்பெயருள்ள தேவஜாதிகளும், **चारणाश्च** - சாரணரென்பவரும், **वनचारिणः** - (காட்டில் திரிகின்ற) வானரரூபர்களான, **वीरान्** - வீரியமுள்ளவர்களான, **सुतान्** - புத்திரரை, **ससृजुः** - ஸிருஷ்டித்தார்கள்.

6, (க - ரை) எதிர்ச்சையாகக் கொட்டாவி கொண்ட என் முகத்திலிருந்து ஜாம்பவானென்கிற ரிக்ஷசிரேஷ்டர் வெகு நாளைக்கு முன்னாலேயே தோன்றியிருக்கின்றார். அவரை இராம ஸஹாயத்திற்கென்று அப்போதே நான் திட்டம் செய்து வைத்திருக்கின்றேன் என்றும் பிரும்ஹதேவன் சொல்லி முடித்தார்.

7. (க - ரை) இப்படி பிரும்ஹதேவரின் ஆணையை மேற்கொண்ட தேவர்கள் அவர் கட்டளையின்படியே வானர ஸ்வரூபர்களான புத்திரர்கள் பலரை பெற்றுவைத்தார்கள்.

8. (க - ரை) ஸம்ஸார விமுகர்களான மஹரிஷிகளுங்கூட ஸித்த வித்யாதர, உரக சாரணாதிகளான தேவ வர்க்கங்களோடு ஒன்றுபட்டு லோகஹிதத்திற்கென்று வனசரர்களான வானரர் பலரைப் படைக்கலாயினர்.

वानरेन्द्रं महेन्द्राभ मिन्द्रो वालिनमूर्जितम् ।
सुग्रीवं जनयामास तपनस्तपतां वरः ॥ 9 ॥

बृहस्पतिस्त्वजनय त्तारं नाम महाहरिम् ।
सर्ववानरमुख्यानां बुद्धिमन्तमनुत्तमम् ॥ 10 ॥

धनदस्य सुतः श्रीमा न्वानरो गन्धमादनः ।
विश्वकर्मा त्वजनय न्नलं नाम महाहरिम् ॥ 11 ॥

9. (ப - ரை) **महेन्द्राभं** - மஹேந்திர பர்வதம்போன்ற காந்தியையுடைய, **ऊर्जितम्** - தீரனை, **वानरेन्द्रं** - வானரராஜனாயுமான, **वालिनं** - வாலியென்பவனை, **इन्द्रः** - தேவேந்திரன், **जनयामास** - உண்டாக்கினார், **तपतां** - எரிப்பவர்களுக்குள், **वरः** - சிரேஷ்டரான, **तपनः** - ஸூரியன், **सुग्रीवं** - ஸுக்ரீவனென்கிறவனை (உண்

10. (ப - ரை) **बृहस्पतिस्तु** - பிருஹஸ்பதியோவெனில், **सर्ववानरमुख्यानां** - எல்லா வானர சிரேஷ்டர்களுக்கும், **उत्तमम्** - சிரேஷ்டனாயும், **बुद्धिमन्तं** - மஹா புத்திசாலியுமான, **तारं नाम** - தாரன் என்கிற, **महाहरिम्** - உந்நத வானரனை, **अजनयत्** - உண்டாக்கினார்.

11. (ப - ரை) **धनदस्य** - குபேரனுக்கு, **श्रीमान्** - ஸம்பன்னனான, **गन्धमादनः** - கெந்தமாதனனென்கிற, **वानरः** - வானரன், **सुतः** - பிள்ளையானான். **विश्वकर्मा तु** விச்வகர்மாவோ வெனில், **नलं नाम** - நளன் என்று பிரஸித்தனான, **महाहरिम्** - பெரிய வானரனை, **अजनयत्** - பெற்று வைத்தார்.

9. (க - ரை) தேவர்களுக்குத் தலைவரான இந்திரன் பலபராக்கிரமங்களில் தன்னைப் போன்றவரான வானர ராஜனான வாலியையும், பிரகாசவானான ஸூரிய பகவான் (வாலிக்குப் பின்னால்) ஸுக்ரீவனையும் உண்டாக்கினார்கள்.

10. (க - ரை) தேவ குருவான பிருஹஸ்பதியோ வெனில் தம்மைப் போன்றே மேதையிற் சிறந்தவரான தாரனென்கிற வானரோத்தமனை உண்டாக்கி வைத்தார்.

11. (க - ரை) தனதிபனான குபேரனுக்கு மிக்க ஸம்பத்துள்ள கெந்தமாதன னென்கிற வானரன் பிறந்தான். தேவ சிற்பியான விச்வகர்மாவோ வெனில் ஸர்வ நிர்மாண நிபுணனான நளனென்று பிரஸித்தனான மஹா கபியை உண்டாக்கினான்.

पावकस्य सुतः श्रीमान्नीलोऽग्निसदृशप्रभः ।
तेजसा यशसा वीर्या दत्यरिच्यत वानरान् ॥ 12 ॥

रूपद्रविणसंपन्नावश्विनौ रूपसंमतौ ।
मैन्दं च द्विविदं चैव जनयामासतुः स्वयम् ॥ 13 ॥

वरुणो जनयामास सुषेणं वानरर्षभम् ।
शरभं जनयामास पर्जन्यस्तु महाबलम् ॥ 14 ॥

12. (ப - ரை) **श्रीमान्** - ஜெயஸ்ரீயோடுகூடிய, **अग्निसदृशप्रभः** - நெருப்போடு ஸமமான காந்தியுள்ளவரான, **नीलः** - நீலனென்பவர், **पावकस्य** - அக்நிதேவனுக்கு, **सुतः** - புத்திரரானுர் (அவர்), **तेजसा** - தேஜஸினுலும், **यशसा** - கீர்த்தியினுலும், **वीर्यात्** - பலத்தினுலும், **वानरान्** - எல்லா வானரர்களையும், **अत्यरिच्यत** - அதிகரித்திருந்தார்.

13. (ப - ரை) **रूपद्रविणसंपन्नौ** - ஸௌந்தர்யமாகிற ஸம்பத்தினுல் நிறைந்தவர்களாய், **रूपसंमतौ** - ரூபத்தில் கியாதிபெற்றவர்களான, **अश्विनौ** - அச்வினி தேவர்களிருவரும், **मैन्दं च** - மைந்தனென்பவரையும், **द्विविदं चैव** - த்விவிதனென்பவரையும், **स्वयम्** - தாமாக, **जनयामासतुः** - பிறப்பித்தார்கள்.

14. (ப - ரை) **वरुणः** - வருணதேவன், **वानरर्षभम्** - வானர சிரேஷ்டரான, **सुषेणं** - ஸுஷேணனென்பவரை, **जनयामास** - உண்டாக்கினுர், **पर्जन्यस्तु** - பர்ஜன்ய தேவரோவெனில், **महाबलम्** - மஹத்தான பலமுள்ளவனை, **शरभं** - சரபனென்பவரை, **जनयामास** - உண்டாக்கினுர்.

12. (க - ரை) நெருப்புப்போல் பிரகாசிக்கின்ற நீலனென்பவர், அநலனுக்குப் பிள்ளையாக விஜயலக்ஷ்மி தழுவி நிற்கும் உருவத்துடன் தோன்றி பிறரைத் திரஸ்கரிக்கும் ஸாமர்த்தியத்தாலும் அதனுல் ஏற்படும் கீர்த்தியினுலும் அதற்குற்ற பலத்தினுலும் மற்றைய வானரர்களை யெல்லாம் அடக்கி வைத்துத் தாமொருவரே தலைவராய் நின்றுர்.

13. (க - ரை) ஸௌந்தர்ய மெனும் ஸம்பத்து நிறைந்து அதனுல் அழகரென்று உலகை மோப்பிய அச்வினி தேவர்களிருவரும், மைந்தன், த்விவிதனென்கிற இருமைந்தர்களைத் தாமே யெனும்படி பிறப்பித்தார்கள்.

14. (க - ரை) வானர சிரேஷ்டனை ஸுஷேணனை வருண பகவான் பெற்றுர். பர்ஜன்ய னெனப்படுகிற மழைத் தேவனே வெனில் மஹாபலனை சரபனென்பவரை உண்டாக்கினுர்.

मारुतस्यात्मजः श्रीमान् हनुमान्नाम वानरः ।
वज्रसंहननोपेतो वैनतेयसमो जवे ॥ 15 ॥

ते सृष्टा बहुसाहस्रा दशग्रीववधे रताः ।
अप्रमेयबला वीरा विक्रान्ताः कामरूपिणः ॥ 16 ॥

मेरुमन्दरसंकाशा वपुष्मन्तो महाबलाः ।
ऋक्षवानरगोपुच्छाः क्षिप्रमेवाभिजज्ञिरे ॥ 17 ॥

15. (ப - ரை) **श्रीमान्** - ஞான வைராக்யாதி ஸம்பத்துக்களையுடையவரான, **हनुमान्नाम** - ஹனுமானென்று பிரஸித்தரான, **वानरः** - வானரர். **मारुतस्य** - வாயு பக வானுக்கு, **आत्मजः** - பிள்ளையாய் பிறந்தார். (அவர்), **वज्रसंहननोपेतः** - வஜ்ராயுதம் போன்ற ஸந்தி பெந்தங்களுடையவராய், **जवे** - வேகத்தில், **वैनतेयसमः** - கெருடனேடு ஸமானராகவும் (இருக்கின்றார்.)

16. (ப - ரை) **अप्रमेयबलाः** - அளவிடக் கூடாத பலத்தையுடையவர்களாயும், **वीराः** - வீர்யவான்களாயும், **विक्रान्ताः** - பராக்கிரம சாலிகளாயும், **कामरूपिणः** - நினைத்தபடி உருவம் பெறுகின்றவர்களாயும், **बहुसाहस्राः** - அநேக ஆயிரக் கணக்குள்ளவர்களுமான, **ते** - அந்த வானர சிரேஷ்டர்கள், **दशग्रीव वधे** - ராவணவதத்தில், **रताः** - இயற்கையில் ஆசையுள்ளவர்களாக, **सृष्टाः** - பிறப்பிக்கப் பட்டார்கள்.

17. (ப - ரை) **वपुष्मन्तः** - சரீரக் கட்டுள்ளவர்களாயும், **मेरुमन्दरसंकाशाः** - மேருமலை மந்தர பருவதம் போன்ற தோற்றமுள்ளவர்களாய், **महाबलाः** - மஹத்

15. (க - ரை) உடன் பிறந்தவைகளான ஞான வைராக்யாதி ஸம்பத்துக்களை விட்டுக் கணப்பொழுதேனும் அகன்றிருக்காதவராக ஹனுமானென்னும் வானரோத்தமன் உயிரளிக்கும் தெய்வமான வாயுவிற்கு உற்ற குமாரனாய் அவதரித்துக் குலிசம் போன்ற சரீர வலியுடன் வைனதேயனை வெல்லுகின்ற வேகமுள்ளவராய் விளங்குகின்றார்.

16. (க - ரை) பிறவியிலேயே இராவணனைக் கொல்லுவதில் கருத்துள்ளவர்களான அவ்வானர வீரர்கள் அனந்தமாயிரம் பெயர்களும் அளக்கற்கரிய பலமும், விக்கிரமும் பெற்று காம ரூபிகளாய் இராவணன் தலைகளை உதிர்ப்பதற்கான காலத்திற்குக் காத்துக் கிடந்தார்கள்.

17. (க - ரை) இப்படியே மேரு மந்தரங்களைப் போன்று விளங்குகின்ற

सर्वं वानरमुख्येषु बुद्धिमान्बलवानपि ।

சில கோசங்களில் இவ்விடத்தில் இந்த ஒரு சுலோகார்த்தம் காணப்பட்டிருக்கிறது.

यस्य देवस्य यद्रूपं वेषो यश्च पराक्रमः ।
अजायत समस्तेन तस्य तस्य सुतः पृथक् ॥ 18 ॥

गोलाङ्गूलीषु चोत्पन्नाः केचित्संमतविक्रमाः ।
ऋक्षीषु च तथा जाता वानराः किन्नरीषु च ॥ 19 ॥

देवा महर्षिगन्धर्वा स्तार्क्ष्या यक्षा यशस्विनः ।
नागाः किंपुरुषाश्चैव सिद्धविद्याधरोरगाः ॥ 20 ॥

தான பலத்தை யுடையவர்களாய் இருக்கிற, **ऋक्षवानरगोपुच्छाः** - ரிக்ஷம் வானரம் கோபுச்சம் என்கிற ஜாதி விசேஷங்களும், **क्षिप्रमेव** - சீக்கிரமாகவே, **अभिजज्ञिरे** - உண்டாயின.

18. (ப - ரை) **यस्य** - எந்த, **देवस्य** - தேவருக்கு, **यत्** - எந்த, **रूपं** - ஸௌந்தர்யமோ, **वेषः** - ஆக்ருதியும், **पराक्रमश्च** - விக்கிரமமும், **यः** - எதுவோ, **तस्य तस्य** - அந்தந்த தேவருக்கு, **तेन** - அந்தந்த ஸௌந்தர்யாதிகளினலே, **समः** - ஸமானனை, **सुतः** - புத்திரன், **पृथक्** - வெவ்வேறு விதமாக, **अजायत** - உண்டானன்.

19. (ப - ரை) **संमतविक्रमाः** - பிரஸித்தமான பராக்கிரமத்தை யுடையவர்களான, **केचित्** - சில, **वानराः** - வானரர்கள், **गोलाङ्गूलीषुच** - கோலாங்கூல ஜாதி ஸ்திரீகளிடத்திலேயே, **उत्पन्नाः** - உண்டானர்கள், **तथा** - அப்படியே, **ऋक्षीषु च** - ரிக்ஷ ஸ்திரீகளிடத்திலும், **किन्नरीषु च** - கின்னர ஸ்திரீகளிடத்திலும் (சிலவானரர்கள்), **जाताः** - உண்டானர்கள்.

20-22. (ப - ரை) **देवाः** - தேவர்களும், **महर्षिगन्धर्वाः** - மஹரிஷிகள், கந்தர்வர்கள் இவர்களும், **तार्क्ष्याः** - கெருடாதிகளும், **यक्षाः** - யக்ஷர்களும், **यशस्विनः** - கீர்த்தி பெற்றவர்களான, **नागाः** - திக்கெஜங்களும், **किंपुरुषाश्चैव** - கிம்புருஷர்களும்,

---

உடற்கட்டும், அளவற்ற பலமும் பெற்றவர்களான பலர், ரிக்ஷவானர கோபுச் சாதிகளான ஜாதி விசேஷங்களில் சடக்கெனத் தோன்றினர்கள்.

18. (க - ரை) ஸௌந்தர்ய ஆக்ருதி பராக்கிரமாதிகளில் எந்தெந்த தேவர்கள் எத்தன்மையினரோ அவ்வந்த தேவர்களுக்கு உண்டாகிய புத்திரர்களும் அத்தன்மையினராகவே தனித் தனியாய்த் தோன்றி விளங்குவாராயினர்.

19. (க - ரை) கோலாங்கூல ஸ்திரீகளிடத்திற் போல ரிக்ஷ கின்னராதிகளான விஜாதீய ஸ்திரிகளிடத்திற் கூட பிரஸித்த பராக்கிரமர்களான வானரர்களை வெகுவாகப் பிறந்தார்கள்.

20-22. (க - ரை) இப்படியே, தேவ கந்தர்வ, நாக, யக்ஷ, கிம்புருஷ, மஹரிஷி பிரபிருதிகளான அனைவரும் அவ்வவதார விஷயத்தில் ஸந்துஷ்டர்களாய், கந்

बहवो जनयामासुर्हृष्टास्तत्र सहस्रशः ।
वानरान्सुमहा काया न्सर्वान्वै वनचारिणः ॥ 21 ॥
अप्सरस्सु च मुख्यासु तथा विद्याधरीषु च ।
नागकन्यासु च तथा गन्धर्वीणां तनूषु च ॥ 22 ॥
कामरूपबलोपेता यथाकामं विचारिणः ।
सिंहशार्दूलसदृशा दर्पेण च बलेण च ॥ 23 ॥
शिलाप्रहरणाः सर्वे सर्वे पादपयोधिनः ।
नखदंष्ट्रायुधाः सर्वे सर्वे सर्वास्त्रकोविदाः ॥ 24 ॥

सिद्धविद्याधरोरगाः - ஸித்தர், வித்யாதரர், ஸர்ப்பஜாதிகள் இவர்களும், **बहवः** - இவர்போன்ற அநேகர்களும், **तत्र** - பகவதவதார ஸமயத்தில், **हृष्टाः** - ஸந்துஷ்டர்களாக, **मुख्यासु** - பிரதானிகளான, அதாவது முக்கியஸ்தர்களான. **अप्सरस्सु च** - அப்ஸரஸ்ஸுகளினிடத்தும், **तथा** - அப்படியே, **विद्याधरीषु च** - வித்யாதர ஸ்திரீகளிடத்திலும், **नागकन्यासु च** - நாக பத்நிகளிடத்திலும், **तथा** - அப்படியே, **गन्धर्वीणां** கந்தர்வ ஸ்திரீகளுடைய, **तनूषु च** - மூர்த்திகளிடத்திலும், **सुमहाकायान्** - மிக்கப்பெரிதான சரீரமுடையவர்களாயும், **वनचारिणः** - காட்டில் ஸஞ்சரிக்கின்றவர்களாயுமிருக்கின்ற, **सर्वान् वै** - எல்லா விதங்களுமான, **वानरान्** - வானரங்களையும், **सहस्रशः** - ஆயிரக்கணக்காக, **जनयामासुः** - பிறப்பித்தார்கள்.

23. (ப - ரை) (அவர்களெல்லோரும்), **कामरूपबलोपेताः** - இஷ்டப்படி எடுத்துக்கொள்ளும் உருவத்துடனும், அதற்குறிய பலத்துடனும் கூடியவராயிருந்தனர், **यथाकामं विचारिणः** - இஷ்டப்படி ஸஞ்சரிக்கும் திறமையுள்ளவர்களாயிருந்தனர். **दर्पेण च** - கர்வத்தாலும், **बलेन च** - வலிமையாலும், **सिंहशार्दूलसदृशाः** - சிங்கம், புலி இவைகளுக்குச் சமானர்களாயிருந்தனர்.

24. (ப - ரை) **सर्वे** - எல்லோரும், **शिलाप्रहरणाः** - கற்களையே ஆயுதமாக உடைத்தானவர்கள், **सर्वे** - எல்லோரும், **पादप योधितः** - மரங்களைக்கொண்டு போர்

தர்வீ அப்ஸரஸ் பிரபிருதிகளான ஸ்திரீஜாதிகளிடத்தில் மஹா பராக்கிரமசாலிகளான வானர வீரர்களை ஆயிரக்கணக்காக உண்டாக்கி வைத்தார்கள்.

23-24. (க - ரை) இவர்களெல்லோருமே தம் மனம் போகின்றபடியெல்லாம் உருவத்தை ஏற்று அதற்குற்ற பலத்தோடு நினைத்த விடமெல்லாம் ஸஞ்சரித்துத் திரிவார்கள். இவர்களுக்கு சிங்கத்திற்குமில்லாத கர்வமுண்டு. வேங்கையினிடத்திலும் காணுதற்கறிய வலிமையுண்டு. இவர்களெல்லோருமே எவ்வித ஆயுதத்தையும் வேண்டாமலே சிலைகளையும், மரங்களையுங் கொண்டே போர்புரிவார்கள். உம்

विचालयेयुः शैलेन्द्रान्भेदयेयुः स्थिरान्द्रुमान् ।
क्षोभयेयुश्च वेगेन समुद्रं सरितां पतिम् ॥ 25 ॥

दारयेयुः क्षितिं पद्भ्या माप्लवेयुर्महार्णवम् ।
नभःस्थलं विशेयुश्च गृह्णीयुरपि तोयदान् ॥ 26 ॥

புரிகின்றவர்கள், **सर्वे** - *எல்லோரும்,* **नखदंष्ट्रायुधाः** - *நகங்களையும், பற்களையுமே ஆயுதமாகக் கொண்டவர்கள்,* **सर्वे** - *எல்லோரும்,* **सर्वास्त्रकोविदाः** - *எல்லா அஸ்திரங்களைப் பற்றியும் நன்றாய்த் தெரிந்தவர்கள்.*

25. *(ப - ரை)* **शैलेन्द्रान्** - *குல பருவதங்களையும்,* **विचालयेयुः** - *ஆட்டி விடுவார்கள்,* **स्थिरान्** - *வேரூன்றியிருக்கின்ற, அல்லது கெட்டியாயிருக்கின்ற,* **द्रुमान्** - *விருக்ஷங்களை,* **भेदयेयुः** - *பறித்து விடுவார்கள் அல்லது பிளந்து விடுவார்கள்,* **सरितां** - *நதிகளுக்கு,* **पतिम्** - *நாயகனான,* **समुद्रं** - *ஸமுத்திரத்தை,* **वेगेन** - *(தமது) வேகத்தினாலே,* **क्षोभयेयु श्च** - *கலக்கியும் விடுவார்கள்.*

26. *(ப - ரை)* **क्षितिं** - *பூமியை,* **पद्भ्यां** - *இரு கால்களினாலும்,* **दारयेयुः** - *பிளந்து விடுவார்கள்.* **महार्णवम्** - *மஹா ஸமுத்திரத்தை,* **आप्लवेयुः** - *தாண்டி விடுவார்கள்,* **नभः स्थलं च** - *ககனதலத்தையும்,* **विशेयुः** - *பிரவேசிப்பார்கள்,* **तोयदान्** - *(அங்குள்ள) மேகங்களை,* **गृह्णीयुः अपि** - *பிடித்தும் விடுவார்கள்.*

மையில் அக்கல்லும் மரமுங்கூட இவர்களுக்குத் தேவையில்லை. உடம்போடு பிறந்த நகங்களும், பற்களுமே பகைவர் எவராலும் எதிர்த்துப் போர்புரிய இவர்களுக்குப் போதுமானவை. என்றாலும் பிறர் பிரயோகிக்கின்ற எவ்வஸ்த்ரங்களுடையவும் பிரயோகக் கிரமத்திலும், பரிஹார மார்க்கத்திலும் இவர்கள் நிகரற்ற நுண்ணறிவைப் பெற்றிருந்தார்கள்.

25. *(க - ரை) இவர்கள், சலிக்காத மலைகளையும் பெயர்த்துப் பந்தாடுவார்கள். வயிரம் பாய்ந்து வேரூன்றி நிற்கின்ற தேக்க மரங்களையும் பெயர்த்தெடுத்துக் கோரைபோலக் கிழித்தெறிவார்கள். கங்கை முதலிய பேராறுகள் பல புகுந்து குழப்புகையிலும் சிறிதளவும் கலக்கமுறாத ஸமுத்திரத்தையும் தமது வாலினால் சுழற்றிக் குழப்பிக் கூழாக்கி விடுவார்கள்.*

26. *(க - ரை) ஸர்வ பிராணிகளுக்கும் உறைவிடமான இப் பூமண்டலத்தை இவர்கள் தமதிரு பாதங்களினாலுதைத்து இலகுவாய்ப் பிளந்து விடுவார்கள். இம் மஹா ஸமுத்திரத்தையும் நீந்தியோ அல்லது தாவியோ தமக்கிஷ்டமான முறையிற் கடந்து செல்வார்கள். ஆகாயத்திற் புகுந்து அங்குள்ள மேகங்களையும் முஷ்டியில் அடக்கிப் பிடித்தும் விடுவார்கள்.*

गृह्णीयुरपि मातङ्गान्मत्तान्प्रव्रजतो वने ।
नर्दमानाश्च नादेन पातयेयुर्विहंगमान् ॥ 27 ॥
ईदृशानां प्रसूतानि हरीणां कामरूपिणाम् ।
शतं शतसहस्राणि यूथपानां महात्मनाम् ॥ 28 ॥
ते प्रधानेषु यूथेषु हरीणां हरियूथपाः ।
बभूवुर्यूथपश्रेष्ठा वीरांश्चाजनयन्हरीन् ॥ 29 ॥

27. (ப - ரை) **मत्तान्** - மதம் பிடித்தவைகளாய், **वने** - வனத்தில், **प्रव्रजतः** - நிலை தவறி ஓடுகின்றவைகளான, **मातङ्गानपि** - யானைகளையும், **गृह्णीयुः अपि** - பிடித்தும் விடுவார்கள், **नर्दमानाश्च** - கொர்ஜிக்கின்றவர்களாக, **नादेन** - அந்த முழக்கத்தினால், **विहंगमान्** - ஆகாச சாரிகளை, **पातयेयुः** - வீழ்த்தி விடுவார்கள்.

28. (ப - ரை) **ईदृशानां** - இப்படிப் பட்டவர்களான, **कामरूपिणाम्** - ஸ்வேச்சையான ரூபமுள்ளவர்களான, **महात्मनाम्** - மஹா பலவான்களான, **यूथपानां** - யூதபதிகளான, **हरीणां** - வானரர்களுடைய, **शतं** - நூறான, **शतसहस्राणि** - நூறாயிரங்கள், **प्रसूतानि** - உண்டாக்கப்பட்டன.

29. (ப - ரை) **ते** - அந்த, **हरियूथपाः** - வானர ஸேனாபதிகளும், **प्रधानेषु** - முக்கியங்களான, **यूथेषु** - ஸேனைகளில், **यूथप श्रेष्ठाः** - யூதபதிகளுக்குள் சிரேஷ்டர்களாக (தலைவர்களாக), **बभूवुः** - ஆனார்கள். **वीरान्** - சூரர்களான, **हरीन् श्च** - வானரர்களையும், **अजनयन्** - உண்டாக்கினார்கள்.

---

27. (க - ரை) இவர்கள் கூட்டங் கூட்டமாக மதம் பிடித்து அலையும் காட்டானையையும் அசட்டையா யிழுத்துக் கட்டிப் போடுவார்கள். இவர்கள் உத்ஸாஹத்தோடு செய்கின்ற கொர்ஜனையினால் உல்லாஸமாய் உயரப்பறக்கின்ற வைமானிகர்களும் (விமானத்திற் செல்லுகிறவர்களும்) பரவைகளோடு வாசியற மதிமயங்கித் தலைகீழாக வீழ்ந்து விடுவார்கள்.

28. (க - ரை) ஸாதாரண வானரர்களைப்பற்றி கணக்குக்கூற எவராலாகும்? காமரூபிகளாய் மஹா பல பராக்கிரமசாலிகளாய் சேனைத் தலைவர்களாயிருக்கின்ற வானரவீரர்களே ஒரு கோடிப் பெயர்கள் உதித்து விளங்கினராம்.

29. (க - ரை) இப்படி சேனைத்தலைவரை ஒரு கோடி என்றதும் ஸாமான்யப் படைத்தலைவரை யல்ல. போர்முனையில் நின்று வெற்றிபெறும் திறமையுள்ள வீரர்களின் படைத் தலைவர்களுக்குந் தலைவர்களையேதான். இவர்களே ஒரு கோடியினரென்றால் மற்ற வானரர்களை அளவிடலாகுமோ? இதுமட்டு மல்ல. இந்த மஹா யூதபதிகளும் தம்மைப் போன்ற வீரர்களான வானரர்கள் அனைவரைத் தாமும் ஸிருஷ்டித்தனராம். என்றால் மொத்த வானரரைக் கணக்கிடுவ தெப்படி?

अन्ये ऋक्षवतः प्रस्थानुपतस्थुः सहस्रशः ।
अन्ये नानाविधान् शैलान्भेजिरे काननानि च ॥ 30 ॥
सूर्यपुत्रं च सुग्रीवं शक्रपुत्रं च वालिनम् ।
भ्रातरावुपतस्थुस्ते सर्वे एव हरीश्वराः ॥ 31 ॥
नलं नीलं हनूमन्त मन्यांश्च हरियूथपान् ॥ 31½ ॥
ते तार्क्ष्यबलसंपन्नाः सर्वे युद्धविशारदाः ।
विचरन्तोऽर्दयन्दर्पा त्सिंहव्याघ्रमहोरगान् ॥ 32½ ॥

30. (ப - ரை) **अन्ये** - அவர்களுள் சிலர், **ऋक्षवतः** - ரிக்ஷவான் என்கிற பர்வதத்தினுடைய, **प्रस्थान्** - தாழ்வரைகளை, **सहस्रशः** - ஆயிரக்கணக்காக, **उपतस्थुः** - அடைந்தார்கள், **अन्ये** - மற்றும் சிலர், **नानाविधान्** - அநேக விதங்களான, **शैलान्** - மலைகளையும், **काननानि च** - காடுகளையும், **भेजिरे** - அடைந்தார்கள்.

31-31½. (ப - ரை) **ते** - அந்த, **सर्वे एव हरीश्वराः** - எல்லா வானர சிரேஷ்டர்களும், **भ्रातरौ** - தம்பித் தமையன்களான, **सूर्य पुत्रं** - ஸூரியனுடைய பிள்ளையான, **सुग्रीवंच** - ஸுக்ரீவனையும், **शक्रपुत्रं** - இந்திரனுடைய மகனான, **वालिनं च** - வாலியையும், **नलं** - நளனையும், **नीलं** - நீலனையும், **हनूमन्तं** - ஹனுமானையும், **अन्यां** - மற்றவர்களான, **हरियूथपान्** - வானர சேனைக்குப் பிரதானத் தலைவர்களையும், **उपतस्थुः** - அண்டி அடங்கி யிருந்தார்கள்.

32½. (ப - ரை) **तार्क्ष्यबलसंपन्नाः** - கெருடனைப்போல் வலிமை நிறைந்தவர்களாய், **युद्धविशारदाः** - யுத்தத்தில் மஹா ஸமர்த்தர்களான, **ते सर्वे** - அவர்களெல்லோரும், **विचरन्तः** - இங்குமங்குமாகத் திரிந்துகொண்டு, **सिंहव्याघ्रमहोरगान्** - சிங்கம், புலி பெருநாகம் இவையாதிகளை, **दर्पात्** - கொழுப்பினால், **अर्दयन्** - மர்த்தித்தார்கள்.

---

30. (க - ரை) இப்படி, அளவற்றுத் தோன்றிய அவ்வானர வீரர்கள் சிலர் ரிக்ஷவானெனப்படும் பர்வதத்தின் தாழ்வரைகளிலும், மற்றுமுள்ள விந்தியம், மந்தரம் முதலான பர்வதங்களிலுங் காடுகளிலுஞ் சிலருமாகப் பிரிந்து பிரிந்து சென்று குடியேறினார்கள்.

31-31½. (க - ரை) இவ்வானர வீரர்களெல்லோரும் ஸூரிய குமாரனை யுவராஜ ஸுக்ரீவனையும், மஹேந்திர புத்திரனை மஹாராஜ வாலியையும், நள, நீல, ஹனுமத் பிரபிருதிகளான மந்திரிகளையும் மற்றுமுள்ள சேனைத் தலைவர்களையும் சார்ந்துநின்று அவர் தம் ஆணையின்கீழ் அடங்கி வாழ்கின்றார்கள்.

32½. (க - ரை) வைனதேயரின் வலிமையைப்பெற்று விளங்குகின்ற அச்சுத்த வீரர்கள் யுத்தம் கிடைக்காததினால் இங்குமங்கும் அலைந்துகொண்டு கையிலகப்பட்ட சிங்கம் புலி, கருநாகம் முதலிய கொடிய பிராணிகளை வதைத்துக்கொண்டு கொழுப்பேறித் திரிகின்றனர்.

तांश्च सर्वान्महाबाहुर्वाली विपुलविक्रमः ।
जुगोप भुजवीर्येण ऋक्षगोपुच्छवानरान् ॥ 33½ ॥
तैरियं पृथिवी शूरैः सपर्वतवनार्णवा ।
कीर्णा विविधसंस्थानैर्नानाव्यञ्जनलक्षणैः ॥ 34½ ॥
तैर्मेघबृन्दाचलकूटकल्पैर्महाबलैर्वानरयूथपालैः ।
बभूव भूर्भीमशरीररूपैः समावृता रामसहायहेतोः ॥ 35½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
सप्तदशः सर्गः ॥ 17 ॥

33½. (ப - ரை) **तान्** - அந்த, **ऋक्षगोपुच्छवानरान्** - கரடி, கோலாங்கூலம், வானர ஜாதியர்களான, **सर्वान् च** - எல்லோரையும், **महाबाहुः** - நீண்ட கைகளை உடையவனாகவும், **विपुलविक्रमः** - விஸ்தாரமான பராக்கிரமத்தை உடையவனுமான, **वाली** - வாலியானவன், **भुजवीर्येण** - தனது பாஹுபலத்தைக் கொண்டு, **जुगोप** - ஆண்டு வந்தான்.

34½. (ப - ரை) **शूरैः** - வீரர்களாய், **विविधसंस्थानैः** - பல விதமான ஆக்ருதிகளை உடையவர்களாய், **नानाव्यञ्जनलक्षणैः** - தனித்தனிக் காட்டக்கூடிய அடையாளங்களை உடையவர்களான, **तैः** - அந்த வானரர்களால், **सपर्वतवनार्णवा** - மலை, காடு, கடல் இவற்றோடு கூடிய, **इयम्** - இந்த, **पृथिवी** - பூமியானது, **कीर्णा** - வியாபிக்கப்பட்டிருந்தது.

35½. (ப - ரை) **मेघबृन्दाचलकूटकल्पैः** - மேக ஸமூஹங்கள், பர்வத சிகரங்கள் இவற்றிற்கு ஸமானமானவர்களாய், **महाबलैः** - மஹத்தான பலத்தை உடையவர்களாய், **भीमशरीररूपैः** - பயங்கரமான சரீரத்தின் தோற்றத்தை உடையவர்களாய் இருக்கின்ற, **तैः** - அந்த, **वानरयूथपालैः** - வானரயூதபதிகளினால், **रामसहायहेतोः** இராமனுடைய உதவியின் நிமித்தமாக, **भूः** - இந்த பூமியானது, **समावृता** - நிறைப்பட்டதாக, அல்லது மறைக்கப்பட்டதாக, **बभूव** - ஆயிற்று.

33½. (க - ரை) மஹா பராக்கிரமசாலியான வாலி கரடிகள் முதலிய ஜாதிகளான வீரர்களெல்லோரையும் தனது பாஹு வீரியத்தால் குறைவின்றிக் காப்பாற்றி வந்தான்.

34½. (க - ரை) மஹா பராக்கிரமசாலிகளாய், பலவிதமான அங்க ஸன்னிவேசங்களை உடையவர்களாய் தனித்தனியான குறிகளால் விளங்குகின்ற அவ்வீரர்களான வானரங்கள், கிரியிலோ, வனத்திலோ, ஸமுத்திரத்திலோ எங்கு பார்த்தாலும், இப்பூமண்டலம் முழுதும் நிறைந்து காணப்படலாயினர்.

35½. (க - ரை) மேகங்களின் கூட்டங்கள்போல் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களும், பருவத சிகரங்கள்போல் அசைக்கமுடியாத கடோர காயமுடையவர்களுமான வானரயூதபதிகள் இராம ஸஹாயார்த்தமாக இப்படிப் பிறந்து பூமியில் எங்கு பார்த்தாலும் வானரராகவே தோன்றும்படி எங்கும் வியாபித்து நின்றனர்.

अष्टादशः सर्गः ॥ 18 ॥

निर्वृत्ते तु क्रतौ तस्मिन्हयमेधे महात्मनः ।
प्रतिगृह्य सुरा भागा न्प्रतिजग्मुर्यथागतम् ॥ 1 ॥
समाप्तदीक्षानियमः पत्नीगणसमन्वितः ।
प्रविवेश पुरीं राजा सभृत्यबलवाहनः ॥ 2 ॥
यथार्हं पूजितास्तेन राज्ञा वै पृथिवीश्वराः ।
मुदिताः प्रययुर्देशान्प्रणम्य मुनिपुंगवम् ॥ 3 ॥

---

1. (ப - ரை) **महात्मनः** - மஹா பாக்கியசாலியான (தசரதருடைய), **तस्मिन्** - அந்த, **हयमेधे** - அச்வமேத மெனப்படுகின்ற, **क्रतौ** - யக்ஞமானது, **निर्वृत्तेतु** - முடிவை யடையவே, **सुराः** - தேவர்கள், **भागान्** - ஹவிர்ப் பாகங்களை, **प्रतिगृह्य** - பெற்றுக்கொண்டு, **यथागतम्** - வந்த வழியே, **प्रतिजग्मुः** - திரும்பிச் சென்றார்கள்.

2. (ப - ரை) **समाप्तदीक्षानियमः** - முடிவடைந்த தீக்ஷைக்கான நியமங்களையுடையவரான, **राजा** - ராஜாவானவர், **पत्नीगणसमन्वितः** - பத்தினிகளுடைய ஸமூகத்தோடு கூடியவராய், **सभृत्यबलवाहनः** - ஸேவகர், சேனை, வாஹனம் இவைகளோடு கூடியவராய், **पुरीं** - பட்டணத்தை, **प्रविवेश** - பிரவேசித்தார்.

3. (ப - ரை) **तेन** - அந்த, **राज्ञा** - தசரத ராஜனால், **यथार्हं** - தக்கபடி, **पूजिताः** - கௌரவிக்கப் பட்டவர்களான, **पृथिवीश्वराः वै** - பூபதிகளோ வெனில், **मुनिपुंगवम्** - மஹரிஷி சிரேஷ்டரான வஸிஷ்டரை, **प्रणम्य** - நமஸ்கரித்து விட்டு, **मुदिताः** - ஸந்துஷ்டர்களாக, **देशान्** - தமது தேசங்களைக் (குறித்து), **प्रययुः** - புறப்பட்டார்கள்.

1. (க - ரை) மஹா பாக்கியசாலியான தசரதர் செய்த அவ்வேள்வி இடையூறெதுவுமன்றி பூர்த்தியடையவே அன்று முதலே தமது தொல்லை தீர்ந்ததுபோல தேவர்களெல்லோரும் தங் தமக்குள்ள ஹவிர்ப்பாகத்தைத் தடையின்றி பெற்றுக்கொண்டு ஸந்துஷ்டராய் தமதிருப்பிடம் சென்றனர்.

2. (க - ரை) அரசன் தனது தீக்ஷாநியமங்களை முடித்துக்கொண்டு தேவிமார்களுடன், பரிசாரகவர்க்கம் சேனை வாஹனாதிகளையும் இட்டுக்கொண்டு பட்டிணத்திற்குப் பிரவேசிக்கலானார்.

3. (க - ரை) சக்கிரவர்த்தியின் யக்ஞத்திற்காக வந்திருந்த ஸாமந்த ராஜர்கள் (சிற்றரசர்கள்) எல்லோரும், அவரவர்தம் அந்தஸ்திற்கு ஏற்க அவ்வரசனால் பூஜிக்கப் பெற்றவர்களாய், வஸிஷ்டராதியரான முனீச்வரரை நமஸ்கரித்து அருள் பெற்றுக்கொண்டு ஸந்துஷ்டர்களாகத் தமது தேசம் போய்ச் சேருவதற்குப் பிரயாணமானார்கள்.

श्रीमतां गच्छतां तेषां स्वपुराणि पुरात्ततः ।
बलानि राज्ञां शुभ्राणि प्रहृष्टानि चकाशिरे ॥ 4 ॥

गतेषु पृथिवीशेषु राजा दशरथस्तदा ।
प्रविवेश पुरीं श्रीमान्पुरस्कृत्य द्विजोत्तमान् ॥ 5 ॥

शान्तया प्रययौ सार्धमृश्यशृङ्गः सुपूजितः ।
अन्वीयमानो राज्ञाथ सानुयात्रेण धीमता ॥ 6 ॥

---

4. (ப - ரை) **ततः** - அந்த, **पुरात्** - பட்டணத்திலிருந்து, **स्वपुराणि** - தங்களுடைய பட்டணங்களைக் குறித்து, **गच्छतां** - போகின்றவர்களான, **श्रीमतां** - ஸ்ரீமான்னார்களான, **तेषां** - அந்த, **राज्ञां** - அரசர்களுடைய, **बलानि** - ஸைனியங்கள், **शुभ्राणि**- வெண்மையாகவும், **प्रहृष्टानि** - ஸந்துஷ்டங்களாகவும், **चकाशिरे** - பிரகாசித்தன.

5. (ப - ரை) **पृथिवीशेषु** - பூபதிகள், **गतेषु** - (ஊருக்குச்) சென்று விடவே, **तदा** - அப்பொழுது, **राजा** - ராஜாவான, **दशरथः** - தசரதரானவர், **द्विजोत्तमान्** - பிராம்மணோத்தமர்களான (வஸிஷ்டாதிகளை), **पुरस्कृत्य** - முன்னிட்டுக் கொண்டு, **श्रीमान्** - அதனாலுண்டான சோபை யுள்ளவராக, **पुरीं** - தனது பட்டணத்தை, **प्रविवेश** - பிரவேசித்தார்.

6. (ப - ரை) **अथ** - பிறகு, **सुपूजितः** - நன்றாகப் பூஜிக்கப்பட்டவரான **ऋश्यशृङ्गः** - ரிச்யச்ருங்க மஹரிஷியானவர், **सानुयात्रेण** - ப்ருத்யவர்க்கங்களோடு கூடிய, **धीमता** - புத்திமானான, **राज्ञा** - ரோமபாத ராஜனாலே, **अन्वीयमानः** - தொடரப்பட்டவராய், **शान्तया सार्धं** - சாந்தையோடு கூட, **प्रययौ** - புறப்பட்டுச் சென்றார்.

---

4. (க - ரை) அயோத்திமா நகரத்திற்கு அதிதிகளாக வந்திருந்த அவ்வரசர்கள் தசரதனால் நன்குபசரிக்கப் பெற்றுத் தந்தம்மிடத்திற்குத் திரும்பிச் செல்லுகையில், அவர்களுடன் செல்லுகின்ற சேனைகளெல்லாம் தசரதன் செய்த ஸம்மானத்தாலும் அவரளித்த வெண்பட்டாடைகளினாலும் மனமுவந்து மேனி பொலிந்து உள்ளும் புறமும் ஒருமிக்க வெளேரென்று பிரகாசிக்கலாயின.

5. (க – ரை) இப்படி மற்ற அரசர்கள் தந்தம் தேசம் செல்லவே, சக்கிரவர்த்தி தசரதர் வஸிஷ்டாதிகளை முன்னிட்டுக்கொண்டு அதனாலுண்டான சோபை நிறைந்தவராக தனது பட்டணத்திற்குப் பிரவேசித்தார்.

6. (க - ரை) இப்படி எல்லோரும் அயோத்திக்குச் சென்றபின், சக்கிரவர்த்தி ரிச்யச்ருங்க மஹரிஷியை வெகுவாகப் பூஜித்து உபசரிக்கவே, அது பெற்றுக்கொண்ட அம்மஹரிஷி தனது தர்மபத்னியான சாந்தையுடன் கூட மேதாவியான ரோமபாதர் சேனையோடு தன்னைக் காத்துக்கொண்டு தொடர்ந்துவர தன்னிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

एवं विसृज्य तान्सर्वान्राजा संपूर्णमानसः ।
उवास सुखितस्तत्र पुत्रोत्पत्तिं विचिन्तयन् ॥ 7 ॥
ततो यज्ञे समाप्ते तु ऋतूनां षट् समत्ययुः ॥ $7\frac{1}{2}$ ॥

॥ श्रीरामावतारघट्टः ॥

ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ ।
नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसंस्थेषु पञ्चसु ॥ $8\frac{1}{2}$ ॥
ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह ।
प्रोद्यमाने जगन्नाथं सर्वलोकनमस्कृतम् ॥ $9\frac{1}{2}$ ॥
कौसल्याऽजनयद्रामं सर्वलक्षणसंयुतम् ।
विष्णोरर्धं महाभागं पुत्रमैक्ष्वाकवर्धनम् ॥ $10\frac{1}{2}$ ॥

7. (ப - ரை) **एवं** - இப்படி, **तान्** - அந்த, **सर्वान्** - எல்லோரையும், **विसृज्य** - அனுப்பிவிட்டு, **सम्पूर्णमानसः** - பூர்த்தியடைந்த மனோரதத்தை யுடையவரான, **राजा** - தசரத மஹாராஜாவானவர், **पुत्रोत्पत्तिं** - புத்திரர்களுடைய உத்பத்தியை, **विचिन्तयन्** - விசேஷமாய் நினைத்துக்கொண்டு, **तत्र** - அவ்விடத்தில், **सुखितः** - ஸுகமுள்ளவராக, **उवास** - வஸித்தார்.

$7\frac{1}{2}$. (ப - ரை) **ततः** - பிறகு, **यज्ञे** - யாகமானது, **समाप्ते तु** - முடிவடைந்தவளவில், **ऋतूनां** - ருதுக்களுடைய, **षट्** - ஆறு, **समत्ययुः** - சென்றன.

$8\frac{1}{2}$-$10\frac{1}{2}$. (ப - ரை) **ततश्च** - அதன் பிறகோவெனில், **द्वादशे** - பன்னிரண்டாவதான, **चैत्रे** - சித்திராபூர்ணிமியோடு கூடின, **मासे** - மாதத்தில், **नावमिके** - நவமியாகிற, **तिथौ** - திதியில், **अदितिदैवत्ये** - அதிதியை தேவதையாக உடைத்தா யிருக்

7. (க - ரை) இப்படி தமது மனோரதம் பூர்த்தியடையப்பெற்ற சக்கிரவர்த்தி யக்ஞத்திற்கு வந்திருந்த எல்லோரையும் அனுப்பிவிட்டு, புத்திரர்கள் பிறக்கும் ஸமயத்தையே சிந்தித்துக்கொண்டு தனது அரண்மனையில் ஸுகமாய் வர்த்திக்கின்றார்.

$7\frac{1}{2}$. (க - ரை) இப்படி யாகம் முடிந்து தசரத ராஜபத்தினிகள் பாயஸத்தையும் உட்கொண்டபின் அதன் பிரபாவத்தால் அபிர்பவித்த அவர்களுடைய கர்ப்பங்கள் ஆறு* ருதுக்கள் வரைக்கும் பூர்வபக்ஷ சந்திரன்போல நாளுக்குநாள் அபிவிருத்தி யடைந்துவந்தன.

$8\frac{1}{2}$-$10\frac{1}{2}$. (க - ரை) இப்படி தேவிமார்களுடைய கர்ப்பம் பூர்ணமாய் அபிவிருத்தியடைந்த பிறகு, பன்னிரண்டாவதான சித்திரை மாதத்தில் நவமியில் புனர்வஸு நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் லோகநாயகனுடைய அவதாரத்திற்கு அனுகுணமாக

* ருது என்பது இரண்டு மாதங்கொண்ட ஒருகாலம்.

कौसल्या शुशुभे तेन पुत्रेणामिततेजसा ।
यथा वरेण देवानामदितिर्वज्रपाणिना ॥ 11½ ॥

भरतो नाम कैकेय्यां जज्ञे सत्यपराक्रमः ।
साक्षाद्विष्णोश्चतुर्भागः सर्वैः समुदितो गुणैः ॥ 12½ ॥

கின்ற, **नक्षत्रे** - (புனர்வஸு) நக்ஷத்திரத்தில், **पञ्चसु** - ஐந்துகளான, **ग्रहेषु** - (ஸூரி யன், குரு, சுக்கிரன், அங்காரகன், சனி) என்கிற கிரஹங்கள், **स्वोच्चसंस्थेषु** - தமது உச்சஸ்தானத்தி லிருக்குமளவில், **कर्कटे** - கடகமெனப்படுகின்ற, **लग्ने** - லக்கினத் தில், **वाक्पतौ** - பிருஹஸ்பதியானவர், **इन्दुना सह** - சந்திரனோடு, **प्रोद्यमाने** - உதயமா கவே, **जगन्नाथं** - லோகநாயகனாய், **सर्वलोकनमस्कृतम्** - எல்லா உலகங்களினாலும் நமஸ்கரிக்கப்பட்டிருக்கின்ற, **सर्वलक्षणसंयुतम्** - எல்லா சுப லக்ஷணங்களோடு கூடினவராயும், **विष्णोः** - மஹாவிஷ்ணுவினுடைய, **अर्धं** - அர்த்தாம்சமாயும், **महा-भागम्** - மஹா பாக்கியவானாயும், **ऐक्ष्वाकवर्धनम्** - இக்ஷ்வாகு குலத்திற்கு அபி விருத்திக்காரனுமான, **रामं** - இராமனென்கிற, **पुत्रं** - புத்திரனை, **कौसल्या** - கௌஸல்யா தேவியானவர், **अजनयत्** - பெற்றார்.

11½. (ப - ரை) **कौसल्या** - கௌஸல்யா தேவியானவர், **अमिततेजसा** - அள விடக்கூடாத தேஜஸ்ஸை உடையவரான, **तेन** - அந்த, **पुत्रेण** - புத்திரனால், **अदितिः** - அதிதிதேவியானவர், **देवानां वरेण** - தேவர்களுக்குள் சிரேஷ்டரான, **वज्रपाणिना** - வஜ்ரஹஸ்தனான தேவேந்திரனாலே, **यथा** - எப்படியோ (அப்படி), **शुशुभे** - விளங் கினார்.

12½. (ப - ரை) **सत्यपराक्रमः** - உண்மையான பராக்கிரமத்தை யுடையவ ராய், **साक्षाद्विष्णोः** - யாவரும் காணலாம்படி இராமரூபியாய் அவதரித்திருக்கின்ற விஷ்ணுவிற்கு அல்லது ஸரியான விஷ்ணுவிற்கு, **चतुर्भागः** - நாலத்திலொரு பாக மாய், அல்லது நாலத்தொன்றின் ஒருபகுதியான அரைக்கால் பங்காயிருப்பவராய்

ஐந்து கிரஹங்கள் அவற்றின் உச்சஸ்தானத்தை யடைந்தும் கடக லக்னத்தில் பிரு ஹஸ்பதியோடு சந்திரன் உதயத்தை யடைந்து மிருக்கையில், ஸர்வஜகதீச்வரனாய், நிகில பிரபஞ்ச நமஸ்கிருதனாய், சுப லக்ஷண ஸம்பூர்ணனாய், ஸாக்ஷாத் விஷ்ணுவின் அர்த்தாம்சனாய், இக்ஷ்வாகு வம்சவர்த்தனனான இராமனென்னும் ஸத்புத்திரனை கௌஸல்யா தேவியார் பெற்றெடுத்தார்.

11½. (க - ரை) அளப்பதற்கரிய வனப்பையுடைய அப்புதல்வரால் கௌஸல்யா தேவியார், வஜ்ரஹஸ்தரான தேவேந்திரனை மடியில் வைத்துக் கொண்டிருக்கும் தேவமாதாவான அதிதி தேவியைப்போல விளங்கலானார்.

12½. (க - ரை) இராகவனுடைய ஓர் அம்சமே யானாலும், அவருக்குள்ள

अथ लक्ष्मणशत्रुघ्नौ सुमित्राऽजनयत्सुतौ ।
सर्वास्त्रकुशलौ वीरौ विष्णोरर्धसमन्वितौ || 13½ ||

पुष्ये जातस्तु भरतो मीनलग्ने प्रसन्नधीः ।
सार्पे जातौ च सौमित्री कुलीरेऽभ्युदिते रवौ || 14½ ||

(அப்படி யிருந்தாலும்), **सर्वैः** - ஸமஸ்தங்களான, **गुणैः** - (இராமனுக்கு அல்லது மஹாவிஷ்ணுவிற்கு உள்ளவைகளான) நற்குணங்களோடு, **समुदितः** - சேர்ந்து விளங்குகின்றவரான, **भरतो नाम** - பரதன் என்பவர், **कैकेय्यां** - கைகேயியினிடத்தில், **जज्ञे** - (புத்திரனாக) பிறந்தார்.

13½. (ப - ரை) **अथ** - பிறகு, **सर्वास्त्रकुशलौ** - ஸமஸ்த அஸ்திரவித்தைகளிலும் ஸமர்த்தர்களாய், **वीरौ** - சூரர்களாய், **विष्णोः** - பகவானுடைய, **अर्धसमन्वितौ** - அம்சம் பொருந்தினவர்களாய் இருக்கிற, **लक्ष्मणशत्रुघ्नौ** - லக்ஷ்மண, சத்ருக்னர்களென்கிற, **सुतौ** - இரு குமாரர்களை, **सुमित्रा** - ஸௌமித்ராதேவியானவர், **अजनयत्** - பெற்றார்.

14½. (ப - ரை) **प्रसन्नधीः** - தெளிந்த மதியுள்ளவரான, **भरतस्तु** - பரதனோவெனில், **पुष्ये** - புஷ்ய நக்ஷத்திர யுக்தமான திதியில், **मीनलग्ने** - மீன லக்கினத்தில், **जातः** - உண்டானார், **सौमित्रीतु** - ஸௌமித்ரா குமாரர்களோவெனில், **सार्पे** - ஸர்ப்ப தேவதாகமான ஆச்லேஷா நக்ஷத்திரத்தில், **कुलीरे** - கர்க்கட லக்கினத்தில், **रवौ** - ஸூரியன், **अभ्युदिते** - உதயமான பின் அல்லது நன்றாய் எழும்பிய பின், **जातौ** - உண்டானார்கள்.

கல்யாண குணங்கள் யாவற்றும் பொருந்தி யிருக்கின்ற பரதனென்பவர் கைகேயி தேவிக்குப் புத்திரராக அவதரித்தார்.

13½. (க - ரை) ஸகல அஸ்திர சஸ்திர விசாரதர்களாய், தம்மைத்தாம் அடக்கி ஆளும் திறமை யுள்ளவர்களாய், பசவதம் சாவதாரர்களான லக்ஷ்மண, சத்ருக்னர்களென்கிற ஸத் புத்திரர்களை, ஸௌமித்ரா தேவி என்கிற உத்தமி பெற்றெடுத்தார்.

14½. (க - ரை) (மீனலக்கினம், புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஆசை வெகுளி முதலிய தோஷ இலேசமுமில்லாத பரிசுத்த சித்த விருத்தியுள்ளவரான பரதாழ்வான் கைகேயி தேவியாரிடமிருந்து தோன்றலானார்.) கடகலக்கினம் ஆயில்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயத்திற்குப் பிறகு ஸௌமித்ரா குமாரர்கள் அவதரித்தார்கள்.

राज्ञः पुत्रा महात्मानश्चत्वारो जज्ञिरे पृथक् ।
गुणवन्तोऽनुरूपाश्च रुच्या प्रोष्ठपदोपमाः ॥ 15½ ॥
जगुः कलं च गन्धर्वा ननृतुश्चाप्सरोगणाः ।
देवदुन्दुभयो नेदुः पुष्पवृष्टिश्च खाच्च्युता ॥ 16½ ॥
उत्सवश्च महानासीदयोध्यायां जनाकुलः ॥ 17 ॥

15½. (ப - ரை) **महात्मानः** - மஹான்களாயும், **गुणवन्तः** - நற்குணம் நிறைந்தவர்களாயும், **अनुरूपाश्च** - ஸமான ஸ்வரூபர்களாயும், **रुच्या** - காந்தியினால், **प्रोष्ठपदोपमाः** - பூர்வ உத்திரங்களான ப்ரோஷ்டபத நக்ஷத்திரங்களுக்கு ஸமானர்களாயுமிருக்கிற, **राज्ञः** - இராஜாவினுடைய, **पुत्राः** - குமாரர்களான இராமாதிகள், **चत्वारः** - நால்வரும், **पृथक्** - தனித் தனியான விசேஷங்களுடையவர்களாக, **जज्ञिरे** - தோன்றினார்கள்.

16½. (ப - ரை) **गन्धर्वाः** - கந்தர்வர்கள், **कलं** - மதுரமாக. **जगुः च** - பாடினார்கள், **अप्सरोगणाः** - அப்ஸர ஸ்திரீகளின் கூட்டங்கள், **ननृतुश्च** - ஆடவும் ஆடின, **देवदुन्दुभयः** - தேவலோகத்திய பேரிவாத்தியங்கள், **नेदुः** - முழங்கின, **पुष्पवृष्टिश्च** - பூ மழையும், **खात्** - ஆகாயத்திலிருந்து, **च्युता** - பொழியலாயிற்று.

17. (ப - ரை) **अयोध्यायां** - அயோத்தியா நகரத்தில், **जनाकुलः** - ஆனந்தத்தில் ஈடுபட்ட ஜனங்களையுடையதான, **उत्सवश्च** - குழந்தைகளின் பிறந்த தினமும், **महान्** - பெரிதாக, **आसीत्** - இருந்தது.

15½. (க - ரை) ஒன்றேயாயினும் நான்காய்ப் பிரிந்திருக்கின்ற ப்ரோஷ்டபத நக்ஷத்திரங்களைப் போன்று, ஒருவரே நால்வராகப் பிரிந்து தோன்றியிருக்கின்ற இவ்விராஜ குமாரர்கள் மூத்தவரான ஒருவர் பொதுவான தர்மங்களில் நிலையுள்ளவராயும், இளையவரான வேறொருவர் தாஸ்யரஸத்தில் ஊன்றிக்கிடக்க
ஒருவர் அண்ணனிட்ட வழக்காய் அடங்கிக் கிடப்பவராயும், மற்ற ஒருவர் அந்த பாகவதருக்கே பரதந்திரராகவும், இருப்பவர்களாய் தனித்தனித் தன்மையோடு விளங்கி வருகின்றார்கள்.

16½. (க - ரை) இவ்வுத்தம குமாரர்கள் அவதரித்த காலத்தில் ஆகாயத்தில் கெந்தர்வர்கள் பாடுவதும், அப்ஸரஸ்கள் ஆடுவதும், தேவதுந்துபி முழங்குவதும், பூமாரி பொழிவதுமாக பற்பல சுப சகுனங்களும் காணப்படலாயின.

17. (க - ரை) அவ்வயோத்தியா நகரத்திலுள்ள மஹா ஜனங்களெல்லாம் குழந்தைகளின் ஜாதகர்மம் முதலான உத்ஸவங்களில் ஈடுபட்டு ஆனந்த பரவசராய் மெய்மறந்திருந்தனர்.

रथ्याश्च जनसंबाधा नटनर्तकसंकुलाः ।
गायनैश्च विराविण्यो वादनैश्च तथाऽपरैः ॥ 18 ॥

प्रदेयांश्च ददौ राजा सूतमागधवन्दिनाम् ।
ब्राह्मणेभ्यो ददौ वित्तं गोधनानि सहस्रशः ॥ 19 ॥

अतीत्यैकादशाहं तु नामकर्म तथाऽकरोत् ॥ 19½ ॥

---

18. (ப - ரை) **गायनैः च** - காயகர்களினாலும், **वादनैः च** - வாத்தியக்காரர்களாலும், **तथा** - அப்படிப்பட்ட, **परैः** - மற்றவர்களினாலும், **विराविण्यः** - விலக்ஷணமான சப்தத்தை யுடையவைகளாயிருக்கிற, **रथ्याश्च** - வீதிகளும், **जनसंबाधाः** - ஜன நெருக்க முள்ளவைகளாயும், **नटनर्तक संकुलाः** - நடிப்பவர், நாட்டியக்காரர் இவர்களால் கூட்ட முள்ளவைகளாய் (இருந்தன.)

19. (ப - ரை) **राजा** - மஹாராஜாவானவர், **सूतमागध वन्दिनाम्** - பௌராணிகர்கள், வம்சாவளி பாடுகின்றவர்கள், ஸ்துதி பாடகர்கள் அதாவது சட்டியம் கூறுகின்றவர்கள் இவர்க ளெல்லோருக்கும், **प्रदेयांश्च** வெகுமதிகளையும், **ददौ** - கொடுத்தார். **ब्राह्मणेभ्यः** - பிராம்மணர்களின் பொருட்டு, **वित्तं** - திரவியத்தையும், **गोधनानि** - கோரூபமான தனங்களையும், **सहस्रशः** - ஆயிரக்கணக்காக, **ददौ** - கொடுத்தார்.

19½. (ப - ரை) **एकादशाहं** - (இலக்ஷ்மணன் பிறந்தபின்) பதினொன்றாவது நாளை, **अतीत्यतु** - கழித்து, **तथा** - அப்படியே, அதாவது சாஸ்திரவிதிப்படியே, **नामकर्म** - நாமகரணத்தை, **अकरोत्** - செய்துவைத்தார்.

18. (க - ரை) அப்போது அப் பட்டணத்தில் வீதிகளெல்லாம் போவதும் வருவதுமாயிருக்கின்ற பொது ஜனங்களின் நெருக்க முடையதாய், நாட்டியக்காரர்கள் நடனமாட, பாடகர் பாட, வாத்திய நிபுணர் வாசிக்க மற்றவரும் கோஷிக்க ஒரே கோலாஹலமாகக் காணப்படலாயின.

19. (க - ரை) அப்பொழுது சக்கிரவர்த்தியானவர், ஸூதமாகதவந்தி முதலானவர்களுக்குத் தக்கபடி வெகுமதியைத் தாராளமாய் வழங்கலானார். பிராம்மணர்களுக்கு ஆயிரக்கணக்காரய் பொன்னையும், பசுக்களையும் ஸமர்ப்பிக்கலானார்.

19½. (க - ரை) இராமன் பிறந்து பன்னிரண்டு நாட்கள் கழிந்த பின் அரசர்களுக்கு பதிமூன்றாவது தினத்தில் நாமகரணம் செய்யவேண்டும், என்கிற சாஸ்திர விதியின்படி அக் குழந்தைகளுக்கு சக்கிரவர்த்தி பெருமையாகப் பெயரிட்டு வைத்தார்.

ज्येष्ठं रामं महात्मानं भरतं कैकयीसुतम् ।
सौमित्रिं लक्ष्मणमिति शत्रुघ्नमपरं तथा ॥ 20½ ॥
वसिष्ठः परमप्रीतो नामानि कृतवांस्तदा ॥ 21 ॥
ब्राह्मणान्भोजयामास पौराञ्जानपदानपि ।
अददाद्ब्राह्मणानां च रत्नौघममितं बहु ॥ 22 ॥
तेषां जन्मक्रियादीनि सर्वकर्माण्यकारयत् ॥ 22½ ॥

20½-21. (ப - ரை) **महात्मानम्** - ஸர்வஜனங்களுடைய ஹிருதயத்தையும் ரஞ்ஜிக்கும்படி செய்யும் திவ்விய ஸ்வபாவமுடையவனை, **ज्येष्ठम्** - ஜ்யேஷ்டகுமாரனை, **रामं** - இராமனென்றும், **कैकयीसुतम्** - கைகேயி புத்திரனை, **भरतं** - பரதனென்றும், **सौमित्रिं** - ஸௌமித்ராகுமாரனை, **लक्ष्मणं इति** - இலக்ஷ்மணனென்றும், **तथा** - அப்படியே, **अपरं** - ஸௌமித்திரையின் பிள்ளையான மற்றொருவனை, **शत्रुघ्नं** - சத்ருக்னனென்றும், **वसिष्ठः** - வஸிஷ்ட மஹரிஷியானவர், **परमप्रीतः** - மிகவும் ப்ரீதியடைந்தவராக, **तदा** - அப்பொழுது, **नामानि** - பெயர்களை, **कृतवान्** - இட்டுவைத்தார்.

22-22½. (ப - ரை) **ब्राह्मणान्** - பிராம்மணர்களை, **भोजयामास** - சாப்பாடு பண்ணிவைத்தார், **पौरान्** - பட்டணத்து ஜனங்களையும், **जानपदानपि** - வெளியூர் ஜனங்களையும் (சாப்பாடு பண்ணிவைத்தார்), **ब्राह्मणानां** - பிராம்மணர்களுக்கு, **अमितं** - அபரிமிதமாயும், **बहु** - நானாவிதமாயுமிருக்கிற, **रत्नौघं च** - இரத்தின ஸமூகத்தையும், **अददात्** - கொடுத்தார். (இப்படி), **तेषां** - அந்த குமாரர்களுக்கு, **जन्म-**

20½-21. (க - ரை) யோகீச்வரர் தொடங்கிப் பக்ஷி வரையில் உள்ள ஸர்வப் பிராணி ஜாதங்களுக்கும் ஹிருதய ரஞ்ஜகமான திவ்விய ஸ்வபாவ ஸம்பன்னனான ஜேஷ்ட குமாரனுக்கு இராமன் என்கிற திருநாமத்தையும், ஆரம்ப இடையூறுமின்றி வைத்த பாரத்தைத் தலையால் சுமக்கும் பரம ஸாதுவான கைகேயி குமாரனுக்கு பரதனென்கிற திவ்ய நாமத்தையும், இராகவனுடைய திவ்விய ஸ்ரீசரணாரவிந்த கைங்கரிய ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ ஸம்பன்னனான ஸௌமித்திரி புத்திரனொருவனுக்கு இலக்ஷ்மணனென்கிற புகழ்ப் பெயரையும், காமக்ரோதாதிகளான அகத்திலுள்ள பகைவர்களை அடியோடு வென்றுவிட்ட, அனகஸ்வபாவனான மற்றொருவனுக்கு சத்ருக்னனென்கிற பிரசஸ்த நாமத்தையும், அவரவர் தன்மைக்குத் தக்கபடி, மனம் பூரித்தவரான ஆசாரிய வஸிஷ்டர் அப்பொழுது சாற்றியருளினார்.

22-22½. (க - ரை) இவ்வுத்ஸவத்தில் பிராம்மணர்கள், உள்ளூர், வெளியூர் ஜனங்கள் எல்லோருக்கும் உள்ளங் குளிர அன்னமளித்தார்கள். அந்தணர்களுக்கு அநேக விதமான இரத்தினங்களையும், குவியல் குவியலாகத் தந்தார்

तेषां केतुरिव ज्येष्ठो रामो रतिकरः पितुः ।
बभूव भूयो भूतानां स्वयंभूरिव संमतः ॥ 23½ ॥
सर्वे वेदविदः शूराः सर्वे लोकहिते रताः ।
सर्वे ज्ञानोपसंपन्नाः सर्वे समुदिता गुणैः ॥ 24½ ॥
तेषामपि महातेजा रामः सत्यपराक्रमः ।
इष्टः सर्वस्य लोकस्य शशाङ्क इव निर्मलः ॥ 25½ ॥

क्रियादीनि - ஜாதகர்மம் முதலானவைகளான, **सर्वकर्माणि** - எல்லாக் காரியங்களையும், **अकारयत्** - செய்துவைத்தார்.

23½. (ப - ரை) **तेषां** - அந்த குமாரர்களுக்குள், **केतुरिव** - குலக்கொடிபோன்ற, **ज्येष्ठः** - மூத்தவரான, **रामः** - இராமனுனவர், **पितुः** - பிதாவான தசரதருக்கு, **रतिकरः** - ஸந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறவராகவும், **भूतानां** - பிரஜைகளுக்கு, **स्वयंभूरिव** - பிரும்ஹாபோல, **भूयः** - விசேஷித்து, **सम्मत** - அபிமதராகவும், **बभूव** - இருந்தார்.

24½. (ப - ரை) **सर्वे** - எல்லோரும், **वेदविदः** - வேதங்களையறிந்தவர்கள், **शूराः** - வீரர்கள். **सर्वे** - எல்லோரும், **लोकहिते** - உலகத்தினுடைய அனுகூலத்தில், **रताः** - ஆசையுள்ளவர்கள், **सर्वे** - எல்லோரும், **ज्ञानोपसंपन्नाः** - விவேகம் நிறைந்தவர்கள், **सर्वे** - எல்லோரும், **गुणैः** - கல்யாண குணங்களினுலே, **समुदिताः** - சேர்ந்திருக்கப் பெற்றவர்கள்.

25½. (ப - ரை) **तेषामपि** - அவர்களுக்குள்ளும், **रामः** - இராமனுனவர்,

---

கொடுத்தார்கள். இப்படி ஸர்வ ஸம்பிரமத்துடன் அக் குழந்தைகளுடைய ஜாதகர்மா முதலிய சுப காரியங்க ளெல்லாம் மங்களமாய் நடந்தேறின.

23½. (க - ரை) அந்த குமாரர் நால்வருள் மூத்தவரான இராம னென்பவர் குலத்திற்கு ஒரு கொடி போல் விளங்குவாராய் தம்மைப் படைத்த பரமேஷ்டியைப் போலெண்ணிப் பிரஜைகளால் அகண்டிதப் பிரேமையோடு போற்றப் படுவாராயினர்.

24½. (க - ரை) குமாரர்களெல்லோரும், காலத்தில் நான்கு வேதங்களையும் ஓதி அதற்குத் தக்க வீர்யத்தையும் பெற்று, அதற்கனுகுணமாக லோகஹிதத்திலேயும் நோக்கங்கொண்டு, அவற்றின் ஹிதாஹிதங்களையுமறிந்து, அவற்றின்பால் அன்பு பூண்டவர்களாய் தயா தாக்ஷிண்யாதி திவ்யகுண ஸம்பன்னர்களாய் விளங்குகின்றார்கள்.

25½. (க - ரை) இந் நால்வர்களுக்குள் அல்லது ஐக்ஷ்வாக ராஜர்கள் எல்லோ

गजस्कन्धेऽश्वपृष्ठे च रथचर्यासु संमतः ।
धनुर्वेदे च निरतः पितृशुश्रूषणे रतः ॥ 26½ ॥

बाल्यात्प्रभृति सुस्निग्धो लक्ष्मणो लक्ष्मिवर्धनः ।
रामस्य लोकरामस्य भ्रातुर्ज्येष्ठस्य नित्यशः ॥ 27½ ॥

महातेजा: - மஹத்தான தேஜஸ்ஸை யுடையவராயும், **सत्यपराक्रम:** - பரிசுத்தமான வீரியத்தை யுடையவராயும், **निर्मल:** - களங்கமற்றிருக்கின்ற, **शशाङ्क इव** - சந்திரன் போல, **सर्वस्य** - ஸமஸ்தமான, **लोकस्य** - உலகத்திற்கு, **इष्ट:** - விரும்பப் படுகிறவராக, (இருக்கின்றார்.)

26½. (ப - ரை) (அவர்), **गजस्कन्धे** - யானையினுடைய தோளிலும், **अश्वपृष्ठे** - குதிரையினுடைய முதுகிலும், **रथचर्यासु च** - தேர் நடத்தும் வேலைகளிலும், **संमत:** - ஸமர்த்த ரென்று அவரவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டவர், **धनुर्वेदेच** - வில் வித்தையிலும், **निरत:** - ஆஸக்தி யுள்ளவர், **पितृशुश्रूषणे** - தாய் தந்தையர் களுடைய பணிவிடையில், **रत:** - ஆசையுள்ளவர்.

27½. (ப - ரை) **बाल्यात् प्रभृति** - இளமையிலிருந்தே, **सुस्निग्ध:** - (இராமனிடத்தில்) விசேஷ ஸ்நேகத்தை அடைந்திருப்பவரான, **लक्ष्मण:** - இலக்ஷ்மணனானவர், **लोकरामस्य** - உலகத்திற் கெல்லாம் ரஞ்ஜகராயும், **ज्येष्ठस्य** - மூத்தவரான,

ருக்குள்ளும் இராமனென்பவர், தேஜஸ், பராக்ரமம் முதலிய குணங்களினால் மேம்பட்டவராய் மறுவற்ற சந்திரன்போல உலகத்திற் கெல்லாம் முழு அன்பிற்கும் முக்கிய பாத்திரரா யிருக்கின்றார்.

26½. (க - ரை) அவ்விராமன் யானையேற்றம், குதிரையேற்றம், தேரோட்டுதல் முதலியவற்றில் முதன்மையானவரென்று அத்தொழில்களில் நிபுணர்களாலெல்லாம் நன்கு மதிக்கப் பெற்றிருந்தார். யுத்தகலையில் அத்யந்த ஆஸக்தியுள்ளவரா யிருந்தும் பெரியோருக்குச் செய்யும் ஊழியத்தில் மிக்க ஊக்க முள்ளவராயு மிருந்தார்.

27½. (க - ரை) இளையவரான இலக்ஷ்மணனோவெனில் இராகவன் மீது பிறவியிலேயே இயற்கையா யுண்டான பேரன்பு பூண்டவராய் சிறியாக் காலத்துள்ளே அடிமைக்கு அன்பு பெற்று அவருக்கு நிகரற்ற ஒரு நண்பராய் விளங்குகின்றார். இப்படி இராகவ தாஸ்யத்தையே தாது ஸ்வரூபத்தின் ஸாரமென்று உணர்ந்திருக்கின்ற இவ்வுத்தமருக்கு ஸகல புவனங்களையும் ஸ்வாதீனப் படுத்திக் கொள்ளும் திறமையுள்ள இராமபத்திரனுடைய திருக் கல்யாண குணங்களும் அவ்வுணர்ச்சிக்கு மிகவும் உதவுமவை யாயின. மேலும் இவ்விளையபெருமாள், பெருமாளை பித்ருஸமானரான ஜேஷ்ட ப்ராதா வென்றும் போற்றுகின்றார். ஆக இவர்

सर्वप्रियकरस्तस्य रामस्यापि शरीरतः ।
लक्ष्मणो लक्ष्मिसंपन्नो बहिःप्राण इवापरः ॥ $28\frac{1}{2}$ ॥

न च तेन विना निद्रां लभते पुरुषोत्तमः ।
मृष्टमन्नमुपानीतमश्नाति न च तं विना ॥ $29\frac{1}{2}$ ॥

भ्रातुः - பிராதாவாயுமிருக்கிற, **रामस्य** - இராகவனுக்கு, **नित्यशः** - எப்பொழுதும், **लक्ष्मिवर्धनः** - ஐச்வர்யத்தை வளர்க்கின்றவராக, (இருந்தார்).

$28\frac{1}{2}$. (ப - ரை) **लक्ष्मिसम्पन्नः** - பரம ஐச்வர்ய பரிபூர்ணரான, **लक्ष्मणः** - இளையபெருமாள், **तस्य** - அந்த, **रामस्य** - இராமனுக்கு, **अपि शरीरतः** - சரீரத்தினாலும் அல்லது சரீரத்தைக் காட்டிலும், **सर्वप्रियकरः** - ஸர்வ விதத்திலும் ஸர்வதா பிரியத்தையே செய்கின்றவராய், **बहिः** - வெளியிலுள்ள, **अपरः** - வேறொன்றான, **प्राण इव** - உயிர் போல (இருக்கின்றார்).

$29\frac{1}{2}$. (ப - ரை) **पुरुषोत्तमः** - புருஷ ச்ரேஷ்டரான, இவ்விராமபத்திரன், **तेन विना** - அந்த இலக்ஷ்மணனையன்றி, **निद्रांच** - தூக்கத்தையும், **न लभते** - அடைகின்றாரில்லை, **पुरुषोत्तमः च** - பரம புருஷனான ஸ்ரீராமனும், **तेन विना** - இவ்விலக்ஷ்மணனாகிற ஜீவனையின்றி, **निद्रां-न-लभते** - தூக்கத்தை அடைகின்றாரில்லை, **उपानीतं** -

---

ரால் இவர் இராம பத்திரனுடைய ஐச்வர்ய அபிவிருத்தியிலேயே கண்ணும் கருத்துமாக வர்த்திக்கின்றார்.

$28\frac{1}{2}$. (க - ரை) இலக்ஷ்மணனானவர், இராமனுக்கு, சரீரத்தினாலும், மனம், வாக்கு, என்கிற மற்ற இரு கரணங்களினாலும், ஸகலமான பிரிய கார்யங்களையும் செய்கிறவரா யிருக்கின்றார். எவ்விதத்திலும் எவ்வகையிலும் பிரியத்தையே செய்கின்றார். தன் உடம்பை உபேக்ஷித்தாவது இராமனுக்குப் பிரியத்தையே செய்கின்றார். இராமனுடைய கரசரணாதிகளை விட அவருக்கு அதிகமாய் உதவுகின்றார். இராமனென்கிற உயிருக்குத்தான் உடலாய் நின்று உதவுகின்றார். இப்படி இராம பத்திர சரணாரவிந்த கிச்ரூஷா ஸாம்ராஜ்யலக்ஷ்மீ ஸம்பன்னரான இவ்விளையபெருமாள் இராகவனுடைய திருமேனிக்கு வெளியில் உலவுகின்ற ஒரு உயர்தர உயிரே யெனும்படி (விளங்குகின்றார்.)

$29\frac{1}{2}$. (க - ரை) இவ்வுத்தம குணசீலனான இராகவன் தனது அருமைத் தம்பியான இலக்ஷ்மணனை யன்றி கணப்பொழுதேனும் கண்டுயிலுவதில்லை. அவ

ஜீவேச்வரர்கள் இருவருள், ஈச்வரனை யின்றி ஜீவர்களுக்கு நித்திரை என்கிற ஸுஷுப்தி அவஸ்தை உண்டாகா தென்பது உபநிஷத்துக்களில் பிரஸித்தமானது. நித்திரை யென்றால் என்ன? என்கிற தத்துவத்தை விவரிக்கத் தலைப்பட்ட ஒரு உபநிஷத்தானது கொள்ளை கொலைகளாதிய குற்றங்களைச் செய்து காராக்ருஹத்தில் அடைபட்டு செக்கு இழுப்பது, கப்பி உடைப்பது முதலான அங்குள்ள துன்பங்களைப் பொருக்க மாட்டா

यदा हि हयमारूढो मृगयां याति राघवः ।
तदैनं पृष्ठतोऽन्वेति सधनुः परिपालयन् ॥ 30½ ॥

கொண்டுவரப்பட்ட அல்லது கலத்திலிடப்பட்ட, **मृष्टं** - ஸமிருத்தமான, **अन्नं च** - அன்னத்தையும், **तं विना** - அவனையின்றி, **न अश्नाति** - புஜிக்கின்றாரில்லை.

30½. (ப - ரை) **राघवः** - இராமனானவர், **यदा हि** - எப்பொழுதேனும், **हयं** - குதிரையை, **आरूढः** - ஏறிக் கொண்டவராக, **मृगयां** - வேட்டையைக் குறித்து, **याति** போகின்றாராகில், **तदा** - அப்பொழுது, **एनं** - இவரை, **परिपालयन्** - காக்கின்றவராய், **सधनुः** - வில்லுடன் கூடினவரான (இலக்ஷ்மணர்), **पृष्ठतः** - பின்புறத்தில், **अन्वेति** - தொடர்ந்து செல்லுகின்றார்.

னோடு சேர்ந்து உண்டாலின்றி அமுதம் போன்ற அன்னத்தை சோற்றையும் வேண்டுகிறது மில்லை.

30½. (க - ரை) இராகவன் வேட்டைக்காகக் குதிரை ஏறிச் செல்லும் நேரங்களில் அவரைக் காக்கும் கருத்தோடு இளையவர் கையும் வில்லுமாக அக் குதிரையைத் தொடர்ந்து ஓடுவார்.

மல் தவிக்கின்ற கைதிகள் விடுதலை யடைந்து வீடு செல்லுவது எப்போது? என்கிற அபிலாஷைக ளெல்லாம் ஒரு புற மிருக்க, சிறிது நேரமாவது இத் துன்பங்களில்லாமல் சற்று நிம்மதியா யிருப்போமா என்று ஏங்கித் தவிக்கும் தருணத்தில் அவர்களை மிகப் பொல்லாத படை வீரரான சேவகர் வசம் ஒப்பிவித்து விட்டோமே, அதனால் அவர்கள் அங்கு என்ன படுகின்றனரோ வென்று அனுதாபங் கொண்டவரான அரசர் அவர்களைக் கண்காணிப்பாராகத் தாமே ஒருகால் அந்த ஜெயிலுக்குள் பிரவேசிக்கின்றார். அங்கு அவர் தமக்கு உற்றதான ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டு அக் கைதிகளை தன் முன் அழைத்துவரக் கட்டளையிடுகின்றார். அது கேட்ட அங்குள்ள சேவகரும் தாம் சற்று முன் அக் கைதிகளைப் படுத்திய வாதனை யெல்லாம் அரசர் அறியாம லிருக்கும்படி நிறுத்திக்கொண்டு மரியாதையாக இட்டுக் கொண்டு வந்து அரசன் அமர்ந்திருக்கும் இடத்தையும் அவர்களுக்குக் காட்டிக் கொடுத்து, பரம ஸாதுக்கள் போல் ஆர்ப்பாட்டமொன்று மில்லாமல் தூர ஒதுங்கி நிற்கின்றார். என்? கைதிகளானாலும் அவர்கள் காருணிகனான அவ்வரசன் திரு முன்பு அஜராகி அவனது கருணைக் கடாக்ஷத்திற்குப் பாத்திரரா யிருக்கின்றன ரன்றோ! இனி இச் சேவகர்கள் அங்கு மூச்சு விடுவார்களோ? அரசனும் அமுதிலுமினிய மதுர மொழிகள் சிலவற்றால் அப் பேதைகளுக்கு நல்லுபதேசத்தைச் செய்து வைத்து சற்று நேரம் அவர்களுக்கு ஆறுதலாக அங்கு தங்கி யிருந்து பிறகு தன் வழியே போய் விடுகின்றார். அக் கைதிகளுக்கோ வெனில் அரசனங்கிருந்த ஒரு ஐந்து க்ஷணமும் அவர் வாழ்நாளில் மிக்க ஆச்வாஸகரமாகி ஆனந்தத்தை யளிக்கின்றது. இதுபோலவே அநாதி கர்மவசத்தால் சரீரமெனும் காராக்ருஹத்தி லடைபட்டு அங்குள்ள இந்திரியங்களெனும் பொல்லாச் சேவகர்களின் கைவசப்பட்டுப் பலவிதமாகப்படுகின்ற

भरतस्यापि शत्रुघ्नो लक्ष्मणावरजो हि सः ।
प्राणैः प्रियतरो नित्यं तस्य चासीत्तथा प्रियः ॥ $31\frac{1}{2}$ ॥

$31\frac{1}{2}$. (ப - ரை) **भरतस्यापि** - பரதாழ்வானுக்கும், **शत्रुघ्नः** - சத்ருக்னனானவர், **प्राणैः** - பிராணன்களை விட, **प्रियतरः** - பிரியத்தில் விஞ்சியவராக (இருக்கின்றார்). **तस्य च** - அந்த சத்ருக்னனுக்கும் (பரதனானவர்), **तथा** - அப்படியே, **प्रियः** - பிரீதிக்குப்பாத்திரனாக, **आसीत्** - இருந்தார், **सः** - அவர் (சத்துருக்னர்), **लक्ष्मणावरजो हि** - இலக்ஷ்மணனுக்குத் தம்பி யன்றோ?

$31\frac{1}{2}$. (க - ரை) இராகவன் இலக்ஷ்மணனிடத்தில் வைத்திருப்பது போல, பரதன் சத்ருக்னன் மீது அகண்டமான அன்பை வைத்திருக்கிறார். இராமனுக்கே யாகத் தன்னை நினைந்திருக்கின்ற இலக்ஷ்மணனுக்குப் பின் பிறந்தவரான சத்ருக்னனும் அதற்குத் தக்கபடியே பரதனை தன் பிராணனைவிட அதிகமாகப் போற்றுகின்றார்.

இச்சீவராசிகள் தாம் இதனின்று விடுபெற்றுச் சொந்தவிடஞ்சென்று ஸுகிக்கவேணுமென்கிற பேராவல் ஒருபுறம் பதுங்கிக்கிடக்க, இப்பொறிகளின் உபத்திரவமின்றி சிறிது நேரமாவது சும்மா விருப்போமா, என்று ஏங்கி நிற்கும் நிலையில் இவர்கள் பாவம் தீர்ந்து நல்லோராக வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தினால் இவர்களைச் சரீரச் சிறையிலடைத்து வைத்த கர்மபலப்பிரதனான பரமாத்மா இவர்களை அப்பொல்லாப் பொறிகள் வெகு பாடுபடுத்தி விடுமேயென்று அனுதாபங்கொண்டு அபஹதபாப்மாவான தானும் இச்சரீரத்திற்குள் நுழைந்து அங்குள்ள ஹிருதயமென்னும் ஓர் அறையில் தனக்கென்று அமைக்கப் பெற்றிருக்கின்ற பத்மாஸனத்தில் தானமர்ந்துகொண்டு குற்றவாளிகளான இந்த ஸம்ஸாரி சேதனரைத் தன்முன் ஆஜராகத் தகவல் கொடுக்கின்றான். அதறிந்த அவ்விந்திரியபடர்கள் தமது அட்டஹாஸத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு இச்சீவர்கள் ஈசனைக்காணுவதற்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கின்றனர். இவர்களும் புரீதத், என்கிற பரிசுத்த நாடியின் வழியாக அவ்வீசன் அமர்ந்தருளியிருக்கின்ற ஹிருதய புண்டரீகமென்னும் அறைக்குச்சென்று அவன் திருவடி நிழலிற் சிறிது நேரமாவது ஸர்வ துக்கங்களையும் மறந்து ஸ்வஸ்தரா யிருக்கின்றனர். ஜீவர்களுடைய வாழ்நாளில் இடையிடையே வருகின்ற இவ்வுத்தம நிலையே நித்திரை அதாவது ஸுஷுப்தி என்று அவ்வுபநிஷத்து வியக்தமாய்க் கூறுகின்றது. ஆதலால் ஸுஷுப்தி என்பது ஜீவர்களுக்கு பரமாத்மாவையின்றி உண்டாவதற்கு இடமில்லையாதலால் இலக்ஷ்மணனென்கிற ஜீவவரர் இராமனென்னும் பரமாத்மாவைவிட்டு நித்திரைபெறுகின்றதில்லை யென்பது நியாயம்தான். ஆனாலும் அப்பரமாத்மா இலக்ஷ்மணனை விட்டுத் தானும் தூங்குகிறதில்லை என்பதுதான் இங்கு விசேஷம். அதற்கு அப்பரமாத்மாவும் ஸ்வரூபக்ஞானத்தைப் பெற்றிருப்பவர்களான உத்தம சேதனரை தனக்கும் **ज्ञानीत्वात्मैव मे मतम्** (ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம். 7, சுலோகம் 18.) என்கிறபடி அந்தராத்மாவாக நினைத்திருக்கிறபடியால் அத்தகைய

स चतुर्भिर्महाभागैः पुत्रैर्दशरथः प्रियैः ।
बभूव परमप्रीतो देवैरिव पितामहः   ॥ ३२½ ॥

ते यदा ज्ञानसंपन्नाः सर्वैः समुदिता गुणैः ।
ह्रीमन्तः कीर्तिमन्तश्च सर्वज्ञा दीर्घदर्शिनः   ॥ ३३½ ॥

तेषामेवंप्रभावानां सर्वेषां दीप्ततेजसाम् ।
पिता दशरथो हृष्टो ब्रह्मा लोकाधिपो यथा   ॥ ३४½ ॥

32½. (ப - ரை) **महाभागैः** - மஹா பாக்கியசாலிகளான, **प्रियैः** - ப்ரீதிபாத்ரங்களான, **चतुर्भिः** - நால்வர்களான, **पुत्रैः** - குமாரர்களினால், **सः** - அந்த, **दशरथः** - தசரத மஹாராஜரானவர், **देवैः** - தேவர்களினாலே, **पितामहः इव** - பிரும்மதேவனைப் போல, **परमप्रीतः** - அத்யந்தம் திருப்தராக, **बभूव** - ஆனார்.

33½. (ப - ரை) **ते** - அந்தக் குமாரர்கள், **यदा** - எப்பொழுது, **ज्ञानसंपन्नाः** கலைஞானம் நிறைந்தவர்களாயும், **सर्वैः** - ஸமஸ்தங்களான, **गुणैः** - கல்யாணகுணங்களினால், **समुदिताः** - சேர்ந்தவர்களாயும், **ह्रीमन्तः** - லஜ்ஜையுள்ளவர்களாயும் **कीर्तिमन्तः** - கீர்த்திமான்களாயும், **सर्वज्ञाः** - எல்லாம் அறிந்தவர்களாயும், **दीर्घदर्शिनः** - நெடிய நோக்கமுள்ளவர்களாயும் இருக்கின்றார்களோ,

34½. (ப - ரை) (அதனால்), **एवं प्रभावानां** - இப்படிப்பட்ட மஹாத்மியம் பொருந்தியவர்களான, **दीप्ततेजसाम्** - ஜ்வலிக்கின்ற தேஜஸ்ஸை உடையவர்களான

32½. (க - ரை) கடைந்த குமாரர் நால்வரின் இடையே விளங்கப்பெற்ற தசரதன் திக்பாலர்களான தேவர்கள் நடுவிலிருந்த சதுர்முகனைப் போல ஸந்தோஷிக்கலானார்.

33½–34½. (க - ரை) ஸகல கலைஞானங்களையும் பெற்று, எல்லாவித கல்யாண குணங்களும் நிறைந்து, கடமைக்குப் பயந்து கீர்த்திக்கு உறைவிடமாக ஸர்வவிஷய காரியங்களையும் முன் கூட்டி அறிந்துகொள்ளும் திறமையும் வாய்ந்து மஹா தேஜஸ்

பிரபாவமுள்ள இவ்விளைய பெருமாளையன்றி இராகவனுக்கும் நித்திரை வருவதில்லையாதலும் இலக்ஷ்மணனைப் பற்றியே விசேஷித்து (**द्वितीयं मे अन्तरात्मानं त्वां.** இலக்ஷ்மணா! எனது இரண்டாவது அந்தராத்மாவான உன்னை என்று மேலே ஸ்ரீராமபிரானே அருளினாரன்றோ (அயோத்தியாகாண்டம் ஸர்க்கம் 4. சுலோகம் 43.)

ते चापि मनुजव्याघ्रा वैदिकाध्ययने रताः ।
पितृशुश्रूषणरता धनुर्वेदे च निष्ठिताः ॥ 35½ ॥

अथ राजा दशरथस्तेषां दारक्रियां प्रति ।
चिन्तयामास धर्मात्मा सोपाध्यायः सबान्धवः ॥ 36½ ॥

तस्य चिन्तयमानस्य मन्त्रिमध्ये महात्मनः ।
अभ्यागच्छन्महातेजा विश्वामित्रो महामुनिः ॥ 37½ ॥

तेषां - அந்த, **सर्वेषां** - குமாரர்கள் யாவர் திரத்திலும், **पिता** - தகப்பனாரான, **दशरथः** - தசரதர், **लोकाधिपः** - உலகத்திற்கதிபதியான, **ब्रह्मा यथा** - பிரும்மதேவன் போல, **हृष्टः** - ஸந்துஷ்டரானார்.

35½. (ப - ரை) **मनुजव्याघ्राः** - ஆண் புலிகளான, **ते चापि** - அந்தக் குமாரர்களும், **वैदिकाध्ययने** - வேதசாஸ்த்திரம், ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகளைக் கற்பதில், **रताः** - ஆசையுள்ளவர்களாயும், **पितृशुश्रूषणे** - பிதிருக்களுடைய பரிசரணையில், **रताः** - பற்றுள்ளவர்களாயும், **धनुर्वेदे च** - தனுர் வேதத்திலும், **निष्ठिताः** - நிஷ்ணாதர்களாகவுமிருந்தனர்.

36½. (ப - ரை) **अथ** - பிறகு, **धर्मात्मा** - தர்ம ஸ்வரூபியான, **राजा** - ராஜாவான, **दशरथः** - தசரதரானவர், **तेषां** - அந்தக் குமாரர்களுடைய, **दारक्रियां** - விவாஹத்தை, **प्रति** - குறித்து, **सोपाध्यायः** - ஆசாரியரான வஸிஷ்டர் ஸஹிதராயும், **सबान्धवः** - பந்துக்களோடு கூடினவராயும், **चिन्तयामास** - ஆலோசிக்கலானார்.

37½. (ப - ரை) **महात्मनः** - மஹானுபாவரான, **तस्य** - அந்த தசரதரானவர்,

விகளாய் விளங்குகின்ற அக்குமாரர்களைப் பெற்ற பாக்கியசாலியான தசரதன் விசித்திரமான இப்பிரபஞ்சத்தைப் படைத்துப்பார்த்த பரமேஷ்டியைப்போல பரம ஸந்துஷ்டரானார்.

35½. (க - ரை) முழுதும் கற்றும் கல்வியிலேயே கருத்துள்ளவர்களாய் பெற்றோர் சீராட்டுகையிலும் அவர் தம் சரணஸேவையிலேயே ருசியுள்ளவர்களான அவ்வாண் புலிகள், அஸ்த்திரவித்தையில் அசையாத நிலையுள்ளவர்களாக விளங்குகின்றார்கள்.

36½. (க - ரை) பிறகு ஒரு பொழுது தசரத மஹாராஜன், தமது குமாரர்களுக்கு தக்க பெண்களைத்தேடி விவாஹத்தைச் செய்து முடிக்க எண்ணங்கொண்டவராய் ஆசார்ய வஸிஷ்டரையும் மற்ற உரவினரையும் கூட்டி வைத்துக்கொண்டு அதைப்பற்றிக் கலந்து ஆலோசிக்கலானார்.

37½. (க - ரை) இப்படி அரசன் தம்மவரோடு கல்யாணத்தைப் பற்றி

स राज्ञो दर्शनाकाङ्क्षी द्वाराध्यक्षानुवाच ह ।
शीघ्रमाख्यात मां प्राप्तं कौशिकं गाधिनः सुतम् ॥ 38½ ॥
तच्छ्रुत्वा वचनं त्रासाद्राज्ञो वेश्म प्रदुद्रुवुः ।
संभ्रान्तमनसः सर्वे तेन वाक्येन चोदिताः ॥ 39½ ॥

मन्त्रिमध्ये - ஆலோசனை கூறுவோரிடையில், **चिन्तयमानस्य** - ஆலோசித்துக் கொண்டிருக்கும்பொழுது (அல்லது,) **चिन्तयमानस्य** - இப்படி ஆலோசித்துக் கொண்டிருக்கின்றவரான, **तस्य** - அந்த, **महात्मनः** - மஹா பாக்கியசாலியினுடைய, **मन्त्रिमध्ये** - மந்திரிகளினிடையிலே, **महातेजाः** - மகத்தான தேஜஸை யுடையவரான **विश्वामित्रः** - விச்வாமித்திரர், எனப்படுகிற, **महामुनिः** - மஹரிஷியானவர், **अभ्यागच्छत्** - வந்து சேர்ந்தார்.

38½. (ப - ரை) **सः** - அவர், **राज्ञः** - அரசனுடைய, **दर्शनाकाङ्क्षी** - பேட்டியை அபேக்ஷிக்கின்றவராக, **द्वाराध्यक्षान्** - வாயிற் காப்பவர்களை, **उवाच ह** - சொன்னார், (என்ன வென்று?) **शीघ्रं** - சீக்கிரமாக, **गाधिनः** - காதியினுடைய **सुतम्** - பிள்ளையான, **कौशिकं** - குசவம்சப் பிரஸூதனை, **मां** - என்னை, **प्राप्तं** - வந்திருப்பதாக, **आख्यात** - சொல்லுங்கள் என்று,

39½. (ப - ரை) **तेन** - அந்த, **वाक्येन** - வார்த்தையினால், **चोदिताः** - தூண்டப்

லோசித்துக் கொண்டிருக்குந் தருணத்தில், பாக்கியவசத்தால் மஹா தேஜஸ்வியரான விச்வாமித்ரரெனும் மஹரிஷி அவர்களிடையே வந்து தோன்றினார்.

38½. (க - ரை) அந்த மஹரிஷி தமது ஆசிரமத்திலிருந்து அவசர அவசரமாகப் புறப்பட்டு பறந்து பறந்து அயோத்திமா நகரத்திலுள்ள அரண்மனை வாயலண்டை வந்து சேர்ந்தார். அங்கு காவல் புரிவோரைக் கண்டு சீக்கிரம், சீக்கிரம் என்று துரிதப்படுத்தினார். காரியத்தின் கண்ணுள்ள அவரைத் தொடல் இன்னது செய்ய வேண்டுமென்பதைத் தெரிவிக்காமலே துரிதப்படுத்துகின்ற மஹரிஷிக்கு அஞ்சிய அக்காவலர்கள் ஐயனே! நாங்கள் செய்யவேண்டியதென்ன வென்பதைக் கட்டளையிடவேண்டுமென்று வினயமாய் வேண்டிக் கொண்டார்கள். விச்வாமித்திரும் ஓஹோ! யாம் வந்திருப்பதாக அரசனிடம் தெரிவியுங்கள். சேவகர்கள் தாம் தான் யாரோ அடியோங்கள் அறிகின்றிலேம என்று அடக்கமாய் வினவ மஹரிஷி மஹா பிரபாவசாலியான காதி குமாரனை இந்த கௌசிகனையும் தெரிந்து கொள்ளாதவர் ஒருவர் உண்டோ! மூடர்களே ஓடுங்கள், என்று மார்மைத் தட்டிக் கொண்டு விடை பகர்ந்தார்.

39½. (க - ரை) இப்படி விச்வாமித்திரர் ஆஜ்ஞாபிக்கவே அவர் பெயரைச்

ते गत्वा राजभवनं विश्वामित्रमृषिं तदा ।
प्राप्तमावेदयामासुर्नृपायैक्ष्वाकवे तदा ॥ 40½ ॥

तेषां तद्वचनं श्रुत्वा सपुरोधाः समाहितः ।
प्रत्युज्जगाम तं हृष्टो ब्रह्माणमिव वासवः ॥ 41½ ॥

டவர்களான, **सर्वे** - அவர்களெல்லோரும், **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **त्रासात्** - பயத்தினாலே, **संभ्रान्तमनसः** - பிரமித்துப்போன மனதை யுடையவர்களாக, **राज्ञः** - ராஜாவினுடைய, **वेश्म** - இருப்பிடத்தைக் குறித்து, **प्रदुद्रुवुः** - ஓடினார்கள்.

40½. (ப - ரை) **ते** - அவர்கள், **तदा** - அப்பொழுது, **राजभवनं** - ராஜக்கிருஹத்தை, **गत्वा** - சென்று, **ऐक्ष्वाकवे** - இக்ஷ்வாகு வம்சத்தவரான, **नृपाय** - அரசனின்பொருட்டு, **विश्वामित्रं** - விச்வாமித்திரரென்கின்ற, **ऋषिं** - ரிஷியை, **तदा** - அப்பொழுதே, **प्राप्तं** - வந்திருப்பவராக, **आवेदयामासुः** - அறிவித்தார்கள்.

41½. (ப - ரை) **तेषां** - அவர்களுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **सपुरोधाः** - உபாத்தியாயரோடு கூடினவராயும், **समाहितः** - ஜாக்கிரதை யுள்ளவராகவும், **हृष्टः** - ஸந்துஷ்டராகவும், **ब्रह्माणं** - பிரும்மதேவனை, **वासवः इव** - தேவேந்திரன்போல, **तं** - அந்த மஹரிஷியை, **प्रत्युज्जगाम** - எதிர்கொண்டு சென்றார்.

...ரத்திரத்தில் பயத்தினால் உள்ளங் கலங்கி நடுக்கங் கொண்டவரான அக்காவலர்களெல்லோருமே ஒருமிக்க அரசன் வீற்றிருக்கு மிடத்திற்கு ஓடோடிச் சென்றார்கள்.

40½. (க - ரை) அப்படி ஓடோடி இராஜ க்ருஹத்தையடைந்த அந்த ஸேவகர்கள் இக்ஷ்வாகு வம்சஸ்தரான தசரதனிடத்தில் விச்வாமித்திர மஹரிஷி வாயிலில் வந்து நிற்கின்றாரென்பதை பரபரப்புடன் தெரிவித்துக்கொண்டார்கள்.

41½. (க - ரை) அப்படி அவர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்ட வுடனேயே, மிக்க ஸந்துஷ்டி யடைந்தவரான தசரத ராஜன் சதுர்முகனை சதமகன் எதிர் கொள்ளுவது போல, அந்த மஹரிஷியைத் தனது உபாத்தியாயருடன் கூட ஸாவதானராய் வரவேற்று உபசரிக்கச் சென்றார்.

तं दृष्ट्वा ज्वलितं दीप्त्या तापसं संशितव्रतम् ।
प्रहृष्टवदनो राजा ततोऽर्घ्यमुपहारयत् ॥ 42½ ॥

स राज्ञः प्रतिगृह्यार्घ्यं शास्त्रदृष्टेन कर्मणा ।
कुशलं चाव्ययं चैव पर्यपृच्छन्नराधिपम् ॥ 43½ ॥

पुरे कोशे जनपदे बान्धवेषु सुहृत्सु च ।
कुशलं कौशिको राज्ञः पर्यपृच्छत्सुधार्मिकः ॥ 44½ ॥

42½. (ப - ரை) **दीप्त्या** - காந்தியினாலே, **ज्वलितं** - ஜ்வலித்துக்கொண்டிருக்கிற, **संशितव्रतम्** - தீக்ஷ்ணமான நியமங்களையுடையவரான, **तापसं** - தபஸ்வியான, **तं** - அந்த விச்வாமித்திரரை, **दृष्ट्वा** - பார்த்து, **प्रहृष्टवदनः** - ஸந்தோஷமான முகத்தையுடையவரான, **राजा** - மஹாராஜாவானவர், **ततः** - அப்பொழுது, **अर्घ्यं** - பூஜார்த்தமான தீர்த்தத்தை, **उपहारयत्** - ஸமர்ப்பித்தார்.

43½. (ப - ரை) **सः** - அந்த மஹரிஷியானவர், **शास्त्रदृष्टेन** - சாஸ்திரத்திற் காணப்படுகின்ற, **कर्मणा** - முறையோடு, **राज्ञः** - அரசனுடைய, அதாவது அரசனால் செய்யப்பட்ட, **अर्घ्यं** - அர்க்கியத்தை, **प्रतिगृह्य** - பெற்றுக்கொண்டு, **नराधिपम्** - அரசனைக் குறித்து, **कुशलं च** - க்ஷேமத்தையும், **अव्ययं चैव** - குறைவின்மையையுங்கூட, **पर्यपृच्छत्** - நன்றாய் விசாரித்தார்.

44½. (ப - ரை) **सुधार्मिकः** - மிக்க தார்மிகரான, **कौशिकः** - விச்வாமித்திர மஹரிஷியானவர், **पुरे** - பட்டணத்தின் விஷயமாகவும், **कोशे** - பொக்கிஷத்தைப் பற்றியும், **जनपदे** - வெளி நகரங்களின் விஷயமாகவும், **बान्धवेषु** - பந்துக்கள் கூட்டத்திலும், **सुहृत्सु च** - ஸ்நேஹிதர்களைப் பற்றியும், **राज्ञः** - ராஜாவினுடைய, **कुशलं** - க்ஷேமத்தை, **पर्यपृच्छत्** - பிரச்னம் பண்ணினார்.

42½. (க - ரை) அப்படிச் சென்ற அரசன், தீக்ஷ்ணை விரதங்களை யனுஷ்டிக்கும் தபோதனராய், அத்தவத்தின் காந்தி முகத்தில் தவழப்பெறுகின்ற அந்த முனீச்வரரைக் கண்டு ஸந்தோஷத்தால் முகம் மலர்ந்து அர்க்கிய பாத்யாதிகளான அதிதிகளுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை முறைப்படி செய்யலானார்.

43½. (க - ரை) இப்படி அரசன் சாஸ்திர முறை தவறாமல் செய்த உபசாரங்களை யெல்லாம் ஏற்றுக்கொண்டு மஹரிஷி அவருடைய க்ஷேமத்தையும் க்ஷேதமில்லாமையையும் விசேஷித்து விசாரிக்கின்றார்.

44½. (க - ரை) தர்மாத்மாவான கௌசிகர் அரசனுடைய நகரம், பொக்கிஷம், புற நகரங்கள், பந்து மித்ராதிகளைப் பற்றிய க்ஷேமத்தை தனித் தனியாக ஆதரவுடன் வினவலானார்.

अपि ते सन्नताः सर्वे सामन्ता रिपवो जिताः ।
दैवं च मानुषं चापि कर्म ते साध्वनुष्ठितम् ॥ 45½ ॥

वसिष्ठं च समागम्य कुशलं मुनिपुङ्गवः ।
ऋषींश्चान्यान्यथान्याय महाभागानुवाच ह ॥ 46½ ॥

ते सर्वे हृष्टमनसस्तस्य राज्ञो निवेशनम् ।
विविशुः पूजितास्तत्र निषेदुश्च यथार्हतः ॥ 47½ ॥

45½. (ப - ரை) **ते** - உம்முடைய அல்லது உமது தேசத்தில், **सर्वे** - ஸமஸ்தர்களான, **सामन्ताः** - சிற்றரசர்களும், **अपि सन्नताः** - பணிந்திருக்கின்றார்களா, **रिपवः** - சத்ருக்கள், **जिताः** - ஜெயிக்கப் பட்டனரா? **दैवं च** - தேவதா ஸம்பந்தமாயும், **मानुषं च** - மநுஷ்ய ஸம்பந்தமாயுமுள்ள, **कर्म** - யக்ஞம், ஆதித்யம் முதலான கர்மம், **ते** - உமக்கு அல்லது உம்மால், **साधु** - நன்றாக, **अपि अनुष्ठितम्** - அனுஷ்டிக்கப் பட்டிருக்கின்றதா?

46½. (ப - ரை) **मुनिपुङ्गवः** - மஹரிஷி சிரேஷ்டரான விச்வாமித்திரர், **वसिष्ठं च** - வஸிஷ்ட மஹரிஷியையும், **समागम्य** - ஸமீபத்தில் நெருங்கி, **महाभागान्** - மஹாத்மாக்களான, **अन्यान्** - மற்றவர்களான, **ऋषींश्च** - ரிஷிகளையும், **यथान्यायं** - கிரமப்படி, **कुशलं** - க்ஷேமத்தைப்பற்றி, **उवाच ह** - சொன்னார் அல்லது கேட்டார்.

47½. (ப - ரை) **पूजिताः** - உபசரிக்கப் பெற்றவர்களான, **ते** - அந்த, **सर्वे** - எல்லோரும், **हृष्टमनसः** - ஸந்தோஷமான மனதையுடையவர்களாக, **तस्य** - அந்த, **राज्ञः** - அரசனுடைய, **निवेशनम्** - சபையை, **विविशुः** - பிரவேசித்தார்கள், **तत्र** - அங்கு, **यथार्हतः** - தக்கபடி, **निषेदुश्च** - உட்கார்ந்துங் கொண்டார்கள்.

45½. (க - ரை) பிரபுவே! உமது சிற்றரசர்கள் யாவரும் பணிந்து கப்பம் கட்டுகின்றனரா? உமது சத்ருக்களை வென்று ஸ்வாதீனப் படுத்திக் கொண்டீரா? தேவர் கடனைத் தவறாது செலுத்துகின்றீரா? மனிதருக்கு வேண்டிய உதவியை மனமாரப் புரிகின்றீரா? என்று மஹரிஷி சக்கிரவர்த்தியைப் பல விதமாய்ப் பிரச்னம் பண்ணியருளினார்.

46½. (க - ரை) பிறகு வஸிஷ்ட மஹரிஷியின் ஸமீபஞ் சென்று குசலப்பிரச்னஞ் செய்து விட்டு மற்ற மஹரிஷிகளையும் உசிதப்படி க்ஷேமத்தை விசாரிக்கலானார்.

47½. (க - ரை) இப்படி பரஸ்பரம் உபசரிக்கப் பெற்றவர்களான அம்மஹரிஷிகளெல்லோரும் மஹாராஜனுடைய கொலு மண்டபத்தை அடைந்து, அங்கு உசிதப்படி உட்கார்ந்தார்கள்.

अथ हृष्टमना राजा विश्वामित्रं महामुनिम् ।
उवाच परमोदारो हृष्टस्तमभिपूजयन् ॥ 48½ ॥

यथाऽमृतस्य संप्राप्तिर्यथा वर्षमनूदके ।
यथा सदृशदारेषु पुत्रजन्माप्रजस्य च ॥ 49½ ॥

प्रणष्टस्य यथा लाभो यथा हर्षो महोदये ।
तथैवागमनं मन्ये स्वागतं ते महामुने ॥ 50½ ॥

48½. (ப - ரை) **अथ** - பிறகு, **हृष्टमनाः** - ஸந்துஷ்டசித்தரான, **राजा** - அரசனவர், **तं** - அந்த, **विश्वामित्रं** - விச்வாமித்திரரென்கிற, **महामुनिम्** - முனீச்வரரை, **हृष्टः** - ஸந்துஷ்டராக, அல்லது புளகாங்கிதராக, **अभिपूजयन्** - துதித்துக்கொண்டு, **परमोदारः** - மஹத்தான ஔதார்யத்தை யுடையவராக, **उवाच** - சொன்னார்.

49½.-50½. (ப - ரை) **अमृतस्य** - அம்ருதத்தினுடைய, **संप्राप्तिः** - பெறுகையானது, **यथा** - எப்படியோ, **अनूदके** - தண்ணீரில்லாத மருகாந்தாரத்தில், **वर्षं** - மழையானது, **यथा** - எப்படியோ, **अप्रजस्य** - பிள்ளையில்லாதவருக்கு, **सदृशदारेषु** - அநுரூபையான பத்தினியிடத்தில், **पुत्रजन्म** - புத்திரோத்பத்தியானது, **यथा च** - எப்படியோ, **प्रणष्टस्य** - கெட்டுப்போன பொருளினுடைய, **लाभः** - இலாபமானது, **यथा** - எப்படியோ, **महोदये** - பெரிய உத்ஸவ ஸந்தர்ப்பத்தில், **हर्षः** - ஸந்தோஷமானது, **यथा** - எப்படியோ, **तथैव** - அப்படியே, **महामुने** - மஹரிஷியே, **आगमनं** - உமது வரவை, **मन्ये** - எண்ணுகின்றேன், **ते** - உமக்கு, **स्वागतं** - நல்வரவாகுக.

48½. (க - ரை) இப்படி எல்லோரும் அவரவருக்குத்தக்க ஆஸனங்களில் உசிதமாய் அமர்ந்தபின் அந்த கோஷ்டியைக் கண்ணுற்று ஸந்துஷ்டியை அடைந்த மஹாராஜன் அம்முனீச்வரரின் அமானுஷ வைபவங்களை நினைந்து புளகாங்கிதராய் அவரைப் பலபடியாகத் துதித்து தமது ஔதார்ய குணத்தினால் தூண்டப்பட்டவராக இவ்வார்த்தையைச் சொல்லலுற்றார்.

49½-50½. (க - ரை) முனீச்வரரே! உமது வரவினால் அடியேனுக்கு உண்டாகின்ற ஆனந்தத்தை என்னென்று சொல்லுவேன்! அலைகடல் கடைந்து இடையில் அரும்பாடுபட்டு முடிவில் திரண்டு வந்த அமுதத்தைப் பெற்ற அமரர்களைப் போல இனி நமக்கொரு குறையுமே யில்லை என்று ஸ்வஸ்த சித்தனாகின்றேன். பாலைவனத்தில் மழை பொழியப் பெற்றார் போல் மனம் மகிழ்கின்றேன். ஸந்ததியில்லாதவருக்கு ஸதிருசதாரத்தினிடத்தில் ஸத்ஸந்தானமுண்டாகியது போல ஸந்தோஷிக்கின்றேன். பறிகொடுத்த பொருளைத் திரும்பப் பெற்றது போலத் திருப்தியடைகின்றேன். உத்ஸவகாலத்தில் உத்ஸாஹம் போல பிரபுவே! உமது வரவு எதிர்பாராதபடி வலுவிற் கிடைத்தது. மஹரிஷியே! தமது வரவு நல்வரவாகுக.

कं च ते परमं कामं करोमि किमु हर्षितः ।
पात्रभूतोऽसि मे ब्रह्मन्दिष्ट्या प्राप्तोऽसि * धार्मिक ॥ 51½ ॥
अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ॥ 52 ॥
पूर्वं राजर्षिशब्देन तपसा द्योतितप्रभः ।
ब्रह्मर्षित्वमनुप्राप्तः पूज्योऽसि बहुधा मया ॥ 53 ॥

51½. (ப - ரை) **हर्षितः** - ஸந்துஷ்டனான யான், **ते** - உமக்கு, **परमं** - உயர்ந்ததான, **कं च कामं** - எந்த அபிமதத்தைத்தான், **करोमि किमु** - செய்வேனோ? **ब्रह्मन्** - பெரியவரே! **मे** - எனக்கு, - **पात्रभूतः** - பூஜிப்பதற்குத் தகுந்த ஸத்பாத்திரமாக, **असि** - இருக்கின்றீர், **धार्मिक** - தர்மப்பிரபுவே! **दिष्ट्या** - அதிருஷ்டவசத்தினால், **प्राप्तः** - அடையப்பட்டவராக, **असि** - இருக்கின்றீர்.

52. (ப - ரை) **अद्य** - இப்பொழுது, **मे** - என்னுடைய, **जन्म** - பிறவியானது, **सफलं** - பயன்பெற்றது, **जीवितं च** - ஜீவனமும், **सुजीवितम्** - நல்வாழ்க்கையாயிற்று.

53. (ப - ரை) **पूर्वं** - முதன் முதலில், **राजर्षिशब्देन** - ராஜரிஷி, என்கிற சொல்லினாலும், **अनु** - பிறகு, **तपसा** - தவத்தினாலே, **द्योतितप्रभः** - விளக்கப்பட்ட காந்தியுள்ளவராக, **ब्रह्मर्षित्वं** - பிரம்ஹரிஷியாயிருக்குந்தன்மையை, **प्राप्तः** - அடைந்தவரா

51½. (க - ரை) மஹரிஷியே! எனக்கு உண்டாகும் ஸந்தோஷமானது கட்டுக்கு அடங்காமல் கரைபுரண்டு பெருகித், நாம் விரும்புவது எதையேனும் கொடுத்தே தீரவேண்டுமென்று என்னைத் தூண்டிவிடுகின்றது. ஐயனே! இவ்வையத்தையெல்லாம் துச்சமென்று துறந்த பெருந் துறவியான உமக்கும் ஒரு காமம் (விருப்பம்) தானுண்டோ? அன்றிக்கு அரிதிலும் அரிதான பொருளொன்றை எதையேனும் நீர் விரும்புவதாகவே வைத்துக் கொண்டாலும் அவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அடியேனலாகுமோ? கிடையாதது கிடைத்தாற்போல தார்மிகரே! நீர் தாமாகவே வந்து தோன்றினீரே. இத்தகைய ஸத்பாத்திரம் கிடைத்திருக்க அடியேன் அதிலொன்றையும் அர்ப்பிக்காமலிருப்பது தகுமோ? தகாது தகாது. கையிற்கிடைத்தது எதையேனும் கொடுத்தே ஆகவேண்டும்.

52. (க - ரை) பிரபுவே! எனது பிறவி இன்றைக்கே பயன் பெற்றது எனது வாழ்நாள் இன்றைக்கே நன்னாளாயிற்று.

53. (க - ரை) பிரபுவே! உத்தமமான இராஜ வம்சத்திற் பிறந்து இராஜாவென்று பெயரெடுத்து நிஷ்காமமான பிரஜாபாலனாதி தர்மத்தினால் ராஜரிஷியாகி, உக்கிரமான தவத்தினால் உடம்பைப் புடம்வைத்து அடைவதற்கரிய பிரம்ஹ

---

* कौशिक इति பாடாந்தரம்.

तदद्भुतमिदं ब्रह्मन्पवित्रं परमं मम ।
शुभक्षेत्रगतश्चाहं तव संदर्शनात्प्रभो ॥ 54 ॥

ब्रूहि यत्प्रार्थितं तुभ्यं कार्यमागमनं प्रति ।
इच्छाम्यनुगृहीतोऽहं त्वदर्थपरिवृद्धये ॥ 55 ॥

कार्यस्य न विमर्शं च गन्तुमर्हसि कौशिक ।
कर्ता चाहमशेषेण दैवतं हि भवान्मम ॥ 56 ॥

பிருக்கின்றீர், **मया** - என்னால், **बहुधा** - அநேகவிதமாக, **पूज्यः** - பூஜிக்கத்தக்கவராக, **असि** - இருக்கின்றீர்.

54. (ப - ரை) **ब्रह्मन्** - பெரியவரே! **तत् इदं** - அப்படிப்பட்ட இந்த உமது வரவானது, **अद्भुतं** - ஆச்சரியகரமாயிருக்கின்றது, **मम** - எனக்கு, **परमं** - மிக்க, **पवित्रं** - பாவனமாகின்றது, **प्रभो** - பிரபுவே! **तव** - உம்முடைய, **संदर्शनात्** - ஸேவையினால், **अहं** - நான், **शुभक्षेत्रगतश्च** - புண்ணியக்ஷேத்திரத்தில் இருப்பவனுமாகின்றேன்.

55. (ப - ரை) **आगमनं प्रति** - வரவைப்பற்றி, **यत् कार्यं** - எந்த காரியமானது, **तुभ्यं** - உமக்காக, **प्रार्थितं** - கோரப்பட்டிருக்கின்றதோ, (அந்த உத்தேச பலத்தை) **ब्रूहि** - சொல்லும், **अहं** - நான், **अनुगृहीतः** - அனுக்கிரஹிக்கப்பட்டவனாக, **त्वदर्थपरिवृद्धये** - உம்முடைய காரியத்தின் அபிவிருத்தியின் பொருட்டு, **इच्छामि** - இச்சிக்கிறேன்.

56. (ப - ரை) **कौशिक** - குசிகஸுதரே! **कार्यस्य** - காரியத்தினுடைய, **विमर्शं च** - விசாரணையையும், **गन्तुं** - அடைவதற்கு, **न अर्हसि** - தக்கவராக இருக்

ரிஷிப்பட்டத்தையும் பெற்று விளங்கும் தம்மை பல்வகையிலும் பூஜிக்க அடியேனுக்கு பாக்கியமுளதன்றோ!

54. (க - ரை) பிரும்ஹன்! தாம் இங்கு தோன்றியது பரம ஆச்சர்யம், பரம பாவனம். பிரபுவே! நீர் அடி வைத்த நிலமெல்லாம் நன்னிலமாதலின் இனி யான் புண்ணிய க்ஷேத்திரத்தில் பிறப்புடைமை பெற்றேனானேன்.

55. (க - ரை) மஹரிஷியே! எக்காரியத்தை உத்தேசித்துத் தாங்கள் இவ்விடம் வந்ததோ, உமது உத்தேசத்திற்கு என்னாலான உதவியைச் செய்து நான் க்ருதார்த்தனாகும்படி அதனைக்கூறியருள வேண்டும்.

56. (க - ரை) குசிகாத்மஜரே! பெரியது சிறியது என்றாவது, கூடியது கூடாதது என்றாவது, செய்து வைப்பாரோ மாட்டாரோ என்றாவது காரியத்தைப் பற்றித் தாங்கள் யாதொரு சிந்தையும் செய்வது தக்கதல்ல. எதுவானாலும் அடியேன் அதனை அப்படியே பூராவாகச் செய்து முடிப்பேன். எனக்குத் தாங்களன்றோ

मम चायमनुप्राप्तो महानभ्युदयो द्विज ।
तवागमनजः कृत्स्नो धर्मश्चानुत्तमो मम ॥ 57 ॥

इति हृदयसुखं निशम्य वाक्यं श्रुतिसुखमात्मवता विनीतमुक्तम् ।
प्रथितगुणयशा गुणैर्विशिष्टः परमऋषिः परमं जगाम हर्षम् ॥ 58 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
अष्टादशः सर्गः ॥ 18 ॥

கின்றீரில்லை, **अहं** - *நான்,* **अशेषेण च** - *பாக்கியின்றி பூராவாகவும்,* **कर्ता** - *செய்வேன்,* **भवान्** - *தாங்கள்,* **मम** - *எனக்கு,* **दैवतं हि** - *தெய்வமன்றோ?*

57. *(ப - ரை)* **द्विज** - *த்விஜரே!* **अयम्** - *இதானது,* **मम च** - *எனக்கும்,* **महान्** - *பெரிதான,* **अभ्युदयः** - *மங்களமாக,* **अनुप्राप्तः** - *உடன் உண்டாயிருக்கின்றது,* **मम** - *எனக்கு,* **अनुत्तमः** - *உயர்வற்றதான,* **कृत्स्नः** - *ஸகலமான,* **धर्मश्च** - *தர்மமும்,* **तव** - *உம்முடைய,* **आगमनजः** - *வரவினால் உண்டாயிருக்கின்றது.*

58. *(ப - ரை)* **इति** - *இவ்விதமாக,* **आत्मवता** - *புத்திமானான தசரதனால்,* **विनीतम्** - *விநயயுக்தமாக,* **उक्तम्** - *சொல்லப்பட்டதாயும்,* **हृदयसुखम्** - *மனதிற்கு இனியதாயும்,* **श्रुतिसुखं** - *காதிற்கு ஸுகமாயுமிருக்கிற,* **वाक्यं** - *வார்த்தையை,* **निशम्य** - *கேட்டு,* **प्रथितगुणयशाः** - *பிரஸித்தமான குணங்களினா லுண்டான கீர்த்தியையுடையவராயும்,* **गुणैः** - *குணங்களினாலே,* **विशिष्टः** - *அதிகரமாயுமிருக்கிற,* **परमऋषिः** - *உத்தம ரிஷியானவர்,* **परमं** - *மிகுந்த,* **हर्षम्** - *ஸந்தோஷத்தை,* **जगाम** - *அடைந்தார்.*

தெய்வம். தமது கட்டளை யெதுவானாலும் ஆலோசியாமல் தாராளமாய்த் தலைமேலேற்று தெய்வ ஆக்ஞையென்று செய்து தீர்ப்பேன்.

57. *(க - ரை) ஹே பிரும்மன்! அடியேனுக்கு மங்களத்தின்மேல் மங்களமாகத் தங்களது நல்வரவு கிடைக்கப்பெற்றது. இனியு முள்ள கலியாணங்களுக்கான நல்வழியும் தங்கள் வரவினாலேயே திறக்கப்பட்டுளது காணும், என்று சக்கிரவர்த்தி மஹரிஷியின் முன் விண்ணப்பித்துக் கொண்டார்.*

58. *(க - ரை) இப்படி சொற்சுவை பொருட்சுவை இரண்டும் பொருந்தி காதுக்கும் மனத்திற்கும் ஒருங்கே இன்பமளிக்கின்றதான அம்மேதாவி சொல்லிய வார்த்தையை நூதன ஸுவர்க்க நிர்மாணாதிகளான ஆச்சரிய காரியங்களுக்கு அருஹங்களான தபஸு முதலிய பிரபாவங்களினால் மூவுலகத்திலும் புகழ் பெற்றவராயும், அப்புகழ்ச்சிக்கு அதிகமேயான குணங்களை யுடையவருமான விச்வாமித்திர மஹரிஷி காதாரக்கேட்டு மஹத்தான ஸந்தோஷத்தை யடைந்தார்.*

एकोनविंशः सर्गः ॥ 19 ॥

तच्छ्रुत्वा राजसिंहस्य वाक्यमद्भुतविस्तरम् ।
हृष्टरोमा महातेजा विश्वामित्रोऽभ्यभाषत ॥ 1 ॥

सदृशं राजशार्दूल तवैतद्भुवि नान्यथा ।
महावंशप्रसूतस्य वसिष्ठव्यपदेशिनः ॥ 2 ॥

यत्तु मे हृद्गतं वाक्यं तस्य कार्यस्य निश्चयम् ।
कुरुष्व राजशार्दूल भव सत्यप्रतिश्रवाः ॥ 3 ॥

1. (ப - ரை) **राजसिंहस्य** - *இராஜ சிரேஷ்டனுடைய,* **अद्भुतविस्तरम्** - *ஆச்சரியமான விஸ்தாரத்தையுடையதான,* **तत्** - *அந்த,* **वाक्यं** - *வாக்கியத்தை,* **श्रुत्वा** - *கேட்டு,* **हृष्टरोमा** - *சிலிர்த்த உரோமங்களை யுடையவராய்,* **महातेजाः** - *மஹத்தான தேஜஸை உடையவரான,* **विश्वामित्रः** - *விச்வாமித்திர மஹரிஷியானவர்,* **अभ्यभाषत** - *சொல்லுவாரானார்.*

2. (ப - ரை) **राजशार्दूल** - *புலிபோன்ற வேந்தனே!* **एतत्** - *இதானது,* **महावंशप्रसूतस्य** - *உத்தம வம்சத்தில் அவதரித்தவராயும்,* **वसिष्ठव्यपदेशिनः** - *வஸிஷ்ட மஹரிஷியால் பிரசஸ்திபெற்றவராயுமிருக்கின்ற,* **तव** - *உமக்கே,* **सदृशं** - *தக்கது,* **भुवि** - *இப்பூமண்டலத்தில்,* **अन्यथा** - *மறுத்துப் பேசுவதற்கு,* **न** - *ஒன்றுமில்லை.*

3. (ப - ரை) **मे** - *என்னுடைய,* **हृद्गतं** - *ஹிருதயத்திலுள்ளதான,* **वाक्यं** -

---

1. (க - ரை) *சிங்கம்போல் கெர்ஜிக்கின்ற அவ்வரசன், ஒவ்வொரு அம்சத்திலும் ஆச்சரியப்படும்படி பகர்ந்த அவ்வார்த்தையைக் கேட்டார் மஹரிஷி. அவ்வத்புத ரஸத்தினால் அவருடைய அங்கமெல்லாம் மயிர் சிலுர்த்தது. அன்றியும் பின்னென்ன வருமென்பதை எண்ணிப்பாராமலே இளம் பிள்ளைபோலப் பேசுகின்ற இவனை ஏமாற்றுகின்றோமே என்று தனது ஸாஹஸத்தை எண்ணியதினாலும் அவருக்கு ரோமாஞ்சம் உண்டாயிற்று. இதுவுமன்றி அவ்வரசனுக்கு அதீனமாயிருக்கின்ற தான் அர்த்தித்து வந்த பரம்பொருளொன்றை நினைத்ததினாலும் அவர் புளகாங்கிதரானார். அப்போது அவருடைய முகமண்டலமானது அகலமாய்ப் பிரகாசித்தது. இத்துணை ஸம்பிரமத்தோடு அவர் இவ்வார்த்தையைச் சொல்லுவா.*

2. (க - ரை) *அரசர் பெருமானே! இக்ஷ்வாகு ராஜவம்சத்தில் அவதரித்து, வஸிஷ்ட மஹரிஷியினால் பேரும் புகழும் பெற்று விளங்குகின்ற தாம் ஒருவருக்கே இவ்வாக்கியம் தக்கதாகுமேயன்றி மற்றவருக்காகுமோ! ஸத்திய ஸந்தரே! சந்தினி பிழைதானுறுமோ?*

3. (க - ரை) *ஆனாலும் மானியான என் மனத்தை விட்டு அவ்வார்த்தை*

अहं नियममातिष्ठे सिद्ध्यर्थं पुरुषर्षभ ।
तस्य विघ्नकरौ द्वौ तु राक्षसौ कामरूपिणौ ॥ 4 ॥
व्रते मे बहुशश्चीर्णे समाप्त्यां राक्षसाविमौ ।
मारीचश्च सुबाहुश्च वीर्यवन्तौ सुशिक्षितौ ॥ 5 ॥
समांसरुधिरौघेण वेदिं तामभ्यवर्षताम् ॥ 5½ ॥

வாக்கியமானது, **यत्तु**- யாதொன்றுண்டோ, **तस्य** - அதனுடைய, **कार्यस्य** - காரியத்தினுடைய அதாவது காரியத்தைப் பற்றிய, **निश्चयम्** - நிர்ணயத்தை, **कुरुष्व** - செய்துவைப்பும், **राजशार्दूल** - ராஜசிரேஷ்டரே, **सत्यप्रतिश्रवाः** - உண்மையான பிரதிக்ஞை யுள்ளவராக, **भव** - ஆகக்கடவீர்.

4. (ப - ரை) **पुरुषर्षभ** - புருஷ சிரேஷ்டரே! **अहं** - நான், **सिद्ध्यर्थं** - ஸித்தி பெறுவதற்காக, **नियमं** - தீக்ஷா நியமத்தை, **आतिष्ठे** - அடைகின்றேன், **तस्य तु** - அதற்கோவெனில், **कामरूपिणौ** - காமரூபிகளான, **द्वौ** - இரண்டு, **राक्षसौ** - அரக்கர்கள், **विघ्नकरौ** - இடுக்கண் விளைப்பவரா யிருக்கின்றனர்.

5-5½. (ப - ரை) **मे** - என்னுடைய, **व्रते** - விரதமானது, **बहुशः** - வெகுவாக, **चीर्णे-(सति)** - அனுஷ்டிக்கப்பட்ட ளவிலே, **समाप्त्यां** - முடிவுபெறுந் தருணத்

வெளியே வர அஞ்சுகின்றது. அதை யான் அடாத்கரித்து இருப்பதிற் பயனில்லை. அதனை ஸரளமாய வெளியேற்றும் வழி உமது கையிலேயே யிருக்கின்றது. வேண்டுவதைதுவானாலும் ஸத்தியமாகச் செய்து தருகின்றேனென்று ஒரு முறைக்கு மும்முறையாய் உறுதி கூறும் (என்று மஹரிஷி பலமாய் வற்புறுத்தி அவ்வண்ணமே அரசனிடமிருந்து உறுதியையும் பெற்றுக்கொண்டார்.)

4. (க - ரை) நல்லது மஹாராஜனே, வனத்திலிருந்து ஆசிரம வாஸியான ரிஷியொருவர் வந்தால் உமது வைதானக் கிரியைகள் விகாதமின்றி நடக்கின்றனவா, என்றொரு உபசார வார்த்தை கூட வினவக் கேட்டிலனே? என்ன உமது ஔதார்யத்தின் மேன்மை? மனிதரைக் கண்டவுடனே என்ன வேண்டும் என்ன வேண்டுமென்று விரும்பியதை யெல்லாம் வாரிப் பொழிவதற்கன்றோ பரக்கின்றீர். ஆனாலும் எனது நியமத்தின் நிலைமையை யானே விளக்குகின்றேன். யான் மஹத்தானதொரு ஸித்தியை உத்தேசித்து யக்ஞதீக்ஷையை ஏற்றுக் கொண்டுளேன். அந்தக்காரியத்திற்கு இடையூறாக இரண்டு அரக்கர்கள் தோன்றி யிருக்கின்றனர். அவர்களுக்கு நினைத்தபடியெல்லாம் உருவை மாற்றிக் கொள்ளுவதற்குத் திறமையும் இருக்கின்றது.

5-5½. (க - ரை) பெருமானே! யானொரு பெரும் பயனை வேண்டி நெடிய

अवधूते तथाभूते तस्मिन्नियमनिश्चये ।
कृतश्रमो निरुत्साहस्तस्माद्देशादपाक्रमे ॥ $6\frac{1}{2}$ ॥
न च मे क्रोधमुत्स्रष्टुं बुद्धिर्भवति पार्थिव ।
तथाभूता हि सा चर्या न शापस्तत्र मुच्यते ॥ $7\frac{1}{2}$ ॥

தில், **वीर्यवन्तौ** - வீரியவான்களாயும், **सुशिक्षितौ** - (கெட்டகாரியத்தில் நன்றாய்ப் பழகினவர்களாயும் (இருக்கிற), **मारीचश्च** - மாரீசனென்றும், **सुबाहुश्च** - ஸுபாஹுவென்றும் சொல்லப்படுகிற, **इमौ** - இந்த, **राक्षसौ** - இரண்டு இராக்ஷஸர்கள், **समांसरुधिरौघेण** - மாம்ஸத்தோடு கூடிய இரத்தத்தினுடைய ஸமூகத்தினால், **तां** - அந்த, **वेदिं** - யக்ஞவேதியை, **अभ्यवर्षताम्** - ஊற்றி நனைக்கின்றார்கள்.

$6\frac{1}{2}$. (ப - ரை) **तथा भूते** - அப்படிப்பட்ட, **तस्मिन्** - அந்த, **नियमनिश्चये** - நியமத்தைப்பற்றிய நிர்ணயமானது, **अवधूते** - அழிக்கப்படவே, **कृत श्रमः** - வியர்த்தமான சிரமத்தை யுடையவனாக, **निरुत्साहः** - உத்ஸாஹமற்றவனாக, **तस्मात्** - அந்த, **देशात्** - இடத்திலிருந்து, **अपाक्रमे** - வேறிடத்திற்கு ஓடிவிடுகின்றேன்.

$7\frac{1}{2}$. (ப - ரை) **पार्थिव** - அரசரே! **मे** - எனக்கு, **क्रोधं** - கோபத்தை, **उत्स्रष्टुं** - செலுத்துவதற்கு, **बुद्धिश्च** - எண்ணமும், **न भवति** - உண்டாகின்றதில்லை, **सा** - அந்த, **चर्या** - விரதத்தின் ஆசரணையானது, **तथाभूता हि** - அப்படிப்பட்டதல்லவோ, **तत्र** - அதனில், அல்லது அவர்களிடத்தில், **शापः** - சாபமானது, **न मुच्यते** - போடப்படுகிறதில்லை.

நியமத்தைப் பூண்டு பற்பல வேள்வியையும் வேட்கப் புகுந்து அதற்குள்ள சடங்குகளை யெல்லாம் வெகுவாக வனுஷ்டித்து அதனை முடிக்க விருக்கையில், மாரீசன், ஸுபாஹு எனப் பெயர் பெற்றவர்களான அரக்கரிருவர் இடையில் தோன்றி இரச்சியையும், இரத்தத்தையும் வேதியின் மீது வாரி வருஷித்து எனது யத்தினத்தை யெல்லாம் பாழாக்கி விடுகின்றார்கள்.

$6\frac{1}{2}$. (க - ரை) இப்படி உத்தம ஸித்தியைக் கோரி ஆரம்பித்து முக்கால்வாசி முடிவடைந்து விட்ட அந்த நியமங்களை அநியாயமாய் அப்பாவிகள் அழித்து விடவே, எனது யத்தினங்க ளெல்லாம் பாழாகி உத்ஸாஹ மொழிந்து அவ்விடத்தை விட்டு வேறிடம் அதனையும் விட்டு மற்றோரிடமாக ஓடித் திரிகின்றேன்.

$7\frac{1}{2}$. (க - ரை) க்ஷிதிபாலரே! காக்கக் கடமைப்பட்ட நாமிருக்க யாரிதற்கென்? என்றும் பரம சாந்திக்கு உறைவிடமான பிராம்ஹ தேஜஸ்ஸைப் பெற்று விட்ட பெருமையினாலும், காமக்குரோதாதிகளான களங்கங்களை விலக்கித் தெளிந்து விளங்குகின்ற சித்த முள்ளவருக்கு ஸித்திக்குமதான அவ் விரதாசரணத்தின் மேன்மையை எண்ணியும் யான் அங்கு அக் கீழ்மக்கண் மீது சாபத்தைப் போடச் சம்மதியா தொழிந்தேன்.

स्वपुत्रं राजशार्दूल रामं सत्यपराक्रमम् ।
काकपक्षधरं शूरं ज्येष्ठं मे दातुमर्हसि ॥ 8½ ॥

शक्तो ह्येष मया गुप्तो दिव्येन स्वेन तेजसा ।
राक्षसा ये विकर्तार स्तेषामपि विनाशने ॥ 9½ ॥

श्रेयश्चास्मै प्रदास्यामि बहुरूपं न संशयः ।
त्रयाणामपि लोकानां येन ख्यातिं गमिष्यति ॥ 10½ ॥

8½. (ப - ரை) **राजशार्दूल** - புலிபோன்ற அரசனே! **स्वपुत्रं** - உமது புத்திரனாய், **सत्यपराक्रमम्** - தவறாத விக்கிரமத்தை யுடையவனாய், **काकपक्षधरं** - சிலுப்பாக்குடுமி தரித்திருப்பவனாய், **शूरं** - ஆனாலும் சூரனாய் (இருக்கிற), **ज्येष्ठं** - ஜேஷ்டகுமாரனை, **रामं** - இராமனை, **मे** - எனக்கு, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - தக்கவராயிருக்கின்றீர்.

9½. (ப - ரை) **मया** - என்னால், **दिव्येन** - தெய்வீகமான, **स्वेन** - உடந்தையான, **तेजसा** - தேஜஸ்ஸினாலே, **गुप्तः** - ரக்ஷிக்கப்பட்ட, **एषः** - இந்த இராமன், **ये** - எந்த, **राक्षसाः** - அரக்கர்கள், **विकर्तारः** - விபரீதாசரணை யுள்ளவர்களோ, **तेषामपि** - அவர்களுடையவும், **विनाशने** - நாசப்படுத்துவதில், **शक्तो हि** - ஸமர்த்தனன்றோ?

10½. (ப - ரை) **अस्मै** - இந்த இராகவனின் பொருட்டு, **बहुरूपं** - வெகுவிதமான, **श्रेयश्च** - க்ஷேமத்தையும், **प्रदास्यामि** - கொடுக்கப் போகின்றேன், **न संशयः** - ஸந்தேகமில்லை, **येन** - எதனால், **त्रयाणां** - மூன்றுகளான, - **लोकानां अपि** - உலகத்திற்கும், **ख्यातिं** - பிரஸித்தியை, **गमिष्यति** - அடையப்போகின்றான்.

8½. (க - ரை) புலிபோன்ற பராக்கிரமமுள்ள பிரபுவே! உமது விக்கிரமஸாரத்தைத் திரட்டிக்கொண்டு பிறந்திருக்கின்ற ஸத்திய பராக்கிரமனான ஜேஷ்டகுமாரன் இராகவனை சிறுவனென்று பாராமல் அவ் வரக்கர்களைக் கொல்லுவதற்காக என் கையிற் கொடுத்தருளும்.

9½. (க - ரை) பிரபுவே! என்ன ஆலோசிக்கின்றீர்? இவ் விராமனை காப்பதற்கு என்னிடத்தில் தெய்வீகச் சக்திதான் இல்லையோ? அல்லது இவனுக்கு உடந்தையான மஹிமைதான் இவனைக் காத்துக் கொள்ளாதோ? அது தெய்வீகத் தன்மை வாய்ந்தது தானன்றோ? இனி அது கொண்டே அவன் இவ் விருவரை மட்டுமல்ல, அக்கிரமக்காரர்களான அரக்கரை யெல்லோரையுமே அழித்திடுவானென்பதற்கு ஆக்ஷேப மென்ன?

10½. (க - ரை) இவ் விராகவனுக்கு யான் நானாவிதமான க்ஷேமலாபங்களையுங் கூட்டிவைக்கப் போகின்றேனென்பதிலாவது, இவன் அவற்றைக் கொண்டு மூவுலகத்துள்ளும் போற்றப் பெரும் பிரக்கியாதியை யடையப் போகின்றானென்பதிலாவது சிறிதேனும் ஸந்தேஹமே யில்லை.

न च तौ राममासाद्य शक्तौ स्थातुं कथंचन ।
न च तौ राघवादन्यो हन्तुमुत्सहते पुमान् ॥ 11½ ॥

वीर्योत्सिक्तौ हि तौ पापौ कालपाशवशं गतौ ।
रामस्य राजशार्दूल न पर्याप्तौ महात्मनः ॥ 12½ ॥

न च पुत्रकृतस्नेहं कर्तुमर्हसि पार्थिव ।
अहं ते प्रतिजानामि हतौ तौ विद्धि राक्षसौ ॥ 13½ ॥

11½. (ப - ரை) **तौ** - அவர்கள், **रामं** - இராகவனை, **आसाद्य** - நெருங்கி வந்து, **स्थातुं** - நிற்பதற்கு, **कथंचन** - எவ்வகையிலும், **न च शक्तौ** - சக்தியுள்ளவர்களுமல்ல, **तौ** - அவர்களை, **राघवात्** - இராமனைவிட, **अन्यः** - வேறொருவ, **पुमान्** - புருஷன், **हन्तुं** - கொல்லுவதற்கு, **न उत्सहते च** - உத்ஸாஹப்படவும் மாட்டான்.

12½. (ப - ரை) **वीर्योत्सिक्तौ** - வீரியத்தினாலே செருக்குக்கொண்டவர்களான, **तौ** - அந்த, **पापौ हि** - பாபிகளோ வெனில், **कालपाशवशं गतौ** - யமபாசத்திற்கு வசமாகி விட்டார்கள் (ஆனாலும்), **महात्मनः** - மஹாபலம் பொருந்தினவரான, **रामस्य** - இராமனுக்கு, **राजशार्दूल** - இராஜசிரேஷ்டரே! **न पर्याप्तौ** - பற்றுமானவர்களல்ல.

13½. (ப - ரை) **पार्थिव** - அரசனே! **पुत्रकृतं** - புத்திரனென்கிறதினாலுண்டான, **स्नेहं** - வாஞ்சையை, **कर्तुं** - செய்வதற்கு, **न अर्हसि** - நீர் தகுந்தவரல்ல, **अहं** -

11½. (க - ரை) அரசே! அரக்கரென்று அஞ்சுகின்றீரா? அப்பாவைகள் போர்க்களத்தில் இராகவன் திருமுன்பு நிற்பதற்குக் கூட எவ்வகையிலும் வகையற்றவர் காணும். இராமன்தான் வேண்டுமோ வேறொருவர் கூடாதோ? என்று கேட்கின்றீரா? அவர்களைக் கொல்லுவதற்கு இராகவனையன்றி வேறு எத்தகையப் பௌருஷமுள்ளவனும் கனவும் காணமாட்டான் காணும்.

12½. (க - ரை) அந்தப் பாபிகள் வீரரென்கிற செருக்கொன்று உள்ளிருந்து தள்ள, மிருத்தியுவின் பாசமொன்று கழுத்திற் சுருக்கிட்டு வெளியிலிழுக்கப் போருக்குப் புறப்படுகின்றனரேயன்றி, ஹே புலிபோன்ற அரசே! ஒப்புயர்வற்ற பலம் பொருந்திய உமது புத்திரரான இராமனுக்குச் சற்றேனும் பற்றமாட்டார்கள்

1‹3½. (க - ரை) பிரபுவே! உத்தம க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்த நீர் புத்திரவாஞ்சையை வஹிக்கலாகுமோ? "தலை மண்டது காது, குண்டலத்தால் அலங்காரம் பெற்றது சபோலம்" என்பதுபோல க்ஷத்திரியருக்குப் புத்திரரைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான பிரயாஸையே யன்றி அவராலாகும் பிரயோஜனத்தைப் பெறுவது பிரஜைகளே யன்றோ? ஆனால் இவ்வளவைக்கொண்டு நீர் கலங்கிவிட வேண்

अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम् ।
वसिष्ठोऽपि महातेजा ये चेमे तपसि स्थिताः ॥ 14½ ॥

यदि ते धर्मलाभं च यशश्च परमं भुवि ।
स्थितमिच्छसि राजेन्द्र रामं मे दातुमर्हसि ॥ 15½ ॥

यदि ह्यनुज्ञां काकुत्स्थ ददते तव मन्त्रिणः ।
वसिष्ठप्रमुखाः सर्वे ततो रामं विसर्जय ॥ 16½ ॥

யான், **ते** - உமக்கு, **प्रतिजानामि** - பிரதிக்ஞை பண்ணித்தருகிறேன், **तौ** - அந்த, **राक्षसौ** - இராக்ஷஸர்களை, **हतौ** - கொல்லப்பட்டுப் போனவர்களாகவே, **विद्धि** - அறியும்.

14½. (ப - ரை) **अहं** - நான், **महात्मानं** - மஹா பலவானையும், **सत्यपराक्रमम्** - பழுதற்ற பராக்கிரமத்தை யுடையவராயு மிருக்கிற, **रामं** - இராமனை, **वेद्मि** - அறிவேன், **महातेजाः** - மஹத்தான ஞான வொளியுள்ளவரான, **वसिष्ठः अपि** - வஸிஷ்ட மஹரிஷியும் (அறிவார்), **ये च** - யாவராமொரு, **इमे** - இந்த, **तपसि** - தவத்தில் **स्थिताः** - நிலையுள்ளவர்களுண்டோ, இவர்களும், (அறிவார்கள்.)

15½. (ப - ரை) **राजेन्द्र** - இராஜ சிரேஷ்டரே! **ते** - உம்முடைய, **धर्मलाभं च** - தருமத்தின் பயன்களையும், **भुवि** - பூமியில், **परमं** - மிகுந்துள்ள, **यशः च** - கீர்த்தியையும், **स्थितं** - நிலைத்திருக்க வேண்டியதாக, **यदि इच्छसि** - ஆசிக்கின்றீரே யானால், **रामं** - இராமனை, **मे** - எனக்கு, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - அருகரா யிருக்கின்றீர்.

16½. (ப - ரை) **काकुत्स्थ** - ககுத்தவம்சத்திற் பிறந்தவரே! **तव** - உமக்கு,

---

டாம். அவ்வரக்கர்களிருவரும் அழிந்தே விட்டனரென்று யான் உமக்கு ஆணையிட்டுத் தருகின்றேன்.

14½. (க - ரை) அரசே! இராமனைப் பெற்றவரேயானாலும், உம்மைவிட அவனது மஹிமையை யான் அதிகமாயறிவேன். நீர் அவனுடைய பராக்கிரமத்தை ஸாதாரணமாய் நினைக்கின்றீர் போலும். அதப்படியல்ல. அது எவ்விடத்தும் பழுதுபடாதது. இதை யான் மட்டுமல்ல, உமது ஆசிரியரான வஸிஷ்டரும் அறிவார். அவர் தானென்பதுமில்லை. இங்கு கூடியிருக்கின்ற தவசிகளெல்லோருமே தவறாமல் அறிவார். இவரனைவரும் ஒப்புக்கொண்டால் அப்போதாவது இராகவனை என்னிடம் ஒப்படைக் கலாமன்றோ?

15½. (க - ரை) அவ்வளவு மட்டுமல்ல. எனக்கு இராமனைக் கொடுப்பதால் உமக்குப் பெரிய பெரிய தருமபலன்கள் நித்தியமாய் பெருகிவரும். உலகில் விரிவடைந்த உமது கீர்த்தியும் இன்னும் அதிகமாகி என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும். இதனை நீர் வேண்டுவீரானால் இராமனை என்னிடம் கொடுத்தே தீரவேண்டும்

16½. (க - ரை) காகுத்தரே! நீர் ஒரு காரியஞ் செய்யும். உமக்கு மந்திரா

अभिप्रेतमसंसक्तमात्मजं दातुमर्हसि ।
दशरात्रं हि यज्ञस्य रामं राजीवलोचनम् ॥ $17\frac{1}{2}$ ॥

नात्येति कालो यज्ञस्य यथायं मम राघव ।
तथा कुरुष्व भद्रं ते मा च शोके मनः कृथाः ॥ $18\frac{1}{2}$ ॥

इत्येवमुक्त्वा धर्मात्मा धर्मार्थसहितं वचः ।
विरराम महातेजा विश्वामित्रो महामुनिः ॥ $19\frac{1}{2}$ ॥

मन्त्रिणः - மந்திராலோசனை கூறுகின்றவர்களான, **वसिष्ठप्रमुखाः** - வஸிஷ்டர் முதலானவர்களான, **सर्वे** - எல்லோரும், **अनुज्ञां** - அனுமதியை, **ददते यदि** - கொடுக்கின்றனரேயாகில், **ततः** - அது கொண்டாவது, **रामं** - இராமனை, **विसर्जय** - விட்டுவிடும்.

$17\frac{1}{2}$. (ப - ரை) **अभिप्रेतं** - உமது அபிமானத்திற்குப் பாத்திரமான, **आत्मजं** - புத்திரனை, **राजीवलोचनम्** - அரவிந்த நேத்திரனை, **रामं** - இராமனை, **यज्ञस्य** - யக்ஞத்திற்காக, **दशरात्रं** - பத்து இரவுக்குமட்டும், **असंसक्तं** - காதலின்பமின்றி, அல்லது வீண் சாபலமின்றி, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - யோக்கியராயிருக்கின்றீர்.

$18\frac{1}{2}$. (ப - ரை) **राघव** - ரெகுவம்சத்திற் பிறந்தவரே! **मम** - என்னுடைய, **यज्ञस्य** - யாகத்தினுடைய, **अयं** - இந்த, **कालः** - உறித்தான காலமானது, **यथा** - எப்படி, **नात्येति** - கடந்துபோகாமலிருக்குமோ, **तथा** - அப்படி, **कुरुष्व** - செய்வீராக, **ते** - உமக்கு, **भद्रं** - மங்களம் உண்டாகுக, **शोके** - வியஸனத்தில், **मनः** - மனதை **मा च कृथाः** - செய்யவே வேண்டாம்.

$19\frac{1}{2}$. (ப - ரை) **धर्मात्मा** - தர்மஸ்வரூபியாயும், **महातेजाः** - மகத்தான தேஜஸ்ஸையு

லோசனைக் கூறுகின்ற வஸிஷ்டர் முதலான மந்திரிகளெல்லோரும் அனுமதிக்க ஒப்புக்கொண்டால் மட்டும் இராமனை அனுப்பும். இவர்களுள் எவரேனும் ஒருவராவது அங்கீகரியாமற் போனாலும் அனுப்பவேண்டாம். ஆதலால் ஆராய்ந்து அவர்களையெல்லோரையுங் கலந்து ஆலோசித்து அவர்கள் சொல்லுகிறபடி செய்யலாகுமன்றோ?

$17\frac{1}{2}$. (க - ரை) பிரபுவே! இந்த உத்தமமான யக்ஞத்தை யெண்ணிப் பத்து இரவுகளுக்குமட்டும் அரவிந்தநேத்திரனை உமது குமாரனை அவனிடமுள்ள ஆசையைச் சற்று அடக்கி வைத்துக்கொண்டு எனக்குக் கொடுத்தருளவேண்டும்.

$18\frac{1}{2}$ (க - ரை) ரெகுஸத்தமரே! உத்தமமான எனது யாகத்திற்கு உரியதான இந்த ஸமயத்தை வீணாகக் கழிந்துபோக விடாமல் அதனைப் பயனுறச் செய்து வைக்கவேண்டும். வீணாக ஏன் இல்லாத கஷ்டத்திலெல்லாம் மனதைச் செலுத்துகின்றீர்.

$19\frac{1}{2}$. (க - ரை) தர்மத்தில் நிலைகொண்டவரும், அதனால் வளர்ந்த மெய்த்

स तन्निशम्य राजेन्द्रो विश्वामित्रवचः शुभम् ।
शोकमभ्यगमत्तीव्रं व्यषीदत भयान्वितः ॥ 20½ ॥
इति हृदयमनोविदारणं मुनिवचनं तदतीव शुश्रुवान् ।
नरपतिरभवन्महांस्तदा व्यथितमनाः प्रचचाल चासनात् ॥ 21½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
एकोनविंशः सर्गः ॥ 19 ॥

யுடையவராயும், **महामुनिः** - முனிசிரேஷ்டருமான, **विश्वामित्रः** - விச்வாமித்திரரான வர், **इत्येवं** - இப்படிப்பட்ட இந்த, **धर्मार्थसहितं** - அறம் பொருள் இரண்டையுங் கொண்டிருக்கின்ற, **वचः** - வார்த்தையை, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **विरराम** - ஓய்ந்தார்.

20½. (ப - ரை) **सः** - அந்த, **राजेन्द्रः** - ராஜசிரேஷ்டர், **शुभम्** - மங்களமான, **तत्** - அந்த, **विश्वामित्रवचः** - விச்வாமித்திரருடைய வார்த்தையை, **निशम्य** - கேட்டு, **तीव्रं** - கடுமையான, **शोकं** - துக்கத்தை, **अभ्यगमत्** - அடைந்தார், **भयान्वितः** - பயத்தோடு கூடினவராக, **व्यषीदत** - துக்கத்தினால் முகமாற்றத்தையு மடைந்தார்.

21½. (ப - ரை) **इति** - இப்படிப்பட்ட, **हृदयमनोविदारणं** - ஹிருதயம், மனது இவற்றிற்கு பிளக்கும் கருவியாயிருக்கின்ற, **तत्** - அந்த, **मुनिवचनं** - ரிஷியினுடைய வார்த்தையை, **अतीव** - அதிகப்படியாக, **शुश्रुवान्** - கேட்டவரான, **महान्** - தீரரான, **नरपतिः** - நரேந்திரரானவர், **तदा** - அப்பொழுது, **व्यथितमनाः** - வியதையடைந்த மனதை யுடையவராக, **अभवत्** - ஆனார், **आसनात्** - ஸிம்ஹாஸனத்திலிருந்து, **प्रचचाल च** - ஆடியும் விட்டார்.

ஞான வொளி நிறைந்தவரும், அதுகொண்டு இடைவீடின்றிப் பரம் பொருளினிடம் ஸமாதிநிலை கொண்டவருமான அம்முனீச்வரரான விச்வாமித்திரர் தர்மத்தையும், அதனை அனுஸரித்த அர்த்தத்தையும் அகலவிடாமற் காக்கின்ற இவ்வார்த்தையைச் சொல்லிவிட்டு வாய்மூடிக் கொண்டிருந்தார்.

20½. (க - ரை) அவ்வரசன் விச்வாமித்திரர் பகர்ந்த மங்களமான அவ்வாக்கியத்தைக் கேட்டு தீவிரமான துக்கத்தை யடைந்து மேலென்னாகுமோ எனும் பயத்தினால் முகம் வெளுத்து மலைத்துப்போனார்.

21½. (க - ரை) இப்படி ஹிருதயமெனும் மனதின் ஆசயத்தை அதனுள்ளடங்கியிருக்கின்ற மனதோடு சேர்த்துப் பிளந்து விடுகின்றதான முனியினுடைய அவ்வார்த்தையைப் பூராவாகக் கேட்ட சக்கிரவர்த்தி தைரியத்தை யிழந்து மனம் பதைத்து ஆஸனத்தில் நிலைக்கமாட்டாமல் ஆடியும் விட்டார்.

विंशः सर्गः ॥ 20 ॥

तच्छ्रुत्वा राजशार्दूलो विश्वामित्रस्य भाषितम् ।
मुहूर्तमिव निःसंज्ञः संज्ञावानिदमब्रवीत् ॥ 1 ॥
ऊनषोडशवर्षो मे रामो राजीवलोचनः ।
न युद्धयोग्यतामस्य पश्यामि सह राक्षसैः ॥ 2 ॥
इयमक्षौहिणी पूर्णा यस्याहं पतिरीश्वरः ।
अनया संवृतो गत्वा योद्धाहं तैर्निशाचरैः ॥ 3 ॥

1. (ப - ரை) **राजशार्दूलः** - ராஜ சிரேஷ்டரானவர், **तत्** - அந்த, **विश्वामित्रस्य** - விச்வாமித்திரருடைய, **भाषितम्** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **मुहूर्तमिव** - முகூர்த்த நேரம் போல, **निःसंज्ञः** - நினைவையிழந்திருந்து, **संज्ञावान्** (பிறகு) பிரக்ஞை பெற்றவராக, **इदं** - இந்த விஷயத்தை, **अब्रवीत्** - சொன்னார்.

2. (ப - ரை) **राजीवलोचनः** - அரவிந்த நேத்திரனை, **मे** - என்னுடைய, **रामः** - இராமன், **ऊनषोडशवर्षः** - குறைவான பதினாறு வயதையுடையவன் அதாவது பதினாறு வயது நிரம்பாதவன், (ஆதலால்) **अस्य** - இவனுக்கு, **राक्षसैः सह** - இராக்ஷதர்களோடு கூட, **युद्धयोग्यतां** - யுத்தத்திற்குத் தகுந்த யோக்கியதையை, **न पश्यामि** - பார்க்கின்றேனில்லை.

3. (ப - ரை) **इयं** - இதோ, **पूर्णा** - நிறைவுள்ள, **अक्षौहिणी** - சேனை (யிருக்கின்றது) **यस्याः** - யாதொன்றிற்கு, **अहं** - நான், **ईश्वरः** - நியந்தாவான, **पतिः** - எஜமானனோ, **अहं** - நான், **अनया** - இதனால், **संवृतः** - சூழப்பட்டவனாக, **गत्वा** - சென்று, **तैः** - அந்த, **निशाचरैः** - அரக்கர்களோடு, **योद्धा** - போராடுவேன்.

1. (க - ரை) விச்வாமித்திரருடைய அத்தகைய கடோரமான வார்த்தையைக் கேட்ட நரபதி அதனால் ஒரு முகூர்த்த நேரம் மூர்ச்சித்துக் கிடந்து, பிறகு தன் னினைவு பெற்று மேல் வருமாறு கூறுகின்றார்.

2. (க - ரை) அரவிந்தம் போல இரவு நேரத்தைக் கண்டால் குவிந்து கொள்ளுகின்ற அழகிய கண்களையுடைய எனது அருமைக் குமாரன் இராமனுக்கு வயது பதினாறு நிரம்பிய பாடில்லையே! அதிபாலனாயிற்றே. இவனை அரக்கருடன் போராடுவதற்கு எப்படித் தானழைக்கின்றீரோ, எது கொண்டுதான் யானும் அதற்குச் சம்மதிப்பேன் ?

3. (க - ரை) இதோ பூர்ணமான அக்ஷோஹிணி யிருக்கின்றது. நடத்துவதற்கு யானிருக்கின்றேன். போகின்றேன். போராடுகின்றேன். அவ்வரக்கர்களை யொழிக்கின்றேன்.

इमे शूराश्च विक्रान्ता भृत्या मेऽस्त्रविशारदाः ।
योग्या रक्षोगणैर्योद्धुं न रामं नेतुमर्हसि ॥ 4 ॥
* अहमेव धनुष्पाणिर्गोप्ता समरमूर्धनि ।
यावत्प्राणान्धरिष्यामि तावद्योत्स्ये निशाचरैः ॥ 5 ॥

---

4. (ப - ரை) **विक्रान्ताः** - பராக்கிரமசாலிகளாயும், **अस्त्रविशारदाः** - அத்திர வித்தையில் நிபுணர்களாயும், **शूराश्च** - சூரர்களாயு மிருக்கின்ற, **इमे** - இந்த, **मे** - என்னுடைய, **भृत्याः** - ஸேவகர்கள், **रक्षोगणैः** - இராக்ஷஸக் கூட்டங்களோடு, **योद्धुं** - போராடுவதற்கு, **योग्याः** - ஸமர்த்தர்கள், **रामं** - இராமனை, **नेतुं** - அழைத்துப் போவதற்கு, **न अर्हसि** - யோக்கியரா யிருக்கின்றீரில்லை.

5. (ப - ரை) **अहमेव** - யானே, **धनुष्पाणिः** - வில்லைக் கையிற் கொண்டவனாக, **समरमूर्धनि** - போர் முனையில், **गोप्ता** - ரக்ஷகனா யிருக்கின்றேன், **यावत्** - எதுவரையில், **प्राणान्** - உயிர்களை, **धरिष्यामि** - தாங்கிக் கொண்டிருக்கின்றேனோ, **तावत्** - அது வரையில், **निशाचरैः** - அரச்கர்களோடு, **योत्स्ये** - யுத்தம் பண்ணுகின்றேன்.

---

4. (க - ரை) இவ்வளவுதானென்ன, மஹா பராக்கிரமசாலிகளாய் அஸ்திர சஸ்திர நிபுணர்களாய் கூட்டங் கூட்டமாகக் கூடி வந்தாலும் அரக்கரையெதிர்ப்பதற்கு ஸமர்த்தர்களான யுத்த வீரர்கள் இதோ ஆயிரம் பெயரிருக்க யிராகவனை இழுப்பது நியாயந்தானாகுமோ !

5. (க - ரை) இவ் வீரர்களே போதுமென்று எண்ணிச் சொன்னேன். என்றாலும் யானே இவர்களுக்குத் தலைமை பூண்டு போர் முனை சென்று என்னுடம்பில் உயிரிருக்கும் வரைக்கும் அவ்வரக்கர்களுடன் போராடித் தீருவேன் காணும்.

---

* பால காண்டம் 20 வது ஸர்க்கம் 5 வது சுலோகம். இந்த சுலோகத்தில் தசரதர் தாமே பெருவில்லேந்திப்போர் முனையில் நின்று கடும்போர் புரிந்து அரக்கரை வெருட்டி வேள்வியைக் காக்கின்றேனென்று முதன் முதலில் வெகு வீரியமாகப் பேசியவர் உடனே என்னுடலில் உயிர் தங்கி யிருக்கும் வரைக்கும் வஞ்சனை யின்றி அரக்கரோடு போராடி மடிகின்றேனென்று பயந்தாற் போலப் பேசுகின்றாரே, இதைக் கேட்ட விச்வாமித்திரர் என்ன நினைப்பார் என்னதான் சொல்லுவார் ? அடே பயங்காளியே ; உனது உடம்பு உயிருடன் வாழுவது இவ் விச்வாமித்திரன் மனதை உறுத்திற்றோ ? ஆதலால் அதனைப் பிரித்துத் துறத்திவிட வேண்டுமென்கிற ஸங்கற்பத்தோடு தான் இத் துறவி இவ்விடம் வந்திருப்பதாகக் கருதுகின்றாயா ? பயப்படாதே யென்றொரு அபயவாக்கைக் காணும். ஐயோ அங்கு வந்து உயிரை யிழக்கின்றேனென்று அழுது சாகின்றாயே ? இதனாலேயே நீ என்னைக் காத்துக் கரை யேற்றுவது புரிந்து விட்டது நல்ல அழகிது, என்று பரிஹஸிக்கத்தானே செய்யுவார் ? இதற் கிடமின்றித் தனது கூற்றின் உட்கருத்தை தசரதர் **विप्रयुक्तोहिरामेण**, என்கிற சுலோகம் 8-8½ களினால் விளக்குவதை அங்கு கண்டு கொள்க.

निर्विघ्ना व्रतचर्या सा भविष्यति सुरक्षिता ।
अहं तत्र गमिष्यामि न रामं नेतुमर्हसि ॥ 6 ॥

बालो ह्यकृतविद्यश्च न च वेत्ति बलाबलम् ।
न चास्त्रबलसंयुक्तो न च युद्धविशारदः ॥ 7 ॥

न चासौ रक्षसां योग्यः कूटयुद्धा हि ते ध्रुवम् ॥ 7½ ॥

6. (ப - ரை) **सा** - அந்த, **व्रतचर्या** - நியமானுஷ்டானமானது, **निर्विघ्ना** - இடையூறற்றதாயும், **सुरक्षिता** - நன்றாக ரக்ஷிக்கப்பெற்றதாகவும், **भविष्यति** - ஆகப்போகின்றது, **अहं** - யான், **तत्र** - அங்கு, **गमिष्यामि** - போகப் போகின்றேன், **रामं** - இராமனை, **नेतुं** - கொண்டுபோவதற்கு, **न अर्हसि** - நீர் தக்கவரல்ல.

7-7½. (ப - ரை) **हि** - ஏனென்றால், **बालः** - இளம் பிள்ளையான எனது குழந்தை, **अकृतविद्यश्च** - தனுர் வித்தையையுங்கற்றுகாதவன், **बलाबलम् च** - பலம் இன்னது பலக் குறைவு இன்னது என்பதையும், **न वेत्ति** - அறிகின்றானில்லை, **अस्त्रवलसंयुक्तः च** - அஸ்திரங்களுடைய பலத்தோடு கூடியவனாகவும், **न** - இல்லை, **युद्धविशारदः च** - யுத்தத்தில் ஸமர்த்தனான ஒரு போர்வீரனாகவும், **न** - இல்லை, **असौ** - இந்தக் குழந்தை, **रक्षसां** - இராக்ஷஸர்களுக்கு, **योग्यः च** - தகுந்தவனும், **न** - அல்ல. **ते हि** - அவர்களோவெனில், **कूटयुद्धाः** - கபடமான யுத்தத்தை யுடையவர்கள், **ध्रुवम्** - நிச்சயம்.

6. (க - ரை) எனது ஸைனிகர்களாலாகிலென்ன? என்னாலாகிலென்ன? எவ்வகையிலும், அந்த நற்காரியமான உமது நியமமானது இடையூறின்றி இரக்ஷிக்கப் பெற்று முடிவையடையப் போகின்றதென்பது முற்றிலும் நிஜம். ஆனாலும் யானென்னவோ நிச்சயமாய் அவ்விடம் வரத்தான் போகின்றேன். எப்படியானாலும் இராமனைக் கூப்பிடுவதென்பதை மட்டும் விட்டு விடும்.

7-7½. (க - ரை) என் குழந்தை அதிபாலனல்லவோ! வித்தைகளைத்தான் கற்றாயிற்றே. சத்ருக்களின் பலாபலங்களைத்தான் அறியமாட்டானே. இவனையும் அஸ்திரபலம் நிறைந்த ஒரு யுத்த வீரனாகத்தானென்று எண்ணினீரா? இவ்வருமைக் குழந்தை இராக்ஷஸரென்கிற பெயரைக் கேட்டாலும் பயந்து போகுமே. ஐயோ! அம்மாயாவிகள் கபடாய் போராடுவார்களே. அப்பப்ப! அனர்த்தம் நிச்சயம்.

* विप्रयुक्तो हि रामेण मुहूर्तमपि नोत्सहे ।
जीवितुं मुनिशार्दूल न रामं नेतुमर्हसि ॥ 8½ ॥

यदि वा राघवं ब्रह्मन्नेतुमिच्छसि सुव्रत ।
चतुरङ्गसमायुक्तं मया च सहितं नय ॥ 9½ ॥

8½. (ப - ரை) **रामेण** - இராமனால், **विप्रयुक्तः** - பிரிக்கப்பட்டவனாய், **मुहूर्तमपि** - ஒரு முகூர்த்தப் பொழுதைக்கூட, **जीवितुं** - உயிரை வைத்துக் கொள்ளுவதற்கு, **न उत्सहे हि** - நான் ஆற்றலுள்ளவன் அல்லவனன்றோ ? **मुनिशार्दूल** - மஹாமுனிவரே ! **रामं** - இராமனை, **नेतुं** - கொண்டுபோவதற்கு, **न अर्हसि** - அருகராகின்றீரில்லை.

9½. (ப - ரை) **वा** - இல்லாவிட்டால், **ब्रह्मन्** - பெரியவரே ! **राघवं** - இரமனை, **नेतुं** - அழைத்துச் செல்லுவதற்கு, **इच्छसि यदि** - ஆசிக்கின்றீரேயானால்,

8½. (க - ரை) மஹரிஷியே ! என் கண்ணனை இரகவனை கௌஸல்யையினிடம் ஒப்பித்துவைத்து வெளிச்சென்ற எனக்கு, தற்செயலாய் அங்கொரு முகூர்த்தத்திற்கு மேலும் திரும்புவதற்கில்லாமல் தங்கும்படி நேர்ந்துவிட்டால் எனதாவி துடித்துப்போகுமே. அப்படியிருக்க, அவ்வருமைக் குழந்தையையே என்கையில் தாரை வார்த்துவிடு, என்று நீர் சொல்லுவது அடுக்குமோ ! வேண்டாம் திருத்திக் கொள்ளும். அது செய்வதற்கு என்னாலாகவே யாகாதுங்காணும்.

9½. (க - ரை) அல்ல ! அல்ல ! நீர் மெத்த நல்லவர். இவ்வழகிய இரகுகுமாரனை உமது ஆச்ரமத்திற்கு ஏதேனும் ஒரு வியாஜத்தில் அழைத்துச் செல்ல

---

*மஹரிஷியே ! யானுயிருள்ளவரையிற் போராடுகின்றே னென்றதைக் கேட்டு நீங்கள் பரிஹஸிக்கின்றீர்கள் போலும். ஆனால் யானப்படிச் சொல்லியதின் கருத்தை உள்ளபடியுணராமல் நீங்கள் திருத்தியே கிரஹித்து விட்டீர்களென்கத் தான்வேண்டும். யுத்தத்தில் அவ்விராக்ஷஸர்களென்னைக் கொன்று விடுவார்களென்று பயந்து யானப்படிச் சொல்லவில்லை. மற்றென்னவெனில் ? எனக்கொரு அனுபவமுண்டு. இராமனை விட்டுப்பிரிந்திருந்தால் இத்துணைநேரம் தான் உயிருடனிருப்பேனென்று ஒரு கணக்குண்டு. அக்காலம் ஒரு முகூர்த்தப் பொழுதேதான். இராமனை கௌஸல்யை கையிலொப்பிவித்து வைத்து ஒரு வேட்டைக்காகக் காட்டுக்குச் செல்லுகின்றேனென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போதும் அவ்வொரு முகூர்த்தத்திற் குள்ளாகவே திரும்பி வந்துவிடவேண்டும். அதற்குள்ளாக வந்து இராம சந்திரனைப் பாராமற்போனால் எனதுயிர் அத்துயரத்தால் தானாகவே உடலை விட்டுப் பிரிந்து ஓடிப்போய்விடும். மீனைப் பிடித்துக் கரையிற்போட்டால் அதனை உடனே ஜலத்திற் றள்ளினாலின்றி உயிர் தரியாதன்றோ ? நான் அரக்கரோடு போராடி அவர்களை வென்று உமது மகத்தை முடித்துவைத்துத் திரும்புவதற்குள் எனக்குற்ற காலவரை கடந்துபோகு

षष्टिवर्षसहस्राणि जातस्य मम कौशिक ।
दुःखेनोत्पादितश्चायं न रामं नेतुमर्हसि ॥ 10½ ॥

चतुर्णामात्मजानां हि प्रीतिः परमिका मम ।
ज्येष्ठं धर्मप्रधानं च न रामं नेतुमर्हसि ॥ 11½ ॥

सुव्रत - நல்ல விரதங்களையுடையவரே! **चतुरङ्गसमायुक्तं** - சதுரங்க ஸேனையோடு கூடினவனையும், **मया च** - என்னோடும், **सहितं** - சேர்ந்திருப்பவனுமாகவே, **नय** - அழைத்துப்போம்.

10½. (ப - ரை) **कौशिक** - கௌசிகரே! **जातस्य** - பிறந்த, **मम** - எனக்கு, **षष्टिवर्षसहस्राणि** - அறுபதினாயிரம் ஆண்டுகள் (கழிந்து போயின), **अयं** - இந்தக் குழந்தை, **दुःखेन** - வெகு கிலேசத்தினால், **उत्पादितः** - உண்டாக்கப்பட்டான், **रामं** - இராமனை, **नेतुं** - கொண்டுபோவதற்கு, **न अर्हसि** - நீர் தகுதியுள்ளவரல்ல.

11½. (ப - ரை) **मम** - எனக்கு, **चतुर्णां** - நால்வர்களான **आत्मजानां** - புத்திரர்கள் விஷயத்திலும், **प्रीतिः** - அன்பானது, **परमिका हि** - அதிகமாயிருக்கின்றது, அன்றோ! **ज्येष्ठं** - மூத்தவனையும், **धर्मप्रधानं च** - தர்மத்தையே முக்கியமாக உடையவனுமிருக்கிற, **रामं** - இராமனை, **नेतुं** - கொண்டு போவதற்கு, **न अर्हसि** - நீர் தகுந்தவரல்ல.

வேண்டுமென்று நீர் ஆசிக்கின்றீர் போலும். அப்படியாகில், அது நிறைந்த நற்காரியமே தான். ஆனாலும் இரத, கஜ, துரக, பதாதிகள், எனப்படுகின்ற சதுரங்க சேனையும் புடை சூழ ஸம்பிரமமாய் அழைத்துச் செல்லுமே. இக்கிழவன்தான் குழந்தையை விட்டு ஏன் தவிக்கவேண்டும். இவனையும் கூடவே தான் இட்டுக்கொண்டு போகலாமே.

10½. (க - ரை) மஹரிஷியே! இப்பாரில் பிறவி பெற்ற எனக்கு ஓர் அறுபதினாயிரம் ஆண்டுவரை புத்திரப் பேரில்லாமலே பாழாகிப் போயின. அதன் பின் உபவாஸ தீக்ஷாதிகளான நியம க்கிலேசங்களை யெல்லாம் தாங்கினின்று இப் புத்திரனை வெகு பிரயாஸத்தினால் பெற்றெடுத்தேன். இவனை ஒரு நொடிப் பொழுதில் கொண்டுபோய் விடுகிறேனென்று கூசாமல் கூறுகின்றீரே!

11½. (க - ரை) எனக்குப் புத்திரர் நால்வரிடத்திலும் அளவுக்கதிகமான பேரன்புளதேதான். என்றாலும் ஜேஷ்டனையும், தர்ம சிரேஷ்டனையுமிருக்கின்ற இராகவனை நீரழைப்பது எவ்வகையிலும் தகாது.

மானால் அப்போது இராமனுடைய பிரிவாற்றாமையே என்னுயிரை மாய்த்துவிடுமன்றோ அதை யெண்ணிச் சொன்னேனேயன்றி பிறிதொன்றுமில்லை. ஐயனே! இப்படிப்பட்ட என்னைவிட்டா நீர் என் இராமனைப் பிடித்திழுத்துச் செல்லப் பார்க்கின்றீர்? என்று தசரதர் சதுரமாய் பதிலுரைக்கின்றார்.

किं वीर्या राक्षसास्ते च कस्य पुत्राश्च के च ते ।
कथंप्रमाणाः के चैतान्रक्षन्ति मुनिपुङ्गव ॥ 12½ ॥

कथं च प्रतिकर्तव्यं तेषां रामेण रक्षसाम् ।
मामकैर्वा बलैर्ब्रह्मन्मया वा कूटयोधिनाम् ॥ 13½ ॥

सर्वं मे शंस भगवन्कथं तेषां मया रणे ।
स्थातव्यं दुष्टभावानां वीर्योत्सिक्ता हि राक्षसाः ॥ 14½ ॥

12½. (ப - ரை) **ते च** - அந்த, **राक्षसाः** - இராக்ஷஸர்கள், **किं वीर्याः** - எத்தகைய வீரியமுள்ளவர்கள் ? **कस्य** - யாருடைய, **पुत्राः** - பிள்ளைகள், **ते** - அவர்கள், **के च** - யாவரோ ? **कथं प्रमाणाः** - எவ்வளவு ஆகிருதியுள்ளவர்கள் ? **मुनिपुङ्गव** - முனிசிரேஷ்டரே ! **तान्** - அவர்களை, **के** - எவர்கள், **रक्षन्ति च** - ரக்ஷிக்கின்றார்களோ ?

13½. (ப - ரை) **तेषां** - அந்த, **रक्षसाम्** - ரக்ஷஸர்களின் விஷயத்தில், **कथंच** - எப்படித்தான், **प्रतिकर्तव्यं** - வகை செய்யவேண்டும், **रामेण** - இராமனாலேயோ, **मामकैः** - என்னுடையவைகளான, **बलैः वा** - சேனைகளினாலோ, **ब्रह्मन्** - பெரியவரே ! **कूटयोधिनाम्** - கபடயுத்தம் புரிகின்றவரான அவர் திறத்தில், **मया वा** - என்னாலே தானாகட்டும் (என்ன வகை செய்யவேண்டி யிருக்குமோ ?)

14½. (ப - ரை) **भगवन्** - பூஜ்யரே ! **दुष्टभावानां** - கெட்ட எண்ணமுள்ளவர்களான, **तेषां** - அவர்களுடைய, **रणे** - யுத்தத்தில், **मया** - என்னாலே, **कथं** - எப்படி, **स्थातव्यं** - எதிர்த்து நிற்கவேண்டும், **सर्वं** - இவற்றையெல்லாம், **मे** - எனக்கு, **शंस** - சொல்லும், **राक्षसाः** - அரக்கர்கள், **वीर्योत्सिक्ता हि** - வீரியத்தினால் செருவமடைந்தவர்களன்றோ ?

12½. (க - ரை) நல்லது மஹரிஷியே ! யான் வருகிறதானாலும் இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டுதானே வரவேண்டும், அவ்வரக்கர்களின் வீரியம் எப்படி? யாருக்குப் பிறந்தவர்கள் ? அவர்களின் பெயரென்ன ! அவர்களென்ன மலை போன்றிருப்பார்களோ ? அவர்களுக்குத் தலைவர்கள் எவரோ ?

13½. (க - ரை) பெரியவரே ! இராமனை எனது ஸகல ஸைனியங்களோடும் என்னோடும் கூட்டி இட்டுச் சென்றீரானால், அங்கு இராமனோ, அல்லது எனது சேனைகளோ அல்லது அம்மாயாவிகளுக்குத் தக்கபடி யானேயோ என்ன வகை செய்யவேண்டியிருக்குமோ ?

14½. (க - ரை) பூஜார்ஹரான மஹரிஷியே ! இராகவனும் மற்றயப்படை வீரரும் தூரவிருக்கட்டும். முடிவிற்கு யானொருவனேதான் முன்னிற்க வேண்டும். அக்கெடு நெஞ்சர்களான வஞ்சகர்களை நான் எப்படி எதிர்த்துப் போராடவேண்டும். அரக்கரெல்லோருமே வீரியச் செறுக்குத் தலைக்கேறியவர்களன்றோ !

तस्य तद्वचनं श्रुत्वा विश्वामित्रोऽभ्यभाषत ॥ 15 ॥
पौलस्त्यवंशप्रभवो रावणो नाम राक्षसः ।
स ब्रह्मणा दत्तवरस्त्रैलोक्यं बाधते भृशम् ॥ 16 ॥
महाबलो महावीर्यो राक्षसैर्बहुभिर्वृतः ।
श्रूयते हि महावीर्यो रावणो राक्षसाधिपः ॥ 17 ॥

15. (ப - ரை) **तस्य** - அவ்வரசனுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **विश्वामित्रः** - விச்வாமித்திரரானவர், **अभ्यभाषत** - சொன்னார்.

16. (ப - ரை) **पौलस्त्य वंशप्रभवः** - புலஸ்திய புத்திரரின் வம்சத்திற் தோன்றிய, **रावणो नाम** - இராவணனென்று பெயர்பெற்ற, **राक्षसः** - இராக்ஷஸன் (ஒருவனிருக்கின்றான்), **सः** - அவன், **ब्रह्मणा** - பிரும்ஹாவினாலே, **दत्तवरः** - கொடுக்கப்பட்ட வரத்தையுடையவனாக, **त्रैलोक्यं** - மூவுலகத்தையும், **भृशम्** - மிகவும், **बाधते** - உபத்திரவிக்கின்றான்.

17. (ப - ரை) **महाबलः** - அவன் மகத்தான தேஹ பலமுடையவன், **महावीर्यः** - பெரிதான அஸ்திர சஸ்திர வீரியத்தைப் பெற்றவன், **बहुभिः** - அநேகர்களான, **राक्षसैः** - இராக்ஷஸர்களால், **वृतः** - சூழப்பட்டவன். **महावीर्यः** - மகத்தான வீர்யமுள்ள, **रावणः** - இராவணனென்கிற, **राक्षसाधिपः** - அரக்கருக்கு அதிபதியானவன், **श्रूयते हि** - எங்கும் பிரஸித்தனாய் கேட்கப் படுகின்றனன்றோ!

---

15. (க - ரை) இப்படி உள் நடுக்கங்கொண்டு உளருகின்ற அவ்வரசனுடைய வீரருக் கொவ்வாத வார்த்தையைக் கேட்ட விச்வாமித்திரர் சற்று வேடிக்கையாக விடை கூறலானார்.

16. (க - ரை) ஸாக்ஷாத் புலஸ்திய குமாரரின் வம்சத்திற் தோன்றி தனது கொடுஞ் செயலால் இராவணனென்று காரணப் பெயரைப் பூண்ட கிளராக்க னொருவன் அயனிடத்திலரிய பெரிய வரங்களையெல்லாம் பெற்று உலக மூன்றையுமுறுத்திக்கொண்டு திரிகின்றான். அரசனே! இதுதான் அவனுடைய வீரியத்தின் அழகு.

17. (க - ரை) அவனுடைய பலத்திற்கு அளவொன்றுமில்லை. வீரியத்தையோ வெனில் சொல்லத்தரமல்ல. அவனைச் சுற்றியிருக்கும் அரக்கரையோ வெனில் அளவிடமுடியாது. இராவணனென்கிற அந்த இராக்ஷஸாதிபனுடைய பெயரை அறியாதார் ஒருவருமிரார்.

साक्षाद्वैश्रवणभ्राता पुत्रो विश्रवसो मुनेः ॥ 17½ ॥
यदा स्वयं न यज्ञस्य विघ्नकर्ता महाबलः ।
तेन संचोदितौ द्वौ तु राक्षसौ सुमहाबलौ ॥ 18½ ॥
मारीचश्च सुबाहुश्च यज्ञविघ्नं करिष्यतः ॥ 19 ॥
इत्युक्तो मुनिना तेन राजोवाच मुनिं तदा ।
न हि शक्तोऽस्मि संग्रामे स्थातुं तस्य दुरात्मनः ॥ 20 ॥

17½. (ப - ரை) **साक्षात्** - நேராக, **वैश्रवणभ्राता** - குபேரனோடு கூடப்பிறந்தவன், **विश्रवसः** - விச்ரவஸ் என்கிற, **मुनेः** - மஹரிஷிக்கு, **पुत्रः** - புத்திரன்.

18½-19. (ப - ரை) **महाबलः** - மஹத்தான பலமுள்ள அந்த இராவணன், **यदा** - எப்போது, **स्वयं** - தானாக, **यज्ञस्य** - யக்ஞத்திற்கு, **विघ्नकर्ता** - விக்கினத்தைச் செய்கின்றவனாக, **न** - தோன்றவில்லையோ (அப்போது), **तेन** - அவனால், **संचोदितौ** - அனுப்பப்பட்டவர்களாயும், **सुमहाबलौ** - மிகமிக வல்லாளர்களுமான, **मारीचश्च** - மாரீசனென்ன, **सुबाहुश्च** - ஸுபாஹு வென்ன, **द्वौ तु** - ஆக இவ்விருவர்களான, **राक्षसौ** - இராக்கதர்கள், **यज्ञविघ्नं** - யக்ஞவிஞாசத்தை, **करिष्यतः** - செய்வார்கள்.

20. (ப - ரை) **इति** - இவ்விதமாக, **तेन** - அந்த, **मुनिना** - ரிஷியினால், **उक्तः** - சொல்லப்பட்ட, **राजा** - இராஜாவானவர், **तदा** - அப்பொழுது, **मुनिं** - ரிஷியைப் பார்த்து, **उवाच** - சொன்னார், **तस्य** - அந்த, **दुरात्मनः** - அயோக்கியனுடைய, **सङ्ग्रामे** - யுத்தத்தில், **स्थातुं** - நிற்பதற்கு, **शक्तः** - சக்தியுள்ளவனாக, **न हि अस्मि** இருக்கின்றே னில்லையே?

17½. (க - ரை) அவன், குபேரன் பொருளையும் கவர்ந்து கொண்ட அவனுடைய உடன் பிறந்தவன். உத்தமரான விச்ரவ மாமுனியின் புத்திரன்.

18½-19. (க - ரை) அவன் தான் யான் செய்யும் கிரதுகளுக்குப் பிரதான சத்துரு. அவனொருகால் அபரிமிதமான தனது பலத்திற்கு ஈதெவ்வளவென்று பாகத்தை அலக்ஷியமாயெண்ணினால் அப்போதும் அவனைப்போன்ற பலமுள்ளவர்களான, மாரீசன், ஸுபாஹு எனப்படுகின்ற இராக்ஷஸரிருவரையும் சேர்த்து அனுப்பிவிடுவான். அப்பாவிகள் புகுந்து எனது யக்ஞத்தைப் பாழாக்கி விடுவார்கள்.

20-21. (க - ரை) என்று விச்வாமித்திரர் சொல்லக்கேட்ட தசரதர், ஐயோ! அவ்வயோக்கியனோடு போராட அடியேனாலாகாதே! அவன் முன் தலை நிமிர்ந்து நிற்கவும் எனக்குத் திறனில்லையே. பிரபுவே! இப்பாலகைப் பிள்ளையின் மீது கருணை

स त्वं प्रसादं धर्मज्ञ कुरुष्व मम पुत्रके ।
मम चैवाल्पभाग्यस्य दैवतं हि भवान् गुरुः ॥ 21 ॥
देवदानवगन्धर्वा यक्षाः पतगपन्नगाः ।
न शक्ता रावणं सोढुं किं पुनर्मानवा युधि ॥ 22 ॥
स हि वीर्यवतां वीर्यमादत्ते युधि राक्षसः ।
तेन चाहं न शक्नोमि संयोद्धुं तस्य वा बलैः ॥ 23 ॥
सबलो वा मुनिश्रेष्ठ सहितो वा ममात्मजैः ॥ 23½ ॥

---

21. (ப - ரை) **धर्मज्ञ** - தர்மம் தெரிந்தவரே ! **सः** - அப்படிப்பட்ட, **त्वं** - நீர், **मम** - என்னுடைய, **पुत्रके** - அருமைப் புத்திரன் விஷயத்தில், **प्रसादं** - அனுக்கிரஹத்தை, **कुरुष्व** - செய்யும், **अल्प भाग्यस्य** - பாக்கியஹீனனான, **मम चैव** - எனக்குங் கூட, **गुरुः** - குருவாயிருக்கின்ற, **भवान्** - தாங்கள், **दैवतं हि** - தெய்வமன்றோ !

22. (ப - ரை) **देवदानवगन्धर्वाः** - தேவர், தானவர், கந்தருவர்களும், **यक्षाः** - யக்ஷர்களும், **पतगपन्नगाः** - பதகர் பன்னகர்களும், **युधि** - யுத்தத்தில், **रावणं** - இராவணனை, **सोढुं** - ஸஹித்துக் கொள்ளுவதற்கு, **न शक्ताः** - சக்தியுள்ளவர்களல்ல, **मानवाः पुनः** - மனிதர்களோவெனில், **किं** - எம்மாத்திரம்.

23-23½. (ப - ரை) **मुनिश्रेष्ठ** - முனீச்வரரே ! **सः** அந்த, **राक्षसः** - இராக்ஷஸன், **वीर्यवतां** - வீரியவான்களுடைய, **वीर्यं** - வீரியத்தை, **युधि** - யுத்தத்தில், **आदत्ते हि** - வாங்கிக்கொண்டுவிடுகின்றானன்றோ? **अहं** - நான், **तेन च** - அவனோடாவது,

வையும். பாக்கியத்தைப் பெற்றும் அதன் பயனைப் பூராவாக அனுபவிக்கக் கொடுத்து வைக்காத இப்பேதைக்கு அஞ்சேலென்றபயந்தந்து அதனைக் கூட்டிவைக்கும் குல தெய்வம் தாமே யன்றோ! என்று வெகு தைனியத்துடன் வேண்டிக் கொண்டார்.

22. (க - ரை) மஹரிஷியே! உயர்ந்த க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்த ஒருவன் இப்படி யுத்தத்திற்குப் பயப்படலாமோ? என்றெண்ணுகிறீர்கள். தேவர் முதலான எத்தகைய உயர் பிறப்பினரும் போர் முனையில் இராவணனைப் பொருக்க மாட்டார்களே! இருக்க மனிதரைப்பற்றி மரியாதைக் குறைவென்ன?

23-23½. (க - ரை) மேலும், அவ்விராக்ஷஸன் போர் முனையில் தன்னையெதிர்த்து நிற்கும் வீரர்களுடைய வீரியத்தை யபகரித்துக்கொண்டு விடுவானே! இனி, அவனோடாவது, அவன் சேனையோடாவது போர்புரிய என்னலாகுமோ! யான் எனது சேனையெல்லாம் தான் திரட்டிக்கொண்டு போகட்டும். என் பிள்ளை

कथमप्यमरप्रख्यं संग्रामाणामकोविदम् ।
बालं मे तनयं ब्रह्मन्नैव दास्यामि पुत्रकम् ॥ 24½ ॥

अथ कालोपमौ युद्धे सुतौ सुन्दोपसुन्दयोः ।
यज्ञविघ्नकरौ तौ ते नैव दास्यामि पुत्रकम् ॥ 25½ ॥

तौ हि यक्षस्य कन्यायां जातौ दैत्यकुलोद्वहौ ॥ 26 ॥

तस्य - அவனுடைய, **बलैः वा** - ஸைனியங்களோடாவது, **सबलो वा** - சேனையுள்ள வனாகவோ, **मम आत्मजैः** - என்னுடைய பிள்ளைகளோடு, **सहितो वा** - சேர்ந்தவனாகவோ, **संयोद्धुं** - யுத்தம் செய்வதற்கு, **न शक्नोमि** - சக்தியுள்ளேனல்லேன்.

24½. (ப - ரை) **अमरप्रख्यं** - தேவன் போன்றவனையும், **सङ्ग्रामाणां** - யுத்த விஷயங்களை, **अकोविदम्** - நன்கறியாதவனையும், **बालं** - சின்னஞ்சிறுவனையும், **पुत्रकम्** - அருமைக் குழந்தையாயிருக்கிற, **मे** - என்னுடைய, **तनयं** - பிள்ளையை, **ब्रह्मन्** - பெரியவரே, **कथमपि** - எவ்வகையிலும், **न एव दास्यामि** - கொடுக்கவே மாட்டேன்.

25½. (ப - ரை) **अथ** - இது நிற்க, **युद्धे** - யுத்தத்தில், **कालोपमौ** - மிருத்யு போன்றவர்களான, **सुन्दोपसुन्दयोः** - ஸுந்தன், உபஸுந்தன் என்கிற இரண்டு அஸுரர்களுடைய, **सुतौ** - பிள்ளைகளான, **तौ** - அவ்விருவர்கள், **ते** - உம்முடைய, **यज्ञविघ्नकरौ** - யாகத்திற்கு நாசத்தைச் செய்கின்றனரன்றோ? **पुत्रकम्** - அருமைக் குழந்தையை, **न एव दास्यामि** - கொடுக்கவே மாட்டேன்.

26. (ப - ரை) **तौ** - அவர்கள், **यक्षस्य** - ஒரு யக்ஷனுடைய, **कन्यायां** - பெண்ணிடத்தில், **जातौ** - பிறந்தவர்களான, **दैत्यकुलोद्वहौ हि** - அஸுர வம்சத்தினர்களன்றோ!

களெல்லோரையுமேதான் கூட்டிக்கொண்டு போகட்டும். ரிஷீச்வரரே! எவ்வகையிலும் அவ்வரக்கருடன் போராடுவதைக் கனவிற் கூட நினைக்க முடியாது காணும்.

24½. (க - ரை) பெரியவரே! யுத்தமென்கிற வார்த்தையை கூட வறியாத விளையாட்டுக் குழந்தையான எனது அருமைக் குமாரன், அமரர் போன்ற வழகனை எப்பாடுபட்டாலும் யான் கொடுக்கப்போகிறதே யில்லை போம்.

25½. (க - ரை) இராவணன் செய்தி யிருக்கட்டும். உமது யக்ஞத்தை அழிக்கத் தோன்றுவது பெரும்பாலும் ஸுந்தோபஸுந்தர்களுடைய புத்திரர்களன்றோ? ஐயோ அவர்கள் சத்துருக்களுக்கு மிருத்தியுப் போன்றவர்களாயிற்றே! அம்மம்ம! எனது அருமைக் குழந்தையை ஒருபோதும் கொடுக்கவே மாட்டேன்.

26. (க - ரை) அவ்விரண்டு துரோஹிகளும் யக்ஷப்பெண் ஒருத்தியினிடத்தில் இருமாப்புள்ள இரண்டு அஸுரர்களுக்குப் பிறந்த விபரீதச்சாதியனராமே!

मारीचश्च सुबाहुश्च वीर्यवन्तौ सुशिक्षितौ ।
तयोरन्यतरेणाहं योद्धा स्यां ससुहृद्गणः ॥ 27 ॥

इति नरपतिजल्पनाद्द्विजेन्द्रं कुशिकसुतं सुमहान्विवेश मन्युः ।
सुहुत इव मखेऽग्निराज्यसिक्तः समभवदुज्ज्वलितो महर्षिवह्निः ॥ 28 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
विंशः सर्गः ॥ 20 ॥

27. (ப - ரை) **मारीचश्च** - மாரீசனும், **सुबाहुश्च** - ஸுபாஹுவும், **वीर्यवन्तौ** - ஸ்வபாவத்தில் வீர்யமுள்ளவர்கள், **सुशिक्षितौ** - நன்றாகப் பயிற்சியும் பெற்றவர்கள், **तयोः** - அவர்களுக்குள், **अन्यतरेण** - இரண்டிலொருவனோடு. **अहं** - நான், **ससुहृद्गणः** - மித்திரவர்க்கத்தோடு கூடினவனாக, **योद्धा** - யுத்தம் செய்பவனாய், **स्यां** - இருக்கக்கூடும்.

28. (ப - ரை) **इति** - இப்படிப்பட்ட, **नरपतिजल्पनात्** - அரசனுடைய பிதற்றலினால், **द्विजेन्द्रं** - த்விஜஶ்ரேஷ்டரான, **कुशिकसुतं** - கௌசிகரை, **सुमहान्** - மிகப் பெரியதான, **मन्युः** - கோபமானது, **विवेश** - பிரவேசித்தது. **मखे** - யக்ஞத்தில், **सुहुतः** - நன்றாக (ஸமித்தினால்) ஹோமம் பண்ணப்பட்டதும், **आज्यसिक्तः** - நெய்யினால் ஊற்றிவளர்க்கப்பட்டதுமான, **अग्निरिव** - அக்கினி போல, **महर्षिवह्निः** - இந்த மஹரிஷியாகிற அக்கினியானது, **उज्ज्वलितः** - உயர்ந்து ஜ்வலிக்கின்றதாக, **समभवत्** - ஆயிற்று.

---

27. (க - ரை) மஹரிஷியே! எனக்கு இப்படி பெரும் வேதனை தோன்றுகிறது. அந்த மாரீச ஸுபாஹுக்கள் ஒருவனுக்கொருவன் குறைவில்லாமல் பிறவியிலேயே வீரியவான்களென்பதோடு, போர்த்துறையில் நன்றாய்ப் பயின்றுமிருக்கின்றனரே? நல்லது! நான் சொல்லியதற்கு ஒன்றுமே இல்லையென்று போய்விடாமல் எனக்குள்ள உதவிகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அவர்களுள் யாரேனுமொருவனை யான் பார்த்துக் கொள்ளுகின்றேன். மற்றொருவனுக்கு மஹாநுபாவரே தாமேதான் ஏதேனும் வழிசெய்து கொள்ளவேண்டும், என்று சக்கிரவர்த்தி சொல்லலானார்.

28. (க - ரை) இப்படி உலகத்தையெல்லாம் ஆளப் பிறந்திருக்கும் ஓரரசன் கேவலம் பாமரனைப்போலத் தகாத சொற்களையெல்லாம் சொல்லிப் பிதற்றவே அது எரிகின்ற நெருப்பில் நெய்யை யூற்றுவதுபோல அம்மஹரிஷியென்னும் தீயை உயர்ந்து பற்றியெரியச் செய்து தீர்த்தது.

एकविंशः सर्गः ॥ 21 ॥

तच्छ्रुत्वा वचनं तस्य स्नेहपर्याकुलाक्षरम् ।
समन्युः कौशिको वाक्यं प्रत्युवाच महीपतिम् ॥ 1 ॥
पूर्वमर्थं प्रतिश्रुत्य प्रतिज्ञां हातुमिच्छसि ।
राघवाणामयुक्तोऽयं कुलस्यास्य विपर्ययः ॥ 2 ॥
यदीदं ते क्षमं राजन् गमिष्यामि यथागतम् ।
मिथ्याप्रतिज्ञः काकुत्स्थ सुखी भव सबान्धवः ॥ 3 ॥

1. (ப - ரை) **तस्य** - அந்த தசரதனுடைய, **स्नेहपर्याकुलाक्षरम्** - ஸ்நேகத்தினாலே தழதழுத்த எழுத்துக்களையுடையதான, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை **श्रुत्वा** - கேட்டு, **समन्युः** - கோபத்தோடு கூடினவரான, **कौशिकः** - விச்வாமித்திரர், **महीपतिम् प्रति** - அரசனைக் குறித்து, **वाक्यं** - (இந்த) வார்த்தையை, **उवाच** - சொன்னார்.

2. (ப - ரை) **पूर्वं** - முதன் முதலில், **अर्थं** - கோரியதை, **प्रतिश्रुत्य** - கொடுப்பதாக உறுதி கூறி, **प्रतिज्ञां** - அவ் வுறுதியை, **हातुं** - நழுவ விடுவதற்கு, **इच्छसि** - ஆசிக்கின்றீர், **अयं** - இந்த, **विपर्ययः** - விபரீதக்காரிய மானது, **अस्य** - இந்த, **राघवाणां** - ரெகுவம்சத்து அரசர்களுடைய, **कुलस्य** - வம்சத்திற்கு, **अयुक्तः** - யுக்தமானதல்ல.

3. (ப - ரை) **राजन्** - அரசே! **इदं** - இது, **ते** - உமக்கு, **क्षमं यदि** - தக்கதா

1. (க - ரை) இப்படி புத்திர ஸ்நேகத்தினால் அக்ஷரங்கள், மழுங்கி கிடக்கின்ற அரசனுடைய அவ்வார்த்தையைக் கேட்டுக் கோபமடைந்த கௌசிகர் பூபதியைப் பார்த்துக் கூறுகின்றார்.

2. (க - ரை) முதன் முதலில் வேண்டியதை எதுவானாலும் கேட்டுக்கொள்ளுமென்று வலுவிலேயே வற்புருத்தினீர். கிடைக்குமோ கிடைக்காதோவென்று அச்சங்கொண்டு நான் வரங் கேழ்க்கத் தயங்கினேன். தாராளமாய்க் கேளும், எதுவானாலும் தருகிறேன் என்று உறுதி கூறினீர். யானும் மானத்தை விட்டுக் கேட்டுக் கொண்டுமாய் விட்டது. இப்போது அவ்வுறுதியை யுருப்பெறாமலழிக்கப்பார்க்கின்றீர், இந்த அக்கிரமம் இரகு குலத்திற்கு உற்றதோ! இவ்வம்சத்திற்குமொரு விபரீதம் போலும்.

3. (க - ரை) நாம் இராஜாவன்றோ! எது செய்தால்தான் நம்மை யெவராலென்ன செய்ய முடியும், என்றெண்ணுகின்றீரா? எவருக்கும் உம்மை எது செய்யவும் யோக்கியதையில்லை யென்பது உண்மைதான். ஆனால் நீர் செய்வது உமக்கு யோக்கியந்தானா என்பதை சிந்தித்துப் பார்த்தீரா? யோக்கியந்தானென்பீரானால்

तस्य रोषपरीतस्य विश्वामित्रस्य धीमतः ।
चचाल वसुधा कृत्स्ना विवेश च भयं सुरान् ॥ 4 ॥

त्रस्तरूपं तु विज्ञाय जगत्सर्वं महानृषिः ।
नृपतिं सुव्रतो धीरो वसिष्ठो वाक्यमब्रवीत् ॥ 5 ॥

इक्ष्वाकूणां कुले जातः साक्षाद्धर्म इवापरः ।
धृतिमान्सुव्रतः श्रीमान्न धर्मं हातुमर्हसि ॥ 6 ॥

னல், **यथागतम्** - வந்த வழியே, **गमिष्यामि** - போகின்றேன், **काकुत्स्थ** - காகுத்தரே! **मिथ्याप्रतिज्ञः** - பொய்யான பிரதிக்ஞையை யுடையவரான நீர், **सबान्धवः** - பந்துக்கள் ஸஹிதமாக, **सुखी** - ஸுகவானாக, **भव** - இரும்.

4. (ப - ரை) **धीमतः** - தீரனான, **तस्य** - அந்த, **विश्वामित्रस्य** - விச்வாமித்திர மஹரிஷியானவர், **रोषपरीतस्य** - கோபத்தினால் வியாபிக்கப் பட்டவராகவே, **कृत्स्ना** - ஸமஸ்தமான, **वसुधा** - பூமியும், **चचाल** - ஆடிவிட்டது, **सुरान् च** - தேவர்களையும், **भयं** - பீதியானது, **विवेश** - பிரவேசித்தது.

5. (ப - ரை) **सर्वं** - ஸமஸ்தமான, **जगत्** - உலகத்தையும், **त्रस्तरूपं तु** - பயந்து போனதாகவே, **विज्ञाय** - தெரிந்துகொண்டு, **महान्** - பெரிய, **ऋषिः** - தபஸ்வியாயும், **सुव्रतः** - நல்ல விருதங்களை யுடையவராயும், **धीरः** - தீரனாயும் (இருக்கிற), **वसिष्ठः** - வஸிஷ்டரானவர், **नृपतिं** - அரசனைக்குறித்து, **वाक्यं** - இந்த வாக்கியத்தை, **अब्रवीत्** - சொன்னார்.

6. (ப - ரை) **इक्ष्वाकूणां** - இக்ஷ்வாகு குமாரர்களான உத்தம க்ஷத்திரியர்களுடைய, **कुले** - வம்சத்தில், **जातः** - பிறந்தவராய், **साक्षात्** - [illegible]

அதனால் எமக்கொன்றும் கெட்டதில்லை. வந்த வழியே திரும்பிச் செல்லுகின்றோம். பெரிய வம்சத்திற் பிறந்து பொய்ப் பிரதிக்ஞையைச் செய்துவிட்டு, பந்து மித்திராதி ஸஹிதராக ஸுகமாய் வாழ்ந்து கொண்டிரும். என்று கடுஞ் சினத்துடன் கூறிவிட்டு விச்வாமித்திரர் வாய் மூடிக்கொண்டார்.

4. (க - ரை) கலங்காத மனத்திடமான அம்முனிவருக்கு இப்படிக் கோபம் பொங்கிக் கொதித்தெழுந்து குதிக்கவே அவ்வதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் இவ் வவனி மண்டலமே ஆடிவிட்டது. ஐயோ! என்னவோ [illegible]. என்று தேவர்களும் திகலடைந்தார்கள்.

5. (க - ரை) இப்படி உலகம் முற்றும் விச்வாமித்திரன் கோபத்தைக் கண்டு நடுக்கமுற்றுத் தவிக்கவே, மஹாபோதவிரான வஸிஷ்ட மஹரிஷியானவர் தனது சிஷ்யரான சக்கிரவர்த்தியைப் பார்த்து கூறலானார்.

6. (க - ரை) பிரக்யாதிபெற்ற இக்ஷ்வாகு வம்சத்தில் [illegible]

त्रिषु लोकेषु विख्यातो धर्मात्मा इति राघवः ।
स्वधर्मं प्रतिपद्यस्व नाधर्मं वोढुमर्हसि ॥ 7 ॥

* संश्रुत्यैवं करिष्यामीत्यकुर्वाणस्य राघव ।
इष्टापूर्तवधो भूयात्तस्माद्रामं विसर्जय ॥ 8 ॥

கின்ற, **अपरः** - வேறொரு, **धर्मः इव** - தர்மம் போன்றவராய், **धृतिमान्** - தைரிய சாலியாய், **सुव्रतः** - விருதசீலராய், **श्रीमान्** - ஐச்வர்யம் பொருந்தியிருக்கின்றதாங்கள், **धर्मं** - தர்மத்தை, **हातुं** - விட்டுவிடுவதற்கு, **न अर्हसि** - தக்கவர் அல்லீர்கள்.

7. (ப - ரை) **राघवः** - ரெகுவம்சத்தினரான சக்கிரவர்த்தி தசரதன், **धर्मात्मा** - தர்மஸ்வரூபி, **इति** - என்று, **त्रिषु** - மூன்றுகளான, **लोकेषु** - உலகங்களில், **विख्यातः** - பிரக்கியாதி பெற்றிருக்கின்றீர், **स्वधर्मं** - தமக்குரியதான தர்மத்தை **प्रतिपद्यस्व** - ஏற்றுக்கொள்ளும், **अधर्मं** - அதருமத்தை, **वोढुं** - சுமப்பதற்கு, **न अर्हसि** - நீர் அருகரல்ல.

8. (ப - ரை) **एवं** - இப்படியே, **करिष्यामि** - செய்கிறேன், **इति** - என்று **संश्रुत्य** - பிரதிக்ஞை செய்து வைத்து, **अकुर्वाणस्य** - அதன்படி செய்யாதிருக்கின்றவருக்கு, **राघव** - இராகவனே! **इष्टापूर्तवधः** - யாகாதிகள், வாபீ கூப நிர்மாணாதிகளுமான தர்மங்களுக்கு விநாசமானது, **भूयात्** - உண்டாய்விடும், **तस्मात्** - ஆகலால், **रामं** - இராமனை, **विसर्जय** - விட்டுவிடும்.

வெடுத்து வந்ததெனும்படி தோன்றி, தைரியவானும், ஸதாசாரசீலனும், ஸர்வைச்வர்ய ஸம்பன்னராய் விளங்குகின்ற தாமும் தர்மத்தை அகலவிடுவது தகுமோ?

7. (க - ரை) சக்கிரவர்த்தி தசரதன் தம்மரபிற்குத் தக்கபடி தருமமே உருக்கொண்டதெனும்படித் தோன்றியிருக்கின்றார், என்று மூவுலகத்திலும் போற்றப் பெற்றிருக்கின்ற தாமும் தமது தர்மத்தை நழுவவிட்டு இவ்வதர்மத்தைச் சுமக்கலாகுமோ?

8. (க - ரை) ஒரு காரியத்தைச் செய்து வைப்பதாக ஒப்புக்கொண்டு அதன்படி யதனைச் செய்யாமல் மறுத்துவிட்டவருக்கு இராகவா! மஹத்தான தோஷமுண்டாகுமே. இன்றளவரை அவர் செய்து வைத்திருக்கின்ற யாகாதிகளுடைய பலமும், கோயிற் கட்டியது குளம் வெட்டியது முதலான புண்ணியங்களும் எல்லாமொருமிக்க அருநஷ்டிந்தே போய்விடுமென்கின்றார்களே? ஆதலால் இராமனை அவசியம் நீர் அனுப்பியே ஆகவேண்டும்.

---

* இங்கு ஆதலால் இராமனை அவச்யம் நீர் அனுப்பியேயாகவேண்டும், என்று வஸிஷ்டர் சொல்லியதின் தாத்பர்யமென்னவெனில்?

முதன்முதலில் வஸிஷ்டர் தசரதரைப் பார்த்து நீர் கேட்டதைக் கொடுக்கிறேனென்று பிரதிக்ஞை செய்துவிட்டீராதலால் அவர் கேழ்க்கிறபடி இராமனை அவருடன் கூட்டி

कृतास्त्रमकृतास्त्रं वा नैनं शक्ष्यन्ति राक्षसाः ।
गुप्तं कुशिकपुत्रेण ज्वलनेनामृतं यथा ॥ 9 ॥

9. (ப - ரை) **ज्वलनेन** - அக்கினியினால் (இரக்ஷிக்கப்பட்ட), **अमृतं यथा** - அமிருதத்தைப்போல, **कुशिकपुत्रेण** - கௌசிகரால், **गुप्तं** - இரக்ஷிக்கப்படுகின்ற, **एनं** - இந்த இராமனை, **कृतास्त्रं** - சிக்ஷிதமான அஸ்திரங்களை யுடையவனாலும், **अकृतास्त्रं वा** - அஸ்திர சிக்ஷையை யுடையாதவனை யானாலும், **राक्षसाः** - இராக்ஷதர்கள், **न शक्ष्यन्ति** - (நிருவகிக்க) அருகதையில்லாதவராக வேயாவார்.

9. (க - ரை) பிரபுவே! அக்கினி சக்கிரமானது அமுதத்தைக் காத்ததுபோல இவ்விராமாமிருதத்தை, குசிகுமாரர் காத்துப்போற்று நிற்க, இனி இவ்விராமனைப் பற்றி அஸ்திரசிக்ஷை பெற்றவனென்றும், அது பெறாதவனென்றும் வீண் விசாரிப்பதெதற்கு? எவ்வரக்கர்களும் இவனை யெதிர்த்து நிற்க இனித்தாளாரகள் தானும்.

யனுப்புமென்றார். அரசன் புத்திரவாஞ்சையினால் மனங்கலங்கி அவர் சொல்லிற்கு இணங்காமலிருந்தார். அதன்மேல் அம்முனிவர் ஒருவரும் சொன்ன சொல்லைத் தவறவிட்டால் அந்தவறால் அதுவரை செய்துவைத்த யாக, தான, ஹோம, ஆலய நிர்மாண வாபீகூப தடாக பரிஷ்காராதிகளினால் உண்டாகிய புண்ணியமெல்லாம் பயனற்றதாய் விடுமென்று தசரதருக்கு பயங்காட்டினார். அதிலும் மசரசையவில்லை. போகட்டும் ஸ்வர்க்காதி லோகங்களும் எனக்கு ஒன்றுமே வேண்டாம் வேண்டுமானால் மறுபிறவியில் அதற்குவேறு தேடிக்கொள்ளுகிறேனென்று அலக்ஷியமாய்த் தள்ளிவிட்டார். வசிஷ்டர் இனி என்ன செய்வார்? ஐயோ! சே உலகத்தில் பற்பல புண்ணியங்களைப் பண்ணியவர்களுக்கு அவ்வவ் புண்ணியங்களுக்குத் தக்கபடி அநேகவிதமான பயன்களுமுண்டு. உமக்கோவென்னில் நீர் செய்த யாகதானாதிகளான ஸமஸ்த புண்ணியங்களுக்கும் இராமச்சந்திர னொருவனேயன்றோ ஒன்றான மஹாபலமாகத் தோன்றியிருக்கின்றான். இனி நீர் பிரதிக்ஞை செய்துவிட்டப் படி யிதை கூடுமோ? இப்படி அபாயம் நிச்சயமாயுள்ள நிலைவிட இராமனை இவரோடு கூட்டியனுப்பிவிடுவது மிக்க மேலான தன்றோ? ஆதலால் அனுப்பிவிடும், என்று சக்கிரவர்த்திக்கு போதனை செய்து வைத்தார். இதனாலவர் அதிகமாய்ப் பயந்து அல்லற்படுவதைப் பார்த்து ஐயோ! இப்படிச் சொல்லியும் பயமுண்டாகியதே யன்றி பயனொன்றும் பெறவில்லையே? இனி என்ன செய்யலாம். இராமனுடைய பிரபாவத்தை யறியாததனாலன்றோ இப்படிப் பயப்படுகின்றார்? அதைத்தான் எடுத்து விவரிக்கட்டுமா? அது நமது பிரபுவான இராமசந்திரன் திருவுளத்திற்கு ஒற்றதாயிராதே? அவன் தன்னை முட்டமுடிய மனிதனென்றல்லவோ நாட்டிய மாட நினைத்திருக்கின்றான். அப்படியிருக்க அவன் தகப்பனிடத்திலேயே அவன் வேஷத்தைக் காட்டி விடுவதென்றால் தாஸனுக்கு அது தகுமோ? அவனுடைய பிரபாவ விசேஷத்தை யுணர்ந்தாலொழிய அரசன் குமாரனைக் கூட்டியனுப்ப மாட்டான். அனுப்பினாலின்றி இக்காடக விசுவாமித்திரன் சும்மாத் திரும்பமாட்டான். இதற்கென்ன செய்வேன்? நல்லது இப்படிச் செய்கிறேன். விசுவாமித்திரனைக் கொண்டாடுகிற பாவனையாக இராமனுடைய பிரபாவத்தை சற்று விளக்குகின்றேன். அந்த ஸ்வல்பக்ஞானமே அரசனுக்கு இராமனை யனுப்பிவைக்கத் துணிவைக் கொடுத்துவிடும், என்று தீர்மானித்துக்கொண்டு வசிஷ்ட பகவான் மேலுள்ள சில சுலோகங்களால் இராகவன் திறத்திலேயே திறம்பெறப் பொருந்துகின்றவைகளான சிற்சில தெய்வத்தன்மைகளை ஸூசிப்பப்பதை புத்திமான்கள் பார்த்துக் கொள்ளவும்.

एष विग्रहवान्धर्म एष वीर्यवतां वरः ।
एष बुध्याधिको लोके तपसश्च परायणम् ॥ 10 ॥

एषोऽस्त्रान्विविधान्वेत्ति त्रैलोक्ये सचराचरे ।
नैनमन्यः पुमान्वेत्ति न च वेत्स्यन्ति केचन ॥ 11 ॥

न देवा नर्षयः केचिन्नासुरा न च राक्षसाः ।
गन्धर्वयक्षप्रवराः सकिन्नरमहोरगाः ॥ 12 ॥

10. (ப - ரை) **एषः** - இவர், **विग्रहवान्** - சரீரத்தையுடையதான, **धर्मः** - தர்மமே, **एषः** - இவர், **वीर्यवतां** - வீரிய முள்ளவர்களுக்குள், **वरः** - சிரேஷ்டர், **एषः** - இவர், **लोके** - உலகத்தில், **बुद्ध्या** - மேதையினால், **अधिकः** - அதிகப்பட்டவர், **तपसश्च** - தவத்திற்கும், **परायणम्** - உயர்ந்தஸ்தானம்.

11. (ப - ரை) **एषः** - இவர், **विविधान्** - நானாவிதங்களான, **अस्त्रान्** - அஸ்திரங்களை, **वेत्ति** - அறிகின்றார், **सचराचरे** - ஜங்கமம் ஸ்தாவரங்களோடுகூடின, **त्रैलोक्ये** - மூவுலகத்திலும், **अन्यः** - வேறொரு, **पुमान्** - புருஷன், **एनं** - இந்த அஸ்திர ஸமூகத்தை அல்லது இந்தப் பெயர்வழியை, **न वेत्ति** - அறிகின்றாரில்லை, **केचन** - ஒருவரும், **न च वेत्स्यन्ति** - இனி யறியப் போகிறதுமில்லை.

12. (ப - ரை) **देवाः** - தேவர்களும், **न** - அறிந்தாரில்லை, **केचित्** - யாதாமொரு, **ऋषयः** - ரிஷிகளும், **न** - அறியவில்லை, **असुराः** - அஸுரர்களும், **न** - அறிந்

---

10. (க - ரை) இவர் தர்மத்தின் வடிவே போன்றவர். இவ்வடிவம் தர்மத்தினாலேயே ஆகியதுமென்க. இவர் வீரர்களுக்குள் வரிஷ்டர். வீரம் பெற்றிருப்பவர்களுக்கு அவ்வீரத்தைக் கொடுக்கின்றவரு மென்க. இவர் உலகத்தில் புத்தியினால் பெருமை வாந்தவர். இவர் அறிவிற்கு பிரபஞ்சத்தின் கண்ணுள்ள பொருட்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் பற்றுமெனத்தகும் மிகப்பெரிய ஸர்வக்ஞருமென்க, இவர், தவத்திற்கு உற்ற உறைவிடமாவார். தவத்தின் உத்தேசத்திற்கு முடிவிடமுமென்க.

11. (க - ரை) இவர் அநேகவிதமான அஸ்திரங்களையு மறிவார். இவருக்குப் பரிசரணை செய்யுமவர்களான திவ்யாயுதங்கள் பலவுளவென்பது இவருக்கேயன்றோ தெரியும். சராசரரூபமான இப்பிரபஞ்சத்தில் இவர் அறிந்த வளவு அஸ்திரத்தைத் தெரிந்துகொண்டவரொருவருமில்லை. இவரைத் தானுகட்டும் நன்கறிந்தவர் ஒருவருமேயில்லை யென்க. இன்றைக்குத்தான் அறிந்தவரில்லையோ என்றைக்கேனும் எங்கேனும் ஒருவருண்டாவரோ ஒருபோதுமில்லை.

12. (க - ரை) தேவர்களோ, அஸுரர்களோ, மஹரிஷிகளோ, கந்தர்வ யக்ஷ ராக்ஷஸாதிகளோ எவரும் இவரறிந்த அஸ்திரங்களையோ, அத்தகைய

सर्वास्त्राणि भृशाश्वस्य पुत्राः परमधार्मिकाः ।
कौशिकाय पुरा दत्ता यदा राज्यं प्रशासति ॥ 13 ॥

तेऽपि पुत्रा भृशाश्वस्य प्रजापतिसुतासुताः ।
नैकरूपा महावीर्या दीप्तिमन्तो जयावहाः ॥ 14 ॥

जया च सुप्रभा चैव दक्षकन्ये सुमध्यमे ।
ते सुवातेऽस्त्रशस्त्राणि शतं परमभास्वरम् ॥ 15 ॥

தாரில்லை, **राक्षसाः** - இராக்ஷஸர்களும், **सकिन्नरमहोरगाः** - கின்னரர், மஹோரகங்களோடு கூடிய, **गन्धर्वयक्षप्रवराः** - கந்தருவர், யக்ஷர் இவர்களுள் சிறந்தவர்களும், **न** - அறிந்தனரில்லை.

13. (ப - ரை) **परमधार्मिकाः** - அத்யந்தம் தார்மிஷ்டர்களான, **भृशाश्वस्य** - ப்ருசாச்வர் என்கிற பிரஜாபதியினுடைய, **पुत्राः** - புத்திர ஸ்வரூபங்களான, **सर्वास्त्राणि** - எல்லா அஸ்திரங்களும், **कौशिकाय** - இந்த விச்வாமித்திரின் பொருட்டு, **पुरा** - முன்னொருகால், **दत्ताः** - கொடுக்கப்பட்டன, **यदा** - அப்பொழுது, **राज्यं** - இராஜ்யத்தை, **प्रशासति** - ஆளுகின்றாரோ.

14. (ப - ரை) **भृशाश्वस्य** - பிருசாச்வருடைய, **पुत्राः** - பிள்ளைகளான, **तेऽपि** - அவர்களும், **प्रजापति सुतासुताः** - தக்ஷப்பிரஜாபதியின் பெண்களுடைய பிள்ளைகளாவார், **नैकरूपाः** - அநேகரூபர்கள், **महावीर्याः** - மஹத்தான வீர்யமுள்ளவர்கள் **दीप्तिमन्तः** - காந்தியுள்ளவர்கள், **जयावहाः** - விஜயத்தை அளிப்பவர்கள்.

15. (ப - ரை) **जयाच** - ஜயை என்பவளும், **सुप्रभाचैव** - ஸுப்ரபை என்பவளும், **सुमध्यमे** - அழகிய இடை யுள்ளவர்களான, **दक्षकन्ये** - தக்ஷனுடைய குமாரிகள், **ते** - அவர்கள், **अस्त्रशस्त्राणि** - அஸ்திர சஸ்திரங்களை, **परम भास्वरम्** - அத்யந்த ப்ரகாசமான, **शतं** - நூறு நூறாக அதாவது நூற்றுக்கணக்காக, **सुवाते** - பெற்றார்கள்.

அஸ்திரங்களைப் பெற்று விளங்கும் இவரையேதானே அறிந்தவர்களில்லை. இனி அறிந்து கொள்ளப் போவதுமில்லை.

13. (க - ரை) லோகோத்தாரண தர்மத்துக்கானவைகளான, பிருசாச்வர் என்கிற பிரஜாபதியினால் நிர்மிக்கப்பட்டவைகளான திவ்யாஸ்திரங்கள் அனைத்தையும் இவ்விச்வாமித்திரர் அரசுபுரியும்போது இவரிடத்தில் ஸமர்ப்பித்தார்கள்.

14-17. (க - ரை) இப்படி ஸமர்ப்பிக்கப்பட்ட இவ் வஸ்திரங்களுக்கு தக்ஷப்பிரஜாபதி யினுடைய புதல்விகளான, ஜயை, ஸுப்ரபை என்கிற இருவர்களே தாய்மார்கள். அவர்களுள் ஜயை என்பவர் ஐந்நூறு குமாரர்களையும், ஸுப்

पञ्चाशतं सुताँल्लेभे जया नाम परान्पुरा ।
वधायासुरसैन्यानाममेयान्कामरूपिणः ॥ 16 ॥
सुप्रभाऽजनयच्चापि पुत्रान्पञ्चाशतं पुनः ।
संहारान्नाम दुर्धर्षान्दुराक्रामान्बलीयसः ॥ 17 ॥
तानि चास्त्राणि वेत्त्येष यथावत्कुशिकात्मजः ।
अपूर्वाणां च जनने शक्तो भूयः च धर्मवित् ॥ 18 ॥
तेनास्य मुनिमुख्यस्य सर्वज्ञस्य महात्मनः ।
न किंचिदप्यविदितं भूतं भव्यं च राघव ॥ 19 ॥

16. (ப - ரை) **जया नाम** - ஜயை என்பவர், **पुरा** - முன்னே, **असुरसैन्यानां** - அஸுரச் சேனைகளுடைய, **वधाय** - வதத்திற்காக, **अमेयान्** - அப்பிரமேயர்களாயும், **कामरूपिणः** - காமரூபிகளாயும், **परान्** - உயர்ந்தவர்களுமான, **पञ्चाशतं** - ஐந்நூற்றுவர்களான, **सुतान्** - புத்திரர்களை, **लेभे** - அடைந்தார்.

17. (ப - ரை) **सुप्रभा चापि** - ஸுப்ரபையும், **दुर्धर्षान्** - அவமதிக்கக் கூடாதவர்களும், **दुराक्रमान्** - ஆக்கிரமிக்கக் கூடாதவர்களும், **बलीयसः** - பலவான்களுமான, **संहारान्नाम** - ஸம்ஹாரங்கள், என்று பெயருள்ளவர்களான, **पञ्चाशतं पुनः** - ஐநூறேயான, **पुत्रान्** - புத்திரர்களை, **अजनयत्** - உண்டாக்கினர்.

18. (ப - ரை) **एषः** - இந்த, **कुशिकात्मजः** - குசிகஸுதர், **तानि** - அந்த, **अस्त्राणि च** - அஸ்திரங்களையும், **यथावत्** - உள்ளபடியே, **वेत्ति** - தெரிந்துகொண்டிருக்கின்றார், **धर्मवित्** - தருமக்ஞரான இவர், **भूयः च** - அதற்கு மேலும், **अपूर्वाणां च** நூதனங்களுடையவும், **जनने** - உத்பாதனத்தில், அதாவது உண்டாக்குவதில், **शक्तः** - சக்தியுள்ளவராக விருக்கின்றார்.

19. (ப - ரை) **तेन** - ஆகையினால், **मुनिमुख्यस्य** - முனிகளுக்குள் அல்லது முனிகளுக்கு, சிரேஷ்டராயும் **सर्वज्ञस्य** - ஸர்வக்ஞரும், **महात्मनः** - மஹாத்

ரமை என்பவர் ஐநூறு குமாரர்களையும் ஆக ஆயிரம் அஸ்திர தேவதைகளை ஸ்ருஷ்டித்தார்கள். அவ் வஸ்திர தேவதைகள் ஒவ்வொருவரும் அஸுர ஸைனியங்களை அழித்துவிடக் கூடிய பல பராக்கிரமங்களை பூர்ணமாய்ப் பெற்று விளங்குகின்றனர்.

18. (க - ரை) அவ் வஸ்திரங்களை யெல்லாம் இவ் விச்வாமித்திரர் நன்கறிவார். அவைகள் நீங்கப் புதிது புதிதாகப் பற்பல அஸ்திரங்களையும் நிருமிப்பதற்கும் இவருக்கு யோக்கிதை யுண்டு.

19. (க - ரை) இராகவா! முனிவருக்கும் அவர் தம் உத்தேசத்திற்கும் முக்கியராய் விளங்குகின்ற ஸர்வக்ஞரான இந்த மஹாத்மாவுக்கு அறியப்

एवंवीर्यो महातेजा विश्वामित्रो महायशाः ।
न रामगमने राजन्संशयं गन्तुमर्हसि ॥ 20 ॥

तेषां निग्रहणे शक्तः स्वयं च कुशिकात्मजः ।
तव पुत्रहितार्थाय त्वामुपेत्याभियाचते ॥ 21 ॥

மாவுமா யிருக்கின்ற, **अस्य** - இவருக்கு, **अविदितं** - அறியப்படாதது, **भूतं** - சென்றதும், **भव्यं च** - வரப்போவதும், **किंचित् अपि** - ஒன்று கூட, **राघव** - இராகவனே! **न** - கிடையாது.

20. (ப - ரை) **महातेजाः** - மஹத்தான தேஜஸ்ஸையுடையவர், **एवं वीर्यः** - இப்படிப்பட்ட வீரியத்தை யுடையவர், **विश्वामित्रः** - விச்வாமித்திரர், **महायशाः** - மஹத்தான யசஸ்ஸையுடையவர், **राजन्** - அரசனே! **रामगमने** - இராமனுடைய பிரயாண விஷயத்தில், **संशयं** - ஸந்தேகத்தை, **कर्तुं** - செய்வதற்கு, **न अर्हसि** - நீர் அருகரல்ல.

21. (ப - ரை) **कुशिकात्मजः** - கௌசிகர், **स्वयं च** - தாமே, **तेषां** - அவ் விராக்ஷதர்களுடைய, **निग्रहणे** - நிக்கிரகத்தில், **शक्तः** - சக்தியுள்ளவராய், **तव** - உம்முடைய, **पुत्रहितार्थाय** - புத்திரனுடைய அநுகூலத்திற்காக, **त्वां** - உம்மை, **उपेत्य** - தேடி வந்து, **अभियाचते** - வேண்டிக் கொள்ளுகின்றார்.

படாமல் மறைவா யிருப்பது சென்றதிலோ, இன்றைக்கோ அல்லது நாளைக்கோ முக் காலத்திலும் ஒன்றுமே யில்லை.

20. (க - ரை) மஹாராஜனே! இம் மஹத்தான தேஜஸ்ஸானது அவர்க் தற்தறிய வீரியம் நிறைந்தது. விசுவாமித்திரர் மஹத்தான கீர்த்தி வாய்ந்தவர். இனி இராமனுடைய யாத்திரையைப் பற்றி ஐயனே! நீர் ஐயங் கொள்ளுவது அனுரூப மாகுமோ? ஆகாது! ஆகாது!

21. (க - ரை) பிரபுவே! இவ் விச்வாமித்திர மஹரிஷி, தாமும் அவ் அரக் கர்களை அழிப்பதற்கு ஆற்ற லுள்ளவர்தான். ஆனாலும் உமது குமாரரின் மங்கள லாபத்தைக் கோறி உம்மைத் தேடி வந்து அடைந்து தாழ்ந்து கேட்டுக் கொள்ளு கின்றார். ஆதலின் இராகவனுடைய மங்கள யாத்திரையைப் பற்றிச் சற்றும் மனம் கலங்கவே வேண்டாம். தெளிந்த மனத்தினராய் தாராளமாய் அனுப்பி வையும் என்று ஆசிரியரான வஸிஷ்டர் தசரத ராஜனுக்கு உண்மையை உபதேசித்தரு ளினார்.

* इति मुनिवचनात्प्रसन्नचित्तो रघुवृषभस्तु मुमोद भास्वराङ्गः ।
गमनमभिरुरोच राघवस्य प्रथितयशाः कुशिकात्मजाय बुद्ध्या ॥ 22 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
एकविंशः सर्गः ॥ 21 ॥

22. (ப-ரை) **इति** - இந்தப் பிரகாரமான, **मुनिवचनात्** - மஹரிஷியின் பாஷிதத்தினால், **प्रसन्नचित्तः** - தெளிவுபெற்ற சித்தத்தையுடையவரான, **रघुवृषभस्तु** - ரகுசிரேஷ்டரோவெனில், **भास्वराङ्गः** - ஒளி மிகுந்த முகாதி அங்கங்களை யுடையவராக, **मुमोद** - ஆனந்தித்தார், **प्रथितयशाः** - பிரஸித்தமான கீர்த்தியையுடையவரான அவ்வரசன், **बुद्ध्या** - மனமார, **कुशिकात्मजाय** - விசுவாமித்திரருக்காக, **राघवस्य** - இராமபத்திரனுடைய, **गमनं** - யாத்திரையை, **अभिरुरोच** - அத்தியந்தம் ஆசிக்கலானார்.

22. (க-ரை) இப்படி தமதாசாரியரான வஸிஷ்டமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளின நல்லுபதேசத்தால் மனந் தெளிந்த மஹாராஜர், அவ் வுண்மை யுணர்வினால் மனம் பூரித்து முகம் மலர்ந்து ஆனந்த பரவசராகி, விசுவாமித்திரர் இராமசந்திரனை இட்டுச் செல்லுவதற்கு மனப் பூர்வமாய் விருப்ப முற்றார்.

* இந்த சுலோகத்தினால் இதுவரையில் சக்கிரவர்த்திக்கு வஸிஷ்ட மஹரிஷி சொல்லிய ஸமாதான வசனங்களில் அடங்கி யிருக்கின்றதான இராகவன் ஸ்ரீய: பதியான புருஷோத்தமனே யன்றி வேறொரு ஸாமான்ய னல்ல. அவனை அப் பூமகளோடு பொருத்தி வைத்து இப் பூமண்டலத்தைச் செழிப்பிக்கவேண்டு மென்கிற நன்னோக்கங் கொண்டே தான் இத் தவசியும் உமதண்டை யோடிவந்து உம்மை யாசித்து வேண்டுகின்றார். தடைப்படுத்தாமல் உடனே கொடுத்து மேலுள்ள மங்களங்களுக்கு ஆயத்தமாயிரும், என்கிற அபூர்வமான அரிய பொருளொன்றும், அது கேட்ட சக்கிரவர்த்தியின் மனதிற்குண்டான மகிழ்ச்சியும் அதனாலவர் கூசாமல் கௌசிகரிடத்தில் ஸ்ரீ ராமபத்திரனை ஸமர்ப்பித்துப் போர்ந்த பெருமையும் நன்றாக வியஞ்சிக்கப்படுகின்றது. **मुनि** மனன சீலரான ஒரு முனி சொன்னார். **वचनात्** அது வேதாதிகளைப் போல உயர்தரப் பிரமாணமாகிய தொன்று. அது பரதத்துவத்தைப் பிரகாசப்படுத்துவதாயு மிருந்தது. **प्रसन्नचित्तः** அது சித்தத்திற்குத் தெளிவை யுண்டாக்கிற்று. அது அங்குள்ள ரஜோகுணத்தைத் கழித்தது. தமோகுணத்தை யொழித்தது. அற்பமான சாபலம் விலகிற்று. அனர்த்தமான பயமும் போயிற்று. மோஹந் தீர்ந்தது. சோகமு மொழிந்தது. **रघुवृषभः** கிழவரொரு காளைபோலானார். **भास्वराङ्गः** அவருடைய அங்கங்களெல்லாம் புதியதானவொரு பேரொளிகொண்டது. **तु** இந்த விகாஸத்தை அரசனிடத்தில் இதுவரையில் எவருங் கண்டிரார்கள். இது ஸத்தியகாமன் உபகோஸலன் முதலானவர்களுக்கு உண்டாகியதுபோன்ற பரதத்துவத்தைப் பற்றிய உண்மை யுணர்வினு

லேற்பட்டதான நூதன விகாஸம். **मुमोद** பரதந்த்ரவத்தின் உபலப்தியினாலுண்டாகின்ற பரமானந்தத்தை யனுபவித்தார். **अभिरोच** இராகவனை விசுவாமித்திரருடன் கூடப் புறப்பட்டுச் செல்லுவதையே மிகவும் விரும்பலானார். **बुद्ध्या** புத்திபூர்வமாகவே மஹரிஷியோடு சென்று இராகவன் மங்களத்தோடு திரும்பி வரவேண்டுமென்கிற கோரிக்கை அவருக்கு உண்டாயிற்று. **कुशिकात्मजाय** கௌசிகர் பத்து தினங்களுக்கு மாத்திரம் இராகவனை இரவலாகவேதான் கேட்டிருந்தார் என்றாலும் தசரதர் இப்போது அப்படி இரவலாகக் கொடுக்கவில்லை. அவரிஷ்டப்படி எத்தனை காலம் வைத்திருக்கவும் எதைச் செய்து கொள்ளவும் அல்லது எதைச் செய்து வைக்கவும் பூர்ணமான பாத்தியமிருக்கும்படி அவருக்கே கொடுத்து விட்டாராம். இந்த விசேஷம் **ददौ कुशिकपुत्राय सुप्रीतेनान्तरात्मना** (ஸர்க்கம் 22. சுலோகம் 3.) என்பதினால் விளக்கப்பட்டிருக்கிறது. முன் விசுவாமித்திரர் **दशरात्रंहि यज्ञस्यरामंमेदातु मर्हसि** யக்ஞத்தின் ரக்ஷணத்திற்காக இராமனைப் பத்து தினங்களுக்கு மட்டும் இரவலாகக் கொடும் அவனை இப்போதை விட இன்னும் அதிக நலமுள்ளவனாக உங்களிடம் கொணர்ந்து தந்து விடுகின்றேனென்றுதான் கேட்டுக்கொண்டார். இப்போது சக்கிரவர்த்தியோவெனில் மனமுவந்து விசுவாமித்திரருக்கு இராமனைச் சொந்தமாக நடத்திக் கொள்ளும்படிக்கே பூர்ணபாத்தியதையுடன் ஸமர்ப்பித்துவிட்டார்.

இவ்வர்த்த [illegible] பாசுரங்களிரண்டினால் விவரித்திருக்கின்றார்.

குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென,
வருக வென்றனர் என்றலோடும் வந்
தருகு சார்ந்தனன் அறிவினும்பரான்.

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்
றந்தை நீ தனித்தாயும் நீ யிவற்
கெந்தை தந்தனன் இயைந்த செய்யென்றான்

"गुरु" गु शब्दस्त्वन्धकारस्यात् रु शब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्यभिधीयते ॥

கு, என்பதற்கு அந்தகாரம் அதாவது பகவத் ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பேரிருள் என்று பொருள். ரு, என்றால் அவ்விருளை அறவே ஒழித்து விடுகின்றவர். ஆகவே அக்ஞானத்தைப் போக்கி பகவத் விஷயமான மெய்ஞ்ஞானத்தை உணர்த்துவதால் ஆசிரியரை குரு வென்று வழங்குகின்றோம். இப்போது தசரதருக்கும் இராமனுக்கும் இடையிலிருந்த அவர் தம் அக்ஞான விருளை யகற்றி இராமனைப் பற்றிய உண்மையை விளங்க வைத்தமையால் வஸிஷ்டமா முனிவர் குரு வெனப் படுகிறார்.

வாசகம், ஈதொரு வேதம் போன்ற பிரமாணமாய் நின்று வேந்தனுடைய மயக்கத்தைத் தீர்த்தது. இதனால் அவர் இராமனைப் பற்றிய உண்மையை யுணர்ந்து கொண்டு விட்டார். இராமனை யனுப்பி விடுகிற தென்கிற திட நிச்சயத்தோடு அவனை யழைத்துவரும்படி ஆக்

ஞாபிக்கிறார். ஆனால் என் குழந்தை இராகவனை யிட்டு வாருங்களென்னாமல் திருவின் கேள்வனை, அந்த மஹா லக்ஷ்மியின் மணாளனை யென்கின்றார். இது அவருக்கு ஆசார்யோபதேசத்தினால் அப்போது உதயமான மெய்யுணர்வாம். இப்படியாகில் எழுந்தருளப் பண்ணுங்க ளென்று மரியாதையாய்க் கூறாமல் கொணர்மின், என்று குறைவாகப் பேசியிருப்பது பொருந்துமோ வெனில், அது மரியாதைக் குறைவாகச் சொல்லிய ஒரு இழி சொல்லல்ல. சாதுர்யமாய்ப் பேசியதொரு சாடுக்தியேதான். மாறு வேஷங்கொண்டு மறைவாகத் திரிகின்றவனைக் கானத்தினிடையே யுள்ள புதரில் மறைந்து கிடந்தாலும் மன்றத்திற்கு இழுத்துக் கொணர்ந்து நிறுத்தி விசாரிக்கவேண்டிய அதிகாரமுள்ள எனது அகத்திற்குள்ளேயே பன்னிரண்டு வருஷங்களாக ஒரு கள்வன் மாறுவேஷத்தோடு எனது மார்பிலுந் தோளிலுமாக வளர்ந்து கொண்டு என்னை ஏமாற்றுகின்றானா? நல்லது. பல நாள் திருடன் ஒரு நாளகப்பட்டான். அவனைப் பிடித்துக்கொண்டு வாருங்க ளென்று அரசன் சாதுர்யமாகப் பணித்தத் தனையே. ஆனதினாற்றான், குருவின் வாசகங் கொண்டு மாணவன் என்காமல் கொற்றவ னென்றது அவருக்குள்ள அதிகாரத்தைக் காண்பித்துக் கூறியபடி.

இரண்டாம் பாசுரத்திலும் தம்பி தன்னோடு வந்த அண்ணனை யென்காமல் வந்த நம்பியை யென்றார். நம்பி, எனும் பதம் ஸ்வாமி வாசகமன்றோ? முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, மஹரிஷியே! ஷாட்குண்ய பரிபூர்ணனான ஒரு மஹா புருஷனுள னென்பதை நீர் ஏட்டில்தானே பார்த்திருப்பீர்? வீட்டிலும் பார்க்க விருப்புறீரானால் இதோ நன்றாய்ப் பார்த்துக்கொள்ளும். அச் சுவடிகளிற் சொல்லி யிருப்பதை விடத் தொல்லாயிரம் பங்கு அதிகமான மங்கள குணங்கள் இங்கு அளவிட முடியாமல் ஏராளமாய்க் குவிந்து கிடக்கின்றதைப் பார்த்துக் கொள்ளும், என்று தசரதர் விசுவாமித்திரருக்குச் சொல்லி வைப்பதற்குக் கூட ஸமர்த்தராய் விட்டதை கவி விளக்கி யிருக்கின்றார்.

ஆதலா லிங்கு வஸிஷ்ட பகவான் ஸ்ரீராம தத்துவத்தை தசரதருக்கு தாத்காலிகமாகவாவது உபதேசித்தா ரென்பது உண்மையே. ஆனால் அவ்வுபதேசம் பிடித்து நிலை பெறாவிட்டாலும் இராமனை விசுவாமித்திரரோடு கூட்டி யனுப்புவதற்கான துணிவை யுண்டாக்கிய அளவிற்கேனும் உதவலாயிற்று. என்கிற பொருள் தோன்றுவதை புத்திமான்கள் பார்த்துக் கொள்ளவும்.

द्वाविंशः सर्गः ॥ 22 ॥

* तथा वसिष्ठे ब्रुवति राजा दशरथः सुतम् ।
प्रहृष्टवदनो राममाजुहाव सलक्ष्मणम् ॥ 1 ॥

* कृतस्वस्त्ययनं मात्रा पित्रा दशरथेन च ।
पुरोधसा वसिष्ठेन मङ्गलैरभिमन्त्रितम् ॥ 2 ॥

* स पुत्रं मूर्ध्न्युपाघ्राय राजा दशरथः प्रियम् ।
ददौ कुशिकपुत्राय सुप्रीतेनान्तरात्मना ॥ 3 ॥

1. (ப - ரை) **वसिष्ठे** - வஸிஷ்ட மஹர்ஷியானவர், **तथा** - அப்படி, **ब्रुवति** - சொல்லுமளவில், **राजा** - இராஜாவான, **दशरथः** - தசரதர். **प्रहृष्टवदनः** - அத்யந்தம் ஸந்துஷ்டமான முகத்தையுடையவராக, **सुतम्** - புத்திரனை, **रामं** - இராமனை, **सलक्ष्मणम्** - இலக்ஷ்மணனோடு கூடினவனாக, **आजुहाव** - அழைத்தார்.

2-3. (ப - ரை) **मात्रा** - தாயாரினாலும், **पित्रा** - தகப்பனாரான, **दशरथेन च** - தசரதரினாலும், **कृतस्वस्त्ययनं** - செய்யப்பட்டிருக்கிற மங்களானுஷ்டானங்களையுடையவனும், **पुरोधसा** - ஆசாரியரான, **वसिष्ठेन** - வஸிஷ்டரினால், **मङ्गलैः** மங்களமான மந்த்ரங்களினாலே, **अभिमन्त्रितम्** - மந்திரிக்கப்பெற்றவனாயிருக்கிற, **प्रियम्** - பிரியனை. **पुत्रं** -

1. (க - ரை) இப்படி ஆசாரிய வஸிஷ்டருடைய உபதேசத்தினால் உண்மையையுணர்ந்த சக்கிரவர்த்தி அவ்வுணர்வுக்கு அறிகுறியான முகமலர்ச்சியோடு இலக்ஷ்மணனுள்பட இராமனை அங்கு அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார்.

2-3. (க - ரை) பிறகு, அந்த தசரத மஹாராஜரானவர், மாதாவான கௌஸல்யா தேவியாரால் மங்களாசரணங்கள் செய்து அனுப்பப்பட்ட, தனது பிரிய புத்திரனுக்கு தாமும் சில மங்களங்களைச் செய்தமைந்து, அதன்மேலும்

* இந்த ஸர்க்கத்தில் (1) (2) (3) வது சுலோகங்களில் வஸிஷ்ட மஹர்ஷியினுடைய உபதேசத்தினால் தெளிவு பெற்ற தசரத மஹாராஜருடைய அறிவொளி வர்ணிக்கப் படுகிறது. இது முந்திய ஸர்க்கத்தின் கடைசி சுலோகத்திற் குறிப்பிட்ட விஷயங்களையே அநுஸரித்துச் சொல்லுவதாகும். தான் பெற்ற புத்திரனைப் பற்றி அறிவிற் சிறந்தவரான ஆசிரியர் அவ்வாறு (அவன் ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனென்று) உபதேசித்தருளினார். மனமாற அவர் செய்தருளிய உபதேசம் மன்னன் மனத்திலும் பசுமரத்தாணி போல ஸுலபமாய் ஏறிற்று. உடனே அவர் பிரும்ஹவித்துக்களுக்குள்ள முகமலர்ச்சியையும் பெற்றார். இப்புதிய தோற்றத்தோடு இராகவனைக் காண வேண்டுமென்று அப்போதவருக்கு விருப்பமுண்டாயிற்று. இலக்ஷ்மணனுள்பட அவனை யழைத்து வரும்படி மன்னன் அதிகாரத்தோரணையில் சாதுரியமாய் ஆக்ஞாபித்தார். அந்தப்புரஞ் சென்றவர் அதை யங்கு தெரிவித்தார்கள். (அல்லது அரசனே எழுந்து சென்று இராமனை யழைத்து அக் காரியத்தைத் தெரி

ततो वायुः सुखस्पर्शो नीरजस्को ववौ तदा ।
विश्वामित्रगतं दृष्ट्वा रामं राजीवलोचनम् ॥ 4 ॥
पुष्पवृष्टिर्महत्यासीद्देवदुन्दुभिनिःस्वनैः ।
शङ्खदुन्दुभिनिर्घोषः प्रयाते तु महात्मनि ॥ 5 ॥

புத்திரனை, **सः** - அந்த, **राजा** - இராஜாவான, **दशरथः** - தசரதர், **मूर्ध्नि** - உச்சியில், **उपाघ्राय** - முகர்ந்து, **सुप्रीतेन** - மிக்க ஸந்துஷ்டமான, **अन्तरात्मना** - அந்தராத்மாவோடு, **कुशिकपुत्राय** - கௌசிகரின் பொருட்டு, **ददौ** - கொடுத்தார்.

4. (ப - ரை) **ततः** - பிறகு, **राजीवलोचनम्** - அரவிந்தத்தைப் போன்ற நேத்திரத்தை யுடையவனை, **रामं** - இராமனை, **विश्वामित्रगतं** - விசுவாமித்திரரைச் சார்ந்து நின்று விட்டதை, **दृष्ट्वा** - பார்த்து, **तदा** - அப்போது, **वायुः** - காற்றானது, **सुखस्पर्शः** - மிருதுவான ஸ்பரிசமுள்ளதாகவும், **नीरजस्कः** - தூளியில்லாததாகவும், **ववौ** - வீசிற்று.

5. (ப - ரை) **महात्मनि** - மஹாத்மாவான ஸ்ரீராமசந்திரன், **प्रयाते तु** - பிரயாணமான வளவில், **महत्** - பெரிதான, **पुष्पवृष्टिः** - புஷ்ப வர்ஷமானது, **आसीत्** - உண்டாயிற்று, **देवदुन्दुभि निःस्वनैः** - தேவர்களுடைய துந்துபி வாத்தியத்தின் முழக்கங்களோடு, **शङ्खदुन्दुभिनिर्घोषः** - சங்கு, பேரி இவற்றின் த்வனியானது, **(आसीत्)** - உண்டாயிற்று.

ஆசாரிய வஸிஷ்டர் மங்கள ஸூக்தங்களைச் சொல்லி மந்திரித்து ரக்ஷை கட்டி வைக்க அக்குமாரனை உச்சி முகர்ந்து கையிற் பிடித்துக்கொண்டு உள்ளம் குளிர அந்தராத்மக ஸாக்ஷிகமாக விசுவாமித்திரரின் கையில் ஒப்படைத்துக் கொடுத்தார்.

4. (க - ரை) அப்போது அரவிந்தாக்ஷனை ஸ்ரீராமபத்திரன் விசுவாமித்திரர் கைக்குக் கிட்டியதைக் கண்ட வாயுதேவன் தூசியற்றவனாய் ஸுககரமான ஸ்பர்சத்தோடு மெதுவாக வீசலானான்.

5. (க - ரை) ஆகாயத்திலிருந்து அமரர்கள் பூமாரி பொழிந்தார்கள். துந்துபி முதலிய தேவ வாத்தியங்களையும் முழக்கினார்கள். அரண்மனையிலும் சங்கம் பேரி முதலிய பற்பல வாத்தியங்களையும் வாசித்தார்கள். அதனால் அவ்விடம் மங்கள வாத்தியகோஷமயமாகவே விளங்கிற்று.

வித்தார். இராகவன் மகரிஷியுடன் கூடப் புறப்படுவதற்கு ஆயத்தமாய் விட்டார். தாயான கௌஸல்யையும் தானுமாக இராமனுக்குத் தத்காலத்திற்கு உசிதமான மங்களங்களைச் செய்து வைத்தார்கள். ஆசாரிய வஸிஷ்டரும் மங்கள மயங்களான வேத ஸூக்தங்களைச் சொல்லி மந்திரித்துக் காப்பிட்டார். சக்கிரவர்த்தியும் தனது புத்திரனை உச்சி முகர்ந்து கொண்டாடி முன் னுண்டாயிருந்த சங்கைகளொன்றுமின்றி முற்றிலும் திருப்தி யடைந்து மனமாறத் தமது குமாரனைக் குசிகபுத்திரரின் கரத்திற் கூட்டிக் கொடுத்து விட்டார். முந்திய ஸர்க்கத்தின் கடைசி சுலோகத்தின் குறிப்போடு இதனை ஒற்றுப் பார்த்துக் கொள்ளவும்.

विश्वामित्रो ययावग्रे ततो रामो महायशाः ।
काकपक्षधरो धन्वी तं च सौमित्रिरन्वगात् ॥ 6 ॥

कलापिनौ धनुष्पाणी शोभयानौ दिशो दश ।
विश्वामित्रं महात्मानं त्रिशीर्षाविव पन्नगौ ॥ 7 ॥

अनुजग्मतुरक्षुद्रौ पितामहमिवाश्विनौ ॥ 7½ ॥

6. (ப - ரை) **अग्रे** - முதன் முதலில், **विश्वामित्रः** - விசுவாமித்திரர், **ययौ** - சென்றார், **ततः** - பிறகு, **महायशाः** - மஹா யசஸ்வியான, **रामः** - இராமனானவர், (**ययौ** - போனார்), **तं** - அவ் விராமனை, **काकपक्षधरः** - ஜில்பாவை தரித்துக் கொண்டிருக்கிறவராய், **धन्वी** - வில்லாளியான, **सौमित्रिः च** - ஸௌமித்திர குமாரரும் (இலக்ஷ்மணன்), **अन्वगात्** - அனுஸரித்துச் சென்றார்.

7-7½. (ப - ரை) **कलापिनौ** - அம்பறாத்தூணிகளை யுடையவர்களாயும், **धनुष्पाणी** - தனுஸைக் கையில் உடையவர்களாயும், **दश दिशः** - பத்து திக்குகளையும், **शोभयानौ** - அலங்கரிக்கின்றவர்களாயும், **त्रिशीर्षौ** - மூன்று தலைகளை யுடையதுகளான, **पन्नगौ इव** - ஸர்ப்பங்கள் போன்றவர்களாயும், **अक्षुद्रौ** - அற்பத்தனமற்றவர்களாயுமிருக்கிற (அக் குமாரர்களிருவரும்), **पितामहं** - பிதாமஹனை, **अश्विनौ** : அசுவினிதேவதைகள் போல, **महात्मानम्** - மஹாத்மாவான, **विश्वामित्रम्** - விசுவாமித்திர மஹரிஷியை, **अनुजग्मतुः** - அனுஸரித்துச் சென்றார்கள்.

6. (த - ரை) தவத்தால் மேன்மையுற்ற புகழ் படைத்த ... விசுவாமித்திர மஹரிஷி மனமகிழ்ந்து, மெய்மறந்து முதன் முதலில் செல்லுகின்றார். அவருக்குப் பின்னால் வினயத்தால் சிறப்பு வாய்ந்த இராகவன் அவரைத் தொடர்ந்து செல்லுகின்றார். அவருக்குப் பின்னால், ... ஸௌமித்திர குமாரர் ஜில்பா தரித்திருக்கிறார், ... அனல்பமான தனக்குள்ள வில்லாளுந் திறமை தோற்ற ... நடந்து செல்லுகின்றார்.

7-7½. (த - ரை) இருதோள்களிலும் தூணிகளை ... கோர்த்துக்கொண்டு, கையில் வில்லேந்தி திசைகள் பத்தும் ..., ... விக்கும்படி புறப்பட்ட, அவ்விராம லக்ஷ்மணர்கள் மூன்று தலை ... நாகங்கள் ... நாடுவது போல வெகு ஆடம்பரமாய் நடந்துகொண்டு அசுவினி தேவதைகள் அயனைத் தொடர்ந்து சென்றாற்போல மஹாத்மாவான விசுவாமித்திரரை அனுஸரித்துச் சென்றார்கள்.

तदा कुशिकपुत्रं तु धनुष्पाणी स्वलंकृतौ ।
बद्धगोधाङ्गुलित्राणौ खड्गवन्तौ महाद्युती ॥ ॥ 8½ ॥
कुमारौ चारुवपुषौ भ्रातरौ रामलक्ष्मणौ ।
अनुयातौ श्रिया दीप्तौ शोभयेतामनिन्दितौ ॥ 9½ ॥
स्थाणुं देवमिवाचिन्त्यं कुमाराविव पावकी ॥ 10 ॥
अध्यर्धयोजनं गत्वा सरय्वा दक्षिणे तटे ।
रामेति मधुरां वाणीं विश्वामित्रोऽभ्यभाषत ॥ 11 ॥

8½-10. (ப - ரை) **तदा तु** - அப்பொழுதோ வெனில், **धनुष्पाणी** - வில்லைக் கையிலுடையவர்களாயும், **स्वलङ्कृतौ** - நன்று யலங்கரிக்கப் பட்டவர்களாயும், **बद्ध गोधाङ्गुलित्राणौ** - கட்டப்பட்டிருக்கின்ற கோதா எனப்படுகிற மணிக் கட்டைக் காக்கும் தோலென்ன அங்குலித்ராண மென்கிற விரற் கூடென்ன இவைகளை யுடையவர்களாய், **खड्गवन्तौ** - கத்தியை யுடையவர்களாய், **महाद्युती** - மஹத்தான காந்தியை யுடையவர்களாய், **कुमारौ** - சிறுவர்களாய், **चारुवपुषौ** - அழகிய சரீரத்தை யுடையவர்களாய், **श्रिया** - சோபையினாலே, **दीप्तौ** - பிரகாசிக் கின்றவர்களாய், **अनिन्दितौ** - குறைவற்றவர்களாயு மிருக்கின்ற, **भ्रातरौ** - பிராதாக்களான, **रामलक्ष्मणौ** - இராமன், இலக்ஷ்மணன் இவ் விருவர்களும், **देवं** - தேவராய், **अचिन्त्यं** - சிந்திக்க முடியாதவரான, **स्थाणुं** - மஹாதேவனை, **पावकी** - நெருப்பிற் பிறந்தவர்களான, **कुमारौ इव** - (ஸ்கந்தன், விசாக னென்கிற) இரண்டு குமாரர்கள் போல, **कुशिकपुत्रम्**- விசுவாமித்திரரை, **अनुयातौ** - அநுஸரித்துச் சென்றுகொண்டு, **शोभयेतां** - சோபிக்கும்படி செய்தார்கள்.

11. (ப - ரை) **अध्यर्धयोजनं** - ஒன்றரை யோஜனை தூரம், **गत्वा** - சென்று,

8½-10. (க - ரை) இவ்வீரர்கள் கரத்தில் வில்லே யேந்தியது அவர்களுக்கு ஓர் அணிகலமாய்த் தோன்றிற்று. கோதை, அங்குளித்ராணம் எனப்படும் தோல் பட்டையைக் கரத்திற் சுற்றிக்கொண்டது கடகம், அங்குளீயம் இவற்றை யணிந்தது போலாயிற்று. கையில் உயர்த்திப் பிடித்திருக்கும் கத்தியானது அவர்கள் தம் தேஹ காந்தியோடு கலந்து விளங்கிற்று. குறைபொன்றுமில்லாத அழகிய அக்குமரர்களிருவரும், விசுவாமித்திரரைத் தொடர்ந்து சென்றது ஸ்கந்தர், விசாகர், சாகர், நைகமேஷர் எனப்படுகின்ற பகவானுடைய நான்கு மூர்த்திகளுள் முந்தியவர்களான ஸ்கந்த விசாகர்கள் மஹாதேவனைச் சார்ந்து நிற்பதுபோல மிக்க ரமணீயமாயிருந்தது.

11. (க - ரை) இப்படி தேவர் முனிவராதியருக்கும் மனோரதத்திற்கு மெட்டாத

गृहाण वत्स सलिलं मा भूत्कालस्य पर्ययः ।
मन्त्रग्रामं गृहाण त्वं बलामतिबलां तथा ॥ 12 ॥
न श्रमो न ज्वरो वा ते न रूपस्य विपर्ययः ।
न च सुप्तं प्रमत्तं वा धर्षयिष्यन्ति नैर्ऋताः ॥ 13 ॥

सरय्वाः - ஸரயூ நதியினுடைய, **क्षिणेद तटे** - தென்னண்டைக் கரையில், **राम!** **इति** - இராமா வென்று, **मधुरां** - இனியதான, **वाणीं** - வார்த்தையை. **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **अभ्यभाषत** - சொல்லி யழைத்தார்.

12. (ப - ரை) **वत्स!** - குழந்தாய்! **सलिलं** - தீர்த்தத்தை. **गृहाण** - எடுத்துக்கொள்ளு. (ஆசமனம் செய்யென்று தாத்பரியம்), **कालस्य** - ஸமயத்தினுடைய, **पर्ययः** - அதிக்கிரமமானது, அதாவது விளம்பமானது, **माभूत्** - உண்டாக வேண்டாம், **मन्त्रग्रामं** - மந்திரங்களின் ஸமஷ்டி ரூபமான. **बलां** - பலையையும், **तथा** - அப்படியே, **अति बलां** - அதிபலையையும், **त्वं** - நீ, **गृहाण** - கிருஹித்துக் கொள்வாயாக.

13. (ப - ரை) **ते** - உனக்கு, **श्रमः** - சரீர சிரமமானது, **न** - உண்டாகாது, **ज्वरो वा** - ஜ்வரமும், **न** - உண்டாகாது, **रूपस्य** - நிறத்தினுடைய, **विपर्ययः** - மாறுதலும், **न** - உண்டாகாது, **सुप्तं** - நித்திரையி லிருந்தாலும், **प्रमत्तं वा** - ஸாவதானப்

தொரு மஹாபலமான ஸ்ரீராமபத்திரன் ஸ்வாதீனமாகக் கோரியபடி தனக்குக் கிடைத்துத் தீர்ந்தமையால் 'எனக்கினியார் நிகர் நீனிலத்தே' என்று இறுமாப் படைந்திருக்கின்ற விசுவாமித்திர முனீசுவரர் ஒன்றரைக் காத வழி யயோத்யையோடுத் துடனேயே நடந்து சென்று ஸரயூநதியின் தென்கரை சேர்ந்து அமுதினுமினிய தான அவன் திருநாமத்தை நாபிவரைக்கும் தித்திக்கத் தனது திருநாவினால் நவின்று அன்பினால் குழைகின்ற மனதோடு இராமா! வென்று குயில்போன்ற குரலிற் கூப் பிடலானார்.

12. (க - ரை) இப்படி அபூர்வாக அமுதினுமினியதாய் அவனியுடன் இராமா! வென்று அகங்குளிர வழைத்த அம்மஹரிஷி குழந்தாய் ஆசமனத்தைச் செய். காலங்கடக்காமல் மந்திர ஸமுதாய ரூபங்களான பலை, அதிபலை, என்கிற வித்தைகளை நீ பெற்றுக் கொள்வாயாக, என்றுவிட்டு அவற்றின் பெருமையை விவரிக்கின்றார்.

13. (க - ரை) குழந்தாய்! இம்மந்திரங்களின் மஹிமையை என்னென்று சொல்லுவேன். இவற்றை நீ பெற்றுக் கொண்டபின் உனக்கு தேஹத்தில் பரிசிரமமோ, ஜ்வராதிகளான ரோகங்களோ, மனத்திற்குத் திகிலோ ஏதுமிராது. நிறம்

न बाह्वोः सदृशो वीर्ये पृथिव्यामस्ति कश्चन ।
त्रिषु लोकेषु वै राम न भवेत्सदृशस्तव ॥ 14 ॥
न सौभाग्ये न दाक्षिण्ये न ज्ञाने बुद्धिनिश्चये ।
नोत्तरे प्रतिवक्तव्ये समो लोके तवानघ ॥ 15 ॥
एतद्विद्याद्वये लब्धे भविता नास्ति ते समः ।
बला चत्वतिबला चैव सर्वज्ञानस्य मातरौ ॥ 16 ॥

பிசகா யிருந்தாலும், **नैर्ऋताः** - அரக்கர்கள், **न धर्षयिष्यन्ति च** - அதிக்கிரமிக்கவும் மாட்டார்கள்.

14. (ப - ரை) **बाह्वोः** - கைகளுடைய, **वीर्ये** - வீரியத்தில், **सदृशः** - (உனக்கு) ஸமானனாக, **पृथिव्यां** - பூமண்டலத்தில், **कश्चन** - ஒருவனும், **न अस्ति** - இருக்க வில்லை, **त्रिषु** - மூன்றுகளான, **लोकेषु वै** - உலகங்களிலும், **राम** - இராகவனே! **तव** - உனக்கு, **सदृशः** - துல்யனானவன், **न भवेत्** - உண்டாகமாட்டான்.

15. (ப - ரை) **अनघ** - குறையற்றவனே! **लोके** - உலகத்தில், **तव** - உனக்கு, **समः** - ஸமானமாயிருப்பவன், **सौभाग्ये** - ஸௌந்தர்ய விஷயத்திலும், **न** - (ஒரு வனும்) இல்லை, **दाक्षिण्ये** - ஸாமர்த்தியத்திலும், **न** - இல்லை, **बुद्धिनिश्चये** - புத்தியினால் நிர்ணயிக்கக்கூடிய காரியங்களைப் பற்றியதான, **ज्ञाने** - அறிவிலும், **न** - இல்லை, **प्रति-वक्तव्ये** - பதிற் சொல்லக்கூடியதான, **उत्तरे** - ப்ரதிவசனத்திலும், **न** - இல்லை.

16. (ப - ரை) **एतत् विद्याद्वये** - இந்த வித்தைகள் இரண்டும், **लब्धे (सति)** - அடையப்பட்டதேயானால், **ते** - உனக்கு, **समः** - ஸமானன், **न अस्ति** - கிடையாது, **(न) भविता** - இனி உண்டாகப் போகிறதுமில்லை, **बलातु** - பலை யென்பதும், **अति-बलाचैव** - அதிபலை யென்பதும், **सर्वज्ञानस्य** - எல்லா ஞானங்களுக்கும், **मातरौ** - பிறப்பிடமானவைகள்.

சற்று மாறிற்று, என்பதற்குக் கூட இடமிராது. நீ ஸ்வஸ்தமாகப் படுத்துத் தூங்கினாலும், அவசமாக ஜாக்கிரதையின்றி யிருந்தாலும், அப்போதும் அரக்கர்கள் உன்னையணுகவும் முடியாது.

14. (க - ரை) இராமா! உன்னைப்போன்ற பாஹு வீரியமுள்ளவர் இம் மஹி மண்டலத்திலெவருமே யில்லை. இம்மூவுலகத்திலும் எக்காலத்தும் உன்னைப் போன்ற உத்தமனொருவரும் உதிக்கப்போவதுமில்லை.

15. (க - ரை) பிழையற்ற குழந்தாய்! ஸௌந்தரியம், ஸாமர்த்யம், எதார்த்த நிர்ணயம், ப்ரதிவசன சாதுரியம் இவை போன்ற குணங்களில் இவ்வுலகத்திலொரு வரும் உனக்கு நிகரானவரேயில்லை.

16. (க - ரை) இவ்விரண்டு வித்தைகளை மட்டும் நீர் அடைந்து விட்டீரே யானால் இன்றைக்கிருப்பதுபோலவே என்றென்றைக்கும் உமக்குச் சமானனொரு வரும் தோன்றவே மாட்டார்கள்.

क्षुत्पिपासे न ते राम भविष्येते नरोत्तम ।
बलामतिबलां चैव पठतः पथि राघव ॥ 17 ॥

विद्याद्वयमधीयाने यशश्चाप्यतुलं त्वयि ।
पितामहसुते ह्येते विद्ये तेजःसमन्विते ॥ 18 ॥

प्रदातुं तव काकुत्स्थ सदृशस्त्वं हि धार्मिक ॥ $18\frac{1}{2}$ ॥

कामं बहुगुणाः सर्वे त्वय्येते नात्र संशयः ।
तपसा संभृते चैते बहुरूपे भविष्यतः ॥ $19\frac{1}{2}$ ॥

---

17. (ப - ரை) **राघव** - ரகுவம்சோத்பவரே! **नरोत्तम** - புருஷசிரேஷ்டரே, **राम** - இராமனே! **बलां** - பலையையும், **अतिबलां चैव** - அதிபலையையுங் கூடச் சேர்த்து, **पठतः** - படிக்கின்ற, **ते** - உமக்கு, **पथि** - மார்க்கத்தில். **क्षुत्पिपासे** - பசி தாஹங்கள், **न भविष्येते** - உண்டாகப் போகின்றதில்லை.

18-$18\frac{1}{2}$. (ப - ரை) **विद्याद्वयं** - இவ்விரண்டு வித்தைகளையும், **अधीयाने** - அத்தியயனம் பண்ணின, **त्वयि** - உம்மிடத்தில், **यशश्चापि** - யசஸுங் கூட, **अतुलं** - நிகரற்றதா யிருக்கும், **तेजः समन्विते** - தேஜஸோடு கூடினவைகளான, **एते** - இந்த, **विद्ये** - வித்தைகள், **पितामहसुते हि** - பிரஜாபதியின் பெண்களன்றோ! **काकुत्स्थ** - காகுத்தனே! **तव** - உனக்கு, **प्रदातुं** - கொடுப்பதற்கு, **धार्मिक** - தார்மிகரே! **त्वं** - நீர், **सदृशः** - யோக்கியர்.

$19\frac{1}{2}$. (ப - ரை) **एते** - இந்த, **सर्वे** - ஸமஸ்தமான ஸௌந்தர்ய ஸௌபாக்கியாதிகளும், **त्वयि** - உம்மிடத்தில், **बहुगुणाः कामं** - உடந்தையாகவே, அநேகமடங்கு அதிகமாக இருக்கின்றனதான், **अत्र** - இவ்விஷயத்தில், **संशयः** - ஸந்தேகமானது,

17. (க - ரை) புருஷோத்தமனான இராகவனே! உமது விஜய யாத்திரையில் இம்மந்திரங்களிரண்டையும் ஒரு தரம் உச்சரித்தீரேயானால், பசியினாலோ தாஹத்தினாலோ மற்றய எத்தகையது வந்தவத்தினாலும், இராமா! உமது அழகிய திருமேனிக்குச் சிறிதும் வாட்டமுண்டாகாது காணும்.

18-$18\frac{1}{2}$. (க - ரை) இவ்வித்தைகளைக் கற்பதினால் உமக்கு நிகரற்ற கீர்த்தியுண்டாகும், குன்றாத ஒளியோடு பிரகாசிக்கின்ற இவைகள் பிரஜாபதி குமாரிகளன்றோ! காகுத்தனே; இதனை உமக்குத்தான் கொடுக்கவேண்டும். நீரல்லவோ இதற்கு அனுரூபனாகிய நாயகன்.

$19\frac{1}{2}$. (க - ரை) பிரபுவே! அடியேன் வர்ணித்த ஸௌந்தர்ய ஸௌபாக்கியாதிகளான வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளையிடயிட்ட கலியாண குணங்கள் அனந்

ततो रामो जलं स्पृष्ट्वा प्रहृष्टवदनः शुचिः ।
प्रतिजग्राह ते विद्ये महर्षेर्भावितात्मनः ॥ 20½ ॥
विद्यासमुदितो रामः शुशुभे भूरिविक्रमः ।
सहस्ररश्मिर्भगवाञ्शरदीव दिवाकरः ॥ 21½ ॥

न - இல்லை, **तपसा** - தவத்தினால், **संभृते** - சேகரிக்கப்பட்ட, **एते च** - இவைகளோ வெனில், **बहुरूपे** - அநேக ரூபங்களாக, அல்லது வெகுமதிக்கத்தக்க ஸ்வரூபத்தை யுடையவைகளாக, **भविष्यतः** - ஆகப்போகின்றன.

20½. (ப - ரை) **ततः** - பிறகு, **रामः** - இராமனானவர், **जलं** - தீர்த்தத்தை, **स्पृष्ट्वा** - ஸ்பரிசித்து, அதாவது ஆசமனம் செய்து, **प्रहृष्टवदनः** - மலர்ந்த முகத்தை யுடையவராய், **शुचिः** - பரிசுத்தராய், **भावितात्मनः** - மனதினால் தியானித்து பாவனை செய்யப்பட்டிருக்கிற ஆத்ம ஸ்வரூபத்தை யுடையவரான, **महर्षेः** - சிரேஷ்டரான ரிஷியினிடத்திலிருந்து, **ते** - அந்த, **विद्ये** - வித்தைகளை, **प्रतिजग्राह** - ப்ரதிக்ரஹித் துக் கொண்டார், அதாவது தலைகுனிந்து ஏற்றுக்கொண்டார்.

21½. (ப - ரை) **विद्यासमुदितः** - வித்தைகளோடு சேர்ந்திருக்கின்றவரான, **रामः** - இராமனானவர், **शरदि** - சரத்காலத்தில், **सहस्ररश्मिः** - ஆயிரம் கிரணங்களை யுடைய, **भगवान्** - பூஜ்யரான, **दिवाकर इव** - ஸூரியன்போல, **भूरिविक्रमः** - பூயிஷ் டமான பராக்கிரமத்தை யுடையவராக, **शुशुभे** - விளங்கினார்.

தங்கள் தம்மிடத்தில் உடந்தையாகவே விளங்குகின்றனதான் என்றாலும் நெடுங் காலத்தியத் தவத்தின் பயனைச் சேகரிக்கப் பட்டிருக்கும் இவ் வித்தைகள் தம் மைச் சார்ந்த பின்னரே யன்றோ ஸ்வரூப லாபத்தைப் பெற்று மதிப்பு வாய்ந்து விளங்கும்.

20½. (க - ரை) இப்படி நெடுங் காலத்தியத் தவப்பயனைத் தாம் பெற்ற வித்தைகளை, இராகவனுக்கு அர்ப்பித்துக் கிருதார்த்தனாக வேண்டுமென்று மனோரதித் துச் சொல்லிய அம்முனீசுவரரின் பிரார்த்தனையைக் கேட்ட ஸ்ரீராமபத்திரன் ஆச மனத்தைச் செய்து அலர்ந்த அரவிந்தம் போல் விளங்குகின்ற தனது திருமுக மண்டலத்தில் பொன் முறுவல் தவழ, அந்த யோகீசுவரர் திவ்யாத்ம ஸ்வரூபத்தை பாவித்துப் பாவித்து மனம் பூரித்து ஸமர்ப்பிக்கின்ற ஸபர்யா ரூபமான அந்த வித்தை களை * ஏகாந்திகள் செய்யும் பூஜைகளை தேவன் தலை குனிந்து ஏற்றுக் கொள்ளு கிறான் என்கிற சாஸ்த்திரத்தின்படி மிக்கப் பணிவுடன் பெற்றுக் கொண்டார்.

21½. (க - ரை) இப்படி இராகவன் அவ் வித்தைகளை ஏற்றுக் கொண்டது சரத்ருது பிறந்தால் ஸூரிய மண்டலம் ஸ்வயமாகவே பிரகாசிப்பது போல அவ ருக்கு ஸ்வதஸ்ஸித்தமான பராக்கிமங்கள் விளங்குவதற்கு இடமளித்த தாயிற்று.

---

* याः क्रियास्संप्रयुक्तास्युः एकान्त गतबुद्धिभिः ।
ताः सर्वाश्शिरसा देवः प्रतिगृह्णातिवै स्वयम् ॥

गुरुकार्याणि सर्वाणि नियुज्य कुशिकात्मजे ।
* ऊषुस्तां रजनीं तीरे सरय्वाः सुसुखं त्रयः ॥ 22½ ॥
* दशरथनृपसूनुसत्तमाभ्यां तृणशयनेऽनुचिते सहोषिताभ्याम् ।
कुशिकसुतवचोनुलालिताभ्यां सुखमिव सा विबभौ विभावरी च ॥ 23½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
द्वाविंशः सर्गः ॥ 22 ॥

22½. (ப - ரை) **कुशिकात्मजे** - கௌசிகரின் விஷயத்தில், **सर्वाणि** - எல்லா விதமான, **गुरुकार्याणि** - குருக்களுக்குச் செய்யவேண்டிய சுச்ருஷைகளை, **नियुज्य** - செய்து, **त्रयः** - மூவரும், **तां** - அந்த, **रजनीं** - இரவை, **सरय्वाः** - ஸரையூநதியினுடைய, **तीरे** - கரையில், **सुसुखं** - நல்ல ஸுகமாக, **ऊषुः** - வசித்தார்கள்.

23½. (ப - ரை) **अनुचिते** - தகாததான, **तृणशयने** - புற்படுக்கையில், **सहोषिताभ्याम्** - கூடப்படுத்தவர்களாயும், **कुशिकसुतवचोनुलालिताभ्यां** - கௌசிகருடைய வாக்கியத்தினால் அநுலாளனம் செய்யப்பட்டவர்களாயுமிருக்கிற, **दशरथनृपसूनुसत्तमाभ्यां** - தசரத மஹாராஜனுடைய வரகுமாரர்களின் பொருட்டு, அல்லது குமாரர்களுக்கு, அல்லது குமாரர்களோடு, **सा** - அந்த, **विभावरी च** - இராத்திரியும், **सुखमिव** - ஆனந்த மயமாகவே, **विबभौ** - விளங்கிற்று.

22½. (க - ரை) பிறகு இராகவன் அருமையான மந்திரங்களை யுபதேசித்தருளிய பரமாசிரியர் என்கிற பாவனையோடு விசுவாமித்திரர் நிரத்தில் ஸத்குருக்களுக்குச் செய்ய வேண்டிய ஸத்காரங்களை யெல்லாம் ஸாவதானமாய்ச் செய்து முடித்தார். அதன் பின் அம் மூவர்களும் ஸரையூ தீரத்தில் ஒப்புயர்வற்ற அவ் விராப்பொழுதை முற்றும் அகண்டானந்த அநுபவ ஸந்துஷ்டியோடு ஸுகமே போக்கினார்கள்.

23½. (க - ரை) இராஜ குமாரர்களுக்கு அனர்ஹமான த்ருண சயனத்தில் இராம லக்ஷ்மணரிருவரும் என்றுமில்லாதபடி அன்றைக்கு ஒருமிக்க சயனித்துக் கொண்டனர். பாக்கியவசத்தால் சேஷசயனனுடைய அத் திருப்பள்ளிக் காக்ஷியைக் காணக் கிடைக்கப் பெற்ற பக்தாக்கிரகண்ணியரான விசுவாமித்திரர் மறை நான்குந் துதி செய்திடும் அத் திவ்விய புருஷனை தம் வாயாரத் துதித்து போற்று நிற்க அவ் விரவு அவர்களுக்கு ஓர் ஆனந்தப் பேரொளி போன்றே பிரகாசிக்கலாயிற்று.

இராமனைவிசுவாமித்திரர் அழைத்துக் கொண்டு போகின்றார். மார்க்கத்தில் முதலாளிரவு ஸரையூ நதியின் தீரத்தில் தங்கிச்செல்லத் தீர்மானித்தார். அங்கு இளையபெருமாள் இளம்புளிர்களைக் கொணர்ந்து இராமபத்திரன் சயனிப்பதற்காக கிஸலயதல்பத்தைக் கல்பிக்கின்றார்.

விசுவாமித்திரருக்கு அக் காக்ஷியைக் கண்டதும் அந்தோ! ஈதென்னவிந்தை? தனது ஸௌகுமார விஸ்தாரமான உடம்பைப் பரப்பிப் போட்டுவைத்துக் கிடக்கவேண்டிய இச் சேஷபர்யங்கமே படுக்கை யென்று பெயரைச் சொல்லிச் சில தழைகளைக் கொணர்ந்து குவிக்கின்றதே? இராமனை—என்? இந்தச் சேஷசயனனைத் தன் மடி மீது தானிவர் கண்வளரும்படி கிடத்திக் கொள்ளலாகாதா? இவருக்கு அது இஷ்டமாகத்தா னிருக்கும். ஆனால் எம் பெருமான் இம்மானுஷ வேஷத்தில் அதனை அங்கீகரிக்க மாட்டான் போலும். ஆனதினாற்றான் தம்பியும் அரை மனதோடு தழைகளை யிட்டுத் தல்பம் போடுகின்றா னாக்கும். நல்லது எனக்கும் இவரை அப்படிப் படுக்க வைத்துப் பழைய ரூபத்தோடு ஸேவித்துக் கொள்ளவேண்டு மென்கிற அவா அதிகமாகத்தா னிருக்கிறது. என்றாலும் என் நாதன் அதற்குச் சம்மதிக்க மாட்டானே யென்று தான் சும்மா விருக்கின்றேன். இருந்தாலும் இன்றைக்கு ஒரு வேளையாவது எப்பாடு பட்டாகிலும் அந்த திவ்ய ஸேவையை ஸேவித்துக் கொண்டுதான் தீருவேன் யான். என் பிரபுவும் தாஸனுடைய இவ்வொரு அபிமதத்தை ஸாதித் தருளத்தான் வேண்டும். பைகொள் பாம்பேறி யுரைபரனே! உன்னை மெய் கொள்ளக் காண விரும்பு மென் கண்களே. எனது கரிய மாணிக்கமே! என் கண்கட்குத்திண் கொள்ள வொரு நாளருளாயுன்திரு வுருவே. என்று ஒன்றன்மே லொன்றாக மனோரதம் வளர்ந்து அவ் வீசனைச் சேஷசயனனாகச் சேவித்துக் கொள்ள வெண்டு மென்கிற அவா அதிகரித்துக் காதல் வெள்ளம் கரை புரண்டோடவே அவர் தன துள்ளத்திற்குள்ளேயே உருக உருக அதனைப் பிரார்த்தித்துக் கொண்டு நிற்கின்றார்.

இவர் செய்தி யிப்படியிருக்க தம்பி படுக்கை போடுகிறவர் செய்தி யென்னவென்று பார்ப்போம். ஐயோ? எம்பிரான் இவ்வேஷத்தை யேற்றநாள் முதலாக சேஷனான வடியேனுக்கு ஸ்வபாவமாயுள்ள ஸேவைச் சுகம் குன்றிவிட்டதே? இவனது அரிய திருமேனியை எனது போகத்திற் கிடத்திக்கொண்டு இன்பமுற வேண்டிய நான் காட்டிலுள்ள தம்புதழைகளைக் கூட்டிவைத்து மெத்தை யிடுகின்றேனே? மஹரிஷியே விசுவாமித்திர! உமது மனோரதத்தை யான் நன்குணர்ந்தேன். அதற்காகவேனும் நமதுநாதன் தனது வேஷத்தைச் சற்றேனுங் களைந்துவைக்கச் சம்மதித்தானாகில் நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமாம், என்பதுபோல உமது பாக்கியத்தைப் புகழ்ந்துகொண்டு அடியேனும் அபிமதத்தைப் பெற்றிடுவேன். முனீசுவரரே! உமது பிரார்த்தனையைப் பலம் பெறும் வரைக்கும் தளரவிடாதேயும். உமக்குள்ள பிடிவாதக்குணத்தை முற்றவும் இம்முக்கிய விஷயத்திற்புகட்டி உம்முடன் அடியேனுக்கும் இப்பாக்கியத்தைக் கூட்டிவையும், என்று இளையபெருமாளும் தம் மனத்திற்குள்ளே மனனம் பண்ணிக் கொண்டு அப்பெரும் பேற்றை எதிர்நோக்கி நிற்கின்றான்.

இனி இந்நிலைமையில் கருணைக்கடலான நம் மிராமபிரானென் செய்கின்றார்? ஸர்வப் பிராணிகளுடையவும் ஞானேந்த்ரியத்திற்கு மூலஸ்தானமாகிய ஹ்ருதயாசயத்திற் குடியிருந்து கொண்டு அவைகளுக்கு உணர்வையுண்டாக்கி அவ்வுணர்ச்சிக்கெல்லாம் ஸாக்ஷியாகவுமிருக்கின்ற அப்பரமாத்மாவிற்கு இத் தபோதனரின் மனோநிலை தெரியாம லிராதன்றோ? தெரிந்துகொண்டார். அவர் கோரிக்கையில் குறைகூறுவதற்கும் ஒன்றுமில்லை. அரூபியான தான் உடம்பெடுத்ததே அடியார்களுடைய அனுபவ ஆனந்தத்திற்காகவே யன்றோ? இனி அவர்கள் எப்படிச் சேவித்துக்கொள்ள ஆசித்தாலும் அது பழுது படாதபடி அந்த ஸேவையை அநுக்கிரஹிக்க வேண்டியதுதானே? ஆதலால் மஹரிஷியின் மனோரதத்தைப்

போல அவர் வேண்டும் வகையில் ஸேவை ஸாதிப்பதாகவே தீர்மானித்துக் கொண்டார். ஆனால் அது தமது மானுஷபாவனைக்கு முற்றிலும் முரண்படுகின்றதே யென்று அம்மாயனுக்குச் சற்று ஆலோசனை யுண்டாயிற்று. ஒரு புறத்தில் அடியாரின் அபிமதப்படி நடக்க வேண்டுமென்கிற அவா. மற்றொரு புறத்தில் வேஷத்திற்காகப் பூசிக்கொண்ட சாயம் மறைந்து போகுமே யென்கிற அச்சம்.

மெத்த உத்தமியான ஒரு பதிவிருதைப் பெண். அவள் வயது பால்யத்திற்கும் யௌவனத்திற்கும் இடையிலிருக்கின்றது. ஆதலால் அவளுக்கு ஸ்வாபாவிகமாயுள்ள இலச்சையின் மேலீட்டினால் அவள் மனத்தில் எழுகின்ற ஸ்வல்பக்காதலும் அப்பொழுதைக்கப்பொழுதே அடங்கிவிடுமாம். தனது அன்பிற்குரிய நாயகன் தானென்றாலும் அவன் முன் தலை நிமிர்ந்து நிற்கவும் அவள் துணிவுபெறாள். என்றாலும் அவளுடைய புருஷனுக்கு அரவிந்தம் போன்ற அவளுடைய வதனத்தை ஒருபொழுதாகிலும் நிமிர்த்து ஆஸ்வதிக்க வேண்டுமென்கிற ஆவல் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆனாலும் அந்த பாலையினுடைய மனதைக் கவர்ந்து கொண்டிருக்கின்ற வெட்கத்தை யவனறிவானாதலால் தன் ஆசையை அடக்கிக்கொண்டே வருகின்றான். அக்குறிப்பை அச்சுந்தரியும் அறிந்துகொண்டு தானிருக்கின்றாள். ஆனாலும் அவ்வழியிற் செல்லுவதற்கு இலச்சை யவளை இலகுவாய் விடுகிறதில்லை. அவனுக்கேயான தனது உருவத்தை அவனிச்சிக்கின்றபடி அனுபவிக்கக் கொடுத்துவிட வேண்டுமென்கிற நியாயம் ஒருபக்கம். நாதனண்டை சென்று எப்படித்தான் தலைநிமிர்ந்து நிற்பேனென்கிற வெட்கமொரு பக்கம். இரண்டிற்கு மிடையிலகப்பட்ட அவள் ஒன்றுக்கும் முரணில்லாத ஒரு உபாயத்தைக் கைப்பற்றினாள். நாயகனுக்கு பின்றூங்கி முன்னெழும்புகின்ற அவ்வுத்தமி அன்றைக்கொருநாள் மட்டும் அவன்வீடுவரு முன்னமே எப்படியோ அயர்ந்து தூங்கியேவிட்டாள், அதென்ன சித்திரை யென்பதை அவள்தானறிவாள்.

मुग्धामिमां कुटिलकुन्तल राजिराजद्राजीवगर्व भरहं मुखंमुन्नमय्य ।
पास्यामिवा सकृदहं परिपूर्णकामः पीयूषदूषण चणाधरबिम्बसारम् ॥
कान्ताविलोक्यकमितुर्हृदयानुरागम् ।
स्वान्ताजहत्सहचरींच विचिन्त्यलज्जां ॥
कान्तागमात्पुरत एव कदाचिदेषा ।
श्रान्ताङ्गयष्टिरिव काञ्चिदवापनिद्राम् ॥

இவ்வுபாயத்தையே தான் இராமபத்திரனும் கைப்பற்றினார். இலக்ஷ்மணா! புதிதாக அதிகவழி நடந்தது சற்று ஆயாஸமாயிருக்கிறதப்பா! இப்படி எதிர்வந்து என் கிட்டத்திலுட்காரு. உன்மடியின்மீது சற்றுச் சாய்ந்து கொள்கின்றேனென்றார். இளையவருக்கு அதன் காரணம் விளங்கிவிட்டது. ஆக்ஷேபமின்றி அவர் சொன்னபடி செய்தார். இராகவனும் அவர்மடியிற் படுத்தார். அப்படியே அயர்ந்து நித்திரையிலமர்ந்துவிட்டார். மஹரிஷியும் மனங்கொண்ட வரையில் மண்டிக்கிடந்து அனுபவிக்கின்றார். பொழுதும் புலர்ந்தது. ஆசிரியருக்கு முன்னாலெழுந்து அவருக்கு ஸுப்பிரபாதம் பாடவேண்டிய இந்த சிஷ்டகுமாரர் அன்றைக்கு மட்டும் அசையாமலே சயனித்திருந்தார். அக்கருணைக்குத் தோற்றுப்போனார் மஹரிஷி. ஐயனே! இவ்வளவு அனுக்கிரஹம் இன்றைக்குப்போதும் இனியானே எழுப்பினால்தான் எழுந்திருப்பாய்போலும் நல்லது அப்படியே செய்கின்றேன். என்று விட்டு எழுப்பப்புகுந் தருணத்தில் மற்றுமொருமுறை குமாரரின் திருமுகமண்டலத்தை ஆவலுடன் உற்றுப் பார்க்கலானார்.

त्रयोविंशः सर्गः ॥ 23 ॥

* प्रभातायां तु शर्वर्यां विश्वामित्रो महामुनिः ।
अभ्यभाषत काकुत्स्थौ शयानौ पर्णसंस्तरे ॥ 1 ॥

† कौसल्या सुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥ 2 ॥

---

1. (ப - ரை) **शर्वर्यां** - இரவானது, **प्रभातायां तु** - விடிந்தவளவில், **महामुनिः** - மஹரிஷியான, **विश्वामित्रः** - விசுவாமித்ரரானவர், **पर्णसंस्तरे** - பர்ணசயனத்தில், **शयानौ** - சயனித்துக் கொண்டிருக்கிற, **काकुत्स्थौ** - இராமலக்ஷ்மணர்களை, **अभ्यभाषत** - சொன்னார்.

2. (ப - ரை) **कौसल्या** - கௌஸல்யா தேவியானவர், **सुप्रजा** - நல்லபிள்ளையைப் பெற்றவர், **राम** - ஹே ராமனே! **पूर्वा** - முந்தியதான, **सन्ध्या** - ப்ராதஸ் ஸந்

---

1. (க - ரை) இப்படி அகண்ட ஆனந்தமயமாகவே அவ் விரவு முழுதும் கழிந்து பொழுதும் புலர்ந்த வுடனே, அப்போதும் பர்ணமயமான தல்பத்தின் மீது கண் வளர்கின்றவர்களான இராம லக்ஷ்மணர்களைக் குறித்து விசுவாமித்திர மஹரிஷி கூறுகின்றார்.

2. (க - ரை) ஹா! கௌஸல்யா தேவியா ரன்றோ பிள்ளையைப் பெற்ற பாக்கியவதிக்குள் சிலாக்கிய மானவர். அவர் அனுதினமும் இவ் விராமனைத் தனது மடியிற் கிடத்தித் திருக்கண் வளர்த்தி யிருப்பாரே! அப்போ தெல்லாம் இப்போதி

---

* **प्रभातायांतु शर्वर्यां**, இரவுதான் விடிந்ததேயின்றி தொசனுபவம் முடிந்தபாடில்லை. ஆச்ரிதர்களுடைய அகத்திருளையழித்து மனமலரை மலர்த்துகின்ற பரமவ்யோம பாஸ்கரனாகிய ஸ்ரீராமபத்திரனது ஸாந்நித்தியத்தால் அக்கங்குலே பகல் போலாயிற்றென்க. ஒருக்கால் விடிந்த இப்பிரபாதத்திற்கு இனி அபரஸந்தி யென்பதில்லையாதலின் ஈதொரு அற்புதமான ஸுப்பிரபாதமாகவு மாயிற்றென்க. **सकृद्दिवाहास्मैभवति यएवं वेद** இப்படிப் பாதத்துவத்தைப் பற்றிய உண்மையைக் கண்டுணர்ந்தவருக்கு ஒருக்கால் விடிந்த விடிவு விடிந்ததாகவே நின்று விடுகின்றது, என்று உபநிஷத்துக்களும் உத்கோஷிக்கின்றனவாம். **विश्वामित्रोमहामुनिः** யமநியமோ பாஸனங்களியலாவி புலனடைக்குந், தமதறியுந் தாரணைகடாரையரு நினைவொழுக்கஞ், சமமுடைய சமாதி நலஞ்சாதித்து அதனிலக்கைக்கைப் பற்றியவரான இந்த யோகீசுவரர். **अभ्यभाषतकाकुत्स्थौ शयानौपर्णसंस्तरे** । தழைத்தல்பத்தின்மீது ஒன்றுயிழைந்து கொண்டு படுத்திருக்கின்ற தனது முழுக்கவனத்திற்கும் ஒரே இலக்ஷ்யமான இராமலக்ஷ்மணர்களைக் குறிப்பாய்ப் பார்த்து ஆச்சரியரஸபரிதராக ஒரு வார்த்தை சொல்லுகின்றார்.

† **कौसल्या** இவருக்கு இராமனருளியிருக்கின்ற அக்காக்ஷியை அனுபவிக்கையிலுண்டாகிய ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. எந்த ஸுந்தரனுக்கும் ஸ்வாபகாலத்தில் முகம் அவ்

तस्यर्षेः परमोदारं वचः श्रुत्वा नृपात्मजौ ।
स्नात्वा कृतोदकौ वीरौ जेपतुः परमं जपम् ॥ 3 ॥

தியானது, **प्रवर्तते** - வருகின்றது, **नरशार्दूल** - புருஷ சிரேஷ்டரே! **उत्तिष्ठ** - எழுந்திரும், **दैवं** - தேவ ஸம்பந்தமான, **आह्निकम्** - நித்தியக்கடமையானது, **कर्तव्यं** - செய்யப்படவேண்டும்.

3. (ப - ரை) **वीरौ** - சூரர்களான, **नृपात्मजौ** - இராஜகுமாரர்கள், **तस्य** - அந்த, **ऋषेः** - ரிஷியினுடைய, **परमोदारं** - அதிகம்பீரமான, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **स्नात्वा** - ஸ்நானம்பண்ணி, **कृतोदकौ** - செய்யப்பட்ட அர்க்கியதானாதிகளை யுடையவர்களாய், **परमं** - உயர்ந்ததான, **जपम्** - காயத்ரியாதிமந்திரங்களின் ஜெபத்தை, **जेपतुः** - ஜெபித்தார்கள்.

யத்தைப் போல அவச்யமாய் வெளிப்பட்டு விட்ட தெய்விகமான தேஜஸை யுடைய இவனது திருமுக மண்டலத்தை அநேகம் தரம் ஸேவித்திருப்பீரே, இவனது அப்பிராகிருத திவ்விய மங்கள விக்கிரஹத்தின் வனப்பினால் இவனுடைய திவ்விய ஸ்வரூபத்தின் நிரவதிக உத்க்கர்ஷத்தை நிர்ணயித்துக் கொண்டிருப்பதினா லன்றோ, நொடிப் பொழுதேனும் தடைப் படாமல் குழந்தையைக் கூப்பிட்ட வுடனேயே கூட்டி யனுப்பி விட்டாரந்த பாக்கியவதி. இராமா! பிராதஸ்ஸந்தி யெழுகின்றது. தேவதா ராதனங்களான ஆன்ஹிகக் கிரியைகளை அநுஷ்டிக்க வேண்டுமன்றோ! ஆண் சிங்கமே! திருக்கண் மலர்ந்து எழுந்தருள்வீராக.

3. (க - ரை) இப்படி அந்த பிரும்ஹரிஷியின் ஆழ்ந்த கருத்துடன் கூடிய வார்த்தையைக் கேட்ட இராஜ குமாரர்கள் உடனே எழுந்து ஸ்நானம் செய்து தேவரிஷி பித்ருக்களைப் பூஜித்து காயத்ரி யாதி மஹா மந்திரங்களையும் ஜெபித்தார்கள.

வளமாக நன்றாயிராதே, சற்று விகாரமாகத் தானே தோற்றும். கயலோசன! உமது திருமுக மண்டலமென்ன முன்னிலு மாயிரமடங்கு அதிகமான வனப்புடன் சோபிக்கின்றதே. இதென்ன விந்தை? நல்லது இதன் காரணம் விளங்கிவிட்டது. உலகத்திலுள்ள மனிதர் எவராவனும் அவர்களுக்கு விகாரமென்பது உடந்தையாகவேயுள்ள குறையன்றோ? அக்குறை முழுவதும் வெளிப்பட்டு விடாதபடி அவர்கள் விழித்துக் கொண்டிருக்கையில் வெகு ஜாக்கிரதையாகத் தடுத்துவைத்து இல்லாத சோபையெல்லாம் உள்ளதுபோலக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். தூங்கிவிட்டாலோ அப்பிரயத்தினங்கள் அற்றுப்போம்படி மெய்மறந்து போகின்றமையால் உடந்தையாயுள்ள குறைகளெல்லாம் ஒன்றன்பின் னொன்றாக வெளிவந்து விடுகின்றது. புண்டரீகநயன! நின்றிரத்திலோவெனில் எவருங்கண்டுவிடாதபடி மானுஷக்கரி வேஷத்தினால் பத்திரப்படுத்தி வைத்திருந்த உமது திவ்வியமங்கள விக்கிரஹத்தின் நிரதிசயலாவண்யமானது, ஈ பிரபலமான பிரயத்தினத்தைக்கொண்டு உள்ளேயே அடைத்து வைத்திருந்த உனது ஸ்வபாவ ஸௌந்தர்யமானது, அப்பிரயத்தினங்களை நழுவ

कृताह्निकौ महावीर्यौ विश्वामित्रं तपोधनम् ।
अभिवाद्याभिसंहृष्टौ गमनायाभितस्थतुः ॥ 4 ॥
तौ प्रयातौ महावीर्यौ दिव्यां त्रिपथगां नदीम् ।
ददृशाते ततस्तत्र सरय्वाः सङ्गमे शुभे ॥ 5 ॥

4. (ப - ரை) **कृताह्निकौ** - செய்யப்பட்ட ஆன்ஹிகங்களை யுடையவர்களான, **महावीर्यौ** - அந்த உத்தம வீரர்கள், **तपोधनम्** - தவத்தையே திரவியமாகக் கொண்டவரான, **विश्वामित्रं** - விசுவாமித்திரனை, **अभिवाद्य** - நமஸ்கரித்து, **अभिसंहृष्टौ** - அத்யந்த ஸந்தோஷத்தை யுடையவர்களாக, **गमनाय** - யாத்திரையின் பொருட்டு, **अभितस्थतुः** - முன்னின்றார்கள்.

5. (ப - ரை) **ततः** - அங்கிருந்து, **प्रयातौ** - புறப்பட்டவர்களான, **महावीर्यौ** - மஹத்தான வீரியத்தை யுடையவர்களான, **तौ** - அவ்விருவர்கள், **तत्र** - அங்கே,

4. (க - ரை) இப்படி ஸந்தியோபாஸனம், ப்ரம்ஹ யக்ஞம், ஸமிதாதானம் முதலிய காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு ஆசிரியரான அத் தபோதனரை, அபிவாதனம் பண்ணி மேல் யாத்திரை செய்வதற்காக ஸந்தோஷத்துடன் குமாரர்கள் அம் மஹரிஷியின் முன் சென்று நின்றார்கள்.

5. (க - ரை) மஹரிஷியும் வாருங்கள் புறப்படுவோம் என்று சொல்லி புறப்பட்டு விட்டார். இருவரும் அவரைத் தொடர்ந்து சென்றார்கள். அவ் விடத்தி

விட்டு நீ அயர்ந்திருக்கும் ஸமயம் பார்த்து உல்லாஸமாய்ச் சற்றேனு முலாவுவதற்கு வெளியேறுகின்றதுபோலும். அம்மணீ கௌஸல்யே! நீரே பரமபாக்கியவதி யம்மா. இவ்வோரிரவு எனக்குக் கிடைத்த இக்காக்ஷியை புண்ணியவதியே! நீர் நாள்தவருமல் பிரதிதினமும் பலமுறை கண்டுகளித்திருப்பீரன்றோ? அடியேனாவது இன்றைக்கொரு நாளாவது கண்டேன் இனியுமெப்போ தேனுமொரு சிலபொழுது காணுவேன். பெற்றவரேயானாலும் தசரதருக்கு ஒரு பொழுதேனும் இப்பேரின்பம் நுகருவதற்குக் கிடைத்திராதே? அது இத் திருமேனியை மடியிற் கிடத்திக்கொண்டு திருக்கண் வளர்த்துகின்ற பாக்கியத்தைப்படைத்த உமக்குக் கிடைக்குமதுவேயின்றி வினயத்தால் தலைகுனிந்து நிற்கின்ற தனயனையே தழுவப் பெற்ற தசரதனுக்கு எங்கிருந்து கிடைக்கும்? இப்படி யொருமுறையேனும் அரசன் ஸேவித்திருப்பாரானால் அப்படி யிராமனை விடேனென்று அவர் பிடிவாதம் பிடித்திருக்கக் காரணமிராதே! தாயே! வாவென்ற வார்த்தை முடியுமுன் இராமனைப் போய்வாவென்று குதூஹலமாய்க் கூட்டியனுப்பி விட்டீரே. அது இவ்வுளவை யறிந்திருந்ததினாலாகிய செய்கை யன்றோ? இராமா! அடியேன் புரியும் பணிகளை பணிபதிசயனா! சற்று எழுந்து பெற்றுக் கொள்ளும். நித்திராகாலத்திய நிரதிசய ஸௌந்தரியத்தை அனுபவிக்கத் தந்தருளினையே. இனி பிரபோத ஸமயத்திய ஸம்மிச்ரமான சோபையையும் அடியேன் ஸேவித்துக்கொள்வேன். சீரிய சிங்கமறிவுற்றுக் கிளம்பினாற்போல நீ கிளம்பிவா. என்று விசுவாமித்திரர் ஸுப்ரபாதம் பாடித் திருப்பள்ளி யெழுப்பலானார்.

तत्राश्रमपदं पुण्यमृषीणामग्र्यतेजसाम् ।
बहुवर्षसहस्राणि तप्यतां परमं तपः ॥ 6 ॥

तं दृष्ट्वा परमप्रीतौ राघवौ पुण्यमाश्रमम् ।
ऊचतुस्तं महात्मानं विश्वामित्रमिदं वचः ॥ 7 ॥

कस्यायमाश्रमः पुण्यः कोन्वस्मिन्वसते पुमान् ।
भगवञ्छ्रोतुमिच्छावः परं कौतूहलं हि नौ ॥ 8 ॥

शुभे - மங்களமான, **सरय्वाः** - ஸரையூநதியினுடைய, **सङ्गमे** - சேருமிடத்தில், **त्रिपथगां** - மூன்று உலகத்தில் ஸஞ்சரிக்கின்றதான, **दिव्यां** - தெய்வீகமான, **नदीम्** - கங்காநதியை, **ददशाते** - பார்த்தார்கள்.

6. (ப - ரை) **तत्र** - அங்கே, **अग्र्य तेजसाम्** - உயர்ந்த தேஜஸை யுடையவர்களாய், **बहुवर्षसहस्राणि** - அநேகம் ஆயிர வருஷங்களை, **परमं** - உயர்ந்ததான, **तपः** - தவத்தை, **तप्यतां** - செய்துகொண்டிருக்கின்ற, **ऋषीणां** - மஹரிஷிகளுடைய, **पुण्यं** - பாவனமான, **आश्रमपदं** - ஆசிரம ஸ்தானமானது (இருக்கின்றது).

7. (ப - ரை) **तं** - அந்த, **पुण्यं** - புனிதமான, **आश्रमम्** - ஆசிரமத்தை, **दृष्ट्वा** - பார்த்து, **परमप्रीतौ** - மிகவும் திருப்தி யடைந்தவர்களான, **राघवौ** - இராம லக்ஷ்மணர்கள், **महात्मानं** - மஹாத்மாவாயிருக்கின்ற, **तं** - அந்த, **विश्वामित्रं** - விசுவாமித்திரரைப் பார்த்து, **इदं** - இந்த, **वचः** - வார்த்தையை, **ऊचतुः** கேட்டார்கள்.

8. (ப - ரை) **अयं** - இந்த, **पुण्यः** - பாவனமான, **आश्रमः** - ஆசிரமமானது, **कस्य** - யாருடையது? **अस्मिन्** - இதில், **कः** - எந்த, **पुमान्** - புருஷர், **वसते नु** -

லிருந்து சில தூரத்தைக் கடந்து சென்றதும் அங்கோரிடத்தில் ஸரையூ என்கிற தங்களூர் நதியோடு உலகம் மூன்றிலும் பிரவஹிக்கின்ற திவ்விய நதியான கங்கை வந்து கூடுவதை அவர்கள் கண்ணுற் கண்டார்கள்.

6-7. (க - ரை) மிக்கப் பரிசுத்தமான அந்த ஸங்கமுகத்தில் அநேகமாயிரம் ஆண்டுகளாகத் தவம் புரிந்து கொண்டிருக்கின்ற மஹா தேஜஸ்விகளான பரமரிஷிகளின் ஆசிரமங்கள் பல உள்ளன. அவற்றிற்கு நடுநாயகமாக விளங்குகின்ற புண்ணியமான ஆசிரமம் ஒன்றைப் பார்த்துவிட்டு இராம லக்ஷ்மணர்கள், தீர்க்க தரிசியான விசுவாமித்திரரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கலாயினர்.

8. (க - ரை) பகவானே! இவ் வாசிரமம் எந்த மஹானுபாவனுடையதோ? இதற்கு அதிபதியான அவர் இப்போது இங்கில்லை போல் தோன்றுகின்றதே. இங்குள்ள மஹரிஷிகளெல்லாம் மிக்க பக்தியுடன் இதன் கண் வர்த்திக்கின்றனரே!

तयोस्तद्वचनं श्रुत्वा प्रहस्य मुनिपुङ्गवः ।
अब्रवीच्छ्रयतां राम यस्यायं पूर्व आश्रमः ॥ 9 ॥
कन्दर्पो मूर्तिमानासीत्काम इत्युच्यते बुधैः ।
तपस्यन्तमिह स्थाणुं नियमेन समाहितम् । ॥ 10 ॥
कृतोद्वाहं तु देवेशं गच्छन्तं समरुद्गणम्
धर्षयामास दुर्मेधा हुङ्कृतश्च महात्मना ॥ 11 ॥

வஸிக்கின்ருரோ, **भगवन्** பகவானே, **श्रोतुं** - (இதைக்) கேட்பதற்கு, **इच्छावः** - ஆசிக்கின்றோம், **नौ** - எங்களுக்கு, **परं** - மிக்க, **कौतूहलं हि** - குதூஹலமன்றோ !

9. (ப - ரை) **तयोः** - அவர்களுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **प्रहस्य** - சிரித்துக்கொண்டு, **मुनिपुङ्गवः** - மஹரிஷியானவர் **अब्रवीत्** - சொன்னார், **राम** - இராகவனே ! **श्रूयतां** - நீர் கேழ்க்கட்டும், **अयं** - இது **यस्य** - யாருடைய, **पूर्वः** - முன்னுளையதான, **आश्रमः** - ஆசிரமமோ !

10-11. (ப - ரை) **कन्दर्पः** - மன்மதனுனவன், **मूर्तिमान्** - சரீர முள்ளவனுக, **आसीत्** - முன்னால் இருந்தான் (எவன்), **बुधैः** - தெரிந்தவர்களால், **कामः इति** - காமனென்று, **उच्यते** - சொல்லப் படுகின்ருனே ! **दुर्मेधाः** - துர்ப்புத்திக் காரனுன, அவன், **इह** - இவ்விடத்தில், **तपस्यन्तं** - தபஸு பண்ணுகின்றவராயும், **नियमेन** - முறையுடன், **समाहितम्** - ஸமாதி நிஷ்டையிலிருப்பவராயும், **गच्छन्तं** - தனது பரி சரணக்காக பார்வதியை அடைந்திருக்கின்றவருமான, அதாவது பார்வதியினுல் பரிச

இவர்கள்தான் யார்கொலோ? ஐயனே ! இதன் சரிதத்தையறிந்து கொள்ளுவதற்கு எங்கள் மனது மிகக் குதூஹலத்துடன் துவரிக்கின்றது.

9. (க - ரை) இப்படி இவ்விரு குமாரர்களும் வினவியதைக் கேட்ட விசுவாமித்திரர் சற்று மந்தஹாஸஞ் செய்து கொண்டு, இராமா ! இது முன் யாருடைய ஆசிரமமாக விருந்த தென்பதை விளக்குகின்றேன். கேளும் என்று சொல்லத் தொடங்கினர்.

10-11. (க - ரை) இப்போது அபிக்ஞர்களால் மானஸிகமான ருசி விசேஷ, மென்று மதிக்கப் பெற்றிருக்கின்ற காம னென்பவன் முன் காலத்தில் கெட்ட கெருவ முள்ளவனுன கந்தர்ப்ப னென்கிற பெயர்கொண்ட உருவத்தோ டிருந்தான், அவனை தேவர்கள் ஒரு காரியார்த்தமாக, நியமம் தவருமல் ஸாவதானமாகத் தவம்

இங்கு பதினேராவது சுலோகத்தின் பூர்வார்த்தமான

कृतोद्वाहं तु देवेशं गच्छन्तं समरुद्गणम् ।

என்பது ருஜுவாக அன்வயத்திற்கு வராததினுல் இதை ப்ரக்ஷிப்தமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனுல் வியாக்கியாதாக்கள் வியாக்யானித்திருக்கின்ருர்கள்.

अवदग्धस्य रौद्रेण चक्षुषा रघुनन्दन ।
व्यशीर्यन्त शरीरात्स्वात्सर्वगात्राणि दुर्मतेः ॥ 12 ॥

तस्य गात्रं हतं तत्र निर्दग्धस्य महात्मना ।
अशरीरः कृतः कामः क्रोधाद्देवेश्वरेण हि ॥ 13 ॥

अनङ्ग इति विख्यातस्तदाप्रभृति राघव ।
स चाङ्गविषयः श्रीमान्यत्राङ्गं प्रमुमोच ह ॥ 14 ॥

ரணை செய்யப் பட்டிருக்கின்றவருமான, **देवेशं** - மஹேச்வரனை, **समरुद्गणम्** - தேவகணங்களோடு கூட அதாவது தேவர்களின் அனுமதியைப் பெற்று, **कृतोद्वाहं तु** - செய்யப்பட்ட விவாஹத்தை யுடையவராக அதாவது விவாஹத்தைச் செய்து கொண்டே தீரவேண்டிய அளவிற்கு, **धर्षयामास** - அதிக்கிரமித்தான் அல்லது ஹிம்ஸித்தான், அதாவது பார்வதியினிடத்தில் அபிலாஷையுண்டாகும் படியாகச் செய்து விட்டான், **महात्मना** - மஹாத்மாவான ஈச்வரனால் **हुङ्कृतश्च** - ஹூம் என்று அதட்டவும் பட்டான்.

12. (ப - ரை) **रघुनन्दन** - இராகவனே! **रौद्रेण** - ருத்திரனுடையதான, **चक्षुषा** - கண்ணால், **अवदग्धस्य** - எரிக்கப்பட்டுப்போன, **दुर्मतेः** - அந்த துர்ப்புத்தியினுடைய, **सर्वगात्राणि** - அங்கங்களெல்லாம், **स्वात्** - தன்னுடைய, **शरीरात्** - சரீரத்திலிருந்து, **व्यशीर्यन्त** - கலைந்து அழியலாயின.

13-14. (ப - ரை) **तत्र** - அங்கு, **महात्मना** - மஹேச்வரனாலே, **निर्दग्धस्य** - கொளுத்தப்பட்டிருக்கிற, **तस्य** - அவனுடைய, **गात्रं** - சரீரமானது, **हतं** - அழிந்து

செய்து கொண்டிருக்கிற மஹேச்வரனுக்குப் பரிசரணை செய்து கொண்டிருக்கும் பார்வதியின் மீது அபிலாஷை யுண்டாகும்படி செய்ய வேண்டுமென்று தூண்டி விட்டார்கள். அந்த மூடனும் மஹா தேவனுடைய பிரபாவமறியாமல் அவரிடத்திற்குச் சென்று தனது சேஷ்டையை ஆரம்பித்தான். அது கண்ட மஹேச்வரன் "ஹூம்" என்று அதட்டிக் கொண்டு கோபத்தாற் சிவந்த கண்ணால், அவனை ஒரு தரம் விழித்துப் பார்த்தார்.

12. (க - ரை) ருத்திரனுடைய உக்கிரமான அந்த நெருப்புக் கண்ணினால் எரிக்கப் படலாகின்ற அந்த துர்ப்புத்தியினுடைய காத்திரங்களெல்லாம் அவற்றின் கட்டுக் கோப்பை யிழந்து விழுந்து சிதறுண்டு போயின.

13-14. (க - ரை) மஹாத்மாவான பரமேச்வரனுடைய கோபத்திற்குப் பாத்திரனாகி காத்திரத்தை அழியக் கொடுத்துக் காமதேவன் அசரீரனாக ஆயின

तस्यायमाश्रमः पुण्यस्तस्येमे मुनयः पुरा ।
शिष्या धर्मपरा नित्यं तेषां पापं न विद्यते ॥ 15 ॥

इहाद्य रजनीं राम वसेम शुभदर्शन ।
पुण्ययोः सरितोर्मध्ये श्वस्तरिष्यामहे वयम् ॥ 16 ॥

போயிற்று, **देवेश्वरेण** - மஹாதேவனாலே, **क्रोधात्** - கோபத்தாலே, **कामः** - மன்மதனானவன், **अशरीरः** - சரீரமில்லாதவனாக, **कृतः हि** - செய்யப்பட்டானன்றோ? **तदा प्रभृति** - அதுமுதற்கொண்டு, **राघव** - இராகவனே! **अनङ्ग इति** - அனங்கன் அதாவது அங்கமில்லாதவனென்று, **विख्यातः** - பிரஸித்தியடைந்தான், **श्रीमान्** - சோபையுள்ளவனான அந்த மன்மதன், **यत्र** - எங்கே, **अङ्गं** - சரீரத்தை, **प्रमुमोच ह** - விட்டானோ, **स च** - அவ்விடமும், **अङ्गविषयः** - அங்கதேசமென்று, (பிரஸித்தமாயிற்று.)

15. (ப - ரை) **अयं** - இது, **तस्य** - அந்த மஹேச்வரனுடைய, **पुण्यः** - பாவனமான, **आश्रमः** - ஆசிரமம், **इमे** - இந்த, **मुनयः** - மஹரிஷிகள், **पुरा** - முன்னாள் தொட்டு, **तस्य** - அவ்வீசுவரனுக்கு, **शिष्याः** - சீடர்கள், **नित्यं** - எப்பொழுதும், **धर्मपराः** - தருமத்திலேயே ஆஸக்தியுள்ளவர்கள், **तेषां** - அவர்களுக்கு, **पापं** - பாபமென்பது, **न विद्यते** - கிடையாது.

16. (ப - ரை) **शुभदर्शन** - சோபனமான பார்வையையுடையவரான, **राम** - இராகவனே! **वयम्** - நாம், **अद्य** - இன்றைக்கு, **रजनीं** - இரவை, **इह** - இங்கே, **पुण्ययोः** - புண்ணியங்களான, **सरितोः** - இரண்டு ஆறுகளினுடைய, **मध्ये** - இடையில், **वसेम** - வஸிப்போம், **श्वः** - நாளைக்கு, **तरिष्यामहे** - கடந்து செல்லுவோம்.

னன்றோ. அதனால் அன்று முதல் அவனுக்கு அனங்கனென்றும், அவன் அங்கத்தை இழந்த விடத்திற்கு அனங்க விஷய மென்றும் பிரஸித்தி யுண்டாயிற்று.

15. (க - ரை) இராகவா! முன்னாளில் அந்த மஹாதேவன் தவம் செய்த பாவனமான ஆசிரம மாக்கும் இது. இப்போது இங்குள்ள மஹரிஷிக ளெல்லோரும் முன்னாளில் அவ் வீசுவரனின் அனுக்கிரஹத்தைப் பெற்று அநவரதம் தருமானுஷ்டானபரர்களாய் பாபலேச மற்றவர்களாய் விளங்கு கின்றவர்களான அவருடைய பிரிய சிஷ்யர்கள்.

16. (க - ரை) மங்களமான ஸேவையைத் தந்தருளுகின்ற உதார குண சீலனை ஸ்ரீராமசந்திரனே! இன்றிரவு இப் புண்ணிய நதிகளிரண்டிற்குமிடையில் தங்கியிருந்து, பொழுது புலர்ந்தவுடன் ஆற்றைக் கடந்து அக்கரை செல்லுவோம் என்று அங்குள்ள மஹரிஷிகளுக்கும் ஸ்ரீராமபத்திரனுடைய ஸேவை கிடைக்கவேணு மென்கிற ஆசையோடு விசுவாமித்திரர் கூறலானர்.

अभिगच्छामहे सर्वे शुचयः पुण्यमाश्रमम् ।
स्नाताश्च कृतजप्याश्च हुतहव्या नरोत्तम ॥ 17 ॥

तेषां संवदतां तत्र तपोदीर्घेण चक्षुषा ।
विज्ञाय परमप्रीता मुनयो हर्षमागमन् ॥ 18 ॥

अर्घ्यं पाद्यं तथातिथ्यं निवेद्य कुशिकात्मजे ।
रामलक्ष्मणयोः पश्चादकुर्वन्नतिथिक्रियाम् ॥ 19 ॥

17. (ப - ரை) **नरोत्तम** - புருஷசிரேஷ்டனே! **सर्वे** - நாமெல்லோரும், **स्नाताः च** - ஸ்நானம் பண்ணினவர்களாகவும், **कृतजप्याश्च** - ஜெபிக்கப்பட்ட மந்திரங்களை யுடையவர்களாயும், அதாவது மந்திர ஜெபங்களைச் செய்தவர்களாகவும், **हुतहव्याः** - ஹோமம் பண்ணப்பட்டிருக்கிற ஹவிஸை யுடையவர்களாயும், **शुचयः** - பரிசுத்தர் களாகவும், **पुण्यं** - புண்ணியமான, **आश्रमम्** - ஆசிரமத்தைக் குறித்து, **अभिगच्छामहे** - போவோம்.

18. (ப - ரை) **तेषां** - அவர்கள், **संवदतां** - இப்படி ஸல்லாபம் செய்து கொண்டிருக்கும் பொழுது, **तपोदीर्घेण** - தவத்தினால் நெடியதான, **चक्षुषा** - கண்ணால், அதாவது யோகதிருஷ்டியினால், **विज्ञाय** - அறிந்துகொண்டு, **परमप्रीताः** - அத்யந்தம் ஸந்துஷ்டி யடைந்தவர்களான, **मुनयः** - மஹரிஷிகள், **हर्षं** - ஆனந்தத்தை அல்லது புளகோத்கமத்தை, **आगमन्** - அடைந்தார்கள்.

19. (ப - ரை) **अर्घ्यं** - பூஜைக்கான தீர்த்தத்தையும், **पाद्यं** - பாதம் அலம்பு வதற்காக ஜலத்தையும், **तथा** - அப்படியே, **आतिथ्यं** - ஆசனம் மதுபர்க்கம் முத

17. (க - ரை) நரோத்தமனே! இப் புண்ணிய நதியில் ஸ்நானம் பண்ணி ஸந்தியா ஜெபங்களை முடித்துக்கொண்டு அக்கினியைப் பூஜித்து விட்டு பரிசுத்தர் களாக பாவனமான இவ்வாசிரமத்திற்குப் போவோம் வாரும்.

18. (க - ரை) இராகவ விசுவாமித்திரர்கள் இங்கு இப்படி ஸல்லாபஞ் செய்து கொண்டிருக்க தவத்தின் மஹிமையால் பரோக்ஷ விஷயங்களைக் கூட ஸாக்ஷாத் கரிக்கலாம்படி விரிவடைந்ததான தமது ஞானக்கண்ணினால் இவர்களுடைய வர லாற்றையறிந்து வரவேற்கக் காத்திருந்தவர்களான அந்தந்த மஹரிஷிகளெல் லோரும் அத்யந்த ஆனந்த பரிதர்களாய்ப் புளகாங்கிதரானார்கள்.

19. (க - ரை) இப்படி ஸந்தோஷத்தினால் மயிர் சிலிர்த்து நின்றவர்களான அம்மஹரிஷிகள் அர்க்கிய, பாத்ய, ஆசமன மதுபர்க்காதிகளான அதிதி பூஜைகளை

सत्कारं समनुप्राप्य कथाभिरभिरञ्जयन् ।
यथार्हमजपन्संध्यामृषयस्ते समाहिताः ॥ 20 ॥

तत्र वासिभिरानीता मुनिभिः सुव्रतैः सह ।
न्यवसन्सुसुखं तत्र कामाश्रमपदे तदा ॥ 21 ॥

லான அதிதி பூஜையையும், **कुशिकात्मजे** - கௌசிகரிடத்தில், **निवेद्य** - நிவேதனம் செய்துவிட்டு, **पश्चात्** - பிறகு, **रामलक्ष्मणयोः** - இராம லக்ஷ்மணர்களுக்கு, **अतिथि-क्रियाम्** - அதிதி பூஜையை, **अकुर्वन्** - செய்தார்கள்.

20. (ப - ரை) **ते** - அந்த, **ऋषयः** - மஹரிஷிகள், **सत्कारं** - (விசுவாமித்திரர் செய்த, ப்ரதி உபசாரரூபமான குசலப்ரசனம் முதலான) மரியாதையை, **समनु-प्राप्य** - அடைந்து, **कथाभिः** - கதைகளினால், **अभिरञ्जयन्** - திருப்தி செய்து வைத்துக்கொண்டு, **समाहिताः** - ஸாவதானமுள்ளவர்களாக, **संध्यां** - ஸாயம் ஸந்தியை, **यथार्हं** - எதாசக்தி, **अजपन्** - காயித்ரியாதி ஜெபங்களைச் செய்தார்கள்.

21. (ப - ரை) **तत्र** - அங்கே வஸிக்கின்றவர்களான, **सुव्रतैः** - நல்ல விரதங்களையுடையவர்களான, **मुनिभिः** - மஹரிஷிகளாலே, **आनीताः** - அப்படி அன்புடன் அழைத்து உபசரிக்கப்பட்டவர்களான, இராகவாதிகள், **तदा** - அப்பொழுது, **तत्र** - அந்த, **कामाश्रमपदे** - காமாசிரம ஸ்தானத்தில், **सह** - ஒன்றாகூடி, **सुसुखं** - நிறம்ப ஸுகமாக, **न्यवसन्** - வஸித்தார்கள்.

முறைப்படி கௌசிகருக்கு முதன் முதலில் செய்து வைத்து பிறகு இராமலக்ஷ்மணர்களுக்குமதனை அன்புடன் செய்து முடித்தார்கள்.

20. (க - ரை) இப்படி அவ்வாசிரம வாஸிகளான மஹரிஷிகளால் உபசரிக்கப்பெற்ற விசுவாமித்திர முனீசுவரர், அவர்களுக்குச் செய்யவேண்டிய குசல பிரச்னம் முதலான மரியாதைகளைச் செய்யவே அவர்களெல்லோரும் சில நேரம் ஸரஸமாகக் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்து ஸந்தியாகாலம் நெருங்கியவுடன் காயத்ரியாதி மஹா மந்திரங்களை ஸாவதானமாக எதாசக்தி ஜெபிப்பாராயினர்.

21. (க - ரை) அப்படி அங்குள்ள மஹரிஷிகளால் அன்புடன் ஆதரிக்கப்பெற்ற இராகவாதிகள், காமாசிரமமெனப்படும் அவ்விடத்தில் ஒன்று கூடி அவ்விரவை மிக்க ஸுகமாய்ப் போக்கினர்.

कथाभिरभिरामाभिरभिरामौ नृपात्मजौ ।
रमयामास धर्मात्मा कौशिको मुनिपुङ्गवः ॥ 22 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
त्रयोविंशः सर्गः ॥ 23 ॥

22. (ப - ரை) **धर्मात्मा** - தர்மஸ்வரூபியான, **कौशिकः** - கௌசிகரெனப்படுகின்ற, **मुनिपुङ्गवः** - முனிசிரேஷ்டரானவர், **अभिरामाभिः** - ரமணீயங்களான, **कथाभिः** - கதைகளினால், **अभिरामौ** - மனோக்யர்களான, **नृपात्मजौ** - இராஜகுமாரர்களை, **रमयामास** - ஸந்தோஷிப்பித்தார்.

---

22. (க - ரை) தர்மாத்மாவான அந்தக் கௌசிகமாமுனிவர் செவிக்கினிய கதைகள் பலவற்றைச்சொல்லி மனத்துக்கினியவர்களான அவ்வரசிளங் குமாரர்களை அவ் விரவில் நெடுநேரம் ஸந்தோஷப் படுத்திக் கொண்டேயிருந்தார்.

चतुर्विंशः सर्गः ॥ 24 ॥

ततः प्रभाते विमले कृताह्निकमरिन्दमौ ।
विश्वामित्रं पुरस्कृत्य नद्यास्तीरमुपागतौ ॥ 1 ॥

ते च सर्वे महात्मानो मुनयः संशितव्रताः ।
उपस्थाप्य शुभां नावं विश्वामित्रमथाब्रुवन् ॥ 2 ॥

आरोहतु भवान्नावं राजपुत्रपुरस्कृतः ।
अरिष्टं गच्छ पन्थानं माभूत्कालविपर्ययः ॥ 3 ॥

---

1. (ப - ரை) **ततः** - பிறகு, **प्रभाते** - ப்ராதக்காலமானது, **विमले** - நிர்மலமானவளவில், **अरिन्दमौ** - சத்ருக்களை அடக்கும் திறமை யுள்ளவர்களான இராமலக்ஷ்மணர்கள், **कृताह्निकं** - செய்யப்பட்ட காலைக்கடனை யுடையவரான, **विश्वामित्र** - விசுவாமித்திர மஹரிஷியை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **नद्याः** - கெங்கையினுடைய, **तीरं** - கரையை, **उपागतौ** - வந்தடைந்தார்கள்.

2. (ப - ரை) **महात्मानः** - மஹாத்மாக்களாய், **संशितव्रताः** - புகழப்படுகின்ற விரதங்களுடையவர்களான, **ते** - அந்த, **सर्वे च मुनयः** - ரிஷிகள் எல்லோரும், **शुभां** - மங்களமான, **नावं** - ஓடத்தை, **उपस्थाप्य** - கொண்டு வந்து வைத்து, **अथ** - பிறகு, **विश्वामित्र** - விசுவாமித்திரரை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

3. (ப - ரை) **भवान्** - தாங்கள், **राजपुत्रपुरस्कृतः** - இராஜ குமாரர்களை முன்னிட்டுக் கொண்டவர்களாக, **नावं** - ஓடத்தை, **आरोहतु** - ஏறட்டும், **अरिष्टं** - மங்களமுண்டாகும்படி, **पन्थानं** - வழியை, **गच्छ** - கடந்து செல்லுங்கள், **कालविपर्ययः** - கால விளம்பமானது, **माभूत्** - உண்டாகவேண்டாம்.

---

1. (க - ரை) மறுநாள் காலையில் கிழக்கு வெளுக்கும்போதே மஹா வீரர்களான இராகவர்கள் காலைக்கடனை முடித்துக்கொண்டு பிரயாணப்பட்ட விசுவாமித்திரரை முன்னிட்டுக்கொண்டு கெங்கைக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

2. (க - ரை) அப்போது மஹா விரத சீலர்களான அம்முனிவர்களெல்லோரும் சோபனமான ஓட மொன்றை அங்கு கொண்டு வந்து நிறுத்தி விசுவாமித்திரரைப் பார்த்துக் கூறுகின்றார்கள்.

3. (க - ரை) தாங்கள் இவ்விராஜ குமாரர்களோடு ஓடத்திலேறி ஸுகமாக வழியைக் கடந்து காலவிளம்பமன்றி அக்கரை செல்லுங்கள் என்று ரிஷிகள் பிரார்த்தித்தனர்.

विश्वामित्रस्तथेत्युक्त्वा तानृषीनभिपूज्य च ।
ततार सहितस्ताभ्यां सरितं सागरंगमाम् ॥ 4 ॥

ततः शुश्राव वै शब्दमतिसंरम्भवर्धितम् ।
मध्यमागम्य तोयस्य सह रामः कनीयसा ॥ 5 ॥

अथ रामः सरिन्मध्ये पप्रच्छ मुनिपुङ्गवम् ।
वारिणो भिद्यमानस्य किमयं तुमुलो ध्वनिः ॥ 6 ॥

4. (ப - ரை) **विश्वामित्रः** - *விசுவாமித்திரர்*, **तथा** - *அப்படியே*, **इति** - *என்று*, **उक्त्वा** - *சொல்லி*, **तान्** - *அந்த*, **ऋषीन्** - *ரிஷிகளை*, **अभिपूज्य च** - *பூஜித்தும் விட்டு*, **ताभ्यां** - *அந்த இராம லக்ஷ்மணர்களோடு*, **सहितः** - *கூடினவராக*, **सागरंगमाम्** - *ஸமுத்திரத்தை யடைகின்ற*, **सरितं** - *அந்த கெங்கா நதியை*, **ततार** - *கடந்து சென்றார்.*

5. (ப - ரை) **ततः** - *பிறகு*, **तोयस्य** - *ஜலத்தினுடைய*, **मध्यं** - *மத்தியப்பிரதேசத்தை*, **आगम्य** - *வந்தடைந்து*, **अतिसंरम्भवर्धितम्** - *அதிகமான கொந்தளிப்பினலே விருத்தியை யடைந் திருக்கின்ற*, **शब्दं** - *முழக்கத்தை*, **रामः** - *இராமனனவர்*, **कनीयसा सह** - *தம்பியோடு கூட*, **शुश्राव वै** - *ஆச்சரியத்துடன் கேட்டார்.*

6. (ப - ரை) **अथ** - *பிறகு*, **रामः** - *இராமன்*, **सरिन्मध्ये** - *ஆற்றின் நடுவில்*, **मुनिपुङ्गवम्** - *முனிவரரை*, **पप्रच्छ** - *கேட்கலானர்*, **भिद्यमानस्य** - *கலந்துகொள்ளுகிற*, **वारिणः** - *ஜலத்தினுடைய*, **अयं** - *இந்த*, **तुमुलः** - *நிபிடமான*, **ध्वनिः** - *சப்தமானது*, **किं** - *என்ன சப்தம்? அதாவது ஏதனலுண்டாகியது.*

4. (க - ரை) *விசுவாமித்திரரோ வெனில் அவ் வேண்டுகோளை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்காக அவர்களுக்கு நன்றியையும் அறிவித்து விட்டு இராம லக்ஷ்மணர்களோடு ஓடத்திலேறி அக்கரையைக் குறித்துச் செல்லுவாராயினர்.*

5. (க - ரை) *இப்படிப் புறப்பட்ட ஓடமானது கெங்கையின் நடு ஜலத்திற்கு வரும்போது அங்கு அலைகள் அதிகரித்து ஒன்ருெடொன்று மோதிக்கொண்டு அதனல் அவ்வாறு கொந்தளித்துக் கோஷிக்கின்ற ஓசையை இராஜகுமாரர்கள் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.*

6. (க - ரை) *அப்போது இராமபத்திரன் ஜலம் மோதிக் கொள்ளுவதினல் உண்டாகியது போன்ற இந்த கெட்டியான ஓசையானது எதினலுண்டாகியது என்று ஆற்றின் நடுவிலேயே விசுவாமித்திரரைக் கேட்கலானர்.*

राघवस्य वचः श्रुत्वा कौतूहलसमन्वितम् ।
कथयामास धर्मात्मा तस्य शब्दस्य निश्चयम् ॥ 7 ॥

कैलासपर्वते राम मनसा निर्मितं सरः ।
ब्रह्मणा नरशार्दूल तेनेदं मानसं सरः ॥ 8 ॥

तस्मात्सुस्राव सरसः सायोध्यामुपगूहते ।
सरः प्रवृत्ता सरयूः पुण्या ब्रह्मसरश्च्युता ॥ 9 ॥

तस्यायमतुलः शब्दो जाह्नवीमभिवर्तते ।
वारिसंक्षोभजो राम प्रणामं नियतः कुरु ॥ 10 ॥

---

7. (ப - ரை) **कौतूहलसमन्वितम्** - குதூஹலத்துடன் கூடியதான, **राघवस्य** - இராமனுடைய, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **धर्मात्मा** - தர்மாத்மாவான விசுவாமித்திரர், **तस्य** - அந்த, **शब्दस्य** - சப்தத்தைப் பற்றிய, **निश्चयम्** - நிச்சயமான விருத்தாந்தத்தை, **कथयामास** - சொன்னார்.

8. (ப - ரை) **राम** - இராமனே! **कैलासपर्वते** - கைலை மலையில், **ब्रह्मणा** - பிரும்ஹாவினால், **मनसा** - மனதினாலே, **निर्मितं** - ஸிருஷ்டிக்கப் பட்ட, **सरः** - ஸரஸ்ஸு ஒன்றிருக்கின்றது, **नरशार्दूल** - நரோத்தமனே! **तेन** - ஆனதினால், **इदं** - இந்த, ஸரஸானது (குளமானது), **मानसं सरः** - மானஸ ஸரஸ்ஸு எனப்படுகிறது.

9. (ப - ரை) **तस्मात्** - அந்த, **सरसः** - ஸரஸிலிருந்து, **सुस्राव** - ஓர் ஆறு பெருகிற்று, **सा** - அந்த நதியானது, **अयोध्यां** - அயோத்திமா நகரத்தை, **उपगूहते** - அணைந்து கொண்டாற் போல வளைந்து செல்லுகின்றது, **सरः प्रवृत्ता** - ஸரஸிலிருந்து பெருகியதாயிருக்கின்றமையால், **सरयूः** - ஸரையூ எனப்படுகின்றது, **ब्रह्मसरश्च्युता** - பிரும்ஹாவினால் நிருமிக்கப் பட்ட ஸரஸிலிருந்து பிரவஹித்ததாயிருக்கின்றமையினால், **पुण्या** - மிக்க பாவனமாயுமிருக்கின்றது.

10. (ப - ரை) **अयं** - இந்த, **अतुलः** - நிகரற்றதான, **शब्दः** - சப்தமானது, **जाह्नवीं** - கெங்கையை, **अभिवर्तते** - எந்த நதியானது வந்தடைகின்றதோ, **तस्याः** -

7. (க - ரை) இப்படி குதூஹலத்துடன் கேட்கின்ற இராகவனுக்கு மஹரிஷி அது ஜலப்பிரவாஹங்களின் கலப்பினாலுண்டான சப்தம் தானென்பதை விவரித்துக் கூறுகின்றார்.

8-10. (க - ரை) இராகவா! கைலைமலையில் தெள்ளிய தண்ணீர் நிறைந்த அகாதமாக ஒரு (ஹிருதம்) ஓடையுண்டு. அதை பிரும்ஹதேவன் மனதினால் படைத்தமையால் அதற்கு மானஸ ஸரஸ்ஸு என்று பெயருண்டாயிற்று. அம்மடுவிலிருந்து ஜலம் ததும்பிப் பெருகி ஆறாக ஓடிற்று. ஸரஸிலிருந்து வழிந்தோடி

ताभ्यां तु तावुभौ कृत्वा प्रणाममति धार्मिकौ ।
तीरं दक्षिणमासाद्य जग्मतुर्लघुविक्रमौ ॥ 11 ॥

स वनं घोरसंकाशं दृष्ट्वा नृपवरात्मजः ।
अविप्रहतमैक्ष्वाकः पप्रच्छ मुनिपुङ्गवम् ॥ 12 ॥

அந்த ஸரையூ நதியினுடைய, **वारिसंक्षोभजः** - ஜலத்தினுடைய மோதப்பத்தாலுண்டாகியது, **राम** - இராகவா! **नियतः** - நியமமுள்ளவனாக, **प्रणामं** - நமஸ்காரத்தை, **कुरु** - செய்.

11. (ப - ரை) **अतिधार्मिकौ** - அத்தியந்தம் தார்மிகர்களான, **तौ** - அந்த, **उभौ** - இருவர்களும், **ताभ्यां तु** - அந்த கெங்கை, ஸரயூ இவ்விரு நதிகளின் பொருட்டும், **प्रणामं** - நமஸ்காரத்தை, **कृत्वा** - செய்து, **दक्षिणं** - தெற்கான, **तीरं** - கரையை, **आसाद्य** - அடைந்து, **लघुविक्रमौ** - மிருதுவான நடை யுள்ளவர்களாக, **जग्मतुः** - சென்றார்கள்.

12. (ப - ரை) **ऐक्ष्वाकः** - இக்ஷ்வாகு வம்சத்திற் தோன்றியவரான, **सः** - அந்த, **नृपवरात्मजः** - சக்கிரவர்த்தி குமாரர், **घोरसंकाशं** - கடோரமான ரூபத்தை யுடையதாயும், **अविप्रहतं** - கால் அடி படாததாயுமிருக்கின்ற அதாவது ஜன ஸஞ்சார மற்றிருக்கின்ற, **वनं** - காட்டை, **दृष्ट्वा** - பார்த்து, **मुनिपुङ्गवम्** - முனீச்வரரை, **पप्रच्छ** - கேட்கலானார்.

வந்தமையினால் அவ்வாற்றை ஸரயூநதி யென்று வழங்குகின்றார்கள். அந்த நதி அயோத்திமா நகரத்தை அணைத்துக் கொண்டாற் போல மேற்கிலிருந்து வடக்கே ஓடி கிழக்கே திரும்பி வருகின்றது. சதுர் முகன் நிருமித்த ஸரஸிலுண்டான புண்ணியமான அந்த நதியானது இங்கு கெங்கையில் வந்து விழுகின்றது. இப்போது கேழ்க்கும் பேரொலியானது அதன் நீர் வீழ்ச்சியினாலுண்டாகியதாகும். இராமா! மிக்கப் பாவனமான இப் புண்ணிய நதி ஸங்கமத்திற்கு நமஸ்காரத்தைச் செய்வீராக, என்று இராமனைப் பார்த்து விசுவாமித்திரர் கூறி முடித்தார்.

11. (க - ரை) அதின் படியே இராம லக்ஷ்மணரிருவரும், அப் புண்ணிய நதிகளை நமஸ்கரித்து விட்டு தென்கரை யடைந்து மெள்ள நடந்து சென்றார்கள்.

12. (க - ரை) அப்படிப் போய்க் கொண்டிருக்கையில், ஸ்ரீராகவனவர் ஜன ஸஞ்சார மற்று அதி உக்ரமாகத் தோன்றிய ஒரு காட்டைப்பார்த்து விட்டு, தனது வம்சத்திற்குள்ள வீரத்தோடு விசுவாமித்திரரைக் கேட்கலானார்.

अहो वनमिदं दुर्गं झिल्लिकागणनादितम् ।
भैरवैः श्वापदैः पूर्णं शकुन्तैर्दारुणारुतैः ॥ 13 ॥

नानाप्रकारैः शकुनैर्वाश्यद्भिर्भैरवस्वनैः ।
सिंहव्याघ्रवराहैश्च वारणैश्चोपशोभितम् ॥ 14 ॥

धवाश्वकर्णककुभैर्बिल्वतिन्दुकपाटलैः ।
संकीर्णं बदरीभिश्च किंन्वेतद्दारुणं वनम् ॥ 15 ॥

13. (ப - ரை) **अहो** - ஆச்சரியம்! **इदं** - இந்த, **वनं** - வனமானது, **दुर्गं** - பிரவேசிக்க முடியாததா யிருக்கின்றது, **झिल्लिकागणनादितम्** - சுவற் கோழிகளுடைய ஸமூஹங்களினுலே சப்தமுள்ளதாயிருக்கின்றது, **भैरवैः** - பயங்கரங்களான, **श्वापदैः** - கொடிய விலங்குகளினுலேயும், **दारुणारुतैः** - கடுங் கூச்சலுள்ளவைகளான, **शकुन्तैः** - பக்ஷிகளினுலும், **पूर्णं** - நிறைந் திருக்கின்றது.

14. (ப - ரை) **नानाप्रकारैः** - அநேக விதங்களாயும், **वाश्यद्भिः** - கறைகின்றவைகளுமான, அதாவது அருவருக்கலாம்படி கூச்சலிடுகின்றவைகளான, **शकुनैः** - பக்ஷிகளினுலும், **भैरवस्वनैः** - கடோரமான த்வனி யுள்ளவைகளான, **सिंहव्याघ्रवराहैश्च** - சிங்கம், புலி, கரடிகளினுலும், **वारणैश्च** - யானைகளினுலும், **उपशोभितम्** - விளங்கா நிற்கின்றது.

15. (ப - ரை) **धवाश्वकर्णककुभैः** - வெள்வேல மரம், ஆச்சா மரம், மருதை மரம், **बिल्वतिन्दुकपाटलैः** - வில்வ மரம், காட்டுத் தும்பை மரம், பாதரி மரம், **बदरीभिश्च** - இலந்தை மரம் ஆகிய இம் மரங்களினுல், **संकीर्णं** - நிறைந்திருக்கின்றதாயும், **दारुणं** - கடோரமாயு மிருக்கின்ற, **एतत्** - இந்த, **वनं** - காடானது, **किंनु** - என்ன பெயருள்ளதோ?

13-15. (க - ரை) அம்மம்மா! இந்த வனம் மிக்க தாருணமாயிருக்கின்றது. இதில் எவரும் அஞ்சாமல் உள்ளே நுழைவதற்கில்லை. எப் புறத்திலும் அருவருப்பான சுவற் கோழியின் சத்தம், எங்கு பார்த்தாலும் ஓநாய் முதலிய கொடிய விலங்குகளின் நடமாட்டம், கண்ட விடங்களெல்லாம் கர்னகடோரமாகக் கறைகின்ற பாஸம் முதலான பக்ஷிகளின் கூட்டம், ஆங்காங்கு காடு முற்றவும் நடுக்கமுறும் படியாகக் கர்ஜிக்கின்ற சிங்கம், புலி, கரடிகளின் ஆர்ப்பாட்டம், சுற்று முற்றும் மத்தவாரணங்களுடைய அழகிய ஸஞ்சாரம். இந்த வனத்தில் வெள் வேலம், ஆச்சா, மருதை, வில்வம், தும்பை, பாதிரி, இலந்தை இவைபோன்ற மரங்கள் எங்கும் நிறைந்து கிடக்கின்றனவே? இப் பெருங்காட்டின் பெயர்தான் என்னவோ? என்று விசுவாமித்திரரை இராம பத்திரன் வினவலானுர்.

तमुवाच महातेजा विश्वामित्रो महामुनिः ।
श्रूयतां वत्स काकुत्स्थ यस्यैतद्दारुणं वनम् ॥ 16 ॥

एतौ जनपदौ स्फीतौ पूर्वमास्तां नरोत्तम ।
मलदाश्च करूशाश्च देवनिर्माणनिर्मितौ ॥ 17 ॥

पुरा वृत्रवधे राम मलेन समभिप्लुतम् ।
क्षुधा चैव सहस्राक्षं ब्रह्महत्या समाविशत् ॥ 18 ॥

16. (ப - ரை) **महातेजाः** - மஹத்தான தேஜஸை யுடையவரான, **महामुनिः** - முனீச்வரரான, **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **तं** - அந்த இராகவனை, **उवाच** - சொன்னார், **वत्स** - குழந்தாய்! **काकुत्स्थ** - காகுத்தனே! **श्रूयतां** - நீ கேட்கட்டும், **एतत्** - இந்த, **दारुणं** - கடோரமான, **वनम्** - காடானது, **यस्य** - எவனுடையதோ!

17. (ப - ரை) **नरोत्तम** - புருஷோத்தமனே! **एतौ** - இவைகள், **पूर्वं** - முன் காலத்தில், **देवनिर्माणनिर्मितौ** - தெய்வ ஸ்ருஷ்டி போல நிருமிக்கப்பட்டவைகளான, **मलदाश्च** - மலத மென்றும், **करूशाश्च** - கரூச மென்றும் பிரஸித்தங்களான, **स्फीतौ** - ஸமிருத்தங்களான, **जनपदौ** - தேசங்களாக, **आस्तां** - இருந்தன.

18. (ப - ரை) **राम** - இராகவனே! **पुरा** - முன் காலத்தில், **वृत्रवधे** - விருத்திராஸுரனுடைய வதமானது, செய்யப்பட்ட வளவில், **मलेन** - அசுத்தியினாலும், **क्षुधा चैव** - பசியினாலும், **समभिप्लुतम्** - வியாப்தமாகும்படி, அதாவது அவற்றால் உபத்திரவப்படும்படி, **सहस्राक्षं** - இந்திரனை, **ब्रह्महत्या** - பிரும்மஹத்தி தோஷமானது, **समाविशत्** - பற்றிக் கொண்டது.

16-20. (க - ரை) இப்படி விஸ்மயத்துடன் ஸ்ரீ ராகவன் வினவியதற்கு, விசுவாமித்திரர் விவரமாய் விடையளிக்கின்றார். குழந்தாய் காகுத்தனே! இவ்விடம் முன்னொரு காலத்தில் தனதான்யாதி ஸர்வஸமிருத்தி யுள்ளவைகளாயும் தேவ நிருமாணம் போன்றவைகளாயும், "மலதம் கரூசம்" என்ற பெயருள்ளதுகளுமான இரண்டு தேசங்களாக விருந்தது. இத் தேசங்களுக்கு அப்பெயர் வந்தது எதனாலெனில் தேவேந்திரன் விருத்திராஸுரனைக் கொன்றானன்றோ! அப்போது அவனை பிரும்மஹத்திதோஷம் பற்றிக்கொண்டது. அதனாலவன் மிக்க அசுத்தியை யடைந்து பொறுக்க மாட்டாத பசியினாலும் வருந்தினான். தேவர்களும், தபோதனர்களான ரிஷிகளுங் கூடி அவ் விந்திரனை பற்பல புண்ணிய தீர்த்தங்

तमिन्द्रं स्नापयन्देवा ऋषयश्च तपोधनाः ।
कलशैः स्नापयामासुर्मलं चास्य प्रमोचयन् ॥ 19 ॥

इह भूम्यां मलं दत्वा दत्वा कारूशमेव च ।
शरीरजं महेन्द्रस्य ततो हर्षं प्रपेदिरे ॥ 20 ॥

निर्मलो निष्करूशश्च शुचिरिन्द्रो यदाऽभवत् ।
ददौ देशस्य सुप्रीतो वरं प्रभुरनुत्तमम् ॥ 21 ॥

19. (ப - ரை) **देवाः** - தேவர்களும், **तपोधनाः** - தவத்தையே திரவியமாகக் கொண்டவர்களான, **ऋषयश्च** - ரிஷிகளும், **तं** - அந்த, **इन्द्रं** - இந்திரனை, **स्नापयन्** - கெங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராட்டி வைத்தார்கள் (பிறகு), **कलशैः** - மந்திரித்த தீர்த்தக் குடங்களினாலும், **स्नापयामासुः** - ஸ்நானம் செய்து வைத்தார்கள், **अस्य** - இவனுடைய, **मलं च** - கல்மிஷத்தையும், **प्रमोचयन्** - போக்கி வைத்தார்கள்.

20. (ப - ரை) **इह** - இந்த, **भूम्यां** - பிரதேசத்தில், **महेन्द्रस्य** - தேவேந்திரனுடைய, **शरीरजं** - உடம்பிலுண்டான, **मलं** - மலத்தை, **दत्वा** - கொடுத்து, **कारूशमेव च** - காரூசத்தையும், அதாவது, பசியையும், **दत्वा** - கொடுத்து, **ततः** - அதனால், **हर्षं** - ஸந்தோஷத்தை, **प्रपेदिरे** - அடைந்தார்கள்.

21. (ப - ரை) **इन्द्रः** - இந்திரனானவன், **यदा** - எப்பொழுது, **निर्मलः** - மலமற்றவராயும், **निष्करूशश्च** - கரூசமற்றவராயும், **शुचिः** - பரிசுத்தராகவும், **अभवत्** - ஆனாரோ (அப்பொழுது), **सुप्रीतः** - மிக்கப் பிரியமடைந்தவரான, **प्रभुः** - அந்தப் பிரபுவானவர், **देशस्य** - அந்த தேசத்திற்கு, **अनुत्तमम्** - உயர்வற்றதான, **वरं** - வரத்தை, **ददौ** - கொடுத்தார்.

களுக்கு இட்டுச் சென்று முழுக்காட்டி வைத்து, மந்திரித்த தீர்த்த கலசங்களையும் ஊற்றி அவனுடைய கல்மிஷத்தையும், பசியையும் இப்பிரதேசத்தில் தரையில் கழித்து விட்டு அவனை அவ்வுபத்திரவத்தினின்றும் விடுவித்து ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

21-23. (க - ரை) இந்திரனும் அழுக்கற்று இடுக்கண் நீங்கிச் சுத்தி பெற்று அத் தேசத்தின் மீது மிகுந்த பிரியமுள்ளவனாக தனது மலகரூசங்களை ஏந்திக்

इमौ जनपदौ स्फीतौ ख्यातिं लोके गमिष्यतः ।
मलदाश्च करूशाश्च ममाङ्गमलधारिणौ ॥ 22 ॥

साधु साध्विति तं देवाः पाकशासनमब्रुवन् ।
देशस्य पूजां तां दृष्ट्वा कृतां शक्रेण धीमता ॥ 23 ॥

एतौ जनपदौ स्फीतौ दीर्घकालमरिंदम ।
मलदाश्च करूशाश्च मुदितौ धनधान्यतः ॥ 24 ॥

22. (ப - ரை) **मम** - என்னுடைய, **अङ्गमलधारिणौ** - சரீரத்தின் கசமலங்களைத் தாங்கினவைகளான, **इमौ** - இந்த, **जनपदौ** - தேசங்கள், **स्फीतौ** - ஸம்ருத்தியுள்ளவைகளாக, **लोके** - உலகத்தில், **मलदाश्च** - மலத மென்றும், **करूशाश्च** - கருச மென்றும், **ख्यातिं** - பிரக்கியாதியை, **गमिष्यतः** - அடையப் போகின்றன.

23. (ப - ரை) **धीमता** - புத்திமானான, **शक्रेण** - இந்திரனால், **कृतां** - செய்யப்பட்ட, **तां** - அந்த, **देशस्य** - தேசத்தினுடைய, **पूजां** - பூஜையை, அதாவது தேசத்திற்குச் செய்த மரியாதையை, **दृष्ट्वा** - பார்த்துவிட்டு, **देवाः** - தேவர்கள், **साधु साधु इति** - நல்லது, நல்லது என்று, **तं** - அந்த, **पाकशासनं** - இந்திரனை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

24. (ப - ரை) **अरिंदम** - சத்துருதமனரான இராகவா! **मलदाश्च** - மலத மென்றும், **करूशाश्च** - கருச மென்றும் (சொல்லப்படுகிற) **एतौ** - இந்த, **जनपदौ** - தேசங்கள், **दीर्घकालं** - நெடுநாள் வரை, **स्फीतौ** - புஷ்டியுள்ளவைகளாயும், **धनधान्यतः** - தனம் தானியம் இவைகளினால், **मुदितौ** - ஸந்துஷ்டங்களாகவும், (இருந்தன.)

கொண்டதினால் அவற்றிற்கு முறையே மலதம், கருசம் என்று கியாதி உண்டாகக் கடவது என்று வரத்தையளித்தான். தேவர்களும் தருணத்தில் தக்கபடி நடந்து கொண்ட அம்மேதாவியை பேஷ், பேஷ் என்று வெகுவாகப் பிரசம்ஸித்தார்கள்.

24. (க - ரை) துஷ்டஸம்ஹாரனை ஸ்ரீராமபத்திரனே! இப்படி "மலதம்" என்றும், "கருசம்" என்றும் பெயர் பெற்ற இத் தேசங்கள் நெடுநாள்-வரைக்கும் தன தானியங்கள் நிறைந்து அதனால் ஆனந்தம் மிகுந்து விளங்கி வந்தன.

कस्यचित्त्वथ कालस्य यक्षी वै कामरूपिणी ।
बलं नागसहस्रस्य धारयन्ती तदा ह्यभूत् ॥ 25 ॥
ताटका नाम भद्रं ते भार्या सुन्दस्य धीमतः ॥ 25½ ॥
मारीचो राक्षसः पुत्रो यस्याः शक्रपराक्रमः ॥ 26 ॥
वृत्तबाहुर्महावीर्यो विपुलास्यतनुर्महान् ।
राक्षसो भैरवाकारो नित्यं त्रासयते प्रजाः ॥ 27 ॥

25-25½. (ப - ரை) **अथ** - பிறகு, **कस्यचित्** - ஒரு சில, **कालस्य** - காலத்திற்கு (மேல்) அதாவது சில காலஞ் செல்லவே, **तदा हि** - அப்போதே, **नागसहस्रस्य** - யானைகளின் ஆயிரத்தினுடைய, அதாவது ஆயிரம் யானைகளுடைய, **बलं** - பலத்தை, **धारयन्ती** - தரிக்கின்றவளாயும், **धीमतः** - புத்திமானாகிய, **सुन्दस्य** - ஸுந்தனுக்கு, **भार्या** - பெண்டாட்டியுமான, **ताटकानाम** - தாடகை யென்கிற, **कामरूपिणी** - காமரூபியான, **यक्षी वै** - யெக்ஷ ஸ்திரீ ஒருத்தி, **अभूत्** - உண்டானாள், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக.

26-27. (ப - ரை) **यस्याः** - எங்களுக்கு, **शक्रपराक्रमः** - இந்திரனைப்போன்ற பராக்கிரமத்தை யுடையவனாய், **वृत्तबाहुः** - திரண்ட கைகளை யுடையவனாய், **महावीर्यः** - மகத்தான வீரியமுள்ளவனாய், **विपुलास्यतनुः** - விசாலமான முகத்தையும், சரீரத்தையும் உடையவனாய், **महान्** - மிக்கப் பெரியவனான, **मारीचः** - மாரீசனென்கிற, **राक्षसः** - அரக்கனானவன், **पुत्रः** - புத்திரனே, **भैरवाकारः** - பயங்கரமான ஆகிருதியுடையவனான, **राक्षसः** - அவ்விராக்கதன், **नित्यं** - என்றைக்கும், **प्रजाः** - பிரஜைகளை, **त्रासयते** - பயமுறுத்துகின்றான்.

25-27. (க - ரை) இப்படி வெகு நாட்கழியவே ஒரு பொழுதில் யெக்ஷனொருவனுக்கு, காமரூபிணியாய், பிறக்கும் போதே ஆயிரம் யானை பலமுள்ளவளான, தாடகை யென்கிற பெண் ணொருத்தி பிறந்தாள். அவளை வெகு தீரனான "ஸுந்தன்" என்பவன் விவாஹித்துக் கொண்டான். தாடகை அப்போது "மாரீசன்" என்கிற ஒரு பிள்ளையைப் பெற்றாள். அவன் இந்திரனைப் போன்ற பராக்கிரமசாலி, மஹத்தான வீரிய முள்ளவன். அதற்கறிகுறியாக திரண்ட தோள்களும், விரிந்த முகமும் பருத்த சரீரமும் கொண்ட ஓர் போர் வீரன். கண்டால் கெதிகலங்கி விடும்படியான தன் ஆகிருதியைக்கொண்டு அவ்விராக்கதன் எப்போதும் பிரஜைகளையெல்லாம் வருத்தி பயங்கொடுத்துக்கொண்டு திரிகின்றான்.

इमौ जनपदौ नित्यं विनाशयति राघव ।
मलदांश्च करूशांश्च ताटका दुष्टचारिणी ॥ 28 ॥
सेयं पन्थानमावार्य वसत्यध्यर्धयोजने ।
अत एव च गन्तव्यं ताटकाया वनं यतः ॥ 29 ॥
स्वबाहुबलमाश्रित्य जहीमां दुष्टचारिणीम् ।
मन्नियोगादिमं देशं कुरु निष्कण्टकं पुनः ॥ 30 ॥
न हि कश्चिदिमं देशं शक्नोत्यागन्तुमीदृशम् ।
यक्षिण्या घोरया राम उत्सादितमसह्यया ॥ 31 ॥

28. (ப - ரை) **दुष्टचारिणी** - துராசார சீலையான, **ताटका** - தாடகையான வள், **मलदांश्च** - மலதமென்றும், **करूशांश्च** - கரூசமென்றும் சொல்லப்படுகிற, **इमौ** - இந்த, **जनपदौ** - தேசங்களை, **राघव** - இராமா! **नित्यं** - எப்பொழுதும், **विनाशयति** - அழிக்கின்றாள்.

29. (ப - ரை) **सा इयं** - அப்படிப்பட்ட இவள், **पन्थानं** - வழியை, **आवार्य** - மரித்துக்கொண்டு, **अध्यर्धयोजने** - ஒன்றரைக்காத தூரத்தில், **वसति** - வஸிக்கின்றாள், **यतः** - எந்த இடக்கில், **ताटकायाः** - தாடகையினுடைய, **वनं** - வனமிருக்கின்றதோ, **अत एव च** - அதன் வழியாகவேதான், **गन्तव्यं** - போகவேண்டும்.

30. (ப - ரை) **स्वबाहुबलमाश्रित्य** - உமது தோள்வலியைக் கொண்டு, **इमां** - இந்த, **दुष्टचारिणीम्** - துர்விருத்தையை, **जहि** - கொல்லும், **मन्नियोगात्** - எனது கோறிக்கையினால், **इमं** - இந்த, **देशं** - இடத்தை, **पुनः** - மறுபடியும், **निष्कण्टकं** - உபத்திரவமே யில்லாததாக, **कुरु** - செய்துவையும்.

31-32. (ப - ரை) **राम** - இராமனே! **घोरया** - கடோரையாயும், **असह्यया** -

28-30. (க - ரை) துராசாரையான தாடகையோ வெனில் இவ்வழகிய தேசங்களை யழித்துப் பாழாக்கியே விட்டாள். அந்த துஷ்டை இங்கிருந்து ஒன்றரைக்காதம் தூரத்திற்குள்ளேயேதான் குடியிருக்கின்றாள். அவள் குடியிருக்கும் காட்டிற் புகுந்துதான் நாம் அப்புறம் போகவேண்டும். அவள் வழிப்போக்கர் எவருக்கும் இடம் விடாமல் வழிமரித்துப் போராடுவாள். குமாரா! உமது பாஹுபலத்தைக் கொண்டு அந்த துஷ்ட பிசாசத்தை நீர் தொலைத்துவிட வேண்டும். யான் உம்மை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இவ்விடத்தை நிர்ப்பயமாய் எல்லோரும் ஸஞ்சரிக்கலாம்படி இங்குள்ள முள்ளைக் களைந்துவையும்.

31-32. (க - ரை) இராகவா! ஸஹிக்க முடியாத அட்டூழியத்தைச் செய்

एतत्ते सर्वमाख्यातं यथैतद्दारुणं वनम् ।
यक्ष्या चोत्सादितं सर्वमद्यापि न निवर्तते ॥ 32 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
चतुर्विंशः सर्गः ॥ 24 ॥

(அதனால்) அஸாத்தியையாயுமிருக்கின்ற, **यक्षिण्या** *- அந்த யெக்ஷியினாலே,* **उत्सा-दितं** *- நாசப்படுத்தப்பட்ட,* **इमं** *- இந்த,* **ईदृशम्** *- இப்படிப்பட்ட,* **देशं** *- தேசத்தை,* **आगन्तुं** *- வருவதற்கு,* **कश्चित्** *- ஒருவரும்,* **न हि शक्नोति** *- சக்தராக விருக்கவே யில்லை,* **एतत्** *- இந்த,* **वनम्** *- வனமானது,* **यथा** *- எப்படி,* **दारुणं** *- கடுங்கானனமா யிற்றோ?* **यक्ष्या च** *- அரக்கியினாலும்,* **उत्सादितं** *- அழிக்கப்பட்டதோ,* **अद्यापि** *- இன்றைக்கும்,* **सर्वं** *- அந்த உபத்திரவமெல்லாம்,* **न निवर्तते** *- விலகியபாடில்லையோ,* **एतत्** *- இந்த,* **सर्वं** *- எல்லா விஷயமும்,* **ते** *- உமக்கு;* **आख्यातं** *- விஸ்தரித்துக் கூறப்படலாயிற்று.*

கின்ற இப்பழிகாரியினால் புண்ணியமான இவ்வனத்திற்குள் எவரும் கண்ணியமாய் நுழைவதற்கு இயலாமற் போயிற்று. ஆஹா! எப்படி யிருந்த இடம் அப்பேயின் ஸஞ்சாரத்தால் உருவழிந்து அவ்வுபத்திரவத்தினின்று மீள வகையில்லாமல் இன்றைக்கும் தவிக்கின்றது. இராமபத்திரா! விஷயத்தை யெல்லாம் விவரமாய் உமக்கு ஒப்பித்து விட்டேன் என்று விசுவாமித்திரர் கூறி முடித்தார்.

पञ्चविंशः सर्गः ॥ 25 ॥

अथ तस्याप्रमेयस्य मुनेर्वचनमुत्तमम् ।
श्रुत्वा पुरुषशार्दूलः प्रत्युवाच शुभां गिरम् ॥ 1 ॥
अल्पवीर्या यदा यक्षाः श्रूयन्ते मुनिपुङ्गव ।
कथं नागसहस्रस्य धारयत्यबला बलम् ॥ 2 ॥
इत्येवं वचनं श्रुत्वा राघवस्यामितौजसः । ॥ 2½ ॥
विश्वामित्रोऽब्रवीद्वाक्यं शृणु येन बलोत्तरा ।
वरदानकृतं वीर्यं धारयत्यबला बलम् ॥ 3 ॥

---

1. (ப - ரை) **अथ** - பிறகு, **अप्रमेयस्य** - அளவிடமுடியாததான, **तस्य** - அந்த, **मुनेः** - ரிஷியினுடைய, **उत्तमम्** - உயர்ந்ததான, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **पुरुषशार्दूलः** - புருஷசிரேஷ்டரான இராகவனானவர், **शुभां** - மங்களமான, **गिरम्** - வார்த்தையை, **प्रत्युवाच** - அதன்மேல் கேட்கலானார்.

2. (ப - ரை) **मुनिपुङ्गवः** - முனிசிரேஷ்டரே! **यक्षाः** - யக்ஷ ஜாதிகள், **अल्पवीर्याः** - ஸ்வல்பமான வீரியத்தை யுடையவர்களாக, **यदा श्रूयन्ते** - கேட்கப்படுகின்றார்களே? **अबला** - (அந்த ஜாதியிற் பிறந்த ஒரு) ஸ்திரீ, **कथं** - எப்படி, **नागसहस्रस्य** - ஆயிர யானையினுடைய, **बलम्** - பலத்தை, **धारयति** - வஹிக்கின்றனளோ?

2½-3. (ப - ரை) **अमितौजसः** - அளவிடப்படாத தேஜஸையுடையவரான, **राघवस्य** - இராமனுடைய, **इत्येवं** - என்ற இப்படியான, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **वाक्यं** - பதில் வசனத்தை, **अब्रवीत्** - சொன்னார், **येन** - எந்த காரணத்தினாலே, **बलोत्तरा** - பலத்தினால் அதிகையாக இருக்கின்றனளோ (அதை), **शृणु** - கேளும், **अबला** - ஸ்திரீயானவள் (அவள்),

1-2. (க - ரை) மிக்கத் துணிவாகக் காரியம் செய்கின்றவரான விசுவாமித்திரர் தாடகையை வதைத்திட வேண்டுமென்று கூறிய அவ் வார்த்தையைக் கேட்ட புருஷோத்தமனான இராமசந்திரன், சபலைகளை யானாலும் அபலைகளைக் கொல்ல லாகாதென்று அவள் திறத்தில் மனம் இளகி, ஆண்களை ஆண்மை குன்றிக் கிடக்கும் அற்ப ஜாதியிற் பிறந்த பெண்ணொருத்திக்கு ஆயிரம் யானை பலம் எங்கிருந்து வந்தது என்று மங்களமாய்ப் பிரச்னம் பண்ணியருளினார்.

2½-3. (க - ரை) அபரிமிதமான தேஜஸையுடையவரான இராகவன் கூறிய இவ் வார்த்தையைக் கேட்டு, விசுவாமித்திரர் இவளுக்கு இத்தனை பலமுண்டாகிய காரணத்தைச் சொல்லுகின்றேன் கேளும். இவள் அபலையான ஸ்திரீ ஜாதி

पूर्वमासीन्महायक्षः सुकेतुर्नाम वीर्यवान् ।
अनपत्यः शुभाचारः स च तेपे महत्तपः ॥ 4 ॥
पितामहस्तु सुप्रीतस्तस्य यक्षपतेस्तदा ।
कन्यारत्नं ददौ राम ताटकां नाम नामतः ॥ 5 ॥
ददौ नागसहस्रस्य बलं चास्याः पितामहः ।
न त्वेव पुत्रं यक्षाय ददौ ब्रह्मा महायशाः ॥ 6 ॥

वरदानकृतं - வரப்பிரஸாதத்தாலே யேற்பட்ட, **वीर्यं** - வீரியத்தையும், அதாவது மனோவலிமையையும், **बलम्** - தேஹபலத்தையும், **धारयति** - வஹிக்கின்றாள்.

4. (ப - ரை) **पूर्वं** - முன்காலத்தில், **वीर्यवान्** - வீரியமுள்ளவனான, **सुकेतुः** - ஸுகேது என்கிற, **महायक्षः** - பெரிய யெக்ஷனானவன், **आसीत्** - இருந்தான், **अनपत्यः** - ஸந்ததியற்றவனும், **शुभाचारः च** - மங்களமான ஆசரணைகளையுடையவனுமான, **सः** - அவன், **महत्** - பெரிதான, **तपः** - தவத்தை, **तेपे** - புரிந்தான்.

5. (ப - ரை) **सुप्रीतः** - நன்றாகப்ப்ரீதியடைந்தவரான, **पितामहस्तु** - பிரும்ஹ தேவரோவெனில், **तस्य** - அந்த, **यक्षपतेः** - யெக்ஷராஜனுக்கு, **तदा** - அப்போது, **राम** - ஹே ராமனே! **नामतः** - பெயரினாலே, **ताटकां नाम** - தாடகையென்று பிரஸித்தமான, **कन्यारत्नं** - கன்னியாமணியை, **ददौ** - கொடுத்தார்.

6. (ப - ரை) **पितामहः** - பிரும்ஹாவானவர், **अस्याः** - இவளுக்கு, **नागसहस्रस्य** - ஆயிரம் யானையினுடைய, **बलं च** - பலத்தையும், **ददौ** - கொடுத்தார், **महायशाः** - மஹத்தான கியாதியுள்ளவரான, **ब्रह्मा** - பிதாமஹன், **यक्षाय** - யெக்ஷனின் பொருட்டு, **पुत्रं तु एव** - புத்திரனை மட்டுமோவெனில், **न ददौ** - கொடுக்கவில்லை.

யானாலும் வரப்பிரஸாதத்தினால் மனத்திடமும், சரீர வன்மையும் படைத் திருக்கின்றாளாக்கும்.

4-6. (க - ரை) இராகவா! முன் காலத்தில் மஹா வீரியவானான "ஸுகேது" என்கிற யெக்ஷனொருவன் இருந்தான். அவன் மிக்க நன்னடக்கையுள்ளவன். ஸந்ததி இல்லாததினால் அதற்காக நெடுநாள் தவம் புரிந்தான், அத் தவத்திற்கு உவந்த பிரும்ஹ தேவரும், தாடகை யென்று பிரஸித்தையான ஒரு பெண்மணியை மட்டும் அவனுக்கு வரமாகக் கொடுத்தார். மஹா யசஸ்வியான பிரும்ஹா கேட்டதை யெல்லாம் கொடுப்பவரா யிருந்தும் அவனுக்குப்பிள்ளை வரனை மட்டும் அளித்தா ரில்லை. ஆனாலும் அப்பெண்ணுக்கு, ஆண்களுக்கும் அரிதான ஆயிரம் யானை பலத்தை மாத்திரம் அநுக்கிரஹித்தருளினார்.

तां तु जातां विवर्धन्तीं रूपयौवनशालिनीम् ।
जम्भपुत्राय सुन्दाय ददौ भार्यां यशस्विनीम् ॥ 7 ॥
कस्यचित्त्वथ कालस्य यक्षी पुत्रमजायत ।
मारीचं नाम दुर्धर्षं यः शापाद्राक्षसोऽभवत् ॥ 8 ॥
सुन्दे तु निहते राम सागस्त्यं ऋषिसत्तमम् ।
ताटका सह पुत्रेण प्रधर्षयितुमिच्छति ॥ 9 ॥
भक्षार्थं जातसंरम्भा गर्जन्ती साभ्यधावत ॥ 9½ ॥

7. (ப - ரை) **जातां** - அருமைப் பெண்ணாகப் பிறந்தவளாயும், **विवर्धन्तीं** - நன்றாக வளருகின்றவளாயும், **रूपयौवनशालिनीम्** - அழகு, வயது இவைகளைப் பெற்றவளுமான, **तांतु** - அந்த தாடகையையோ வெனில், **जम्भपुत्राय** - ஜம்பனுடைய பிள்ளையான, **सुन्दाय** - ஸுந்தனின் பொருட்டு, **यशस्विनीम्** - கீர்த்திபெற்ற, **भार्यां** - பாரியாளாக, **ददौ** - கொடுத்தார்.

8. (ப - ரை) **कस्यचित् तु अथ कालस्य** - அதன்பின் சிலகாலங்கள் செல்லவே, **यक्षी** - அந்த யெக்ஷகுமாரியானவள், **दुर्धर्षं** - அடக்கமுடியாதவனான, **मारीचं नाम** - மாரீசன் என்கிற, **पुत्रं** - புத்திரனை, **अजायत** - பெற்றாள், **यः** - எவன், **शापात्** - சாபத்தினாலே, **राक्षसः** - அரக்கனாக, **अभवत्** - ஆயினனோ!

9. (ப - ரை) **राम** - இராமனே! **सा** - அந்த, **ताटका** - தாடகையானவள், **सुन्दे** - ஸுந்தனானவன், **निहते तु** - கொல்லப்பட்ட வளவில், **ऋषिसत्तमम्** - பலமுள்ள மஹரிஷியான, **अगस्त्यं** - அகத்தியனை, **पुत्रेण सह** - பிள்ளையான மாரீசனோடு கூட, **प्रधर्षयितुं** - கொல்லுவதற்கு, **इच्छति** - விரும்பினாள்.

9½. (ப - ரை) **भक्षार्थं** - பக்ஷித்து விடுவதற்காக, **जातसंरम्भा** - உண்டாகிய

7. (க - ரை) அப்படித் தனுக்குத் தெய்வ வரமாகப் பிறந்து, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து யௌவனப் பருவத்தை யடைந்திருக்கின்ற அவ் வருமைக் குமாரத்தியை அந்த யக்ஷ ராஜன், ஜம்பனுடைய பிள்ளையான ஸுந்தனோடு வாழும்படி அவனுக்கு மனைவியாகக் கொடுத்தார்.

8-9½. (க - ரை) பிறகு, சில நாள் அவள் அவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கையில், மாரீசனென்கிற, கடோரனான ஒரு பிள்ளை பிறந்தான். அவன்தான், சாபத்தால் அரக்கனாய் விட்டது. இராமா! ஒருகால் ஸுந்தனென்பவன் அகத்தியரின் கோபத்திற்கு ஆளாகி அழிந்து போகவே இத் தாடகையானவள் தன் பிள்ளை மாரீசனோடு, அவரைக் கொன்று தின்று விடுவதற்காக மிக்க ஆர்ப்பாட்டத்தோடு அவரை எதிர்த்து ஓடினாள்.

आपतन्तीं तु तां दृष्ट्वा अगस्त्यो भगवानृषिः ।
राक्षसत्वं भजस्वेति मारीचं व्याजहार सः ॥ 10½ ॥
अगस्त्यः परमक्रुद्धस्ताटकामपि शप्तवान् ॥ 11 ॥
पुरुषादी महायक्षी विरूपा विकृतानना ।
इदं रूपं विहायाथ दारुणं रूपमस्तु ते ॥ 12 ॥
सैषा शापकृतामर्षा ताटका क्रोधमूर्च्छिता ।
देशमुत्सादयत्येनमगस्त्यचरितं शुभम् ॥ 13 ॥

பர பரப்பை யுடையவளான, **सा** - அவள், **गर्जन्ती** - கெர்ஜித்துக் கொண்டவளாய், **अभ्यधावत** - எதிர்த்து ஓடினள்.

10½. (ப - ரை) **आपतन्तीं** - ஓடி வருகின்ற, **तां तु** - அவளை, **दृष्ट्वा** - பார்த்து விட்டு, **सः** - அந்த, **भगवान्** - பூஜ்ஜியரான, **ऋषिः** - ரிஷியான, **अगस्त्यः** - அகத்திய ரானவர், **राक्षसत्वं** - அரக்கர் தன்மையை, **भजस्व** - அடைவாய், **इति** - என்று, **मारीचं** - மாரீசனை, **व्याजहार** - சொன்னர்.

11-12. (ப - ரை) **ते** - உனக்கு, **इदं** - இந்த, **रूपं** - (அழகான) ரூபத்தை, **विहाय** - விடுத்து, **दारुणं** - உக்கிரமான, **रूपं** - உருவமானது, **अस्तु** - உண்டா கட்டும், **पुरुषादी** - மனுஷ்யர்களை பக்ஷிக்கின்றவளாயும், **विरूपा** - கோரமான ரூபத் தை யுடையவளாயும், **विकृतानना** - விகாரமான முகத்தை யுடையவளுமான, **महा-यक्षी** - மஹா ராக்ஷஸியாக (ஆய்விடுவாய் என்று), **परमक्रुद्धः** - மிகவும் கோபத்தை யடைந்தவரான, **अगस्त्यः** - அகத்திய மஹரிஷியானவர், **ताटकामपि** - தாடகையை யும், **शप्तवान्** - சபித்தார்.

13. (ப - ரை) **सा एषा** - அப்படிப்பட்ட இந்த, **ताटका** - தாடகையானவள், **शापकृतामर्षा** - சாபத்தின லுண்டாகிய ஆத்திரத்தை யுடையவளாய், **क्रोधमूर्च्छिता** !

10½-12. (க - ரை) இப்படித் தன்னை விழுங்கிவிட வேண்டுமென்று பிள்ளை யோடு ஓடிவருகிற தாடகையைப் பார்த்தும், அகத்திய பகவான் அவளை மட்டும் ஸ்திரீ யென்று உபதேசித்துவிட்டு உடன் வந்த மாரீசனை மாத்திரம் இராக்கதனுகக் கடவாய் என்று சபித்திட்டார். அதிலும் பய மடையாமல் முன்னிலும் அதிகமான ஆவேசத்தோடு அருகில் நெருங்கி வருகின்ற அவ் வரக்கியைக் கண்ட மஹரிஷி மிகுந்த கோபத்தோடு "பிசாசமே! இவ் வழகிய ரூபத்தை யிழந்து விபரீத ரூபத் தைப் பெற்று விகார முகத்தோடு மனிதரை வாரித் தின்றுகொண்டுத் திரிகிற கோர ராக்ஷஸியாக ஆகக் கடவாய்", என்று தாடகையையும் சபித்தொழிந்தார்.

13. (ப - ரை) இப்படி அகத்தியர் கொடுத்த சாபத்தினல் ஆத்திரங் கொண்டு

एनां राघव दुर्वृत्तां यक्षीं परमदारुणाम् ।
गोब्राह्मणहितार्थाय जहि दुष्टपराक्रमाम् ॥ 14 ॥
न ह्येनां शापसंस्पृष्टां कश्चिदुत्सहते पुमान् ।
निहन्तुं त्रिषु लोकेषु त्वामृते रघुनन्दन ॥ 15 ॥
न हि ते स्त्रीवधकृते घृणा कार्या नरोत्तम ।
चातुर्वर्ण्यहितार्थाय कर्तव्यं राजसूनुना ॥ 16 ॥

கோபத்தால் மதிமயங்கினவளாக, **अगस्त्यचरितं** - அகத்தியனால் சஞ்சரிக்கப்படுகிற, **शुभम्** - மங்களமான, **एनं** - இந்த, **देशं** - இடத்தை, **उत्सादयति** அழிக்கின்றாள்.

14. (ப - ரை) **राघव** - இராகவனே! **परमदारुणाम्** அதி கடினமானவளான, **एनां** - இந்த, **दुर्वृत्तां** - துச்சரிதையாயும், **दुष्टपराक्रमाम्** துஷ்டமான பராக்கிரமத்தைக் துன்புறுத்துகின்றவளுமான, **यक्षीं** - அரக்கியை, **गोब्राह्मणहितार्थाय** கோக்கள் பிராம்மணர்களின் ஹிதத்தின் பொருட்டு, **जहि** - அடித்துவிடு.

15. (ப - ரை) **रघुनन्दन** - இரகுகுல ஆனந்தகாரனே ஸ்ரீராமபத்திரா! **शापसंस्पृष्टां** - சாபத்தினால் தீண்டப்பட்ட, **येनां** - இவளை, **निहन्तुं** - கொல்லுவதற்கு, **त्वां ऋते** - உன்னை விட்டு, **त्रिषु** - மூன்றுமான, **लोकेषु** - உலகத்திலும், **कश्चित्** எப்படிப் பட்ட, **पुमान्** - புருஷனும், **न उत्सहते हि** - உத்ஸாஹத்தை அடைகின்றானில்லையே.

16. (ப - ரை) **नरोत्तम** - புருஷோத்தமனே! **स्त्रीवधकृते** - ஸ்திரீயைக் கொல்

கோபங் கொதித்தெழுந்த அந்தப் பேயானது அவரைத் தின்றதும், திருப்தியடையாமல் அவர் மீதிருந்த ஆத்திரத்தை அவர் வசித்த இவ்வனத்தின் மீதும் செலுத்தி இதனை அழித்துக்கொண்டு திரிகின்றது.

14. (க - ரை) இராகவா! இவள் மிகக் கொடுமை நெஞ்சமுள்ளவள். அதற்கேற்றவாறு நடத்தை யெல்லாம் விபரீதம். துஷ்டத்தனமாக இவள் பிறரை யழிக்கின்றதற்கு அளவேயில்லை. இவளைத் தொலைத்தாலின்றி, பசுக்கள், பிராம்மணர்கள் போன்ற ஸாத்வீகப் பிராணிகளுக்கு நலமேயில்லை. ஆதலால் இக்கொடியவளைக் கொன்று தீரும்.

15. (க - ரை) இரகுநந்தன! மனிதரைப் பிடித்துத் தின்றுகொண்டு திரியென்று மஹரிஷி சபித்ததே இவளுக்கு ஒரு ஆயுதம் போலாகி எப்படிப்பட்ட பௌருஷமுள்ளவரையும் எதிர்த்து நிற்க மாட்டாமல் அஞ்சி ஓடும்படி செய்கின்றது. ஆதலால் உம்மையின்றி இவளைத் தொலைப்பதற்கு மூவுலகத்திலும் ஆரொருவனில்லையே!

16. (க - ரை) புருஷோத்தமா! ஒரு அபலையைக் கொல்வதா, என்று நீ

नृशंसमनृशंसं वा प्रजारक्षणकारणात् ।
पातकं वा सदोषं वा कर्तव्यं रक्षता सता ॥ 17 ॥
राज्यभारनियुक्तानामेष धर्मः सनातनः ।
अधर्म्यां जहि काकुत्स्थ धर्मो ह्यस्या न विद्यते ॥ 18 ॥
श्रूयते हि पुरा शक्रो विरोचनसुतां नृप ।
पृथिवीं हन्तुमिच्छन्तीं मन्थरामभ्यसूदयत् ॥ 19 ॥

லுவது என்பதைக் கொண்டு, **ते** - உமக்கு, **घृणा** - ஜுகுப்ஸையோ அல்லது தயை யோ (எதுவும்), **न कार्या हि** - செய்யத் தக்கதல்லவே (இது), **चातुर्वर्ण्यहितार्थाय** - நான்கு வர்ணத்தாருடைய ஸமுதாய க்ஷேமத்திற்காக, **राजसूनुना** - ஒரு இராஜ குமாரனால், **कर्तव्यं** - செய்யத் தக்கதுதான்.

17. (ப - ரை) **रक्षता सता** - காப்பாராக விருக்கின்றவரால், **नृशंसं** - கொடிய தாயினும், **अनृशंसं वा** - அல்லாத தாயினும், **पातकं वा** - பாவமாயினும், **सदोषं वा** - தோஷயுக்த மாயினும், **प्रजारक्षणकारणात्** - பிரஜைகளை இரக்ஷிப்பதின் நிமித்த மாக, **कर्तव्यं** - செய்தாகவேண்டும்.

18. (ப - ரை) **राज्यभारनियुक्तानां** - இராஜ்ஜிய பாரத்தில் பொருப்புள்ளவர் களுக்கு, **एषः** - இது, **सनातनः** - தொன்று தொட்டிருக்கின்ற, **धर्मः** - தருமம், **काकुत्स्थः** - காகுத்தனே ! **अधर्म्यां** - அதரும நிஷ்டையான இவளை, **जहि** - கொல்லும், **अस्याः** - இவளுக்கு, **धर्मः** - தரும மென்பது, **न विद्यते हि** - கிடையா தன்றோ !

19. (ப - ரை) **नृप** - அரசே ! **श्रूयते हि** - காதிற் படுகின்ற தல்லவா ! **पुरा** -

அலீங்கப் படாதே. ஐயோ ! பெண்ணுயிற்றே, என்று நீ பரிதபிக்காதே. இது போன்ற காரியத்தை இராஜ குமாரர்கள் ஜன ஸமுதாயத்தின் நன்மையை உத்தே சித்துச் செய்து தீர வேண்டும் அய்யா ?

17. (க - ரை) இராகவா ! பிரஜைகளைக்காக்கும் பொருப்பைக் கைகொண்ட வருக்கு, கொடியது, அல்லாதது, பாவம், தோஷம் என்று எதையும் பாராமல் அதற்காக அவசியமானல் எல்லாவற்றையும் ஏற்றுச் செய்யவேண்டியது கடமை யாகின்றது.

18. (க - ரை) இராஜகுமாரா ! நீங்கிழைக்கின்றவர் திரத்திலும், பொருத் துப் போவது யெதிகளுக்கே யன்று பூபதிகளுக்கு அழகாகாது. கலப்பற்ற பாதகி யன்றோ இவள், ஆதலால் கொல்லும்.

19. (க - ரை) அரசே ! முன்னொருநாள் தானவேந்திரனை விரோசன

विष्णुनाऽपि पुरा राम भृगुपत्नी दृढव्रता ।
अनिन्द्रं लोकमिच्छन्ती काव्यमाता निषूदिता ॥ 20 ॥
एतैश्चान्यैश्च बहुभी राजपुत्र महात्मभिः ।
अधर्मसहिता नार्यो हताः पुरुषसत्तमैः ॥ 21 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
पञ्चविंशः सर्गः ॥ 25 ॥

முன்னாள், **शक्रः** - இந்திரனானவர், **पृथिवीं** - பூமியை, **हन्तुं** - கொல்லுவதற்கு, **इच्छन्तीं** - ஆசித்தவளான, **विरोचनसुतां** - விரோசன னென்கிற அஸுரனுடைய பெண்ணான, **मन्थरां** - மந்தரை யென்பவளை, **अभ्यसूदयत्** - கொன்று விட்டார்.

20. (ப - ரை) **राम** - இராமனே! **पुरा** - முன்னாள், **भृगुपत्नी** - பிருகு மஹரிஷியினுடைய பாரியையாயும், **दृढव्रता** - நிச்சிதமான விரதத்தை யுடையவளாயுமிருந்தும், **लोकं** - உலகத்தை, **अनिन्द्रं** - இந்திர னில்லாததாகச் (செய்வதற்கு), **इच्छन्ती** - ஆசிக்கின்றவளான, **काव्यमाता** - சுக்கிராசாரியனுடைய தாயானவள், **विष्णुना अपि** - விஷ்ணுவினாலும், **निषूदिता** - கொல்லப்பட்டாள்.

21. (ப - ரை) **राजपुत्र** - இராஜ குமார! **एतैश्च** - இவர்களாலும், **अन्यैः** - வேறு, **महात्मभिः** - மஹாத்துமாக்களான, **पुरुषसत्तमैः** - புருஷ சிரேஷ்டர்களான, **बहुभिश्च** - அநேகர்களினாலும், **अधर्मसहिताः** - அதர்மிஷ்டைகளான, **नार्यः** - ஸ்திரீகள், **हताः** - கொல்லப்பட்டார்கள்.

னுடைய குமாரியான மந்தரை யென்பவள், பூமியை அழிக்கத் தலைப்பட்ட போது, இந்திரன் அவளை அழித்து விட்டான். என்றெல்லாம் இவ்வுறைக்கும் கதை கேட்கின்றோமே!

20. (க - ரை) இராம பத்திரா! இன்னும் கேளும், அஸுர குருவான சுக்கிராசாரியர் மஹேசுவரனைக் குறித்துத் தவஞ்செய்து கொண்டிருக்கையில் அவ்விடவெளியறிந்த தேவர்கள் அஸுரர்களைத் துன்புறுத்தவே, அவர்கள் தமதாசிரியருடைய தாயாரான கியாதி தேவியைச் சரணமடையவே, அவளும் தேவர்களை இந்திரனுள்பட அழித்து விடுகிறதென்று தீர்மானத்துடன் கொல்லக் கிளம்பினாள். அப்போது தேவராஜன் மஹா விஷ்ணுவினிடத்தில் முறையிட்டார். அவரும் அங்கு சென்று பழிவாங்கக் கிளம்பிய அவள் தலையைக் கொய்து விட்டார்.

21. (க - ரை) இராஜகுமார! இவர்கள் மட்டுமல்ல, இன்னும் வேறு மஹா புருஷர் அநேகர்களும், அதர்மிஷ்டைகளான ஸ்திரீகளை ஆலோசனையின்றிக் கொன்றிருக்கின்றார்கள். ஆதலால் நீர் இவளை அழித்தே யாகவேண்டும். என்று விசுவாமித்திரர் வற்புறுத்தலானார்.

षड्विंशः सर्गः ॥ 26 ॥

मुनेर्वचनमक्लीबं श्रुत्वा नरवरात्मजः ।
राघवः प्राञ्जलिर्भूत्वा प्रत्युवाच दृढव्रतः ॥ 1 ॥

पितुर्वचननिर्देशात्पितुर्वचनगौरवात् ।
वचनं कौशिकस्येति कर्तव्यमविशङ्कया ॥ 2 ॥

अनुशिष्टोऽस्म्ययोध्यायां गुरुमध्ये महात्मना ।
पित्रा दशरथेनाहं नावज्ञेयं हि तद्वचः ॥ 3 ॥

1. (ப - ரை) **दृढव्रतः** - நிச்சிதமான விரதத்தை யுடையவரும், **नरवरात्मजः** - நரபதி குமாரருமான, **राघवः** - இராகவனானவர், **अक्लीबं** - ஆண்மைத் தரமுள்ள தான, **मुनेः** - ரிஷியினுடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **प्राञ्जलिः** - நன்றான அஞ்சலியை யுடையவராக, **भूत्वा** - ஆகி, அல்லது இருந்துகொண்டு, **प्रत्युवाच** - பதிற் சொன்னார்.

2. (ப - ரை) **पितुः** - தகப்பனாருடைய, **वचननिर्देशात्** - வாக்குமூலமான ஆக்கினையினாலும், **पितुः** - அவருடைய, **वचनगौरवात्** - வார்த்தையிலுள்ள மதிப்பினாலும், **कौशिकस्य** - விசுவாமித்திரருடைய, **वचनं** - வார்த்தையானது, **अविशङ्कया** - நிஸ்ஸம்சயமாக, **कर्तव्यं** - செய்தாக வேண்டும், **इति** - என்று (முதல் முதலில் மனத்தினுள் எண்ணிக்கொண்டு).

3. (ப - ரை) **अहं** - நான், **अयोध्यायां** - அயோத்தியில், **गुरुमध्ये** - பெரியோர்களினிடையில், **महात्मना** - மஹாத்துமாவான, **पित्रा** - பிதாவான, **दश-**

1. (க - ரை) இப்படி மஹரிஷி மிக்க அழுத்தமாய்ச் சொல்லிய வார்த்தையைக் கேட்ட இராமபத்திரன் அவருடைய மேன்மைக்கும் தம் தகப்பனிடத்திலுள்ள மரியாதைக்கும் தன்னிடத்திலுள்ள சுய மதிப்பிற்கும் தக்கபடி கை குவித்துக் கொண்டு பதிற் கூறுகின்றார்.

2-5. (க - ரை) முதன் முதலில் நம் தகப்பனார் இட்ட கட்டளையினாலும் அவர் சொல்லுக்குள்ள மதிப்பினாலும் யான் விசுவாமித்திரர் சொல்லுவதை உள்ளபடி கேட்டாகவேண்டும், என்று தன் உள்ளத்திற்குள் ஆலோசித்துக்கொண்டு, பிறகு வெளிப்படையாக யான் அயோத்திமா நகரத்தில் வஸிஷ்டராகிய பெரியோர்களின் ஸபையில் விசுவாமித்திரர் சொற்படி நடக்க வேண்டுமென்று மஹாத்துமாவான எனது பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்டிருக்கின்றேன். அது என்னால் அல

सोऽहं पितुर्वचः श्रुत्वा शासनाद्ब्रह्मवादिनः ।
करिष्यामि न संदेहस्ताटकावधमुत्तमम् ॥ 4 ॥
गोब्राह्मणहितार्थाय देशस्यास्य सुखाय च ।
तव चैवाप्रमेयस्य वचनं कर्तुमुद्यतः ॥ 5 ॥
एवमुक्त्वा धनुर्मध्ये बद्ध्वा मुष्टिमरिंदमः ।
ज्याघोषमकरोत्तीव्रं दिशः शब्देन नादयन् ॥ 6 ॥

रथेन - தசரதனால், **अनुशिष्टः** - ஆக்ஞாபிக்கப்பட்டவனாக, **अस्मि** - இருக்கின்றேன், **तद्वचः** - அவருடைய வார்த்தையானது, **न अवज्ञेयं हि** - அலக்ஷியஞ் செய்யத் தக்கதல்லவே!

4. (ப - ரை) **सः अहं** - அந்த யான், **पितुः** - பிதாவினுடைய, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **ब्रह्मवादिनः** - பிரும்ம வாதியான தம்முடைய, **शासनात्** - ஆக்ஞையினாலே, **उत्तमम्** - உத்தமமான, அதாவது உத்தமமாக எண்ணி, **ताटकावधं** - தாடகையினுடைய வதத்தை, **करिष्यामि** செய்கின்றேன், **न संदेहः** - ஸந்தேக மில்லை.

5. (ப - ரை) **गोब्राह्मणहितार्थाय** - பசுக்கள், பிராம்மணர்களுடைய அநுகூல இலாபத்திற்காகவும், **अस्य** - இந்த, **देशस्य** - இடத்தினுடைய, **सुखाय च** - ஸுகத்திற்காகவும், **अप्रमेयस्य** - அளவிடக் கூடாதவரான, **तव** - உம்முடைய, **वचनं** - வார்த்தையை, **कर्तुं च** - செய்வதற்கும், **उद्यतः एव** - ஸித்தமாயிருக்கிறேன்.

6. (ப - ரை) **एवं** - இப்படி, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **अरिंदमः** - சத்துரு தமனரான இராகவன், **धनुर्मध्ये** - வில்லினுடைய இடையில், **मुष्टिं** - பிடியை, **बध्वा** - பிடித்து, **दिशः** - திசைகளை, **शब्देन** - சப்தத்தினால், **नादयन्** - ஒலிக்கச் செய்து கொண்டு, **तीव्रं** - கடோரமான, **ज्याघोषं** - நாணொலியை, **अकरोत्** - செய்தார்.

க்ஷியஞ் செய்யக் கூடியதல்லவாதலின் அவ் வார்த்தையைக் கொண்டும் பரிசுத்த பிரும்மவாதியான தமது ஆணையைக் கொண்டும் தாடகாவதத்தை நல்லதென்றே நினைத்து ஸந்தேஹ மில்லாமல் செய்து முடிக்கின்றேன். மேலும் கோப்பிராம்மணர்களுடைய ஹித பலத்தைக் கோரியும், இத் தேசம் ஸுகமாய் வாழவும், மஹா பிரபாவசாலியான தமது கட்டளையைச் செய்து முடிக்கவும் இதோ ஸித்தமாய் விட்டேன்.

6. (க - ரை) இப்படி விசுவாமித்திரரிடம் கூறிவிட்டு, சத்துருக்களை நிரஸிக்கும் திறமையுள்ளவரான ஸ்ரீராகவன், தனது வில்லைப்பிடித்து உயர்த்தி நாண் கயிற்றை யிழுத்து திசைகள் பத்தும் திடுக்கிடும்படி "டங்" என்று அதனை ஒரு தரம் சுண்டினார்.

तेन शब्देन वित्रस्तास्ताटकावनवासिनः ।
ताटका च सुसंक्रुद्धा तेन शब्देन मोहिता ॥ 7 ॥
तं शब्दमभिनिध्याय राक्षसी क्रोधमूर्च्छिता ।
श्रुत्वा चाभ्यद्रवद्वेगाद्यतः शब्दो विनिःसृतः ॥ 8 ॥
तां दृष्ट्वा राघवः क्रुद्धां विकृतां विकृताननाम् ।
प्रमाणेनातिवृद्धां च लक्ष्मणं सोऽभ्यभाषत ॥ 9 ॥

7\. (ப - ரை) **ताटकावनवासिनः** - தாடகா வனத்தில் வஸிக்கின்ற (பிராணிகளெல்லாம்), **तेन** - அந்த, **शब्देन** - நாதத்தாலே, **वित्रस्ताः** - நடுங்கி விட்டன, **सुसंक्रुद्धा** - மிக மிகக் கோபங் கொள்கின்றவளான, **ताटकाच** - தாடகியும், **तेन** - அந்த, **शब्देन** - தனுஷ்டங்காரத்தினால், **मोहिता** - மலைத்துப்போனாள்.

8\. (ப - ரை) **तं** - அந்த, **शब्दं** - நாதத்தை, **श्रुत्वा** - கேட்டு, **अभिनिध्याय च** - சற்று ஆலோசித்தும் பார்த்துவிட்டு, **राक्षसी** - அந்த இராக்ஷஸியானவள், **क्रोधमूर्च्छिता** - கோபங் கொதித் தெழுந்தவளாக, **वेगात्** - வேகமாக, **अभ्यद्रवत्** - ஓடி வந்தாள், **यतः** - எந்த இலக்கிலிருந்து, **शब्दः** - நாதமானது, **विनिः सृतः** - வெளிப் பட்டதோ.

9\. (ப - ரை) **क्रुद्धां** - கோபத்தை யடைந்தவளாயும், **विकृतां** - விகார ரூபியாயும், **विकृताननाम्** - விகாரமான முகத்தை யுடையவளாயும், **प्रमाणेन** - அளவினால், **अतिवृद्धां च** - அத்திபந்தம் வளர்ந்தவளாயு மிருக்கிற, **तां** - அவளை, **दृष्ट्वा** - பார்த்துவிட்டு, **सः** - அந்த, **राघवः** - இராகவன், **लक्ष्मणं** - இலக்ஷ்மணனை, **अभ्यभाषत** - கூப்பிட்டுச்சொன்னார்.

7\. (க - ரை) அந்த தனுஷ்டங்காரத்தைக் கேட்டு, தாடகா வனவாஸிகளான பிராணிகளெல்லாம் நடுக்கமுற்று நாலுபக்கங்களிலும் ஓடலாயின, தாடகியும் உடந்தையாகவே மிக்க வெகுளி யுள்ளவளேயானாலும், அதைக் கேட்டவுடன் மேற் செய்வது தோன்றாமல் அப்படியே சற்று மறத்துப்போய் நின்றுவிட்டாள்.

8\. (க - ரை) தாடகை, அந்த நாதத்தைக் கேட்டவுடன் சற்று மலைத்துப் போனாளானாலும், பிறகு கொஞ்சம் ஆலோசித்துப் பார்த்து தைரிய மடைந்து, கோபத்தாற் சீறிக்கொண்டு அச்சத்த முண்டான வழியாகவே எதிர்த்து ஓடி வந்தாள்.

9\. (க - ரை) ஸ்வபாவத்திலேயே அவள் கோரரூபி, அதிலும் கோபமடைந்திருப்பதினாலும் அக்கோரம் ஆயிரம் பங்கு அதிகமாயிற்று. அதோடு மற்ற அவயவங்களை விட முகத்திற்குள்ள விகாரமோ சொல்லத் தரமல்ல. இந் நிலையில் தம்மை எதிர்த்து வருகிற அவ் வரக்கியைப் பார்த்த, இராகவன், இலக்ஷ்மணனை யழைத்துச் சொல்லுகின்றார்.

पश्य लक्ष्मण यक्षिण्या भैरवं दारुणं वपुः ।
भिद्येरन्दर्शनादस्या भीरूणां हृदयानि च ॥ 10 ॥

एनां पश्य दुराधर्षां मायाबलसमन्विताम् ।
विनिवृत्तां करोम्यद्य हृतकर्णाग्रनासिकाम् ॥ 11 ॥

न ह्येनामुत्सहे हन्तुं स्त्रीस्वभावेन लक्षिताम् ।
वीर्यं चास्या गतिं चापि हनिष्यामीति मे मतिः ॥ 12 ॥

एवं ब्रुवाणे रामे तु ताटका क्रोधमूर्च्छिता ।
उद्यम्य बाहू गर्जन्ती राममेवाभ्यधावत ॥ 13 ॥

---

10. (ப - ரை) **लक्ष्मण** - இலக்ஷ்மணனே! **यक्षिण्याः** - இந்த யக்ஷிணியினுடைய, **भैरवं** - பயங்கரமாயும், **दारुणं** - கடோரமாயுமிருக்கின்ற, **वपुः** - சரீரத்தை, **पश्य** - பாரும், **अस्याः** - இவளுடைய, **दर्शनात्** - பார்வையினால், **भीरूणां** - பயங்காளிகளுடைய, **हृदयानि च** - ஹிருதயங்களும், **भिद्येरन्** - பிளந்துபோய்விடும்.

11. (ப - ரை) **दुराधर्षां** - அதிக்கிரமிக்கக் கூடாதவளாய், **मायाबलसमन्विताम्** - மாயா பலத்தோடு கூடினவளாயிருக்கின்ற, **एनां** - இவளை, **अद्य** - இப்போது, **हृतकर्णाग्रनासिकाम्** - அபஹரிக்கப்பட்ட காது, நுணி மூக்குகளையுடையவளாக, **विनिवृत्तां** - திரும்பி ஓடுகின்றவளாக, **करोमि** - செய்கிறேன், **पश्य** - பாரு.

12. (ப - ரை) **स्त्रीस्वभावेन** - பெண்மையினால், **लक्षिताम्** - குறிப்பிடப்படுகின்ற, **एनां** - இவளை, **हन्तुं** - கொல்லுவதற்கு, **न उत्सहे हि** - நான் நினைக்கவே மாட்டேன், **अस्याः** - இவளுடைய, **वीर्यंच** - வீரியத்தையும், **गतिं चापि** - கெதியையும், **हनिष्यामि** - கொல்லுவேன், **इति** - என்று, **मे** - எனக்கு, **मतिः** - எண்ணம்.

13. (ப - ரை) **रामे** - இராமனானவர், **एवं** - இப்படி, **ब्रुवाणे** - சொல்லிக் கொண்டிருக்கையில், **ताटका तु** - தாடகியோவெனில், **क्रोधमूर्च्छिता** - கோபத்தால்

10-12. (க - ரை) இலக்ஷ்மணா! பார்த்தாயா, இந் யக்ஷிணியினுடைய சரீரம் எத்துணை பயங்கரமா யிருக்கின்றது. என்ன கடோரம். இதனைக் கண்டவுடன் கண்ணெஞ்சும் பிளந்துபோம். பயங்கொள்ளிகளைப் பற்றி கேட்பானேன். இவள் எத்துணைதான் பொல்லாதவ ளென்றாலும் இவளைக் கொல்லுவதற்கு என் மனம் எழவே யில்லை. பெண்ணென்ற பெயராவது இருக்கிற தன்றோ. ஆகலாக் காதை, மூக்கை காயப் படுத்தி இவளது வீரியத்தை, பலத்தை ஒடுக்கித் திரும்பி ஓடும்படி செய்து விடுகின்றேன் பாரு.

13. (க - ரை) இவ்வாறு மஹா காருணிகனை இராமசந்திரன், பெண்ணை

विश्वामित्रस्तु ब्रह्मर्षिर्हुंकारेणाभिभर्त्स्य ताम् ।
स्वस्ति राघवयोरस्तु जयं चैवाभ्यभाषत ॥ 14 ॥
उद्धून्वाना रजो घोरं ताटका राघवावुभौ ।
रजोमोहेन महता मुहूर्तं सा व्यमोहयत् ॥ 15 ॥
ततो मायां समास्थाय शिलावर्षेण राघवौ ।
अवाकिरत्सुमहता ततश्चुक्रोध राघवः ॥ 16 ॥

மூர்ச்சிதையாக, **बाहू** - இருகைகளையும், **उद्यम्य** - உயரத் தூக்கிக்கொண்டு, **गर्जन्ती** - கர்ஜிக்கின்றவளாக, **राममेव** - இராமனையே, **अभ्यधावत** - குறிவைத்து ஓடிவந்தாள்.

14. (ப - ரை) **ब्रह्मर्षिः** - பிரும்மரிஷியான, **विश्वामित्रस्तु** - விசுவாமித்திரரோவெனில், **ताम्** - அவளை, **हुंकारेण** - ஹூம்! என்கிற உருபத்தினால், **अभिभर्त्स्य** - பயமுறுத்தி, **राघवयोः** - இராம லக்ஷ்மணர்களுக்கு, **स्वस्ति** - மங்களமானது, **अस्तु** - உண்டாகட்டும் (என்று சொல்லி) **जयं च एव** - ஜயத்தையும், **अभ्यभाषत** - சொன்னார்,

15. (ப - ரை) **घोरं** - கடோரமாக, **रजः** - தூளியை, **उद्धून्वाना** - தூற்றுகின்றவளான, **सा** - அந்த, **ताटका** - தாடகியானவள், **राघवौ** - இராம லக்ஷ்மணர்கள், **उभौ** - இருவர்களையும், **महता** - பெரிதான, **रजोमोहेन** - தூசியிருளினாலே, **मुहूर्तं** - ஒரு முகூர்த்த பொழுது, **व्यमोहयत्** - மோஹிக்கும்படி செய்தாள்.

16. (ப - ரை) **ततः** - பிறகு, **मायां** - மாயாசக்தியை, **समास्थाय** - அடைந்து, **सुमहता** - மிகப்பெரியதான, **शिलावर्षेण** - கன் மழையினால், **राघवौ** - இராம லக்ஷ்மணர்களை (க்குறித்து), **अवाकिरत्** - பொழிந்தாள், **ततः** - அதனால், **राघवः** - இராமபத்திரன், **चुक्रोध** - கோபத்தை யடைந்தார்.

யிற்றே என்று மனமிளகி நிற்க அந்த காதுகையான தாடகியோவெனில், புடைத்துவிடுகிறதென்கிற நிமானத்தோடு இராமனையே எதிர்த்து ஓடி வந்தாள்.

14. (க - ரை) அத் தருணத்தில் பிரும்ம ரிஷியான விசுவாமித்திரர் ஓடி வருகின்ற தாடகியை ஹூம்காரஞ் செய்து அதட்டி "ஜயா விஜயீபவ" "மங்களானி பவந்து" என்று இராம லக்ஷ்மணர்களுக்கு ஆசி கூறினார்.

15. (க - ரை) தாடகியோவெனில் தூசிகளை வாரி இறைத்துக் கொண்டு, அவ் விருளினால் இராகவ ரிருவரையும் ஒரு முகூர்த்த நேரம் மலைத்து நிற்கும்படி செய்து விட்டாள்.

16. (க - ரை) பிறகு அவள் தன் மாயையினால், இராம லக்ஷ்மணர்கள் மீது கன்மாறி பொழிந்து காருணிகன் மனத்தையும் சற்றுக்கலக்கமுறச் செய்தாள்.

शिलावर्षं महत्तस्याः शरवर्षेण राघवः ।
प्रतिहत्योपधावन्त्याः करौ चिच्छेद पत्रिभिः ॥ 17 ॥

ततश्छिन्नभुजां श्रान्तामभ्याशे परिगर्जतीम् ।
सौमित्रिरकरोत्क्रोधाद्धृतकर्णाग्रनासिकाम् ॥ 18 ॥

कामरूपधरा सद्यः कृत्वा रूपाण्यनेकशः ।
अन्तर्धानं गता यक्षी मोहयन्तीव मायया ॥ 19 ॥

अश्मवर्षं विमुञ्चन्ती भैरवं विचचार ह ॥ 19½ ॥

17. (ப - ரை) **राघवः** - இராமனானவர், **तस्याः** - அவளுடைய, **महत्** - பெரிதான, **शिलावर्षं** - கன்மழையை, **शरवर्षेण** - அம்பு மாரியினாலே, **प्रतिहत्य** - தகர்த்து, **उपधावन्त्याः** - நெருங்கி வருகின்றவளான (அவளுடைய), **करौ** - கைகளை, **पत्रिभिः** - பாணங்களினாலே, **चिच्छेद** - சேதித்தார்.

18. (ப - ரை) **ततः** - பிறகு, **छिन्नभुजां** - வெட்டப்பட்ட கைகளையுடையவளாயும், **श्रान्तां** - களைத்துப் போனவளாயும், **अभ्याशे** - சமீபத்தில், **परिगर्जतीम्** - கொஜித்துக்கொண்டு திரிகின்றவளுமான (அந்த தாடகையை), **सौमित्रिः** - ஸௌமித்திரா குமாரர், **क्रोधात्** - கோபத்தாலே, **हृतकर्णाग्रनासिकाम्** - அறுபடப்பட்ட காதின் மடல், மூக்கு இவற்றை உடையவளாக, **अकरोत्** - செய்தார்.

19-19½. (ப - ரை) **कामरूपधरा** - இஷ்டமான ரூபத்தைத் தரிக்கக் கூடியவளான, **यक्षी** - அந்த ராக்ஷஸியானவள், **सद्यः** - உடனே **अनेकशः** - பலவாறாக,

17. (க - ரை) இப்படி இராகவன் ஏற்று சித்தம் கலங்கி நின்றாலும் அதுகொண்டு அவளை அடித்து விடாமல் அவள் எறியும் கற்களை மாத்திரம் தனது கணைகளினால் தடுத்துக்கொண்டு வெகு நேரம் போராடினார். அவ்வளவைக் கொண்டே அந்த துஷ்டை இடம் வாய்த்ததென்று இராகவன் சமீபத்திற்கு நெருங்கி இருகைகளையும் உயர்த்தி அவரைப் புடைக்கப் பார்த்தாள். உடனே, இராகவன் தனது கணைகளினால் அவள் கரங்களை அறுத்துவிட்டார்.

18. (க - ரை) இப்படி கை அறுபட்ட பின்னரும் இனி எவ்வழியிற் கொல்லலாமென்று இராகவர்களைச் சுற்றிக் கத்திக்கொண்டு திரிகின்ற அந்த தாடகியை, சினங்கொண்ட ஸௌமித்திரா குமாரன், அத்திரத்தை யெடுத்து, காதையும் மூக்கையும் கத்தரித்து விட்டார்.

19-20½. (க - ரை) ஆனாலும் அவளதற்கு அஞ்சிவிடவில்லை. அவளுக்கு நினைத்தபடி உருவமெடுத்துக்கொள்ளும் ஆற்றலுண்டு. அதனால் பற்பல ரூபங்களை

ततस्तावश्मवर्षेण कीर्यमाणौ समन्ततः ।
दृष्ट्वा गाधिसुतः श्रीमानिदं वचनमब्रवीत् ॥ 20½ ॥
अलं ते घृणया राम पापैषा दुष्टचारिणी ।
यज्ञविघ्नकरी यक्षी पुरा वर्धति मायया ॥ 21½ ॥
वध्यतां तावदेवैषा पुरा संध्या प्रवर्तते ।
रक्षांसि संध्याकालेषु दुर्धर्षाणि भवन्ति वै ॥ 22½ ॥

रूपाणि - ரூபங்களை, **कृत्वा** - செய்துகொண்டு, **अन्तर्धानं** - கண்ணிற்குத் தோன்ருமையை, **गता**-அடைந்தவளாக, **मायया** - மாயையினுலே, **मोहयन्तीव** - மயக்குகின்றவளாக, **भैरवं** - பயங்கரமான, **अश्मवर्षं** - சிலா வருஷத்தை, **विमुञ्चन्ती** - பொழிந்து கொண்டு, **विच- चार ह** - திரிந்தாள்.

20½. (ப - ரை) **ततः** - பிறகு, **अश्मवर्षेण** - சிலா வருஷத்தினுல், **समन्ततः** - நாலுவாகிலும், **कीर्यमाणौ** - இறைக்கப்படுகின்ற, **तौ** - அவர்களை, **दृष्ट्वा** - பார்த்து, **श्रीमान्** - ஸ்ரீமானுன, **गाधिसुतः** - காதியின் புத்திரரான விசுவாமித்திரர், **इदं** - இந்த, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னுர்.

21½. (ப - ரை) **राम** - இராமனே! **ते** - உனக்கு, **घृणया** - கிருபையினுலே, **अलं** - போரும், **पापा** - பாபிஷ்டையான, **एषा** - இந்த, **यक्षी** - அரக்கியானவள், **दुष्टचारिणी** - கொடுமையான ஆசாரணையுள்ளவள், **यज्ञविघ्नकरी** - யக்ஞத்திற்கு விக்கினத்தைச் செய்கிறவள், **मायया** - மாயையினுலே, **पुरा वर्धति** - விருத்தியடைந்து விடுவாள்.

22½. (ப - ரை) **संध्या** - அஸ்தமன ஸமயமானது, **पुरा** - எவ்வளவிற்குள், **प्रवर्तते** - வருமோ, **तावत् एव** - அதற்குள்ளாகவே, **एषा** - இவள், **वध्यतां** - கொல்லப்படட்டும், **रक्षांसि** - இராக்ஷஸ ஜாதிகள், **संध्याकालेषु** - அந்திப் பொழுதுகளில், **दुर्धर्षाणि** - அடக்க முடியாதவைகளாக, **भवन्तिवै** - ஆகின்றனவன்ருே!

ஏற்றுக்கொண்டு மாயையினுல் மறைந்திருந்து மயக்கிக்கொண்டு, பயங்கரமான கன்மாரியைப் பொழிந்துகொண்டு திரிந்தாள். மஹரிஷியோவெனில் அச்சிலா வருஷத்தால் நான்கு புறத்திலும் நெருக்கப்படுகின்ற இராகவர்களைப் பார்த்து இவ்வார்த்தை சொல்லலானுர்.

21½-22½. (க - ரை) இராமசந்திரா! நின் கருணைக்கு ஒரு எல்லைதானில்லையோ! இப்பாவி அதற்குப் பாத்திரந்தானுவளோ! கிரதுக்களை யழிக்கும் இந்தத் துருவிருத்தையின் மாயை கணத்திற்குக்கணம் பெருகுகின்றதே. இராக்ஷஸப் பிறவிகளை இராக்காலத்தில் வெல்லுவது அரிது. ஆதலால் கதிரவன் மறைவதற்குள் இக்காதுகியை மாய்த்துவிடு.

इत्युक्तस्तु तदा यक्षीमश्मवृष्ट्याभिवर्षतीम् ।
दर्शयञ्शब्दवेधित्वं तां रुरोध स सायकैः ॥ 23½ ॥

सा रुद्धा शरजालेन मायाबलसमन्विता ।
अभिदुद्राव काकुत्स्थं लक्ष्मणं च विनेदुषी ॥ 24½ ॥

तामापतन्तीं वेगेन विक्रान्तामशनीमिव ।
शरेणोरसि विव्याध सा पपात ममार च ॥ 25½ ॥

23½. (ப - ரை) **इति तु** - இப்படியாக, **उक्तः** - சொல்லப்பட்ட, **सः** - அந்த (இராகவன்), **तदा** - அப்பொழுது, **अश्मवृष्ट्या** - கன்மழையினாலே, **अभिवर्षतीम्** - நான்கு புறமும் தூற்றுகிறவளான, **तां** - அந்த, **यक्षीं** - அரக்கியை, **शब्दवेधित्वं** - சத்தமுண்டான வழியாகக் குறிவைத்து அடிக்கும் பயிர்ச்சியை, **दर्शयन्** - காண்பித்துக்கொண்டு, **सायकैः** - பாணங்களினாலே, **रुरोध** - தகைந்தார்.

24½. (ப - ரை) **मायाबलसमन्विता** - மறைந்து போர்புரியும் மாயையுள்ளவளான, **सा** - அந்தத் தாடகை, **शरजालेन** - பாண ஸமூஹத்தினால், **रुद्धा** - தகையப்பட்டவளாக, **विनेदुषी** - கூச்சலிட்டுக்கொண்டு, **काकुत्स्थं** - இராமனையும், **लक्ष्मणं च** - இலக்ஷ்மணனையும், **अभिदुद्राव** - குறிவைத்து நேரில் ஓடிவந்தாள்.

25½. (ப - ரை) **विक्रान्तां** - வீழ்கின்றதான அல்லது பாய்கின்றதான, **अशनीं इव** - இடியைப்போல, **वेगेन** - வேகத்தோடு, **आपतन्तीं** - வந்து மேல் விழுகின்றவளான, **तां** - அவளை, **शरेण** - பாணத்தினால், **उरसि** - மார்பில், **विव्याध** - பிளந்தார், **सा** - அவள், **पपात** - வீழ்ந்தாள், **ममारच** - மறித்தும் போனாள்.

23½-24½. (க - ரை) இப்படி விசுவாமித்திரனால் வற்புறுத்தப்பட்ட ஸ்ரீராமபத்திரன், கல்லையும், பாறையையும் வாரி இறைத்துக்கொண்டே யிருக்கையிலும் அவளைக்கொல்ல மனமில்லாதவராய் மறைந்திருந்து போர்புரியும் அவளை ஓசை பிறந்தவழியாகக் குறிவைத்து எய்கின்ற தனக்குள்ள திறமையைக்கொண்டு அவள் மீது சில கணைகளைத் தூவி அவள் கைகளைமட்டும் தடுத்தார். இனி மறைவதிற் பயனில்லையென்று அறிந்துகொண்ட அப்பாதகி இடிபோலப் பேரிரைச்சல் போட்டுக்கொண்டு இராம லக்ஷ்மணர்களுக் கெதிரே நேராகவே ஓடிவந்தாள்.

25½. (க - ரை) கோடை இடி பாய்வதுபோல தம்மைக் குறித்து மேல் விழுந்து வருகின்ற அத்தாடகியை, இராகவன் ஒரு பாணத்தைக்கொண்டு ஒதுங்கித் துலையட்டுமென்று ஓர் அடி, அடித்தார். உடனே அவள் கீழே வீழ்ந்தாள். அவ்வளவேயின்றி எதிர்பாராதபடி இறந்தும் போனாள்.

तां हतां भीमसंकाशां दृष्ट्वा सुरपतिस्तदा ।
साधु साध्विति काकुत्स्थं सुराश्च समपूजयन् ॥ 26½ ॥

उवाच परमप्रीतः सहस्राक्षः पुरंदरः ।
सुराश्च सर्वे संहृष्टा विश्वामित्रमथाब्रुवन् ॥ 27½ ॥

मुने कौशिक भद्रं ते सेन्द्राः सर्वे मरुद्गणाः ।
तोषिताः कर्मणाऽनेन स्नेहं दर्शय राघवे ॥ 28½ ॥

26½. (ப - ரை) **भीमसंकाशां** - பயங்கரரூபியான, **तां** - அந்தத் தாடகியை, **हतां** - அடிபட்டுப்போனவளாக, **दृष्ट्वा** - பார்த்துவிட்டு, **तदा** - அப்பொழுது, **सुर-पतिः** - தேவேந்திரனும், **सुराश्च** - தேவதைகளும், **साधु साधु इति** - நல்லது, நல்லது என்று, **काकुत्स्थं** - இராகவனை, **समपूजयन्** - கொண்டாடினார்கள்.

27½. (ப - ரை) **सहस्राक्षः** - ஆயிரம் கண்களுள்ளவனான, **पुरंदरः** - தேவேந்திரன், **परमप्रीतः** - மிகவும் பிரீதி யடைந்தவராக, **उवाच** - சொன்னார், **अथ** - பிறகு, **संहृष्टाः** - ஸந்துஷ்டர்களான, **सर्वे-सुराश्च** - எல்லாத் தேவர்களும், **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

28½. (ப - ரை) **मुने** - மஹரிஷியான, **कौशिक** - கௌசிகரே, **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **अनेन** - இந்த, **कर्मणा** - காரியத்தினால், **सेन्द्राः** - இந்திரனோடு கூடினவைகளான, **सर्वे** - ஸமஸ்தங்களான, **मरुद्गणाः** - தேவகணங்களும், **तोषिताः** - திருப்திசெய்து வைக்கப்பட்டன, **राघवे** - இராமன் விஷயத்தில், **स्नेहं** - சிநேகத்தை, அதாவது பிரீதிக்கு அறிகுறியான ஒன்றை, **दर्शय** - காண்பியும்.

26½. (க - ரை) தாடகை அழிந்துவிட்டதைக் கண்ட தேவர்கள், இந்திரனுள்பட நன்று, நன்று, என்று வெகுவாக இராமனைக் கொண்டாடினார்கள்.

27½. (க - ரை) தனது ஆயிரம் கண்களாலும் அக்காக்ஷியைக்கண்டு களிப்படைந்த ஸுரபதி, மற்றய தேவதைகளும் ஆமோதித்துக் கொண்டாட, எல்லோரும் விசுவாமித்திரரைப் பார்த்து இவ்வார்த்தை சொல்லலாயினர்.

28½-31½. (க - ரை) ஹே கௌசிக மஹரிஷியே! உங்களுக்கு மங்களமுண்டாகுக. இக்காரியத்தினால் யாங்கள் ஸந்தோஷமடைந்தோம், இத்தருணத்தில் இராகவனுக்குத் தக்க பாரிதோஷிகத்தை (வெகுமானத்தை)க் கொடுக்கவேண்டியது அவசியமன்றோ! பிருசாச்வரரென்கிற பிரஜாபதிக்குப் புத்திரரூபங்களாய் மிகுந்த பராக்கிரமமுள்ளவைகளான தவத்தின் பயனைப்பெற்ற திவ்வியாஸ்திரங்களை

प्रजापतेर्भृशाश्वस्य पुत्रान्सत्यपराक्रमान् ।
तपोबलभृतान्ब्रह्मन् राघवाय निवेदय ॥ 29½ ॥

पात्रभूतश्च ते ब्रह्मंस्तवानुगमने धृतः ।
कर्तव्यं च महत्कर्म सुराणां राजसूनुना ॥ 30½ ॥

एवमुक्त्वा सुराः सर्वे हृष्टाजग्मुर्यथागतम् ।
विश्वामित्रं पुरस्कृत्य ततः सन्ध्या प्रवर्तते ॥ 31½ ॥
ततो मुनिवरः प्रीतस्ताटकावधतोषितः ।
मूर्ध्नि राममुपाघ्राय इदं वचनमब्रवीत् 32½

29½. (ப - ரை) **ब्रह्मन्** - பெரியவரே! **प्रजापतेः** - பிரஜாபதியான, **भृशाश्वस्य** - க்ருசாச்வருடைய, **तपोबलभृतान्** - தபோ பலத்தினால் உண்டாக்கப்பட்டவர்களாயும், **सत्यपराक्रमान्** - நிலையான பராக்கிரமத்தை யுடையவர்களுமான, **पुत्रान्** - புத்திர ரூபங்களான அஸ்திரங்களை, **राघवाय** - இராகவனின் பொருட்டு, **निवेदय** - தெரிவியும் அல்லது ஸமர்ப்பிப்பீராக.

30½. (ப - ரை) **ब्रह्मन्** - பிரும்மரிஷியே! **तव** - உம்முடைய, **अनुगमने** - அனுவர்த்தனத்தில், **धृतः** - நிலையுள்ள (இவ்விராகவன்), **ते** - உமக்கு, **पात्रभूतश्च** - தக்க பாத்திரமாயுமிருக்கின்றார், **राजसूनुना** - இராஜகுமாரனாலே, **सुराणां** - தேவர்களுக்கு, **महत्** - பெரிதான, **कर्मः** - காரியம், **कर्तव्यं च** - செய்யப்பட வேண்டியதாயுமிருக்கின்றது.

31½. (ப - ரை) **एवं** - இப்படி, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **सर्वे** - ஸமஸ்தர்களான, **सुराः** - தேவர்களும், **हृष्टाः** - ஸந்துஷ்டர்களாக, **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **पुरस्कृत्य** - பூஜித்துவிட்டு, **यथागतम्** - வந்தவழியே, **जग्मुः** - சென்றார்கள், **ततः** - பிறகு, **सन्ध्या** - ஸாயம் ஸந்தியா காலமானது, **प्रवर्तते** - பிரவர்த்திக்கின்றது.

32½. (ப - ரை) **ततः** - பிறகு, **ताटकावधतोषितः** - தாடகியின் வதத்தினால்

இராகவனுக்கு ஸமர்ப்பணம் பண்ணும். ஓ பிரும்மன்! உமது சுச்ருஷணத்திலே ஆஸக்தியுள்ள இவ்விராகவன், அவ்வத்திரங்களைக் கொடுப்பதற்குத் தக்க பாத்திர மன்றோ! இவ்வரசு இளங்குமரன் தேவர்களுக்குச் செய்யவேண்டியது இனி அநேக மிருக்கின்றது. ஆகையினால் அவ்வத்திரங்களை இராமபத்திரனிடம் ஸமர்ப்பிப்பீராக என்று சொல்லி விசுவாமித்திரரைப் பூஜித்து விடைபெற்றுக்கொண்டு தேவர்களெல்லோரும் தம் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்.

32½-33½. (க - ரை) தாடகி அழிந்ததினால் அளவற்ற மகிழ்ச்சியைப் பெற்றவரான மஹரிஷி, அன்புடன் இராகவனை அழைத்து உச்சிமோந்து கொண்டாடி

इहाद्य रजनीं राम वसेम शुभदर्शन ।
श्वःप्रभाते गमिष्यामस्तदाऽऽश्रमपदं मम ॥ 33½ ॥

विश्वामित्रवचः श्रुत्वा हृष्टो दशरथात्मजः ।
उवास रजनीं तत्र ताटकाया वने सुखम् ॥ 34½ ॥

मुक्तशापं वनं तच्च तस्मिन्नेव तदाहनि ।
रमणीयं विबभ्राज यथा चैत्ररथं वनम् ॥ 35½ ॥

ஸந்துஷ்டரான, **मुनिवरः** - ரிஷிசிரேஷ்டரானவர், **प्रीतः** - பிரீதியுடையவராக, **रामं** - இராமனை, **मूर्ध्नि** - உச்சியில், **उपाघ्राय** - முகர்ந்து, **इदं** - இந்த, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

33½. (ப - ரை) **राम** - இராகவனே! **इह** - இங்கே, **अद्य** - இன்றைய, **रजनीं** - இராத்திரியை, **वसेम** - வாஸஞ்செய்வோம், **शुभदर्शन** - மங்களமான பார்வையுடையவனே! **श्वः** - நாளைய, **प्रभाते** - காலையில், **मम** - என்னுடைய, **तत्** - அந்த, **आश्रमपदं** - ஆசிரம ஸ்தானத்தை, **गमिष्यामः** - போவோம்.

34½. (ப - ரை) **विश्वामित्रवचः** - விசுவாமித்திரருடைய வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **हृष्टः** - ஸந்தோஷத்தை அடைந்தவரான, **दशरथात्मजः** - தசரதருடைய குமாரர், **तत्र** - அந்த, **ताटकायाः** - தாடகியினுடைய, **वने** - வனத்திலே, **रजनीं** - இரவை, **सुखम्** - ஸுகமாக, **उवास** - வஸித்தார்.

35½. (ப - ரை) **मुक्तशापं** - விடுபட்டிருக்கின்ற சாபத்தை யுடையதான, அதாவது சாபத்திலிருந்து விடுபட்டிருக்கின்றதான, **तत्** - அந்த, **वनं च** - வனமும், **तदा** - அப்போது, **तस्मिन् एव** - அதே, **अहनि** - பகலில், **चैत्ररथं** - சைத்திரரத மெனப்படுகிற, **वनम् यथा** - உத்தியான - வனம்போல, **रमणीयं** - மனோக்ஞமாக, **विबभ्राज** - விசேஷித்து விளங்கிற்று.

என் அழகிய குழந்தாய்! யான் முன்சொன்ன எனது ஆசிரமத்திற்கு நாளைக்காலையில் போய்ச்சேருவோம். இன்றிரவு இங்கேயே தங்கியிருப்போம், என்று மெதுவாகச் சொன்னார்.

34½-35½. (க - ரை) விசுவாமித்திரர் சொல்லிய அவ் வார்த்தையைக் கேட்ட தாசரதியும், தாடகா வனத்திலேயே அவ்விரவு தங்குவதைத் தடையின்றி ஏற்றுக் கொண்டார். கொடிய சாபத்தின் வாயிலிருந்து அப்போதே விடுபட்ட தாயினும் அவ் வனம், சைத்திர ரத மென்கிற குபேரனுடைய உத்தியானம் போல, கண்ணையும், மனத்தையும் கவருகின்ற மாதிரியில் விளங்கலாயிற்று.

निहत्य तां यक्षसुतां स रामः प्रशस्यमानः सुरसिद्धसङ्घैः ।
उवास तस्मिन्मुनिना सहैव प्रभातवेलां प्रतिबोध्यमानः ॥ 36½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डे
षड्विंशः सर्गः ॥ 26 ॥

36½. (ப - ரை) **सः** - அந்த, **रामः** - இராமபத்திரன், **तां** - அந்த, **यक्षसुतां** - யெக்ஷ குமாரியான தாடகியை, **निहत्य** - கொன்று, **सुरसिद्धसङ्घैः** - தேவர், ஸித்தர்களுடைய ஸமூஹங்களினுலே, **प्रशस्यमानः** - கொண்டாடப் படுகின்றவராக, **तस्मिन्** - அவ்விடத்தில், **मुनिना सह एव** - மஹரிஷியோடு கூடவே, **प्रभातवेलां** - கால வேளையில், **प्रतिबोध्यमानः** - எழுப்பப்படப் போகின்றவராக, **उवास** - வஸித்தார்.

36½. (க - ரை) இப்படி தாடகியைக் கொன்றதற்காக இராகவனை தேவ ஸித்த ஸமூஹங்கள் துதி செய்யலாயின. அன்றும் இராகவன் முன்போலவே விசுவாமித்திரர் ஸுப்ரபாதம் பாடி எழுப்பும் வரையில் [illegible] படுத்திருந்து, அது பாடியவுடன் பரபரவென்று எழுந்திருந்து விசுவாமித்திரர் முன்னிலையில் மிக்கப் பணிவுடன் நின்றார்.

सप्तविंशः सर्गः ॥ 27 ॥

अथ तां रजनीमुष्य विश्वामित्रो महायशाः ।
प्रहस्य राघवं वाक्यमुवाच मधुराक्षरम् ॥ १ ॥

परितुष्टोऽस्मि भद्रं ते राजपुत्र महायशः ।
प्रीत्या परमया युक्तो ददाम्यस्त्राणि सर्वशः ॥ 2 ॥

देवासुरगणान्वापि सगन्धर्वोरगानपि ।
यैरमित्रान्प्रसह्याजौ वशीकृत्य जयिष्यसि ॥ 3 ॥

1. (ப - ரை) **अथ** - *பிறகு,* **तां** - *அந்த,* **रजनीं** - *இராத்திரியை,* **उष्य** - *வஸித்திருந்து,* **महायशाः** - *மிக்ககீர்த்தியுள்ளவரான,* **विश्वामित्रः** - *விசுவாமித்திரர்,* **प्रहस्य** - *சிரித்துக் கொண்டு,* **राघवं** - *இராகவனைக் குறித்து,* **मधुराक्षरम्** - *இனியவைகளான எழுத்துக்களோடு கூடிய,* **वाक्यं** - *வாக்கியத்தை,* **उवाच** - *சொன்னார்.*

2. (ப - ரை) **महायशः** - *மஹத்தான கீர்த்தியுடையவரான,* **राजपुत्र** - *இராஜகுமாரனே!* **परितुष्टः** - *ஸந்துஷ்டராக,* **अस्मि** - *இருக்கின்றேன்,* **ते** - *உமக்கு,* **भद्रं** - *மங்களமுண்டாகட்டும்,* **परमया** - *அதிகமான,* **प्रीत्या** - *பிரீதியோடு,* **युक्तः** - *சேர்ந்தவனாக,* **अस्त्राणि** - *அஸ்திரங்களை,* **सर्वशः** - *முழுவதும்,* **ददामि** - *கொடுக்கின்றேன்.*

3. (ப - ரை) **देवासुरगणान्वापि** - *தேவர்கள், அஸுரர்களுடைய, கூட்டங்களையானாலும்,* **सगन्धर्वोरगानपि** - *கந்தர்வர்களோடு கூடின உரகர்களைத் தானென்றாலும்,* **यैः** - *எந்த அஸ்திரங்களினாலே,* **अमित्रान्** - *சத்துருக்களை,* **आजौ** - *யுத்தத்தில்,* **प्रसह्य** - *பலாத்கரித்து,* **वशीकृत्य** - *வசப் படுத்திக்கொண்டு,* **जयिष्यसि** - *ஜெயிக்கப் போகின்றீரோ!*

1. (க - ரை) *அன்றிரவு அங்கு தங்கியிருந்த விசுவாமித்திரர், விடிந்தவுடன் இராகவனைப் பார்த்து மந்தஹாஸத்துடன் ஒரு வார்த்தை சொல்லுகின்றார்,*

2-3. (க - ரை) *இராகவா! மிக்க ஸந்தோஷம். கீர்த்தி வாய்ந்த இராஜகுமார, எனக்கு நின்பாலுண்டாகும் அன்பை அளவிட முடியாது. என் கையிலுள்ள மற்றய அஸ்திரங்கள் முழுவதையும், இப்பொழுதே உமக்குக் கொடுத்து விடுகின்றேன். அவற்றைக் கொண்டு போர் முனையில் எதிர்த்து நிற்கும் பகைவர்களை நீர் பலாத்காரமாயிழுத்து உமது அடிகளின் கீழ் படிந்து கிடக்கும்படி வசப் படுத்தி ஜெயித்து விடப் போகின்றீர்.*

तानि दिव्यानि भद्रं ते ददाम्यस्त्राणि सर्वशः ।
दण्डचक्रं महद्दिव्यं तव दास्यामि राघव ॥ 4 ॥

धर्मचक्रं ततो वीर कालचक्रं तथैव च ।
विष्णुचक्रं तथात्युग्रमैन्द्रमस्त्रं तथैव च ॥ 5 ॥

वज्रमस्त्रं नरश्रेष्ठ शैवं शूलवरं तथा ।
अस्त्रं ब्रह्मशिरश्चैव ऐषीकमपि राघव ।
ददामि ते महाबाहो ब्राह्ममस्त्रमनुत्तमम् ॥ 6 ॥

4. (ப-ரை) **दिव्यानि** - தேவதாஸம்பந்தங்களான, **तानि** - அந்த, **अस्त्राणि** - அஸ்திரங்களை, **सर्वशः** - எல்லாவற்றையும், **ते** - உமக்கு, **ददामि** - கொடுக்கின்றேன், **भद्रं** - மங்களமுண்டாகுக, **राघव** - இராகவனே!, **महत्** - பெரியதும், **दिव्यं** - தேவதா ஸம்பந்தமுமான, **दण्डचक्रं** - தண்டசக்ரமென்கிற அஸ்திரத்தையும், **तव** - உமக்கு, **दास्यामि** - கொடுக்கிறேன்.

5-6. (ப-ரை) **ततः** - பிறகு, **धर्मचक्रं** - தர்மசக்ரத்தையும், **तथैवच** - அப்படியே, **कालचक्रं** - காலசக்ரத்தையும், **अत्युग्रं** - அதிக்ரூரமான, **विष्णुचक्रं** - விஷ்ணுசக்ரத்தை யும், **तथैवच** - அப்படியே, **ऐन्द्रं** - இந்திரதேவதாகமான, **अस्त्रं** - அஸ்திரத்தையும், (அல்லது அஸ்த்ரமான) **वज्रं** - வஜ்ரமென்கிற, **अस्त्रं** - அஸ்திரத்தையும், **नरश्रेष्ठ**- புருஷோத்தமனே, **तथा** - அப்படியே, **शैवं** - சிவதேவதாகமான, **शूलवरं** - சிலாக்கி யமான சூலத்தையும், **ब्रह्मशिरः** - பிரம்ஹசிரஸ் என்கிற, **अस्त्रं च एव** அஸ்த்ரத் தையும், **राघव !** - ரகுத்தமனே!, **ऐषीकमपि** - ஐஷீகாஸ்திரத்தையும், **महाबाहो** - தீர்க்கபாஹுவே!, **अनुत्तमम्** - ஒப்புயர்வற்றதான, **ब्राह्मं अस्त्रं** ப்ராஹ்மாஸ்திரத் தையும், **ते** - உமக்கு, **ददामि** - கொடுக்கிறேன்.

4-5-6. (க-ரை) இராமசந்திர! மேற்கூறிய தேவதாஸம்பந்தங்களான அஸ்தி ரங்களனைத்தையும், உமக்குத் தருகிறேன் பெற்றுக்கொள்வீர். புருஷோத்தமா! திவ்யங்களான தண்டசக்ரம், தர்மசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், இந்திரம், வஜ்ரம் இவற்றையுந் தருகிறேன். மேலும் இரகுத்தமனே! சைவசூலம், பிரம்மசிரஸு இவற்றையுங் கொடுக்கிறேன். மஹாபாஹுவே! ஐஷீகாஸ்திரத்தைத் தருகிறேன். ஒப்புயர்வற்றதான பிரம்மாஸ்திரத்தையுங் கொடுக்கிறேன் பெற் றுக்கொண்டருளும்.

गदे द्वे चैव काकुत्स्थ मोदकी शिखरी उभे ।
प्रदीप्ते नरशार्दूल प्रयच्छामि नृपात्मज ॥ 7 ॥
धर्मपाशमहं राम कालपाशं तथैव च ।
पाशं वारुणमस्त्रं च ददाम्यहमनुत्तमम् ॥ 8 ॥
अशनी द्वे प्रयच्छामि शुष्कार्द्रे रघुनन्दन ।
ददामि चास्त्रं पैनाकमस्त्रं नारायणं तथा ॥ 9 ॥

---

7. (ப-ரை) **काकुत्स्थ** - காகுத்தனே! **मोदकी शिखरी** - மோதகியென்னும், சிகரியென்னும் பெயருள்ளதுகளான, **(ये)** எந்த, **द्वे** - இரண்டு, **गदे** - கதைகளுண்டோ, **नरशार्दूल** - புருஷவியாக்ரனே! **प्रदीप्ते** - பிரகாசங்களான, **(ते) उभे** - அந்த இரண்டையும், **नृपात्मज** - இராஜகுமாரனே! **प्रयच्छामि** - கொடுக்கின்றேன்.

8. (ப-ரை) **राम** - இராமனே! **अहं** - யான், **धर्मपाशं** - தர்மபாசமென்கிற ஆயுதத்தையும், **तथैवच** - அப்படியே, **कालपाशं** - காலபாசத்தையும், **अनुत्तमम्** - உயர்வில்லாத, **वारुणं** - வருணனுடையதான, **पाशं** - பாசத்தையும், **अस्त्रंच** - அத்திரத்தையும், **अहं** - நான், **ददामि** - கொடுக்கின்றேன்.

9. (ப-ரை) **रघुनन्दन** - இரகுநந்தனனே! **शुष्कार्द्रे** - உலர்ந்ததாயும், ஈரமாயிருக்கின்ற, **द्वे अशनी** இரண்டு அசனி ஆயுதத்தையும், **प्रयच्छामि** - கொடுக்கின்றேன், **पैनाकं** - பினாகியினுடையதான, **अस्त्रं** - அத்திரத்தையும், **तथा** - அப்படியே, **नारायणं** - நாராயணனுடையதான, **अस्त्रंच** - அத்திரத்தையும், **ददामि** - கொடுக்கின்றேன்.

7. (க-ரை) காகுஸ்த! மோதகி, சிகரி என்று பெயர் பெற்ற இரண்டு கதைகளுண்டு. உத்தம வீரியமுள்ள இராஜகுமாரனே! மிக்க ஒளியுள்ளவைகளான அவ்விரண்டையும் உமக்குத்தருகின்றேன்.

8. (க-ரை) இராமா! உத்தமமான தர்மபாசம், காலபாசம், வருணபாசம் என்கின்ற பாசங்களையும், வாருணாத்திரத்தையும் யான் உமக்குக் கொடுக்கின்றேன்.

9. (க-ரை) இரகுநந்தனா! சுஷ்க்கம், ஆர்த்திரம், எனப்படுகின்ற இரண்டு அசனி ஆயுதங்களையும், மஹேசுவராத்திரத்தையும், நாராயணாத்திரத்தையும், யான் உனக்குக் கொடுக்கின்றேன்.

आग्नेयमस्त्रं दयितं शिखरं नाम नामतः ।
वायव्यं प्रथनं नाम ददामि च तवानघ ॥ 10 ॥

अस्त्रं हयशिरो नाम क्रौञ्चमस्त्रं तथैव च ।
शक्तिद्वयं च काकुत्स्थ ददामि तव राघव ॥ 11 ॥

कङ्कालं मुसलं घोरं कापालमथ कङ्कणम् ।
धारयन्त्यसुरा यानि ददाम्येतानि सर्वशः ॥ 12 ॥

10. (ப-ரை) **अनघ** - குற்றமற்றவனே! **तव** - உனக்கு, **नामतः** - பெயரினாலே, **शिखरं नाम** சிகரமென்று பிரசித்தமான, **दयितं** - அக்கினிதேவனுக்கு இஷ்டமான, **आग्नेयं - अस्त्रं** - ஆக்னேயாஸ்திரத்தையும், **प्रथनं नाम** - பிரதனம் எனப்படுகின்ற, **वायव्यं** - வாயுதேவதாகமான அஸ்திரத்தையும், **ददामि** கொடுக்கின்றேன்.

11. (ப-ரை) **हयशिरः नाम** - "ஹயசிரஸம்" என்கிற, **अस्त्रं** - அஸ்திரத்தையும், **क्रौञ्चं** - "கிரௌஞ்சம்" என்கிற, **अस्त्रं** - அஸ்திரத்தையும், **तथैव च** - அப்படியே, **काकुत्स्थ** - காகுத்தனே! **शक्तिद्वयंच** (சிவ விஷ்ணு) சக்தி ஆயுதங்களிரண்டையும், **राघव** - இராகவனே! **तव** - உனக்கு, **ददामि** கொடுக்கின்றேன்.

12. (ப-ரை) **कङ्कालं - मुसलं - घोरं कापालं अथ कङ्कणम्** - கங்காலமென்றும் முஸலமென்றும், கோரமான காபாலமென்றும், கங்கணமென்றும், **असुराः** - அஸுரர்கள், **यानि** - எவைகளை, **धारयन्ति** - தரிக்கின்றார்களோ, **एतानि** - இவைகளை, **सर्वशः** - முழுதும், **ददामि** - கொடுக்கின்றேன்.

10. (க-ரை) குறையற்ற குமாரனே! உனக்கு "சிகரம்" என்று பெயர் பெற்ற ஆக்னேயாஸ்திரத்தையும் "பிரதனம்" என்று பிரசித்தமான வாயவியாஸ்திரத்தையும், கொடுக்கின்றேன்.

11. (க-ரை) இராகவா! குதிரை முகம், சக்கிரவாக முகம் உள்ள அஸ்திரங்களையும், சிவ, விஷ்ணுக்களுடைய சக்தி ஆயுதங்களையும் கொடுக்கின்றேன்.

12. (க-ரை) அஸுரர் கையிலேந்திப் போர் புரிகின்ற, கங்கால, முஸல, காபால, கங்கணம் முதலியவைகளான அஸ்திரங்களெல்லாவற்றையும் கொடுத்து விடுகிறேன் பெற்றுக்கொள்ளும்.

वैद्याधरं महास्त्रं च नन्दनं नाम नामतः ।
असिरत्नं महाबाहो ददामि नृवरात्मज ॥ 13 ॥
गान्धर्वमस्त्रं दयितं मानवं नाम नामतः ।
प्रस्वापनप्रशमने दद्मि सौरं च राघव ॥ 14 ॥
दर्पणं शोषणं चैव सन्तापनविलापने ।
मदनं चैव दुर्द्धर्षं कन्दर्पदयितं तथा ॥ 15 ॥
पैशाचमस्त्रं दयितं मोहनं नाम नामतः ।
प्रतीच्छ नरशार्दूल राजपुत्र महायशः ॥ 16 ॥

13. (ப-ரை) महाबाहो - [illegible] ! वैद्याधरं- வித்தியாதரர்களின் [illegible] महास्त्र - [illegible] அஸ்திரமாயும், नामतः - [illegible] नन्दननाम [illegible] असिरत्नंच - [illegible] नृवरात्मज - [illegible] ! ददामि - [illegible].

14. (ப-ரை) राघव - [illegible] ! दयितं [illegible] नामतः - [illegible] मानवं नाम [illegible] गन्धर्वं [illegible] अस्त्रं - அஸ்திரத் [illegible] प्रस्वापनप्रशमने [illegible] संरंच [illegible] दद्मि [illegible].

15-16. (ப-ரை) महायशः [illegible] राजपुत्र [illegible] ! दर्पणं [illegible] शोषणंचैव [illegible] सन्तापन विलापने [illegible]

13. (வ-ரை) [illegible] ! [illegible]

14. (வ-ரை) [illegible] !

15-16. (வ-ரை) [illegible] ! [illegible] கதறச்செய்வன

तामसं नरशार्दूल सौमनं च महाबल ।
संवर्तं चैव दुर्द्धर्षं मौसलं नाम नामतः ॥ 17 ॥

सत्यमस्त्रं महाबाहो तथा मायाधरं परम् ।
घोरं तेजःप्रभं नाम परतेजोपकर्षणम् ॥ 18 ॥

सौम्यास्त्रं शिशिरं नाम त्वाष्ट्रमस्त्रं सुदामनम् ।
दारुणं च भगस्यापि शितेषुमथ मानवम् ॥ 19 ॥

एतान् राम महाबाहो कामरूपान्महाबलान् ।
गृहाण परमोदारान्क्षिप्रमेव नृपात्मज ॥ 20 ॥

கணையும், **तथा** - [illegible]. **दुर्द्धर्षं** - [illegible]. **कन्दर्पदयितं** [illegible] பிரியமான, **मदनंचैव** - [illegible]. **नामतः** - பெயரில், **मोहनंनाम** - [illegible]. **पैशाचं** பிசாசத்தினுடைய [illegible]. **दयितं** - [illegible]. **अस्त्रं** [illegible]. **नरशार्दूल** - [illegible]! **प्रतीच्छ** - [illegible].

17-20. ([illegible]) **नरशार्दूल** [illegible]! **तामसं** [illegible] "[illegible]" [illegible]. **महाबल** - [illegible]! **सौमनं च** [illegible] கிரத்தையும், **दुर्द्धर्षं** - [illegible]. **संवर्तं** [illegible], **नामतः** - பெயரில், **मौसलं नाम** [illegible]. **सत्यं अस्त्रं** [illegible] கிரத்தையும், **महाबाहो** [illegible]! **तथा** [illegible]. **परम्** [illegible], **मायाधरं** - [illegible]. **घोरं** [illegible], **परतेजोपकर्षणम्** [illegible] தேஜஸை [illegible]. **तेजः प्रभं नाम** [illegible], **शिशिरंनाम** [illegible]. **सौम्यास्त्रं** [illegible]. **सुदामनम्** [illegible]. **त्वाष्ट्रंअस्त्रं** [illegible]. **दारुणं च** [illegible]. **भगस्य** [illegible]. **शितेषुं अपि** [illegible]

[illegible]

17-20. ([illegible]) [illegible]! [illegible]

स्थितस्तु प्राङ्मुखो भूत्वा शुचिर्मुनिवरस्तदा ।
ददौ रामाय सुप्रीतो मन्त्रग्राममनुत्तमम् ॥ 21 ॥
सर्वसंग्रहणं येषां दैवतैरपि दुर्लभम् ।
तान्यस्त्राणि तदा विप्रो राघवाय न्यवेदयत् ॥ 22 ॥
जपतस्तु मुनेस्तस्य विश्वामित्रस्य धीमतः ।
उपतस्थुर्महार्हाणि सर्वाण्यस्त्राणि राघवम् ॥ 23 ॥

என்கிற அஸ்திரத்தையும், **अथ** - அப்படியே, **मानवम्** - மானவாஸ்திரத்தையும், **महाबाहो** - தீர்க்கபாஹுவே! **नृपात्मज** - இராஜகுமாரனே! **राम** - இராமனே! **कामरूपान्** - காமரூபிகளாயும், **महाबलान्** - மஹாபலிஷ்டங்களாயும், **परमोदारान्**- மிக்க ஔதாரியமுள்ளவைகளுமான, **एतान्** - இந்த அஸ்திரங்களை, **क्षिप्रमेव** - சீக்கிரமாகவே, **गृहाण** - க்ரஹித்துக்கொள்ளும்.

21. (ப-ரை) **शुचिः** - பரிசுத்தரான, **मुनिवरः तु** - ரிஷிசிரேஷ்டரும், **तदा** - அப்போது, **प्राङ्मुखः**- கிழக்கு முகமாக, **भूत्वा** - ஆகி, **स्थितः** - உட்கார்ந்துகொண்டு, **रामाय** - இராமனின் பொருட்டு, **अनुत्तमम्** - ஒப்புயர்வற்றதான, **मन्त्रग्रामं** - மந்திர ஸமூஹத்தை, **सुप्रीतः** - மிக்க ப்ரீதியுடையவராக, **ददौ** - கொடுத்தார்.

22. (ப-ரை) **येषां** - எந்த அஸ்திரங்களுடைய, **सर्वसंग्रहणं** - முற்றிலும் பெறுகை யென்பது, **दैवतैः अपि** - தேவர்களினாலும், **दुर्लभम्**- ஸாத்தியமல்லாததோ, **तानि** - அந்த, **अस्त्राणि** - அஸ்திரங்களெல்லாம், **तदा** - அப்பொழுது, **विप्रः** - விசுவாமித்திர மஹரிஷியானவர், **राघवाय** - இராகவனின் பொருட்டு, **न्यवेदयत्** - ஸமர்ப்பித்தார்.

23. (ப-ரை) **धीमतः** - புத்திமானான, **तस्य** - அந்த, **मुनेः** - ரிஷியான, **विश्वामित्रस्य** - விசுவாமித்திரர், **जपतः तु** - மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருக்கையில்,

---

டிரம், தாருணம், ஸௌரம், மானவம் இவை முதலான அஸ்திரங்களெல்லாவற்றையும் சீக்கிரமாக பெற்றுக்கொள்ளும்.

21-22. (க-ரை) இப்படி இராகவனைப் பார்த்துக் கூறிவிட்டு, விசுவாமித்திர ப்ரம்மரிஷியானவர், தேவர்களினாலும், முற்றவும் எற்றுக்கொள்ளமுடியாத அஸ்திரங்களெல்லாவற்றையும் கிழக்கு முகமாய் இருந்துகொண்டு, மிக்க அன்போடு இராகவனிடத்தில் ஸமர்ப்பித்தார்.

23-24. (க-ரை) இப்படி இராகவனிடத்தில் அஸ்திரங்களை ஸமர்ப்பிக்க

ऊचुश्च मुदिताः सर्वे रामं प्राञ्जलयस्तदा ।
इमे स्म परमोदाराः किंकरास्तव राघव ॥ 24 ॥

प्रतिगृह्य च काकुत्स्थः समालभ्य च पाणिना ।
मानसा मे भविष्यध्वमिति तानभ्यचोदयत् ॥ 25 ॥

महार्हाणि - மிகவும் உயர்ந்ததுகளான, **सर्वाणि** - எல்லா, **अस्त्राणि** - அஸ்திர தேவதைகளும், **राघवम्** - இராகவனை, **उपतस्थुः** - ஸேவைக்காக நேரில் வந்து நின்றன.

24. (ப-ரை) **राघव** - இராகவனே! **परमोदाराः** - மிக்க உதாரர்களான, அதாவது வேண்டும் பணிகளையெல்லாம் செய்கின்றவர்களான, **इमे** - இந்த நாங்கள், **तव** - உமக்கு, **किंकराः स्म** - தாஸர்களாயிருக்கின்றோமன்றோ! (என்று) **सर्वे** - அந்த அஸ்திர தேவதைகளெல்லாம், **तदा** - அப்போது, **प्राञ्जलयः** - நன்றாய்க் குவிக்கப்பட்ட கைகளை யுடையவர்களாய், **रामं** - இராமனை, **मुदिताः** - ஸந்தோஷமுடையவர்களாக, **ऊचुश्च** - சொல்லவும் சொன்னார்கள்.

25. (ப-ரை) **काकुत्स्थः** - இராகவனானவர், **तान्** - அந்த அஸ்திரங்களை, **प्रतिगृह्य - च** - (ஸேவைக்காக) ஏற்றுக்கொண்டும், **पाणिना** - கையினாலே, **समालभ्य च** - (அதற்கு அறிகுறியாக) தடவிக்கொடுத்தும், **मे** - எனக்கு, **मानसाः** - மனோ அநுஸாரிகளாக, அதாவது நினைத்த போது தோன்றுகின்றவர்களாக அல்லது மனதில்

எண்ணிய அப்பொழுதே அவற்றின் மந்திரங்களை ஜபித்தவுடனே அவ்வுயர்ந்த அத்திரங்களெல்லாம் மிக்கப்பணிவுடன் இராமனிடம் வந்து கைகுவித்துக் கொண்டு பிரபுவே! தங்களுக்கு வேண்டியவையெல்லாம் செய்யும் வேலையாட்கள் யாம், என்று மிக்க ஸந்தோஷத்துடன் விண்ணப்பித்துக்கொண்டார்கள்.

25. (க-ரை) இராகவனும் அவ்விண்ணப்பத்தின்படி அவர்களுடைய ஸேவையை ஏற்றுக்கொண்டு அதற்கு அடையாளமாக தமது திருக்கரங்களினால் அவர்களைத் தடவிக்கொடுத்து, நீங்கள் என் மனத்திலுள்ளே நிலைத்திருந்து

(यद्यदिच्छसि भद्रं ते तत्सर्वं करवाम वै ।
ततो रामः प्रसन्नात्मा तैरित्युक्तो महाबलैः ।)

இந்த சுலோகம் சில புஸ்தகங்களிலிருக்கிறது.

ततः प्रीतमना रामो विश्वामित्रं महामुनिम् ।
अभिवाद्य महातेजा गमनायोपचक्रमे ॥ 26 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
सप्तविंशः सर्गः. ॥ 27 ॥

நிலைகொண்டவர்களாக, **भविष्यथ** - ஆகக்கடவீர்கள், **इति** - என்று, **अभ्यचोदयत्** - ஆக்ஞாபித்தார்.

26. (ப-ரை) **ततः** - பிறகு, **प्रीतमनाः**-ஸந்துஷ்டமானமனதையுடையவரான, **रामः** - இராமனுனவர், **महामुनिम्** - மஹரிஷியான, **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **अभिवाद्य** - நமஸ்கரித்து, **महातेजाः** - மஹத்தான தேஜஸையுடையவராக, **गमनाय** - மேலே செல்லுவதின் பொருட்டு, **उपचक्रमे** - ஆரம்பித்தார்.

யான் வேண்டும்போது வெளியிற்தோன்றி வேலை செய்யுங்கள் என்று அவர்களுக்கு ஆக்ஞாபித்தருளினுர்.

26. (க-ரை) பிறகு, மஹாதேஜஸ்வியான ஸ்ரீராமபத்திரன் விசுவாமித்திர மஹரிஷியை நமஸ்கரித்து அவர் ஆசியைப் பெற்றுக்கொண்டு, ஆசிரமத்தை நோக்கி அவருடன் புறப்படலானுர்.

अष्टाविंशः सर्गः ॥ 28 ॥

प्रतिगृह्य ततोऽस्त्राणि प्रहृष्टवदनः शुचिः ।
गच्छन्नेव च काकुत्स्थो विश्वामित्रमथाब्रवीत् ॥ 1 ॥
गृहीतास्त्रोऽस्मि भगवन्दुराधर्षः सुरैरपि ।
अस्त्राणां त्वहमिच्छामि संहारं मुनिपुङ्गव ॥ 2 ॥

---

1. (ப-ரை) **प्रहृष्टवदनः** - ஸந்தோஷமடைந்த முகத்தையுடையவராயும், **शुचिः** - பரிசுத்தராயுமிருக்கிற, **काकुत्स्थः** - ஸ்ரீராமன், **ततः** - அந்த ரிஷியினிடத்திலிருந்து, **अस्त्राणि** - அத்திரங்களை, **प्रतिगृह्य**- பெற்றுக்கொண்டு, **अथ** - பிறகு, **गच्छन्नेव च**- போய்க்கொண்டேயிருக்கும்பொழுதும், **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **अब्रवीत्** - சொன்னார்.

2. (ப-ரை) **भगवन्** - பகவானே! **गृहीतास्त्रः** - கிருஹிக்கப்பட்ட அத்திரங்களையுடையவனாயும், **सुरैः अपि** - தேவர்களாலும், **दुराधर्षः** - துருஷிக்கக்கூடாதவனாயும், **अस्मि** - இருக்கின்றேன், **तु** - ஆனால், **मुनिपुङ्गव** - முனிசிரேஷ்டரே! **अहं** நான், **अस्त्राणां** - அத்திரங்களுடைய, **संहारं** - உபஸம்ஹாரத்தை, **इच्छामि** - ஆசிக்கின்றேன்.

1. (க-ரை) இப்படி, அபூருவமான அத்திரம் அநேகத்தை மஹரிஷி இராகவனுக்குக் கொடுத்தருளினார். இராமனும் ஸந்தோஷத்துடன் சுத்தராயிருந்துகொண்டு அவற்றைப் பெற்றுக்கொண்டார். மஹரிஷி, மேலே பிரயாணமாயினார். இராமனும் ஆயத்தமாக கூடப்புறப்பட்டுவிட்டார். ஆனால் இராமசந்திரனுக்கு அப்பொழுது மனதில் ஒரு குறையிருந்தபோதும், அதனால் யாத்திராஸமயமென்றோ, வழிநடையென்றோ, ஒன்றையுமாலோசியாமல், அவர் விசுவாமித்திரரைப் பார்த்து இவ்வார்த்தை சொல்லுகின்றார்.

2. (க-ரை) ஞானநிதியே! அஸ்திரங்களை ஏராளமாக வாரிக்கொடுத்தீர்கள், அடியேனும் பெற்றுக்கொண்டேன். இனி என்னை அமரர்களாலும் அசைக்க முடியாது. ஆனால் இதனால் என் மனம் திருப்தியடைந்துவிடாது. நான் பிரயோகித்துப் பயங்காட்டுவதற்காக மட்டும் அஸ்திரங்களை யபேக்ஷிக்கின்றேனேயின்றி, அவைகள் முற்றவும் பகைவர்மீது விழுந்து அவர்களை யழித்துவிட வேண்டுமென்றும் ஆசைப்படவில்லை. ஆதலால் சற்று பயங்காட்டி சத்துருக்களைத் தொடுவதற்கு முன் அவைகளைத் திருப்பி யிழுத்துக்கொள்ளுவதற்குத் தக்கபடி உபஸம்ஹார மந்திரங்களையும் தாஸனுக்கு மஹானுபாவரே! தாங்களு

एवं ब्रुवति काकुत्स्थे विश्वामित्रो महामुनिः ।
संहारं व्याजहाराथ धृतिमान्सुव्रतः शुचिः ॥ 3 ॥
सत्यवन्तं सत्यकीर्तिं धृष्टं रभसमेव च ।
प्रतिहारतरं नाम पराङ्मुखमवाङ्मुखम् ॥ 4 ॥
लक्षाक्षविषमौ चैव दृढनाभसुनाभकौ ।
दशाक्षशतवक्त्रौ च दशशीर्षशतोदरौ ॥ 5 ॥

3. (ப-ரை) **काकुत्स्थे** - இராமபத்திரனனவர், **एवं** - இப்படி, **ब्रुवति** - சொல்லுமளவில், **सुव्रतः** - நல்ல விரதமுள்ள, **महामुनिः** - மஹரிஷியான, **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **अथ** - அதன்மேல், **धृतिमान्** - பிரீதியடைந்தவராய், **शुचिः** - பரிசுத்தராயிருந்துகொண்டு, **संहारं** - உபஸம்ஹார மந்திரத்தை, **व्याजहार** - உச்சரித்தார்.

4. (ப-ரை) **सत्यवन्तं** - ஸத்தியவானென்கிற அஸ்திரத்தையும், **सत्यकीर्तिं** - ஸத்தியகீர்த்தியையும், **धृष्टं** - திருஷ்டாத்திரத்தையும், - **रभसंएव च** - ரபஸத்தையும், **प्रतिहारतरं नाम** - பிரதிஹாரதரமென்று பிரஸித்த அஸ்திரத்தையும், **पराङ्मुखम्** - பராங்முகத்தையும், **अवाङ्मुखम्** - அவாங்முகத்தையும்,

5. (ப-ரை) **लक्षाक्षविषमौ चैव** - லக்ஷாக்ஷ, விஷமங்களையும், **दृढनाभ सुनाभकौ** - த்ருடநாப, ஸுநாபங்களையும், **दशाक्ष शतवक्त्रौ च** - தசாக்ஷ சத வக்திரங்களையும், **दशशीर्षशतोदरौ** - தசசீரிஷசதோதரங்களையும்.

பதேசித்தருளவேண்டும். உண்மையைச் சொல்லவேண்டுமானால், மஹரிஷியே! உலகத்தில் அத்திரமென்கிற பெயர்கூடயில்லாமல், அதை அறவே ஒழித்துப் போடவேண்டுமென்பதுதான் எனது அந்தரங்கத்திலுள்ள அபிலாஷை என்று அந்த தயாநிதி தபோதனரை வேண்டிக்கொண்டான்.

3. (க-ரை) கருணாகரனன காகுத்தன், இவ்வண்ணம் வேண்டிக்கொள்ளவே, மிக்கப் பிரீதியடைந்தவரான விசுவாமித்திரர் அவர் மனோரதித்தபடியே ஸம்ஹார மந்திரங்களையெல்லாம் உபதேசிக்கலானார்.

4-10½. (க-ரை) இராமபத்திர! உமது உள்ளத்தினிலுள்ள கருணைப் பெருக்கை அளப்பதற்கு எவராலாகும்? ஆயுதங்களென்கிற பெயரையே அறவே

पद्मनाभमहानाभौ दुन्दुनाभसुनाभकौ ।
ज्योतिषं कृशनं चैव नैराश्यविमलावुभौ || 6 ||
योगन्धरहरिद्रौ च दैत्यप्रशमनौ तथा ।
सार्चिर्माली धृतिर्माली वृत्तिमान्रुचिरस्तथा || 7 ||
पितृसौमनसं चैव विधूतमकरावुभौ ।
करवीरकरं चैव धनधान्यौ च राघव || 8 ||

6 (ப-ரை) **पद्मनाभमहानाभौ** - பத்மநாப, மஹாநாபங்களையும், **दुन्दुनाभ सुनाभकौ** - துந்துநாப, ஸுநாபங்களென்கிற இவ்வெல்லா அஸ்திர ஜதைகளையும், **ज्योतिषं कृशनंचैव** - ஜோதிஷத்தையும், க்ருசனத்தையும், **नैराश्य विमलावुभौ** - நைராசிய விமலங்கள் இரண்டையும்,

7. (ப-ரை) **योगन्धर हरिद्रौ च** - யோகந்தர, ஹரித்ரர்களையும், **तथा** - அப்படியே, **दैत्यप्रशमनौ** - தைத்யம், ப்ரசமனங்களையும், **सार्चिर्माली** - ஸார்ச்சிமாலீ, **धृतिर्माली** - த்ருதிமாலீ, **वृत्तिमान्** - வ்ருத்திமான், **तथा**- அப்படியே, **रुचिरः** ருசிரன், இந்த அஸ்திரங்களையும்,

8. (ப-ரை) **पितृसौमनसं चैव** - பித்ருஸௌமனஸத்தையும், **विधूतमकरौ** - விதூதமகரங்களென்கிற, **उभौ** - இரண்டையும், **राघव** - இராகவனே! **करवीरकरं चैव** - கரவீரகரத்தையும், **धनधान्यौ च** - தனம் தான்யம் என்பவைகளையும்,

ஒழித்துவிடவா ஆலோசிக்கின்றீர், அவைகள் துஷ்டர்களுக்கு பயமூட்டுவதற்குப் பெயரளவிலேனும் இருக்கட்டும் ஐயா, யுத்தத்தின்பது துஷ்டர்களின் கண்முன்னே ஆர்ப்பாட்டமாய்ப் பிரயோகித்துப் பயங்காட்டும் ஆடம்பரத்தையின்றி அவர்களை நெருங்கி அழித்தும் விடாமல் அவைகளை மீளுத்துக்கொள்ளுவதற்கான உபஸம்ஹார மந்திரங்களையும் இதோ உபதேசிக்கின்றேன், அவைகள் ஸத்யவத்து, ஸத்யகீர்த்தி, த்ருஷ்டம், ரபஸம், ப்ரதிஹாரதரம், பராங்முகம், அவாங்முகம், லக்ஷாக்ஷம், விஷமம், த்ருடநாபம், ஸுநாபம், தசாக்ஷம், சதவக்த்ரம், தெசசீர்ஷம், சதோதரம், பத்மநாபம், மஹாநாபம், துந்துநாபம், ஸுநாபம், ஜோதிஷம், க்ருசனம், நைராச்யம், விமலம், யோகந்தரம், ஹரித்ரம், தைத்யம், ப்ரசமனம், ஸார்ச்சிமாலி, த்ருதிமாலி, வ்ருத்திமத்து, ருசிரம், பித்ருஸௌமனஸம், விதூதம், மகரம், கரவீரகரம், தனம், தான்யம், காமரூபம், காமருசி,

कामरूपं कामरुचिं मोहमावरणं तथा ।
जृम्भकं सर्वनाभं च सन्तानवरणौ तथा ॥ 9 ॥

भृशाश्वतनयान् राम भास्वरान्कामरूपिणः ।
प्रतीच्छ मम भद्रं ते पात्रभूतोऽसि राघव ॥ 10 ॥

बाढमित्येव काकुत्स्थः प्रहृष्टेनान्तरात्मना ॥ 10½ ॥

---

9. (ப-ரை) **कामरूपं** - காமரூபத்தையும், **कामरुचिं** - காமருசியையும், **मोहं** - மோஹத்தையும், **तथा** - அப்படியே, **आवरणं** - ஆவரணாஸ்திரத்தையும், **जृम्भकं** - ஜிரும்பகாஸ்திரத்தையும், **सर्वनाभं च**-ஸர்வநாபத்தையும், **सन्तानवरणौ** - ஸந்தானம், வரணங்களையும், **तथा** - ஆக இப்படிக்குறிக்கப்பட்ட அஸ்திர ரூபங்களான,

10. (ப-ரை) **राम** - இராமனே! **भास्वरान्**- பிரகாசிக்கின்றவைகளான, **काम-रूपिणः** - காமரூபிகளான, **भृशाश्वतनयान्** - ப்ருசாச்வரின் புத்திரர்களை, **प्रतीच्छ** - பெற்றுக்கொள்ளும், **ते** - உமக்கு, **भद्रं**- மங்களமுண்டாகுக, **राघव** - ஹே இராகவனே! **मम** - எனக்கு, **पात्रभूतः** - தக்கபாத்திரமானவராக, **असि** - இருக்கின்றீர்.

10½. (ப-ரை) **काकुत्स्थः** - காகுத்தனானவர், **प्रहृष्टेन** - ஸந்துஷ்டமான, **अन्त-रात्मना** - மனதோடு, **बाढंइत्येव** - ஆஹா என்று சொல்லியே? (**प्रतिजग्राह** - பெற்றுக்

மோஹம், ஆவரணம், ஜிரம்பகம், ஸர்வநாபம், ஸந்தானம், வரணம் என்று பல வகைப் பட்டனவாயிருக்கின்றன. மஹா பிரகாசகரங்களாயும், காமரூபிகளாயுமிருக்கிற ப்ருசாச்வ புத்திரர்களான இவ்வஸ்திரங்களையெல்லாம், இராமபத்திரா! நீர் பத்திரமாய்ப் பெற்றுக்கொள்ளும், நீரே இவற்றிற்குத் தக்க பாத்திரமாவீர். இரகுநந்தனா! உமக்கு மங்களமுண்டாகுக. என்று விசுவாமித்திரர்; தன் மனமார்ந்த ஆசியோடு இராகவன் மனதிற்கிசைந்த அஸ்திரங்களின் உபஸம்ஹார மந்திரங்களையும் உபதேசித்தருளினார். இராமசந்திரனும் அத்யந்தம் ஸந்துஷ்டமான தனது அந்தராத்மா குளிர அம்மந்திரங்களையெல்லாம் அப்படியே தலைவணங்கிப் பெற்றுக்கொண்டார்.

दिव्यभास्वरदेहाश्च मूर्तिमन्तः सुखप्रदाः ।
केचिदङ्गारसदृशाः केचिद्धूमोपमास्तथा ॥ 11½ ॥
चन्द्रार्कसदृशाः केचित्प्रह्वाञ्जलिपुटास्तथा ।
रामं प्राञ्जलयो भूत्वाऽब्रुवन्मधुरभाषिणः ॥ 12½ ॥
इमे स्म नरशार्दूल शाधि किं करवाम ते ॥ 13 ॥

11½-13. (ப-ரை) **सुखप्रदाः**- இன்பத்தைக் கொடுக்கின்றவர்களான அவ்வஸ்திர தேவதைகள், **मूर्तिमन्तः** - த்ருடமான உருவத்தையடைந்தவர்களாக, **दिव्यभास्वर-देहाश्च** - சிலாக்கியமாகப் பிரகாசிக்கின்ற தேஹங்களுள்ளவர்களாய்த் (தோன்றலாயினர்). **केचित्** - சிலர்கள், **अङ्गार सदृशाः** - தணலைப்போன்றிருந்தனர். **केचित्** - மற்றுஞ்சிலர், **धूमोपमाः** - புகைபோன்றிருந்தனர். **तथा** - அப்படியே, **केचित्** - சிலர், **चन्द्रार्क सदृशाः** - சந்திரஸூர்யர்களைப்போலிருந்தனர். **तथा** - அப்படியே, **प्रह्वाञ्जलि-पुटाः** - வணங்கிக் கைகுவித்துக்கொண்டிருந்தனர். **मधुरभाषिणः** - இனியமொழியுள்ள அத்தேவதைகள், **प्राञ्जलयः** - தலைமேல் கைகுவித்துக்கொண்டவர்களாக, **भूत्वा** - ஆகி, **नरशार्दूल** - புருஷவ்யாக்ரனே! **इमे स्म** - இதோ நாங்கள் ஸித்தமாயிருக்கின்றோம், **ते** - உமக்கு, **किं** - என்ன பணியை, **करवाम** - யாங்கள் செய்யவேண்டும், **शाधि** - ஆக்ஞாபித்தருளும், (என்று) **रामं** - இராமனை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

11½-13. (க-ரை) உடனே அவ்வஸ்திர தேவதைகளெல்லாம் அழகாகப் பிரகாசிக்கின்ற த்ருடமான தேஹத்தோடு ஸாக்ஷாத்கரித்து இன்பமளிக்கின்றவர்களாய் இராமன் முன் தோன்றினார்கள். அவர்களுள் சிலர் தணல் போன்ற செந்நிறமுள்ளவராயும், சிலர் புகைபோன்ற கருத்தவராயும், சிலர் சந்திரன் போல குளிர்ந்தவராயும், சிலர் ஸூர்யன்போலப் பிரகாசமுள்ளவராயுமிருந்தனர். குவித்த கைகளுடன் வினீதராய்த் தோன்றிய அவர்களெல்லோரும் அஞ்சலியைத் தலைமேல் வைத்துக்கொண்டு அய்யனே! யாம் உமதடிமைகளாவோம். நீர் இட்ட கட்டளையைத் திட்டமாய்ச் செய்து முடிப்போம். எப்பணி செய்யவேண்டும். ஆக்ஞை தந்தருளும், என்று இனிய மொழியினராய் **இராமனிடம் விண்ணப்பித்துக்கொண்டார்கள்.**

मानसाः कार्यकालेषु साहाय्यं मे करिष्यथ ।
गम्यतामिति तानाह यथेष्टं रघुनन्दनः ॥ 14 ॥

अथ ते राममामन्त्र्य कृत्वा चापि प्रदक्षिणम् ।
एवमस्त्विति काकुत्स्थमुक्त्वा जग्मुर्यथागतम् ॥ 15 ॥

(ततस्तु रामः काकुत्स्थः शासनाद्ब्रह्मवादिनः ।
लक्ष्मणाय च तान्सर्वान्वराश्रान्रघुनन्दनः ॥ 1 ॥
संहारान्स च संहृष्टः श्रीमांस्तस्मै न्यवेदयत् ॥ 1½ ॥)

---

14. (ப-ரை) **रघुनन्दनः** - இராகவனெனவர், **मानसाः** - மனதில் நிலைகொண்டவர்களாய், **कार्यकालेषु** - செய்யவேண்டிய அவஸரத்தில், **मे** - எனக்கு, **साहाय्यं** - உதவியை, **करिष्यथ** - செய்யுங்கள், **यथेष्टं** - உங்களிஷ்டப்படி, **गम्यतां** - போகலாம், **इति** - என்று, **तान्** - அந்த தேவர்களை, **आह** - சொன்னார்.

15. (ப-ரை) **अथ** - பிறகு, **ते** - அந்த தேவதைகள், **रामं** - இராமனை, **आमन्त्र्य** - கேட்டுக்கொண்டு, **प्रदक्षिणं चापि** - பிரதக்ஷிணத்தையும், **कृत्वा** - செய்துவிட்டு, **एवं** - இப்படியே, **अस्तु** - ஆகட்டும், **इति** - என்று, **काकुत्स्थं** - காகுத்தனை, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **यथागतम्** - வந்தவழியே, **जग्मुः** - சென்றார்கள்.

[1-1½. (ப-ரை) **ततस्तु** - அதற்குப் பிறகோவெனில், **काकुत्स्थः** - ககுத்த

---

14. (க-ரை) இராகவனும் என் மனத்தில் நிலையாய் நின்றுகொண்டு ஸமயத்தில் தவறாமல் எனக்குதவி புரியுங்கள். சத்துருக்களை மேல்விழுந்து அழித்துத்தீரவேண்டிய அவஸரம் ஏற்பட்டுவிட்டாலும் அப்போதும் ஆத்திரத்தையடைந்துவிடாமல் எனது எண்ணத்தின்படி சற்று பயங்காட்டிச் சடக்கெனத் திரும்பிவிடுங்கள். யான் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது இவ்வுதவியொன்றே தான். நல்லது போய் வாருங்கள், என்று அவ்வஸ்திர தேவதைகளுக்கு விடை கொடுத்தார்.

15. (க-ரை) அவ்வஸ்திர தேவதைகளும் இராமனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு அவனை வலம் வந்து பிரபுவே! தமது எண்ணம்போலாகட்டும், என்று சொல்லிவிட்டு வந்த வழியே சென்றனர்.

[1-1½. (க-ரை) இராகவனுக்கு அஸ்திரங்களையெல்லாம் அள்ளிக்கொடுத்

स च तान् राघवो ज्ञात्वा विश्वामित्रं महामुनिम् ।
गच्छन्नेवाथ मधुरं श्लक्ष्णं वचनमब्रवीत् ॥ 16 ॥

குலத்திலுதித்தவராயும், रघुनन्दनः - ரெகுக்களுக்கு ஆனந்தகரராயிருக்கிற, रामः - இராமன், ब्रह्मवादिनः - ப்ரம்மவாதியான விச்வாமித்திரனுடைய, शासनात् - கட்டளையின் பேரில், लक्ष्मणाय च - லெக்ஷ்மணனின் பொருட்டும், तान् - அந்த, सर्वान् - ஸமஸ்தங்களான, वरास्त्रान् - உத்தம அஸ்திரங்களையும், श्रीमान् - ஸ்ரீமானாகிய, सः च - அவர்தானே, संहारान् - உபஸம்ஹார மந்திரங்களையும், तस्मै - அந்த லெக்ஷ்மணனின் பொருட்டு, न्यवेदयत् - தெரிவித்தார். அதாவது உபதேசித்தார்.]

16. (ப-ரை) सः - அந்த, राघवः च - இராகவனும், तान् - அந்த உபஸம்ஹார மந்திரங்களை, ज्ञात्वा - தெரிந்துகொண்டு, अथ - பிறகு, गच्छन्नेव - போய்க்கொண்டிருக்கும்பொழுதே, महामुनिम् - மஹாமுனியான, विश्वामित्रं - விச்வாமித்திரரை, मधुरं - இனியதாயும், श्लक्ष्णं - விளக்கமுள்ளதாயுமிருக்கிற, वचनं - வார்த்தையை, अब्रवीत् - சொன்னார்.

தார் மஹரிஷி. இலக்குமணன் ஒருவர் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார். உத்தம வீரரான அவ்விளையவர் கைப்பற்றத்தக்கதான அஸ்திரங்களைக் கொடுக்கவேண்டுமென்று மஹரிஷியின் மிக்க ஆவலையுமுண்டு. ஆனால் தனது நாதனின் திருவாயின்றி மற்றொருவர் யாவரையும் வேண்டாதவன் அம் மஹாவீரன் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிடுவானென்று அவர் அஞ்சினார். இக்குறிப்பையறிந்த இராகவன் தன் கைக்குக் கொடுத்த அவற்றை தம்பிக்கும் கொடுப்பதற்கு தன்னை யனுமதிக்கவேண்டுமென்று அவ்வாசிரியரை வேண்டிக்கொண்டார். அதன் கருத்தையறிந்த மஹரிஷியும் மிக்க ஸந்தோஷத்தோடு இராகவா! அஸ்திரத்திற்காக அல்லாமற் போனாலும் நீ கொடுக்கின்றாய் என்கிற கௌரவத்தினாலாவது இளையவனும் இதை ஏற்றுக்கொள்ளுவான். என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு இராமன் வேண்டியபடி கொடுக்க அவர் அனுமதித்தார். அவ்வனுமதி பெற்ற இராகவன் அவ்வஸ்திரங்களை மாத்திரமன்றி ஸம்ஹார மந்திரங்களையுங் கூட்டி லெக்ஷ்மணனுக்கு ஸந்துஷ்டராய் உபதேசித்தார்.]

16. (க-வுரை) இப்படி இராமபத்திரன் தான் விரும்பியபடி உபஸம்ஹாராஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டு மேலே வழி நடந்து செல்லுகையில் எதிரே

किन्न्वेतन्मेघसंकाशं पर्वतस्याविदूरतः ।
वृक्षषण्डमितो भाति परं कौतूहलं हि मे ॥ 17 ॥
दर्शनीयं मृगाकीर्णं मनोहरमतीव च ।
नानाप्रकारैः शकुनैर्वल्गुनादैरलङ्कृतम् ॥ 18 ॥
निःसृतास्स मुनिश्रेष्ठ कान्ताराद्रोमहर्षणात् ॥ 18½ ॥

---

17. (ப-ரை) **मेघसंकाशं** - மேகத்தைப் போன்ற பிரகாசமுள்ளதான, **वृक्षषण्डं** - மரத்தோப்பானது, **इतः** - இந்தப்புறமாக, **पर्वतस्य** - மலைக்கு, **अविदूरतः**- ஸமீபமாக, **भाति** - விளங்குகின்றதே, **एतत्** - இது, **किं नु**- எந்த வனமோ, **मे** - எனக்கு, **परं** - மிகுந்த, **कौतूहलं हि**- குதூஹலமுண்டாகின்றதே!

18. (ப-ரை) **दर्शनीयं** - பார்ப்பதற்கு யோக்யமாயும், **मृगाकीर्णं** - மான் முதலிய மிருகங்களினால் நிறைந்ததாயும், **अतीव च** - மிகவும், **मनोहरं** - மனதைக் கவருவதாயும், **वल्गुनादैः** - அழகிய துவனியுள்ளவைகளான, **नानाप्रकारैः** - அநேக விதங்களான, **शकुनैः** - பறவைகளினாலே, **अलङ्कृतम्** - அலங்கரிக்கப்பட்டும் (இருக்கின்றதே!).

18½. (ப-ரை) **मुनिश्रेष्ठ** - முனிச்வரரே! **रोमहर्षणात्** - மயிர்க்கூச்சலெடுக்கின்ற, அதாவது பயங்கரமான, **कान्तारात्** - வனத்திலிருந்து, **निःसृताः स्म** - வெளிப்பட்டுவிட்டோம்.

தோன்றிய செழிப்பான வனமொன்றைப் பார்த்துவிட்டு அதன் விவரத்தைக் கூறவேண்டுமென்று விளக்கமான இன்சொல்லோடு விசுவாமித்திரரைக் கேட்கின்றார்.

17-19½. (க-ரை) பகவானே! இதோ பருவதத்தின் பிராந்தத்தில் மேக மண்டலம் போல் பிரகாசிக்கின்ற ஒரு தோப்புத் தெரிகின்றது. இதைப்பார்ப்பதற்கு எனக்கு மிக்கக் குதூஹலமுண்டாகின்றது. இது முக்கியமாய்ப் பார்க்கத்தக்கது. இதனிடையில் மான்கள் நிறைந்து காணக் கிடக்கின்றன. இது மனதிற்கு மிகவும் ரம்மியமானது. அழகிய கூஜிதங்களையுடைய நானாவிதங்களான பறவைகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. நினைத்தால் மயிர்ச்சிலுக்கும்படி மிக்க பயங்கரமான காந்தாரத்தைக் கடந்து வந்துவிட்டதாக நினைக்கின்றேன். மஹரிஷியே! இவ்விடத்திற்கு வந்தவுடனே அந்தரங்கத்தில் ஒருவித

अनया त्ववगच्छामि देशस्य सुखवत्तया ।
सर्वं मे शंस भगवन् कस्याश्रमपदं त्विदम् ॥ 19½ ॥

संप्राप्ता यत्र ते पापा ब्रह्मघ्ना दुष्टचारिणः ।
तव यज्ञस्य विघ्नाय दुरात्मानो महामुने ॥ 20½ ॥

भगवंस्तस्य को देशः सा यत्र तव याज्ञिकी ।
रक्षितव्या क्रिया ब्रह्मन्मया वध्याश्च राक्षसाः ॥ 21½ ॥

19½. (ப-ரை) **अनया** - இந்த, **देशस्य** - இடத்தினுடைய, **सुखवत्तया तु** - ஸௌக்கியத்தினாலேயே, **अवगच्छामि** - அறிகின்றேன், **भगवन्** - பகவானே! **इदम् तु** - இந்த இடமானது, **कस्य** - யாருடைய, **आश्रमपदं** - ஆசிரம ஸ்தானம், **सर्वं** - எல்லாவற்றையும், **मे** - எனக்கு, **शंस** - சொல்லுங்கள்.

20½. (ப-ரை) **महामुने** - முனிச்வரரே! **ते** - முன் சொல்லப்பட்ட, **पापाः** - பாபிஷ்டர்களாயும், **ब्रह्मघ्नाः** - பிராம்மண கொலைகாரர்களாயும், **दुष्टचारिणः** - துர்நடத்தையுள்ளவர்களுமான, **दुरात्मानः** - அயோக்கியர்கள், **तव** - உம்முடைய, **यज्ञस्य** - யக்ஞத்திற்கு, **विघ्नाय** - இடையூறு விளைவிப்பதற்காக, **यत्र** - எந்த ஆசிரமத்திற்கு, **संप्राप्ताः** - வந்தனரோ,

21½. (ப-ரை) **भगवन्** - பகவானே! **सा** - அந்த, **तव** - உம்முடைய, **याज्ञिकी** - யக்ஞ ஸம்பந்தமான, **क्रिया** - காரியமானது, **यत्र** - எந்தவிடத்தில், **रक्षितव्या** - காக்கப்படவேண்டியதோ, **ब्रह्मन्** - பிராம்மணரே! **मया** - என்னால், **राक्षसाः** - அரக்கர்கள், **वध्याश्च** - கொல்லப்படவும் வேண்டியதோ, **तस्य** - அப்படிப்பட்ட அந்த ஆசிரமத்தினுடைய, **देशः** - இடமானது, **कः** - எது?

ஆனந்த முண்டாவதைக் கொண்டு இதனைப் பாவனமான ஆசிரம ஸ்தானமென்றே அறிவது ஸுலபம். இது எந்த மஹானுடைய ஆசிரமபதமோ? இதன் விருத்தாந்தத்தை அடிமுதல் விவரமாகக் கூறியருள்வீராக.

20½-22. (க-ரை) மஹா முனிச்வரரே! மஹத்தான பாபத்தைச் செய்து வைத்து பிரும்ஹத்துரோஹிகளாய், துராசாரர்களாய்த் திரிகின்ற அந்த துராத்துமாக்கள் தமது யாகத்தைக் கெடுப்பதற்காக எவ்விடத்தில் வந்து கூடினார்களோ, இடையூறாகத் தோன்றிய அரக்கர்களை யெல்லாம் வென்று, பவித்திரமான

एतत्सर्वं मुनिश्रेष्ठ श्रोतुमिच्छाम्यहं प्रभो ॥ 22 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डेऽष्टा
विंशः सर्गः ॥ 28 ॥

---

22. (ப-ரை) **प्रभो** - பிரபுவான, **मुनिश्रेष्ठ** - முனிவரரே! **अहं** - யான், **एतत्** - இந்த, **सर्वं** - எல்லாவற்றையும், **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छामि** - ஆசிக்கின்றேன்.

யக்ஞக்கிரியையை முடிவுவரை எங்கிருந்து நான் காக்கவேண்டுமோ, அப்படிப்பட்ட தமது புனிதமான ஆசிரமம் எவ்விடத்திலிருக்கின்றது. இவற்றையெல்லாம் பிரபுவே! ஆதியோடந்தமாக யான் கேட்க விரும்புகின்றேன். என்று விசுவாமித்திர மஹரிஷியைப் பார்த்து இராமபத்திரன் கேட்கலானார்.

एकोनत्रिंशः सर्गः ॥ 29 ॥

अथ तस्याप्रमेयस्य तद्वनं परिपृच्छतः ।
विश्वामित्रो महातेजा व्याख्यातुमुपचक्रमे ॥ 1 ॥

इहराम महाबाहो विष्णुर्देववरः प्रभुः ।
वर्षाणि सुबहून्येव तथा युगशतान्यपि ॥ 2 ॥

तपश्चरणयोगार्थमुवास सुमहातपाः ॥ 2½ ॥

1. (ப-ரை) **अथ** - பிறகு, **तत्** - அந்த, **वनं** - காட்டைப் பற்றி (அல்லது) **तद्वनं** - அவருடைய காட்டைப்பற்றியோ, **परिपृच्छतः** - விசேஷித்துப் பிரச்னம் பண்ணுகிறவரான, **अप्रमेयस्य** - அளவிடக் கூடாதவரான, **तस्य** - அந்த இராமனுக்கு, **महातेजाः** - மிக்க தேஜஸ்வியான, **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **व्याख्यातुं** - விவரித்துக் கூறுவதற்கு, **उपचक्रमे** - ஆரம்பித்தார்.

2-2½. (ப-ரை) **महाबाहो** - நீண்ட கைகளுடையவனான, **राम** - ஹே இராமனே! **इह** - இவ்விடத்தில், **देववरः** - தேவர்களுக்கெல்லாம் சிரேஷ்டராயும், **प्रभुः** - ஈசுவரனுமிருக்கிற, **विष्णुः** - மஹாவிஷ்ணுவானவர், **सुबहूनि एव** - மிக்க அநேகங்

1. (க-ரை) இராகவன் தான் நினைக்கும்போது வந்து சேருங்கள், என்று அஸ்திர தேவதைகளை அனுப்பிவிட்டு விசுவாமித்திரரைத் தொடர்ந்து செல்லுகையில் எதிரே தோன்றிய வனமொன்றைப் பார்த்து அதனை வெகுவாகப் புகழ்ந்து பேசி அதன் கதையொன்றையுமறியாதவர் போல அவ்வனம் யாருடைய ஆச்ரமஸ்தானமென்பதையும் அதற்குள்ள விசேஷங்களையும் விவரித்துக் கூறவேண்டுமென்று விசுவாமித்திரரை வேண்டிக்கொண்டார். அதன் பழைய சரித்திரத்தை உள்ளபடி எடுத்துக்கூற ஸந்தர்ப்பம் வாய்த்ததேயென்கிற ஸந்தோஷத்தால் அகங்குளிர்ந்து முகமலர்ந்து ஜ்வலிக்கின்றவரான விசுவாமித்திர மஹரிஷி அவ்வாச்ரமபதம் முன்னொருபோது வாமனமூர்த்தி தோன்றி விளங்கிய இந்த இராமனுடையதுதானென்கிற அதற்குள்ள ஏற்றத்தைப் போலக் கூடவாய் ஜாடை ஜாடையாக அதனைக் காட்டிக் காட்டி வர்ணிக்க ஆரம்பித்துவிட்டார்.

2-2½. (க-ரை) ஆச்ரிதர்கட்கு அபயமளிப்பதும் அன்னவர்களின் விரோதிகளுக்கு பயத்தைக் கொடுப்பதும் அதி உதாரமுமான திருக்கரத்துடன் விளங்

एष पूर्वाश्रमो राम वामनस्य महात्मनः ॥ ३ ॥

सिद्धाश्रम इति ख्यातः सिद्धो ह्यत्र महातपाः ॥ ३½ ॥

एतस्मिन्नेव काले तु राजा वैरोचनिर्बलिः ।
निर्जित्य दैवतगणान्सेन्द्रांश्च समरुद्गणान् ॥ ४½ ॥

कारयामास तद्राज्यं त्रिषु लोकेषु विश्रुतः ॥ 5 ॥

களேயான, **वर्षाणि** - வருஷங்கள் முடியவும், **तथा** - அப்படியே, **युगशतान्यपि** - யுகங்களின் நூறுகள் முடியவும், **तपश्चरणयोगार्थं** - தவம்புரிதலின் பயன் பெறுவதற்காக, **सुमहातपाः** - மிக்க மஹத்தான தவத்தைச் செய்வாராய், **उवास** - வஸித்திருந்தார்.

3-3½. (ப-ரை) **राम** - இராமனே! **एषः** - இது, **महात्मनः** - மஹாத்துமாவான, **वामनस्य** - வாமனருடைய, **पूर्वाश्रमः** - முன்னிருந்த ஆசிரமம், **सिद्धाश्रमः इति** - ஸித்தாசிரமமென்று, **ख्यातः** - பிரஸித்தி பெற்றது, **अत्र** - இவ்விடத்தில், **महातपाः** - மஹாதபஸ்வியான, (காச்யபரானவர்), **सिद्धो हि** - தபஸ் ஸித்தியைப் பெற்றாரன்றோ!

4½-5. (ப-ரை) **एतस्मिन्नेव** - இதுவேயான, **काले तु** - ஸமயத்திலோவெனில், **वैरोचनिः** - விரோசனனுடைய புத்திரனை, **बलिः** - பலி யென்கிற, **राजा** - அரசனை

குகின்ற ஸ்ரீராமபத்திரா! தவத்தின் ஆசாரணை பலஸித்தி இவற்றை நிலைபெறச் செய்யக்கருதிய ஸர்வ தேவாதீச்வரரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் முன்னொரு காலத்தில் நூறு வருஷம் இரு நூறு வருஷம், என்கிற கணக்கில் அநேக முறை தவஞ்செய்துகொண்டு நூற்றுக்கணக்கான யுகங்கள் இங்கு வஸித்து வந்தார்.

3-3½. (க-ரை) அஞ்சினவருக் கபயங் கொடுக்கும் அத்புத ஹஸ்தனான ஸ்ரீராமசந்திரா! இவ்விடத்தில் பிரபு ஒருவர், அநேகமாயிரம் ஆண்டுகள், என்? அநேகமாயிர யுகங்கள் வரைக்கும் உத்தமமான தவத்தைப் புரிந்துகொண்டு யோக நிஷ்டையி லமர்ந்திருந்தார். அவர் யாரென்பீரேல் ஸர்வதேவ தேவேச்வரனான மஹா விஷ்ணுவே தான். மேலும் ஈதொரு மஹாத்மாவின் பூர்வாசிர

4½-5. (க-ரை) இப்படி மஹா விஷ்ணு இவ்விடத்தில் தவஞ் செய்து கொண்டிருக்குங் காலத்திலேயே பிரஹ்லாதனுடைய பௌத்திரனும் விரோசனனுடைய புத்திரனுமான மஹா பலி யென்கின்ற ஒரு வல்லரசன் ஆவஹப்பிரவ

बलेस्तु यजमानस्य देवाः साग्निपुरोगमाः ।
समागम्य स्वयं चैव विष्णुमूचुरिहाश्रमे ॥ 6 ॥

बलिर्वैरोचनिर्विष्णो यजते यज्ञमुत्तमम् ।
असमाप्ते क्रतौ तस्मिन्स्वकार्यमभिपद्यताम् ॥ 7 ॥

வன், **समरुद्गणान्** - வாயுகணத்தோடு கூடினவர்களாயும், **सेन्द्रांश्च** - இந்திரனோடு கூடினவர்களாயுமிருக்கின்ற, **दैवतगणान्** - தேவஸமூகங்களை, **निर्जित्य** - ஜெயித்து, **त्रिषु** - மூன்றுகளான, **लोकेषु** - உலகங்களிலும், **विश्रुतः** - கீர்த்தி வாய்ந்தவனாய், **तद्राज्यं** - அவற்றின் ஆட்சியை, **कारयामास** - நடத்தினான்.

6. (ப-ரை) **तु** - ஆனால், **बलेः** - மஹாபலிச்சக்ரவர்த்தியானவன், **यजमानस्य** - யாகஞ்செய்துகொண்டிருக்கும் பொழுது, **साग्निपुरोगमाः** - அக்னியை முக்கியஸ்தரோடு கூடினவர்களான, **देवाः** - தேவர்கள், **स्वयं चैव** - தாமாகவே, **समागम्य** - இங்கு வந்து சேர்ந்து, **इह** - இந்த, **आश्रमे** - ஆச்ரமத்தில், (தவஞ்செய்துகொண்டிருக்கிற), **विष्णुं** - மஹாவிஷ்ணுவை, **ऊचुः** - சொன்னார்கள்.

7. (ப-ரை) **विष्णो** - ஹே மஹாவிஷ்ணுவே! **वैरोचनिः** - விரோசன குமாரனான, **बलिः** - மஹாபலியானவன், **उत्तमम्** - உத்தமமான, **यज्ञं** - ஒரு வேள்வியை,

---

மங்காணும். இராம! அப்படிப்பட்ட வாமனமூர்த்தியின் தான். இவ்வாச்ரமத்திற்கு ஸித்தாச்ரமமென்கிற பிரஸித்தியுமுண்டு. விஷ்ணுவின் அவதாரத்தில் காச்யபரென்கிற மஹாமுனி தவஞ்செய்து தேவர்களின் பலனை அடைந்து பெற்றாராம்.

ஹாதிகளான மருத்கணங்களோடு கூடிய தேவகணங்களை இந்திரனுடன் வென்றுவிட்டு அதனால் மூவுலகங்களிலும் கீர்த்தி வாய்ந்தவனாய் அவ்வுலகம் மூன்றையும் தனக்கடங்கிப் போனவர்களான அத்தேவர்களைக் கொண்டே ஆட்சி புரிந்து வந்தான்.

6. (க-ரை) இப்படி த்ரைலோக்ய விஜயியான மஹாபலி ஸர்வஜகதீச்வரனை பரமபுருஷனைக் குறித்து ஒரு யாகஞ் செய்துகொண்டிருக்கையில்,

7-9. (க-ரை) ஹே மஹாவிஷ்ணுவே! விரோசன குமாரனான மஹாபலி என்பவன் உத்தமமானதொரு யாகத்தை நடத்துகின்றான். அது முடிவடையுமுன் யாம் நமது காரியத்தைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். அவனிடம்

ये चैनमभिवर्तन्ते याचितार इतस्ततः ।
यच्च यत्र यथावच्च सर्वं तेभ्यः प्रयच्छति ॥ 8 ॥

स त्वं सुरहितार्थाय मायायोगमुपाश्रितः ।
वामनत्वं गतो विष्णो कुरु कल्याणमुत्तमम् ॥ 9 ॥

यजते - வேட்கின்றான், **तस्मिन्** - அந்த, **क्रतौ** - யாகமானது, **असमाप्ते** - முடிவடையாமலிருக்கையிலேயே, **स्वकार्यं** - நமது காரியமானது, **अभिपद्यताम्** - முடித்துக்கொள்ளப்படட்டும்.

8. (ப-ரை) **एनं** - இவனை, **याचितारः** - யாசிக்கின்றவர்களாக, **इतः ततः** - இங்குமங்குமிருந்து, **येच** - எவர்கள், **अभिवर्तन्ते** - நெருங்கி வருகின்றார்களோ, **तेभ्यः** - அவர்களின் பொருட்டு, **यत्र** - எந்த வஸ்துக்களில், **यच्च** - எது வேண்டுமானாலும், **सर्वं च** - அவற்றையெல்லாம், **यथावत्** - முறைப்படி, **प्रयच्छति** - கொடுத்துவிடுகின்றான்.

9. (ப-ரை) **विष्णो** - மஹா விஷ்ணுவே! **सः** - அப்படிப்பட்ட, **त्वं** - நீர், **सुरहितार्थाय** - தேவர்களுடைய அனுகூலமாயத்திற்காக, **मायायोगं** - மாயா சக்தியின் ஸம்பந்தத்தை, **उपाश्रितः** - ஆதரிக்கின்றவராக, **वामनत्वं** - வாமன பாவத்தை அதாவது குள்ளனாயிருக்குகையை, **गतः** - அடைந்தவராக, **उत्तमम्** - உயர்ந்ததான, **कल्याणं** - க்ஷேமத்தை, **कुरु** - செய்து வைப்பீராக.

அக்கினியை முன்னிட்ட தேவர்களெல்லாம் தாமாகவே இங்கு வந்து கூடி இவ்வாசிரமத்தில் தவம் புரிந்துகொண்டிருக்கின்ற மஹா விஷ்ணுவினிடம் மேற்கூறும் விதமாய் முறையிட்டுக்கொண்டார்கள்.

தில் வேண்டுமவை பெறலாமென்று அங்குமிங்குமிருந்து யாசகர்கள் ஆயிரக்கணக்காக வந்துகொண்டிருக்கின்றனர். அவ்வுதாரனும் தனத்தையோ, ஸுவர்ணத்தையோ, வஸ்திரத்தையோ, ஆபரணத்தையோ, எவர் எதை வேண்டினாலும் அவற்றைத் தடையின்றி தாராளமாய் அவர்களுக்கு மிக்க உபசாரத்துடன் வழங்குகின்றான். இவ்வளவை யறிந்துகொண்ட நீர் உம்மவர்களான எங்களுடைய நலத்திற்காக உமக்கு உடந்தையான மாயையை மேற்போட்டுக்கொண்டு ஒரு கள்வக்குள்ளனாக உருமாறி எங்களுக்கு மங்களத்தைக் கூட்டி வைக்கவேண்டும், என்று தேவர்கள் மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள்.

एतस्मिन्नन्तरे राम काश्यपो ऽग्निसमप्रभः ।
अदित्या सहितो राम दीप्यमान इवौजसा ॥ 10 ॥

देवीसहायो भगवान्दिव्यं वर्षसहस्रकम् ।
व्रतं समाप्य वरदं तुष्टाव मधुसूदनम् ॥ 11 ॥

तपोमयं तपोराशिं तपोमूर्तिं तपात्मकम् ।
तपसा त्वां सुतप्तेन पश्यामि पुरुषोत्तमम् ॥ 12 ॥

10-11. (ப-ரை) **एतस्मिन्** - இந்த, **अन्तरे** - அவகாசத்தில், **राम** - ஸ்ரீராமனே! **अग्निसमप्रभः** - அக்கினியோடு ஸமானமான காந்தியையுடையவரான, **अदित्या सहितः** - அதிதி தேவியோடு கூடினவரான, **काश्यपः** - காச்யபரானவர், **ओजसा** - காந்தியினாலே, **दीप्यमान इव** - ஜ்வலிக்கின்றவர் போல, **दिव्यं** - தேவ ஸம்பந்தமான, **वर्षसहस्रकम्** - வருஷங்களுடைய ஒரு ஆயிரத்தின் அளவில், **व्रतं** - ஒரு பயனுக்கான விரதத்தை, **समाप्य** - முடித்துக்கொண்டு, **राम** - ராமனே! **भगवान्** - பூஜ்யரான அந்த காச்யபரானவர், **वरदं** - வரங்கொடுக்கும் தன்மையுள்ளவரான, **मधुसूदनम्** - மது ஹந்தாவான பகவானை, **देवीसहायः** - தேவியோடு கூடினவராய், **तुष्टाव** - துதித்தார்.

12. (ப-ரை) **तपोमयं** - தபஸினால் ஸாதிக்கக்கூடியவனாய், அல்லது தவத்தாற் காணக்கூடியவனாய், அல்லது தவத்தின் பலனைக் கொடுப்பவனுமாய், **तपोराशिं** - தவத்தின் குவியலாய் அதாவது தவத்திற்கு பயனளிப்பவனுமாய், **तपोमूर्तिं** - ஞான ஸ்வரூபனுமாய், **तपात्मकम्** - ஸத்திருஷ்டியான ஞானத்தை பகவானுக்குவமையாகக்

10-11. (க-ரை) இராமசந்திரா! இப்படி இந்திராதி தேவர்கள் பகவானைப் பிரார்த்தித்துக்கொண்ட ஸந்தர்ப்பத்தில் அக்கினியைப்போன்ற தனது தேஜப்பிரபையினால் ஜ்வலித்துக்கொண்டிருக்கின்ற காச்யபரென்கிற மஹரிஷியானவர் அதிதி எனப்படுகிற தமது பத்னியோடு தேவமானத்தில் ஆயிரம் வருஷம் வரையில் அனுஷ்டித்து முடிக்கவேண்டியதான பயனுக்கான விரதமொன்றையனுஷ்டித்துப் பூர்த்தி செய்துவைத்து இறுதியில் வரமளிப்பதற்காகச் சேவை தந்தருளியவனான ஸ்ரீ மதுஸூதனனைத் தனது தேவியுடன்கூட பேற் கூறுமாறு துதி செய்யலானார்.

12-13. (க-ரை) பிரபுவே! ஸர்வ கர்ம ஸமாராத்தியனாய், ஸர்வ பலப்பிரதனாய், விசுத்த விக்ஞான கனஸ்வரூபனாய், ஞானானந்தாதி அபரிமித கல்யாண

शरीरे तव पश्यामि जगत्सर्वमिदं प्रभो ।
त्वमनादिरनिर्देश्यस्त्वामहं शरणं गतः ॥ 13 ॥

तमुवाच हरिः प्रीतः काश्यपं धूतकल्मषम् ।
वरं वरय भद्रं ते वरार्होऽसि मतो मम ॥ 14 ॥

கொண்டவனையும், **पुरुषोत्तमम्** - ஸமஸ்த ஜீவர்களையும்விடச் சிறப்புவாய்ந்த உத்தம புருஷனை, **त्वां** - உம்மை, **सुतप्तेन** - நன்றாக அதாவது அனன்னியப் பிரயோஜனமாக அனுஷ்டிக்கப் பெற்றிருக்கின்ற, **तपसा** - தவத்தினால், **पश्यामि** - ஸாக்ஷாத்க்கரிக்கின்றேன்.

13. (ப-ரை) **प्रभो** - பிரபுவே! **इदं** - இந்த, **सर्वं** - ஸமஸ்தமான, **जगत्** - பிரபஞ்சத்தையும், **तव** - உம்முடைய, **शरीरे** - இத்திருமேனிக்குள், **पश्यामि** - பார்க்கின்றேன், **त्वं** - நீர், **अनादिः** - ஆதியற்றவர், **अनिर्देश्यः** - அளவிட்டுக் குறிக்கக்கூடாதவர், **अहं** - யான், **त्वां** - உம்மை, **शरणं** - இரக்ஷகராக, **गतः** - அடைந்தேன்.

14. (ப-ரை) **प्रीतः** - பிரீதியடைந்தவரான, **हरिः** - பகவானானவர், **धूतकल्मषम्** - போக்கப்பட்டிருக்கின்ற பாபங்களையுடையவரான, **तं** - அந்த, **काश्यपं** - காச்யப பிரஜாபதியை, **उवाच** - சொன்னார், **वरं** - உமக்கு அபிமதமான வரத்தை, **वरय** - வேண்டிக்கொள்ளும், **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **वरार्हः** - வரம்பெறத் தக்கவரென்று, **मम** - எனக்கு, **मतः** - அபிமதராக, **असि** - இருக்கின்றீர்.

ருண மணிகண மஹோரதத்தியாய், பத்தர், முக்தர், நித்யர் எனப்படுகிற, மூவகைச் சேதனர்களையும் விட விலக்ஷணனாக விளங்குகின்ற உம்மை, உமதருளால் யான் காணப்பெற்றேனாயிருந்தேன். ஐயனே! உமக்கு ஆதியில்லை, நடுவில்லை, முடிவுமில்லை. அகண்ட ஆனந்தமயனே! உம்மை அளவிட்டுக் காட்டுவதற்கு ஆயிரமுகம் படைத்த ஆதிசேடனாலும் அல்லது உம்மாலுமேயாகாதே. சரண்யனே! அத்தகைய மஹிமை வாய்ந்த உம்மைப் புகலிடமாகப் பற்றினேன் யான்.

14. (க-ரை) இப்படித் தன்னைச் சரணமடைந்து துதிசெய்து கொண்டாடுகின்ற கல்மஷமற்ற அக்காசிபன்மீது மனமுவந்தவரான மாதவன், "வேண்டும் வரத்தையெல்லாம் பெறுவதற்கு உம்மைத் தகுந்த பாத்திரமென்றுத் தீர்மானித்தோம். இனியுமக்கு மங்களமே யாகுக. அபிமத மெதுவாயினும் ஆலோசியாமலதனை வேண்டிக்கொள்ளும் தருகின்றோம் யாம்." என்று அன்புடன் ஆக்ஞாபித்தருளினார்.

तच्छ्रुत्वा वचनं तस्य मारीचः काश्यपोऽब्रवीत् ॥ 14½ ॥

अदित्या देवतानां च मम चैवानुयाचतः ।
वरं वरद सुप्रीतो दातुमर्हसि सुव्रत ॥ 15½ ॥

पुत्रत्वं गच्छ भगवन्नदित्या मम चानघ ।
भ्राता भव यवीयांस्त्वं शक्रस्यासुरसूदन ॥ 16½ ॥

शोकार्तानां तु देवानां साहाय्यं कर्तुमर्हसि ॥ 17 ॥

14½-15½. (ப-ரை) **तस्य** - அந்த பகவானுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **मारीचः** - மரீசியினுடைய புத்திரரான, **काश्यपः** - காச்யபரானவர், **अब्रवीत्** - சொன்னார், **सुव्रत** - (அதிதி கூறுவதாவது) நல்ல விரதத்தையுடையவரே! **अदित्याः** - அதிதி தேவிக்காகவும், **देवतानां च** - தேவர்களுக்காகவும், **अनुयाचतः** - அவர்களோடு சேர்ந்து யாசிக்கின்றவனான, **मम चैव** - எனக்காகவும், **वरद** - வரதனே! **वरं** - (அவர்களுக்கு அபீஷ்டமான) வரத்தை, **सुप्रीतः** - நன்றாகப் பிரீதியடைந்தவராக, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - நீர் தக்கவராயிருக்கின்றீர்.

16½-17. (ப-ரை) **भगवन्** - பகவானே! **अदित्याः** - அதிதி தேவிக்கும், **मम च** - எனக்குமாக, **पुत्रत्वं** - புத்திரனாயிருக்குந் தன்மையை, அதாவது பிள்ளையாய்ப் பிறத்தலை, **गच्छ** - அடையும், அதாவது அவதரியும். **अनघ** - குற்றமற்றவரே! **त्वं** - நீர், **शक्रस्य** - இந்திரனுக்கு, **यवीयान्** - தம்பியான, **भ्राता** - உடன் பிறந்தவராக, **भव** - ஆகுவீராக, **असुरसूदन** - அஸுரர்களுக்கு காலகனே! **शोकार्तानां** - துக்கத்தினால் பீடிக்கப்பட்டிருக்கின்ற, **देवानां तु** - தேவர்களின் திறத்திலோ, **साहाय्यं** - உதவியை, **कर्तुं** - செய்வதற்கு, **अर्हसि** - நீர் தக்கவராயிருக்கின்றீர்.

14½-17. (க-ரை) அப்பால் பகவானின் அவ்வுரையைக் கேட்டு மரீசி குமாரரான காச்யபர் சொல்லுகின்றார். வரதனே! இவ்வரமொன்றை அதிதி தேவியும் வேண்டுகின்றார். தேவர்களனைவரும் பிரார்த்திக்கின்றனர். அடியேனும் யாசிக்கின்றேன். இதனை அன்புடனளித்தருளவேண்டும். பகவானே! நீர் அதிதிக்குமெனக்கும் ஓர் ஆண் மகனாய்ப் பிறந்து இந்திரனுக்குத் தம்பியாக விளங்க வேண்டும். சத்துருஞ்ஜயனே! அஸுரர்களின் தொல்லைக்கு ஆட்பட்டுத் தவிக்

अयं सिद्धाश्रमो नाम प्रसादात्ते भविष्यति ।
सिद्धे कर्मणि देवेश उत्तिष्ठ भगवन्नितः ॥ 18 ॥

---

18. (ப-ரை) **ते** - உம்முடைய, **प्रसादात्** - அநுக்கிரகத்தினால், **कर्मणि** - எனது தவக்கருமமானது, **सिद्धे** - பயன் பெறவே, **अयं** - இது, (இந்த ஆசிரமமானது) **सिद्धाश्रमो नाम** - ஸித்தாசிரமம் என்கிற பிரஸித்தியுள்ளதாக, **भविष्यति** - ஆகப் போகிறது, **भगवन्** - பூஜ்யரான, **देवेश** - தேவேச்வரனே! **इतः** - இங்கிருந்து, **उत्तिष्ठ** - கிளம்பும், அதாவது எங்களுக்குப் புத்திரனாகப் பிறப்பதற்காக எழுந்திரும்.

கின்ற தேவர்களின் ஆபாரத்தைத் துடைப்பீராய் இவ்வுதவியைப் புரிந்தருள வேண்டும்.

18. (க-ரை) ஸகல தேவர்களுக்கும் அதீச்வரனான பிரபுவே! உமது திருவருளால் எனது தவம் பயன் பெறுகின்றமையால் இந்த எனதாசிரமத்திற்கு ஸித்தாசிரமமென்று புகழ்ப்பெயர் உண்டாகின்றது. பகவானே! இனியெழுந்து எங்களிடையே புத்திரனாகத் தோன்றியருள்வீராக, என்று காச்யபர் வேண்டிக் கொண்டார்.

இந்த ஸர்க்கத்தில் **इह राम महाबाहो** என்கிற இரண்டாவது சுலோகந் தொடங்கி **उत्तिष्ठ भगवन्नितः** என்று முடிகின்ற பதினெட்டாவது சுலோகம் வரையிலுள்ள வாக்கியங்களின் பொருட்களில் இந்தக் கிரமத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜகத்தை இரக்ஷிப்பதற்கான ஸங்கற்பத்தையே தவமாகக்கொண்ட வெம்பெருமான் ஏகாந்தமான இவ்வினிய ஆசிரமத்தின்கண் அந்த இரக்ஷண ஸங்கல்பமெனும் தவத்தை நெடுநாளாகப் புரிந்துகொண்டிருக்கின்றான். அதையறிந்து அவனையே தனக்குப் புத்திரனாகப் பெறவேணுமென்கிற பேராவல்கொண்ட காசிபர் தமதில்லறத்தியான அதிதி தேவியோடு, தேவ வருஷங்களாயிரத்தில் முடிக்கக்கூடியதான பரமபுருஷனின் ஆராதன ரூபமானவொரு விரத விசேஷத்தை யனுஷ்டிக்கலானார். அதன் பூர்த்தியில் வாஸுதேவனும் அவருக்குச்சேவை தந்தருளினான். அவரும் தனது மனோரதத்தை வெளியிட்டுப் பிரார்த்தித்துக் கொண்டார். இவ்வவஸரத்தில் மஹாபலியின் வீரியத்திற்குத் தோற்றவர்களான தேவர்களும் அங்கு வந்து குவிந்து காச்யபரின் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்துவைக்கும் வகையில் தங்களையும் பலியினுபத்திரவத்திலிருந்து மீட்டு வைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவ்விருவர் முறையீடும் பயன் பெறும்படி பகவான் வாமனனாக அவதரிக்கத் திருவுளம் பற்றினனென்க.

अथ विष्णुर्महातेजा अदित्यां समजायत ॥ 18½ ॥

छत्री कुण्डलरूपेण कमण्डलु शिखोज्ज्वलः ॥ 19 ॥

वामनं रूपमास्थाय वैरोचनिमुपागमत् ॥ 19½ ॥

तं दृष्ट्वाऽसुरराजेन्द्रो वामनत्वाच्च विस्मितः ।

माधवोऽयमिति ज्ञात्वा पूजयामास धर्मतः ॥ 20½ ॥

18½. (ப-ரை) **अथ** - பிறகு, **महातेजा:** - மகத்தான தேஜஸ்ஸையுடையவரான, **विष्णु:** - மஹாவிஷ்ணுவானவர், **अदित्यां** - அதிதிதேவியினிடத்தில், **समजायत** - உண்டானார்.

19. (ப-ரை) **छत्री** - குடையுள்ளவராயும், **कुण्डलरूपेण** - குண்டலத்தினாலுண்டாகிய பொலிவோடு, **कमण्डलुशिखोज्वल:** குண்டிகை, குடுமி இவைகளினால் விளங்குகின்றவராய்,

19½. (ப-ரை) **वामनं** - குள்ளமான, **रूपं** - வடிவத்தை, **आस्थाय** - எடுத்துக்கொண்டு, **वैरोचनिं** - விரோசனன் குமாரனை மஹாபலியை, **उपागमत्** - அடைந்தான்.

20½. (ப-ரை) **असुरराजेन्द्र:** - அஸுரராஜர்களுக்குள் சிறந்தவரான மஹாபலியானவர், **तं** - அவ்வாமனனை, **दृष्ट्वा** - பார்த்து, **वामनत्वाच्च** - குள்ளமாயிருக்கின்றதனாலேயும், **विस्मित:** - ஆச்சரியத்தையடைந்தவராக, **अयम्** - இவர், **माधव:** - ஸ்ரீயப்பதியேதான், **इति** - என்று, **ज्ञात्वा** - அறிந்து, **धर्मत:** - தக்கபடி, **पूजयामास** - பூஜித்தார்.

18½-19½. (க-ரை) இப்படிக்குத் திருவவதரித்தபின் மிக்க தேஜஸ்ஸையுடையவரான எங்கும் நிறைந்துள்ள திருமாலானவர் ஒரு கையில் குடையும், மற்றொரு கையில் குண்டிகையும் தாங்கி குடுமியோடு விளங்குபவராய் குறளுருவை யேற்றுக்கொண்டு யாகஞ்செய்கின்றவரான மஹாபலியினிடம் வந்து சேர்ந்தார்.

20½. (க-ரை) அசுரர்க்கு அதிபனான மஹாபலியானவர் ஒரு மாணிக் குறளாகித்தோன்றியிருக்கையினாலும், கண்டவுடனே அவரைத் திருமாலென்று தீர்மானித்துக்கொண்டு உள்ளுக்குள் ஆச்சரியமடைந்தவராய் இப்படிக் குறுகி வந்ததென்ன? என்று வியப்புடையராக தக்கபடி முறையில் அவரை உபசரித்தார்.

पूजितस्तेन धर्मात्मा सर्वलोक हिताय वै ।
आसाद्ययजमानं तमुवाच भगवान् हरिः ॥ 21½ ॥
स्वस्ति तेऽस्तु महाराज यज्ञश्चातीवशोभनः ।
वयं दानार्थिनो राजन् श्रुत्वा यज्ञमनुत्तमम् ॥ 22½ ॥
त्वां दृष्ट्वा तव यागेऽस्मिन् किंचिल्लब्धुमिहागताः ॥ 23 ॥
वामनेनैवमुक्तस्तु मुदा राजा तदाऽब्रवीत् ।
अद्यमे सफलोयज्ञः कृतार्थोऽस्मियद्य वामन ॥ 24 ॥

21½ (ப-ரை) **तेन** - அவ்வரசனால், **पूजित:** - அர்ச்சிக்கப்பட்டவரான, **धर्मात्मा** - தர்ம ஸ்வரூபியான பகவானானவர், **सर्वलोक हिताय वै** - எல்லா வுலகங்களி னுடைய க்ஷேமத்திற்காகவே, **तं**- அந்த, **यजमानं** - யாகத்திகரை, **आसाद्य**- நெருங்கிச் சென்று, **भगवान्** - பூஜ்யரான, **हरि :** - ஹரியானவர், **उवाच** - சொன்னார்.

22½-23 (ப-ரை) **महाराज** - மஹாராஜனே!, **ते** - உமக்கு, **स्वस्ति** - மங்கள மானது, **अस्तु** - உண்டாகட்டும், **यज्ञश्च** - வேள்வியும், **अतीव** - மிகவும், **शोभन:** - நன் றாயிருக்கின்றது, **राजन्** - பிரபுவே!, **वयं** - நாம், **दानार्थिनः** - நன்கொடையொன்றை வேண்டுகிறவர்களாய், **अनुत्तमम्** - ஒப்புயர்வற்றதான, **यज्ञं** - யாகத்தை, **श्रुत्वा** - கேள்விப்பட்டு, **त्वां** - உம்மை, **दृष्ट्वा** - பார்த்து, **तव** - உம்முடைய, **अस्मिन्** - இந்த, **यागे** - யக்ஞத்தில், **किंचित्** - ஏதேனுமொரு சிறியதை, **लब्धुं** - பெறுவதற்கு, **इह** - இங்கே, **आगता:** - வந்து சேர்ந்தோம்.

24-26½. (ப-ரை) **वामनेन** - வாமனரால், **एवम्**- இப்படி, **उक्तः** - சொல்லப்

21½-23. (க-ரை) இப்படி அவ்வரசனால் உபசரிக்கப்பெற்ற தர்மஸ்வரூப ரான பகவான் உலகெல்லாம் உய்யுமாறு அந்த யஜமானனண்டையிற் சென்று நின்றுகொண்டு மஹாராஜனே! உமக்கு மங்களமுண்டாகுக. உமது யக்ஞமும் மிக்கச் சிறப்பு வாய்ந்துளது. நாம் கொடையாளர்களை நாடிச்செல்லும் யாசகர் கள். உமது யாகத்தின் சிறப்பைக் கேள்வியுற்று உம்மைக்கண்டு ஏதேனும் ஒரு சிறிது பெறலாமென்ற அவாவுடன் இங்கு வந்து சேர்ந்தோம், என்று பெருமை யின்கீழ் மறைந்துகிடக்கின்ற எளிமையுடன் எம்பெருமான் பகர்ந்தருளினன்.

24-26½. (க-ரை) இப்படி அவன் திருமேனியைப்போன்றே அளவற்ற

त्वदर्थं कल्पितंचैतन्मम सर्वस्वमेव च ।
धनौघं रत्नराशिं वा भूषणं धान्यसञ्चयम् ॥ 25 ॥
ग्रामं वा नगरंवापि राष्ट्रंवा यानमेव वा ।
हस्त्यश्वरथपत्तीर्वा त्वं लभस्वान्यमेव वा ॥ 26 ॥
किमिच्छसि महाबाहो तद्ददामि तवानघ ॥ 26½ ॥

பட்டவரான, **राजा तु** - அந்த [illegible]வோவெனில், **तदा** - அப்பொழுது, **मुदा** - ஸந்தோஷத்தோடு, **अब्रवीत्** - சொன்னார்; **वामन** - வாமனரே!, **अद्य** - இன்றைக்கு, **मे** - என்னுடைய, **यज्ञः** - யாகமானது, **सफलः** - பலனுடையதாயிற்று. **अद्य** - இன்றைக்கே, **कृतार्थः** - காரியமுடிந்தவனாக, **अस्मि** - ஆயிருக்கின்றேன். **एतत्** - இந்த, **मम** - என்னுடைய, **सर्वस्वमेव च** - சொத்துக்கள் முழுவதும், **त्वदर्थं** - உமக்காகவே, **कल्पितं** - [illegible]ப்பட்டிருக்கின்றது, **धनौघं** - நிதிக்குவியலையோ, **रत्नराशिं वा** - ரத்தினங்களின் குவியலையோ, **भूषणं** - ஆபரணங்களையோ, **धान्यसञ्चयम्** - தானியக் குவியல்களையோ, **ग्रामंवा** - கிராமத்தையோ, **नगरं वा**- [illegible]யோ, **अपि वा राष्ट्रं** - அல்லது தேசத்தையோ, **यानमेववा** - வாகனங்களையோ, **हस्त्यश्वरथपत्तीर्वा** - யானை குதிரை [illegible]யோ, **वा** - இல்லாவிட்டால், **अन्यमेव** - [illegible], **त्वं** - நீர், **लभस्व** - பெற்றுக்கொள்ளும், **महाबाहो** - [illegible]. **किं** - எதை, **इच्छसि** - விரும்புகின்றீர், **अनघ** - [illegible], **तत्** - அதை, **तव** - உமக்கு, **ददामि** - கொடுக்கின்றேன்.

பெருமை [illegible] [illegible]கை [illegible]யிருக்கிற [illegible] பலி சக்கிரவர்த்தியானவர், [illegible]! இன்றைக்கு [illegible] [illegible]றது. இன்றைக்கே [illegible] [illegible]. என்னுடைய [illegible]தென்று [illegible] [illegible]! [illegible] களில் ஸமர்ப்பிக்கத் [illegible]
கரித்து அடியேனை [illegible]! [illegible] நிதிக்குவியல்கள், இரத்தினக் குவியல்கள், [illegible] ஆபரணங்கள், தானியக் [illegible]யங்கள், அரசே! இந்த கிராமத்தை, [illegible] [illegible] யுமே தான் ஸ்வீகரித்துக்கொள்ளத் திருவுளமோ? [illegible] ஸாம்ராஜ்

एवमुक्तस्तदा राज्ञा भगवान् पुरुषोत्तमः ।
उवाचेषत् स्मितं कृत्वा यजमानं महाबलिम् ॥ 27½ ॥

एतैः किं मम राजेन्द्र नास्ति किंचित् प्रयोजनम् ।
अस्मत्पादत्त्रयाक्रान्तां देहिभूमिं विभो मम ॥ 28½ ॥

27½. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **राज्ञा** - அரசனால், **एवं** - இப்படி, **उक्तः** - சொல்லப்பட்டவரான, **पुरुषोत्तमः** - மஹா புருஷனான, **भगवान्** - பகவானானவர், **ईषत्** - ஸ்வல்பம், **स्मितं** - மந்தஹாஸத்தை, **कृत्वा** - செய்து, **यजमानं** - யாக்ஞிகரான, **महाबलिम्** - மஹாபலி சக்கரவர்த்தியை, **उवाच** - சொன்னார்.

28½. (ப-ரை) **राजेन्द्र** - இராஜசிரேஷ்டரே! **मम** - எனக்கு, **एतैः** - இவைகளினால், **किं** - என்ன? **किंचित्** - ஒரு சிறியதான, **प्रयोजनं** - உபயோகமும், **नास्ति** - கிடையாது, **विभो** - பிரபுவே! **मम** - எனக்கு, **अस्मत्पादत्त्रयाक्रान्तां** - என்னுடைய மூன்று அடிகளினாலே ஆக்கிரமிக்கப்படுகின்ற, **भूमिं** - பூமியை, **देहि** - கொடுப்பீராக.

யத்திற்குற்ற அங்கங்களான இரத கஜ துரக பதாதிக ளெனப்படுகின்கிற சதுரங்க சேனைகளோடும் பட்டத்திற்குரிய யானையோடும் இம்மண்டலாதிபத்தியத்தையே தாமது திருவடிகளில் ஸமர்ப்பிக்கின்றேன். மஹா உதாரங்களான திருக்கரங்களோடு விளங்குகின்ற திவ்யஸ்வரூபரே! இவைகளெல்லாம் போதவில்லையாகில் ஒரு திவ்ய ஸ்ரீ சரணாரவிந்தங்களுக்கே அனுரூபமான வேறே தேனுமொன்றைத்தான் தாம் வேண்டி வந்திருப்பீரேயானால் அதனையும் தாராளமாய்ப் பெற்றுக்கொண்டு அடியேனை யனுக்கிரஹித்தருளும். பெரிய மனது பண்ணி எண்ணிவந்த காரியத்தைச் சற்று வெளியிட்டுச் சொல்லும். குறைவற்ற பரிபூர்ணரான புருஷோத்தமரே! தாம் விரும்புவதெதுவானாலும் அதனைத் தம்முடையதென்றெண்ணியே தந்திடுவேன் யான், என்று அதி கெம்பீரமான வினயத்தோடு விக்ஞாபிக்கலானார்.

27½-28½. (க-ரை) இப்படி மஹாபலியினால் வேண்டிக்கொள்ளப்பட்ட புருஷோத்தமரான மஹா விஷ்ணுவானவர் சற்றுப் புன்முறுவல் பூத்த முகத்துடனே அந்த எஜமானனைப் பார்த்து, பிரபுவே! உட்காருவதற்கு ஒரு சாணிடங்கூட சொந்தமாய் அமைந்திராத இவ்வெளியவனுக்கு நீர் சொல்லிய உயர்ந்த பொருள்களினால் உபயோகமொன்றுமில்லையே. என்து காலினால் யானளந்து காட்டுகிற மூன்றடி இடத்தை மட்டும் எனக்குச் சொந்தமாகக் கட்டிக் கொடுத்துவிடும். அவ்வளவே எனக்குப் போதுமானதென்று விடை பகர்ந்தருளினார்.

श्रुत्वा तद्वामनेनोक्तंस्मितं कृत्वाऽसुरोत्तमः ।
येनेष्टं पूर्यतेब्रह्मन् स्तत्कुर्मेति ततोऽब्रवीत् ॥ 29½ ॥

वामनाय महींदातुं निश्चितेऽसुरसत्तमे ।
तं निवार्य महाराजं प्राहशुक्रोद्विजोत्तमः ॥ 30½ ॥

विरिञ्चिभवशक्राद्या योगिनश्च सुराऽसुराः ।
यं नजानन्ति वेदाश्च स एषो विष्णुरव्ययः ॥ 31½ ॥

29½. (ப-ரை) **असुरोत्तमः** - அஸுர ச்ரேஷ்டனான மஹாபலியானவன், **वामनेन** - வாமனனாலே, **उक्तं** - சொல்லப்பட்ட, **तत्** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **स्मितं** - மந்தஹாஸத்தை, **कृत्वा** - செய்து, **ततः** - அதன்பின், **ब्रह्मन्** - பிராம்மணரே! **येन** - எதனால், **इष्टं** - உமது விருப்பமானது, **पूर्यते** - நிறைவேறுமோ, **तत्** - அதை, **कुर्मः** - செய்கிறேன், **इति** - என்று, **अब्रवीत्** - சொன்னான்.

30½. (ப-ரை) **असुरसत्तमे** - அஸுர ச்ரேஷ்டனான [illegible], **वामनाय** - வாமனனின் பொருட்டு, **महीं** - பூமியை, **दातुं** - கொடுப்பதற்கு, **निश्चिते** - [illegible], **तं** - அந்த, **महाराजं** - சக்ரவர்த்தியை, **निवार्य** - தடுத்து, **द्विजोत्तमः** - பிராம்மண ச்ரேஷ்டரான, **शुक्रः** - சுக்ராசார்யரானவர், **प्राह** - சொல்லுகிறார்.

31½. (ப-ரை) **विरिञ्चिभवशक्राद्याः** - ப்ரம்மா, சிவன், இந்திரன் முதலானவர்களும், **योगिनश्च** - யோகிகளும், **सुराऽसुराः** - தேவாஸுரர்களும், **वेदाश्च** - வேதங்களும் கூட, **यं** - எவனை, **न जानन्ति** - அறிகின்றதில்லையோ, **एषः** - இவன், **सः** - அப்படிப்பட்ட, **अव्ययः** - அழிவற்றவனான, **विष्णुः** - மஹாவிஷ்ணுவே ஆவான்.

29½. (க-ரை) இப்படி வாமனன் [illegible] வார்த்தையைக் [illegible] கருத்தைத் தன்குணர்ந்தவனான அஸுரச்ரேஷ்டனான [illegible] சிறப்புவிந்த எனக்கு [illegible] செய்கின்றேனென்று [illegible] கூறினான்.

30½-32½. (க-ரை) [illegible] அஸுர [illegible] மஹாபலிச் சக்ரவர்த்தி மிகச்சிறப்புற்ற [illegible] அதன் [illegible] அடியொன்றுக்கே இப்பூமண்டலம் [illegible] இதனை அடங்கவுமவருக்குக் கொடுக்குமிடத் தீர்மானித்தார். [illegible] ஆழ்ந்த கருத்தை அறியாதவரான அவர் [illegible] சுக்ராசாரிய

दानारते ततश्चुक्रे तन्तु राजपुरोहितं ।
गृहीत्वा ताडयामास वैनतेयो महाबलः ॥32½॥

32½. (ப-ரை) **शुक्रे** - சுக்கிராசார்யரானவர், **दानारते** - கொடுப்பதில் பிரியப்படாமற் போகவே, **राजपुरोहितं** - அரசருக்குப் புரோகிதரான, **तं तु** - அவரையோவெனில், **महाबलः** - மஹத்தான பலமுள்ளவரான, **वैनतेयः** - கெருடனானவர், **गृहीत्वा**- பிடித்துக்கொண்டு, **ताडयामास** - (தட்டிக்கொடுப்பவர்போல) ஒரு அடி கொடுத்தார்.

ரெனப்படுகிற பிராம்மணோத்தமர் அந்த நற்காரியத்தில் குறுக்கிட்டு முன்ஜாக்கிரதையுடன் அம்மஹாராஜனுக்கு ஹிதஞ்செய்வதாக நினைத்துக்கொண்டு அவரை அக்காரியத்தைச் செய்யவிடாமல் தடுத்து விலக்கிவிட வேண்டுமென்று தீர்மானித்தார். இனி வந்திருக்கின்ற ஆள்யார், வேஷக்காரனை விஷ்ணுவென்கிற கள்ளமென்பதைச் சொல்லியாக வேண்டும். அப்படி, பட்டவர்த்தனமாகப் பேசுவது உசிதமாயிராதன்றோ? ஆதலால் இவ்வுபாயத்தை அவலம்பித்தார். மஹாராஜா! வந்திருப்பது யாரென்று நினைக்கின்றீர், பிரம்ம ருத்ர மஹேந்திராதிகளுக்கும் அதிபதியாய்ப் பெயர்பெற்று ஸர்வலோகங்களிலும் நிலைக்கப்பெற்றதவனாய்த் தேவதைகளுடைய நன்மையின்பொருட்டும் பராக்ரமசாலியனாய் வேதரூபனுடைய வாக்யங்களுக்கும் எட்டாதவனாய் குறை சொல்லவியலாமல் ஸர்வதனாய் விளங்குகின்றவரை விஷ்ணுவேயன்றி மற்றொரு ஸாமான்ய மனிதனல்ல, அந்த மஹிமையால் சேர்ந்தவொரு ஸத்பாத்திரத்தைக் கொண்டாடுகின்றது போல வெளிக்குத் தோன்றும்படி கபடமான முறையில் உண்மையை விண்டுகொண்டு எச்சரிக்கை செய்பவனாய். இதைத் தெய்வ பலவான்மாயமான வேஷத்தோடு மெய்க்காலிக்குள் வரும்போது அவருடைய மஹாநுபாவான வைனதேயரென்கிற கெருடாழ்வாரும் அதற்குத்துணையான ஒரு பயமென்னப் போன்ற வேஷத்துடன் கூடவே வந்திருக்கலாயினால் அப்பக்ஷிராஜன் இப்பார்ப்பானுடைய அற்பத்தனத்திற்காக இவரைக் கடிய நினைத்தார். ஆனாலும் இவரைப்போலவே கவடாகவே அதனைச் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு சுக்ராசாரியரின் அருகிற் சென்று அவருடைய கன்னங்களையும் பற்றிக்கொண்டு, ஷபாஷ், ஆசாரியரின் மேன்மையை நீரொருவரே முற்றும் உணர்ந்துள்ளீர், பேஷ், என்று ஸந்தோஷத்தால் தட்டிக்கொடுக்கின்ற பாவனையில் முகத்தில் பளாரென்று வலிய ஒரு அறை கொடுத்தார். அது இனி இதில் தலையிட்டால் தலையே போய்விடுமென்று இவருக்கு எச்சரிக்கை போலாயிற்று. அவ்வளவோடு அஸுரகுரு வாய் மூடிக்கொண்டார்.

पत्न्या सह विनिश्चित्य यजमानो महाबलिः ।
मायारूपेणदेवेशो मम यज्ञं गतो यदि ॥33½॥

तदैतद्यज्ञसाफल्यमेवमस्त्विति चाब्रवीत् ॥ 34 ॥

तव पादत्रयाक्रान्तां गृहाणाद्य महीं प्रभो ।
इत्युक्त्वा चोदकं दत्तं वामनाय महात्मने ॥ 35 ॥

33½-34. (ப-ரை) **यजमानः** - யாக்ஞிகரான, **महाबलिः** - மஹாபலியானவர், **पत्न्यासह** - தமது பத்தினியோடுகூட, **विनिश्चित्य** - (ஆலோசித்து) முடிவு செய்து கொண்டு, **देवेशः** - ஸர்வதேவர்களுக்கும் ஈச்வரனான பகவான், **मायारूपेण** - கபடவேஷத்தோடு, **मम** - என்னுடைய, **यज्ञं** - யாகத்தை, **गतो यदि** - வந்தடைந்தாரென்றால், **तदा** - அப்பொழுது, **एतद्यज्ञसाफल्यं** - இந்த யக்ஞத்தினுடைய ஸாபல்யமுடைமையானது, **एवं** - இப்படிப்பட்டதாகவே, **अस्तु** - இருக்கட்டும், **इति** - என்று, **अब्रवीत् च** . சொல்லவும் சொன்னார்.

35-36. (ப-ரை) **प्रभो** - பிரபுவே! **तव** - உம்முடைய, **पादत्रयाक्रान्तां** - மூன்று அடிகளினாலே ஆக்ரமிக்கப்பட்டிருக்கிற, **महीं** - பூமியை, **अद्य** - இப்பொழுது, **गृहाण** - பெற்றுக்கொள்ளும், **इति** என்று, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **महात्मने** - மஹாத்மாவான, **वामनाय** - வாமனனின் பொருட்டு, **उदकं च** - தானஜலமும், **दत्तं** - வார்க்கப்பட்டது, **उदके** - தானஜலமானது, **सृष्टमात्रेतु** - கையில் வார்க்கப்பட்டவுடனே, **विश्वरूपधरः** - பிரபஞ்ச ஸ்வரூபத்தைத் தரிக்கின்றவரான, **हरिः** - மஹாவிஷ்ணுவானவர், **तत्रस्थ एव** - அங்கிருந்துகொண்டவராகவே, **ववृधे** - வளர்ந்தார், **येन** - எந்த வளர்த்தியினால், **जगत्त्रयम्** - உலகமூன்றும், **पूर्णं** - நிறைந்தது.

33½-34. (க-ரை) எஜமானரான மஹாபலியோவெனில் தனக்கு ஹிதஞ் சொல்லவேண்டிய குருவானவர் கதியதை யுணராமற்போகவே தமது பத்தினியோடு கூட ஆலோசித்துத் தீர்ந்த நிர்ணயத்தைப் பெற்றவராய் ஸர்வகர்ம ஸமாராத்யனான பரமபுருஷன் தானே எனது யக்ஞத்திற்கு எழுந்தருளினானென்றால் அது கொண்டே எனது வேள்வி முற்றவும் பயன் பெற்றதாயிற்று என்று மனமகிழ்ந்து கூறுவாராயினர்.

35-36. (க-ரை) பிரபுவே! இப்பூமியையும் இதைப்போன்றே உமது திவ்ய ஸ்ரீ சரணாரவிந்தங்களைப் பெறுவதற்கான பாக்யத்துடன் கூடிய வேறு

उदके सृष्टमात्रेतु विश्वरूपधरोहरिः ।
तत्रस्थ एव ववृधे येनपूर्णं जगत्रयम् ॥ 36 ॥
त्रीन्क्रमानथ भिक्षित्वा प्रतिगृह्यच मानदः ।
आक्रम्य लोकाल्लोकात्मा सर्व भूतहितेरतः ॥ 37 ॥
महेन्द्राय पुनः प्रादान्नियम्य बलिमोजसा ।
त्रैलोक्यं स महातेजा श्चक्रे शक्रवशं पुनः ॥ 38 ॥

37-38. (ப-ரை) **मानदः** - சிரேஷ்டரான அவர், **त्रीन्** - மூன்றுகளான, **क्रमान्** - அடிகளை, **भिक्षित्वा** - இரந்து, **प्रतिगृह्य च** - பெற்றும்கொண்டு, **अथ** - பிறகு **लोकात्मा** - ஸர்வ லோகங்களிலும் பரந்துள்ள சரீரத்தை உடையவரான (பகவானவர்), **सर्वभूतहिते** - எல்லாப்பிராணிகளுடைய அனுகூலத்திலும், **रतः** - ஆஸக்தி உள்ளவராக, **लोकान्** - உலகங்களையெல்லாம், **आक्रम्य** - ஆக்கிரமித்து, **बलिं** - மஹாபலியை, **ओजसा** - பிரபாவத்தினாலே, **नियम्य** - வென்று, **त्रैलोक्यं** - மூவுலகத்தையும், **पुनः** - மறுபடியும், **महेन्द्राय** - தேவேந்திரன் பொருட்டு, **प्रादात्** - கொடுத்தார், **पुनः** - மேலும், **महातेजाः** - மஹா தேஜஸ்வியான, **सः** - அந்த பகவான், **शक्रवशं** - இந்திரனுக்கு சுவாதீனமாயிருக்கும் படியும், **चक्रे** - செய்து வைத்தார்.

எப்பொருட்களையும் மூவடியாலளந்து நீர் கட்டிக்கொள்ளும், என்று வேண்டிக் கொண்டு பலி சக்கிரவர்த்தி மஹாத்மாவான வாமனரின் பொருட்டு தாரை வார்த்துவிடவே, அங்கிருந்தபடியே அவ்விராட் புருஷன் தன்னுருவால் மூவுலகமும் பூரணமாம்படி அகண்டமாய் வளரலுற்றார்.

37-38. (க-ரை) அவன் ஸகல பிரபஞ்சங்களையுஞ் சரீரமாகக்கொண்ட ஸர்வாந்தராத்மா வன்றோ? தேவர் அஸுரரென்கிற வாசியற ஸர்வ பூதங்களுக்கும் அனுகூலத்தைச் செய்வதிலேயே ஆவலுள்ளவ னென்பதைச் சொல்ல வேண்டுமோ? தனது பெருமையை யெல்லாம் குறுக்கிக்கொண்டு ஒரு குறளுருவாகி வந்து மூன்றடி மண்ணை யிரந்து பெற்றான். அடி இரண்டினால் மண்ணையும், விண்ணையும் முடியவளந்தான். மிகுந்த அடிக்கு மஹாபலியின் திருமுடி தன்னையே இடமாய்க் கொண்டான். உரிமை இழந்து பரிதபித்த தேவேந்திரனுக்குத் திரைலோக்ய ராஜ்யத்தைத் திருப்பியளித்தான். இவ்வளவு பற்றுமோ; இனியுமிவ்வரசுரிமை சிதைவுறுவகையில் இதற்கொரு இரக்ஷை தான் வேண்டுமோ, என்று அஞ்சுகிற இந்திரனின் கோர்க்கையைப் பூரிப்பான் போல அந்த

तेनैष पूर्वमाक्रान्त आश्रमः श्रमनाशनः ।
मयापि भक्त्या तस्यैष वामनस्योपभुज्यते ॥ 39 ॥

एतमाश्रममायान्ति राक्षसा विघ्नकारिणः ।
अत्रैव पुरुषव्याघ्र हन्तव्या दुष्टचारिणः ॥ 40 ॥

---

39. (ப-ரை) **एषः** - இது. **तेन** - அந்த வாமனனால். **पूर्वं** - முன்னொளில், **आक्रान्तः** - வாஸத்திற்காகப் பற்றப்பட்டிருந்த, **आश्रमः** - ஆச்ரமம், **श्रमनाशनः** - ஸர்வ சிரமங்களுக்கும் நாசகமானது. **मयापि** - என்னாலும், **तस्य** - அவனிடத்திலுள்ள, **भक्त्या** - பக்தியினாலே, **वामनस्य** - வாமனனுடைய, **एषः** - இந்த ஆச்ரமமானது, **उपभुज्यते** - அனுபவிக்கப்படுகிறது.

40. (ப-ரை) **राक्षसाः** - அரக்கர்கள், **विघ्नकारिणः** - இடையூறு விளைவிப்பவர்களாக, **एतं** - இந்த, **आश्रमं** - ஆச்ரமத்தைக் குறித்து, **आयान्ति** - வருகின்றார்கள், **पुरुषव्याघ्र** - புருஷ சிரேஷ்டனே, **अत्रैव** - இங்கேதான், **दुष्टचारिणः** - துர்நடத்தையுள்ளவர்களான அரக்கர்கள், **हन्तव्याः** - கொல்லப்பட வேண்டியவர்கள்.

பாக்கியசாலியான மஹாபலியின் சிரத்தின் மீது தன் திருவடி யென்னும் பொருத்தமான பாதத்தை வைத்து. அனுபவிக்கமாட்டாத அடியவர்களைச் சேர்ந்து பெற்ற அந்த பாக்கியத்தை அவனுடைய நண்பர் மஹாபாதர் பெற்று அனுபவித்து ஆனந்திக்கும்படி பக்தர்களுக்கு அருள்புரிந்து அநுக்ரஹித்தருளினான்.

39. (க-ரை) இராகவா! அப்படி அளவற்ற கருணைக்கடலாக விளங்கிய அவ்வாமனன் பொன்னடிகள் பட்டுப் புனிதமான ஆசிரமமாகுமிது. இதனை ஸ்மரித்தாலும் சிரமங்களெல்லாம் மறைந்து போகும். அப்போதும் அவ்வாமனன் திருவடி கொண்டு நடந்தருளிய இடமென்கிற பெருமையினாலேயே இவ்விடத்து ஆவிகளை முகர்ந்து மனமகிழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

40. (க-ரை) ஹே இராமா! இவ்வாசிரமத்தில் நடக்கின்ற யாகங்களைக் கெடுப்பதற்கென்று கொடிய அரக்கர்கள் வந்து கூடுகின்றனர். புருஷ வ்யாக்ரமே! அத்துராத்மாக்களை நீங்கள் இங்கேயே கொன்றுவிட வேண்டும் என்று அவ்வாசிரமத்தைப் பற்றி ஸ்ரீராகவன் வினவியதற்கு விச்வாமித்திர மஹரிஷி விவரமாய் விடை கூறி முடித்தார்.

अद्यगच्छामहे राम सिद्धाश्रममनुत्तमम् ।
तदाश्रमपदं तात तवाप्येतद्यथा मम ॥ 41 ॥

प्रविशन्नाश्रमपदं व्यरोचत महामुनिः ।
शशीव गतनीहारः पुनर्वसुसमन्वितः ॥ 42 ॥

41. (ப-ரை) **अद्य** - இப்போது, **राम** - ஹே இராமனே! **अनुत्तमम्** - ஒப்புயர்வற்றதான, **सिद्धाश्रमं** - ஸித்தாசிரமத்தைக் (குறித்து), **गच्छामहे** - போகின்றோம், **तात** - அப்பனே! **तत्** - அந்த, **आश्रमपदं** - ஆசிரம ஸ்தானமானது, **तव अपि** - உன்னுடையதும் தான், **एतत्** - எப்படி, **मम** - என்னுடையதோ.

42. (ப-ரை) **आश्रमपदं** - ஆச்ரம ஸ்தானத்தை, **प्रविशन्** - பிரவேசிக்கின்றவரான, **महामुनिः** - மஹரிஷியானவர், **गतनीहारः** - நீங்கிய பனி மூட்டத்தையுடையவனும், **पुनर्वसुसमन्वितः** - புனர்வஸு நக்ஷத்திர மிரண்டோடு கூடினவனுமான, **शशी इव** - சந்திரன் போல, **व्यरोचत** - விளங்கினார்.

41. (க-ரை) இராமசந்திரா! இன்று நாம் நமது ஸித்தாச்ரமத்தை அடைந்து விடுவோம். அப்பனே! நமது என்றதைப் பற்றி யோசிக்கின்றாயா? எனிது உனதல்லவோ. எப்படி என்னுடையதாகும்? என்று வினவுகின்றாயா? இந்தத் தவசியினுடையதாக ஆயினவழியிற்றான் உன்னுடையதாகவு மாயிருக்கின்றது. நீரிதனில் தவம் புரிந்தீர். யான் அப்படி யொன்றும் செய்யவில்லையே, என்பாயேல் நீயும் முன்னுளனேக மாண்டுகள் அத்தவத்தைச் செய்திருக்கவில்லையோ? அதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள நீ பிரியப்படாவிட்டாலும், என தையனே, என்னுடையவைகளெல்லாம் நினதுடைமைகளே யென்கிற நீதியிலேனும் எனது விண்ணப்பத்தை நீ ஏற்றுக்கொண் டருளலாமன்றோ? என்று மஹரிஷி ஸ்ரீராகவனுடைய அவதார ரஹஸ்யம் புலப்படுமாறு ஸரஸமான இவ்வார்த்தையைச் சொல்லலானார்.

42-44. (க-ரை) கவலை நீங்கித் தனது ஆச்ரமத்திற்கு இராம லக்ஷ்மணர்களுடன் செல்லுகின்ற விசுவாமித்திரர், பனிவாயினின்று விடுபட்டு புனர்வஸு வென்னப்படும் இரண்டு நக்ஷத்திரங்களோடு கூடியிருக்கின்ற சந்திர மண்டலம் போன்று விளங்கலானார். அப்படி இராம லக்ஷ்மணர்களை இட்டுக்கொண்டு

इत्युक्त्वा परमप्रीतो गृह्य रामं सलक्ष्मणम् ॥ அதிக பாடம்

तंदृष्ट्वामुनयस्सर्वे सिद्धाश्रमनिवासिनः ।
उत्पत्योत्पत्य सहसा विश्वामित्रमपूजयन् ॥ 43 ॥

यथार्हं चक्रिरे पूजां विश्वामित्राय धीमते ।
तथैव राजपुत्राभ्यामकुर्वन्नतिथिक्रियाम् ॥ 44 ॥

मुहूर्तमथविश्रान्तौ राजपुत्रावरिन्दमौ ।
प्राञ्जली मुनिशार्दूलमूचतु रघुनन्दनौ ॥ 45 ॥

अद्यैव दीक्षां प्रविश भद्रं ते मुनिपुङ्गव ।
सिद्धाश्रमोऽयं सिद्धः स्यात्सत्यमस्तु वचस्तव ॥ 46 ॥

43. (ப-ரை) **तं** - (இவ்வாறு வேகமாக அவர்களுடன் வருகின்ற) அந்த, **विश्वामित्र-** விசுவாமித்திரனை, **दृष्ट्वा** - பார்த்து, **सिद्धाश्रमनिवासिनः** - ஸித்தாச்ரமத்தில் வஸிக்கின்றவர்களான, **सर्वेमुनयः** - எல்லா ரிஷிகளும், **सहसा** - பரபரப்பாக, **उत्पत्य उत्पत्य** - குதித்துக் குதித்து, **अपूजयन्** - பூஜித்தார்கள்.

44. (ப-ரை) **धीमते** - ஞானியான, **विश्वामित्राय** - விசுவாமித்திரின் பொருட்டு, **यथार्हं** - தகுதிப்படி, **पूजां** - பூஜையை, **चक्रिरे** - செய்தார்கள், **तथैव** - அப்படியே, **राजपुत्राभ्यां** - இராஜகுமாரர்களின் பொருட்டு, **अतिथिक्रियाम्** - அதிதி ஸத்காரத்தை, **अकुर्वन्** - செய்தார்கள்.

45-46. (ப-ரை) **अथ** - பிறகு, **मुहूर्तं** - ஒரு முகூர்த்த காலம், **विश्रान्तौ** - இளைப்பாறியவர்களான, **अरिन्दमौ** - சத்ருக்களை யடக்கும் திறமையுள்ளவர்க

வருகின்ற விசுவாமித்திரனைக் கண்டு ஸித்தாச்ரமத்தில் வஸிக்கின்றவர்களான மஹரிஷிகளெல்லோரும் "முனிவின்றி செழிக்குமோ முதுஞானர் நீர்மையினரோ" என்னும் ஸ்தோத்திரத்தில் குதித்துக் குதித்து அவரை வரவேற்றுக் கொண்டாடினார்கள். பிரக்ஞானமான மஹரிஷிக்கு யோக்யமான பூஜையைச் செய்து அதிதிகளான இராஜகுமாரர்களுக்கும் தக்கபடி ஸத்காரத்தைச் செய்தார்கள்.

45-46. (த-ரை) பிறகு அவ்விரண்டு குமாரர்கள் சிறிது நேரம் இளைப்பாறிக்கொண்டு மஹரிஷியைப் பார்த்து இனி தவக்காலமின்றி தாங்கள் யக்ஞ தீக்ஷையை யெடுத்துக் கொள்ளுங்கள். தமது திருவாக்கும் மெய்யாகு மென்று

एवमुक्तो महातेजा विश्वामित्रो महानृषिः ।
प्रविवेश तदा दीक्षां नियतो नियतेन्द्रियः ॥ 47 ॥

कुमारावपि तां रात्रिमुषित्वा सुसमाहितौ ।
प्रभातकाले चोत्थाय पूर्वां सन्ध्यामुपास्य च ॥ 48 ॥

ளான, **राजपुत्रौ** - இராஜகுமாரர்களான, **रघुनन्दनौ** - இரகுக்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றவர்களான அவ்விருவர்களும், **प्राञ्जलिः** - நன்றாகக் கை குவித்துக் கொண்டவர்களாக, **मुनिशार्दूलं** - முனிச்சிரேஷ்டரை, **ऊचतुः** - சொன்னார்கள். **मुनिपुङ्गव** - முனிவரரே! **अद्यैव** - இப்பொழுதே, **दीक्षां** - யக்ஞ தீக்ஷையை, **प्रविश** - அடையும், அதாவது எடுத்துக்கொள்ளும், **अयं** - இந்த, **सिद्धाश्रमः** - ஸித்தாச்ரமமானது, **सिद्धः** - ஸித்திபெற்றதாக, **स्यात्** - ஆகட்டும், **तव** - உம்முடைய, **वचः** - வார்த்தையானது, **सत्यं** - உண்மையாக, **अस्तु** - இருக்கட்டும்.

47. (ப-ரை) **एवं** - இப்படி, **उक्तः** - சொல்லப்பட்டவரான, **महातेजाः** - மஹத்தான தேஜஸ்ஸையுடையவரான, **विश्वामित्रः** - விசுவாமித்திரரென்கிற, **महान्** - பெரியவரான, **ऋषिः** - ரிஷியானவர், **नियतः** - மனதடக்கமுள்ளவராயும், **नियतेन्द्रियः** - அடக்கப்பட்ட புலன்களையுடையவராயும், **तदा** - அப்பொழுதே, **दीक्षां** - யக்ஞ தீக்ஷையை, **प्रविवेश** - அடைந்தார்.

48-49. (ப-ரை) **कुमारौ अपि** - குமாரர்களும், **सुसमाहितौ** - மிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாக, **तां** - அந்த, **रात्रिं** - இரவை, **उषित्वा** - வஸித்து, **प्रभातकालेच** - பிராதக்காலத்திலேயே, **उत्थाय** - எழுந்து, **पूर्वां** - முந்தியதான, **संध्यां** - ஸந்தியை, **उपास्यच** - உபாஸித்துவிட்டு, **सृष्टोदकौ** - கொடுக்கப்பட்டிருக்கிற அர்க்கியத்தையு

இவ்வாச்ரமத்தை உண்மையான ஸித்தாச்ரமமாகவே செய்யப்படட்டும். முனிச்சிரேஷ்டரே! அருள் புரிக, என்று இரகுநந்தனர்கள் கரங்குவித்துப் பிரார்த்தித்தார்கள்.

47-49. (க-ரை) இப்படி இராஜகுமாரர்களால் பிரார்த்திக்கப்பட்ட விசுவாமித்திர மஹரிஷி மனதையும் புலன்களையும் அடக்கி வைத்துக்கொண்டு அப்பொழுதே யக்ஞ தீக்ஷையை எடுத்துக்கொண்டார். குமாரர்களும் அவ்விரவு முழுவதும் மிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாகக் காத்திருந்து விடியுமுன்னெழுந்து ஸந்தியாவந்தன காயத்ரீ ஜபாதிகளான காலைக் கடமைகளையெல்லாம்

सृष्टोदकौ शुची जप्यं समाप्य नियमेन च ।
हुताग्निहोत्रमासीनं विश्वामित्रमवन्दताम् ॥ 49 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे

एकोनत्रिंशस्सर्गः ॥ 29 ॥

டையவர்களாக, **शुची** - பரிசுத்தர்களாக, **जप्यं** - ஜபிக்கவேண்டியவைகளை, **नियमेन** - நியமத்துடனே, **समाप्य च** - முடித்துக்கொண்டு, **हुताग्निहोत्रं** - செய்யப்பட்டிருக்கிற அக்கினிஹோத்திர ஹோமத்தை உடையவராயும், **आसीनं** - உட்கார்ந்திருப்பவரா யுமிருக்கின்ற, **विश्वामित्रं** - விசுவாமித்திர மஹரிஷியை, **अवन्दतां** - வணங்கினார் கள்.

முடித்துக்கொண்டு, அக்கினிஹோத்திரத்தைச் செய்து விட்டு உட்கார்ந்திருக் கின்ற விசுவாமித்திரரிடஞ் சென்று வணங்கினார்கள்.

49-வது சுலோகத்தின் பூர்வார்த்தம். प्रशुचि पर । जप्यं समाप्य नियमेन च । என்றும் இருக்கின்றது

त्रिंशः सर्गः ॥ 30 ॥

अथ तौ देशकालज्ञौ राजपुत्रावरिंदमौ ।
देशे काले च वाक्यज्ञावब्रूतां कौशिकं वचः ॥ 1 ॥

भगवन् श्रोतुमिच्छावो यस्मिन्काले निशाचरौ ।
संरक्षणीयौ तौ ब्रह्मन्नातिवर्तेत तत्क्षणम् ॥ 2 ॥

एवं ब्रुवाणौ काकुत्स्थौ त्वरमाणौ युयुत्सया ।
सर्वे ते मुनयः प्रीताः प्रशशंसुर्नृपात्मजौ ॥ 3 ॥

1. (ப-ரை) **अथ** - பிறகு, **देशकालज्ञौ** - இடம் சமய மறிந்தவர்களாயும், **अरिन्दमौ** - சத்ருரு நாசனர்களாயும், **देशे काले च** - தேசத்திற்கும், காலத்திற்கும் ஒவ்வும் வகையில், **वाक्यज्ञौ** - வார்த்தை சொல்லுவதை யறிந்திருக்கின்றவர்களு மான, **राजपुत्रौ** - இராஜ குமாரர்கள், **कौशिकं** - விசுவாமித்திரரைப் பார்த்து, **वचः** - வார்த்தையை, **अब्रूतां** - சொன்னார்கள்.

2. (ப-ரை) **भगवन्** - பகவானே! **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छावः** - விரும்புகின்றோம், **तौ** - அந்த, **निशाचरौ** - அரக்கர்கள், **यस्मिन्** - எந்த, **काले** - சமயத்தில், **संरक्षणीयौ** - காக்கப்பட வேண்டியவர்கள், அதாவது யக்ஞத்திற்கு இடையூறின்றித் தடுத்து விரட்டப்பட வேண்டியவர்கள், **ब्रह्मन्** - பூஜ்யரே! **तत्** - அந்த, **क्षणं** - ஸமயமானது, **न अति वर्तेत** - நழுவக் கடந்து போய்விட வேண்டாம்

3. (ப-ரை) **एवं** - இப்படி, **ब्रुवाणौ** - சொல்லுகின்றவர்களாயும், **युयुत्सया** - யுத்தம் செய்யவேண்டுமென்கிற இச்சையினாலே, **त्वरमाणौ** - துவரிக்கின்றவர்களான, **काकुत्स्थौ** - ககுத்த வம்சத்தில் உதித்தவர்களான, **नृपात्मजौ** - இராஜ குமாரர்களை, **ते** - அந்த, **सर्वे** - ஸமஸ்தர்களான, **मुनयः** - ரிஷிகளும், **प्रीताः** - சந்தோஷித்தவர்களாய், **प्रशशंसुः** - கொண்டாடினார்கள்.

1-3. (க-ரை) இப்படி மஹரிஷியை நமஸ்கரித்தபின் தேசகாலங்களில் நிலைமையை நன்குணர்ந்தவர்களான அந்த இராஜகுமாரர்கள் மஹரிஷியைப் பார்த்து பகவானே! எப்போது நாங்கள் ஸுபாஹு, மாரீசன் எனப்படுகிற அவ்வரக்கர்கள் தமது யாகத்தைக் கெடுத்துவிடாமல் அவர்களைத் தடுத்துத் துரத்திக் கிரதுவைக் காப்பாற்றவேண்டும்? அவ்வரிய ஸந்தர்ப்பத்தில் யாங்கள் தவறிப்போகாமலிருப்பதற்காக அதனை முன்னதாகவே யறிந்துகொள்ள

अद्य प्रभृति षड्रात्रं रक्षतं राघवौ युवाम् ।
दीक्षां गतो ह्येष मुनिर्मौनित्वं च गमिष्यति ॥ 4 ॥

तौतु तद्वचनं श्रुत्वा राजपुत्रौ यशस्विनौ ।
अनिद्रौ षडहोरात्रं तपोवनमरक्षताम् ॥ 5 ॥

4. (ப-ரை) **राघवौ** - இரகு குமாரர்களே! **युवाम्** - நீங்கள், **अद्यप्रभृति** - இன்று முதற்கொண்டு, **षड्रात्रं** - ஆறிரவு பரியந்தம், **रक्षतं** - ரக்ஷியுங்கள், **एषः** - இந்த, **मुनिः** - விசுவாமித்திர மஹரிஷியானவர், **दीक्षां** - யக்ஞ தீக்ஷையை, **गतः हि** - அடைந்திருக்கின்றாரன்றோ? **च** - இன்னும் (ஆறு தினங்கள் வரைக்கும்), **मौनित्वं** - மௌனியா யிருக்குகையை, **गमिष्यति** - அடைந்திருப்பார்.

5. (ப-ரை) **यशस्विनौ** - புகழ் பெற்றவர்களான, **तौ** - அந்த, **राजपुत्रौ तु** - இராஜ குமாரர்களோ வெனில், **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **षडहोरात्रं** - ஆறு பகலிரவுகள் முழுதும், **अनिद्रौ** - தூக்கமற்றவர்களாக, **तपोवनं** - தபோவனத்தை, **अरक्षतां** - காப்பாற்றினார்கள்.

விரும்புகின்றோம், என்று தத்கால தேசங்களுக்கு உசிதமான வார்த்தையைக் கேட்டார்கள். இப்படித் தம்மையே பார்த்திருக்கின்றவர்களின் காரியத்தைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டுமென்கிற அவாவினாலும் யுத்தத்தில் கண்ணுள்ள உத்ஸாஹத்தினாலும் துடித்துக்கொண்டு நிற்கின்ற கருத்துடையவர்களான அவ்வரசிளங் குமாரர்களை அங்குள்ள மஹரிஷிகளெல்லோரும் பெருமையாகக் கொண்டாடி விசுவாமித்திரர் தீக்ஷா நிமித்தமாக மௌன விரதத்தைப் பூண்டிருந்தமையினால் இராகவர்களுடைய கேள்விக்குத் தாங்களே பதில் கூறலானார்கள்.

4. (க-ரை) இரகுநந்தனர்களே! இவ்வேள்வி இன்னும் ஆறு தினங்களில் முடிவு பெறக்கூடியது. ஆதலால் அது வரைக்கும் நீங்கள் ஜாக்கிரதையாயிருந்து காப்பாற்றவேண்டும். யாகம் முடியும் வரைக்கும் மஹரிஷி மௌனியாகவேயிருப்பார். தீக்ஷையிலிருக்கின்றாரன்றோ? என்று அவ்விரிஷிகள் சொன்னார்கள்.

5-6. (க-ரை) ஆச்ரித ரக்ஷணத்தில் ஜாகரூகர்களென்று கீர்த்திவாய்ந்தவர்களான அவ்விராஜ குமாரர்கள் மஹரிஷிகளுடைய அக்கோரிக்கையைக் கேட்டு இரவும் பகலுமாக ஆறு தினங்கள் முழுவதும் கண்களையு மிமைக்காமல் வில்லுங் கை

उपासां चक्रतुर्वीरौ यत्तौ परमधन्विनौ ।
ररक्षतुर्मुनिवरं विश्वामित्रमरिंदमौ ॥ 6 ॥

अथ काले गते तस्मिन्षष्ठेऽहनि समागते ।
सौमित्रिमब्रवीद्रामो यत्तो भव समाहितः ॥ 7 ॥

रामस्यैवं ब्रुवाणस्य त्वरितस्य युयुत्सया ।
प्रजज्वाल ततो वेदिः सोपाध्यायपुरोहिता ॥ 8 ॥

---

6. (ப-ரை) **वीरौ** - அந்த சுத்த வீரர்கள், **परमधन्विनौ** - சிரேஷ்டமான விற்களை யுடையவர்களாய், **यत्तौ** - ஸந்நத்தர்களாக, **उपासां चक्रतुः** - அங்கு காத்திருந்தார்கள், **अरिंदमौ** - அந்த சத்துரு தமனர்கள், **मुनिवरं** - முனிச்சிரேஷ்டரான, **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **ररक्षतुः** - இரக்ஷித்தார்கள்.

7. (ப-ரை) **अथ** - பிறகு, **काले** - காலமானது, **गते** - செல்லவே, **तस्मिन्** - முக்கியமான அந்த, **षष्ठे** - ஆறுவதான, **अहनि** - தினமானது, **समागते** - வந்துசேரவே, **यत्तः** - ஜாக்கிரதையுள்ளவரான, **रामः** - இராமனென்பவர், **समाहितः** - ஸாவதானசித்தனாக, **भव** - இருப்பாயாக (என்று), **सौमित्रिं** - ஸுமித்திரா குமாரனை இலக்ஷ்மணனை, **अब्रवीत्** - சொன்னார்.

8. (ப-ரை) **युयुत्सया** - யுத்தஞ்செய்யவேண்டுமென்கிற விருப்பத்தினாலே, **त्वरितस्य** - துவரிக்கின்றவரான, **रामस्य** - இராமனென்பவர், **एवं** - இப்படி, **ब्रुवाणस्य** - சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, **सोपाध्यायपुरोहिता** - உபாத்தியாயரான விசுவாமித்திரர், ரித்துவிக்குக்கள் எனப்படுகின்ற புரோகிதர்கள், இவர்களோடு கூடியதான, **वेदिः** - மேடையானது, **ततः** - அதனால், **प्रजज्वाल** - ஜ்வலித்தது.

யுமாக பர்ணசாலையைச் சுற்றிச் சுற்றிப் பாராக்கொடுத்துக்கொண்டு விசுவாமித்திரரைக் காக்கலாயினர்.

7. (க-ரை) இப்படி ஐந்து தினங்கள் கழியவே ஸௌத்யாதினமெனப்படுகிற முக்கியமான ஆறுவது நாளும் தோன்றிவிட்டதைக் கண்ட இராமபத்திரன், பத்திரம் பத்திரமென்று ஸௌமித்திரா குமாரனை எச்சரித்துக்கொண்டேயிருக்கின்றார்.

8-9. (க-ரை) இப்படி இராமன் எங்கே யெங்கேயென்று யுத்தத்திற்காகத்

सदर्भचमसस्रुक्का ससमित्कुसुमोच्चया ।
विश्वामित्रेण सहिता वेदिर्जज्वाल सर्त्विजा ॥ 9 ॥
मन्त्रवच्च यथान्यायं यज्ञोऽसौ संप्रवर्तते ।
आकाशेच महाञ्शब्दः प्रादुरासीद्भयानकः ॥ 10 ॥
आवार्य गगनं मेघो यथाप्रावृषि निर्गतः ।
तथामायां विकुर्वाणौ राक्षसावभ्यधावताम् ॥ 11 ॥

---

9. (ப-ரை) **सदर्भ चमसस्रुक्का** - தர்ப்பைப்புல் சமஸமென்கிற பானபாத்திரம் ஸ்ருக்கையென்கிற ஹோம பாத்திரம் இவற்றோடு கூடியதும், **ससमित्कुसुमोच्चया** - ஸமித்தென்கிற சுள்ளிகள், புஷ்பங்கள் இவற்றின் குவியல்களை யுடையதாயும், **सर्त्विजा** - ரித்துவிக்குக்களோடு கூடியதுமான, **वेदिः** - மேடையானது, **विश्वामित्रेण** - விசுவாமித்திரரோடு, **सहिता** - சேர்ந்ததாக, **जज्वाल** - பிரகாசித்தது.

10. (ப-ரை) **असौ** - இந்த, **यज्ञः** - யாகமானது, **मन्त्रवच्च** - மந்திரப்பிரகாரமும், **यथान्यायं** - நியாயப்படிக்கும், **संप्रवर्तते** - நடைபெறுகின்றது, **आकाशेच** - ஆகாயத்திலும், **भयानकः** - பயங்கரமான, **महान्** - பெரிதான, **शब्दः** - த்வனியானது, **प्रादुरासीत्** - தோன்றிற்று. அதாவது கேட்கப்படலாயிற்று.

11. (ப-ரை) **गगनं** - ஆகாயத்தை, **आवार्य** - மறைத்துக்கொண்டு, **प्रावृषि** - வருஷா காலத்தில், அதாவது மாரிகாலத்தில், **निर्गतः** - வெளித்தோன்றியதான, **मेघः** - மேகமானது, **यथा** - எப்படிபோ, **तथा** - அப்படி, **मायां** - மாயையை, **विकुर्वाणौ** - அநேக விதமாகச் செய்கின்றவர்களான, **राक्षसौ** - அரக்கரிருவர், **अभ्यधावताम्** - ஓடிவந்தார்கள்.

துவிக்துக் கொண்டிருக்கையில் தர்ப்பை, மடக்கு, அகப்பை, ஸமித்து, புஷ்பம் முதலிய ஸாமக்ரிகள் நிறைந்துள்ள யக்ஞ வேதியானது விசுவாமித்திரர் மற்றுமுள்ள ரித்துவிக்குகளான மஹரிஷிகள் முதலானோர்களால் ஜாஜ்வல்யமானமாய் விளங்காநிற்க.

10. (க-ரை) இவ்வுத்தம வேள்வியானது மந்திரவத்தாயும், விதி முறைப்படியும் தொடங்கி நடைபெறலாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் ஆகாயத்தில் இடிமுழக்கம் போல பயங்கரமான ஒரு பேரொலி கேட்கப்படலாயிற்று.

11. (க-ரை) உடனே மாரிகாலத்தில் ஆகாயத்தை மறைத்துக்கொண்டு

मारीचश्च सुबाहुश्च तयोरनुचराश्च ये ।
आगम्य भीमसंकाशा रुधिरौघमवासृजन् ॥ 12 ॥

तां तेन रुधिरौघेण वेदीं वीक्ष्य समुक्षिताम् ।
सहसाभिद्रुतो रामस्तानपश्यत्ततो दिवि ॥ 13 ॥

तावापतन्तौ सहसा दृष्ट्वा राजीव लोचनः ।
लक्ष्मणं त्वभिसंप्रेक्ष्य रामो वचनमब्रवीत् ॥ 14 ॥

---

12. (ப-ரை) **मारीचः च** - மாரீசனும், **सुबाहुः च** - ஸுபாஹுவும், **तयोः** - அவர்களுக்கு, **ये** - எவர்கள், **अनुचराः** - ஸஹசாரிகளோ (ஆட்களோ), **च** - அவர்களும், **भीमसंकाशाः** - பயங்கரமான வுருவத்தையுடையவர்களாக, **आगम्य** - வந்து, **रुधिरौघं** - இரத்த வெள்ளத்தை, **अवासृजन्** - பொழிந்தார்கள்.

13-14. (ப-ரை) **तेन** - அந்த, **रुधिरौघेण** - இரத்தப் பெருக்கினாலே, **समुक्षिताम्** - ஸமீபப் பிரதேசத்தில் நனைக்கப்பட்டிருக்கின்றதான, **तां** - அந்த, **वेदीं** - மேடையை, **वीक्ष्य** - பார்த்து, **सहसा** - பரபரப்போடு, **अभिद्रुतः** - சுற்றி ஓடிவந்தவரான, **रामः** - இராமனானவர், **ततः** - பிறகு, **तान्** - அவர்களை (இராக்ஷஸர்களை), **दिवि** - ஆகாயத்தில், **अपश्यत्** - பார்த்தார். **राजीव लोचनः** - தாமரை மலர் போன்ற கண்

மேகங்கள் தோன்றுவது போல விசித்திரமான அநேக மாயையைப் பரப்பிக் கொண்டு அரக்கர்களிருவர் முன்றோன்றினார்கள்.

12. (க-ரை) பயங்கரமான உருவத்தை யுடையவர்களான அந்த மாரீச, ஸுபாஹுக்களும் அவர்களுடைய கையாட்களும் ஒன்றுகூடி இரத்த வருஷத்தை வாரி வேதியின் புறமாகப் பொழியலாயினர்.

13-14. (க-ரை) அப்படிச் சுற்றுமுற்றும் புனிதமான அந்த யக்ஞ வேதியானது ருதிரத்தால் நனைக்கப்பட்டுப் போனதைக் கண்ட இராமபத்திரன் பரபரப்புடனே அங்குமிங்குமாக சற்று நேரந் தேடிப்பார்த்து கடைசியாக ஆகாயத்தில் அவ்வரக்கர்க ளிருப்பதையும் பார்த்துவிட்டார். இப்படித் தமதிருப்பிடத்தை யிராகவன் கண்டு கொண்டுவிட்டதை யுணர்ந்தவர்களான அம்மாரீச ஸுபாஹுக்கள் இனி மறைந்திருப்பது சாத்தியமில்லை யென்று தெரிந்துகொண்டு எதிர்த்துப் போராட எண்ணமுள்ளவர்களாக இராமலக்ஷ்மணர்கள் நிற்கின்ற

पश्य लक्ष्मण दुर्वृत्तान्राक्षसान्पिशिताशनान् ।
मानवास्त्र समाधूताननिलेन यथा घनान् ॥ 15 ॥

* करिष्यामि न संदेहो नोत्सहे हन्तुमीदृशान् ।
इत्युक्त्वा वचनं रामश्चापे संधाय वेगवान् ॥ 16 ॥

मानवं परमोदारमस्त्रं परमभास्वरम् ।
चिक्षेप परमक्रुद्धो मारीचोरसि राघवः ॥ 17 ॥

கணையுடையவரான, **रामः** - இராமனுவர், **सहसा** - வேகமாக, **आपतन्तौ** - தன்னை யெதிர்த்து வருகின்றவர்களான, **तौ** - அவர்களை (மாரீசன் ஸுபாஹு என்கிற அரக்கர்களை), **दृष्ट्वा** - பார்த்து, **लक्ष्मणं तु** - இலக்ஷ்மணனை நோக்கியே, **अभिसंप्रेक्ष्य** - ஏறவிறங்கப் பார்த்துவிட்டு, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

15-17. (ப-ரை) **लक्ष्मण** - இலக்ஷ்மணனே! **पिशिताशनान्** - மாம்ஸபக்ஷிகளா யும், **दुर्वृत्तान्** - துர்நடத்தையுள்ளவர்களுமான, **राक्षसान्** - இராக்ஷஸர்களை, **अनिलेन** - பெருங்காற்றினாலே, **घनान् यथा** - மேகங்களைப்போல, **मानवास्त्र समाधूतान्** - மானவ மென்கிற அஸ்திரத்தினால் அலைத்துத் துரத்தப்பட்டவர்களாக, **करिष्यामि** - செய் கின்றேன், **पश्य** - பாரு, **न संदेहः** - ஸந்தேகமில்லை, **ईदृशान्** - இப்படிப்பட்டவர்களை, **हन्तुं** - கொல்லுவதற்கு, **न उत्सहे** - விரும்புகின்றேனில்லை, **इति** - என்று, **वचनं** - வார்த்தையை, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **वेगवान्** - வேகமுள்ளவரான, **रामः** - இராமனுவர், **चापे** - வில்லில், **परमोदारं** - மிக்க உதாரதையுள்ளதாயும், **परमभास्वरं**-

விடத்தை நோக்கிப் போயினார்கள். அதனின்று மேலான ஸ்ரீராமசந்திரனு வெனில் அப்படி யுத்த ஸன்னத்தராய் ஓடிவருகின்ற அவ்வரக்கர்களையும் பார்த் தார். ஒரு கணப்பொழுதில் அவர்களைத் தனது கணைக்கு இலக்காக்கவிடக் காத்திருக்கின்ற தன் பக்கத்தில் நிற்கின்ற தம்பியையும் கவனித்தார். உடனே அவ்வுத்தமன் இவ்வார்த்தை யொன்றைக் கூறலானுர்.

15-18. (க-ரை) தம்பி! அற்பங்களேயான இவ்வரக்கர் பதருகளைக் கொல் லுவதற்கு எனக்கு மனம் வரவில்லை. இதோ பார் புயற்காற்று மேகங்களைக்

* 16-வது ச்லோகம் அநேக கோசங்களிலில்லை.

स तेन परमास्त्रेण मानवेन समाहतः ।
संपूर्णं योजन शतं क्षिप्तः सागर संप्लवे ॥ 18 ॥

विचेतनं विघूर्णन्तं शीतेषु बलपीडितम् ।
निरस्तं दृश्य मारीचं रामो लक्ष्मणमब्रवीत् ॥ 19 ॥

மிகவும் பிரகாசிக்கின்றதாயு மிருக்கின்ற, **मानवं** - மானவமென்கிற, **अस्त्रं** - அஸ்திரத்தை, **संधाय** - தொடுத்து, **परमक्रुद्धः** - மிகுந்த கோபத்தை அடைந்தவராக, அல்லது, **परं अक्रुद्धः** - அதிகமாக கோபத்தை யடையாதவராக, **राघवः** - இராகவனுனவர், **मारीचोरसि** - மாரீசனுடைய மார்பில், **चिक्षेप** - எய்தார்.

18. (ப-ரை) **तेन** - அந்த, **मानवेन** - மானவ மெனப்படுகிற, **परमास्त्रेण** - மஹத்தான அஸ்திரத்தினுல், **समाहतः** - நன்ருய் அடிக்கப்பட்டவனுன, **सः** - அந்த மாரீசனுனவன், **सागर संप्लवे** - ஸமுத்திரத்தின் ஆழ்ந்த ஜலத்தில், **संपूर्णं** - முழுதான, **योजनशतं** - நூறு யோசனை தூரத்தில், **क्षिप्तः** - தள்ளப்பட்டான்.

19. (ப-ரை) **विचेतनं** - உணர்வற்றவனுயும், **विघूर्णन्तं** - சுழன்றுகொண்டிருப்பவனுயும், **शीतेषु बलपीडितम्** - மானவாஸ்திரத்தினுடைய வலிமையினுலே வருத்தப்பட்டவனுயும், **निरस्तं** - தூக்கி யெறியப்பட்டவனுயு மிருக்கின்ற, **मारीचं** - மாரீசனை, **दृश्य** - பார்த்து, **रामः** - இராமனுனவர், **लक्ष्मणं** - இலக்ஷ்மணனை, **अब्रवीत्** - சொன்னுர்.

கலைத்து ஓட்டிவிடுவது போல மாம்ஸாசனிகளான இவ்வயோக்கியர்களை ஒரு நொடிப்பொழுதில் மானவாஸ்திரத்தைப் பிரயோகித்துத் துறத்திவிடுகின்றேன், என்று சொல்லிவிட்டு ஸ்ரீராகவன் தனது மனம்போல உயிர்ப்பிச்சை யளிக்கும் உதாரகுணம் பொருந்தியதாய்ப் பிரகாசிக்கின்ற மானவாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்துச் சற்றுகோபமடைந்தவராக மாரீசனுடைய மார்பில் குறிவைத்தெய்துவிடவே, அவ்வுத்தமாஸ்திரமானது அவ்வரக்கனை யடித்துத் தூக்கி நூறு யோசனை தூரத்திற் கப்பால் ஸமுத்திர ஜலபூரத்தில் விழும்படியாக எறிந்தது.

19-20. (க-ரை) அப்படி பாணத்தினு லடிபட்டுச் சுரணையிழந்து ஆகாயத்திற் சுழன்றுகொண்டு செல்லுகின்ற மாரீசனைப் பார்த்துவிட்டு ஸ்ரீராமபத்திரன், இலக்ஷ்மணு! இம்மானவாஸ்திரம் இவனைக் கொல்லாமலே யெடுத்துச்

पश्य लक्ष्मण शीतेषु मानवं मनुसंहितम् ।
मोहयित्वा नयत्येनं न च प्राणैर्व्ययुज्यत ॥ 20 ॥

इमानपि वधिष्यामि निर्घृणान्दुष्टचारिणः ।
राक्षसान्पापकर्मस्थान्यज्ञघ्नान्रुधिराशनान् ॥ 21 ॥

संगृह्यास्त्रं ततो रामो दिव्यमाग्नेयमद्भुतं ।
सुबाहूरसि चिक्षेप स विद्धः प्रापतद्भुवि ॥ 22 ॥

20. (ப-ரை) **लक्ष्मण** - இலக்ஷ்மணா! **मनुसंहितम्** - மந்திரம் பொருந்தியுள்ள தான, **मानवं** - மானவாஸ்திரத்தை, **पश्य** - பாரு, **एनं** - இவனை, **मोहयित्वा** - மயக்கி, **नयति** - தூக்கிச் செல்லுகின்றது, **प्राणैः** - உயிர்களினால், **न व्ययुज्यत** - பிரிக்கப்பட்டானில்லை.

21. (ப-ரை) **निघृणान्** - இரக்கமற்றவர்களையும், **दुष्टचारिणः** - துர்நடத்தையுள்ளவர்களையும், **पापकर्मस्थान्** - பாபச் செயல்களில் நிலைகொண்டவர்களையும், **यज्ञघ्नान्** - யாகத்தை யழிப்பவர்களையும், **रुधिराशनान्** - மாம்ஸபக்ஷகர்களுமான, **इमान्** - இந்த, **राक्षसान्** - இராக்ஷஸர்களை, **वधिष्यामि अपि** - கொன்றுவிடுகிறேன்.

22. (ப-ரை) **ततः** - பிறகு, **रामः** - இராமனானவர், **दिव्यं** - திவ்வியமான, **आग्नेयं** - அக்கினி தேவதாகமான, **अस्त्रं** - அஸ்திரத்தை, **संगृह्य** - எடுத்து, **अद्भुतं** - ஆச்சரியப் படும்படி, **सुबाहूरसि** - ஸுபாஹுவினுடைய மார்பினில், **चिक्षेप** - போட்டார், **सः** - அவன், **विद्धः** - அடிக்கப்பட்டவனாக, **भुवि** - பூமியில், **प्रापतत्** - விழுந்தான்.

செல்லுகின்றது பாரு. இவன் ப்ராணனையும் இழக்கவில்லை; இவன் இறந் தானில்லை.

21-23. (க-ரை) இனி இங்குள்ள ராக்ஷஸர்களை நான் கொன்றே விடப் போகின்றேன். இவர்கள் சிறிதும் இரக்கமில்லாத பாபிகளாய்ப் பாபமான தொழிலையே தொழிலாகக்கொண்டு யாகத்தை யழித்து மாம்ஸத்தையும் தின்றுகொண்டு திரிகின்றனரன்றோ! என்று சொல்லிக்கொண்டே திவ்வியமான ஒரு ஆக்னேயாஸ்திரத்தை யெடுத்து ஆச்சரியப் படும்படி ஸுபாஹுவின் மார்பில் எய்து அவனை வீழ்த்திவிட்டு மற்றொரு வாயவ்யாஸ்திரத்தைக் கொண்டு மற்றுமுள்ள இராக்கதர்களை யெல்லாம் வென்று பரிசுத்தமான கீர்த்தியை யடைந்தவரான அக்

शेषान्वायव्यमादाय निजघान महायशाः ।
राघवः परमोदारो मुनीनां मुदमावहन् ॥ 23 ॥

सहत्वा राक्षसान्सर्वान् यज्ञघ्नान्रघुनन्दनः ।
ऋषिभिः पूजितस्तत्र यथेन्द्रो विजये पुरा ॥ 24 ॥

अथ यज्ञे समाप्ते तु विश्वामित्रो महामुनिः ।
निरीतिका दिशो दृष्ट्वा काकुत्स्थमिदमब्रवीत् ॥ 25 ॥

23. (ப-ரை) **महायशाः** - மஹத்தான கீர்த்தியை யுடையவராயும், **परमोदारः** - மிக்க உதார குணமுள்ளவராயுமிருக்கிற, **राघवः** - இராமனானவர், **मुनीनां** - ரிஷிகளுக்கு, **मुदं** - ஸந்தோஷத்தை, **आवहन्** - அளிக்கின்றவராக, **शेषान्** - மிகுந்திருந்த இராக்ஷஸர்களை, **वायव्यं** - வாயுதேவதாகமான அஸ்திரத்தை, **आदाय** - எடுத்துக் கொண்டு, **निजघान** - கொன்றார்.

24. (ப-ரை) **सः** - அந்த, **रघुनन्दनः** - இராமசந்திரன், **यज्ञघ्नान्** - யக்ஞத்தை யழிப்பவர்களான, **सर्वान्** - ஸமஸ்தர்களான, **राक्षसान्** - இராக்ஷஸர்களையும், **हत्वा** - கொன்றுவிட்டு, **पुरा** - முன்னாளில், **विजये** - அஸுரர்களை ஜயித்த ஸந்தர்ப்பத்தில், **इन्द्रः यथा** - தேவேந்திரன்போல், **ऋषिभिः** - மஹரிஷிகளாலே, **तत्र** - அந்த ஜய ஸந்தர்ப்பத்தில், **पूजितः** - பூஜிக்கப்பட்டார்.

25-26. (ப-ரை) **अथ** - பிறகு, **यज्ञे** - யாகமானது, **समाप्ते तु** - முடிவடைந்தவளவிலே, **महामुनि.** - மஹரிஷியான, **विश्वामित्रः** - விசுவாமித்திரரானவர், **निरीतिकाः** - உபத்திரவம் நீங்கியவைகளான, **दिशः** - திசைகளை, **दृष्ट्वा** - பார்த்துவிட்டு, **काकुत्स्थं** -

கருணை வள்ளல் மஹரிஷிகளுக்கெல்லாம் மட்டில்லாத ஸந்தோஷத்தை யளித்தருளினன்.

24. (க-ரை) இப்படி யக்ஞ சத்துருக்களான இராக்ஷஸர்களை இரகுநந்தனன் நிக்கிரஹித்தருளவே, முன் அஸுர விஜயகாலத்தில் தேவேந்திரனைப் பூஜிப்பது போல மஹரிஷிகளெல்லோரும் இவனை விசேஷித்துப் பூஜித்துப் போந்தார்கள்.

25-26. (க-ரை) பிறகு, தனது யக்ஞம் நிர்விக்கினமாய் நிறைவேறி மௌன விரதம் முடித்தவரான மஹரிஷி விசுவாமித்திரர் திசைகளெல்லாம் என்றுமில்லாதபடி களை நீங்கித் தெளிந்திருப்பதைக் கண்ணுற்று மனமுவந்தவராய் ஐயனே!

कृतार्थोऽस्मि महाबाहो कृतं गुरुवचस्त्वया ।
सिद्धाश्रममिदं सत्यं कृतं राम महायशः ॥ २६ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
त्रिंशः सर्गः ॥ 30 ॥

இராமனைப் பார்த்து, **इदं** - இதை, **अब्रवीत्** - சொன்னார், **महाबाहो** - நீண்ட புஜங்களையுடையவனே! **कृतार्थः** - கிருத கிருத்தியனாக, **अस्मि** - ஆகின்றேன், **त्वया** - உன்னால், **गुरुवचः** - பிதாவின் வாக்கியமானது, **कृतं** - அனுஷ்டிக்கப்பட்டது, **महायशः** - மஹத்தான யசஸையுடையவரான, **राम** - ஹே ராமனே! **इदं** - இது, **सत्यं** - உண்மையாக, **सिद्धाश्रमं** - ஸித்தாச்ரமமாக, **कृतं** - செய்யப்பட்டது.

இராமசந்திரா! அடியேன் கிருதார்த்தனாயினேன். நீண்ட கைகளுடையவனே! உமது தந்தையின் வாக்கை நிறைவேற்றி வைத்தீர். புண்ணிய கீர்த்தியே! இவ்விடத்தை உண்மையான ஸித்தாசிரமமென்கிற பெயருக்குப் பாத்திரமாகப் பண்ணியருளினீர் என்று பலபடியாகப் புகழ்ந்து கொண்டாடினார்.

एकत्रिंशः सर्गः ॥ 31 ॥

अथ तां रजनीं तत्र कृतार्थौ रामलक्ष्मणौ ।
ऊषतुर्मुदितौ वीरौ प्रहृष्टेनान्तरात्मना ॥ 1 ॥
प्रभातायां तु शर्वर्यां कृतपौर्वाह्णिकक्रियौ ।
विश्वामित्रमृषींश्चान्यान्सहितावभिजग्मतुः ॥ 2 ॥
अभिवाद्य मुनिश्रेष्ठं ज्वलन्तमिव पावकम् ।
ऊचतुर्मधुरोदारं वाक्यं मधुरभाषिणौ ॥ 3 ॥

1. (ப-ரை) **अथ** - பிறகு, **वीरौ** - சூரர்களாகவும், **कृतार्थौ** - (ஆச்ரமத்தின் பொருட்டு) செய்யப்பட்ட பிரயோஜனமுடையவரும், **मुदितौ** - ஸந்தோஷித்தவருமான, **रामलक्ष्मणौ** - இராம லக்ஷ்மணர்கள் இருவர்களும், **प्रहृष्टेन** - களிப்புற்ற, **अन्तरात्मना** - அந்தக்கரணத்தோடு கூடினவர்களாக, **तां** - அந்த, **रजनीं** - இரவில், **तत्र** - அந்த யாகசாலையில், **ऊषतुः**- இருந்தனர்.

2. (ப-ரை) **शर्वर्यां** - (இராம லக்ஷ்மணர்கள்) அந்த இரவு, **प्रभातायां**- விடிந்த அளவில், **कृतपौर्वाह्णिकक्रियौ** - செய்யப்பட்ட காலையில் செய்யவேண்டிய கர்மமுடையவர்களாயும், **सहितौ** - இருவர்களு மொன்று சேர்ந்தவர்களுமாக, **विश्वामित्रं** - அந்த விசுவாமித்திரரையும், **अन्यान्** - மற்றவர்களான, **ऋषीन्** - ரிஷிகளையும், (குறித்து) **अभिजग्मतुः** - சென்றனர்.

3. (ப-ரை) **पावकम् इव** - அக்னியைப்போல், **ज्वलन्तं** - ஜ்வலித்துக்கொண்

1. (க-ரை) இவ்விதமாக இராம லக்ஷ்மணர்கள், துஷ்ட நிக்ரஹமும், சிஷ்ட பரிபாலனமும் செய்து முடித்து, விசுவாமித்திர மஹரிஷியின் காரியத்தைப் பூர்த்தி செய்துவைத்த ஸந்தோஷ முடையவர்களாய், அன்றிரவு முழுவதும் அங்கேயே இருந்தனர்.

2. (க-ரை) மறுநாள் கடி மலர்க் கமலங்கள் மலர்வதுமுன்னே, இராமலக்ஷ்மணர்கள் எழுந்து, நித்ய கர்மானுஷ்டானங்களான காலைக்கடன்களை முறையே செய்து முடித்து, இருவர்களும் ஒன்று சேர்ந்து, விசுவாமித்திரர் முதலிய முனிவர்களிடம் சென்றனர்.

3-4. (க-ரை) அக்கினிபோல் அளவற்ற ஒளிபெற்று விளங்குகின்ற ஹோ

इमौ स्म मुनिशार्दूल किंकरौ समुपस्थितौ ।
आज्ञापय यथेष्टं वै शासनं करवाव किम् ॥ 4 ॥

एवमुक्तास्ततस्ताभ्यां सर्व एव महर्षयः ।
विश्वामित्रं पुरस्कृत्य रामं वचनमब्रुवन् ॥ 5 ॥

मैथिलस्य नरश्रेष्ठ जनकस्य भविष्यति ।
यज्ञः परमधर्मिष्ठस्तस्य यास्यामहे वयम् ॥ 6 ॥

யிருக்கிற, **मुनिश्रेष्ठं** - முனி சிரேஷ்டரை, **अभिवाद्य** - வணங்கி, **मधुरभाषिणौ** - கனிவுடன் பேசும், (இராம லக்ஷ்மணர்கள்), **मधुरोदारं** - கனிவும், கம்பீரமுமான, **वाक्यं**-வார்த்தையை, **ऊचतुः** - சொன்னார்கள்.

4. (ப-ரை) **मुनिशार्दूल** - ஹே முனி சிரேஷ்டரே! **किंकरौ** - வேலைக்காரர்களான, **इमौ** - இந்த (நாங்கள்), **समुपस्थितौ** - ஸமீபத்திலிருப்பவர்களாக, (ஆனோம்), **यथेष्टं** - (தங்கள்) இச்சையின்படி, **आज्ञापय** - நியமிக்கவும், **किं** - என்ன, **शासनं** - நியமனத்தை, **करवाव** - (நாங்கள்) செய்யவேண்டும்.

5. (ப-ரை) **महर्षयः** - மஹரிஷிகள், **सर्वएव** - எல்லோரும், **ताभ्यां** - அவர்களால், (இராம லக்ஷ்மணர்களால்), **उक्ताः**- சொல்லப்பட்டவர்களாய், **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **ततः** - பிறகு, **रामं** - இராமனை (க்குறித்து), **वचनं** - வார்த்தையை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

6. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே புருஷோத்தமனே! **मैथिलस्य** - மிதிலாநகரத்திற்

விசுவாமித்திர மஹரிஷியே! என்று நமஸ்கரித்து, தம்மிடத்தில் பக்தி பண்ணுபவருக்கு பகவான் யதேச்சா விநியோகார்ஹனாகையாலே, மிக பக்தியோடு, "தங்களுடைய தொண்டர்களிதோ வந்திருக்கின்றோம், திருவுள்ளப்படி நியமித்தருளவேண்டும், உடனே அதனைச் செய்யக் காத்திருக்கிறோம்" என்று இயற்கையாகவே மதுர பாஷிகளானதுபற்றி மதுரமாகவும், வெகு கம்பீரமாகவு மொழிந்தனர்.

5. (க-ரை) இராம லக்ஷ்மணர்கள் இவ்வாறு மொழிந்ததைக் கேட்ட அங்குள்ள மஹரிஷிகளனைவரும், விசுவாமித்திர மஹரிஷியை முன்னிட்டுக் கொண்டு இவ்வார்த்தைகளைச் சொன்னார்கள்.

6. (க-ரை) ஹே ராமா! மிதிலா தேசத்திற் கரசனான ஜனக மஹாரா

त्वं चैव नरशार्दूल सहास्माभिर्गमिष्यसि ।
अद्भुतं धनुरत्नं च तत्र तद्द्रष्टुमर्हसि ॥ 7 ॥

तद्धि पूर्वं नरश्रेष्ठ दत्तं सदसि दैवतैः ।
अप्रमेयबलं घोरं मखे परमभास्वरम् ॥ 8 ॥

नास्य देवा न गन्धर्वा नासुरा न च राक्षसाः ।
कर्तुमारोपणं शक्ता न कथंचन मानुषाः ॥ 9 ॥

க்ஷத்ரியனான, **जनकस्य** - ஜனக மஹாராஜனுடைய, **परमधर्मिष्ठः** - வெகு அதிசயமான தர்மமுடையதான, **यज्ञः** - யாகமானது, **भविष्यति** - நடக்கப்போகின்றது, **तस्य** - அந்த யாகத்திற்கு, **वयम्** - நாங்கள், **यास्यामहे** - செல்லப்போகிறோம்.

7. (ப-ரை) **नरशार्दूल** - ஹே மனித சிரேஷ்டனே! **त्वं चैव** - நீரும், **अस्माभिः सह** - எங்களோடு கூட, **गमिष्यसि** - வந்தீராகில், **तत्र** - அங்கு, **अद्भुतं** - ஆச்சரியமான, **तत्** - அந்த, **धनुरत्नं च** - தனு சிரேஷ்டத்தையும், **द्रष्टुं** - பார்ப்பதற்கு, **अर्हसि** - உரியராவீர்.

8. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே புருஷ சிரேஷ்டனே! **अप्रमेयबलं** - அளவிற்கரிய பலமுடையதும், **घोरं** - பயங்கரமானதும், **परमभास्वरम्** - வெகு தேஜஸ்ஸுடையதுமான, **तत् पूर्वं** - அந்த தனுஸு முன்பு, **मखे** - யாகத்தில், **सदसि** - ஸபையில், **दैवतैः** - தேவர்களால், **दत्तंहि** - கொடுக்கப்பட்டதன்றோ.

9. (ப-ரை) **अस्य** - இந்த வில்லுடைய, **आरोपणं** - நாணேற்றுவதை, **कर्तुं** - செய்வதற்கு, **देवाः** - தேவர்கள், **शक्ताः न** - சக்தரல்லர், **गन्धर्वाः** - கந்தர்வர்களும்,

---

ஜன் பரம பவித்திரமான ஓர் வேள்வியைச் செய்யக் கோரியிருக்கின்றான். யாங்கள் எல்லோரும் ஆங்கு செல்லப்போகிறோம்.

7-8. (க-ரை) ஹே நரசிரேஷ்டனே! நீருமெங்களுடன் வருவீராகில் அங்கு மிகவும் வியக்கத்தக்கதோர் தனுஸு இருக்கின்றது, அதையும் நீர் பார்க்கலாம். முன்னொரு காலத்தில், வெகு தேஜஸ்ஸும் அதிக பலமுடையதுமானதும், அதிக பராக்கிரமமுடையதுமான அந்த தனுஸு ஜனக சக்கிரவர்த்தியின் முன்னோர்களுக்கு ஹே புருஷ சிரேஷ்டனே! தேவர்களால் கொடுக்கப்பட்டது

9. (க-ரை) அந்த தனுஸுனுடைய வலிவு அளவற்றது. கெட்டியான மத்யமுடையது. அதை நாணேற்றுவதற்கு தேவர்களாலும், கந்தர்வர்களா

धनुषस्तस्य वीर्यं तु जिज्ञासन्तो महीक्षितः ।
न शेकुरारोपयितुं राजपुत्रा महाबलाः ॥ 10 ॥
तद्धनुर्नरशार्दूल मैथिलस्य महात्मनः ।
तत्र द्रक्ष्यसि काकुत्स्थ यज्ञं चाद्भुतदर्शनम् ॥ 11 ॥
तद्धि यज्ञफलं तेन मैथिलेनोत्तमं धनुः ।
याचितं नरशार्दूल सुनाभं सर्वदैवतैः ॥ 12 ॥

न - சக்தரல்லர், **असुराः** - அஸுரர்களும், **न** - சக்தரல்லர், **राक्षसाः** - அரக்கர்களும், **न** - சக்தரல்லர், **मानुषाः** - மனிதர்கள், **न कथंचन** - அதிப்ரயாஸத்தாலும் சக்தியற்றவர்கள்தான்.

10. (ப-ரை) **महाबलाः** - பெரு பலமுடையவர்களும், **महीक्षितः** - பூபதிகளுமான, **राजपुत्राः** - ராஜபுத்திரர்கள், **तस्य** - அந்த, **धनुषः** - வில்லினுடைய, **वीर्यं** - வலிமையை, **जिज्ञासन्तः** - அறிய இச்சிக்கவராய், **आरोपयितुं** - நாண் பூட்ட, **न शेकुः** - சக்தரற்றவராயினர்.

11. (ப-ரை) **काकुत्स्थ** - ககுத்த வம்சத்திற் பிறந்த ஹே ராம! **नरशार्दूल** - ஹே ஆண் புலியே! **तत्र** - அம்மிதிலா நகரத்தில், **महात्मनः** - சிறந்த புத்தியுடையோனும், **मैथिलस्य** - மிதிலாதிபதியுமான, (ஜனக மஹாராஜனுடைய), **तत्** - அந்த, **धनुः** - தனுஸ்ஸையும், **अद्भुतदर्शनम्** - ஆச்சரியமான பார்வையுடைய, **यज्ञंच** - யாகத்தையும், **द्रक्ष्यसि** - பார்க்கக்கடவீர்.

12. (ப-ரை) **नरशार्दूल** - ஹே ஆண்புலியே! **मैथिलेन** - மிதிலைக்கரசனை,

---

னும், அஸுரர்களாலும், ராக்ஷஸர்களாலும் முடியாது. அப்படியிருக்க மனிதராலாகுமோ!

10. (க-ரை) பெரு பலமுடையவர்களான அநேகம் ராஜாதிராஜாக்கள் வந்து அவ்வில்லின் வலிமையை அளவிடக் கருதி வல்லமையற்று, வந்தவழியே திரும்பி ஓடிப்போயினர்.

11. (க-ரை) ககுத்த வம்சத்திற் பிறந்த ஹே ஆண்புலியே! ஹே ராமா! நீ வந்தாயாயின் மிதிலா நகரத்தில் அதிக பராக்கிரமமுடைய அந்த ஜனக மஹா ராஜனையும், மிக்க ஆச்சர்யமுமான அந்த யாகத்தையும் பார்க்கலாம்.

12. (க-ரை) ஹே மஹா வீரனே! முன்னொரு காலத்தில் மிதிலாநகரத்

आयागभूतं नृपतेस्तस्य वेश्मनि राघव ।
अर्चितं विविधैर्गन्धैर्धूपैश्चागरुगन्धिभिः ॥ 13 ॥

एवमुक्त्वा मुनिवरः प्रस्थानमकरोत्तदा ।
सर्षिसङ्घः सकाकुत्स्थ आमन्त्रय वनदेवताः ॥ 14 ॥

स्वस्ति वोस्तु गमिष्यामि सिद्धः सिद्धाश्रमादहम् ।
उत्तरे जाह्नवीतीरे हिमवन्तं शिलोच्चयम् ॥ 15 ॥

तेन - அந்த, (ஜனகரால்), **सुनाभं** - சிறந்த பிடிப்பையுடையதும், **उत्तमं** - உடர்ந்தது மான, **तत्** - அந்த, **धनुः** - தனுஸு, **यज्ञफलं** - யாக பலமாக, **सर्वदैवतैः** - ஸகல தேவர் களையும் பொருட்டு, **याचितं** - யாசிக்கப்பட்டது.

13. (ப-ரை) **राघव** - ஹே ராமா! (அந்த வில்லானது), **तस्य** - அந்த, **नृपतेः** - ஜனக மஹாராஜருடைய, **वेश्मनि** - இருப்பிடத்தில், **गन्धैः** - மணங்களாலும், **अगरु - गन्धिभिः** - அகிற்கட்டையின் பரிமளமுடைய, **धूपैः** - புகைகளாலும், **अर्चितं** - பூஜிக்க ப்பட்டதாக, **आयागभूतं**- தனுவிலுத்ஸவத்தில் முக்கியமாய் ஆராதிக்கப்பட்டதாய் இருக்கிறது.

14-15. (ப-ரை) **मुनिवरः** - முனி சிரேஷ்டரான, (விச்வாமித்திரர்), **एवं** - இவ்விதமாக, **उक्त्वा** - சொல்லி, **तदा** - அப்பொழுது, **सर्षिसङ्घः** - ரிஷிக்கூட்டத்தோ டும், **सकाकुत्स्थः** - ஸ்ரீ ராகவனோடும், **वः** - உங்களுக்கு, **स्वस्ति** - மங்களம், **अस्तु** - உண் டாகுக, **सिद्धाश्रमात्** - (இந்த) ஸித்தா சிரமத்திலிருந்து, **सिद्धः** - ஸித்தியடைந்த, **अहं** - நான், **उत्तरे** - வடக்கு திசையில், **जाह्नवीतीरे** - கங்கையின் கரையில், (இருக்கிற), **हिमवन्तं** - ஹிமவானென்கிற, **शिलोच्चयम्** - பர்வதத்தை, (க்குறித்து), **गमिष्यामि** -

---

திற்கரசனை ஜனகரால் செய்யப்பட்ட யாகத்தின் பலனாக அழகிய பிடிப்பையு டைய அவ்வில்லானது, ஸகல தேவர்களிடத்தினின்றும் யாசிக்கப்பட்டது.

13. (த-ரை) ஹே ராமா! அந்த தனுஸானது ஜனக மஹாராஜனுடைய அரண்மனையில் உயர்ந்த சந்தன புஷ்ப தூபாதிகளால் நன்கு பூஜிக்கப்பெற்று நல்லன்போடு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

14-15. (த-ரை) பிறகு, விச்வாமித்திர மஹரிஷியானவர், ரிஷிக்கூட்டத் தோடும், ஸ்ரீராம லக்ஷ்மணர்களோடும், வனதேவதைகளைப் பார்த்து, ஹே வன தேவதைகளே! இவ்வாசிரமத்தின் மஹிமையால் நான் ஸித்தியடைந்தேன், உங்

प्रदक्षिणं ततः कृत्वा सिद्धाश्रममनुत्तमम् ।
उत्तरां दिशमुद्दिश्य प्रस्थातुमुपचक्रमे ॥ 16 ॥
तं प्रयान्तं मुनिवरमन्वयादनुसारिणम् ।
शकटीशतमात्रं च प्रायेण ब्रह्मवादिनाम् ॥ 17 ॥
मृगपक्षिगणाश्चैव सिद्धाश्रमनिवासिनः ।
अनुजग्मुर्महात्मानं विश्वामित्रं महामुनिम् ॥ 18 ॥
निवर्तयामास ततः पक्षिसङ्घान्मृगानपि ॥ 19 ॥

போகின்றேன், (என்று), **वनदेवताः** - வனதேவதைகளை, **आमन्त्र्य** - ஆமந்திரணம் செய்து, **प्रस्थानं** - பிரயாணத்தை, **अकरोत्** - செய்தனர்.

16. (ப-ரை) **ततः** - பிறகு, (விச்வாமித்திர மஹர்ஷி), **अनुत्तमम्** - மிகச் சிறந்ததான, **सिद्धाश्रमं** - (அந்த) ஸித்தாச்ரமத்தை, **प्रदक्षिणं** - வலமாக வருவதை, **कृत्वा** - செய்து, **उत्तरां** - வடக்கான, **दिशं** - திசையை, **उद्दिश्य** - குறித்து, **प्रस्थातुं** - பிரயாணம் செய்வதற்கு, **उपचक्रमे** - ஆரம்பித்தனர்.

17. (ப-ரை) **प्रायेण** - பெரும்பாலும், **ब्रह्मवादिनाम्** - வேதமோதுபவர்களுடைய, **शकटीशतमात्रं** - வண்டிகள் நூறும், **अनुसारिणं च** - அனுஸரித்து வருவதும், **प्रयान्तं** - செல்லானிருக்கின்றவரும், **मुनिवरं** - முனி சிரேஷ்டருமான, **तं** - அந்த, (விச்வாமித்திரரை), **अन्वयात्** - பின் சென்றன.

18-19. (ப-ரை) **महात्मानं** - சிறந்த ஆத்மஸ்வரூபமுடையவரும், **महामुनिम्** - சிறந்த முனிவருமான, **तं** - அந்த, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, **सिद्धाश्रमनिवासिनः** -

கட்கும் மங்களமுண்டாகுக, "வடதிசையில் கங்கைக் கரையிலுள்ள ஹிமய பர்வதத்தைக் குறித்து, யான் செல்லப்போகின்றேன்" என்றனர்.

16. (க-ரை) பிறகு, விச்வாமித்திரர் மிகச்சிறந்ததான அந்த ஸித்தாச்ரமத்தை பிரதக்ஷிணம் செய்து வடக்கு திசையைக் குறித்து பிரயாணம் புறப்பட்டார்.

17-19. (க-ரை) இவ்வாறு புறப்பட்ட அவ்விச்வாமித்திரருடன், நூறு வண்டிகளின்மேல் அக்னிஹோத்திர முதலான யாகப்பொருள்களை வைத்துக் கொண்டு பிரம்மக்ஞானிகளான ரிஷிகளும் பிரயாணமாக, அங்கிருக்கும் மிருகங்

ते गत्वा दूरमध्वानं लम्बमाने दिवाकरे ।
वासं चक्रुर्मुनिगणाः शोणाकूले समाहिताः ॥ 20 ॥
तेऽस्तं गते दिनकरे स्नात्वा हुतहुताशनाः ।
विश्वामित्रं पुरस्कृत्य निषेदुरमितौजसः ॥ 21 ॥

லித்தாசிரமத்தில் வாஸம் செய்கின்ற, **मृगपक्षिगणाश्चैव** - மிருகம், பக்ஷி இவைகளின் கூட்டங்களும், **अनुजग्मुः** - பின் தொடர்ந்தன, **ततः** - பிறகு, (விசுவாமித்திரர்), **पक्षिसङ्घान्** - பக்ஷிக்கூட்டங்களையும், **मृगानपि** - மிருகங்களையும், **निवर्तयामास** - திருப்பி வைத்தார்.

20. (ப-ரை) **ते** - அந்த, **मुनिगणाः** - ரிஷிக்கூட்டங்கள், **दूरं** - தொலைவான, **अध्वानं** - வழியை, **गत्वा** - சென்று, **दिवाकरे** - சூரியன், **लम्बमाने** - சாயாநின்றவளவில், **शोणाकूले** - கங்கையின் கரையில், **समाहिताः** - ஒன்று சேர்ந்தவர்களாய், **वासं** - வஸிப்பதை, **चक्रुः** - செய்தனர்.

21. (ப-ரை) **अमितौजसः** - அளவற்ற தேஜஸ்ஸையுடைய, **ते** - அம்மஹரிஷிகள், **दिनकरे** - சூரியன், **अस्तं गते** - அஸ்தமனத்தை அடைகையில், **स्नात्वा** - ஸ்நானம் செய்து, **हुतहुताशनाः** - ஹோமம் செய்யப்பட்ட அக்நிஹோத்திர முடையவர்களாய் **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **पुरस्कृत्य** - முன்னிட்டுக்கொண்டு, **निषेदुः** - உட்கார்ந்

கள், பக்ஷிகள் எல்லாம் அஹோ! இவர்களெல்லோரும் போய்விடுகின்றனர்களே, இவர்களை யகன்று ஸஹிக்கமுடியாது என்று அவைகளும் பின்றொடர்ந்தன, இப்படி தம் பின்னோடு வரும் பக்ஷிகளையும் மிருகங்களையும், பார்த்து விசுவாமித்திரர் ஸமாதானஞ்செய்து திரும்பிப்போகும்படி செய்தனர்.

20. (க-ரை) பிறகு அம்முனிவர்களெல்லோரும் நெடுந்தூரம் வழி நடந்து சோணமென்கிற நதிக்கரை சென்று சூரியன் அஸ்தமனத்தையடையும் ஸமயமாகையால், எல்லோரும் அவ்விடத்திலேயே வஸிக்கலானார்.

21. (க-ரை) சூரியன் அஸ்தமனத்தை யடைந்தவளவில், மஹா தேஜஸ்ஸையுடையவர்களான அம்முனிவர்களெல்லோரும் நீராடி மாலைப்பொழுதில் செய்யவேண்டிய ஜபதபங்களான நித்திய கர்மாநுஷ்டானங்களைச் செய்து முடித்து எல்லோரும் ஒன்று சேர, விசுவாமித்திரருடன் வீற்றிருந்தனர்.

रामो हि सहसौमित्रिर्मुनींस्तानभिपूज्य च ।
अग्रतो निषसादाथ विश्वामित्रस्य धीमतः ॥ 22 ॥
अथ रामो महातेजा विश्वामित्रं महामुनिम् ।
पप्रच्छ नरशार्दूलः कौतूहलसमन्वितः ॥ 23 ॥
भगवन्कोन्वयं देशः समृद्धवनशोभितः ।
श्रोतुमिच्छामि भद्रं ते वक्तुमर्हसि तत्त्वतः ॥ 24 ॥

22. (ப-ரை) **रामो हि** - ஸ்ரீராமரானவர், **सौमित्रिः सह** - லக்ஷ்மணனோடு கூட, **तान्** - அந்த, **मुनीन्** - மஹரிஷிகளை. **अभिपूज्य च** - பூஜித்துவிட்டு. **अथ** - பிறகு, **धीमतः** - மஹாதீமானான, **विश्वामित्रस्य** - விச்வாமித்திரருடைய, **अग्रतः** - முன்னிலையில், **निषसाद** - உட்கார்ந்தனர்.

23. (ப-ரை) **अथ** - பிறகு, **नरशार्दूलः** - மனிதர்களில் சிறந்தவரும், **महातेजाः** - அளவற்ற பிரபாவமுடையவருமான, **रामः** - ஸ்ரீராமன். **महामुनिम्** - மஹரிஷியான, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, **कौतूहलसमन्वितः** - மிகுந்த ஆச்சர்யத்துடன் கூடினவராய்க் கொண்டு, **पप्रच्छ** - (பின்வருமாறு) கேட்டனர்.

24. (ப-ரை) **भगवन्** - ஓ பகவானே! **समृद्धवनशोभितः** - செழித்த வனங்களால் மிகவும் அழகான, **अयं** - இந்த, **देशः** - பிரதேசமானது, **कोनु** - எந்த தேசம்? (என்பதை). **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छामि** - விரும்புகின்றேன், **तत्त्वतः** - உண்மையாய், **वक्तुं** - சொல்லுவதற்கு, **अर्हसि** - (நீர்) தகுந்தவராகின்றீர். **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக.

---

22. (க-ரை) மஹா ஸௌந்தர்ய மூர்த்தியான ஸ்ரீராமன், தம்பியான லக்ஷ்மணனுடன், அந்த ரிஷிகளெல்லோரையும் பூஜித்து நமஸ்கரித்தபிறகு, விச்வாமித்திர மஹரிஷிக்கு முன்பாக உட்கார்ந்தனர்.

23-24. (க-ரை) புருஷசிரேஷ்டரும், அளவற்ற தேஜஸ்ஸையுடையவருமான ஸ்ரீரகுநந்தனன், மிகுந்த ஸந்தோஷத்துடன், ஹே மஹானுபாவரே! இந்த கங்கா நதிக்கரையில், அடர்ந்த சோலைகளால் மிகவும் அழகாய் விளங்கிக் கொண்டிருக்கிற இவ்வனம் யாருடையது? இதைப் பற்றி விவரமாய் உரைக்கவேணும். நான் அதைக் கேட்பதற்கு இச்சிக்கிறேன். உமக்கு மங்களமுண்டாகுக. என்று பிரார்த்தித்தனர்.

चोदितो रामवाक्येन कथयामास सुव्रतः ।
तस्य देशस्य निखिलमृषिमध्ये महातपाः ॥ 25 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये
बालकाण्डे एकत्रिंशः सर्गः ॥ 31 ॥

---

25. (ப-ரை) **महातपाः** - வெகுவான தவமுடையவரும், **सुव्रतः** - நல்ல விரதமுடையவருமான, (அந்த விசுவாமித்திரர்), **रामवाक्येन** - ஸ்ரீரகுநந்தனனுடைய வார்த்தையினால், **चोदितः** - ஏவப்பட்டவராய், **तस्य** - அந்த, **देशस्य** - பிரதேசத்தினுடைய, **निखिलं** - எல்லாவற்றையும், **ऋषिमध्ये** - ரிஷிகள் மத்தியில், **कथयामास** - சொல்லலானார்.

25. (க-ரை) ஸ்ரீராகவனால் இவ்வண்ணம் கேட்கப்பட்டு, மஹத்தான தவமுடையவரான விசுவாமித்திர மஹரிஷியானவர், அந்த பிரதேசத்தின் ஸகலமான விருத்தாந்தத்தையும், ரிஷி கணங்களின் மத்தியிலிருந்து சொல்லத்துடங்கினார்.

द्वात्रिंशः सर्गः ॥ 32 ॥

ब्रह्मयोनिर्महानासीत्कुशो नाम महातपाः ।
अक्लिष्टव्रतधर्मज्ञः सज्जनप्रतिपूजकः ॥ 1 ॥

स महात्मा कुलीनायां युक्तायां सुगुणोल्बणान् ।
वैदर्भ्यां जनयामास सदृशांश्चतुरः सुतान् ॥ 2 ॥
कुशाम्बं कुशनाभं च आधूर्तरजसं वसुम् ॥ 2½ ॥

1. (ப-ரை) **महातपाः** - நல்ல தவமுடையவரும், **महान्** - பெரியோரும், **सज्जनप्रतिपूजकः** - ஸாதுக்களைப் பூஜிப்பவரும், **अक्लिष्टव्रतधर्मज्ञः** - தடையற்ற விரதமுடைய, தர்மத்தை யுணர்ந்தவரும், **ब्रह्मयोनिः** - ப்ரும்மத்தைப் பிறப்பிடமாயுடையவருமான, **कुशो नाम** - குசனென்ற பெயர் பூண்டவர், **आसीत्** - இருந்தனர்.

2-2½. (ப-ரை) **महात्मा** - சிறந்த ஸ்வபாவமுடைய, **सः** - அந்த குசனென்பவர், **कुलीनायां** - நற்குலத்திற் பிறந்தவளும், **युक्तायां** - தனக்குத் தகுந்தவளுமான, **वैदर्भ्यां** - விதர்ப்ப தேசத்தரசன் மகளிடத்தில், **कुशाम्बं** - குசாம்பனென்றும், **कुशनाभं च** - குசநாபனென்றும், **आधूर्तरजसं** - ஆதூர்த்த ரஜஸனென்றும், **वसुम्** - வஸுவென்றும், **सुगुणोल्बणान्** - நற்குணத்தால் உயர்ந்தவர்களான, **चतुरः** - நான்கு, **सुतान्** - பிள்ளைகளை, **जनयामास** - உண்டுபண்ணினர்.

1. (க-ரை) விசுவாமித்திர மஹரிஷி, தன் வம்சத்தின் பெருமையை எடுத்துச் சொல்ல ஸமயம் வாய்ந்ததென்கிற வெகு ஸந்தோஷத்தோடு அந்த வனத்தின் பெருமையையும், அந்த பிரதேசத்தின் மஹிமையையும் ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களுக்கு எடுத்துச்சொல்ல ஆரம்பித்தனர். ஹே ராமசந்திரா! நற்றவமுடையவரும், ஸாதுக்களை கிரமம் தவறாமல் ஸதா பூஜித்து வருவதில் வெகு விருப்பமுள்ளவரும், ப்ரும்மாவின் மானஸ புத்திரரும், தம் ஸஹோதரர்களுக்குள் உயர்ந்தவருமான குசனென்பவர் இருந்தார்.

2-2½. (கரை) மிகவும் சிறந்த ஸ்வபாவமுடைய அந்த குசனென்பவர், குலம், ஆசாரம், வித்தை, விநயம் முதலானவைகளில் தமக் கிசைந்தவளான, வைதர்ப்பீ என்கிற மனைவியினிடத்தில், குசாம்ப, குசநாப, ஆதூர்த்தரஜஸ் வஸு என்று சொல்லுகிற நான்கு ஸத் புத்திரர்களை உண்டுபண்ணினர்.

दीप्तियुक्तान्महोत्साहान्क्षत्रधर्मचिकीर्षया ।
तानुवाच कुशः पुत्रान्धर्मिष्ठान्सत्यवादिनः ॥ 3½ ॥

क्रियतां पालनं पुत्रा धर्मं प्राप्स्यथ पुष्कलम् ।
कुशस्य वचनं श्रुत्वा चत्वारो लोकसंमताः ॥ 4½ ॥
निवेशं चक्रिरे सर्वे पुराणां नृवरास्तदा ॥ 5 ॥

कुशाम्बस्तु महातेजाः कौशाम्बीमकरोत्पुरीम् ।
कुशनाभस्तु धर्मात्मा पुरं चक्रे महोदयम् ॥ 6 ॥

3½. (ப-ரை) **कुशः** - குசரானவர், **क्षत्रधर्मचिकीर्षया** - இராஜ தர்மத்தைச்செய்யக்கோறினவராய், **दीप्तियुक्तान्** - தேஜஸ்ஸோடு கூடினவர்களும், **महोत्साहान्** - வெகு உத்ஸாஹமுடையவர்களும், **सत्यवादिनः** -ஸத்தியத்தையே பேசுபவர்களும், **धर्मिष्ठान्**- தார்மிகர்களுமான, **तान्** - அந்த, **पुत्रान्** - புத்திரர்களை (க்குறித்து), **उवाच** - சொன்ஞர்.

4½-5. (ப-ரை) **पुत्राः** - ஹே புத்திரர்களே! **पालनं** - ஜனங்களின் ரக்ஷணை, **धर्मं** - தர்மத்தை, **प्राप्स्यथ** - அடையக் கடவீர்கள், **नृवराः** - நர சிரேஷ்டரும், **लोक-संमताः** - உலகத்திற்கிஷ்டரும், **चत्वारः** - நால்வருமான, **सर्वे** - (அந்த) எல்லோரும், **कुशस्य** - குசருடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டமாத்திரத்திலேயே, **तदा** - அப்பொழுது, **पुराणां** - பட்டணத்தினுடைய, **निवेशं** - ஏற்பாட்டை, **चक्रिरे** - செய்தனர்.

6-7. (ப-ரை) **महातेजाः** - வெகு தேஜஸ்ஸுடைய, **कुशाम्बस्तु** - குசாம்பரோவெனில், **कौशाम्बीं** - கௌசாம்பீ யென்கிற, **पुरीम्** - பட்டணத்தை, **अकरोत्** - செய்

3½. (க-ரை) மஹாப்ராக்ஞரான குசன், தம்முடைய நான்கு புத்திரர்களுடைய புஜபல பராக்கிரமம், வீரியம், தேஜஸ்ஸு இவைகளைக்கண்டு அவர்களிடம் பின்வருமாறு சொன்ஞர்.

4½-5. (க-ரை) ஹே அருமைப் புத்திரர்களே! நீங்களெல்லோரும் ஸத்தியம் தவறுமலும், முறைமை குறையாமலும், உலகங்களை ரக்ஷிக்கக்கடவீர்கள். இப்படிச் செய்வீர்களாகில் நீங்கள் சிறந்த தர்மத்தை அடைவீர்கள் என்றனர், இவ்வார்த்தைகளைக் கேட்ட அப்புதல்வர்களும் நகரங்களை ஏற்பாடு செய்தனர்.

6-7. (க-ரை) மஹாப்ரபாவமுள்ள அந்த குசாம்பரென்பவர் கௌசாம்பீயென்கிற பட்டணத்தையும், மிக தர்மிஷ்டரான குசநாபர் மஹோதயமென்கிற

आधूर्तरजसो राम धर्मारण्यं महीपतिः ।
चक्रे पुरवरं राजा वसुश्चक्रे गिरिव्रजम् ॥ 7 ॥

एषा वसुमती राम वसोस्तस्य महात्मनः ।
एते शैलवराः पञ्च प्रकाशन्ते समन्ततः ॥ 8 ॥

सुमागधी नदी रम्या मगधान्विश्रुता ययौ ।
पञ्चानां शैलमुख्यानां मध्ये मालेव शोभते ॥ 9 ॥

தனர். **धर्मात्मा** - தர்மத்தை தம் ஸ்வபாவமாயுடைய, **कुशनाभस्तु** - குசநாபனோ வெனில், **महोदयम्** - மஹோதயமென்கிற, **पुरं** - பட்டணத்தை, **चक्रे** - செய்தனர், **राम** - ஹே ராம! **आधूर्तरजसः** - ஆதூர்த்தரஜஸ் என்கிற, **महीपतिः** - பூபதியானவர், **धर्मारण्यं** - தர்மாரண்யமென்கிற (பட்டணத்தை), **चक्रे**- செய்தார். **वसुः** - வஸு வென்கிற, **राजा** - அரசன், **गिरिव्रजम्** - கிரிவ்ரஜமென்கிற, **पुरवरं** - பட்டண சிரேஷ்டத்தையும், **चक्रे** - செய்தனர்.

8. (ப-ரை) **राम** - ஹே ராமசந்திர! **एषा** - இந்த, **वसुमती** - பூமி, **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **तस्य** - அந்த, **वसोः** - வஸுவினுடையது. **एते** - இந்த, **शैलवराः** - பர்வத சிரேஷ்டமானது, **पञ्च** - ஐந்தும், **समन्ततः** - (அப்பூமிக்கு) நாற்புறத்திலும், **प्रकाशन्ते** - பிரகாசிக்கிறது.

9. (ப-ரை) **रम्या** - ரம்யமாயும், **विश्रुता** - பிரஸித்தியானதும், **सुमागधी** - சுபகரமான மகத தேசத்திலிருந்துண்டானதுமான, **नदी** - நதி, **मगधान्** - மகத தேசத்தை, **आययौ** - அடைந்தது, **पञ्चानां** - ஐந்துகளான, **शैलमुख्यानां** - பர்வத சிரேஷ்டங்களுடைய, **मध्ये** - நடுவில், **मालेव** - புஷ்பமாலைபோல், **शोभते** - விளங்குகின்றது.

பட்டணத்தையும், ஆதூர்த்தரஜஸ் என்பவர் தர்மாரண்ய மென்கிற பட்டணத்தையும், வஸுவென்பவர் கிரிவ்ரஜ மென்கிற பட்டணத்தையும், பிதாவின் வாக்கியத்திற்கிணங்க செய்துகொண்டனர்.

8. (க-ரை) ஹே ராம! இந்த பூமியானது சிறந்த ஸ்வபாவமுடைய அந்த வஸுவினுடையது. இதோ ஐந்து மலைகளும் அத்தேசத்தின் நாற்புறங்களிலும் பிரகாசிக்கின்றன.

9. (க-ரை) மனோஹரமானதும், கீர்த்தி வாய்ந்ததுமான மகத தேசத்திலிருந்துண்டான சோணநதி, மகத தேசத்தை அடைந்து, மலைகளின் நடுவில் புஷ்பமாலை போல் விளங்குகின்றது.

सैषा हि मागधी राम वसोस्तस्य महात्मनः ।
पूर्वाभिचरिता राम सुक्षेत्रा सस्यमालिनी ॥ 10 ॥

कुशनाभस्तु राजर्षिः कन्याशतमनुत्तमम् ।
जनयामास धर्मात्मा घृताच्यां रघुनन्दन ॥ 11 ॥

तास्तु यौवनशालिन्यो रूपवत्यः स्वलङ्कृताः ।
उद्यानभूमिमागम्य प्रावृषीव शतह्रदाः ॥ 12 ॥

10. (ப-ரை) **राम** - ஹே ராமா! **सैषा**- அந்த இந்த, **मागधी** - மகததேசத்திலிருந்துண்டான (சோணநதி), **महात्मनः** - சிறந்த புத்தியுடைய, **तस्य** - அந்த, **वसोः**- வஸுவினுடையது, **राम** - ஹே ராகவா! **पूर्वाभिचरिता** - கிழக்குத்திசையினின்று மேற்குத்திசையைக் குறித்துச் செல்லுகின்றது(அந்நதி), **सुक्षेत्रा** - நல்ல க்ஷேத்திரமுடையதாகவும், **सस्यमालिनी** - பயிர்களால் விளங்குகிறதுமாக ஆகின்றது.

11. (ப-ரை) **रघुनन्दन** - ரகுகுலத்திற்கு ஆனந்தகரனான ஹே ராகவா! **धर्मात्मा** - தர்மத்தையே சரீரமாயுடைய, **कुशनाभस्तु** - குசநாபரென்கிற, **राजर्षिः** - ராஜரிஷியானவர், **घृताच्यां** - கிருதாசி யென்பவளிடத்தில், **अनुत्तमम्** - சிறந்ததான, **कन्याशतं** - நூறு கன்னிகைகளை, **जनयामास** - உண்டுபண்ணினார்.

12-13. (ப-ரை) **ताः** - அந்த, (கன்னிகைகளனைவரும்), **यौवनशालिन्यः** - யௌவனத்தால் விளங்கினவர்களாயும், **रूपवत्यः** - ரூபமுடையவர்களாயும், **स्वलङ्कृताः** - நன்கலங்கரிக்கப் பட்டவர்களாயும், **प्रावृषी** - வருஷா காலங்களில், **शतह्रदाः इव** - மின்

10. (க-ரை) ஹே ராமா! மகத தேசத்திலிருந்துண்டான, இந்த (மாகதீ) நதி அந்த வஸுவினுடையது. இவ்வாறு கிழக்குத்திசையிலிருந்து மேற்குத் திசையைக் குறித்துப் பெருகிப் பாய்ந்தோடுவதால் அப்பூமியே நல்ல க்ஷேத்திரமாகவுமிருப்பதோடு அம்மாகதீ நதிக்கரை யிரண்டிலும் செழிந்த நற்பயிர்ச் சோலைகள் சோபிக்கின்றன.

11. (க-ரை) ஹே ராகவா! குசருடைய குமாரரான குசநாபர், கிருதாசி யென்னும் தம் பத்தினியிடத்தில் நூறு கன்னிகைகளைப் பெற்றார்.

12-13. (க-ரை) பிறகு, அந்த குசநாபருடைய பெண்களனைவரும் முறையே வளர்ந்து தக்க பருவம் வாய்ந்து, இதற்குமே லெங்குமில்லை என்னும்படியான ரூப லாவண்யமுடையவர்களாய் ஆபரணம் பூண்டு, எல்லோரு மொன்றாகூடி சிங்

84, R. H. ... MADRAS-4

गायन्त्यो नृत्यमानाश्च वादयन्त्यश्च सर्वशः ।
आमोदं परमं जग्मुर्वराभरणभूषिताः ॥ 13 ॥
अथ ताश्चारुसर्वाङ्ग्यो रूपेणाप्रतिमा भुवि ।
उद्यानभूमिमागम्य तारा इव घनान्तरे ॥ 14 ॥
ताः सर्वगुणसंपन्ना रूपयौवनसंयुताः ।
दृष्ट्वा सर्वात्मको वायुरिदं वचनमब्रवीत् ॥ 15 ॥

னல்கள் போல, **उद्यानभूमिं** - சிங்கார வனத்தை, **आगम्य** - அடைந்து. **वराभरणभूषिताः**- சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராய், **गायन्त्यः** - பாடிக்கொண்டும், **नृत्यमानाश्च** - ஆடிக்கொண்டும், **वादयन्त्यश्च** - (வாத்யம்) வாசித்துக்கொண்டும், **सर्वशः**- எல்லோரும், **परमं** - சிறந்த, **आमोदं** - சந்தோஷத்தை, **जग्मुः** - அடைந்தனர்.

14. (ப-ரை) **अथ** - பிறகு, **चारुसर्वाङ्ग्यः** - அழகான ஸகல அவயவங்களையுடையவர்களும், **रूपेण** - ரூபத்தினால், **भुवि** - பூமியில், **अप्रतिमाः** - நிகரற்றவர்களுமான, **ताः** - அந்த (பெண்கள்). **उद्यानभूमिं** - உத்யான வனத்தை, **आगम्य** - அடைந்து, **घनान्तरे** - மேகங்களினிடையில் (விளங்கும்). **तारा इव** - நக்ஷத்திரம் போல, (பிரகாசித்தனர்).

15. (ப-ரை) **सर्वगुणसंपन्नाः** - ஸகல குணங்களோடு கூடியவர்களும், **रूपयौवनसंयुताः** - அழகு யௌவனத்தோடு கூடியவர்களுமான, **ताः** - அப்பெண்களை, **सर्वात्मकः** - ஸகலத்துக்கும் ஆத்மாவாயுள்ள, **वायुः** - வாயு (தேவன்). **दृष्ट्वा** - பார்த்து, **इदं** - இந்த, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

காரவனத்தில் வருஷா காலத்தில் ஒளி வீசுகின்ற மின்னற்கொடிகள் போன்று, தங்களுள் சிலர் பாட, சிலர் ஆட இவ்வண்ணம் எல்லோரும் பெருமகிழ்வுற்றிருந்தனர்.

14. (க-ரை) ஸகல அவயவங்களிலும் சிறப்பும் அழகும் வாய்ந்த அப் பெண்கள் நூறு பேர்களும், உத்யான வனத்தில் மேகங்களினிடையில் விளங்கும் நக்ஷத்திரம் போல் விழியைப் பறிக்கும் பொலிவோடு பிரகாசித்து விளங்கிக்கொண்டிருந்தனர்.

15. (க-ரை) இவ்வண்ணம் அழகனிறைந்திருக்க, அக்காலத்தில் பிராணிகளனைவர்க்கும் உயிர் நிலையாயுள்ள வாயு, அப்பெண்களைக் கண்டு மையல் கொண்டு மனமுருகிச் சொன்னார்.

சதுர்முகப் பிரம்மாவின் மானஸ புத்திரர்.

குசன் — பார்யை வைதர்பி,
(விதர்ப்ப தேசத்தரசன் மகள்)

- **குசாம்பர்** — கௌசாம்பி என்னும் நகரத்தை அரசு புரிந்து கொண்டிருந்தனர்.
- **குசநாபர் — கிருதாசி** — மஹோதயம் என்னும் நகரத்தை அரசு புரிந்து கொண்டிருந்தனர்.
- **ஆதூர்த்தரஜஸ்** — தர்மாரண்ணியம் என்னும நகரை அரசு புரிந்துகொண்டிருந்தார்.
- **வஸு** — கிரிவ்ரஜம் என்னும் நகரத்தை அரசு புரிந்து கொண்டிருந்தார்.

சூளி.
(என்னும் ரிஷி) யின் அனுக்ரஹத்தால் ஸோமதை என்னும் கந்தர்வ ஸ்திரீக்குப் பிறந்த

குசநாபர் — கிருதாசி:

- **ப்ரும்மதத்தர்.** — நூறு பெண்கள்
  காம்பிலீ என்னும் பட்டணத்தை அரசு புரிந்துகொண்டிருந்தனர்.
- **காதி**

காதி:

- **ருசிகர்.** — **ஸத்யவதி.**
  (என்னும் மஹாரிஷிக்கு பார்யையானவள்) (என்ற பெண்)
- **விசுவாமித்திரர்.**
  (கௌசிகர் என்றும் பெயர்)

[ஸத்யவதி என்பவள், தன்னுடைய பர்த்தாவுடன், ஸ்வர்க்கலோகம் சென்றமையால், பிறகு பூலோகத்தில், ஹிமயமலை தாழ்வரையில், "கௌசிகீ" என்று பிரசித்திபெற்ற நதியாகப் பெருகினள்.]

अहं वः कामये सर्वा भार्या मम भविष्यथ ।
मानुषस्त्यज्यतां भावो दीर्घमायुरवाप्स्यथ ॥ 16 ॥
चलं हि यौवनं नित्यं मानुषेषु विशेषतः ।
अक्षय्यं यौवनं प्राप्ता अमर्यश्च भविष्यथ ॥ 17 ॥
तस्य तद्वचनं श्रुत्वा वायोरक्लिष्टकर्मणः ।
अपहास्य ततो वाक्यं कन्याशतमथाब्रवीत् ॥ 18 ॥
अन्तश्चरसि भूतानां सर्वेषां त्वं सुरोत्तम ।
प्रभावज्ञाश्च ते सर्वाः किमस्मानवमन्यसे ॥ 19 ॥

---

16. (ப-ரை) **वः** - உங்களை, **अहं** - நான், **कामये** - இச்சிக்கின்றேன், **सर्वाः** - (நீங்கள்) எல்லோரும், **मम** - எனக்கு, **भार्याः** - பத்னிகளாக, **भविष्यथ** - ஆகுங்கள், **मानुषः** - மனிதசம்பந்தமான, **भावः** - ஆசை, **त्यज्यतां** - விடப்படட்டும், **दीर्घं** - அதிகமான **आयुः** - ஆயுளை, **अवाप्स्यथ** - அடைவீர்கள்.

17. (ப-ரை) **मानुषेषु** - மனிதர்களிடத்தில், **विशेषतः** - அதிகமாக, **यौवनं** - யௌவனமானது, **नित्यं** - எப்பொழுதும், **चलं हि** - அசைவுள்ளதல்லவோ! **अक्षय्यं** - நாசமற்ற, **यौवनं** - யௌவனத்தை, **प्राप्ताः** - அடைந்தவர்களாய், **अमर्याः** - [illegible]த்தன்மையை, **भविष्यथ** - அடைவீர்கள்.

18. (ப-ரை) **अक्लिष्टकर्मणः** - களைப்பில்லாமல் காரியத்தைச் செய்யும் வல்லமையுள்ள, **तस्य** - அந்த, **वायोः** - வாயுதேவனுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **ततः** - பிறகு, **कन्याशतं** - நூறு பெண்களும், **अपहास्य** - சிரித்து, **अथ** - பிறகு, **वाक्यं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்கள்.

19. (ப-ரை) **सुरोत्तम** - தேவர்களில் சிறந்தவரே! **त्वं** - நீ, **सर्वेषां** - எல்லா

16. (க-ரை) தேவ பெண்மணிகளே! நான் உங்களை ஆசையாய் விரும்புகின்றேன், நீங்களனைவரும் எனக்கு பத்னிகள் ஆகுங்கள். பிறக்கும்போதே இறக்கத்தக்க அற்பாயுளையுடைய மனிதரை மணம் புரிவதாலென்ன பிரயோஜனம், என்னோடு கூடினீர்களாகில் நெடுநாள் வாழ்ந்திருப்பீர்கள்.

17. (க-ரை) இளமைத்தப் பருவத்துக்கேற்ற யௌவனம் மனிதரிடத்தில் நீடித்து நில்லாது. இவற்றையெல்லாம் உணர்ந்து அழியாத இளமையைப் பெற என்னை அடையுங்கள் என்று சொல்லினார்.

18. (க-ரை) அவ்வாயு தேவனின் இவ்வார்த்தைகளைக் கேட்டு அக்கன்னிகைகளனைவரும், நகைத்துப் பிறகு பரிஹாஸமாகச் சொல்லத் துவங்கினர்.

19. (க-ரை) தேவ வாயுதேவனே! நாங்கள் [illegible] இருக்கை நன்

कुशनाभसुताः सर्वाः समर्थास्त्वां सुरोत्तम ।
स्थानाच्च्यावयितुं देवं रक्षामस्तु तपो वयम् ॥ 20 ॥

माभूत्स कालो दुर्मेधः पितरं सत्यवादिनम्
नावमन्यस्व धर्मेण स्वयंवरमुपास्महे ॥ 21 ॥

पिता हि प्रभुरस्माकं दैवतं परमं हि नः ।
यस्य नो दास्यति पिता स नो भर्ता भवि ति ॥ 22 ॥

மான, **भूतानां** - பிராணிகளுடைய, **अन्तः** - உள்ளே, **चरसि** - ஸஞ்சரிக்கின்றீர், **सर्वाः** - (நாங்கள்) எல்லோர்களும், **ते** - உம்முடைய, **प्रभावज्ञाश्च** - பெருமையை அறிந்தவர்களாகவே, **स्मः** - இருக்கின்றோம், **अस्मान्** - எங்களை, **किं** - ஏன், **अवमन्यसे** - அவமானம் செய்கின்றீர்.

20. (ப-ரை) **सुरोत्तम** - ஹே தேவ சிரேஷ்டரே! **वयं** - நாங்கள், **सर्वाः** - எல்லோரும், **कुशनाभसुताः** - குசநாபருடைய பெண்கள், **देवं** - (உமக்குப் பிரபுவான) தேவேந்திரனையும், **त्वां** - உம்மையும், **स्थानात्** - (அதிகார) ஸ்தானத்திலிருந்து, **च्यावयितुं** - கீழே தள்ளுவதற்கு, **समर्थाः** - சக்தியுள்ளவர்கள், (ஆனால்), **तपः** - தவத்தை, **रक्षामः तु** - இரக்ஷிக்கின்றோம்.

21. (ப-ரை) **दुर्मेधः** - துஷ்ட புத்தியையுடைய (ஹே வாயுவே!) **सः** - அந்த, (எங்களுக்குப் பிதாவான குசநாபர்), **कालः** - (உனக்கு) மிருத்யுவாக, **माभूत्** - ஆகவேண்டாம், **सत्यवादिनम्** - ஸத்தியத்தையே பேசுகின்ற, (அப்படிப்பட்ட), **पितरं** - (எங்கள்) தந்தையை, **नावमन्यस्व** - அவமதியாதே, **धर्मेण** - தர்மத்தினால், **स्वयं** - நாங்களே, **वरं** - பதியை, **उपास्महे** - எதிர்பார்க்கின்றோம்.

22. (ப-ரை) **अस्माकं** - எங்களுக்கு, **प्रभुः** - நியமிக்கின்றவர், **पिता हि** - தந்

கறிவோம். எல்லாப் பிராணிகளிலும் உட்புகுந்து ஸஞ்சரிப்பவரென்பது தெரிந்துகொண்டுள்ளோம். மேலும் நீர் தேவ சிரேஷ்டராயிருந்து எங்களை ஏன் இப்படி அவமானம் செய்கின்றீர்.

20. (க-ரை) ஹே தேவ சிரேஷ்டரே! நாங்கள் குசநாபருடைய புத்திரிகள். உம்மையும், உமது பிரபுவான தேவேந்திரனையும் ஸ்வஸ்தானத்திலிருந்து குலையச்செய்ய, திறமையுடையவர்களே; ஆயினும் எங்கள் தந்தையின் கட்டளையின்றி யாங்களே ஒன்றுஞ் செய்யலாகாதன்றோ!

21-22. (க-ரை) துர்புத்தியையுடைய ஹே வாயுவே! எங்கள் தந்தையான அந்த குசநாபரால் உமக்குக் கேடு வரவேண்டாம், எங்கள் பிதா பார்த்து எவருக்குக் கொடுக்கின்றாரோ, அவரே எங்களுக்குத் தகுந்த பதியாகக் கடவர். யாங்கள் சொந்தமாக எங்களிஷ்டப்படி ஒருவரையும் வரிக்கமுடியாது. எங்களுக்குத் தந்தையே தெய்வம், அவரே மேலான குருவுமாவார்.

तासां तद्वचनं श्रुत्वा वायुः परमकोपनः ।
प्रविश्य सर्वगात्राणि बभञ्ज भगवान्प्रभुः ॥ 23 ॥
ताः कन्या वायुना भग्ना विविशुर्नृपतेर्गृहम् ।
प्रापतन्भुवि सम्भ्रान्ताः सलज्जाः साश्रुलोचनाः ॥ 24 ॥
स च ता दयिता दीनाः कन्याः परमशोभनाः ।
दृष्ट्वा भग्नास्तदा राजा संभ्रान्त इदमब्रवीत् ॥ 25 ॥

தையல்லவோ, सः - அந்த பிதாவே, (எங்களுக்கு), परमं - மேலான, दैवतं - தெய்வம், पिता - (அந்த) தந்தை, नः - எங்களை, यस्य - எவருக்கு, दास्यति - கொடுக்கின்றாரோ, सः - அவர், नः - எங்களுக்கு, भर्ता - பதியாக, भविष्यति - ஆவார்.

23. (ப-ரை) भगवान् - மகிமையுடையவனும், प्रभुः - ஸமர்த்தனுமான, वायुः - வாயு தேவன், तासां - அவர்களுடைய, तत् - அந்த, वचनं - வார்த்தையை, श्रुत्वा - கேட்டு, परमकोपनः - மிகு கோபமுடையவனாய், सर्वगात्राणि - ஸகல அவயவங்களையும், प्रविश्य - புகுந்து, बभञ्ज - முடக்கிவிட்டான்.

24. (ப-ரை) ताः - அந்த, कन्याः - பெண்கள், वायुना - வாயு தேவனால், भग्नाः - முடக்கப்பட்டவர்களாய், नृपतेः - அரசனுடைய, गृहम् - அரண்மனையை, विविशुः - அடைந்தனர், संभ्रान्ताः - (அவர்கள்) பரபரப்புடையவர்களாயும், सलज्जाः - வெட்கத்தோடு கூடினவர்களாயும், साश्रुलोचनाः - கண்ணீரோடு கூடின கண்களையுடையவர்களுமாக, भुवि - பூமியில், प्रापतन् - விழுந்தனர்.

25. (ப-ரை) तदा - அப்பொழுது, राजा - அரசனான, सः - அந்த குசநாபர், दयिताः - தனக்குப் பிரீதி பண்ணுபவர்களும், परमशोभनाः - மிகவும் அழகுள்ளவர்களாய் விளங்குகின்றவர்களும், भग्नाः - முடக்கப்பட்டவர்களும்,

---

23. (க-ரை) மகிமை பொருந்தியவனும், ஸமர்த்தனுமான அந்த வாயு தேவன், அப்பெண்கள் சொல்லிய அவ்வார்த்தைகளைக் கேட்டு, மிக்க கோபங் கொண்டு, அப்பெண்களின் சரீரத்தின் எல்லா அவயவங்களிலும் பிரவேசித்து, கரசரணாதி அவயவங்களை முறித்து முடக்கிவிட்டான்.

24. (க-ரை) பிறகு அக்கன்னிகைகளெல்லாரும், இவ்வண்ணம் துன்பமடைந்து, பயமும், வெட்கமுமுடையவர்களாய், கண்களில் நீர் ததும்பப் பெண்மைக் குறைந்து கொண்டு, அரண்மனை வந்து விழுந்தனர்.

25. (க-ரை) அப்பொழுது அரசனான குசநாபர் தனக்குப் பிரீதி பண்ணுபவர்களான தன் அருமைப் பெண்கள் இப்படி முடக்கப்பட்டு கீழ் விழுந்து அழுவதைப் பார்த்து பயந்து அதிக பரபரப்புடன் பின்வருமாறு கேட்கலானார்.

किमिदं कथ्यतां पुत्र्यः को धर्ममवमन्यते ।
कुब्जाः केन कृताः सर्वा वेष्टन्त्यो नाभिभाषथ ॥ 26 ॥
एवं राजा विनिश्वस्य समाधिं संदधे ततः ॥ 26½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
द्वात्रिंशः सर्गः ॥ 32 ॥

दीनाः - தைரிய மிழந்தவர்களுமான, **ताः** - அந்த, **कन्याः** - பெண்களை, **दृष्ट्वा** - பார்த்து, **संभ्रान्तः** - பறபறப்பு உடையவராய், **इदं** - இந்த (வார்த்தையை), **अब्रवीत्** - சொன்னான்.

26. (ப-ரை) **पुत्र्यः** - ஹே பெண்களே! **इदं** - இது, **किं** - என்ன, **कथ्यतां** - சொல்லுங்கள், **कः** - எவன், **धर्मं** - தர்மத்தை, **अवमन्यते** - அவமதித்தவன், **सर्वाः** - (நீங்கள்) எல்லோரும், **केन** - எவனால், **कुब्जाः** - முடவர்களாக, **कृताः** - செய்யப்பட்டீர்கள், **वेष्टन्त्यः** - சுழுண்டவர்களாக, **नाभिभाषथ** - பதில் சொல்லவில்லை.

26½. (ப-ரை) **एवं** - இவ்விதம், **राजा** - அரசன், **विनिश्वस्य** - (துக்கத்தினால்) பெருமூச்சு விட்டு, **ततः** - பிறகு, **समाधिं** - (என்ன சொல்லப் போகிறார்களோ வென்று அவர்கள் வார்த்தையை கேட்க) ஸமாதானத்தை, **संदधे** - அடைந்தான்.

26-26½. (க-ரை) ஹே அருமைப் பெண்மணிகளே! இதென்ன சொல்லுங்கள்; எவன் தர்மத்தை அழிக்க முயன்றனன்? உங்களை இப்படிக் கூன்படுத்தியவன் யாவன்? ஏன் இப்படி சுழுண்டவர்களாய்ப் பேசமுடியாமலிருக்கின்றீர்கள்? என்று கேட்டு பெருமூச்சு விட்டுப் பின்னால் அவர்கள் என்ன சொல்லப்போகின்றார்களென்பதைக் கேட்க அவலுடன் மௌனமாயிருந்தார்.

त्रयस्त्रिंशः सर्गः ॥ 33 ॥

तस्य तद्वचनं श्रुत्वा कुशनाभस्य धीमतः ।
शिरोभिश्चरणौ स्पृष्ट्वा कन्याशतमभाषत ॥ 1 ॥

वायुः सर्वात्मको राजन्प्रधर्षयितुमिच्छति ।
अशुभं मार्गमास्थाय न धर्मं प्रत्यवेक्षते ॥ 2 ॥

पितृमत्यः स्म भद्रं ते स्वच्छन्दे न वयं स्थिताः ।
पितरं नो वृणीष्व त्वं यदि नो दास्यते तव ॥ 3 ॥

1. (ப-ரை) **धीमतः** - புத்திமானான, **तस्य** - அந்த, **कुशनाभस्य** - குசநாபரு டைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **कन्याशतं** - நூறு பெண் களும், **शिरोभिः** - தலைகளால், **चरणौ** - பாதங்களை, **स्पृष्ट्वा** - தொட்டு, **अभाषत** - சொன் னார்கள்.

2. (ப-ரை) **राजन्** - ஹே அரசனே! **सर्वात्मकः** - ஸகலத்துக்கும் ஆத்மாவா யுடைய, **वायुः** - வாயு தேவன், **प्रधर्षयितुं** - அவமதிக்க, **इच्छति** - ஆசைப்படுகின் றான், **अशुभं** - சுபமற்ற, **मार्गं** - (பலவந்த ரூபமான) வழியை, **आस्थाय** - அடைந்து, **धर्मं** - தர்மத்தை, **न प्रत्यवेक्षते** - பார்க்கவில்லை.

3. (ப-ரை) **वयं** - நாங்கள், **पितृमत्यः** - தந்தையுடன் கூடியவர்களாக, **स्मः** - இருக்கின் றோம், **स्वच्छन्दे** - ஸ்வாதந்திரியத்தில், **न स्थिताः** - இருக்கின்றவர்களாக இருக்கின்றி லோம், **त्वं** - நீர், **पितरं** - (எங்கள்) பிதாவை, **वृणीष्व** - அடையும், **नः** - எங்களை, **ते** - உமக்கு, **दास्यते यदि** - கொடுக்கப்படுவோமாகில், **ते** - உமக்கு **भद्रं** - மங்களம், (உண்டாகுக).

1. (க-ரை) பிறகு, அந்த குசநாபருடைய நூறு பெண்களும், அவரு டைய வார்த்தையைக் கேட்டு, தங்கள் பிதாவின் திருவடிகளில் வெகு வணக்க மாய் பணிந்து இவ்வார்த்தையைச் சொல்லினார்கள்.

2. (கரை) எங்கள் தந்தையான ஹே அரசே! ஸகல பிராணிகளுக்கும் முன்னே புகும் வாயு தேவன் எங்களை பலாத்காரஞ் செய்ய நினைத்து தர்மத் தைச் சிறிதும் கவனியாமற் போனான்.

3. (க-ரை) நாங்கள் வாயு பகவானை நோக்கி, எங்களுக்குப் பிதா இருக் கின்றார், அவருடைய ஆக்ஞைக்கு மீறி நடக்க எங்களால் முடியாது. எங்கள்

तेन पापानुबन्धेन वचनं न प्रतीच्छता ।
एवं ब्रुवन्त्यः सर्वाः स्म वायुना निहता भृशम् ॥ 4 ॥
तासां तद्वचनं श्रुत्वा राजा परमधार्मिकः ।
प्रत्युवाच महातेजाः कन्याशतमनुत्तमम् ॥ 5 ॥
क्षान्तं क्षमावतां पुत्र्यः कर्तव्यं सुमहत्कृतम् ।
ऐकमत्यमुपागम्य कुलं चावेक्षितं मम ॥ 6 ॥

4. (ப-ரை) **एवं** - இப்படி, **ब्रुवन्त्यः** - சொல்லா நிற்கின்ற, **सर्वाः** - (யாங்கள்) எல்லோரும், **पापानुबन्धेन** - பாபத்தை யனுஸரித்தவ (னாகையாலே), **वचनं** - வார்த்தையை, **न प्रतीच्छता** - அங்கீகரிக்காம லிருக்கின்ற, **तेन** - அந்த, **वायुना** - வாயுதேவனால், **भृशम्** - மிகவும், **निहताः** - அடிக்கப்பட்டவர்களாக, **स्मः** - ஆகின்றோம்.

5. (ப-ரை) **महातेजाः** - மிகுந்த தேஜஸ்ஸை யுடையவரும், **परमधार्मिकः** - வெகு தர்மத்தை யுடையவருமான, **राजा** - அரசனான, (குசநாபர்), **तासां** - அக்கன்னிகைகளுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **अनुत्तमम्** - வெகு சிரேஷ்டமான, **कन्याशतं** - நூறு பெண்களை, (க்குறித்து), **प्रत्युवाच** - பதில் சொன்னார்.

6. (ப-ரை) **पुत्र्यः** - ஹே பெண்மணிகளே! **क्षमावतां** - பொறுமையுடையோ

பிதாவே எங்களை உமக்குக் கொடுப்பதானால் அப்பொழுதே மட்டும் நாங்கள் உமக்கு பார்யைகளாக ஆகுவோம். அதனால் நீர் எங்கள் தந்தையை அடைந்து அவரைக் கேளும். உமக்கு நாங்கள் முன்னாகுக, என்று கூறினோம்.

4. (க-ரை) இவ்வாறு நாங்களெல்லோரும் பதிலுரைத்ததைக் கேட்ட பாபானுஸாரியான அந்த வாயுதேவன் மிகக் கோபங்கொண்டு வழிகெடப் பாய்ந்து இப்படிச் செய்தனன்.

5. (க-ரை) பரமதார்மிகரும், மிகுந்த தேஜஸ்ஸையுடையவருமான, அந்த குசநாபர், தன்னைப்போலவே பொறுமைசாலிகளான, தமது பெண்களின் பொறுமையொருங்கிய வார்த்தைகளையும் அவர்கள் கோபங்கொள்ளாமல் திரும்பி வந்தவற்றையும் கேட்டு, பொறுமையில் ஒப்பற்ற தன் பெண்களைப்பார்த்துச் சொல்ல வாரம்பித்தார்.

6. (க-ரை) ஹே பெண் மணிகளே! நீங்களெல்லோரும் ஒன்று கூடி பொறுமையை வஹித்தமையால் நானும் ஈடேறினேன், நம் குலமும் விளங்கிற்று.

अलङ्कारो हि नारीणां क्षमा तु पुरुषस्य वा ॥ 6½ ॥

दुष्करं तद्धि वः क्षान्तं त्रिदशेषु विशेषतः ।
यादृशी वः क्षमा पुत्र्यः सर्वासामविशेषतः ॥ 7½ ॥

क्षमा दानं क्षमा सत्यं क्षमा यज्ञश्च पुत्रिकाः ।
क्षमा यशः क्षमा धर्मः क्षमया विष्ठितं जगत् ॥ 8½ ॥

ருக்கு, **कर्तव्यं** - செய்யத்தகுந்த, **क्षान्तं** - [illegible]. **कृतं** [illegible]. **सुमहत्** - மிகு பெரிய, ([illegible]). **एकमत्यं** - ([illegible]) [illegible]. **उपागम्य** - [illegible]ந்து, **मम** - என்னுடைய, **कुलं च** - [illegible]. **अवेक्षितं** - [illegible].

6½. (ப-ரை) **क्षमा तु** - பொறுமையோ, **नारीणां** - [illegible]. **पुरुषस्य वा** - புருஷர்களுக்காவது, **अलङ्कारो हि** - [illegible].

7½. (ப-ரை) (**यत्** - [illegible]). **क्षान्तं** [illegible]. **तत्** - [illegible]. **दुष्करं** செய்யத்தக்கதல்ல, **त्रिदशेषु** - ([illegible]) [illegible]. **विशेषतः** - [illegible], (**दुष्करं** - செய்யத்தக்கதன்று), **पुत्र्यः** - [illegible]! **वः** - [illegible], **सर्वासां** - எல்லோருக்கும், **अविशेषतः** - [illegible]. **यादृशी** - [illegible]. **क्षमा** - பொறுமை (உண்டாயிருக்கிறதோ), (**दुष्करं** - ([illegible]) [illegible].)

8½. (ப-ரை) **पुत्रिकाः** - [illegible]! **क्षमा दानं** - [illegible]. **क्षमा यज्ञश्च** - பொறுமை [illegible]. **क्षमा सत्यं** - [illegible] ஸத்தியம், **क्षमा यशः** - பொறுமையே [illegible]. **क्षमा धर्मः** - [illegible]. **जगत्** - பிரபஞ்சம், **क्षमया** - பொறுமையால், **विष्ठितं** - [illegible].

6½. (க-ரை) [illegible] பெரிய அலங்காரமன்றோ! [illegible] என்ன பிரயோஜனம்?

7½. (க-ரை) [illegible] லோக வாஸிகளுக்கும் [illegible]. மேலும் நீங்களெல்லோரும் [illegible] மிகவும் சிறந்தது.

8½. (க-ரை) [illegible] திலும், தா[illegible]திலும், [illegible] பொறுமையிலுண்டாகும். என் அருமைப் புத்திரிகளே! பொறுமை [illegible]

विसृज्य कन्याः काकुत्स्थ राजा त्रिदशविक्रमः ।
मन्त्रज्ञो मन्त्रयामास प्रदानं सह मन्त्रिभिः ॥ 9½ ॥
देशकालौ प्रदानस्य सदृशे प्रतिपादनम् ॥ 10 ॥
एतस्मिन्नेव काले तु चूली नाम महामुनिः ।
ऊर्ध्वरेताः शुभाचारो ब्राह्मं तप उपागमत् ॥ 11 ॥
तप्यन्तं तमृषिं तत्र गन्धर्वी पर्युपासते ।
सोमदा नाम भद्रं ते ऊर्मिलातनया तदा ॥ 12 ॥

9½-10. (ப-உரை) **काकुत्स्थ** - ஹே ராகவனே! **त्रिदशविक्रमः** - தேவதைபோன்ற பராக்கிரமமுடையவரும், **मन्त्रज्ञः** - ஆலோசனை அறிந்தவருமான, **राजा** - அரசன், **कन्याः** - கன்னிகைகளை, **विसृज्य** - விட்டு, **प्रदानं** - கன்னிகாதானத்தை, (க்குறித்து), **प्रदानस्य** - கன்னிகா தானத்திற்குரிய, **देशकालौ** - தேசத்தையும், காலத்தையும், **सदृशे** - தனக்கு நிகரான பாத்திரத்தில், **प्रतिपादनम्** - செய்வதை, (க்குறித்து), **मन्त्रिभिः सह** - மந்திரிகளோடு கூட, **मन्त्रयामास** - ஆலோசித்தனர்.

11. (ப-உரை) **एतस्मिन्नेव** - இந்த, **काले** - காலத்தில், **महामुनिः** - சிறந்த முனிவரும், **शुभाचारः** - மங்களகரமான ஆசாரமுடையவருமான, **चूली नाम** - சூலி என்று பெயருடையவர், **ब्राह्मं** - வைதிகமான, **तपः** - தபஸை, **उपागमत्** - அடைந்தார்.

12. (ப-உரை) **तत्र** - அங்கு, **तदा** - அப்பொழுது, **तप्यन्तं** - தவம் செய்து கொண்டிருக்கிற, **तं** - அந்த, **ऋषिं** - ரிஷியை, **ऊर्मिलातनया** - ஊர்மிளையின் மகளான,

இந்த பூமண்டல முழுமையும் நிறைந்திருக்கின்றது. பொறுமையை நீங்கள் கைக்கொண்டிருப்பதால் மேம்பட்டிருக்கக் கடவீர்கள்.

9½-10. (க-உரை) ஹே ராகவா! பிறகு அந்த குசநாபர், தன் பெண்களை அந்தப்புரத்திற் கனுப்பிவிட்டு, புத்தி, பராக்கிரமம் முதலியவைகளில் தனக்கு ஸமமான மந்திரிகளுடன், தன் புத்திரிகளுக்குத் தகுந்த மணாளர்களமையவேண்டுமென்று யோசனையைச் செய்துகொண்டிருந்தார்.

11. (க-உரை) அக்காலத்தில் சூலி என்று பெயர் பூண்ட ஓர் முனி சிரேஷ்டர், ஜிதேந்திரியராய், பிரும்மத்தியானத்துடன் தவம் புரிந்துகொண்டிருந்தனர்.

12. (க-உரை) அப்பொழுது, அம்முனிவர் தவஞ் செய்துகொண்டிருக்குங் காலத்தில், ஊர்மிளையின் மகளான ஸோமதை என்று பெயருள்ள கந்தர்வப்

सा च तं प्रणता भूत्वा शुश्रूषणपरायणा ।
उवास काले धर्मिष्ठा तस्यास्तुष्टोऽभवद्गुरुः ॥ 13 ॥

स च तां कालयोगेन प्रोवाच रघुनन्दन ।
परितुष्टोऽस्मि भद्रं ते किं करोमि तव प्रियम् ॥ 14 ॥

परितुष्टं मुनिं ज्ञात्वा गन्धर्वी मधुरस्वरा ।
उवाच परमप्रीता वाक्यज्ञा वाक्यकोविदम् ॥ 15 ॥

सोमदा नाम - ஸோமதை யென்ற பெயருடைய, **गन्धर्वी** - கந்தர்வ ஸ்திரீ, **पर्युपासते** - ஸேவித்திருந்தனள், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக.

13. (ப-ரை) **धर्मिष्ठा** - அதிக தார்மிகையான, **सा** - அந்த (ஸோமதை), **तं** - அந்த, (சூளி யென்ற ரிஷியை), **प्रणता** - வணங்கினவளாகவும், **शुश्रूषणपरायणा** - தொண்டு செய்வதையே முக்கியமாயுடையவளாகவும், **भूत्वा** - ஆகி, **उवास** - இருந்தனள், **काले** - (சிறிது) காலத்தில், **तस्याः** - ஸோமதைக்கு, **गुरुः** - ஆசாரியரான, (சூளீ யென்ற ரிஷி), **तुष्टः** - ஸந்தோஷித்தவராக, **अभवत्** - ஆனார்.

14. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **स च** - அந்த, (முனிவர்), **कालयोगेन** - காலஸம்பந்தத்தினால், **तां** - அந்த, (ஸோமதை யென்பவளைக்குறித்து), **अहं** - நான், **परितुष्टः** - ஸந்தோஷித்தவனாக, **अस्मि** - ஆகின்றேன், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **प्रियं** - (உனக்கு) இஷ்டம், **किं** - யாது? **करोमि** - (அதைச்) செய்கிறேன், (என்று), **प्रोवाच** - சொன்னார்.

15. (ப-ரை) **वाक्यज्ञा** - வார்த்தைகளை அறிந்த, **गन्धर्वी** - (அந்த) கந்தர்வ ஸ்திரீயானவள், **वाक्यकोविदम्** - வாக்கியத்தில் ஸமர்த்தரான, **मुनिं** - முனி மஹரிஷியை, **परितुष्टं** - ஸந்தோஷித்தவராக, **ज्ञात्वा** - அறிந்து, **परमप्रीता** - மிக்க ப்ரீதியுடையவளாய், **मधुरस्वरा** - இனிமையான ஸ்வரமுடையவளாய், **उवाच** - சொன்னாள்.

பெண் ஒருவள், அந்த மஹரிஷிக்குப் பணிவிடை செய்து வந்தனள்.

13-14. (க-ரை) தர்மத்தில் அதிக நிஷ்டையுள்ளவளான அந்த ஸோமதை யென்ற கந்தர்வப் பெண்மணியின்பேரில், அப்படிக்கொத்த அந்த முனி பெருமான மஹரிஷியும் மிகவும் ஸந்தோஷித்தவராய் "ஹே ஸோமதையே! நீ செய்த பணிவிடையால் யாம் மிகவும் மகிழ்ந்தோம் உனக்கென்ன வேண்டுமோ! அதை நான் செய்கிறேன் என்றனர்."

15-16. (க-ரை) ஸோமதையும், அம்முனிவர் ஸந்தோஷத்தை அறிந்து மகிழ்வுடன், ப்ரும்ம ஸம்பந்தமான பெருந்தேஜஸ்ஸுடைய ஒரு புத்திரனைத்

लक्ष्म्या समुदितो ब्राह्म्या ब्रह्मभूतो महातपाः ।
ब्राह्मेण तपसा युक्तं पुत्रमिच्छामि धार्मिक ॥ 16 ॥

अपतिश्चास्मि भद्रं ते भार्या चास्मि न कस्यचित् ।
ब्राह्मेणोपगतायाश्च दातुमर्हसि मे सुतम् ॥ 17 ॥

तस्याः प्रसन्नो ब्रह्मर्षिर्ददौ पुत्रमनुत्तमम् ।
ब्रह्मदत्त इति ख्यातं मानसं चूलिनः सुतम् ॥ 18 ॥

16. (ப-ரை) **धार्मिक** - ஹே தார்மிகரே! (தேவரீர்), **ब्राह्म्या** - ப்ரும்ம ஸம்பந்தமான, **लक्ष्म्या** - தேஜஸ்ஸினால், **समुदित:** - சிறந்தவரும், **ब्रह्मभूत:** - (அதனால்) ப்ரும்மாவுக்கு நிகரானவரும், **महातपा:** - மிக்க தவமுடையவருமாக ஆகின்றீர், **ब्राह्मेण** - ப்ரும்ம ஸம்பந்தமான, **तपसा** - தவத்தோடு, **युक्तं** - கூடின, **पुत्रं** - புத்திரனை, (அடைய), **इच्छामि** - விரும்புகின்றேன்.

17. (ப-ரை) **अपति:** - (ஹே மஹரிஷியே!) நான் நாதனற்றவளாக, **अस्मि** - ஆகிறேன், **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **कस्यचित्** - (இனி) ஒருவருக்கும், **भार्या** - மனைவியாக, **नास्मि** - ஆகிலேன். **उपगताया: च** - (தேவரீரை) சரணமடைந்த, **मे** - எனக்கு, **ब्राह्मेण** - ப்ரும்ம ஸம்பந்தமான தர்மத்தினால், **सुतं** - புத்திரனை, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - யோக்கியராயிருக்கின்றீர்.

18. (ப-ரை) **ब्रह्मर्षि:** - ப்ரும்ம ரிஷியான, (அந்த சூளி), **प्रसन्न:** - நிர்மலமான முகமுடையவராய், **तस्या:** - அந்த, (ஸோமதைக்கு), **चूलिन:** - சூளியினுடைய, **मानसं** - மனஸ்ஸம்பந்தமும், **ब्रह्मदत्त: इति** - பிரும்மதத்தனென்று, **ख्यातं** - பிரஸித்தமான, **अनुत्तमम्** - சிறந்த, **पुत्रं** - புத்திரனை, **ददौ** - கொடுத்தனர்.

தமரே! ப்ரும்ம தேஜஸ்ஸமைந்த ஸாந்தமுருவான தேவரீருடைய திருவருளால் அடைய விரும்புகின்றேன். என்று இனிதாக விண்ணப்பம் செய்தனள்.

17. (க-ரை) ஹே மஹரிஷியே! நானிதுவரையில் அன்பனென்பவனொருவனையும் அணைந்து இன்புற்றிலேன், இனியும் ஒருவனையும் மணம்புரியேன். இவ்வடியாளிடத்தில் கிருபை செய்து இந்த வரத்தை அளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டாள்.

18. (க-ரை) அந்த சூளி என்னும் மஹரிஷியானவர், தனக்கு அடியாளாகப் பணி செய்துவந்த ஸோமதை யென்னும் கந்தர்வ ஸ்திரீயின் கருத்தை யுணர்ந்து, அவளிடத்தில் பிரம்மதத்த னென்கிற ஓர் ஸத் புத்திரனை அனுக்ரஹித்தார்.

स राजा सौमदेयस्तु पुरीमध्यावसत्तदा ।
काम्पिल्यां परया लक्ष्म्या देवराजो यथा दिवम् ॥ 19 ॥
स बुद्धिं कृतवान्राजा कुशनाभः सुधार्मिकः ।
ब्रह्मदत्ताय काकुत्स्थ दातुं कन्याशतं तदा ॥ 20 ॥
तमाहूय महातेजा ब्रह्मदत्तं महीपतिः ।
ददौ कन्याशतं राजा सुप्रीतेनान्तरात्मना ॥ 21 ॥

19. (ப-ரை) **तदा** - அப்பொழுது. **सौमदेयः** - ஸோமதையின் புத்திரனும், **राजा** - அரசனுமான, **सः** - அந்த. (பிரம்மதத்தன்). **परया** - சிறந்த. **लक्ष्म्या** - ஐஸ்வர்யத்தோடு, (கூடி), **काम्पिल्यां** - காம்பிலீ என்கிற, **पुरीं** - பட்டணத்தில், **दिवं** - தேவலோகத்தில், **देवराजो यथा** - தேவேந்திரன்போல. **अध्यावसत्** - இருந்தான். (ஆண்டுவந்தான்).

20. (ப-ரை) **काकुत्स्थ** - ஹே ராமசந்த்ரனே! **तदा** - அப்பொழுது. **सुधार्मिकः** - மிக தர்மமுடைய, **कुशनाभः** - குசநாபனென்கிற, **सः** - அந்த, **राजा** - அரசன், **कन्याशतं** - நூறு கன்னிகைகளையும், **ब्रह्मदत्ताय** - பிரம்மதத்தனின் பொருட்டு, **दातुं** - கொடுப்பதற்கு, **बुद्धिं** - புத்தியை. (தீர்மானத்தை), **कृतवान्** - செய்தனர்.

21. (ப-ரை) **राजा** - அரசனும், **महीपतिः** - பூமிக்குப் பதியுமான, (அந்த குசநாபர்), **महातेजाः** - மிகுந்த தேஜஸ்ஸையுடையவராய். **तं** - அந்த. **ब्रह्मदत्तं** - பிரம்மதத்தனை, **आहूय** - அழைப்பித்து, **कन्याशतं** - நூறு பெண்களையும், **सुप्रीतेन** - மிகுந்த அன்புள்ள, **अन्तरात्मना** - மனதோடு கூடினவராய், **ददौ** - கொடுத்தார்.

19. (க-ரை) ஸோமதையின் புத்திரனான அந்த பிரம்மதத்தனென்னும் அரசன், காம்பிலீ யென்கின்ற பட்டணத்தில், ஸ்வர்க்கலோகத்தை ஆண்டுவரும் தேவேந்திரன்போல், அரசநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தனன்.

20. (க-ரை) ஹே ராகவா! குசநாபர் என்பவர், தம் மந்திரிகளோடு நன்காராய்ந்து, பிரம்மதத்தன் மஹிமையை நன்குணர்ந்து, அவரே தம் பெண்களுக்குத் தக்க கணவரென்று தீர்மானித்தனர்.

21. (க-ரை) பூபதியான அந்த குசநாபர், மிகு தேஜஸ்ஸையுடையவராய், விளங்குகின்ற அந்த பிரும்மதத்தனை அழைப்பித்து எல்லையில்லாப் பெருமகிழ்ச்சியுடன், தம் புத்திரிகள் நூறு பேர்களையும் அவருக்குப் பாணிக்ரஹணம் செய்து கொடுத்தனர்.

यथाक्रमं ततः पाणीञ्जग्राह रघुनन्दन ।
ब्रह्मदत्तो महीपालस्तासां देवपतिर्यथा ॥ 22 ॥

स्पृष्टमात्रे ततः पाणौ विकुब्जा विगतज्वराः ।
युक्ताः परमया लक्ष्म्या बभुः कन्या शतं तदा ॥ 23 ॥

स दृष्ट्वा वायुना मुक्ताः कुशनाभो महीपतिः ।
बभूव परमप्रीतो हर्षं लेभे पुनः पुनः ॥ 24 ॥

22. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராமசந்திரா! **ततः** - பிறகு, **देवपतिर्यथा** - தேவ ராஜனுக் கொப்பாக, (இருப்பவரும்), **महीपालः** - பூமியை ரக்ஷணம் செய்கின்றவருமான, **ब्रह्मदत्तः** - பிரம்மதத்தர், **यथाक्रमं** - கிரமமாக, **तासां** - அந்தப் பெண்களுடைய, **पाणीन्** - கைகளை, **जग्राह** - கிரஹித்தனர்.

23. (ப-ரை) **ततः** - பிறகு, **पाणौ** - (பிரும்மதத்தர்) கைகளை, **स्पृष्टमात्रे**- தொட்டமாத்திரத்தில், **तदा** - அப்பொழுது, **कन्याः शतं** - (அந்த), நூறு பெண்களுடைய, **विकुब्जाः** - நிவர்த்தியான கூனுடையவர்களாகவும், **विगतज्वराः** - அழிந்த பீடையுடையவர்களாகவும், **परमया** - சிரேஷ்டமான, **लक्ष्म्या** - சோபையோடு, **युक्ताः** - கூடினவர்களாய், **बभुः** - பிரகாசித்தனர்கள்.

24. (ப-ரை) **कुशनाभ** - குசநாப ரென்கிற, **सः** - அந்த, **महीपतिः** - மன்னவன், **वायुना** - வாயு தேவனுல், **मुक्ताः** - விடப்பட்ட, (அக்கன்னிகைகளை), **दृष्ट्वा** - பார்த்து, **परमप्रीतः** - மிகவும் ஸந்தோஷித்தவராக, **बभूव** - ஆகினர், **पुनः पुनः** - அடிக்கடி, **हर्षं** - ஆனந்தத்தை, **लेभे** - அடைந்தனர்.

---

22. (க-ரை) ஹே ராமா! தேவராஜனுக் கொப்பான மஹிமை பொருந்திய அந்த பிரம்ம தத்தரும் கிரமமாக அக்கினி சாக்ஷியாய் அந்த நூறு பெண்களையும் விவாஹம் செய்துகொண்டனர்.

23. (க-ரை) அந்த ரூளி மஹரிஷி பிரும்ம தேஜஸினு லுண்டான அந்த பிரம்மதத்தர் என்னும் அரசன், சாஸ்திரப்படி அக்கன்னிகைகளை பாணிக்ரஹணம் செய்த மாத்திரத்திலேயே, அக்கன்னிகைகளெல்லோரும் கூனு நிமிர்ந்து முடம் நீங்கி, முன்னைக் காட்டிலும் வெகு ஸௌந்தர்யமான ரூபலாவண்யமுடையவர்களாய் விளங்கினர்கள்.

24. (க-ரை) இப்படி, வாயு தேவனுடைய கோபத்தினல் பீடிக்கப்பட்ட அவ்வவஸ்தையினின்று விடுபட்டவர்களாகிய, தமது பெண்மணிகளைப் பார்த்து, குசநாபர் அடிக்கடி மிகவும் ஸந்தோஷிக்கலாயினர்.

कृतोद्वाहं तु राजानं ब्रह्मदत्तं महीपतिः ।
सदारं प्रेषयामास सोपाध्यायगणं तदा ॥ 25 ॥

सोमदापि सुसंहृष्टा पुत्रस्य सदृशीं क्रियाम् ।
यथान्यायं च गन्धर्वी स्नुषास्ताः प्रत्यनन्दत ॥ 26 ॥

स्पृष्ट्वा स्पृष्ट्वा च ताः कन्याः कुशनाभं प्रशस्य च ॥ 26½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
त्रयस्त्रिंशः सर्गः ॥ 33 ॥

25. (ப-ரை) **महीपतिः** - அரசனை, (குசநாபர்). **तदा** - அப்பொழுது, **कृतोद्वाहं तु** - செய்யப்பட்ட விவாஹமுடையவரும், **सदारं** - பத்தினியோடு கூடின வரும், **सोपाध्यायगणं** - புரோஹித ஸமூகத்தோடு கூடினவரும், **राजानं** - அரசனு மான, **ब्रह्मदत्तं** - பிரம்மதத்தரை, **प्रेषयामास** - அனுப்பிக் கொடுத்தனர்.

26-26½. (ப-ரை) **गन्धर्वी** - கந்தர்வ ஸ்திரீயான, **सोमदापि** - ஸோமதை என் பவளும், **सुसंहृष्टा** - மிகவும் ஸந்தோஷித்தவளாய், **ताः** - அந்த, **कन्याः** - கன்னிகை களை, **स्पृष्ट्वा स्पृष्ट्वा** - தொட்டு, தொட்டு, **कुशनाभं** - குசநாபரை, **प्रशस्य च** - புகழ்ந்தும், **पुत्रस्य** - புத்திரனுக்கு, **सदृशीं** - தகுந்ததான, **क्रियां** - விவாஹத்தைப்பற்றியும், **ताः** - அந்த, **स्नुषाः** - நாட்டுப்பெண்களையும், **यथान्यायं** - நியாயப்பிரகாரம், **प्रत्यनन्दत** - களிப்புற்றனள்.

25. (க-ரை) அந்த குசநாபர் பெருமகிழ்வுண்டு தம் மருமகனாகிய பிரம்ம தத்தரைத் தம் பெண்களோடும், புரோஹித ஸமூஹத்தோடு கூடினவராயும், காம்பிலீ நகரத்திற்கு அனுப்பிக் கொடுத்தனர்.

26-26½. (க-ரை) கந்தர்வ ஸ்திரீயான அந்த ஸோமதையும், இவ்வண்ணம் நூறு பத்தினிகளோடு கூடிய, மிக தேஜஸோடு விளங்கின, தன் புத்திரனை அந்த பிரம்மதத்தரைக் கண்ணுரைக் கண்டு, மனம் மிக்கக் குளிர்ந்து, தம் நாட்டுப் பெண்கள் நூறு பெயரையும் எடுத்து அணைத்துத் தழுவித் தழுவி, குசநாபரை வெகுவாகப் புகழ்ந்து வாழ்த்தினள்.

चतुस्त्रिंशः सर्गः ॥ 34 ॥

कृतोद्वाहे गते तस्मिन्ब्रह्मदत्ते च राघव ।
अपुत्रः पुत्रलाभाय पौत्रीमिष्टिमकल्पयत् ॥ 1 ॥

इष्ट्यां च वर्तमानायां कुशनाभं महीपतिम् ।
उवाच परमोदारः कुशो ब्रह्मसुतस्तदा ॥ 2 ॥

पुत्र ते सदृशः पुत्रो भविष्यति सुधार्मिकः ।
गाधिं प्राप्स्यसि तेन त्वं कीर्तिं लोके च शाश्वतीम् ॥ 3 ॥

---

1. (ப-ரை) **राघव** - இராமசந்திரா! **कृतोद्वाहे** - செய்யப்பட்ட விவாஹமுடைய, **ब्रह्मदत्ते** - பிரம்மதத்தர் பத்தினிகளோடு, **गते** - சென்றபிறகு, **अपुत्रः** - புத்திரனற்ற, (அந்த குசநாபர்), **पुत्रलाभाय** - புத்திரனை அடையும்பொருட்டு, **पौत्रीं** - புத்திர ஸம்பந்தமான, **इष्टिं** - யாகத்தை, **अकल्पयत्** - செய்தார்.

2. (ப-ரை) **इष्ट्यां च** - யாகமும், **वर्तमानायां** - நடந்துகொண்டு வருகையில், **तदा** - அப்பொழுது, **ब्रह्मसुतः** - பிரும்மாவின் மானஸ புத்திரரும், **कुशः** - (குசநாபருக்குப் பிதாவான) குசர், **परमोदारः** - மிகவும் ஸந்தோஷமுள்ளவராக, **महीपतिं** - அரசனை, **कुशनाभं** - குசநாபரை, (க்குறித்து), **उवाच** - சொன்னார்.

3. (ப-ரை) **पुत्र** - ஹே குழந்தாய்! **ते** - உனக்கு, **सदृशः** - தக்கவனும், **सुधार्मिकः** - மிகவும் தர்மிஷ்டனுமான, **पुत्रः** - புத்திரன், **भविष्यति** - உண்டாகப் போகிறான், **गाधिं** - (அப்படிப்பட்ட) காதியை, **प्राप्स्यसि** - அடையப்போகின்றாய், **तेन** - அவனால், **त्वं** - நீ, **लोके** - உலகத்தில், **शाश्वतीम्** - எப்பொழுதும் அழிவற்ற, (ஸ்திரமான), **कीर्तिं** - யசஸையும், (**प्राप्स्यसि** - அடையப்போகின்றாய்).

---

1. (க-ரை) ஹே ராகவா! இவ்விதம் அந்த பிரம்மதத்தர் தம்முடைய நூறு பத்தினிகளோடும் தம்முடைய நகரமாகிய காம்பிலியைக் குறித்துச் சென்றனர். பிறகு அந்த குசநாபர் தனக்குப் புத்திரனில்லாமையால், புத்திரனுண்டாவதன்பொருட்டு புத்திரகாமேஷ்டி யென்னும் ஓர் யாகத்தைச் செய்யலானார்.

2-3. (க-ரை) இப்படி குசநாபர், சாஸ்திர முறைப்படி அந்த புத்திர காமேஷ்டி யாகத்தைச் செய்துகொண்டிருக்கையில், அவருடைய பிதாவான, குசனென்பவர், குசநாபரை நோக்கி ஹே புத்திரனே! காதி யென்றொரு ஸத்புத்திரன் உன்னுடைய யசஸுக்கும், கீர்த்திக்கும் தக்கவனாக உண்டாகக்கடவன். அவனால் உனக்கு அதிகமான பெருங்கீர்த்தியுண்டாகும் என்று உரைத்தனர்.

एवमुक्त्वा कुशो राम कुशनाभं महीपतिम् ।
जगामाकाशमाविश्य ब्रह्मलोकं सनातनम् ॥ 4 ॥

कस्यचित्त्वथ कालस्य कुशनाभस्य धीमतः ।
जज्ञे परमधर्मिष्ठो गाधिरित्येव नामतः ॥ 5 ॥

स पिता मम काकुत्स्थ गाधिः परमधार्मिकः ।
कुशवंशप्रसूतोऽस्मि कौशिको रघुनन्दन ॥ 6 ॥

4. (ப-ரை) **राम** - ராமா! **कुशः** - குசர், **महीपतिम्** - அரசனான, **कुशनाभं** - குசநாபனை, **एवं** - இவ்வாறு, **उक्त्वा** - சொல்லிவிட்டு, **सनातनम्** - அழிவற்றதான, **ब्रह्मलोकं** - பிரும்மலோகத்தை, (குறித்து), **आकाशं** - ஆகாயத்தை, **आविश्य** - அடைந்து, **जगाम** - சென்றனர்.

5. (ப-ரை) **अथ** - பிறகு, **कस्यचित्कालस्य** - சிறிது காலத்திற்குப் பின்பு, **धीमतः** - புத்திமானான, **कुशनाभस्य** - குசநாபருக்கு, **परमधर्मिष्ठः** - மிக்க தர்மிஷ்டரும், **नामतः** - பெயரினால், **गाधिरित्येव** - காதி என்கின்ற, (புத்திரர்), **जज्ञे** - பிறந்தனர்.

6. (ப-ரை) **काकुत्स्थ** - காகுத்த வம்சத்தில் பிறந்த ராமா! **परमधार्मिकः** - மிகத் தர்மமுள்ளவரான, **सः** - அந்த, **गाधिः** - காதியானவர், **मम** - எனக்கு, **पिता** - தந்தை, **कुशवंशप्रसूतोऽस्मि** - குசவம்சத்தில் பிறந்தவனாகிறேன், **रघुनन्दन** - ரகு வம்சத்தை ஆனந்திப்பிக்கச் செய்பவனே! **कौशिकः** - கௌசிகனென்று, (சொல்லப்படுகின்றேன்).

---

4. (க-ரை) சதுர்முகப் பிரம்மாவின் மானஸ புத்திரரான குசர், இவ்வாறு, தன்னுடைய புத்திரனை குசநாபனிடம் மங்கள வார்த்தையைச் சொல்லிவிட்டுத் தன் இருப்பிடமாகிய பிரம்மலோகத்தை அடைந்தார்.

5. (க-ரை) பிறகு, சிறிது காலம் சென்றபின், மிக்க தர்மிஷ்டரும், மஹா புத்திசாலியுமான அந்த குசநாபருக்கு, கிருதாசி என்னும் ஓர் அப்ஸர ஸ்திரீயினிடத்தில், காதி யென்னும் புத்திரர் பிறந்தனர்.

6. (க-ரை) ககுத்த வம்சத்திற்கு ஆனந்தத்தை அளிக்கின்றவனே! மிகப் பிரஸித்தரும், மிக்க தர்மிஷ்டருமான அந்த காதியே எனக்குத் தந்தை. மஹானான குசரின் வம்சத்தில் நான் பிறந்தவனாகையால் நான் எனக்கு "கௌசிகன்" என்று பெயர் விளங்கி வருகின்றது.

पूर्वजा भगिनी चापि मम राघव सुव्रता ।
नाम्ना सत्यवती नाम ऋचीके प्रतिपादिता ॥ 7 ॥

सशरीरा गता स्वर्गं भर्तारमनुवर्तिनी ।
कौशिकी परमोदारा प्रवृत्ता च महानदी ॥ 8 ॥

दिव्या पुण्योदका रम्या हिमवन्तमुपाश्रिता ।
लोकस्य हितकामार्थं प्रवृत्ता भगिनी मम ॥ 9 ॥

---

7. (ப-ரை) **राघवा** - ஹே ரகுநந்தனை! **सुव्रता** - நல்ல ஆசாரமுடையவளும், **नाम्ना** - பெயரினால், **सत्यवती नाम** - ஸத்யவதி யெனப்ரஸித்தியான பெயருடைய வளுமான, **मम** - எனக்கு, **पूर्वजा** - முன் பிறந்த, **भगिनी चापि** - உடன் பிறந்தவளு மானவள், **ऋचीके**- ரிசிகரெனும் முனிவரின் பொருட்டு, **प्रतिपादिता** - கொடுக்கப்பட் டனள்.

8. (ப-ரை) **भर्तारं** - பதியை, **अनुवर्तिनी** - அனுஸரித்துக்கொண்டு, **सशरीरा** - தேஹத்தோடு, **स्वर्गं** - ஸ்வர்க்கத்தை, **गता** - அடைந்தவளாயும், **परमोदारा** - (பிறகு), மிக கம்பீரமான, **कौशिकी** - கௌசிகி யென்ற, **महानदी च** - பெருநதியுமாக, **प्रवृत्ता** - (பூமியில்) பெருகினள்.

9. (ப-ரை) **मम** - எனக்கு, **भगिनी** - உடன் பிறந்தவளுமான, (**ஸத்யவதி**), **लोकस्य** - உலகத்திலுடைய, **हितकामार्थं** - பூலோகத்திலும், பிறகு பரலோகத்திலும் ஸுகம் உண்டாகும் நிமித்தம், **दिव्या** - கொண்டாடத் தகுந்தவளாகவும், **पुण्योदका**- பரிசுத்தமான ஜலமுடையவளாகவும், **रम्या** - மனோஹரமாயுமுள்ள, **प्रवृत्ता** - (நதி ரூபமாக), பெருகினவளாய்க் கொண்டு, **हिमवन्तं** - ஹிமயமலையை, **उपाश्रिता** - அடைந்தனள்.

---

7. (க-ரை) ஹே ரகுநந்தனை! எனக்கு முன் பிறந்தவளும், எனக்கு உடன் பிறந்தவளுமான, ஸத்யவதி யென்பவளொருவள், ரிசிகரென்னும் முனிவ ருக்குக் கொடுக்கப்பட்டவள்.

8. (க-ரை) அந்த ஸத்யவதி பாதிவ்ரத தர்மத்தைக் கைவிடாமல், தன் னுடைய பர்த்தாவுக்குப் பணிவிடை செய்து வந்து, கற்பின் திண்மையால் பர்த் தாவோடு தானும் ஸ்வசரீரத்தோடு தேவலோகம் சென்றனள். பிறகு, அவள் பூலோகத்தில் "கௌசிகீ" யென்ற பெயருடன் பெரு நதியாகப் பெருகின்றனள்.

9. (க-ரை) அந்த ரிசிகரின் மனைவியான அவள் உலகத்தவருக்கு மிகப் புண்ணியகரமாயும், ஐஹிகாமுஷ்மிக பலப்ரதமாயும், எல்லோராலும் புகழப் பட்டு, நிர்மலமான ஜலமுடைய "கௌசிகி" என்ற நதியாக, ஹிமயமலையின் தாழ்வரையில், தன் தபோ மஹிமையால் பெருகிக்கொண்டிருக்கின்றனள்.

ततोऽहं हिमवत्पार्श्वे वसामि निरतः सुखम् ।
भगिन्यां स्नेहसंयुक्तः कौशिक्यां रघुनन्दन ॥ 10 ॥

सा तु सत्यवती पुण्या सत्ये धर्मे प्रतिष्ठिता ।
पतिव्रता महाभागा कौशिकी सरितां वरा ॥ 11 ॥

अहं हि नियमाद्राम हित्वा तां समुपागतः ।
सिद्धाश्रममनुप्राप्य सिद्धोऽस्मि तव तेजसा ॥ 12 ॥

10. (ப-ரை) **रघुनन्दन** - ராகவா! **अहं** - நான், **भगिन्यां** - (என்னுடன்) உடன் பிறந்தவளான, **कौशिक्यां** - கௌசிகியினிடத்தில், **स्नेहसंयुक्तः** - அன்போடு கூடினவனாக, (ஆகின்றேனே). **ततः** - அதனால், **हिमवत्पार्श्वे** - ஹிமயமலையின் தாழ்வரையில், **सुखम्** - ஸுகமாக, **निरतः** - எப்பொழுதும், **वसामि** - வாஸஞ்செய்கிறேன்.

11. (ப-ரை) **सा** - அந்த, **कौशिकी** - கௌசிகி யென்ற, **सत्यवती तु** - ஸத்யவதியோவெனில், **पुण्या** - மிகப் பரிசுத்தமாக, **सत्ये** - ஸத்யத்திலும், **धर्मे** - தர்மத்திலும், **प्रतिष्ठिता** - நிலைநிறுத்தப்பட்டவள், **पतिव्रता** - கற்பு நிலை யழியாதவள், **महाभागा**- பூஜிக்கத் தகுந்தவள், **सरितां वरा** - நதிகளுக்குள் சிறந்தவள்.

12. (ப-ரை) **राम** - ஹே ராம! **अहं हि** - நானோவெனில், **नियमात्** - நியமத்தினால், **तां** - அந்த, (கௌசிகையை), **हित्वा** - விட்டு, **समुपागतः** - வந்தவனாக, **सिद्धाश्रमं** - ஸித்தாச்ரமத்தை, **अनुप्राप्य** - அடைந்து, **तव** - உன்னுடைய, **तेजसा** - பராக்கிரமத்தினால், **सिद्धः** - ஸித்தி பெற்றவனாக, **अस्मि** - ஆகின்றேன்.

---

10. (க-ரை) ஹே ராகவா! பெரும் புகழ்பெற்ற அந்த கௌசிகியினிடத்திலுண்டான அன்பின் மிகுதியால் நான், ஹிமயமலையின் தாழ்வரையில் நான் ஸுகமாக எப்பொழுதும் வாஸஞ் செய்கின்றேன்.

11. (க-ரை) அந்த கௌசிகியானவள் மிகவும் பரிசுத்தமுடையவள். ஸத்தியத்திலும், தர்மத்திலும் மிக்க வல்லமை வாய்ந்தவள். அந்த கௌசிகியே இப்பொழுது நதிகளுக்குள் மிகச் சிறந்ததாகவும், பூஜிக்கத் தக்கதாகவும் இருக்கின்றனள்.

12. (க-ரை) கௌஸல்யா தேவிக்கு ஆனந்தத்தை யளிக்கும் பிரபுவே! நான் ஓர் நியமத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு, அந்த கௌசிகையை விட்டு இந்த ஸித்தாச்ரமம் வந்து, உன்னை யடைந்து உன் திண்டோளின் திறமையினால் ஸித்தியடைந்தவனாக இருக்கின்றேன்.

एषा राम ममोत्पत्तिः स्वस्य वंशस्य कीर्तिता ।
देशस्य च महाबाहो यन्मां त्वं परिपृच्छसि ॥ 13 ॥

गतोऽर्धरात्रः काकुत्स्थ कथाः कथयतो मम ।
निद्रामभ्येहि भद्रं ते माभूद्विघ्नोऽध्वनीह नः ॥ 14 ॥

निष्पन्दास्तरवः सर्वे निलीना मृगपक्षिणः ।
नैशेन तमसा व्याप्ता दिशश्च रघुनन्दन ॥ 15 ॥

13. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **स्वस्य** - ஸொந்தமான, **मम** - என்னுடையதான, **वंशस्य** - வம்சத்தினுடைய, **एषा** - இந்த, **उत्पत्तिः** - உற்பத்தியானது, **कीर्तिता** - சொல்லப்பட்டது, **महाबाहो** - பெருந் தோள்களை யுடையவனே! **यत्** - எது, **त्वं** - நீ, **मां** - என்னை, **परिपृच्छसि** - நன்றாகக் கேட்டாயோ, **देशस्य च** - தேசத்தினுடைய, (வரலாறும் சொல்லப்பட்டது.)

14. (ப-ரை) **काकुत्स्थ** - ஹே காகுத்தா! **मम** - நான், **कथाः** - கதைகளை, **कथयतः** - சொல்லிக்கொண்டிருக்கையில், **अर्धरात्रः** - பாதி இரவு, **गतः** - சென்றது, **निद्रां** - (இனி) தூக்கத்தை, **अभ्य** - அடைவாய், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **नः** - நமக்கு, **इह** - இங்கு, **अध्वनि** - வழியில், **विघ्नः** - தடையானது, **माभूत् हि** - உண்டாகவேண்டாம்.

15. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ரகுநந்தனே! **तरवः** - விருக்ஷங்கள், **सर्वे** - எல்லாம், **निष्पन्दाः** - அசைவற்றிருக்கின்றன, **मृगपक्षिणः** - மிருகங்களும், பக்ஷிகளும், **निलीनः** - உறங்குகின்றன, **नैशेन** - இரவு ஸம்பந்தமான, **तमसा** - இருளால், **दिशः** - திக்குகள், **व्याप्ताः** - மூடப்பட்டிருக்கின்றன.

13-14. (க-ரை) ஹே தசரத புத்திரனே! நீ கேட்டபடியே, என் வம்சத்தையும், இந்தத் தேசத்தின் ப்ரபாவத்தையும், நன்கு கூறி முடித்தேன். நாமிப்படி பேசிக்கொண்டிருந்தமையால், பூர்வ ராத்திரியானது கழிந்துபோய்விட்டது. இனி நீ கண்வளருவாயாக. உனக்கு மங்களமுண்டாகுக. அதிகநேரம் விழித்திருந்தால் வழி நடந்து செல்ல மிகவும் சிரமமுண்டாகும்.

15. (க-ரை) இராகவா! பூர்வ ராத்திரி சென்றமையால் மிருகங்கள், பக்ஷிகள் ஸஞ்சாரமில்லாமல், விருக்ஷங்கள் அசைவற்றிருக்கின்றன. கடும் இருளால் திசைகளெல்லாம் மூடப்பட்டிருப்பதால், இனி நீ விழித்திராமல், கண்வளருவாயாக, என்றனர்.

शनैर्वियुज्यते सन्ध्या नभो नेत्रैरिवावृतम् ।
नक्षत्रतारागहनं ज्योतिर्भिरवभासते ॥ 16 ॥

उत्तिष्ठति च शीतांशुः शशी लोकतमोनुदः ।
ह्लादयन्प्राणिनां लोके मनांसि प्रभया विभो ॥ 17 ॥

नैशानि सर्वभूतानि प्रचरन्ति ततस्ततः ।
यक्षराक्षससङ्घाश्च रौद्राश्च पिशिताशनाः ॥ 18 ॥

16. (ப-ரை) **सन्ध्या** - மாலைப்பொழுதும், **शनैः** - மெல்ல, **वियुज्यते** - விடுகின்றது, **नक्षत्रतारागहनं** - நக்ஷத்திரங்களாலும், அசுவினி முதலான நக்ஷத்திரங்களாலும் வியாபிக்கப்பட்ட **नभः** - ஆகாசம், **ज्योतिर्भिः** - பிரகாசங்களையுடைய, **नेत्रैः** - கண்களால், **आवृतमिव** - சூழப்பட்டது போல, **भासते** - விளங்குகிறது.

17. (ப-ரை) **विभो** - பிரபுவே! **शीतांशुः** - குளிர்ந்த கிரணமுடைய, **शशी** - சந்திரன், **प्रभया** - காந்தியால், **लोकतमोनुदः** - உலகத்தினிருளைப் போக்குபவனாய்க் கொண்டும், **लोके** - உலகத்தில், (இருக்கும்), **प्राणिनां** - பிராணிகளுடைய, **मनांसि** - மனதுகளை, **ह्लादयन् च** - சந்தோஷிப்பிக்கச் செய்பவனாயுமாய், **उत्तिष्ठति** - மேலெழுகின்றான்.

18. (ப-ரை) **नैशानि** - இரவில் சஞ்சரிக்கின்ற, (கோட்டான் முதலான), **सर्वभूतानि** - எல்லாப் பிராணிகளும், **रौद्राः** - பயங்கரமானவையும், **पिशिताशनाः** - மாம்ஸத்தைப் புசிப்பவையுமான, **यक्षराक्षससङ्घाश्च** - யக்ஷருடையவும், அரக்கர்களுடையவும், கூட்டங்களும், **ततस्ततः** - அங்குமிங்கும், **प्रचरन्ति** - திரிகின்றன.

16-18. (க-ரை) ஹே ராகவா! மாலைப்பொழுது அஸ்தமித்துவிட்டபடியால், விருக்ஷங்களெல்லாம் மறைவுற்றிருக்கின்றன. மிருகங்கள், பக்ஷிகள் இவையெல்லாம் நிச்சலமாய் உறங்குகின்றன. பத்துத் திசைகளும் இருளால் மூடப்பட்டன. மாலை மெள்ள மெள்ள நீங்கிற்று. யக்ஷ, பூத, பிசாசங்கள் மிகப் பயங்கரமாகத் திரிகின்றன. அசுவினி நக்ஷத்திர முதலான அநேக நக்ஷத்திரங்கள் ஆகாசமெங்கும் மிகப் பிரகாசமாய் விளங்குகின்றன. இருளைப் போக்கிக்கொண்டு, பிராணிகளுடைய மனதுகளை ஆஹ்லாத முண்டாகும்படி தன்னுடைய குளிர்ந்த பிரகாசத்தால், சந்திரனும் ஆகாசத்தில் நிர்மலமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனன்.

एवमुक्त्वा महातेजा विरराम महामुनिः ।
साधु साध्विति तं सर्वे ऋषयो ह्यभ्यपूजयन् ॥ 19 ॥
कुशिकानामयं वंशो महान्धर्मपरः सदा ।
ब्रह्मोपमा महात्मानः कुशवंश्या नरोत्तमाः ॥ 20 ॥
विशेषेण भवानेव विश्वामित्रो महायशाः ।
कौशिकी च सरिच्छ्रेष्ठा कुलोद्योतकरी तव ॥ 21 ॥

---

19. (ப-ரை) **महातेजाः** - வெகு தேஜஸ்ஸுடையவரும், **महामुनिः** - மஹரிஷியுமான, (விசுவாமித்திரர்), **एवं उक्त्वा** - இவ்வாறு சொல்லி, **विरराम** - வாய்மூடினர், (பிறகு), **ऋषयः सर्वे** - ரிஷிகளெல்லோரும், **साधु साध्विति** - நல்லது, நல்லதுயென்று, **तं** - அந்த, (விசுவாமித்திரரை), **अभ्यपूजयन्** - புகழ்ந்தனர் அல்லது ஸ்தோத்திரம் செய்தனர்.

20. (ப-ரை) **कुशिकानां** - குசிக வம்சத்தி லுண்டானவருடைய, **अयं** - இந்த, **वंशः** - வம்சம், **महान्** - மிகச் சிலாக்கியமானது, **सदा** - எப்பொழுதும், **धर्मपरः** - தர்மத்தில் ஊற்றமுடையது, **कुशवंश्याः** - குசரின் கோத்திரத்திலுண்டான, **नरोत्तमाः** - மனித சிரேஷ்டர்கள், **महात्मनः** - சிறந்த ஆத்மக் ஞானமுடையவர்கள், **ब्रह्मोपमाः** - ப்ரும்மாவுக் கொப்பானவர்கள்.

21. (ப-ரை) **विश्वामित्रः** - விசுவாமித்திர ரென்கின்ற, **भवानेव** - தேவரீரே,

---

19. (க-ரை) ஹே செந்தாமரைக் கண்ணா! நீ கண்வளர்ந்தருள்வாயாக, நானோ வழி நடக்க வேண்டுமாகையால் இனி விழித்திருக்கலாகா! யென்று அருளி, விசுவாமித்திரர் வாய் மூடிக்கொண்டார். பிறகு, அதைக் கேட்ட எல்லா ரிஷிகளும், விசுவாமித்திர மஹரிஷியை வெகுவாகக் கொண்டாடி சிலாக்கித்தனர்.

20. (க-ரை) குசிக குலத்திலுண்டான இந்த வம்சம் மிக்க சிரேஷ்டமானது. அது எப்பொழுதும் தர்மத்திலேயே, நிலைத்திருப்பது. குசவம்சத்திற் பிறந்த மனிதர்கள் சிறந்த ஆத்மக் ஞானமுடையவர்களாய் ஸதாசார ஸம்பன்னர்களாய், ப்ரும்மதேவனுக் கொப்பானவர்கள்.

21. (க-ரை) நிற்க, மிகக் கீர்த்திபெற்ற ஹே விசுவாமித்திர மஹரிஷியே; தேவரீரே உலகத்தில் புகழ் பெற்றவர். இந்த குச வம்சத்திற் பிறந்த ஸத்யவதி

इति तैर्मुनिशार्दूलैः प्रशस्तः कुशिकात्मजः ।
निद्रामुपागमच्छ्रीमानस्तं गत इवांशुमान् ॥ 22 ॥
रामोऽपि सहसौमित्रिः किंचिदागतविस्मयः ।
प्रशस्य मुनिशार्दूलं निद्रां समुपसेवते ॥ 23 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये
बालकाण्डे चतुस्त्रिंशः सर्गः ॥ 34 ॥

विशेषेण - விசேஷமாக, **महायशाः** - வெகு புகழ் உடையவர்கள், **सरितां** - நதிகளுக்குள், **श्रेष्ठा** - சிறந்தவளான, **कौशिकी च** - கௌசிகி, (என்ற நதியும்), **तव** - உம்முடைய, **कुलोद्योतकरी** - வம்சத்தைத் விளங்கச் செய்பவள்.

22. (ப-ரை) **श्रीमान्** - பெரும் தேஜஸ்ஸுடைய, **कुशिकात्मजः** - விசுவாமித்திரர், **इति** - இவ்வாறு, **तैः** - அந்த, **मुनिशार्दूलैः** - முனி சிரேஷ்டர்களால், **प्रशस्तः** - கொண்டாடப்பட்டவராய், **अस्तं गतः** - அஸ்தமனத்தையடைந்த, **अंशुमानिव** - சூரியன்போல், **निद्रां** - நித்திரையை, **उपागमत्** - அடைந்தனர்.

23. (ப-ரை) **रामः अपि** - ஸ்ரீராமனும், **सौमित्रिः सह** - இலக்ஷ்மணனோடு கூட, **किंचित्** - கொஞ்சம், **आगतविस्मयः** - வந்த புன்சிரிப்புடையவராய், **मुनिशार्दूलं** - ரிஷிசிரேஷ்டரை, **प्रशस्य** - கொண்டாடி, (புகழ்ந்து), **निद्रां** - நித்திரையை, **समुपसेवते** - கண்கடைந்தனர்.

யென்பவளும், பூலோகத்தில் வெகு கீர்த்தி பெற்ற கௌசிகி யென்ற சிறந்த ஓர் நதியாக ப்ரவஹித்துக்கொண்டு, உம்முடைய வம்சத்தை விளங்கச் செய்து கொண்டிருக்கின்றனள்.

22. (க-ரை) மஹாப்ரபாவமுடைய அந்த விசுவாமித்திர மஹரிஷியானவர், இவ்வாறு வெருவாய், முனிசிரேஷ்டர்களால் கொண்டாடப்பட்டவராய், ஆதித்தியன் அஸ்தகிரியை அடைவது போல் நித்திரை அடைந்தார்.

23. (க-ரை) ஸ்ரீராமபிரானும், அந்த விசுவாமித்திரரை ஸ்துதித்து, சித்திராபரவசராய் கொஞ்சம் மந்தஹாஸத்துடன் ஸௌமித்திரா புத்திரனை இலக்ஷ்மணனுடன் திருக்கண் வளர்ந்தருளினர்.

पञ्चत्रिंशः सर्गः ॥ 35 ॥

उपास्य रात्रिशेषं तु शोणाकूले महर्षिभिः ।
निशायां सुप्रभातायां विश्वामित्रोऽभ्यभाषत ॥ 1 ॥

सुप्रभाता निशा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठोत्तिष्ठ भद्रं ते गमनायाभिरोचय ॥ 2 ॥

तच्छ्रुत्वा वचनं तस्य कृत्वा पौर्वाह्णिकीं क्रियाम् ।
गमनं रोचयामास वाक्यं चेदमुवाच ह ॥ 3 ॥

1. (ப-ரை) **शोणाकूले** - கங்கைக் கரையில், **महर्षिभिः** - மாமுனிவரால், **रात्रिशेषं तु** - இரவின் மீதியில், **उपास्य** - துயிலடைந்து, **निशायां** - (அந்த) இரவு, **सुप्रभातायां** - விடிந்தவளவில், **विश्वामित्रः** - விசுவாமித்திரர், **अभ्यभाषत** - சொன்னார்.

2. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **निशा** - இரவு, **सुप्रभाता** - நற்பொழுதாக, (ஆயிற்று), **पूर्वा सन्ध्या** - காலைப்பொழுது, **प्रवर्तते** - விருத்தியாகின்றது, **उत्तिष्ठ उत्तिष्ठ** - (ஆகையால்) எழுந்திரும், எழுந்திரும், **ते** - உமக்கு, **भद्रं** - மங்களம் உண்டாகுக, **गमनाय** - போவதின்பொருட்டு, **अभिरोचय** - திருவுள்ளம் பற்றும், (என்றனர்).

3. (ப-ரை) **तस्य** - அந்த, (விசுவாமித்திரருடைய), **तत् वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - (ஸ்ரீராகவன்) கேட்டு, **पौर्वाह्णिकीं** - காலையிலுண்டான, **क्रियाम् कृत्वा** - செய்யவேண்டிய கர்மத்தைச் செய்து, **गमनं** - போவதை, **रोचयामास** - இச்சிக்கலானார், **इदं वाक्यं च** - இந்த வார்த்தையையும், **उवाच ह** - சொன்னார்,

1-2. (க-ரை) பிறகு, விசுவாமித்திர மஹரிஷி, அநேக முனி கணங்களோடு கூட அந்த கங்கைக் கரையிலிருந்து, விடியற்காலையி லெழுந்திருந்து ஸ்ரீராமபிரானை நோக்கி, ஹே இக்ஷ்வாகு குல திலகா! கௌஸல்யாதேவி பெற்றெடுத்த நற்குழந்தாய்! ஹே ராகவா! நற்பொழுது விடிந்தது. எழுந்திராய், எழுந்திராய், உமக்கு மங்களமுண்டாகுக. மிதிலா நகரத்தைக் குறித்து முன்னுக்குப் பிரயாணம் புறப்படவேண்டும், என்று மங்கள வசனங்களால், ஸ்ரீராமபிரானுக்கு நல்ல ஸுப்ரபாதமும் சொல்லலானார்.

3. (க-ரை) விசுவாமித்திர மஹரிஷியின், அவ்வினிய வசனங்களைக் கேட்டு, ஸ்ரீராகவனும் எழுந்திருந்து, காலைக்கடன்களை முறைப்படி செய்து முடித்துக் கொண்டு விசுவாமித்திர மஹரிஷியை நோக்கி இவ்வார்த்தைகளைச் சொன்னார்.

अयं शोणः शुभजलो गाधः पुलिनमण्डितः ।
कतरेण पथा ब्रह्मन्संतरिष्यामहे वयम् ॥ 4 ॥

एवमुक्तस्तु रामेण विश्वामित्रोऽब्रवीदिदम् ।
एष पन्था मयोद्दिष्टो येन यान्ति महर्षयः ॥ 5 ॥

एवमुक्ता महर्षयो विश्वामित्रेण धीमता ।
पश्यन्तस्ते प्रयाता वै वनानि विविधानि च ॥ 6 ॥

4. (ப-ரை) **अयं शोणः** - இந்த சோண நதியானது, **शुभजलः** - மங்களகரமான ஜலமுடையது, **गाधः** - ஸ்வல்ப ஜலமுடையது, **पुलिनमण्डितः** - மணற்குன்றுகளாலலங்காரமானது, (ஆகையால்), **ब्रह्मन्** - ப்ராம்மணோத்தமரே! **वयं** - நாம், **कतरेण पथा** - எந்த மார்க்கத்தினால், **संतरिष्यामहे** - (இந்த நதியை) தாண்டுவோம், (என்றனர்).

5. (ப-ரை) **एवं** - இவ்வாறு, **रामेण** - ஸ்ரீராமனால், **उक्तः** - சொல்லப்பட்ட, **विश्वामित्रः** - விசுவாமித்திர மஹரிஷியானவர், **इदं अब्रवीत्** - இதைச் சொல்லினர், **महर्षयः** - மஹரிஷிகள். **येन यान्ति** - எவ்வழியால் செல்லுகின்றனரோ, **एषः पन्थाः** - இந்த வழி, **मया** - என்னால், **उद्दिष्टः** - உத்தேசிக்கப்பட்டது.

6. (ப-ரை) **धीमता** - சிறந்த புத்தியுடைய, **विश्वामित्रेण** - விசுவாமித்திர மஹரிஷியால், **महर्षयः** - ரிஷிகள், **एवं उक्ताः** - இவ்வாறு சொல்லப்பட்டவராக, **ते** - அவர்கள், **विविधानि** - நானாவிதங்களான, **वनानिच** - வனங்களையும், **पश्यन्तः** - பார்த்துக் கொண்டு, **प्रयाताः वै** - சிறப்பாகச் சென்றனர்.

4. (க-ரை) ஹே மஹரிஷியே! இச்சோண நதியில் வெள்ளம் பெருகி மணற்குன்றுமேட்டிட்டு அழகு பொருந்தியிருப்பதால், நாம் இந்த நதியை எவ்விதம் தாண்டிச் செல்லத்தக்கதென வினவலுற்றனர்.

5. (க-ரை) இவ்விதம் ஸ்ரீராமசந்திர பிரபு வாய் மொழிந்ததை விசுவாமித்திர மஹரிஷி செவியுற்று, ஹே பிரபோ, எவ்வழியில் மஹரிஷிகள் முன் செல்லுகின்றனர்களோ, அந்த வழியாகவே நாமும் இந்தப் புண்ணிய நதியைத் தாண்டலாமென் றுரைத்தனர்.

6-9. (க-ரை) இவ்வாறு, சிறந்த புத்தியுடைய விசுவாமித்திர மஹரிஷியால் உரைக்கப்பட்டு, இராம லக்ஷ்மணர்களும், அம்மஹரிஷிகளும் புறப்பட்டு

ते गत्वा दूरमध्वानं गतेऽर्धदिवसे तदा ।
जाह्नवीं सरितां श्रेष्ठां ददृशुर्मुनिसेविताम् ॥ 7 ॥
तां दृष्ट्वा पुण्यसलिलां हंससारससेविताम् ।
बभूवुर्मुनयः सर्वे मुदिताः सहराघवाः ॥ 8 ॥
तस्यास्तीरे ततश्चक्रुस्त आवासपरिग्रहम् ॥ 9 ॥
ततः स्नात्वा यथान्यायं संतर्प्य पितृदेवताः ।
हुत्वा चैवाग्निहोत्राणि प्राश्य चामृतवद्धविः ॥ 10 ॥

7. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **ते** - அம்முனிவர், **अर्धदिवसे** - பாதி தினம், **गते (सति)** - சென்றவளவில், **दूरं** - தொலைவான, **अध्वानं** - வழியை, **गत्वा** - நடந்து, **सरितां** - நதிகளுக்குள், **श्रेष्ठां** - சிறந்ததும், **मुनिसेविताम्** - மஹரிஷிகளால் அடையப் பட்டதும், **जाह्नवीं** - கங்கையை, **ददृशुः** - பார்த்தனர்.

8-9. (ப-ரை) **मुनयः सर्वे** - மஹரிஷிகளெல்லோரும், **हंससारससेविताम्** - ஹம்ஸத்தினாலும், ஸாரஸத்தாலும், அடையப்பட்டதும், **पुण्यसलिलां** - பரிசுத்தமான ஜலமுடையதுமான, **तां** - அந்த, (கங்கையை), **दृष्ट्वा** - பார்த்து, **सह राघवाः** - இராகவர்களோடு, **मुदिताः** - ஸந்தோஷித்தவராக, **बभूवुः** - ஆனார், **ततः** - பிறகு, **ते** - அம் மஹரிஷி, **तस्याः तीरे** - அக்கங்கையின் கரையில், **आवासपरिग्रहम्** - வஸிப்பதின்பொருட்டு (வாஸஸ்தானத்தை, அல்லது ஆச்ரம ஸ்தானத்தை), **चक्रुः** - செய்தனர்.

10-11. (ப-ரை) **ततः** - பிறகு, **यथान्यायं** - (அம்மஹரிஷிகளெல்லோரும்)

வழியில் அநேக விதங்களான அடர்ந்த சோலைகளால் அழகாய் சூழப்பட்ட வனங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே வெகு தூரம் சென்று ஆதித்யன் நேராக வானிடையை யடைந்த காலத்தில் அதாவது மத்யான்னமாகும் பொழுது, அப்பொழுது அன்னப் பறவைகளடர்ந்து, ஸாரஸமென்கின்ற புள்ளினங்கள் நிறைந்து, முனிக்கூட்டங்கள் சூழ்ந்து, புண்ணிய நதி ஜலத்தோடு கூடின அக்கங்கையைக்கண்டு, ஸ்ரீராம லக்ஷ்மணனோடு முனிவரெல்லோரும் மிக்க ஆனந்தங்கொண்டு அப்புண்ணிய நதியின் கரையின் மீதே ஆச்ரமஸ்தானம் செய்துகொண்டு வஸிப்பதற்கு மிக்க ஆனந்தகரமாயும், மனோஹரமாயுமிருப்பதால் அவ்விடத்தில், ஓர் ஆச்ரமஸ்தானத்தைச் சீராகச் செய்தனர்.

10-11. (க-ரை) மிகப்பரிசுத்தமான நீர்த்தத்தை யுடைய அந்த கங்கை

विविशुर्जाह्नवीतीरे शुचौ मुदितमानसाः ।
विश्वामित्रं महात्मानं परिवार्य समन्ततः ॥ 11 ॥
अथ तत्र तदा रामो विश्वामित्रमथाब्रवीत् ।
भगवञ्श्रोतुमिच्छामि गङ्गां त्रिपथगां नदीम् ॥ 12 ॥
त्रैलोक्यं कथमाक्रम्य गता नदनदीपतिम् ॥ 13 ॥

முறைப்படி அல்லது சாஸ்திரப்படி, **स्नात्वा** - நீராடி, **पितृदेवता:** - பித்ரு தேவதை களை, **संतर्प्य** - நன்கு திருப்தி செய்து, **अग्निहोत्राणि** - அக்நிஹோத்ரங்களை, **हुत्वा च एव** - ஹோமமும் செய்து, **अमृतवत्** - அமிர்தம் போன்ற, **हवि:** - ஹவிஸ்ஸை, **प्राश्य** - உட்கொண்டு, **मुदितमानसा:** - களிப்புற்ற மனமுடையவர்களாய், **जाह्नवीतीरे** - கங்கையின் கரையில், **शुचौ** - பரிசுத்தமான (இடத்தில்), **महात्मानं** - மஹாத்மாவா னான, **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, **परिवार्य** - சூழ்ந்து, **समन्ततः** - நாற்புறங்களி லும், **विविशु:** - உட்கார்ந்தனர்.

12. (ப-ரை) **अथ** - பிறகு, **राम:** - இராகவன், **तत्र** - அங்கு, **विश्वामित्रं** - விசுவாமித்திரரை, (குறித்து), **भगवन्** - மாஹாத்மியமுடையவரே! **त्रिपथगां** - மூன்று வழிகளையுடைய, **गङ्गां** - கங்கை யென்கிற, **नदीं** - நதியின், (விருத்தாந்தத்தை), **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छामि** - விரும்புகின்றேன், **अथ** - (என்கிற) ப்ரச்நத்தை, **अब्रवीत्** - சொன்னார்.

13. (ப-ரை) **त्रैलोक्यं** - (இக்கங்கை) மூன்றுலகங்களை, **आक्रम्य** - ஆக்ரமித்து, **कथं** - எவ்விதம், **नदनदीपतिम्** - நதத்திற்கும், நதிக்கும் பதியான, (கடலை), **गता** - அடைகின்றது.

யில் அம்மஹர்ஷிக ளெல்லோரும், சாஸ்திரப்படி முறை தவறாமல் நீராடிக் கொண்டு, பிறகு, தேவரிஷி பித்ரு தர்ப்பணம், ப்ரம்மயக்ஞ முதலான அக்நி ஹோத்ராதிகளை யெல்லாம் கிரமமாகச் செய்து, அமிர்தம் போன்ற ஹோமாவசேஷ மான ஹவிஸ்ஸை யுண்டு, பரிசுத்தமான இடத்தில், மிகச் சந்தோஷமுடையவர் களாய் விசுவாமித்திர மஹரிஷியைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டனர்.

12-13. (க-ரை) அனைவரும் இப்படி உட்கார்ந்த பிறகு; ஸ்ரீராகவன், மஹாப் பிராக்ஞரான விசுவாமித்திர மஹரிஷியை நோக்கி, ஹே காதி புத்திரரே! மூன்று வழிகளுடைய இம்மஹா நதியான கங்கையின் மகிமையைக் கேட்க ஆவ

चोदितो रामवाक्येन विश्वामित्रो महामुनिः ।
वृद्धिं जन्म च गङ्गाया वक्तुमेवोपचक्रमे ॥ 14 ॥

शैलेन्द्रो हिमवान्नाम धातूनामाकरो महान् ।
तस्य कन्याद्वयं राम रूपेणाप्रतिमं भुवि ॥ 15 ॥

या मेरुदुहिता राम तयोर्माता सुमध्यमा ।
नाम्ना मनोरमा नाम पत्नी हिमवतः प्रिया ॥ 16 ॥

---

14. (ப-ரை) **महामुनिः** - சிறந்த முனிவரான, **विश्वामित्रः** - விசுவாமித்திரர், **रामवाक्येन** - ஸ்ரீராகவன் வார்த்தையினால், **चोदितः** - ஏவப்பட்டவராய், **गङ्गायाः** - கங்கையினுடைய, **जन्म च** - உற்பத்தியையும், **वृद्धिं** - (மூன்றுலகங்களையும் அடையும்படியான), விருத்தியையும், **वक्तुं** - சொல்வதற்கு, **उपचक्रमे** - ஆரம்பித்தனர்.

15. (ப-ரை) **धातूनां** - (இரும்பு முதலான) உலோகங்களுக்கு, **आकरः** - இருப்பிடமும், **हिमवान्नाम** - ஹிமவானென்ற பெயருடையதும், **महान्** - பெரிதுமான, **शैलेन्द्रः** - பர்வதச் சிரேஷ்டம், (இருக்கின்றது), **राम** - ஹே ராகவா! **तस्य** - அந்த, (ஹிமவானுக்கு), **रूपेण** - ரூபத்தினால், **भुवि** - பூமியில், **अप्रतिमं** - நிகரில்லாத, **कन्या** - கன்னிகைகளுடைய, **द्वयं** - இரண்டு, (உண்டாயின).

16. (ப-ரை) **राम** - ரகுகுல திலகனே! **या** - எவள், **मेरुदुहिता** - மேரு பர்வதத்திற்கு மகளும், **हिमवतः** - ஹிமவானுக்கு, **प्रिया** - அன்புள்ள, **पत्नी** - பார்யை [illegible] **नाम्ना** - பெயரினால், **मनोरमा** - [illegible], **सुमध्यमा** - நல் [illegible] (அவள்) **तयोः** - அவ்விருவர்களுக்கு, **माता** - தாய்.

உடையவனாயிருக்கின்றேன். இக்கங்கை என்னும் மஹாநதியானது மூன்றுலகங்களிலும் பெருகி, நதம், நதிக்குப் பதியான ஆலைகள் இவைகளை எப்படி அடைகின்றது? அவைகளையெல்லாம் விவரமாய் விளங்க விரும்புகின்றேன். என்று கேட்கலானார்.

14. (க-ரை) விசுவாமித்திர மஹரிஷியும் ஸ்ரீராகவனுடைய அவ்வினிய சொற்களைக் கேட்டு, வெகு சந்தோஷத்துடன், அம்மஹாநதியான கங்கையின், பிறப்பையும், அதன் சிறப்பையும், அது மூவுலகங்களிலும் வியாபித்த விருத்தாந்தத்தையும் பற்றி விவரமாய் சொல்லவாரம்பித்தனர்.

15-16. (க-ரை) கௌஸல்யா தேவிக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணும் ஹே குழந்தாய்! கேள், அநேக தாதுக்களுக்கும், மூலிகைகளுக்கும், மஹரிஷிகள் ஏகாந்தமாய் தவம் புரிவதற்கு மிகவும் சௌக்கியமான இருப்பிடமாய், ஹிமவானென்கிற பெயரோடு கூடின ஓர் பெரிய மலை இருக்கின்றது. ஹிமவானென்

तस्यां गङ्गेयमभवज्ज्येष्ठा हिमवतः सुता ।
उमा नाम द्वितीयाभूत्कन्या तस्यैव राघव ॥ 17 ॥
अथ ज्येष्ठां सुराः सर्वे देवतार्थचिकीर्षया ।
शैलेन्द्रं वरयामासुर्गङ्गां त्रिपथगां नदीम् ॥ 18 ॥
ददौ धर्मेण हिमवांस्तनयां लोकपावनीम् ।
स्वच्छन्दपथगां गङ्गां त्रैलोक्यहितकाम्यया ॥ 19 ॥

17. (ப-ரை) **राघव** - ரகுநந்தனா! **तस्यां** - அம்மனோரமையிடத்தில், **तस्य** - அந்த, **हिमवतः** - ஹிமயமலைக்கு. **गङ्गा** - கங்கையென்ற பெயருடைய, **इयं** - இந்த, **ज्येष्ठा** - மூத்தவளான. **सुता** - பெண். **अभवत्** - பிறந்தனள். **तस्यैव** - அந்த ஹிமவானுக்கே, **नाम्ना** - பெயரினால். **उमानाम** - உமை யென்ற பெயருடையவளான, **द्वितीया** - இரண்டாவதுமவள், (பெண்), (**अभूत्** - உண்டானள்).

18. (ப-ரை) **सर्वे** - அனைவருமான, **सुराः** - தேவர்கள், **देवतार्थचिकीर्षया** - தேவதைகளுக்குப் பிரயோஜனத்தைச் செய்யவேணுமென்ற இச்சையால், **शैलेन्द्रं** - பர்வதச் சிரேஷ்டத்தை, **ज्येष्ठां** - மூத்தவளும், **त्रिपथगां** - ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் இம்மூன்று வழியை அடைந்தவளும், **नदीम्** - நதிரூபியுமான, **गङ्गां** - கங்கையை, **वरयामासुः** - கோரினர்.

19. (ப-ரை) **हिमवान्** - ஹிமவானானவர், **धर्मेण** - தர்மத்தினாலே, **लोकपावनीम्** - உலகங்களை பரிசுத்தம் செய்பவளும், **स्वच्छन्दपथगां** - தன்னிச்சையாலே செய்யப்பட்ட வழியினால் செல்லப்பட்டவளும், **तनयां** - மகளுமான, **गङ्गां** - கங்கையை,

---

னின்ற அப்பெரிய பர்வதத்திற்கு நிகரில்லாத ரூப லாவண்யத்தோடு கூடிய பெண்கள் இருவர் உண்டு. மேரு பர்வதத்திற்கு மகளும், ஹிமவானுக்கு அன்புள்ள பத்தினியுமான மனோரமை என்பவளிடத்தில் இக்கங்கை என்பவள் உண்டானாள்.

17. (க-ரை) ஹே ராகவா! அந்த ஹிமவானுக்கு, தன்னுடைய பிரியமான பத்தினியான மனோரமையிடத்தில், கங்கையென்ற பெயருடைய மூத்தபெண்ணும், உமையென்ற பெயருடைய இரண்டாவது பெண்ணும் உண்டானார்கள்.

18. (க-ரை) மூத்த மகளான அக்கங்கையை, தேவர்களுக்குப் பிரயோஜனத்தைச் செய்யவேண்டுமென்ற இச்சையால், வானவர்கள், வானுலகத்திற்கு அழைத்துப்போகவேண்டி, பர்வத ராஜனை ஹிமவானை வேண்டிக்கொண்டனர்.

19. (க-ரை) அவ்வானவர்களுடைய அவ்வேள்வியை, அப்பர்வத ராஜனும், மலைகளுக் கரசனாகையாலே, யாசகரின் கோரிக்கையைக் கெடுக்கலாகாதென்கின்ற தர்மத்தை நினைத்து, அப்படியே பூர்த்தி செய்துகொடுக்க, தேவர்

प्रतिगृह्य ततो देवास्त्रिलोकहितकारिणः ।
गङ्गामादाय तेऽगच्छन्कृतार्थेनान्तरात्मना ॥ 20 ॥
या चान्या शैलदुहिता कन्यासीद्रघुनन्दन ।
उग्रं सा व्रतमास्थाय तपस्तेपे तपोधना ॥ 21 ॥
उग्रेण तपसा युक्तां ददौ शैलवरः सुताम् ।
रुद्रायाप्रतिरूपाय उमां लोकनमस्कृताम् ॥ 22 ॥

त्रैलोक्यहितकाम्यया - மூன்றுலகங்களுக்கும் நன்மையைச் செய்யவேண்டுமென்கிற விருப்புற்ற புத்தியால், **ददौ** - (ஹிமவான்) கொடுத்தனர்.

20. (ப-ரை) **ततः** - பிறகு, **त्रिलोकहितकारिणः** - மூன்றுலகங்களுக்கும் நன்மையைச் செய்கின்றவர்களான, **ते** - அந்த, **देवाः** - தேவர்கள், **गङ्गां** - கங்கையை, **प्रतिगृह्य** - வாங்கி, **आदाय** - (தங்களிடத்தில் அதாவது தேவலோகத்தில்), வைத்துக் கொண்டு, **कृतार्थेन** - செய்யப்பட்ட, **अन्तरात्मना** - பிரயோஜனமுடைய அந்தக்கரணத்தோடு, (கூடினவர்களாய்), **अगच्छन्** - சென்றனர்,

21. (ப-ரை) **रघुनन्दन** - ரகுகுலத்திற் கானந்தத்தை யளிக்கின்றவனே! **शैलदुहिता** - பர்வதத்தின் பெண்ணான, **अन्या** - வேறொரு, **या** - எந்த, **कन्या च** - கன்னிகையும், **आसीत्** - இருந்தாளோ, (அவள்), **तपोधना** - தவத்தையே தனமாயுடையவளாய், **उग्रं** - தீக்ஷணமான, **व्रतं** - விரதத்தை, **आस्थाय** - அடைந்து, **तपः** - தவத்தை, **तेपे** - செய்துவந்தனள்.

22. (ப-ரை) **शैलवरः** - பர்வதச் சிரேஷ்டன், **उग्रेण** - குரூரமான, **तपसा** - தவத்தோடு, **युक्तां** - கூடினவளும், **लोकनमस्कृताम्** . உலகங்களால் நமஸ்கரிக்கத் தகுந்தவளும், **सुताम्** - (தம்) மகளுமான, **उमां** - உமையென்பவளை, **अप्रतिरूपाय** நிகரற்ற ரூபமுடையவரான, **रुद्राय** - ருத்திரனின் பொருட்டு, **ददौ** - கொடுத்தான்.

களும், இஷ்டப்படி வழி செய்துகொண்டு பெருகவல்ல மஹிமை பொருந்திய இவளை தேவலோகத்திற்காக யாசித்தனர்.

20. (க-ரை) இப்படி ஹிமவானால் கொடுக்கப்பட்ட அந்த கங்கையை, தேவர்கள் வாங்கி வைத்துக்கொண்டு, இச்சைக் கிசைந்தபடி வழி செய்து பெருக வல்ல மஹிமை பொருந்திய இவளை தேவலோகத்திற் கழைத்துச் சென்றனர்.

21-22. (க-ரை) ஹே ராகவா! ஹிமவானின் இரண்டாவது பெண்ணான, உமையென்பவள் தவத்தையே தனமாகக்கொண்டு, தவம் செய்வதில் மிக்க அவா கொண்டு, வெகு தீக்ஷணமான விரதத்தையடைந்து குரூரமான தவம் செய்து வந்தனள். பர்வதச் சிரேஷ்டனான ஹிமவான், உமை யென்பவளை, மூன்று உலகத்தாலும் பூஜிக்கப் பெற்றவளாயும், வெகு ரூபமுடையவருமான ருத்திரனின் பொருட்டு, விவாஹம் செய்து கொடுத்தனன்.

एते ते शैलराजस्य सुते लोकनमस्कृते ।
गङ्गा च सरितां श्रेष्ठा उमा देवी च राघव ॥ 23 ॥
एतत्ते सर्वमाख्यातं यथा त्रिपथगा नदी ।
खं गता प्रथमं तात गतिं गतिमतां वर ॥ 24 ॥
सैषा सुरनदी रम्या शैलेन्द्रस्य सुता तदा ।
सुरलोकं समारूढा विपापा जलवाहिनी ॥ 25 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
पञ्चत्रिंशः सर्गः ॥ 35 ॥

---

23. (ப-ரை) **राघव** - ரகுகுல திலகா! **लोकनमस्कृते** - உலகத்தவரால் நமஸ்கரிக்கத்தக்க, **सरितां** - நதிகளுக்குள், **श्रेष्ठ** - சிறந்தவளான, **गङ्गा च** - கங்கையும், **ते** - அந்த, **एते** - இந்த, (ருத்திரனுக்கு), **देवी** - பத்தினியுமான, **उमा च** - உமையும், **शैलराजस्य** - பர்வதராஜனுடைய, **सुते** - பெண்கள்.

24. (ப-ரை) **गतिमतां वर** - அழகாக நடப்பவருள் சிறந்தவனே, **तात** - ஹே குழந்தாய்! **यथा** - எப்படி, **प्रथमं** - முதலில், **त्रिपथगा** - கங்கையென்கின்ற, **नदी** - ஆறு, **खं** - ஆகாயத்தை, **गतिं** - ஸ்தானமாக, **गता** - அடைந்ததோ, **एतत्** - (அப்படியே) இந்த, **सर्वं** - முழுதும், **ते** - உனக்கு, **आख्यातं** - சொல்லப்பட்டது.

25. (ப-ரை) **विपापा** - பாபமற்றவளும், **रम्या** - அழகுள்ளவளும், **शैलेन्द्रस्य** - பர்வதச் சிரேஷ்டத்தினுடைய, **सुता** - பெண்ணுமான, **सा** - அந்த, **एषा** - இந்த, **सुरनदी** - தேவகங்கை, **तदा** - அப்பொழுது, **जलवाहिनी** - ஜலத்தின் பெருக்குடையவளாய், **सुरलोकं** - தேவலோகத்தை, **समारूढा** - சென்றேறினவளாக, (ஆனள்).

23-24 (க-ரை) ஹே ராகவா! உலகத்தாரால் நமஸ்கரிக்கத் தக்கவளும், நதிகளுக்குள் சிறந்தவளுமான, மிக்க மஹிமை பொருந்திய கங்கையும், தேவச் சிரேஷ்டரான ருத்திரனுக்குப் பத்தினியாகிய அந்த உமையென்பவளும், பர்வத ராஜனிடத்துண்டான பெண்களென்றும், கங்கை முதலில் தேவலோகம் சென்ற கதையும், உமை, ருத்திரனின் பொருட்டு விவாஹம் செய்து கொடுக்கப்பட்டனள் என்ற கதையும், முழுமையும், ஹே குழந்தாய்! உனக்கு உரைத்தேன்.

25. (க-ரை) பர்வதச் சிரேஷ்டனான ஹிமவானின் பெண்ணாகிய, பாபமற்ற இத்தேவ கங்கை, பரிசுத்தமான ஜலத்தின் பெருக்கையடைந்து தேவலோகத்திற் சென்றனள்.

षट्त्रिंशः सर्गः ॥ ३६ ॥

उक्तवाक्ये मुनौ तस्मिन्नुभौ राघवलक्ष्मणौ ।
अभिनन्द्य कथां वीरावूचतुर्मुनिपुङ्गवम् ॥ 1 ॥

धर्मयुक्तमिदं ब्रह्मन्कथितं परमं त्वया ।
दुहितुः शैलराजस्य ज्येष्ठाया वक्तुमर्हसि ॥ 2 ॥
विस्तरं विस्तरज्ञोऽसि दिव्यमानुषसंभवम् ॥ 2½ ॥
त्रीन्पथो हेतुना केन प्लावयेल्लोकपावनी ॥ 3 ॥

---

1. (ப-ரை) **तस्मिन्** - அந்த, **मुनौ** - விசுவாமித்திரர், **उक्तवाक्ये** - சொல்லப்பட்ட உத்தரமுடையவரா யிருக்கையில், **वीरौ** - சூரரான, **राघवलक्ष्मणौ** - ராமலக்ஷ்மணர்கள், **उभौ** - இருவரும், **कथां** - கதையை, **अभिनन्द्य** - சிலாஹித்து, **मुनिपुङ्गवम्** - முனிச்சிரேஷ்டரை, (க்குறித்து), **ऊचतुः** - சொன்னார்கள்.

2-2½. (ப-ரை) **ब्रह्मन्** - பிராம்மணோத்தமரே! **त्वया** - உம்மால், **शैलराजस्य** - பர்வதராஜனுடைய, **दुहितुः** - பெண்ணான, **ज्येष्ठायाः** - மூத்தவளுடைய, **धर्मयुक्तं** - தர்மத்தோடு கூடினதும், **परमं** - சிறந்ததுமான, **इदं** - இந்த, (கதை), **कथितं** - (உம்மால்) சொல்லப்பட்டது, **दिव्यमानुषसंभवम्** - (அவளுடைய) தேவலோகத்திலும், பூலோகத்திலுமுண்டான, **विस्तरं** - விருத்தாந்தத்தை, **वक्तुं** - சொல்லுவதற்கு, **अर्हसि** - தகுந்தவர், **विस्तरज्ञः** - விருத்தாந்தத்தை அறிந்தவராக, **असि** - ஆகின்றீர்.

3. (ப-ரை) **लोकपावनी** - உலகத்தைப் பரிசுத்தஞ் செய்கின்ற, **केन** - (அக்கங்கை) எந்த, **हेतुना** - காரணத்தினால், **त्रीन्पथ** - மூன்று வழிகளை, **प्लावयेत्** - பெறுகின்றனள்.

---

1. (க-ரை) இவ்வாறு அம்மஹரிஷியான விசுவாமித்திரருரைத்த வசனத்தைக்கேட்ட இராம லக்ஷ்மணரிருவரும், அதை சிலாஹித்து மிக்க ஆனந்தங்கொண்டு, முனிச்சிரேஷ்டரைப் பார்த்து மறுபடியும் இவ்வாறு கேட்கலாயினர்.

2-4. (க-ரை) பிராம்மணோத்தமரே! மிகப் பாவனமான இக்கதையைக் கேட்டுக் களித்தோம். அந்த பர்வதராஜனுடைய மூத்த பெண்ணான இக்கங்கையானவள், எவ்வாறு தேவலோகஞ் சென்றனள் என்பதையும், மீண்டும், அங்கிருந்து பூலோகமெப்படி வந்தனள் என்னும், இவை முதலான சரித்திரங்களை வெகு விஸ்தாரமாகக் கேட்க விரும்புகின்றோம். இவைகளெல்லாம் விஸ்தாரமாகச் சொல்ல தேவரீர்தான் முற்றமுணர்ந்தவர். உலகத்தைப் பரிசுத்தம்

कथं गङ्गा त्रिपथगा विश्रुता सरिदुत्तमा ।
त्रिषु लोकेषु धर्मज्ञ कर्मभिः कैः समन्विता ॥ 4 ॥
तथा ब्रुवति काकुत्स्थे विश्वामित्रस्तपोधनः ।
निखिलेन कथां सर्वामृषिमध्ये न्यवेदयत् ॥ 5 ॥
पुरा राम कृतोद्वाहो नीलकण्ठो महातपाः ।
दृष्ट्वा च स्पृहया देवीं मैथुनायोपचक्रमे ॥ 6 ॥

4. (ப-ரை) **धर्मज्ञ** - தர்மத்தை யுணர்ந்தவரே! **त्रिपथगा** - மூன்று வழிகளை யடைகின்ற, **गङ्गा** - கங்கை, **कैः** - எந்த, **कर्मभिः** - காரியங்களால், **समन्विता** - கூடினதாய், **त्रिषु लोकेषु** - மூன்று லோகங்களில், **सरिदुत्तमा** - நதிகளுள் சிறந்ததாக, **कथं** - எப்படி, **विश्रुता** - பிரஸித்தியானது.

5. (ப-ரை) **काकुत्स्थे** - காகுத்ஸ்தன், **तथा** - இப்படி, **ब्रुवति** - சொல்லுகையில், **तपोधनः** - தவத்தையே தனமாயுடைய, **विश्वामित्रः** - விச்வாமித்திரர், **सर्वां** - ஸமஸ்தமான, **कथां** - கதையை, **ऋषिमध्ये** - ரிஷிகளின் மத்தியில், **निखिलेन** - [illegible] விஸ்தரிப்பதிஞலே, **न्यवेदयत्** . அறிவிப்பித்தனர்.

6. (ப-ரை) **राम** - இராகவா! **पुरा** - முன்னொருகாலத்தில், **महातपाः** - வெகு

செய்யவல்ல இக்கங்கை, எக்காரணத்தால் [illegible] பூமியில் வந்து, [illegible] திரிபதகையென்று மூவுலகிலும் பிரஸித்தி பெற்றனள். [illegible] நதிகளுக்குள் சிறந்ததென்று பெயர் பெற்றனள். என்று வினவினார்.

5. (க-ரை) ஸ்ரீராகவன் இவ்வண்ணம் கேட்க, பெரும் ஞானியாயும், எல்லாம் தெரிந்தவருமான அந்த விச்வாமித்திர மஹரிஷியானவர், ரிஷிகளெல்லோரும் சுற்றிருக்கும் அந்த ஸபையின் நடுவில் [illegible] கதையை, வெகு குதூஹலத்துடன் ஸவிஸ்தாரமாகச் சொல்லத்தொடங்கினார்.

6-7½. (க-ரை) ஹே ராமபத்திரா! கேள், முன்னொரு காலத்தில் மஹா தவத்தையுடையவரும், தேவர்களிற் சிறந்தவருமான, மஹாதேவனானவர், பார்வதியை விவாஹம் செய்துகொண்டு, பார்வதியைப் பார்த்து வெகு ஆவலோடே போகத்தைச் செய்துகொண்டு வந்தனர். அப்பேர்ப்பட்டவருக்கு தேவ வருஷத்தால் நூறு வருஷங்களானது சென்றது. அவ்வளவு காலம் போகத்திலிருந்தும், அந்த பார்வதியினிடத்தில் புத்திரனானவன் உண்டாகவில்லை.

शितिकण्ठस्य देवस्य दिव्यं वर्षशतं गतम् ।
तस्य संक्रीडमानस्य महादेवस्य धीमतः ॥ 7 ॥
न चापि तनयो राम तस्यामासीत्परंतप ॥ 7½ ॥
ततो देवाः समुद्विग्नाः पितामहपुरोगमाः ।
यदिहोत्पद्यते भूतं कस्तत्प्रतिसहिष्यते ॥ 8½ ॥
अभिगम्य सुराः सर्वे प्रणिपत्येदमब्रुवन् ॥ 9 ॥

தவமுடைய, **नीलकण्ठः** - பரமசிவன், **कृतोद्वाहः** - செய்யப்பட்ட விவாகமுடையவராக, **देवीं** - (பார்வையான) பார்வதியை, **दृष्ट्वा** - பார்த்து, **स्पृहया च** - ஆசையாலே, **मैथुनाय** - இருவர் சேர்ந்து செய்யும் காரியத்தின் பொருட்டு அதாவது போகத்தின் பொருட்டு, **उपचक्रमे** - ஆரம்பித்தனர்.

7-7½. (ப-ரை) **देवस्य** - பூஜ்யராயிருக்கின்ற, **तस्य** - அந்த, **शितिकण्ठस्य** - மஹாதேவருக்கு, **संक्रीडमानस्य (सतः)** - விளையாடிக் கொண்டிருக்கிறவருக்கு, **दिव्यं** - தேவதைகளுடையதாயிருக்கின்ற, **वर्षशतं** - வருஷங்களுடைய நூறானது அதாவது நூறு வருஷங்களானது, **गतम्** - சென்றது, **राम** - ஹே ராகவா! **परंतप** - சத்ருக்களைத் தபிக்கச் செய்கின்றவனே! **धीमतः** - புத்திமானாயிருக்கின்ற, **महादेवस्य** - மஹாதேவருக்கு, **तस्यां** - அந்த பார்வதியினிடத்தில், **तनयः** - புத்திரனானவன், **न चापि आसीत्** - உண்டாகவேயில்லை.

8½-9. (ப-ரை) **ततः** - பிறகு, **पितामहपुरोगमाः** - ப்ரும்மாவை முன்னிட்ட, **देवाः** - தேவர்கள், **समुद्विग्नाः** - பயந்தவர்களாக, **इह** - இப்பார்வதியினிடத்தில், **यत्भूतं** - எந்த புத்திரன், **उत्पद्यते** - உண்டாகப்போகின்றானோ, **तत्** - அவனை, **कः** - எவன், **प्रतिसहिष्यते** - பொருக்கவல்லன், (என்று அதைத் தடுக்க எத்தனம் செய்வதற்காக), **सर्वे सुराः** - எல்லா தேவர்களும், **अभिगम्य** - (மஹாதேவரை) அடைந்து, **प्रणिपत्य** - நமஸ்கரித்து, **इदं** - இதை, **अब्रुवन्** - சொன்னார்கள்.

8½-9. (க-ரை) இப்படி மஹாதேவனானவர் பார்வதியோடு அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்ட எல்லா தேவர்களும் மிகவும் பயந்து, ப்ரும்மதேவரை அடைந்து, இப்பொழுது இவர்களுக்குப் பிறக்கும் புதல்வனை யாரால் தாங்க முடியும். இது மூன்றுலகங்களையும் அழித்துவிடுமே யென்று நடுநடுங்கி, ப்ரும்ம தேவருடன் எல்லா தேவர்களும், மஹாதேவனை யடைந்து, நமஸ்கரித்து இவ் வார்த்தைகளைச் சொல்லலாயினர்.

देवदेव महादेव लोकस्यास्य हिते रत ।
सुराणां प्रणिपातेन प्रसादं कर्तुमर्हसि ॥ 10 ॥
न लोका धारयिष्यन्ति तव तेजः सुरोत्तम ।
ब्राह्मेण तपसा युक्तो देव्या सह तपश्चर ॥ 11 ॥
त्रैलोक्यहितकामार्थं तेजस्तेजसि धारय ।
रक्ष सर्वानिमाँल्लोकान्नालोकं कर्तुमर्हसि ॥ 12 ॥

10. (ப-ரை) **अस्य लोकस्य** - *இந்த உலகத்தினுடைய,* **हिते रत** - *நன்மையின் பொருட்டு இச்சையுடையவரும்,* **देवदेव** - *தேவாதிதேவருமான,* **महादेव** - *ஹே மஹாதேவனே!* **सुराणां** - *தேவர்களுடைய,* **प्रणिपातेन** - *வணங்குவதினால் அல்லது நமஸ்கரிப்பதினால்,* **प्रसादं** - *அனுக்கிரஹத்தை,* **कर्तुं** - *செய்வதற்கு,* **अर्हसि** - *(நீர்) தக்கவராகின்றீர்.*

11-12. (ப-ரை) **सुरोत्तम** - *ஹே தேவ சிரேஷ்டரே!* **तव तेजः** - *உம்முடைய தேஜஸ்ஸை,* **लोकाः** - *உலகங்கள்,* **न धारयिष्यन्ति** - *தாங்கமுடியாது,* **ब्राह्मेण** - *ப்ரும்ம ஸம்பந்தமான,* **तपसा** - *தவத்தோடு,* **युक्तः** - *கூடி,* **देव्या सह** - *பார்வதியுடன் கூட,* **तपः** - *தவத்தை,* **चर** - *செய்யும்,* **त्रैलोक्यहितकामार्थं** - *மூவுலகங்களின் நன்மையாகின்ற கோரிக்கையின் பொருட்டு,* **तेजः** - *தேஜஸ்ஸை,* **तेजसि** - *(தேஜோமயமான), சரீரத்திலே,* **धारय** - *தடுத்துக்கொள்ளவும்,* **इमान्** - *இந்த,* **सर्वान्** - *எல்லா,* **लोकान्** - *உலகங்களை,* **रक्ष** - *காப்பாற்றும்,* **अलोकं** - *உலகமில்லாமையை,* **कर्तुं** - *செய்வதற்கு,* **नार्हसि** - *தகுந்தவராகீர்.*

10. (க-ரை) *ஹே தேவதேவா! தேவர் உலகமனைத்திற்கும் நன்மையைச் செய்வதில் வெகு ஊக்கமுடையவராதலால் எங்களெல்லோருடைய வணக்கத்திற்கும், பிரார்த்தனைக்கு மிசைந்து அருள்புரிந்து எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்றனர்.*

11-12. (க-ரை) *ஸ்வாமி! தேவருடைய தேஜஸ்ஸை இவ்வுலகம் பொறுக்கமாட்டாது. ஆகையால் தேவர், பார்வதி தேவியுடன் கிருபை செய்து வேதோக்தமான யோகத்துடன் கூடி தவம் செய்யக்கடவீர். மூவுலகங்களும் நன்மையைப் பெறுவதின் நிமித்தம், தேவரீருடைய ரேதஸ்ஸை தேஜோமயமான உம்முடைய திருமேனியிலேயே தடுத்துக்கொள்ளக் கடவீர். உலகங்களையெல்லாம் நாசஞ் செய்ய முயல்வது தேவரீருக்குத் தகாது.*

देवतानां वचः श्रुत्वा सर्वलोकमहेश्वरः ।
बाढमित्यब्रवीत्सर्वान्पुनश्चेदमुवाच ह ॥ 13 ॥

धारयिष्याम्यहं तेजस्तेजस्येव सहोमया ।
त्रिदशाः पृथिवी चैव निर्वाणमधिगच्छतु ॥ 14 ॥

यदिदं क्षुभितं स्थानान्मम तेजो ह्यनुत्तमम् ।
धारयिष्यति कस्तन्मे ब्रुवन्तु सुरसत्तमाः ॥ 15 ॥

13-14. (ப-ரை) **सर्वलोकमहेश्वरः** - எல்லா உலகத்திற்கும் ஈசனான, (மஹாதேவன்), **देवतानां** - தேவதைகளுடைய, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **बाढमिति अब्रवीत्** - அப்படியே ஆகட்டுமென்று சொன்னார். **सर्वान्** - எல்லாத் தேவர்களையும், (நோக்கி), **पुनः** - மறுபடியும், **इदं** - இதை, **उवाच ह** - சொன்னார். **अहं** - நான், **सहोमया-(उमयासह)** - பார்வதியோடு கூட என் தேஜஸ்ஸை, **तेजसि** - தேஜஸ்ஸிலேயே, **धारयिष्यामि** - தரித்துக்கொள்ளுகிறேன், **त्रिदशाः** - தேவர்களும், **पृथिवी च** - இந்த பூமியும், மற்ற உலகங்களும், **निर्वाणं** - சௌக்கியத்தை, **अधिगच्छतु** - அடையட்டும்.

15. (ப-ரை) **मम** - என்னுடைய, **यत्** - எந்த, **इदं** - இந்த, **अनुत्तमम्** - மிகச் சிரேஷ்டமான, **तेजः** - தேஜஸ், **स्थानात्** - தன் இருப்பிடத்திலிருந்து, **क्षुभितं** - நழுவிவிட்டதோ, **तत्** - அந்த தேஜஸ்ஸை, **कः** - எவன், **धारयिष्यति** - தரிக்க வல்லவன், (அதை), **सुरसत्तमाः** - தேவசிரேஷ்டர்கள், **मे** - எனக்கு, (பொறுமையுடன்), **ब्रुवन्तु** - சொல்லக்கடவீர்கள்.

13-14. (க-ரை) இப்படி எல்லாத் தேவர்களும் அந்த மஹாதேவனை வேண்டிக்கொள்ளவே, அத்தேவர்களுடைய வார்த்தையை அங்கீகரித்து, மஹாதேவன், தேவர்களே! அப்படியே ஆகுக. பார்வதியோடுகூட நான் என் தேஜஸ்ஸை நிறுத்திக் கொள்ளுகின்றேன். நீங்களெல்லோரும் சுகத்தை அடையுங்கள், என்று பதிலளித்தனர்.

15. (க-ரை) அப்படி இருக்கையில் என் தேஜஸ்ஸில் யாதொரு பாகம் ஸ்தானத்திலிருந்து நெகிழ்ந்து விழுமாயின் அதைத் தாங்குதல் தாங்கிக்கொள்ள முடியாது. ஆனால், அப்படிப்பட்ட என்னுடைய தேஜஸ்ஸை தாங்கிக்கொள்ள சக்தியுள்ளவ யாவரேனும் இருப்பாராயின், ஹே தேவர்களே! அதை எனக்குச் சொல்லவும், என்று மொழிந்தனர்.

एवमुक्तास्ततो देवाः प्रत्यूचुर्वृषभध्वजम् ।
यत्तेजः क्षुभितं ह्येतत्तद्धरा धारयिष्यति ॥ 16 ॥

एवमुक्तः सुरपतिः प्रमुमोच महीतले ।
तेजसा पृथिवी येन व्याप्ता सगिरिकानना ॥ 17 ॥

ततो देवाः पुनरिदमूचुश्चाथ हुताशनम् ।
प्रविश त्वं महातेजो रौद्रं वायुसमन्वितः ॥ 18 ॥

16. (ப-ரை) ततः - [illegible] एवं - [illegible] उक्ताः - [illegible] லப்பட்டவளவில், देवाः - தேவர்கள், [illegible] वृषभध्वजम् - [illegible] கொடியையுடைய, ([illegible]) यत् तेजः [illegible] நழுவுகின்றதோ, तत् - அதை, धरा - [illegible] धारयिष्यति - [illegible] அவள், ([illegible]), प्रत्यूचुः - [illegible].

17. (ப-ரை) सुरपतिः - [illegible] एवं - [illegible] उक्तः - [illegible] டவராய், येन तेजसा - எந்த [illegible] सगिरिकानना [illegible] மலைகளோ டும் கூடியிருக்கின்ற, पृथिवी - [illegible] व्याप्ता - [illegible] கின்ற தோ, महीतले - [illegible] प्रमुमोच - [illegible].

18. (ப-ரை) ततः [illegible] अथ - [illegible] देवाः [illegible], पुनः - [illegible], हुताशनम् - அக்கினியை, [illegible] त्वं - [illegible] वायु समन्वितः - [illegible] கூடி, रौद्रं - ருத்ர [illegible], महातेजः - [illegible], प्रविश - [illegible], (என்று), इदं - இதை, ऊचुः - [illegible].

---

16. (க-ரை) [illegible] வசனத்தைக் கேட்ட தேவர்கள் [illegible] சிவனை நோக்கி [illegible]! [illegible] அதனை [illegible] ளவள் தாங்கிக்கொள் [illegible].

17. (க-ரை) [illegible] சொல்லவே, உமாபதியான பரமசிவனும், [illegible] விட்டுவிட்டார். அப்படி சிதறிய அந்த [illegible] மலைகளும், வனங்களு மாகி பூமியெங்கும் பரவிவிட்டது.

18. (க-ரை) அந்த பரமசிவன் சிதறிய [illegible] பூமியெங்கும் பரவின

तदग्निना पुनर्व्याप्तं संजातः श्वेतपर्वतः ।
दिव्यं शरवणं चैव पावकादित्यसन्निभम् ॥ 19 ॥
यत्र जातो महातेजाः कार्तिकेयोऽग्निसंभवः ॥ 19½ ॥
अथोमां च शिवं चैव देवाः सर्षिगणास्तदा ।
पूजयामासुरत्यर्थं सुप्रीतमनसस्ततः ॥ 20½ ॥

19-19½. (ப-ரை) पुनः - மறுபடி, तत् - அந்த, (ரேதஸ்ஸு), अग्निना - அக்கினியால், व्याप्तं - வியாபிக்கப்பட்டதாய், श्वेतपर्वतः - வெண்மலையாக, संजातः - உண்டாயிற்று, यत्र - எங்கு, कार्तिकेयः - கிருத்திகைக்குப் புத்திரனும், अग्निसंभवः - அக்கினியினிடத்தி லுண்டானவனும், महातेजाः - மிகத் தேஜஸ்ஸுடையவனுமான, (குமாரஸ்வாமி), जातः - உண்டாயினனோ, पावकादित्य सन्निभम् - (அப்படிப்பட்ட), அக்கினிக்கும், சூரியனுக்கும் நிகரான, दिव्यं - சிறந்த, शरवणं चैव - நாணற்காடாகவும், संजातः - உண்டாயிற்று.

20½. (ப-ரை) अथ - பிறகு, तदा - அப்பொழுது, सर्षिगणाः - முனிக்கூட்டங்களோடு கூடி, देवाः - தேவர்கள், ततः - அதனால், सुप्रीतमनसः - அன்புள்ள மனமுடையவராய், उमां च - பார்வதியையும், शिवं च - பரமசிவனையும், अत्यर्थं - மிகவும், पूजयामासुः - (கொண்டாடி) பூஜித்தனர்.

மையால், பூமி கொதிக்கக்கண்டு, இதை பூமி தாங்காதென்றெண்ணி, தேவர்களெல்லோரும், அக்னியை வாயுவுடன் கூடி அந்த ருத்ர ஸம்பந்தமான பெரும் ரேதஸ்ஸை அடையும்படி வேண்டிக்கொண்டனர்கள்.

19-19½. (க-ரை) பிறகு, பரமசிவனுடைய அந்த ரேதஸ்ஸு பூமியில் அக்கினியினால் பிரவேசிக்கப்பட்டவுடன் அது பெரியதோர் வெள்ளை மலையாகவும், நாணல் காடாகவும் மாறி சூரியனுக்கும், அக்கினிக்கும் நிகராக விளங்கலாயிற்று. அந்த நாணற் காட்டிலே மிக்க தேஜஸ்ஸுடையவனாய், கிருத்திகா நக்ஷத்திரமாகிய ஆறு மீன்கள் பாலூட்டி வளர்த்தமையால் கார்த்திகேயனென்கிற அக்கினி குமாரனாகிய ஷண்முகன் பிறந்தனர்.

20½. (க-ரை) தேவர்களெல்லோரும் இப்படி, பார்வதி பரமேச்வரானுடைய ஸம்பந்தத்திற்கு இடையூறைச் செய்தமையால், அவ்விருவரும் தங்கள் மேல் கோபங்கொள்ளாமலிருக்கும்படி, பூஜித்து ஸ்தோத்திரம் செய்தனர்கள்.

अथ शैलसुता राम त्रिदशानिदमब्रवीत् ।
(अप्रियस्य कृतस्याद्य फलं प्राप्स्यथ मे सुराः ॥
इत्युक्त्वा सलिलं गृह्य पार्वती भास्करप्रभा ।)
समन्युरशपत्सर्वान्क्रोधसंरक्तलोचना ॥ 21½ ॥
यस्मान्निवारिता चैव संगतिः पुत्रकाम्यया ।
अपत्यं स्वेषु दारेषु तस्मान्नोत्पादयिष्यथ ॥ 22½ ॥

21½. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **अथ** - பிறகு, **शैलसुता** - ஹிமவானுடைய புத்திரியான பார்வதி, **त्रिदशान्** - தேவர்களை, **इदं-अब्रवीत्** - இவ்விதம் கூறினள், **सुराः** - ஹே தேவர்களே! **मे** - எனக்கு, **कृतस्य** - செய்த, **अप्रियस्य** - கெடுதலினுடைய, **फलं** - பிரயோஜனத்தை, **अद्य** - இப்பொழுது, **प्राप्स्यथ** - அடையுங்கள், **इति** - என்று, **उक्त्वा** - சொல்லி, **भास्करप्रभा** - சூரியனுடைய ஒளிபோன்ற ஒளியோடு கூடியவளும், **क्रोधसंरक्तलोचना** - கோபத்தினல் மிகச்சிவந்த கண்களையுடையவளுமான, **पार्वती** - பார்வதி தேவி, **समन्युः** - கோபத்துடன் கூடியவளாக, **सलिलं** - நீர்த்தத்தை, **गृह्य** - எடுத்துக்கொண்டு, **सर्वान्** - எல்லா, (தேவர்களையும்), **अशपत्** - சபித்தனள்.

22½. (ப-ரை) **पुत्रकाम्यया** - புத்திரனை அடையவேண்டுமென்கிற, **संगतिः** - ஸம்போகம், **यस्मात्** - எதனல், **निवारिता** - (உங்களால்) விலக்கப்பட்டதோ, **तस्मात्** - அதனல், (நீங்களும்), **स्वेषु** - தங்கள், **दारेषु** - பத்தினிகளிடங்களில், **अपत्यं** - புத்திரனை, **नोत्पादयिष्यथ** - உண்டுபண்ணுமலிருக்கக் கடவீர்கள்.

21½. (க-ரை) அப்படிக்கு தேவர்களெல்லோரும், அந்த பார்வதி பரமேச்வரர்களை, ஸ்தோத்திரஞ் செய்தபோதிலும், பார்வதி தேவி வெகு கோபங் கொண்டு, தேவர்களனைவரையும் பார்த்து, "என் பர்த்தாவுடன் போகத்தை யனுபவிக்க முடியாமல் நீங்கள் எனக்குச் செய்த கெடுதலின் பிரயோஜனத்தை இப்பொழுதே அடையப்போகின்றீர்கள்" எனக்கூறி சூரியன்போல் மிகத்தேஜஸுடன் கூடி, கோபத்தினல் கண்கள் சிவந்தவளாய் நீர்த்தத்தைக் கையிற் கொண்டு வானவர்களைச் சபித்தனள்.

22½-23½. (க-ரை) அந்தப் பார்வதி தேவியின் சினம் தணியாமல் ஹே தேவர்களே! நீங்களெனக்கு, ஸந்தானமுண்டாகா வண்ணம் செய்தமையால் நீங்களும் புத்திரஹீனர்களாக ஆகக்கடவீர்கள். இது முதல் உங்கள் பத்தினி

अद्यप्रभृति युष्माकमप्रजाः सन्तु पत्नयः ।
एवमुक्त्वा सुरान्सर्वाञ्शशाप पृथिवीमपि ॥ 23½ ॥
अवने नैकरूपा त्वं बहुभार्या भविष्यसि ।
न च पुत्रकृतां प्रीतिं मत्क्रोधकलुषीकृता ॥ 24½ ॥
प्राप्स्यसि त्वं सुदुर्मेधे मम पुत्रमनिच्छती ॥ 25 ॥
तान्सर्वान्व्रीडितान्दृष्ट्वा सुरान्सुरपतिस्तदा ।
गमनायोपचक्राम दिशं वरुणपालिताम् ॥ 26 ॥

23½. (ப-ரை) एवं - இவ்விதம், सर्वा - எல்லா, सुरान् - தேவர்களை, उक्त्वा - சொல்லி, अद्यप्रभृति - இது முதற்கொண்டு, युष्माकं - உங்களுடைய, पत्नयः - பார்யைகள், अप्रजाः - புத்திரஹீனர்களாக, (மலடிகளாக), सन्तु - ஆகக்கடவது, पृथिवीं अपि - பூமியையும், शशाप - சபித்தனள்.

24½-25. (ப-ரை) अवने - ஹே பூமியே! त्वं - நீ, नैकरूपा - அநேக ரூபமுடையவளாயும், बहुभार्या - வெகு பேர்களுக்கு மனைவியாகவும், भविष्यसि - ஆகக்கடவாய், सुदुर्मेधे - துஷ்டபுத்தியுடைய, (ஹே பூமி!) त्वं - நீ, मम - எனக்கு, पुत्रं - புத்திரனை, अनिच्छती - விரும்பாத, (நீ), मत्क्रोधकलुषीकृता - என் கோபத்தால் கலக்கஞ் செய்யப்பட்டவளாய், पुत्रकृतां - புத்திரனால் செய்யப்பட்ட, प्रीतिं - ஸந்தோஷத்தை, न च प्राप्स्यसि - அடையவே மாட்டாய்.

26. (ப-ரை) व्रीडितान् - வெட்கமடைந்த, तान् सुरान् - அந்த தேவர்களை, सर्वान् - எல்லோர்களையும், दृष्ट्वा - பார்த்து, सुरपतिः - ஸுரநாயகரான (பரமசிவன்), तदा - அப்பொழுது, वरुणपालिताम् - வருணனால் ரக்ஷிக்கப்பட்ட, दिशं - திக்கை, (குறித்து), गमनाय - போவதின் பொருட்டு, उपचक्राम - ஆரம்பித்தனர்.

கள் மலடிகளாகக் கடவர்கள். என்று சாபமிட்டனள். பிறகு, பூதேவியினிடத்திலும் மிக்க கோபங்கொண்டு மீளவும், பூதேவியையும் சபிக்கத் தொடங்கினள்.

24½-25. (க-ரை) ஹே பூமியே! எனக்குப் புத்திரனுண்டாகா வண்ணம், என் பர்த்தாவின் வீரியத்தை நீ தாங்கியபடியால், பல உருப்பெற்றவளாயும், அநேக ராஜாக்களா லாளப்பட்டவளாயும், மலடியாயு மாகக்கடவாயென்று அந்த பார்வதி தேவியானவள் மிக்க கோபத்துடன் மீளவும் சபித்தனள்.

स गत्वा तप आतिष्ठत्पार्श्वे तस्योत्तरे गिरेः ।
हिमवत्प्रभवे शृङ्गे सह देव्या महेश्वरः ॥ 27 ॥
एष ते विस्तरो राम शैलपुत्र्या निवेदितः ।
गङ्गायाः प्रभवं चैव शृणु मे सहलक्ष्मणः ॥ 28 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये
बालकाण्डे षट्त्रिंशः सर्गः ॥ 36 ॥

27. (ப-ரை) **सः महेश्वरः** - அந்த பரமசிவன், **गत्वा** - சென்று, **हिमवत्प्रभवे** - பனியையே காரணமாயுடைய, **तस्य** - அந்த, **गिरेः** - ஹிமயமலையினுடைய, **उत्तरे पार्श्वे** - வடக்குப் பக்கத்திலிருக்கின்ற, **शृङ्गे** - கொடுமுடியில், **देव्या सह** - பத்தினியோடு கூட, **तपः** - தவத்தை, **आतिष्ठत्** - அனுஷ்டித்தனர்.

28. (ப-ரை) **राम** - ஹே ராமசந்திரா! **शैलपुत्र्याः** - பார்வதியினுடைய, **एषः** - இந்த, **विस्तरः** - கதை, **ते** - உனக்கு **निवेदितः** - (என்னால்), அறிவிக்கப்பட்டது, **गङ्गायाः** - கங்கையினுடைய, **प्रभवं चैव** - பெருமையையும், (உற்பத்தியையும்) **सहलक्ष्मणः** - லக்ஷ்மணனோடு. **शृणु** - கேட்பாய்.

26-27. (க-ரை) பார்வதி தேவியானவள், மிகு கோபத்தால், ஸமஸ்த தேவர்களையும், தேவ பத்தினிகளையும், பூமி தேவியையும், இவ்வாறு சபிக்கவே, தேவர்களனைவரும் வெட்கங்கொண்டு தலை குனிந்து வருந்தினின்றதைப் பார்த்து பரமசிவன் பார்வதி தேவியோடு வடக்கு திக்கை யடைந்து, ஹிமயமலையின் வட புறத்தில் தவஞ்செய்ய வாரம்பித்தனர்.

28. (க-ரை) ஹே ராமசந்திரா! மலையரசனின் புத்திரியாகிய அந்த பார்வதியின் கதையை இவ்வாறு உனக்கு விஸ்தாரமாய் சொல்லி முடித்தேன். இனி மிக மஹிமை பொருந்திய கங்கையின் உற்பத்தியையும், பெருமையையும் சொல்லுகின்றேன். நீர் லக்ஷ்மணனுடன் கூட கேளீர் என்றனர்.

सप्तत्रिंशः सर्गः ॥ 37 ॥

तप्यमाने तपो देवे देवाः सर्षिगणाः पुरा ।
सेनापतिमभीप्सन्तः पितामहमुपागमन् ॥ 1 ॥

ततोऽब्रुवन्सुराः सर्वे भगवन्तं पितामहम् ।
प्रणिपत्य सुराः सर्वे सेन्द्राः साग्निपुरोगमाः ॥ 2 ॥

यो नः सेनापतिर्देव दत्तो भगवता पुरा ।
तपः परममास्थाय तप्यते स्म सहोमया ॥ 3 ॥

1. (ப-ரை) **ततः** - பிறகு, **देवे** - பரமசிவன், **तपः** - தவத்தை, **तप्यमाने** - தவஞ்செய்கையில், **पुरा** - முன்பு, **सर्षिगणाः** - ரிஷிக்கூட்டங்களோடு கூடின, **देवाः** - தேவர்கள், **सेनापतिं** - சேனாபதியை, **अभीप्सन्तः** - கோரினவர்களாய், **पितामहं** - ப்ருமாவை, **उपागमन्** - அடைந்தனர்.

2. (ப-ரை) **ततः** - பிறகு, **सेन्द्राः** - இந்திரனோடும், **साग्निपुरोगमाः** - முன் செல்லத்தக்க அக்கினியோடும் கூடினவரான, **सुराः** - தேவர்கள், **सर्वे** - எல்லோரும், **प्रणिपत्य** - வணங்கி, **भगवन्तं** - மகிமையுடைய, **पितामहम्** - ப்ருமமாவை, (**க்குறித்து**), **सुराः सर्वे** - தேவர்களெல்லோரும், **अब्रुवन्** - சொன்னார்கள்.

3. (ப-ரை) **देव** - ஹே ப்ருமதேவரே! **पुरा** - முன்பு, **भगवता** - பகவானாகிய உம்மை, **नः** - எங்களின் பொருட்டு, **यः** - எவன், **सेनापतिः** - சேனா நாயகனாக,

1. (க-ரை) இவ்விதம் அந்த பரமசிவன் பார்வதி தேவியுடன், ஹிமயமலையின் வடபாகத்தில் தவம் புரிந்துகொண்டிருக்கையில், தேவர்களும், மஹரிஷிகளும் ஒன்றுசேர்ந்து, நம் படைகளைக் காப்பதற்கு சேனா நாயகன் வேண்டுமே, அந்த பார்வதி தேவியின் சாபத்தால் நமக்கு ஸந்தானமற்று விட்டதே என்ன செய்வோமென்று யோசித்து, பிறகு எல்லோரும், ஸர்வலோக பிதாமஹரான ப்ருமதேவரிடம் சென்றனர்.

2. (க-ரை) அவ்வானவர்களெல்லோரும், அக்கினியோடும், தேவேந்திரனையும் முன்னிட்டுக்கொண்டு, மிக மகிமை பொருந்தியவரும், எல்லா உலகங்களையும் படைப்பவருமான அந்த ப்ருமதேவரை யணுகி நமஸ்கரித்து இவ்வாறு விண்ணப்பித்துக் கொண்டனர்கள்.

3. (க-ரை) ஹே பிதாமஹரே! தேவரீரால் எங்களுக்கு முன்பு சேனாபதியாக நியமிக்கப்பட்டிருந்த அந்த முக்கண்ணனான பரமசிவன், தம் தேவியான

यदत्रानन्तरं कार्यं लोकानां हितकाम्यया ।
संविधत्स्व विधानज्ञ त्वं हि नः परमा गतिः ॥ 4 ॥

देवतानां वचः श्रुत्वा सर्वलोकपितामहः ।
सान्त्वयन्मधुरैर्वाक्यैस्त्रिदशानिदमब्रवीत् ॥ 5 ॥

शैलपुत्र्या यदुक्तं तन्नप्रजाः सन्तु पत्निषु ।
तस्य वचनमक्लिष्टं सत्यमेतन्न संशयः ॥ 6 ॥

दत्तः - கொடுக்கப்பட்டதே, उमयासह - (ஆகுக பார்வதியுடன்), [illegible], परमं तपः - சிறந்த தவத்தை, आस्थाय - அடைந்து, तप्यते स्म - [illegible]!

4. (ப-ரை) विधानज्ञ - [illegible], ([illegible]!) अत्र - இவ்விஷயத்தில், अनन्तरं - பிறகு, कार्यं - காரியம், यत् - எதுவோ, (அதை), लोकानां - உலகங்களுக்கு, हितकाम्यया - நன்மையின் [illegible], संविधत्स्व - அருளிச் செய்யவும், नः - எங்களுக்கு, परमागतिः - [illegible], त्वं हि - [illegible]!

5. (ப-ரை) सर्वलोक पितामहः - [illegible] (ஆகுக ப்ரும்மதேவர்), देवतानां - தேவர்களுடைய, वचः - வார்த்தையை, श्रुत्वा - கேட்டு, मधुरैः - அழகான, वाक्यैः - வார்த்தைகளால், सान्त्वयन् - [illegible] கொண்டு, त्रिदशान् - அத்தேவர்களை, ([illegible]), इदं - இதை, अब्रवीत् - சொன்னார்.

6. (ப-ரை) शैलपुत्र्या - பார்வதியால், यत् - எது, उक्तं - [illegible] தோ, तत् - அதனால், (நீங்கள்), पत्निषु - [illegible], न प्रजाः सन्तु - ([illegible]

பார்வதியுடன், ஹிமயமலையின் [illegible] [illegible] றனர்.

4. (க-ரை) ஹே [illegible]! [illegible] நன்மை எதுவோ அதைத் தாங்களே அருளிச் [illegible] லாவற்றையும் நன்குணர்ந்தவரன்றோ? [illegible] இருக்கின்றீர், என்றனர்.

5. (க-ரை) வானவர்களுடைய [illegible] பிரும்மதேவரும், அத்தேவர்களை [illegible] மாயும் அழகாயும் பதிலுரைத்தார்.

6. (க-ரை) ஹே வானவர்களே! [illegible] அப்பார்

इयमाकाशगा गङ्गा यस्यां पुत्रं हुताशनः ।
जनयिष्यति देवानां सेनापतिमरिंदमम् ॥ 7 ॥

ज्येष्ठा शैलेन्द्रदुहिता मानयिष्यति तत्सुतम् ।
उमायास्तद्बहुमतं भविष्यति न संशयः ॥ 8 ॥

तच्छ्रुत्वा वचनं तस्य कृतार्था रघुनन्दन ।
प्रणिपत्य सुराः सर्वे पितामहमपूजयन् ॥ 9 ॥

ரனை) உண்டுபண்ண மாட்டீர்கள், **तस्याः** - அப்பார்வதியினுடைய, **वचनं** - வார்த்தை, **आक्लिष्टं** - வியர்த்தமற்றது, **एतत्** - இது, **सत्यं** - உண்மை, **संशयः न** - சந்தேகமே இல்லை.

7. (ப-ரை) **यस्यां** - எவளிடத்தில், **हुताशनः** - அக்கினி, **अरिंदमम्** - சத்துருவை யழிக்கவல்லவனும், **देवानां** - தேவர்களுக்கு, **सेनापतिं** - படைத்தலைவனுமான, **पुत्रं** - புத்திரனை, **जनयिष्यति** - உண்டுபண்ணப் போகின்றதோ, **आकाशगा** - ஆகாயத்தையடைந்த, **इयं गङ्गा** - இந்த கங்கை, (இருக்கின்றனள்).

8. (ப-ரை) **तत्सुतम्** - அவ்வக்கினி குமாரனை, **शैलेन्द्रदुहिता** - மலையரசனுக்குப் பெண்ணாயிருக்கின்ற, **ज्येष्ठा** - மூத்தவளான, (கங்கை), **मानयिष्यति** - வெகுமானிக்கப் போகின்றாள், **तत्** - அது, **उमायाः** - பார்வதி தேவிக்கும், **बहुमतं** - இஷ்டமாக, **भविष्यति** - ஆகப்போகின்றது, **संशयः न** - (இவ்விஷயத்தில்), சந்தேகமில்லை.

9. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **सर्वे** - எல்லா, **सुराः** - தேவர்களும், **तस्य** - அந்தப் பிரம்மதேவனுடைய, **तत् वचनं** - அவ்வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு,

வதியானவள் எது சொன்னளோ, அவ்வார்த்தை ஒரு நாளும் வீண்போகாது ஆனதுபற்றி அவளது சாபத்தின்படி உங்கள் மனைவிகளிடத்தில் நீங்கள் புத்திரனை உண்டுபண்ண மாட்டீர்கள். இது உண்மையே தான் என்றனர்.

7-8. (க-ரை) தேவலோகத்தை யடைந்திருக்கின்ற இக்கங்கையினிடத்தில் அக்நி தேவன், அப்பரம சிவபிரானுடைய தேஜஸை விட்டு, அதினால் ஓர் புத்திரனை உண்டுபண்ணக் கடவன். அப்புத்திரனை கங்காதேவியும் அங்கிகாரம் செய்கின்றனள். அப்பார்வதி தேவிக்கும் அது உகப்பாயிருக்கும். அச்சிறுவனே உங்களுக்குப் படைத்தலைவனவான். என்று சமாதானம் செய்து முடித்தனர்.

9. (க-ரை) ஹே ராமசந்திரா! ஸர்வ தேவ பிதாமஹனை பிரம்மதேவனால் இவ்வண்ணம் சொல்லிய இனிய அம்மொழிகளைக் கேட்ட அத்தேவர்களெல்

ते गत्वा पर्वतं राम कैलासं धातुमण्डितम् ।
अग्निं नियोजयामासुः पुत्रार्थं सर्वदेवताः ॥ 10 ॥
देवकार्यमिदं देव संविधत्स्व हुताशन ।
शैलपुत्र्यां महातेजो गङ्गायां तेज उत्सृज ॥ 11 ॥
देवतानां प्रतिज्ञाय गङ्गामभ्येत्य पावकः ।
गर्भं धारय वै देवि देवतानामिदं प्रियम् ॥ 12 ॥

कृतार्थाः - கோரியதை அடைந்தவர்களாய், **पितामहं** - பாட்டனை (பிரம்மதேவனை), **प्रणिपत्य** - வணங்கி, **अपूजयन्** - பூஜித்தனர்.

10. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **ते** - அந்த, **सर्वदेवताः** - எல்லா தேவர்களும், **धातुमण्डितम्** - லோக தாதுக்களால் அலங்காரமான, **कैलासं पर्वतं** - கைலாஸமென்கிற மலையை, **गत्वा** - சென்று, **पुत्रार्थं** - புத்திர நிமித்தம், **अग्निं** - அக்கினியை, **नियोजयामासुः** - ஏவினார்கள்.

11. (ப-ரை) **हुताशन** - ஹோமத்தைப் புஜிக்கின்றவனான, **देव** - ஹே அக்கினி தேவனே! **इदं** - இந்த, **देवकार्यं** - தேவகாரியத்தை, **संविधत्स्व** - நிறைவேற்ற வேண்டும், **महातेजः** - ஹே மிக்க தேஜஸையுடையவனே! **शैलपुत्र्यां** - பர்வதத்தின் பெண்ணை, **गङ्गायां** - கங்கையில், **तेजः** - தேஜஸை, **उत्सृज** - விட்டுவிடவும்.

12. (ப-ரை) **पावकः** - அக்கினி, **देवतानां** - தேவர்களின் பொருட்டு, **प्रतिज्ञाय** - சபதம் செய்து, **गङ्गां** - கங்கையை, (க்குறித்து), **अभ्येत्य** - சென்று, **देवि** - ஹே கங்கா

லோரும், தங்கள் கருத்து நிறைவேறியதென்று ஸந்துஷ்டராய் அக்கமலலோசனனை வணங்கி வெகுவாகப் பூஜித்தனர்.

10-11. (க-ரை) ஹே ராமா! பிறகு, எல்லா தேவர்களும் அந்த பிரம்மதேவரிடமிருந்து ஹிமயமலை வந்து சேர்ந்து, அக்கினி தேவனைக் கண்டு, ஹே அக்கினி தேவனே! முக்கண் பிரானான அந்த பரமசிவனுடைய வீரியத்தை, இக்கங்கையில் விட்டு, தேவகாரிய சித்திக்கும், ஓர் புத்திரனை உண்டுபண்ண வேணுமென்று வேண்டிக்கொண்டனர்.

12-13. (க-ரை) அக்கினி தேவனும், அத்தேவர்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்து, "அதை அப்படியே" என்று சொல்லி, கங்கை சென்று, ஹே கங்கா தேவியே! தேவர்களுக்கு மிக நன்மையாக என்னிடத்திலிருக்கும் அப்பரமசிவனுடைய வீரியத்தை உகந்து பெற்று கர்ப்பாந் தரிக்கவும் என்றுரைக்க,

तस्य तद्वचनं श्रुत्वा दिव्यं रूपमधारयत् ।
दृष्ट्वा तन्महिमानं स समन्तादवकीर्यत ॥ 13 ॥
समन्ततस्तदा देवीमभ्यषिञ्चत पावकः ।
सर्वस्रोतांसि पूर्णानि गङ्गाया रघुनन्दन ॥ 14 ॥
तमुवाच ततो गङ्गा सर्वदेवपुरोहितम् ।
अशक्ता धारणे देव तव तेजः समुद्धतम् ॥ 15 ॥
दह्यमानाऽग्निना तेन संप्रव्यथितचेतना ॥ 15½ ॥

தேவியே! **गर्भं दारय** - கர்ப்பத்தைத் தரிக்கவும், **इदं** - இது, **देवतानां** - தேவர்களுக்கு, **प्रियं** - இஷ்டம். (என்று உரைக்கலானான்).

13. (ப-ரை) **तस्य** - அவ்வக்கினியினுடைய, **तत् वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **दिव्यं** -(அக்கங்கை), சிறந்ததான, **रूपं** - உருவை, **अधारयत्** - தரித்தனள், **सः** - அவ்வக்கினி, **तत्** - அந்த, **महिमानं** - சௌந்தர்யாதி சயத்தை, **दृष्ट्वा** - பார்த்து, **समन्तात्** - நாற்புறத்திலும், **अवकीर्यत** - (தேஜஸை) சிதறவிட்டனன்.

14. (ப-ரை) **ततः** - பிறகு, **रघुनन्दन** - ஹே ராகவா! **तदा** - அப்பொழுது, **पावकः** - அக்கினி, **समन्ततः** - எங்கும், **देवीं** - கங்கையை, **अभ्यषिञ्चत** - நனைத்தனன், **गङ्गायाः** - கங்கையினுடைய, **सर्वस्रोतांसि** - எல்லா அவயவங்களும், **पूर्णानि** - நிரம்பிற்று.

15-15½. (ப-ரை) **ततः** - பிறகு, **गङ्गा** - கங்கை, **तेन** - அந்த, **अग्निना** - அக்கினியால், **दह्यमाना (सती)** - (பரமசிவனுடைய ரேதஸால்) கொளுத்தப்படா நின்று கொண்டு, **संप्रव्यथितचेतना** - வெகு துக்கமுற்ற மனமுடையவளாய், **सर्वदेवपुरोहितम्** - சகல தேவ புரோகிதனை, **तं** - அவ்வக்கினியை, (க்குறித்து), **देव** - ஹே அக்கினியே! **तव** - உன்னுடைய, **तेजः** - ரேதஸானது, **समुद्धतम्** - விருத்தியடைந்ததாக, (ஆகின்

அது கேட்ட கங்கையும், உடனே, ஓர் அழகான சிறந்த பெண்ணுருவம் பூண்டு நிற்க அப்பொழுது அக்கினி, அவளுடைய சௌந்தர்யாதி சயங்களைக் கண்டு மோகித்து, அவளுடைய தேகமெல்லாம் பரவும்படி அவ்வீரியத்தை விட்டுவிட்டனன்.

14-15½. (க-ரை) ஹே ரகுகுலோத்தமனே! அப்படி அந்த அக்கினியினால் விடப்பட்ட அத்தேஜஸானது, அக்கங்கையின் தேகமெங்கும் பரவிநிற்க அதை கங்கை தாங்கமுடியாமல், அக்கினிதேவனை நோக்கி, "ஹே அக்கினியே! பக்

अथाब्रवीदिदं गङ्गां सर्वदेवहुताशनः ।
इह हैमवते पादे गर्भोऽयं संनिवेश्यताम् ॥ 16½ ॥

श्रुत्वा त्वग्निवचो गङ्गा तं गर्भमतिभास्वरम् ।
उत्ससर्ज महातेजः स्रोतोभ्यो हि तदानघ ॥ 17½ ॥

यदस्या निर्गतं तस्मात्तप्तजाम्बूनदप्रभम् ।
काञ்चनं धरणीं प्राप्तं हिरण्यममलं शुभम् ॥ 18½ ॥

தது), धारणे - (பிள்ளை) தரிப்பதற்கு, अशक्ता - சக்தியற்றவள், (என்று), उवाच - சொன்னாள்.

16½. (ப-ரை) अथ - பிறகு; सर्वदेवहुताशनः - சகல தேவர்களின் பொருட்டு செய்யப்பட்ட ஹோமத்தைப் புஜிக்கின்ற அக்கினி, गङ्गां - கங்கையை நோக்கி, इह - இங்கு, हैमवते - ஹிமயமலையின் சம்மந்தமான, पादे - அருகிலிருக்கின்ற பர்வதத்தில், अयं गर्भः - இந்த கர்ப்பம், संनिवेश्यताम् - வைக்கப்படட்டும், (என इदं - இதை, अब्रवीत् -

17½. (ப-ரை) महातेजः - வெகு தேஜஸையுடையவனே! (ஹே ராமா!), गङ्गा - கங்கை, अग्निवचः - அக்கினிதேவன் வார்த்தையை, श्रुत्वा - கேட்டு, अतिभास्वरम् - மிகப் பிரகாசமாயிருக்கிற, तं - அந்த, गर्भं - கர்ப்பத்தை, स्रोतोभ्यः - அவயவங்களினின்று, अनघ - ஹே குற்றமற்றவனே! (இராமா!), तदा - அப்பொழுது, उत्ससर्ज - விட்டுவிட்டனள்.

18½. (ப-ரை) अस्याः - இக்கங்கையினிடத்திலிருந்து, निर्गतं - வெளியான,

---

வரனே! உம்முடைய தேஜஸை யான் தரிக்க சக்தியற்றவள். அது என்னைக் கொளுத்துகின்றதே" என்று மனமிளைந்து சொல்லலானாள்.

16½-17½. (க-ரை) வெகு தேஜஸையுடைய ஹே ராமா! இவ்விதம் மிக்க தைன்யமாய் சொன்ன அக்கங்கையின் வார்த்தையைக் கேட்ட, அக்கினிதேவன், "ஆகில் இக்கர்ப்பத்தை இப்பனிமலையின் அருகிலிருக்கின்ற இச்சிறிய மலையில் விட்டுவிடு" என்றனன். பாபமற்றவனே! இவ்வாறு, அந்த அக்கினிதேவன் மொழிந்ததைக் கேட்டு, அப்படியே கங்கையும், மிக்க ஒளி பெற்று விளங்கும் கருவை, தன் வெள்ளத்தால் ஒதுக்கிவிட்டனள்.

18½. (க-ரை) இவ்விதம் அக்கங்கையால் ஒதுக்கப்பட்ட அக்கருவானது,

ताम्रं कार्ष्णायसं चैव तैक्ष्ण्याद्देवाभ्यजायत ।
मलं तस्याभवत्तत्र त्रपु सीसकमेव च ॥ 19½ ॥
तदेतद्धरणीं प्राप्य नानाधातुरवर्धत ॥ 20 ॥
निक्षिप्तमात्रे गर्भे तु तेजोभिरभिरञ्जितम् ।
सर्वं पर्वतसन्नद्धं सौवर्णमभवद्वनम् ॥ 21 ॥

यत् - எந்த ரேதஸ்ஸு, **धरणीं** - பூமியை, **प्राप्तं** - அடைந்ததோ, **तस्मात्** - அதனால், **तप्तजाम्बूनदप्रभम्** - உருக்கின தங்கம் போன்ற காந்தியுடைய, **काञ्चनं** - பொன்னும், **अमलं** - நிர்மலமும், **शुभं** - சுபமுமான, **हिरण्यं** - வெள்ளியுமாக, (ஆயிற்று.)

19½-20. (ப-ரை) **तत्र** - அங்கு, **तैक्ष्ण्यात्** - காரத்தினால், **ताम्रं** - செம்பாகவும், **कार्ष्णायसं चैव** - எஃகாகவும், (இரும்பாகவும்), **अभ्यजायत** - உண்டாயிற்று, **तस्य मलं** - அந்த ரேதஸினுடைய அழுக்கானது, **त्रपु** - தகரமாகவும், **सीसकमेव च** - ஈயமாகவும் ஆயிற்று, **तदेतत्** - அக்கங்கையினால் விடப்பட்ட அந்த ரேதஸ்ஸு, **धरणीं** - பூமியை, **प्राप्य** - அடைந்து, **नानाधातुः** - அநேக தாதுக்களாக, **अवर्धत** - ஆயிற்று.

21. (ப-ரை) **गर्भे** - (அந்த) கர்ப்பம், **निक्षिप्तमात्रे तु** - (கங்கையினால்) வைக்கப்பட்ட மாத்திரத்திலேயே, **तस्य** - அதனுடைய, **तेजोभिः** - காந்திகளால், **अभिरञ्जितम्** - வியாபிக்கப்பட்ட, **पर्वतसन्नद्धं** - (வெண்) மலையிலுண்டாயிருக்கிற, **वनम्** - நாணற்காடு, **सर्वं** - முழுமையும், **सौवर्णं** - ஸுவர்ணமயமாக, **अभवत्** -

பூமியை அடையவே, மிக்க பளபளப்பாயும், வெகு காந்தியுடையதுமான பொன்னும், வெள்ளியுமாகத் தோன்றலாயின.

19½-20. (க-ரை) ஹே புண்ணிய சீலனே! அக்கங்கையால், பூமியில் ஒதுக்கப்பட்ட அக்கருவின் காரம் எஃகாகவும், செம்பாகவும், மலம் தகரமாகவும், ஈயமாகவும் ஆயின. அவையே இப்பூமியை யடைந்து பற்பல தாதுக்களாகத் தோன்றலாயின.

21-22½. (க-ரை) ஹே ராகவா! பிறகு அக்கருவை விட்டவுடனே அதனொளியா லந்த வெண்மலையி லிருக்கும் நாணற்காடு எனவும் பொன்மயமாயிற்று. அது முதல் ஸுவர்ணம், ஜாதரூபமெனப் பெயர் பெற்று அக்கினிக் கொப்பான காந்தியுள்ளதாயிற்று. அங்குள்ள புல், மரம், செடி, கொடி, புதர் முதலிய யாவும் தங்கமாயின.

जातरूपमिति ख्यातं तदाप्रभृति राघव ।
सुवर्णं पुरुषव्याघ्र हुताशनसमप्रभम् ॥ 22 ॥
तृणवृक्षलतागुल्मं सर्वं भवति काञ्चनम् ॥ 22½ ॥
तं कुमारं ततो जातं सेन्द्राः सहमरुद्गणाः ।
क्षीरसंभावनार्थाय कृत्तिकाः समयोजयन् ॥ 23½ ॥
ताः क्षीरं जातमात्रस्य कृत्वा समयमुत्तमम् ।
ददुः पुत्रोऽयमस्माकं सर्वासामिति निश्चिताः ॥ 24½ ॥

22-22½. (ப-ரை) **पुरुषव्याघ्र** - புருஷசிரேஷ்டனே, **(हे) राघव** - ஹே ராகவா ! **तदाप्रभृति** - (எப்பொழுது சுவர்ணமாயிற்றோ) அது முதல், **हुताशनसमप्रभम्** - அக்கினிக்கு நிகரான காந்தியுடைய, **सुवर्णं** - தங்கம், **जातरूपं** - உண்டான ரூபமுடையது, **इति** - என்று, **ख्यातं** - பிரசித்தியாயிற்று, **तृणवृक्षलतागुल्मं** - துரும்பு, மரம் கொடி, புதர், (இவை முதலான), **सर्वं** - சகலமும், **काञ्चनम्** - சுவர்ணமாக, **भवति** - ஆயின.

23½. (ப-ரை) **ततः** - பிறகு, **जातं** - பிறந்த, **तं** - அந்த, **कुमारं** - குமாரனை, **सेन्द्राः** - இந்திரனோடு கூடின, **मरुद्गणाः** - தேவக்கூட்டங்கள், **सह** - ஒரே காலத்தில், **क्षीरसंभावनार्थाय** - பாலினால் விருத்தியடைகிற 'பிரயோஜனத்தின் பொருட்டு, **कृत्तिकाः** - கிருத்திகைகளை, **समयोजयन्** - சேர்ப்பித்தனர்.

24½. (ப-ரை) **ताः** - அந்த கிருத்திகா நக்ஷத்திரங்கள், **अयं** - இந்த, (குழந்தை), **अस्माकं** - எங்களுக்கு, **सर्वासां** - எல்லோருக்கும், **पुत्रः** - புத்திரனை, **इति** -

23½-25½. (க-ரை) பிறகு, தேவேந்திரன் முதலான தேவர்களனைவரும் அங்குண்டான அக்குழந்தையைப் பார்த்து, அதற்குப் பால் கொடுப்பதற்காக கிருத்திகா நக்ஷத்திரங்களை நியமித்தனர். இவ்வாறு அத்தேவர்கள் சொல்லவே, அக்கிருத்திகா நக்ஷத்திரங்கள், "இக்குழந்தை எங்களுக்குப் பிள்ளையாகவேணும்" என்று அத்தேவர்களை நிச்சயம் கேட்க, அப்படியே தேவர்கள் கிருத்திகைகளாகிய உங்களிடத்தில் இக்குமாரன் பாலுண்டு வளரப்போகின்றபடியால், இவனுக்குக் "கார்த்திகேயன்" என்று பெயருண்டாகட்டும், என்றனர். பிறகு, அக்கிருத்திகா நக்ஷத்திரங்களும், அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்து வந்தன.

26½. (க-ரை) இவ்வாறு அத்தேவர்களெல்லோரும், அக்குழந்தையை

ततस्तु देवताः सर्वाः कार्त्तिकेय इति ब्रुवन् ।
पुत्रस्त्रैलोक्यविख्यातो भविष्यति न संशयः ॥ 25½ ॥

तेषां तद्वचनं श्रुत्वा स्कन्नं गर्भपरिस्रवे ।
स्नापयन्परया लक्ष्म्या दीप्यमानं यथानलम् ॥ 26½ ॥

स्कन्द इत्यब्रुवन्देवाः स्कन्नं गर्भपरिस्रवात् ।
कार्तिकेयं महाभागं काकुत्स्थ ज्वलनोपमम् ॥ 27½ ॥

(ஆகட்டும்) என்று, (தேவர்களோடு), **अत्तमं** - சிறந்த, **समयं** - ஸங்கேதத்தைத, **कृत्वा** - செய்து, **निश्चिताः** - நிச்சயித்தவர்களாய், **जातमात्रस्य** - பிறந்தமாத்ரமே இருக்கிற, (அக்குழந்தைக்கு), **क्षीरं** - பாலை, **ददुः** - ஊட்டினார்கள்.

25½. (ப-ரை) **ततः** - பிறகு, **देवाः** - தேவர்கள், **सर्वाः** - எல்லோரும், **पुत्रः** - (இந்த) புத்திரன், **कार्तिकेयः** - க்ருத்திகா நக்ஷத்திரங்களின் புத்திரன், **इति** - என்று, **त्रैलोक्यविख्यातः** - மூன்றுலகங்களிலும் பிரசித்தனாக, **भविष्यति** - ஆகப்போகின்றான், **संशयः न** - சந்தேகமில்லை, (என்று), **ब्रुवन्** - சொன்னார்கள்.

26½. (ப-ரை) **तेषां** - அத்தேவர்களுடைய, **तद्वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **गर्भपरिस्रवे** - (அக்கிருத்திகா நக்ஷத்திரங்களின்), கர்ப்பத்தில் நழுவுதலில், **स्कन्नं** - விழுமவனும், **अनलं यथा** - அக்கினி போல், **परया** - சிறந்த, **लक्ष्म्या** - காந்தியால், **दीप्यमानं** - பிரகாசிக்கின்றவனுமான, (அக்குழந்தையை), **स्नापयन्** - நீராட்டி வைத்தன.

27½. (ப-ரை) **काकुत्स्थ** - ககுத்த வம்சத்திலுதித்த ஹே ராகவா! **देवाः** - தேவர்கள், **महाभागं** - வெகு பாக்கியமுடையவனும், **ज्वलनोपमम्** - அக்கினிக்கொப்பானவனும், **गर्भपरिस्रवात्** - கர்ப்போதகத்திலிருந்து, **स्कन्नं** - விழுந்தவனுமான, **कार्तिकेयं** - கார்த்திகேயனை, **स्कन्द इति** - ஸ்கந்தனென்று, (விழுந்தவனென்று), **अब्रुवन्** - சொன்னார்கள்.

வளர்த்து வரும்படிக்கும், மூன்றுலகங்களிலும் வெகு கியாதியை அடையப்போகிறனென்றும், மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு அக்கிருத்திகா நக்ஷத்திரங்கள் மிக்க சந்தோஷத்துடன் கர்ப்பத்திலிருந்து விழுந்த அக்குழந்தைக்கு நன்னீராட்டி வைத்தன.

27½. (க-ரை) பிறகு, மஹா பாக்கியசாலியும், அக்கினிபோல் தேஜஸ்வியுமான அக்கார்த்திகேயன், கர்ப்பத்திலிருந்து நழுவி விழுந்ததால், தேவர்கள், ஸ்கந்தனென்று பெயரிட்டனர்.

प्रादुर्भूतं ततः क्षीरं कृत्तिकानामनुत्तमम् ।
षण्णां षडाननो भूत्वा जग्राह स्तनजं पयः ॥ 28½ ॥

गृहीत्वा क्षीरमेकाह्ना सुकुमारवपुस्तदा ।
अजयत्स्वेन वीर्येण दैत्यसैन्यगणान्विभुः ॥ 29½ ॥

सुरसेनागणपतिं ततस्तमतुलद्युतिम् ।
अभ्यषिञ्चन्सुरगणाः समेत्याग्निपुरोगमाः ॥ 30½ ॥

एष ते राम गङ्गाया विस्तरोऽभिहितो मया ।
कुमारसंभवश्चैव धन्यः पुण्यस्तथैव च ॥ 31½ ॥

28½. (ப-ரை) **ततः** - (கன்னீராட்டினத்து) பிறகு, **कृत्तिकानां** - க்ருத்திகா தேவிகளுக்கு, **अनुत्तमम्** - சிரேஷ்டமான, **क्षीरं** - பால், **प्रादुर्भूतं** - உண்டாயிற்று, **षडाननः** - (அக்குழந்தையும்), ஆறு முகம் உடையதாக, **भूत्वा** - ஆகி, **षण्णां** - ஆறுகளுடைய, **स्तनजं** - முலைகளினின்று உண்டான, **पयः** - பாலை, **जग्राह** - க்ரஹித்தது.

29½. (ப-ரை) **विभुः** - பிரபுவான, (ஸ்கந்தன்), **एकाह्ना** - ஒரே தினத்திலேயே, **क्षीरं** - பாலை, **गृहीत्वा** - க்ரஹித்து, **सुकुमारवपुः** - மிருதுவான சரீரமுடையவனாயிருந்தாலும், **तदा** - அப்பொழுது, **स्वेन** - தன்னுடையதான, **वीर्येण** - பராக்கிரமத்தினாலே, **दैत्यसैन्यगणान्** - அரக்கரின் சைன்ய சமூகத்தை, **अजयत्** - ஜயித்தான்.

30½. (ப-ரை) **ततः** - பிறகு, **सुरगणाः** - தேவர்களின் கூட்டம், **अग्निपुरोगमाः** - அக்கினியை முன்னிட்டதாய், **समेत्य** - வந்து, **अतुलद्युतिम्** - நிகரற்ற பிரகாசமுடைய, **तं** - அந்த குமாரனை, **सुरसेनागणपतिं** - தேவ சைன்யங்களின் கூட்டத்திற்கு நாயகனாக, **अभ्यषिञ्चन्** - அபிஷேகம் செய்தது.

31½. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **मया** - என்னால், **ते** - உனக்கு, **पुण्यः** -

---

28½-30½. (க-ரை) பிறந்தவுடனே க்ருத்திகா தேவிகளின் ஆறு முலைகளையும் ஆறு முகங்களுடன் பாலுண்ணுமையினால் ஆறுமுகனென்ற பெயர் பெறலாயிற்று. பாலுண்ட ஒரே தினத்திலேயே அக்குழந்தை மிகவும் வலிமையுடையதாய், தன்னுடைய பராக்கிரமத்தால், சகல அரக்கர் கூட்டங்களையும் வென்றான். பிறகு அக்கினியை முன்னிட்டு சகல தேவர்களும் ஒன்றுகூடி இவனை தேவர்களின் படைகளுக்கு அதிபதியாய் முடிசூட்டினார்கள்.

31½. (க-ரை) ஹே ராகவரே! என்னால் உனக்கு இங்கு கங்கையின்

भक्तश्च यः कार्तिकेये काकुत्स्थ भुवि मानवः ।
आयुष्मान्पुत्रपौत्रैश्च स्कन्दसालोक्यतां व्रजेत् ॥ 32½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये
बालकाण्डे सप्तत्रिंशः सर्गः ॥ 37 ॥

புண்ணியத்தை யுண்டுபண்ணுவதும், **धन्यः** - பரிசுத்தமுமான, **एषः** - இந்த, **गङ्गायाः**- கங்கையினுடைய, **विस्तरः** - (பூமியிலிருந்து ஆகாயத்தை யடைந்தது முதலான), கதை முழுவதும், **तथैव च** - அப்படியே, **कुमारसंभवश्चैव** - குமாரோத்பத்தியும், **अभिहितः** - சொல்லப்பட்டது.

32½. (ப-ரை) **काकुत्स्थ** - ஹே காகுத்தனே! **कार्तिकेये** - ஸ்கந்தனிடத்தில், **भुवि** - பூமியில், **यः** - எந்த, **मानवः** - மனிதன், **भक्तः** - பக்தனோ, அவன்), **आयुष्मान्** - (தீர்க்க) ஆயுளை யுடையவனாயும், **पुत्रपौत्रैश्च** - மகன் பேரன்மார்களுடன், (கூடினவ னாய்), **स्कन्दसालोक्यतां** - ஸ்கந்தனோடு நிகரான லோகமுடையனா யிருக்கையை, **व्रजेत्**- அடையக்கடவன்.

விருத்தாந்தமும், குமார ஸ்வாமியின் உற்பத்தியும் விஸ்தாரமாய்ச் சொல்ல லாயிற்று.

32½. (க-ரை) ஹே ரகுகுல நாயகனே! இந்த கார்த்திகேயனிடத்தில் எவன் பக்தி செய்கின்றானோ, அவன் களத்ர, புத்ர பௌத்ர, மித்ர பாரம்பர்யத்துடன் புவியில் நெடுநாள் வாழ்ந்திருந்து, இறுதியில் குமார ஸ்வாமியி னுலகை அடையக்கடவன். என்றும் இக்கதையைச் சொல்லி முடித்தனர்.

अष्टत्रिंशः सर्गः ॥ 38 ॥

तां कथां कौशिको रामे निवेद्य कुशिकात्मजः ।
पुनरेवापरं वाक्यं काकुत्स्थमिदमब्रवीत् ॥ 1 ॥

अयोध्याधिपतिः शूरः पूर्वमासीन्नराधिपः ।
सगरो नाम धर्मात्मा प्रजाकामः स चाप्रजः ॥ 2 ॥

वैदर्भदुहिता राम केशिनी नाम नामतः ।
ज्येष्ठा सगरपत्नी सा धर्मिष्ठा सत्यवादिनी ॥ 3 ॥

1. (ப-ரை) **कुशिकात्मजः** - குசிகவம்சத்திலுண்டான, **कौशिकः** - விச்வாமித்திரர், **तां कथां** - அந்த கதையை, **रामे** - ஸ்ரீராமனையும் பொருட்டு, **निवेद्य** - அறிவிப்பித்து, **काकुत्स्थं** - ஸ்ரீராமனை, (க்குறித்து), **अपरं** - வேறொரு, **इदं वाक्यं** - இந்த வார்த்தையை, **पुनरेव** - மறுபடியும், **अब्रवीत्** - சொன்னார்.

2. (ப-ரை) **पूर्वं** - முன்பு, **शूरः** - சூரனும், **धर्मात्मा** - தர்மத்தையே ஸ்வபாவமாயுடையவனும், **अयोध्याधिपतिः**-அயோத்தியா நகரத்திற்கு முக்கியனும்,**सगरोनाम**-ஸகரனென்று பெயருடையவனுமான, **नराधिपः** - அரசன், **आसीत्** - இருந்தான், **सच** - அந்த ஸகரனும், **अप्रजः** - புத்திரனற்றவனாய், **प्रजाकामः** - ஸந்தானத்தைக் கோரினவனாக, (ஆனான்).

3. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **नामतः** - பெயரினால், **केशिनी नाम** - கேசினீ என்று பிரஸித்தியான, **वैदर्भदुहिता** - விதர்ப்ப தேசத்தரசன் மகள், (இருந்தனள்), **धर्मिष्ठा** - தர்மத்தில் நிலை நின்றவளும், **सत्यवादिनी** - உண்மையே பேசுகிறவளுமான, **सा** - அவள், **ज्येष्ठा** - மூத்தவளான, **सगरपत्नी** - ஸகர சக்ரவர்த்திக்கு பத்னியாக, (ஆனாள்).

1. (க-ரை) விச்வாமித்திர மஹரிஷி இங்ஙனம், குமாரோத்பத்தியையும், கங்கையின் மஹிமையையும், ஏதாவத்தாய் ஸவிஸ்தாரமாய், கதையெல்லாம் இனிதாக உரைத்து முடித்து, பிறகு அதில் மஹா ப்ராக்ஞரான அம்மஹரிஷி ஸ்ரீராம லக்ஷ்மணர்களை நோக்கி அம்முனிவர்கள் மத்தியில் மேலும் கேட்பதற்கு மிகவும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய மற்றொரு கதையைச் சொல்லத்தொடங்கினார்.

2-4. (க-ரை) ஹே கௌஸல்யா புத்திரனே! கேள், வெகு பிரஸித்தி

अरिष्टनेमिदुहिता रूपेणाप्रतिमा भुवि ।
द्वितीया सगरस्यासीत्पत्नी सुमतिसंज्ञिता ॥ 4 ॥

ताभ्यां सह तदा राजा पत्नीभ्यां तप्तवांस्तपः ।
हिमवन्तं समासाद्य भृगुप्रस्रवणे गिरौ ॥ 5 ॥

अथ वर्षशते पूर्णे तपसाराधितो मुनिः ।
सगराय वरं प्रादाद्भृगुः सत्यवतां वरः ॥ 6 ॥

4. (ப-ரை) **भुवि** - இப்புவியில், **रूपेण** - அழகினால், **अप्रतिमा** - நிகரற்றவளும், **सुमतिसंज्ञिता** - ஸுமதி யென்ற் பெயருடையவளுமான, **अरिष्टनेमिदुहिता** - காசியப மஹரிஷியின் பெண், **सगरस्य** - அந்த "ஸகர" சக்கிரவர்த்திக்கு, **द्वितीया** - இரண்டாவதான, **पत्नी** - பார்யையாக, **आसीत्** - இருந்தனள்.

5. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **राजा** - அரசன், (ஸகரர்), **ताभ्यां पत्नीभ्यां सह** - அவ்விரண்டு பத்தினிகளோடு, **हिमवन्तं** - ஹிமயமலையை, **समासाद्य** - அடைந்து, **भृगुप्रस्रवणे** - பிருகு பிரச்ரவண மென்கின்ற, **गिरौ** - மலையில், **तपः** - தவத்தை, **तप्तवान्** - செய்தனர்.

6. (ப-ரை) **अथ** - பிறகு, **वर्षशते पूर्णे** - வருஷத்தின் நூறு முடிவடைந்த

பெற்ற இந்த ரகுவம்சத்தில் முன்பு, மிக்க புஜபராக்கிரம சாலியாயும், மஹா தர்மிஷ்டராயும், "ஸகர்" என்று பெயர்பெற்ற ஓர் சக்கிரவர்த்தியானவர், இந்த அயோத்தியா நகரத்தைச் செங்கோல் செலுத்தி வந்தனர். அந்த மகாதீரரான ஸகரருக்கு, "கேசினி" என்னும், "ஸுமதி" என்னும் இரண்டு பத்தினிகளுண்டு. அவர்களுள் மூத்தவளான "கேசினி" என்பவள் விதர்ப்ப தேசத்தரசன் மகள். இவள் தர்மத்திலும், ஸத்யத்திலும் ஸகாதிநிலை பெற்று அதனால் வெகு கியாதி பெற்றிருந்தனள். இளையவளான "ஸுமதி" என்னும் பார்யையானவள் அரிஷ்டநேமி யென்கிற காச்யபரின் மகள். இவள் இப்புவியில் வெகு ரூபலாவண்ய சௌந்தர்யத்தோடு கூடினவளாய் விளங்கிக்கொண்டிருந்தனள்.

5. (க-ரை) மிக்க கியாதி பெற்ற அந்த "ஸகரர்" என்னும் சக்கிரவர்த்தி தனக்கு புத்திர ஸந்தான மில்லாமையால், தன் பத்தினிகளோடு, ஸந்தானத்தை வேண்டித் தவம் புரிவதற்காக, ஹிமயமலையின் சாரிபில் ப்ருகு மஹரிஷி தவம் செய்துகொண்டிருந்த விடத்திற் சென்று, தவஞ்செய்யத் துடங்கினர்.

6-7. (க-ரை) இப்படி அந்த "ஸகரர்" நூறு வருஷ காலம் தவஞ்செய்த

अपत्यलाभः सुमहान्भविष्यति तवानघ ।
कीर्तिं चाप्रतिमां लोके प्राप्स्यसे पुरुषर्षभ ॥ 7 ॥
एका जनयिता तात पुत्रं वंशकरं तव ।
षष्टिः पुत्रसहस्राणि अपरा जनयिष्यति ॥ 8 ॥
भाषमाणं महात्मानं राजपुत्र्यौ प्रसाद्य तम् ।
ऊचतुः परमप्रीते कृताञ्जलिपुटे तदा ॥ 9 ॥

வளவில், **सत्यवतां** - ஸத்தியவான்களுக்குள், **वरः** - சிறந்தவரான, **भृगुः मुनिः** - ப்ருகு வென்கிற முனிவர், **तपसा** - தவத்தினுல், **आराधितः** - (ஸகர சக்கிரவர்த்தியினுல்), பூஜிக்கப்பட்டவராக, **सगराय** - ஸகரனையும் பொருட்டு, **वरं** - வரத்தை, **प्रादात्** - அளித்தனர்.

7. (ப-ரை) **अनघ** - ஹே பாபமற்றவனே! **तव** - உனக்கு, **सुमहान्** - மிக்க சிறந்ததான, **अपत्यलाभः** - ஸந்தான லாபம், **भविष्यति** - உண்டாகப் போகின்றது, **पुरुषर्षभ** - ஹே புருஷ சிரேஷ்டனே! (அதனுல் நீ), **लोके** - உலகில், **अप्रतिमां** - இணையில்லாத, **कीर्तिं च** - புகழ்மையையும், **प्राप्स्यसे** - அடையப் போகின்றாய்.

8. (ப-ரை) **तात** - ஹே குழந்தாய்! **तव** - உன்னுடைய, **एका** - ஒரு, (பார்யை), **वंशकरं** - வம்சத்தை விருத்தி செய்கின்ற, **पुत्रं** - புத்திரனை, **जनयिता** - பிறப்பிப்பள், **अपरा** - மற்றொரு, (பார்யை), **षष्टिः** - அறுபது, **पुत्रसहस्राणि** - புத்திரர்களின் ஆயிரங்களை, **जनयिष्यति** - பிறப்பிப்பாள்.

9. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **भाषमाणं** - இவ்விதம் சொல்லுகின்ற, **महात्मानं** - சிறந்த ஸ்வபாவமுடைய, **तं** - அந்த ப்ருகுவை, **राजपुत्र्यौ** - ராஜகுமா

பிறகு, அந்த ப்ருகு மஹா முனிவர், அந்த ஸகரருடைய தவத்திற்கு உகந்து ஹே பாபமற்றவனே! உனக்கு மிகுந்த புத்திர ஸந்தானமுண்டாகும். ஹே புருஷசிரேஷ்டனே! அதனுல் நீ உலகெங்கும் பெரும்புகழையும் பெறுவாய், யென்று வரமளித்தனர்.

8. (க-ரை) ஹே ஸகர சக்கிரவர்த்தியே! உன் பத்தினிமார்களில் ஒருவள் உன் வம்சத்தைப் பெருக்குமோர் புத்திரனையும், மற்றொருவள், அறுபதுனுயிரம் பிள்ளைகளையும் பெற்றிடுவாள், என்றனர்.

9-10. (க-ரை) அம்மஹரிஷி மிக்க கருணையால் மொழிந்த அவ்வார்த்தை

एकः कस्याः सुतो ब्रह्मन्का बहूञ्जनयिष्यति ।
श्रोतुमिच्छावहे ब्रह्मन्सत्यमस्तु वचस्तव ॥ 10 ॥
तयोस्तद्वचनं श्रुत्वा भृगुः परमधार्मिकः ।
उवाच परमां वाणीं स्वच्छन्दोत्र विधीयताम् ॥ 11 ॥
एको वंशकरो वास्तु बहवो वा महाबलाः ।
कीर्तिमन्तो महोत्साहाः का वा कं वरमिच्छति ॥ 12 ॥

ரத்திகள், **प्रसाद्य** - ஆராதித்து, **परमप्रीते** - மிக சந்தோஷித்தவர்களாயும், **कृताञ्जलिपुटे** - செய்யப்பட்ட அஞ்சலியை உடையவர்களாக, **ऊचतु:** - சொன்னார்கள்.

10. (ப-ரை) **ब्रह्मन्** - ஹே பிராம்மணோத்தமரே! **अस्या:** - எவளுக்கு, **एक:** **सुतः** - ஒரு புத்திரன், (பிறப்பான்), **का** - எவள், **बहून्** - அநேகர்களை, **जनयिष्यति** - பிறப்பிப்பள், **ब्रह्मन्** - ஹே பிராம்மணரே ! **श्रोतुं** - (இதை), கேட்க, **इच्छावहे** - விரும்புகின்றோம், **तव वच:** - உம்முடைய வார்த்தை, **सत्यं** - நிஜமாக, **अस्तु** - ஆகட்டும்.

11. (ப-ரை) **परमधार्मिक:** - வெகு தர்மிஷ்டரான, **भृगु:** - ப்ருகு மஹரிஷி, **तयो:** - அவர்களுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **अत्र** - இப்புத்திர விஷயத்தில், **स्वच्छन्द:** - தங்களிச்சை, **विधीयताम्** - ஏற்பாடு செய்யப் படட்டும், **परमां** - (என்கிற) சிரேஷ்டமான, **वाणीं** - வார்த்தையை, **उवाच** - சொன்னார்.

12. (ப-ரை) **एकोवा** - ஒருவனேயெனில், **वंशकर:** - வம்சத்தைச் செய்கின்றவனை, **अस्तु** - ஆவான், **बहवो वा** - அநேகரேயெனில், **महाबला:** - வெகு பலமுடையவர்களாகவும், **कीर्तिमन्त:** - யசஸுடையவர்களாயும், **महोत्साहा:** - வெகு உற்சாகமுடையவர்களாகவும், (ஆவார்கள்), **का वा** - (இதில்) எவள், **कं वरं** - எந்த வரத்தை, **इच्छति** - விரும்புகின்றாள் ?

யைக் கேட்ட, "கேசினி," "ஸுமதி" இவ்விருவரும் மிகக் களிப்புற்றவர்களாய் அம்மஹரிஷியை நோக்கிக் கைகளைக் கூட்பிக்கொண்டு, ஹே பிராம்மணோத்தமரே! எங்களுள், எவளுக்கு ஒரு புத்திரனுண்டாவான்? எவளுக்கு அறுபதினாயிரம் புத்திரர்கள் உண்டாவார்கள்? இதைக்கேட்க விரும்புகின்றோம், என்று வணக்கமாய் வினவினார்கள்.

11-14. (த-ரை) ஹே ரகு நந்தனா! ஸகர சக்கிரவர்த்தியின் பார்யைகளி

मुनेस्तु वचनं श्रुत्वा केशिनी रघुनन्दन ।
पुत्रं वंशकरं राम जग्राह नृपसन्निधौ ॥ 13 ॥
षष्टिं पुत्रसहस्राणि सुपर्णभगिनी तदा ।
महोत्साहान्कीर्तिमतो जग्राह सुमतिः सुतान् ॥ 14 ॥
प्रदक्षिणमृषिं कृत्वा शिरसाभिप्रणम्य च ।
जगाम स्वपुरं राजा सभार्यो रघुनन्दन ॥ 15 ॥

13. (ப-ரை) **रघुनन्दन** - ரகு வம்சத்தைக் களிக்கச் செய்கின்ற, **राम** - ஹே ராமா! **केशिनी** - கேசினீ என்பவள், **मुनेस्तु** - ப்ருகு முனிவருடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **वंशकरं** - வம்சத்தைச் செய்கின்ற, **पुत्रं** - புத்திரனை, **नृपसन्निधौ** - அரசனருகில், **जग्राह** - வரித்தனள்.

14. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **सुवर्णभगिनी** - கருடனுக்குடன் பிறந்தவளான, **सुमतिः** - ஸுமதி என்பவள், **कीर्तिमतः** - புகழுடையவர்களும், **महोत्साहान्** - வெகு உத்ஸாஹமுடையவர்களும், **षष्टिं** - அறுபது, **पुत्रसहस्राणि** - புத்திர ஆயிரங்களான, **सुतान्** - பிள்ளைகளை, **जग्राह** - வரித்தனள்.

15. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **राजा** - அரசன், **सभार्याः** - பார்யைகளோடு கூட, **शिरसा** - தலையால், **ऋषिं** - ப்ருகு மஹரிஷியை, **अभिप्रणम्य** - வணங்கியும், **प्रदक्षिणं च** - பிரதக்ஷிணத்தையும், **कृत्वा** - செய்து, **स्वपुरं** - தன் பட்டணத்தை, (க்குறித்து), **जगाम** - சென்றனன்.

ருவர்களும் இவ்வாறு கேட்கவே, அவ்விரு பெண்களைப் பார்த்து அருளிய ப்ருகு மஹாமுனிவர், "ஒருவனாகப் பிறக்கும் புத்திரன் வம்சத்தை விருத்தி செய்வான்! அறுபதினாயிரம் பிள்ளைகள் உலகில் மிகக் கீர்த்தியையும், புகழையும் அடைவார்கள்." இவையில் எவருக்கு எது இஷ்டமோ அதைப் பெறலாமென் றருளினர். ஹே ராகவா! அம்மஹரிஷி மொழிந்த அவ்வார்த்தைகளைக் கேட்டு, கேசினீ என்பவள் ஒரு பிள்ளையையும், ஸுமதி என்பவள் பல பிள்ளைகளையும் வரமாகப் பிரார்த்தித்துக் கொண்டனர்.

15. (க-ரை) ரகு குலத்திற்கு ஆனந்தத்தை விளைவிக்கின்ற ஹே மஹானுபாவனே! இராமா! இவ்வாறு ப்ருகு மஹரிஷியினிடத்தினின்று அவ்வரசனிரு பார்யைகளும் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு, ஸகர சக்கிரவர்த்தி

अथ काले गते तस्मिञ्ज्येष्ठा पुत्रं व्यजायत ।
असमञ्ज इति ख्यातं केशिनी सगरात्मजम् ॥ 16 ॥
सुमतिस्तु नरव्याघ्र गर्भतुम्बं व्यजायत ।
षष्टिः पुत्राः सहस्राणि तुम्बभेदाद्विनिःसृताः ॥ 17 ॥
घृतपूर्णेषु कुम्भेषु धात्र्यस्तान्समवर्धयन् ।
कालेन महता सर्वे यौवनं प्रतिपेदिरे ॥ 18 ॥

16. (ப-ரை) **अथ** - பிறகு, **तस्मिन्** - அந்த, **काले** - காலம், **गते** - செல்லுகையில், **ज्येष्ठा** - மூத்தவளான, **केशिनी** - கேசினீ, (பெண்மவள்) **सगरात्मजम्** - ஸகரரின் மகனும், **असमञ्ज इति ख्यातं** - அஸமஞ்ஜனெனப் பிரசித்தனுமான, **पुत्रं** - புத்திரனை, **व्यजायत** - பெற்றனள்.

17. (ப-ரை) **नरव्याघ्र** - ஹே மனித சிரேஷ்டனே! **सुमतिस्तु** - ஸுமதியென்பவளோவெனில், **गर्भतुम्बं** - சுரக்காய் போன்ற கர்ப்பத்தை, **व्यजायत** - பெற்றனள், **तुम्बभेदात्** - (அந்த) கர்ப்பப் பிண்டத்தின் பேதத்தினாலே, **पुत्राः सहस्राणि** - புத்திரர்களாயிரங்கள், **षष्टिः** - அறுபது, **विनिस्सृताः** - வெளிப் புறப்பட்டன.

18. (ப-ரை) **धात्र्यः** - தாதிகள், **तान्** - அவைகளை, **घृतपूर्णेषु** - நெய் நிறைந்த, **कुम्भेषु** - பானைகளில், (விட்டு), **समवर्धयन्** - விருத்தி பண்ணுவித்தனர், **महता** - அதிகமான, **कालेन** - காலத்தால், **सर्वे** - எல்லோரும், **यौवनं** - யௌவன பருவத்தை, **प्रतिपेदिरे** - அடைந்தனர்.

அம்மாமுனிவரை வலம் வந்து, தலையால் வணங்கி முறைப்படி நமஸ்கரித்துத் தம் பத்தினிகளோடு, தம் இராஜ்யத்தை அடைந்தார்.

16-17. (க-ரை) ஹே புருஷோத்தமா! சில நாள்கள் சென்றபிறகு அவ்வரசனுடைய இரு பத்தினிகளும், அம்மஹரிஷியினுடைய அருளினால் கர்ப்பவதியானார்கள். அவ்வரசனுடைய மூத்த மஹிஷியான கேசினீ யென்னும் பார்யை, இக்ஷ்வாகு வம்சத்தை விருத்தி செய்யத்தகுந்த பெரு பிரஸித்தனான, அஸமஞ்சன் என்று பெயர் பெற்ற ஓர் புத்திரனைப் பெற்றனள். அவளுக்கு இளையவளான ஸுமதி யென்று பெயர்பெற்ற இளைய பார்யையானவள், சுரக்காய் போன்றதோர் கருப்பிண்டத்தையும் பெற்றனள். பிறகு, அப்பிண்டம் உடைந்து, அதினின்று அறுபதினாயிரம் பிள்ளைகள் தோன்றலாயின.

18-19. (க-ரை) இவ்வாறு அச்சுரக்காய்ப் பிண்டம் வெடித்து, அதிலிருந்து;

अथ दीर्घेण कालेन रूपयौवनशालिनः ।
षष्टिः पुत्रसहस्राणि सगरस्याभवंस्तदा || 19 ||
स च ज्येष्ठो नरश्रेष्ठः सगरस्यात्मसंभवः ।
बालान्गृहीत्वा तु जले सरय्वा रघुनन्दन || 20 ||
प्रक्षिप्य प्रहसन्नित्यं मज्जतस्तान्समीक्ष्य वै || 20½ ||
एवं पापसमाचारः सज्जनप्रतिबाधकः ।
पौराणामहिते युक्तः पुत्रो निर्वासितः पुरात् || 21½ ||

19. (ப-ரை) **अथ** - பிறகு, **दीर्घेण कालेन** - நீடித்த காலத்தினால், **सगरस्य** - ஸகரருடைய, **षष्टिः** - அறுபது, **पुत्रसहस्राणि** - புத்திரர்களாயிரம், **रूपयौवनशालिनः** - ரூபயௌவநங்களால் பிரகாசித்தனவாக, **तदा** - அப்பொழுது, **अभवं** - ஆயிற்று.

20-20½. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே நரோத்தமா! **सगरस्य** - ஸகரருடைய, **आत्मसंभवः** - சரீரத்திலுண்டானவனும், **ज्येष्ठः** - மூத்தவனுமான, **सच** - அந்த, (**அஸமஞ்சன்**) **बालानूगृहीत्वा** - குழந்தைகளைப் பிடித்து, **सरय्वाः** - ஸரயூநதியின், **जले** - ஜலத்தில், **नित्यं** - எப்பொழுதும், **प्रक्षिप्य** - போட்டு, **मज्जतः** - முழுகிக் கொண்டிருக்கிற, **तान्** - அப்பிள்ளைகளை, **समीक्ष्य** - பார்த்து, (**हे**) **रघुनन्दन** - ஓராகவா! **प्रहसन्** - சிறித்து (க்கொண்டிருந்தனன்).

21½. (ப-ரை) **एवं** - இவ்விதம், **पापसमाचारः** - பாதகத்தைச் செய்பவனும், **सज्जनप्रतिबाधकः** - ஸாதுக்களுக்கு இடையூறு செய்பவனும், **पौराणां** - பட்டணத்து ஜனங்களுக்கு, **अहिते** - ஹிம்ஸையும் பொருட்டு, **युक्तः** - கூடினவனுமான, **पुत्रः** - (**அஸமஞ்சனென்கிற**) புத்திரன், **पुरात्** - பட்டணத்திலிருந்து, **निर्वासितः** - வெளிப்படுத்தப் பட்டனன்.

தோன்றிய அப்பிள்ளைகளை தாதிமார்கள் எடுத்து நெய்க்கொப்பரையில் விட்டு வளர்த்து வந்தனர். இவ்விதம் வளர்த்து வரவே, வெகு காலஞ்சென்ற பிறகு, அப்புதல்வர்களெல்லோரும் கிரமமாக சிறந்த ரூப யௌவநம் அடைந்து புஜபல பராக்கிரமமுடையவர்களாய் வளர்ந்து வந்தனர்கள்.

20-20½. (க-ரை) ஹே நரோத்தமா! ஹே ராமா! இவ்வாறு வளர்ந்து கொண்டு வருகையில், அச்சகரருடைய மூத்த புதல்வனை "அஸமஞ்சன்" மதி மயங்கி அந்நகரத்திலுள்ள குழந்தைகளை யெடுத்து பிரதிதினமும் ஸரயூ நதியின் ஜலத்திற்போட்டு, அக்குழந்தைகள் நீருண்டு விழி பிதுங்கி வயிர் பெருத்து ஜலத்தில் மூழ்கிக் கிளம்பிக் கிளம்பிப் பரிதபித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கைகொட்டி நகைத்துக் கொண்டு வந்தனன்.

21½. (க-ரை) இவ்வாறு கொடிய செயல்களைச் செய்துகொண்டு ஸாதுக்களுக்கும், பட்டணத்து ஜனங்களுக்கும் தீங்கை விளையாட்டாகச் செய்து

तस्य पुत्रोंशुमान्नाम असमंजस्य वीर्यवान् ।
संमतः सर्वलोकस्य सर्वस्यापि प्रियंवदः ॥ 22½ ॥
ततः कालेन महता मतिः समभिजायत ।
सगरस्य नरश्रेष्ठ यजेयमिति निश्चिता ॥ 23½ ॥
स कृत्वा निश्चयं राम सोपाध्यायगणस्तदा ।
यज्ञकर्मणि वेदज्ञो यष्टुं समुपचक्रमे ॥ 24½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डेऽष्टत्रिंशः सर्गः ॥ 38 ॥

22½. (ப-ரை) **तस्य** - அந்த, **असमंजस्य** - அஸமஞ்சனுக்கு, **वीर्यवान्** - பராக்கிரமமுடையவனும், **सर्वलोकस्य** - எல்லா உலகத்திற்கும், **संमतः** - இஷ்டனும், **सर्वस्य** - எல்லா ஜனங்களுக்கும், **प्रियं** - இஷ்டத்தை, **वदः** - சொல்லுபவனுமான, **अंशुमान्नाम** அம்சுமானென்கிற, **पुत्रः** - புத்திரன், (உண்டானன்).

23½. (ப-ரை) (हे) **नरश्रेष्ठ** - ஹே நரோத்தமா! **ततः** - பிறகு, **महता** - அதிகமான, **कालेन** - காலத்திலை், **सगरस्य** - ஸகர சக்கிரவர்த்திக்கு, **यजेयमिति** - யாகம் செய்ய வேண்டுமென்கிற, **निश्चिता मतिः** - நிச்சயமுடைய புத்தி, **समभिजायत** - உண்டாயிற்று.

24½. (ப-ரை) (हे) **राम** - ஹே ராகவா! **तदा** - அப்பொழுது, **वेदज्ञः** - வேதம் உணர்ந்த, **सः** - அந்த ஸகரர், **सोपाध्यायगणः** - ரித்விக் கணங்களோடு கூட, **यज्ञकर्मणि** - யாக கார்யத்தில், **निश्चयं** - உறுதியை, **कृत्वा** - செய்து, **यष्टुं** - யாகம் செய்வதற்கு, **समुपचक्रमे** - ஆரம்பித்தனர்.

கொண்டிருப்பதைப் பற்றி அச்சகர மன்னவர், அப்புத்திரனை நகரத்தைவிட்டுக் காட்டுக்குத் துரத்தி விட்டனர்.

22½. (க-ரை) அவ்வஸமஞ்சனுக்கு மிக்க நற்குணம், நற்செய்கையுடையவனையும், எல்லோராலும் புகழக்கூடியவனையும், மிகுந்த பலபராக்கிரமம் பொருந்தியவனுமான, அம்சுமானென்ற பெயர் பூண்ட ஓர் புதல்வனுண்டானன்.

23½-24½. (க-ரை) ஹே நரோத்தமா! ராமா கேளும், பின்பு வெகுகாலஞ் சென்றதும் வேதம் நன்குய்க் கற்றுணர்ந்த அச்சகர சக்கிரவர்த்தி அச்வமேத யாகம் செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டு, வஸிஷ்டர் முதலான மஹரிஷிகளோடு கலந்து ஆராய்ந்து, அப்படியே அச்சிறந்த யாகத்தைச் செய்வதாய் நிச்சயித்து சாஸ்திரப்படிச் செய்யத் துடங்கினர்.

एकोनचत्वारिंशः सर्गः ॥ 39 ॥

विश्वामित्रवचः श्रुत्वा कथान्ते रघुनन्दनः ।
उवाच परमप्रीतो मुनिं दीप्तमिवानलम् ॥ 1 ॥
श्रोतुमिच्छामि भद्रं ते विस्तरेण कथामिमाम् ।
पूर्वको मे कथं ब्रह्मन्यज्ञं वै समुपाहरत् ॥ 2 ॥
तस्य तद्वचनं श्रुत्वा कौतूहलसमन्वितम् ।
विश्वामित्रस्तु काकुत्स्थमुवाच प्रहसन्निव ॥ 3 ॥
श्रयतां विस्तरो राम सगरस्य महात्मनः ॥ 3½ ॥

1. (ப-ரை) **रघुनन्दनः** - ஸ்ரீ ராகவன், **विश्वामित्रवचः** - விச்வாமித்திரரின் வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **कथान्ते** - கதையின் முடிவில், **परमप्रीतः** - வெகு ப்ரீதியுடையவராக, **दीप्तं** - ஜ்வலிக்கின்ற, **अनलंइव** - அக்னிபோல், (இருக்கின்ற) **मुनिं** - விச்வாமித்திரரை, (க்குறித்து). **उवाच** - சொன்னார்.

2. (ப-ரை) (**हे**) **ब्रह्मन्** - ஓ ப்ராம்மணோத்தமரே ! **मे** - என்னுடைய, **पूर्वकः** - முன்னோர், **कथं** - எப்படி, **यज्ञं** - யாகத்தை, **समुपाहरत्** - செய்தனர், **इमां** - இந்த, **कथां** - கதையை, **विस्तरेण** - விரிவாக, **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छामि** - விரும்புகின்றேன், **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக.

3-3½. (ப-ரை) **तस्य** - அந்த (ஸ்ரீ ராகவனுடைய), **तत् वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - (விச்வாமித்திரர்) கேட்டு, **कौतूहलसमन्वितम्** - ஸந்தோஷத்துடன்

1-2. (க-ரை) இவ்வண்ணம் அவ்விச்வாமித்திர மஹரிஷி ஸகர சக்கிரவர்த்தி அச்வமேத யாகம் செய்யவாரம்பித்தனரென்று சொல்லி கதையை முடிக்கையில், ஸ்ரீரகுகுல திலகரான ராகவன் அளவற்ற ஆனந்தங்கொண்டு ஜ்வலிக்கும் அக்னி போல் விளங்கும் அக் கௌசிகமாமுனிவரை நோக்கி "ஹேப்ராம்மணோத்தமரே உமக்கு மங்களமுண்டாகட்டும், எங்கள் முன்னோராகிய அந்த ஸகரசக்கிரவர்த்தி எவ்விதம் அச்சிறந்த அச்வமேத யாகத்தைச் செய்து முடித்தனரோ, அதை விஸ்தாரமாகக் கேட்க ஆவலுள்ளவனாயிருக்கின்றேன். கிருபை செய்து அதைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக் கொண்டனன்.

3-3½. (க-ரை) திருமுகம் மலர்ந்து வெகு ஆனந்தத்துடன் மொழிந்த

शङ्करश्वशुरो नाम हिमवानचलोत्तमः ।
विन्ध्यपर्वतमासाद्य निरीक्षेते परस्परम् ॥ 4½ ॥

तयोर्मध्ये प्रवृत्तोऽभूद्यज्ञः स पुरुषोत्तम ।
स हि देशो नरव्याघ्र प्रशस्तो यज्ञकर्मणि ॥ 5½ ॥

கூடிய, **काकुत्स्थं** - ஸ்ரீ ராகவனை, (க்குறித்து) **विश्वामित्रस्तु** - விச்வாமித்திரரும், **प्रहसन्** - ப்ரஸன்ன முகமுடையவராய், (हे) **राम** - ஹே ராமா! **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **सगरस्य** - ஸகரருடைய, **विस्तरः** - (யாகத்தின்) விஸ்தாரம், **श्रूयतां** - கேட்கப்படட்டும், (என்று) **उवाच** - சொன்னார்.

4½. (ப-ரை) **शङ्करश्वशुरः** - சிவபெருமானுக்கு மாமனாரான, **हिमवान् नाम** - ஹிமவானென்ற பெயர் பூண்ட, **अचलोत्तमः** - பர்வத சிரேஷ்டம், **विन्ध्यपर्वतं** - விந்திய மலையை, **आसाद्य** - அடைந்து, **परस्परम्** - (நடுவில் வேறொரு மலையும் இல்லாமையால்) ஒன்றுக்கொன்று, **निरीक्षेते** - பார்த்துக் கொள்ளுவதுபோல் (இருக்கின்றது).

5½. (ப-ரை) (हे) **पुरुषोत्तम** - ஹே புருஷோத்தமா! **हि सः देशः** - எக்காரணத்தினால் அந்ததேசம், **यज्ञकर्मणि** - யாக கார்யங்களில், **प्रशस्तः** - சிறந்ததோ,

---

இவ்வினிய சொற்களைக் கேட்டு, அவ்விச்வாமித்திர மஹரிஷி, "நான் எதைச் சொல்லவேண்டுமென்று நினைத்தேனோ அதையே கேட்கின்றனன்" என்ற ஸந்தோஷத்தினால் மந்தஹாஸங்கொண்டு எல்லாவற்றையும் அறிந்த அவ்விராகவன், ஒன்றும் அறியாதவன்போல் கேட்கின்றதை நினைத்து அகமகிழ்ந்து ஹே ராமா! அச்சிறந்த ஸ்வபாவமுள்ள ஸகர சக்கிரவர்த்தியின் சரித்திரத்தை நீ விரும்பியபடியே விவரமாய் சொல்லுகின்றேன் கேளாய் என்றனர்.

4½-5½. (க-ரை) ஹே புருஷோத்தமா! சிவபெருமானுக்கு மாமனாராகிய ஹிமாலய பர்வதமும், பர்வத ராஜனாகிய விந்த்ய பர்வதமும் ஆகாயத்தை அளாவி ஒன்றுக்கொன்று நெருங்கி யிருப்பது பற்றியும், அவ்விரண்டு மலைகளுக்கும் இடையில் வேறொரு மலையும் மறைவா யிராததுபற்றியும் இவ்விரண்டு மலைகளும் ஒன்றுக்கொன்று பார்த்துக் கொண்டிருப்பதுபோல் விளங்குகின்றன. அவ்விரண்டு மலைகளின் இடையிலிருக்கும் ப்ரதேசமானது யாகஞ் செய்வதற்குத்

तस्याश्वचर्यां काकुत्स्थ दृढधन्वा महारथः ।
अंशुमानकरोत्तात सगरस्य मते स्थितः ॥ 6½ ॥
तस्य पर्वणि तं यज्ञं यजमानस्य वासवः ।
राक्षसीं तनुमास्थाय यज्ञीयाश्वमपाहरत् ॥ 7½ ॥

(அதிலுல்) **तयोः** - அம்மலைகளின், **मध्ये** - நடுவில் (हे) **नरव्याघ्र** - ஹே புருஷச் சிங்கமே! **यज्ञः** - (ஸகரரால்) யாகம், **प्रवृत्तः** - நடந்ததாக, **अभूत्** - ஆயிற்று.

• 6½. (ப-ரை) (हे) **काकुत्स्थ** - ககுத்தவம்சத்திற் பிறந்தவனே! (हे) **तात** - ஹே குழந்தாய்! **अंशुमान्** - அம்சுமானென்பவன், **दृढधन्वा** - உறுதியான வில்லையுடையவனும், **महारथः** - பெரும் ரதமுடையவனுமாக, **तस्य** - அந்த, **सगरस्य** - ஸகரருடைய, **मते** - ஆக்ஞையில், **स्थितः** - இருந்தவனாய், **अश्वचर्यां** - குதிரையின் பின் செல்லுவதை, **अकरोत्** செய்தனன்.

7½. (ப-ரை) **वासवः** - தேவேந்திரன், **राक्षसीं** - அரக்கியின் ஸம்பந்தமான, **तनुं** - தேஹத்தை, **आस्थाय** - அடைந்து, **यजमानस्य** - யாகம் செய்கின்ற, **तस्य** - அந்த ஸகரருடைய, **पर्वणि** - பருவ காலங்களில், **तं यज्ञं** - அந்த யாகத்தையும், **यज्ञीयाश्व** - யாகக்குதிரையையும், **अपाहरत्** - அபஹரித்தனன்.

தகுந்த புண்யபூமியாகையால் அம்மத்ய தேசத்தில் ஸகரபூபதியாரது அச்வமேத யாகம் நடந்தது.

6½. (க-ரை) ஹே காகுத்தனே! குழந்தாய்! ராகவா! மஹாரதனென்று க்யாதிபெற்று விளங்கிய அம்சுமானென்பவன், தன் பாட்டனரது கட்டளையால் திவ்ய ரதம் ஏறி வெகு வல்லமைபூண்டு எதிரிகளை வெல்லக்கூடிய சக்தியுள்ள பெரிய வில்லைக் கையிலேந்தி அந்த யாகத்தின் பொருட்டு பூர்த்த ஸம்ஸ்காரஞ்செய்ய விடப்பட்ட அச்வமேதக் குதிரையைப்பாதுகாத்துக்கொண்டு பின்சென்றனன்.

7½. (க-ரை) இவ்வாறு ஸகரபூபதி யாகத்தை நடத்திக்கொண்டிருக்கையில் தேவேந்திரன் ஸகர சக்கிரவர்த்தியின் யாகம் ஈடேறின், நம் அதிகாரம் போய்விடுமென்ற எண்ணங்கொண்டு சகியாமல், அரக்கர்களுக்குரிய மாயையைக் கொண்டு யாருமறியாது ஓர் ராக்ஷஸிபோல் சரீரம் பூண்டு பருவதினத்தில் அந்த யாகக் குதிரையை அபஹரித்துக் கொண்டு போய் விட்டனன்.

****महारथः** - யுத்த களத்தில் எவன் தன்னையும், ஸாரதியையும், குதிரைகளையும் காப்பாற்றிக்கொண்டு யுத்தஞ் செய்கிறுனே அவன் "மஹாரதன்".

ह्रियमाणे तु काकुत्स्थ तस्मिन्नश्वे महात्मनः ।
उपाध्यायगणाः सर्वे यजमानमथाब्रुवन् ॥ 8½ ॥
अयं पर्वणि वेगेन यज्ञीयाश्वोपनीयते ।
हर्तारं जहि काकुत्स्थ हयश्चैवोपनीयताम् ॥ 9½ ॥
यज्ञच्छिद्रं भवत्येतत्सर्वेषामशिवाय नः ।
तत्तथा क्रियतां राजन्यथाऽच्छिद्रः क्रतुर्भवेत् ॥ 10½ ॥

8½. (ப-ரை) (हे) काकुत्स्थ - ஹே ராகவா! तस्मिन् महात्मनः - அந்த ஸகர மஹாத்மாவினுடைய, अश्वे - குதிரை, ह्रियमाणे तु - அபஹரிக்கப்பட்டவளவில், अथ - பிறகு, सर्वे - எல்லா, उपाध्यायगणाः - உபாத்யாய கூட்டங்கள், यजमानं - யஜமானனை, (க்குறித்து), अब्रुवन् - சொல்லினார் அல்லது சொல்லிற்று.

9½. (ப-ரை) (हे) काकुत्स्थ - ஹே ராமா! अयं - இந்த, यज्ञीयाश्वः - யாகக் குதிரை, पर्वणि - பருவகாலங்களில், वेगेन - வேகமாக, अपनीयते - அபஹரிக்கப் பட்டது, (ஆகையால்), हर्तारं - அபஹரித்தவனை, जहि - கொன்று அல்லது வென்று, हयश्चैव - குதிரையையும், उपनीयताम् - கொண்டுவரப் படட்டும்.

10½. (ப-ரை) (हे) राजन् - ஹே அரசனே! एतत् - இந்த, यज्ञच्छिद्रं - யாகத்தின் கெடுதி, सर्वेषां नः - ஸகலர்களான நமக்கு, अशिवाय - கெடுதியின்பொருட்டு, भवति - ஆகிறது, तत् - ஆகையால், क्रतुः - யாகம், अच्छिद्रं - கெடுதியின்றி, यथा - எப்படி, भवेत् - ஆகுமோ, तथा - அப்படி, क्रियतां - செய்யப் படட்டும்.

8½-9½. (க-ரை) ஹே ராகவா! இவ்விதம் அம்மஹாத்மாவாகிய ஸகர சக்கிரவர்த்தியின யாகக்குதிரை அபஹரிக்கப்பட்டுப் போனவளவில் வஸிஷ்டர் முதலான ரித்விக்குக் கூட்டங்களனைவரும் அதை யறிந்து யஜமாநனுகிய அச்சகர சக்கிரவர்த்தியை நோக்கி, "ககுத்தவம்சத்திற்பிறந்த ஹே பூபதே! உமது யாகத்தைக் கெடுக்கும் பொருட்டு யாகக்குதிரையை எவனோ பர்வகாலத்தில் அபஹரித்துக் கொண்டுபோய் விட்டனன். "அக்குதிரையைக் கொண்டுபோன வனைக் கொன்று, குதிரையை மீட்டுக்கொண்டு வரவேண்டும்" என்றனர்.

10½. (க-ரை) ஹே அரசனே! யஜ்ஞத்திற்கு நேர்ந்த இடையூரானது நமக்கு எல்லோருக்கும் அமங்களத்தை விளைவிக்கும். ஆகையால் இந்த யாகம் எப்படி இடையூறின்றி கிரமப்படி நிறைவேறுமோ அப்படி நீர் செய்யவேண்டும், என்றனர்.

उपाध्यायवचः श्रुत्वा तस्मिन्सदसि पार्थिवः ।
षष्टिं पुत्रसहस्राणि वाक्यमेतदुवाच ह ॥ 11½ ॥
गतिं पुत्रा न पश्यामि रक्षसां पुरुषर्षभाः ।
मन्त्रपूतैर्महाभागैरास्थितो हि महाक्रतुः ॥ 12½ ॥
तद्गच्छत विचिन्वध्वं पुत्रका भद्रमस्तु वः ।
समुद्रमालिनीं सर्वां पृथिवीमनुगच्छत ॥ 13½ ॥
एकैकं योजनं पुत्रा विस्तारमभिगच्छत ॥ 14 ॥

11½. (ப-ரை) **पार्थिवः** - அரசரான (ஸகரர்), **उपाध्यायवचः** - ரித்விக்குகளுடைய வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **तस्मिन् सदसि** - அந்த ஸபையில், **षष्टिं** - அறுபது, **पुत्रसहस्राणि** - புத்திரினாயிரங்களை, (க்குறித்து) **एतत्** - இந்த, **वाक्यं** - வார்த்தையை, **उवाच ह** - சொல்லினார்.

12½. (ப-ரை) **पुरुषर्षभाः** - புருஷ சிரேஷ்டர்களான, (**हे**) **पुत्राः** - ஹே புத்திரர்களே! **हि** - எக்காரணத்தினால், **महाक्रतुः** - சிறந்த யாகம், **मन्त्रपूतैः** - மந்திரத்தினால் பரிசுத்தமும், **महाभागैः** - சிரேஷ்டர்களான, (ரித்விக்குகளினாலே), **आस्थितः** - அநுஷ்டிக்கப்பட்டதோ, (அதினால்) **रक्षसां** - அரக்கருடைய, **गतिं** - வரவை, **न पश्यामि** - (நான்) பார்க்கிலேன்.

13½-14. (ப-ரை) **तत्** - ஆகையால், (**हे**) **पुत्रकाः** - ஹே புத்திரர்களே! **गच्छत** - சொல்லுங்கள், **विचिन्वध्वं** - தேடுங்கள், **वः** - உங்களுக்கு, **भद्रं अस्तु** - மங்களம் உண்டாகட்டும், **समुद्रमालिनीं** - கடலையே மாலையாயுடைய, **पृथिवीं सर्वां** - பூமி முழுமையும்,

11½-12½. (க-ரை) ஸகரபூபதியும் அவ்விதம் சொன்ன புரோஹிதர்களுடைய அம்மொழியைக் கேட்டு, அந்த ஸபையில் தனது புத்திரர்களான அறுபதினாயிரம் பெயர்களையும் பார்த்து "புருஷர்களிற் சிறந்த ஹே புத்திரர்களே! விதிப்படி இம்மஹா யஜ்ஞமானது சீராக நடந்து வருகின்றது. மந்திரங்களையெல்லாம் அறிந்து மிகப் பரிசுத்தர்களான இம்மஹானுபாவர்களால் நடத்தப்படுகின்றமையால் இங்கொரு அரக்கரும் அணுகி குதிரையை அபஹரித்துக்கொண்டு போகும் வழி ஒன்றுந் தோன்றவில்லை.

13½-16. (க-ரை) ஆகையால் ஹே புத்திரர்களே! நீங்களெல்லோரும் தேடுங்கள். குழந்தைகளே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். நீங்களெல்லோரும் விசாலமான இப்பூமி முழுவதையும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு காத

यावत्तुरगसंदर्शस्तावत्खनत मेदिनीम् ।
तं चैव हयहर्तारं मार्गमाणा ममाज्ञया ॥ 15 ॥
दीक्षितः पौत्रसहितः सोपाध्यायगणो ह्यहम् ।
इह स्थास्यामि भद्रं वो यावत्तुरगदर्शनम् ॥ 16 ॥
इत्युक्ता हृष्टमनसो राजपुत्रा महाबला ।
जग्मुर्महीतलं राम पितुर्वचनयन्त्रिताः ॥ 17 ॥

अनुगच्छत - தேடிச் செல்லுங்கள், **(हे) पुत्राः** - ஹே புத்திரர்களே ! **एकैकं योजनं** - ஒவ்வொரு காதமாக, **विस्तारं** - (பூமியின்) விசாலத்தை, **अभिगच्छत** - அடையுங்கள்.

15. (ப-ரை) **मम आज्ञया** - என்னுடைய நியமனத்தால், **तं** - அந்த, **हयहर्तारं** - குதிரையை அபஹரித்தவனை, **मार्गमाणा** - தேடிக்கொண்டு, **यावत्** - எவ்வளவுக்குள், **तुरगसंदर्शः** - குதிரையைப் பார்ப்பதாகாது, (ஆகுமோ) **तावत्** - அதுபரியந்தம், **मेदिनीम्** - பூமியை. **खनत** - வெட்டுங்கள்.

16. (ப-ரை) **दीक्षितः** - யாக தீக்ஷை கொண்ட, **अहं** - யான், **पौत्रसहितः** - பேரனோடும், **सोपाध्यायगणः** - ரித்விக்கணங்களோடும், **यावत्** - எதுவரையில், **तुरगदर्शनम्** - குதிரையின் பார்வை, (ஆகுமோ) **इह** - (அதுவரையில்) இங்கு, **स्थास्यामि** - இருக்கிறேன்; **वः** - உங்களுக்கு, **भद्रं** (अस्तु) - மங்களம் (உண்டாகட்டும்).

17. (ப-ரை) (हे) **राम** - ஹே ராகவா ! **महाबलाः** - வெகு பலமுடையவர்களான, **राजपुत्राः** - இராஜ குமாரர்கள், **इति उक्ताः** - இவ்வாறு சொல்லப்பட்டவராக, **हृष्टमनसः** - களிப்புற்ற மனமுடையவர்களாய், **पितुः** - பிதாவினுடைய, **वचनयन्त्रिताः**-

---

மாகத் தனித்தனியாய் ஆராய்ந்து, நம் குதிரையையும், அதை அபஹரித்தவர்களையும் தேடி அறியக்கடவீர்கள். அப்படி இப்புவியிலெங்கும் அகப்படாவிடில், குதிரையகப்படும் வரையில் என்னுடைய ஆக்ஞையால் பூமியைத் தோண்டுங்கள், வெட்டுங்கள், அடையுங்கள் பாதாளத்தை ஆராயுங்கள் பாதாள முழுமையும், உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். யான் யாகதீக்ஷை கொண்டிருக்கிறபடியால் இதைவிட்டு எங்கும் போகலாகாது. ஆகையால் நீங்கள் திரும்பி நம் குதிரையுடன் வரும் வரையில் யான் பேரனோடும், ரித்விக்குக் கூட்டங்களுடனும் தீக்ஷையை விடாமல் இந்த யாக சாலையிலேயே இருக்கின்றேன். நீங்கள் போய்வாருங்கள் என்று ஆக்ஞாபித்தனர்.

17-19. (க-ரை) ஹே ராகவா ! இவ்வாறு ஸகர சக்கிரவர்த்தியால் ஆக்ஞாபிக்கப்பட்டு அந்த அறுபதினாயிரம் பெயர்களும் அக்கட்டளையைத் தலையின் மேற்கொண்டு மிகுந்த மனமகிழ்ச்சி கொண்டு பூமியெங்கும் தேடத்துடங்கினர்கள்.

योजनायामविस्तारमेकैको धरणीतलम् ।
बिभिदुः पुरुषव्याघ्र वज्रस्पर्शसमैर्नखैः ॥ 18 ॥
शूलैरशनिकल्पैश्च हलैश्चापि सुदारुणैः ।
भिद्यमाना वसुमती ननाद रघुनन्दन ॥ 19 ॥
नागानां वध्यमानानामसुराणां च राघव ।
राक्षसानां च दुर्धर्षः सत्वानां निनदोऽभवत् ॥ 20 ॥

வார்த்தையால் நியமிக்கப்பட்டவர்களாய், **महीतलं** - பூப்பிரதேசத்தை, **जग्मुः** - அடைந்தனர்கள்.

18. (ப-ரை) (हे) **पुरुषव्याघ्र** - ஹே புருஷோத்தமனே! **एकैकः** - (அவர்கள்) ஒவ்வொருவரும், **वज्रस्पर्शसमैः** - வஜ்ஜிரத்தின் தொடுவதோடு ஸமமாயுடைய, அதாவது வஜ்ராயுதத்தைப் போல் அவ்வளவு உறுதியான, **नखैः** - (தங்கள்) நகங்களால், **धरणीतलम्** - பூதலத்தை, **योजनायामविस्तारः** - ஒரு காத நீளமும் அகலமும் உடையதாக, **बिभिदुः** - பிளந்தனர்கள்.

19. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராகவா! **अशनिकल्पैः** - வஜ்ராயுதத்திற்கு நிகரான, **शूलैश्च** - சூலங்களாலும், **सुदारुणैः** - மிக க்ரூரங்களான, **हलैश्चापि** - கலப்பைகளாலும், **भिद्यमाना** - பிளக்கப்பட்ட, **वसुमती** - பூமி, **ननाद** - சப்தித்தது.

20. (ப-ரை) (हे) **राघव** - ஹேராகவா! **वध्यमानानां** - (பூமியைப் பிளக்கும் பொழுது) கொல்லப்படுகின்ற, **नागानां** - ஸர்ப்பங்களுடையவும், **असुराणां च** - அஸு-

ஹே புருஷோத்தமா! ஹே ராமா! இவ்வாறு பூமி முழுவதும் தேடி குதிரையைக் காணமல் பிறகு அச்சகர புத்திரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காதம் தூரம் அகலமும், நீளமுமாய் பூமியைப் பங்கிட்டுக்கொண்டு, கீழே படும்பொழுதே வஜ்ராயுதத்திற்கு ஒப்பற்ற தமது கடினமான நகங்களாலும், வஜ்ராயுதம் போன்ற சூலங்களாலும், மிகப் பயங்கரமான கலப்பைகளாலும் பூமியைப் பிளந்தனர்கள். இவ்வாறு பூமியானது கோரமாகப் பிளக்கப்படும் பொழுது பூமியெங்கும் பலத்த சப்தமுண்டாயிற்று.

20-22. (க-ரை) ஹே ராகவா! கேளும், வெகுகோரமாய் வீரர்களான அச்சகர குமாரர்களால் இவ்வாறு க்ரூரமான ஆயுதங்களால் வெகு கோரமாய் பூமி பிளக்கப் படுகையில் பூமியில் வஸித்திருந்த ஸர்ப்பங்களும், பாதாள வாஸிகளான அஸுரர்களும், அரக்கர்களும் மற்றுமுள்ள பிராணி

योजनानां सहस्राणि षष्टिं तु रघुनन्दन ।
बिभिदुर्धरणीं वीरा रसातलमनुत्तमम् ॥ 21 ॥

एवं पर्वतसंबाधं जम्बूद्वीपं नृपात्मजाः ।
खनन्तो नृपशार्दूल सर्वतः परिचक्रमुः ॥ 22 ॥

ततो देवाः सगन्धर्वाः सासुराः सहपन्नगाः ।
संभ्रान्तमनसः सर्वे पितामहमुपागमन् ॥ 23 ॥

ரர்களுடையவும், **राक्षसानां च** -அரக்கர்களுடையவும், **सत्वानां** - (பூமிக்குள் இருக்கின்ற இதர) பிராணிகளுடையவும், **निनदः**—கூச்சல், **दुर्धर्षः**—ஸஹிக்கக் கூடாததாக, **अभवत्** - உண்டாயிற்று.

21. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராமா ! **वीराः**-பலவான்களான, (அந்த ஸகர புத்திரர்கள்) **योजनानां** - யோஜனைகளுடைய, **सहस्राणि षष्टिं** - ஆயிரம் அறுபதும், அதாவது (அறுபதுனாயிரம் யோஜனை தூரம்) **रसातलं** - பாதாளம், (தோன்றும் படி) **धरणीं** - பூமியை, **बिभिदुः**-பிளந்தனர்.

22. (ப-ரை) (हे) **नरशार्दूल** - ஹேநரசிரேஷ்டனே ! **नृपात्मजाः** - ராஜபுத்திரர்கள், **एवं** - இப்படி, **पर्वतसंबाधं** - மலையினால் நெருங்கப்பட்ட, **जम्बूद्वीपं** - ஜம்பூத்வீபத்தை, **खनन्तः** - வெட்டிக்கொண்டு, **सर्वतः** - எங்கும், **परिचक्रमुः**- திரிந்தனர்.

23. (ப-ரை) **ततः** - பிறகு, **सगन्धर्वाः** - கந்தர்வரோடும், **सासुराः**- அஸுரரோடும், **सहपन्नगाः**- ஸர்ப்பங்களோடும், (கூடின) **देवाः सर्वे** - தேவர்கள் எல்லோரும்,

களும் ஹிம்ஸிக்கப்பட்டு ஸஹிக்கமுடியாத ஓர் பெருத்த கோஷம் கிளம்பிற்று. பூமி கிடுகிடுென்று நடுங்கி பேரிரைச்சலிட்டது. ஹேராமா ! இவ்விதம் அவ்வீரர்கள் அறுபதுனாயிரம் யோஜனை தூரம் பூமியைப் பிளந்து பாதாளம் வெளித் தோன்றும்படிச் செய்துவிட்டனர். பிறகு ஹேநரோத்தமா ! அச்சகர புத்திரர்கள் மலைகள் நெருங்கிய ஜம்பூத்வீபம் முழுமையும் பாதாளமாகும்படிப் பிளந்து நான்கு பக்கங்களிலும் தேடித் திரிந்தனர்.

23-25. (க-ரை) பிறகு ஹே ரகுநந்தனா ! தேவர்கள், கந்தர்வர்கள், அஸுரர்கள், உரகர்கள், ஸர்ப்பங்கள் முதலிய எல்லோர்களும் மிகவும் பயந்து மனம் தளர்ந்து தங்கள் குறையைத் தெரிவித்துக் கொள்ளுகைக்காக பிதாமஹரான ப்ரும்ஹ தேவரிடம் ஓடிச்சென்றனர். ப்ரும்ஹ தேவரைப் பலவாறாய் துதிசெய்து மனதில் பயத்தால், துக்கமுற்ற முகமுடையவர்களாய் ஓ ஸ்வாமியே ! ப்ரும்ஹ

ते प्रसाद्य महात्मानं विषण्णवदनास्तदा ।
ऊचुः परमसंत्रस्ताः पितामहमिदं वचः ॥ 24 ॥
भगवन्पृथिवी सर्वा खन्यते सगरात्मजैः ।
बहवश्च महात्मानो हन्यन्ते तलवासिनः ॥ 25 ॥
अयं यज्ञहरोऽस्माकमनेनाश्वोऽपनीयते ।
इति ते सर्वभूतानि निघ्नन्ति सगरात्मजाः ॥ 26 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
एकोनचत्वारिंशः सर्गः ॥ 39 ॥

संभ्रान्तमनसः- பரபரப்புற்ற மனமுடையவர்களாய், **पितामहं** - ப்ருஹ்மாவை, **उपागमन्** - அடைந்தனர்.

24. (ப-ரை) **ते** - அத்தேவர்கள், **महात्मानं**- சிறந்த ஸ்வபாவமுடைய, **पितामहं** - ப்ருஹ்மாவை, **प्रसाद्य** - உகப்பித்து, அதாவது ஸ்தோத்திரம் செய்து, **तदा** - அப்பொழுது, **विषण्णवदनाः** -துக்க முற்ற முகமுடையவர்களாய், **परमसंत्रस्ताः** - வெகுபயந்தவர்களாக, **इदं वचः** - இந்த வார்த்தையை, **ऊचुः** - சொன்னார்கள்.

25. (ப-ரை) (हे) **भगवन्** - ஓமாஹாத்மிய முடையவரே! **सगरात्मजैः**- ஸகர புத்திரர்களால், **पृथिवी** - பூமி, **सर्वा** - முழுமையும், **खन्यते** - வெட்டப்பட்டது, **तलवासिनः** - பாதாளத்தில் வஸிக்கின்ற, **बहवः** - பலபேர்களான, **महात्मानश्च** - சிறந்த ஸ்வபாவ முடையவர்களும், **हन्यन्ते** - கொல்லப்படுகின்றனர்.

26. (ப-ரை) **ते सगरात्मजाः** - அந்த ஸகர புத்திரர்கள், **अयं**- இவன், **अस्माकं** - எங்களுடைய, **यज्ञहरः** - யாகத்தைக் கெடுத்தவன், **अनेन** - இவனால், **अश्वः** - குதிரை, **अपनीयते** - கொண்டுபோகப்பட்டது, **इति** - என்று, **सर्वभूतानि** - எல்லா பிராணிகளையும், **निघ्नन्ति** - கொல்லுகின்றனர்.

தேவரே! மிகநல்ல ஸ்வபாவமுடைய அச்சகர சக்கிரவர்த்தியின் புத்திரர்களால் பூமியெங்கும் பாதாளம் வரையில் பிளக்கப் பட்டுவிட்டது. பாதாள வாஸிகளான மஹாத்மாக்கள் அனைவரும் ஹிம்ஸிக்கப்பட்டு பலரும் மடிந்துபோயினர்.

26. (க-ரை) ஹே ப்ருஹ்ம தேவரே! இவ்வளவு மாத்திரமேயின்றி, யாரைப்பார்த்தாலும் "இவனே எங்கள் யாகத்தைக் கெடுத்தனன். இவனே எங்கள் குதிரையை அபஹரித்துப்போனவன்" என்று சொல்லிக்கொண்டுஸமஸ்த பிராணிகளையும் கொன்று விடுகின்றனர். அத்தேவர்களெல்லோரும் பிதாமஹரிடம் தாங்களே எங்களுக்குத் தஞ்சமென முறையிட்டுக் கொண்டனர்.

चत्वारिंशः सर्गः ॥ 40 ॥

देवतानां वचः श्रुत्वा भगवान्वै पितामहः ।
प्रत्युवाच सुसंत्रस्तान्कृतान्तबलमोहितान् ॥ 1 ॥

यस्येयं वसुधा कृत्स्ना *वासुदेवस्य धीमतः ।
कापिलं रूपमास्थाय धारयत्यनिशं धराम् ॥ 2 ॥

तस्य कोपाग्निना दग्धा भविष्यन्ति नृपात्मजाः ॥ $2\frac{1}{2}$ ॥

1, (ப-ரை) **भगवान्** - மாஹாத்மிய முடைய, **पितामहः** - ப்ரும்ஹதேவர், **देवतानां** - தேவர்களுடைய, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **सुसंत्रस्तान्** - மிகப் பயந்தவர்களும், **कृतान्तबलमोहितान्** - (ஸகரபுத்திரர்களுடைய) பலத்தால் மோஹிக்கும்படி செய்யப்பட்டவர்களான (அத்தேவர்களைக் குறித்து), **प्रत्युवाच** - பதில் சொன்னார்.

2-$2\frac{1}{2}$. (ப-ரை) **इयं** - இந்த, **वसुधा** - பூமி, **कृत्स्ना** - முழுமையும், **धीमतः**-மஹாத்மாவான, **यस्य वासुदेवस्य** - எந்த விஷ்ணுவினுடையதோ, **कापिलं** - (எவர்) கபில ஸம்பந்தமான, **रूपं** - உருவத்தை, **आस्थाय** - அடைந்து, **धराम्** - பூமியை, **अनिशं** - எப்பொழுதும், **धारयति** - தரிக்கின்றாரோ, **तस्य** - அம்மஹாவிஷ்ணுவினுடைய, **कोपाग्निना** - கோபத்தின் அக்கினியால், **नृपात्मजाः** - ராஜகுமாரர்கள், (ஸகரபுத்திரர்கள்) **दग्धाः** - கொளுத்தப்பட்டவர்களாக, **भविष्यन्ति** - ஆவார்கள்.

---

1. (க-ரை) இவ்விதம் அத்தேவர்களெல்லோரும் ஸகரபுத்திரர்களுக்குப் பயந்து நமக்கெங்கு விபத்து உண்டாகிறதோ வென்று பயந்து விரைந்தோடி வந்து ப்ரும்ஹாவினிடத்தில் முறையிட்டதைக்கேட்டு மகிமை யெல்லாமமைந்த ப்ரும்ஹதேவர் இவ்வாறு பதில் சொன்னார்.

2-$3\frac{1}{2}$. (க-ரை) அவ்வமரர்களை நோக்கி ப்ரும்ஹதேவர் "ஹே தேவர்களே! இப்பூமண்டலமெங்கும் நிறைந்து, ஸமஸ்தபதார்த் தங்களிலும் உள்ளும் புறமும்

* **वासुदेवः - वासुश्चासौ देवश्चेति वासुदेवः**—அதாவது எங்கும் நிறைந்தவன்-அதாவது ஸமஸ்த பதார்த்தங்களிலும் உள்ளும்புறமும் பரந்து வஸித்திருந்தும், தானவற்றிற் காதாரமாயிருந்தும், அவைகளில் பற்றற்று விளங்கி நின்றமையால் வாஸுதேவன் என்று பெயர் கொண்டனன்.

वसति सर्वत्रेति वासुः—அதாவது எல்லாவற்றிலும் இவன் நிரம்பியிருப்பதனால் வாஸு என்றும்,

दीव्यतीति देवः—அதாவது ஒளிபெற்றிருப்பவனாகையால் தேவனென்றும் சொல்லப்படுகின்றனன்.

पृथिव्याश्चापि निर्भेदो दृष्ट एव सनातनः ।
सगरस्य च पुत्राणां विनाशोऽदीर्घजीविनाम् ॥ 3½ ॥

पितामहवचः श्रुत्वा त्रयस्त्रिंशदरिंदम ।
देवाः परमसंहृष्टाः पुनर्जग्मुर्यथागतम् ॥ 4½ ॥

3½. (ப - ரை) **पृथिव्याः** - பூமியினுடைய, **निर्भेदः च अपि** - பிளப்பதும், **सगरस्य** - ஸகரருடைய, **अदीर्घजीविनां** - நெடுநாள் உயிரோடிராத, **पुत्राणां** - புத்திரர்களுடைய, **विनाशः** - அழிவும், **सनातनः** - பழயதாக, (முன்பாக) **दृष्ट एव** - பார்க்கப்பட்டது.

4½. (ப-ரை) (**हे**) **अरिंदम** - சத்ருக்களை ஒழிப்பவனே ! **त्रयस्त्रिंशत्** - முப்பத்து மூன்றான, **देवाः** - தேவர்கள், **पितामह वचः** - ப்ரும்ஹாவின் வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **परम संहृष्टाः** - மிக ஸந்தோஷப்பட்டவர்களாய், **पुनः** - மறுபடி, **यथागतं** - எப்படி வந்தனரோ, (அப்படியே) **जग्मुः** - சென்றனர்.

எந்த அறம்பொருளுண்டோ, பரமாத்மா ; அவரிருக்க நமக்கொரு துயரமுண்டோ ? இவ்வண்டமனைத்தும் அந்த பரமாத்மாவினுடையதல்லவோ ! ஸமஸ்த பதார்த்தங்களிலும் உள்ளும் புறமும் பரந்து வெளித்துக்கொண்டிருக்கும் அந்த ஸர்வேச்வரன் இப்பூமண்டலத்திற்குத் தீங்கு ஒன்றும் வராமல் கபில வடிவங்கொண்டு தம்மஹிமாதிசயத்தால் இத்தரணி முழுமையும் இடைவிடாது பாது காக்கின்றனர். அவரது கோபாக்கினியால் அச்சகர புத்திரர்களனைவரும் எரிந்து தணிந்து சாம்பலாய்ப் போய்விடப்போகின்றனர். இவர்கள் இப்பூமியை தோண்டுவதும், கபில சீற்றத்தால் இவர்கள் மடிவதும், தெய்வச்செயலென முன்னமே யான் அறிவேன். இப்பூமியானது கல்பந்தோறும் இவ்வாறே தோண்டப்பட்டு வருகின்றது. இது ஸநாதனமாய் நிர்ணயிக்கப்பட்ட விஷயமே ; என்று மொழிந்தனர்.

4½. (க-ரை) சத்ருக்களைத் தபிக்கச்செய்யும் பராக்கிரமமுள்ள ஹேராமா ! இவ்வாறு ப்ரும்ஹ தேவர் சொன்ன வார்த்தையைக் கேட்டு முப்பத்து முக்கோடி தேவர்களும் மிகக்களிப்புற்றவர்களாய் மீளவும் தாம் வந்தபடி தம்மிருப்பிடமே போய்சேர்ந்தனர்.

सगरस्य च पुत्राणां प्रादुरासीन्महात्मनाम् ।
पृथिव्यां भिद्यमानायां निर्घातसमनिःस्वनः ॥ 5½ ॥
ततो भित्वा महीं सर्वे कृत्वा चापि प्रदक्षिणम् ।
सहिताः सागराः सर्वे पितरं वाक्यमब्रुवन् ॥ 6½ ॥
परिक्रान्ता मही सर्वा सत्ववन्तश्च सूदिताः ।
देवदानवरक्षांसि पिशाचोरगकिन्नराः ॥ 7½ ॥

5½. (ப-ரை) **पृथिव्यां** - பூமியெங்கும், **भिद्यमानायां** - பிளக்கப்படுகையில், **सगरस्य** - ஸகரருடைய, **महात्मनां** - சிறந்த ஸ்வபாவமுடையவர்களான, **पुत्राणां** - புத்திரர்களுடைய, **निर्घातसमनिः स्वनः** - உத்பாதகத்திற்கு நிகரான த்வனி, **प्रादुरासीत्** - உண்டாயிற்று.

6½. (ப-ரை) **सर्वे** - (அந்த ஸகர புத்திரர்கள்) எல்லோரும், **महीं** - பூமியை, **भित्वा** - பிளந்து, **अपि प्रदक्षिणं च** - வலம் வருவதையும், **कृत्वा** - செய்து, **ततः** - பிறகு, **सगराः** - ஸகர புத்திரர்கள், **सर्वे** - எல்லோரும், **सहिताः** - சேர்ந்தவர்களாய், **पितरं** - தகப்பனாரை, (க்குறித்து) **वाक्यं** - வார்த்தையை **अब्रुवन्** - சொன்னார்கள்.

7½. (ப-ரை) **सर्वा** - ஸமஸ்தமான, **मही** - பூமி, **परिक्रान्तः** - சுற்றப்பட்டது, **देवदानवरक्षांसि** - தேவர்களும், அஸுரர்களும், ராக்ஷஸர்களும், **पिशाचोरगकिन्नराः च** -

5½. (க-ரை) அளவற்ற பராக்கிரமமுள்ள அந்த ஸகர புத்திரர்கள் முன்போலவே பூமியைப் பிளந்துகொண்டு போகையில், அவர்களுக்கே நேரிடப்போகின்ற கெடுதியை தெரிவிக்கும் பொருட்டு இடிபோன்ற பயங்கரமான ஓர் சப்தம் உண்டாயிற்று.

6½. (க-ரை) மேல் மேலும் அச்சகரபுத்திரர்கள் பேரிடிபோல் இரைச்சலிட்டுக்கொண்டு பார் முழுதும் பிளந்து பூமியை வலமாகச் சுற்றிப்பார்த்து எங்கும் குதிரையைக்காணாமல் மீண்டும் எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்கள் பிதாவான ஸகர சக்கிரவர்த்தியிடம் சென்று வணக்கத்துடன் பின் வருமாறு தெரிவித்துக் கொண்டனர்.

7½-8½. (க-ரை) ஓ தந்தயரே! நும் கட்டளையின்படி நாங்கள் இப்பூமி முழுதும் அலைந்து தேடி மிகவலுவுடைய தேவர்கள், தானவர்கள், அஸுரர்கள், பிசாசர்கள், உரகர்கள், கின்னரர்கள் ஆக எல்லோரையும் பிடித்துக்கொண்டே

न च पश्यामहेऽश्वं तमश्वहर्तारमेव च ।
किं करिष्याम भद्रं ते बुद्धिरत्र विचार्यताम् ॥ 8½ ॥

तेषां तद्वचनं श्रुत्वा पुत्राणां राजसत्तम ।
समन्युरब्रवीद्वाक्यं सगरो रघुनन्दन ॥ 9½ ॥

भूयः खनत भद्रं वो निर्भिद्य वसुधातलम् ।
अश्वहर्तारमासाद्य कृतार्थाश्च निवर्तथ ॥ 10½ ॥

பிசாசர்களும், உரகர்களும், கின்னரர்களும், **सत्ववन्तः** - பலமுடைய பிராணிகளும், **सूदिताः** - கொல்லப்பட்டன.

8½. (ப-ரை) **तं अश्वं** - அந்தக் குதிரையையும், **अश्वहर्तारं एव च** - குதிரையை அபஹரித்துக் கொண்டு போனவனையும், **न च पश्यामहे** - (நாங்கள்) பார்க்கவில்லை, (ஆகையால்) **किं करिष्यामः** - என்ன செய்யுவோம் ? **अत्र** - இவ்விஷயத்தில், **बुद्धिः** - **विचार्यतां** - புத்தி விசாரிக்கப்படட்டும், அதாவது ஆலோசனை செய்யுங்கள், **ते भद्रं** - உமக்கு மங்களமுண்டாகுக.

9½. (ப-ரை) (**हे**) **रघुनन्दन** - ஹே ராகவா ! **राजसत्तमः** - ராஜ சிரேஷ்டரான, **सगरः** - ஸகரர், **तेषां** - அந்த, **पुत्राणां** - புத்திரர்களுடைய, **तत्वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **समन्युः** - கோபங் கொண்டவராய், **वाक्यं** - (இந்த) வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

10½. (ப-ரை) **वसुधातलं** - பூதலத்தை, **भूयः** - மறுபடி, **निर्भिद्य** - பிளந்து, **खनत** - தோண்டுங்கள், **वः** - உங்களுக்கு, **भद्रं** - மங்களமுண்டாகட்டும், **अश्वहर्तारं** -

---

சுற்றிப்பார்த்தோம். ஆனால் அக்குதிரையையும் காணோம். அதை அபகரித்துக் கொண்டுபோனவனையும் காணோம்—என்ன செய்வோம்; இவ்விஷயத்தில் தாங்கள் தக்கயோஜனை செய்து ஆக்ஞாபிக்கவேண்டும், உமக்கு மங்களமுண்டாகட்டும் என்றனர்.

9½. (க-ரை) மன்னவர்களிற் சிறந்த ஹே ரகுநந்தனா! இவ்வாறு தம் புத்திரர்கள் மொழிந்த அம்மொழிகளைக்கேட்டு அந்த ஸகர பூபதி வெகு கோபங்கொண்டு அப்புத்திரர்களைப் பார்த்து பின்வருமாறு சொல்லத் துடங்கினர்.

10½. (க-ரை) அச்சகர பூபதி வெகு கோபத்தால் தம் புத்திரர்களைப் பார்த்து "என்ன உங்களுடைய பராக்கிரமம்," கருதியதை முடிக்காது திரும்பினதுமன்றி என்னிடம் வந்து குதிரையைக் காணவில்லையென்கின்றீர்களே. இப்படிச்சொல்ல மனம் உங்களுக்கு எப்படித் துணிந்தது. இருக்கட்டும் மீளவும்

पितुर्वचनमासाद्य सगरस्य महात्मनः ।
षष्टिः पुत्रसहस्राणि रसातलमभिद्रवन् ॥ 11½ ॥

खन्यमाने ततस्तस्मिन्ददृशुः पर्वतोपमम् ।
दिशागजं विरूपाक्षं धारयन्तं महीतलम् ॥ 12½ ॥

सपर्वतवनां कृत्स्नां पृथिवीं रघुनन्दन ।
शिरसा धारयामास विरूपाक्षो महागजः ॥ 13½ ॥

குதிரையை அபஹரித்துக் கொண்டு போனவனை, **आसाद्य** - அடைந்து, **कृतार्थाश्च** - செய்யப்பட்ட பிரயோஜன முடையவர்களாக, **निवर्तथ** - திரும்புங்கள் (என்றனர்).

11½. (ப-ரை) **महात्मनः** - சிறந்த ஸ்வபாவ முடையவரும், **पितुः** - தகப்பனுமான, **सगरस्य** - ஸகரருடைய, **वचनं** - வார்த்தையை, **आसाद्य** - அடைந்து, அதாவது கேட்டு, **पुत्रसहस्राणि** - புத்திரர் ஆயிரங்கள், **षष्टिः** - அறுபதும், **रसातलं** - ரஸாதலத்தை, (க்குறித்து) **अभिद्रवन्** - ஓடினர்.

12½. (ப-ரை) **ततः** - பிறகு, **तस्मिन्** - அப்பூமி, **खन्यमाने** - கல்லுகையில், **पर्वतोपमम्** - மலைக்கு நிகராக, **महीतलम्** - பூதலத்தை, **धारयन्तं** - தாங்கி நிற்கின்ற, **विरूपाक्षं** - விரூபாக்ஷமென்கிற, **दिशागजं** - திக்கஜத்தை, **ददृशुः** - பார்த்தனர்.

13½. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஸ்ரீராகவா! **विरूपाक्षः** - விரூபாக்ஷமென்கின்ற, **महागजः** - பெரும் யானையானது, **सपर्वतवनां** - மலைகளோடும், வனங்களோடும்கூடின,

சென்று குதிரையையும், அதை அபஹரித்துக்கொண்டு போனவனையும் கண்டு பிடிக்கும் வரையில் பூமியைப் பிளந்து வெட்டுங்கள். இப்பொழுது குதிரையை அவசியம் காணுவீர்கள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும். ஜெயம் பெற்று திரும்பிவாருங்கள் என்று உரைத்தனர்.

11½ (க-ரை) பிறகு, கம்பீரமான ஸ்வபாவமுடைய தங்கள் பிதாவான அச்சகர பூபதியாரது கட்டளைப்படிக்கு அவ்வறுபதுனாயிரம் பெயர்களும் பாதாளலோகத்தை நோக்கி ஓடிச்சென்று மீளவும் பூமியை தோண்டத் துடங்கினர்.

12½ (க-ரை) இவ்வாறு அச்சகர புத்திரர்கள் மீளவும் பூமியைத் தோண்டுகையில் மலை, காடு, கடலோடுகூடிய பூமியைச் சிரஸின்மேல் தாங்கி பெருமலை போல் அங்கு நிற்கும் "விரூபாக்ஷம்" என்னும் திக்கஜத்தைக் கண்டனர்.

13½ (க-ரை) ஹே ரகுகுலதிலகனே! ராமா! யானைகளிற் சிறந்த அவ்விரு

यदा पर्वणि काकुत्स्थ विश्रमार्थं महागजः ।
खेदाच्चालयते शीर्षं भूमिकम्पस्तदा भवेत् ॥ 14½ ॥
तं ते प्रदक्षिणं कृत्वा दिशापालं महागजम् ।
मानयन्तो हि ते राम जग्मुर्भित्वा रसातलम् ॥ 15½ ॥
ततः पूर्वां दिशं भित्वा दक्षिणां बिभिदुः पुनः ।
दक्षिणस्यामपि दिशि ददृशुस्ते महागजम् ॥ 16½ ॥

कृत्स्ना - ஸமஸ்தமான, **पृथिवीं** - பூமியை, **शिरसा** - தலையினால், **धारयामास** - தரித்துக் கொண்டிருந்தது.

14½. (ப-ரை) **काकुत्स्थ** - ஹே ராகவா ! **महागजः** - (அந்த) பெரும் யானை யானது, **विश्रमार्थं**- இளைப்பாற நிமித்தம், **खेदात्** - சிரமத்தினாலே, **पर्वणि** - பர்வ காலங்களில், **यदा** - எப்பொழுது, **शीर्षं** - தலையை, **चालयते** - அசைக்கின்றதோ, **तदा**- அப்பொழுது, **भूमिकम्पः** - பூமிநடுக்கம், அதாவது பூகம்பம், **भवेत्** - உண்டாகும்.

15½. (ப-ரை) **ते** - அப்புத்திரர்கள், **दिशापालं** - திக்கைக் காப்பாற்றுகின்ற, **तं** - அந்த, **महागजं** - பெரும் யானையை, **प्रदक्षिणं** - வலம் வருவதை, **कृत्वा** - செய்து, **मानयन्तः हि** - (அதை) பூஜித்துக் கொண்டு, **हे राम** - ஹே ராமா ! **रसातलं** - ரஸா தலத்தை, **ते** - அப்புத்திரர்கள், **भित्वा** – பிளந்து, **जग्मुः** – சென்றனர்.

16½. (ப-ரை) **ततः** - பிறகு, **ते** - அச்சகரபுத்திரர்கள், **पूर्वां दिशं** - கிழக்கு திக்கை, **भित्वा** - பிளந்து, **पुनः** - மறுபடி, **दक्षिणां** - தென்திசையை, **बिभिदुः** - பிளந் தனர், **दक्षिणस्य** - தெற்குனுடைய, **दिशि अपि** - திக்கிலும், **महागजं** - (ஒரு) பெரும் யானையை, **ददृशुः** - பார்த்தனர்.

பாக்ஷ மென்கிற திக்கஜமானது, மலைகளும், வனங்களும் நிறைந்த இப்பூமண்டல முழுதும் தன் தலையால் தாங்கிக்கொண்டிருக்கின்றது.

14½ (க-ரை) ககுத்தவம்சத்தில் அவதரித்த ஹே ராகவா! அம் மஹா கஜமானது பருவகாலங்களில் இளைப்பாறும் நிமித்தம் சிறுதுநேரம் அந்த க்ஷணத் தில் தன் தலையை அசைக்கின்றதோ அப்பொழுது பூகம்பம் உண்டாகின்றது.

15½ (க-ரை) அத்திசையை பரிபாலித்துக் கொண்டுவரும் அப் பெரிய திக் கஜத்தை அச்சகர புத்திரர்கள் பிரதக்ஷிணஞ் செய்து பூஜித்துவிட்டு ஹே ராகவா ! மீண்டும் ரஸாதலத்தைப் பிளந்து கொண்டே சென்றனர்.

16½ (க-ரை) அவ்விதம் கிழக்குதிக்கைப் பிளந்தபிறகு, மறுபடியும் தென் திசை வரையிலும் பூமியைப் பிளந்துகொண்டு போகையில், அத் தென்திசை யிலும் ஓர் பெரிய திக்கஜத்தைக்கண்டனர்.

महापद्मं महात्मानं सुमहत्पर्वतोपमम् ।
शिरसा धारयन्तं ते विस्मयं जग्मुरुत्तमम् ॥ 17½ ॥
ततः प्रदक्षिणं कृत्वा सगरस्य महात्मनः ।
षष्टिः पुत्रसहस्राणि पश्चिमां बिभिदुर्दिशम् ॥ 18½ ॥
पश्चिमायामपि दिशि महान्तमचलोपमम् ।
दिशागजं सौमनसं ददृशुस्ते महाबलाः ॥ 19½ ॥

17½. (ப-ரை) **ते** - அந்த ஸகரபுத்திரர்கள், (அங்கு) **शिरसा** - தலையால், **धारयन्तं** - (பூமியை) தாங்கிக்கொண்டிருக்கின்றதும், **महात्मानं** - சிறந்த ஸ்வபாவமுடையதும், **पर्वतोपमं** - மலைக்கு நிகரானதும், **सुमहत्** - நன்றாய் பூஜிக்கத் தகுந்ததுமான, **महापद्मं** - மஹா பத்மமென்கிற, (யானையைப்பார்த்து), **उत्तमम्** - சிறந்த, **विस्मयं** - ஆச்சர்யத்தை, **जग्मुः** - அடைந்தனர்.

18½. (ப-ரை) **ततः** - பிறகு, **महात्मनः** - சிறந்த புத்தியுடைய, **सगरस्य** - ஸகரருடைய, **पुत्रसहस्राणि** - புத்திரர் ஆயிரங்கள், **षष्टिः** - அறுபதும், **प्रदक्षिणं** - (அம்மஹா பத்மத்தை) பிரதக்ஷிணம் வருவதை, **कृत्वा** - செய்து, **पश्चिमां दिशं** - மேற்கான திக்கை, **बिभिदुः** - பிளந்தனர்.

19½. (ப-ரை) **महाबलाः** - மிகுந்த பலமுடைய, **ते** - அவர்கள், (ஸகரபுத்திரர்கள்) **पश्चिमायां दिशि** - மேற்கு திக்கில், **अचलोपमम्** - மலைக்கொப்பானதும், **महान्तं** - சிறந்ததும், **सौमनसं** - ஸௌமனஸமென்கிற, **दिशागजं** - திக்கஜத்தை, **ददृशुः** - பார்த்தனர்.

17½ (க-ரை) அந்த திக்கிலும் பூமண்டலத்தை யெல்லாம் தலையால் தாங்கியிருந்த மஹிமைபொருந்தி விளங்கிய "மஹா பத்மம்" என்ற பெரிய யானையையும் கண்டு மிகவும் ஆச்சர்யமடைந்தனர்.

18½ (க-ரை) பிறகு ஸகர மஹாராஜனுடைய அந்த அறுபதுனாயிரம் புத்திரர்களும் மஹாபத்மமென்கிற அப்பெரிய திக்கஜத்தை பிரதக்ஷிணஞ் செய்துவிட்டு, மேற்கு திசையைப் பிளக்கத் துடங்கினர்.

19½ (க-ரை) பிறகு மிக்க பலசாலிகளான அச்சகர புத்திரர்கள் அறுபதுனாயிரம் பெயர்களும் அந்த மேற்கு திசையில் ஸௌமனஸமென்கிற ஓர் திக்கஜம் பூமியைத் தாங்கிக்கொண்டு சிறந்த ஓர் பெரிய பர்வதம்போல் நிற்பதைக்கண்டனர்.

तं ते प्रदक्षिणं कृत्वा पृष्ट्वा चापि निरामयम् ।
खनन्तः समुपक्रान्ता दिशं हैमवतीं ततः ॥ 20½ ॥
उत्तरस्यां रघुश्रेष्ठ ददृशुर्हिमपाण्डुरम् ।
भद्रं भद्रेण वपुषा धारयन्तं महीमिमाम् ॥ 21½ ॥
समालभ्य ततः सर्वे कृत्वा चैनं प्रदक्षिणम् ।
षष्टिः पुत्रसहस्राणि बिभिदुर्वसुधातलम् ॥ 22½ ॥

20½. (ப-ரை) **ते** - அவர்கள், **तं** - அந்த கஜத்தை, **प्रदक्षिणं कृत्वा** - நமஸ்காரத்தைச் செய்து, அதாவது (சுற்றிவந்து நமஸ்காரம் செய்து), **निरामयं च अपि** - க்ஷேமத்தையும், **पृष्ट्वा** - கேட்டு, **ततः** - பிறகு, **खनन्तः** - தோண்டிக்கொண்டு, **हैमवतीं** - ஹிமவத் ஸம்பந்தமான அதாவது (பனியால் சூழப்பட்ட), **दिशं** - (வடக்கு) திக்கை, (க்குறித்து), **समुपक्रान्ताः** - பிளக்கவாரம்பித்தனர்.

21½. (ப-ரை) (हे) **रघुश्रेष्ठ** - ஹே ரகு குலோத்தமா! (அச்சகரபுத்திரர்கள்) **उत्तरस्यां** - வடதிசையில், **भद्रेण** - சோபாயமான, **वपुषा** - தேகத்தினால், **इमां** - இந்த, **महीं** - பூமியை, **धारयन्तं** - தரித்திருப்பதும், **हिमपाण्डुरं** - பனிபோல் வெளுப்பான, **भद्रं** - பத்ரம் என்கிற, (கஜத்தை) **ददृशुः** - பார்த்தனர்.

22½. (ப-ரை) **षष्टिः** - அறுபதான, **पुत्रसहस्राणि** - புத்திரர்களினாயிரம், (பெயர்கள்) **सर्वे** - எல்லோரும், **एनं** - இந்த (பத்ரமென்கிற) திக்கஜத்தை, **समालभ्य** -

20½ (க-ரை) அவ்விராஜ குமாரர்களனைவரும் அத்திக்கஜத்தை பிரதக்ஷிணம் செய்து பூஜை நமஸ்காரம் முதலியவைகளால் வணங்கி, க்ஷேமஸமாசாரம் விசாரித்து விடைபெற்றுக்கொண்டு ஹிமபர்வதத்தினால் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்த வடதிசைக்குச் சென்று பூமியைப் பிளக்க வாரம்பித்தனர்.

21½ (க-ரை) ரகுகுலத்து அரசர்களுக்கெல்லாம் ஓர் திலகம்போல் விளங்கும் ஹே ராகவா! மஹா சூரர்களான அச்சகர புத்திரர்கள் அங்கு பனிபோல் வெளுத்துப் பருத்து அழகான தேககாந்தியோடு கூடி இப்பூமண்டலத்தைத் தாங்கிக்கொண்டிருந்த பத்ரமென்ற திக்கஜத்தைக் கண்டனர். ஆச்சர்யமடைந்தனர்.

22½ (க-ரை) அந்த அறுபதுனாயிரம் ராஜகுமாரர்களும் அச்சிறந்த திக்கஜத்

ततः प्रागुत्तरां गत्वा सागराः प्रथितां दिशम् ।
रोषादभ्यखनन्सर्वे पृथिवीं सगरात्मजाः ॥ 23½ ॥
ते तु सर्वे महात्मानो भीमवेगा महाबलाः ।
ददृशुः कपिलं तत्र वासुदेवं सनातनम् ॥ 24½ ॥
हयं च तस्य देवस्य चरन्तमविदूरतः ।
प्रहर्षमतुलं प्राप्ताः सर्वे ते रघुनन्दन ॥ 25½ ॥

தொட்டும், **प्रदक्षिणं** - பிரதக்ஷிணத்தையும், **कृत्वा** - செய்து, **ततः** - பிறகு, **वसुधातलं** - பூதலத்தை, **बिभिदुः** - பிளந்தனர்.

23½. (ப-ரை) **ततः** - பிறகு, **सागराः** - ஸகரபுத்திரர்கள், **प्रथितां** - குதிரை செல்லுவதற்கு யோக்கியமானதும், **प्रागुत्तरां** - வடகிழக்கான, **दिशं** - திசையை, (க்குறித்து) **गत्वा** - சென்று, **सगरात्मजाः** - ஸகரபுத்திரர்கள், **सर्वे** - எல்லோரும், **पृथिवीं** - பூமியை, **रोषात्** - கோபத்தினால், **अभ्यखनत्** - நன்றாய் தோண்டினர்.

24½. (ப-ரை) **भीमवेगाः** - பயங்கரமான வேகங்களுடையவரும், **महात्मनः** - பெரும் தேஹமுடையவர்களும், **महाबलाः** - மிக்க பலமுடையவர்களுமான, **ते** - அந்த ஸகரபுத்திரர்கள், **सर्वे** - எல்லோரும், **तत्र** - அந்த, வடகிழக்கு திசையில், (ஈசான்யதிக்கில்), **सनातनं** - ஆதியற்றவரும் அதாவது (அனாதியானவர்), **कपिलं** - கபிலரூபம் தரித்தவருமான, **वासुदेवं** - ஸ்ரீ மஹாவிஷ்ணுவை, **ददृशुः** - பார்த்தனர்.

25½. (ப-ரை) (**हे**) **रघुनन्दन** - ஓ ராகவா ! **ते** - அப்புத்திரர்கள், **सर्वे** - எல்லோரும், **तस्य** - அந்த, **देवस्य** - தேவனான, கபிலவாஸுதேவருடைய, **अविदूरतः** -

தையும் தடவிக்கொடுத்து பிரதக்ஷிண நமஸ்காரம் முதலியவைகளால் நன்கு
த்து மீளவும் பூமியைப் பிளந்து கொண்டே சென்றனர்.

23½ (க-ரை) பிறகு அச்சகர புத்திரர்கள் தங்கள் குதிரை அகப்படத்தக்க வடகிழக்கு திக்கைநோக்கிச் சென்று மிகப்பயங்கரமான வேகத்துடனும், ரோஷத்துடனும் அங்கு பூமியைப் பிளந்துகொண்டே சென்றனர்.

24½ (க-ரை) பெரிய சரீரங்கொண்டு மிக்கவலிவுள்ள அச்சகர புத்திரர்கள் அந்த ஈசான்ய திக்கில் வெகு கோரமாய் பிளந்துகொண்டு போகையில், அங்கு அனாதியாக எழுந்தருளி யிருக்கும் கபிலவாஸுதேவரைக் கண்டனர்.

25½ (க-ரை) ஹே ராகவா ! அச்சகர புத்திரர்கள் அப்புராண புருஷோத்தமனை மாத்திரம் பார்க்கவில்லை, அத்தேவனருகில் புற்களை மேய்ந்துக்கொண்டு

ते तं हयहरं ज्ञात्वा क्रोधपर्याकुलेक्षणाः ।
खनित्रलाङ्गलधरा नानावृक्षशिलाधराः ॥ 26½ ॥
अभ्यधावन्त संक्रुद्धास्तिष्ठतिष्ठेति चाब्रुवन् ॥ 27 ॥
अस्माकं त्वं हि तुरगं यज्ञीयं हृतवानसि ।
दुर्मेधस्त्वं हि संप्राप्तान्विद्धि नः सगरात्मजान् ॥ 28 ॥

அருகாமையில், **चरन्तं** - உலாவுகின்ற, **हयं** - குதிரையை,(பார்த்து) **अतुलं** - நிகரற்ற, **प्रहर्षं च** - ஸந்தோஷத்தையும், **प्राप्ताः** - அடைந்தனர்.

26½-27. (ப-ரை) **ते** -அந்த ஸகரபுத்திரர்கள், **तं** - அக்கபிலவாஸுதேவரை, **हयहरं** - குதிரையைத் திருடினவராக, **ज्ञात्वा** - அறிந்து, **संक्रुद्धाः** - சினமுடையவர்களாகவும், **क्रोधपर्याकुलेक्षणाः** - கோபத்தால் வியாகூலமுள்ள கண்களையுடையவர்களாகவும், **खनित्रलाङ्गलधराः** - கெட்டப்பாரையும், கலப்பையும் தரித்தவர்களாகவும், **नानावृक्षशिलाधराः** - பற்பல மரங்களையும், கற்களையும் தரித்தவர்களுமாக, **तिष्ठतिष्ठेति** - நில்லு நில்லென்று, **अब्रुवन्** - சொல்லிக் கொண்டு, **अभ्यधावन्त** - மேல்வீழ்ந்தார்கள்.

28 (ப-ரை) **हे दुर्मेधः** - துஷ்ட புத்தியுடையவனே! **त्वं हि** - நீ, **अस्माकं** - எங்களுடைய, **यज्ञीयं** - யாகார்ஹமான, **तुरगं** - குதிரையை, **हृतवान्** - அபஹரித்தவனாக, **असि** - ஆகின்றாய், **त्वं** - நீ, **संप्राप्तान्** - (இங்கு) வந்திருக்கின்ற, **नः** - எங்களை,

அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்த தங்கள் யாகக்குதிரையையும் கண்டனர். வெகு ஆனந்தங்கொண்டனர்.

26½-28 (க-ரை) அச்சகர புத்திரர்கள் இவ்வளவு காலமாய் தங்கள் குதிரையையும், குதிரையை அபஹரித்துச் சென்றவனையும் கண்டறிவதற்காக தாங்கள் பட்ட துயரங்களை நினைத்து கோபாவேசங்கொண்டனர். அக்கோபத்தினால் புத்தியை பரிகொடுத்தனர். பிறகு அந்த மஹா பலவான்களான ராஜகுமாரர்கள் இவனே நம் யாகக்குதிரையை அபஹரித்தவனென்று நிச்சயங்கொண்டனர். கோபத்தால் கண்சிவந்து, மண்வெட்டி, கலப்பை, பலவித விருக்ஷங்கள், கற்கள் முதலியவைகளை யெடுத்துக்கொண்டு ரோஷத்துடன் ஓடிவந்து அக் கபில மஹா புருஷனைக்கிட்டி அடே துஷ்டா நில்லு, நில்லு, எங்கள் யாகக் குதிரையைத் திருடத்
…யல்லவா? ஹே மதிகெட்டவனே! அறியாயோ எங்களை? தெரியாதோ
எங்கள் பராக்கிரமம்? அயோத்திமா நகரத்து மன்னவரான ஸகரபூபதியின்

श्रुत्वा तु वचनं तेषां कपिलो रघुनन्दन ।
रोषेण महताविष्टो हुंकारमकरोत्तदा || 29 ||
ततस्तेनाप्रमेयेन कपिलेन महात्मना ।
भस्मराशीकृताः सर्वे काकुत्स्थ सगरात्मजाः || 30 ||

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
चत्वारिंशः सर्गः || 40 ||

सगरात्मजान् - ஸகரபுத்திரர்கள், (என்று) **विद्धि** - அறி அல்லது அறிந்துகொள்- (என்றனர்).

29. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராகவா! (பிறகு) **कपिलः** - கபிலர், **तेषां** - அவர்களுடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **महता** - அதிகமான, **रोषेण** - சினத்தால், **आविष्टः** - ஆவேசங் கொண்டவராக, **तदा** - அப்பொழுது, **हुंकारं** - ஹூம்காரத்தை அதாவது ("ஹூம்" என்று ஓர் சப்தத்தை), **अकरोत्** - செய்தார்.

30. (ப-ரை) (हे) **काकुत्स्थ** - ககுத்த வம்சத்திற் பிறந்த ஹே ராகவா! **ततः** - பிறகு, **अप्रमेयेन** - அளவிடற்கரிய வைபவ முடையவரும், **महात्मना** - சிறந்த மாஹாத்மயமுடையவருமான, **तेन** - அந்த, **कपिलेन** - கபில வாஸுதேவரால், **ते** - அந்த, **सगरात्मजाः** - ஸகரபுத்திரர்கள், **सर्वे** - எல்லோரும், **भस्मराशीकृताः** - சாம்பல் குவியலாகச் செய்யப்

குமாரர்களான யாங்கள் இதோ வந்தோ மென்று தெரிந்துகொள்! உன்னை சிக்ஷிப்பதற்காக வந்திருக்கின்றோம் என்று கர்ஜித்துக்கொண்டு மேல் வீழ்ந்தனர்.

29-30 (க-ரை) ஹே ராகவா! ககுத்தவம்சத்தி லவதரித்த ஹே புருடோத்தமா! இவ்வாறு சொன்ன அத் துஷ்டர்களுடைய வார்த்தையைக் கேட்டு, அக் கபில பகவானும் அளவற்ற கோபங்கொண்டு "ஹூங்காரம்" செய்தனர். அளவிட வொண்ணுத மஹிமையெல்லாம் அமைந்து எல்லா நற்குணங்களுக்கு மிருப்பிடமாயுள்ள அம்மஹா புருஷனுடைய ஹூங்கார மென்ற கோபாக்கினியால் அச்சகர புத்திரர்கள் அறுபதாயிரம் பெயர்களும் எரிக்கப்பட்டு சாம்பல் குவியலாகக் குவிந்தனர்.

एकचत्वारिंशः सर्गः ॥ 41 ॥

पुत्रांश्चिरगताञ्ज्ञात्वा सगरो रघुनन्दन ।
नप्तारमब्रवीद्राजा दीप्यमानं स्वतेजसा ॥ 1 ॥

* शूरश्च कृतविद्यश्च पूर्वैस्तुल्योऽसि तेजसा ।
पितृणां गतिमन्विच्छ येन चाश्वोऽपवाहितः ॥ 2 ॥

1. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராகவா! **सगरः** - ஸகரரென்கின்ற, **राजा** - அரசன், **पुत्रान्** - புத்திரர்களை, **चिरगतान्** - வெகு நாள் கடந்தவர்களாக, **ज्ञात्वा** - அறிந்து, **स्वतेजसा** - தன் தேஜஸ்ஸால், **दीप्यमानं** - ஜ்வலிக்கின்ற, **नप्तारं** - பேரனை, (க்குறித்து) **अब्रवीत्** - (பின்வருமாறு) சொன்னார்.

2. (ப-ரை) **शूरश्च** - சூரனும், **कृतविद्यश्च** - செய்யப்பட்ட தனுர் வித்தையுடைய வனும், **तेजसा** - பராக்கிரமத்தினால், **पूर्वैः** - முன்னோர்களோடு, **तुल्यः** - நிகரானவனு மாக, **असि** - (நீ) இருக்கின்றாய், **पितृणां** - (ஆதலால்) சித்தப்பன்மார்களுடைய, **गतिं** - மார்க்கத்தை, **अन्विच्छ** - தேடு, **येन** - எவனால், **अश्वः** - (யாகக்) குதிரை, **अपवाहितः** - கொண்டுபோகப் பட்டதோ, (அதையும் தேடுவாயாக).

1-2 (க-ரை) ஹே ரகுகுலத்திற் பிறந்த ராகவா! பின்பு அந்த ஸகரசக்கிர வர்த்தி, குதிரையைத் தேடுவதின் பொருட்டுச் சென்றதன் புத்திரர்கள் அறுபது னாயிரம் பெயர்களும் வெகுநாள் கழிந்தும் திரும்பி வராமையை அறிந்து வெகு தேஜஸ்ஸோடு தனக்கருகில் விளங்கும் தன் பேரனை நோக்கி, ஹே குழந்தாய்! அம்சுமானே, நீ வல்லமையெல்லாம் பொருந்தினவனாய் சஸ்த்ரவித்தைகள், அஸ்த்ரவித்தைகள் மற்றுமுள்ள பற்பல வித்தைகளையும் கற்று நன்கு தேர்ந்து பராக்கிரமமுடையவனாய் முன்னோர்களான மன்னவர்களுக்கு நிகராக விளங்குகின்றாய். ஆகையால், உன் சிற்றப்பன்மார்கள் போனவழியையும், நம் யாகக் குதிரையையும், அதை அபஹரித்துக்கொண்டு போனவனையும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருவாயாக, என்றுரைத்தனர்.

---

* **शूर**:—புலிபோல சத்துருவின் ஸேனையைச் செத்தைபோல் எண்ணி பயமில்லாமல் அதில் நுழைகின்றவன்.

वीर:—சண்டை போடும்போது களைப்பு, இளைப்பு முதலானவை இல்லா தவன்.

अन्तर्भौमानि सत्त्वानि वीर्यवन्ति महान्ति च ।
तेषां त्वं प्रतिघातार्थं सासिं गृह्णीष्व कार्मुकम् ॥ 3 ॥
अभिवाद्याभिवाद्यांस्त्वं हत्वा विघ्नकरानपि ।
सिद्धार्थः सन्निवर्तस्व मम यज्ञस्य पारगः ॥ 4 ॥
एवमुक्तोऽंशुमान्सम्यक्सगरेण महात्मना ।
धनुरादाय खड्गं च जगाम लघुविक्रमः ॥ 5 ॥

---

3. (ப-ரை) **वीर्यवन्ति** - வீரிய முடையதும், **महान्ति च** - பெரியதும், **अन्तर्भौमानि** - பூமிக்குள்ளிருப்பதுமான, **सत्वानि** - பிராணிகள், (எவைகளோ) **तेषां** - அவைகளுடைய, **प्रतिघातार्थं** - கொல்லும் நிமித்தம், **त्वं** - நீ, **सासिं** - பெரிய கத்தியோடுகூடின, **कार्मुकं** - வில்லை, **गृह्णीष्व** - பிடித்துக் கொள்.

4. (ப-ரை) **त्वं** - (ஹே அம்சுமானே) நீ, **अभिवाद्यान्** - வணங்கத்தக்கவர்களை, **अभिवाद्य** - வணங்கி, **विघ्नकरान्** - இடையூர் செய்வோரை, **हत्वा** - கொன்று, **मम** - என்னுடைய, **यज्ञस्य** - யாகத்தினுடைய, **पारगः** - முடிவைச் செய்கின்றவனாய், **सिद्धार्थः** - நிறைவேறின கார்யமுடையவனாக, **सन्निवर्तस्व** - நன்கு திரும்புவாயாக,

5. (ப-ரை) **महात्मना** - சிறந்த ஸ்வபாவ முடைய, **सगरेण** - ஸகரரால், **अंशुमान्** - அம்சுமான், **एवं** - இவ்விதம், **सम्यक्** - நன்றாகச் சொல்லப் பட்டவனாய், **खड्गं** - கத்தியையும், **धनुः** - வில்லையும், **आदाय** - எடுத்துக் கொண்டு, (அல்லது தரித்துக் கொண்டு) **लघुविक्रमः** - ஸௌர்ய பராக்கிரம முடையவனாக, **जगाम** - சென்றான். (புறப்பட்டான்).

3 (க-ரை) ஹே குழந்தாய்! பூமிக்குள் குகைகளில் வஸிக்கும் ஜந்துக்கள் மஹா பலசாலிகளாயிருக்கும். அவைகளை எதிர்ப்பதற்காக வில்லைக் கையிலேந்தி, கத்தி, கேடயம் முதலான திவ்யாயுதங்களையும் தரித்துக்கொண்டு செல்லுவாயாக.

4 (க-ரை) ஹே குழந்தாய்! அங்குள்ள மஹிமைபொருந்திய மஹான்களை வணங்கி பூஜித்தும், இடையூறு செய்யும் துஷ்டர்களை நாசஞ்செய்தும், போன கார்யத்தைப் நிறைவேற்றிக்கொண்டு திரும்பிவந்து என் யாகத்தைப் பூர்த்தி செய்து வைக்கவேணுமென்றும் சொல்லி யனுப்பிக் கொடுத்தனர்.

5 (க-ரை) இவ்விதம் அந்த மஹானுபாவரான ஸகர சக்கிரவர்த்தியினால் ஏவப்பட்ட மஹா புத்திமானான அவ்வம்சுமானும் அவ்வாறே செய்வதாய் தன் பாட்டனரான அச்சகர மன்னவரை வணங்கி உத்திரவு பெற்றுக்கொண்டு ஆயுத பாணியாய், தநுஸ்ஸையும், கத்தியையும் தரித்துக்கொண்டு புறப்பட்டனன்.

स खातं पितृभिर्मार्गमन्तर्भौमं महात्मभिः ।
प्रापद्यत नरश्रेष्ठस्तेन राज्ञाभिचोदितः ॥ ६ ॥
दैत्यदानवरक्षोभिः पिशाचपतगोरगैः ।
पूज्यमानं महातेजा दिशागजमपश्यत ॥ ७ ॥
स तं प्रदक्षिणं कृत्वा पृष्ट्वा चैव निरामयम् ।
पितॄन्स परिपप्रच्छ वाजिहर्तारमेव च ॥ ८ ॥

---

6. (ப-ரை) (हे) **नरश्रेष्ठ** - *ஹே புருஷோத்தமா !* **सः** - *அவ்வம்சுமான்,* **तेन** - *அந்த,* **राज्ञा** - *அரசனான ஸகரரால்,* **अभिचोदितः** - *ஏவப்பட்டவனாய்,* **महात्मभिः** - *பெரும் தேஹமுடைய,* **पितृभिः** - *பிதுருக்களால்,* **खातं** - *தோண்டப்பட்ட,* **अन्तर्भौमं** - *பூமிக்குள்ளிருக்கின்ற,* **मार्गं** - *மார்க்கத்தை,* **प्रापद्यत** - *அடைந்தனன்.*

7. (ப-ரை) **महातेजाः** - *வெகு தேஜஸ்ஸுடைய, (அம்சுமான்)* **दैत्यदानवरक्षोभिः** - *தைத்ய, தானவ, ராக்ஷஸர்களாலும்,* **पिशाचपतगोरगैः** - *பிசாசு, பக்ஷி, ஸர்ப்பம் இவைகளாலும்,* **पूज्यमानं** - *பூஜிக்கப்பட்ட,* **दिशागजं** - *திக்கஜத்தை,* **अपश्यत** - *பார்த்தான்.*

8. (ப-ரை) **सः** - *அவ்வம்சுமான்,* **तं** - *அத்திக் கஜத்தை,* **दृष्ट्वा** - *பார்த்து,* **प्रदक्षिणं** - *சுற்றிவருவதை,* **कृत्वा** - *செய்து,* **निरामयं चापि** - *க்ஷேமத்தையும்,* **पृष्ट्वा** - *கேட்டு,* **सः** - *அவ்வம்சுமான்,* **पितॄन्** - *(தன் சிற்றப்பன்மார்களான) பிதுருக்களையும்,* **वाजिहर्तारमेव च** - *குதிரையை அபஹரித்துக் கொண்டு போனவனையும்,* **परिपप्रच्छ** - *நன்றாய் கேட்டனன். அல்லது கிரமமாய் கேட்டனன்.*

---

6 (க-ரை) *ஹே புருஷோத்தமா ! ராமா ! அவ்வம்சுமான், தன் சிற்றந்தைகளால் பூமியில் வெட்டப்பட்ட மார்க்கமாய் அதிவேகமாக பூமிக்குள் பிரவேசித்தனன்.*

7 (க-ரை) *அங்கு திதிபுத்திரர்களாகிய அஸுரர்களாலும், ராக்ஷஸர்களாலும், பிசாசர்களாலும், தானவர்களாலும், பதகர்களாலும், உரகர்களாலும் நன்கு பூஜிக்கப்பட்டு மிக ஒளியுடன் விளங்கின ஓர் திக்கஜத்தை புத்திமானான அவ்வம்சுமான் கண்டனன்.*

8 (க-ரை) *அவ்வரசு குமாரன் அத் திக்கஜத்தைக் கண்டவுடன் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து க்ஷேமஸமாசாரம் விசாரித்து, என் சிறிய தகப்பன்மார்கள் எங்கேயிருக்கின்றார்கள் ? எங்கள் யாகக்குதிரையை யார் அபஹரித்துக்கொண்டு போனவன் ? இவைகளை உண்மையாய் சொல்லவேண்டுமென்று கிரமமாய் வெகு வணக்கத்துடன் வேண்டிக்கொண்டனன்.*

दिशागजस्तु तच्छ्रुत्वा प्रत्याहांशुमतो वचः ।
आसमञ्ज कृतार्थस्त्वं सहाश्वः शीघ्रमेष्यसि ॥ 9 ॥
तस्य तद्वचनं श्रुत्वा सर्वानेव दिशागजान् ।
यथाक्रमं यथान्यायं प्रष्टुं समुपचक्रमे ॥ 10 ॥
तैश्च सर्वैर्दिशापालैर्वाक्यज्ञैर्वाक्यकोविदैः ।
पूजितः सहयश्चैव गन्तासीत्यभिचोदितः ॥ 11 ॥

9. (ப-ரை) **दिशागजस्तु** - திக்கஜமோவெனில், **अंशुमतः** - அம்சுமானுடைய, **तत् वचः** - அவ்வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, (हे) - **आसमञ्ज** -ஹே அஸமஞ்ஜ புத்திரா, **त्वं** - நீ, **सहाश्वः** - குதிரையோடு கூட, **कृतार्थः** - செய்யப்பட்ட பிரயோஜன முடையவனாய், **शीघ्रं** - சீக்கிரமாக, **येष्यसि** - செல்லுவாய், (என்று) **प्रत्याह** - பதில் சொல்லிற்று.

10. (ப-ரை) **तस्य** - அத்திக்கஜத்தினுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **सर्वान्** - ஸகலங்களான, **दिशागजानेव** - திக்கஜங்களேயும், (குறித்து) **यथाक्रमं** - கிரமமாகவும், **यथान्यायं** - நியாயமாகவும், **प्रष्टुं** - கேட்பதற்கு, **समुपचक्रमे** - நன்கு ஆரம்பித்தனன்.

11. (ப-ரை) **वाक्यकोविदैः** - வாக்கியத்தில் திறமைவாய்ந்ததும், **वाक्यज्ञैः** - வாக்கியத்தை யறிந்ததும், **दिशापालैः** - திக்கைக் காப்பதும், **सर्वैः** ஸகலங்களுமான, **तैः** - அத்திக்கஜங்களால், **पूजितः** - ஸன்மானிக்கப்பட்டவனாகவும், **सहयश्चैव** - குதிரையோடு கூடினவனாகவும், **गन्तासि इति** - செல்லக்கடவாயென்றும், **अभिचोदितः** - ஏவப்பட்ட வனுமாக, (ஆனன்).

9 (க-ரை) அத்திக்கஜமும் அவ்வரசுகுமாரன் வினவினதைக் கேட்டு, ஹே அஸமஞ்ஜ குமாரனே ! நீ வந்த காரியம் நிறைவேறினவனாக உங்கள் யாகக்குதிரையுடன் சீக்கிரத்தில் திரும்பி வருவாயென்று பதிலளித்தது.

10 (க-ரை) அவ்வார்த்தையைக்கேட்டு பிறகு பேசுவதில் மிகத்திறமைவாய்ந்த அவ்வம்சுமான் கிரமமாகவே எல்லா திக்கஜங்களேயும் நியாயப்படி வெகு வணக்கத்துடன் தங்கள் அச்வமேதக் குதிரையைத் தேடிக்கொண்டுவந்த தன் சிறிய தகப்பன்மார்களேப்பற்றி விசாரித்தனன்.

11 (க-ரை) அத்திக்கஜங்களும் பிறர் சொல்லும் வார்த்தைகளின் கருத்தை அறியும் திறமை வாய்ந்திருப்பது மன்னியில், தாங்களும் வெகு அழகாகப்பேசும் வல்லமை பொருந்தினவைகளாகையால், அவ்வரசு குமாரனை பூஜைபுரஸ்காரஞ்செய்து, "அச்வமேதயாகக் குதிரையுடன் நீ உன் பாட்டனரான ஸகர மஹாராஜர் ஸமீபம் சீக்கிரம் செல்லக்கடவாய்" என்றுரைத்து உத்ஸாஹப்படுத்தின.

तेषां तद्वचनं श्रुत्वा जगाम लघुविक्रमः ।
भस्मराशीकृता यत्र पितरस्तस्य सागराः ॥ 12 ॥
स दुःखवशमापन्नस्त्वसमञ्जसुतस्तदा ।
चुक्रोश परमार्तस्तु वधात्तेषां सुदुःखितः ॥ 13 ॥
यज्ञीयं च हयं तत्र चरन्तमविदूरतः ।
ददर्श पुरुषव्याघ्रो दुःखशोकसमन्वितः ॥ 14 ॥

---

12. (ப-ரை) **तेषां** - அத்திக்கஜங்களுடைய, **तत् वचनं** - அந்தவார்த்தைகளை, **श्रुत्वा** - கேட்டு, **लघुविक्रमः** - தீவிரமான பராக்கிரமமுடையவனாய், **तस्य** - அந்த, (அம்சுமானுடைய), **पितरः** - பிதுருக்களாகிய, **सगराः** - ஸகர புத்திரர்கள், **यत्र** - எங்கு, **भस्मराशीकृताः** - சாம்பல் குவியலாய்ச் செய்யப்பட்டனரோ, (அப்பிரதேசத்தை), **जगाम** - அடைந்தான்.

13. (ப-ரை) **असमञ्जसुतः** - அஸமஞ்ஜ புத்திரனான, **स तु** - அம்சுமானோவெனில், **दुःखवशं** - துக்கத்தின் வசத்தை, **आपन्नः** - அடைந்தவனாக, **तदा** - அப்பொழுது, **तेषां** - அப்பிதுருக்களுடைய, **वधात्** - வதத்தினால், **सदुःखितः** - துக்கத்தோடுகூடினவனாக, **परमार्तः** - மிகவும் பீடிக்கப்பட்டவனாக, **चुक्रोश** - அழுதனன்.

14. (ப-ரை) **दुःखशोकसमन्वितः** - துக்க புலம்பலோடு, (கூடின), **पुरुषव्याघ्रः** - புருஷ சிரேஷ்டனான, (அம்சுமான்) **तत्र** - அங்கு, **अविदूरतः** - அருகில், **चरन्तं** -

---

12 (க-ரை) பிறகு அம்சுமானும் அக்கஜங்களுடைய அவ்வினிய சொற்களைக் கேட்டு அதிவேகமாய்ச் சென்று தன் சிறிய தகப்பன்மார்களாகிய ஸகர புத்திரர்கள் எங்கு சாம்பல் குவியலாகச் செய்யப்பட்டிருந்தனரோ அவ்விடத்தை அடைந்

13 (க-ரை) அங்கு தன் சிறிய தகப்பன்மார்கள் சாம்பல் குவியலாய் எரிக்கப் பட்டிருப்பதைக் கண்டான். அவர்கள் அகப்படாமையைக் குறித்து முற்கனவே மிக வருத்தமுற்றிருந்த அவ்வம்சுமான், அவர்களனைவரும் இவ்வாறு மடிந்து எரிந்து சாம்பல் குவியலாய் கிடப்பதைக் கண்டவுடனே, அத்துயரத்தைத் தாங்க முடியாமல் ஹாவென்று கதறி புலம்பினன்.

14 (க-ரை) அவ்வாறு கதறி புலம்பிக்கொண் டிருக்கையில் அங்கு ஸமீபத்தில் மேய்ந்துகொண்டிருந்த தங்கள் அச்வமேதக் குதிரையையும் கண்டனன். தான் புருஷ சிரேஷ்டனாய் மஹாதீரனாயிருந்தும், தன் பிதுருக்கள் இவ்விதம்

स तेषां राजपुत्राणां कर्तुकामो जलक्रियाम् ।
सलिलार्थी महातेजा न चापश्यज्जलाशयम् ॥ 15 ॥
विसार्य निपुणां दृष्टिं ततोऽपश्यत्खगाधिपम् ।
पितृणां मातुलं राम सुपर्णमनिलोपमम् ॥ 16 ॥
स चैनमब्रवीद्वाक्यं वैनतेयो महाबलः ।
मा शुचः पुरुषव्याघ्र वधोऽयं लोकसंमतः ॥ 17 ॥

திரிந்துகொண்டிருக்கின்ற, **यज्ञीयं** - யாகார்ஹமான, **हयं च** - குதிரையையும், **ददर्श** - பார்த்தான்.

15. (ப-ரை) **महातेजाः** - மிக்க தேஜஸ்ஸையுடைய, **सः** அந்த, (அம்சுமான்), **तेषां** -(அந்த) இராஜ புத்திரர்களுக்கு, **जलक्रियाम्** - தர்ப்பணத்தை, **कर्तुकामः**- செய்யக்கோரினவனாக, **सलिलार्थी** - ஜலத்தை விரும்பினவனாய், **जलाशयम् च** - (அங்கு) ஜல மிருக்குமிடத்தையும், **न अपश्यत्** - காணப்படவில்லை, அல்லது தெரியவில்லை.

16. (ப-ரை) (हे) **राम** - ஹே ராமா! **ततः** - பிறகு, (அவ்வம்சுமான்) **निपुणां** - ஸமர்த்தமான, அதாவது ஸூக்ஷ்ம அறிவுள்ள, **दृष्टिं** - பார்வையை, **विसार्य** - பரவச் செய்து, **सुपर्णं** - சிறந்த றக்கையையுடையவரும், **अनिलोपमम्** - வாயுவுக்கு நிகரானவரும், **पितृणां** - பிதுருக்களுக்கு, **मातुलं** - அம்மானுமான, (தாயுடன் பிறந்தவரான) **खगाधिपम्** - கருத்மானை, (கெருடனை). **अपश्यत्** - பார்த்தான்.

17. (ப-ரை) **वैनतेयः** - வினதையின் புத்திரரும், **महाबलः** - மிகபலமுடையவருமான, **स च** - அக்கெருடனும், (हे) **पुरुषव्याघ्र** - ஹே புருஷ சிரேஷ்டனே! **अयं** -

சாம்பல்குவியலாய் போனதைப்பற்றி தனக்குண்டான அந்த துக்கத்தை அடக்க முடியாமல் பரிதபித்தனன்.

15 (க-ரை) பிறகு மஹா தேஜஸ்ஸையுடைய அவ்வம்சுமான் தன் சிறிய தகப்பன்மார்களுக்கு ஜலதர்ப்பணம் முதலியவைகளைச் செய்ய விரும்பி, ஜலம் வேண்டி சுற்றிலும் பார்க்கும் பொழுது, ஓரிடத்திலும் ஜலத்தைக்காணவில்லை.

16 (க-ரை) ஹே ராமா! இவ்வாறு தூரத்ருஷ்டியுள்ள கண்களைவிட்டு உற்றுப்பார்த்தும் ஜலமிருக்குமிடம் காணவில்லை. அப்பொழுது அங்கு ஓரிடத்தில் தன் தந்தைகளுக்கு மாமனாகிய கெருடனைக்கண்டான்.

17 (க-ரை) அரிஷ்டநேமியின் புத்திரரும், வேகத்தில் வாயுவைப்போன்றவரும், பக்ஷிகளிற் சிறந்தவருமான அக்கெருடனும், அம்சுமானைப் பார்த்து ஹே

*कपिलेनाप्रमेयेन दग्धा हीमे महाबलाः ।
सलिलं नार्हसि प्राज्ञ दातुमेषां हि लौकिकम् ॥ 18 ॥
गङ्गा हिमवतो ज्येष्ठा दुहिता पुरुषर्षभ ।
तस्यां कुरु महाबाहो पितॄणां तु जलक्रियाम् ॥ 19 ॥

இந்த, **वधः** - வதமானது, **लोकसंमतः** - உலகத்திற்கு ஹிதமானது, **मा शुचः** - ஆகை யால்) அழாதே (என்ற) **वाक्यं** - வார்த்தையை, **एवं** - இப்படி, **अब्रवीत्** - சொன்னார்,

18. (ப-ரை) (हे) - **प्राज्ञ** - ஹே புத்திமானே! **हि** - எக்காரணத்தினால், **अप्रमेयेन** - நிகரற்ற வைபவமுடைய, **कपिलेन** - கபிலரால், **इमे** - இந்த, **महाबलाः** - வெகு பலமுடைய, (ஸகரபுத்திரர்கள்) **दग्धाः ह** - கொளுத்தப்பட்டனரோ, **एषां** - இவர்களுக்கு, **लौकिकम्** - உலக ஸம்பந்தமான, **सलिलं** - ஜலத்தை, **दातुं** - கொடுப் பதற்கு, **नार्हसि** - உரியனுகாய்.

19. (ப-ரை) (हे) **महाबाहो** - மிகதோள்வலியுடையவனே! **हिमवतः** - ஹிமவா னுக்கு, **ज्येष्ठा** - மூத்தவளாயிருக்கிற, **दुहिता** - மகளான, **गङ्गा** - கங்கை, (இருக்கின்

புருஷசிரேஷ்டா! வருத்தப்படாதே, அழாதே, உன்சிறிய தகப்பன்மார்கள் இறந் தது உலகத்திற்கு உபகாரமாகிறது. இவர்களைப்பற்றி நீ துயரப்படவேண்டாம், என்றுரைத்தனர்.

18 (க-ரை) வெகு புத்திமானை ஹே குழந்தாய்! "இவர்கள் பிராம்மணோத் தமரான கபில பகவானுடைய கோபத்தால் எரிந்து இறந்தவர்களாகையால், இவர் களுக்கு இவ்வுலகிலுள்ள ஜலத்தின் தர்ப்பணத்தால் ஸத்கதியுண்டாகாது" என்றனர்.

19 (க-ரை) ஹே மஹா பாஹுவே! ஹிமயமலையின் மூத்த பெண்ணை

चण्डालादुदकात्सर्पात् वैद्युतात्ब्राह्मणादपि ।
दंष्ट्रिभ्यश्च पशुभ्यश्च मरणं पापकर्मणां ॥
उदकं पिण्डदानं च एतेभ्योयद्विधीयते ।
नोपतिष्ठ तत्सर्वमन्तरिक्षे विनश्यति ॥

என்ற ஸ்ம்ருதிப்படி எந்த பாதகத்தொழிலாளர்களுக்கு சண்டாளன், ஜலம ஸர்ப்பம், இடி, பிராம்மணன், கோரப்பற்களையுடைய கொடிய மிருகங்கள், பசு இவைகளால் மரணம் கிடைக்குமாகில் அவர்களுக்கு இங்குச்செய்யும் தர்ப்பணம் பிண்டதானம் முதலியவை, அவர்களை யணுகாது, பயன்படாதொழி யும். இடையில் நசித்துப்போகின்றன.

भस्मराशीकृतानेतान्प्लावयेल्लोकपावनी ।
तया क्लिन्नमिदं भस्म गङ्गया लोककान्तया ॥ 20 ॥
षष्टिं पुत्रसहस्राणि स्वर्गलोकं नयिष्यति ॥ 20½ ॥
गच्छ चाश्वं महाभाग तं गृह्य पुरुषर्षभ ।
यज्ञं पैतामहं वीर संवर्तयितुमर्हसि ॥ 21½ ॥

ருள்) (हे) **पुरुषर्षभ** - ஹே புருஷ ஸ்ரேஷ்டா! **तस्यां** - அவளிடத்தில், **पितॄणां** - பித்ருக்களுக்கு, **जलक्रियां-तु** - தர்ப்பணத்தை, **कुरु** - செய்.

20-20½. (ப-ரை) **लोकपावनी** - உலகத்தைப் பரிசுத்தஞ் செய்கின்ற, (கங்கை), **भस्मराशीकृतान्** - சாம்பல் குவியலாகச் செய்யப்பட்ட, **एतान्** - இப்புத்திரர்களை, **प्लावयेत् (यदि)** - நனைத்தாளாகில், **लोककान्तया** - உலகத்திற்கிஷ்டையான, **तया** - அந்த, **गङ्गया** - கங்கையால், **क्लिन्नं** - நனைக்கப்பட்ட, **इदं भस्म** - இந்த சாம்பல் **पुत्रसहस्राणि** - புத்திராயிரங்களுடைய, **षष्टिं** - அறுபதையும், **स्वर्गलोकं** -மேலுலகை, அதாவது ஸ்வர்க்கத்தை, **नयिष्यति** - அடைவிப்பிக்கும்.

21½. (ப-ரை) (हे) **महाभाग** - ஹே பாக்யமுடையோனே! **तं** - அந்த, **अश्वं** - குதிரையை, **गृह्य** - பிடித்துக்கொண்டு, **गच्छ** - செல்லுவாய், (हे) **पुरुषर्षभ** - ஹே புருஷஸ்ரேஷ்டா! **पैतामहं** - பிதாமஹ ஸம்பந்தமான, **यज्ञं** - யாகத்தையும், (हे) **वीर** - ஹே பலவானே! **संवर्तयितुं** - முடிப்பதற்கு, **अर्हसि** - உரியனுவாய்.

கங்கையைக் கொண்டுவந்து அப் புண்ணியஜலத்தால், இச்சாம்பல் குவியல்களை நனைத்து அந்நதியிலேயே தர்ப்பணம் செய்வாயாக.

20-20½ (க-ரை) உலகத்தையெல்லாம் பரிசுத்தஞ்செய்கின்ற அத்திவ்ய கங்கையின் ஜலத்தைக்கொண்டு இந்நீற்றை நனையச்செய்வாளாயின், இதுவே ஸகர புத்திரர்கள் அறுபதுனுயிரம் பெயர்களையும் ஸ்வர்க்கலோகம் அடையச்செய்யும்.

21½ (க-ரை) ஹே மஹா வீரனே! புருஷர்களிற் சிறந்த ஹே அம்சுமானே! "நீ மிக்க பாக்கியமுடையவனுகையால் இப்பொழுது இந்த யாகக் குதிரையையும் பிடித்துக்கொண்டு உன் பிதாமஹரிடம் சென்று அவரது அச்வமேதயாகத்தை நிறைவேற்றி வைப்பாயாக" என்று அக் கெருடன் மொழிந்தனர்.

सुपर्णवचनं श्रुत्वा सोंऽशुमानतिवीर्यवान् ।
त्वरितं हयमादाय पुनरायान्महायशाः ॥ 22½ ॥
ततो राजानमासाद्य दीक्षितं रघुनन्दन ।
न्यवेदयद्यथावृत्तं सुपर्णवचनं तथा ॥ 23½ ॥
तच्छ्रुत्वा घोरसंकाशं वाक्यमंशुमतो नृपः ।
यज्ञं निर्वर्तयामास यथाकल्पं यथाविधि ॥ 24½ ॥

22½, (ப-ரை) **अतिवीर्यवान्** - வெகு பராக்கிரம முடைய, **सः** - **अंशुमान्** - அந்த அம்சுமான், **सुपर्णवचनं** - கெருடனுடைய வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **हयं आदाय** - குதிரையைப் பிடித்து, (க்கொண்டு) **महायशाः** - மிகக் கீர்த்தியுடையவனாக, **पुनः**-மறுபடி, **त्वरितं** - சீக்கிரமாக, **आयात्**-(ஸகர சக்கிரவர்த்தியிடம்) வந்தான்.

23½. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராகவா ! **ततः** - பிறகு, **दीक्षितं** - தீக்ஷை கொண்டிருக்கிற, **राजानं** - அரசனை, (ஸகரரை), **आसाद्य** - அடைந்து, **वृत्तं** - விருத்தாந்தத்தையும், **सुपर्णवचनं** - கெருடனுடைய வார்த்தையையும், **यथा** - **तथा** - எப்படியோ அப்படி, **न्यवेदयत्** - அறிவித்தனன்.

24½. (ப-ரை) **नृपः** - அரசன், (ஸகரர்) **घोरसंकाशं** - பயங்கரமான, **तत् वचनं** - அந்த வார்த்தையை, **अंशुमतः** - அம்சுமானிடத்திருந்து, **श्रुत्वा** - கேட்டு, **यज्ञं** - யா

22½. (க-ரை) இவ்விதம் சொன்ன அக்கெருடனுடைய வார்த்தையைக் கேட்டு, மிகுந்த பராக்கிரமமுடைய அம்சுமான் தன்னுடைய கீர்த்தி யெங்கும் விளங்கும்படி அந்த யாகக் குதிரையைப் பிடித்துக்கொண்டு வெகுவேகமாய் தன் பாட்டனாரான ஸகரசக்கிரவர்த்தி எவ்விடம் யாக தீக்ஷைகொண் டிருக்கின்றனரோ அவ்விடத்தை யடைந்தனன்.

23½. (க-ரை) ஹே ரெகுநந்தனா ! பிறகு தீக்ஷை கொண்டிருந்த அச்சக்கிரவர்த்தியின் ஸமீபஞ் சென்று வெகு வணக்கத்துடன், தன்னுடைய சிறிய தந்தைகளுக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி கருத்மான் சொல்லிய வற்றை யெல்லாம் தெரி

24½. (க-ரை) இவ்வாறு மொழிந்த அம்சுமானது துக்கமான வார்த்தையைக் கேட்ட அச்சகர சக்கிரவர்த்தி துயரக் கடலிலாழ்ந்தனர். ஆயினும் ஆரம்

स्वपुरं चागमच्छ्रीमानिष्टयज्ञो महीपतिः ।
गङ्गायाश्चागमे राजा निश्चयं नाध्यगच्छत ॥ 25½ ॥
अकृत्वा निश्चयं राजा कालेन महता महान् ।
त्रिंशद्वर्षसहस्राणि राज्यं कृत्वा दिवं गतः ॥ 26½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
एकचत्वारिंशः सर्गः ॥ 41 ॥

கத்தை, **यथाकल्पं** - கிரமமாகவும், அதாவது, நியாயமாகவும், **यथाविधि** - சாஸ்திரங்களிற்சொல்லியபடி, அதாவது சாஸ்திர முறைப்படி, **निवर्तयामास** - நிறைவேற்றினர்.

25½. (ப-ரை) **महीपतिः** - ஸகரமகாராஜர். **इष्टयज्ञः** - இஷ்டமானயாக முடையவராய், **श्रीमान्** - (அதனால்) காந்தியுடையவராய், **स्वपुरं** - தம் பட்டணத்தை, (க்குறித்து) **आगमत्** - வந்து சேர்ந்தனர், **राजा** - அரசன், (ஸகரர்) **गङ्गायाः** - கங்கையினுடைய, **आगमे** - வருவதில், **निश्चयं** - உபாயத்தை, **नाध्यगच्छत**-அடையவேயில்லை.

26½. (ப-ரை) **महान्** - பூஜ்யரும். **राजा** - அரசருமான, (ஸகரர்) **निश्चयं** - உபாயத்தை, **अकृत्वा** - செய்யாமலே, **त्रिंशत्** - முப்பது, **वर्षसहस्राणि** - வருஷத்தினுயிரம், **राज्यं** - ராஜ்யத்தை, **कृत्वा** - செய்து, அதாவது பரிபாலித்து வந்து, **महता कालेन** - வெகு காலத்தினலே, **दिवं** - ஸுவர்க்கத்தை, **गतः** - அடைந்தனர்.

பித்தயாகத்தை பூர்த்தி செய்வதின் பொருட்டு, மனம் தெளிந்தெழுந்து, அந்த அச்வமேத யாகத்தை சாஸ்திர முறை கொஞ்சமேனும் தவராமல் பூர்த்தி செய்து முடித்தனர்.

25½. (க-ரை) அச்சக்கிரவர்த்தி அவ்வாறு அச்வமேதயாகத்தைப் பூர்த்தி செய்து அதனால் காந்தி வெள்ளம் பெற்று விளங்கி தம் இராஜதானியான அயோத்திமா நகரத்தை வந்தடைந்தனர். அச்சகரவர்த்தி ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டு வருவகையில் கங்கா நதியைக் கொண்டுவர எவ்வித உபாயமும் அம்மன்னவருக்குத் தோன்றவேயில்லை.

26½. (க-ரை) அச்சகரசக்கிரவர்த்தி அக்கங்கையைக் கொண்டு வரும்படி வெகு காலம் ஆலோசித்தும் யாதொரு உபாயமும் முடிவாய் நிச்சயிக்காமலே, முப்பதுனுயிரம் ஆண்டுகள் அரசாட்சி புரிந்து கொண்டிருந்து பிறகு அச்சிரமத்தால் ஸுவர்க்கலோகஞ் சென்றனர்.

द्विचत्वारिंशः सर्गः ॥ 42 ॥

कालधर्मं गते राम सगरे प्रकृतीजनाः ।
राजानं रोचयामासुरंशुमन्तं सुधार्मिकम् ॥ 1 ॥
स राजा सुमहानासीदंशुमान्रघुनन्दन ।
तस्य पुत्रो महानासीद्दिलीप इति विश्रुतः ॥ 2 ॥
तस्मिन्राज्यं समावेश्य दिलीपे रघुनन्दन ।
हिमवच्छिखरे पुण्ये तपस्तेपे सुदारुणम् ॥ 3 ॥

1. (ப-ரை) (हे) **राम** - ஹே ராமா! **सगरे** - ஸகர சக்கிரவர்த்தியானவர், **कालधर्मं गते - (सति)** - ஸ்வர்க்கத்தை யடைந்தவுடனே, **प्रकृतीजनाः** - மந்திரிகள், **सुधार्मिकं**- வெகுதருமமுடைய, **अंशुमन्तं** -அம்சுமானை, **राजानं** - அரசனாக, **रोचयामासुः**- இச்சித்தனர்.

2. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹேராகவா! **सः अंशुमान्** - அவ்வம்சுமான், **सुमहान्** - மிகசிரேஷ்டனான, **राजा** - அரசனாக, **आसीत्** - இருந்தனன், **तस्य** - அவனுக்கு, **महान्** - பூஜ்யனும், **दिलीप इति विश्रुतः** - திலீபன் என் ப்ரஸித்தனான, **पुत्रः** - புத்திரன், **आसीत्** - உண்டானான்.

3. (ப-ரை) (हे) **रघुनन्दन** - ஹே ராகவா! (அவ்வம்சுமான்) **तस्मिन्** - அந்த, **दिलीपे** - திலீபனிடத்தில், **राज्यं** - ராஜ்யத்தை, அதாவது அரசாட்சியை, **समावेश्य**- வைத்து, அதாவது முடிசூட்டி வைத்து, **पुण्ये** - பரிசுத்தமான, **हिमवच्छिखरे** - ஹிமய

1. (க-ரை) ஹே ராமா! இவ்வாறு அச்சகர சக்கிரவர்த்தி ஸ்வர்க்கத்தையடையவே, பின்பு மந்திரி ஜனங்கள் மிகத் தருமசிந்தனையோடு கூடின அம்சுமானை அரசனாக விரும்பினர்.

2. (க-ரை) ஹே ரகு நந்தன! அவ்வாறே அவ்வம்சுமான் அயோத்திமா நகரத்து அரசனாக முடி சூட்டப் பட்டு மிகப் பெருமையுடன் அரசாட்சி புரிந்து வந்தனன். அவ்வம்சுமானுக்கு அக்காலத்தில் திலீபனென்று எங்கும் புகழ் பெற்றுச் சிறந்த ஓர் ஸத் புத்திரன் பிறந்தனன்.

3. (க-ரை) ஹே ராகவா! வெகு கீர்த்தியுடன் அரசாட்சி புரிந்து வந்த அவ்வம்சுமான் தன் சிறிய தகப்பன்மார்கள் ஸத்கதியை யடையும்படி செய்வதற்காக தன்னுடைய புத்திரனை திலீபனை அவ்வயோத்திமா நகரத்திற்கு அரசனாக முடிசூட்டி வைத்து, பிறகு தான் மஹா பரிசுத்தமான கங்கையை பூலோக

द्वात्रिंशच्च सहस्राणि वर्षाणि सुमहायशाः ।
तपोवनं गतो राम स्वर्गं लेभे तपोधनः ॥ 4 ॥
दिलीपस्तु महातेजाः श्रुत्वा पैतामहं वधम् ।
दुःखोपहतया बुद्ध्या निश्चयं नाध्यगच्छत ॥ 5 ॥
कथं गङ्गावतरणं कथं तेषां जलक्रिया ।
तारयेयं कथं चैषानिति चिन्तापरोऽभवत् ॥ 6 ॥

மலையின் நுனியில், **सुदारुणं** - வெகு பயங்கரமான, **तपः** - தவத்தை, **तेपे** - தவஞ் செய்தனன்.

4. (ப-ரை) (हे) **राम**- ஹே ராகவா ! **सुमहायशाः** - மிகுந்த கீர்த்தியுடைய, (**सः** - அவ்வம்சுமான்) **तपोधनः** - தவத்தையே தனமாயுடையவனாய், **द्वात्रिंशत्** - முப்பத்திரண்டு, **सहस्राणि** - ஆயிரங்களான, **वर्षाणि** - வருஷங்களை, **तपोवनं** - தவத்தின் வனத்தை, **गतः** - அடைந்தவனாய், **स्वर्गं** - ஸ்வர்க்கத்தை, **लेभे** - அடைந்தான்.

5. (ப-ரை) **महातेजाः** - வெகு தேஜஸ்ஸுடைய, **दिलीपस्तु** - அந்த திலீபனோவெனில், **पैतामहं** - பாட்டன் மாரின், (ஸம்மந்தமான), **वधं** - வதத்தை, **श्रुत्वा** - கேட்டு, **दुःखोपहतया** - துக்கத்தால் அடிக்கப்பட்ட, **बुद्ध्या** - புத்தியினால், **निश्चयं** - (அச்சகர புத்திரர்களை கடைத்தேறச்செய்யும் விஷயத்தில்) நிச்சயத்தை, **नाध्यगच्छत** - அடையவில்லை.

6. (ப-ரை) **गङ्गावतरणं** - கங்கையின் வரவு, **कथं** - எப்படி? **तेषां** -இவர்களுக்கு, (பாட்டன்மார்களுக்கு) **जलक्रिया** - தர்ப்பணம், **कथं** - எப்படி? **येषान्** - இவர்களை,

---

த்திற்கு அழைத்து வரவேணுமென்ற எண்ணங் கொண்டு, அதற்காகத் தவம் செய்ய பரிசுத்தமான ஹிமயமலையின் சிகரத்தில் ஓர் தபோ வனம் ஏற்படுத்தி வெகு பயங்கரமான தவஞ் செய்ய வாரம்பித்தனன்.

4. (க-ரை) ஹே ராமா! மிகப்பிரசித்திபெற்ற அவ்வம்சுமான், தனக்கு தவமே தனமென் றெண்ணங்கொண்டு முப்பத்திரண்டாயிரம் வருஷங்கள் மிகவும் கொடிய தவஞ்செய்து, தன்னிஷ்டம் நிறைவேறாமலே, தவம் செய்துகொண்டிருக்கையில் ஸ்வர்க்கத்தை யடைந்து விட்டனன்.

5. (க-ரை) பிறகு மஹா தேஜஸ்ஸோடு கூடிய அத்திலீப சக்கிரவர்த்தி அரசாட்சி புரிந்துகொண்டிருக்கையில் தன் பாட்டன்மார்கள் அபமிருத்யுவாக மரண மடைந்ததைக் கேள்வியுற்று அவர்களை ஸ்வர்க்கலோக மடைவிப்பிக்கும் நிமித்தம் தன்பிதா செய்த தவம் வீணே போயிருந்ததைப் பற்றி துயரக்கடலில் ஆழ்ந்தனன்.

6. (க-ரை) இவ்விதம் திலீபமஹாராஜன் தேவகங்கையை எவ்விதம் இங்கு

तस्य चिन्तयतो नित्यं धर्मेण विदितात्मनः ।
पुत्रो भगीरथो नाम जज्ञे परमधार्मिकः ॥ 7 ॥
दिलीपस्तु महातेजा यज्ञैर्बहुभिरिष्टवान् ।
त्रिंशद्वर्षसहस्राणि राजा राज्यमकारयत् ॥ 8 ॥
अगत्वा निश्चयं राजा तेषामुद्धरणं प्रति ।
व्याधिना नरशार्दूल कालधर्ममुपेयिवान् ॥ 9 ॥

कथं-எப்படி, **तारयेयं** - கடேற்றுவேன்? **इति** - என்று, **चिन्तापरश्च** - சிந்திக்க ஸ்வாதீனமானவனுமாக, **अभवत्** - ஆனான்-

7. (ப-ரை) **विदितात्मनः**-அறியப்பட்ட பரமாத்துமாவையுடையவனும், **नित्यं**-எப்பொழுதும், **धर्मेण** - தருமத்தினால், **चिन्तयतः** - ஆலோசிப்பவனுமாக, (இருந்து கொண்டிருந்து) **तस्य** - அத்திலீபனுக்கு, **भगीरथो नाम** - பகிரதனென்று பெயர் கொண்ட, **पुत्रः** - புத்திரன், **जज्ञे** - பிறந்தனன்.

8. (ப-ரை) **महातेजाः** - மஹாதேஜஸ்ஸுடைய, **दिलीपः** - திலீபனென்கிற, **राजा** - அரசன், **बहुभिः** - அநேகங்களான, **यज्ञैः** - யாகங்களால், **इष्टवान्** - (தேவர்களை) பூஜித்தனன், **त्रिंशत्** - முப்பது, **वर्षसहस्राणि** - வருஷத்தினாயிரங்கள், **राज्यं** - ராஜ்யபரிபாலனத்தை, அதாவது அரசாட்சியை, **अकारयत्** - செய்தனன்.

9. (ப-ரை) (**हे**) **नरशार्दूल** - ஹே மனிதசிரேஷ்டனே! **राजा** - திலீபன், **तेषां** - (தன்) பாட்டன்மார்களுடைய, **उद्धरणं प्रति** - கடேற்றுவதை, (ப்பற்றி) **निश्चयं** -

அழைத்து வருவது? அப் புண்ணிய ஜலத்தால் இவர்களுக்கு எப்படி தர்ப்பணம் முதலியவைகள் செய்யலாமென்று ஓயாமல் கவலையுற்றிருந்தனன்.

7. (க-ரை) ஆத்ம ஸ்வரூபத்தை யறிந்த அந்த திலீப மஹாராஜன் தருமத்தில் ஊன்றினமன முடையவனாய் தன்பாட்டன் மார்கள் ஸத்கதியை யடையும்படிச் செய்யும் வழியில் எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவனுக்கு மிகவும் தார்மிகனான பகிரதனென்ற ஓர் ஸத்புத்திரன் பிறந்தான்.

8. (க-ரை) மஹா தேஜஸ்ஸோடு கூடியிருந்த அத்திலீப மஹாராஜன் அநேக யாகங்கள் செய்து தேவர்களை பூஜித்து முப்பதாயிரம் வருஷங்கள் வரை அவ்வயோத்திமா நகரத்தை நீதிதவறாமல் ஆண்டுவந்தனன்.

9. (க-ரை) ஹே நரோத்தமா! இவ்வாறு அவ்வளவு காலம் அத்திலீப மஹாராஜன் அரசாட்சி செய்து வந்தும் தன் பாட்டன் மார்களை கடோச்செய்

इन्द्रलोकं गतो राजा स्वार्जितेनैव कर्मणा ।
राज्ये भगीरथं पुत्रमभिषिच्य नरर्षभः ॥ 10 ॥
भगीरथस्तु राजर्षिर्धार्मिको रघुनन्दन ।
अनपत्यो महातेजाः प्रजाकामः स चाप्रजः ॥ ॥ 11 ॥
मन्त्रिष्वाधाय तद्राज्यं गङ्गावतरणे रतः ॥ 11½ ॥

உபாயத்தை, **अगत्वा** - அடையாமல், **व्याधिना** - ரோகத்தால், **कालधर्मं** - காலத்தினலடையப்பட்ட தருமத்தை, (ஸ்வர்க்கத்தை.) **उपेयिवान्** - அடைந்தனன்.

10. (ப-ரை) **नरर्षभः**-மனிதசிரேஷ்டனை, **राजा**-மஹாராஜன், (திலீபன்) **राज्ये**-இராஜ்யத்தை, **भगीरथं** - பகீரதனென்கின்ற, **पुत्रं** - புத்திரனை, **अभिषिच्य** - பட்டாபிஷேகம் செய்வித்து, **स्वार्जितेन** - தன்னால் ஸம்பாதிக்கப்பட்ட, **कर्मणा एव** - கிருத்தியத்தினலேயே, **इन्द्रलोकं** - இந்திரலோகத்தை, **गतः** - அடைந்தான்.

11-11½. (ப-ரை) **रघुनन्दन** - ராகவா! **महातेजाः** - வெகு பராக்கிரமமுடையவனும், **धार्मिकः** - மிகத்தருமமுடையவனுமான, **राजर्षिः**-ராஜரிஷியுமான, **भगीरथस्तु** - பகீரதனோவெனில், **अनपत्यः** - ஸந்தானமற்றவனாகை, (இருந்ததால்), **प्रजाकामः** - **ஸந்தானத்தைக்** கோறினவனாகை. (ஆனான்), **अप्रजः स च** - ஸந்தானமற்ற அப்பகீரதனும், **तत् राज्यं** - அந்த ராஜ்யத்தை, **मन्त्रिषु** - மந்திரிகளிடம், **आधाय** - வைத்து, **गङ्गावतरणे** - கங்கையை வரவழைப்பதில், **रतः** - ஆஸக்தனாக ஆனான்.

யுமுபாயம் ஒன்றும் தோன்றாமல், அப்பிணிவியாதியாலே அம்மன்னவன் **ஸ்வர்க்கத்தையடைந்தனன்.**

10. (க-ரை) அத்திலீப மஹாராஜன் பிணிவியாதியினல் பீடிக்கப்பட்டிருக்கையில் தன்னுடைய புத்திரனை வெகு கியாதிபெற்ற பகீரதனுக்கு அந்நகரத்தை பட்டாபிஷேகம் செய்வித்து, தான் செய்த புண்ணிய காரியங்களுடைய பலனல் **ஸ்வர்க்கலோகஞ்** சென்றனன்.

11-12½. (க-ரை) ரகு குலத்தரசர்களிற் சிறந்த ஹே ராகவா! மிகத்தரும **சிந்தையுடைய** அப்பகீரதன் தன்னுடைய முன்னேர்களால் **ஆளப்பட்டுவந்த** அச்சிறந்த ராஜ்யத்தை நீதிதவறாமல் வெகுகாலம் அரசாட்சி செய்துகொண்டு வந்தும், தன்வம்சத்தை விருத்திசெய்ய ஓர் புத்திரனுண்டாகாமையாலே, வெகு மனவருத்தமடைந்து, ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்பித்துவிட்டு, **ஸந்தானத்**

स तपो दीर्घमातिष्ठद्गोकर्णे रघुनन्दन ।
ऊर्ध्वबाहुः पञ्चतपा मासाहारो जितेन्द्रियः ॥ 12½ ॥

तस्य वर्षसहस्राणि घोरे तपसि तिष्ठतः ।
अतीतानि महाबाहो तस्य राज्ञो महात्मनः ॥ 13½ ॥
सुप्रीतो भगवान्ब्रह्मा प्रजानां पतिरीश्वरः ॥ 14 ॥

12½. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா ! **सः** - அப்பகீரதன், **गोकर्णे** - கோகர்ண மென்னும் க்ஷேத்திரத்தில், **ऊर्ध्वबाहुः** - மேலே எடுக்கப்பட்ட கைகளையுடையவனாய், **पञ्चतपाः** - ஐந்தக்கினியில் தவமுடையவனாகவும், **मासाहारः** - மாதத்திற்கு ஒரு தடவை புஜிப்பவனாகவும்; **जितेन्द्रियः** - ஐம்புலன்களையும் அடக்கினவனாகவும், **दीर्घतपः** - தீர்க்கமான தவத்தை, **आतिष्ठत्** - அடைந்தான்.

13½. (ப-ரை) **महाबाहो** - பெருந்தோளுடையோனே! **घोरे तपसि** - க்ரூரமான தவத்தில், **तिष्ठतः** - இருப்பவனும், **तस्य** - அந்த, **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடையவனும், **राज्ञः** - அரசனுமான, **तस्य** - அந்த பகீரதனுக்கு, **वर्षसहस्राणि** - வருஷங்களினாயிரம், **अतीतानि** - கழிந்துபோயின.

14. (ப-ரை) **ईश्वरः** - ஸர்வலோக நாயகனும், **प्रजानां पतिः** - ஜனங்களுக்கு நாதனும், **भगवान्** - மாஹாத்மியமுடையருமான, **ब्रह्मा** - ப்ருஹ்மதேவர், **सुप्रीतः** - அன்புடையவரானார்.

...தைக்கோறினவனாக, கோகர்ண மென்கின்ற, ஹிமயமலைச் சாரலில், நாற்புரத்திலும் தீயைவளர்த்தி, நடுவில் நின்று இருகைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு, இந்திரியங்களையடைக்கி மாதத்திற்கொருமுறை புசித்துக்கொண்டு வெகு கோரமான தவம் புரிந்துவந்தனன்.

13½-14. (க-ரை) அப்பகீரதன் இவ்வாறு வெகுகோரமான தவம் செய்து கொண்டிருக்கையில் ஆயிரம் வருஷங்கள் சென்றன. அத்தவத்திற்குகந்து, உலகனைத்தும் படைக்கவல்ல சதுர்முக ப்ருஹ்மதேவர், அவ்வரசனுக்கெதிரில், பிரஸன்னமானார்.

ततः सुरगणैः सार्धमुपागम्य पितामहः ।
भगीरथं महात्मानं तप्यमानमथाब्रवीत् || 15 ||
भगीरथ महाभाग प्रीतस्तेऽहं जनेश्वर ।
तपसा च सुतप्तेन वरं वरय सुव्रत || 16 ||
तमुवाच महातेजाः सर्वलोकपितामहम् ।
भगीरथो महाभागः कृताञ्जलिरुपस्थितः || 17 ||

15. (ப-ரை) ततः - பிறகு, पितामहः - ப்ருஹ்மதேவர், **सुरगणैः सार्धं** - தேவகணங்களோடுகூட, **उपागम्य** - வந்து, (பகீரதன் தவம் செய்யுமிடத்திற்கு), **अथ** - பிறகு, **तप्यमानं** - தவம்செய்கிறவனும், **महात्मानं** - சிறந்த ஸ்வபாவமுடையவனுமான, **भगीरथं** - பகீரதனை (க்குறித்து), **अब्रवीत्** - கூறினார்.

16. (ப-ரை) **महाभागः**- வெகு பாக்கியமுடையவனும், **जनेश्वर** -ஜனங்களுக்குப் பதியுமான, (हे) **भगीरथ** - ஹே பகீரதனே ! **अहं** - நான், **सुतप्तेन** - நன்றாய் செய்யப்பட்ட, **ते** - உன்னுடைய, **तपसा च** - தவத்தினால், **प्रीतः** - திருப்தியடைந்தவனாக ஆனேன், (हे) **सुव्रत** - ஹே விரதமுடையோனே ! **वरं** - வரத்தை, **वरय**- கேட்டுக் கொள், (என்றனர்).

17. (ப-ரை) **महातेजाः** - மிகத்தேஜஸுடையவனும், **महाभागः** - சிறந்த பாக்கியமுடையவனுமான, **भगीरथः** - பகீரதன், **कृतांजलिः** - செய்யப்பட்ட அஞ்ஜலியையுடையவனாய், **उपस्थितः** - அருகிலிருப்பவராக, **सर्वलोकपितामहम्** - ஸகல உலகத்திற்கும் பாட்டனாகிய, **तं** - அந்த ப்ருஹ்மதேவரை, (க்குறித்து), **उवाच** - (பின்வருமாறு) சொன்னான்.

15-16. (க-ரை) எல்லா தேவகணங்களும் அங்கு நிற்க, ப்ருஹ்மதேவர் அத்தேவகணங்களிடையில் அவ்வரசனை நோக்கி, ஹே பாக்கியசாலியே! ஹே அரசே! நீ செய்த மெய்த்தவத்திற்கு யாம் மிகச்சந்தோஷித்தோம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள், என்று அருளினர்.

17. (க-ரை) ஸர்வலோக பிதாமகரான அப்ருஹ்மதேவர், ஸகல தேவகணங்களோடு அப்பகீரதனைப் பார்த்து வெகு ஸந்தோஷத்துடன் மொழிந்தஅவ்வார்த்தையைக்கேட்டு, அப்பகீரதன், ப்ருஹ்மதேவரைப் பார்த்து வெகு வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வருமாறு பிரார்த்தித்துக்கொண்டனன்.

यदि मे भगवन्प्रीतो यद्यस्ति तपसः फलम् ।
सगरस्यात्मजाः सर्वे मत्तः सलिलमाप्नुयुः ॥ 18 ॥
गङ्गायाः सलिलक्लिन्ने भस्मन्येषां महात्मनाम् ।
स्वर्गं गच्छेयुरत्यन्तं सर्वे मे प्रपितामहाः ॥ 19 ॥
देया च सन्ततिर्देव नावसीदेत्कुलं च नः ।
इक्ष्वाकूणां कुले देव एष मेऽस्तु वरः परः ॥ 20 ॥

18. (ப-ரை) **भगवन्** - ஹே ப்ருஹ்மதேவரே ! **त्वं** - நீர், **प्रीतो यदि** - ஸந்தோஷித்தவரானால், **मे** - என்னுடைய, **तपसः** - தவத்திற்கு, **फलं** - பிரயோஜனமானது, **अस्ति यदि** - உண்டாயிருந்ததானால், **सगरस्य** - ஸகரருடைய, **आत्मजाः सर्वे** - புத்திரர்களெல்லோரும், **मत्तः** - என்னால், **सलिलं** - ஜலத்தை, **आप्नुयुः** - அடைவார்கள்.

19. (ப-ரை) **महात्मनां** - சிறந்த ஸ்வபாவமுடைய, **येषां** - இந்த ஸகர புத்திரர்களுடைய, **भस्मनि** - சாம்பல், **गङ्गायाः** - கங்கையினுடைய, **सलिलक्लिन्ने** - ஜலத்தினால் நனைக்கும்பொழுது, **प्रपितामहाः** - முப்பாட்டனார்கள், **सर्वे** - எல்லோரும், **अत्यन्तं** - நாசமற்ற, **स्वर्गं** - ஸ்வர்க்கத்தை, **गच्छेयुः** - அடைவார்கள்.

20. (ப-ரை) **देव** - ஹே ப்ருஹ்மதேவரே ! **इक्ष्वाकूणां** - இக்ஷ்வாகு பிரபுக்களுடைய, **कुले** - (எங்கள்) வம்சத்தில், **सन्ततिं च** - ஸந்தானத்தையும், **देया** - கொடுக்க வேணும், **नः** - எங்களுடைய, **कुलं च** - வம்சமும், **नावसीदेत्** - இளைத்துப்போக

18. (க-ரை) ஹே ப்ருஹ்மதேவரே ! நான் செய்யும் தவத்திற்கு தாங்கள் ஸந்தோஷமடைந்திருப்பதே மெய்யானால், நான் செய்த இத்தவத்தின் பலனாக, அச்சகர சக்கிரவர்த்தியின் புத்திரர்களான அறுபதினாயிரம் பெயர்களும், நான் செய்யும் ஜலதர்ப்பணம் முதலியவைகளை யடையும்படி அனுக்கிரஹம் செய்யவே.

19. (க-ரை) அச்சகரபுத்திரர்களனைவரும், கபில முனிவருடைய கோபாக்கினியால் செய்யப்பட்ட அச்சாம்பல் குவியல், அச்சிறந்த தேவகங்கை ஜலத்தால் நனைக்கப்பட்டவுடனே என்னுடைய அந்த முப்பாட்டன்மார்களெல்லோரும் உத்தமமான ஸ்வர்க்கலோகத்தை யடையும்படிக்கும் அருள்புரிய வேணுமென்றும் பிரார்த்தித்துக் கொண்டனன்.

20. (க-ரை) ஹே ப்ருஹ்மதேவரே ! யான் வெகுகாலமாக புத்திரனில்லாமலிருப்பதால், இக்ஷ்வாகு வம்சமானது, என்னுடன் ஒழிந்து ஸந்ததிபற்றுப்

उक्तवाक्यं तु राजानं सर्वलोकपितामहः ।
प्रत्युवाच शुभां वाणीं मधुरां मधुराक्षराम् ॥ 21 ॥
मनोरथो महानेष भगीरथ महारथ ।
एवं भवतु भद्रं ते इक्ष्वाकुकुलवर्धन ॥ 22 ॥

வேண்டா, (हे) देव - ஹே ப்ரும்மதேவரே ! एषः - இது, मे - எனக்கு, परः - தான, वरः - வரமாக, अस्तु - ஆகட்டும், (என்றனன்).

21. (ப-ரை) सर्वलोकपितामहः तु - எல்லா உலகத்திற்கும் பாட்டனரான ப்ரும்மதேவரோ வெனில், उक्तवाक्यं - சொல்லப்பட்ட வார்த்தையுடைய, राजानं - அரசனை பகிரதனை, (க்குறித்து), मधुरां - அழகு வாய்ந்ததும், मधुराक्षरां - இனிய அக்ஷரமுடையதும், शुभां - மங்களகரமுமான, वाणीं - வார்த்தையை, प्रत्युवाच - பதில் சொன்னார்.

22. (ப-ரை) महारथः - பெரும் ரதமுடையவனே, (हे) भगीरथ - ஹே பகிரதனே! महान् - பெரிதான, एषः - இந்த, मनोरथः - (உன்னுடைய) கோரிக்கை, एवं - அப்படியே, भवतु - ஆகக்கடவது. (हे) इक्ष्वाकुकुलवर्धन - இக்ஷ்வாகு வம்சத்தை செழிப்பிப்போனே ! ते - உனக்கு, भद्रं - மங்களம் உண்டாகட்டும்.

போகாமல், மிகக்கியாதிபெற்ற இந்த வம்சத்தை விருத்திசெய்ய எனக்கு புத்திரனுண்டாகும்படியும் அநுக்கிரஹம் செய்யவேணுமென்று பிரார்த்தித்துக் கொண்டனன்.

21-22. (க-ரை) தவத்தால் ஆராதிக்கப்பெற்று அத்தவத்திற்குத்தக்க வரன்களையளிக்கத்தக்க ஸர்வலோகபிதாமஹரான அப்பிரும்மதேவனும் வெகு ஸந்தோஷத்துடன், ஹே இக்ஷ்வாகு குலநந்தன! அப்படியே ஆகுக. உனக்கு மங்களமுண்டாகட்டும், நீ கேட்டுக்கொண்டபடியே, உன்னுடைய பாட்டன்மார்களான அச்சகரபுத்திரர்கள், நீ செய்யும்படியான ஜலதர்ப்பணம் முதலியவைகளையடையக்கடவார்கள். அச்சாம்பல் குவியல், அத்தேவகங்கை ஜலத்தால் நனைக்கப்பட்டு அச்சகரபுத்திரர்களனைவரும் உத்தமமானஸ்வர்க்கலோகத்தையும் அடையக்கடவார்கள். இவ்வுத்தமமான இக்ஷ்வாகு வம்சத்தை விருத்தி செய்யக்கூடிய சிறந்த ஓர் புத்திரனையும் நீ அடைவாய், என்று வெகு அழகுபொருந்திய வார்த்தைகளோடுகூடிய கம்பீரமான வார்த்தைகளால் அப்பகிரதனுக்கு அநுக்கிரகம் செய்தனர்.

इयं हैमवती गङ्गा ज्येष्ठा हिमवतः सुता ।
तां वै धारयितुं शक्तो हरस्तत्र नियुज्यताम् ॥ 23 ॥
गङ्गायाः पतनं राजन्पृथिवी न सहिष्यति ।
तां वै धारयितुं वीर नान्यं पश्यामि शूलिनः ॥ 24 ॥
तमेवमुक्त्वा राजानं गङ्गां चाभाष्य लोककृत् ।
जगाम त्रिदिवं देवः सह देवैर्मरुद्गणैः ॥ 25 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
द्विचत्वारिंशः सर्गः ॥ 42 ॥

23. (ப-ரை) **इयं** - இந்த, **गङ्गा** - கங்கை, **हैमवती** - ஹிமவானிடம் பிறந்தவள், **हिमवतः** - (இவள்) ஹிமவானுக்கு, **ज्येष्ठा** - மூத்தவளான, **सुता** - பெண், **तां** - அக்கங்கையை, **धारयितुं** - தாங்குவதற்கு, **शक्तः** - வல்லமையுள்ளவர், **हरः** - சிவபெருமான், (ஆகையால்) **तत्र** - அந்த கங்கையை தரிப்பதற்கு (அதாவது தேவலோகத்திருந்து அக்கங்கை பூமியில் விழும்பொழுது தாங்கிக்கொள்ளுவதற்காக), **नियुज्यतां** - (சிவபிரானை) வேண்டப்படட்டும், (என்று சொன்னார்).

24. (ப-ரை) **वीर** - சூரனான, **राजन्** - ஹே அரசனே ! (பகீரதா !) **गङ्गायाः** - கங்கையினுடைய, **पतनं** - விழுதலை, **पृथिवी** - பூமி, **न सहिष्यति** - ஸஹிக்கமுடியாது (ஆகையால்), **तां** - அந்த கங்கையை, **धारयितुं** - தரிப்பதற்கு, **शूलिनः** - சங்கரனை விட, **अन्यं** - வேறொருவனை, **न पश्यामि** - காணவில்லை.

25. (ப-ரை) **लोककृत्** - லோக கர்த்தாவான, **देवः** - ப்ருஹ்மதேவர், **राजानं** - அரசனான, **तं** - அப்பகீரதனை, (க்குறித்து) **एवं** - இவ்விதம், **उक्त्वा** - சொல்லி, **गङ्गां च** - கங்கையையும், (பூலோகத்திற்குச்செல்லவேணுமென்ற வார்த்தையை), **आभाष्य** - சொல்லி, **देवैः** - தேவர்களுடனும், **मरुद्गणैः सह** - வாயுகணங்களுடனும் கூட, **त्रिदिवं** - ஸ்வர்க்கத்தை, **जगाम** - அடைந்தார்.

23-24. (க-ரை) ஹே பகீரதனே ! உன் கோறிக்கைப்படி கங்கை கீழிறங்கி வரும்பொழுது எதிர் சென்று ஸன்மானிப்பதுபோல், அவளைத்தாங்க இங்கொருவருமில்லை. பூமியால் முடியாது. அவளைதரிக்கவல்லவர் த்ருசூலத்தைக் கைக்கொண்ட அச்சங்கரனொருவரே. ஆதலால் கங்கையைத் தாங்கும்படி, அச்சங்கரனைப் பிரார்த்திக்கொள்ளுவாய், என்று மொழிந்தனர்.

25. (க-ரை) அச்சூரனான பகீரதனைப்பார்த்து ப்ருஹ்மதேவர், இவ்வாறு கூறி அநுக்கிரஹம் செய்துவிட்டு, கங்கையையும் நியமித்து, எல்லாத்தேவகணங்களுடனும், தன்னுலகை அதாவது ஸத்யலோகத்தை யடைந்தனர்.

त्रिचत्वारिंशः सर्गः ॥ 43 ॥

देवदेवे गते तस्मिन्सोऽङ्गुष्ठाग्रनिपीडिताम् ।
कृत्वा वसुमतीं राम संवत्सरमुपासत ॥ 1 ॥
अथ संवत्सरे पूर्णे सर्वलोकनमस्कृतः ।
उमापतिः पशुपती राजानमिदमब्रवीत् ॥ 2 ॥
प्रीतस्तेऽहं नरश्रेष्ठ करिष्यामि तव प्रियम् ।
शिरसा धारयिष्यामि शैलराजसुतामहम् ॥ 3 ॥

1. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **तस्मिन्** - அந்த, **देवदेवे** - தேவர்களுக்குத் தேவனான, (ப்ருஹ்மதேவர்); **गते (सति)** - சென்றவளவில், **सः** - அந்த, (பகீரதன்) **वसुमतीं** - பூமியை, **अङ्गुष्ठाग्रनिपीडिताम्** - கட்டை விரலின் நுனியால் பீடிக்கப் பட்டதாக, **कृत्वा** - செய்து, **संवत्सरं** - ஒரு வருஷம், **उपासत** - (பரமசிவனைக் குறித்து) துதித்தனன்.

2. (ப-ரை) **अथ** - பிறகு, **संवत्सरे** - ஒரு வருஷம், **पूर्णे** - நிரம்பின வுடனே, **सर्वलोकनमस्कृतः** - எல்லா உலகத்தவராலும் பூஜிக்கப் பட்டவரும், **उमापतिः** - பார்வதிக்குப் பதியுமான, **पशुपतिः** - பரமசிவன், **राजानं** - அரசனான பகீரதனை, (க்குறித்து) **इदं** - இவ்விதம், **अब्रवीत्** - சொன்னார்.

3. (ப-ரை **नरश्रेष्ठ** - ஹே புருஷ சிரேஷ்டனே! **अहं** - நான் **ते** - உன் பொருட்டு, **प्रीतः** - ஸந்தோஷித்தவனாக, **तव** - உனக்கு, **प्रियम्** - இஷ்டத்தை,

---

1. (க-ரை) ஹேராகவா! அந்த சதுர்முகப்ருஹ்மாவானவர், அப்பகீரதனைப், பார்த்து இவ்வாறு அருளிவிட்டுத் தம்மிருப்பிடமாகிய ப்ருஹ்மலோகஞ் சென்ற பிறகு, மஹா தீரனான பகீரதன், தன் பெருவிரலைப் பூமியிலூன்றிப் பரமசிவனைக்குறித்து, ஆகாயத்திலிருந்து இறங்கும் அந்தகங்கையின் வேகத்தைத் தாங்கவேணுமென்று, ஒருவருஷகாலம் வரை கடுந்தவம் புரிந்தனன்.

2. (க-ரை) பிறகு, ஒருவருஷகாலம் முடிவையடையவே, அப்பரமசிவன், அவ்வரசன் செய்த தவத்திற்குகந்து, வெகு ப்ரீதியுடன், தம்முடைய பாரியையான அப்பார்வதிதேவியுடன் பகீரதனெதிரில் ப்ரஸன்னனாகி அவ்வரசனைக் குறித்து இவ்வாறு அருளினர்.

3. (க-ரை) ஹே புருஷசிரேஷ்டனே! பகீரதா, எதற்காக நீ இக்கடுந்தவம

ऊर्ध्वबाहुर्निरालम्बो वायुभक्षो निराश्रयः ।
अचलः स्थाणुवत्स्थित्वा रात्रिंदिवमरिंदम ॥

तती हैमवती ज्येष्ठा सर्वलोकनमस्कृता ।
तदा सातिमहद्रूपं कृत्वा वेगं च दुःसहम् ॥ ४ ॥
आकाशादपतद्राम शिवे शिवशिरस्युत ॥ ४½ ॥
अचिन्तयच्च सा देवी गङ्गा परमदुर्धरा ।
विशाम्यहं हि पातालं स्रोतसा गृह्य शङ्करम् ॥ ५½ ॥

करिष्यामि - செய்புகின்றேன், **अहं**—நான், **शैलराज - सुतां** - ஹிமயமலையின் மகளான, (கங்கையை), **शिरसा** - தலையால், **धारयिष्यामि** - தரிக்கின்றேன்.

4-4½. (ப-ரை) **राम** - ஹே ராமா ! **ततः** - பிறகு, **तदा** - அப்பொழுது, **सर्वलोकनमस्कृता** - எல்லா உலகங்களாலும் வணங்கப்பட்டவளும், **ज्येष्ठा** - மூத்தவளும், **हैमवती** - ஹிமயமலையின் மகளுமான, **सा** - அந்த, (கங்கை) **अति महत् रूपं** - மிகவும் பெரிதான உருவத்தையும், **दुःसहम्** - ஸஹிக்கக் கூடாததான, **वेगं च** - வேகத்தையும், **कृत्वा** - செய்து கொண்டு, **आकाशात्** - ஆகாசத்தினின்று, **शिवे** - மங்களகரமான, **शिवशिरसि** - பரமசிவன் தலையில், **अपतत् उत** - விழுந்தனளல்லவா !

5½. (ப-ரை) **परमदुर्धरा** - மிகவும் தரிப்பதற்குக் கூடாதவளும், அதாவது எவராலும் தாங்கமுடியாத அவ்வளவு வேகத்துடன் கூடினவளும், **देवी** - பூஜிக்கத்தக்கவளுமான, **सा** - அந்த, **गङ्गा** - கங்கையும் ; **अहं**-நான், **स्रोतसा**-வெள்ளத்தினால், **शङ्करम्** - பரமசிவனை, **गृह्य** - பிடித்து, **पातालं** - பாதாளத்தை, **विशामि** - பிரவேசிக்கின்றேன், **अचिन्तयत् च** - (என்று) ஆலோசித்தனளல்லவோ !

செய்கின்றாய் ! நீ செய்யும் இத்தவத்திற்கு யாம் மிகவும் திருப்தியடைந்தோம். அக் கங்கையானவள் ஆகாசத்திலிருந்து பூமியி லிரங்கும்பொழுது உனதிஷ்டப் படி யான் அவளை என்னுடைய முடிமேல் தாங்கிக்கொள்ளுகிறேன், என்று அருளினார்.

4-5½. (க-ரை) ஹே ராகவா ! இவ்வாறு பதிலளித்து நிற்கும் அச் சிவபெருமானுடைய ஹ்ருதயத்தையறிந்த அக்கங்கை யானவள், “இவனோ நம்மைத்தாங்க வல்லவன்? இதோ இவன் எண்ணத்தைத் தவிர்த்து, இவன் நிலைமையையும் குலைத்துத் தடமாறி விழும்படி வீழ்த்திவிடுகின்றேன்” என்று செருக்கொண்டு அதிபாவனமான அக்கங்கை அச்சிவபெருமானுடைய ஜடைமுடியில் ஆகாசத்திலிருந்து நீர் பிரவாகமாக வேகு வேகமாய் விழுந்தனள்.

तस्यावलेपनं ज्ञात्वा क्रुद्धस्तु भगवान्हरः ।
तिरोभावयितुं बुद्धिं चक्रे त्रिणयनस्तदा ॥ 6½ ॥
सा तस्मिन्पतिता पुण्या पुण्ये रुद्रस्य मूर्धनि ।
हिमवत्प्रतिमे राम जटामण्डलगह्वरे ॥ 7½ ॥
सा कथंचिन्महीं गन्तुं नाशक्नोद्यत्नमास्थिता ।
नैव निर्गमनं लेभे जटामण्डलमोहिता ॥ 8½ ॥

6½. (ப-ரை) **त्रिणयनः** - மூன்று கண்களை யுடையவரும், **भगवान्** - மாஹாத்மிய முடையவருமான, **हरः** - பரமசிவன், **तदा** - அப்பொழுது, **तस्याः** - அக்கங்கையினுடைய, **वलेपनं** - கருவத்தை, **ज्ञात्वा** - அறிந்து, **क्रुद्धः** - கோபித்து, **तिरोभावयितुं** - திரும்பிப் போகிறவளாகச் செய்யுவதற்கு, **बुद्धिं** — புத்தியை, **चक्रे** - செய்தனர்.

7½. (ப-ரை) **राम** - ஹே ராமா! **पुण्या** - பரிசுத்தமான, **सा** - அக்கங்கை, **हिमवत्प्रतिमे** - ஹிமயமலையோடு ஸமானதையுடையதும், **जटामण्डलगह्वरे** - ஜடையின் ஸமூகமாகிய புதரை யுடையதும், **पुण्ये** - பாவனமுமான, **रुद्रस्य** - பரமசிவனுடைய, **तस्मिन्** - அந்த, **मूर्धनि** - முடியில், **पतिता** - விழுந்தனள்.

8½. (ப-ரை) **सा** - அக்கங்கை, **कथंचित्** - வெகுப்ரயாஸத்தால், **महीं** - பூமியை, **गन्तुं** - அடைய, **यत्नं** - பிரயத்தனத்தை, **आस्थिता** - அடைந்தவளானள், (ஆனல்) **नाशक्नोत्** - சக்தியற்றவளானள். **जटामण्डलमोहिता** - ஜடையின் ஸமூகத்தால் பிரமிக்கப் பட்டவளாக, **निर्गमनं** - வெளி வருவதை, **नैव लेभे** - அடையவேயில்லை.

6½. (க-ரை) இப்படிப் பிரவாஹரூபமாக வெகுவேகமாய் ஆகாசத்திலிருந்து வரும் அக் கங்கையைக் கண்ட அச் சங்கரபகவான் வெகு சீற்றங்கொண்டு அக் கங்கையின் கொட்டத்தையும், ஆரவாரத்தையும் அடக்கநினைத்தனர்.

7½. (க-ரை) ஹே ராகவா! கேளும், மிகவும் பரிசுத்தையான அத்தேவகங்கையானவள், ஹிமயமலைபோல் அதிக விஸ்தாரமான முக்கட் பிரானுடைய ஜடாமண்டலத்தின் குஹையில் வெகு வேகமாய் விழுந்தனள்.

8½. (க-ரை) அக்கங்கையானவள், பிறகு அப்பரமசிவனுடைய விசாலமான ஜடாமண்டலத்தின் குஹையிலிருந்து பூமியை யடைய திசைதெரியாமல் விழுந்து பலவாறாக முயன்றும் பயன்படாமல் மயங்கி அவ்வழகான ஜடாமண்டலத்திலேயே சுழன்றுகொண்டிருந்தனள்.

तत्रैवाबंभ्रमद्देवी संवत्सरगणान्बहून् ।
तामपश्यन्पुनस्तत्र तपः परममास्थितः ॥ 9½ ॥

अनेन तोषितश्चाभूदत्यर्थं रघुनन्दन ।
विससर्ज ततो गङ्गां हरो बिन्दुसरः प्रति ॥ 10½ ॥

तस्यां विसृज्यमानायां सप्त स्रोतांसि जज्ञिरे ॥ 11 ॥

9½. (ப-ரை) **देवी** - அக்கங்கையானவள், **तत्रैव** - அந்த ஜடாமண்டலத்திலேயே, **बहून्** - அநேக, **संवत्सरगणान्** - வருஷங்களின் கும்பல்களை, **अबंभ्रमत्** - திரிந்திருந்தனள். **तां** - அக்கங்கையை, **अपश्यन्** - (பகீரதன்) பாராமல், **पुनः** - மறுபடி, **तत्र** - அங்கு, **परमं**-சிறந்த, **तपः** - தவத்தை, **आस्थितः** - அடைந்தனன்.

10½-11. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **अनेन** - (பகீரதனுடைய) இத்தவத்தால், **हरः** - பரமசிவன், **अत्यर्थं**-மிகவும், **तोषितः** - ஸந்தோஷமடைந்தவராக, **अभूत्**- ஆனார், **ततः** - பிறகு, **गङ्गां** - கங்கையை, **बिन्दुसरः** - **प्रति** - பிந்து ஸரஸ்ஸைக்குறித்து, **विससर्ज** - (ஜடாமண்டலத்திலிருந்து) விட்டனர். **तस्य** - அக்கங்கை, **विसृज्यमानायां**- விடுபட்ட வளவில், **सप्त** -ஏழு, **स्रोतांसि** - பிரவாஹங்களாக, **जज्ञिरे** - உண்டாயிற்று.

9½ (க-ரை) அவ்வாறு அப்பரமசிவனுடைய ஜடாமண்டலத்தில் விழுந்த அக் கங்கையானவள் பூமியை யடைய வழிதெரியாமல் அச் சங்கரபகவானுடைய ஜடாமண்டலத்திலேயே, வெகுகாலமாய் சுழன்றுகொண்டிருப்பதைக் கண்ட அப் பகீரதன், மறுபடியும், அப் பரமசிவனைக் குறித்து தவம் செய்யத்துடங்கினன்.

10½-11 (க-ரை) ஹே ராகவா! இவ்விதம் தன்னைக்குறித்து அப்பகீரத மஹாராஜன் செய்யும் தவத்திற்கு பரமசிவன் மிகவும் ஸந்தோஷப்பட்டு, அம் மஹாராஜனுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யுவதின்பொருட்டு, தன்னுடைய ஜடாமண்டலத்தில் சுழன்றுகொண்டு நிற்கின்ற அத்தேவகங்கையை, அங்கு ப்ரும்மதேவனுலியற்றப்பட்ட பிந்து ஸரஸ் என்னும் தடாகத்தில் பெறுகவிட்டனர். இவ்வாறு பரமசிவனால், தமது ஜடாமண்டலத்தினின்று விடப்பட்ட அக் கங்கையானவள் அங்கிருந்து ஏழு பிரவாஹங்களாகப் புறப்பட்டனள்.

ह्लादिनी पावनी चैव नलिनी च तथा परा ।
तिस्रः प्राचीं दिशं जग्मुर्गङ्गाः शिवजलाः शुभाः ॥ 12 ॥
सुचक्षुश्चैव सीता च सिन्धुश्चैव महानदी ।
तिस्रस्त्वेता दिशं जग्मुः प्रतीचीं तु शुभोदकाः ॥ 13 ॥
सप्तमी चान्वगात्तासां भगीरथमथो नृपम् ॥ 13½ ॥
भगीरथोऽपि राजर्षिर्दिव्यं स्यन्दनमास्थितः ।
प्रायादग्रे महातेजा गङ्गा तं चाप्यनुव्रजत् ॥ 14½ ॥

12. (ப-ரை) **ह्लादिनी** - ஹ்லாதிநி யென்றும், **पावनी च** - பாவநி யென்றும், **तदा** - அப்படியே, **अपरा**- வேறான, **नलिनी चैव** - நளிநி யென்றும் சொல்லப்படுகின்ற, **शिवजलाः** - மங்களகரமான ஜலமுடையதுமாக, **तिस्रः** - மூன்றாகளான, **गङ्गाः** - கங்கைகள், **शुभाः** - விளங்கிக் கொண்டு, **प्राचीं** - கிழக்கான, **दिशं** - திக்கை, (க்குறித்து) **जग्मुः** - சென்றன.

13. (ப-ரை) **सुचक्षुः** - ஸுசக்ஷு வென்றும், **सीता च** - ஸீதா வென்றும், **महानदी** - பெரிய நதியான, **सिन्धुश्चैव** - ஸிந்து வென்றும், **एताः** இந்த, **तिस्रः** - மூன்று களும், **शुभोदकाः**- மங்கள கரமான ஜலமுடையது களாக, **प्रतीचीं** - மேற்கான, **दिशं-तु** - திக்கையும், **जग्मुः** - அடைந்தன.

13½. (ப-ரை) **अथ** - பிறகு, **तासां** - அக்கங்கையினுடைய, **सप्तमी च** - ஏழாவதான, (பிரவாஹம்), **भगीरथं** - பகீரதனென்கிற, **नृपम्** - அரசனை, **अन्वगात्** - பின் தொடர்ந்தது.

14½. (ப-ரை) **राजर्षिः** - ராஜரிஷியான, **भगीरथः अपि** - பகீரதனும், **दिव्यं** - சிறந்த, **स्यन्दनं** - ரதத்தை, **आस्थितः** - அடைந்தவனாக, **अग्रे** - முன்னே, **प्रायात्** -

12. (க-ரை) அக்கங்கையானவள் பிறகு இந்த பிந்து ஸரஸு யென்னும் தடாகத்திலிருந்து ஏழுவகையாகப் பிரிந்து ஜலப்பிரவாஹமாக, ஹ்லாதிநி, பாவநி, நளிநி என்ற பெயருடன் மூன்று கங்கைகள் கிழக்குதிசையை அடைந்தன.

13-13½ (க-ரை) ஸுசக்ஷு, ஸீதா, ஸிந்து என்ற பெயருடன் பெரிய பிரவாஹத்துடன் முக்கங்கைகள் மேற்கு திக்கை நோக்கிச்சென்றன. பிறகு அக்கங்கையின் ஏழாவது பிரவாஹமானது அப்பகீரத சக்கிரவர்த்தியைப் பின் தொடர்ந்து பெருகி ஓடிற்று.

14½-15½. (க-ரை) அச்சிறந்த பகீரத சக்கிரவர்த்தி அழகான ரதத்தின்மீது உட்கார்ந்துகொண்டு, தன்னை அநுஸரித்துவரும் அத் தேவகங்கையின் ஏழாவது

गगनाच्छङ्करशिरस्ततो धरणिमाश्रिता ।
व्यसर्पत जलं तत्र तीव्रशब्दपुरस्कृतम् || 15½ ||
मत्स्यकच्छपसङ्घैश्च शिंशुमारगणैस्तदा ।
पतद्भिः पतितैश्चान्यैर्व्यरोचत वसुंधरा || 16½ ||
ततो देवर्षिगन्धर्वा यक्षाः सिद्धगणास्तदा ।
व्यलोकयन्त ते तत्र गगनाद्गां गतां तथा || 17½ ||

சென்றான். **महातेजाः** - வெகு தேஜஸ்ஸுடைய, **गङ्गा च अपि** - கங்கையும், **तं** - அப் பகீரதனை, **अन्वव्रजत्** - அநுஸரித்தது.

15½. (ப-ரை) **गगनात्** - (கங்கை) ஆகாசத்திலிருந்து, **शङ्करशिरः** - பரமசிவன் தலையையும், **ततः** - பிறகு (அங்கிருந்து,) **धरणिं** - பூமியையும், **आश्रिता** - அடையப் பட்டதாக, **तत्र** - அப்பூமியில், **जलं** - (அக்கங்கையின்) ஜலம், **तीव्रशब्दपुरस्कृतम्** - வேகமான சப்த முடையதாக, **व्यसर्पत** - வியாபித்தது.

16½. (ப-ரை) **तदा** - (கங்கையின் வெள்ளம்)அப்பொழுது, **वसुंधरा** - பூமியில், **पतद्भिः** - விழுகையில், **मत्स्यकच्छपसङ्घैः च** - மீன், ஆமை இவைகளின் கூட்டங்களா லும், **शिंशुमारगणैः** - முதலையின் ஸமூகங்களாலும், **पतितैः** - வீழ்ந்து, **अन्यैः** - வேறு, (ஜலஜந்துக்களாலும்), **व्यरोचत** - விளங்கிற்று.

17½. (ப-ரை) **ततः** - பிறகு, **तदा** -அப்பொழுது, **देवर्षिगन्धर्वाः** - தேவரிஷிகள், கந்தருவர் இவர்களும், **तथा** - அப்படியே, **यक्षाः** - யக்ஷரும், **सिद्धगणाः** - ஸித்தர்

பிரவாஹத்தை தன்னுடைய எண்ணம் நிறைவேருவதின் பொருட்டு, வழிகாட்டிக் கொண்டு முன் செல்லவே, அக்கங்கை பிரவாஹமும் அவ்வரசனைப் பின்தொடர்ந்தது. கங்கையானது ஆகாசத்தினின்று முதலில் பரமசிவனுடைய ஜடாமண்டலத்திலும், பிறகு அங்கிருந்து பூமியிலும் வீழ்ந்தமையால் மிகவும் பெரிய ஒலியுடன் வெகு வேகமாக பூமியெங்கும் நிறைக்கப்பட்டது.

16½. (க-ரை) அப்படி வெகுவேகமாக கங்கையின் பிரவாஹம் பூமியில் பெருகும்பொழுது மத்ஸ்யங்களாலும், ஆமைகளாலும், முதலைகளாலும், வேறு அநேக ஜலஜந்துக்களாலும் பூமியானது நிறையப்பெற்று வெகு அழகாய் காணலாயிற்று.

17½. (க-ரை) இவ்வாறு பரமசிவனுடைய ஜடாமண்டல துறையினின்று பூமியைவந்தடைந்த அக்கங்கையைக் காணவந்த தேவ, யக்ஷ, ஸித்த, பன்னக;

विमानैर्नगराकारैर्हयैर्गजवरैस्तदा ।
पारिप्लवगतैश्चापि देवतास्तत्र विष्ठिताः ॥ 18½ ॥
तदद्भुततमं लोके गङ्गापतनमुत्तमम् ।
दिदृक्षवो देवगणाः समीयुरमितौजसः ॥ 19½ ॥
संपतद्भिः सुरगणैस्तेषां चाभरणौजसा ।
शतादित्यमिवाभाति गगनं गततोयदम् ॥ 20½ ॥

களும், ते - அந்த, (எல்லோரும்), गगनात् - ஆகாசத்திலிருந்து, तत्र - அங்கு, गां பூமியை, गतां - அடைந்த, (கங்கையை), व्यलोकयन्त - பார்த்தனர்.

18½. (ப-ரை) तत्र - அங்கு, तदा - அப்பொழுது, देवताः - தேவர்கள், पारिप्लवगतैः - ஸம்பரமத்தை யடைந்த, नगराकारैः - பட்டணம் போன்ற ஆகார முடைய, विमानैः - விமானங்களோடும், हयैः - குதிரைகளோடும், गजवरैः चापि - கஜசிரேஷ்டங்களோடு கூடவும், विष्ठिताः - விசேஷமாக விருந்தனர்.

19½. (ப-ரை) अमितौजसः - அளவற்ற பராக்கிரம முடைய, देवगणाः -(அந்த) தேவ கூட்டங்கள், लोके - பூலோகத்தில், अद्भुततमं - இதைக் காட்டிலு மொன்று மில்லை யென்னும் படியான, அதாவது ஆச்சரியத்திற் சிறந்த, तत् - அப்படிப் பட்ட, उत्तमम् - சிறந்த (இந்த), गङ्गापतनं - கங்கையின் விழுதலை, दिदृक्षवः - பார்க்க விரும்பினவர்களாக, समीयुः-ஒன்று சேர்ந்தனர்.

20½. (ப-ரை) संपतद्भिः - சேர்ந்திருக்கின்ற, सुरगणैः - தேவக்கூட்டங்களா லும், तेषां - அவர்களுடைய, आभरणौजसा च - ஆபரணங்களின் ஒளியாலும், गततोयदम्-

ரிஷிகள், கந்தருவர் முதலான தேவகூட்டங்கள் அக்கங்கையின் பிரவாஹத்தைக் கண்டு வெகு ஆச்சரியமுற்று நின்றனர்.

18½. (க-ரை) அக்கங்கையின் பிரவாஹ காக்ஷியைக் காண எல்லா தேவ கூட்டங்களும் தங்கள் தங்கள் வாஹனங்களுடனும், விமானங்களுடனும், குதிரைகளுடனும், சிறந்த யானைகளுடனும் வந்துசேர்ந்தனர்.

19½ (க-ரை) இக்காக்ஷியைப் பார்க்கவந்த அத்தேவக் கூட்டங்கள், பூலோகத் தில் இதைவிட சிறந்த மற்றொரு ஆச்சரியமில்லை யென்றும் சொல்லும்படியான அக்கங்கையின் பிரவாஹத்தைப்பற்றி ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டனர்.

20½. (க-ரை) அவ்வாறு ஆகாசத்தில் அவ்விண்ணவர்கள் கூடியிருக்கும் பொழுது அவர்கள் அணிந்துகொண்டிருக்கும் ஆபரணங்களின் பிரகாசங்களால்

शिंशुमारोरगगणैर्मीनैरपि च चञ्चलैः ।
विद्युद्भिरिव विक्षिप्तमाकाशमभवत्तदा ॥ 21½ ॥
पाण्डुरैः सलिलोत्पीडैः कीर्यमाणैः सहस्रधा ।
शारदाभ्रैरिवाकीर्णं गगनं हंससंप्लवैः ॥ 22½ ॥
क्वचिद्द्रुततरं याति कुटिलं क्वचिदायतम् ।
विनतं क्वचिदुद्भूतं क्वचिद्याति शनैः शनैः ॥ 23½ ॥

போன மேகங்களேயுடைய, அதாவது மேகங்களில்லாமல் நிர்மலமான, **गगनं** - ஆகாசமானது, **शतादित्यमिव** - நூறு ஸூரியனை யுடையது போல, **आभाति** - பிரகா

21½. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **आकाशं** - ஆகாசமானது, **शिंशुमारोरगगणैः** - **च** - முதலே, ஸர்ப்பங்கள் இவைகளாலும், **चंचलैः** - சலிக்கின்ற, **मीनैरपि** - மீன்களாலும், **विद्युद्भिः** - மின்னல்களால், **विक्षिप्तं इव** - வியாபிக்கப் பட்டது போல், **अभवत्** - ஆயிற்று.

22½. (ப-ரை) **गगनं** - ஆகாசம், **सहस्रधा** - (வேறுத்தினுல்) அநேகப்ரகாரமாக, **कीर्यमाणैः** - வியாபித்திருக்கிற, **सलिलोत्पीडैः** - ஜலத்தின் நுரைகளாலும், **हंससंप्लवैः** - ஹம்ஸ கூட்டங்களாலும், **पाण्डुरैः** - வெளுத்த, **शारदाभ्रैः** - சரத்கால மேகங்களால், **आकीर्णं इव** - வியாபிக்கப்பட்டதுபோல், (ஆயிற்று).

23½. (ப-ரை) **क्वचित्** - (அக்கங்கை) ஓரிடத்தில், **द्रुततरं** - வேகமாகவும், **कुटिलं**- (ஓரிடத்தில்) கோணலாகவும், (**क्वचित्** - ஓரிடத்தில்), **आयतम्** - நீளமாகவும், **क्वचित्** -

வானமெங்கும் அநேகம் ஸூரியர்கள் உதித்து பிரகாசித்தாற்போல், எங்கும்பிரகாசமாயிருந்தது.

21½ (க-ரை) அக்கங்கையானது ஆகாசத்திலிருந்து பூமியில் விழும்பொழுது, அக்கங்கைப் பிரவாஹத்திலிருந்து மீன்கள், முதலேகள், ஸர்ப்பங்கள் இவைகள் நீரிலிருந்து துள்ளி எழுகின்றமையால், ஆகாசம் முழுவதும் மின்னல்களால் நிறம்பியதுபோல் காணப்பட்டது.

22½ (க-ரை) அக்கங்கை பிரவாஹத்தில் வெண்ணிறமாக மேலே தோன்றும் நுரைகளாலும், அங்குலாவும் அன்னப் பறவைகளாலும் ஆகாசமானது சரத்கால மேகங்களால் வியாபிக்கப்பட்டது போலத் தோன்றலாயிற்று.

23½. (க-ரை) அக்கங்கை பிரவாஹமானது பூமியில் விழுந்து சில விடத்தில்

सलिलेनैव सलिलं क्वचिदभ्याहतं पुनः ।
मुहुरूर्ध्वमुखं गत्वा पपात वसुधातलम् ॥ 24½ ॥
तच्छङ्करशिरोभ्रष्टं भ्रष्टं भूमितले पुनः ।
व्यरोचत तदा तोयं निर्मलं गतकल्मषम् ॥ 25½ ॥
तत्र देवर्षिगन्धर्वा वसुधातलवासिनः ।
भवाङ्गपतितं तोयं पवित्रमिति पस्पृशुः ॥ 26½ ॥

ஓரிடத்தில், विनतं - வணங்கினதாகவும், क्वचित् उद्धतं - ஓரிடத்தில், (கற்கள் தடுப்பதால்) மேலெழுந்ததாகவும், याति சென்றது, क्वचित् ஓரிடத்தில், शनैः शनैः - மெள்ள மெள்ள, याति - சென்றது.

24½. (ப-ரை) क्वचित् - ஓரிடத்தில், मुहुः - அடிக்கடி, सलिलं - ஜலம், सलिलेनैव - ஜலத்தினாலேயே, अभ्याहतं - எதிராக அடிக்கப்பட்டதாய், ऊर्ध्वमुखं - மேல்முகமாக, गत्वा - சென்று, पुनः - மறுபடி, वसुधातलम् - பூமியை, (க்குறித்து) पपात- விழுந்தது.

25½. (ப-ரை) शङ्करशिरोभ्रष्टं - சங்கர பகவான் முடியினின்று விழுந்ததும், पुनः - மறுபடியும், भूमितले - பூதலத்தில், भ्रष्टं - விழுந்ததுமான, तत् तोयं - அந்த ஜலம், तदा - அப்பொழுது, निर्मलं - பரிசுத்தமாகவும், गतकल्मषं - போக்கப்பட்ட பாதகமுடையதாகவும், அதாவது நிர்மலமாயும், व्यरोचत - விளங்கிற்று.

26½. (ப - ரை) तत्र-அங்கு (ஆகாசத்தில்), देवर्षिगन्धर्वाः - தேவரிஷிகளும், கந்தருவர்களும், वसुधातलवासिनः - பூமியில் வசிப்பவரும், भवाङ्गपतितं- பரமசிவனுடைய

வெகுவேகமாகவும், சிற்சிலவிடங்களில் மெதுவாகவும், சிற்சிலவிடங்களில் வளைவாகவும், சிலவிடங்களில் பாறைகளால் மோதப்பட்டு உயர்வாகவும் சென்றது.

24½. (க-ரை) இன்னும் சில விடங்களில் அக்கங்கையின் வெள்ளமானது, ஜலங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு உயர எழும்பி பூமியில் விழுந்தும் சென்றது.

25½. (க-ரை) அத்தேவ கங்கை பிரவாஹமானது, சங்கரபகவானது ஜடாமண்டலத்தினின்று பூமியில் விழுந்தமையால் அக்கங்கையின் தீர்த்தம் மிகப் பரிசுத்தமாய் விளங்கிற்று.

26½. (க-ரை) அக்கங்கையின் பிரவாஹத்தின் ஆச்சரியத்தைக் காணவந்த, தேவர்கள், ரிஷிகள், கந்தருவர் மற்றும் பூமியில் வசிப்பவர் எல்லோரும், இக்கங்

शापात्प्रपतिता ये च गगनाद्वसुधातलम् ।
कृत्वा तत्राभिषेकं ते बभूवुर्गतकल्मषाः ॥ 27½ ॥
धूतपापाः पुनस्तेन, तोयेनाथ सुभास्वता ।
पुनराकाशमाविश्य स्वाँल्लोकाँन्प्रतिपेदिरे ॥ 28½ ॥
मुमुदे मुदितो लोकस्तेन तोयेन भास्वता ।
कृताभिषेको गङ्गायां बभूव विगतक्लमः ॥ 29½ ॥

சரீரத்தினின்றும் விழுந்த, **तोयं** - ஜலத்தை, **पवित्रमिति** - பவித்ரமென்று, **पस्पृशुः** - தொட்டனர். அதாவது ஸ்நாநம் செய்தனர்.

27½. (ப-ரை) **ये** - எவர்கள், **गगनात्** - ஆகாசத்திலிருந்து, **शापात्** - சாபத்தால், **वसुधातलं** - பூமியை, **प्रपतिताः** - அடைந்தனரோ, **ते च** - அவர்களும், **तत्र** - அந்த, (ஜலத்தில்) **अभिषेकं** - ஸ்நாநத்தை, **कृत्वा** - செய்து, **गतकल्मषाः** - போனபாபமுடையராய் அதாவது பாபத்தினின்று விடுபட்டவராக, **बभूवुः** - ஆயினர்.

28½. (ப-ரை) **अथ** - பிறகு, **ते**-அவர்கள், (சாபத்தால் தேவலோகத்தினின்றும் பூலோகத்தை அடைந்த) **पुनः** - மறுபடி, **सुभास्वता** - மிகவும் பிரகாசிக்கின்ற, **तेन** - அந்த, **तोयेन** - ஜலத்தினால், **धूतपापाः** - உதறின பாபமுடையவராய் அதாவது பாபத்தினின்று விலகினவராய், **पुनः** - மறுபடியும், **आकाशं** - ஆகாசத்தை, **आविश्य** - அடைந்து, **स्वाँल्लोकान्** - தங்களுடைய உலகங்களை, **प्रतिपेदिरे** - அடைந்தனர்.

29½. (ப-ரை) **भास्वता** - விளங்குகின்ற, **तेन** - அந்த, **तोयेन** - ஜலத்தினால், **लोकः** - உலகம், **मुमुदे** - களித்தது. **मुदितः** - (மறுபடி) ஸந்தோஷித்தது, **गङ्गायां** -

கையின் பிரவாஹமானது பரமசிவனுடைய ஜடாமண்டலத்தினின்றும் **விழுந்தமை யால்** முன்போல் அதிபாவனமென்று அக்கங்கையில் நீராடினர்.

27½. (க-ரை) **விண்ணுலகில்** நின்று சாபத்தால் பூமியை யடைந்த சிலதேவர்கள் **அப்புண்ணிய** தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து சாபத்தினின்று விடுபட்டவர்களாயினர்.

28½. (க-ரை) மிக்கபரிசுத்தமான அப்புண்ணிய கங்கையின் தீர்த்தத்தில் **ஸ்நானம்**செய்த அத்தேவர்கள்சாபத்தினின்றும் விடுபட்டவர்களாய், அப்புண்ணியதீர்த்தத்தின் மஹிமையால், **தங்கள்** தங்கள் ஸ்தானத்தை யதாவத்தாய் அடைந்தனர்.

29½. (க-ரை) அக் கங்கையின் புண்ணிய தீர்த்தத்தால் இப் பூமண்டலத்தில்

भगीरथोऽपि राजर्षिर्दिव्यं स्यन्दनमास्थितः ।
प्रायादग्रे महातेजास्तं गङ्गापृष्ठतोऽन्वगात् ॥ $30\frac{1}{2}$ ॥
देवाः सर्षिगणाः सर्वे दैत्यदानवराक्षसाः ।
गन्धर्वयक्षप्रवराः सकिन्नरमहोरगाः ॥ $31\frac{1}{2}$ ॥
सर्वश्चाप्सरसो राम भगीरथरथानुगाम् ।
गङ्गामन्वगमन्प्रीताः सर्वे जलचराश्च ये ॥ $32\frac{1}{2}$ ॥

கங்கையில், **कृताभिषेकः** - செய்யப்பட்ட ஸ்நாநமுடையதாய், **विगतक्लमः**-போனதுயர முடையதாக, அதாவது துயரத்தினின்று நீங்கியதாக, **बभूव** - ஆயிற்று.

$30\frac{1}{2}$. (ப-ரை) **राजर्षिः** - ராஜரிஷியும், **महातेजाः** - மஹா பராக்கிரம முடைய வருமான, **भगीरथः अपि** - பகீரதனும், **दिव्यं** - உத்தமமான, **स्यन्दनं** தேரை, **आस्थितः** - அடைந்தவனாய், **अग्रे** - முன்னே, **प्रायात्** - சென்றான். **गङ्गा** - கங்கை, (அந்த பகீர தனை) **पृष्ठतः** - பின்பாக, **अन्वगात्** - அநுஸரித்தது.

$31\frac{1}{2}$-$32\frac{1}{2}$. (ப-ரை) **राम** - ஹே ராகவா! **सर्षिगणाः** - ரிஷிக்கூட்டங்களுடன், **देवाः**- தேவர்கள், **सर्वे** - எல்லோரும், **दैत्यदानवराक्षसाः** - தைத்தியர், தானவர், ராக்ஷஸர் (இவர்களும்), **सकिन्नरमहोरगाः**:-கின்னரர், பெரும் ஸர்ப்பங்கள் இவர்களோடு கூடின, **गन्धर्वयक्ष-प्रवराः**:-கந்தருவர், யக்ஷசிரேஷ்டர்களும், **अप्सरसः**-அப்ஸரஸுக்களும், **सर्वाश्च**- அனைவரும், **प्रीताः** - களித்தவர்களாக, **भगीरथरथानुगां** - பகீரதன் தேரைப் பின் தொடர்ந்து போகின்ற, **गङ्गां** - கங்கையை, **अन्वगमन्** - அநுஸரித்தனர், **ये** - எந்த, **जलचराः** - ஜலஜந்துக்களோ, **सर्वे च** - (அவை) ஸமஸ்தமும், (**अन्वगमन्** - பின் தொடர்ந்தன).

வலிப்பவரனைவரும், அப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து தீவினை எல்லாம் நீங்கி மகிழ்ந்தனர். ஸந்தோஷமடைந்தனர்.

$30\frac{1}{2}$. (க-ரை) அப்பகீரதன், திவ்ய ரதத்தின்மீதேறி முன் செல்ல, அக்கங்கை யும், அச்சிறந்த புருஷனைப் பின்சென்று தொடர்ந்தனள்.

$31\frac{1}{2}$-$32\frac{1}{2}$. (க-ரை) ஹே ராகவா! தேவாஸுர, கந்தர்வ, தேவரிஷிகள், ப்ரும்ம ரிஷிகள் முதலியவர்கள், அப்ஸரஸ்திரீகளென்று சொல்லுகின்ற ரம்பை, ஊர்வசி முதலான தேவதாஸிகள் மற்ற எல்லா ஜலசாமான பிராணிகளும் இவ்வாச்சரியத் தைக் கண்ணுற்று அச்சிறந்த கங்கையைப் பின்தொடர்ந்தனர்.

यतो भगीरथो राजा ततो गङ्गा यशस्विनी ।
जगाम सरितां श्रेष्ठा सर्वपापविनाशिनी ॥ 33½ ॥
ततो हि यजमानस्य जह्नोरद्भुतकर्मणः ।
गङ्गा संप्लावयामास यज्ञवाटं महात्मनः ॥ 34½ ॥
तस्यावलेपनं ज्ञात्वा क्रुद्धो जह्नुश्च राघव ।
अपिबच्च जलं सर्वं गङ्गायाः परमाद्भुतम् ॥ 35½ ॥

33½ (ப-ரை) **यतः** - எங்கு, **राजा** - அரசனான, **भगीरथः** - பகீரதன், **जगाम** - செல்லுகின்றானோ, **ततः** - அங்கு, **सरितां** - நதிகளுக்குள், **श्रेष्ठा** - சிறந்தவளாயும், **सर्वपापविनाशिनी** - ஸகல பாபங்களையும் போக்கக்கூடியவளும், **यशस्विनी** - கீர்த்தியுமுடைய, **गङ्गा** - கங்கை, **जगाम** - சென்றனள்.

34½. (ப-ரை) **ततः** - பிறகு, **गङ्गा** - அக்கங்கை, **अद्भुतकर्मणः** - ஆச்சரியமான காரியமுடையவரும், **महात्मनः** - பூஜிக்கத்தக்க ஸ்வபாவமுடையவரும், **यजमानस्य** - (யாகம் செய்யும்), எஜமானருமான, **जह्नोः** — ஜன்ஹு மஹரிஷியின், **यज्ञवाटं** - யாகக்ஷேத்திரத்தை, **संप्लावयामास** - முழுகச்செய்தது. (தன் பிரவாஹத்தால் முழுகச்செய்தனள்)

35½. (ப-ரை) **राघव** - ஹேராமா! **जह्नुः च** - ஜன்ஹு மஹரிஷியும், **तस्याः** - அக்கங்கையினுடைய, **वलेपनं** - கருவத்தை, **ज्ञात्वा**-அறிந்து, **क्रुद्धः** - கோபித்தவராக **गङ्गायाः** - கங்கையினுடைய, **जलं** - ஜலத்தை, **सर्वं च** - முழுவதையும், **परमाद्भुतं** - ஆச்சரியமாயிருக்கும்படி, **अपिबत्** - பானம் செய்தார்.

33½. (க-ரை) அவ்வுத்தம பகீரதமன்னவன் எங்கெங்குசெல்லுகின்றானோ ஆங்காங்கு நதிகளுக்குள் சிறந்த அப்புண்ணிய கங்கையும் பின்தொடர்ந்தனள்.

34½-35½. (க-ரை) இவ்வாறு அக்கங்கையானது அப்பகீரத சக்கிரவர்த்தியைப் பின்துடர்ந்து வெகு வேகமான பிரவாஹத்துடன் செல்லுகையில், அங்கு உத்தமமான ஓர் யாகபூமியை நிருமாணம் செய்து சிறந்த யாகம் செய்துகொண்டிருந்த ஜன்ஹுவென்னும் ஓர் மஹரிஷியின் அந்த யாக பூமியை அடைந்து, அங்குள்ள வேதிகை முதலானவைகளை முழுகச்செய்தனள் அதை யறிந்த அம்மஹரிஷியிகக் கோபங்கொண்டு அக்கங்கையின் செருக்கை அடக்கவேணுமென்று தமது சக்தி விசேஷத்தால், அக்கங்கைப் பிரவாஹம் முழுமையும் பானம் செய்து விட்டனர்.

ततो देवाः सगन्धर्वा ऋषयश्च सुविस्मिताः ।
पूजयन्ति महात्मानं जह्नुं पुरुषसत्तमम् ॥ 36½ ॥
गङ्गां चापि नयन्ति स्म दुहितृत्वे महात्मनः ॥ 37 ॥
ततस्तुष्टो महातेजाः श्रोत्राभ्यामसृजत्पुनः ।
तस्माज्जह्नुसुता गङ्गा प्रोच्यते जाह्नवीति च ॥ 38 ॥
जगाम च पुनर्गङ्गा भगीरथरथानुगा ।
सागरं चापि संप्राप्ता सा सरित्प्रवरा तदा ॥ 39 ॥

36½-37. (ப-ரை) **ततः** - பிறகு, **सगन्धर्वाः** - கந்தருவரோடு கூடின, **देवाः** - தேவர்களும், **ऋषयश्च** - ரிஷிகளும், **सुविस्मिताः** - வெகு ஆச்சரியமுடையவர்களாய், **महात्मानं** - மாஹாத்மிய முடையவரும், **पुरुषसत्तमं** - புருஷர்களிற் சிறந்தவருமான, **जह्नुं** - ஜன்ஹு மஹரிஷியை, **पूजयन्ति** - பூஜித்தார்கள், **गङ्गां चापि** - கங்கையையும், **महात्मनः**- மாஹாத்மியமுடைய, (ஜன்ஹு மஹரிஷிக்கு), **दुहितृत्वे** - பெண்ணு குகையில், **नयन्तिस्म** - சேர்ப்பித்தனர்.

38 (ப-ரை) **ततः** - பிறகு, **महातेजाः** - வெகு தேஜஸுடைய (ஜன்ஹு மஹரிஷி), **तुष्टः** - ஸந்தோஷித்தவராக, **पुनः** - மறுபடி, **श्रोत्राभ्यां** - காதுகளால், **असृजत्** - (அக்கங்கை பிரவாஹத்தை) விட்டனர். **तस्मात्** - அதனால், **गङ्गा** - கங்கை, **जह्नुसुता** - ஜன்ஹுவின் மகளென்றும், **जाह्नवीति च** - ஜான்ஹவியென்றும், **प्रोच्यते** - செல்லப்பட்டனள்.

39-39½. (ப-ரை) **गङ्गा च** - கங்கையும், **पुनः** - மறுபடி, **भगीरथरथानुगा** - பகீரதனுடைய ரதத்தைப்பின் பற்றியவளாக, **जगाम** - சென்றனள், **तदा** - அப்

36½-37. (க-ரை) அம்மஹரிஷி கோபத்தால் அக்கங்கையின் பிரவாஹத்தைப் பானம் செய்துவிடவே, தேவகூட்டங்களென்ன, மஹரிஷிகளென்ன இவர்களெல்லோரும், அம்மஹரிஷியின் ஆச்சரியகரமான காரியத்தைக் கண்டு எல்லோரும் களித்தனர். பிறகு அத்தேவர்களெல்லோரும் அம்மஹரிஷியை நோக்கி, "சீற்றந் தணிந்து அருள்செய்யுவீர்" என்று பிரார்த்தித்து, இந்நதி இப்பொழுது உம்மிடத்திலிருந்துவருகின்றமையால் இதற்கு "ஜான்ஹவி" யென்றபெயருமுண்டாகட்டும், யென்றும் கூறினர்கள்.

38. (க-ரை) அத்தேவ கணங்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி, அம்மஹரிஷி வெகு ஸந்தோஷத்துடன் அக்கங்கையை தம்முடைய செவியின் வழியால் வெளிவிட்டனர். அன்றுமுதல் இக் கங்கைக்கு, ஜன்ஹு மஹரிஷியின் மகளென்றும், "ஜான்ஹவி" யென்றும் பெயர்பூண்டு விளங்கலாயினள்.

39-39½. (க-ரை) ஹே ராகவா! கேளும், ஜன்ஹு மஹரிஷியின் மகளான

रसातलमुपागच्छत्सिध्यर्थं तस्य कर्मण: ॥ 39½ ॥
भगीरथोऽपि राजर्षिर्गङ्गामादाय यत्नत: ।
पितामहान्भस्मकृतानपश्यद्दीनचेतन: ॥ 40½ ॥
अथ तद्भस्मनां राशिं गङ्गासलिलमुत्तमम् ।
प्लावयद्धूतपाप्मान: स्वर्गं प्राप्ता रघूत्तम ॥ 41½ ॥
इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
त्रिचत्वारिंश: सर्ग: ॥ 43 ॥

பொழுது, **सरित्प्रवरा** - நதிக்குள் சிறந்த, **सा** - அந்த கங்கை, **सागरं चापि** - கடலையும், **संप्राप्ता** - நன்கடைந்தவளாக, **तस्य**-அப்பகிரதனுடைய, **कर्मण:** - காரியத்தின், **सिध्यर्थं**-பூர்த்தியின் பொருட்டு, **रसातलं** - ரஸாதலத்தை. **उपागच्छत्** - அடைந்தாள்.

40½. (ப-ரை) **राजर्षि:** - ராஜரிஷியான, **भगीरथ: अपि** - பகிரதனும், **यत्नत:** - பிரயத்தினத்தினால், **गङ्गां** - கங்கையை, **आदाय** - எடுத்துக் கொண்டு, (அதாவது அழைத்துக்கொண்டு,**भस्मकृतान्** -சாம்பலாகச் செய்யப்பட்ட,(இடத்தை யடைந்து) **पितामहान्** - பாட்டன்மார்களை, (சாம்பலாகச் செய்யப்பட்டிருப்பதைக் குறித்து) **दीनचेतन:** - துக்க முற்றமன முடையவனாய், **अपश्यत्** - பார்த்தான்.

41½. (ப-ரை) **रघूत्तम** - ரகுகுலத்திற்சிறந்தவனே! **अथ** - பிறகு, **उत्तमं** - சிறந்த, **तत्** - அந்த, **गङ्गासलिलं** - கங்கையின் ஜலம், **भस्मनां राशिं** - சாம்பலான குவியலை, **प्लावयत्** - முழுகச்செய்தது, (அதனால் அந்த ஸகரபுத்திரர்கள்), **धूतपाप्मान:** - போக்கடிக்கப்பட்ட பாதக முடையவராக, அதாவது பாபத்தினின்று விடுபட்டவர்களாக, **स्वर्गं** - ஸ்வர்க்கத்தை, **प्राप्ता:** - அடைந்தனர்.

"ஜான்ஹவி" என்னும் அக்கங்கையானவள் பகிரத மன்னவன் பின்சென்று கடலில்விழுந்து, பிறகு அவ்வரசனின் காரியம் பூர்த்தியாவதின்பொருட்டு, பாதாள லோகத்தையடைந்தனள்.

40½. (க-ரை) அந்த ராஜரிஷியான பகிரதன் தன்னுடைய தீவிரமான தவங்களாற்பெற்ற அத்தேவ கங்கையை அழைத்துக்கொண்டு பாதாளலோகஞ் சென்றனன். எந்த இடத்தில் கபில மஹரிஷியின் சாபத்தால் தன்னுடைய பாட்டன்மார்களான ஸகரபுத்திரர்களறுபதினாயிரம் பெயர்களும் சாம்பல் குவியலாகக் கிடந்தனரோ அவ்விடத்தை யடைந்தனன். தன் பாட்டன்மார்கள் சாம்பல் குவியலாகக்கிடப்பதைக்கண்டு மிகவும் துக்கித்தனன்.

41½. (க-ரை) பிறகு ஹே ராகவா! கேளும், அப்புண்ணிய கங்கையின் பிரவாஹமும் அங்குசாம்பலாய் கிடக்கும் ஸகரபுத்திரர்கள் நீற்றின் குவியலில் பாய்ந்து அதை முற்றும் நனைத்தது. அதனால் ஸகரபுத்திரர்கள் அனைவரும் கபிலமாமுனியின் சாபமாகிய கடுவினை நீர்ந்து நிர்மலராகி ஸ்வர்க்கலோகத்தை யடைந்தனர்.

चतुश्चत्वारिंशः सर्गः ॥ 44 ॥

स गत्वा सागरं राजा गङ्गयानुगतस्तदा ।
प्रविवेश तलं भूमेर्यत्र ते भस्मसात्कृताः ॥ 1 ॥

भस्मन्यथाप्लुते राम गङ्गायाः सलिलेन वै ।
सर्वलोकप्रभुर्ब्रह्मा राजानमिदमब्रवीत् ॥ 2 ॥

तारिता नरशार्दूल दिवं याताश्च देववत् ।
षष्टिः पुत्रसहस्राणि सगरस्य महात्मनः ॥ 3 ॥

1\. (ப-ரை) **सः** - அந்த, **राजा** - அரசனான, (பகீரதன்), **तदा** - அப்பொழுது, **गङ्गयानुगतः** - கங்கையை அநுஸரித்தவனாக, **गत्वा** - சென்று, **यत्र** - எங்கு, **ते** - அந்த, (ஸகரபுத்திரர்கள்) **भस्मसात्कृताः** - சாம்பலாய் செய்யப்பட்டனரோ, **सागरं** - ஸகர ஸம்பந்தமான, **भूमेः** - பூமியினுடைய, **तलं** - பிரதேசத்தை, (பாதாலத்தை), **प्रविवेश** - பிரவேசித்தனன்.

2\. (ப-ரை) **राम** - ஹே ராம! **गङ्गायाः** - கங்கையின், **सलिलेन वै** - ஜலத்தினாலே, **भस्मनि** - பஸ்மங்கள், **यथा** - எப்பொழுது, **प्लुते** - நனைக்கப்பட்டதோ, (அப்பொழுதே) **सर्वलोकप्रभुः** - எல்லா உலகங்களுக்கும் நாயகனான, **ब्रह्मा** - ப்ரும்மதேவர், **राजानं** - அரசனைக்குறித்து, **इदं** - இதை, (கீழ்வரும் வார்த்தையை) **अब्रवीत्** - சொன்னார்.

3\. (ப-ரை) **नरशार्दूल** - நரசிரேஷ்டனே! **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **सगरस्य** - ஸகர மஹாராஜனுடைய, **पुत्रसहस्राणि** - புத்திர ஸஹஸ்ரங்கள், **षष्टिः** - அறு

1\. (க-ரை) ஹே ராகவா! அப்பகீரத மன்னவனை, கங்கை பின் தொடர்ந்துவர, அந்த உத்தமமான ஸகரசக்கிரவர்த்தியின் குமாரர்கள் மடிந்து மண்ணாய் கிடக்கும் பாதாளலோகத்தில் அப்பகீரதன் பிரவேசித்தனன்.

2\. (க-ரை) பிறகு, அப்பகீரத மன்னவன் அப்புண்ணிய கங்கை ஜலத்தினால் சாம்பல் குவியல்களை நனைக்கும்பொழுது, ஸர்வலோக ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரும்மதேவர் பிரஸன்னராகி அம்மன்னவனைக் குறித்து பின்வருமாறு அருளினர்.

3 (க-ரை) ஹே நரசிரேஷ்டனே! அச்சகர புத்திரர்கள் அறுபதினாயிரம் பேர்களும் அப்புண்ணிய கங்கையின் ஜலத்தால், உன்னால் நனைக்கப்பட்டவுடனே

सागरस्य जलं लोके यावत्स्थास्यति पार्थिव ।
सगरस्यात्मजास्तावत्स्वर्गे स्थास्यन्ति देववत् ॥ 4 ॥
इयं च दुहिता ज्येष्ठा तव गङ्गा भविष्यति ।
त्वत्कृतेन च नाम्नाथ लोके स्थास्यति विश्रुता ॥ 5 ॥
गङ्गा* त्रिपथगा राजन्दिव्या भागीरथीति च ।
त्रीन्पथो भावयन्तीति ततस्त्रिपथगा स्मृता ॥ 6 ॥

புதுகளும், **तारिताः** - (கங்கை ஜலத்தினால்) பிரேத பிருப்பிலிருந்து விடுபட்டவர்களாக, **देववत्** - தேவர்போல், **दिवं** - ஸ்வர்க்கத்தை, **याताः** - சென்றனர்.

4. (ப-ரை) **पार्थिव** - ஹே அரசனே! **यावत्** - எதுவரையில், **लोके** - உலகத்தில், **सागरस्य** - ஸமுத்திரத்தினுடைய, **जलं** - நீர், **स्थास्यति** - இருக்குமோ, **तावत्** - அதுபரியந்தம், **सगरस्य** - ஸகரருடைய, **आत्मजाः** - பிள்ளைகள், **देववत्** - தேவர்போல், **स्वर्गे** - ஸ்வர்க்கத்தில், **स्थास्यन्ति** - இருப்பார்கள்.

5. (ப-ரை) **इमं** - இந்த, **गङ्गा च** - கங்கையும், **तव** - உனக்கு, **ज्येष्ठा** - மூத்தவளான, **दुहिता** - பெண்ணாக, **भविष्यति** - ஆகக்கடவள், **अथ** - பின்னும், **लोके** - உலகத்தில், **त्वत्कृतेन** - உன்னால் செய்யப்பட்ட, **नाम्ना** - பெயரினால், **विश्रुता** - பிரஸித்தையாக, **स्थास्यति** - இருக்கக் கடவள்.

6. (ப-ரை) **राजन्** - பகீரதனே! **दिव्या** - ஸ்வர்க்க ஸம்பந்தமான, **गङ्गा** - கங்கை, **त्रिपथगा** - மூன்று வழிகளில் போகுவது, (என்றும்) **भागीरथी इति च** - பகீரத

அவர்கள் எல்லோரும் தேவத்தன்மையயடைந்து ஸ்வர்க்கலோகம் சென்றனர்.

4. (க-ரை) ஹே அரசனே! பூலோகத்தில் இவ்வலைகடல் நீர் எவ்வளவு காலம் வற்றுமலிருக்குமோ அவ்வளவு காலம் வரை இச்சகரபுத்திரர்கள் எல்லவரும் ஸ்வர்க்கலோகத்தில் தேவர்கள்போல் வஸிக்கக்கடவர்.

5. (க-ரை) ஓ அரசனே! இத்தேவ கங்கையும் உன்னால் பூலோகத்திற்கு வந்தாளாகையால், இவள் உனக்கு மூத்தபெண்ணாகி "பாகீரதி" யென்ற பெயருடன் பிரஸித்தி பெற்றிருக்கக் கடவள்.

6. (க-ரை) இத் தேவகங்கையானவள், ஸ்வர்க்கலோகம், பூலோகம், பாதா

*இப்புண்ணிய தேவ கங்கைக்கு, **त्रिपथगा** - யென்றும், **भागीरथी** - என்றும், **जाह्नवी** - என்றும் பெயர் பிரஸித்தியாயிற்று.

पितामहानां सर्वेषां त्वमत्र मनुजाधिप ।
कुरुष्व सलिलं राजन्प्रतिज्ञामपवर्जय ॥ 7 ॥

पूर्वकेण हि ते राजंस्तेनातियशसा तदा ।
धर्मिणां प्रवरेणापि नैष प्राप्तो मनोरथः ॥ 8 ॥

ஸம்பந்தமானது, (என்றும்) **विश्रुता** - பிரஸித்தையாக, (இருக்கக்கடவள்) **त्रीन्** - மூன்றுகளான, **पथः** - வழிகளை, **भावयन्ति** - பாய்ந்தது, **इति** - என்று, **ततः** - அதனால் (இந்நதி), **त्रिपथगा** - த்ருபதகையென, **स्मृता** - சொல்லப்பட்டது.

7. (ப-ரை) **मनुजाधिप** - ஹே ராஜசிரேஷ்டா! **त्वं** - நீ, **सर्वेषां** - ஸமஸ்தர்களான, **पितामहानां** - பாட்டன்மார்களுக்கு, **अत्र** - இந்த கங்கையின் ஜலத்தில், **सलिलं** - ஜலத்தை, (தர்ப்பணம்) **कुरुष्व** - செய், **राजन्** - ஹே அரசனே! **प्रतिज्ञां** - பிரதிக்கினையை, (கங்கையினால் ஸகரர்களை ரக்ஷிக்கிறேனென்கிற) **अपवर्जय** - விட்டுவிடு.

8. (ப-ரை) **राजन्** - ஹே பகீரதா! **अतियशसा** - மிகக் கீர்த்தியினால், **धर्मिणां** - தருமமுடையோருக்குள், **प्रवरेण** - சிறந்தவரும், **पूर्वकेण** - முன்னோருமான, **तेनापि** - அந்த ஸகரராலும், **तदा** - அப்பொழுது, **एषः** - இந்த, **मनोरथः** - கோரிக்கை, **न प्राप्तो हि** - அடையப்படவில்லையன்றோ.

ளம், இம்மூன்று உலகத்திலும் பாய்ந்தமையால், இவளுக்கு "திருபதகை" என்றும் பெயருளதாகக் கடவது.

7. (க-ரை) அரசர்களுக்குள் சிறந்தவனே! உன் பாட்டன்மார்களான அச்சகரபுத்திரர்களுக்கு இச்சிறந்த கங்கை ஜலத்தினால் நீ தர்ப்பணம்செய்து நீர்க்கடன்களைமுடித்து முன்புசெய்த பிரதிக்கினையைநிறைவேற்றி நீ ஸுகமாயிருப்பாயாக.

8. (க-ரை) ஹே பகீரதா! அக்கபில மாமுனிவரின் கோபாக்கினியினால் சாம்பல் குவியலாகச் செய்யப்பட்டிருந்தவர்களைக் குறித்து இப்பொழுது

त्रिपथगा - தேவலோகம், பூலோகம், பாதாள லோகம் ஆக இம்மூன்று உலகத்திலும் பிரவஹித்தபடியால், த்ருபதகா யென்றும்,

भागीरथी - பகீரத சக்கிரவர்த்தியைப் பின் தொடர்ந்து பூலோகத்திலும் பாதாள லோகத்திலும் சென்றமையால், பாகீரதி யென்றும்,

जाह्नवी - ஜன்ஹு மஹரிஷியின் கோபத்தால் விழுங்கப்பட்டு, பிறகு தேவர்களுடைய பிரார்த்தனையால் ஜன்ஹு மஹரிஷியால் தமது செவியினின்று வெளிவிட்டபடியால், ஜான்ஹவி யென்றும் பிரஸித்தி பெற்றனள்.

तथैवांशुमता तात लोकेऽप्रतिमतेजसा ।
गङ्गां प्रार्थयता नेतुं प्रतिज्ञा नापवर्जिता ॥ 9 ॥

राजर्षिणा गुणवता महर्षिसमतेजसा ।
मत्तुल्यतपसा चैव क्षत्रधर्मस्थितेन च ॥ 10 ॥

दिलीपेन महाभाग तव पित्रातितेजसा ।
पुनर्न शङ्किता नेतुं गङ्गां प्रार्थयतानघ ॥ 11 ॥

9. (ப-ரை) (हे) तात - அப்பா, (குழந்தாய்), तथैव - அப்படியே, लोके - உலகில், अप्रतिमतेजसा - நிகரற்ற புகழுடையவனும், गङ्गां - கங்கையை, आनेतुं - கொண்டுவருவதற்கு, प्रार्थयता - பிரார்த்திக்கப்பட்ட, अंशुमता - அம்சுமானனும், प्रतिज्ञा - (அந்த) சபதம், नापवर्जिता - அடையப்படவில்லை.

10-11. (ப-ரை) महाभाग - ஹே பாக்கியசாலியே, महर्षिसमतेजसा - மஹரிஷிக் கொப்பானவனும், राजर्षिणा - ராஜரிஷியும், गुणवता - குணமுடையவனும், मत्तुल्यतपसा चैव - எனக்கு ஸமமான தவத்தையுடையவனும், क्षत्रधर्मस्थितेन - ராஜ தருமத்திலிருப்பவனும், अतितेजसा - வெகு தேஜஸ்ஸுடையவனும், गङ्गां - கங்கையை, आनेतुं - கொண்டுவருவதற்கு, प्रार्थयता - பிரார்த்தியா நின்று மிருக்கின்ற, तव - உன்னுடைய, पित्रा - பிதாவான, (தகப்பனான) दिलीपेन च - திலீபனனும், (हे) अनघ - பாபமற்ற ஹே திலீபா ! नपुनः - शङ्किता - (இது) எண்ணப்படவில்லை.

உன்னால் செய்யப்பட்ட இக்காரியமானது உன்னுடைய முன்னோரான மிகக்கீர்த்தி வாய்ந்த அந்த ஸகர சக்கிரவர்த்தியினாலும், நடைபெறாமல் போயிற்றல்லவா ?

9. (க-ரை) ஹே குழந்தாய் பகீரதா ! அளவற்ற புகழ்பெற்றிருந்த அந்த அம்சுமானனும் இக்கங்கையை தேவலோகத்திலிருந்து பாதாளத்திற்குக் கொண்டு வந்து ஸகரபுத்திரர்களை கடேரச்செய்ய முயன்றும் பயனற்றதாகப் போயிற்றல் லவா ?

10-11. (க-ரை) வெகு பாக்கியசாலியான ஹே பகீரதா ! மஹரிஷிகளுக் கொப்பானவனும், ராஜரிஷியும், வெகு கீர்த்தியடைந்தவனும், தவப்புரிவதில் எனக்கு ஸமானவனுமான உன்னுடைய தகப்பனான அத்திலீப மஹாராஜனாலும் இக்கங்கையை பாதாளத்திற்குக் கொண்டுவந்து அச் சகரபுத்திரர்களை ஸ்வர்க்கத்திற் கனுப்புவதற்கு எண்ணப்பட வில்லையன்றோ ?

सा त्वया समतिक्रांता प्रतिज्ञा पुरुषर्षभ ।
प्राप्तोसि परमं लोके यशः परमसंमतम् ॥ 12 ॥

यच्च गङ्गावतरणं त्वया कृतमरिंदम ।
अनेन च भवान्प्राप्तो धर्मस्यायतनं महत् ॥ 13 ॥

प्लावयस्व त्वमात्मानं नरोत्तम सदोचिते ।
सलिले पुरुषव्याघ्र शुचिः पुण्यफलो भव ॥ 14 ॥

12. (ப-ரை) **पुरुषर्षभ** - ஹே நரசிரேஷ்டனே! **त्वया** - உன்னால், **सा** - அந்த, **प्रतिज्ञा** - சபதம், **समतिक्रांता** - நன்கு முடிக்கப்பட்டது. **लोके** - உலகில், **परमं** - சிறந்ததும், **परमसंमतम्** - வெகு சிலாக்கியமான, **यशः** - கீர்த்தியையும், **प्राप्तः** - அடைந்தவனாக, **असि** - ஆகின்றாய்.

13. (ப-ரை) (हे) **अरिंदम** - சத்துருக்களை யழிப்பவனே! **यत्** - எந்த, **गङ्गावतरणं** - கங்கை கீழ் இறங்குவது, (அதாவது தேவலோகத்திலிருந்து பூலோகம், பாதாள லோகம் இவ்விரண்டு உலகங்களுக்கும் வருவதை) **त्वया** - உன்னால், **कृतं** - செய்யப்பட்டது, **अनेन** - இதனால், **भवान्** - நீ, **धर्मस्य** - தருமத்தினுடைய, **महत्** - பெரிதான, **आयतनं** - பிரதிஷ்டையை, **प्राप्तः** - அடைந்தாய்.

14. (ப-ரை) **पुरुषव्याघ्र** - ஹே ஆண்சிங்கமே! **त्वं** - நீ, **आत्मानं** - தன்னை, **सदा** - எப்பொழுதும், **उचिते** - (ஸ்நாநம் செய்வதற்கு) தகுந்த, **सलिले** - ஜலத்தில், **प्लावयस्व** - ஸ்நாநம் செய்து கொள், **नरोत्तम** - ஹே நரசிரேஷ்டா! **शुचिः** - பரிசுத்தனாகவும், **पुण्यफलः** - புண்ணியத்தையே பலமாகவுடையவனாகவும், **भव** - இரு.

12. (க-ரை) ஹே நரசிரேஷ்டா! பாபமற்ற ஹே பகீரதா! உன்னுடைய முன்னோர்களாலும் நிறைவேறாத இப்பெரிய காரியத்தை நீ நன்குமுடித்து, அதாவது இச்சிறந்த கங்கையைக் கொண்டுவந்து உன்னுடைய முன்னோர்களை கடேற்றி வைத்து, உலகத்திற்கும் நன்மையைச்செய்து சிறந்த கீர்த்தியை யடைந்தவனாகின்றாய்.

13. (க-ரை) மஹாபராக்கிரமசாலியான ஹே பகீரதா! உன் முன்னோர்களாலும் நிறைவேற்ற முடியாமற்போன இக்கங்காவதரணத்தினால் நீ மிகப்புகழ் பெற்றவனாய், தருமத்தில் மிகுந்த பிரதிஷ்டையடைந்தவனாகக் கடவாய்.

14. (க-ரை) ஹே சிறந்த அரசனே! நரசிரேஷ்டா! எப்பொழுதும் ஸ்நா

पितामहानां सर्वेषां कुरुष्व सलिलक्रियाम् ।
स्वस्ति तेऽस्तु गमिष्यामि स्वं लोकं गम्यतां नृप ॥ 15 ॥
इत्येवमुक्त्वा देवेशः सर्वलोकपितामहः ।
यथागतं तथागच्छद्देवलोकं महायशाः ॥ 16 ॥
भगीरथोऽपि राजर्षिः कृत्वा सलिलमुत्तमम् ।
यथाक्रमं यथान्यायं सागराणां महायशाः ॥ 17 ॥
कृतोदकः शुची राजा स्वपुरं प्रविवेश ह ।
समृद्धार्थो नरश्रेष्ठ स्वराज्यं प्रशशास ह ॥ 18 ॥

15. (ப-ரை) **हे नृप** - ஹே அரசனே ! **पितामहानां** - (உன்) பாட்டன்மார்களான, **सर्वेषां** - அனைவருக்கும், **सलिलक्रियाम्** - (தர்ப்பணம்) ஜலத்தை, **कुरुष्व** - செய்யுவாய், **ते** - உனக்கு, **स्वस्ति** - மங்களம், **अस्तु** - உண்டாகட்டும், **स्वं** - என்னுடையதான, **लोकं** - உலகத்தை, (க்குறித்து) **गमिष्यामि** - போகிறேன், **गम्यतां** - (உன்னாலும் உன் தேசத்திற்கு) போகப்படட்டும்.

16. (ப-ரை) **महायशाः** - மிகக் கீர்த்தியுடையவரும், **सर्वलोकपितामहः** - ஸகல லோகங்களுக்கும் பாட்டனாரும், **देवेशः** - தேவர் கோனுமான, (ப்ருஹ்மதேவர்) **इति** - என்று, **एवं** - இவ்விதம், **उक्त्वा** - சொல்லி, **यथागतं** - எப்படி வந்தனரோ, **तथा** - அப்படியே, **देवलोकं** - ப்ருஹ்ம லோகத்தை, (க்குறித்து), **अगच्छत्** - சென்றனர்.

17-18. (ப-ரை) **महायशाः** - வெகு புகழுடையவனும், **राजर्षिः** - ராஜரிஷியு

நம் செய்வதற்கு யோக்கியமாயுள்ள இப் புண்ணிய கங்கையில் நீயும் ஸ்நாநம் செய்து அதனால் பரிசுத்தனாய் புண்ணியபலன்களையும் பெறுவாயாக.

15. (க-ரை) அரசனே ! உன் முன்னோர்களுக்கும் இச்சிறந்த கங்காஜலத்தினால் தர்ப்பணம்செய்து குறைதீர்த்து குலோத்தாரகனென எங்கும் மிகப்புகழ் பெற்று அயோத்திமாநகரம் சேருவாயாக. உனக்கு மங்களம் உண்டாகுக. இனி நான் எனது லோகத்திற்குப் போகின்றேன், யென்றனர்.

16. (க-ரை) இவ்வாறு ஸகல உலகங்களுக்கும் பாட்டனாகிய அப்ருஹ்மதேவர் அப்பகீரதனை அனுக்கிரஹித்து விட்டு எப்படிவந்தனரோ அப்படி தம் உலகமாகிய ப்ருஹ்மலோகத்தை அடைந்தனர்.

17-18. (க-ரை) பிறகு மிக்கபுகழ்பெற்றவனும், ராஜரிஷியுமான அப்பகீரத

प्रमुमोद च लोकस्तं नृपमासाद्य राघव ।
नष्टशोकः समृद्धार्थो बभूव विगतज्वरः ॥ 19 ॥

एष ते राम गङ्गाया विस्तरोऽभिहितो मया ।
स्वस्ति प्राप्नुहि भद्रं ते सन्ध्याकालोतिवर्तते ॥ 20 ॥

மான, **भगीरथोपि** - பகீரதனென்னும், **राजा** - அரசன், **शुची** - பரிசுத்தனுக, **सागराणां** - ஸகர புத்திரர்களுக்கு, **यथाक्रमं** - கிரமமாக, **यथान्यायं** - சாஸ்திரபிரகாரமாகவும், **उत्तमं** - சிரேஷ்டமான, **सलिलं** - ஜலத்தை, (தர்ப்பணம்), **कृत्वा** - செய்து, **नरश्रेष्ठ** - ஹே புருஷசிரேஷ்டனே ! **कृतोदकः** - செய்யப்பட்ட தர்ப்பண ஜலமுடையவனுக, **स्वपुरं** - தன் பட்டணத்தை, **प्रविवेश ह** - பிரவேசித்தனன், **समृद्धार्थः** - பெருகிய ஸம்பத் துடையவனுக, **स्वराज्यं** - தன் ராஜ்யத்தை, **प्रशशास ह** - பரிபாலித்தனன்.

19. (ப-ரை) **राघव** - ஹே ராமா ! **लोकः** - உலகம், **तं** - இந்த, **नृपं** - பகீரதனை, **आसाद्य** - (அரசனுக) அடைந்து, **प्रमुमोद च** - களித்தது, **नष्टशोकः** - போனதுக்க முடையதாகவும், **समृद्धार्थः** - நிறைந்த பிரயோஜனமுடையதாகவும், **विगतज्वरः** - போனபீடையை யுடையதாகவும், **बभूव** - ஆயிற்று.

20. (ப-ரை) **राम** - ஹே ராகவா ! **मया** - என்னுல், **गङ्गायाः** - கங்கையினுடைய, **एषः** - இந்த, **विस्तरः** - வரலாறு, **ते** - உனக்கு, **अभिहितः** சொல்லப்பட்டது, **स्वस्ति** - (நீ) மங்களத்தை, **प्राप्नुहि** - அடைவாயாக, **ते** - உனக்கு, **भद्रं** - மங்களம், (உண்டாகுக) **सन्ध्याकालः** - மாலைப்பொழுது, **अतिवर्तते** - தப்பிப் போகின்றது.

மன்னவன் அவ்வாறே அக்கங்கையில் நீராடி முறையே அச்சகர புத்திரர்களுக்கு, ஸ்ம்ருதி முதலான சாஸ்திரங்களிற் சொல்லியபடி குறைவில்லாமல் தர்ப்பணம் செய்து மிகவும் பரிசுத்தனுகி தன்னுடைய உத்தமமான நகரத்தை யடைந்து ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்து, நிறைபெற்ற மனமுடையவனுய் அவ்வயோத்திமா நகரத்தை அரசுபுரிந்து வந்தனன்.

19. (க-ரை) ஹே ரகுநந்தன ! அந்த உத்தம புருஷனை பகீரதனை, அரசனுக உலகங்களெல்லாம் அடைந்து, மனவருத்தங்களெல்லாம் தொலைந்து, தன தான்யங்களெல்லாம் நிறைந்து ஆனந்தங்கொண்டு, ஆரோக்கியம்பெற்று, அவ்வுத்தம மன்னவனைக் கொண்டாடின.

20. (க-ரை) ஹே ராமா! நீ கேட்டபடி இத் தேவகங்கை தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கும், இங்கிருந்து பாதாள லோகத்திற்கும் சென்ற எல்லா விருத்தாந்தத்தையும் விஸ்தாரமாக உரைத்தேன். உனக்கு மங்களம் உண்டாகுக. ஸந்தியாகாலம் கடந்துபோகின்றது. அனுஷ்டானம் செய்யவேண்டும், என்றனர்.

धन्यं यशस्यमायुष्यं पुत्र्यं स्वर्ग्यमतीव च ।
यः श्रावयति विप्रेषु क्षत्रियेष्वितरेषु च ॥ 21 ॥
प्रीयन्ते पितरस्तस्य प्रीयन्ते दैवतानि च ॥ 21½ ॥
इदमाख्यानमव्यग्रो गङ्गावतरणं शुभम् ।
यः शृणोति च काकुत्स्थ सर्वान्कामानवाप्नुयात् ॥ 22½ ॥
सर्वे पापाः प्रणश्यन्ति आयुः कीर्तिश्च वर्धते ॥ 23 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
चतुश्चत्वारिंशः सर्गः ॥ 44 ॥

21-21½. (ப-ரை) **विप्रेषु** - பிராம்மணரிடங்களிலும், **क्षत्रियेषु** - அரசரிடங்களிலும், **इतरेषु च** - இதரரிடங்களிலும், **यः** - எவன், **धन्यं** - தனத்தையளிப்பதும், **यशस्यं** - கீர்த்தியைக் கொடுப்பதும், **आयुष्यं** - ஆயுளைப் பெருக்குவதும், **पुत्र्यं**-புத்திர ஸந்தானம் உண்டாவதிலும், **अतीव** - மிகவும், **स्वर्ग्यं** - ஸ்வர்க்கத்தைத் தருவதுமான, **इदं** - இந்த, (கதையை), **श्रावयति** - கேட்பிப்பனோ, **तस्य** - அவனுடைய, **पितरः** தந்தைகள், **प्रीयन्ते** - ஸந்தோஷிப்பார்கள், **दैवतानि च** - தேவதைகளும், **प्रीयन्ते** - ஸந்தோஷிப்பார்கள்.

22½-23. (ப-ரை) **काकुत्स्थ** - ககுத்த வம்சத்திற் பிறந்த ஹே ராகவா! **यः** - எவன், **अव्यग्रः** - பராதீன மனமற்றவனாக, **इदं** - இந்த, **शुभं** - மங்களமானதும், **गङ्गावतरणं** - கங்கையின் அவதாரமுமான, **आख्यानं** - சரித்திரத்தை, **शृणोति** - கேழ்க்கின்றானோ, **सः** - அவன், **सर्वान्** - ஸமஸ்தங்களான, **कामान्** - கோரிக்கைகளையும், **अवाप्नुयात्** - அடைவன், **पापाः** - பாபங்கள், **सर्वे** - ஸகலமும், **प्रणश्यन्ति** - நன்கு அழிந்து விடும், **आयुः** - ஆயுளும், **कीर्तिश्च** - யசஸும், **वर्धते** - விருத்தியடையும்.

21-21½. (க-ரை) எவனொருவன் இப்புண்ணிய சரித்திரத்தை, பிராம்மணர்களும், அரசர்களும், இதரர்களும் கேழ்க்கும்படியும், மற்றொன்றில் மனம்செலுத்தாமல் ஊக்கத்துடன் சொல்லுகின்றானோ, எவனொருவன் கேட்கின்றானோ, அவர்களெல்லோரும், நன்மக்களை அடைவார்கள். அளவற்ற தனத்தையடைவார்கள். அதிக ஆயுளைப்பெறுவார்கள். அவர்களிடத்தில் பிதுரு தேவதைகளும், இதற தெய்வங்களும் மகிழ்கின்றன.

22½-23. (க-ரை) ஹே ரகுகுல திலகா! எவனொருவன் கங்காவதரணமென்னும் இத்திவ்ய சரித்திரத்தை, ஊக்கத்துடன் கூடின மனதுடன்கேட்கின்றானோ அவன் ஸர்வாபீஷ்டங்களையும் அடைவன். அவன் பாபங்களெல்லாம் தொலைந்துவிடும். ஆயுளும், கீர்த்தியும் மேன்மேலும் பெருகும், என்று விச்வாமித்திர மஹரிஷி கூறிமுடித்தனர்.

पञ्चचत्वारिंशः सर्गः ॥ 45 ॥

विश्वामित्रवचः श्रुत्वा राघवः सहलक्ष्मणः ।
विस्मयं परमं गत्वा विश्वामित्रमथाब्रवीत् ॥ 1 ॥

अत्यद्भुतमिदं ब्रह्मन्कथितं परमं त्वया ।
गङ्गावतरणं पुण्यं सागरस्यापि पूरणम् ॥ 2 ॥

तस्य सा शर्वरी सर्वा सह सौमित्रिणा तदा ।
जगाम चिन्तयानस्य विश्वामित्रकथां शुभाम् ॥ 3 ॥

1. (ப-ரை) **राघवः** - ஸ்ரீ ராகவன், **सहलक्ष्मणः** - லக்ஷ்மணனோடு கூட, **विश्वामित्रवचः** - விச்வாமித்திரரின் வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **परमं** - சிறந்த, **विस्मयं** - ஆச்சரியத்தை, **गत्वा** - அடைந்து, **अथ** - பிறகு, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, (க்குறித்து) **अब्रवीत्** - (பதில்) சொன்னார்.

2. (ப-ரை) **ब्रह्मन्** - ஓ பிராம்மணசிரேஷ்டரே! **त्वया** - உம்மால், **अत्यद्भुतं** - மிக்க ஆச்சரியகரமும், **पुण्यं** - பரிசுத்தமும், **परमं** - சிறந்ததுமான, **इदं** - இந்த, **गङ्गावतरणं** - கங்கையின் உற்பத்தியும், **सागरस्यापि** - ஸமுத்திரத்தினுடைய, அல்லது, **सागरस्यापि** - ஸகரபுத்திரர்களுடைய, **पूरणम् च** - வெட்டுவது முதலானவையால் வ்ருத்தியும், அல்லது தர்ப்பணாதிகளால் பூர்த்தியும், **कथितं** - சொல்லப்பட்டது.

3. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **शुभाम्** - மங்களகரமான. **विश्वामित्रकथां** - விச்வாமித்திரரால் சொல்லப்பட்ட கதையை, **सौमित्रिणा सह** - லக்ஷ்மணனோடுகூட, **चिन्तयानस्य** - சிந்தியாநிருக்கின்ற, **तस्य** - அந்த ராகவனுக்கு, **सा** - அந்த, **शर्वरी** - இரவு, **सर्वा** - முழுமையும், **जगाम** - (க்ஷணம்போல்) சென்றது.

1-2. (க-ரை) இங்ஙனம் விச்வாமித்திர மஹரிஷி மொழிந்த கங்கா வதரணத்தின் வரலாற்றைக் கேட்டு ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் இருவரும் மிக வியப்புற்று மீண்டும் அவ் விச்வாமித்திர மஹரிஷியை நோக்கி ஹே பிராம்மணோத்தமரே! நீர் சொன்ன இச்சிறந்த கங்காவதரண விருத்தாந்தத்தையும், ஸகரபுத்திரர்கள் ஸமுத்திரம் தோண்டினதையும், அப்புனிதமான கங்காஜலத்தினால் அப்பகீரத மன்னவன் பிதுருக்களுக்கு தர்ப்பணம் முதலான ஸத்கார்யங்களைச் செய்து அவர்கள் ஸ்வர்க்கலோகம் அடையும்படிசெய்ததுமான இவ்வற்புத கதைகளெல்லாம் எங்களால் நன்கு கேட்கப்பட்டன.

3. (க-ரை) இராம லக்ஷ்மணர்க ளிருவரும், மிகச்சிறந்ததும், பரிசுத்தமான

ततः प्रभाते विमले विश्वामित्रं महामुनिम् ।
उवाच राघवो वाक्यं कृताह्निकमरिंदमः ॥ ४ ॥
गता भगवती रात्रिः श्रोतव्यं परमं श्रुतम् ॥ ४½ ॥
क्षणभूतेव नौ रात्रिः संवृत्तेयं महातपः ।
इमां चिन्तयतः सर्वां निखिलेन कथां तव ॥ ५½ ॥

4. (ப-ரை) ततः - பிறகு, विमले - நிர்மலமான, प्रभाते - விடியற்காலத்தில், **अरिंदमः** - சத்துருக்களை யழிக்கத்தக்க, **राघवः** - ஸ்ரீ ராகவன், **कृताह्निकं**-செய்யப்பட்ட அனுஷ்டான முடையவரும், **महामुनिम्** - சிறந்த முனிவருமான, **विश्वामित्रं** – விச்வாமித்திரரை, (க்குறித்து) **वाक्यं** - வார்த்தையை, **उवाच** - சொன்னார்.

4½-5½. (ப-ரை) **महातपः** -சிறந்த தவமுடைய ஹே விச்வாமித்திரரே! **भगवती**- பூஜ்யமான, **रात्रिः गता** - இரவு கழிந்து, **परमं** - சிறந்ததும், **श्रोतव्यं** - கேட்கத்தகுந்ததும், **श्रुतम्** - கேட்கப்பட்டது, **तव** -உம்முடைய, **इमां कथां** -இந்த கதையை, **सर्वां** - ஸமஸ்தத்தையும், **निखिलेन** - முழுமையினாலே, **चिन्तयतः** - சிந்தித்துக் கொண்டிருக்கிற, **नौ** - எங்களுக்கு, **इयं-रात्रिः** - இந்த இரவு, **क्षणभूतेव** - நொடிப் பொழுது போல், **संवृत्ता** - ஆயிற்று.

தும், அற்புதமுமான, இக்கதையை நினைத்து நினைத்து யன்றிரவை ஒரு க்ஷணம்போல் கடக்கச் சென்றனர்.

4. (க-ரை) பிறகு, பொழுது விடிந்து ஸூர்யோதயமானவுடன் சத்ருக்களை வெல்லத்தக்க பராக்கிரமுடைய ஸ்ரீராம லக்ஷ்மணர்களிருவரும், நித்திரையொழிந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு; உட்கார்ந்துகொண்டிருந்த சிறந்த தபஸ்வியான அக்காதி நந்தனரைப் பணிந்து இவ்வார்த்தையைச் சொன்னார்கள்.

4½-5½. (க-ரை) ஹே தபோநிதே! ஸ்வாமி! தேவரீர் இனிதாகச்சொன்ன இந்த ஸத்கதா சிரவணத்தால் இன்றிரவை ஸுகமாகக் கடந்தோம் • ஆனந்தமாய் கேட்கத்தக்க இத்திவ்விய சரித்திரமும் கேட்கப்பட்டது. தேவரீர் மொழிந்த கங்காவதரண சரித்திரமானது வெகு அழகாயிருந்தமையால் அதை சிந்தித்துக் கொண்டிருக்கையில் எங்களுக்கு இன்றிரவு ஒருக்ஷணப் பொழுதுபோல் கழிந்தது.

तराम सरितां श्रेष्ठां पुण्यां त्रिपथगां नदीम् ।
नौरेषा हि सुखास्तीर्णा ऋषीणां पुण्यकर्मणाम् ॥ 6½ ॥

भगवन्तमिह प्राप्तं ज्ञात्वा त्वरितमागता ॥ 7 ॥

तस्य तद्वचनं श्रुत्वा राघवस्य महात्मनः ।
संतारं कारयामास सर्षिसङ्घः सराघवः ॥ 8 ॥

उत्तरं तीरमासाद्य संपूज्यर्षिगणं तदा ।
गङ्गाकूले निविष्टास्ते विशालां ददृशुः पुरीम् ॥ 9 ॥

6½-7. (ப-ரை) **भगवन्तं** - (மாஹாத்மியம் பொருந்திய) உம்மை, **इह** - இங்கு, **प्राप्तं** - வந்திருப்பதாக, **ज्ञात्वा** - அறிந்து, **पुण्यकर्मणाम्** - நற்செயலுடைய, **ऋषीणां** - ரிஷிகளுக்கு, **सुखास्तीर्णा** - எளிதாகத்தாண்டத்தக்க, **एषा** - இந்த, **नौः** - ஓடம், **त्वरितं** - சீக்கிரமாக, **आगता हि** - வந்திருக்கின்றதன்றோ, (ஆதலால்), **सरितां** - நதிகளும், **श्रेष्ठां** - சிறந்ததும், **पुण्यां** - பரிசுத்தமும், **नदीम्** -நதியுமான, **त्रिपथगां** - (இந்த) கங்கையை, **तराम** - தாண்டுவோம்.

8. (ப-ரை) **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **तस्य** - அந்த, **राघवस्य** - ராகவனுடைய, **तत् वचनं** - அவ்வார்த்தையை, **श्रुत्वा** - (விச்வாமித்திரர்) கேட்டு, **सर्षिसङ्घः** - ரிஷிக்கூட்டங்களோடும், **सराघवः** - இராகவனோடும், **संतारं** - தாண்டுவதை, **कारयामास** - செய்தனர்.

9. (ப-ரை) **उत्तरं** - (கங்கையின்) வடபுறமான, **तीरं** - கரையை, **आसाद्य** -

6½-7. (க-ரை) இங்குள்ள ரிஷிஜனங்களெல்லோரும், தேவரீர் இங்கு எழுந்தருளியிருப்பதையறிந்து, புண்ணியபுருஷர்களான மஹரிஷிகள் ஏறத்தக்க விசாலமாயுள்ள உத்தமமான ஓடத்தைக் கொண்டுவந்து காத்திருக்கின்றனர். ஆகையால் நாம் இதிலேறி இச்சிறந்த பரிசுத்தமான கங்கையைத் தாண்டி நடப்போமென்றுரைத்தனர்.

8. (க-ரை) மஹாத்துமாவாகிய ஸ்ரீராகவனுடைய இனிய சொற்களைச் செவியுற்ற அக் காதிநந்தனர் எழுந்து ஸ்ரீராம லக்ஷ்மணர்களோடும், மற்றரிஷிவர்க்கங்களோடும் அந்த ஓடத்திலேறி அப்புண்ணிய நதியான கங்கையைக்கடந்து அக்கரை சேர்ந்தனர்கள்.

9. (க-ரை) முனிச்ரேஷ்டரான விச்வாமித்திரர், மஹானுபாவர்களான

ततो मुनिवरस्तूर्णं जगाम सहराघवः ।
विशालां नगरीं रम्यां दिव्यां स्वर्गोपमां तदा ॥ 10 ॥

अथ रामो महाप्राज्ञो विश्वामित्रं महामुनिम् ।
पप्रच्छ प्राञ्जलिर्भूत्वा विशालामुत्तमां पुरीम् ॥ 11 ॥

அடைந்து, **तदा** - அப்பொழுது, **ऋषिगणं** - (ஓடம் ஓட்டிவந்த) முனிக்கூட்டத்தை, **संपूज्य** - நன்கு பூஜித்து, **ते** - அவ்விச்வாமித்திர, ராமலக்ஷ்மணர்கள், **गङ्गाकूले** - கங்கையின் கரைமேல், **निविष्टाः** - (சிறிது நேரம்) உட்கார்ந்தவர்களாக, **विशालां** - விசாலை யென்கின்ற, **पुरीम्** - பட்டணத்தை, **ददृशुः** - பார்த்தனர்.

10. (ப-ரை) **ततः** - பிறகு, **मुनिवरः** - முனிசிரேஷ்டரான, (விச்வாமித்திரர்), **सहराघवः** - ஸ்ரீ ராகவனேடுகூட, **तूर्णं** - சீக்கிரமாக, **तदा** - அப்பொழுது, **दिव्यां** - சிறந்ததும், **स्वर्गोपमां** - ஸ்வர்கத்திற்கு நிகரும், **रम्यां** - மனோஹரமுமான, **विशालां** - விசாலையென்கின்ற, **नगरीं** - பட்டணத்தை, (க்குறித்து), **जगाम** - சென்றனர்.

11. (ப-ரை) **अथ** - பிறகு, **महाप्राज्ञः** - மிக்க சிறந்தவரான, **रामः** - ராகவன், **प्राञ्जलिः** - கைகூப்பிக் கொண்டவராக, **भूत्वा** - ஆகி, **महामुनिम्** - மஹாரிஷியான, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, (க்குறித்து) **विशालां** - விசாலையென்கின்ற, **उत्तमां** - சிறந்த, **पुरीं** - பட்டணத்தை, (ப்பற்றி) **पप्रच्छ** - கேட்டனர்.

இராம லக்ஷ்மணர்கள், இவர்களெல்லோரும், அக்கங்கையைத் தாண்டி வடகரையைச் சேர்ந்து நதியைத்தாண்டுவதற்காக ஓடத்தைத் தள்ளிக்கொண்டுவந்த மஹரிஷிகளை நன்கு பூஜித்துவிட்டு, பிறகு அங்கே சிறிது நேரம் உட்கார்ந்திருந்து எதிரில் "விசாலை" யென்னும் ஓர் பட்டணத்தைக் கண்டனர்.

10. (க-ரை) பிறகு, எல்லாம் அறிந்தவரான அவ்விச்வாமித்திரர், ராமலக்ஷ்மணர்களோடு புறப்பட்டு, ஸகல ஐச்வர்யங்களும் நிறைந்து, அமராவதியை நிகர்த்த "விசாலை" என்னும் அந்நகரத்தை நோக்கிப்போய்ச் சேர்ந்தனர்.

11. (க-ரை) ஸகலமும் அறிந்தவர்களிற் சிறந்தவரான ஸ்ரீராகவன் கைகளைக் கூப்பிக்கொண்டு விச்வாமித்திர மஹரிஷியைப் பார்த்து, மஹாமுனிபுங்கவரே! இச் சிறந்த விசாலை நகரத்தின் மஹிமையை அருளிச்செய்யவேண்டும், என்று பின்வருமாறு கேட்டுக் கொண்டனர்.

कतरो राजवंशोऽयं विशालायां महामुने ।
श्रोतुमिच्छामि भद्रं ते परं कौतूहलं हि मे ॥ 12 ॥

तस्य तद्वचनं श्रुत्वा रामस्य मुनिपुङ्गवः ।
आख्यातुं तत्समारेभे विशालस्य पुरातनम् ॥ 13 ॥

श्रूयतां राम शक्रस्य कथां कथयतः शुभाम् ।
अस्मिन्देशे तु यद्वृत्तं तदपि शृणु राघव ॥ 14 ॥

12. (ப-ரை) **महामुने** - ஹே மாமுனிவரே! **विशालायां** - விசாலைநகரில், (இருக்கின்ற) **अयं** இந்த, **राजवंशः** - இராஜவம்சமானது, **कतरः** - எதைச் சேர்ந்தது? **श्रोतुं** - (அதை) கேட்க, **मे** - எனக்கு, **परं** - மிகுந்த, **कौतूहलं हि** - குதூஹலமன்றோ! (ஆதலால்) **इच्छामि** - விரும்புகின்றேன், **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக.

13. (ப-ரை) **मुनिपुङ्गवः** - முனிச்ரேஷ்டரான, (விச்வாமித்திரர்) **तस्य रामस्य** - அந்த ராகவனுடைய, **तत्** - **वचनं** - அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **विशालस्य** - விசாலை நகரத்தினுடைய, **तत्** - **पुरातनम्** - அந்த பூர்வகதையை, **आख्यातुं** - சொல்லுவதற்கு, **समारेभे** - ஆரம்பித்தனர்.

14. (ப-ரை) **राघव** - ரகுவம்சத்திலுதித்த, **राम** ஹே ராமா! **शक्रस्य** - இந்திரனுடைய, **शुभाम्** - **कथां** - மங்களகரமான கதையை, **कथयतः** - சொல்லுகின்ற, (என்னிடத்திலிருந்து), **श्रूयतां** - கேட்கப் படட்டும், **अस्मिन्** - இந்த, **देशे** - தேசத்தில், **यत् वृत्तं** - எந்தவரலாறோ, **तदपि** - அதையும் - **शृणु** - கேட்கவும்.

12. (க-ரை) ஹே மஹரிஷியே! இப்பட்டணம் யாருடையது? இவ்விசாலை நகரில்வாஸம் செய்யும் மன்னவர் குலம்யாது? அம் மன்னவர் எந்த வம்சத்திற் பிறந்தவர்? இவைகளை யெல்லாம்கேட்க என்மனம் ஆவலுறுகின்றது, என்று பிரார்த்தித்து, உமக்கு மங்களமுண்டாகட்டும் என்றனர்.

13. (க-ரை) இங்ஙனம் அருளிச்செய்த ஸ்ரீ ரகுகுல திலகரான ஸ்ரீராகவனுடைய அவ்வினிய சொற்களைச்செவியுற்ற அவ்விச்வாமித்திர மஹரிஷி அந்த விசாலை நகரத்தைப் பற்றி முன்பு நடந்த கதையைச் சொல்லத்துடங்கினர்.

14. (க-ரை) ஹே தசரதகுமாரா! ராமா! இப்பட்டணத்தில் யாது நடந்ததோ அவ்வரலாற்றையும், இதைத்தொடர்ந்த இந்திரனது விருத்தாந்தத்தையும் நான் சொல்லிக்கொண்டுவருகிறேன். ஊக்கத்துடன் அதனை நீ கேட்பாயாக.

पूर्वं कृतयुगे राम दितेः पुत्रा महाबलाः ।
अदितेश्च महाभाग वीर्यवन्तः सुधार्मिकाः ॥ 15 ॥

ततस्तेषां नरश्रेष्ठ बुद्धिरासीन्महात्मनाम् ।
अमरा अजराश्चैव कथं स्याम निरामयाः ॥ 16 ॥

तेषां चिन्तयतां राम बुद्धिरासीन्महात्मनाम् ।
क्षीरोदमथनं कृत्वा रसं प्राप्स्याम तत्र वै ॥ 17 ॥

15. (ப-ரை) **राम** - ஹே ராமா ! **पूर्वं** - முன்பு, **कृतयुगे** - க்ருதயுகத்தில், **दितेः** - திதியினுடைய, **पुत्राः** - புத்திரர்கள், **महाबलाः** - வெகு பலமுடையவர்களாக, (இருந்தனர்), (हे) **महाभाग** - மிகுந்த பாக்கிய முடையோனே ! **अदितेश्च** - அதிதியினுடைய, (பிள்ளைகளும்) **वीर्यवन्तः** - பராக்கிரம முடையோர்களாகவும், **सुधार्मिकाः**- வெகு தர்ம முடையோர்களாகவும், (இருந்தனர்).

16. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே புருஷோத்தமா ! **ततः** - பிறகு, **महात्मनाम्** - சிறந்த ஸ்வபாவமுடைய, **तेषां** - அப்பிள்ளைகளுக்கு, **अमराः** - சாவில்லாதவர்களாகவும், **अजराः** - கிழத்தனமற்றவர்களாகவும், **निरामयाश्चैव** - வியாதியற்றவர்களாகவும், **कथं** - எப்படி, **स्याम** - ஆகுவோம் ? (என்கிற) **बुद्धिः** - புத்தியானது, **आसीत्** - உண்டாயிற்று.

17. (ப-ரை) **राम** - ஹே ராகவா ! **चिन्तयतां** - (இப்படி) ஆலோசித்துக் கொண்டிருக்கின்ற, **महात्मनां** - சிறந்த புத்தியுடைய, **तेषां** - அவ்வதிதி புத்திரர்

15. (க-ரை) ஹே மஹானுபாவனே ராமா ! முன்பு க்ருதயுகத்தில் திதியினுடைய புத்திரர்கள் வெகு பராக்கிரமமுடையவர்களாக மாத்திரம் இருந்தனர். அதிதியினுடைய புத்திரர்கள் மிகவும் பராக்கிரமமுடையவர்களாகவும், தர்மம் தவறாமல் நடப்பவர்களுமாகவுமிருந்தனர்.

16. (க-ரை) ஹே புருஷோத்தமா ! பின்பு திதிபுத்திரர்களும், அதிதிபுத்திரர்களும், பிணி, பசி, மூப்புத்துன்பம், சாவு இவை முதலான குறைகளொன்றுமில்லாமல் நாமெப்படி உயிருடன் வாழ்வோமென்ற ஓரெண்ணம் அவர்களுக்கு உண்டாயிற்று.

17. (க-ரை) ஹே ராகவா ! இவ்வாறு ஆலோசித்துக்கொண்டிருக்கையில் அளவற்ற பல பராக்கிரமமும் பொருந்திய அவ்வீரர்களுக்கு, நாம் திருப்பாற்

ततो निश्चित्य मथनं योक्त्रं कृत्वा च वासुकिम् ।
मन्थानं मन्दरं कृत्वा ममन्थुरमितौजसः ॥ 18 ॥

[अथ वर्षसहस्रेण योक्त्रं सर्पशिरांसि च ।
वमन्त्यतिविषं तत्र ददंशुर्दशनैः शिलाः ॥ 1 ॥

उत्पपाताग्निसंकाशं हालाहलमहाविषम् ।
तेन दग्धं जगत्सर्वं सदेवासुरमानुषम् ॥ 2 ॥

களுக்கு, **क्षीरोदमथनं** - பாற்கடலைக் கடைவதை, **कृत्वा** செய்து, **तत्र वै** -அதில்தானே, **रसं** - அமிருதத்தை, **प्राप्स्याम** - அடைவோம், (என்கின்ற), **बुद्धिः** - புத்தியானது, **आसीत्** - உண்டாயிற்று.

18. (ப-ரை) **ततः** - பிறகு, **मथनं** - கடைவதை, **निश्चित्य** - நிச்சயம் செய்து, **वासुकिम्** - (ஸர்ப்பராஜனாகிய) வாஸுகியை, **योक्त्रं च** -(கடைகிற) கயிறாகவும், **कृत्वा** - செய்து, **मन्दरं** - மந்தர பர்வதத்தை, **मन्थानं** - மத்தாகவும், **कृत्वा**- செய்து கொண்டு, **अमितौजसः** - அளவற்ற பலங்கொண்ட, (அவர்கள்) **ममन्थुः** - கடைந்தனர்.

[1. (ப-ரை) **अथ** - பிறகு, **तत्र** - அவ்விதம் கடைவதில், **वर्षसहस्रेण** - வருஷத்தின் ஆயிரத்தினால், **योक्त्रं सर्पशिरांसि** - கயிறாகிற ஸர்ப்பத்தின் தலைகள், **अतिविषं** - கொடும் விஷத்தை, **वमन्ति** - கக்கிக்கொண்டும், **दशनैः** - பற்களால், **शिलाः** - **च** - கற்களையும், **ददंशुः** - கடித்தன.

2. (ப-ரை) **अग्निसंकाशं** - அக்கினிக்கு நிகரான, **हालाहलमहाविषम्** - ஹாலாஹலமென்கிற பெரும் விஷம், **उत्पपात** - கிளம்பிற்று, **तेन** - அதனால், **सदेवासुरमानुषम्** -

கடலைக்கடைந்து அதினின்று அமிருதமெழச்செய்து, அதனைப் பருகவேண்டும், என்று புத்தி உண்டாயிற்று.

18. (க-ரை) அவ்வாறு நிச்சயித்து பிறகு ஸர்ப்பங்களுக்கு அரசனான வாஸுகியைக் கயிறாகக் கொண்டு மந்தர பருவதத்தை மத்தாக நாட்டி பாற்கடலைக் கடையத் தொடங்கினர்.

[1-2. (க-ரை) இவ்விதம் அச்சுரர்கள் ஆயிர ஆண்டுகள் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது அவ்வாஸுகையின் உடல் மிகவருந்தித் தளர்ந்தமையால் பற்களால் கற்களைக்கடித்து, தலைகளால் விஷத்தைக் கக்கும்போது

अथ देवा महादेवं शङ्करं शरणार्थिनः ।
जग्मुः पशुपतिं रुद्रं त्राहि त्राहीति तुष्टुवुः ॥ 3 ॥
एवमुक्तस्ततो देवैर्देवदेवेश्वरः प्रभुः ।
प्रादुरासीत्ततोऽत्रैव शङ्खचक्रधरो हरिः ॥ 4 ॥
उवाचैनं स्मितं कृत्वा रुद्रं शूलभृतं हरिः ।
दैवतैर्मथ्यमाने तु यत्पूर्वं समुपस्थितम् ॥ 5 ॥

தேவர், அஸுரர், மனிதர் இவர்களோடு கூட, **जगत्सर्वं** - உலகம் முழுவதும், **दग्धं** - தஹிக்கப்பட்டது, அல்லது கொளுத்தப்பட்டது.

3. (ப-ரை) **अथ** - பிறகு, **देवाः** - தேவர்கள், **शरणार्थिनः** - சரணம் யாசிப்பவர்களாக, **शङ्करं** - ஸுகத்தைச் செய்கின்ற, **महादेवं** - பசுபதியான பரமசிவனை, **जग्मुः** - அடைந்தனர், **पशुपतिं रुद्रं** - பசுபதியான ருத்திரனை, **त्राहि त्राहि इति** - ரக்ஷி, ரக்ஷி யென்று, **तुष्टुवुः** - ஸ்தோத்திரம் செய்தனர்.

4. (ப-ரை) **ततः** பிறகு, **देवैः** - தேவர்களால், **प्रभुः** - லோகநாயகனும், **देवदेवेश्वरः** - தேவதைகளுக்குத் தலைவனும், பதியுமான பரமசிவன், **एवं** - இப்படி, **उक्तः** - சொல்லப்பட்டனர், **ततः** - பிறகு, **अत्रैव** - அங்கேயே, **शङ्खचक्रधरः** - சங்கு, சக்கிரம் முதலிய ஆயுதங்களைத் தரித்த, **हरिः** - விஷ்ணு, **प्रादुरासीत्** - தோன்றினார்.

5-6. (ப-ரை) **हरिः** - மஹாவிஷ்ணு, **शूलभृतं** - சூலத்தைப் பிடித்திருக்கின்ற,

நெருப்புப்போல் எரிந்துகொண்டிருக்கின்ற ஹாலாஹலமென்னும் கொடிய விஷம் மேலே கிளம்பிற்று. அதனால் தேவர்கள், அஸுரர்கள். மனுஷ்யர்கள் கூடிய உலகங்களெல்லாம் பற்றி எரியச் செய்தது.

3. (க-ரை) இவ்வாறு தோன்றிய அக்கொடிய ஹாலாஹல விஷத்தை, தேவர்கள் ஸஹிக்கமுடியாதவர்களாய், தேவர்களில் பெருமை பெற்றவரும், எல்லோருக்கும் ஆனந்தத்தை விளைவிப்பவருமான பரமசிவனைத் தஞ்சமடைந்து (அதாவது சரணமடைந்து), எங்களைக் காப்பாற்ற வேண்டும், யென்று ஸ்தோத்திரம் செய்தனர்.

4. (க-ரை) அப்பொழுது, உமாபதியாகிய அப்பரமசிவன் இருக்குமிடத்தில் திருவாழி, பாஞ்ச சன்னியங்களைக் கையிலேந்திய ஸர்வலோக சரண்யனான ஹரி பிரஸன்னமானார்.

5-6. (க-ரை) மஹா விஷ்ணு அவ்விதம் பிரஸன்னராகிப் புன்சிரிப்

तत्त्वदीयं सुरश्रेष्ठ सुराणामग्रजोऽसि यत् ।
अग्रपूजामिमां मत्वा गृहाणेदं विषं प्रभो ॥ 6 ॥

इत्युक्त्वा च सुरश्रेष्ठस्तत्रैवान्तरधीयत ।
देवतानां भयं दृष्ट्वा श्रुत्वा वाक्यं तु शार्ङ्गिणः ॥ 7 ॥

हालाहलविषं घोरं स जग्राहामृतोपमम् ।
देवान्विसृज्य देवेशो जगाम भगवान्हरः ॥ 8 ॥

एनं - இந்த, **रुद्रं** - ருத்ரனைக்குறித்து, **स्मितं** - புன் சிறிப்பை, **कृत्वा** - செய்து, **उवाच** - சொன்னார், **सुरश्रेष्ठ** - தேவர்களுக்குள் சிறந்தவரான ஹே ருத்திரனே! **यत्** - எக்காரணத்தால், **त्वं** - நீ, **सुराणां** - தேவர்களுக்குள், **अग्रजः** - முதல்வனாக, **असि** - ஆகின்றாயோ, **देवतैः** - (அக்காரணத்தினால்) தேவர்களால், **मथ्यमाने तु** - கடைந்து வருகையில், **यत्** - எது, **पूर्वं** - முன்னதாக, **समुपस्थितं** - உண்டாயிற்றோ, **तत्** - அது, **त्वदीयं हि** - உம்முடையதல்லவோ, **प्रभो** - ஹே தேவாதிபதியே! **इमां** - இதை, **अग्रपूजां** - முதல் பூஜையாக, **मत्वा** - எண்ணி, **इदं** - இந்த, **विषं** - விஷத்தை, **गृहाण** - கிரஹித்துக்கொள்ளும், (என்றனர்.)

7-8. (ப-ரை) **सुरश्रेष्ठः च** - தேவதைகளுக்குள் சிரேஷ்டரான, (அம்மஹா விஷ்ணு) **इति उक्त्वा** - இவ்வாறு கூறி, **तत्रैव** - அவ்விடத்திலேயே, **अन्तरधीयत** - அந்தர்தானத்தையடைந்தனர், அதாவது மறைந்தனர். **सः** - அந்த பரமசிவன், **देवतानां** - தேவர்களின், **भयं** - பயத்தை, **दृष्ट्वा** - பார்த்து, **शार्ङ्गिणः** - ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய, **वाक्यं** - வார்த்தையை, **श्रुत्वा तु** - கேட்டும், **घोरं** - பயங்கரமான, **हालाहलविषं** - ஹாலாஹலமென்ற விஷத்தை, **अमृतोपमम्** - அமிருதம் போலிருக்கும்படி, **जग्राह** - கிரஹித்தனர், **भगवान्** - பூஜ்யரும், **देवेशः** - தேவாதிபதியுமான, **हरः** - பரமசிவன், **देवान्** - தேவர்களை, **विसृज्य** - விட்டு, **जगाम** - சென்றார்.

புண்டு சூலபாணியாகிய அப்பரமசிவனைக்கண்டு, ஹே தேவாதிபதியே! ஹே பசுபதியே! நீர் தேவர்களுக்கெல்லாம் முதலில் பிறந்தவர், ஆனதுபற்றி இப்பாற்கடலில் முதலில் தோன்றிய விஷத்தை உமக்கு அக்ரபூஜையாக நினைத்து அங்கீகரிப்பீராக, வென்று கூறினார்.

7-8. (க-ரை) இவ்வாறு கூறிவிட்டு அம்மஹாவிஷ்ணு அந்தர்தானத்தையடையவே, உடனே மிக்க மஹிமை பொருந்திய அப்பரமசிவனும், அவ்வச்சுதனுடைய வார்த்தையைக் கேட்டு தேவர்களுக்குண்டான பயத்தைப் பார்த்து,

ततो देवासुराः सर्वे ममन्थू रघुनन्दन ।
प्रविवेशाथ पातालं मन्थानः पर्वतोऽनघ || 9 ||
ततो देवाः सगन्धर्वास्तुष्टुवुर्मधुसूदनम् ।
त्वं गतिः सर्वभूतानां विशेषेण दिवौकसाम् || 10 ||
पालयास्मान्महाबाहो गिरिमुद्धर्तुमर्हसि || || 10½ ||

9. (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா ! **ततः** - பிறகு, **देवासुराः** - தேவர்களும், **அஸுரர்களும்**, **सर्वे** - எல்லோரும், **ममन्थुः** - கடைந்தனர், **अनघ** - ஹே பாபமற்றவனே ! **अथ** - பிறகு, **मन्थानः** - மத்தான, **पर्वतः** - (மந்தர) பர்வதம், **पातालं** - பாதாலத்தை, **प्रविवेश** - அடைந்தது.

10-10½. (ப-ரை) **ततः** - பிறகு, **देवाः** - தேவர்கள், **सगन्धर्वाः** - கந்தர்வரோடு கூட, **मधुसूदनम्** - ஸ்ரீமந்நாராயணனை, **तुष्टुवुः** - ஸ்தோத்திரம் செய்தனர், **महाबाहो** - பெருத்த தோள்களுடையோனே! (ஹே மஹாவிஷ்ணுவே) **सर्वभूतानां** - ஸகல பிராணிகளுக்கும், **त्वं** - நீர், **गतिः** - தஞ்சன், **दिवौकसाम्** - தேவர்களான, (எங்களுக்கு) **विशेषेण**-விசேஷமாகத் தஞ்சமாகின்றீர். **अस्मान्** - (ஆதலால்) எங்களை, **पालय** - ரக்ஷிக்க வேண்டும், **गिरिः** - (முழுகிப்போன) பர்வதத்தை, **उद्धर्तुं** - உயர எடுக்க, **अर्हसि** - (நீர்) யோக்யராக ஆகிறீர்.

அக்கொடிய பயங்கரமான ஹாலாஹல விஷத்தை அமுதம் போலுண்டு, தேவர்களுக்குண்டான அப்பயத்தினின்று விடுவித்து விட்டு, தமதிருப்பிடமான கைலாஸகிரிக்கு எழுந்தருளினார்.

9. (க-ரை) தேவர்களும், அஸுரர்களும், முன்போல் அப்பாற்கடலை மீளவும் கடையவாரம்பிக்கையில், மத்தான அம்மந்தர பர்வதம் பாதாளத்தில் அழுந்தி முழுகி விட்டது.

10-10½. (க-ரை) தேவர், கந்தருவர் முதலிய எல்லா தேவர்களும் ஸ்ரீ மதுஸூதனனைத்தவிர நமக்கொருவரும் ரக்ஷகரல்லர் என்பதை நன்குணர்ந்து இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, ஹே வாஸுதேவா ! பல்லாண்டு பாடும்படியான திரண்டு உருண்ட நீண்ட திண்டோளுடைய ஹே மணிவண்ணா ! ஸகல ஜகத்திற்கும் தேவரீரன்றோ தஞ்சம். இப்படிக் காக்க தேவரீருக்க எங்களுக்கு இப்படி பஞ்சமும் வரலாகுமோ ? அடியோங்களிடத்தில் மிகுந்த அருளுடையீரல்லீரோ? இம்மந்தர பர்வதமானது, பாற் கடலில் மூழ்கிக் கிடப்பதை உயரவெடுத்து அடியோங்களை ரக்ஷித்தருளவேணும், என்று ஸ்தோத்திரம் செய்யலானார்.

इति श्रुत्वा *हृषीकेशः कामठं रूपमास्थितः || 11 ||
पर्वतं पृष्ठतः कृत्वा शिश्ये तत्रोदधौ हरिः || 11½ ||

पर्वताग्रं तु लोकात्मा हस्तेनाक्रम्य केशवः
देवानां मध्यतः स्थित्वा ममन्थ पुरुषोत्तमः || 12½ ||]

अथ वर्षसहस्रेण सदण्डः सकमण्डलुः ।
पूर्वं धन्वन्तरिर्नाम अप्सराश्च सुवर्चसः || 19 ||

11-11½. (ப-ரை) **हृषीकेशः** - இந்திரிய நியந்தாவான, **हरिः** - மஹாவிஷ்ணு, **इति** - இவ்விதம், **श्रुत्वा** - (சொன்னதைக்) கேட்டு, **कामठं** - ஆமைஸம்பந்தமான, **रूपं** - உருவத்தை, **आस्थितः** - அடைந்து, **पर्वतं** - மலையை, **पृष्ठतः** - பின்பாக, **कृत्वा** - செய்து, **तत्र** அங்கு, **उदधौ** - கடலில், **शिश्ये** - படுத்தனர்.

12½. (ப-ரை) **लोकात्मा** - உலகத்தை சரீரமாயுடையவரும், **पुरुषोत्तमः** - புருஷ சிரேஷ்டருமான, **केशवः** - ஸ்ரீ மஹாவிஷ்ணு, **पर्वताग्रं तु** - மலையின் நுனியை மாத்திரம், **हस्तेनाक्रम्य** - கையினால் பிடித்து, **देवानां** - தேவர்களுடைய, **मध्यतः** - நடுவில், **स्थित्वा** - இருந்து, **ममन्थ** - கடைந்தனர்.]

19. (ப-ரை) **अथ** - பிறகு, **वर्षसहस्रेण** - வருஷத்திரைாயிரங்களால், **सदण्डः** - தெண்டத்தோடும், **सकमण्डलुः** - கமண்டலத்தோடுங்கூட, **धन्वन्तरिर्नाम** - தன்வந்தரியென்று பெயருடையவர், **पूर्वं** - முன்பு, அதாவது முதலில் (உண்டானார்) **सुवर्चसः** - நற்காந்தியுடைய, **अप्सराश्च** - அப்ஸரஸுக்களும், (உண்டாயினர்).

11-12. (க-ரை) உடனே புலன்களுக்குப் பதியும், க்லேசத்தை யொழிக்கத் தக்கவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு, ஆச்ருத ஸம்ரக்ஷகராகையால் அவ்வானவர்களுடைய பிரார்த்தனைக் கிசைந்து, ஆமையுருவங் கொண்டு, அப்பாற்கடலிற் படுத்து, அம்மந்தர பர்வதத்தை, தம்முதுகிற் தாங்கி, அப்புருஷோத்தமன் மற்றொரு உருவமெடுத்து அம்மலையைக் கிளம்பவொட்டாமல் தமது திருக்கரத்தினால் அதன் சிகரத்தைப்பற்றித் தாமும் அவர்களோடு கூடக் கலந்து உறைந்து கடைந்தனர்.]

19. (க-ரை) இவ்வாறு கடைகையில் ஆயிரம் ஆண்டுகள் சென்றபின்பு அதிலிருந்து முதலில் தண்டபாணியாய், கமண்டலுவைக் கையில் தரித்து "தந்

* **हृषीकेशः : हृषीक - ईशः - हृषीकेशः** - அதாவது **हृषीक** - என்றால் இந்திரியங்கள், **ईशः** - என்றால் அவைகளை யடக்கித் தன் வசமாகச் செய்பவனென்று பொருள்.

अप्सु निर्मथनादेव रसस्तस्माद्वरस्त्रियः ।
*उत्पेतुर्मनुजश्रेष्ठ तस्मादप्सरसोऽभवन् ॥ 20 ॥

षष्टिः कोट्योऽभवंस्तासामप्सराणां सुवर्चसाम् ।
असङ्ख्येयास्तु काकुत्स्थ यास्तासां परिचारिकाः ॥ 21 ॥

20. (ப-ரை) **मनुजश्रेष्ठ** - ஹே மனிதசிரேஷ்டனே! **यत्** - எந்தக் காரணத்தினால், **निर्मथनात्** - கடைவதால், **अप्सु** - ஜலத்தில், (பாலில்), **रसः** - (எந்த) ரஸம். (உண்டாயிற்றோ) **तस्मात्** - (அந்த) ரஸத்திலிருந்து, **वरस्त्रियः** - உத்தம ஸ்திரீகள், **उत्पेतुः** - உண்டானார்களோ, **तस्मात्** - அக்காரணத்தால், **अप्सरसः** - (அவர்கள்) அப்ஸரஸுக்களாக, **अभवन्** - ஆனார்கள்.

21. (ப-ரை) **सुवर्चसाम्** - நல்ல காந்தியுடைய, **अप्सराणां** - அந்த அப்ஸரஸுக்களுடைய, **षष्टिः कोट्यः** - அறுபது கோடிகள், **अभवन्** - உண்டாயிற்று! **काकुत्स्थ** - ஹே ராகவா! **तासां** - அந்த (ப்ரதான) அப்ஸர ஸ்திரீகளுடைய, **याः** - எவர்கள், **परिचारिकाः** - ஊழிய ஸ்திரீகளோ, **असङ्ख्येयः** - (அவர்கள்) கணக்கில்லாதவர்கள்.

வந்தரி" யெனப் பெயர்பெற்றவர் தோன்றினர். பின்பு அழகான ஒளியுடைய "அப்ஸரஸ்" ஸ்திரீகளுமுண்டானார்கள்.

20. (க-ரை) ஹே மனித சிரேஷ்டா! அப்பாற்கடலைக் கடையும் பொழுது அதினின்றும் ஒரு ரஸம் உண்டாக, அந்த ரஸத்தினின்றும் வெளிவந்தவர்களாகையால், அவர்களுக்கு "அப்ஸரஸ்" என்கின்ற காரணப் பெயருண்டாயிற்று.

21. (க-ரை) ஹே ராகவா! கேளும், அழகான உருவமுள்ள அந்த அப்ஸர ஸ்திரீகள் ஒருவரல்ல, இருவரல்ல, அறுபது கோடிக் கணக்கிற்பட்டவர். இவ்வப்ஸர ஸ்திரீகளுக்குப் பணிவிடை செய்வதற்காகவுண்டான வேலைக்காரிகள் இவ்வளவினரென்று கணக்கிடத் தரமன்று.

***अप्सरस्** - **अप्** - என்றால் ஜலம். இங்கு பாற்கடலின் பாலைச் சொல்லுகிறது. அதினின்றுமுண்டான ரஸம் **अप्रसं** - அதினின்று பிறந்தவர்கள் **अप्सरस्** என்னும் ஸ்திரீகள், **अप् · रसः** - **अप्रसः** என்றுரைக்கவேண்டியிருக்க, ரஸ சப்தம், "**पृषोदरादीनि यथोपदिष्टम्**" - என்கின்ற வ்யாகரண ஸூத்திரத்தின்படி **सरस्** - என்று மாறிற்று. ஆனதுபற்றி **अप्सरस्** - என்று காரணப்பெயராயிருக்கின்றது.

न ताः स्म प्रतिगृह्णन्ति सर्वे ते देवदानवाः ।
अप्रतिग्रहणात्ताश्च सर्वाः साधारणाः स्मृताः ॥ 22 ॥

वरुणस्य ततः कन्या वारुणी रघुनन्दन ।
उत्पपात महाभागा मार्गमाणा परिग्रहम् ॥ 23 ॥

दितेः पुत्रा न तां राम जगृहुर्वरुणात्मजाम्
अदितेस्तु सुता वीर जगृहुस्तामनिन्दिताम् ॥ 24 ॥

22. (ப-ரை) **ते** - அந்த, **देवदानवाः**-தேவாஸுரர்கள், **सर्वे** - எல்லோரும், **ताः**- அவ்வப்ஸர ஸ்திரீகளை, **न प्रतिगृह्णन्तिस्म**- கிரஹிக்காமற் போய்விட்டனர், **अप्रतिग्रहणात्**- அங்கீகரிக்காமற் போனபடியால், **ताः** - அவர்கள், **सर्वाः** - யாவரும், **साधारणाः** - விலையாதராக, **स्मृताः** - சொல்லப்பட்டனர்.

23. (ப-ரை) **रघुनन्दन** - ஹேராகவா! **ततः** - பிறகு, **महाभागा** - வெகு பாக்கிய முடையவளும், **वरुणस्य** - வருணனுக்கு, **कन्या** - புத்திரியும், **वारुणी** - வாருணியென்பவள், **परिग्रहं** - (தன்னை) மணம் புரிவோனை, **मार्गमाणा** - தேடிக்கொண்டு, **उत्पपात** - கிளம்பினள்.

24. (ப-ரை) **राम** - ஹேராகவா! **दितेः** - திதியினுடைய, **पुत्राः** - பிள்ளைகள், **तां** - அந்த, **वरुणात्मजां** - வாருணியை, **न जगृहुः**-கிரஹிக்கவில்லை. **वीर** - ஹே வீரனே! **अदितेः** - அதிதியினுடைய, **सुताः तु** - பிள்ளைகளோ வெனில், **अनिन्दितां** - நிந்திக்கப் படாதவளான, **तां** - அப்பெண்ணை, (வாருணியை) **जगृहुः** - அங்கீகரித்தனர்.

22. (க-ரை) அவ்வப்ஸர ஸ்திரீகள் தங்களுக்குப் பதியாரென்று விசாரமற்றிருந்தமையால் தேவர்களும், அஸுரர்களும் எவரும் அவ்வப்ஸரஸ்திரீகளை விதிப்படி மணஞ்செய்து கொள்ளவில்லை. ஆனதுபற்றி அவ்வப்ஸரஸ்திரீகளெல்லோரும் பொதுமகளென்றும், வேசிகளென்றும் கியாதி பெற்றனர்.

23-24. (க-ரை) அதன்பிறகு, ஹே ராகவா! ஸுரைகளுக்கரசும், வருணனுடைய புத்திரியுமாகிய மஹா பாக்கியம் பொருந்திய வாருணியெனும் வநிதை உண்டாய், மணஞ்செய்து கொள்வதில் விருப்பமுள்ளவளாயிருக்கையில் திதிகுமாரர்களாகிய அத்தானவர்கள் அவ்வாருணியை விரும்பவில்லை. ஹே ராமா! அதிதி புத்திரர்களாகிய தேவதைகள் மாத்திரம் தோஷமொன்றுமில்லாது விளங்கிய அவ்வாருணியை அங்கீகரித்தனர். (ஸுரர்கள்—அதிதிபுத்திரர்கள்.)

असुरास्तेन दैतेयाः सुरास्तेनादितेः सुताः ।
हृष्टाः प्रमुदिताश्चासन्वारुणीग्रहणात्सुराः ॥ 25 ॥
उच्चैःश्रवा हयश्रेष्ठो मणिरत्नं च कौस्तुभम् ।
उदतिष्ठन्नरश्रेष्ठ तथैवामृतमुत्तमम् ॥ 26 ॥
अथ तस्य कृते राम महानासीत्कुलक्षयः ।
अदितेस्तु ततः पुत्रा दितेः पुत्रानसूदयन् ॥ 27 ॥

25. (ப-ரை) **तेन** - அவ்வாருணியைக் கைப்பற்றுமற் போனபடியால், **दैतेयाः** - இராக்ஷதர், **असुराः** - அஸுரராக, (ஆயினர்), **तेन** - அவ்வாருணியை யங்கீகரித்த படியால், **अदितेः** - அதிதியினுடைய, **सुताः** - பிள்ளைகளான, **सुराः** - தேவதைகள், **वारुणी ग्रहणात्** - (அத்தேவதைகள்) வாருணியை மனம்புரிந்தமையால், **हृष्टाः** - மயிர் கூச்செறியும்படியாக, **प्रमुदिताः** - வெகு ஸந்தோஷித்தவர்களாகவும், **आसन्** - ஆனார்கள்

26. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே மனிதசிரேஷ்டனே! **हयश्रेष्ठः** - குதிரைகளுக்குள் சிறந்ததான, **उच्चैःश्रवाः** - உச்சைச்ரவஸ் என்னும், (குதிரையும்), **मणिरत्नं** - மணி சிரேஷ்டமான, **कौस्तुभम्** - கௌஸ்துபமென்கிற, (மணியும்) **तथैव** - அப்படியே **उत्तमं** - சிறந்ததான, **अमृतं च** - அமிருதமும், **उदतिष्ठत्** - உண்டாயிற்று.

27. (ப-ரை) **राम** - ஹே ராமா! **अथ** - பிறகு, **तस्यकृते** - அவ்வமிருதத்தின் பொருட்டு, **महान्** - பெரிதான, **कुलक्षयः** - வம்சநாசம், **आसीत्** - உண்டாயிற்று, **ततः** - பிறகு, **अदितेः** - அதிதியினுடைய, **पुत्राःतु** - பிள்ளைகளோவெனில், **दितेः** - திதியினுடைய, **पुत्रान्** - பிள்ளைகளை, **असूदयन्** - கொன்றனர்.

---

25. (க-ரை) ஹே மஹாசூரா, ராகவா! திதிபுத்திரர்கள், அவ்வாருணியை கிரஹிக்காமற் போனபடியால் அஸுரரென்று பெயர் பெற்றனர். அதிதியினுடைய பிள்ளைகளான தேவர்கள் அவ்வாருணியைக் கைப்பற்றினபடியால் ஸுரரென்று பெயர்பெற்று மிக்க ஸந்தோஷமடைந்தனர்.

26. (க-ரை) ஹே புருஷோத்தமா! ராமா! பின்பு உச்சைச்ரவஸென்னும் உயர்ந்த குதிரையும், மணிகளுக்குள் சிரேஷ்டமான கௌஸ்துபமென்னும் ரத்னமும் அவ்விதமே சிறந்ததான அமிருதமும் அப்பாற்கடலினின்றும் அப்பொழுது வெளியாயின.

27. (க-ரை) ஹே ராமா! பிறகு பாற்கடலிலுண்டான அவ்வமிருதத்தின் பொருட்டு தேவாஸுரர்களிருவருக்குள் ஓர் பெரும் போருண்டாகி ஒருவரையொருவரடித்து மாண்டனர்.

एकतोऽभ्यागमन्सर्वे ह्यसुरा राक्षसैः सह ।
युद्धमासीन्महाघोरं वीर त्रैलोक्यमोहनम् ॥ 28 ॥

यदा क्षयं गतं सर्वं तदा विष्णुर्महाबलः ।
अमृतं सोऽहरत्तूर्णं मायामास्थाय मोहिनीम् ॥ 29 ॥

ये गताभिमुखं विष्णुमक्षयं पुरुषोत्तमम् ।
संपिष्टास्ते तदा युद्धे विष्णुना प्रभविष्णुना ॥ 30 ॥

28. (ப-ரை) **वीर** - சூரனை ஹே ராமா! **असुराः सर्वे** - அஸுரர்யாவரும், **राक्षसैः सह** - இராக்ஷஸரோடு கூட, **एकतः** - ஒன்றாக, **अभ्यागमन् हि** - சேர்ந்தனரன்றோ! (பிறகு), **त्रैलोक्य** - மூன்று லோகங்களையும், **मोहनं** - மெய்மறக்கச்செய்வதும், **महाघोरं** - வெகு பயங்கரமுமான, **युद्धं** - போர், **आसीत्** - உண்டாயிற்று.

29. (ப-ரை) **यदा** - எப்பொழுது, **सर्वं** - முழுமையும், **क्षयं** - நாசத்தை, **गतं** - அடைந்ததோ! **तदा** - அப்பொழுது, **महाबलः** - வெகு பலமுடைய, **विष्णुः** - ஸ்ரீ மஹாவிஷ்ணு, **मोहिनीं** - காம மயக்கத்தை உண்டுசெய்வதும், **मायां** - ஆச்சரியமான சக்தியையும், **आस्थाय** - அடைந்து, **सः** - அம்மஹாவிஷ்ணு, **तूर्णं** - சீக்கிரம், **अमृतं** - அமிருதத்தை, **हरत्** - எடுத்தனர்.

30. (ப-ரை) **तदा** - அப்பொழுது, **युद्धे** - யுத்தத்தில், **ये** - எவர்கள், **अक्षयं** - நாசமற்றவனும், **पुरुषोत्तमम्** - புருஷசிரேஷ்டனுமான, **विष्णुं** - விஷ்ணுவை, **अभिमुखं**-

28. (க-ரை) ஹே ராகவா! அவ்வாறு நடந்த அப்பெரிய போரில் தேவதைகளால் அடிக்கப்பட்டு அஸுரர்கள் அதிகமாக மாண்டனர். அப்பொழுது அவ்வஸுரர்கள் தமக்கு பலம் அதிகமாகும் பொருட்டு ராக்ஷஸர்களோடு சேர்ந்துகொண்டு பின்பு மூவுலகங்களும் நடுங்கும்படியான வெகு பயங்கரமான சண்டையுண்டாயிற்று.

29. (க-ரை) அப்பொழுது அச்சண்டையில் தேவாஸுரர்கள் அனைவரும் அழிந்துபோவதைக்கண்ட மஹா பல பராக்கிரமமுடைய ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸர்வ லோகங்களும் மோஹிக்கும்படியான மோஹினீ உருவமெடுத்து அவர்களை வஞ்சித்து அவர்களிடமிருந்த அவ்வமிருதத்தைக் கைக்கொண்டனர்.

30. (க-ரை) எக்காலத்திலும் அழிவின்றி புருஷோத்தமனென்கிற பெயர் பெற்று மஹானுபாவனாகிய அம்மஹாவிஷ்ணுவை, அந்த யுத்தத்தில் எவர்கள்

अदितेरात्मजा वीरा दितेः पुत्रान्निजघ्निरे ।
तस्मिन्युद्धे महाघोरे दैतेयादित्ययोर्भृशम् ॥ 31 ॥
निहत्य दितिपुत्रांश्च राज्यं प्राप्य पुरंदरः ।
शशास मुदितो लोकान्सर्षिसङ्घान्सचारणान् ॥ 32 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
पञ्चचत्वारिंशः सर्गः ॥ 45 ॥

எதிராக, **गताः** - சென்றனரோ, **ते** - அவ்வஸுரர், **प्रभविष्णुना** - உலக நாயகனான-**विष्णुना** - மஹா விஷ்ணுவால், **संपिष्टाः** - சூர்ணமாக்கப்பட்டனர்.

31. (ப-ரை) **दैतेयादित्ययोः** - அஸுரருக்கும், ஸுரருக்கும், **भृशम्** - மிகவும், **घोरे** - பயங்கரமான, (யுத்தம் நடந்தது) **तस्मिन्** - அந்த, **महायुद्धे** - பெரியயுத்தத்தில், **वीराः** - சூரரான, **अदितेः** - அதிதியினுடைய, **आत्मजाः** - பிள்ளைகள், **दितेः** - திதியினுடைய, **पुत्रान्** - பிள்ளைகளை, **निजघ्निरे** - கொன்றனர்.

32. (ப-ரை) **पुरंदरः** - இந்திரன், **दितिपुत्रान्** - (திதிபுத்திரர்களான) அஸுரர்களை, **निहत्य**-கொன்று, **राज्यं च** - ராஜ்யத்தையும், அமிருதத்தையும், **प्राप्य** - அடைந்து, **मुदितः** - ஸந்தோஷித்தவனாக, **सर्षिसङ्घान्** - ரிஷிக்கூட்டங்களோடும், **सचारणान्** - சாரணர்களோடும், **लोकान्** - உலகங்களை, **शशास** - ரக்ஷித்தான்.

யெதிர்த்து வந்தனரோ அவர்களனைவரையும் தோல்வியடையும்படி பலமற்றவர்களாய் செய்து விட்டனர்.

31. (க-ரை) அப்பெரிய தேவாஸுர யுத்தத்தில், அம்மஹா விஷ்ணுவைச் சரணமடைந்த வானவர்களுக்கு மிக்க பலமுண்டாகும்படி தன் மாயையால் செய்தனர். பிறகு, அதிதி புத்திரர்களான அத்தேவர்கள் மிக்க வலுவுற்று, திதி புத்திரர்களான அஸுரர்களை யடித்துக் கொன்றனர்.

32. (க-ரை) இப்படி மஹானுபாவனான மஹாவிஷ்ணுவின் அருளால் திதிபுத்திரர்களான அஸுரர்களைக் கொன்று தேவேந்திரன் தேவலோகத்தைக் கைப்பற்றி, அமிருதத்தையும் கைக்கொண்டு, மிகுந்த ஸந்தோஷத்தால், தேவ, கந்தர்வ, சாரண, ரிஷிகளோடுங்கூட ஸமஸ்த லோகங்களையும் பரிபாலித்து வந்தனன்.

षट्चत्वारिंशः सर्गः ॥ 46 ॥

हतेषु तेषु पुत्रेषु दितिः परमदुःखिता
मारीचं काश्यपं राम भर्तारमिदमब्रवीत् । ॥ 1 ॥
हतपुत्रास्मि भगवंस्तव पुत्रैर्महाबलैः ।
शक्रहन्तारमिच्छामि पुत्रं दीर्घतपोर्जितम् ॥ 2 ॥
*साहं तपश्चरिष्यामि गर्भं मे दातुमर्हसि ।
[बलवन्तं महेष्वासं स्थितिज्ञं समदर्शिनम्] ॥
ईश्वरं शक्रहन्तारं त्वमनुज्ञातुमर्हसि ॥ 3 ॥

1. (ப-ரை) **राम** - ஹே ராமா! **पुत्रेषु** - (திதியின்) பிள்ளைகளான, **तेषु** - அவர்கள், **हतेषु** - நாசமாகுகையில், **दितिः** - திதியென்பவள், **परमदुःखिता** - மிக துக்கமுடையவளாய், **मारीचं** - மரீசி மஹரிஷிக்குப் புத்திரரும், **भर्तारं**- (தனக்கு) பதியுமான, **काश्यपं** - காச்யபரை, **इदं** - இவ்விதம், **अब्रवीत्** - சொன்னாள்.

2. (ப-ரை) **भगवन्** - மஹிமை பொருந்திய ஹே நாதா! **महाबलैः** - வெகு பலமுடைய, **तव** - உம்முடைய, **पुत्रैः** - பிள்ளைகளான, (தேவர்களால்) **हतपुत्रास्मि** - நாசமடைந்த பிள்ளைகளுடையவளாக ஆனேன், **दीर्घतपोर्जितम्** - (ஆகையால்) நீடித்த தவத்தால் உறுதியானவனும், **शक्रहन्तारं** - இந்திரனைக் கொல்லும்படியுமான, **पुत्रं** - பிள்ளையை, **इच्छामि** - விரும்புகின்றேன்.

3. (ப-ரை) **सा**- (பிள்ளையைப் பறிகொடுத்த) அந்த, **अहं**-யான், **तपः**-தவத்தை, **चरिष्यामि** - செய்கிறேன், **त्वं** - நீர், **ईश्वरं** - உலகநாயகனும், **शक्रहन्तारं** - இந்திரனைக் கொல்லத்தக்கவனும், (**बलवन्तं** - அதிக பலமுடையவனும், **महेष्वासं** - மேலான

1. (க-ரை) ஹே ராமா! திதி தன் புத்திரர்களாகிய அவ்வஸுரர்களனைவரும், இவ்விதம் தேவர்களால் அடிபட்டு மடிந்ததும், மிகத் துயரமடைந்து மரீசிமாமுனிக்குப் புத்திரனான காச்யபரென்னும் தன் பர்த்தாவை நோக்கி இவ்வாறு பிரார்த்தித்துக்கொண்டனள்.

2-3. (க-ரை) ஹே நாதா! மஹானுபாவரே! என் புத்திரர்களனைவரும், வெகு பலமுடைய தேவர்களால் அடிபட்டு மாண்டனர். யான் என் செய்வேன்? ஆகையால் யான் தவஞ்செய்யப் போகின்றேன். அடியேன்மீது அருள்புரிந்து (நன்கு பலம் பொருந்தியவனும், சிறந்தவில்லைத் தாங்கக் கூடியவனும், என் நிலையையறிந்தவனும், எல்லோரையும் ஒருமித்துப் பார்க்கும் தன்மையுடையவனும்)

तस्यास्तद्वचनं श्रुत्वा मारीचः काश्यपस्तदा ।
प्रत्युवाच महातेजा दितिं परमदुःखिताम् ॥ 4 ॥
एवं भवतु भद्रं ते शुचिर्भव तपोधने ।
जनयिष्यसि पुत्रं त्वं शक्रहन्तारमाहवे ॥ 5 ॥
पूर्णे वर्षसहस्रे तु शुचिर्यदि भविष्यसि
पुत्रं त्रैलोक्यभर्तारं मत्तस्त्वं जनयिष्यसि ॥ 6 ॥

வில்லேத்தாங்கத் தக்கவனும், **स्थितिज्ञं** - (என்னுடைய) நிலைமையை யறிந்தவனும், **समदर्शिनम्** - எல்லோரையும் ஒருமித்துப் பார்ப்பவனுமான), **गर्भं** - கர்ப்பத்தை, (பிள்ளையை) **मे** - எனக்கு, **दातुं** - கொடுப்பதற்கு, **अर्हसि** - தக்கவராகின்றீர், **अनुज्ञातुं**- (அப்படியே) அனுக்கிரஹிக்க, **अर्हसि** - உரியராகின்றீர், என்றனள்.

4. (ப-ரை) **तस्याः** - அந்த திதியினுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **मारीचः** - மரீசிபுத்திரரும், **महातेजाः** - வெகு தேஜஸுடையவருமான, **काश्यपः** - காச்யபர், **श्रुत्वा** - கேட்டு, **तदा** -அப்பொழுது, **परमदुःखिताम्** - மிகத்துக்கமுடையவளான, **दितिं** - திதியை, (க்குறித்து) **प्रत्युवाच** - பதில் சொன்னார்.

5. (ப-ரை) **तपोधने** - தவத்தையே தனமாயுடையதிதியே! **एवं** - இப்படியே, **भवतु** - ஆகட்டும், **शुचिः** - (எவ்வளவுக்குள் புத்திரனுதிக்கின்றனே அவ்வளவுகாலம்வரை) பரிசுத்தையாக, **भव** - ஆகுவாய், **त्वं** - நீ, **आहवे** - யுத்தத்தில், **शक्रहन्तारं** - இந்திரனை வெல்லத்தக்க, **पुत्रं** - பிள்ளையை, **जनयिष्यसि** - உண்டு செய்வாய் அல்லது பெறுவாய், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களம், (உண்டாகுக).

6. (ப-ரை) **त्वं** - நீ, **शुचिः** - பரிசுத்தையாக, **भविष्यसि यदि** - இருந்தாயாகில், **वर्षसहस्रे** - வருஷத்தினுயிரங்கள், **पूर्णे** - நிரம்புகையில், **मत्तः** - என்னிடத்திலி

இந்திரனை ஒழித்து மூவுலகங்களையும் ஆனந்திக்கச் செய்யும்படியான ஓர் புத்திரனை அருள் செய்யவேண்டும், என்று பிரார்த்தித்துக் கொண்டனள்.

4. (க-ரை) மஹானுபாவரான அக்காச்யபர், இப்படி புத்திரர்களைப் பறிகொடுத்ததினுல் வெகு துயரமடைந்து மனம் வருந்தி தழுதழுத்த ஸ்வரத்தோடு சொல்லும் அந்த திதியினுடைய வார்த்தைகளைச் செவியுற்று, அவளுடைய சோகம் தணியும்படி பின் வருமாறு பதில் சொன்னர்.

5-6. (க-ரை) ஹே திதியே! என் கண்மணியே! நீவேண்டியபடியே ஆகட்டும். உனக்கு மங்களமுண்டாகுக, உனது இஷ்டப்படி இந்திரனைவென்று மூவுல

एवमुक्त्वा महातेजाः पाणिना सममार्ज ताम् ।
समालभ्य ततः स्वस्तीत्युक्त्वा स तपसे ययौ ॥ 7 ॥
गते तस्मिन्नरश्रेष्ठ दितिः परमहर्षिता ।
कुशप्लवनमासाद्य तपस्तेपे सुदारुणम् ॥ 8 ॥

ருந்து, त्रैलोक्यभर्तारं - மூவுலகிற்கும் பதியான, पुत्रं - புத்திரனை, जनयिष्यसि - பெறுவாய். (என்றனர்).

7. (ப-ரை) महातेजाः - வெகு தேஜஸ்ஸுடைய, (सः - அக்காச்யபர்,) एवं - இப்படி, उक्त्वा - சொல்லிவிட்டு, तां - அந்த திதியை, सममार्ज - ஸமாதானம் செய்தார். ततः - பிறகு, सः - அக்காச்யபர், पाणिना - கையினால், समालभ्य - (அத்திதியின் வயிற்றை) தடவி, स्वस्ती - மங்களம், इति - என்று, उक्त्वा - சொல்லி, तपसे - தவத்தின் பொருட்டு, ययौ - சென்றனர்.

8. (ப-ரை) नरश्रेष्ठ - ஹே மனித சிரேஷ்டனே ! तस्मिन् - அந்த, (காச்யபர்) गते (सति) - சென்றவளவில், दितिः - திதி, परमहर्षिता - மிகக் களிப்புற்றவளாக, कुशप्लवनं - குசப்லவநத்தை, आसाद्य - அடைந்து, सुदारुणम् - மிகக் கடுமையான, तपः - தவத்தை, तेपे - (தவம்) செய்தனள்.

கங்கையும் ஒரு நாயகமாய்ச் செங்கோல் செலுத்தத்தக்க ஓர் புத்திரனுதிக்கும்படி அனுக்கிரஹம் செய்கின்றேன். நீ துயரமற்றிரு. ஆனால் இது முதல் நீ ஆயிரம் வருஷங்கள் நிரம்பும் வரையில் சிறந்த தவம் புரிந்து பிள்ளை பிறக்கும் வரையில் வெகு ஆசாரத்துடன் பரிசுத்தையாயிருக்கவேண்டும். அதற்கு ஏதேனும் சிறிதளவு குறை நேரிட்டால் உன் எண்ணம் ஈடேராது. என்று அனுக்கிரஹித்தனர்.

7. (க-ரை) வெகு தேஜஸ்ஸுடைய அக்காச்யபர் இவ்வாறு சொல்லி ஸமாதானம் செய்து அத்திதியின் வயிற்றைத் தமது கைகளாற் தடவி அவளைத்தழுவி வாழ்த்தி விடை கொடுத்து அவ்விடம் விட்டுத்தவம் செய்வதற்குப் புறப்பட்டனர்.

8. (க-ரை) ஹே புருஷோத்தமா ! ராமா ! இவ்வாறுரைத்துச் சென்ற பிறகு, கணவர் வார்த்தையை தலைமேற் கொண்டு திதியானவள், ஆனந்தங்கொண்டு முகமலர்ந்து குசப்லவனமென்னும் பிரதேசத்தை யடைந்து கடுந்தவம் புரிந்தனள்.

तपस्तस्यां हि कुर्वन्त्यां परिचर्यां चकार ह ।
सहस्राक्षो नरश्रेष्ठ परया गुणसंपदा ॥ 9 ॥

अग्निं कुशान्काष्ठमपः फलं मूलं तथैव च ।
न्यवेदयत्सहस्राक्षो यच्चान्यदपि काङ्क्षितम् ॥ 10 ॥

गात्रसंवाहनैश्चैव श्रमापनयनैस्तथा ।
शक्रः सर्वेषु कालेषु दितिं परिचचार ह ॥ 11 ॥

---

9. (ப-ரை) तपः – தவத்தை, कुर्वन्त्यां - செய்யாநிற்கின்ற, तस्यां - அத்திதியினிடத்தில், सहस्राक्षः - ஆயிரங்கண்ணனாகிய, (இந்திரன்) नरश्रेष्ठ - ஹே நரோத்தமனே! परया - சிறந்ததான, गुणसंपदा - குண ஸம்பத்தோடு, परिचर्यां-பணிவிடையை, चकार ह - செய்தானன்றோ!

10. (ப-ரை) सहस्राक्षः - ஆயிரங்கண்ணுடைய, (தேவேந்திரன்) अग्निं - (அத்திதிக்கு) அக்கினியையும், कुशान् अपि - தர்ப்பத்தையும், काष्ठं - ஸமித்துகளை, अपः - ஜலத்தையும், फलं - பழத்தையும், मूलं - கிழங்கையும், तथैव च - அப்படியே, अन्यत् - यत् - வேறு எது, काङ्क्षितम् - விரும்பப் படுமோ, (அதையும்) न्यवेदयत - ஸமர்ப்

11. (ப-ரை) शक्रः - தேவேந்திரன், (தாயாராகையால்), गात्रसंवाहनैश्च - தேகத்தைப் பிடிப்பதுகளாலும், तथा - அப்படியே, श्रमापनयनैः - இளைப்பையாற்று

---

9. (க-ரை) பிறகு ஹே நரோத்தமனே! திதி அவ்வாறு கடுந்தவம் புரிகையில், ஆயிரங்கண்களையுடைய விண்ணவர்கோன் (தேவேந்திரன்) தான் மன்னுமன்னும்படி பிள்ளையையடைய மிகச் சிறந்த விருதமனுஷ்டிக்கும் அத்திதியின் நிலைகுலைய கவனமுற்று அவளுக்குச் சீடனுகை வேடம் பூண்டுவந்து வெகுவிநயத்தோடு தினந்தோறும் அவளுக்குப் பணிவிடை செய்துகொண்டு வந்தனன்.

10.(க-ரை) ஆயிரங் கண்ணனை தேவேந்திரன் தினந்தோறும் அத்திதிக்கு வேண்டிய, தர்ப்பம், ஸமித்து, அக்நி, தீர்த்தம், பழம், கிழங்கு முதலியவைகளையும், மற்றும் எந்தெந்த பொருள்களை அவள் விரும்புகின்றனளோ அவையெல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்து, தவறாமல் பணிவிடை செய்துகொண்டு வந்தனன்.

11. (க-ரை) இவையல்லாமல், அத்திதி சிரமப்பட்டுப் படுத்திருக்குங்காலத்தில், தனக்குத் தாயானபடியால் அவளுடைய கால்களைப் பிடித்தல். விசிறியால்

अथ वर्षसहस्रे तु दशोने रघुनन्दन ।
दितिः परमसंप्रीता सहस्राक्षमथाब्रवीत् ॥ 12 ॥
याचितेन सुरश्रेष्ठ पित्रा तव महात्मना ।
वरो वर्षसहस्रान्ते मम दत्तः सुतं प्रति ॥ 13 ॥
तपश्चरन्त्या वर्षाणि दश वीर्यवतां वर ।
अवशिष्टानि भद्रं ते भ्रातरं द्रक्ष्यसे ततः ॥ 14 ॥

கிறவையாலும், **दितिं** - திதியை, (க்குறித்து), **सर्वेषु** - ஸமஸ்தங்களான, **कालेषु अपि** - காலங்களிலும், **परिचचार ह** - பணிவிடை செய்தனன்.

12, (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **अथ** - பிறகு, **वर्षसहस्रे तु** - வருஷங்களின் ஆயிரங்கள், **दशोने** - பத்துக் குறைவாயிருக்கையில், **अथ** - அதற்குள், **दितिः** - திதியானவள், **परमसंप्रीता** - வெகு ஸந்தோஷப்பட்டவளாக, **सहस्राक्षं** - ஆயிரங் கண்களையுடைய, (தேவேந்திரனைக் குறித்து) **अब्रवीत्** - சொன்னாள்.

13. (ப-ரை) **सुरश्रेष्ठ** - ஹே தேவேந்திரனே! **याचितेन** - கேட்கப்பட்ட, **महात्मना** - சிறந்த ஸ்வபாவமுடைய, **तव** - உன்னுடைய, **पित्रा** - பிதாவினால், **वर्षसहस्रान्ते** - வருஷங்களினாயிரங்களின் முடிவில், **मम** - எனக்கு, **सुतं प्रति** - புத்திரனைக் குறித்து, **वरः** - வரம், **दत्तः** - கொடுக்கப்பட்டது.

14. (ப-ரை) **वीर्यवतां** - பராக்கிரமமுடையோருக்குள், **वर** - ஹே சிறந்தவனே! **तपः** - தவத்தை, **चरन्त्याः** - செய்கின்ற, (எனக்கு) **दशवर्षाणि** - பத்துவருஷங்

வீசி அவளது சிரமத்தையாற்றி அவள் உள்ளம் மகிழும்படி எக்காலத்திலும் தவறுதல் பணிவிடை செய்து கொண்டுவந்தனன்.

12. (க-ரை) ஹே ரகுநந்தனா! கேள், அத்திதியும் மகிழ்ந்து அத்தேவேந்திரன் செய்யும் சிறந்த பணிவிடைகளால் தான் பூண்ட விருதத்தையும் மறந்து ஆயிரவருஷங்கள் பூர்த்தியடைய பத்து வருஷங்கள் குறைந்திருக்கையில், இந்திரனை நோக்கி இவ்வார்த்தையைச் சொல்லத் துடங்கினள்.

13. (க-ரை) ஹே தேவேந்திரனே! உனக்கு அடிக்கடிப் பகைவர்களால் தீங்குவருகின்றதெனக் கருதி, உனக்குத் துணையாகவிருந்து உனது பகைவேந்தர்களை முடித்து, உன் ராஜ்யத்தை நிலை நிறுத்தத்தக்க உடன் பிறந்த ஸஹோதிரன் ஒருவன் உண்டாகும்படி மஹானுபாவரான உன் தந்தையை யாசித்தேன். ஆயிரம் வருஷங்கள் பரிசுத்தையாய் விருதம் செய்வாயாகில் அப்படியே உண்டாவான் என்று அனுக்கிரஹம் செய்தனர்.

14. (க-ரை) வீரர்களுக்குத் தலைவனான ஹே தேவேந்திரா! அதற்காக

तमहं त्वत्कृते पुत्रं समाधास्ये जयोत्सुकम् ।
त्रैलोक्यविजयं पुत्र सह भोक्ष्यसि विज्वरः ॥ 15 ॥

एवमुक्त्वा दितिः शक्रं प्राप्ते मध्यं दिवाकरे ।
निद्रयापहृता देवी पादौ कृत्वाथ शीर्षतः ॥ 16 ॥

கள், **अवशिष्टानि** - மிகுந்திருக்கின்றன, **ते** - உனக்கு, **भद्रं** - மங்களம், (உண்டாகுக); **ततः** - பிறகு, **भ्रातरं** - உடன் பிறந்தோனை, **द्रक्ष्यसे** - பார்க்கப்போகின்றாய்.

15. (ப-ரை) **अहं** - யான், **जयोत्सुकम्** - ஜயத்தில் விருப்பமுற்ற, **तं पुत्रं** - அந்த புத்திரனை **त्वत्कृते** - உன்னையும் பொருட்டு, **समाधास्ये** - சேர்ப்பிக்கின்றேன், **पुत्र** - ஹே குழந்தாய்! (நீ) **विज्वरः** - துயரமற்றவனாய், **त्रैलोक्यविजयं** - மூவுலகங்களையும் வென்றும், **सह** - அப்புத்திரனோடு, **भोक्ष्यसि** - அனுபவிப்பாயாக.

16. (ப-ரை) **देवी** - காச்யபருடைய பத்நியான, **दितिः** - திதியானவள், **शक्रं** - இந்திரனை, (க்குறித்து) **एवं** - இவ்வாறு, **उक्त्वा** - சொல்லி, **अथ** - பிறகு, **दिवाकरे** - சூரியன், **मध्यं**-ஆகாயத்தின் நடுவை, அதாவது ஆகாயத்தின் மத்யப்பிரதேசத்தை, **प्राप्ते** - அடைகையில், **शीर्षतः** - தலையில், **पादौ** - கால்களை, **कृत्वा** - செய்து, **निद्रयापहृता**- தூக்கத்தால் அபஹரிக்கப்பட்டவளாக, (ஆனாள்)

யான் பரிசுத்தமாய் தவம் செய்கின்றேன். ஆயிரம் வருஷங்கள் பூர்த்தியடைய இன்னும் பத்து வருஷங்கள் மீதியிருக்கின்றன. அப்பத்து வருஷங்களும் பூர்த்தியடைந்த பிறகு உனது ப்ராதாவைக் காண்பாய். உனக்கு மங்களமுண்டாகட்டும், அல்லது அவன் உன்னை வெல்லுவதற்கு உத்ஸாஹங்கொண்டிருப்பான். என்று மொழிந்தனள்.

15. (க-ரை) ஹே தேவேந்திரா ! ஆனாலும், உனக்காக அப்புத்திரனையான் ஸமாதானப்படுத்தி உன்னிடத்தில் நேசத்துடன் அன்பு பாராட்டிக்கொண்டிருக்கும்படிச் செய்கின்றேன். நீ அவன்கூட கலந்து இம்மூவுலகங்களையும் ஸுகமாக அனுபவிக்கலாமென்று, ஸ்திரீ ஜாதியாகையால், பணிவிடை செய்ததாலுண்டான ஸந்தோஷத்தால் மதிமயங்கி உண்மையை உரைத்து வாய் மூடிக் கொண்டனள்.

16. (க-ரை) இவ்வாறு அத்திதி இந்திரனைக் குறித்துச் சொல்லிவிட்டு அன்றயதினம் நடுப்பகலில் சிரமத்தால் தூக்கம் மேற்கொள்ளப் படுக்கையில், கால்மாடு தலைமாடாய் அதாவது தலைவைக்குமிடத்தில் காலையும், கால்வைக்குமிடத்தில் தலையையும் வைத்து கூந்தலை முடியாமல் காலில் சுற்றும்படி நித்திரை செய்தனள். இப்படி உறங்கினதால் அசுசி ஏற்பட்டது.

दृष्ट्वा तामशुचिं शक्रः पादतः कृतमूर्धजाम् ।
शिरःस्थाने कृतौ पादौ जहास च मुमोद च ॥ 17 ॥

तस्याः शरीरविवरं विवेश च पुरंदरः ।
गर्भं च सप्तधा राम बिभेद परमात्मवान् ॥ 18 ॥

भिद्यमानस्ततो गर्भो वज्रेण शतपर्वणा ।
रुरोद सुस्वरं राम ततो दितिरबुध्यत ॥ 19 ॥

17. (ப-ரை) **शक्रः** - *இந்திரன்.* **अशुचिं** - *அபரிசுத்தையாயும்,* **पादतः** - *கால்களால்,* **कृतमूर्धजाम्** - *செய்யப்பட்ட தலைமயிருடைய,* **तां** - *அந்த திதியை,* **शिरःस्थाने** - *தலைப்பக்கத்தில்,* **कृतौ** - *செய்யப்பட்ட,* **पादौ** - *கால்களை,* **दृष्ट्वा जहास च** - *பார்த்துச் சிரித்தான்,* **मुमोद च** - *களிக்கவும் களித்தான்.*

18. (ப-ரை) **राम** - *ஹே ராம!* **परमात्मवान्** - *சிறந்த தைரியமுடைய,* **पुरंदरः** - **இந்திரன்,** **तस्याः** - *அந்த திதியினுடைய,* **शरीरविवरं** - *யோநியின் வழியை,* **विवेश** - *பிரவேசித்தான்,* **गर्भं च** - *கருவையும்,* **सप्तधा** - *ஏழு துண்டுகளாக,* **बिभेद च** - *பிளந்தான்.*

19. (ப-ரை) **राम** - *ஹே ராகவா!* **शतपर्वणा** - *நூறு கணுக்களுடைய,* **वज्रेण** - *வஜ்ராயுதத்தால்,* **भिद्यमानः (सन्)** - *பிளந்து கொண்டிருக்கையில்,* **गर्भः** - *சிசு,* **सुस्वरं** - *நல்ல ஸ்வரமாயிருக்கும்படி,* **रुरोद** - *அழுதது,* **ततः** - *பிறகு,* **दितिः** - *திதியானவள்,* **अबुध्यत** - *விழித்துக் கொண்டனள்.*

17. (க-ரை) *இவ்விதம் அவள் அசுசியாய் கால்மாட்டில் தலையையும், தலைமாட்டில் காலையும் வைத்துக்கொண்டு நித்திரைசெய்து கொண்டிருப்பதைக் கண்டு தேவேந்திரன், இவளிப்படி வீண் கருவங்கொண்டனளோ வென்று தனக்குள் சிரித்துக்கொண்டு, இவளது கர்ப்பத்தைக் கெடுக்க இது நல்ல ஸமயம் வாய்ந்ததென்று மகிழ்ந்தனன்.*

18. (க-ரை) *ஹே ராகவா! அத் தேவேந்திரன் மிகத் தீரனுகையால் அத் திதியினுடைய சரீரத்தினுட் புகுந்து அக்கருவை தன்னுடைய வஜ்ராயுதத்தால் ஏழு கூறாகப் பிளந்து விட்டனன்.*

19-20. (க-ரை) *இவ்வாறு அத்தேவேந்திரன் ஆயிரங்கணுக்களையுடைய தனது வஜ்ராயுதத்தால் அக்கருவைப் பிளந்துகொண்டிருக்கையில் அச்சிசு இனிய குரலுடன் அழத்தொடங்கிற்று. பிறகு திதியானவள் அச்சிசுவின் அழுகுரலைக் கேட்டு விழித்துக் கொண்டனள். தேவேந்திரன், அது கண்டு சிசுவைக்குறித்து*

मारुदो मारुदश्चेति गर्भं शक्रोऽभ्यभाषत ।
बिभेद च महातेजा रुदन्तमपि वासवः ॥ 20 ॥

न हन्तव्यो न हन्तव्य इत्येवं दितिरब्रवीत् ।
निष्पपात ततः शक्रो मातुर्वचनगौरवात् ॥ 21 ॥

प्राञ्जलिर्वज्रसहितो दितिं शक्रोऽभ्यभाषत ।
अशुचिर्देवि सुप्तासि पादयोः कृतमूर्धजा ॥ 22 ॥

20. (ப-ரை) शक्रः - தேவேந்திரன், गर्भं - சிசுவைக் குறித்து. मारुदः मारुदः - அழாதே, அழாதே, इति - என்று, अभ्यभाषत - சொன்னான், महातेजाः - மிகப் பராக்கிரமமுடைய, वासवः - தேவேந்திரன், रुदन्तं अपि - அழுதுகொண்டிருக்கையிலும், बिभेद - (அச்சிசுவை) துண்டித்தனன்.

21. (ப-ரை) दितिः - திதியானவள், न हन्तव्यः नहन्तव्यः - கொல்லவேண்டாம், கொல்லவேண்டாம், इति - என்று, एवं - இப்படி, अब्रवीत् - சொல்லினள், ततः-பிறகு, शक्रः - தேவேந்திரன், मातुः - தாயினுடைய, वचनगौरवात् - வார்த்தையின் மேன்மையால், निष्पपात - வெளிவந்தனன்.

22. (ப-ரை) शक्रः - தேவேந்திரன், वज्रहस्तः - வஜ்ராயுதத்தோடும், प्राञ्जलिः सहितः - கைகூப்புவதோடுங் கூடி, दितिं - திதியை, (க்குறித்து) देवि - ஹே தாயே ! (நீ) अशुचिः - அபரிசுத்தையாய், அதாவது சுசிதப்பினவளாய், पादयोः கால்களில்,

அழவேண்டாம், அழவேண்டாம் யென்றுரைத்துக்கொண்டே [illegible] துண்டு துண்டாகப் பிளந்தனன்.

21. (க-ரை) பிறகு திதியும் திடுக்கிட்டு விழித்துத் தன் கர்ப்பம் இவ்விதம் கலையுவதைக் கண்டு, கொல்லவேண்டாம், கொல்லவேண்டாம், யென்று சொல்ல, தேவேந்திரனும் இவ்வாறு மொழிந்த தன் தாயாரது வார்த்தியில் கௌரவம் வைத்து வயிற்றிலிருந்து வெளியே வந்தனன்.

22-23. (க-ரை) தேவாதி பதியான அத்தேவேந்திரன், திதியின் வயிற்றினின்று வஜ்ராயுதமும் கையுமாகத் தோற்றிக் கொண்டு நின்று, கைகளைக் கூப்பிக் கொண்டு திதியை வணங்கி ஹே தாயே! நீ, என்பேரில் சீற்றங்கொள்ளாமல் கேட்கவும், நீ தலைமாட்டில் காலையும், கால்மாட்டில் தலையையும் வைத்துக்கொண்டு நித்திரை செய்தனை. ஆனதுபற்றி அசுசியேற்பட்டது. அச்சமயம் பெற்று ஸர்வபிர

तदन्तरमहं लब्ध्वा शक्रहन्तारमाहवे ।
अभिदं सप्तधा देवि तन्मे त्वं क्षन्तुमर्हसि ॥ 23 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय बालकाण्डे षट्चत्वारिंशः
सर्गः ॥ 46 ॥

कृतमूर्धजा - செய்யப்பட்ட மயிருடையவளாய், **सुप्ता असि** - தூங்கினவளாய் ஆனாய், (என்று) **अभ्यभाषत** - சொன்னான்.

23. (ப-ரை) **तत्** - ஆகையால், (தூங்கினமையால்), **अहं** - யான், **अन्तरं** - அவகாசத்தை, **लब्ध्वा** - அடைந்து, **आहवे** - யுத்தத்தில், **शक्रहन्तारं** - இந்திரனைக் கொல்லுகின்ற, (கருவை) **सप्तधा** - ஏழுதுண்டுகளாக, **अभिदं** - பிளந்தேன், **मे** - என்னுடைய, **तत्** - அந்த, (குற்றத்தை) **देवि** - ஓ தாயே! **क्षन्तुं** - க்ஷமிப்பதற்கு, **अर्हसि**- தகுந்தவளாகின்றாய்.

காரத்தாலும் தன்னை ரக்ஷித்துக் கொள்ள வேணுமென்கின்ற பழமொழி பிரகாரம் எனக்கு ம்ருத்யுவாகத் தோன்றும் பிள்ளையை ம்ருத்யுவாகாமல் மறுத்தேன். அவ்வபராதத்தை தாயே! நீ க்ஷமித்தருள வேண்டுமென்று அடிபணிந்து, தலை வணங்கி பிரார்த்தித்தனன்.

सप्तचत्वारिंशः सर्गः ॥ 47 ॥

सप्तधा तु कृते गर्भे दितिः परमदुःखिता ।
सहस्राक्षं दुराधर्षं वाक्यं सानुनयाब्रवीत् ॥ 1 ॥

ममापराधाद्गर्भोऽयं सप्तधा विफलीकृतः ।
नापराधोऽस्ति देवेश तवात्र बलसूदन ॥ 2 ॥

प्रियं तु कर्तुमिच्छामि मम गर्भविपर्यये ।
मरुतां सप्त सप्तानां स्थानपाला भवन्त्विमे ॥ 3 ॥

1. (ப-ரை) **गर्भे** - சிசு, **सप्तधा** - ஏழு துண்டுகளாக, **कृते** - செய்யுகையில், **दितिः** - திதியானவள், **परमदुःखिता** - மிகத்துக்க முற்றவளாய், **दुराधर्षं** - ஜயிக்கக் கூடாதவனை, **सहस्राक्षं** - தேவேந்திரனை, (க்குறித்து) **सानुनया** - விநயத்தோடுகூட, **वाक्यं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னாள்.

2. (ப-ரை) **वलसूदन** - வலனென்னும் அஸுரனைக் கொன்ற, **देवेश** - ஹே தேவேந்திரனே! **अयं गर्भः** - இந்த கர்ப்பமானது, **मम** - என்னுடைய, **अपराधात्** - குற்றத்தால், **सप्तधा** - ஏழுதுண்டுகளாக, **विफलीकृतः** - வீணாகச் செய்யப்பட்டது, **अत्र** - இவ்விஷயத்தில், **तव** - உனக்கு, **अपराधः** - குற்றமானது, **नास्ति** - இல்லை.

3. (ப-ரை) **गर्भविपर्यये** - சிசு நாசமடைந்த விஷயத்தில், **मम** - எனக்கு, **प्रियं** - இஷ்டத்தை, **कर्तुं** - (நீ) செய்ய, **इच्छामि** - விரும்புகின்றேன், **सप्त इमे** - ஏழான இந்த, (துண்டுகள்) **सप्तानां** - ஏழான, **मरुतां** - வாயுகளுக்கு, **स्थानपालाः** - லோகபாலர்களாக, **भवतु** - ஆகட்டும்.

---

1. (க-ரை) இவ்வாறு தன் கர்ப்பமானது தேவேந்திரனால் ஏழு துண்டுகளாகச் செய்யப்பட்டதைக் கண்டு திதியானவள் வெகு கலக்கமுற்றவளாய், தேவேந்திரன்மீது இனி கோபங்கொள்வதிற் பயனில்லையென்றெண்ணி யாவராலும் வெல்லமுடியாத பராக்கிரமமுடைய அத்தேவேந்திரனை நோக்கி இனிதாக இவ்வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினாள்.

2. (க-ரை) தேவர்களுக்கெல்லாம் அரசனான ஹே தேவேந்திரனே! உன்மேல் சிறிதும் குற்றமில்லை. நான் என் நிலைமையில் நில்லாமல் நிந்திக்கத்தக்க நித்திரை செய்தமையால் என்னுடைய இக்கர்ப்பமானது வீணாகச் செய்யப்பட்டது.

3. (க-ரை) நான் இவ்வளவுகாலம் புத்திரன் பிறக்கும் நிமித்தம் பட்டதை

वातस्कन्धा इमे सप्त चरन्तु दिवि पुत्रक ।
मारुता इति विख्याता दिव्यरूपा ममात्मजाः ॥ 4 ॥

ब्रह्मलोकं चरत्वेक इन्द्रलोकं तथापरः ।
दिवि वायुरिति ख्यातस्तृतीयोऽपि महायशाः ॥ 5 ॥

चत्वारस्तु सुरश्रेष्ठ दिशो वै तव शासनात् ।
संचरिष्यन्ति भद्रं ते देवभूता ममात्मजाः ॥ 6 ॥

त्वत्कृतेनैव नाम्ना च मारुता इति विश्रुताः ॥ 6½ ॥

4. (ப-ரை) **पुत्रक** - ஹே குழந்தாய்! (தேவேந்திரா!) **मम आत्मजः** - என்னுடைய பிள்ளைகள், **इमे सप्त** - இந்த எழுவரும், **मारुता इति** - மருத்துக்கள் என்றும், **विख्याताः** - பிரஸித்தர்களும், **दिव्यरूपाः** - சிறந்த ரூபமுடையவர்களும், **वातस्कन्धाः** - வாயுகளுக்கு அதிதிதேவர்களுமாக, **दिवि** - ஸ்வர்க்கத்தில், **चरन्तु** - ஸஞ்சரிக்கக்கடவர்கள்.

5. (ப-ரை) **एकः** - ஒருவன், **ब्रह्मलोकं** - பிரும்ம லோகத்தை, (க்குறித்து) **चरतु**- ஸஞ்சரிக்கட்டும், **तथा** - அப்படியே, **अपरः** - மற்றொருவன், **इन्द्रलोकं**- இந்திரலோகத்தைக், (குறித்து) (**चरतु** - ஸஞ்சரிக்கட்டும்), **महायशाः** - வெகு கீர்த்தியுடைய, **त्रितीयोपि** - மூன்றாவன், **वायुरिति** - வாயுவென்று, **ख्यातः** பிரஸித்தனாய், **दिवि** - அந்தரிக்ஷத்தில், (ஸஞ்சரிக்கட்டும்).

6-6½. (ப-ரை) **सुरश्रेष्ठ** - ஹே தேவசிரேஷ்டா! **मम** - என்னுடைய, **आत्मजाः**- பிள்ளைகளான நால்வரும், **तव** - உன்னுடைய, **शासनात्** - ஆக்ஞையால, **देवभूताः** -

---

பட்டேனகையால், நீ என் பிரீதிணங்கி, எனக்கிஷ்டத்தை யளிப்பாயாக; இவ்வேழு கூறுகளும், காற்றின் திரள்களாய், ஸஞ்சரிப்பவர்களாக ஆகட்டும்.

4. (க-ரை) ஹே குழந்தாய்! இந்திரா! என்னுடைய இவ்வேழு புத்திரர்களும் வாயுவுகளுக்கு அதிதி தேவர்களுமாக ஆகி, தேவஸ்வரூபந்தரித்து மருத்துக்களென்று பிரஸித்தி பெற்று ஸ்வர்க்கத்தில் வாழ்ந்திருக்கவேண்டும், யென்றனள்.

5-6½. (க-ரை) ஹே தேவேந்திரா! நீ மா ருத, மா ருதவென்று சொன்னமையால், மாருதர்களென்ற பெயர் பெற்று பிரும்மலோகத்தி லொருவனும், ஒருவன் இந்திரலோகத்திலும், மூன்றாவன் வாயுவென பிரஸித்தனாய் ஆகாசத்திலும், மற்ற நால்வரும் உனது ஆணைக்குக் கட்டுப்பட்டு, தேவத்வம் பெற்று நான்கு

तस्यास्तद्वचनं श्रुत्वा सहस्राक्षः पुरंदरः ।
उवाच प्राञ्जलिर्वाक्यं दितिं बलनिषूदनः ॥ 7½ ॥

सर्वमेतद्यथोक्तं ते भविष्यति न संशयः ।
विचरिष्यन्ति भद्रं ते देवरूपास्तवात्मजाः ॥ 8½ ॥

एवं तौ निश्चयं कृत्वा मातापुत्रौ तपोवने ।
जग्मतुस्त्रिदिवं राम कृतार्थाविति नः श्रुतम् ॥ 9½ ॥

தேவர்களாக ஆகி, **त्वत्कृतेन** - உன்னுலிடப்பட்ட, **नाम्ना चैव** - பெயரினுலேயே, **मारुताः** - மருத்துக்கள், **इति** - என்று, **विश्रुताः** - பிரஸித்தர்களாக, **दिशः** - திக்குகள், (தோறும்) **संचरिष्यन्ति** - ஸஞ்சரிக்கக்கடவர்கள், **ते** - உனக்கு, **भद्रं** - மங்களம், **अस्तु** - உண்டாகட்டும்.

7½. (ப-ரை) **बलनिषूदनः** - வலனென்கின்ற அஸுரனைக் கொன்றவனும், **सहस्राक्षः** - ஆயிரங்கண்களையுடையவனுமான, **पुरंदरः** - தேவேந்திரன், **तस्याः** - அந்த திதியினுடைய, **तत्** - அந்த, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **प्राञ्जलिः** - கை கூப்புவதையுடையவனுய், **दितिं** - திதியை, (க்குறித்து,) **वाक्यं** - வார்த்தையை, **उवाच** - சொன்னுன்.

8½ (ப-ரை) **एतत्** - இந்த, **सर्वं** - ஸமஸ்தமும், **यथा** - எப்படி. **उक्तं** -(உன்னுல்) சொல்லப்பட்டதோ, (அப்படியே) **ते** - உனக்கு, **भविष्यति** - ஆகப்போகின்றது, **संशयः** - ஸந்தேகம், **न** - இல்லை, **ते** - உனக்கு, **भद्रं** - மங்களம், (உண்டாகட்டும்) **तव** - உன்னுடைய, **आत्मजाः** - பிள்ளைகள், **देवरूपाः** - தேவர்களானவர்களாக, **विचरिष्यन्ति** - ஸஞ்சரிக்கக்கடவர்கள்.

9½. (ப-ரை) **राम** - ஹே ராமா! **तौ** - அந்த, **मातापुत्रौ** தாய். பிள்ளைகள், **तपोवने** - தவம் செய்யும் வனத்தில், **एवं** - இப்படி, **निश्चयं** - நிச்சயத்தை, **कृत्वा** -

---

திசைகளிலும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கட்டும், யென்று இவ்வாறு சொல்லினள்.

7½-8½. (க-ரை) இவ்வாறு உரைத்த அத்திதியின் மொழிகளைக் கேட்டு, வலனென்கிற அஸுரனைக் கொன்றவனும் ஆயிரங் கண்களுடையவனுமான அத் தேவேந்திரன் கைகளைக் கூப்பிக்கொண்டு, அம்மா! உனக்கு மங்களம் உண்டாகுக. எல்லாம் நீ சொன்னபடியே நடக்கும். இதற்குச் சந்தேகமில்லை. உன்பிள்ளைகள் யாவரும் தேவத்வம் பெற்று தேவர்களாக ஸஞ்சரிப்பார்கள் என்றுரைத்தனன்.

9½. (க-ரை) ஹே ராமா! இவ்விதம் தாயும் பிள்ளையுமாகிய அத்திதியும்,

एष देशः स काकुत्स्थ महेन्द्राध्युषितः पुरा ।
दितिं यत्र तपःसिद्धामेवं परिचचार सः ॥ 10½ ॥

इक्ष्वाकोस्तु नरव्याघ्र पुत्रः परमधार्मिकः ।
अलम्बुसायामुत्पन्नो विशाल इति विश्रुतः ॥ ॥ 11½ ॥

செய்து, **कृतार्थौ** - செய்யப்பட்ட பிரயோஜனமுடையவர்களாய், **त्रिदिवं** - ஸ்வர்க்கத்தை, **जग्मतुः** - அடைந்தார்கள், **इति** - என்று, **नः** - எங்களுக்கு, (அல்லது, எங்களால்) **श्रुतम्** - கேட்கப் பட்டது.

10½. (ப-ரை) **काकुत्स्थ** - ஹே ராகவா ! **सः** - அந்த தேவேந்திரன், **पुरा** - முன்பு, **यत्र**-எங்கு, **तपः सिद्धां** - தவத்தின் ஸித்திபடைந்த, **दितिं** -திதியை, **एवं** - இப்படி, **परिचचार** - பணிவிடை செய்தனனோ, **महेन्द्रात्** - அப்படிப்பட்ட, **सः** - தேவேந்திரனால், **उषिताः** - வாஸம் செய்யப்பட்ட, **देशः** - பிரதேசம், **एषः** - இது.

11½. (ப-ரை) **नरव्याघ्र** - ஹே புருஷ சிரேஷ்டனே ! **इक्ष्वाकोः** - இக்ஷ்வாகு மஹாராஜனுக்கு, **विशालः इति** - விசாலன் என்று, **विश्रुतः** - பிரஸித்தனான, **परमधार्मिकः** - வெகு தர்மமுடைய, **पुत्रः** - புத்திரன், **अलम्बुसायां** - அலம்புஸையினிடம், **उत्पन्नः** - உண்டானான்.

தேவேந்திரனும் அத்தபோவனத்திற் தம்மால் செய்யப்பட்ட காரிய ஸித்தியையுடையவர்களாய் இவ்வாறு முடிவு செய்துகொண்டு ஸ்வர்க்கலோகஞ் சென்றனர். என்று நான் கேட்டிருக்கின்றேன்.

10½. (க-ரை) ககுத்தவம்சத்தில் பிறந்த ஹே ராகவா ! எந்தவிடத்தில் திதி தவம் செய்து அவளிடத்தில் தேவேந்திரன் தொண்டு பூண்டானோ அத்தேசம் இதுவே. (என்றும்)

11½-12½. (க-ரை) புருஷோத்தமா ! எந்த ராஜவம்சத்தினர் இங்கு வஸித்திருக்கின்றார்களோ அதை இனிச் சொல்லுகின்றேன், கேளும், முன்னொரு காலத்தில் இக்ஷ்வாகுமஹாராஜனுக்கு அலம்புஸை என்னும் ஓர் பார்யையினிடத்தில் வெகு தார்மிஷ்டனான விசாலன் என்னொருவு புத்திரன் பிறந்தனன். அவ்விசாலன், தான் அரசு புரிவதற்காக இங்கு தன் பெயரினால் விசாலையென்னும் இப்

तेन चासीदिह स्थाने विशालेति पुरी कृता ।
विशालस्य सुतो राम हेमचन्द्रो महाबलः ॥ 12½ ॥

सुचन्द्र इति विख्यातो हेमचन्द्रादनन्तरः ।
सुचन्द्रतनयो राम धूम्राश्व इति विश्रुतः ॥ 13½ ॥

धूम्राश्वतनयश्चापि सृञ्जयः समपद्यत ।
सृञ्जयस्य सुतः श्रीमान्सहदेवः प्रतापवान् ॥ 14½ ॥

12½. (ப-ரை) **तेन च** - அந்த விசாலன் என்பவனாலேயே, **इह** -இந்த, **स्थाने**- இடத்தில், **विशालेति** - விசாலை என்கிற, **पुरी** - பட்டணம், **कृता** - செய்யப்பட்டதாக, **आसीत्** - ஆயிற்று, **राम** - ஹே ராமா! **विशालस्य** - விசாலனுக்கு, **महाबलः** - மிக பலமுடைய, **हेमचन्द्रः** - ஹேமசந்திரன் என்னும், **सुतः** - பிள்ளை, (உண்டானான்).

13½, (ப-ரை) **राम** - ஹே ராமா! **हेमचन्द्रात्** - ஹேமசந்திரனைக் காட்டிலும், **अनन्तरः** - வேறான, **सुचन्द्रः इति** - ஸுசந்திரன், என்று, **विख्यातः** - பிரஸித்தனான, (பிள்ளை உண்டானான்), **सुचन्द्रतनयः** - ஸுசந்திரனுக்குப் புத்திரனான, **धूम्राश्व इति** - தூம்ராச்வன் என்பவன், **विश्रुतः** - பிரஸித்தனாக, (உண்டானான்).

14½. (ப-ரை) **धूम्राश्व तनयः** - தூம்ராச்வனுடைய புத்திரனான, **सृञ्जयः** - ஸ்ருஞ்ஜயன், **समपद्यत** - உண்டானான், **सृञ्जयस्य** - ஸ்ருஞ்ஜயனுக்கு, **सुतः** - புத்திரனான, **श्रीमान्** - ஸம்பத்துடையவனும், **प्रतापवान्** - பிரபாவமுடையவனுமான, **सहदेवः** - ஸஹதேவன், (உண்டானான்).

பட்டணத்தை நிருமித்தினன். அவ்விசால மஹாராஜனுக்கு மிக்க பலமுள்ள ஹேமசந்திரன் என்ற புதல்வனொருவன் உண்டானான்.

13½-16. (க-ரை) ஹே ராகவா! கேளும், ஹேமசந்திரனென்னும் அவ்வரசனுக்கு மஹா பிரஸித்தனான ஸுசந்திரன் என்ற ஓர் மைந்தன் (குமாரன்) உண்டானான். ஸுசந்திரன் என்ற அவ்வரசனுக்கு தூம்ராச்வன் என்னும் பெயர் பூண்ட ஓர் புதல்வன் பிறந்தான். அந்த தூம்ராச்வன் என்பவனுக்கு ஸ்ருஞ்ஜயன் என்ற ஓர் புத்திரன் உதித்தனன். ஸ்ருஞ்ஜயன் என்பவனுக்கு மிக்க பராக்கிரமசாலியாயும், சிறந்த ஸம்பத்தையும் அடைந்த ஸஹதேவன் என்னும் பிரஸித்திபெற்ற ஓர் புத்திரன் உண்டானான். அந்த ஸஹதேவனென்னும் அரசனுக்கு மிகத்தார்மிகனான குசாச்வனென்னும் ஓர் புத்திரன் பிறந்தனன். குசாச்வனென்ற அவ்வரச

कुशाश्वः सहदेवस्य पुत्रः परमधार्मिकः ।
कुशाश्वस्य महातेजाः सोमदत्तः प्रतापवान् ॥ 15½ ॥
सोमदत्तस्य पुत्रस्तु काकुत्स्थ इति विश्रुतः ॥ 16 ॥
तस्य पुत्रो महातेजाः संप्रत्येष पुरीमिमाम् ।
आवसत्यमरप्रख्यः सुमतिर्नाम दुर्जयः ॥ 17 ॥
इक्ष्वाकोस्तु प्रसादेन सर्वे वैशालिका नृपाः ।
दीर्घायुषो महात्मानो वीर्यवन्तः सुधार्मिकाः ॥ 18 ॥

15½-16. (ப-ரை) **सहदेवस्य** - ஸஹதேவனுக்கு, **परमधार्मिकः** - மிகத்தார்மிகனை, **कुशाश्वः** - குசாச்வன் என்கிற, **पुत्रः** - புத்திரன், (உண்டானன்), **कुशाश्वस्य** - குசாச்வனுக்கு, **महातेजाः** - மிக்க தேஜஸ்ஸுடையவனும், **प्रतापवान्** - பராக்கிரமமுடையவனுமான, **सोमदत्तः** - ஸோம தத்தன் என்பவன், (உண்டானன்). **सोमदत्तस्य**-ஸோம தத்தனுக்கு, **काकुत्स्थ इति** - காகுத்தன் என்கிற, **विश्रुतः** - பிரஸித்தனை, **पुत्रः** - புத்திரன், (உண்டானன்).

17. (ப-ரை) **तस्य** - அந்த காகுத்தனுக்கு, **दुर्जयः** - ஜயிக்கக்கூடாதவனும், **महातेजाः** - மிகப்பிரபாவமுடையவனும், **अमरप्रख्यः** - தேவர்கள் போன்ற புகழுடைய வனும், **सुमतिः नाम** - ஸுமதி என்று பெயருடையவனுமான, **एषः** - இந்த, **पुत्रः** - புத்திரன், **संप्रति** - இப்பொழுது, **इमां** - இந்த, **पुरीं** - பட்டணத்தை, **आवसति** - ஆளுகின்றனன்.

18. (ப-ரை) **वैशालिकाः** - விசாலை நகரிலிருப்பவர்களான, **नृपाः** - அரசர்கள், **सर्वे** - எல்லோரும், **इक्ष्वाकोः** - இக்ஷ்வாகுவினுடைய, **प्रसादेन** - அனுக்கிரஹத்தால்,

னுக்கு மிகுந்த தேஜஸ்ஸும் அளவற்ற பராக்கிரமமும் பொருந்திய ஸோமதத்தன் என்ற ஓர் புதல்வன் உண்டானன். ஸோமதத்தன் என்ற அவ்வரசனுக்கு மஹா பிரஸித்தனை காகுத்தன் என்ற பெயர்பூண்ட ஓர் புத்திரன் தோன்றினன்.

17-18. (க-ரை) அக்காகுத்தனுக்கு மிகுந்த பராக்கிரமசாலியும், தேவர்களோ டொத்தவனும், பகைவரால் வெல்லமுடியாதவனுமான ஸுமதியென்ற பெயர் பூண்ட ஓர் புத்திரன் பிறந்தனன். அக்யாதிபெற்ற ஸுமதியென்ற அரசன்தான் இப்பொழுது இந்த விசாலை என்னும் நகரத்தை பரிபாலித்து வருகின்றனன். அந்த இக்ஷ்வாகு மஹாராஜனுடைய அனுக்கிரஹத்தினால் இப்பட்டணத்தை அரசாளும்

इहाद्य रजनीं राम सुखं वत्स्यामहे वयम् ।
श्वः प्रभाते नरश्रेष्ठ जनकं द्रष्टुमर्हसि ॥ 19 ॥

सुमतिस्तु महातेजा विश्वामित्रमुपागतम् ।
श्रुत्वा नरवरश्रेष्ठः प्रत्युद्गच्छन्महायशाः ॥ 20 ॥

पूजां च परमां कृत्वा सोपाध्यायः सबान्धवः ।
प्राञ्जलिः कुशलं पृष्ट्वा विश्वामित्रमथाब्रवीत् ॥ 21 ॥

दीर्घायुषः - நீண்ட ஆயுளையுடையவர்களாயும், **महात्मानः** - சிறந்த ஸ்வபாவமுடைய வர்களாகவும், **वीर्यवन्तः** - பராக்கிரமமுடையவர்களாகவும், **सुधार्मिकाः** - மிகுந்த தர்ம முடையவர்களாகவும், (ஆகின்றனர்).

19. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே நரோத்தமா! **वयं** - யாம், **अद्य** - இப்பொழுது, **इह** - இங்கே, **रजनीं** - இரவில், **सुखं वत्स्यामहे** - ஸுகமாக வஸிப்போம், **राम** - ஹே ராமா, **श्वः प्रभाते** - நாளைகாலையில், **जनकं** - ஜனகமஹாராஜனை, **द्रष्टुं** - பார்ப்பதற்கு, **अर्हसि** - தக்கவனாகின்றாய்.

20. (ப-ரை) **नरवरश्रेष्ठः** - நரோத்தமர்களுக்குள் சிறந்தவனும், **महातेजाः** - வெகு பிரபாவமுடையவனும், **महायशाः** - மிகக் கீர்த்தியுமுடைய, **सुमतिस्तु** -ஸுமதி யும், **विश्वामित्रं** - விச்வாமித்ர மஹரிஷியை, **उपागतं** - (இங்கு) வந்தவராக, **श्रुत्वा** - கேட்டு, **प्रत्युद्गच्छत्** - (அவரை) எதிர்ச் சென்றான்.

21. (ப-ரை) **सोपाध्यायः** (ஸுமதியென்னும் அவ்வரசன்) உபாத்யாயரோடும்,

எல்லா அரசர்களும் தர்மமுறை குறையாமல், தீர்க்கமான ஆயுளையும், மிகுந்த தைர்யத்தையும், சிறந்த வீர்யத்தையும் பெற்று அழியாமலிருக்கின்றனர்.

19 (க-ரை) ஹே ராமா! நாம் இன்றிரவு இங்கு ஸுகமாகத் தங்கியிருந்து, நாளையதினம் விடியற்காலத்தில், மிக்க தார்மிகரான மிதிலா நகரத்தரசனான ஜனக மஹாராஜனைப் பார்க்கப் போகலாம், என்றருளினார்.

20-22. (க-ரை) பிறகு, மஹாதேஜஸுடையவனும், சிறந்த யசஸுடைய வனுமான அந்த ஸுமதியென்னும் அவ்விசாலை நகரத்தரசன், விச்வாமித்திர மஹரிஷி தன் பட்டணத்தருகில் வந்திருப்பதாய் கேட்டு, உடனே தன்னுடைய புரோஹிதர்களுடனும், பந்துவர்க்கங்களோடும் கூடி எதிர்கொண்டுச் சென்று, அம்மஹரிஷிக்கு, அர்க்ய, பாத்ய, ஆசமனியங்கள் தந்து நன்கு பூஜித்து, கைகளைக்

धन्योऽस्म्यनुगृहीतोऽस्मि यस्य मे विषयं मुनिः ।
संप्राप्तो दर्शनं चैव नास्ति धन्यतरो मया ॥ 22 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
सप्तचत्वारिंशः सर्गः ॥ 47 ॥

सबान्धवः - பந்துக்களோடுகூடினவனாய், **परमां** - சிறந்த, **पूजां** - பூஜையை, **कृत्वा** - செய்து, **प्राञ्जलिः** - கைகூப்புடையவனாய், **कुशलं** - க்ஷேமத்தை, **पृष्ट्वा** - (விச்வாமித்திரரை) கேட்டு, **अथ** - பிறகு, **विश्वामित्रं** - விச்வாமித்திர மஹரிஷியை, (க்குறித்து) **अब्रवीत्** - சொன்னான்.

22. (ப-ரை) **मुनिः** - விச்வாமித்ர மஹரிஷி, **यस्य** - எந்த, **मे** - உன்னுடைய, **विषयं** - தேசத்தை, **संप्राप्तः** - நன்கடைந்தாரோ, **दर्शनं चैव** - பார்ப்பதையும், **प्राप्तः** - அடைந்தேனோ, **धन्यः** - (அப்படிப்பட்ட யான்) புண்ணியமுடையவனாக, **अस्मि** - ஆகின்றேன், **अनुगृहीतः** - அனுக்கிரஹிக்கப்பட்டவனுமாக, **अस्मि** - ஆகின்றேன். (ஆகையால்) **मया** - என்னோடு, **धन्यतरः** - மிக்க புண்யமுடையோன், **नास्ति**- இல்லை.

கூப்பிக்கொண்டு, க்ஷேமம் விசாரித்து பிறகு, அம்முனிவரை நோக்கி, ஹே மஹரிஷே! தேவரீர் இங்கு எழுந்தருளினமையால் என்னுடைய இத்தேசம் புனிதமாயிற்று. எனக்கு ஸேவை கொடுத்ததால் யானும் தன்யனானேன். மஹானுபாவராகிய உமது கடாக்ஷத்தையும் பெற்றனன். நல்வினை செய்தவருள் எனக்கு நிகர்யார்! என்று புகழ்ந்தனன்.

अष्टचत्वारिंशः सर्गः ॥ 48 ॥

पृष्ट्वा तु कुशलं तत्र परस्परसमागमे ।
कथान्ते सुमतिर्वाक्यं व्याजहार महामुनिम् ॥ 1 ॥

इमौ कुमारौ भद्रं ते देवतुल्यपराक्रमौ ।
गजसिंहगती वीरौ शार्दूलवृषभोपमौ ॥ 2 ॥

पद्मपत्रविशालाक्षौ खड्गतूणीधनुर्धरौ ।
अश्विनाविव रूपेण समुपस्थितयौवनौ ॥ 3 ॥

1. (ப-ரை) **तत्र**-அந்த விசாலை நகரத்தில், **परस्परसमागमे** - ஒருவரோடொருவர் சேருகையில் (அதாவது ஸுமதிமஹாராஜனும், விச்வமித்திர மஹரிஷியும் இவ்விருவரும் ஒன்று சேர்ந்தபொழுது) **सुमतिः** - ஸுமதியானவன், **कुशलं** - (விச்வாமித்திரமஹரிஷியை) க்ஷேமத்தை, **पृष्ट्वा** - கேட்டு, **कथान्ते** - வார்த்தையின் முடிவில், **महामुनिं** - அம்மஹரிஷியைக் குறித்து, **वाक्यं** - வார்த்தையை, **व्याजहार** - சொன்னான்.

2-6. (ப-ரை) **मुने** - ஹே விச்வமித்திரமஹரிஷே ! **ते** - உமக்கு, **भद्रं** - மங்களமுண்டாகுக, **देवतुल्यपराक्रमौ** - விஷ்ணுவோடு ஸமமான பராக்கிரமமுடையவரும், **गजसिंहगती** - யானைபோலவும், ஸிம்ஹம்போலவும் நடையையுடையவரும், **वीरौ** - பராக்கிரமமுடையவரும், **शार्दूलवृषभोपमौ** - புலியோடும், விருஷபத்தோடும் நிகரையுடையரும், **पद्मपत्रविशालाक्षौ** - தாமரைபூவின் இதழ்போல் அகன்ற திருக்கண்களுடையவரும், **खड्गतूणीधनुर्धरौ** - கத்தி, அம்புறாத்தூணி, வில் இவைகளையுடையவ

1. (க-ரை) இவ்வாறு ஸுமதி மஹாராஜனும் அவ் விச்வாமித்திர மஹரிஷியும் ஒருவருக்கொருவர் க்ஷேமத்தை விசாரித்து பிறகு, விச்வாமித்திரமுனிவரைப் பார்த்து பின்வருமாறு மொழிந்தனன்.

2-6. (க-ரை) மஹரிஷிகளிற் சிறந்த ஹே விச்வாமித்திரரே ! இக் குழந்தைகளிருவரும் யாவர் ? எந்த ஊர் ? எந்த மஹானுபாவருடைய புத்திரர்கள்? என்ன நிமித்தம் இங்கு வந்தார்கள் ? கற்களும், முட்களும் நிறைந்த இக்கடும் வனத்தில் மல்லிகையையும் பழிக்கத்தக்க மெல்லியதான தங்கள் கால்களின் அடிவைப்பை எப்படி வைத்தார்கள். இவர்களின் வயதைப்பார்த்தால் வெகு பால்யமாயிருக்கிறது; ஆனால் மஹிமையோ வென்றால் வெகு அரிதாக விருக்கின்றது. ரூபத்தை

यदृच्छयैव गां प्राप्तौ देवलोकादिवामरौ ।
कथं पद्भ्यामिह प्राप्तौ किमर्थं कस्य वा मुने ॥ 4 ॥

भूषयन्ताविमं देशं चन्द्रसूर्याविवाम्बरम् ।
परस्परस्य सदृशौ प्रमाणेङ्गितचेष्टितैः ॥ 5 ॥

किमर्थं च नरश्रेष्ठौ संप्राप्तौ दुर्गमे पथि ।
वरायुधधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्त्वतः ॥ 6 ॥

ரும், **रूपेण** - அழகால், **अश्विनाविव** -அச்வினி தேவர்கள் போலிருப்பவரும், **यदृच्छयैव**- தன்னிஷ்டத்தால், **देवलोकात्** -தேவலோகத்தினின்று, **गां** - பூமியை, **प्राप्तौ**-அடைந்த, **अमराविव** - தேவர்போலிருப்பவருமான, **इमौ** - இந்த, **कुमारौ** - பிள்ளைகள், **कथं** - எப்படி, **पद्भ्यां** - கால்களால், **किमर्थं** - எதற்காக, **वा** - அல்லது, **कस्य** - எவனுடைய நிமித்தம், **इह** - இங்கு, **प्राप्तौ** - வந்தார்கள், **अम्बरं** - ஆகாயத்தை, **चन्द्रसूर्याविव** - சந்திர ஸூரியர்போல், **इमं** - இந்த, **देशं** - தேசத்தை, **भूषयन्तौ** - அலங்கரிப்பவரும், **प्रमाणेङ्गितचेष्टितैः** - **प्रमाण** - ஆகாரத்தாலும், **इङ्गित** - அபிப்பிராயத்தாலும், **चेष्टितैः** - வியாபாரத்தாலும், **परस्परस्य**-ஒருவருக்கொருவருடைய, **सदृशौ** - ஸமானமுடைய வரும், **वरायुधधरौ-वर** - சிறந்த, **आयुध** - ஆயுதத்தை, **धरौ** - தரித்திருப்பவரும், **वीरौ**- பராக்கிரமசாலிகளுமான, (இவர்கள்) **दुर्गमेपथि-दुर्गमे** - குரூரமான, **पथि** - வழியில், **किमर्थं** - எதற்காக, **संप्राप्तौ** - வந்தார்கள், **मुनिश्रेष्ठ** - ஹே முனிவரே! **तत्त्वतः** - (இதை) உண்மையாக, **श्रोतुं** - கேட்பதற்கு, **इच्छामि** - விரும்புகின்றேன்.

வளர்க்கவல்ல யௌவனம் இப்பொழுது தான் வந்துகொண்டிருக்கின்றது, இப்பொழுதே காண்போர் மனதைக் கவரக்கூடிய ஸௌந்தர்யாதிசயமுடையவர்களாகத் தோன்றுகின்றனர். அப்போது அலர்ந்து மலர்ந்த செந்தாமரையின் யிதழ் போல் அகன்று நீண்டு விசாலமாய் காதளவோடு சுற்றிலும் வெளுத்து நடுவில் கருத்து செவ்வரியோடி ஸகல ஸாம்ராஜ்யாபிஷேகங்கொண்டு மூவ்வுலகங்களையும் ஒரு நாயகமாய் செங்கோல் செலுத்தும் தன்மையைக் காட்டிக்கொண்டு, யாவருங்கண்டு மதிமயங்கும்படி லாவண்ய வெள்ளங்குடிகொண்டு வீசுமொளியுடைய திருக்கண்களுடையவரும், குண்டலங்களிட்டுத் தோள்வளைகள் மாட்டி, ஹாரம் பூட்டி, அலங்கரிப்பதற்கு மிக்க யோக்கியமான திவ்யாவயவங்களில் கேடயம், வில், கத்தி, அம்புறுத்தூணி இவைகளை உடையவர்களும், உருவத்தில் ஒப்பில்லாத

तस्य तद्वचनं श्रुत्वा यथावृत्तं न्यवेदयत् ।
सिद्धाश्रमनिवासं च राक्षसानां वधं तथा ॥ 7 ॥
विश्वामित्रवचः श्रुत्वा राजा परमहर्षितः ।
अतिथी परमौ प्राप्तौ पुत्रौ दशरथस्य तौ ॥ 8 ॥

7. (ப-ரை) तस्य - அந்த ஸுமதியினுடைய, तत् वचनं - அந்த வார்த்தையை श्रुत्वा - (விச்வாமித்திரர்) கேட்டு, सिद्धाश्रमनिवासं च - சித்தாச்ரமத்திலிருந்ததையும், तथा - அப்படியே, राक्षसानां - அரக்கர்களுடைய, वधं - வதத்தையும், (மிதிலா நகரத்துப் போவதையும்) यथावृत्तं - நடந்தபடியே, न्यवेदयत् - சொன்னார்.

8-8½. (ப-ரை) राजा - அரசனான ஸுமதியானவன், विश्वामित्र वचः- விச்வாமித்

அச்வினீ தேவர்களையும் அடக்கி ஆளும் ரூபம் உடையவர்களும், இவர்களின் நடையழகைப் பார்க்கின், கய பயங்களோடு கூடி இன்னதென்று உருப்படாததான அபிப்பிராயத்தின் தோற்றத்தையுடையவர்களும், பூமியில் ஸஞ்சரிக்க விருப்பங் கொண்டுவந்த அழகிய தேவ குமாரர்களோவென்று சொல்லும்படியாயும், உயரம் முதலிய தேஹப்பிரமாணத்தாலும்,மனத்திலுள்ளகருத்தை வெளிப்படுத்துகின்ற பின்சிரிப்பு முதலிய குறிப்புக்களாலும், பேச்சு நடைமுதலிய சேஷ்டைகளாலும், ஒருவருக்கொருவரே நிகராயுடையவர்களாகவும் சத்திருமித்திரர்களுக்குத்தக்கபடி சைத்யப்பிரதாபாதிகளால் இப்பூமியை விளங்கச் செய்பவருமான இவர்களுடைய, ரூபாதி சயங்களைப் பார்த்தால் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவுக் கொப்பானவர்களென்று எண்ணும்படியாயிருக்கின்றது. இராஜதிருஷ்டிபடப் போகிறதென்று சிற்றம் வேண்டாம். உமக்கு மங்கள முண்டாகட்டும். இவைகளின் உண்மையை அறிந்தவரல்லவோ தாங்கள். ஆகையால் மஹரிஷே! இவைகளின் தத்வத்தை அறிய விரும்புகின்றேன். அருள் புரிந்து அருளிச் செய்யவேண்டும், என்றனன்.

7. (க-ரை) இவ்வாறு வினவிய ஸுமதிமன்னவனது மொழிகளைக் கேட்டு, தவத்தைச் செல்வமாகவுடைய அவ்விச்வாமித்திரமஹரிஷி, ஸ்ரீராகவன் திருவவதாரம் முதல், அவர் ஸித்தாச்ரமம் தன்னுடன் வந்து, அங்கு யாகத்தை யழிக்கவந்த அரக்கர்களைக் கொன்ற விருத்தாந்தத்தையும் சொல்லி, இனி ஜனகமஹாராஜனது யாகத்தைப் பார்க்கும் பொருட்டு மிதிலா நகரத்திற்கு எழுந்தருளுங் கருத்தையும் நடந்தபடியே அருளிச் செய்தனர்.

8-8½. (க-ரை) சிறந்த தவத்தையுடைய அவ்விச்வாமித்திர மஹரிஷி சொன்ன

पूजयामास विधिवत्सत्कारार्हौ महाबलौ ॥ 8½ ॥

ततः परमसत्कारं सुमतेः प्राप्य राघवौ ।
उष्य तत्र निशामेकां जग्मतुर्मिथिलां ततः ॥ 9½ ॥

तान्दृष्ट्वा मुनयः सर्वे जनकस्य पुरीं शुभाम् ।
साधुसाध्विति शंसन्तो मिथिलां समपूजयन् ॥ 10½ ॥

திரர் வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **परमहर्षित:** - வெகு களிப்புற்றவனாய், **महाबलौ** - வெகு பலமுடையவர்களும், **सत्कारार्हौ** - பூஜிக்கக் தகுந்தவர்களும், **प्राप्तौ** - (இங்கு) வந்தவர்களும், **परमौ** - சிறந்தவர்களும், **अतिथी**-அதிதிகளுமான, **तौ** -அந்த, **दशरथस्य**-தசரத சக்கிரவர்த்தியினுடைய, **पुत्रौ**-புத்திரர்களை, **विधिवत्** - யதா சாஸ்திரமாக, **पूजयामास** - பூஜித்தான்.

9½. (ப-ரை) **ततः** - பிறகு, **राघवौ** - ஸ்ரீ ராமலக்ஷ்மணாள், **सुमतेः** - ஸுமதியினிடத்திலிருந்து, **परमसत्कारं** - பூஜையை, **प्राप्य** - அடைந்து, **तत्र** - அந்த விசாலா நகரத்தில், **एकां** - ஒன்றான, **निशां** -இரவு முழுமையும், **उष्य** - கழித்து, **ततः** - பிறகு, **मिथिलां** - மிதிலா நகரத்தை, (க்குறித்து) **जग्मतुः** - சென்றனர்.

10½. (ப-ரை) **मुनयः** - மஹரிஷிகள், **सर्वे** - எல்லோரும், **शुभां** - மங்களகரமான, **जनकस्य** - ஜனகருடைய, **पुरीं** - பட்டணத்தை, (க்குறித்துப் போகின்ற) **तान्** - அந்த, (ராமலக்ஷ்மணாள் விச்வாமித்திரர் முதலானவர்களை) **दृष्ट्वा** - பார்த்து, **साधु** -

அவ்வினிய சொற்களைச் செவியுற்ற ஸுமதிமஹாராஜனும், மேலான அதிதிகள் தரிசனம் நமக்கு நேரிட்டதேயென்று களிகூர்ந்து யாவரும் பூஜிக்கத் தகுந்த மஹிமை பொருந்தி மிக்க பலசாலிகளாகிய அத்தசரத சக்கிவர்த்தியின் திருக்குமாரர்களாகிய ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களிருவரையும் மிகப்பரிவுடன் விதிப்படி உபசரித்துக் கொண்டாடினன்.

9½. (க-ரை) பின்பு ராமலக்ஷ்மணர்களிருவரும், அச்சுமதி மன்னவன்செய்த மேலான உபசாரத்தையடைந்து உள்ளம் மகிழ்ந்து அன்றிரவு அப்பட்டணத்தில் வஸித்து மறுநாள் உதயத்தில் புறப்பட்டு மிதிலாநகரத்தை நோக்கிச் சென்றனர்.

10½. (க-ரை) இவ்வாறு விச்வாமித்திரரோடு கூட மிதிலா நகரத்தை நோக்கிப் போகும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக் கண்ட முனிவர்களெல்லோரும், இனியன்றோ நமக்குக்ஷேமமென்று மகிழ்ந்து அவர்களைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

मिथिलोपवने तत्र आश्रमं दृश्य राघवः ।
पुराणं निर्जनं रम्यं पप्रच्छ मुनिपुङ्गवम् || 11½ ||
श्रीमदाश्रमसंकाशं किन्विदं मुनिवर्जितम् ।
श्रोतुमिच्छामि भगवन्कस्यायं पूर्व आश्रमः || 12½ ||

साध्विति - நல்லது நல்லது என்று, **शंसन्तः** - சொல்லினவர்களாய், **मिथिलां** - மிதிலையையும், **समपूजयन्** - நன்கு பூஜித்தனர்-

11½. (ப-ரை) **तत्र** - அங்கு, **राघवः** - ஸ்ரீராகவன், **मिथिलोपवने** - மிதிலைக்கருகிலிருக்கும் வனத்தில், **पुराणं** - பழையதும், **निर्जनं** - ஜநமற்றதும், **रम्यं** - அழகு பொருந்தியதுமான, **आश्रमं** - ஆச்ரமத்தை, **दृश्य** - பார்த்து, **मुनिपुङ्गवम्** - முனிசிரேஷ்டரை, (ப்பார்த்து) **पप्रच्छ** - கேட்டனர்.

12½. (ப-ரை) **भगवन्** - ஓ மஹாத்மிய முடையவரே! **मुनिवर्जितम्** - முனிவரால் விடப்பட்டதும், **श्रीमत्** - காந்தியுடையதும், **आश्रमसंकाशं** - ஆச்ரமம்போன்றதுமான, **इदं किंनु** - இது என்ன? **अयं पूर्वः** - இந்த பழையதான, **आश्रमः** - ஆச்ரமம், **कस्य** - யாருடையது, **श्रोतुं**-(அதனைக்) கேட்பதற்கு, **इच्छामि**- விரும்புகின்றேன்.

அல்லது, மஹானுபாவர்களான ராமலக்ஷ்மணர்கள் தாமே சென்று பரமபாவனமான தம் திருவடிகளிரண்டையும் வைத்ததின் ஸம்பந்தத்தைப் பெறும்படியான என்ன பாக்கியத்தைச் செய்ததோ! என்ன நோம்பு நோற்றதோ! என்ன புண்ய விசேஷமோ! என்று அம்மிதிலா நகரத்தைக் கொண்டாடினார்கள். அல்லது ஸர்வ மங்களகரையான ஸீதாதேவி அம்மிதிலையில் வாஸம் செய்யப்பெற்றபடியாலன்றோ இம்மிதிலா நகரத்திற்கு இவ்வளவு ஏற்றமுண்டாயிற்று, என்றும் அம்மஹரிஷிகளெல்லோரும் பலவாறாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

11½. (க-ரை) இவ்விதம் விச்வாமித்திரர், ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், மஹரிஷிகள், எல்லோரும் போய்க்கொண்டிருக்கையில் வழியில் மிதிலைக்குச் சமீபத்தில் ஓர் வனத்தில், ஜனங்களொருவருமின்றி, மஹரிஷிகளுடைய ஆச்ரமமொன்றுமில்லாமல் சூன்யமாக விளங்கின போதிலும், அழகாய் விளங்குகின்ற பழையதான ஓர் ஆச்ரமத்தைப் பார்த்து ஸ்ரீ ராகவன் அவ்விச்வாமித்திரரைப் பார்த்து இவ்வாறு வினவலானார்.

12½. (க-ரை) விச்வாமித்திர மஹரிஷியை நோக்கி ஸ்ரீ ராகவன், ஹே தபோதநரே! ஹே மஹானுபாவரே! இவ்விடம் வெகு அழகு பொருந்திய ஓர் ஆச்ரமம் போலக்காண்கின்றதே! ஆனால் இங்கு மஹரிஷிகள் ஒருவரும் காணப்படவில்லை, ஆகையால் முன்பு இது எந்த மஹரிஷியினுடைய ஆச்ரமம்? அதைக் கேட்கவிரும்புகின்றேன், அதை யருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

तच्छ्रुत्वा राघवेणोक्तं वाक्यं वाक्यविशारदः ।
प्रत्युवाच महातेजा विश्वामित्रो महामुनिः ॥ 13½ ॥

हन्त ते कथयिष्यामि शृणु तत्त्वेन राघव ।
यस्यैतदाश्रमपदं शप्तं कोपान्महात्मना ॥ 14½ ॥

गौतमस्य नरश्रेष्ठ पूर्वमासीन्महात्मनः ।
आश्रमो दिव्यसंकाशः सुरैरपि सुपूजितः ॥ 15½ ॥

13½. (ப-ரை) **वाक्यविशारदः** - பேசுவதில் வெகு ஸாமர்த்தியமுடையவரும், **महातेजाः** - வெகு தேஜஸ்ஸுடையவரும், **महामुनिः** - சிறந்த முனிவருமான, **विश्वामित्रः**- விச்வாமித்திரர், **राघवेण** -ஸ்ரீராகவனால், **उक्तं** -(இவ்வாறு) சொல்லப்பட்ட, **तत् वाक्यं**- அந்த வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டு, **प्रत्युवाच** - (பின்வருமாறு) பதில் சொன்னார்.

14½. (ப-ரை) **राघव** - ஹே ராகவா! **एतत्** - இந்த, **आश्रमपदं** - ஆச்ரமஸ்தானமானது, **यस्य** - எவ்வருடையதோ, **महात्मना** - (எந்த) சிறந்த ஸ்வபாவமுடையவரால், **कोपात्** - கோபத்தினால், **शप्तं** - சபிக்கப்பட்டதோ, **तत्** - அதை, **तत्त्वेन** - உண்மையினாலே, **शृणु** - கேளாய், **हन्त** - கஷ்டம், **ते** - உன்பொருட்டு, **कथयिष्यामि** - சொல்லுகின்றேன்.

15½. (ப-ரை) **नरश्रेष्ठ** - ஹே நரோத்தமா! **पूर्वं** - முன்பு, **महात्मनः** - சிறந்த புத்தியுடையவரான, **गौतमस्य** - கௌதமருடைய, **आश्रमः**-ஆச்ரமமாய், **दिव्य संकाशः**- நன்கு விளங்கப்பட்டதாகவும், **सुरैरपि** - தேவர்களாலும், **सुपूजितः** - நன்கு பூஜிக்கப்பட்டதாகவும், **आसीत्** - இருந்தது.

13½. (க-ரை) பேசுவதில் மிக்கத் திறமைவாய்ந்தவரும், பண்டிதருமான அவ்விச்வாமித்திர மஹரிஷி ஸ்ரீ ராகவன் இவ்வாறு அருளினதைச் செவியுற்று, அவ்வாச்ரமத்தின் விருத்தாந்தத்தை உண்மையாய்ச் சொல்ல வாரம்பித்தனர்.

14½. (க-ரை) அஹல்யையின் சாபத்திற்கு விடுமுறை நேரிட்டதேயென்று மிகச் சந்தோஷங்கொண்டு, ஸ்ரீ ராகவனைப் பார்த்து ஹே ராமா! இவ்வாச்ரமம் மிக்க ரமணீயமாயிருந்தபோதிலும், எந்த மஹானுபாவருடைய கோபத்தினால் இப்படியாயிற்றோ (அல்லது சாபத்தினால் இவ்வாறு ஆயிற்றோ) அம்மஹானுபாவரை உனக்குச் சொல்லுகின்றேன், கேளாய் என்றனர்.

15½. (க-ரை) ஹே நரோத்தமா! முன்பு இவ்வாச்ரமம் மஹானுபாவரான கௌதம முனிவருடைய ஆச்ரமம். அம்மஹானுபாவர் தவம் செய்துகொண்டிருந்ததுபற்றி, இது மிகப் பெருமை பொருந்தி விளங்கியிருந்தது. ஆகையால்

स चेह तप आतिष्ठदहल्यासहितः पुरा ।
वर्षपूगाननेकांश्च राजपुत्र महायशः || 16½ ||

तस्यान्तरं विदित्वा तु सहस्राक्षः शचीपतिः ।
मुनिवेषधरोऽहल्यामिदं वचनमब्रवीत् || 17½ ||

ऋतुकालं प्रतीक्षन्ते नार्थिनः सुसमाहिते ।
संगमं त्वहमिच्छामि त्वया सह सुमध्यमे || 18½ ||

16½. (ப-ரை) **महायशः** - வெகு கீர்த்தியுடைய, **राजपुत्र** - ஹே ராஜகுமாரனே! **पुरा** - முன்பு, **स च** - அந்த கௌதமரும், **इह** - இந்த ஆச்ரமத்தில், **अहल्यासहितः** - அஹல்யையுடன் கூடி, **अनेकान्** - அநேகங்களான, **वर्षपूगान्** - வருஷ ஸமூகங்களில், **तपः** - தவத்தை, **आतिष्ठत्** - செய்தனர்.

17½. (ப-ரை) **सहस्राक्षः** - ஆயிரம் கண்ணுடையவனும், **सचीपतिः** - சசீதேவிக்குப் பதியுமான, (தேவேந்திரன்) **तस्य** - அந்த கௌதமருடைய, **अन्तरं** - (ஆச்ரமத்திலில்லாமலிருக்கும்) அவகாசத்தை, **विदित्वा तु** - அறிந்து, **मुनिवेषधरः** - முனிவேடம் தரித்தவனாய், **अहल्यां** - அஹல்யையை, (குறித்து), **इदं** - இந்த, **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னான்.

18½. (ப-ரை) **सुसमाहिते** - நன்கியற்றப்பட்ட சரீரமுடையவளே! **अर्थिनः** - (காமத்தினால் போகத்தைக்) கோருகின்றவர்கள், **ऋतुकालं** - ருதுகாலத்தை, **न प्रतीक्षन्ते** -

---

தேவர்களாலும் வெகுவாய் புகழப்பெற்று தேவலோகத்திற்கும் மேன்மையாக விளங்கியிருந்தது.

16½. (க-ரை) ஹே சக்கிரவர்த்தி குமாரனே! அப்படிப்பட்ட இவ்வாச்ரமத்தில் பெரும்புகழ்பெற்ற அந்த கௌதம முனிவர் தன் பத்நியாகிய அஹல்யையுடன் முன்பு பல ஆண்டுகள் இங்கு தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

17½. (க-ரை) இவ்வாறு அம்முனிவர் தவம் புரிந்து கொண்டிருப்பதை ஒரு காலத்தில் தேவேந்திரனானவன் அறிந்து இக்கௌதமர் இல்லாத ஒரு ஸமயம் தெரிந்து அக்கௌதம முனிவரைப் போல் வேடம் பூண்டுவந்து அஹல்யையை நோக்கிப் பின்வருமாறு சொல்லி வேண்டினன்.

18½. (க-ரை) ஹே கோமளாங்கி! காமம் மீறி போகத்தை விரும்புகின்றவர்கள், இஷ்டப்படி க்ரீடிப்பார்களேயன்றி, ருதுகாலத்தை எதிர் பாராரன்றோ!

मुनिवेषं सहस्राक्षं विज्ञाय रघुनन्दन ।
मतिं चकार दुर्मेधा देवराजकुतूहलात् ॥ 19½ ॥

எதிர் பார்க்கமாட்டார்கள், (ஆகையால்) **सुमध्यमे** - ஹே நுண்ணிடையோளே! **अहं** - நான், **त्वया सह** - உன்னோடு கூட, **संगमं** - ஸம்பந்தத்தை, **इच्छामि** - விரும்புகின்றேன்.

19½, (ப-ரை) **रघुनन्दन** - ஹே ராகவா! **दुर्मेधा** - துஷ்டபுத்தியுடைய, (அஹல்யை) **मुनिवेषं**-கௌதம மஹரிஷி போன்ற வேஷமுடையவனும், **सहस्राक्षं** - ஆயிரம் கண்களுடையவனை, (தேவேந்திரன் என்று) **विज्ञाय** - அறிந்து, **देवराजकुतूहलात्** - தேவர்களுக்குத் தலைவனென்கிற உத்ஸாஹத்தினால், **मतिं** - (அவனோடு சேர) ஸம்மதத்தை, **चकार** - செய்தனள்.

அழகு யென்பதே உருக்கொண்டு ஓர் பெண்மணியாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கும் உன்னைக் கண்டால் எவன்தான் ஆசைப்படமாட்டான். ஆகையால் ஹே அஹல்யே! உன்னுடைய அழகான நுண்ணிய இடையைப் பார்த்து யான் இப்பொழுதே உன்னுடன் புணர விரும்புகின்றேன், என்றனன்.

19½. (க-ரை) "**कामातुराणां नभयं नलज्जा**" ஆதாவது, (காமத்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அச்சமும், லஜ்ஜையும் கிடையாது) என்கிறபடியே, தன்னாலும் பூஜிக்கத்தக்க பெருமையுடையதும், மஹரிஷிகள் வஸிக்கும்படியான ஆச்ரமமென்று தெரிந்திருந்தும்; இதில் இந்நினைவோடு நாம் புகுகிறோமே யென்கின்ற பயமில்லாமலும், அன்றியும், இதுகண்டு கௌதமருக்குண்டாகும் கடும் சீற்றத்தால் என்ன நேரிடுமோ வென்கின்ற அச்சமில்லாமலும், அஹல்யையின் பாதிவ்ருத்யத்தின் மஹிமையை யுணர்ந்திருந்தும் அவளோடு இதை எவ்வாறு சொல்லலாமென்கின்ற லஜ்ஜையுமில்லாமலும், கௌதமர் ஆச்ரமத்திலில்லாததையறிந்து கொண்டு,கௌதம முனிபோல் வேடம் தரித்து வந்த இந்த இந்திரனுக்கு அஹல்யையானவள் முகங்கொடாமலிருக்க வேண்டியிருக்க ஹே ராமா! அஹல்யையானவள் இவன் ஆயிரம் கண்களையுடைய தேவேந்திரனல்லவோ! தேவர்களுக்கெல்லாம் நாயகனல்லவோ! என்று தெரிந்து இவனே நன்மைத் தேடி வருவது என்கிற குதூஹலங்கொண்டு மதிமயங்கி இவனோடு சேர்ந்து இன்ப முருவதற்கு இணங்கினள்.

अथाब्रवीत्सुरश्रेष्ठं कृतार्थेनान्तरात्मना ।
कृतार्थास्मि सुरश्रेष्ठ गच्छ शीघ्रमितः प्रभो ॥ 20½ ॥
आत्मानं मां च देवेश सर्वदा रक्ष मानद ॥ 21 ॥

इन्द्रस्तु प्रहसन्वाक्यमहल्यामिदमब्रवीत् ।
सुश्रोणि परितुष्टोऽस्मि गमिष्यामि यथागतम् ॥ 22 ॥

20½-21. (ப-ரை) **अथ** - (கிரீடித்த) பிறகு, **सुरश्रेष्ठं** - தேவராஜனை தேவேந்திரனை, (க்குறித்து) **कृतार्थेन** - (அவ்வஹல்யை) நிறைவேறின பிரயோஜனமுடைய தான, **अन्तरात्मना** - மனதோடு கூடினவளாய், **सुरश्रेष्ठ** - ஹே தேவர்கோனே! **कृतार्थास्मि** - நிறைவேறின காரியமுடையவளாக, ஆனேன், (ஆகையால்) **प्रभो** - ஹே தேவநாயகா! **इतः** - இவ்விடத்தினின்று, **शीघ्रं** - விரைவில், **गच्छ**- நடவும், (हे) **मानद**- மானத்தை அளிப்போனே! **आत्मानं** - உன்னையும், **देवेश** - ஹே தேவர்கோனே! **मां च** - என்னையும், **सर्वदा** - எப்பொழுதும், **रक्ष** - ரக்ஷியும், (என்று) **अब्रवीत्** - சொன்னாள்.

22. (ப-ரை) **इन्द्रस्तु** - தேவேந்திரனோவெனில், **अहल्यां** - அஹல்யயை, (க்குறித்து) **प्रहसन्** - சிறித்துக் கொண்டு, **इदं वाक्यं** - இந்த வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னான், (हे) **सुश्रोणि** - சிறந்த பின் பாகமுடையவளே! **परितुष्टोऽस्मि** - (உன்னால்)

20½-21 (க-ரை) இவ்விதம் அவனோடு கலந்தநுபவித்து பிறகு அஹல்யை யானவள் இந்திரனை நோக்கி, ஹே தேவர்கோனே! ஹே தேவநாயகா! ஹே பிரபோ! இனி நீர் இங்கு இருக்கலாகாது, உமதிஷ்டப்படி செய்து முடித்தேன், இதை என் கணவர் அறிவாராயின் சாபமிட்டு நம்மிருவருடைய நிலைமையும் குலையச் செய்வார். ஆதலால் அப்படி நேரிடாமல் அவர் கண்ணுக்குப் புலப்படாமல், என்னையும் ரக்ஷித்து, உம்மையும் ரக்ஷித்துக் கொண்டு விரைவில் நடப்பீர், என்றனள்.

22-23. (க-ரை) ஹே ராமா! இவ்விதம் அஹல்யை சொன்ன வார்த்தைகளை தேவேந்திரனும் கேட்டு(பின்வரும் தீங்கைபுணராது வெகு கெட்டிக்காரனாயினேம் என்ற மனதுடன்) மந்தஹாஸங்கொண்டு அஹல்யையைப் பார்த்து, அடி பெண்மணியே! யானும் உன்னால் நல்ல இன்பத்தை யனுபவித்தேன்; இனியான் இங்கு நில்லேன் வந்தவழியே போகின்றேன், என்று கூறி அவளிடத்தில் விடை

एवं संगम्य तु तया निश्चक्रामोटजात्ततः ।
ससंभ्रामात्त्वरन्राम शङ्कितो गौतमं प्रति ॥ 23 ॥
गौतमं स ददर्शाथ प्रविशन्तं महामुनिम् ।
देवदानवदुर्धर्षं तपोबलसमन्वितम् ॥ 24 ॥
तीर्थोदकपरिक्लिन्नं दीप्यमानमिवानलम् ।
गृहीतसमिधं तत्र सकुशं मुनिपुङ्गवम् ॥ 25 ॥

ஸந்தோஷிக்கப்பட்டவளாக ஆகின்றேன். **यथागतम्** - (ஆகையால் யான்) வந்தபடி, **गमिष्यामि** - போகின்றேன். (என்றனன்).

23. (ப-ரை) **राम** - ஹே ராம! **सः** - அத்தேவேந்திரன், **एवं** - இவ்வாறு, **तया** - அவ்வஹல்யையோடு, **संगम्य** - சேர்ந்து, **ततः** - பிறகு, **संभ्रमात्** - பயத்தினால், **गौतमं प्रति** - கௌதமரைக் குறித்து, **शङ्कितः** - ஸந்தேஹமுடையவனாய், **त्वरन्** - அவஸரப்பட்டுக்கொண்டு, **उटजात्** - பர்ணசாலையிலிருந்து, **निश्चक्राम** - வெளிக்கிளம்பினன.

24-25-25½. (ப-ரை) **अथ** - பிறகு, **तत्र** - அவ்வாச்ரமத்தில், **सः** - தேவேந்திரன், **देवदानवदुर्धर्षं** - தேவர்களாலும், தானவர்களாலும், ஜயிக்கக்கூடாதவரும், **तपोबलसमन्वितम्** - தவத்தின் பலத்தோடு கூடினவரும், **तीर्थोदकपरिक्लिन्नं** - நதியின் ஜலத்தால் நனைந்திருப்பவரும், **अनलमिव**-அக்கினிபோல், **दीप्यमानं**-பிரகாசிப்பவரும், **गृहीतसमिधं** - கிரஹிக்கப்பட்ட ஸமித்தையுடையவரும், **सकुशं** - தர்ப்பையோடுகூடினவரும், **मुनिपुङ्गवम्** - முனிகளுக்குள் சிறந்தவரும், **महामुनिं**-மேலான முனிவரும்,

பெற்றுக்கொண்டு, கௌதமரெங்கு வந்து விடுவரோவென்று மனதில் மிக்க அச்சத்தால் அவ்வாச்ரமத்திலிருந்து சீக்கிரமாக வெளிக் கிளம்பினான்.

24-25-25½. (க-ரை) அவ்வாறு அத்தேவேந்திரன் அவ்வாச்ரமத்தை விட்டு புறப்பட்டு வெளிவருகையில், எதிரில், பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தர்ப்பையும், ஸமித்தையும் எடுத்துக்கொண்டு கமண்டலுவுங்கையுமாக ஜ்வலிக்கின்ற அக்கினிபோல் பிரகாசித்துக் கொண்டு, மஹரிஷிகளுக்குள் மிகச் சிறந்தவரும், தேவதானவர்களாலும் அசைக்கமுடியாத தபோ மஹிமையைப் பொருந்திய அக்கௌதம முனிவர் ஆச்ரமத்திற்குள் நுழைவதைக் கண்ணுற்ற

दृष्ट्वा सुरपतिस्त्रस्तो विवर्णवदनोऽभवत् ॥ 25½ ॥

अथ दृष्ट्वा सहस्राक्षं मुनिवेषधरं मुनिः ।
दुर्वृत्तं वृत्तसंपन्नो रोषाद्वचनमब्रवीत् ॥ 26½ ॥

मम रूपं समास्थाय कृतवानसि दुर्मते ।
अकर्तव्यमिदं तस्माद्विफलस्त्वं भविष्यसि ॥ 27½ ॥

प्रविशन्तं - (ஆச்ரமத்தில்) உள்நுழைபவருமான, **गौतमं** - கௌதமரை, **ददर्श** - கண்டான், **सुरपतिः** - தேவேந்திரன், **तत्र** - வெளிவரும் ஸமயத்தில், **दृष्ट्वा** - (அக்கௌதமரை) பார்த்து, **विवर्णवदनः** - சிணுங்கின முகமுடையவனாக, **अभवत्** - ஆனான்.

26½. (ப-ரை) **अथ** - பிறகு, **वृत्तसंपन्नः** - நல்ல ஆசாரத்தோடு கூடிய, **मुनिः** - கௌதமமாமுனிவர், **मुनिवेषधरं** - (தன்னைப்போல்) முனிவர் வேஷம் பூண்டவனும், **दुर्वृत्तं**-துச்சரிதமுடையவனும், **सहस्राक्षं**-ஆயிரங்கண்களுடையவனுமான (இந்திரனை) **दृष्ट्वा** - பார்த்து, **रोषात्** - ரோஷத்தினால், **वचनं** - வார்த்தையை, **अब्रवीत्** - சொன்னார்.

27½. (ப-ரை) (हे) **दुर्मते** - ஹே துஷ்டபுத்தியுடைய இந்திரா! **त्वं** - நீ, **मम** - என்னுடைய, **रूपं** - உருவத்தை, **समास्थाय** - நன்கடைந்து, **अकर्तव्यं** - செய்யத்தகாததான, **इदं** - இந்த காரியத்தை, **कृतवान्** - செய்தவனாக, **असि** - ஆகின்றாய். **तस्मात्**- ஆகையால், (நீ) **विफलः** - விழுந்துபோன விருஷணங்களுடையவனாய். **भविष्यसि** - ஆகக்கடவாய், (என்று சபித்தனர்).

அத் தேவேந்திரன் நடுநடுங்கி தேஹம் தளர்ந்து பலமொடுங்கி தலை குனிந்து உருமாறினான்.

26½-27½. (க-ரை) இப்படி அத் தேவேந்திரன் நடுநடுங்கி தலை குனிந்து உருமாறி நின்றதை உடனே அக் கௌதமர் கண்டு, "யாரடா, இவன் நம் உருவெடுத்திருக்கின்றான்" என்று ஆலோசித்து, தம் தபோமஹிமையால் தேவேந்திரனென அறிந்து அவனது கொடுஞ் செயலையுமறிந்து கடுங்கோபங்கொண்டு இந்திரனைநோக்கி, அடா துஷ்டா! மதிகேடனே! நீ காமமயக்கங் கொண்டு என் வேஷம் பூண்டு, க்ருத்யாக்ருத்ய விவேக சூன்யனாய், செய்யத் தகாத இக்காரியம் செய்ததமையால், அதற்குக் காரணங்களான உன் அண்டங்கள் இரண்டும் அறுந்து விழக் கடவதென்று சபித்தனர்.

गौतमेनैवमुक्तस्य सरोषेण महात्मना ।
पेततुर्वृषणौ भूमौ सहस्राक्षस्य तत्क्षणात् ॥ 28½ ॥

तथा शप्त्वा स वै शक्रमहल्यामपि शप्तवान् ।
इह वर्षसहस्राणि बहूनि त्वं निवत्स्यसि ॥ 29½ ॥

*वायुभक्षा निराहारा तप्यन्ती भस्मशायिनी ।
अदृश्या सर्वभूतानामाश्रमेऽस्मिन्निवत्स्यसि ॥ 30½ ॥

28½. (ப-ரை) **सरोषेण** - ரோஷத்தோடுகூட, **महात्मना** - சிறந்த ஸ்வபாவமுடைய, **गौतमेन** - கௌதமரால், **एवं** - இப்படி, **उक्तस्य** - சொல்லப்பட்ட, **सहस्राक्षस्य** - தேவேந்திரனுடைய, **वृषणौ** - விருஷணங்கள், **तत्क्षणात्** - அந்த க்ஷணத்திலேயே, **भूमौ** - பூமியில், **पेततुः** - விழுந்ததுகள்.

29½. (ப-ரை) **सः** - அந்த கௌதமர், **शक्रं** - இந்திரனை, **तथा** - அப்படி, **शप्त्वा** - சபித்து, **अहल्यामपि** - அஹல்யையும், **शप्तवान्** - சபித்தனர், **त्वं** - நீ, (ஹே அஹல்யே!) **इह** - இங்கு, **बहूनि** - அநேகங்களான, **वर्षसहस्राणि** - வருஷங்களினுயிரங்களில், **निवत्स्यसि** - வஸிக்கக்கடவாய்,

30½. (ப-ரை) **अस्मिन्** - இந்த, **आश्रमे** - ஆச்ரமத்தில், **निराहारा** - ஆஹாரமில்லாமலும், **भस्मशायिनी** - தரையில் படுப்பவளாயும், **तप्यन्ती** - தவம் செய்கின்றவளா

28½. (க-ரை) இவ்விதம் மஹானுபாவராகிய அக்கௌதம மாமுனிவர் கோபாவேசங்கொண்டு சபித்தவுடனேயே, இந்திரனுடைய அண்டங்களிரண்டும் அறுந்து கீழே விழுந்து விட்டன.

29½ (க-ரை) இவ்விதம் தேவேந்திரனைச் சபித்து பிறகு அக்கௌதமர் அஹல்யையை நோக்கி, அடிகெட்ட செயலுடையவளே! என் வேடம் பூண்டுவந்த இந்திரனை, தேவேந்திரனென்று தெரிந்து, நீ மதிகெட்டவள் மோஹத்தில் மயங்கி என்னை மறந்து, செய்யக்கூடாத கெட்டசெயலைச் செய்தமையால் நீ இங்கே அநேகமாயிரம் வருஷங்கள் வஸிக்கக் கடவாய், என சபித்தனர்.

30½ (க-ரை) ஹே அஹல்யே! நீ இவ்வாச்ரமத்தில் அன்ன பாநாதிகளின்றி,

* இந்த ஸர்க்கத்தில் 19½வது ச்லோகத்தில் தேவேந்திரன் அஹல்யையினுடைய ரூபலாவண்யத்தைக்கண்டு காமவெறிகொண்டு, அவளுடன் அனுபவிக்கவேணுமென்று எண்ணத்தைக்கொண்டு, கௌதமர்போல் வேஷம் பூண்டு அந்த ஆச்ரமத்திற்கு வந்து அஹல்யையைப் பார்த்து தான் வந்த காரியத்தைச் சொன்ன

यदा चैतद्वनं घोरं रामो दशरथात्मजः ।
आगमिष्यति दुर्धर्षस्तदा पूता भविष्यसि || 31½ ||
तस्यातिथ्येन दुर्वृत्ते लोभमोहविवर्जिता ।
मत्सकाशे मुदा युक्ता स्वं वपुर्धारयिष्यसि || 32½ ||

யும், **वायुभक्षा** - காற்றை புஜித்துக் கொண்டும், **सर्वभूतानां** - ஸகலப்பிராணிகளுக்கும், **अदृश्या** - தெரியாதவளுமாக, **निवत्स्यसि** - வஸிக்கக்கடவாய், என்று சபித்தனர்.

31½. (ப-ரை) **घोरं** - பயங்கரமான, **एतत्** - இந்த, **वचनं** - வசனத்தை, (க்குறித்து) **दुर्धर्षः** - ஜயிக்கக்கூடாதவரும், **दशरथात्मजः** - தசரதருக்குப் புத்திரருமான, **रामः** - ஸ்ரீ ராகவன், **यदा** - எப்பொழுது, **आगमिष्यति** - வருவாரோ, **तदा** - அப்பொழுது, (அவரால்) **पूता** - பரிசுத்தையாக, **भविष्यसि** - ஆகக்கடவாய்.

32½. (ப-ரை) **दुर्वृत्ते** - ஹே துர்நடத்தையுடையோளே! (நீ) **तस्य** - அந்த ராகவனுடைய, **आतिथ्येन** - அதிதி ஸத்காரத்தால், **लोभमोहविवर्जिता** - ஆசை, பிரமம்,

காற்றையுண்டு, வருத்தமடைந்து இப்புழுதியில் புரண்டு உருண்டு எந்தப்பிராணிகளுக்கும் தெரியாமல் வஸிக்கக்கடவாய்.

31½ (க-ரை) இவ்வாறு சபித்துவிட்டு பிறகு ஓ துர்நடத்தையுள்ளவளே! எப்பொழுது தசரத சக்கிரவர்த்தித் திருக்குமாரரான ஸ்ரீ ராகவன் இங்குவருவரோ அப்பொழுது அவருடைய திருவடிகளின் தூள் பட்டு பரிசுத்தையாகக் கடவாய் என்றும் சொன்னர்.

32½ (க-ரை) அங்கனம், அப்பரம புருஷனை ஸ்ரீ ராகவனுடைய பாத தூளி ஸ்பர்சத்தால் பரிசுத்தையாகி லோபமோஹங்களைவிட்டு உன்னுருவங் கொண்டு, அப்புருஷோத்தமனை அதிதி ஸத்காரங்கொண்டு பூஜித்து பிறகு என்

தும், இவன் தேவேந்திரன் என்று அஹல்யை அறிந்து, அவனுடன் இன்புற ஆசைப்பட்டு, அவனுடன் அநுபவித்தனள். பிறகு அவ்வாச்ரமத்தை விட்டுப் புறப்படும்பொழுது, கௌதமர் நதியிலிருந்து அநுஷ்டானங்களைச் செய்து கொண்டு ஆச்ரமத்திற்குள் நுழையவும், கௌதமர் தன்னுடைய ஞானத்ருஷ்டியால் இவன் இன்னனென்றும், அஹல்யை மதிகெட்டு இவனுக்கு இணங்கி செய்யத் தகாத கார்யத்தைத் துணிந்து செய்ததையும் அறிந்து அவ்விருவர்களையும் சபித்தனர். வேறு புராணங்களில் இவ்விஷயங்களைப்பற்றி பலவாறுகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸர்க்கம் 30½ சுலோகத்தில் **भस्मशायिनी अदृश्या सर्वभूतानां निवत्स्यसि** என்னும், அதாவது, புழுதியில் உருண்டு புரண்டு ஒரு பிராணி

एवमुक्त्वा महातेजा गौतमो दुष्टचारिणीम् ।
इममाश्रममुत्सृज्य सिद्धचारणसेविते ॥ 33½ ॥
हिमवच्छिखरे रम्ये तपस्तेपे महातपाः ॥ 34 ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये बालकाण्डेऽष्टचत्वारिंशः सर्गः ॥ 48 ॥

இவைகளைவிட்டவளாய், मत्सकाशे - என்னிடத்தில், मुदा - ஸந்தோஷத்தோடு, युक्ता- கூடினவளாய், स्वं - உன்னுடையதான, वपुः - சரீரத்தை, धारयिष्यसि - தரிக்கக் கடவாய்.

33½-34. (ப-ரை) महातपाः - வெகு தவமுடையவரும், महातेजाः - வெகுபிரபாவமுடையவருமான, गौतमः - கௌதமர், दुष्टचारिणीम् - துர்நடத்தையுடைய (அஹல்யையை) एवं - இப்படி, उक्त्वा - சொல்லி, इदं - இந்த, आश्रमं - ஆச்ரமத்தை, उत्सृज्य - விட்டு, सिद्धचारण सेविते - ஸித்தர், சாரணர் இவர்களால் அடையப்பட்ட, पुण्ये - பரிசுத்தமான, हिमवच्छिखरे - ஹிமயமலையின் நுனியில், तपः - (கோபத்தால் சபித்தபாபத்தைபொழிக்க) தவத்தை, तेपे - தவம் செய்தார்.

னோடு ஸந்தோஷத்துடன் இருக்கக்கடவாய்,என்று சாபமும் அதற்கு சமனமும் தெரிவித்தனர்.

33½-34 (க-ரை) மிக்க தேஜஸுடையவரான அக்கௌதமமாமுனிவர் தீச்செயலைச் செய்த அஹல்யையைக் குறித்து இவ்வாறு சொல்லிவிட்டு அவ்வாச்ரமத்தைவிட்டு ஸித்தர்களாலும், சாரணர்களாலும், சூழப்பட்டு மிகப்பாவனமாயிருக்கின்ற ஹிமயமலையின் சிகரத்தில் சாப நிமித்தமான பாபத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு தவம் செய்யச் சென்றனர்.

களுக்கும் புலப்படாமல் வஸித்துக்கொண்டிருப்பாயாக என்றும் சபித்தனர். இவ்விஷயத்தைப் பற்றியும் இதர புராணங்களில் வேறுபாடாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விஷயங்களில் வால்மீக ராமாயணத்திற்கு விரோதமின்னியில் இருக்கும் வசனங்களை புத்திமான்கள் கிரஹித்துக் கொள்ளவும்.

एकोनपञ्चाशः सर्गः ॥ 49 ॥

अफलस्तु ततः शक्रो देवानग्निपुरोधसः ।
अब्रवीत्त्रस्तवदनः सर्षिसङ्घान्सचारणान् ॥ 1 ॥

कुर्वता तपसो विघ्नं गौतमस्य महात्मनः ।
क्रोधमुत्पाद्य हि मया सुरकार्यमिदं कृतम् ॥ 2 ॥

अफलोऽस्मि कृतस्तेन क्रोधात्सा च निराकृता ।
शापमोक्षेण महता तपोऽस्यापहृतं मया ॥ 3 ॥

1. (ப-ரை) **ततः** - பிறகு, **अफलः** - விருஷணமற்ற, **शक्रः** - இந்திரன், **त्रस्तवदनः** - பயமுற்றமுகமுடையவனாய், **सर्षिसङ्घान्** - ரிஷிக்கூட்டங்களோடும், **सचारणान्** - சாரணர்களோடுங்கூடினவரும், **अग्निपुरोधसः** - அக்கினியை முன்னிட்டவருமான, **देवान्** - தேவர்களை, (க்குறித்து) **अब्रवीत्** - சொல்லினன்.

2. (ப-ரை) **महात्मनः** - சிறந்த புத்தியுடையரான, **गौतमस्य** - (அந்த) கௌதமருடைய, **तपसः** -(தம் ஸ்தானத்திலிருந்து நழுவச்செய்யத் தக்க) தவத்திற்கு, **विघ्नं** - இடையூறையும், **क्रोधं** - (அவருக்குக்) கோபத்தையும், **उत्पाद्य**-உண்டுபண்ணி, **कुर्वता** - (அதனாலே சாபம் கொடுக்கும்படி) செய்து, **मया** - என்னால், **इदं** - இந்த, **सुरकार्यं** - தேவகாரியமானது, **कृतं** - செய்யப்பட்டது.

3. (ப-ரை) **तेन** - அக்கௌதமரால், **सा च** - அஹல்யையும், **निराकृता** - சபிக்

1 (க-ரை) தேவேந்திரன் அக்கௌதமரின் சாபத்தால் அண்டங்களற்று, என்ன செய்வோமென முகத்தில் வருத்தந்தோன்றும்படி மிக்கமனக்கலக்கத்துடன் வெளியில்வர தைர்யமிழந்து, பிறகு ரிஷிகூட்டங்கள் நிறைந்து சாரணர்களோடு கூடிய அக்கினி முதலான தேவர்களை நோக்கி இவ்விதம் சொல்லத் துடங்கினன்.

2 (க-ரை) ஹே தேவர்களே ! நமக்கு விரோதமான தவத்தை எவர் செய்யினும் அதைக்கெடுப்பது நமது கடமையல்லவோ ? ஆகையால் மஹானுபாவராகிய அக்கௌதமமுனிவர் கடுந்தவம் செய்கையில் தேவர்களுக்கு என்ன கெடுதி நேரிடுமோவென்று பயந்து, அவரது தவத்தைக் கெடுப்பதற்கு வேறு ஒரு வகையுங் காணாது நான் அவர் பத்தினியோடு சேர்ந்து அவருக்குக் கோபமுண்டாகுமாறு செய்து அதனால் சாபமிடும்படியும் செய்தேன், இப்படி யான் செய்தது தேவர்களின் நன்மைக்காகவேயன்றி வேறில்லை.

3. (க-ரை) அக்கௌதம மாமுனிவரும் பெருத்த கோபங்கொண்டு அஹல்

तस्मात्सुरवराः सर्वे सर्षिसङ्घाः सचारणाः ।
सुरसाह्यकरं सर्वे सफलं कर्तुमर्हथ ॥ 4 ॥

शतक्रतोर्वचः श्रुत्वा देवाः साग्निपुरोगमाः ।
पितृदेवानुपेत्याहुः सर्वे सह मरुद्गणैः ॥ 5 ॥

கப்பட்டாள், **क्रोधात्**-கோபத்தால், **अफलः** (யானும்) விருஷணமற்றவனாக, **कृतोस्मि** - செய்யப்பட்டவனானேன், **महता** - பெரிதான, **शापमोक्षेण** - (இந்த) சாபமிடுவதினால், **अस्य** - இக்கௌதமருடைய, **तपः** - தவம், **मया** - என்னால், **अपहृतं** - அபஹரிக்கப் பட்டது.

4. (ப-ரை) **सर्वे** - ஸமஸ்தர்களான, (हे) **सुरवराः** - ஹே தேவசிரேஷ்டர்களே ! **तस्मात्** - (யான் பிரயோஜன மற்றவனாய்) இருப்பதினாலே, **सचारणाः** - சாரணர்களோடும், **सर्षिसङ्घाः** - ரிஷிகளோடும் கூடின, **सर्वे** - (நீங்கள்) எல்லோரும், (என்னை) **सुरसाह्यकरं** - தேவர்களுக்கு நன்மையைச் செய்து, **सफलं** - பலமுடையவனாக, **कर्तुं** - செய்வதற்கு, **अर्हथ** - உரியராகின்றீர். என்றனன்.

5. (ப-ரை) **शतक्रतोः** - (நூறு யாகம் செய்த) இந்திரனுடைய, **वचः** - வார்த்தையை, **श्रुत्वा** - கேட்டவர்களான, **साग्निपुरोगमाः**-அக்கினியை முன்னிட்டவர்களான

யையும் சபித்தனர். என்மேலும் கோபங்கொண்டு எனது அண்டங்களையும் போக்கினர். இவ்வாறு அம்மாமுனிவர் எங்களுக்கு அப்பெருஞ்சாபங்கொடுத்தது பற்றி அவருடைய தவம் குறைந்து கெடுக்கப்பட்டது.

4. (க-ரை) ஆகையால் ஹே தேவர்களே ! நீங்களெல்லோரும், உங்களுக்கு நன்மைச்செய்ய முயன்ற எனக்கு அண்டங்களுண்டாகும்படிச் செய்யவேண்டும், என்று வேண்டிக்கொண்டனன்.

5-6. (க-ரை) இவ்வாறு மொழிந்த தேவேந்திரனுடைய அவ்வார்த்தைகளைக் கேட்டு அக்கினிமுதலான ஸகலதேவர்களும் மருத்கணங்களோடுகூடி பித்ருதேவர்

[पुराऽविचार्य मोहेन मुनिपत्नीं शतक्रतुः ।
धर्षयित्वा मुनेः शापात्तत्रैष विफलीकृतः ॥ 1 ॥
इदानीं कुप्यते देवान्देवराजः पुरंदरः ॥ 1½ ॥]

அதிக பாடம்.

अयं मेषः सवृषणः शक्रो ह्यवृषणः कृतः ।
मेषस्य वृषणौ गृह्य शक्रायाशु प्रयच्छथ || 6 ||
अफलस्तु कृतो मेषः परां तुष्टिं प्रदास्यति || 6½ ||
भवतां हर्षणार्थे च ये च दास्यन्ति मानवाः ।
अक्षयं हि फलं तेषां यूयं दास्यथ पुष्कलम् || 7½ ||

देवाः - தேவர்கள், **सर्वे** - ஸகலர்களான, **मरुद्गणैः सह** வாயுகணங்களோடு கூடி, **पितृदेवान्** - பித்ருதேவர்களை, **उपेत्य** - அடைந்து, **आहुः** - சொன்னார்கள்.

6. (ப-ரை) **अयं** - இந்த, **मेषः** - ஆடு, **सवृषणः** - விருஷணத்தோடு கூடினது, **शक्रः** - தேவேந்திரன், **अवृषणः** - விருஷணமில்லாதவனாக, **कृतोहि** - செய்யப்பட்டானன்றோ! **मेषस्य** - (ஆகையால்) ஆட்டினுடைய, **वृषणौ** - விருஷணத்தை, **गृह्य** எடுத்து, **आशु** - சீக்கிரம், **शक्राय** - தேவேந்திரன் பொருட்டு, **प्रयच्छथ** - கொடுங்கள்.

6½. (ப-ரை) **अफलः** - விருஷணமில்லாததாக, **कृतः** - செய்யப்பட்ட, **मेषस्तु** - ஆடோவெனில், **परां** - (உங்களுக்கு) மிகுந்த, **तुष्टिं** - ஸந்தோஷத்தை, **प्रदास्यति** - கொடுக்கும்.

7½. (ப-ரை) **भवतां** - உங்களுடைய, **हर्षणार्थे** - ஸந்தோஷத்தின் பொருட்டு, **ये च** - எந்த, **मानवाः** - மனிதர்கள், **दास्यन्ति**, -(விருஷணமற்ற ஆட்டை) கொடுக்கின்றார்களோ! **तेषां** - அவர்களுக்கு, **यूयं** - நீங்கள், **अक्षयं** - குறையற்றதும், **पुष्कलम्** - நிறைந்ததுமான, **फलं** - பிரயோஜனத்தை, **दास्यथ** - கொடுப்பீர்களாக.

களிடஞ்சென்று, ஹே பித்ரு தேவர்களே! நமக்கு அதிபதியான தேவேந்திரன் நம் காரியத்தின் பொருட்டு அண்டங்களிரண்டையும் இழந்தனன். ஆகையால் உங்களுக்காக யாகங்களில் யூபஸ்தம்பத்திற்கட்டிய மேஷத்தினண்டங்களை யெடுத்து தேவேந்திரனுக்குக் கொடுக்கவேண்டும் என்றனர்.

6½-7½ (க-ரை) இவ்வாறு செய்வதால், ஸந்தோஷம் குறையுமென எண்ண வேண்டாம், ஆடுகளை அண்டமற்றவைகளாகச் செய்தபோதிலும், நீங்களும் இதுமுதல் அண்டமற்ற ஆடுகளையே புசிக்கவேண்டும். இப்படிச் செய்வீர்களாகில் நமக்கும் யாகம் செய்யும் மனிதர்களும் அண்டமில்லாத மேஷத்தின் மாம்ஸத்தையே கொடுப்பார்கள். அதனால் நமக்கும், அப்படியாகஞ்செய்வோருக்கும் குறைவில்லாமல் பேரானந்தம் உண்டாகும், என்றனர்.

अग्नेस्तु वचनं श्रुत्वा पितृदेवाः समागताः ।
उत्पाट्य मेषवृषणौ सहस्राक्षे न्यवेशयन् ॥ 8½ ॥

तदाप्रभृति काकुत्स्थ पितृदेवाः समागताः ।
अफलान्भुञ्जते मेषान्फलैस्तेषामयोजयन् ॥ 9½ ॥

इन्द्रस्तु मेषवृषणस्तदाप्रभृति राघव ।
गौतमस्य प्रभावेन तपसश्च महात्मनः ॥ 10½ ॥

8½. (ப-ரை) **अग्नेः** - அக்கினியினுடைய, **वचनं** - வார்த்தையை, **श्रुत्वा** -கேட்டு, **समागताः** - வந்திருக்கின்ற, **पितृदेवाः** - பித்ரு தேவர்கள், **मेषवृषणौ** - ஆட்டின் விருஷணத்தை, **उत्पाट्य** - பிடுங்கி, **सहस्राक्षे** - தேவேந்திரனின் பொருட்டு, **न्यवेशयन्** - வைத்தனர்.

9½. (ப-ரை) **काकुत्स्थ** - ககுத்தவம்சத்திற் பிறந்த ஹே ராமா! **तदाप्रभृति** -(தேவேந்திரனுக்கு) விருஷணம் கொடுத்தது முதல், **पितृदेवाः** - பித்ரு தேவர்கள், **समागताः**-வந்தவர்களாய், **अफलान्** -விருஷணமற்ற, **मेषान्** - ஆடுகளை, **भुञ्जते**-புசிக்கின்றனர், **तेषां** - யாகம் செய்பவர்களையும், **फलैः** -பலங்களோடு, **अयोजयन्** - சேர்ப்பிக்கின்றனர்.

10½. (ப-ரை) (हे) **राघव** - ஹே ராகவா ! **तदाप्रभृति** - விருஷணங் கொடுத்தது முதல், **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **गौतमस्य** - கௌதமருடைய, **तपसश्च** - தவத்தினுடையவும், **प्रभावेन** - மஹிமையால், **इन्द्रः** - இந்திரன், **मेषवृषणः** - மேஷவிருஷணனாக, (ஆனான்).

8½. (க-ரை) இவ்வாறு அக்கினி முதலிய தேவர்களின் அவ்வார்த்தையைக் கேட்ட உடனே பித்ரு தேவர்கள் எல்லோரும் அப்பொழுதே யூபஸ்தம்பத்திற் கட்டப்பட்டிருக்கின்ற ஆட்டின் அண்டங்களைக் கொய்து எடுத்து இந்திரனுக்கு உபயோகப்படுத்தினர்.

9½-10½ (க-ரை) ஹே காகுத்தா ! அதுமுதல் பித்ருதேவதைகளுக்குச் செய்யும் யாகங்களில் மேஷங்களினண்டங்களை நீக்கி மற்ற உருப்புகளைப் பசனம் செய்து ஹோமம் செய்கின்றனர். பித்ரு தேவதைகளும் அதை அங்கீகரிக்கின்றனர். அப்படி யாகஞ்செய்யும் மனிதர்களுக்கு அப்பலன்களையும் கொடுக்கின்றனர். இந்திரனும் அது முதல் "மேஷவிருஷணன்" என்று பெயர் பெற்றனன்.

तदागच्छ महातेज आश्रमं पुण्यकर्मणः ।
तारयैनां महाभागामहल्यां देवरूपिणीम् ॥ 11½ ॥

विश्वामित्रवचः श्रुत्वा राघवः सहलक्ष्मणः ।
विश्वामित्रं पुरस्कृत्य तमाश्रममथाविशत् ॥ 12½ ॥

ददर्श च महाभागां तपसा द्योतितप्रभाम् ।
लोकैरपि समागम्य दुर्निरीक्ष्यां सुरासुरैः ॥ 13½ ॥

11½. (ப-ரை) **महातेजः** - வெகு தேஜஸ்ஸுடைய ஹே ராமா ! **तत्** - அஹல்யை சாபத்தால் கிடப்பதால், **पुण्यकर्मणः** - புண்ணிய கார்யத்தையுடைய, (கௌதமருடைய) **आश्रमं** - ஆச்ரமத்தை, (க்குறித்து) **आगच्छ** - வருக, **महाभागं** - மஹாபாக்கியமுடையவளும், **देवरूपिणीम्** - தேவர்போன்ற உருவமுடைய, **एनां** - இந்த, **अहल्यां** - அஹல்யயை, **तारय**-ஈடேரச் செய்யும் அல்லது காப்பாற்றும், அல்லது ரக்ஷிக்கவும்.

12½. (ப-ரை) **राघवः** - ஸ்ரீ ராகவன், **सहलक्ष्मणः** - லக்ஷ்மணனோடு கூட, **विश्वामित्रवचः** - விச்வாமித்திரரின் வார்த்தையை, **श्रुत्वा**-கேட்டு, **अथ**-பிறகு, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, **पुरस्कृत्य**-முன்னிட்டுக்கொண்டு, **तं** -அந்த, **आश्रमं** - ஆச்ரமத்தை, **आविशत्** - பிரவேசித்தனர்.

13½-15. (ப-ரை) **सः** - அந்த ராகவன், **महाभागां** - மிக்க பாக்யமுடையவளும், **तपसा** - (வாயு பக்ஷணம் முதலானவைகளால் செய்யப்பட்ட) தவத்தாலே, **द्योतितप्रभाम्** - விளங்கப்பட்ட காந்தியையுடையவளும், **लोकैः**-மனிதராலும், **सुरासुरैः**- தேவாஸுரர்களாலும், **समागम्य** - அருகில் வந்து, **दुर्निरीक्ष्यां** - பார்க்கத்தகாதவளும்,

11½ (க-ரை) மிக்க மஹிமை பொருந்திய ஹே ராமா ! இவ்வாச்ரமத்தில் அக்கௌதம மாமுனிவரின் சாபத்தால் மண்ணாய் கிடக்கும் தேவகன்னிகையைப்போல் ஒப்பில்லாத அழகு பொருந்திய மிக பாக்கிய சாலியான அவ்வஹல்யயை அச்சாபத்திலிருந்து ஈடேரச் செய்யவேணும் என்றனர்.

12½ (க-ரை) இவ்வாறு மொழிந்த அச்சிறந்த மஹரிஷியான விச்வாமித்திரருடைய வார்த்தையைச் செவியுற்ற ஸ்ரீராகவன் தம்பியான லக்ஷ்மணனோடுகூட அவ்வாச்ரமத்திற்குச் சென்றனர்.

13½-15 (க-ரை) தான் செய்த கடுஞ்செயலின் பலத்தை வெகுநாளாயனுபவித்துக்கொண்டு அக்கௌதம மாமுனிவரின் சாபத்தின்படி ஒருவர் கண்ணிற்

प्रयत्नान्निर्मितां धात्रा दिव्यां मायामयीमिव ।
स तुषारावृतां साभ्रां पूर्णचन्द्रप्रभामिव । ॥ 14½ ॥
मध्येऽम्भसो दुराधर्षां दीप्तां सूर्यप्रभामिव ॥ 15 ॥
सा हि गौतमवाक्येन दुर्निरीक्ष्या बभूव ह ।
त्रयाणामपि लोकानां यावद्रामस्य दर्शनम् ॥ 16 ॥
शापस्यान्तमुपागम्य तेषां दर्शनमागता ॥ 16½ ॥

धात्रा - பிரும்மாவினால் **प्रयत्नात्** - வெகு யத்தனத்தினால், **निर्मितां** - செய்யப்பட்ட, **दिव्यां** - சிறந்த, **मायामयीमिव** - மாயையின் விகாரம்போல் இருப்பவளும், **तुषारावृतां** - பனியால்சூழப்பட்டதும், **साभ्रां** - மேகத்தோடு கூடினதுமான, **पूर्णचन्द्रप्रभामिव** - பூர்ண சந்திரனுடைய காந்திபோல் இருப்பவளும், **अम्भसः** - ஜலத்தினுடைய, **मध्ये** - நடுவில், (இருக்கின்றதும்), **दुराधर्षां** - எதிரிடக் கூடாததும், **दीप्तां** - பிரகாசிக்கின்றதுமான, **सूर्यप्रभामिव** - ஸூர்யனுடைய காந்திபோல் இருப்பவளுமான (அந்த அஹல்யையை) **ददर्श च** - பார்த்தனர்.

16-16½. (ப-ரை) **सा** - அந்த அஹல்யை, **गौतमवाक्येन** - கௌதம மாமுனிவரின் வசனத்தால், **यावत्** - எதற்குள், **रामस्य** - ஸ்ரீராகவனுடைய, **दर्शनम्** - பார்வை, (உண்டாகுமோ அவ்வளவு பரியந்தம்) **त्रयाणां** - மூன்றுகளான, **लोकानां** - உலகங்க

கும் புலப்படாமல் வாயுபக்ஷணம் முதலிய தவப்பெருக்கினால் மேன்மேலும் பெருகிவருகின்ற ஒளியுடன் கூடிய அஹல்யை, கொண்டல் வண்ணனை காகுத்தனுடைய கருணை நிறைந்த மலர்களான இருகண்களுடைய வீக்ஷணத்தாலும், அவன் திருவடி பட்டமாத்திரத்தாலும், மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திர மண்டலம்போலும், நடுப்பகலில் ஜலத்தில் காணப்படும் மார்த்தாண்ட பிம்பம் போலும் (மனிதர்களாலும், தேவர்களாலும், அஸுரர்களாலும் அருகில் நெருங்கி கண்கொண்டு பார்க்க முடியாததான திவ்யரூபலாவண்யங்களுமடைந்து) அப்பொழுது தன் ஸ்வரூபத்தை அடைந்து ஸ்ரீ ராகவனுடைய கடாக்ஷ வீக்ஷணங்களுக்குப் புலப்பட்டனள்.

16-16½-17½ (க-ரை) அவ்வஹல்யையும், கௌதம மாமுனிவருடைய சாபத்தின்படி ஸ்ரீராமபிரானது தரிசனம் கிடைக்கும் வரையில் யாவருக்கும் புலப்படாதிருந்து, ஸ்ரீ ராமலக்ஷ்மணனுடைய கடாக்ஷத்தினாலும், திருவடித் தாமரைகளு

राघवौ तु ततस्तस्याः पादौ जगृहतुस्तदा ।
स्मरन्ती गौतमवचः प्रतिजग्राह सा च तौ || 17½ ||
पाद्यमर्घ्यं तथातिथ्यं चकार सुसमाहिता ।
प्रतिजग्राह काकुत्स्थो विधिदृष्टेन कर्मणा || 18½ ||

ளுக்கு, **दुर्निरीक्ष्या** - *பார்க்கத் தகாதவளாக*, **बभूव ह** - *ஆனாளன்றோ* ! **सा** - (*அப்படிப் பட்ட அந்த*) *அஹல்யை*, **शापस्य** - *சாபத்தினுடைய*, **अन्तं** - *முடிவை*, **उपागम्य** - *அடைந்து*, **तेषां** - *அம்மூன்று உலஹங்களுக்கும்*, **दर्शनं** - *பார்வையை*, **आगता** - *அடைந்தனள்.*

17½. (*ப-ரை*) **ततः** - (*அஹல்யயைச் சாபந்தீர்த்த*) *பிறகு*, **राघवौ तु** - *ராமலக்ஷமணர்களோவெனில்*, **तदा** - *அப்பொழுது*, **तस्याः** - *அவ்வஹல்யையினுடைய*, **पादौ** - *கால்களை*, **जगृहतुः** - *பிடித்தனர்*, **सा च** - *அவ்வஹல்யயும்*, **गौतमवचः** - *கௌதம மாமுனிவரின் வசனத்தை*, **स्मरन्ती** - *நினைத்துக்கொண்டு*, **तौ** - *அந்த ராமலக்ஷமணர்களை*, **प्रतिजग्राह** - *அங்கீகரித்தனள். அதாவது உபசரித்தனள்.*

18½. (*ப-ரை*) **सुसमाहिता** - (*அவ்வஹல்யை*) *பிரமையற்றவளாய்*, **पाद्यं** - (*ஸ்ரீ ராமலக்ஷமணனுக்கு*) *பாதோதகத்தையும் அதாவது திருவடிகளை சோதிக்கத் தீர்த்தத்தையும்*, **अर्घ्यं** - *அர்க்யத்தையும், அதாவது திருக்கைகளை சோதிக்கத் தீர்த்தத்தையும்*, **तथा** - *அப்படியே*, **आतिथ्यं** - *அதிதி ஸத்காரத்தையும், அதாவது அதிதிகளின் பூஜையையும்*, **चकार** - *செய்தனள்.* **काकुत्स्थः** - *ஸ்ரீ ராகவன்*, **विधिदृष्टेन** - *சாஸ்திரத்தில் பார்க்கப்பட்ட*, **कर्मणा** - *பிரகாரத்தாலே*, **प्रतिजग्राह** - (*அதைப்*) *பெற்றனர்.*

டைய ஸம்பந்தத்தாலும் சாபமுடிவு நேரிட்டதனால் விச்வாமித்திர மஹரிஷி முதலியவர்களுடைய கண்ணுக்குப் புலபட்டனள். அப்பொழுது ராமலக்ஷமணனிருவரும் மிகப்பிரபாவம் பொருந்திய கௌதமமாமுனிவரின் பத்நியாகிய அவ்வஹல்யையின் பாதங்களில் வீழ்ந்து வந்தனஞ்செய்தனர். பிறகு அவ்வஹல்யையும், தன் பர்த்தாவாகிய அக்கௌதமமாமுனிவரின் வார்த்தையை ஸ்மரித்து அப்பரம புருஷர்களான ஸ்ரீ ராமலக்ஷமணர்களை ஆச்ரமத்திற்கு வெகுப்ரீதியுடன் வரவேற்றனள.

18½ (*க-ரை*) *இவ்வாறு அந்த புருடோத்தமர்களான ராமலக்ஷமணனை அவ்வாச்ரமத்திற்கு வரவேற்றி, அவர்களை சாஸ்திரமுறை தவராமல், வெகு ஊக்கத்துடன் அர்க்கிய பாத்யங்களைக்கொடுத்து அதிதி பூஜையையும் நன்றாய்ச்செய்து வெகுவாய் உபசரித்தனள். ஸ்ரீராகவனும் அவைகளை அங்கீகரித்தனர்,*

पुष्पवृष्टिर्महत्यासीद्देवदुन्दुभिनिःस्वनैः ।
गन्धर्वाप्सरसां चापि महानासीत्समागमः ॥ 19½ ॥

साधु साध्विति देवास्तामहल्यां समपूजयन् ।
तपोबलविशुद्धाङ्गीं गौतमस्य वशानुगाम् ॥ 20½ ॥

गौतमोऽपि महातेजा अहल्यासहितः सुखी ।
रामं संपूज्य विधिवत्तपस्तेपे महातपाः ॥ 21½ ॥

19½. (ப-ரை) **देवदुन्दुभिनिःस्वनैः** - (அப்பொழுது) தேவதுந்துபி, சப்தங்க ளோடு, **पुष्पवृष्टिः** - புஷ்பம்பொழிதல் அதாவது புஷ்பவிருஷ்டி, **महत् आसीत्** - பெரி தாக உண்டாயிற்று, **गन्धर्वाप्सरसां चापि** - கந்தர்வருடையவும், அப்ஸர ஸுக்களுடையவும், **महान् समागमः** - பெரிய ஸபை, **आसीत्** - உண்டாயிற்று.

20½. (ப-ரை) **देवाः** - தேவர்கள், **तपोबलविशुद्धाङ्गीं** - தவத்தின் மஹிமையால் பரிசுத்தமான தேஹத்தையுடையவளும், **गौतमस्य** - கௌதமருடைய, **वशानुगां** ஸமீபத்தையடைந்தவளுமான, **तां-अहल्यां** - அந்த அஹல்யயை, **साधु साध्विति** "நல்லது, நல்லது," என்று, **संपूजयन्** - நன்கு பூஜித்தனர்.

21½. (ப-ரை) **महातपाः** - சிறந்த தவத்தையுடையவரும், **महातेजाः** - மஹா பிரபாவமுடையவருமான, **गौतमोऽपि** - கௌதமரும், **अहल्यासहितः** - அஹல்யை

19½ (க-ரை) அப்பொழுது ஆகாயத்தினின்று தேவர்களெல்லோரும் புஷ்ப களால் மழைபெய்வதுபோல் புஷ்பவர்ஷங்களைப் பொழிந்தனர், தேவதுந்துபி எ னும் வாத்யங்களை வெகுவாய் முழுங்கச்செய்தனர். கந்தர்வ ஸ்திரீகளெல்லோரு பாடினார்கள். அப்ஸரஸ்திரீகள் கூட்டங் கூட்டமாய்க்கூடி நடனமாடினர்கள்.

20½. (க-ரை) ஸ்ரீராகவன் அவ்விடம் வந்தது முதலான எல்லா விருத்தா தங்களையும் தமது தபோமஹிமையால் நன்கறிந்து, அங்குவந்த தன் பர்த்த வான கௌதம மஹரிஷியையும் தவத்தின மஹிமையால் சரீரதோஷமற் மிகப்பரிசுத்தையான அஹல்யை, அப்பொழுது கண்டனள் தேவர்களெல்லோரு அவ்விருவர்களையும் வெகுவாகக் கொண்டாடினார்கள்.

21½ (க-ரை) தவம் செய்வதில் மஹாப்பிராக்ஞரான அக்கௌதம மாமு வரும், ஸ்ரீராகவனுடைய பாததூளியினால் புனிதையான தன்பார்யையான அ

रामोऽपि परमां पूजां गौतमस्य महामुनेः ।
सकाशाद्विधिवत्प्राप्य जगाम मिथिलां ततः ॥ 22½ ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीय आदिकाव्ये बालकाण्डे
एकोनपञ्चाशः सर्गः ॥ 49 ॥

யுடன் சேர்ந்து, **सुखी** - ஸுகமுடையவராய், **विधिवत्** - சாஸ்திரப்படி, **रामं** - ஸ்ரீ ராமனை, **संपूज्य** - பூஜித்து, **तपः** - தபத்தை, **तेपे** - செய்தனர்.

22½. (ப-ரை) **रामोऽपि** - ஸ்ரீ ராகவனும், **महामुनेः** - சிறந்த முனிவரான, **गौतमस्य** - கௌதமருடைய, **सकाशात्** - அருகிலிருந்து, **परमां** - மேலான, **पूजां** - பூஜையை, **विधिवत्** - கிரமமாக, **प्राप्य** - அடைந்து, **ततः** - பிறகு, **मिथिलां** - மிதிலையைக்குறித்து), **जगाम** - சென்றனர்.

அஹல்யையை அங்கீகரித்து, இருவருமாக விதிப்படி ஸ்ரீராகவனை பூஜித்துப்பிறகு பத்தினிஸஹிதராய் தவம் செய்வதற்குப்புறப்பட்டுப் போயினர்.

22½. (க-ரை) மஹிமை பொருந்திய அக்கௌதம மஹரிஷியால் விதிப்படி செய்யப்பட்ட அச்சிறந்த பூஜையைப் பெற்று அவரைப்புகழ்ந்து கொண்டாடி பிறகு அங்கிருந்து, விச்வாமித்திர முதலான மஹரிஷிகளுடன், ஸ்ரீராமலக்ஷ்மணுள் மிதிலா நகரத்தை நோக்கிச் சென்றனர்.

पञ्चाशः सर्गः ॥ 50 ॥

ततः प्रागुत्तरां गत्वा रामः सौमित्रिणा सह ।
विश्वामित्रं पुरस्कृत्य यज्ञवाटमुपागमत् ॥ 1 ॥
रामस्तु मुनिशार्दूलमुवाच सहलक्ष्मणः ।
साध्वी यज्ञसमृद्धिर्हि जनकस्य महात्मनः ॥ 2 ॥
बहूनीह सहस्राणि नानादेशनिवासिनाम् ।
ब्राह्मणानां महाभाग वेदाध्ययनशालिनाम् ॥ 3 ॥

1. (ப-ரை) **ततः** - பிறகு, **रामस्तु** - ஸ்ரீ ராகவன், **सौमित्रिणा सह** - லக்ஷ்மணனோடு, **प्रागुत्तरां** - ஈசான்ய திசையை, அதாவது வடகிழக்காக, **गत्वा** - சென்று, **विश्वामित्रं** - விச்வாமித்திரரை, **पुरस्कृत्य** - முன்னிட்டு, **यज्ञवाटं**-யாகசாலையை, **उपागमत्**- அடைந்தனர்.

2. (ப-ரை) **रामस्तु** - ராகவனோவெனில், **सहलक्ष्मणः** - லக்ஷ்மணனோடு கூட, **मुनिशार्दूलं** - முனி சிரேஷ்டரான, (விச்வாமித்திரரைக் குறித்து) **महात्मनः** - சிறந்த ஸ்வபாவமுடைய, **जनकस्य** - ஜனக மஹாராஜருடைய, **इयं** - இந்த, **यज्ञसमृद्धिः** - யாக ஸம்பார ஸாமக்ரி, **साध्वी हि** - நல்லதன்றோ! (என்று) **उवाच** - சொன்னார்.

3. (ப-ரை) **महाभाग** - மஹானுபாவரான ஓ விச்வாமித்திரரே! **इह** - இந்த, (ஜனக மஹாராஜாவின் யாகசாலையில்) **वेदाध्ययनशालिनाम्** - வேதங்களை யோதி யுணர்ந்தவர்களும், **नानादेशनिवासिनां** - பலதேசங்களில் வஸிப்பவருமான, **ब्राह्मणानां** - பிராம்மணர்களுடைய, **बहूनि** - அநேகங்களான, **सहस्राणि** - ஆயிரங்கள், (காணப்படு

1-2. (க-ரை) பிறகு அக்கௌதம மாமுனிவரின் ஆச்ரமத்திலிருந்து ஸ்ரீராகவன் லக்ஷ்மணனோடுகூட விச்வாமித்திர மஹரிஷிகளுடன் புறப்பட்டு, வடகிழக்கு திசையிலிருக்கும் மிதிலா நகரத்திற்கு எழுந்தருளி, விச்வாமித்திரரை முன்னிட்டு ஜனகமஹாராஜருடைய யாகசாலைக்குப்போய்ச் சேர்ந்தனர். அப்பொழுது அந்த யாகசாலையைக்கண்ட ராமலக்ஷ்மணர்களிருவரும் அங்கு நிறைந்திருக்கும் யாகஸம்பார ஸாமக்ரிகளைக்கண்ணுற்று, அதைக்கொண்டாடி விச்வாமித்திரமஹரிஷியை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்.

3-4. (க-ரை) மஹாபாக்கியசாலியான ஹே விச்வாமித்திர மஹரிஷே! மஹானுபாவரான ஜனகமஹாராஜரது இந்த யாகசாலையில் வேதங்களை ஓதி நன்கு ணர்ந்தவர்களும், பற்பல தேசங்களில் வாஸஞ் செய்யும் பிராம்மணோத்தமர்கள்